216

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

வனபர்வம்.

(முதற்பாகம்.)

திரிசிரபுரம்
ஸேண்ட் ஜோஸப் காலேஜ் ஸம்ஸ்கிருத தலைமைப்பண்டிதர்,
மஹாவித்வான், ஸாரஸ்வதஸாரஜ்ஞர், கவிசிகாமணி,
ஸ்ரீ. உ. வே. தட்டை. V. ஸ்ரீநிவாஸாசார்யர்
அவர்களால்
மொழிபெயர்க்கப்பெற்று,

கும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் தமிழ்ப்பண்டிதர்
மணலூர், வீரவல்லி,
இராமானுஜாசாரியரால்
பதிப்பிக்கப்பெற்றது.

PRINTED AT THE KESARI PRINTING WORKS,
MADRAS.

விலை ரூபா 3—8—0. தபாற்கூலி வேறு.

1930

(All Rights Reserved)

ஸ்ரீ:

முகவுரை.

ஸ்ரீ மஹாபாரதத்தின் பர்வ வரிசையில் மூன்றாவதும் அளவில் இரண்டாவதுமாகிய வன பர்வத்தின் முதற் பகுதி, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பெருங்கருணையால், பூர்த்தியாகி வெளிவந்ததில், ஸ்ரீ மஹாபாரத அபிமானிகள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். முன் புஸ்தகம் வெளிவந்து ஒன்றரை வருஷமான பின் இது வெளிவந்தாலும், வராமலே நின்றுபோவதைக் காட்டிலும் தாமதித்தாகிலும் வெளிவந்ததில் பெரியோர்கள் திருப்தி அடைவார்களென்பது நிச்சயம். பல வருஷங்களின் முன்னரே செய்துவைத்திருந்த மொழிபெயர்ப்பு, பல இடங்களில் மாற்றியும் விளக்கியும் எழுதவேண்டியிருந்தமையாலும் அப்படிச் செய்வதில் பலவகை ஶ்ரமங்களிருந்தமையாலும் புதிதாகவே மொழிபெயர்த்து அச்சிட நேர்ந்தது. மற்றப் பர்வங்களை வெளியிட்டதிலிருந்த பொருள் முட்டுப்பாடு முதலிய ஶ்ரமங்களுடன் இந்த ஶ்ரமமும் சேர்ந்தமையால், இந்தப் புஸ்தகத்தை வெளியிட்டதில் ஶ்ரமம் பல மடங்கு அதிகமாயிற்று. எப்படியானாலும், கடவுள் கிருபையால், இது பூர்த்தியாகி வெளிவந்ததில் எல்லா ஶ்ரமங்களையும் மறந்து பரம திருப்தி அடைகிறேன்.

வியாகரண வேதாந்த சாஸ்திர பாரங்கதரும், பாகவத பகவத் கீதோபந்யாஸகரும், சோதிட மந்திர சாஸ்திர வித்வானும், ஆர்யமத ஸம்வர்த்தனீ பத்திராதிபருமான ப்ரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகளவர்கள், ஸ்ரீ மஹா பாரதத்திலுள்ள பேரபிமானத்தினால், வனபர்வ மொழிபெயர்ப்பு வேலையைப் பரமதிருப்தியோடு ஏற்றுக்கொண்டு விரைவில் மொழிபெயர்த்துப் பதினாறு வருஷங்களுக்கு முன்னரே கொடுத்ததுமன்றி, 77-வது அத்தியாய முடிய இரண்டாமுறை பார்த்துச் செய்யவேண்டுவனவற்றைச் செய்தும் கொடுத்தார்கள். அவர்கள் இப்பொழுது பெருங்காரியத்தை மேற்கொண்டு நடத்திவருகிறார்களாகையால் அதனோடு இந்த வனபர்வத்தில் மேலுள்ள பாகத்தையும் சேர்த்துச் செய்ய அவர்களுக்கு ஸௌகர்யப்படவில்லை. அவர்கள் நடத்திவருகிற

பெருங்காரியம் பூர்த்தியாதற்குச் சில காலம் ஆகுமென்று தோன்றினமையாலும், அதுவரையில் இந்த வேலையை நிறுத்தி வைக்கக் கூடாமையாலும், வேறொருவரைக்கொண்டு புதிதாக மொழி பெயர்ப்பது அவசியமாயிற்று. சாஸ்திரிகளவர்களும் அதற்கு அனுமதியளித்தார்கள். அவர்களுடைய பேருதவியை என்றும் மறவேன்.

திரிசிரபுரம், ஸெண்டு ஜோஸப் காலெஜ் பிரதம ஸம்ஸ்கிருத பண்டிதர், மஹா வித்துவான், ஸாரஸ்வத ஸாரஜ்ஞர், கவிசிகாமணி, ஸ்ரீ உ. வே. தட்டை, V. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் முன்னமே ஸ்ரீ மஹாபாரதத்தில் பல பர்வங்களை மொழிபெயர்த்துக் கொடுத்த பழக்கமுடையவர்களும் எனக்குப் பரம ஆப்தர்களுமாதலால், இந்தப்பர்வத்தில் மேலுள்ள பாகத்தை மொழிபெயர்த்துத் தரும்படி அவர்களை வேண்டினேன். அவர்கள் என் வேண்டுகோளுக்கிணங்கிப் பெரு விருப்புடன் ஏற்றுக்கொண்டு அதிவிரைவில் மொழிபெயர்த்துக் கொடுத்து உதவினார்கள். அவர்களைப் பற்றிப் பீஷ்ம பர்வ முதலியவற்றின் முகவுரைகளில் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த வன பர்வத்திலடங்கிய விஷயச் சுருக்கம், ஆதிபர்வத் தொடக்கத்தில் ஸூத பாரதமென்னும் பர்வ ஸங்கிரக அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பர்வத்தின் சிறப்பு அதனால் நன்கு விளங்கும். மஹாபாரதத்தின் பதினெட்டுப் பர்வங்களிலும் நூறு சிறு பர்வங்கள் உண்டு. அவைகளுள், இந்த வனபர்வத்தில் மாத்திரம் இருபத்தொரு சிறு பர்வங்கள் அடங்கியுள்ளன. இந்த இருபத்தொரு சிறு பர்வங்களின் பெயரையும் முறையையும் இந்தப் பர்வத்தில் அங்கங்கே கண்டுகொள்க. நீலகண்டீய வியாக்யான பாடம், முதல் பத்து அத்யாயங்களை ஆரண்யக பர்வமென்றும் பதினோராவது அத்யாயத்தைக் கிர்மீரவத பர்வமென்றும் இரண்டாகக் கொள்கிறது. அதன்படி, சிறு பர்வங்கள் இருபத்திரண்டாகும். இந்த முதற் புத்தகத்தில் கிர்மீரவதபர்வம், அர்ஜுனாபிகமனபர்வம், கைராதபர்வம், இந்திரலோகாபிகமனபர்வம், நளோபாக்யானபர்வம், தீர்த்தயாத்ராபர்வம் ஆகிய ஆறு சிறு பர்வங்கள் இருக்கின்றன. அவைகளில் பல அரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. அவற்றில், சூரியஸ்தோத்ரம், யுதிஷ்டிரர் அக்ஷய பாத்திரம் பெறுதல், திரௌபதி யுதிஷ்டிரருக்குச் சொல்லிய பிருகஸ்பதி நீதி, வேடனாக வந்த சிவபெருமானுக்கும் அர்ஜுனனுக்கும்

ஸம்வாதம், அர்ஜுனன் பாசுபதம் முதலியவற்றைப் பெற்றது, அர்ஜுனன் இந்திரலோகம்சென்று வித்தைகளைக் கற்றது, நளோ பாக்யானம், தீர்த்தங்களின் மகிமை, பாண்டவர்களின் தீர்த்தயாத் திரை, அகஸ்தியோபாக்யானம், பகீரதன் கங்கை கொணர்ந்தது, ரிஷ்யச்ருங்கோபாக்யானம், ஸுகன்யோபாக்யானம், மாந்தாதா வின் சரித்திரம், ஜந்தூபாக்யானம், சேனகபோதோபாக்யானம், அஷ்டாவக்ரோபாக்யானம், யவக்ரீதோபாக்யானம், ஹநுமத்பீம ஸம்வாதம், ஸௌகந்திகாஹரணம் முதலியன முக்கியமானவை. தீர்த்தயாத்ராபர்வத்தில், ௫௩0-க்கு அதிகமான தீர்த்தங்களும் புண்யஸ்தானங்களும் கூறப்படுகின்றன.

இந்த மஹாபாரதத்தில் அபிமானமுள்ளவர்களான சில தக்கவர்களிடத்தில், சிலர், நான் இதனை விரைவில் நடத்திமுடிப்ப தில் விருப்பமில்லாதவனுயிருக்கிறேனென்று சொல்லி அவர்கள் மனத்தை வேறுபடுத்தினர்களென்று கேள்வி. அந்தப் பெரியோர் கள் அந்த வார்த்தைகளை நம்பமாட்டார்களானாலும், அவர்களுக் குச் சமாதானம் கூறுவது எனது கடமையாகும். மொழி பெயர்ப்பவர்களுக்கும் அவர்களுடனிருந்து அவர்கள் சொல்லு கிறதை எழுதுகிறவர்களுக்கும் கொடுக்கும் செலவும், ஸஞ்சிகை களை வெளியிடுதற்குக் காகித விலையும் அச்சுக்கூலியும் எப்பொழு தும் உண்டு. மற்றப் புஸ்தகங்களை வெளியிடுதல் போலல்லாமல் இந்தப் புஸ்தகத்தை வெளியிடுவதற்குப் பல பண்டிதர்களுடைய உதவியும் எழுதுவோர் ஒப்பிடுவோர் முதலிய மற்றும் பலருடைய உதவியும் இன்றியமையாது வேண்டப்படுதலால், அந்தவகையில் மாஸம் ஒன்றுக்கு ரூ. 200-க்குக் குறையாமல் செலவாகிறது. ஒரு ஸஞ்சிகையை இரண்டுமாதத்தில் வெளியிட்டால் காகிதவிலை யும் அச்சுக்கூலியும் தவிர, ரூ. 400 செலவில் முடிகிறது. 10 மாதங்களில் வெளியிட்டால் ரூ. 2,000 செலவாகிறது. காலதா மதத்தால் எனக்குப் பெரிதும் நஷ்டமேயன்றிச் சிறிதும் லாப மில்லை. அப்படி நஷ்டத்திற்குக் காரணமாகத் தாமதிப்பானே னெனில், மொழிபெயர்ப்பு மூலத்துக்கு ஒத்திருக்கும்படி செய்யவேண்டுமென்னும் விருப்பமே. காலதாமதத்தால் பொருட் செலவு அதிகமாகிறதே என்று தோன்றுமல் எப்படியாவது மொழிபெயர்ப்புத் திருத்தமாக அமையவேண்டுமென்னும் விருப்பமே மேலோங்கி நிற்கிறது. ஒவ்வொரு ஸந்தேகத்தைத் தெளிந்துகொள்வதில், சில சமயங்களில், சில மாதங்களாகிவிடு

கின்றன. இந்த மஹாபாரதத்திலுண்டாகிற ஸந்தேகங்களை எளிதில் விளக்கக்கூடிய பண்டிதர்கள் இக்காலத்துச் சிலரே உள்ளனர். பல பண்டிதர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டுப் பொருள் நிச்சயம் செய்வதில் மிக்க காலதாமதம் உண்டாகிறது. உதாரணமாக, இந்தப்பர்வத்தில் அஷ்டாவக்ரோபாக்யானத்துக்குப் பொருள் நிச்சயம் செய்வது அதிகஸ்ரமமாயிருந்தது. மொழிபெயர்த்தவர்கள் திரும்பத் திரும்ப மூன்றுமுறை மொழிபெயர்த்தனுப்பினார்கள் வழக்கப்படி மற்றும் சில பண்டிதர்கள் ஒப்புநோக்கினர். பின்னும் சில ஸந்தேகங்கள் இருந்தன. கும்பகோணம், மத்வசாஸ்திர ஸம்பூர்ணர், பாரதஸிம்மம், கா. பே. ராமசந்திராசாரியரவர்களிடமும் கேட்டேன். இவர்களுடைய பெருமையை ஆஸ்வமேதிகபர்வம் முகவுரையில் தெரிவித்திருக்கிறேன். இவர்கள் வழக்கம்போல முகமலர்ச்சியுடன் இன்சொற்கூறி அழைத்து ஸந்தேகங்களைக் கேட்டு இனிது விளக்கினார்கள். மஹாபாரதத்தில் மிக்கபரிஸ்ரமமுடையவர்களும், அதனைப் பலமுறை பிரஸங்கம் செய்திருப்பவர்களுமான இவர்களே, 'அஷ்டாவக்ரோபாக்யானத்தில் சில விஷயங்கள் நிச்சயிக்கக்கூடவில்லை' என்று சொல்லுவார்களானால் அதன் கடினத்தன்மையைச் சொல்லவும் வேண்டுமோ? அந்த உபாக்யானத்தில் அஷ்டாவக்ரருக்கும் வந்திக்கும் நடந்த வாதமான பதின்மூன்று ஸ்லோகங்களுக்கும் அவற்றின் முன்னும் பின்னுமுள்ள சில சில ஸ்லோகங்களுக்கும் பொருள் நிச்சயம் செய்தற்குச் சில மாதங்களாயின ஆகியுமென்ன? சில இடங்களில் சொல்லுக்குப் பொருளெழுதப்பட்டிருப்பதைத் தவிர, உள்ளுறைப் பொருளான வேதாந்தக் கருத்துக்கள் நன்கு விளக்கக்கூடவில்லை. இப்படியாகச் சில சில இடங்களில் பலபல மாதங்கள் தாமதிக்க நேர்கிறது. காலதாமதமேற்பட்டால் பொருட்செலவு அதிகமாகிறது. அதற்குத் தக்கபடி உதவி கிடைப்பதில்லை. ஆதலின், எனக்கு நஷ்டத்தைத் தருவதான காலதாமதத்தை நானே விரும்பிச் செய்யேனென்பதையும், எடுத்துக்கொண்ட விஷயத்திலுள்ள ஸ்ரமமே அதற்கு முழுதும் காரணமென்பதையும் வருத்தத்துடன் தெரிவிக்கிறேன். பெரியோர்கள் க்ஷமிக்கவேண்டும்.

இவ்வளவு ஸ்ரமங்களிருந்தும் இவ்வளவு தூரம் நடந்திருப்பது கடவுள்கிருபையே. நமது நாட்டில் இப்பொழுது நடந்து வருகிற இதுபோன்ற காரியங்களையும், அவைகள் தொடங்கிய

காலத்தையும், அவைகளுக்கு அமைந்துள்ள ஸௌகரியங்களையும், அவைகளில் இதுவரையில் நடந்திருக்கிற அளவையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த மஹாபாரதத்தில் இவ்வளவு நடந்திருப்பதும் சிலாகிக்கத் தக்கதே

இன்னும் வெளிவரவேண்டிய பகுதியையும் விரைவில் வெளியிட என்னால் இயன்றவரை முயல்வேன். அதற்குவேண்டிய உதவிகளையெல்லாம் அமைத்துக் கொடுத்து எல்லாம் வல்ல ஸர்வேஸ்வரன் இனிது தலைக்கட்டிவைக்கவேண்டும்.

இந்த மஹாபாரதப் பதிப்பை நான் மேற்கொண்ட கால முதல், இந்த அரிய பெரிய நற்காரியத்தை மனமுவந்து ஆதரித்து வருகிற பரமோபாரிகளுடைய பேருதவிகளையும் பிறவற்றையும் இந்தப்பர்வம் இரண்டாம்பாக முகவுரையில் விவரமாகத் தெரிவிப்பேன்.

இந்த மஹாபாரதத்தை மிக்கஊக்கத்துடன் படித்துவருகிற பல பெரியோர்கள், வனபர்வத்தை விரைவில் வெளியிடவேண்டுமென்றும் அதிலுள்ள கதைகளைப் படிப்பதில் தங்களுக்கு விருப்பம் மிகுதியாயிருக்கிறதென்றும் அடிக்கடி கடிதமெழுதி என் மனத்துக்கு மிக்கஊக்கத்தை அளித்துவருகிறார்கள். வேறு சிலர், வலங்கைமான் ஜோதிஷம், கோவிந்தசெட்டியார் இந்த மஹாபாரத பூர்த்திவிஷயமாக எழுதிக்கொடுத்திருக்கிற [1] ஆரூடத்தின் உண்மையைத் தெரிந்துகொள்வதில் தங்களுக்குள்ள விருப்பத்தைக் காட்டி எழுதுகிறார்கள். எப்படியாவது, ஸ்ரீ மஹாபாரதம் விரைவில் பூர்த்தியாகவேண்டுமென்று விரும்புகிறவர்கள் பலர் இருக்கிறார்களென்பது வெளிப்படுகிறது. அவர்களுடைய விருப்பத்திற்கு இரங்கியாவது, ஆஸ்ரிதரக்ஷகனான எம்பெருமான் இதனை விரைவில் நிறைவேற்றியருளவேண்டும்.

மணலூர்,
நரசிங்கன்பேட்டை, S.I.R.
1-10-30.

இங்ஙனம்,
ம. வீ. இராமானுஜாசாரியன்.

---

1 இதன் விவரத்தை உத்தியோகபர்வ முகவுரையிற் பார்க்க.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

வனபர்வம்.

விஷய ஸூசிகை.

கிர்மீரவதபர்வம்.

அத்யாயம்		பக்கம்
1	கடவுள் வாழ்த்து	1
	ஜனமேஜயர் பாண்டவர்களின் வனவாஸ முதலியவற்றைப்பற்றி வைசம்பாயனரை வினவியதும், அவர் சொல்லத் தொடங்கியதும்	1 - 2
	பாண்டவர் முதலியோர் பிரமாண கோடிக்குப் புறப்பட்டதும், நகரவாஸிகள் கௌரவரை நிந்தித்துப் பாண்டவரைப் பின்தொடர்ந்ததும். ...	2 - 3
	நகரவாஸிகள் பாண்டவர்களுடன் தாமும் கூட வருவோமென்றது	3 - 4
	நல்லோர் தீயோரின் சேர்க்கை அதன் பயன் முதலியன	4
	யுதிஷ்டிரர் நகரவாஸிகளைத் திருப்பி அனுப்பி ஸகோதரர் முதலியவருடன் பிரமாணகோடியில் தங்கியது	4 - 6
2	யுதிஷ்டிரர் உடன் வந்த பிராம்மணர்களைக் காக்க முடியாமையைச் சொல்லி அவர்களைத் திரும்பிச் செல்ல வேண்டினது	6 - 7
	பிராம்மணர்கள் தம்மைத் தாமே போஷித்துக்கொள்வதாகச் சொல்லியதும், யுதிஷ்டிரர் பொருளின்மைக்கு வருந்தியதும்	7
	உடன் வரும் அந்தணரைக் காக்கும் விஷயத்தில் சௌனகருக்கும் யுதிஷ்டிரருக்கும் ஸம்பாஷணை. ...	7 - 14
	புத்தியின் எட்டுக்குணங்கள்	8
	உடலுக்கும் மனத்துக்கும் நோயுண்டாவதும் அவற்றைப் போக்குமுறையும்	8 - 9
	ஆசைமுதலியவற்றின் உற்பத்தி தீமை அவற்றை ஒழிக்குமுறை முதலியன.	9 - 10
	பொருளுள்ளவர்களுக்கு யார் யாரிடமிருந்து பயமுண்டென்பது	10.

அத்யாயம்		பக்கம்
	பொருளால் வரும் துன்பமும் ஆசையை விடவேண்டுமென்பதும்	10 - 11
	அதிதிபூஜை, அடைந்தாரை ஆதரித்தல் முதலியன	11 - 12
	தனக்கென்று சமைத்தலும் தனியே உண்ணலும் தகாதென்பது	11 - 12
	வைச்வதேவமும் விகஸமும் அம்ருதமும் ...	12
	அதிதிபூஜைக்குரிய ஐந்து தக்ஷிணைகள் ...	12
	அஜ்ஞானிகளின் வழியும் ஞானிகளின் வழியும் ...	12 - 13
	பயனில் பற்றில்லாமல் தர்மங்களைச் செய்யவேண்டுமென்பதும் தர்மத்தின் எட்டு வழிகளும்	13
	சித்த சுத்திக்குரிய எட்டு வழிகள்	13
	சௌனகர் தவத்தால் ஸித்திபெற்றுப் பிராம்மணரைப் போஷிக்கும்படி யுதிஷ்டிரருக்குச் சொல்லியது ...	14
3	யுதிஷ்டிரர் உடன் வந்தவரைக் காக்க உபாயங் கேட்டதும், தௌம்யர் ஸூர்யனைத் துதிக்கச் சொல்லியதும்	14 - 15
	பசித்த பிராணிகளை ஸூர்ய சந்திரர் காப்பாற்றியது	15
	தௌம்யர் மந்திரோபதேசம் செய்ததும், யுதிஷ்டிரர் தவஞ்செய்து சூரியனைத் துதித்ததும் ...	15 - 19
	ஸூர்யன் யுதிஷ்டிரருக்குப் பிரத்யக்ஷமாகி அக்ஷய பாத்ரமும் வரங்களும் கொடுத்தது	19
	யுதிஷ்டிரரும் திரௌபதியும் அக்ஷய பாத்ரத்தைக் கொண்டு யாவருக்கும் அன்னமளித்ததும், நாள்தோறும் அதில் போடப்படும் அன்னம் எல்லாரும் உண்ணும்வரை வளர்ந்துகொண்டே வந்ததும் ...	19 - 20
	பாண்டவர்கள், தௌம்யர் முதலியோருடன் காம்யக வனம் சென்றது	20
	ஜனமேஜயர் வினவ, வைசம்பாயனர் யுதிஷ்டிரர் துதித்த ஸூர்யாஷ்டோத்தர சத நாமத்தைச் சொல்லியது	20 - 21
	ஸூர்யாஷ்டோத்தரம் உலகில் வந்த முறையும், அதனைப் படித்தல் கேட்டல்களின் பயனும் ...	21 - 22
4	திருதராஷ்டிரன் ஆலோசனை கேட்டதும், விதுரர் யுதிஷ்டிரரை அரசராக்கித் துச்சாஸனன் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றதும் ...	22 - 25
	திருதராஷ்டிரன் விதுரரைக் கோபித்ததும், விதுரர் பாண்டவரிருக்குமிடம் சென்றதும்	25

விஷயஸூசிகை.

அத்யாயம்		பக்கம்
5	பாண்டவர்கள் காம்யகவனத்தில் வஸித்ததும், விதுரர் வரவும்	25 - 26
	பாண்டவர்கள் விதுரரை வரவேற்று உபசரித்ததும், விதுரர் திருதராஷ்டிரன் ஸபையில் நடந்ததைச் சொல்லித் துணைவரைச் சேர்க்கும்படி உபதேசித்ததும் ...	26 - 28
6	திருதராஷ்டிரன் விதுரர் பிரிவால் வருந்தி அவரை அழைத்து வரும்படி ஸஞ்சயனை அனுப்பியது ...	28 - 29
	ஸஞ்சயன் போய் அழைத்ததும், விதுரர் திருதராஷ்டிரனிடம் வந்ததும்	29
7	விதுரர் திரும்பிவரக் கண்ட துரியோதனன் கர்ணன் முதலியோருடன் ஆலோசித்துப் பாண்டவரைக் கொல்லப் புறப்பட்டதும், வியாஸர் வந்து தடுத்ததும்	30 - 32
8	வியாஸர், பாண்டவரைப் பகைத்தலால் தீமை விளையுமென்பதையும் அவர்களுடன் ஸமாதானம் செய்து கொள்ள வேண்டுமென்பதையும் திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது	32 - 33
9	திருதராஷ்டிரன், புத்ரஸ்நேகத்தை விடக்கூடவில்லை என்றது	34
	வியாஸர் மக்களிடத்தன்பு விடற்கரிதென்பதற்கு உதாரணமாகக் காமதேனுவின் கதையைக் கூறியது ...	34 - 35
	காமதேனு அழுததும், இந்திரன் காரணங்கேட்டதும்	34 - 35
	காமதேனு இளைத்த புத்திரனைக் குறித்துத் துயரப்படுவதாகச் சொல்லியதும், இந்திரன் உழவைத்தடுப்பதற்கு மிகுமழை பெய்வித்ததும்	35
	வியாஸர், மக்களிடத்தன்பு பொதுவாகவும் கஷ்டப்படுகிறவரிடம் அதிகமாகவும் இருக்க வேண்டுமென்றும் துரியோதனன் பாண்டவருடன் ஸமாதானம் அடையவேண்டுமென்றும் சொல்லியது	35 - 36
10	திருதராஷ்டிரன் துரியோதனனுக்கு உபதேசிக்கும்படி வியாஸரை வேண்டினதும், வியாஸர் மைத்ரேயர் உபதேசிப்பரென்று சொல்லிப்போனதும் ...	36 - 37
	மைத்ரேயர் வந்ததும், திருதராஷ்டிரன் கௌரவர்களின் ஸகோதர ஸ்நேகம் நிலைக்குமா என்று வினவியதும்	37
	மைத்ரேயர் திருதராஷ்டிரனைக் கடிந்து பேசித் துரியோதனனிடம் பாண்டவர் பெருமையைக்கூறி அவர்களுடன் ஸமாதானமடையச் சொல்லியது ...	37 - 38

விஷய ஸூசிகை.

அத்யாயம்		பக்கம்
	துரியோதனன் தொடையைத் தட்டியதும், மைத்ரேயர் சபித்ததும்	38 - 39
	திருதராஷ்டிரன் சாபத்தை நீக்க வேண்டினதும், மைத்ரேயர் ஸமாதானம் வந்தாலன்றிச் சாபம் நீங்காதென்றதும்	39
11	திருதராஷ்டிரன் வினவ விதுரர் கிர்மீரவதத்தைச் சொல்லியது	39 - 45
	பீமனுக்கும் கிர்மீரனுக்கும் யுத்தமும் பீமன் கிர்மீரனைக் கொன்றதும்	42 - 44
12	கோவிந்தர் முதலியோர் பாண்டவர்களிடம் வந்தது ...	45
	அர்ஜுனன் கோவிந்தருடைய அருஞ் செயல்களைக் கூறியது	46 - 49
	மாதவர் அர்ஜுனன் தம்மைவிட வேறல்லனென்றது ...	49
	திரௌபதி கிருஷ்ணனைத் துதித்து அவரிடம் தன் துயரத்தைச் சொல்லி அழுததும், அவர் அவளைத் தேற்றியதும்	49 - 56
	ஜாயை என்னும் சொல்லுக்குப் பொருள் ...	51
13	கோவிந்தர் சூதாட்டக்காலத்தில் தாம் துவாரகையிலில்லாமையைச் சொல்லி யுதிஷ்டிரரைத் தேற்றியது ...	57 - 58
14	கோவிந்தர் ஸால்வயுத்தத்தைச் சுருக்கமாகக் கூறியது	58 - 60
15- 22	யுதிஷ்டிரர் வினவியதும், கோவிந்தர் ஸால்வயுத்தத்தை விரிவாகச் சொல்லியதும்	60 - 83
	ஸால்வன் துவாரகையை எதிர்த்ததும், உக்ரஸேனன் முதலியோர் காத்ததும்	60 - 62
	யுத்தகாலத்தில் நகரைக்காக்கும் சில முறைகள் ...	61 - 62
	ஸாம்பனுக்கும் க்ஷேமதூர்த்திக்கும் சண்டையும், க்ஷேமதூர்த்தி தோற்றோடியதும்	63 - 64
	ஸாம்பன் வேகவானை வீழ்த்தியது	64
	சாருதேஷ்ணன் விவிந்தியனைக் கொன்றது ...	64 - 65
	ஸால்வன் வந்ததும், பிரத்யும்னன் பயந்த சேனையைத் தேற்றியதும்	65
	பிரத்யும்னனுக்கும் ஸால்வனுக்கும் சண்டையும், ஸால்வன் மயங்கி விழுந்ததும்	65 - 67
	ஸால்வன் தெளிந்து போர் செய்ததும், பிரத்யும்னன் மயங்கியதும்	67
	தாருகன்மகன் தேரை வேறிடங்கொண்டு போனதும், பிரத்யும்னன் களைதெளிந்து அவனுடன் பேசினதும்	68 - 71

அத்யாயம்		பக்கம்
	பிரத்யும்னன் ஸால்வன் சேனையை இடமாகச் சுற்றியது	71
	பிரத்யும்னன் ஸால்வனை வென்றதும், தேவர்கள் ஸால்வன் கிருஷ்ணனால் கொல்லப்பட வேண்டியவனென்பதைப் பிரத்யும்னனுக்குச் சொல்லியதும் ...	71 - 72
	கோவிந்தருக்கும் ஸால்வனுக்கும் யுத்தம் ...	75 - 82
	மாயாயுத்தம்	75 - 79
	ஸால்வன் மாயையால் வஸுதேவரை வெட்டிக் காட்டியது	78 - 79
	தாருகன் ஸால்வனைக் கொல்லும்படி கோவிந்தரை வேண்டினதும், அவர் ஸௌபத்தைப் பிளந்து ஸால்வனையுங் கொன்றதும்	81 - 82
	கோவிந்தர் யுதிஷ்டிரரைத் தேற்றி ஸுபத்ரையை அழைத்துக்கொண்டு துவாரகைக்குச் சென்றது ...	83
	திருஷ்டத்யும்னன் திரௌபதீபுத்ரர்களை அழைத்துக்கொண்டு தன்னகர் சென்றது	83
	திருஷ்டகேது ஸகோதரியை அழைத்துக்கொண்டு சுக்திமதி நகருக்குச் சென்றது	83
	கேகயர் விடைபெற்றுச் சென்றது	83
23	நகர ஜனங்கள் வருந்தியதும், அர்ஜுனன் அவர்களைத் தேற்றியனுப்பியதும்	85 - 86
24	பாண்டவர்கள் த்வைதவனம் சென்றது. ...	86 - 88
25	மார்க்கண்டேயர் வர யுதிஷ்டிரர் பூஜித்ததும், அவர் நகைத்ததும்	89
	யுதிஷ்டிரர் காரணங்கேட்டதும், மார்க்கண்டேயர் பூர்விக அரசர்களை உதாரணங்கூறித் தர்மோபதேசஞ் செய்ததும்	89 - 90
26	தால்பியர் க்ஷத்திரியரின் வளர்ச்சிக்குப் பிராம்மணர் காரணமென்றதும், மஹரிஷிகள் யுதிஷ்டிரரைக் கௌரவித்ததும்	91 - 93
27-28	திரௌபதி யுதிஷ்டிரரிடம் அவருக்குக் கோபம் வராமையைப்பற்றித் துயரத்தோடு முறையிட்டது ...	93-100
	க்ஷத்ரியனென்னும் சொல்லுக்குப் பொருள் ...	96
	காலத்துக்கு ஏற்றபடி கோபத்தையும் பொறுமையையும் அடைய வேண்டுமென்பதற்கு உதாரணமான பலி ப்ரஹ்லாத ஸம்வாதம்	96 - 99
	கோபத்தின் இன்றியமையாமை	97 - 98

விஷய ஸூசிகை.

அத்யாயம் பக்கம்

பொறுமைக்கும் கோபத்துக்குமுரிய இடங்கால முதலியன 99
திரௌபதி திருதராஷ்டிர புத்ரர்கள் விஷயத்தில் அது கோபத்துக்குரிய காலமென்றது 99-100
29 யுதிஷ்டிரர் கோபத்தின் இழிவையும் பொறுமையின் உயர்வையும் திரௌபதிக்குச் சொல்லியது ... 100-104
30 திரௌபதி தர்ம முதலியவற்றைக் காட்டிலும் தெய்வமே பெரிதென்றது 105-109
31 யுதிஷ்டிரர் தர்மத்துக்குப் பயனுண்டென்று திரௌபதிக்குக் கூறியது 109-112
32 திரௌபதி ஒரு பிராம்மணனிடமிருந்து கேட்ட பிருகஸ்பதி நீதியை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது ... 112-117
33 பீமன் சண்டைசெய்து ராஜ்யத்தைப் பெறவேண்டுமென்பதை நீதியுடன் யுதிஷ்டிரருக்குக் கூறியது ... 117-125
34 யுதிஷ்டிரர் தாம் செய்த பிரதிஜ்ஞையை விட முடியாதென்பதையும் பிரதிஜ்ஞா காலத்தின் முடிவை எதிர்பார்த்திருக்கவே வேண்டுமென்பதையும் பீமனுக்குச் சொல்லியது 125-127
35 பீமன் வனவாஸத்தை நிறைவேற்றாமலே துரியோதனனை வெல்லவேண்டுமென்பதை யுக்தியுடன் யுதிஷ்டிரரிடம் கூறியது 128-130
36 யுதிஷ்டிரர் துரியோதனாதியரைத் துணையின்றி வெல்வது ஶ்ரமமென்பதையும் கர்ணனுடைய வலிமையை எண்ணித் தாம் உறங்குவதில்லை யென்பதையும் பீமனுக்குச் சொல்லியது 131-132
வியாஸர் வந்து யுதிஷ்டிரரை த்வைதவனத்தைவிட்டு வேறிடம் செல்லச் சொல்லி அவருக்குப் பிரதிஸ்ம்ருதி வித்தையை உபதேசித்துச் சென்றது ... 132-134
யுதிஷ்டிரர் காம்யகவனஞ் சென்று வஸித்தது ... 134
37 யுதிஷ்டிரர் அர்ஜுனனை அஸ்திரம் பெறுதற்காக ஸ்வர்க்கம் போய்வரச் சொல்லி ப்ரதிஸ்ம்ருதி வித்தையை உபதேசித்தனுப்பியது 135-136
நகுல ஸகதேவர்கள் அர்ஜுனனுக்கு அனுமதி கொடுத்தது 137-138
யார் யாருக்கு நல்ல உலகங்களில்லை யென்பது ... 137
அர்ஜுனனிடமுள்ள நற்குணங்கள் 137-138

அத்யாயம்		பக்கம்
	திரௌபதி அர்ஜுனனது க்ஷேமத்துக்காகக் கடவுளரை வணங்கி அவனுக்கு அனுமதி கொடுத்தது ...	138-140
	அர்ஜுனன் இந்திரகீலமலைக்குச் சென்று நிஷ்டையிலிருந்தது	141
	இந்திரன் அந்தண வடிவத்துடன் வந்து அர்ஜுனனைச் சோதித்தது	141
	இந்திரன் வரங்கொடுப்பதாகச் சொல்லியதும், அர்ஜுனன் அஸ்திரங்களை வரமாக வேண்டினதும் ...	141
	இந்திரன் புண்யலோகங்களை அளிப்பதாகச் சொல்லியதும், அர்ஜுனன் அங்ஙனம் செய்தால் அபகீர்த்தி வருமென்றதும்	141-142
	இந்திரன், மஹாதேவரை வணங்கி ஸித்திபெற்று ஸ்வர்க்கம் வரும்படி அர்ஜுனனுக்குச் சொல்லிச் சென்றது	142

கைராத பர்வம்.

38	ஜனமேஜயர் அர்ஜுனன் அஸ்திரம் பெற்ற வரலாற்றை விரிவாகச் சொல்லும்படி கேட்டதும், வைசம்பாயனர் சொல்லத் தொடங்கியதும்	142-143
	அர்ஜுனன் தவஞ்செய்தது	144-145
	முனிவர்கள் அர்ஜுனன் தவத்தைக் கண்டு அஞ்சி முறையிட்டதும், மஹாதேவர் அவர்களைத் தேற்றி அனுப்பியதும்	145
39	மஹாதேவர் வேட வடிவத்துடன் வந்து பன்றி வடிவத்துடன் வந்த மூகாஸுரனைக் கண்டது ...	146
	அர்ஜுனன் பன்றியை அடிக்க விரும்பியதும், ஈஸ்வர வேடன் தடுத்ததும்	146-147
	இருவரும் ஒரே காலத்தில் பன்றியை எய்தது ...	147
	பன்றி ராக்ஷஸ வடிவடைந்து உயிர்விட்டது ...	147
	அர்ஜுனனுக்கும் வேடனுக்கும் வாக்குவாதம் ...	147-148
	அர்ஜுனனுக்கும் வேடனுக்கும் யுத்தம்	148-150
	அர்ஜுனன் மலர்மாலையால் சிவபெருமானைப் பூஜித்ததும், அந்த மாலை வேடன் தலையிலிருக்கக் கண்டதும்	150-151
	அர்ஜுனன் வேடனை ஈஸ்வரரென்றறிந்து வணங்கியதும், அவர் அவனைத் தேற்றி அஸ்திரங்களை அளிப்பதாகச் சொல்லியதும்	151

அத்யாயம்		பக்கம்
	அர்ஜுனன் ஈச்வரரைத் துதித்துத் தனது குற்றத்தைப் பொறுக்க வேண்டினதும், அவர் பொறுத்ததாகச் சொல்லியதும்	151-152
40	மஹாதேவர் அர்ஜுனனுக்குப் பாசுபதாஸ்திரத்தையும் தாம் பறித்துக்கொண்ட வில் முதலியவற்றையும் கொடுத்தது	153-155
	பாசுபதாஸ்திரத்தின் மகிமை முதலியன ...	154
	அர்ஜுனன் உடம்பிலிருந்த தோஷங்கள் நீங்கினது ...	155
41	வருணனும் குபேரனும் யமனும் இந்திரனும் அர்ஜுனனிடம் வந்தது	156-157
	யமன், பீஷ்மர் முதலிய யாவரும் அர்ஜுனனால் வெல்லப்படத்தக்கவரென்பதை அவனுக்குச் சொல்லித் தண்டாயுதத்தைக் கொடுத்தது	157-158
	வருணன் பாசங்களை அர்ஜுனனுக்குக் கொடுத்தது ...	158
	குபேரன் தனது அஸ்திரத்தை அந்தர்த்தானாஸ்திரத்துடன் அர்ஜுனனுக்குக் கொடுத்தது ...	158-159
	இந்திரன் அர்ஜுனனை ஸ்வர்க்கத்துக்கு வரச் சொல்லியது	159

இந்திரலோகாபிகமனபர்வம்.

42	மாதலி தேர் கொணர்ந்து அர்ஜுனனை ஏறச் சொல்லியதும், அர்ஜுனன் மலையினிடம் விடைபெற்றுத் தேரேறியதும்	160-162
	அர்ஜுனன் தாமே பிரகாசிக்கும் உலகங்களைக் கண்டது	162
43	அர்ஜுனன் இந்திரனை வணங்கியதும், அவன் அர்ஜுனனைத் தன் ஆஸனத்தில் உட்கார்த்திக்கொண்டதும்	164-165
	தேவர்கள் அர்ஜுனனைப் பூஜித்ததும், அர்ஜுனன் இந்திரனிடம் அஸ்திரங்களைக் கற்றதும் ...	165-166
	அர்ஜுனன் தேவலோகத்தில் இத்தனை வருஷம் வஸித்தானென்பது	166
	இந்திரன் அர்ஜுனனைச் சித்ரஸேனனிடம் ஆடல்பாடல்களைக் கற்கச் சொல்லிச் சித்ரஸேனனை அவனுக்கு நண்பனாக்கியதும், அர்ஜுனன் கற்றதும் ...	166
	அர்ஜுனன் ஸ்வர்க்கத்திலும் ஸுகமடையாமலிருந்தது	166-167
44	இந்திரன் ஊர்வசியை அர்ஜுனனிடம் அனுப்பும்படி சித்ரஸேனனுக்குச் சொல்லியது	167

அத்யாயம்		பக்கம்
	சித்ரஸேனன் போய்ச்சொல்லியதும், ஊர்வசி அர்ஜுனனிடம் வந்ததும்	167-170
	அர்ஜுனன் ஊர்வசியை வணங்கியதும், அவள் சித்ரஸேனன் சொல்லியதையெல்லாம் அர்ஜுனனிடம் சொல்லியதும்	170-171
	அர்ஜுனன், ஊர்வசியைத் தாய்போன்றவளாகவும், குலத்திற்கேதாயென்னும் எண்ணத்துடன் பார்த்ததாகவும் அவளுக்குச் சொல்லியது ...	171-172
	ஊர்வசி வேண்டியும் அர்ஜுனன் மறுத்ததும், அவள் அவனைச் சபித்து வீடுசென்றதும் ...	172-173
	ஊர்வசி சபித்ததை அர்ஜுனன் சித்ரஸேனனுக்கும் அவன் இந்திரனுக்கும் சொல்லியது ...	173
	இந்திரன், 'அலித்தன்மை அஜ்ஞாதவாஸத்தில்மட்டும் வருக' என்றதும், அர்ஜுனன் மகிழ்ந்ததும் ...	173
	அர்ஜுனன் ஊர்வசியை மறுத்தகதையைக் கேட்டலின் பலன்	173-174
45	லோமசர் இந்திரஸபைக்கு வந்து அர்ஜுனன் இந்திராஸனத்தில் வீற்றிருக்கக் காரணத்தை ஆலோசித்தது	174
	இந்திரன் அர்ஜுனனது மகிமையை அவருக்குக்கூறி, அர்ஜுனனுடைய வரலாற்றை யுதிஷ்டிரருக்குத் தெரிவித்துத் தீர்த்தயாத்ரை செய்யச் சொல்லும்படி சொல்லியது	174-176
	இந்திரன் லோமசரை யுதிஷ்டிரர் தீர்த்தயாத்ரையில் உடனிருந்து காக்கவேண்டினதும், லோமசர் யுதிஷ்டிரரிடம் வந்ததும்	176
46	திருதராஷ்டிரன், அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றது முதலியவற்றைக் கேட்டுத் துரியோதனாதியரைப்பற்றி ஸஞ்சயனிடம் புலம்பியது ...	177-180
	ஸஞ்சயன் பாண்டவரின் பெருமையைக் கூறியது ...	178-179
	திருதராஷ்டிரன் தன் புத்திரர்களைப்பற்றி வருந்தியது	179-180
47	பாண்டவர்களுக்குக் காட்டில் உணவுப்பொருள் இன்னதென்பது	181
	பாண்டவர்களைத்தொடர்ந்து வனத்தில் வஸித்தவருள் நோயாளர் முதலியோரில்லையென்பது ...	181
	யுதிஷ்டிரரும் திரௌபதியும் உடனிருந்தவர்களை எந்த முறையில் போஷித்தனரென்பது ...	181
	பாண்டவர்கள் அர்ஜுனனைப்பிரிந்து இத்தனை வருஷங்கள் சென்றனவென்பது	181

அத்யாயம் பக்கம்

48 திருதராஷ்டிரன் பாண்டவர்களின் பராக்ரமத்தைக் கூறித் தன் பிள்ளைகளைப்பற்றி வருந்தினது ... 182-183
கிருஷ்ணன் முதலியோர் துரியோதனுதியரைக் கொல்வதாகப் பிரதிஜ்ஞை செய்ததை ஸஞ்சயன் திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது 183-185
திருதராஷ்டிரன் சண்டைவருவது திண்ணமென்றது 185-186

நளோபாக்யான பர்வம்.

49 பீமன் தர்மபுத்ரரை இடித்துக்கூறிப் பிரதிஜ்ஞா காலத்தைப் பிரதிநிதியால் கழித்து உடனே சண்டை தொடங்கவேண்டுமென்றது 186-189
தர்மபுத்ரர் பிரதிஜ்ஞாகாலத்தை உள்ளபடி கழித்துப் பின்பு துரியோதனுதியரைத் துணைமன்னருடன் கொல்லலாமென்றது 189
பிருஹதஶ்வர் வந்ததும், தர்மபுத்ரர் பூஜித்ததும் ... 189
தர்மபுத்ரர் பிருஹதஶ்வரிடம் தம் நிலைமையைக்கூறி வருந்தியதும், அவர் நளோபாக்யானத்தைச் சொல்லுவதாகக் கூறியதும் 190-191
50 நளனது குணம் பெருமை முதலியன ... 192
பீமராஜன் தமனரைப் பூஜித்ததும், அவர் அவனுக்கு வரங்கொடுத்ததும் 192-193
தமயந்தியின் குணம் பெருமை முதலியன ... 193
நளனும் தமயந்தியும் ஒருவரை ஒருவர் காதலித்தது ... 193
நளன் அன்னப்பறவையைப் பிடித்ததும், அது தமயந்தியைப்பற்றிச் சொல்லி விடைபெற்றதும் ... 193-194
அன்னம் தமயந்தியிடமும் நளனைப்பற்றிச்சொல்லி அவள் கருத்தை மீண்டும் நளனிடம் தெரிவித்தது 194
51 தமயந்தி காதலால் தன்வசமற்றிருந்ததும், அதனைத் தோழிமார் பீமராஜனுக்குத் தெரிவித்ததும் ... 195
பீமன் தமயந்தியின் ஸ்வயம்வரத்துக்கு அரசர்களை அழைத்ததும், அவர்கள் வந்ததும் 195-196
நாரதரும் பர்வதரும் இந்திரனிடம் சென்றதும், அவன் அவர்களைப் பூஜித்து க்ஷத்திரியர்கள் தேவலோகம் வராமைக்குக் காரணம்கேட்டதும் 196
நாரதர் தமயந்தியின் ஸ்வயம்வரம் நடப்பதைச் சொல்லியதும், லோகபாலர்கள் தாமும் ஸ்வயம்வரத்துக்கு வந்ததும் 196-197

அத்யாயம்		பக்கம்
	நளன் ஸ்வயம்வரத்துக்கு வந்ததும், தேவர்கள் அவனைத் தமயந்தியிடம் தூதுசெல்ல வேண்டினதும் ...	197
52	தேவர்கள், செய்யவேண்டிய வேலையைச்சொல்லித் தங்களையும் நளனுக்குத் தெரிவித்தது ...	197-198
	நளன் தமயந்தியின் மாளிகைசென்றதும், அவளுடைய தோழிமார் கண்டு வியந்ததும்	198-199
	தமயந்தி வினவ, நளன் தன்னையும் தான் காணப்படாமலும் தடுக்கப்படாமலும் வந்ததையும் வந்தகாரியத்தையும் தெரிவித்தது	199
53	தமயந்தி நளனையே விரும்பியதும், நளன் தேவரையே மணக்கச்சொல்லியதும்	199-201
	நளன் தமயந்தியின் கருத்தைத் தேவர்களுக்குத் தெரிவித்தது	201-202
54	அரசர்கள் ஸ்வயம்வரமண்டபத்தில் வீற்றிருந்ததும், தமயந்தி ஐந்துபேர் நளவடிவத்துடனிருப்பதைக் கண்டு ஆலோசித்ததும்	202-203
	தமயந்தி தேவர்களைச் சரணமடைந்ததும், அவர்கள் இருந்த வடிவத்திலேயே தம்மை விளக்கியதும் ...	203-204
	தமயந்தி தேவர்களையும் நளனையும் அறிந்து நளனை வரித்தது	204
	தமயந்தியும் நளனும் ஒருவரிடத்தொருவர் உடன்பாடு கூறித் தேவர்களைச் சரணமடைந்தது ...	204-205
	இந்திரனும் அக்நியும் யமனும் வருணனும் நளனுக்கு இரண்டிரண்டு வரன் கொடுத்துச்சென்றது ...	205
	பீமராஜன் தமயந்திக்கும் நளனுக்கும் விவாகம் நடத்தியதும், அவர்கள் தம் நகர்சென்று இனிது வாழ்ந்ததும்	205-206
	நளன் வேள்விகள் செய்ததும், இந்திரஸேனனும் இந்திரஸேனையும் பிறந்ததும்	206
55	இந்திரன் முதலியோர் கலியையும் த்வாபரனையும் வழியிற் கண்டது	206
	கலி, தமயந்தி நளனை வரித்ததுகேட்டு அவனைத் தண்டிக்கவேண்டுமென்றது	206
	இந்திரன் முதலியோர் நளனது பெருமையையும் அவனைச் சபிக்கவிரும்புகிறவனுக்குத் தீமைவருமென்பதையும் கலிக்குச்சொல்லிச் சென்றது ...	206-207

அத்யாயம்		பக்கம்
	கலி நளனைத் துன்புறுத்த த்வாபரனைத் துணைவேண்டினது	207
56	கலி காத்திருந்து நளனை அடைந்தது	207-208
	கலி புஷ்கரனை நளனுடன் சூதாடச்சொல்லித் தானும் பாச்சிகையாகி உடன்வந்தது	208
	நளனுக்கும் புஷ்கரனுக்கும் சூதாட்டமும், நளன் பொருள்களைத் தோற்றதும்	208
	நகரவாஸிகளின் விருப்பப்படி தமயந்தி நளனைத் தடுத்ததும், அவன் கேளாமல் ஆடித்தோற்றதும் ...	208-209
57	நகரமாந்தர் இரண்டாமுறையும் வந்ததைத் தமயந்தி தெரிவித்ததும், அரசன் கேளாமற்போனதும் ...	210
	தமயந்தி தன்மக்களை வார்ஷ்ணேயனுடன் குண்டினபுரத்துக்கனுப்பியதும், அவன் கொண்டுபோய்விட்டு அயோத்திமன்னனிடம் தேர்ப்பாகனானதும் ...	210-211
58	புஷ்கரன் தமயந்தியைப் பந்தயமாகவைக்கச் சொல்லியதும், நளன் ஆபரணம் மேலாடை முதலியவற்றையும் தோற்றதும் ...	211-212
	நளனும் தமயந்தியும் ஒவ்வோர் ஆடையுடன் வெளியே சென்றது	212
	புஷ்கரன் நளனை உபசரிப்போரைக் கொல்வதாகப் பறையறைவித்ததும், நளன் நகரருகில் மூன்றுநாள் வஸித்ததும்	212
	நளன் பறவைகளைப்பிடிக்க அரையிலிருந்த வஸ்திரத்தை வீசியதும், அவை வஸ்திரத்துடன் பறந்து சென்றதும்	212-213
	நளன் விதர்ப்பதேசத்துக்கு வழிகாட்டியதும், தமயந்தி நளனைப் பிரிய மறுத்ததும்	213-214
	மனைவியே சிறந்த மருந்தென்பது	214
	நளன் தமயந்தியைக் கைவிடேனென்றதும், தமயந்தி விதர்ப்பநாடு செல்வோமென்றதும்	214
59	நளன் விதர்ப்பதேசம்வர மறுத்தது	214-215
	நளதமயந்தியர் ஒரேவஸ்திரத்துடன் உறங்கியதும், நளன் தமயந்தியைப் பிரியநிச்சயித்ததும்	215-216
	நளன் பாதியாடையைக் கிழித்துக்கொண்டு தமயந்திக்குத் தெய்வங்களைக் காவல்வைத்துச் சென்றது ...	216-217
60	தமயந்தி நளனைக்காணாமல் புலம்பியதும், கலியைச் சபித்ததும்	217-218

அத்யாயம்		பக்கம்
	தமயந்தி நளனைத்தேடி அலைந்ததும், மலைப்பாம்பு அவளை விழுங்கியதும்	218
	தமயந்தி புலம்பியதும், மிருகவேடன் அவளை விடுவித்ததும்	218-219
	வேடன் தமயந்தியை விரும்பியதும், அவள் அவனைச் சபித்துக்கொன்றதும்	219-220
61	தமயந்தி, ஒரு கற்பாறையை அடைந்து புலம்பியது ...	221-222
	தமயந்தி புலியையும் மலையையும் வினவிப் புலம்பியது	222-225
	தமயந்தி ஆஶ்ரமமண்டலத்தைக்கண்டு அங்குள்ள முனிவர்களை வணங்கியதும், அவர்கள் அவளை யாரென்றுவினவியதும்	225-226
	தமயந்தி தன்னையும் தன்துயரையும் தெரிவித்ததும், முனிவர்கள் அவளைத்தேற்றி ஆஶ்ரம மண்டலத்துடன் மறைந்ததும்	226-227
	தமயந்தி அசோகமரத்தைக்கண்டு புலம்பியது ...	228
	தமயந்தி ஜனக்கூட்டத்தினிடம் சென்றதும், ஜனங்கள் அவளை வினவியதும்	229
	தமயந்தி நளனைப்பற்றிக் கேட்டதும், கூட்டத்தலைவன் மறுமொழியும்	230
62	தமயந்தி கூட்டத்துடன் சென்றதும், கூட்டம் குளக்கரையில் தங்கியதும்	231
	காட்டுயானைகள் வர்த்தகர் கூட்டத்தைப் பெரும்பாலும் கொன்றது	231-232
	கூட்டத்தில் மிச்சமிருந்தவர்கள் தம்மவர் அழிவுக்குத் தமயந்தியே காரணமெனக் கருதி அவளைக் கொல்வோமென்றது	232-233
	தமயந்தி தன்னைப்பற்றி அழுதது	233
	தமயந்தி கொல்லப்படாமைக்குக் காரணமும், அவள் கூட்டத்தைப்பற்றி வருந்தியதும்	234
	தமயந்தி சேதிநகரடைந்ததும், அவளை அரசன்தாய் அழைத்து வினவியதும்	234-235
	தமயந்தி தான் ஸைரந்த்ரியென்பதையும் கணவனைப் பிரிந்து வருந்துவதையும் சொல்லியதும், அரசன் தாய் அவளைத் தன்னிடமிருக்கச் சொல்லியதும்	235-236
	தமயந்தி உடன்பாட்டுடன் வஸிக்கவிரும்பியதும், அரசன் தாய் அவளை ஸுநந்தைக்குத் தோழியாக்கியதும்	236-237
63	காட்டுத்தீயிலகப்பட்ட கர்க்கோடகன் நளனை அழைத்ததும், நளன் அருகிற்சென்றதும் ...	237

அத்யாயம் பக்கம்

கர்க்கோடகன் தன்னைக்காக்கும்படி நளனைவேண்டித் தனக்குச் சாபம் வந்ததையும் சொல்லியது ... 237-238
கர்க்கோடகன் கட்டைவிரலளவானதும், நளன் தூக்கிச் சென்றதும் 238
கர்க்கோடகன் நளனைக் கடித்ததும், நளனுருவம் மாறினதும், கர்க்கோடகன் தன்னுருவடைந்ததும் ... 238
கர்க்கோடகன், கலி நளனிடம் கஷ்டத்துடன் வஸிப்பனென்று சொல்லி வரமும் ஆடையுங்கொடுத்து மறைந்தது 238-239
64 நளன் அயோத்தி சென்றதும், ருதுபர்ணன் அவனை ஸாரதியாக்கி வார்ஷ்ணேயனையும் ஜீவலனையும் அவனுக்குக் கீழிருக்கச்செய்ததும் 239-240
நளன் தமயந்தியைப்பற்றி ஶ்லோகம் சொல்லி வருந்தியதும், ஜீவலன் வினவ, அவன் மறைத்துச் சொல்லியதும் 240-241
65 பீமராஜன் நளதமயந்தியரைத்தேட அந்தணரை அனுப்பியதும், ஸுதேவன் தமயந்தியைக் கண்டதும் ... 241-242
ஸுதேவன் தமயந்தியிடம் பேசியது ... 242-244
தமயந்தி அழுததும், ஸுநந்தை தன்தாய்க்குத் தெரிவித்ததும் 244-245
ராஜமாதா தமயந்தியைப்பற்றி ஸுதேவனிடம் வினவியது 245
66 ஸுதேவன் தமயந்தியின் வரலாற்றையும் நெற்றியில் மறுவிருப்பதையும் தெரிவித்தது ... 245-246
ஸுநந்தை அழுக்கைத்துடைக்க மறுத் தெரிந்ததும், ஸுநந்தையும் அவள்தாயும் வருந்தியதும் ... 246
ராஜமாதா தமயந்தியைத் தன் உடன்பிறந்தாள் மகளென்றதும், தமயந்தி தாய்வீடுசெல்ல விரும்பியதும் 246-247
அரசன் தாய், தமயந்தியை அனுப்பியதும், அவள் தாய் வீடுசேர்ந்ததும் 247
பீமன் ஸுதேவனைப் பூஜித்தது ... 247
67 தமயந்தி நளனைத் தேடும்படி சொல்லியதும், அரசன் அந்தணரை அனுப்பியதும் 247-248
தமயந்தி நளன் தன்னைப் பிரிந்ததைப்பற்றிச் செல்லுமிடந்தோறும் சொல்லும்படி அந்தணருக்குச் சொல்லியது 248-249
அந்தணர்கள் நளனைத் தேடியது ... 249

அத்யாயம் பக்கம்

68 பர்ணாதன், பாகுகன் தமயந்தியின் சொல்லைக் கேட்டுச் சொன்ன மறுமொழியை அவளுக்குச் சொல்லியது 249-250
தமயந்தி பர்ணாதனைப் பூஜித்தது ... 251
தமயந்தி, தனக்கு இரண்டாஞ் சுயம்வரம் என்று ருதுபர்ணனிடம் சொல்லும்படி ஸுதேவனை அனுப்பியதும், அவன் சென்று சொல்லியதும் ... 251-252

69 ருதுபர்ணன் ஸ்வயம்வரத்துக்குப்போக விரும்பியதும், பாகுகன் ஒரேநாளில் குண்டினபுரிக்குத் தேர்செலுத்துவதாகச் சொல்லியதும் 252-253
பாகுகன் குதிரைகளைத் தேர்ந்தெடுத்ததும், ருதுபர்ணன் அவை இளைத்திருந்ததைக் கண்டு கோபித்ததும் 253
பாகுகன் குதிரைகளின் லக்ஷணங் கூறியது ... 253-254
ருதுபர்ணன் தேரேறியதும், குதிரைகள் கீழேவிழுந்ததும் 254
பாகுகன் குதிரைகளைத்தேற்றி ஓட்டியதும், வார்ஷ்ணேயன் பாகுகனை நளனென்று ஸந்தேகித்ததும் ... 254-255

70 ருதுபர்ணன் மேலாடை விழுந்ததென்றதும், பாகுகன் ஒருயோஜனை சென்றுவிட்டதென்றதும் ... 256
ருதுபர்ணன் தனக்குக் கணக்கில் திறமையிருப்பதைச் சொல்லி, ஒருமரத்தின் இலைகாய்களை எண்ணிக் காட்டியதும், பாகுகன் அவற்றை எண்ணத் தொடங்கியதும் 256-257
ருதுபர்ணன் விரைவுபட்டதும், பாகுகன் வார்ஷ்ணேயனைப் பர்கணுக்கிக்கொண்டு செல்லச் சொல்லியதும் 257
ருதுபர்ணன் பாகுகனைச் சரணமடைந்ததும், பாகுகன் எண்ணின பின்பே போவோமென்றதும் ... 257
பாகுகன், அக்ஷவித்தையையும் கணக்கையும் அஸ்வ வித்தைக்கு மாற்றும்படி ருதுபர்ணனைக் கேட்டது 257
ருதுபர்ணன், அக்ஷஹ்ருதயத்தைப் பாகுகனுக்குச் சொல்லி அஸ்வஹ்ருதயத்தைப் பின்பு பெற்றுக்கொள்வதாகச் சொல்லியது ... 257-258
கலி நளனுடம்பினின்று வெளிவந்து தன்னுருவடைந்தது 258
நளன் கலியைச் சபிக்க விரும்பியதும், கலிதன்னைத் தமயந்தி சபித்ததைச்சொல்லி நளனுக்கு வரங்கொடுத்து ஒளிந்ததும் 258

அத்யாயம்		பக்கம்
	கலியும் நளனும் பேசினதைப் பிறனறியாமலிருந்தது	258
	தான்றிமரம் விலக்கப்படுவதானது ...	259
	கலி வீடடைந்தது	259
71	ருதுபர்ணன் குண்டினபுரத்தில் நுழைந்ததும், தமயந்தியும் நளனது குதிரைகள் முதலியனவும் தேரொலியைக் கேட்டதும்	259-260
	தமயந்தி ருதுபர்ணன் முதலியோரைக் கண்டது ..	260
	ருதுபர்ணன் பீமராஜனிடம் சென்றதும், அவனை அவன் வரவேற்றதும்	260-261
	ருதுபர்ணன் அங்கே ஸ்வயம்வரக்குறிப்பு ஒன்றையும் காணமற் போனது	261
	பீமராஜன் வினவியதும், ருதுபர்ணன் அவனை வணங்க வந்ததாகச் சொல்லியதும்	261
	பாகுகன் குதிரைகளைக் களைப்பாற்றியதும், தமயந்தி தேரொலியைப்பற்றி ஆலோசித்ததும் ...	261-262
72, 73	தமயந்தி நளனைப் பலவிதமாகப் பரீக்ஷித்தறிந்தது	262-267
74	தமயந்தி பாகுகனைத்தருவித்து அவனுடன் பேசினதும், அவன் தான் நளனென்பதைத் தெரிவித்ததும் ...	267-269
	தமயந்தி தேவர்களைச் சாக்ஷிகூறியதும், வாயுபகவான் தமயந்தி குற்றமற்றவளென்றதும், மலர்மாரி பெய்ததும், தேவதுந்துபி முழங்கியதும்	270-271
	நளன் பழைய உருவடைந்ததும், தமயந்தி நளனைத்தழுவிக்கொண்டு அழுததும்	271
	நளன் மனைவிமக்களைத் தழுவியது	271
	தமயந்தியின் தாய் நடந்தவரலாற்றைப் பீமராஜனுக்குத் தெரிவித்தது	271
	நளனும் தமயந்தியும் அளவளாவி மகிழ்ந்தது ...	271-272
75	நளதமயந்தியர் பீமனைப் பார்த்ததும், அவன் நகரை அலங்கரிப்பித்து ஆலயங்களுக்குப் பூஜை நடத்தியதும்	272-273
	ருதுபர்ணன் நளனை க்ஷமிக்கும்படிவேண்டி அச்வஹ்ருதயம் பெற்றுத் தன் ஊர்சென்றது ...	273
76	நளன் வந்து புஷ்கரனைச் சூதுக்கழைத்ததும், அவன் ஆடித் தோற்றதும்	274-275
	நளன் புஷ்கரனை மன்னித்து நாடு கொடுத்ததும், அவனும் நளனை வணங்கிச் சென்றதும் ...	275-276

அத்யாயம் பக்கம்

நளன் மனைவிமக்களைத் தருவித்துக்கொண்டு இனிது வாழ்ந்தது 277-278
யார் யாரைச் சொல்வது கலியைப் போக்குவதாகுமென்பது 278
நள சரித்திரத்தைப் படித்தல்கேட்டல்களின் பயன் 278
பிருஹதஸ்வர் யுதிஷ்டிரருக்கு அக்ஷஹ்ருதயத்தை உபதேசித்தது 278
பிருஹதஸ்வர் ஹரிச்சந்திரன் கதையையும் சுருக்கமாகக் கூறிச் சென்றது 279-280
அரிச்சந்திரன் பிறப்பும் மணமும் 279
லோஹிதாஸ்வன் பிறப்பும் அரிச்சந்திரன் யாகங்கள் செய்ததும் 279
இந்திர ஸபையில் ஹரிச்சந்திரன் புகழப்பட்டபோது வஸிஷ்டர் மகிழ்ந்ததும், விஸ்வாமித்ரர் பொறாமையும் 279-280
வஸிஷ்டருக்கும் விஸ்வாமித்திரருக்கும் பந்தயமும் அரிச்சந்திரன் துன்பப்பட்டதும் 280
யுதிஷ்டிரர் அர்ஜுனனைப் பற்றிக் கவலைப்பட்டது ... 281

தீர்த்தயாத்ரா பர்வம்.

78 திரௌபதி முதலியோர் காம்யகவனத்தில் வஸிக்க விருப்பமின்மையை யுதிஷ்டிரரிடம் சொல்லியது ... 282-285
79 நாரதர்வந்ததும், யுதிஷ்டிரர் அவரைப் பூஜித்துத் தீர்த்தயாத்ரையில் பூப்ரதக்ஷிணம் செய்வதன்பயனைக் கேட்டதும் 285-286
நாரதர் புலஸ்தியருக்கும் பீஷ்மருக்கும் தீர்த்தயாத்ரை விஷயமாக நடந்த ஸம்வாதத்தைச் சொல்லத் தொடங்கியது 286
பீஷ்மர் விரதமியற்றியதும், புலஸ்தியர் வந்ததும் ... 286
பீஷ்மர் புலஸ்தியரைப் பூஜித்தது 286-287
80 பீஷ்மர் தீர்த்தயாத்ரையின் பயனைக் கேட்டதும், புலஸ்தியர் சொல்லத்தொடங்கியதும் 288
யார் யார் தீர்த்தபலனை அடைவரென்பது ... 288
தீர்த்தயாத்ரையின் சிறப்பு 289
வறியவனாகப் பிறக்கக் காரணம் 289
புஷ்கர தீர்த்த மகிமை 289-291
ஜம்பூமார்க்கத்தின் மகிமை 291
ஸ்தண்டிலகாஸ்ரமத்தின் மகிமை 291

அத்யாயம்			பக்கம்
அகஸ்தியஸரஸின் மகிமை	...	...	291
கண்வாஶ்ரமத்தின் மகிமை	...	...	291-292
யயாதிப்தனத்தின் மகிமை	...	...	292
கோடிதீர்த்த மகிமை	...	...	292
பத்ரவடதீர்த்த மகிமை	...	...	292
நர்மதையின் மகிமை	...	...	292
ஸிந்துவின் மகிமை	...	...	292
சர்மண்வதியின் மகிமை	...	...	292
வஸிஷ்டாஶ்ரமத்தின் மகிமை	...	...	292-293
பிங்கதீர்த்த மகிமை	...	...	293
பிரபாஸதீர்த்த மகிமை	...	...	293
ஸரஸ்வதீஸாகரஸங்கம மகிமை	...	...	293
வரதானதீர்த்த மகிமை	...	...	293
பிண்டாரகதீர்த்த மகிமை	...	...	293-294
வருணதீர்த்த மகிமை	...	...	294
சங்குகர்ணேஶ்வர மகிமை	...	...	294
சமீதீர்த்த மகிமை	...	...	294
வஸோர்த்தாராதீர்த்த மகிமை	...	...	294-295
ஸிந்தூத்தமதீர்த்த மகிமை	...	...	295
பிரம்மதீர்த்த மகிமை	...	...	295
இந்திரகுமாரீதீர்த்த மகிமை	...	...	295
ரேணுகாதீர்த்த மகிமை	...	...	295
பஞ்சநத மகிமை	...	...	295
பீமாதீர்த்த மகிமை	...	...	295
கிரிகுஞ்சதீர்த்த மகிமை	...	...	295
விமலதீர்த்த மகிமை	...	...	295
விதஸ்தாதீர்த்த மகிமை	...	...	295-296
மலதாதீர்த்த மகிமை	...	...	296
ஸப்தசருதீர்த்த வரலாறும், மகிமையும்	...	...	296
ருத்ரபத மகிமை	...	...	296
மணிமான் என்கிற தீர்த்த மகிமை	...	...	296-297
தேவிகாதீர்த்த மகிமை	...	...	297
காமதீர்த்த மகிமை	...	...	297
யஜனம், யாஜனம், பிரம்மவாலுகம், புஷ்பாம்பஸ் என்னும் தீர்த்தங்களின் மகிமை	...	...	297
தேவிகையின் விஸ்தீர்ணம்	...	...	297
தீர்க்கஸத்ரமென்னுமிடத்தின் வரலாறும், மகிமையும்			297

அத்யாயம்		பக்கம்
	விசசன்தீர்த்த மகிமை	297
	சமஸோத்பேத தீர்த்த மகிமை	297
	சிவோத்பேத தீர்த்த மகிமை	297-298
	நாகோத்பேத தீர்த்த மகிமை	298
	சசயான தீர்த்த மகிமை	298
	குமாரகோடி தீர்த்த மகிமை	298
	ருத்ரகோடிதீர்த்த வரலாறும், மகிமையும் ...	298
	ஸரஸ்வதீஸங்கம மகிமை	298-299
81	குருக்ஷேத்ர மகிமை	299-300
	மந்துகனை வணங்குவதன் பயன்	300
	ஸததத்தின் மகிமை	300
	பாரிப்லவதீர்த்த மகிமை	300
	ப்ருதிவீதீர்த்த மகிமை	300
	தசாஶ்வமேததீர்த்த மகிமை	300
	ஸர்ப்பதர்வீதீர்த்த மகிமை	300
	கோடிதீர்த்த மகிமை	300-301
	அஶ்விநீதேவதீர்த்த மகிமை	301
	வாராகதீர்த்த மகிமை	301
	ஸோமதீர்த்த மகிமை	301
	ஏகஹம்ஸதீர்த்த மகிமை	301
	சதசௌசதீர்த்த மகிமை	301
	முஞ்சவட மகிமை	301
	ராமஹ்ரதங்களின் வரலாறும், மகிமையும் ...	301-303
	வம்சமூலகதீர்த்த மகிமை	303
	காயசோதனதீர்த்த மகிமை	303
	லோகோத்தாரதீர்த்தத்தின் வரலாறும், மகிமையும் ...	303
	ஸ்ரீதீர்த்த மகிமை	303
	கபிலாதீர்த்த மகிமை	303
	ஸூர்யதீர்த்த மகிமை	303
	கோபவனதீர்த்த மகிமை	303
	சங்கினீதீர்த்த மகிமை	303
	யக்ஷராஜதீர்த்த மகிமை	303
	பிரம்மாவர்த்ததீர்த்த மகிமை	303-304
	ஸுதீர்த்த மகிமை	304
	கோசேஸ்வரதீர்த்த மகிமை	304
	மாத்ருதீர்த்த மகிமை	304
	சீதவனதீர்த்த மகிமை	304

அத்யாயம்	பக்கம்
ர்வானலோமாபஹதீர்த்த மகிமை	304-305
தசாஸ்வமேததீர்த்த மகிமை	305
மானுஷதீர்த்த மகிமை	305
ஆபகாதீர்த்த மகிமை	305
ஸப்தரிஷிகுண்டங்கள் கபிஞ்சலகேதாரம் ஆகிய இவற்றின் மகிமை	305
சங்கரதீர்த்த மகிமை	305-306
சுத்தாஸ்பததீர்த்த மகிமை	306
கிந்தானதீர்த்தம் கிஞ்சப்யதீர்த்தம் ஆகிய இவற்றின் மகிமை	306
கலசிதீர்த்த மகிமை	306
அஜானந்தாதீர்த்த மகிமை	306
புண்டரீகதீர்த்த மகிமை	306
வைதரணி நதியின் மகிமை	306
த்ருஷத்வதீ நதியின் மகிமை	306
ஸர்வதேவதீர்த்த மகிமை	307
பாணிகாததீர்த்த மகிமை	307
மிஸ்ரகதீர்த்த வரலாறும், மகிமையும்	307
மனோஜவதீர்த்த மகிமை	307
மதுவடதீர்த்த மகிமை	307
கௌசிகீத்ருஷத்வதீஸங்கம மகிமை	307
வியாஸஸ்தலியின் வரலாறும், மகிமையும் ...	307
கிந்தத்தகூப மகிமை	307-308
வேதீதீர்த்த மகிமை	308
அஹஸ், ஸுதினம் ஆகிய தீர்த்தங்களின் மகிமை ...	308
மிருகதூமத்தில் கங்கையின் மகிமை	308
தேவீதீர்த்த மகிமை	308
வாமனதீர்த்தம் விஷ்ணுபததீர்த்தம் இவற்றின் மகிமை	308
குலம்புனதீர்த்த மகிமை	308
பவனஹ்ரதம், மருத்துக்களின் தீர்த்தம் இவற்றின் மகிமை	308
அமரஹ்ரத மகிமை	308
சாலிசூர்ப்பதீர்த்த மகிமை	308
ஸ்ரீகுஞ்சதீர்த்த மகிமை	308
நைமிஷகுஞ்ச மகிமை	308
ஸரஸ்வதீகுஞ்ச மகிமை	308-309
கன்யாதீர்த்த மகிமை	309

அத்யாயம்	பக்கம்
பிரம்மதீர்த்த மகிமை	309
ஸோமதீர்த்த மகிமை	309
ஸப்தஸாரஸ்வததீர்த்த மகிமையும், மங்கணகர்கதையும்	309-310
ஔசனஸதீர்த்தம், கபாலமோசனதீர்த்தம் இவற்றின் மகிமை	310-311
அக்நிதீர்த்த மகிமை	311
விச்வாமித்ரதீர்த்த மகிமை	311
பிரம்மயோனிதீர்த்த மகிமை	311
பிருதூதக மகிமை	311-312
எது எதைவிட எது எது புண்யமானதென்பது ...	311
மதுஸ்ரவதீர்த்த மகிமை	312
ஸரஸ்வத்யருணாஸங்கம மகிமை	312
அவதீர்ணதீர்த்த மகிமை	312
சதஸஹஸ்ரகம் ஸாஹஸ்ரகம் ஆகிய தீர்த்தங்களின் மகிமை	312-313
ரேணுகாதீர்த்த மகிமை	313
விமோசனதீர்த்த மகிமை	313
பஞ்சவடியின் மகிமை	313
தைஜஸதீர்த்த மகிமை	313
குருதீர்த்த மகிமை	313
ஸ்வர்க்கத்வார மகிமை	313
அநரகதீர்த்த மகிமை	313-314
ஸர்வதேவதீர்த்தங்களின் மகிமை	314
ஸ்வஸ்திபுரமகிமை	314
பாவனதீர்த்தமகிமை	314
கங்காஹ்ரதம் கூபம் இவற்றின்மகிமை	314
ஆபகாநதியின்மகிமை	314
ஸ்தாணுவடதீர்த்தமகிமை	314
வஸிஷ்டாச்ரம மகிமை	314
இந்திரமார்க்கமகிமை	314
ஏகராத்ரதீர்த்தமகிமை	314-315
ஆதித்யதீர்த்தமகிமை	315
ஸோமதீர்த்தமகிமை	315
ததீசதீர்த்தமகிமை	315
கந்யாச்ரமமகிமை	315
ஸந்நிஹதிதீர்த்தமகிமை	315-316
கோடிதீர்த்தமகிமை	316

அத்யாயம்		பக்கம்
	கங்காஹ்ரத மகிமை	316
	எங்கெங்கே எது எது சிறந்ததென்பது	316
	குருக்ஷேத்ரமகிமை	316-317
82	தர்மதீர்த்தமகிமை	317
	ஞானபாவனமகிமை	317
	ஸௌகந்திகவனமகிமை	317
	ப்லக்ஷாநதியின்மகிமை	317
	கவேராத்யுஷிததீர்த்தமகிமை	318
	ஸுகந்தை, சதகும்பை, பஞ்சயக்ஷை என்னும் நதிகளின் மகிமை	318
	த்ரிசூலகாததீர்த்தமகிமை	318
	சாகம்பரியின் வரலாறும், மகிமையும்	318
	ஸுவர்ணதீர்த்தமகிமை	318-319
	தூமாவதியின்மகிமை	319
	ரதாவர்த்தபர்வதமகிமை	319
	தாராதீர்த்தமகிமை	319
	கங்காத்வாரகோடிதீர்த்தமகிமை	319
	ஸப்தகங்கை, த்ரிகங்கை, சக்ராவர்த்தம் என்னும் தீர்த்தங்களின்மகிமை	319
	கனகல்தீர்த்தமகிமை	319
	கபிலாவட மகிமை	319
	கபிலநாகதீர்த்தமகிமை	320
	லலிதகதீர்த்தமகிமை	320
	கங்காயமுனாஸங்கமமத்யமகிமை	320
	ஸுகந்ததீர்த்தமகிமை	320
	ருத்ராவர்த்ததீர்த்த மகிமை	320
	கங்காஸரஸ்வதீஸங்கம மகிமை	320
	பத்ரகர்ணேஶ்வர மகிமை	320
	குப்ஜாவதீதீர்த்த மகிமை	320
	அருந்ததீவடத்தில் ஸாமுத்ரகதீர்த்த மகிமை ...	320
	பிரம்மாவர்த்த மகிமை	320
	யாமுனதீர்த்த மகிமை	320
	தர்வீஸங்கிரமணதீர்த்த மகிமை	321
	விந்தூத்பத்தியின் மகிமை	321
	வேதியின் மகிமை	321
	வாஸிஷ்டையின் மகிமை	321
	ரிஷிகுல்யாதீர்த்த மகிமை	321

அத்யாயம்			பக்கம்
பிருகுதுங்க மகிமை	...	...	321
வீரப்ரமோக்ஷதீர்த்த மகிமை	...	...	321
கிருத்திகாதீர்த்தம், மாகதீர்த்தம் இவற்றின் மகிமை			321
வித்யாதீர்த்த மகிமை	...	...	321
மஹாஸ்ரம மகிமை	...	...	321
மஹாலய மகிமை	...	...	321
வேதவிகாதீர்த்த மகிமை	...	...	321
ஸுந்தரிகாதீர்த்த மகிமை	...	...	321-322
பிரம்மதீர்த்த மகிமை	...	...	322
நைமிஷ மகிமை	...	...	322
கங்கோத்பேத மகிமை	...	...	322
ஸரஸ்வதீநதியின் மகிமை	...	...	322
பாகுதாநதியின் மகிமை	...	...	322
க்ஷீரவதீநதியின் மகிமை	...	...	322-323
விமலாசோக மகிமை	...	...	323
கோப்ரதாரதீர்த்த மகிமை	...	...	323
ராமதீர்த்த மகிமை	...	...	323
சதஸாஹஸ்ரகதீர்த்த மகிமை	...	...	323
பர்த்ருஸ்தான மகிமை	...	...	323
கோடிதீர்த்த மகிமை	...	...	323
கபிலாஹ்ரத மகிமை	...	...	323
அவிமுக்த மகிமை	...	...	323
மார்க்கண்டேயதீர்த்த மகிமை	...	...	323
கயையின் மகிமை	...	...	323-324
அக்ஷயவட மகிமை	...	...	324
மஹாநதியின் மகிமை	...	...	324
பிரம்மஸரவின் மகிமை	...	...	324
தேனுகதீர்த்த வரலாறும், மகிமையும்	...	...	324
கிருத்ரவடத்தில் பஸ்மஸ்நான மகிமை	...	...	324
உதயபர்வத மகிமை	...	...	324-325
கயையின் மகிமை	...	...	325
மனிதர் ஸந்ததியை விரும்பக் காரணம்	...	...	325
பல்குநதியின் மகிமை	...	...	325
தர்மப்ரஸ்த மகிமை	...	...	325
மதங்காஸ்ரம மகிமை	...	...	325
பிரம்மஸ்தானதீர்த்த மகிமை	...	...	325
ராஜகிருக மகிமை	...	...	325-326

அத்யாயம்			பக்கம்
மணிநாகதீர்த்த மகிமை	...	...	326
கௌதம வன மகிமை	...	...	326
கௌதம வனத்திலுள்ள கூப மகிமை	...	...	326
அஹல்யாஹ்ரத மகிமை	...	...	326
ஜனககூப மகிமை	...	...	326
விநசனதீர்த்த மகிமை	...	...	326
கண்டகீநதியின் மகிமை	...	...	326
விசல்யாநதியின் மகிமை	...	...	326
வங்கவன மகிமை	...	...	326
கம்பனாநதியின் மகிமை	...	...	326
மகேஶ்வர தாரையின் மகிமை	...	...	326
தேவ புஷ்கரிணியின் மகிமை	...	...	326-327
ஸோமபததீர்த்த மகிமை	...	...	327
தீர்த்தகோடியின் வரலாறும், மகிமையும்		...	327
நாராயணஸ்தான மகிமை	...	...	327
நாராயண ஸ்தானத்திலுள்ள கூபமகிமை		...	327
ஜாதிஸ்மர தீர்த்த மகிமை	...	...	327
வடேஶ்வர புர மகிமை	...	...	327
வாமனதீர்த்த மகிமை	...	...	327-328
பரதாஶ்ரம மகிமை	...	...	328
கௌசிகி நதியின் மகிமை	...	...	328
சம்பகாரண்ய மகிமை	...	...	328
ஜ்யேஷ்டிலதீர்த்த மகிமை	...	...	328
கந்யா ஸம்வேத்யதீர்த்த மகிமை	...	...	328
நிர்வீரதீர்த்த மகிமை	...	...	328
நிர்வீரா ஸங்கம மகிமை	...	...	328
வஸிஷ்டாஶ்ரம தீர்த்த மகிமை	...	...	328
தேவகூட மகிமை	...	...	328
கௌசிகியின் மகிமை	...	...	328
மஹாஹ்ரத தீர்த்த மகிமை	...	...	328-329
வீராஶ்ரமமகிமை	...	...	329
அக்னிதாரா தீர்த்த மகிமை	...	...	329
பிதாமஹ ஸரஸின் மகிமை	...	...	329
குமாரதாரா தீர்த்த மகிமை	...	...	329
ஸ்தனகுண்ட தீர்த்த மகிமை	...	...	329
தாம்ராருண தீர்த்த மகிமை	...	...	329
தேவகூபமகிமை	...	...	329

அத்யாயம்		பக்கம்
	காளிகா ஸங்கம மகிமை	329
	உர்வசீ தீர்த்தம், ஸோமாஸ்ரமம், கும்பகர்ணாஸ்ரமம் இவற்றின் மகிமை	329
	கோகாமுக தீர்த்த மகிமை	329-330
	ப்ராங் நதியின் மகிமை	330
	ரிஷபத்வீபம், ஸரஸ்வதி தீர்த்தம் இவற்றின் மகிமை ...	330
	ஔத்தாலக தீர்த்த மகிமை	330
	தர்மதீர்த்த மகிமை	330
	பம்பை, பாகீரதி, தண்டார்த்தம் இவற்றின் மகிமை ...	330
	லேவலிகா நதியின் மகிமை	330
83	ஸம்வேத்ய தீர்த்த மகிமை	330
	லௌஹித்ய தீர்த்த மகிமை	330
	கரதோயா நதியின் மகிமை	330
	கங்காஸமுத்ர ஸங்கம மகிமை	331
	கங்கையின் அக்கரையின் மகிமை	331
	வைதரணிநதி, விரஜாதீர்த்தம் இவற்றின் மகிமை ...	331
	சோணம், ஜ்யோதிரத்யை இவற்றின் ஸங்கம மகிமை ...	331
	வம்சகுல்ம தீர்த்த மகிமை	331
	கோஸலையில் ரிஷப தீர்த்த மகிமை	331
	கோஸலையில் கால தீர்த்த மகிமை	331
	புஷ்பவதீ தீர்த்த மகிமை	331
	பதரிகா தீர்த்த மகிமை	331
	சம்பை, பாகீரதி, தண்டம் இவற்றின் மகிமை ...	331
	லபேடிகாதீர்த்த மகிமை	331
	மஹேந்திர மலையில் ராமதீர்த்த மகிமை	331-332
	மதங்ககேதாரதீர்த்த மகிமை	332
	ஸ்ரீபர்வதநதீதீர மகிமை	332
	தேவஹ்ரத மகிமை	332
	ரிஷபமலையின் மகிமை	332
	காவேரியின் மகிமை	332
	கன்யா தீர்த்த மகிமை	332
	கோகர்ண மகிமை	332
	காயத்ரீஸ்தான மகிமை	332-333
	ஸம்வர்த்தவாவியின் மகிமை	333
	வேணையின் மகிமை	333
	கோதாவரியின் மகிமை	333
	வேணாஸங்கம மகிமை	333

அத்யாயம்	பக்கம்
வரதாநதியின் ஸங்கம மகிமை	333
பிரம்மஸ்தான மகிமை	333
குசப்லவன தீர்த்த மகிமை	333
தேவஹ்ரதம், ஜாதிஸ்மரஹ்ரதம் இவற்றின் மகிமை ...	333
ஸர்வஹ்ரத மகிமை	333
மஹாபுண்யவாவி, பயோஷ்ணிநதி இவற்றின் மகிமை ...	333
தண்டகாரண்ய மகிமை	333
சரபங்காஸ்ரமம், சுகாஸ்ரமம் இவற்றின் மகிமை ...	333-334
சூர்ப்பாரகம், ராம தீர்த்தம் இவற்றின் மகிமை ...	334
ஸப்தகோதாவர தீர்த்த மகிமை	334
தேவபத மகிமை	334
துங்ககாரண்ய வரலாறும், மகிமையும்	334
மேதாவிக தீர்த்த மகிமை	334
காலஞ்சரம், தேவஹ்ரதம் இவற்றின் மகிமை ...	334-335
சித்ரகூடத்தில் மந்தாகினியின் மகிமை ...	335
பர்த்ருஸ்தான மகிமை	335
கோடிதீர்த்த மகிமை	335
ஜ்யேஷ்டஸ்தானம், அங்குள்ளகூபம் இவற்றின் மகிமை	335
ஸ்ருங்கபேரபுரதீர்த்த மகிமை	335
கங்கா ஸ்நான பலன்	335
முஞ்சவட மகிமை	335-336
பிரயாகையின் மகிமை	336-337
பிரம்மதேவரின் யாகவேதிகள் இவையென்பது ...	336
போகவதீதீர்த்த மகிமை	337
ஹம்ஸப்ரபதனம், தசாஸ்வமேதிகம் ஆகிய தீர்த்தங்களின் மகிமை	337
கனகலம், பிரயாகம் இவற்றின் மகிமை	337
கங்கா ஸ்நான மகிமை	337
இன்ன இன்ன யுகத்தில் இதுஇது புண்யமானதென்பது	337
எங்கெங்கே என்னென்ன நற்கருமங்கள் செய்யவேண்டுமென்பது	337-338
புஷ்கரம், குருக்ஷேத்ரம், கங்கை, மகதங்கள் இவற்றின் மகிமை	338
ஒப்பற்ற மூன்றுபொருள்கள்	338
தீர்த்தபரம்பரையைச் சொல்லுதல் முதலியவற்றின் பயன்	338-339
இவர்இவர் தீர்த்தஸ்நானம் செய்யாரென்பது ...	339

அத்யாயம் பக்கம்

புலஸ்தியர் தீர்த்தயாத்ரையின் பயனைச் சொல்லிமுடித்துப் பீஷ்மரை வாழ்த்திச் சென்றது 339-340
பீஷ்மர் தீர்த்தயாத்ரை செய்ததும், தீர்த்தயாத்ரை முடியுமிடமும் 340
நாரதர் புலஸ்திய பீஷ்மஸம்வாதத்தையும் அதனைப் படித்தல் கேட்டல்களின் பயனையும் கூறி யுதிஷ்டிரரை வாழ்த்தித் தீர்த்தயாத்ரை செய்யச்சொல்லிச் சென்றது 340-341
84 யுதிஷ்டிரர் அர்ஜுனனைப் பிரிந்ததனால் தமக்குக் காம்யகவனத்தில் வஸிக்க விருப்பமில்லாமையைக் கூறி வாஸத்துக்காக வேறு இடத்தைச் சொல்லும்படி தௌம்யரை வேண்டினது 341-344
85 தௌம்யர் யுதிஷ்டிரருக்குக் கீழ்த்திசையிலுள்ள தீர்த்தங்களையும் மலைகளையும் ஆயதனங்களையும் சொல்லியது 344-346
86 தௌம்யர் தென்திசையிலுள்ள தீர்த்த முதலியவற்றை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது 347-349
ந்ருகன் யாகம்செய்ததும், இந்திரன் முதலியோர் களித்ததும் 347
பயோஷ்ணியின் மகிமை 347-348
விஷாண மகிமை 347
உஜ்ஜயந்தகிரியின் மகிமை 349
கிருஷ்ணன் மஹிமை 349
87 தௌம்யர் மேற்றிசையிலுள்ள தீர்த்த முதலியவற்றை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது 349-351
88 தௌம்யர் வடதிசையிலுள்ள தீர்த்தமுதலியவற்றை யுதிஷ்டிரருக்குக் கூறியது 351-354
89 லோமசர் பாண்டவர்களிடம் வந்ததும், யுதிஷ்டிரர் தேசாடன முதலியவற்றைப்பற்றி வினவியதும் ... 355
அர்ஜுனன் பாசுபதம் பெற்றது முதலிய செய்திகளை லோமசர் யுதிஷ்டிரருக்குச் சொல்லியது ... 355-357
90 அர்ஜுனன் பாண்டவர்களுக்கு உடனிருந்து தீர்த்தயாத்ரை செய்விக்கும்படி சொல்லியதை லோமசர் யுதிஷ்டிரருக்குச் சொல்லியது 357-358
லோமசர் முன்னரே இரண்டுமுறை தீர்த்தயாத்ரை செய்தனரென்பது 358
யுதிஷ்டிரர் தாமும் தீர்த்தயாத்ரைக்கு ஸித்தமாயிருப்பதை லோமசருக்குத் தெரிவித்தது 358

அத்யாயம்		பக்கம்
	லோமசர் பரிவாரங்களைக் குறைத்துக்கொள்ளச் சொல்லியதும், யுதிஷ்டிரர் பிக்ஷையெடுப்பவர் முதலியோரைத் திருதராஷ்டிரனிடமாவது பாஞ்சாலனிடமாவது செல்லச் சொல்லியதும்	359
	பெரும்பாலார் திருதராஷ்டிரனிடம் சென்றதும், அவன் அவர்களை ஆதரித்ததும்	359
	யுதிஷ்டிரர் மிச்சமிருந்தவர்களுடனும் லோமசருடனும் மூன்றுநாள் காம்யகவனத்தில் வஸித்தது ...	359
91	யுதிஷ்டிரர் லோமசர்முதலியவர்களுடன் தீர்த்தயாத்ரைக்குப் புறப்பட்டதும், வழியில் பிராம்மணர் பலர் உடன்வருவதாகச் சொல்ல யுதிஷ்டிரர் ஸம்மதித்ததும்	360-361
	வியாஸர் முதலியோர் வந்து தீர்த்தயாத்ரைக்குச் சுத்தி அவசியமென்றதும், யுதிஷ்டிரர் முனிவர்களை வணங்கித் தீர்த்தயாத்ரைக்குச் சென்றதும்	361-362
	இரண்டுவகை விரதங்கள்	361
92	லோமசர் அதர்மம் வறுமைக்கும் தர்மம் செல்வத்துக்கும் காரணமென்பதை விளக்க அஸுரர் தேவர் இவர்களின் வரலாற்றைக் கூறியது	362-364
93	யுதிஷ்டிரர் முதலியவர்கள் அடைவில் பிரம்மஸரஸை அடைந்ததும், அங்கே சமடர் கயனுடைய யாகத்தை அவர்களுக்குச் சொல்லியதும்	364-367
94	லோமசர் யுதிஷ்டிரருக்கு அகஸ்தியருடைய சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கியது	368
	இல்வலன் வாதாபி இவர்களின் வரலாறு ...	368-378
	இல்வலன் ஒரு பிராம்மணரை வரங்கேட்க அவர்கொடாமையால் அவன் பிராம்மணரைக் கொல்பவனானது ...	368
	இல்வலன் வாதாபியை ஆடாக்கி உண்பித்துப் பிராம்மணர்களைக் கொன்றது	368
	அகஸ்தியர் பித்ருக்களைக் கண்டதும், அவர்கள் ஸந்ததியை உண்டுபண்ணும்படி அவருக்குச் சொல்லியதும்	368 369
	லோபாமுத்ரையின் பிறப்பு	369
95	அகஸ்தியருக்கும் லோபாமுத்ரைக்கும் விவாகம் ...	370-371
	லோபாமுத்ரை சிறந்த படுக்கை முதலியவற்றை விரும்பியது	371-372
96	அகஸ்தியர் பொருளுக்காக ஶ்ருதர்வா முதலிய மூவரை அடைந்து அவர்களுடன் இல்வலனிடம் சென்றது ...	372-374

அத்யாயம் பக்கம்

97 இல்வலன் அகஸ்தியரை வாதாபியின் மாம்ஸத்தை உண்பித்துப் பின்பு அவனை அழைத்ததும், அகஸ்தியர் தாம் அவனை ஜீர்ணமாக்கியதைச் சொல்லியதும் ... 375
இல்வலன் பொருள் கொடுத்து அகஸ்தியரைக் கொல்லத் தொடர்ந்ததும், அவர் அவனை எரித்ததும் ... 376
த்ருடஸ்யுவின் பிறப்பும், அவன் இத்மவாகனென்னும் பெயர் பெற்றதும் 377
98 பரசுராமர் விருப்பப்படி தசரதராமர் அம்பு தொடுத்ததும், அது பரசுராமருடைய தேஜஸைக் கவர்ந்ததும் 379-381
பரசுராமர் பித்ருக்களின் கட்டளைப்படி பிருகு தீர்த்தத்தில் நீராடி மறுபடியும் தேஜஸைப் பெற்றது ... 381
99 தேவர்கள் விருத்ரனைக் கொல்ல முயன்றதும், பிரம்மதேவர் உபாயங் கூறியதும் 382-383
தேவர்கள் ததீசரை யாசித்து எலும்புபெற்றதும், த்வஷ்டா அதனை வஜ்ராயுதமாகச் செய்து கொடுத்ததும்... 383-384
100 இந்திரனுக்கும் விருத்ரனுக்கும் போர்நடந்ததும், பயந்த இந்திரனுக்கு விஷ்ணு முதலியோர் பலத்தைக் கொடுத்ததும் 384-385
இந்திரன் விருத்ரனைக் கொன்றதும், அஸுரர்கள் தவசிகளை அழிக்க நிச்சயித்துக் கடலில் வசித்ததும் ... 385-386
101-102 காலேயர்கள் இரவுதோறும் முனிவர்களைக் கொன்றதும், தேவர்கள் நாராயணரைச் சரணமடைந்ததும் 387-390
விஷ்ணு கடலை வற்றச் செய்ய வேண்டுமென்றதும், பிரம்மதேவர் அகஸ்தியரை வேண்டும்படி தேவர்களுக்குச் சொல்லியதும் 390-391
தேவர்கள் அகஸ்தியரைத் துதித்தது 391
103 விந்தியமலை தன்னையும் சுற்றும்படி ஸூர்யனுக்குச் சொல்லியதும், அவன் மறுமொழியும்... ... 392
விந்தியமலை வளர்ந்ததும், அகஸ்தியர் அதனைத்தடுத்ததும் 392
தேவர்கள் கடலைக் குடிக்கும்படி அகத்தியரை வேண்டினது 393
104 அகஸ்தியர் கடலைக் குடித்ததும், தேவர்கள் அவரைத் துதித்ததும் 394
தேவர்கள் அஸுரர்களைக் கொன்றது 394-395
தேவர்கள் குடித்த நீரை வெளிவிடும்படி அகஸ்தியரை வேண்டினதும், அவர் அதனை ஜீரணமாக்கிவிட்டதாகச் சொல்லியதும் 395

அத்யாயம் பக்கம்

105-106 பிரம்மதேவர் கடலைப் பகீரதன் நிரப்புவானென்றது 396
ஸகரனுக்குப் பிள்ளைகள் பிறந்தது 397-399
ஸாகரர்கள் உலகங்களைத் துன்புறுத்தியதும், பிரம்மதேவர் ஸாகரர்கள் தம் குற்றத்தாலேயே அழிவரென்றதும் 399
ஸகரன் விட்ட யாகக் குதிரை காணாமற்போனதும், ஸாகரர் கடலைத் தோண்டி அதனைக் கண்டதும் ... 399-400
107 ஸாகரர் கபிலரை எதிர்த்ததும், அவர் அவர்களை எரித்ததும் 401
ஸகரன் அஸமஞ்சனை விலக்கியது 402
ஸகரன் குதிரையைத் தேடிவரும்படி அம்சுமானுக்குச் சொல்லியது 403
அம்சுமான் கபிலரை வணங்கியதும், அவர் வரங்களையும் குதிரையையும் கொடுத்ததும் 403
ஸகரன் யாகத்தைமுடித்து ஸாகரத்தைத் தனக்குப் புத்ரனுக்கிக் கொண்டது 404
பகீரதன் பிறப்பு 404
108 இமயமலையின் வர்ணனை 405-406
பகீரதன் கங்கையைக்குறித்துத் தவஞ்செய்ததும், கங்கை தன்னைத் தாங்க ஈஶ்வரரை வேண்டச்சொல்லியதும் 406-407
109 ஈஶ்வரர் கங்கையைத்தாங்கச் சம்மதித்தது ... 407-408
கங்கை இறங்கியதும், ஹரர் தாங்கியதும் ... 408
ஸமுத்ரம் நிரம்பியதும், கங்கை பகீரதன் மகளானதும் ... 408
பகீரதன் ஜலதர்ப்பணம் செய்தது 409
110 ரிஷபமுனிவர், நந்தை, அபரநந்தை இவர்களின் மகிமை 409-411
111 ரிஶ்யஶ்ருங்கர் பிறப்பு 412
அங்கநாட்டில் மழையில்லாமற் போனதும், அரசன் ரிஶ்யஶ்ருங்கரை அழைத்துவரும்படி தாஸிகளுக்குக் கட்டளையிட்டதும் 413-414
112 தாஸி ஓடத்துடன் வனம்வந்து தன்மகளை ரிஶ்யஶ்ருங்கரிடம் அனுப்பியதும், அவள் அவரை மயக்கிச் சென்றதும் 414-416
ரிஶ்யஶ்ருங்கர் மயங்கியதும், விபாண்டகர் காரணங்கேட்டதும் 416-417
113 ரிஶ்யஶ்ருங்கர் வேசியை ரிஷிகுமாரனென்றெண்ணி அவளை வருணித்து அவளுடைய செயல்களையும் தம்

அத்யாயம்		பக்கம்
	மனம் அவளிடமேபற்றியதையும் பிதாவுக்குச் சொல்லியது	417-419
114	வேசியர் ரிஸ்யஸ்ருங்கரை ஓடத்தில் ஏற்றிவந்ததும், மழை பெய்ததும்	421
	ரோமபாதன் ரிஸ்யஸ்ருங்கருக்குப் பெண்ணைக் கொடுத்தது	421
	விபாண்டகர் கோபித்து வந்து அநுக்ரகித்துச் சென்றது	421-422
115	கலிங்கதேசம், வைதரணியின் வடகரை இவற்றின் மகிமை	423-424
	ருத்ரருக்கு ஹவிர்ப்பாகம் ஏற்பட்டது	423-424
	வேதியின் வரலாறும் மகிமையும்	424-426
116	அக்ருதவ்ரணர் பரசுராமர் சரித்ரத்தைச் சொல்லத் தொடங்கியது	427
	கார்த்தவீர்யன் உலகங்களைத் துன்புறுத்தியது ...	427
	ரிசீகர் காதியின் மகளைச் சுல்கங்கொடுத்து மணந்தது ...	427-428
	அஸ்வ தீர்த்த வரலாறு	428
	ப்ருகு முனிவர் சருவளித்ததும், ரிசீகரின் மனைவியும் மாமியும் அவற்றை மாற்றியுண்டதும்	429
	ஜமதக்னி முனிவரின் பிறப்பு	429-430
117	ஜமதக்னியின் மணமும் ரேணுகையின் கற்பழிவும் ...	430-431
	ஜமதக்னி தமது புத்ரர்களைத் தாயைக் கொல்ல ஏவியதும், முதல் நால்வர் சாபம் பெற்றதும் ...	431
	பரசுராமர் தாயைக் கொன்றதும், ஜமதக்னியிடம் தாய் பிழைத்தல் முதலிய வரன்களைப் பெற்றதும் ...	431-432
	கார்த்தவீர்யன் ஜமதக்னியின் ஆஸ்ரமத்தை அழித்துக் கன்றைத் திருடியதும், பரசுராமர் அவனைக் கொன்றதும்	432
	கார்த்தவீர்யன் புத்ரர்கள் ஜமதக்னியைக் கொன்றது ...	432
118	பரசுராமர் ஜமதக்னிமுனிவரைக்குறித்துப் புலம்பியதும், க்ஷத்ரியரைக் கருவறுத்ததும்	433
	பரசுராமர் பித்ரு தர்ப்பணம் செய்தது	433-434
119	யுதிஷ்டிரர் பிரபாஸதீர்த்தம் வந்ததும், கோவிந்தர் முதலியோர் அவரைப் பார்க்க வந்ததும்	436
120	பலராமர், பீஷ்மர் திருதராஷ்டிரன் முதலியவர்களை நிந்தித்துப் பாண்டவர்களைக் குறித்து வருந்தியது ...	437-440

அத்யாயம் பக்கம்

121 ஸாத்யகி துரியோதனாதியரைத் தாங்களே கொன்று பாண்டவர்களின் வனவாஸ முடியும்வரை அபிமன்யுவை அரசனாக்குவோமென்றது ... 440-443
கோவிந்தர் பாண்டவர்கள் பிறர் வலிமையை அடுத்துப் பிழையாரென்பதையும் அவர்களுடைய மற்றக் குணங்களையும் சொல்லி, ஸாத்யகியைத் தடுத்தது ... 443
122 கயன் யாகங்கள் செய்தது 444-445
வைதூர்ய பர்வதம், நர்மதை இவற்றின் மகிமை ... 446
123-126 சர்யாதி ச்யவனராஸ்ரமம் வந்ததும், ஸுகன்னி ச்யவனர் கண்களைக் குத்தியதும் 447-448
ச்யவனர் அரசன் சேனைக்கு மலஜலங்களைக் கட்டியதும், அவன் ஸுகன்னியை அவருக்குக் கொடுத்ததும் ... 448-449
அஸ்விநீதேவர்கள் ஸுகன்னியை மனைவியாக விரும்பியதும், அவள் மறுத்ததும் 449-450
அஸ்விநீ தேவர்கள் ச்யவனருக்கு இளமையையும் அழகையும் கொடுத்து அவருடன் ஒத்த வடிவங்கொண்டதும், அப்பொழுதும் ஸுகன்னி ச்யவனரையே அடைந்ததும் 451
ச்யவனர் அஸ்விநீ தேவர்களுக்கு யாகத்தில் ஸோமபானம் செய்விப்பதாகச் சொல்லியது ... 451-452
சர்யாதி யாகம் செய்ததும், ச்யவனர் அஸ்விநீ தேவர்களுக்காக ஸோமத்தை க்ரகித்ததும் ... 452-453
இந்திரன் வஜ்ராயுதத்தை எறிந்ததும், ச்யவனர் அவன் கையை ஸ்தம்பிக்கச் செய்ததும் 453
ச்யவனர் கிருத்யையை உண்டுபண்ணியதும், அது இந்திரனைத் தின்ன ஓடியதும் 453-454
இந்திரன் வேண்டினதும், ச்யவனர் மதத்தை மதுபான முதலியவற்றில் பகுத்து வைத்ததும் 454-455
127 யுவனாஸ்வன் ஸந்ததிக்காக வைத்திருந்த நீரைக் குடித்தது 458
யுவனாஸ்வன் மரியாமலே குழந்தையை யீன்றது ... 459
மாந்தாதா என்னும் பெயர்க் காரணம் 459-460
மாந்தாதாவின் மகிமை 460-461
128 ஸோமகனுக்கு ஒரே பிள்ளை பிறந்ததும், அவன் பல பிள்ளைகளை விரும்பியதும் 461-463
புரோகிதர் ஸோமகனுக்குப் பல பிள்ளைகளை அடைய உபாயங் கூறியது 463

அத்யாயம் பக்கம்

129 புரோகிதர் யாகஞ் செய்வித்ததும், ஸோமகனுக்கு நூறு பிள்ளைகள் பிறந்ததும் 463-464
புரோகிதர் நரகத்தில் உழன்றதும், ஸோமகன் தானும் அந்நரகத்தை விரும்பியதும் 464
ஸோமகனும் புரோஹிதரும் சேர்ந்து நரகத்தை அனுபவித்து ஸ்வர்க்கஞ் சென்றது 464-465
130 மார்க்கண்டேயர் தவம் செய்ததும், பிராணிகள் மார்க்கண்டேயரைச் சரணமடைந்ததும் 466-467
மார்க்கண்டேயர் பிராணிகளைக் காப்பாற்றியதும், ஈஶ்வரர் அவருக்கு வரமளித்ததும் 467-468
131 லோமசர் பல தீர்த்தங்களின் மகிமையைச் சொல்லியது 469-472
ப்லக்ஷாவதரண தீர்த்த மகிமை 471
ஸரஸ்வதீ நதியின் மகிமை 471
132-133 பல தீர்த்த மகிமை 472-474
ஶ்யேனகபோதோபாக்யானம் 474-477
எது எதற்குப் பாவம் ஸமமென்பது 475
தர்மலக்ஷணம் 475
134-136 ஶ்வேதகேது ஸரஸ்வதியை நேரில் கண்டது ... 477-478
அஷ்டாவக்ரோபாக்யானம் 478-492
உத்தாலகர் கஹோளருக்குக் கல்வி கற்பித்துப் பெண்ணையும் கொடுத்தது 478
ஸுஜாதை கர்ப்பந்தரித்ததும், அது பிதாவை இகழ்ந்து சாபம் பெற்றதும் 478-479
ஸுஜாதை பொருளுக்காகக் கவன்றதும், கஹோளர் ஜனகனிடம் சென்றதும் 479
கஹோளர் வந்தியினால் வாதத்தில் வென்று ஜலத்திலமிழ்த்தப்பட்டதும், உத்தாலகரும் ஸுஜாதையும் அதனை அஷ்டாவக்ரருக்குத் தெரிவியாமலிருந்ததும். 479
அஷ்டாவக்ரர் தமது பிதா ஜலத்திலமிழ்த்தப்பட்டதை அறிந்து ஶ்வேதகேதுவுடன் ஜனகனுடைய யாகத்துக்குச் சென்றது 480
யார் யாருக்கு வழிவிடவேண்டுமென்பது ... 480
அஷ்டாவக்ரருக்கும் வாயில் காப்பவனுக்கும் வாக்குவாதமும், கற்றறிந்தவரே பெரியவரென்பதும் ... 481-483
அஷ்டாவக்ரர் அரசனோடு பேசி யாகசாலையில் நுழைய அனுமதி பெற்றது 483-485
அஷ்டாவக்ரருக்கும் வந்திக்கும் வாதமும், வந்தி தோற்றதும் 486-490
அஷ்டாவக்ரர் வந்தியை ஜலத்தில் அமிழ்த்தச் சொல்லியதும், வந்தி தன்னைத் தெரிவித்து அவரைப் புகழ்ந்ததும் 490
அஷ்டாவக்ரர் ஜனகனை இடித்துரைத்ததும், ஜனகன் அவரைப் புகழ்ந்ததும் 490-491

அத்யாயம் பக்கம்

பிராம்மணர்கள் வருண லோகத்திலிருந்து வந்ததும், கஹோளர் தம் புத்ரரைப் புகழ்ந்ததும் ... 491-492
வந்தி விடைபெற்றுச் சென்றதும், அஷ்டாவக்ரர் முதலியோர் தமதாஶ்ரமம் வந்ததும் 492
அஷ்டாவக்ரரின் கோணல் நிமிர்ந்தது 492
ஸமங்கா நதியின் மகிமை 492

137-140 யவக்ரீதோபாக்யானம் 494-506
ரைப்யரும் அவர் புத்ரர்களும் மதிக்கப்பெற்றதும், பரத்வாஜர் மதிக்கப்படாமலிருந்ததும் 494
யவக்ரீதர் தவஞ்செய்ததும், இந்திரனுக்கும் அவருக்கும் வாக்குவாதமும் 494-497
யவக்ரீதர் வரம்பெற்று வந்ததும், பரத்வாஜர் அகங்காரம் தகாதென்னும் விஷயத்தில் பாலதியின் கதையைச் சொல்லியதும் 497-498
மனிதன் விதியைக் கடக்க முடியாதென்பது ... 498
யவக்ரீதர் பராவஸுவின் மனைவியை அழைத்ததும், அவள் அதனை ரைப்யருக்குத் தெரிவித்ததும் ... 499-500
ரைப்யர் பிசாசையும் ராக்ஷஸனையும் உண்டுபண்ணி யவக்ரீதரைக் கொல்ல ஏவியது 500
பிசாசு யவக்ரீதரின் கமண்டலுவைப் பறித்துக்கொண்டதும், அரக்கன் அவரைத் துரத்தியதும் ... 500
காவற்காரன் யவக்ரீதரைத் தடுத்ததும், அரக்கன் அவரைக் கொன்றதும் 500
பரத்வாஜர் புத்ரரைப்பற்றிப் புலம்பியதும், ரைப்யரைச் சபித்ததும் 502
பரத்வாஜர் புத்ரரைத் தகனஞ்செய்து தாமும் தீக்குளித்தது 502
பராவஸுவும் அர்வாவஸுவும் பிருஹத்யும்னன் யாகத்துக்குப் போனது 503
பராவஸு தந்தையைக் கொன்றதும், அர்வாவஸு பிராயச்சித்தஞ் செய்துகொண்டதும் 503-504
பிருஹத்யும்னன் பராவஸுவின் தூண்டுதலால் அர்வாவஸுவைத் துரத்தச் செய்தது 504
அர்வாவஸு ஸூர்ய மந்திரத்தை அறிந்ததும், தேவர்கள் வரமளித்ததும், ரைப்யர் முதலியோர் பிழைத்தெழுந்ததும் 505
யவக்ரீதர் தம்மை ரைப்யர் கொல்லக் காரணங் கேட்டதும், தேவர்கள் கூறியதும், யவக்ரீதர் பிரம்மசரியமனுஷ்டித்ததும். 505-506

141 லோமசர், உசீரபீஜ முதலிய மலைகளைப்பற்றி யுதிஷ்டிரருக்குச் சொல்லி வருணன் முதலியோரை யுதிஷ்டிரருக்கு மங்களத்தைச் செய்யவேண்டியது ... 506-507

அத்யாயம் பக்கம்

யுதிஷ்டிரர் பீமன் முதலியோரை ஜாக்ரதையாயிருக்கச் சொல்லியது 508

142 யுதிஷ்டிரர் நடந்து செல்லமுடியாத இடங்களில் திரௌபதி முதலியவர்களை வரவேண்டாமென்று தடுத்ததும், பீமன் அவர்களைத் தான் தூக்கிச் செல்வதாக ஒப்புக்கொண்டதும் 508-510

திரௌபதி தான் நடந்துவருவதாகச் சொல்லியது ... 510

பாண்டவர்கள் பரிஜனங்களை ஸுபாகுவினிடம்வைத்துவிட்டு இமயமலை சென்றது 510-511

143 யுதிஷ்டிரர் அர்ஜுனனைக் காணாமைக்கு வருந்தி அவனைப்புகழ்ந்து பீமன் முதலியோருடன் கந்தமாதன மலையில் ஏற நிச்சயித்தது 511-513

144 பாண்டவர்கள் மந்தரகிரியில் ஆகாச கங்கையை வணங்கியது 515

பாண்டவர்கள் நரகாஸுரனுடைய எலும்புக் குவியலைக் கண்டதும், லோமசர் விஷ்ணு நரகாஸுரனைக் கொன்றதையும் முழுகின பூமியை மேலே தூக்கியதையும் சொல்லியதும் 515-519

பூமி விஷ்ணுவைச் சரணமடைந்தது 517

145 பாண்டவர்கள் செல்லும்பொழுது வழியில் கடுங்காற்று மழையடித்ததும், அவர்கள் மாமுதலியவற்றில் ஒதுங்கியிருந்து மறுபடியும் புறப்பட்டதும் 519-521

146 திரௌபதி நடக்கமாட்டாமல் களைத்து விழுந்ததும், யுதிஷ்டிரர் முதலியோர் அவளைத் தேற்றியதும் ... 521-523

யுதிஷ்டிரர் கவலைப்பட்டதும், பீமன் தானாவது கடோத்கசனாவது அவர்களைத் தூக்கிச்செல்வதாகச் சொல்லியதும் 523

147 பீமன் நினைத்ததும், கடோத்கசன் வந்ததும் ... 524

பீமன் கட்டளையிட்டதும், கடோத்கசன் திரௌபதியையும் மற்ற அரக்கர்கள் பாண்டவர் முதலியோரையும் தூக்கிச் சென்றதும் 524-525

பதரீவிருக்ஷம், அங்குள்ள ஆச்ரமம் இவற்றின் வர்ணனை 526 527

யுதிஷ்டிரர் முதலியோர் நரநாராயணாச்ரமத்தை அடைந்து வஸித்தது 526-528

148-153 திரௌபதி ஸௌகந்திக மலர்களை விரும்பியதும், பீமன் அவற்றைக் கொணரச் சென்றதும் ... 529-530

அனுமான் பீமனுடைய வழியை மறைத்துக்கொண்டிருந்ததும், அவன் அவரைக் கண்டதும் ... 534-535

அனுமானுக்கும் பீமனுக்கும் ஸம்வாதம் ... 536-552

அனுமான் தம் வாலை நகர்த்தச் சொல்லியதும், பீமன் நகர்த்தமாட்டாமற் போனதும் 538-539

விஷயஸூசிகை.

அத்யாயம்		பக்கம்
	அனுமான் தம் வரலாற்றைக் கூறி ராமகதையைச்சொல்லியது	539-541
	அனுமான் வரம்பெற்றது	541
	பீமன் கடலைத்தாண்டிய உருவத்தைக் காட்டும்படி அனுமானை வேண்டினதும், அவர் அவ்வுருவம் தற்கால மனிதர் பார்க்க முடியாததென்றதும்	542-543
	பீமன் வினவியதும், அனுமான் யுக தர்மங்களைச் சொல்லியதும்	543-545
	அனுமான் கடல் கடந்த உருவத்தைக் காட்டியதும், பீமன் அதனைச் சுருக்கவேண்டினதும் ...	546-547
	அனுமான் ஜாதி தர்மங்களைப் பீமனுக்குச் சொல்லியது	548-550
	அனுமான் பீமனைத் தழுவியதும், அவனுக்கு ஶ்ரமம் நீங்கிப் பலமுண்டானதும்	551
	அனுமான் பீமனுக்கு வரங்கொடுத்து ஓடைக்கு வழியுஞ் சொல்லி மறைந்தது	552
	பீமன் நதியையும் ஸௌகந்திக மலர்களையும் கண்டது	553
154	பீமன் ஸௌகந்திக ஓடையைக்கண்டு அதில் நீர் பருகியதும், அதனைக் காக்கும் அரக்கர்கள் அவனை யாரென்று வினவியதும்	554-555
155	பீமன் தான் மலர்களுக்காக வந்ததைச் சொல்லியதும், அரக்கர்கள் தடுத்ததும்	555-557
	பீமன் அரக்கர்களைக் கொன்றும் அடித்துத் துரத்தியும் மலர் பறித்தது	557-558
	அரக்கர்கள் குபேரனிடம் முறையிட்டதும், அவன் பீமன் மலர் பறித்தலை ஸம்மதித்ததும்	558
156	யுதிஷ்டிரர் அபசகுனங்களைக் கண்டு பீமனைப்பற்றி வினவியதும், திரௌபதி அவன் மலர்பறிக்கச் சென்றதைச் சொல்லியதும்	558-559
	யுதிஷ்டிரர் முதலியோர் ஸௌகந்திக ஓடைக்கு வந்ததும், யுதிஷ்டிரர் பீமனை, 'ஸாஹஸம் செய்யாதே' என்றதும்	560-561
	யுதிஷ்டிரர் முதலியோர் அர்ஜுனனை எதிர்பார்த்துக் கந்தமாதன மலையில் வஸித்தது	561
157	யுதிஷ்டிரர் குபேரனுடைய இருப்பிடஞ்செல்ல விரும்பியதும், அசரீரி திரும்பிச்செல்லச் சொல்லியதும், மலர் மாரி பெய்ததும்	561-563
	யுதிஷ்டிரர் முதலியோர் திரும்பிப் பதரிகாஶ்ரமம் வந்து வஸித்தது	563

ஸ்ரீ:

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீக்ருஷ்ணத்வைபாயனாய நம:

ஸ்ரீ மஹாபாரதம்.

*வனபர்வம்.

முதலாவது அத்யாயம்.

கிர்மீரவத பர்வம்.

1 நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ நரோத்தமம் |
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ||

(பாண்டவர்கள் சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டுத் திரௌபதியுடன் காட்டுக்குப் புறப்பட்டதும், பட்டணத்துஜனங்கள் பின்தொடர யுதிஷ்டிரர் அவர்களை நன்மொழி கூறித் திருப்பிவிட்டு ஸாயங்காலம் கங்கைக்கரை சேர்ந்து அன்றிரவு அங்கே தங்கியதும்.)

ஜனமேஜயர் வினவலானார்: "பிராம்மண ஸ்ரேஷ்டரே! (கர்ணன்முதலிய) மந்திரிகளுடன் கூடினவர்களும் கெட்ட மனமுள்ளவர்களுமான திருதராஷ்டிரபுத்ரர்களால் இவ்விதம் கபடமாகச் சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டவர்களும் மிக்கபகையை உண்டு

---

*இதற்கு அரண்ய பர்வமென்றும், ஆரண்ய பர்வமென்றும் ஆரண்யக பர்வமென்றும் பெயர்கள் வழங்குகின்றன.

1 இதன் உரை விசேஷத்தை ஆதிபர்வம் முதற்பக்கம் குறிப்பில் காண்க.

ஸ்ரீ:

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீக்ருஷ்ணத்வைபாயனாய நம:

ஸ்ரீ மஹாபாரதம்.

*வனபர்வம்.

முதலாவது அத்யாயம்.

கிர்மீரவத பர்வம்.

[1]நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ நரோத்தமம் ।
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ॥

(பாண்டவர்கள் சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டுத் திரௌபதியுடன் காட்டுக்குப் புறப்பட்டதும், பட்டணத்துஜனங்கள் பின்தொடர யுதிஷ்டிரர் அவர்களை நன்மொழி கூறித் திருப்பிவிட்டு ஸாயங்காலம் கங்கைக்கரை சேர்ந்து அன்றிரவு அங்கே தங்கியதும்.)

ஜனமேஜயர் வினவலானார்: "பிராம்மண ஶ்ரேஷ்டரே! (கர்ணன்முதலிய) மந்திரிகளுடன் கூடினவர்களும் கெட்ட மனமுள்ளவர்களுமான திருதராஷ்டிரபுத்ரர்களால் இவ்விதம் கபடமாகச் சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டவர்களும் மிக்கபகையை உண்டு

*இதற்கு அரண்ய பர்வமென்றும், ஆரண்ய பர்வமென்றும் ஆரண்யக பர்வமென்றும் பெயர்கள் வழங்குகின்றன.

1 இதன் உரை விசேஷத்தை ஆதிபர்வம் முதற்பக்கம் குறிப்பில் காண்க.

பண்ணும் கடுஞ்சொற்களைச் சொல்லக் கேட்டவர்களும் கோப மூட்டப்பட்டவர்களும் குருவம்சத்திலுதித்தவர்களும் என் பிதாவான பரீக்ஷித்தின் பாட்டனார்களுமான பார்த்தர்கள் என்ன செய்தனர்? மிக்க செல்வமுள்ளவர்களும் திடீரென்று துக்கத்தை அடைந்தவர்களும் இந்திரனுக்கு ஒப்பான வல்லமை பொருந்தியவர்களுமான பார்த்தர்கள் வனத்தில் எவ்விதம் ஸஞ்சரித்தனர்? கடுந்துயரடைந்த அவர்களை எவர்கள் பின்தொடர்ந்தார்கள்? மேன்மைக் குணமுள்ள அவர்களுடைய ஆசாரமென்ன? ஆகாரமென்ன? வாஸம் எங்கே? ப்ராம்மணச்ரேஷ்டரே! சூரர்களும் புறங்காட்டாதவர்களும் மகாத்மாக்களுமான அவர்களுக்கு வனத்தில் எவ்விதம் பன்னிரண்டுவருஷங்கள் சென்றன? எப்பொழுதும் இனிமையாகப் பேசுந்தன்மையுள்ளவளும் எல்லாஸ்திரீகளுள்ளும் மிகச்சிறந்தவளும் மிக்க மகிமையுள்ளவளும் துக்கத்தை அடையக்கூடாதவளும் பதிவ்ரதையுமான அந்த ராஜபுத்திரியும் எவ்விதம் பயங்கரமான வனவாஸத்தை அடைந்தாள்? தபோதனரே! இவை யாவற்றையும் விரிவாக எனக்குச் சொல்லும். பிராம்மணரே! உம்மால் சொல்லப்படும் அதிக பராக்ரமமும் சரீரகாந்தியுமுள்ள அவர்களுடைய அவையனைத்தையும் கேட்க விரும்புகின்றேன். எனக்கோ மிகுந்த ஆவலிருக்கின்றது'' என்று கேட்டார்.

வைசம்பாயனர் சொல்லலானார்: "(கர்ணன் முதலிய) மந்திரிகளுடன் கூடினவர்களும் கெட்டமனமுள்ளவர்களுமான திருதராஷ்டிரபுத்திரர்களால் இவ்விதம் சூதாட்டத்தில்ஜயிக்கப்பட்டவர்களும் கோபமூட்டப்பட்டவர்களுமான பார்த்தர்கள் ஹஸ்தினபுரத்திலிருந்து புறப்பட்டார்கள். அப்பொழுது, அவர்கள் சஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு திரௌபதியுடன் வர்த்தமானபுரமென்னும் கிராமத்துக்கு நேரேயுள்ள வாயிலால் வெளிப்பட்டு வடக்குமுகமாகச்சென்றார்கள். இந்திரசேனன் முதலிய [1]பதினால் வருக்கதிகமான வேலைக்காரர்கள் எல்லா ஸ்திரீகளையும் அழைத்துக் கொண்டு வேகமாகச் செல்லும் தேர்களுடன் இவர்களைப் பின்தொடர்ந்தனர். பாரதரே! பிறகு, அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் ரதங்களிலேறிச்சென்று கங்கைக்கரையில் ப்ரமாணமென்ற பெயருள்ள பெரிய ஆலமரத்தைப் பார்த்தார்கள். பட்டணத்துஜனங்களோ

[1] 'பரிசதுர்தச' என்பது மூலம்; 23-வது அத்யாயத் தொடக்கத்தில் 'இந்திரசேனன் முதலிய வேலைக்காரர்கள் இருபதின்மர்' என்று கூறியிருத்தலால், இங்கே இங்ஙனம் பொருள் கொள்ளப்பட்டது.

அவர்கள் போகிறதை அறிந்து சோகத்தால் மிகவும் பீடிக்கப்பட்டவர்களாகிப் பீஷ்மரையும் விதுரரையும் துரோணரையும் கிருபரையும் அடிக்கடி நிந்தித்துக்கொண்டும் பிரதிஜ்ஞையைச்செய்துகொண்டும் ஒன்றுசேர்ந்து ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். 'சகுனியாலும் கர்ணன் துச்சாஸனன் முதலியோர்களாலும் காக்கப்பட்ட பாவியான துரியோதனன் இந்த ராஜ்யத்தை நடத்த விரும்புகின்றானாதலால் இந்தக்குலம் முழுதும் இராது; நாமுமிரோம்; நம்முடைய மனைவிகளுமிரார். பாவிகளின் சகாயத்தை அடைந்த இந்தப் பாவியானவன் ராஜ்யத்தை ஆளவிரும்புகின்றவிடத்தில் அவனது குலமும் ஆசாரமும் தர்மமும் அர்த்தமுமிரா. ஸுகம் எங்கிருந்து உண்டாகும்? துரியோதனனே, குருவைப் பகைப்பவன்; தர்மத்தை விட்டவன்; பொய்யில் பிரியமுள்ளவன்; பொருளில் ஆசைகொண்டவன்; கர்வமுள்ளவன்; தாழ்ந்த ஸ்வபாவமுள்ளவன்; இயற்கையில் தயை அற்றவன்; அந்தத் துரியோதனன் ஆளுகின்ற நாடுமுழுவதும் இராது. தயையுள்ளவர்களும் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களும் இந்திரியங்களையும் பகைவர்களையும் வென்றவர்களும் [1]லஜ்ஜையுள்ளவர்களும் கீர்த்தியுடையவர்களும் தர்மாநுஷ்டானத்தை முக்கியமாகக்கொண்டவர்களுமான பாண்டவர்கள் எங்குச் செல்லுகிறார்களோ அங்கு யாவரும் நன்கு செல்வோம்' என்றனர். அவர்கள் யாவரும் இவ்விதம் சொல்லி அந்தப்பாண்டவர்களைப் பின்தொடர்ந்தார்கள்; குந்திமாத்ரிகளின் புத்திரர்களான அவர்களை அடைந்து கைகளைக் கூப்பிக்கொண்டு சொல்லலானார்கள்:

'உங்களுக்கு க்ஷேமமுண்டாகுக. துக்கத்தையடைந்தவர்களான எங்களைவிட்டு எங்கே போகின்றீர்கள்? எங்கு நீங்கள் செல்லுகின்றீர்களோ அங்கே நாங்களும் வருகிறோம். தயையில்லாத பகைவர்களால் அதர்மமாக நீங்கள் ஜயிக்கப்பட்டீர்களென்று கேட்டு எல்லாரும் மிக்க கவலை அடைந்திருக்கிறோம். (உங்களுக்குப்) பணிசெய்பவர்களும் அன்புள்ளவர்களும் உபகாரத்தை எதிர்பாராது உதவிபுரிகின்றவர்களும் எப்பொழுதும் பிரியத்திலும் நன்மையிலும் ஆசையுள்ளவர்களுமான எங்களை இங்கு விட்டுவிடுவது தகுதியன்று. கெட்ட அரசனால் ஆளப்பட்ட ராஜ்யத்திலிருந்து எல்லாரும் நாசத்தை அடையாமலிருக்க வேண்டுகிறோம். ஆண்மையிற் சிறந்தவர்களே! நல்லவர் கெட்டவர்களின் சேர்க்கையாலுண்

1 லஜ்ஜை=வெட்கம்; ஆதிபர்வம் 240-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

டாகும் குணதோஷங்களைச் சொல்லுகிறோம்; கேளுங்கள். 1 புஷ்பங்களின் சேர்க்கையால் வாஸனையானது ஆடை, ஜலம், எள்ளு, பூமி ஆகிய இவைகளை எவ்விதம் வாஸனை உள்ளனவாகச் செய்யுமோ, அவ்விதமே சேர்க்கையாலுண்டாகும் குணங்களும்(செய்யும்). மூடர்களுடன் சேர்க்கையானது அதிக மோகத்திற்கே காரணமன்றோ? ஸாதுக்களின் சேர்க்கையானது ஒவ்வொரு நாளும் தர்மத்திற்குக் காரணம். ஆகையால், நன்கு கற்றுணர்ந்தவர்களும் மூத்தோர்களும் நல்லஸ்வபாவமுள்ளவர்களும் தவம்செய்கிறவர்களும் மனவடக்கத்தையே கைக்கொண்டவர்களுமான ஸாதுக்களுடன் ஸஹவாஸம் செய்யவேண்டும். கல்வி, குடிப்பிறப்பு, செய்கை (ஆகிய இம்) மூன்றும் எவர்களுக்குச் சுத்தமாயிருக்கின்றனவோ அவர்கள் அடுக்கத் தகுந்தவர்கள். அவர்களுடன் சேர்க்கையானது சாஸ்திரங்களைக்காட்டிலும் மேலானதன்றோ? நாம் இங்கே (அக்நிஹோத்ர முதலிய) கர்மாவைச் செய்யாவிடினும் புண்ணியசீலர்களான ஸாதுக்களிடத்தில் (சேர்வதால்) புண்ணியத்தையும் பாவிகளுடன் சேர்வதால் பாவத்தையுமே அடைவோம். துஷ்டர்களுடைய பார்வையாலும் தொடுகையாலும் பேச்சினாலும் உடன் உட்காருவதாலும் தர்மானுஷ்டானங்கள் குறைந்துவிடும். (நீசர்களுடன் சேர்வதனால்) மனிதர்கள் சித்தசுத்தியையும் அடையமாட்டார்கள். மனிதர்களுக்குப் புத்தியும் குறைந்துவிடுகிறது; நடுத்தரமானவர்களுடன் சேர்ந்தால் (அது) மத்திமத்தன்மையை அடைகிறது. மேலோர்களுடன் சேர்ந்தவர்கள் மேன்மையை அடைகிறார்கள். சிறந்தவர்களாலும் பரிசிதர்களாலும் மஹா தர்மிஷ்டர்களாலும் உலகத்தில் விசேஷமாகச் சொல்லப்பட்டவைகளும் தர்மார்த்தகாமங்களுக்குக் காரணங்களும் ஜனங்களின் ஆசாரத்தில் ஏற்பட்டவைகளும் வேதத்தில் சொல்லப்பட்டவைகளும் சிஷ்டர்களால் அங்கீகரிக்கப்பட்டவைகளுமான நற்குணங்கள் இங்கே இப்பொழுது உங்களிடத்தில் தனித்தனியும் சேர்ந்தும் (காணப்படுகின்றன). நன்மையை விரும்பும் நாங்கள் குணவான்களின்மத்தியில் வஸிக்க விரும்புகின்றோம்' என்றார்கள்.

தர்மபுத்திரர், 'பிராம்மணர்கள் முதலியவர்கள் அன்பு தயை இவைகளால் கட்டப்பட்டு எங்களிடத்திலில்லாத குணங்களையும் சொல்லுதலால், நாங்கள் பாக்யவான்களானோம். ஆகையால், நான்

1 இரண்டு சொற்கள் விடப்பட்டன.

தம்பிமார்களுடன் உங்கள் யாவருக்கும் தெரிவித்துக்கொள்ளு கிறேன். எம்மிடத்தில் அன்பினாலும் அருளாலும் அதனை வேறுவித மாகச் செய்யக்கூடாது. அஸ்தினாபுரத்தில் பாட்டனாரான பீஷ் மரும் திருதராஷ்டிரரும் விதுரரும் என்தாயாரும் எங்களுடைய அனேகம் ஸ்நேகிதர்களும் (இருக்கிறார்கள்). துக்கத்தினாலும் மன வருத்தத்தினாலும் கலங்கினவர்களும் (எமக்கு வேண்டிய) நன்மை யைச் செய்பவர்களுமான அவர்களெல்லாரும், நாங்கள் நன்மை அடைவதில் (உங்களுக்கு) விருப்பமிருந்தால், உங்களாலே நல்ல முயற்சியுடன் காப்பாற்றப்படத்தக்கவர்கள். என்வரவை விரும்பி நெடுந்தூரம் வந்துவிட்டீர்கள். திரும்புங்கள். அடைக்கலம்போ லான என் பந்துக்கள் விஷயத்தில் மனத்தில் அன்புபாராட்ட வேண்டும். இதுவே (செய்யவேண்டிய) காரியங்களுள் சிறந்ததாக என் மனத்திலிருக்கின்றது. அதனாலே எனக்கு மரியாதையும் சந் தோஷமும் செய்யப்பட்டனவாகும்' என்றார். அந்தத் தர்மபுத்திர ரால் அவ்விதம் வேண்டப்பட்ட அந்த ஜனங்கள் துக்கத்தை அடைந்து, 'அரசரே!' என்று பயங்கரமான தீனஸ்வரத்துடன் அழு தார்கள். பிறகு, தர்மபுத்திரருடைய குணங்களை நினைத்துத் துக்கத் தால் பீடிக்கப்பட்டவர்களும் மிக்க விருப்பம்கொண்டவர்களுமான (ஜனங்கள்) தங்களிஷ்டம் நிறைவேறாதவர்களாகிப் பாண்டவர்க ளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு திரும்பினார்கள். பாண்டவர்க ளோ, பட்டணத்து ஜனங்கள் திரும்பினவுடன், தேர்களிலேறிக் கொண்டு அந்தஸாயங்காலத்தில் கங்கைக்கரையிலிருக்கும் ப்ரமாண மென்னும் பெரிய ஆலமரத்தை அடைந்தார்கள். வீரர்களான அந் தப் பாண்டவர்கள் பிற்பகலில் அவ்வாலமரத்தை அடைந்து சுத்த மான ஜலத்தில் ஸ்நானம் செய்து அந்தராத்திரி (முழுவதும் அங்கே) வாஸம் செய்தார்கள். துக்கத்தால் இளைத்த அவர்கள் அந்த ராத்திரியை ஜல பானத்தாலேயே போக்கினார்கள். அந்த ஜனங்களுள் பத்னிகளுடன்கூடினவர்களும் சிஷ்யக்கூட்டங் களுடனும் பந்துக்களுடனும் கூடினவர்களும் [1] ஸ்நாதகப் பிரம்ம சாரிகளுமான பிராம்மணர்கள் சிலர் இவர்களைச் சிநேகத் தால் பின்தொடர்ந்தார்கள். வேதபாராயணம் பண்ணும் ஸ்வபா வமுள்ள அந்த அந்தணர்களால் சூழப்பட்ட அந்த அரசரான வர் பிரகாசித்தார். [2] ரம்மியமாயும் [3] பயங்கரமாயுமிருக்கிற

1 ஸபாபர்வம் 72-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

2 தாபமில்லாமையாலும் சந்தியாகாலத்தின் சிவப்பாலும் ரம்மியம்.

3 ராக்ஷஸர்கள் பிசாசங்களின் ஸஞ்சாரத்தால் பயங்கரம்.

1 முகூர்த்தத்தில், பிரகாசப்படுத்தப்பட்ட அக்னியுள்ள அந்தப் பிராம்மணர்களின் வேதபாராயணத்தை முன்னிட்ட ஸம்பாஷணை யானது உண்டாயிற்று. ஹம்ஸத்தினுடையதுபோல மதுரமான கண்டத்வனியுடன் கூடின அவ்வந்தண ஸ்ரேஷ்டர்களும் குரு ஸ்ரேஷ்டரான அரசரைச் சமாதானம் செய்துகொண்டு ராத்திரி முழுதையும் போக்கினார்கள். அரசரே! துக்கசோகங்களுடன் கூடின தர்மபுத்திரரோ தம்பிமார்களுடனும் எல்லாச்சிநேகிதக் கூட்டங்களுடனும் அந்த இரவுமுழுதும் படுத்திருந்தார்.

இரண்டாவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் உடன்வந்த பிராம்மணர்களைக் காக்க முடியாமையைச் சொல்லித் திரும்பும்படி வேண்டினதும், அவர்கள் தம்மைத் தாமே போஷித்துக்கொண்டு உடன்வரவிரும்பியதும், யுதிஷ்டிரர் வருந்த, சௌனகர் தவத்தால் ஸித்தி பெற்று அந்தணரைப் போஷிக்கும்படி சொல்லியதும்.)

பொழுது புலர்ந்தவுடன், (சாஸ்திரத்தில் சொல்லிய) கடமைகளை வருத்தமின்றிச் செய்கின்றவர்களும் காட்டைக் குறித்துச் செல்லவிருப்பமுள்ளவர்களுமான அவர்களுக்குப் பிக்ஷையெடுத்து உண்பவர்களான ப்ராம்மணர்கள் முன்னே நின்றார்கள். பிறகு, குந்தியின் புத்திரரும் அரசருமான யுதிஷ்டிரர், அவர்களைப் பார்த்துச் சொல்லலானார்: 'நாங்களோ, செல்வமனைத்தையும் ராஜ்யத்தையும் ஒளியையும் இழந்து, பழம் கிழங்கு மாமிசம் இவைகளை ஆகாரம் செய்துகொண்டு துக்கத்தையடைந்து, காட்டைக் குறித்துச் செல்லுகின்றோம். காடோ அதிக தோஷத்துடன் கூடியது; துஷ்ட மிருகங்களும் பாம்புகளும் மிகுதியாக உள்ளது. அவ்விடத்தில் உங்களுக்குத் துக்கமும் நிச்சயம் உண்டாகுமென்று நினைக்கிறேன். பிராம்மணர்களுக்குத் துன்பம் உண்டாக்கினால் அது தேவதைகளையும் நாசமாக்குமென்றால், என்னைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? பிராம்மணர்களே! உங்களிஷ்டப்படி இங்கிருந்து திரும்பிவிடுங்கள்' என்றார்.

---

1 மாலைக்காலம்.

பிராம்மணர்கள், 'ஓ! அரசரே! உங்களுக்குள்ள கதி எதுவோ அதனை நாங்களும் அடைய விதத்தமாயிருக்கிறோம். நல்ல தர்மத்தை அறிந்தவர்களும் உங்களிடத்தில் பற்றுள்ளவர்களுமான எங்களை விடுவது நியாயமன்று. தேவர்களும் பக்தர்கள்விஷயத்தில் சினேக காரியத்தைச் செய்கின்றனர். நல்ல ஆசாரத்தையுடையவர்களான பிராம்மணர்கள்விஷயத்திலோ அதிகம் செய்கின்றனர்' என்றார்கள். தர்மபுத்திரர், 'பிராம்மணர்களே! எனக்கும் பிராம்மணர்களிடத்தில் மேலானபக்தி எப்போதும் உண்டு. இப்போதுள்ள ஸஹாயத்தின் குறைவோ என்னைக் கஷ்டப்படுத்துகின்றது. கனி கிழங்குகளையும் மிருகங்களையும் கொண்டுவருகிற அந்த என்னுடைய எல்லாத் தம்பிகளும் சோகத்தாலுண்டான துக்கத்தால் மிகவும் மயக்கத்தை அடைந்திருக்கின்றார்கள். திரௌபதிக்கு நேர்ந்த துன்பத்தாலும் ராஜ்யம் கவரப்பட்டதாலுமுண்டான துக்கத்தால் பீடிக்கப்பட்ட இவர்களை இப்போது நான் துன்பப்படுத்துதற்குத் துணியவில்லை' என்றார்.

ப்ராம்மணர்கள், 'ஓ! அரசரே! எம்மைக்காப்பாற்றும் விஷயமான கவலையானது உமது மனத்தில் உண்டாகவேண்டாம். நாங்களே காட்டிலுள்ளவைகளைச் சம்பாதித்துக்கொண்டு உம்மைத் தொடர்ந்து வருகிறோம். உங்களுக்கு க்ஷேமத்தைத் தியானம் செய்வதாலும், (மங்களார்த்தமான) மந்திர ஜபத்தைச் செய்வதாலும் உமக்கு மங்களத்தைச் செய்வோம். அனுகூலமான கதைகளைச் சொல்லிக்கொண்டு காட்டில் கூடவே சந்தோஷமாக வஸிக்கின்றோம்' என்றார்கள். தர்மபுத்திரர், 'இது இவ்விதமே ஆகுக; சந்தேகமில்லை. நானும் ப்ராம்மணர்களுடன் மகிழ்வேன். ஆனால், செல்வக்குறைவால் (இதனை) எனக்குக் குறைவுபோல நினைக்கிறேன். (துக்கத்தை) அடையத்தகாதவர்களும் என்னிடத்தில் சினேகத்தால் கஷ்டப்படுகிறவர்களுமான நீங்களனைவரும், தாங்களே சம்பாதித்துச் சாப்பிடுகிறதை எப்படிப் பார்ப்பேன்? பாவிகளான திருதராஷ்டிரபுத்திரர்களை நிந்திக்கவேண்டும்' என்றார். அரசர் இவ்விதம் சொல்லித் துக்கித்துக்கொண்டு தரையில் உட்கார்ந்தார். வேதாந்த சாஸ்திரத்தில் பயிற்சியுள்ளவரும் யோகத்திலும் ஸாங்கியத்திலும் ஸமர்த்தரும் சௌனகரென்று பிரசித்திபெற்றவரும் வித்துவானுமான ப்ராம்மணர் அந்த அரசரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்:

'ஒவ்வொருநாளும், ஆயிரம் சோககாரணங்களும் நூறு ஸந்தோஷ காரணங்களும் மூடனை அடையும்; பண்டிதனை அடைவதில்லை. அனேக தோஷங்களுள்ளவையும், ஞானத்திற்கு விரோதமானவையும், நன்மையைக் கெடுக்கக்கூடியவையுமான செய்கைகளில் உம்மைப்போன்ற புத்திமான்கள் ஸம்பந்தப்படமாட்டார்கள். அரசரே! எல்லாக் குற்றங்களையும் போக்கக்கூடியதும் ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்கு நன்குஒத்ததும் எட்டு அங்கங்களுடன் கூடியதுமாக எந்தப்புத்தியைச் சொல்லுகிறார்களோ அந்தப்புத்தியானது உம்மிடத்தில் இருக்கிறது. கேட்கவிருப்பம், கேட்டல், கிரஹித்தல், தரித்தல், ஊகித்தல், தோஷத்தை விலக்குதல், அர்த்தத்தை நன்கு அறிதல், உண்மையறிதல் ஆகிய இவையே புத்தியின் குணங்கள். தனநாசங்களிலும், தாண்டமுடியாத சாரீர துக்கங்களிலும், (ஸ்த்ரீயை இழுத்தல் முதலிய) தன்ஜனங்களிடத்திலுண்டான ஆபத்துக்களிலு முண்டாகும் சரீரம், மனம் இவைகளுக்குண்டான துக்கங்களினால் உம்மைப்போன்றவர்கள் வருத்தத்தை அடையமாட்டார்கள். முன்காலத்தில் மஹாத்மாவான ஜனகரால் சொல்லப்பட்ட மனவுறுதிக்குக் காரணமான சுலோகங்களைச் சொல்லுகிறேன்; கேளும். (அவற்றின் பொருள்:—) ஜகத்தானது மனத்தாலும் தேகத்தாலுமுண்டான துக்கங்களால் பீடிக்கப்பட்டுள்ளது. அந்தத்துக்கங்களைக் குறைக்கத்தக்க உபாயமான இதனைச் சுருக்கமாயும் விஸ்தாரமாயும் சொல்லுகிறேன்; கேளும். வியாதி, முள் முதலியவை தைத்தல், அலைதல், வேண்டிய பதார்த்தங்களை விட்டுவிடுதலாகிய இந் நான்கு காரணங்களால் சாரீரமான துக்கம் உண்டாகிறது. அப்பொழுது, மருந்துமுதலிய கிரியாபலத்தால் வியாதியின் சமனமும், அதை எப்போதும் நினையாமலிருத்தலாகிய யோகபலத்தால் ஆதியென்கிற மனோதுக்கத்தின் சமனமும் உண்டாகும். [1]அறிஞர்கள் ஶ்ரமப்பட்டு இன்சொற்களாலும் மனத்துக்கு இனியவற்றைக் கொடுத்தலாலும் மனிதர்களின் மனோவ்யாதியை முதலில் அடக்குகிறார்கள். காய்ச்சின இரும்புக்கட்டி (யைத்தோய்ப்ப)தால் குடத்திலுள்ள நீர் வெப்பத்தை அடைவதுபோல மனோதுக்கத்தால் சரீரம் மிக்க வெப்பத்தை அடைகிறது. ஆனது பற்றி ஜலத்தால் நெருப்பை அவிப்பதுபோல ஞானத்தால் மனோதுக்கத்தை விலக்கவேண்டும். மனத்திலுள்ள துக்கம் நீங்கினால்

1 'மதிமந்தஃ' என்பது மூலம்; 'புத்திமான்களான வைத்யர்கள்' என்பது இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு.

மெய்யின் துக்கம் தணிதலையடையும். மனோதுக்கத்திற்கு மூலம் ஆசையென்று அறியப்படுகின்றது. ப்ராணியானது பற்றினால் (கர்மாவில்) செல்லுகிறது; துக்கத்தின் சேர்க்கையையும் அடைகிறது. பற்றுதலாலேயே துக்கம், பயம், சோகம், மனக்களிப்பு, துன்பம் ஆகிய எல்லாம் உண்டாகின்றன. எல்லாம் பற்றினாலேயே உண்டாகின்றன. பற்றினால் கருணையும் அன்பும் ஜனங்களிடத்தில் அஸூயைமுதலியவையும் உண்டாகின்றன. (ஸ்நேகம் அனுராகம்) இவ்விரண்டும் கெடுதலை விளைவிப்பவை. அவற்றுள், முதலாவதான ஸ்நேஹமானது வலிதென்று எண்ணப்பட்டிருக்கிறது. பொந்திலுள்ள நெருப்பானது எப்படி மரத்தை வேருடன் மிச்சமில்லாமல் எரிக்கின்றதோ அப்படியே ஆசையாகிற தோஷம் சிறிதானாலும் தர்மத்தில் விருப்பமுள்ளவனைக் கெடுத்துவிடும். விஷயங்களில்லாதபோது தியாகி யெனப்படமாட்டான். (விஷயங்கள்) வரும்போது, (அவற்றில்) தோஷத்தைப் பார்ப்பவனே (தியாகி யெனப்படுவான்). அந்தமனிதனே வைராக்கியத்தை அடைகிறான்; வைரமில்லாதவனும் (துவேஷமில்லாததால்) [1] பிரதிபந்தங்களற்றவனுமாகிறான். ஆகையால், உறவினர், நண்பர், பொருள் இவற்றிலிருந்து பற்றுதலை விலக்கவேண்டும். தன் உடம்பிலுள்ள அபிமானத்தையும் அறிவால் விலக்கவேண்டும். (நித்தியாநித்திய) ஜ்ஞானமுள்ளவர்களும் (நித்திய வஸ்துவை அடைவதற்கு) முயற்சி செய்பவர்களும் சாஸ்திரத்தை அறிந்தவர்களும் சீர்ப்படுத்திய மனமுள்ளவர்களுமான அந்தப் (பெரியவர்களிடத்தில்) தாமரையிலைகளில் ஜலம்போல ஆசை பற்றாது. [2]ராகத்தால் பற்றப்பட்ட மனிதன் [3]காமத்தால் இழுக்கப்படுகிறான். அவனுக்கு [4]இச்சைஉண்டாகிறது. பிறகு, [5]த்ருஷ்ணை விருத்தியடைகிறது. த்ருஷ்ணையோ ஸகலபாபத்திற்கும் காரணம்; மனிதர்களுக்கு எப்பொழுதும் சஞ்சலத்தை உண்டுபண்ணக்கூடியது; அதர்மம் நிறைந்தது; பயங்கரமானது; பாவத்தை உண்டுபண்ணக் கூடியது. எந்தத் திருஷ்ணையானது, கெட்ட புத்தியுள்ளவர்களால் விடமுடியாததோ, (மனிதன்) ஜரையை யடைந்தாலும், எது ஜரையை அடை

---

1 வேறுபாடம். 2 அழகிய வஸ்துவைப் பார்க்கும்போது மனத்திற்கு உண்டாகும் மலர்ச்சி, ராகம். 3 அதை அடையவேண்டுமென்ற விருப்பம், காமம். 4 கிடைத்த பிறகு திரும்பவும் அடைய விரும்புவது, இச்சை. 5 அடிக்கடி கிடைத்தாலும் திருப்தியின்மை, த்ருஷ்ணை எனப்படும்.

யாததோ, எது ப்ராணனை அபகரிக்கக்கூடிய ரோகமோ அந்தத் திருஷ்ணையை விட்டவனுக்கே ஸுகம் உண்டாகும். ஆதியும் அந்தமுமில்லாத அந்தத் திருஷ்ணையோ மனிதர்களின் மனத்தி லிருந்துகொண்டு இரும்பை அதனிடத்துள்ள தீ அழிப்பதுபோலப் பிராணிகளை நாசம் செய்கிறது. தன்னிடத்திலுண்டான நெருப் பினால் விறகு எவ்விதம் நாசத்தைஅடைகின்றதோ அது போல மனத்தை அடக்காதவன் உடன்பிறந்த லோபத்தால் நாசமடைகின்றான். அரசன், ஜலம், நெருப்பு, திருடன், உறவி னன், யாசகன், காலன் ஆகிய இவர்களிடமிருந்து பணமுள்ளவர் களுக்கு எப்பொழுதும் பயமுண்டு. பிராணிகளுக்கு யமனிடம் எப் பொழுதும் பயமிருப்பதுபோலப் பணமுள்ளவர்களுக்கு எப்பொ ழுதும் பயமுண்டு. எவ்விதம் ஆகாசத்தில் பக்ஷிகளாலும், பூமி யில் துஷ்டமிருகங்களாலும், ஜலத்தில் மீன்களாலும் மாம்ஸம் உண்ணப்படுமோ அவ்விதம் (எவ்விடத்திலும்) யாவராலும் பண முள்ளவன் உண்ணப்படுகிறான். சில மனிதர்களுக்குப் பணமே அனர்த்தமாகிறது. பணத்தால் செய்யக்கூடிய [1] ஜ்யோதிஷ்டோ மத்தில் விருப்பமுள்ள மனிதன் மோக்ஷத்தை அடையமாட்டான். ஆகையால், அர்த்தப்ராப்திகள் யாவும் மனத்திற்கு விசேஷமாக மயக்கத்தை விருத்திசெய்யக்கூடியவை. கார்ப்பண்ணியம், கொழுப்பு, அகங்காரம், பயம், மனக்கலக்கம் முதலிய இந்தத் துக்கங்கள் மனிதர்களுக்குப் பொருளால் உண்டாகின்றனவென்று புத்திமான்கள் அறிகிறார்கள். பொருளைத்தேடுவதிலும் துக்கமே; சம்பாதித்ததின் ரக்ஷணத்திலும் துக்கமே; நாசத்திலும் துக்கமே; செலவிலும் துக்கம்; பொருள்நிமித்தமாகவே கொலையும் செய்கி றார்கள். பொருள்களை விடுவதும் துக்கமே. காப்பாற்றப்பட்டா லும் அவை சத்துருக்களாகின்றன. துக்கத்தாலேயே அடையப் படுகின்றன, அவற்றின் நாசத்தைச் சிந்திக்கக்கூடாது. மூடர் கள் திருப்தியற்றவர்கள், பண்டிதர்கள் சந்தோஷத்தை அடைகி றார்கள். ஆசைக்கு முடிவில்லை. ஸந்தோஷம் மேலான ஸுகம். ஆகையால், இவ்வுலகில் பண்டிதர்கள் சந்தோஷத்தையே மேலான தாக எண்ணுகிறார்கள். யௌவனம், ரூபம், ஜீவனோபாயம், ரத் தினக்குவியல், ஐச்வரியம், இஷ்டவஸ்துவினுடைய சேர்க்கை ஆகிய யாவும் அநித்தியம். பண்டிதன் அவற்றில் ஆசைவைக்கக்கூடாது.

---

1 'ஜ்யோதிஷ்டோமம் முதலிய கர்மத்தினால் மாத்திரம் மோக்ஷம் கிடைக்காது' என்பது கருத்து.

ஆகையால், அர்த்தங்களை விடவேண்டும். கிலேசங்களையும் சகித்துக்கொள்ளவேண்டும். பணமுள்ள ஒருவனும் கஷ்டமில்லாதவனாகக் காணப்படவில்லையல்லவா? ஆனதுபற்றியே, தார்மிகர்களான புருஷர்களால் விரும்பாமற்கிடைத்த அர்த்தம் புகழப்படுகின்றது. தர்மத்துக்குவேண்டி எவனுக்குப் பொருளில் விருப்பமிருக்கின்றதோ அவனுக்கு ஆசையில்லாமை மேலானது. சேற்றைப் (பூசி) அலம்புவதைக் காட்டிலும் தொடாமலிருப்பது மனிதர்களுக்கு மேலானதன்றோ? ஓ! யுதிஷ்டரரே! ஆகையால், செல்வத்தை நீர் பற்றவேண்டாம். தர்மத்தினால் உமக்குச் செய்யத்தக்கது இருக்குமானால் அர்த்தத்தில் இச்சையை விட்டவராகிவிடும்?' என்றார்.

யுதிஷ்டிரர், 'ஓ! பிராம்மணரே! விஷயானுபவத்தில் ஆசைகொண்டு பொருளை அடையவேண்டுமென்ற இந்த எண்ணம் எனக்கு இல்லை. ஆனால், பிராம்மணர்களைப் போஷிக்கவேண்டி ஆசைப்படுகின்றேன். லோபத்தால் அன்று. ஓ! பிராம்மணரே! கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கிற நம்போன்றவன் பின்தொடர்ந்து வருபவர்களைப் போஷிப்பதையும் காப்பாற்றுதலையும் எப்படிச் செய்யாமலிருப்பன்? [1] (பஞ்சமஹாயஜ்ஞங்களில்) எல்லாப் பிராணிகளுக்குமே பாகம் காணப்படுகின்றது. சமையல் செய்யாதவர்களான ஸந்யாஸிமுதலானவர்களுக்கும் அப்படியே கிருஹஸ்தன் கொடுக்கவேண்டும். தர்ப்பாஸனங்கள், இடம், தீர்த்தம், நாலாவதான ஸத்யமும் பிரியமுமான வார்த்தை ஆகிய இவைகள் ஸாதுக்களின் வீடுகளில் ஒருபோதும் அற்றுப்போகா. நிற்றலால் களைத்தவனுக்கு ஆஸனமும், தாகமுள்ளவனுக்கு உண்ணீரும், பசியுள்ளவனுக்குப் போஜனமும் கொடுக்கவேண்டும்; கண்ணால் பார்க்க வேண்டும்; மனத்தில் நினைக்கவேண்டும்; ப்ரியமான வார்த்தையைச் சொல்லவேண்டும்; எழுந்து ஆஸனம் கொடுக்கவேண்டும்; இதுவே, நெடுங்காலமாயுள்ள தர்மம். எழுந்து பின்தொடர்தலையும் நியாயமாகப் பூஜையையும் செய்யவேண்டும். அக்நிஹோத்திரமும், காளைமாடும், ஞாதிகளும், அதிதிகளும், உறவினர்களும், மக்களும், பத்னிகளும், வேலைக்காரர்களும் பூஜிக்கப்படாவிட்டால், எரித்துவிடுவார்கள். தனக்காக அன்னத்தைச் சமைப்பது கூடாது. (யாகம் முதலிய) காரணமில்லாமல் பசுவைக் கொல்லக்கூடாது.

[1] ஆதிபர்வம் 559-ம் பக்கம் குறிப்பில் பார்க்க.

த்தான் ஒருவனுகச் சாப்பிடவும்கூடாது. விதிக்கு விலக்காகக் கொடுத்தல் கூடாது. ச்வாக்களுக்கும், ச்வபசர்களுக்கும், பக்ஷிகளுக்கும் பூமியில் (அன்னத்தை) வைக்கவேண்டும். இவ்விதம் மாலையிலும் காலையிலும் கொடுக்கப்படுவது [1] வைச்வதேவமென்று பிரஸித்தமானதன்றோ? ஆகையால், எப்பொழுதும், விகஸத்தைச் சாப்பிடுகிறவனுகவும் அமிருதத்தைச் சாப்பிடுகிறவனுகவும் இருக்கவேண்டும். அதிதிகள் புஜித்து மிஞ்சினதை விகஸமென்றும், யஜ்ஞம் பண்ணி மிஞ்சினதை அம்ருதமென்றும் (சொல்லுவதுண்டு). கண்ணுல் பார்க்கவேண்டும்; மனத்தில் நினைக்கவேண்டும்; உண்மையும் பிரியமுமான வார்த்தை பேசவேண்டும்; பின் தொடர்ந்து வரவேண்டும்; அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்யவேண்டும். இது ஐந்து தக்ஷிணையுள்ள யஜ்ஞமாகிறது. வழியில் நடக்கிறவனும் சிரமத்தையடைந்தவனும் முன்பார்க்கப்படாதவனுமானவனுக்கு மனக்களிப்புடன் அன்னத்தைக் கொடுக்கிறவனுக்குப் புண்ணியமாகிற பலன் அதிகம் உண்டாகிறது. ஓ! பிராம்மணரே! கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கிற எவன் இவ்விதம் செய்து வருகின்றுனே அவனுடைய தர்மத்தை மேலானதாகச் சொல்லுகிறுர்கள். நீர் எப்படி எண்ணுகிறீர்?' என்றுர்.

சௌனகர் சொல்லுகிறுர். 'ஆ! ஆ! பெரியகஷ்டம்! இவ்வுலகம் விபரீதமாக இருக்கிறது. ஸாதுவானவன் எதனுல் லஜ்ஜையை அடைகிறுனே அதனுல் துஷ்டன் ஸந்தோஷமடைகிறுன். அறிவில்லாதவன் மோகம், ராகம், ஆசை இவைகளால் மூடப்பட்டு விஷயங்களுக்குட்பட்டுப் [2] போகத்திற்கும் உதரத்திற்குமாக யாகசேஷத்தை மேலானதாக நினைக்கிறுன். மனிதன் அறிவுள்ளவனுயிருந்தாலும் (விஷயங்களில்) இழுக்குந் தன்மையுள்ள இந்திரியங்களால் அறிவற்ற ஸாரதியானவன் திசைமயக்கங்கொண்ட துஷ்டக் குதிரைகளால் இழுக்கப்படுவதுபோல இழுக்கப்படுகிறுன். எப்பொழுது (மனம்சேர்ந்த) ஆறு இந்திரியங்களும் விஷயத்தில் செல்லுகின்றனவோ, அப்பொழுது, இந்த ஜனங்களுடைய மனமானது முந்திய ஸம்ஸ்காரத்துக்குத் தக்கபடி (விஷயத்தில் செல்லுகிறது. எந்த மனிதனுடைய மனமானது இங்கு இந்திரியத்தின் விஷயங்களை அனுபவிக்கச் செல்லுகிறதோ அவனுக்கு ஆவலுண்

---

1 அனுசாஸன பர்வம் 535-ம் பக்கம் குறிப்பில் காண்க.

2 தேவலோகம்சென்று போகமுதலியவற்றை அனுபவிக்கலாமென்பது கருத்து.

டாகிறது; பிரவிருத்தியுமுண்டாகிறது. பிறகு, சங்கல்பத்தைக் காரணமாகவுடைய காமத்தால் விஷயங்களாகிற பாணங்களால் அடிக்கப்பட்டு விட்டிற்பூச்சி நெருப்பில் (பழம் என்னும்) ஆசையால் விழுவதுபோல லோபமாகிற நெருப்பில் விழுகிறான். பிறகு, மனைவிகளாலும், இஷ்டப்படி விளையாட்டினாலும், மோஹத்தை அடைந்து அஞ்ஞானத்தில் முழுகி ஆத்மாவை அறிகிறதில்லை. இவ்விதமாகவே ஸம்ஸாரத்தில் சக்கரம்போல் அஜ்ஞானம், கர்மம், காமம் ஆகிய இவைகளால் சுற்றும்படி செய்யப்பட்டவனாகிப் பிறவிகளில் விழுகிறான். நீரிலோ நிலத்திலோ ஆகாசத்திலோ அடிக்கடி பிறவியை அடைந்து பிரம்மாமுதல் துரும்புவரையிலுமுள்ள பிராணிகளில் சுற்றிக்கொண்டிருக்கிறான். இது அஜ்ஞானிகளின்வழி. (மோக்ஷத்தில் விருப்பமுற்று அதற்குரிய சிறந்த தர்மத்தில் ஆசையுள்ள) ஞானிகளின் வழியையும் சொல்லுகிறேன்; கேள். 'கர்மாவைச்செய்'என்றும்,'அதன் (பலனை) விட்டுவிடு'என்றும் வேதவாக்கியம் இருக்கின்றது. ஆகையால், அபிமானத்துடன் இந்தத் தர்மங்களை யெல்லாம் செய்தல் கூடாது. யாகம், அத்தியயனம், தானம், தவம், ஸத்தியம், பொறுமை, ஐம்பொறியடக்கல், ஆசையின்மையென்கிற இந்த எட்டுவித மார்க்கங்கள் தர்மத்திற்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றுள், முன்சொல்லிய நான்கும் [1] பிதிருயானமார்க்கத்திற்குக் காரணமானவை. அவசியம் செய்யவேண்டிய எந்தக் கர்மாவையும் அபிமானத்துடன் செய்யக்கூடாது. பின் சொல்லிய நான்கும் தேவயான மார்க்கம். இவை எப்பொழுதும் ஸாதுக்களால் அனுஷ்டிக்கப்பட்டவை. (இவற்றைப்) பின்வரும் எட்டு அங்கமுள்ள மார்க்கத்தால் சித்தசுத்தியை அடைந்தவனே அனுஷ்டிக்கவேண்டும். நன்கு ஸங்கல்பத்தை அடக்குவதாலும் நன்கு இந்திரியத்தை அடக்குவதாலும்,நன்கு (எல்லாத்தேசங்களிலும் எல்லாச்சமயங்களிலும் எவ்வகையாலும் செய்யப்படும் அஹிம்ஸை முதலிய) விரத விசேஷங்களினாலும் நன்கு குருபணிவிடைசெய்வதனாலும் நல்ல ஆகாரத்தை உட்கொள்ளுவதனாலும் நன்கு வேதாத்யயனம் செய்வதனாலும் நன்கு கர்மாவின் ஸன்யாஸத்தாலும் நன்கு சித்தத்தைஅடக்குதலாலும் ஜனனமரணத்தை ஜயிக்கவேண்டுமென்று எண்ணமுள்ளவர்கள் இவ்விதம் கர்மாக்களைச் செய்கின்றார்கள். விருப்பு வெறுப்பு அற்

---

1 பிதிருலோகம் செல்லும் வழிக்குப் பிதிருயான மார்க்கம் என்று பெயர்.

றவர்களும் ஐச்வரியத்தை அடைந்தவர்களுமான ருத்திரர்களும் ஸாத்தியர்களும் ஆதித்யர்களும் அச்விநீதேவதைகளும் யோகைச்வர்யத்தோடு கூடினவர்களாக இந்தப்பிரஜைகளைக் காப்பாற்றுகின்றார்கள். ஓ! பாரதரே! குந்தீபுத்திரரே! நீரும் அதுபோலப் பூர்ணமான மனவடக்கத்தைஅடைந்து தவத்தினால் (அஷ்டாங்க) யோகத்தின்ஸித்தியை அடையும். மாதாபிதாக்களால் வரக்கூடியதும் கர்மாவால் வரக்கூடியதுமான ஸித்தியோ உமக்கு உண்டாயிருக்கிறது. தேவதையின் தியானத்தால் ப்ராம்மணர்களைக் காப்பாற்றுவதற்காக ஸித்தியை அடையும். ஸித்தர்கள் எதை எதை விரும்புகின்றார்களோ அதைஅதைத் [1]தவத்தின்மஹிமையால் செய்கிறார்கள். ஆகையால், தேவதாத்தியானத்தைச் செய்து உம்இஷ்டத்தை நிறைவேற்றும்' என்றார்.

மூன்றாவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் தௌமியர்உபதேசப்படி ஸூரியனைத்துதித்ததும், ஸூரியன் அக்ஷயபாத்திரம் கொடுத்ததும்.)

சௌனகர் இவ்விதம் சொல்லியதைக்கேட்ட குந்திபுத்திரரான யுதிஷ்டிரர், பிராம்மணச்ரேஷ்டரும் கௌரவிக்கத்தக்க வாக்கியத்தை யுடையவரும் இன்சொல் சொல்லுபவரும் புரோகிதருமான தௌம்யருக்குச் சமீபத்தில்வந்து நமஸ்கரித்து ஸகோதரர்களின் மத்தியில் பின்வருமாறு சொல்லலானார்: '(வனத்தைக்குறித்துப்) புறப்பட்ட எங்களை வேதத்தின்கரையைஅடைந்த பிராம்மணர்கள் பின் தொடர்ந்து வந்திருக்கின்றார்கள். அதிக துக்கத்துடன் கூடிய நான் (இவர்களைப்) போஷிப்பதற்குச் சக்தியுள்ளவனாக இல்லை; விடுவதற்கும் சக்தியுள்ளவனாகவில்லை. தானசக்தியும் எனக்கு இல்லை. ஓ! பகவானே! இந்த விஷயத்தில் என்னால் என்ன செய்யத்தகுந்தது? அதனை எனக்குச் சொல்லும்' என்றார். யோகதர்மானுஷ்டானம் செய்கிறவர்களுள் சிறந்தவரான அந்தத் தௌம்யர் ஒரு முகூர்த்தம் தியானம் செய்து யோகத்தால் அந்தக் காரணத்தைக்கண்டு யுதிஷ்டிரரைப் பார்த்துப் பின் வருமாறு சொல்லலானார்.

---

1 வேறுபாடம்.

'முற்காலத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிராணிகள் பசியால் மிகக் கஷ்டப்பட்டன. அப்பொழுது, ஸூரியன் பிதாவைப்போல அவற்றின் விஷயத்தில் தயையினலே உத்தராயணம் சென்று கிரணங்களால் ஜலங்களை எடுத்துத் தக்ஷிணாயனத்தைத் திரும்பவும் அடைந்து ஜலத்தால் பூமியை நிறைத்தான். பிறகு, (சந்திரன்) க்ஷேத்திரமான அந்தப் பூமியில் ஸூரியனுடைய தேஜஸை எடுத்து ஜலத்தால் ஒஷதிகளை உண்டுபண்ணினன். சந்திரன் தேஜஸினல் (மேகத்தினல்) நனைக்கப்பட்ட ஸூரியன் ஜகத்தை உண்டுபண்ணினன். ஆகையால், பரிசுத்தமான ஆறுரஸமுள்ள ஒஷதிகள் பூமியில் பிராணிகளுக்கு அன்னமாகின்றன. இவ்விதம் ஸூர்ய விகாரமான அன்னமன்றே பிராணிகளுக்குப் பிராணதாரணமாகிறது. இந்த ஸூர்யன் எல்லாப் பிராணிகளுக்கும் ரக்ஷகன். ஆகையால், அவனைச் சரணமடை. பூர்ணமான தவத்தைச் செய்து பிறப்பாலும் செய்கையாலும் சுத்தியை அடைந்த எல்லாப் பிரஜைகளையும் மஹாத்மாக்களான அரசர்கள் காப்பாற்றுகிறார்கள். விரதானுஷ்டானத்துடன்கூடிய தியானத்திலிருக்கும் 1 பௌமன், கார்த்தவீர்யன், வேனபுத்ரனை பிருது, நகுஷன் ஆகிய இவர்களால் பிரஜைகள் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டன. பாரதரே! அப்படியே, தர்மாத்மாவான நீரும் கர்மாவால் சுத்தி அடைந்து தவத்தைச் செய்து, தர்மத்தால் பிராம்மணர்களைக் காப்பாற்றும்' என்றார். இவ்விதம் அந்தக்காலத்திற்கேற்ற வார்த்தையைத் தௌம்யர் சொல்லக் கேட்ட யுதிஷ்டிரர், அவரிடமிருந்து எல்லாப் புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடிய மந்திரத்தை உபதேசம் பெற்றார். அஷ்டாக்ஷரமென்னும் சிறந்த மந்திரமானது ஸம்ஸார துக்கத்தை அடைந்தவர்களுக்கு எப்போதும் பிரியமானது. பிராம்மணர்களுக்கு அன்னத்திற்காக நியமத்திலிருக்கிறவரும் மனத்தை அடக்கியவரும் உறுதியான வ்ரதமுள்ளவரும் (ஸ்நானத்தால்) சுத்தமான சரீரமுள்ளவருமான தர்மபுத்ரர் மேலான தவத்தைச் செய்தார். அந்த அரசர் புஷ்பமுதலிய பூஜைக்குரிய பொருள்களாலும் பலிகளாலும் ஸூர்யனைப் பூஜித்து ஸூர்யனுக்கு எதிர்முகமானார். தர்மாத்மாவான தர்மபுத்திரர் கங்கா ஜலத்தை ஆசமனம்செய்து இந்திரியங்களை ஜயித்துக் காற்றைப் புசித்து மனோவியாபாரத்தை நிறுத்தி ப்ராணாயாமம் செய்து

1 'பீமேந' என்பது வேறுபாடம். இதனைக் கார்த்தவீர்யனுக்கு அடைமொழியாக்குவது ஆங்கில மொழிபெயர்ப்பு.

கொண்டு நின்றார். பிறகு, சுத்தரான அவர் சுத்தமான வாக்குக்களால் ஸ்தோத்திரம்செய்ய ஆரம்பித்தார்.

'பானுவே! நீர் ஜகத்துக்குக் கண்போன்றவர். எல்லாஜீவர்களுக்கும் நீரே ஆத்மா. ஆகாசமுதலிய எல்லாப்பூதங்களுக்கும் காரணம் நீரே. கர்மானுஷ்டானம் செய்பவர்களுடைய ஆசாரமும் நீரே. எல்லா ஞானிகளாலும் அடையப்படுபவரும் நீரே. மனத்தை அடக்கும் யோகிகளுக்கும் நீரே முக்யகதி. கதவும் தாளும் இல்லாத மோக்ஷவாயிலும் நீரே. நீரே முமுக்ஷுக்களால் அடையப்படுபவர். உம்மால் உலகம் தரிக்கப்படுகிறது. உம்மால் உலகம் பிரகாசிப்பிக்கப்படுகிறது; உம்மால் சுத்தமாக்கப்படுகிறது; கைம்மாறுகருதாமல் உம்மால் காப்பாற்றப்படுகிறது. ஓ! ரிஷிக்கூட்டங்களால் பூஜிக்கப்பட்டவரே! வேதத்தின்கரைகண்ட பிராம்மணர்கள் காலத்தில் உம்மைத் தொழுதுநின்று தமக்குரிய வேதத்திற் சொல்லிய மந்திரங்களால் பூஜிக்கின்றார்கள். ஸித்தரும் சாரணரும் கந்தர்வரும் யக்ஷரும் குஹ்யகரும் பன்னகரும் வரத்தை அடைய விரும்பி ஆகாயத்தில் போகின்ற உம்முடைய திவ்யரதத்தைப் பின்தொடருகின்றார்கள். முப்பத்துமூன்றுதேவதைகளும், விமானத்தோடு சஞ்சரிக்கும் கணங்களும், இந்திரனும், உபேந்திரனும் உம்மைப் பூஜித்து ஸித்தியை அடைந்திருக்கிறார்கள். வித்தியாதரர்களுள் சிறந்தவர்கள் திவ்யமான மந்தாரமாலைகளால் உம்மைப் பூஜித்து (இம்மையில்) சீக்கிரம் இஷ்டத்தை அடைந்து (மறுமையில்) உம்மையே அடைகிறார்கள். தேவலோகத்திலுள்ள குஹ்யகர்களும் தேவஸம்பந்தமும் மனுஷ்யஸம்பந்தமுமுள்ள ஏழு பித்ருகணங்களும் உம்மையே பூஜித்துச் சீக்கிரமாக மேன்மையை அடைகின்றார்கள். வஸுக்களும் மருத்துக்களும் ருத்ரர்களும் ஸாத்யர்களும் மரீசிபர்களும் வாலகில்யர் முதலிய ஸித்தர்களும் பிராணிகளுள் சிறப்பை அடைந்தார்கள். பிரம்மலோக முதலிய ஏழு உலகங்களிலும் மற்ற எல்லா உலகங்களிலும் ஸூர்யனுக்கு மேற்படும் பிராணி இருப்பதாக நான் நினைக்கவில்லை. வீர்யமுள்ளவைகளும் பெரியவைகளுமான வேறுபிராணிகளும் இருக்கின்றன. ஆனால், பிரகாசமும் மஹிமையும் உமக்கு எப்படியோ அப்படி அவைகளுக்கு இல்லை. ஒளிகளெல்லாம் உம்மிடத்தில் இருக்கின்றன. நீர் எல்லாத் தேஜஸுகளுக்கும் பதியானவர். பூமி, ஜலம், தேயு, வாயு, ஆகாயம், புத்தி, ஸத்வம், தர்மம், ஞானம், வைராக்கியம், ஐச்வரியம் முதலிய எல்லாம் உம்மிடத்தில் இருக்

கின்றன. விஷ்ணுவினால் அஸுரர்களின் கொழுப்பானது எந்த ஸுதர்சனமென்கிற சக்கரத்தால் நாசம்பண்ணப்பட்டதோ அது விச்வகர்மாவினால் உம்முடைய தேஜஸினால் செய்யப்பட்டது. நீர் கோடைக்காலத்தில் எல்லாப்பிராணிகளுடைய ஸாரத்தையும் எல்லா ஓஷதிரஸங்களுடைய ஸாரத்தையும் கிரணங்களால் எடுத்துத் திரும்பவும் மழைக்காலத்தில் விடுகிறீர். உம்முடைய சில கிரணங்கள் கொளுத்துகின்றன; சில தாபத்தைஉண்டுபண்ணுகின்றன; மழைக்காலத்தில் சில அப்படியே மேகங்களாகக் கர்ஜிக்கின்றன; மின்னுகின்றன; மழையையும் பெய்கின்றன. குளிராலும்காற்றாலும் பீடிக்கப்பட்ட பிராணிகளை உம்முடைய கிரணங்கள் எவ்விதம் சுகப்படுத்துமோ அவ்விதம் நெருப்பும் போர்வைகளும் கம்பளங்களும் ஸுகப்படுத்துகிறதில்லை. [1] பதின்மூன்று தீவுகளுடன் கூடிய பூமியைக் கிரணங்களால் பிரகாசப்படுத்துகிறீர். மூன்று உலகங்களின் க்ஷேமத்திற்குமாக நீர் ஒருவரே பிரவிருத்திக்கிறீர். உம்முடைய உதயமில்லாவிட்டால் இவ்வுலகமானது இருளடைந்துவிடும். தர்மம் அர்த்தம் காமம் இவைகளில் புத்திமான்கள் பிரவிருத்தியார். பிராம்மண க்ஷத்ரிய வைசியர்களின் கூட்டங்களால், உம்முடைய அனுக்ரகத்தாலேயே, அக்னிஹோத்ரம் பசுபந்தம் இஷ்டி மந்திரம் யாகம் தவம் முதலிய காரியங்கள் செய்து முடிக்கப்படுகின்றன; ப்ரம்மாவின் எந்தப் பகலானது ஆயிரம் யுகம் அளவுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்கு முதலாயும் கடைசியாயும் நீரே இருக்கிறீரென்று கால (தத்துவ)ம் தெரிந்தவர்களால் சொல்லப்படுகிறீர். மனுக்களுக்கும் மனுபுத்ரர்களுக்கும் மனிதரில்லாத ஜகத்துக்கும் எல்லா மந்வந்தரங்களுக்கும் அவற்றிலுள்ள ஈச்வரர்களுக்கும் நீர் ஈச்வரர். பிரளயகாலம் வந்தவுடன், உம்முடைய கோபத்தால் வெளிவந்த ஸம்வர்த்தகமென்னும் நெருப்பானது மூவுலகத்தையும் சாம்பலாக்கிவிட்டு நிற்கின்றது. உம்முடைய கிரணத்தாலுண்டான அனேக நிறமுள்ள பெரியமேகங்கள் [2] ஐராவதமென்னும் மேகங்களுடனும் இடிகளுடனும் கூடிக்கொண்டு [3] நான்கு விதமான எல்லாப் பிராணிகளையும்

[1] 'ஸுதர்சனத்வீபம் முதலிய அவாந்தரத்வீபங்கள் சேர்ந்து பதின்மூன்று' என்பது பழையவுரை.

[2] மேகங்களுக்கு மேலுள்ள மேகங்களுக்கு ஐராவதமென்று பெயர்.

[3] அண்டஜம் = முட்டையிலிருந்துண்டானது; ஸ்வேதஜம் = வேர்வையிலிருந்துண்டானது; உத்பிஜ்ஜம் = பூமியைப்பிளந்துண்டானது; ஜராயுஜம் = கருப்பையிலிருந்துண்டானது; என்று நான்குவிதமாம்.

கின்றன. விஷ்ணுவினால் அஸுரர்களின் கொழுப்பானது எந்த ஸுதர்சனமென்கிற சக்கரத்தால் நாசம்பண்ணப்பட்டதோ அது விச்வகர்மாவினால் உம்முடைய தேஜஸினால் செய்யப்பட்டது. நீர் கோடைக்காலத்தில் எல்லாப்பிராணிகளுடைய ஸாரத்தையும் எல்லா ஓஷதிரஸங்களுடைய ஸாரத்தையும் கிரணங்களால் எடுத்துத் திரும்பவும் மழைக்காலத்தில் விடுகிறீர். உம்முடைய சில கிரணங்கள் கொளுத்துகின்றன; சில தாபத்தைஉண்டுபண்ணுகின்றன; மழைக்காலத்தில் சில அப்படியே மேகங்களாகக் கர்ஜிக்கின்றன; மின்னுகின்றன; மழையையும் பெய்கின்றன. குளிராலும்காற்றாலும் பீடிக்கப்பட்ட பிராணிகளை உம்முடைய கிரணங்கள் எவ்விதம் சுகப்படுத்துமோ அவ்விதம் நெருப்பும் போர்வைகளும் கம்பளங்களும் ஸுகப்படுத்துகிறதில்லை. [1] பதின்மூன்று தீவுகளுடன் கூடிய பூமியைக் கிரணங்களால் பிரகாசப்படுத்துகிறீர். மூன்று உலகங்களின் க்ஷேமத்திற்குமாக நீர் ஒருவரே பிரவிருத்திக்கிறீர். உம்முடைய உதயமில்லாவிட்டால் இவ்வுலகமானது இருளடைந்துவிடும். தர்மம் அர்த்தம் காமம் இவைகளில் புத்திமான்கள் பிரவிருத்தியார். பிராம்மண க்ஷத்ரிய வைசியர்களின் கூட்டங்களால், உம்முடைய அனுக்ரகத்தாலேயே, அக்னிஹோத்ரம் பசுபந்தம் இஷ்டி மந்திரம் யாகம் தவம் முதலிய காரியங்கள் செய்து முடிக்கப்படுகின்றன; ப்ரம்மாவின் எந்தப் பகலானது ஆயிரம் யுகம் அளவுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்கு முதலாயும் கடைசியாயும் நீரே இருக்கிறீரென்று கால (தத்துவ)ம் தெரிந்தவர்களால் சொல்லப்படுகிறீர். மனுக்களுக்கும் மனுபுத்ரர்களுக்கும் மனிதரில்லாத ஜகத்துக்கும் எல்லா மந்வந்தரங்களுக்கும் அவற்றிலுள்ள ஈச்வரர்களுக்கும் நீர் ஈச்வரர். பிரளயகாலம் வந்தவுடன், உம்முடைய கோபத்தால் வெளிவந்த ஸம்வர்த்தகமென்னும் நெருப்பானது மூவுலகத்தையும் சாம்பலாக்கிவிட்டு நிற்கின்றது. உம்முடைய கிரணத்தாலுண்டான அனேக நிறமுள்ள பெரியமேகங்கள் [2] ஐராவதமென்னும் மேகங்களுடனும் இடிகளுடனும் கூடிக்கொண்டு [3] நான்கு விதமான எல்லாப் பிராணிகளையும்

[1] 'ஸுதர்சனத்வீபம் முதலிய அவாந்தரத்வீபங்கள் சேர்ந்து பதின்மூன்று' என்பது பழையவுரை.

[2] மேகங்களுக்கு மேலுள்ள மேகங்களுக்கு ஐராவதமென்று பெயர்.

[3] அண்டஜம் = முட்டையிலிருந்துண்டானது; ஸ்வேதஜம் = வேர்வையிலிருந்துண்டானது; உத்பிஜ்ஜம் = பூமியைப்பிளந்துண்டானது; ஜராயுஜம் = கருப்பையிலிருந்துண்டானது; என்று நான்குவிதமாம்.

ஜலத்தில் முழுகச் செய்கின்றன. சரீரத்தைப் பன்னிரண்டாகப் பிரித்துக்கொண்டு பன்னிரண்டு ஸூரியராக இருக்கும் தன்மையை அடைந்திருக்கும் நீர்,[1] ஒன்று சேர்ந்து, ஒரே ஸமுத்திரமாயிருக்கிற யாவற்றையும் கிரணங்களால் உலர்த்திவிடுகிறீர். உம்மை இந்திரன் என்கிறார்கள்; நீரே ருத்ரர்; நீரே விஷ்ணு; நீரே பிரம்மா; நீரே அக்கி;ஸூக்ஷ்மமான மனமும் நீரே. புரபுவும் நீரே. நித்யமான ப்ரம்மமும் நீரே. நாசம் பண்ணுகிறவரும் நீரே; உண்டுபண்ணுகிறவரும் பிரகாசிப்பவரும் கிரணங்களின் வரிசையுள்ளவரும்[2] விருஷாகபியும் ஜகத்துக்கு இருப்பிடமானவரும் மேகரூபமாகி வர்ஷிக்கிறவரும் போஷிக்கிறவரும் மித்ரரும் தர்மரூபமானவரும் ஆயிரம்கிரணங்களுள்ளவரும் அதிதியின் புத்திரரும் தாபத்தை உண்டாக்குகிறவரும் கிரணங்களுக்குப் பதியும் நீரே. மார்த்தண்டரும் பூஜிக்கத்தக்கவரும் ரவியும் ஸூர்யரும் ரக்ஷகரும் பகலைச் செய்பவரும் பகலைப் பிரகாசமாக்குகிறவரும் ஸப்த என்ற குதிரையையுடையவரும் பிரகாசமான கிரணமுள்ளவரும் மிக்க ப்ரீதியை யுண்டுபண்ணுகிறவரும் விரைவாகச் செல்லுகிறவரும் இருளைப் போக்குகிறவரும் பச்சை நிறமுள்ள குதிரையை உடையவருமாகச் சொல்லப்படுகிறீர். ஸப்தமியிலோ அல்லது ஷஷ்டியிலோ எவன் வெறுப்பும் அஹங்காரமுமில்லாதவனுகிப் பக்தியுடன் (உம்மைப்) பூஜை செய்கிறானே அந்த மனிதனை லக்ஷ்மி அடைகிறாள். எவர்கள் பூஜாகாலத்தில் வேறிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் உம்முடைய பூஜையையும் நமஸ்காரத்தையும் செய்கிறார்களோ அவர்களுக்கு ஆபத்துக்களும் மனோவியாதிகளும் உண்டாகா. உம்முடைய த்யானத்தில் பிரியமுள்ளவர்கள் எல்லா வியாதிகளாலும் விடுபட்டவர்களும் எல்லாப் பாவங்களாலும் விடுபட்டவர்களும் ஸுகமுள்ளவர்களும் வெகுகாலம் ஜீவிக்கின்றவர்களும் ஆகிறார்கள். ஓ! அன்னபதியான ஸூர்யரே! விருப்பங்களை நிறைவேற்ற முடியாத நிலையிலிருப்பவனும் சிரத்தையுடன் எல்லாருக்கும் அதிதிபூஜை செய்ய விருப்பமுள்ளவனுமாயிருக்கிற எனக்கு நீர் அதிகமாக அன்னத்தைக் கொடுக்கவேண்டும். உம்முடைய பாதமூலத்தை அடுத்தவர்களும் மின்னல் இடிகளை உண்டுபண்ணுகிறவர்களும் உம்மைத் தொடர்ந்து வருபவர்

1 'ஸம்ஹ்ருத்ய' என்பது; மூலம்; 'ஸம்ஹாரம் செய்து' என்றும் கொள்ளலாம்.

2 'சிவனாகவோ விஷ்ணுவாகவோ இருப்பவர்' என்பது பழைய வுரை.

களுமான மாடரன், அருணன், தண்டன் முதலிய எல்லாப் பக்தர்களையும் தனித்தனி நமஸ்கரிக்கிறேன். (நிக்கிரகம் செய்யும்) க்ஷுத்பை யென்னும் தேவதையுடன் கூடிய (அனுக்கிரகம் செய்யும்) மைத்ரியென்னும் தேவதை, மற்றுமுள்ள [1]பூதமாதாக்கள் ஆகிய அவர்கள் யாவரையும் நமஸ்கரிக்கிறேன். சரணாகதனான என்னைக் காப்பாற்றுக' என்றார்.

பிறகு, கழுத்தளவு ஜலத்தில் நின்று மந்திரங்களாலும் ஸ்தோத்திரங்களாலும் சந்தோஷப்படுத்தப்பட்டவரும் அக்னி போலத் தமது சரீரத்தால் பிரகாசிக்கின்றவருமான ஸூர்யர் பிரீதியுடன் தர்மபுத்திரருக்குத் தரிசனம் அளித்தார். ஸூரியர், 'உனக்கு எது விருப்பமோ அது அனைத்தையும் நீ அடைவாய். பன்னிரண்டு வருஷம் நான் உனக்கு அன்னத்தைத் தருகிறேன். ஓ! நராதிபனே! என்னால் கொடுக்கப்பட்ட தாம்ரமயமான பரிமாறுகிற பாத்திரத்தைப் பெற்றுக்கொள். நல்ல விரதமுள்ளவனே! திரௌபதியானவள் இப்பாத்திரத்துடன் எவ்வளவுகாலம்வரை அன்னமளிக்க விரும்புவளோ அதுவரை ஸித்தம் செய்யப்பட்ட பழம், கிழங்கு, மாமிசம், கீரை, லேகியம், சோஷ்யம், பக்ஷ்யம், பேயம் ஆகிய நான்குவிதமான உணவுப் பதார்த்தங்களும் சமையலறையில் உனக்குக் குறைவற்றிருக்கும். இதிலிருந்து பதினான்காவது வருஷத்தில் திரும்பவும் ராஜ்யத்தை அடைவாய்' என்றார். பூஜ்யரான ஸூர்யர் இவ்விதம் சொல்லி அங்கேயே மறைந்துவிட்டார். தர்மத்தையறிந்த குந்திபுத்திரரோ வரத்தையடைந்து ஜலத்திலிருந்து கரையேறி, தௌமியரின் பாதங்களில் வணங்கித் தம்பிகளையும் ஆலிங்கனம்செய்து கொண்டார். அப்பொழுது பிரபுவான பாண்டுபுத்திரர் திரௌபதியுடன் சேர்ந்து (பாத்திரத்தைப்) பார்த்துக்கொண்டு சமைக்கும்இடம்

---

1 'கௌரி, பத்மை முதலியவர்கள்' என்பதும், 'பிராம்மீ மாஹேஶ்வரீ முதலியவர்கள்' என்பதும் பழையவுரை. சாந்தி பர்வம் 716-ம் பக்கம் குறிப்பில் காண்க.

பிராம்மி, மாஹேஶ்வரி, ஐந்த்ரி, வாராஹி, வைஷ்ணவி, கௌமாரி, சாமுண்டா, சர்ச்சிகா என எண்மர் என்றும், பிராம்மி, வைஷ்ணவி, ஐந்த்ரி, ரௌத்ரி, வாராகி, கௌபேரி, கௌமாரி, என எழுவர் என்றும், கௌரி, பத்மை, சசி, மேதை, ஸாவித்ரி, விஜயை, ஜயை, தேவஸேனை, ஸ்வதை, ஸ்வாஹை, சாந்தி, புஷ்டி, த்ருதி, துஷ்டி, ஆத்மதேவதை (= இஷ்டதேவதை) குலதேவதை எனப் பதினறுவர் என்றும் மூன்றுவிதமாகக் கூறுவது சப்தகல்ப த்ருமம்.

சென்று அன்னத்தைச் சித்தம்செய்தார். சமையல் செய்யப்பட்ட நான்குவிதமான சிறிது அன்னமும் வளர்வதாயிற்று. அன்னம் குறைவில்லாமலும் வளர்ந்தது. அந்த அன்னத்தால் பிராம்மணர்களைப் போஜனம் செய்வித்தார். தர்மபுத்ரர் பிராம்மணர்கள் சாப்பிட்டபிறகு தம்பிகளையும் போஜனம் செய்வித்து விகஸமென்று பெயருள்ள மிஞ்சின அன்னத்தைப் பின்பு புஜித்தார். தர்மபுத்திரரை உண்பித்து மிஞ்சினதைத் திரௌபதி புஜித்தாள். திரௌபதி சாப்பிட்டவுடன் அதில் அன்னம் இல்லாமற் போய் விடும். சூரியனுக்கு ஒப்பான காந்தியுள்ள பிரபுவான தர்மபுத்திரர் இவ்விதம் சூரியனிடமிருந்து (அப்பாத்திரத்தை) அடைந்து மனத்தினால் எண்ணப்பட்ட ஸகலவஸ்துக்களையும் பிராம்மணர்களுக்குக் கொடுத்தார். பாண்டவர்கள் உபாத்தியாயரை முன்னிட்டு, (விசேஷமான திதிகளிலும் நக்ஷத்திரங்களிலும் பர்வங்களிலும் விதிவாக்யங்களையும் மந்திரங்களையும் ப்ரமாணமாகக்கொண்டு யாகம் செய்யவும் ஆரம்பித்தார்கள். பிறகு, பாண்டவர்கள் [1] க்ஷேமத்தையுடையவர்களாகித் தௌம்யருடன் பிராம்மணக்கூட்டங்களால் சூழப்பட்டுக் காம்யகமென்னும் வனத்தைக்குறித்துச் சென்றார்கள்'' என்றார்.

ஜனமேஜயர், "பிரம்மரிஷியே! புலன்களை அடக்கினவரும் பிராணன்களை அடக்கினவருமான அந்த யுதிஷ்டிர அரசர் பிராம்மணர்களுக்காக மிகுதியான புஷ்பங்களாலும் காணிக்கைகளாலும் பலிகளாலும் முறைப்படி பூஜித்து ஸர்வாத்மாவும் ஆச்சரியமான பராக்ரமமுள்ளவனுமான ஸூரியனை எந்த ஸ்தோத்திரத்தால் ஆராதித்தார்? பூஜ்யரான பிராம்மணரே! என்னிடத்தில் ஸ்நேகமிருக்குமானாலும் நான் அனுக்ரஹத்தை அடைந்தவனானாலும், மறைக்கக் கூடியதாக இல்லாவிடில் இப்பொழுது எனக்கு அதைச் சொல்லவேண்டும்'' என்றார். வைசம்பாயனர், "அரசரே! சுத்தராயிருந்து ஒரே இடத்தில் மனத்தை நிறுத்தி ஸாவதானமாகக் கேளும். ராஜச்ரேஷ்டரே! வேறு வேலையில்லாமலிரும். உமக்கு நன்மையைத்தரும் ஒரு ரகஸ்யத்தைச் சொல்லுகின்றேன். பூபதியே! நல்ல சிறந்த புத்தியுள்ள குந்திபுத்திரரான யுதிஷ்டிரருக்குத் தௌம்யரால் சொல்லப்பட்ட புண்ணியமான [2] நூற்றெட்டு நாமாக்களைக் கேளும்.

---

1 'ஆசீர்வாதம் செய்யப்பட்டவர்களாய்' என்பதும் பொருள்.

2 பின் வரும் நாமாக்களை எண்ண நூற்றிருபத்து நான்கு ஆகின்றன.

. ஸூர்யர், அர்யமர், பகர், த்வஷ்டா, பூஷா, அர்க்கர், ஸவிதா, ரவி, கபஸ்திமான், அஜர், காலர், ம்ருத்யு, தாதா, ப்ரபாகரர், ப்ருதிவீ, ஆபர், தேஜஸ், கம், வாயு, பராயணர், ஸோமர், ப்ருஹஸ்பதி, சுக்ரர், புதர், அங்காரகர், இந்திரர், விவஸ்வான், தீப்தாம்சு, சுசி, சௌரி, சனைஸ்சரர், ப்ரம்மா, விஷ்ணு, ருத்திரர், ஸ்கந்தர், வைஸ்ரவணர், யமர், வைத்யுதர், ஜாடரர், அக்னி, ஐந்தனர், தேஜஸாம்பதி, தர்மத்வஜர், வேதகர்த்தர், வேதாங்கர், வேதவாஹனர், க்ருதம், திரேதை, துவாபரம், கலி, ஸர்வாமராஸ்ரயர், கலை, காஷ்டை, முஹூர்த்தம், பக்ஷம், மாஸம், ருது, ஸம்வத்ஸரகரர், அஸ்வத்தர், காலசக்ரர், விபாவஸு, புருஷர், சாஸ்வதர், யோகி, வ்யக்தாவ்யக்தர், ஸநாதனர், லோகாத்யக்ஷர், ஸுராத்யக்ஷர், விஸ்வகர்மா, தமோனுதர், வருணர், ஸாகரர், அம்சர், ஜீமூதர், ஜீவனர், அரிஹர், பூதாஸ்ரயர், பூதபதி, ஸர்வபூத நிஷேவிதர், மணி, ஸுவர்ணர், பூதாத்மா, காமதர், ஸர்வதோமுகர், ஸ்ரஷ்டா, ஸம்வர்த்தகர், வஹ்நி, ஸர்வஸ்யாதி, அலோலுபர், அனந்தர், கபிலர், பாநு, காமதர், ஸர்வதோமுகர், ஜயர், விசாலர், வரதர், ஸர்வதாதுநிஷேசிதர், மனம், ஸுபர்ணர், பூதாதி, சீக்ரகர், பிராணதாரகர், தன்வந்தரி, தூமகேது, ஆதிதேவர், அதிதேஸ்ஸுதர், துவாதசாத்மா, அரவிந்தாக்ஷர், பிதா, மாதா, பிதாமஹர், ப்ரஜாத்வாரர், மோக்ஷத்வாரர், ஸ்வர்க்கத்வாரர், த்ரிவிஷ்டபர், தேவகர்த்தர், ப்ரசாந்தாத்மா, விஸ்வாத்மா, விஸ்வதோமுகர், சராசராத்மா, ஸூக்ஷ்மாத்மா, [1]மைத்திரேயர், கருணாந்விதர் என்பன. துதிக்கத்தக்கவரும் அதிக தேஜஸுள்ளவருமான ஸூரியருடைய இந்தப் புண்யமான நூற்றெட்டு நாமங்கள் மகாத்மாவான இந்திரனால் சொல்லப்பட்டன. இந்திரனிடமிருந்து நாரதர் அடைந்தார். பிறகு, தௌம்யர் அடைந்தார். தௌம்யரிடமிருந்து யுதிஷ்டிரரடைந்து எல்லா விருப்பங்களையும் அடைந்தார். தேவகணங்கள், பிதுருக்கள், யக்ஷர்கள் இவர்களால் வணங்கப்பட்டவரும் அஸுரர்களாலும் ராக்ஷஸர்களாலும் ஸித்தர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரும் மேலான தங்கத்திற்கும் அக்னிக்குமொப்பான காந்தியுள்ளவருமான சூரியரை நீரும் மனத்தில் தியானம் செய்யும். எவன் ஸூர்யோதயகாலத்தில் நன்கு மனத்தை அடக்கிக்கொண்டு இதனைப்படிப்பானோ அவன் எப்பொழுதும் புத்திரன், ஸ்திரீ, தனம், ரத்தினக்குவியல் இவர்களை அடைவன். எப்போதும் முற்பிறப்பை அறியும் தன்மையையும்

1 வேறு பாடம்.

தைரியத்தையும் மேதையையும் அடைவான். எந்தமனிதன் தேவச்ரேஷ்டரான ஸூர்யனுடைய இந்த ஸ்தோத்திரத்தைச் சுத்தனும் நல்ல மனமுள்ளவனுமாகித் தியானம் செய்துகொண்டு சொல்லுவானே அவன் காட்டுத்தீப்போன்ற துக்கஸாகரத்தி லிருந்து விடுபடுகிறான். மனத்தால் விரும்பப்பட்டபடி இஷ்டங் களை அடைவான். இந்த ஸ்தோத்திரத்தைச் சுத்தமுள்ளவனாக எவனானாலும் ஒருவரை விரும்பிக்கொண்டு த்யானத்துடன் இவ்வுல கில் படிப்பனானால் சூரியனும் அவனுக்கு அவ்விருப்பத்தைக் கொ டுப்பான். அது கிடைப்பதரிதானாலும் அப்பொழுதே அடைந்து விடுகிறான். புருஷனோ அல்லது, ஸ்திரீயோ, எப்பொழுதும் மனத் தில் பதியச் செய்பவரும் அடிக்கடி கேட்பவரும் புத்திரனைவிரும்பி னால் புத்திரனை அடைவர்; செல்வத்தை விரும்பினால் செல்வத்தை யடைவர்; வித்தையை விரும்புகிறவர் வித்தையையும் அடைவர். ஆபத்தை யடைந்த ஸ்திரீயோ, அல்லது, புருஷனோ ஒவ்வொரு நாளும் இரண்டுசந்தியிலும் படித்தால் அந்த ஆபத்திலிருந்து விடு படுகிறார். கட்டுண்டவன் கட்டிலிருந்து விடுபடுகிறான். யுத்தத் திலும் எப்பொழுதும் ஜயத்தை அடைவன். அதிகமான செல்வத் தையும் அடைவன். எல்லாப் பாவத்திலிருந்தும் விடுபடுகிறான். ஸூர்யலோகத்தை அவன் அடைகிறான்.

நான்காவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் வனஞ்சென்றபின் திருதராஷ்டிரன் விதுரரை ஆலோசனை கேட்டதும், விதுரர் பாண்டவர்களை அழைத்து ராஜ்யத்தில் ஸ்தாபிக்கச் சொல்லி யதும், திருதராஷ்டிரன் விதுரரை நிந்தித்த தும், விதுரர் பாண்டவர்களிடம் சென்றதும்.)

பிறகு, பாண்டவர்கள் காட்டையடைந்தவுடன், அறிவைக் கண்ணாகவுடையவனும் அம்பிகையின் புத்திரனுமான திருதராஷ்டிர ராஜன், தாபத்தையடைந்து ஸுகமான ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு, தர்மசிந்தையுள்ளவரும் ஆழ்ந்த புத்தியுள்ளவருமான விதுரரைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான். 'சுக்கிராசாரிய ருடைய அறிவுபோல உன்னுடைய அறிவும் சுத்தமானது. நுட்ப

மானதும் மேலானதுமான தர்மத்தையும் நீ அறிவாய். குருவம்சத்தில் உதித்தவர்களுக்கு நீ பொதுவானவனென்றும்எண்ணப்பட்டவன். விதுர! இவ்விதம் நடந்திருக்கையில், இப்பொழுது எதுசெய்யத்தக்கது? இந்தப்பட்டணத்து ஜனங்கள் எவ்விதம் நம்மை அநுஸரிப்பார்கள்? அந்தப் பாண்டவர்களும் நம்மை வேருடன் நாசம் செய்யாமலும் நானும் அவர்களை நாசம் செய்ய விரும்பாமலும், அவர்களுக்கும் எனக்கும் நன்மையானதைச்சொல்லு. க்ஷத்தாவே! துர்யோதனனுக்கு நன்மையை விரும்பினவனும் பாவியுமான சகுனியாலேயே தீங்கு செய்யப்பட்டது. அப்படிச் செய்யப்பட்டது, எனக்கு விருப்பமில்லாதது. ஆகையால், அவ்விதமே அங்கீகரிக்கப்பட்ட அவ்விஷயத்தில் நீ பரிகாரம் சொல்லவேண்டும். காலத்துக்கேற்றவாறு வேறு எதை இனிமேல் உசிதமாக நினைக்கிறாய்? எந்தத் தர்மவிஷயத்தில் பாண்டுபுத்திரர்கள் யாவரும் காட்டையடைந்து கஷ்டப்படுகின்றார்களோ (அந்தத்) தர்ம விஷயத்தில் உதவும்படி இல்லையே என்று என்மனம் வெடிக்கின்றது.' என்று கேட்டான்.

விதுரர் சொல்லுகிறார்: 'நரேந்திரரே! இந்தத் தர்மார்த்தகாமங்கள் தர்மத்தைக் காரணமாகவுடையவை. இந்த ராஜ்யத்துக்கும் தர்மம் மூலமென்று சொல்லுகின்றார்கள். அரசரே! உமது சக்திக்கேற்றவாறு தர்மத்திலிருந்துகொண்டு உம்முடைய எல்லாப் புத்திரர்களையும் குந்தியின் புத்திரர்களையும் காப்பாற்றும். அந்தத் [1]தர்மமானது சகுனியை முக்கியமாயுடைய தீயசிந்தையுடையவர்களால் ஸபையில் வஞ்சிக்கப்பட்டது. உமது புத்திரன் சூதாட்டத்திற்கு அழைத்துச் சத்தியசந்தனை குந்தியின் புத்திரனைத் தோல்வியடைவித்தனன். கௌரவரே! அரசரே! உமது புத்திரன் பாவத்திலிருந்து விடுபட்டு உலகத்தில் நன்கு நிலைபெறும்படி உம்மால் கபடமாயுண்டுபண்ணப்பட்ட இந்தத் துவேஷ நிவிருத்தியின் உபாயத்தை நான் நன்கு ஆலோசிக்கின்றேன். அரசரே! உம்மால் கொடுக்கப்பட்டவற்றையெல்லாம் பாண்டு புத்திரர்கள் அடையட்டும். 'அரசன் தன்னுடையதிலேயே சந்தோஷிக்க வேண்டும்; பிறர் செல்வத்தில் இச்சை வைக்கக்கூடாது' என்பது மேலான தர்மம். இவ்விதம் செய்யப்பட்டால் உம்முடைய புகழ் அழியாது. ஞாதிகளுள் கலகமுண்டாகாது. தர்மம் உண்டாகா

---

1 'ஸவை தர்ம:' என்பது மூலம்; 'அந்தத் தர்மரூபியான யுதிஷ்டிரர்' என்பது பழையவுரை.

தென்பதில்லை. நீர் இதைச் செய்தால் எல்லாவற்றிலும் முக்கியமான உம்முடைய இந்தக் கார்யமானது பாண்டவர்களுக்குச் சந்தோஷமாகவும் சகுனிக்கு அவமானமாகவுமாகும். இவ்விதம் செய்தால் மிஞ்சின பாக்கியமே உம்முடைய புத்திரர்களிடம் நிற்கும். அரசரே! இதைச் சீக்கிரமாகச் செய்யும். அரசரே! இதை இவ்விதம் செய்யாமலிருப்பீரானால் குருவம்சத்தார்களுக்கு அழிவுவருமென்பது நிச்சயம். கோபங்கொண்ட பீமனோ அர்ஜுனனோ பகைவர்களின் படையில் மிச்சம் வைக்கமாட்டார்கள். எவர்களுள் அஸ்திரத்தில் தேர்ச்சியுள்ளவனான அர்ஜுனன் யுத்தம் செய்பவனோ, எவர்களுக்கு லோகத்தில் சிறந்ததான காண்டீவமென்ற வில்லானது (இருக்கின்றதோ), எவர்களுள் தோள்வலிமையுள்ள பீமன் யுத்தம் செய்பவனோ, அவர்கள் உலகத்தில் அடையத்தகாதது என்ன இருக்கின்றது? முந்தி உமது புத்திரன் உதித்தவுடன், 'குலத்திற்குக் கெடுதலான இந்தப் புத்திரனைவிடும்' என்று மேலான ஹிதமானது என்னால் உமக்குச் சொல்லப்பட்டது. அதனை நீர் செய்யவில்லை. இப்பொழுதும் உமக்கு அந்த ஹிதம் உரைக்கப்பட்டது. இவ்விதம் நீர் செய்யீராயின் பிறகு தாபத்தை அடைவீர். இவ்விதம் பாண்டவர்களுடன் சேர்ந்து ஒன்றாக அரசாட்சிசெய்ய உமது புத்ரன் சந்தோஷத்துடன் சம்மதிப்பானானால் உமக்குத் தாபமுண்டாகாது. (ராஜ்யத்தில்) ஆசைவைத்துச் சம்மதியாவிடில் (வேறு) சகாயங்களால் அனுகூலனல்லாத புத்திரனை அடக்கிப் பாண்டு புத்திரனை ஆதிபத்தியத்தில் நிலைநிறுத்தும். புத்திமானே! ராஜேந்திரரே! ராஜஸிம்மமே! அரசர்களுடனும் உறவினர்கூட்டங்களுடனும் புத்திரனுடனும் உமக்கு நாசம் நிச்சயம். பதினான்காவது வருஷத்திலேயே குலத்தின் நாசத்தை அடைவீர். நரேந்திரரே! ஆகையால், தர்மம் செய்பவர்களுள் சிறந்த தர்மபுத்திரனை அரசாட்சியில் நிலைநிறுத்தும். சிறிதும் ஆசையற்ற அஜாதசத்துருவே இந்தப் பூமியைத் தர்மமாக ஆளட்டும். அரசரே! பிறகு, எல்லா அரசர்களும் வைஶ்யர்கள்போல உடனே நம்முடன் சினேகம் செய்து கொள்ளட்டும். அரசரே! துரியோதனன், சகுனி, கர்ணன் இவர்கள் பாண்டு புத்திரர்களை ப்ரீதியுடன் அனுஸரிக்கட்டும். துச்சாஸனன் நடுச்சபையில் துருபதன்புத்ரியையும் பீமனையும் வேண்டிக்கொள்ளட்டும். நீரும் யுதிஷ்டிரனைச் சமாதானம் செய்யும். அவனைப் பூஜித்து ராஜ்யத்தில் நிலைநிறுத்தும். அரசரே!

நீர் கேட்டதற்கு யான் வேறு எதைச் சொல்வேன்? இதனைச் செய்து கிருதகிருத்யராவீர்' என்றார்.

திருதராஷ்டிரன், 'ஓ! விதுரனே! இந்தச் சபையில் பாண்டவர்களையும் என்னையும் குறித்து உன்னால் சொல்லப்பட்டதும் அவர்களுக்கு இதமும் என்னைச் சார்ந்தவர்களுக்கு விரோதமுமான இந்த வார்த்தை முழுமையையும் என் மனம் அங்கீகரிக்கவில்லை. நீ பாண்டவர்களுக்கு அனுகூலமாகப் பேசியதால் நீ அவர்களைச் சார்ந்தவனென்று இப்பொழுது நிச்சயித்தேன்; எனக்கு ஹிதனல்லனென்றும் எண்ணுகிறேன். பாண்டவர்களுக்காகப் புத்திரனை எவ்விதம் விட்டுவிடுவேன்? அவர்களும் என் புத்திரர்களே என்பதில் ஸந்தேகமில்லை. துரியோதனனோ என் தேகத்திலிருந்து உண்டானவன். பொது நிலைமையை எதிர்பார்க்கும் எவன்தான், 'பிறனுக்காக உன் தேகத்தை விடு' என்று சொல்லுவான்? விதுரனே! நீ என்னைக்குறித்து எல்லாவற்றையும் கபடமாகச் சொல்லுகிறாய். உன் விஷயத்தில் நான் அதிக கோபத்தை அடைகிறேன். நீ இஷ்டம்போலப் போகலாம்; அல்லது, இருக்கலாம். கெட்ட நடையுள்ள ஸ்திரீயானவள் மிக்க நல் வார்த்தை சொல்லப்பட்டாலும் (நாயகனை) விட்டுவிடுகிறாள்' என்றான். அரசரே! திருதராஷ்டிரன் இவ்வளவையும் சொல்லி விரைவில் எழுந்து நடுவீட்டினுள் அடைந்தான். பிறகு, விதுரர், 'இந்தக்குலம் இராது' என்று சொல்லிக்கொண்டு, பார்த்தர்கள் இருக்கிற இடத்திற்கு விரைவாகச் சென்றார்.

ஐந்தாவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் காம்யகவனத்தில் பாண்டவர்களிடம் வந்ததும், அவர் தம் வரவின் காரணத்தை அவர்களுக்குக் கூறியதும்.)

பரதஶ்ரேஷ்டர்களான பாண்டவர்களோ உடன்வந்தவர்களோடு வனவாஸத்தை உத்தேசித்துக் கங்கைக் கரையிலிருந்து குருக்ஷேத்திரத்தைக் குறித்துச் சென்றார்கள். அவர்கள் ஸரஸ்வதியையும் திருஷத்வதியையும் யமுனையையும் அடைந்து காட்டின் வழியே எப்பொழுதும் மேற்றிசையிலேயே சென்றார்கள். பிறகு, ஸரஸ்வதிக்கரையில் ஸமமாயுள்ளதும் ஜலமில்லாததுமான காய்ந்த

த்ரைவெளியில் முனிஜனங்களுக்குப் பிரியமான காம்யகமென்னும் வனத்தைக் கண்டார்கள். பாரதரே! அவ்வீரர்கள் முனிவர்களால் பின்தொடரப்பட்டும் அவர்களால் தேறுதல் சொல்லப்பட்டும் அனேகமிருகங்களும் பறவைகளுமுள்ள அவ்வனத்தில் வஸித்தார்கள். பிறகு, விதுரரோ எப்பொழுதும் பாண்டவர்களைப் பார்ப்பதில் ஆசைகொண்டு ஒரேரதத்துடன் வளமுள்ள காம்யகமென்னும் வனத்தைக்குறித்துச் சென்றார். பிறகு, வேகமான குதிரைகளால் (இழுக்கப்பட்ட) தேரினால் சுமக்கப்பட்ட விதுரர் காம்யகமென்னும் அவ்வனத்தை அடைந்து, திரௌபதி, பிராம்மணர்கள், தம்பிமார்கள் இவர்களுடன் பரிசுத்தமான இடத்தில் உட்கார்ந்திருக்கும் தர்மாத்மாவான (அவரைப்) பார்த்தார். பிறகு, ஸத்யஸந்தரான அந்த அரசர் வேகமாகத் தூரத்தில் வரும் விதுரரைப் பார்த்தார். பிறகு, சகோதரனை பீமஸேனனைப் பார்த்து, 'விதுரர் நம்மிடம்வந்து என்ன சொல்லப்போகிறாரோ? இவர் சகுனியின் வார்த்தையைக் கேட்டுச் சூதாடுவதற்குக் கூப்பிட வராமலிருப்பாரா? (சூதாட்டத்தில்) தேர்ந்த அற்பனை (சகுனி) திரும்பவும் சூதாட்டத்தில் நமது ஆயுதங்களையும் ஜயிக்கப் போகின்றானோ? பீமஸேன! ஒருவரால் யுத்தத்திற்கு அழைக்கப்பட்டால் யான் திரும்புவதற்குச் சக்தனல்லேன். காண்டீவம் நம்மிடம் நிலைப்பது 1 ஸந்தேகமாகிவிட்டால் நமக்கு ராஜ்யம் கிடைப்பதும் எப்படியும் ஸந்தேகமே ஆகும்' என்றார்.

ஓ! அரசரே! பிறகு, எல்லாப் பாண்டவர்களும் (ஆசனத்திலிருந்து) எழுந்து விதுரரை வரவேற்றார்கள். அவர்களால் பூஜிக்கப்பட்ட அந்த விதுரரும் அந்தப் பாண்டுபுத்திரர்களை அவரவர்களுக்குத் தக்கபடி மரியாதை செய்தார். பிறகு, அந்த நரச்ரேஷ்டர்கள் ச்ரமபரிகாரம் செய்துகொண்ட விதுரரை நோக்கி வந்ததற்குக் காரணத்தைக் கேட்டார்கள். அவரும் அம்பிகாபுத்திரனை திருதராஷ்டிரனிடத்தில் நடந்தபடி அவர்களுக்கு விரிவாகச் சொல்லலானார். 'அஜாதசத்துருவே! திருதராஷ்டிரர் (அவரால்) ரக்ஷிக்கப்படுகின்ற என்னை அழைத்து மரியாதைசெய்து, 'இவ்விதம் நடந்த விஷயத்தில் பொதுநிலையை அடைந்து அவர்களுக்கும் எனக்கும் ஹிதத்தைச் சொல்லு' என்று சொன்னார். கௌரவர்களுக்கும் திருதராஷ்டிரருக்கும் தக்கதும் நன்மையான

1 'ஸம்சயிதே' என்பது மூலம், 'பந்தயம் வைக்கப்பட்டால்' என்பது பழையவுரை.

தும் அனுகூலமானதுமான வார்த்தை என்னால் சொல்லப்பட்டது. அந்த நன்மையை அவர்மனம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைவிட மற்றொன்றையும் நான் யோக்யமாக நினைக்கவில்லை. பாண்டு புத்திரர்களே! என்னால் மேலான ஹிதம் சொல்லப்பட்டது. என்னுடைய அந்த (நன்மையையும்) அம்பிகாபுத்திரர் கேட்கவில்லை. வியாதியை அடைந்தவனுக்குப் பத்தியமான மருந்து ருசிக்காததுபோல இவருக்குச் சொல்லப்படும் அந்த வார்த்தை ருசிக்கவில்லை. அஜாதசத்துருவே! ச்ரோத்ரியன்வீட்டில் மிக்கதோஷமுள்ள ஸ்திரீயானவள் எவ்விதம் நல்ல காரியத்தில் [1] சேர்க்கப்படமாட்டாளோ அவ்விதம் திருதராஷ்டிரர் நல்வழியில் திருப்பப்படக்கூடியவராயில்லை. அறுபதுவயதான பதியானவன் இளம்பருவமுள்ள ஸ்திரீக்கு ருசியாததுபோலத் திருதராஷ்டிரருக்கு (என் வார்த்தை) ருசிக்கவில்லை. இது நிச்சயம். அரசனே! கௌரவர்களுக்கு நாசமானது நிச்சயம். திருதராஷ்டிரர் க்ஷேமத்தை [2] ஆலோசியார். தாமரை இலையில் விடப்பட்ட ஜலம் போல இவரிடத்தில் சொல்லப்பட்ட ஹிதமும் [3] தங்காது. பிறகு, திருதராஷ்டிரர் சினங்கொண்டு, 'எவ்விடத்தில் உனக்கு ச்ரத்தையோ அங்கே போய்விடு; நான் இப்பூமியையோ பட்டணத்தையோ ஆளுவதற்கு உன்னை ஸகாயமாகத் திரும்பவும் விரும்பேன்' என்று என்னைப் பார்த்துச் சொன்னார். நரேந்திரனே! திருதராஷ்டிர ராஜரால் விடப்பட்ட அப்படிப்பட்ட நான் உனக்கு உபதேசிக்க வந்தேன். ஸபையில் எது என்னால் சொல்லப்பட்டதோ அது முழுமையையும், திரும்பவும் எதைச் சொல்லப்போகின்றேனோ அஃதனைத்தையும், உறுதிப்படுத்திக்கொள்ளு. பகைவர்களால் கடுமையான துன்பங்களுடன் சேர்க்கப்பட்ட எவன் சிறுநெருப்பை விருத்திபண்ணுகிறவன் போலப் பொறுமையை அடைந்து காலத்தை எதிர்பார்க்கிறானோ புத்திமானான அவன் ஒருவனாகவே பூமியை அனுபவிக்கின்றான். எவனுடைய தனமானது துணைவர்களுக்குப் பொதுவானதோ அவனுடைய துணைவர்கள் அவனுடைய துக்கத்தில் பாகத்தை அடைவார்கள். துணைவர்களைச் சேர்ப்பதில் இது தக்க உபாயம். துணைவர்கள் கிடைத்தால் பூமி கிடைக்கும் என்கிறார்கள். பாண்டவர்களே! உபயோக

---

1 வேறுபாடம். 2 'ந பரைதி' என்பது மூலம்; 'ந பராம்ருசதி' என்பது பழையவுரை; அதற்கு, 'ஆலோசிக்கவில்லை' என்பது பொருள். 3 'திஷ்டேத' என்பது மூலம்.

தும் அனுகூலமானதுமான வார்த்தை என்னால் சொல்லப்பட்டது. அந்த நன்மையை அவர்மனம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைவிட மற்றொன்றையும் நான் யோக்யமாக நினைக்கவில்லை. பாண்டு புத்திரர்களே! என்னால் மேலான ஹிதம் சொல்லப்பட்டது. என்னுடைய அந்த (நன்மையையும்) அம்பிகாபுத்திரர் கேட்கவில்லை. வியாதியை அடைந்தவனுக்குப் பத்தியமான மருந்து ருசிக்காததுபோல இவருக்குச் சொல்லப்படும் அந்த வார்த்தை ருசிக்கவில்லை. அஜாதசத்துருவே! ஃரோத்ரியன்வீட்டில் மிக்கதோஷமுள்ள ஸ்திரீயானவள் எவ்விதம் நல்ல காரியத்தில் [1] சேர்க்கப்படமாட்டாளோ அவ்விதம் திருதராஷ்டிரர் நல்வழியில் திருப்பப்படக் கூடியவராயில்லை. அறுபதுவயதான பதியானவன் இளம்பருவமுள்ள ஸ்திரீக்கு ருசியாததுபோலத் திருதராஷ்டிரருக்கு (என் வார்த்தை) ருசிக்கவில்லை. இது நிச்சயம். அரசனே! கௌரவர்களுக்கு நாசமானது நிச்சயம். திருதராஷ்டிரர் க்ஷேமத்தை [2] ஆலோசியார். தாமரை இலையில் விடப்பட்ட ஜலம்போல இவரிடத்தில் சொல்லப்பட்ட ஹிதமும் [3] தங்காது. பிறகு, திருதராஷ்டிரர் சினங்கொண்டு, 'எவ்விடத்தில் உனக்கு ஃரத்தையோ அங்கே போய்விடு; நான் இப்பூமியையோ பட்டணத்தையோ ஆளுவதற்கு உன்னை ஸகாயமாகத் திரும்பவும் விரும்பேன்' என்று என்னைப் பார்த்துச் சொன்னார். நரேந்திரனே! திருதராஷ்டிரராஜரால் விடப்பட்ட அப்படிப்பட்ட நான் உனக்கு உபதேசிக்க வந்தேன். ஸபையில் எது என்னால் சொல்லப்பட்டதோ அது முழுமையையும், திரும்பவும் எதைச் சொல்லப்போகின்றேனோ அஃதனைத்தையும், உறுதிப்படுத்திக்கொள்ளு. பகைவர்களால் கடுமையான துன்பங்களுடன் சேர்க்கப்பட்ட எவன் சிறுநெருப்பை விருத்திபண்ணுகிறவன் போலப் பொறுமையை அடைந்து காலத்தை எதிர்பார்க்கிறானோ புத்திமானான அவன் ஒருவனாகவே பூமியை அனுபவிக்கின்றான். எவனுடைய தனமானது துணைவர்களுக்குப் பொதுவானதோ அவனுடைய துணைவர்கள் அவனுடைய துக்கத்தில் பாகத்தை அடைவார்கள். துணைவர்களைச் சேர்ப்பதில் இது தக்க உபாயம். துணைவர்கள் கிடைத்தால் பூமி கிடைக்கும் என்கிறார்கள். பாண்டவர்களே! உபயோக

---

1 வேறுபாடம். 2 'ந பரைதி' என்பது மூலம்; 'ந பராம்ருசதி' என்பது பழையவுரை; அதற்கு, 'ஆலோசிக்கவில்லை' என்பது பொருள். 3 'திஷ்டேத' என்பது மூலம்.

மற்ற வார்த்தையல்லாத ஸத்யமே சிறந்தது. ஒரே விதமான உணவைத் துணைவர்களுடன் சேர்ந்து உண்ணவேண்டும். தான் துணைவர்களுக்கு முன் முதன்மை வகிப்பதிலிருந்து தவறக்கூடாது. இவ்விதச் செய்கையுள்ளவன் விருத்தியை அடைகின்றான்' என்றார். யுதிஷ்டிரர், 'எவ்விதம் சொல்லுகின்றீர்களோ அவ்விதமே மேலான புத்தியை அடைந்து தவறுதலில்லாமல்செய்கின்றேன். தேசகாலங்களுக்கு ஏற்றவாறு மற்றும் எது உண்டோ அதனைச் சொல்ல வேண்டும்; அது முழுதையும் செய்கின்றேன்' என்றார்.

ஆறுவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் பிரிவால் வருந்திய திருதராஷ்டிரன் அவரை அழைத்துவர ஸஞ்சயனை அனுப்பியதும், ஸஞ்சயனாலழைக்கப்பட்ட விதுரர் திருதராஷ்டிரனிடம் வந்ததும்.)

அரசரே! விதுரரானவர் பாண்டவர்களிருந்த ஆஸ்ரமத்தை அடைந்தவுடன், மிக்க புத்திமானான திருதராஷ்டிரன் மனக்கவலையுற்றுத் தாபத்தை அடைந்தான். ஸந்தியிலும் சண்டையிலும் (நீதியை யறிந்திருப்பதால்) ஏற்பட்ட விதுரருடைய திறமையையும் வருங்காலத்தில் பாண்டவர்களுக்குண்டாகும் மேலான பெருமையையும் நினைத்துக்கொண்டு மிகவும் தாபத்தை அடைந்தான். அவன் ஸபையின் வாயிலில் வந்து விதுரரின் [1] நினைவால் மயக்கங்கொண்டு ராஜஸ்ரேஷ்டர்களுக்கு எதிரில் பிரஜ்ஞையற்றுப் பூமியில் விழுந்தான். அவ்வரசன் சிலநேரத்தில் ப்ரஜ்ஞை அடைந்து தரையிலிருந்து எழுந்து சமீபத்திலிருக்கும் ஸஞ்சயனை நோக்கி வார்த்தை சொன்னான். 'என் தம்பியானவன் உபகாரத்தை எதிர்பாராது நன்மை செய்பவன்; நேரில்வந்த வேறு தர்மம் போன்றவன்; அவனை நினைத்து இப்பொழுது என் மனமானது மிகவும் வெடிக்கிறதுபோலிருக்கின்றது. தர்மத்தை யறிந்தவனும் என் பிராதாவுமான அவனைச் சீக்கிரம் அழைத்துவா' என்றான். இவ்விதம் சொல்லி அவ்வரசன் தீனமாக அழுதான். அரசன் பச்சாத்தாபத்தால் வாட்டப்பட்டவனாகி, விதுரரை நினைத்துக்கொண்டு மோகத்தையடைந்து, பிராதாவினிடத்தில் சிநேகத்தால் ஸஞ்

1 'ஸ்மார' என்பது மூலம்; 'பகை' என்பது பழையவுரை.

சயனை நோக்கிப் பின்வரும் வாக்கியத்தைச் சொன்னான். 'ஸஞ்சயனே! போ. பாவியான என்னால் சினங்கொண்டு துரத்தப்பட்ட என் ப்ராதாவான விதுரன் ஜீவித்திருக்கிறானா என்று தெரிந்துகொள். மிகவும் கற்றறிந்தவனும் அளவற்ற புத்தியுள்ளவனுமான என் பிராதாவினால் எனக்கு மிகச் சிறிதான ஓர் அப்பிரியமும் முன்புசெய்யப்பட்டதில்லை. அறிவிற் சிறந்த ஸஞ்சயனே! மேலான புத்தியுள்ள அவன் என்னிடமிருந்து அப்ரியத்தை அடைந்து எவ்விதம் உயிரை விடாமலிருப்பன்? போ; அவனை அழைத்துவா' என்றான். அப்பொழுது ஸஞ்சயன் அவ்வரசனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு அவனைக் கொண்டாடி, 'அப்படியே' என்று சொல்லிக் காம்யக வனத்தைக் குறித்து வேகமாகப் புறப்பட்டான். பிறகு, அவன் எங்குப் பாண்டவர்கள் (இருக்கின்றார்களோ) அந்த வனத்தை விரைவில் அடைந்து, மான் தோலை உடுத்துக்கொண்டிருக்கும் யுதிஷ்டிரரைப் பார்த்தான். ஆயிரக் கணக்கான பிராம்மணர்களுடனும் விதுரருடனும் உட்கார்ந்திருப்பவரும் தம்பிகளால் நான்கு பக்கத்திலும் காக்கப்பட்டவரும் தேவதைகளுடன்கூடிய இந்திரன் போன்றவருமான யுதிஷ்டிரரை ஸஞ்சயன் சமீபத்தில் சென்று வணங்கினான். பீமனும் அர்ஜுனனும் இரட்டையர்களும் (அப்பொழுது) அவனால் செய்யப்பட்ட மரியாதையைப் பெற்றுக்கொண்டார்கள். அரசரால்க்ஷேமம் விசாரிக்கப்பட்டவனும் ஸுகமாகஉட்கார்ந்தவனுமான ஸஞ்சயன், தன்வரவின் காரணத்தைப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினான். 'ஓ! விதுரரே! அம்பிகாபுத்திரரான திருதராஷ்டிர ராஜர் உம்மை நினைக்கின்றார். நீர் சீக்கிரம் சென்று அவரைப் பாரும். அரசரைப் பிழைப்பியும். ஸாதுக்களுள் சிறந்தவரே! குருவம்சத்திலுதித்தவர்களும் ஆண்மையிற் சிறந்தவர்களுமான பாண்டவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு ஸிம்மமான திருதராஷ்டிரருடைய கட்டளைப்படி போகவேண்டும்' என்றான்.

இவ்விதம் சொல்லக்கேட்டவரும் புத்திமானும் உறவினர்களிடத்தில் அன்புள்ளவருமான விதுரர் யுதிஷ்டிரரின் அனுமதியின் மேல் திரும்பவும் ஹஸ்தினபுரத்தை அடைந்தார். மிக்க சக்திபொருந்தியவனும் அம்பிகா புத்திரனுமான திருதராஷ்டிரன் அவரைக் குறித்து, 'தர்மத்தை அறிந்தவனே! தோஷமில்லாதவனே! தெய்வச்செயலால் வந்து சேர்ந்தாய்; தெய்வச்செயலால் என்னை நினைக்கின்றாய். பரதஸ்ரேஷ்டனே! நான் இப்பொழுது உன்னிமித்தம்

இரவும்பகலும் தூக்கமில்லாததால் என்தேகத்தைச் சோபையற்ற தாகப் பார்க்கிறேன்' என்றான். அவன் விதுரரை மடியில் வைத்துக்கொண்டு தலையில்மோந்து, 'குற்றமற்றவனே! என்னால் சொல்லப்பட்டதைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்' என்று சொன்னான். விதுரர், 'அரசரே! என்னால் பொறுத்துக்கொள்ளவேபட்டது. எனக்கு நீர் மேலானகுரு. அவ்விதமே நான் உம்மைப் பார்ப்பதற்காகவே சீக்கிரம் வந்தேன். நரஸ்ரேஷ்டரே! தர்ம சிந்தனையுள்ள மனிதர்கள் கஷ்டப்படுகிறவர்களிடம் தயையுள்ளவர்களாக இருக்கின்றார்களல்லவா? அரசரே! இந்த விஷயத்தில் ஆலோசனை வேண்டாம். எனக்கு இந்தப் பாண்டுபுத்திரர்கள் எவ்விதமோ, அவ்விதமே உமது புத்திரர்களும். இப்பொழுது கஷ்டத்தை அடைந்தார்களென்று என்னுடைய புத்தியானது அவர்களைக் குறித்துச் செல்லுகிறது' என்றார். மிக்க காந்தியுள்ளவர்களும் பிராதாக்களுமான விதுரரும் திருதராஷ்டிரரும் இவ்வாறு ஒருவருக்கொருவர் ஸமாதானம் செய்துகொண்டு மிகுந்த ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

ஏழாவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் திரும்பிவரக்கண்ட துரியோதனன் வருந்திக் கர்ணன் முதலியோருடன் ஆலோசித்துப் பாண்டவர்களைக் கொல்லப் புறப்பட்டதும், வியாஸர் வந்து தடுத்ததும்.)

கெட்ட புத்தியுள்ளவனும் திருதராஷ்டிரபுத்திரனுமான துர்யோதனன் விதுரர் வந்ததாகவும், திருதராஷ்டிரனால் ஸமாதானம் செய்யப்பட்டதாகவும் கேட்டு மிக்க மனவருத்தமடைந்தான். அவ்வரசன் சகுனியையும் கர்ண துச்சாஸனர்களையும் வருவித்து, அறியாமையாலுண்டான மயக்கத்தையடைந்து வார்த்தை சொல்லலானான்: 'பாண்டவர்களுக்கு ஸுஹ்ருத்தும் நன்மையில் பற்றுள்ளவரும் வித்வானும் திருதராஷ்டிரருக்குப் பிடித்த மந்திரியுமான இந்த விதுரர் திரும்பி வந்துவிட்டார். விதுரர் பாண்டவர்களை வருவிக்கும் விஷயத்தில் இவருடைய புத்தியைத் திரும்பவும் வசப்படுத்திக்கொள்வதற்குள் எனக்கு நன்மையானதை ஆலோசனை

செய்யுங்கள். பிறகு, எவ்விதமாவது திரும்பவும் இங்கு வந்த பாண்டவர்களை நான் பார்ப்பேனாகில், ஒன்றையும் வேண்டாதவனும் உயிரற்றவனுமாகி நாசமடைவேன். விஷம் குடித்தலையோ தூக்குப்போட்டுக் கொள்ளுதலையோ சஸ்திரம் பிரயோகித்துக்கொள்ளுதலையோ தீயில் குதிப்பதையோ செய்வேன். திரும்பவும் ஐஸ்வரியத்தை யடைந்த அவர்களைப் பார்க்க இங்கு விரும்பேனன்றோ?' என்றான்.

சகுனி,'ஓ! அரசனே! ஏன் அறியாமையை அடைந்தாய்? அவர்கள் பிரதிஜ்ஞைசெய்துகொண்டு போனார்கள். (அவர்கள் திரும்பி வரமாட்டார்கள்.) இது இவ்விதமாகாது. பரதஸ்ரேஷ்டனே! எல்லாப் பாண்டவர்களும் ஸத்யத்தில் இருப்பவர்களாதலால் உன் பிதாவின் வார்த்தையை ஒருபொழுதும் அங்கீகரிக்கமாட்டார்கள். அல்லது, அவர்கள் யாவரும் அங்கீகரித்தாலும் பிரதிஜ்ஞையைத் தள்ளித் திரும்பவும் பட்டணத்தையடைந்தாலும் நம்முள் (அப்படி வந்தது தக்கதா தகாததா என்னும்) ஆலோசனை வரும். எல்லாரும் அரசரின் இஷ்டத்தை அனுஸரித்தவர்களும் நன்கு மறைக்கப்பட்டவர்களும் பாண்டவர்களின் இடைவெளியை வெகுவாகப் பார்ப்பவர்களுமாகி மத்தியஸ்தர்களாயிருப்போம்' என்றான்.

துச்சாஸனன், 'மஹா புத்திமானான அம்மானே! இது நீ எவ்விதம் சொல்லுகின்றையோ அவ்விதமே. எப்பொழுதும் நீ பேசும்போது உன்புத்தி எனக்கு மிகவும் பிடிக்கின்றது' என்றான். கர்ணன், 'ஓ துரியோதனராஜனே! எல்லாரும் உன்னிஷ்டத்தை எதிர்பார்க்கின்றோம். நாமெல்லோரும் ஒரேபுத்தியாயிருப்பதையும் காண்கின்றேன். அந்தத்தீரர்கள் பிரதிஜ்ஞைசெய்த காலங் கழித்தலைச் செய்யாமல் வரமாட்டார்கள். மோகத்தால் வந்தால் திரும்பவும் அவர்களைச் சூதினால் ஜயித்துவிடு' என்றான்.

அப்பொழுது, இவ்விதம் கர்ணன் சொல்லியதைக்கேட்ட அந்தத் துரியோதனராஜன்; மனத்தில் அதிக ஸந்தோஷமில்லாதவனாகிச் சீக்கிரம் முகத்தைத் திருப்பிக்கொண்டான். பிறகு, கர்ணன் (துரியோதனன் அபிப்பிராயத்தை) அறிந்து அழகிய கண்களைக் கோபத்தால் பரக்கவிழித்துத் தானே தன் உடம்பை நிமிர்த்துக் கொண்டு மிகவும் கோபங்கொண்டவனாகித் துச்சாஸனனையும் அந்தச் சகுனியையும் (பார்த்துச்) சொல்லத் தொடங்கினான்: 'ஓ! அரசர்களே! எனது இஷ்டம் எதுவோ அதைத் தெரிந்துகொள்ளுங்கள். எல்லாரும் வேந்தனுக்கு விருப்பத்தைச் செய்வோம்.

(அரசரான திருதராஷ்டிரரின்கட்டளைப்படி நடக்கவேண்டியவராதலால்) நாம் என்னசெய்வோம்? சோம்பலின்றி எல்லாரும் இவனுடைய பிரியத்திலிருக்கச் சக்தியற்றவர்களாயிருக்கிறோம். நாம் ஒன்றுசேர்ந்து சஸ்திரங்களை எடுத்துக்கொண்டும் கவசம் பூண்டு கொண்டும் ரதத்திலேறிக்கொண்டும், வனவாஸம் செய்யும் பாண்டவர்களைக் கொல்லச் செல்வோம். அவர்கள் யாவரும் அறியப் படாதகதியை அடைந்து நாசத்தை அடைந்தவுடன், திருதராஷ்டிர புத்திரர்களும் அவ்வாறே நாமும் கலகமற்றவர்களாவோம். (அவர்கள்) கஷ்டத்தை அடைந்தவர்களும் சோகத்தில் முழுகினவர்களும் சினேகிதரற்றவர்களுமாயிருக்கையிலேயே செல்வோம்; தாமதம் வேண்டாம்' என்றான். அப்பொழுது, கர்ணனது அவ்வார்த்தையைக் கேட்டு யாவரும் மனத்தில் களிப்படைந்து அவனை அடிக்கடி புகழ்ந்துகொண்டு சொன்னார்கள். இவ்விதம் சொல்லி யாவரும் தனித்தனி ரதங்களுடன் யுத்தஸன்னத்தர்களாகி ஒன்று சேர்ந்து பாண்டவர்களைக்கொல்ல நிச்சயம்செய்துகொண்டு புறப்பட்டார்கள்.

சுத்தமனமுள்ளவரும் பிரபுவுமான வியாஸர் அவர்கள் எளம்பினதாகத் திவ்யதிருஷ்டியால் அறிந்து (அங்கு) வந்தார். மகிமையுள்ளவரும் உலகத்தில் பூஜிக்கப்பட்டவருமான அவர், அவர்கள் யாவரையும் தடுத்து, பிறகு, உட்கார்ந்திருக்கும் திருதராஷ்டிரனிடம் வேகமாய்வந்து சொல்லலுற்றார்.

எட்டாவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம் (தொடர்ச்சி.)

(வியாஸர், பாண்டவரைப் பகைத்தலால் தீமை விளையுமென்பதையும் அவர்களுடன் ஸமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்பதையும் திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது.)

வியாஸர், 'மஹா புத்திமானான திருதராஷ்டிரனே! என் வார்த்தையை அறி. குருவம்சத்திலுதித்த எல்லாருக்கும் மேலான ஹிதத்தை உன்னை நோக்கிச் சொல்லுகிறேன். தோள்வலிமையுள்ளவனே! துரியோதனன் முதலியோர்களால் கபடமாய் ஜயிக்கப்பட்டு யாதுகாரணம்பற்றிப் பாண்டவர்கள் வனம் சென்றார்

களோ அது எனக்குப் பிரியமில்லை. பாரதனே! அவர்கள், கஷ்டங்களை நினைத்துக்கொண்டு, பதின்மூன்றாவது வருஷம் நிறைந்தவுடன், கோபத்தையடைந்து, கௌரவர்களிடத்தில் விஷம் போன்ற பாணத்தை விடப்போகின்றார்கள். ஆகையால், மிக்க மந்தபுத்தியுள்ளவனும் பாவத்தில் மனமுள்ளவனுமான இந்த உனது புத்திரன் எப்பொழுதும் மிக்க கோபங்கொண்டு ராஜ்யத்திற்காகப் பாண்டவர்களை ஏன் கொல்ல விரும்புகின்றான்? இந்த மூடன் நன்கு தடுக்கப்படவேண்டும். உன்னுடைய புத்திரன் ஸமாதானத்தை அடையட்டும். காட்டிலிருக்கும் அவர்களைக் கொல்லவிரும்பினால் இவன் உயிரை இழப்பான். புத்திமானான விதுரனும் பீஷ்மரும் நாமும் கிருபரும் துரோணரும் எவ்விதம் சொல்லுகின்றோமோ அவ்விதம் நன்கு செய்யப்படவேண்டும். அரசனே! மிக்க அறிவுள்ளவனே! தன் ஜனங்களோடு சண்டை செய்வது நிந்திக்கப்படுகிறதல்லவா? அதர்மத்தையும் அகீர்த்தியையும் கொடுக்கும் காரியத்தைச்செய்யாதே. பாரத! அரசனே! பாண்டவர்கள்விஷயத்தில் இவனுடைய விசாரபூர்வமான புத்தியானது உபேக்ஷிக்கப்பட்டால் பெரிய தீங்கைச் செய்யும். அரசனே! அல்லது, மிக்க மந்தபுத்தியுள்ள இந்த உனது புத்திரன் ஒருவனாகவே, சகாயமில்லாதவனாகக் காட்டையடைந்து பாண்டவர்களுடன் சேரட்டும். ஆண்மையிற் சிறந்தவனே! பிறகு, உனது புத்திரனுக்குப் பாண்டவர்களுடன் சேர்க்கையாலுண்டான சினேகம் நேருமானால் நீ கார்யஸித்தி பெற்றவனாவாய். ஆனாலும், இது இவ்விதம் நேராது. மஹாராஜனே! ஒருவனுக்கு எந்தக்குணம் உடன் பிறக்கின்றதோ அது உயிருடனிருக்கிறவரையில் விலகாது என்று கேட்கப்படுகின்றது. பீஷ்மரும் நீயும் விதுரனும் துரோணரும் எப்படி நினைக்கிறீர்கள்? இவ்விஷயத்தில் எது சிறந்ததோ (அது) முதலில் செய்யத்தக்கது; (இல்லாவிடில்) கருதிய பயன் கைகூடாது' என்றார்.

ஒன்பதாவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(வியாஸர் மக்களிடத்தன்பு விடற்கரிதென்பதற்கு உதாரண மாகக் காமதேனுவின் கதையைக் கூறித் துரியோ தனுதியர் உயிர்வாழ்தல் பாண்டவர்களின் ஸமாதானத்தைப் பொறுத்துள்ள தென்றது.)

திருதராஷ்டிரன், 'பூஜ்யரான முனிவரே! நானும் இந்தச் சூதாட்டத்தில் நடந்ததைச் சம்மதிக்கவில்லை. ஆகையால், தெய்வத்தால் இழுத்து அதற்கு அனுமதிக்கும்படி செய்விக்கப்பட்டேனென்று எண்ணுகின்றேன். இந்தச் சூதைப் பீஷ்மர் விரும்பவில்லை; துரோணரும் விரும்பவில்லை. விதுரனும் விரும்பவில்லை. காந்தாரியாலும் இச்சிக்கப்படவில்லை. அறியாமையால் செய்யப்பட்டது. விரதங்களைச்செய்த பகவானே! துரியோதனனை அறிவற்றவனென்று அறிந்திருந்தும் புத்திரசினேகத்தால் விடுவதற்குச் சக்தியற்றவனுயிருக்கின்றேன்' என்றான். வியாஸர், 'விசித்திரவீர்யன் புத்திரனுன அரசனே! நீ சொல்வது உண்மையே. [1] புத்திரனே மேலென்றும் புத்திரனைக்காட்டிலும் மேலில்லையென்றும் நன்கு அறிவோம். பரிபூர்ணமான அர்த்தங்களோடுகூடினதானுலும் மற்றதைப் புத்திரனைக்காட்டிலும் மேலாக நினைக்கவில்லையென்று இந்திரனும் காமதேனுவால் கண்ணீர் விட்டுக்கொண்டு போதிக்கப்பட்டான். ஜனங்களின் பதியே! இவ்விஷயத்தில் இந்திரனுக்கும் காமதேனுவுக்கும் நடந்த ஸம்வாதரூபமானதும் சிறந்ததுமான பெரிய கதையை உனக்குச் சொல்லுகின்றேன்.

அரசனே! முற்காலத்தில் கோக்களுக்கு மாதாவும் ஸ்வர்க்கத்திலுள்ளதுமான காமதேனு அழுதது. இந்திரன் அதைப் பார்த்து இரக்கமுற்றான். அவன், 'சுபமானவளே! ஏன் இவ்விதம் அழு

---

1 இந்த வாக்யத்தில் 'பரம்' என்னும்சொல் இரண்டுமுறைவருகிறது. முதலிலுள்ளதற்கு 'வேறு, அல்லது, பகைவன்' என்று பொருள்கொண்டு, 'புத்ரனே பகைவன்என்பதை நன்குஅறிவோம். அதாவது, கெட்டபுத்ரனுயிருந்தால் அவனே பகையாகிறான்' என்றும், இரண்டாவதற்கு, 'நல்லபுத்திரனுயிருந்தால் அதைக்காட்டிலும் சிறந்தபொருள் இல்லை' என்றும் பழையஉரை கூறுகிறது.

கிருய்? தேவதைகளுக்கும் மனிதர்களுக்கும் கோக்களுக்கும் க்ஷேமமா? நீ இப்படி அழுகிறது அல்ப நிமித்தமாக இராது' என்ருன். ஸுரபி, 'தேவராஜனே! உங்களுக்குக் கஷ்டமொன்றும் காணப்படவில்லை. நானே புத்திரனைக்குறித்துத் துக்கிக்கிறேன். இந்திரனே! அதனுல் அழுகின்றேன். ஸுராதிபனே! பலமற்றதும் தாற்றுக்கோலால் குத்தப்படுகின்றதும் கலப்பையால் பீடிக்கப்பட்டதும் (ஆகாரத்தில்) ஆசையுள்ளதும் கஷ்டப்படுகின்றதும் துன்புறுத்தப்படுகின்றதுமான இந்த என் சின்னப் புத்திரனைப் பார். ஸுராதிபனே! தேவேந்திரனே! ஹிம்ஸிக்கப்படுகின்றதும் மிக்க தளர்ச்சியை அடைந்ததுமான இதைப் பார்த்து இரக்கமுள்ளவளாயினேன். என் மனமும் மிகவும் நடுங்குகின்றது. அவைகளில் பலத்துடன்கூடின ஒன்று அதிக பாரத்தைச் சுமக்கின்றது. மற்ருென்று பலமும் ப்ராணனும் குறைந்ததும் இளைத்ததும் நரம்புகளடர்ந்ததுமாகக் கஷ்டத்துடன் பாரத்தைச் சுமக்கின்றது. அதைக் குறித்துத் துக்கிக்கின்றேன். இந்திரனே! அடிக்கப்படுகின்றதும் தாற்ருல் அடிக்கடி குத்தப்படுகின்றதுமாகி அந்தப் பாரத்தைச் சுமக்கச் சக்தியற்றிருக்கின்றது. ஓ! இந்திரனே! பார். ஆனதுபற்றி யான் அதன் சோகத்தால் பீடிக்கப்பட்டவளும் மிகவும் துக்கத்தையடைந்தவளும்கண்களினுல் நீரைப்பெருக்குபவளும் இரக்கமுள்ளவளுமாகி அழுகின்றேன்' என்றது இந்திரன், 'அழகானவளே! உன் ஆயிரம் புத்திரர்கள் கஷ்டப்படுத்தப்படும்போது இங்கு ஒரு புத்திரன் கஷ்டப்படுத்தப்படுகிறதென்று ஏன் இரங்குகிருய்?' என்ருன். காமதேனு, 'ஆயிரக் கணக்கான எல்லாப் புத்திரர்களும் எனக்குச் சமமே. இந்திரனே! ஆனுல், கஷ்டப்படும் புத்திரன்விஷயத்தில் அதிக இரக்கம் (உண்டாகின்றது)' என்றது. கௌரவனே! (அப்பொழுது) இந்திரன் சுரபியின் அந்த வார்த்தையைக் கேட்டு மிகவும் ஆச்சரியத்தையடைந்து உயிரைக்காட்டிலும் புத்திரனை மேலாக நினைத்தான். பூஜ்யனுன இந்திரன் கிருஷிசெய்கின்றவனுக்கு இடையூற்றை விளைவிக்க வேண்டிச் சீக்கிரம் அவ்விடத்தில் அதிக ஜலத்தைப் பெய்தான். அரசனே! ஆகையால், சுரபி எவ்விதம் சொல்லிற்ருே அவ்விதம் உனக்கு எல்லாப் புத்திரர்களிடத்திலும் கிருபை பொதுவாயும், கஷ்டப்படுகிறவர்களிடம் அதிகமாயும் இருக்கவேண்டும். புத்திரனே! எனக்குப் பாண்டு எவ்விதம் புத்திரனே அவ்விதமே நீயும் இருக்கிருய். மஹா புத்திமானுன விதுரனும் (அவ்விதமே). நான்

இதனைச் சிநேகத்தால் சொன்னேன். பாரதனே! வெகுகாலமாக உனக்கு நூற்றொரு பிள்ளைகள் இருக்கின்றனர். பாண்டுவுக்கு ஐந்து பேர்களே காணப்படுகின்றார்கள். அவர்களும் கபடமில்லாதவர்கள்; மிகவும் துக்கமடைந்திருக்கிறார்கள். 'எவ்விதம் ஜீவிப்பார்கள்? எவ்விதம் விருத்தியடைவார்கள்?' என்று கஷ்டப்படும் பாண்டவர்கள் விஷயத்தில் என்மனம் மிக்க தாபத்தை அடைகின்றது. பார்த்திவனே! இங்குக் கௌரவர்கள் ஜீவிக்க விரும்புவையானால் உன்னுடைய புத்திரனான துர்யோதனன் பாண்டவர்களுடன் ஸமாதானத்தை அடையவேண்டும்' என்றார்.

பத்தாவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரனால் வேண்டப்பட்ட வியாஸர், மைத்ரேயர் துரியோதனனுக்கு உபதேசிப்பரென்று சொல்லிச் சென்றதும், துரியோதனன் மைத்ரேயர் சொல்லை அனுதாரணை செய்து தொடையைத் தட்டியதும், மைத்ரேயர் அவனைச் சபித்ததும்.)

திருதராஷ்டிரன், 'அறிவிற் சிறந்த முனிவரே! என்னை நோக்கிச் சொல்லிய இது இவ்விதமுள்ளதே. நானும் அறிகிறேன். இந்த எல்லா அரசர்களும் அறிகிறார்கள். ஓ! முனிவரே! நீங்கள் எதைக் கௌரவர்களுக்கு நன்மையாகவும் நன்கு ஸுகத்தையுண்டு பண்ணுவதாகவும் நினைக்கிறீர்களோ அதையே விதுரனும் பீஷ்மரும் துரோணரும் என்னிடம் சொல்லுகிறார்கள். நான் அனுக்கிரகிக்கத் தகுந்தவனானாலும் குருவம்சத்திலுதித்தவர்களிடத்தில் உங்களுக்குத் தயையிருக்குமானாலும் கெட்ட எண்ணமுள்ள என் புத்திரனான துர்யோதனனைக்குறித்து உபதேசிக்கக் கடவீர்' என்றான். வியாஸர், 'அரசனே! பூஜ்யரான இந்த மைத்ரேய ரிஷியானவர், ப்ராதாக்களான பாண்டவர்களைப் பார்த்துவிட்டு நம்மைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தால் இங்கேயே வருகின்றார். அரசனே! இந்தப் பெரிய ரிஷியானவர் இந்தக் குலத்தின் ஸமாதானத்திற்காக உனது புத்திரனான துர்யோதனனுக்கு நியாயம் தவறாது உபதேசிப்பார். கௌரவனே! இவர் எதைச் சொல்லுவாரோ அது சந்தேகமின்றிச் செய்யத்தக்கது. காரியத்தைச் செய்யாவிடில் கோபத்

துடன் உனது புத்திரனைச் சபிப்பார்' என்றார். இவ்விதம் சொல்லி விட்டு வியாஸர் சென்றனர். மைத்திரேயர் காணப்பட்டார். அவரைப் புத்திரனுடன் கூடின அரசன் மரியாதையுடன் வரவேற்றான். அர்க்கிய முதலிய எல்லாக்காரியங்களையும் செய்து களையாறின முனிஸ்ரேஷ்டரைப் பார்த்து, அம்பிகா புத்திரனான திருதராஷ்டிர ராஜன் வணக்கத்துடன் சொல்லலானான். 'ஓ! பகவானே! உமக்கு நல்வரவா? வீரர்களும் ப்ராதாக்களுமான ஐந்து பாண்டவர்களும் குருஜாங்கலத்தில் ஸௌக்கியமாயிருக்கின்றார்களா? பரதஸ்ரேஷ்டர்கள் பிரதிஜ்ஞைப்படி இருக்க விரும்புகின்றார்களா? கௌரவர்களின் ஸஹோதர ஸ்நேகமானது குறைவற்றதாக இருக்குமா?' என்றான்.

மைத்திரேயர், 'தீர்த்தயாத்திரைக்காக ஸஞ்சரித்துக்கொண்டு குருஜாங்கலத்தை அடைந்தேன். காம்யக வனத்தில் தற்செயலாகத் தர்மபுத்திரரைப் பார்த்தேன். பிரபுவே! ஜடையையும் மான் தோலையும் தரித்துக்கொண்டவரும் தபோ வனத்தில் வஸிப்பவரும் சிறந்தகுணமுள்ளவருமான அவரைப் பார்ப்பதற்காக முனிவர்கள் வந்தார்கள். மஹாராஜரே! அவ்விடத்தில் உமது புத்திரர்களுக்குச் சண்டைக்குக் காரணமானதும் சூதாட்ட உருவமாக வந்ததும் மஹா பயங்கரமுமான அநியாயத்தையும் கேட்டேன். பிரபுவே! அதனால் கௌரவர்களின் நன்மைக்காக நான் உம்மை வந்தடைந்தேன். உம்மிடம் சினேகமும் பிரீதியும் எனக்கு எப்பொழுதும் அதிகமன்றோ? அரசரே! உமது புத்திரர்கள் எவ்விதமேனும் ஒருவருக்கொருவர் விரோதப்படுகின்றார்களென்பதாகிய இது, நீரும் பீஷ்மரும் உயிருடனிருக்கும்போது, யோக்கியமன்று. அரசரே! நீர் களத்தில் தாமணிக்கயிற்றின் நடு முளைபோன்றவர். தண்டிக்கவும் அனுக்கிரகிக்கவும் தக்கவர். வரப்போகிற பயங்கரமான அநியாயத்தை ஏன் உபேக்ஷிக்கிறீர்? ஓ! குருநந்தனரே! திருடர்களின் நடைபோல் ஸபையில் நடந்த நடையால் ரிஷிக்கூட்டத்தில் விளங்குகிறீரில்லை' என்றார். பூஜ்யரான மைத்திரேய ரிஷியானவர், அங்கிருந்து திரும்பி, பொறுமைகொண்ட துரியோதன ராஜனை நோக்கி, இனிய சொல்லால் சொல்ல ஆரம்பித்தார். 'பெரிய தோளுள்ளவனும் பேசுபவர்களுள் சிறந்தவனும் பெருஞ்செல்வமுள்ளவனுமான துரியோதனா! உனக்கு நன்மையான வார்த்தையைச் சொல்லுகிறேன். அதனை என்னிடமிருந்து கேள். நரஸ்ரேஷ்டனான ராஜனே! பாண்டவர்களை மோசம்

செய்யாதே. உனக்கும் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் உலகத்திற்கும் நன்மையைச் செய்வாயாக. ராத்திரியில் கிர்மீர னென்னும் பெயர் பூண்டவனும் பயங்கரமான சரீரமுள்ளவனு மான அரக்கன் அப்பாண்டவர்களை அடைந்து மலைபோல அசை வற்று வழியை மறைத்துக்கொண்டு நின்றான். யுத்தத்தில் புகழ் பெற்றவனும் பலமுள்ளவர்களுள் சிறந்தவனுமான பீமன் ஒரு புலி முயலைக் கொல்வது போல், ஒரு மிருகத்தைக் கொல்லும் மாதிரி யாக, பலத்தால் அவனைக் கொன்றுவிட்டான். அரசனே! திக்விஜ யத்தில், பீமனால், பெரிய வில்லுள்ளவனும் பதினாயிரம்யானை பல முள்ளவனுமான ஜராஸந்தன் எவ்விதம் யுத்தத்தில் நாசம் செய்யப் பட்டான்? பார். கிருஷ்ணனும் பந்து; எல்லாத் துருபத புத்தி ரர்களும் மைத்துனர்கள். நரச்ரேஷ்டர்களான அவர்கள் யாவரும் சூரர்கள்; பயங்கரமான யுத்தம் செய்யும் தன்மையுமுள்ளவர்கள்; யாவரும் பதினாயிரம்யானையின் பலமுள்ளவர்கள்; வஜ்ரம்போன்ற சரீரமுள்ளவர்கள்; உறுதியுள்ளவர்கள்; உண்மை பேசுதலையே விரத மாகக் கொண்டவர்கள். யாவரும் தாம் சூரரென்னும் அபிமான முள்ளவர்கள். இஷ்டப்படி உருவத்தை யெடுக்கக்கூடியவர்களும் தேவசத்துருக்களுமான ஹிடிம்பன் பகன் முதலிய ராக்ஷஸர்களை யும் கிர்மீரனென்னும் ராக்ஷஸனையும் கொன்றவர்கள். ஜரையும் மரணமுமுள்ள எந்த மனிதன் யுத்தத்தில் அவர்களை எதிர்த்து நிற் பன்? பரதச்ரேஷ்டனே! உனக்குப் பாண்டவர்களுடன் ஸமா தானமே உண்டாகட்டும். அரசனே! என் வார்த்தையின்படி செய். யமனுக்கு வசமாகாதே' என்றார். அரசரே! அந்த மைத்திரேயர் இவ்விதம் சொல்லும்போது அவன் யானைத் துதிக்கை போன்ற (தனது) தொடையைக் கையால் தட்டினான். கெட்ட புத்தியுள்ள அவன் புன்னகை செய்து காலால் பூமியைக் கீறிக்கொண்டு ஒன்றும் சொல்லாமல் சிறிது தலைகுனிந்து நின்றான். அரசரே! கேட்க விருப்பமில்லாதவனும் பூமியைக் கீறுகின்றவனுமான அந்தத் துரி யோதனனைப் பார்த்து மைத்திரேயருக்குக் கோபம் உண்டாயிற்று. கோபத்தை அடைந்த முனிச்ரேஷ்டரான அந்த மைத்ரேயர் தெய் வத்தால் ஏவப்பட்டு அவனைச் சபிக்க எண்ணங்கொண்டார். பிறகு, அந்த மைத்ரேயர் கோபத்தால் கண் சிவந்து ஜலத்தைத் தொட்டுக் கெட்ட எண்ணமுள்ள அந்தத் துரியோதனனைச் சபிக்க லானார். 'என்னை மதியாமல் என் சொற்படி செய்ய விரும்பாமையால் இந்த அதிக கர்வத்தின் பலனை உடனே அடைவாய். பலமுள்ள

பீமன் கதையின் அடிகளால் உன் தொடையைப் பிளந்து உன்னைக் கொல்லுவதற்கேற்ற பெரிய யுத்தம் உண்டாகும்' என்றார்.

இவ்விதம் வார்த்தை சொல்லப்பட்டவுடன், பூபதியான திருதராஷ்டிரன், 'இது இவ்விதம் உண்டாகவேண்டாம்' என்று முனிவரைப் பிரார்த்தித்தான். மைத்திரேயர், 'அரசரே! உமது புத்திரன் ஸமாதானத்தை அடைந்தால் அப்பொழுது சாபத்தின் பயன் உண்டாகாது. ஐயா! இல்லாவிடில் உண்டாகும்' என்றார். அப்பொழுது துரியோதனனுக்குப் பிதாவான ராஜச்ரேஷ்டன், மனக்குழப்பமடைந்து, 'கிர்மீரன் பீமனால் எவ்விதம் கொல்லப்பட்டான்?' என்று மைத்திரேயரை வினவினான். மைத்திரேயர் 'நான்சொல்லேன்; உமக்கோ [1] அஸூயையிருக்கின்றது. உமது புத்திரனோ கேட்க விரும்பவில்லை. நான் போனபிறகு, இந்த விதுரர் யாவற்றையும் உமக்குச் சொல்லுவர்' என்றார். மைத்திரேயர் இவ்விதம் சொல்லிவிட்டு வந்தபடியே திரும்பிச்சென்றார். கிர்மீரவதத்தால் கவலையையடைந்த துரியோதனன் பயத்தைஅடைந்தான்.

பதினோராவது அத்யாயம்.

கிர்மீரவதபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் கிர்மீரவதத்தைத் திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது.)

திருதராஷ்டிரன், 'விதுர! கிர்மீரனுடையவதத்தைக் கேட்க விரும்புகின்றேன். சொல்லவேண்டும். பீமனுக்கு ராக்ஷஸனுடன் எதிர்ப்பு எவ்விதம் உண்டாயிற்று?' என்றான். விதுரர் சொல்லுகிறார்: 'மனிதனால் செய்யமுடியாத செய்கையையுடைய பீமனுடைய இந்தச்செய்கையைச் சொல்லுகிறேன்; கேளும். அவர்களுடன் வார்த்தை சொல்லும்போது, நடுவில், அடிக்கடி என்னால் முன் கேட்கப்பட்டது. ராஜேந்திரரே! சூதினால் ஜயிக்கப்பட்ட பாண்டவர்கள் இங்கிருந்து புறப்பட்டு மூன்றுபகலிரவுகளில் பயங்கரமான பாதி ராத்திரியில் [2]ஜனங்கள் தூங்கும்பொழுது பயங்கரமான செய்கையுள்ளவர்களும் மனிதர்களைத்தின்பவர்களுமான ராக்ஷஸர்களின் சஞ்சாரகாலத்தில் காம்யகமென்னும் அவ்வனத்தை அடை-

---

1 பிறர் குணங்களில் தோஷத்தை வெளியிடுதல்; உத்தியோகபர்வம் 173-ம் பக்கம் குறிப்பிற் காண்க. 2 ஒரு சொல் விடப்பட்டது.

ந்தார்கள். வனத்தில் சஞ்சரிப்பவர்களான எல்லாத் தவசிகளும் ராக்ஷஸபயத்தால் வெகுதூரத்தில் அவ்வனத்தை எப்பொழுதும் விலக்குகின்றார்கள். பாரதரே! அவ்விடத்தில் பாண்டவர்கள் பிரவேசிக்கும்போது பிரகாசிக்கும் கண்ணுள்ளவனும், குருஶ்ரேஷ்டர்கள் எவ்வழியால் செல்லுகின்றார்களோ அவ்வழியை மறைத்துக் கைகளைப் பெரியவைகளாகவும் முகத்தைப் பயங்கரமாகவும்செய்து கொண்டு நிற்கின்றவனும், உதட்டைக்கடித்த தெற்றுப்பல்லுள்ளவனும், சிவந்த கண்ணுள்ளவனும், பிரகாசிக்கின்ற மேல்நோக்கிய தலைமயிருள்ளவனும், சூரியகிரணத்துடனும் மின்னல் கூட்டத்துடனும் கூடியதும் கொக்குக்களுடனும் கூடியதுமான மேகம் போன்றவனும், ராக்ஷஸர்களுக்குரிய மாயையை வெளியிடுகிறவனும், பெரிய முழக்கத்தைச் செய்கின்ற நீருண்ட மேகம்போலச் சப்தங்களைச் செய்பவனும், பயங்கரனுமான ராக்ஷஸன் எரிகொள்ளியுடன் வழியை மறைத்துக்கொண்டுநின்றான். அவனுடைய சப்தத்தினால் பறவைகளும் நீர்ப்பிராணிகளும் ஸ்தலஜந்துக்களும் பயந்து சப்தித்துக்கொண்டு நாற்றிசைகளிலும் [1] ஓடின. அவனது சத்தத்தால் நன்கு ஓட்டம்பிடித்த மான், புலி, எருமை, கரடி (இவைகளால்) கலங்கின அவ்வனமானது கிளம்பிப்போவதுபோலாயிற்று. அவனது தொடைக் காற்றினால் அடிக்கப்பட்டனவும், சிவந்த தளிர்களாகிற கைகளுள்ளனவும் வெகுதூரத்தில் முளைத்தனவுமான கொடிகளும் மரங்களைத் தழுவிக்கொண்டன. பிறகு, அந்த ஸமயத்தில் மிக்க பயங்கரமான காற்று வீசிற்று. அந்தக்காற்றினால் ஆகாயமானது புழுதிகளால் மறைக்கப்பட்டதாகி, நக்ஷத்திரங்கள் மறைந்ததாயிற்று. ஒப்பற்ற சோகாவேசமானது, ஐந்து இந்திரியங்களுக்கும் [2] அறியப்படாததுபோல, பெரிய சத்துருவானவன் ஐந்து பாண்டுபுத்திரர்களுக்கும் [3] அறியப்படாதவனாயினன். அவன் மான்தோலால் போர்த்தப்பட்ட பாண்டவர்களைத் தூரத்தில்பார்த்து அவ்வனத்தின் வாயிலை மைனாகபர்வதம் போல மறைத்துக்கொண்டான். முன் பார்த்திராத அவனைப் பார்த்துக் கமலம்போன்ற கண்ணுள்ள திரௌபதியானவள் பயந்து பயத்தால் கண்களை மூடிக்கொண்டாள். துச்சாஸனனின் கையால் இழுக்கப்பட்டு அவிழ்ந்த கூந்தலுள்ள (அவள்) ஐந்து மலைகளுக்கு

1 'ஸம்பேது:' என்பது மூலம்; 'ஒன்று சேர்ந்தன' என்பது பழைய வுரை. 'துயரம் மிகுந்தபோது இந்திரியங்கள் விஷயங்களை அறியா' என்பது. 3 அறிய முடியாதபடி தோற்றினன் என்பது.

நடுவிலுள்ள நதிபோலக் [1] கலக்கத்தை அடைந்தனள். அப்பொழுது, பஞ்சபாண்டவர்கள், விஷயங்களிற்சென்ற இந்திரியங்கள் ஆசையைப்பற்றி நிற்பதுபோல மயக்கத்தையடைந்த அவளை ஆதரித்தார்கள். தபோவீர்யமுள்ள தௌம்யர், பயங்கரமான காட்சியுடன் கிளம்பினதான அந்த ராக்ஷஸமாயையை, பாண்டவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, நன்றாக ஜபிக்கப்பட்டனவும் ராக்ஷஸர்களை நாசம்செய்கின்றனவுமான அநேக மந்திரங்களால் நாசம் செய்தார். மிக்க வலிமையுள்ளவனும் குரூரனுமான அவன் மாயையற்றவனும், கோபத்தால் நன்கு விழிக்கின்ற கண்களுள்ளவனும் இஷ்டப்படி வடிவத்தை எடுத்துக்கொண்டவனும் யமனுக்கொப்பானவனுமாகக் காணப்பட்டான். பிறகு, விசாலமான அறிவுள்ள யுதிஷ்டிரராஜன் அவனை நோக்கிச் சொல்லத் தொடங்கினான். 'நீ யார்? எவனைச் சார்ந்தவன்? உனக்கு என்ன காரியம் செய்யப்படவேண்டும்? சொல்லலாம்' என்றான். பிறகு, அவ்வரக்கன் தர்மராஜரானயுதிஷ்டிரரைப் பார்த்துச் சொல்லலானான். 'நான் பகனுடைய சகோதரன்; கிர்மீரன் என்று பிரசித்திபெற்றவன்; ஜனமற்ற இக் காம்யகவனத்தில் பயமற்றவனாகி மனிதர்களை யுத்தத்தில் ஜயித்து எப்பொழுதும் ஆகாரமாகச் செய்துகொண்டு வஸிக்கின்றேன். ஆகாரமாக என்சமீபத்தில்வந்த நீங்கள் யார்? உங்கள் யாவரையும் யுத்தத்தில் ஜயித்து அச்சமற்றவனாகச் சாப்பிடுவேன்' என்றான். பாரதரே! தர்மபுத்திரன், கெட்ட எண்ணமுள்ள அவனுடைய அந்த வார்த்தையைக் கேட்ட பிறகு, குலம் பெயர் முதலிய எல்லாவற்றையும் சொல்லத் தொடங்கினான். 'நான் பாண்டு புத்திரனான தர்மராஜன். நீயும் காதால் கேட்டிருக்கலாம். பீமன் அர்ஜுனன் முதலிய எல்லாத் தம்பிமார்களுடனும் ராஜ்யத்தைப் பறிகொடுத்துக் காட்டில் வஸிக்க எண்ணங்கொண்டு அங்கிருந்து உனக்குச் சொந்தமும் பயங்கரமுமான இந்த வனத்தை அடைந்தேன்' என்றான். பயங்கரமான தோற்றமுள்ள கிர்மீரனென்னும் அரக்கன், மிக்க ஆச்சரியத்தை அடைந்து, அவனை நோக்கிச் சொல்லத் தொடங்கினான். 'வெகு காலமாயுள்ள என்னுடைய இந்த மனோரதமானது இப்பொழுது என் அதிருஷ்டத்தினால் சம்பாதித்துக் கொடுக்கப்பட்டது. பீமஸேனனைக் கொல்வதற்கன்றோ எப்பொழுதும் ஆயுதத்தைத் தாங்கிப் பூமி முழுவதும் ஸஞ்சரிக்கின்றேன். நான் (இதுவரை) இவனை அடைந்த

1 'அவர்களுக்கு நடுவில் பதுங்கிக்கொண்டாள்' என்பது கருத்து.

தில்லை. வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டவனும் பிராதாவைக் கொன்றவனுமான அப்படிப்பட்ட இவன் தெய்விகமாக இப்போது கிடைத்துவிட்டான். அரசனே! பகனென்னும் எனது அருமைத் தமையன் வேத்திரகீய வனத்தில் பிராம்மணனெனக் கபட உருவம் தரித்த இவனாலன்றோ வித்தியா பலத்தைக்கொண்டு கொல்லப்பட்டான்? இவனுக்கு இயற்கையான சரீரபலமில்லையன்றோ? முன்னொரு கால், கெட்ட ஸ்வபாவமுள்ள இவனாலே எனக்குப் பிரியமுள்ளவனும் காட்டில் சஞ்சரிப்பவனும் தோழனுமான ஹிடிம்பனும் கொல்லப்பட்டான். அவனது தங்கையும் அபகரிக்கப்பட்டாள். அப்படிப்பட்ட இம்மூடன், சரியானநடுராத்திரியில் எம்முடைய சஞ்சார காலம் வந்தவுடன், என்னுடையதான பிரவேசிக்கமுடியாத இந்த வனத்தையடைந்தான். இப்பொழுது வெகுகாலமாக வளர்ந்துவந்த இவன்விஷயமான அந்த வைரத்தைப் போக்கிக்கொள்ளப் போகிறேன். இவனுடைய அதிகமான இரத்தத்தால் பகனைக்குறித்துத் தர்ப்பணம் செய்யப்போகின்றேன். நான் இப்பொழுது தமையன் விஷயத்திலும் தோழன்விஷயத்திலும் கடனில்லாதவனாகி ராக்ஷஸ கண்டகனைக் கொன்று மேலானசாந்தியை அடையப்போகின்றேன். யுதிஷ்டிரனே! முன் அந்தப் பகனால் பீமஸேனன் விடுபட்டாலும், இப்பொழுது நீ பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, இவனைச் சாப்பிடுகிறேன். இப்பொழுதோ, மிக்கபலமுள்ள பீமனைக்கொன்று அகத்தியர் மஹாஸுரனான வாதாபியைத்தின்று ஜரித்துக்கொண்டதுபோலத் தின்று ஜரிக்கச்செய்கின்றேன்' என்றான்.

இவ்விதம் சொல்லக்கேட்டவனும் ஸத்தியஸந்தனும் தர்மாத்மாவுமானயுதிஷ்டிரன், கோபம்கொண்டு, 'இது நடவாது' என்று ராக்ஷஸனை அதட்டினான். பிறகு, தோள்வலிமையமைந்த பீமன், அப்பொழுது வேகமாக ஒருமரத்தைப்பிடுங்கி, பத்துப்பாகம் நீளமுள்ளதாக முறித்து, இலைகளில்லாததாகச் செய்தான். அதுபோலவே, ஜயசீலனான அர்ஜுனன், அடுத்தநிமிஷத்தில் வஜ்ராயுதத்தை நொறுக்கக்கூடிய வலிமைவாய்ந்த காண்டீவத்தை நாணுடன் கூடினதாகச் செய்தான். பாரதரே! பீமன் அந்த அர்ஜுனனைத் தடுத்து மேகம்போலச் சப்திக்கும் அந்தராக்ஷஸனை எதிர்த்தோடி 'நில்,நில்' என்றுசொன்னான். அப்பொழுது மரத்தை ஆயுதமாகக்கொண்டவனும் பாண்டுபுத்திரனும் பலமுள்ளவனுமான பீமன் அவனை இவ்விதம்சொல்லி, மிக்ககோபங்கொண்டு, ஆடையை இறுக்கிக்கட்டிக் கையினால் கையைப் பிசைந்துகொண்

டும் உதட்டைக் கடித்துக்கொண்டும் வேகமாக அவனை எதிர்த்துச்சென்றான். பிறகு, யமதண்டத்திற்கொப்பான அம்மரத்தை அவன்தலையில், இந்திரன் வஜ்ராயுதத்தை எறிவதுபோல, வேகமாக எறிந்தான். அவ்வரக்கனோ யுத்தத்தில் பரபரப்பில்லாதவனாகக் காணப்பட்டான். பிரகாசிக்கும் இடிக்கொப்பான எரிகொள்ளியையும் விட்டெறிந்தான். யுத்தம்செய்கிறவர்களுள் சிறந்தவனான பீமன், எறியப்பட்ட அந்தக்கொள்ளியை இடக்காலால் தள்ளிவிட்டு, அந்த ராக்ஷஸனைக்குறித்துத் திரும்பவும் ஓடினான். கிர்மீரனும் வேகமாக மரத்தைப் பிடுங்கிக்கொண்டு கோபங்கொண்ட யமன்போல் யுத்தத்தில் பாண்டவனைக்குறித்து எதிர்த்து ஓடினான். மரங்களை நாசமாக்கக்கூடிய அந்த மரயுத்தமானது, முன்காலத்தில் ஸ்திரீயை (அடைய) விரும்பின பிராதாக்களான வாலி சுக்ரீவர்களுக்கு உண்டானதுபோல உண்டாயிற்று. அவர்களுடைய தலையில் விழுந்த மரங்கள் மதங்கொண்ட யானைகளின் தலையில் விழுந்த நீலோத்பல மலரிதழ்கள் எவ்விதமோ அவ்விதம் பலவாறாகச் சிதறின. அந்தப் பெருங்காட்டில் அவர்களின் தலையில் அடிக்கப்பட்டுச் சிதறிக் கிடக்கும் அனேக மரங்கள், இறைக்கப்பட்டுக் கிடக்கும் மரவுரிகள் போல விளங்கின. பரதச்ரேஷ்டரே! ராக்ஷஸ ச்ரேஷ்டனுக்கும் நரச்ரேஷ்டனுக்கும் (அப்பொழுது) ஒரு முகூர்த்தம் அம்மரயுத்தம் நடந்தது. பிறகு, ராக்ஷஸன் கோபங்கொண்டு கற்பாறையைப் பிடுங்கி யுத்தத்தில் நிற்கும் பீமன்மீது எறிந்தான். பீமன் கலக்கத்தை அடைந்தான். ராக்ஷஸன் கற்பாறையினடியால் அறிவற்ற அவனை, ராகுவானவன் கைகளால் கிரணங்களைத் தள்ளிக்கொண்டு சூரியனை நோக்கிச் செல்வதுபோல எதிர்த்து ஓடினான். அவ்விருவர்களும் ஒருவரையொருவர் தழுவி ஒருவரையொருவர் இழுத்து, கொழுத்த எருதுகள்போல விளங்கினார்கள். நகம் தெற்றுப்பல் இவைகளை ஆயுதமாகவுடைய கொழுத்த புலிகளுக்குச் சண்டை நடப்பதுபோல அவ்விருவர்களுக்கும் மிகவும் பயங்கரமும் நெருக்கமுமான யுத்தம் நடந்தது. துரியோதனன் (செய்த) அவமானத்தாலும் தோள்வலிமையாலும் கொழுப்பமைந்தவனும் திரௌபதியின் கண்ணால் பார்க்கப்பட்டவனுமான பீமன் விருத்தியடைந்தான். கன்னங்களில் மதஜலம் பெருகும் வழியையுடைய யானையை யானை அடிப்பதுபோலக் கோபங்கொண்டு அடித்துக் கைகளால் பிடித்தான். பிறகு, வீர்யமுள்ள அந்த ராக்ஷஸனும் இவனைப் பிடித்தான். பலமுள்ளவர்

களுள் சிறந்த பீமன் பலத்தால் அவனை உதறினன். அப்பொழுது, யுத்தத்தில் பலமுள்ள அவ்விருவர்களுடைய கைகளினுரைதலாலும் மூங்கில் பிளந்ததிற்கொப்பான பயங்கரமான சப்தம் உண்டாயிற்று. பிறகு, பீமன் அவனை வலிந்து இடுப்பில் பிடித்திழுத்துப் பெருங்காற்று மரத்தைச் சுழற்றுவதுபோல வேகமாகச் சுழற்றினன். யுத்தத்தில் பலமுள்ள பீமனல் பிடிக்கப்பட்ட அவன் பலமற்றுச் சிறிது சலித்தவனகிச் சக்திக்கேற்றவாறு பீமனையும் இழுத்தான். பிறகு, பீமன், அவன் களைத்திருப்பதைக் கண்டு, பசுவைக் கயிற்றினல் கட்டுவதுபோல அவனைக் கைகளால் கட்டினன். பலமுள்ள பீமன், உரக்க அடிக்கப்பட்ட பேரி சப்திப்பதுபோலப் பெரிய சப்தம் செய்கின்றவனும் பிரஜ்ஞையற்றுத் துடிக்கின்றவனுமான அவனை நெடுநேரம் சுழற்றினன். அவ்வரக்கன் அழுவதைக்கண்டு, பாண்டுகுமாரன் வலிந்து கைகளால் பிடித்து (அவனை) மிருகத்தைக் கொல்லுவதுபோலக் கொன்றன். பீமன் முழங்காலால் அதமனன ராக்ஷஸனை இடையில் மிதித்துக் கொண்டு கைகளால் அவனது கழுத்தைப் பிசைந்தான். பிறகு, எல்லா அங்கங்களும் தளர்ந்தவனும், வெளிவந்த கண்களால் பயங்கரனுமான (அவனைப்) பூமியில்புரட்டிப் பின்வரும் சொற்களையும் சொன்னன். 'பாவியே! நீ யமன்வீட்டை அடைந்தும் ஹிடிம்பன், பகன் இவர்களின் கண்ணீரைத் துடையாய்' என்றன். இவ்விதம் சொல்லிப் புருஷர்களுள்சிறந்த (பீமன்) கோபம் மூடியமனமுள்ளவனகி வஸ்திராபரணங்கள் நழுவியவனும் சித்தம் கலங்கியவனும் துடிப்பவனும் உயிரிழந்தவனுமான அவ்வரக்கனை எறிந்துவிட்டான். மேகத்திற்கொப்பான உருவமுள்ள அவன் அடிபட்டவுடன்,ராஜபுத்திரர்கள், திரௌபதியை முன்னிட்டுக்கொண்டு பல குணங்களால் பீமனைப் புகழ்ந்து சந்தோஷித்து, பிறகு, அங்கிருந்து த்வைதவனத்திற்குச்சென்றர்கள்.

அரசரே! கௌரவரே! அந்தத் தர்மபுத்திரன்சொற்படி கிர்மீரன் பீமனல் இவ்விதம் யுத்தத்தில் கொல்லப்பட்டான். தர்மம் அறிந்தவனும் வெற்றியடைந்தவனுமான யுதிஷ்டிரன் காட்டைப் பகைவர்களற்றதாகச்செய்து, திரௌபதியுடன் அங்கு வாஸம் செய்தான். பரதஶ்ரேஷ்டர்களான அவர்களெல்லாரும் திரௌபதியைச்சமாதானம்செய்து மனத்தில் களிப்புற்றுப் பிரீதியுடன் பீமனைப் புகழ்ந்தார்கள். பீமனதுதோள்வலிமையால் ராக்ஷஸன் பொடிசெய்யப்பட்டு நாசமடைந்தவுடன், அவ்வீரர்கள் அங்கி

ருந்து பகைவரற்ற காட்டில் க்ஷேமமாகப் பிரவேசித்தார்கள். பீமனுடையபலத்தினால் கொல்லப்பட்டு எறியப்பட்டவனும் பயத்தை உண்டுபண்ணக்கூடியவனும் கெட்டமனமுள்ளவனுமான அவ்வரக்கன் பெரிய காட்டில் போகும் என்னால் வழியில் பார்க்கப்பட்டான். பாரதரே! அந்த இடத்தில் வந்திருந்த பிராம்மணர்கள் சொல்லும்போது, நான் அங்குப் பீமனுடைய இந்தக் காரியத்தைக் கேட்டேன்' என்றார். இவ்விதம் ராக்ஷஸர்களுள் சிறந்த கிர்மீரன் யுத்தத்தில் கொல்லப்பட்டதைக்கேட்டு அரசன் கவலையுள்ளவனாகி, வருத்தத்தை அடைந்து, அப்பொழுது பெருமூச்சுவிட்டான்.

கிர்மீரவதபர்வம் முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம்.

(கோவிந்தர் தம்மவர்களுடன் பாண்டவர்களிடம் வந்ததும், அர்ஜுனன் அவரைத் துதித்ததும், திரௌபதி தன் துயரத்தைச்சொல்லி அழுததும், கோவிந்தர் அவளைத் தேற்றியதும்.)

போஜர்களும் வ்ருஷ்ணிகளும் அந்தகர்களும், பாண்டவர் துக்கத்தால் வாட்டப்பட்டு நாட்டைத் துறந்து வெளிப்பட்டதைக் கேள்வியுற்று, பெரியகாட்டில் வந்துசேர்ந்தார்கள். பாஞ்சால ராஜனுக்குத் தாயாதனும், சேதிதேசத்திற்கு அதிபதியான திருஷ்டகேதுவும், உலகத்தில் கீர்த்திபெற்றவர்களும் அதிகவீர்யமுள்ளவர்களும் பிராதாக்களுமான கேகயர்களும், கோபமும் பொறுமையும் அடைந்து பாண்டவர்களைப் பார்ப்பதற்காகக் காட்டிற்குச்சென்றார்கள். திருதராஷ்டிர புத்திரர்களை நிந்தித்துக்கொண்டு, 'என்ன செய்வோம்?' என்றும் சொன்னார்கள். அந்த க்ஷத்திரியச்ரேஷ்டர்கள் யாவரும் கிருஷ்ணரை முன்னிட்டுக்கொண்டு தர்மராஜரான யுதிஷ்டிரரைச் சூழ்ந்து உட்கார்ந்தார்கள். வாஸுதேவர் துக்கத்துடன் தர்மபுத்திரரை நமஸ்கரித்துச் சொல்லலானார்.

'துர்யோதனன், கர்ணன், கெட்டஎண்ணமுள்ளசகுனி, நான்காமவனான துச்சாஸனன் ஆகிய இவர்களுடைய உதிரத்தைப் பூமி

குடிக்கப்போகின்றது. யுத்தத்தில் அவர்களைக்கொன்று அவர்களைத் தொடர்ந்துவருபவர்களும் துணைஅரசர்களும் அவர்களுக்கு நன்மைபுரிபவர்களுமான அவர்கள்யாவரையும் ஜயித்து, பிறகு, யாவரும் தர்மராஜரான யுதிஷ்டிரரை அபிஷேகம்செய்வோம். 'கபடமாக நடப்பவன் கொல்லப்படத் தக்கவன்' என்னும் இது ஸநாதனமானதர்மம்' என்றார். பாண்டவர்களின் துக்கத்தால் பிரஜைகளை எரிக்கவிரும்புகின்றவர்போல அவ்விதம் கோபங்கொண்ட க்ருஷ்ணரை அர்ஜுனன் ஸமாதானம்செய்தான். அர்ஜுனன் மாதவர் கோபங்கொண்டதைக்கண்டு ஸத்தியகீர்த்தியுள்ளவரும் மஹாத்மாவும் அளவிடமுடியாதவரும் அழிவற்றவரும் அளவற்ற தேஜஸுள்ளவரும் 1 ஸ்ருஷ்டிகர்த்தர்களுக்குப்பதியும் ஸர்வஜ்ஞரும் லோகநாதரும் புருஷருமான விஷ்ணுவினுடையவையான அஸுரர்களிடத்தில் நடந்த செய்கைகளைச் சொல்லத் தொடங்கினான்:—

'கோவிந்தரே! நீர் முன் (ஒருகால்) கந்தமாதன பர்வதத்தில் பதினாயிரம்வருஷகாலம் பொழுதுபோனஇடமேவீடாகக் கொண்ட முனிவராகிச் சஞ்சரித்தீர். கோவிந்தரே! நீர், முந்தி, பதினோராயிரவருஷகாலம் புஷ்கரத்தில் நீரைமட்டும் பருகிக்கொண்டு வாஸம்செய்தீர். மதுஸூதனரே! விசாலமான பதரிகாவனத்தில் கைகளை உயரத்தூக்கிக்கொண்டும், காற்றைப் புசித்துக்கொண்டும் ஒரேகாலினால் நூறுவருஷம் நின்றீர். மாதவரே! கறுப்பு மான்தோலை மேல் ஆடையாகச் செய்துகொண்டு இளைத்து நரம்புகள் அடர்ந்தவராக ஸரஸ்வதீநதிக்கரையில் பன்னிரண்டு வருஷம் செய்யவேண்டிய ஸத்ரம் என்னும் யாகத்தில் இருந்தீர். க்ருஷ்ணரே! பிறகு, புண்ய ஜனங்களால் பூஜிக்கப்பெற்ற பிரபாஸமென்னும் தீர்த்தத்தையும் அடைந்து, அதிக காந்தியுள்ளவராகி அவ்விடத்தில் ஆயிரம் தேவவருஷம் வ்ரதத்திலிருந்து லோக ப்ரவ்ருத்திக்கு வேண்டி ஒரே காலினால் நீரே நின்றீரென்று வியாஸர் எனக்குச் சொல்லியிருக்கின்றார். கேசவரே! வாஸுதேவரே! நீரே 2 க்ஷேத்ரஜ்ஞர்; எல்லாப்பிராணிகளுக்கும் முதலும் முடிவும் ஆனவர். (நீரே) தவங்களுக்கு இருப்பிடமும் அழிவற்ற யஜ்ஞமுமானவர். யோகத்தைச் செய்தவரும் புலன்களை அடக்கு

---

1 'ப்ராஜாபதிப்தே:' என்பதுமூலம். 'ஸூத்ராத்மாவுக்கும் விராட்டுக்கும் தலைவர்' என்பது பழையவுரை.

2 சாந்திபர்வம் 1125-ம் பக்கத்தில் காண்க.

கிறவரும் அழிவற்றவரும் ஸாங்கிய கர்த்தாவும் ஸநாதனரும் சீல ரும் எல்லா யோகங்களுக்கும் நியமத்திற்கும் உதவியும் நீரே. க்ருஷ்ணரே! முன் (உம்மால்) உண்டுபண்ணப்பட்ட பூமிபுத்ர னை நரகனைக்கொன்று மணிகுண்டலங்களை அபகரித்து [1] யாகத் திற்குரிய குதிரையை விடுவித்தீர். லோகங்களில் சிறந்தவரும் எல்லா லோகத்தையும் ஜயித்தவருமான நீர் அக்குதிரையை விட்டுப் போரில் வந்து எதிர்த்த தைத்யதானவர்கள் யாவரையும் நாசம் செய்தீர். நீண்ட புஜங்களையுடைய கேசவரே! பிறகு, இந்தி ரனுக்கு எல்லாருக்கும் தலைவனாயிருக்கும் தன்மையைக் கொடு த்து, மனிதர்களிடத்தில் அவதரித்தீர். பரந்தபரே! அப்படிப்பட்ட நீர் நாராயணராயிருந்து ஹரியும் ப்ரம்மாவும் சந்திரனும் ஸூர் யனும் தர்மமும் தாதாவும் யமனும் அக்னியும் வாயுவும் குபேரனும் ருத்திரரும் காலனும் ஆகாயமும் பூமியும் திக்குக்களும் ஆனீர். [2] புருஷோத்தமரே! பிறவாதவரும் சராசர(மான உலக)த்திற்குத் தலைவரும் (அவற்றைப்) படைப்பவரும் நீரே. க்ருஷ்ணரே! சைத்ர ரதமென்ற வனத்தில் அதிக சக்தியுள்ளவராக அதிக தக்ஷிணை யுள்ள துராயணம் முதலிய யாகங்களைச் செய்தீர். ஜனார்த்தனரே! அப்பொழுது, ஒவ்வொரு யாகத்திலும் நூறுலக்ஷம் பொன்னைக் குறைவில்லாமல் கொடுத்தீர். ஓ! யாதவநந்தனரே! கிருஷ்ணரே! பரந் தபரே! விபுவான நீர் அதிதிக்கும் புத்ரராயிருப்பதை அடைந்து விஷ்ணுவென்று பிரஸித்திபெற்று இந்திரனுக்குப் பின்னுண்டான குழந்தையாயிருந்து ஸ்வர்க்கத்தையும் ஆகாயத்தையும் பூமியையும் மூன்று அடிவைப்புக்களால் சக்தியால் அளந்தீர். பிராணிகளின் அந்தர்யாமியே! ஸூர்ய சரீரத்திலிருந்து ஸ்வர்க்கத்தையும் ஆகா யத்தையும் நன்கு பரவி, ஸூர்யமண்டலாபிமானிஜீவனை உமது காந்தியால் பிரகாசிக்கவும் செய்தீர். விபுவே! க்ருஷ்ணரே! அந்த அந்தப் பல்லாயிரம் அவதாரங்களில், உம்மால் அதர்மத்தில் ருசி யுள்ள நூற்றுக்கணக்கான அஸுரர்கள் கொல்லப்பட்டார்கள். நரம்பினால் செய்யப்பட்ட பாசங்கள் அறுக்கப்பட்டன. நிசும்ப னும் நரகனும் கொல்லப்பட்டார்கள். பிராக்ஜோதிஷபட்டணத் தைக்குறித்துச் செல்லும் வழி திரும்பவும் செம்மைசெய்யப்பட் டது. ஆகுதியென்பவன் ஜாரூதிநகரத்திலும் க்ராதனும் அரசர்

---

1 'அது முதல் அஸ்வமேத முதலிய யாகங்களை நடைபெறச் செய் தீர்' என்பது. 2 'புருஷோத்தமரே! விஷ்ணுவும் ருத்ரரும் தக்ஷப்ரஜா பதி முதலானவர்களும் நீரே' என்பது பழையவுரை.

களுடன்கூடின சிசுபாலனும் ஜராஸந்தனும் சைப்யனும்சததன் வாவும் (மற்றிடங்களிலும்) கொல்லப்பட்டார்கள். அதுபோலவே, மேகசப்தமுள்ளதும் ஸூர்யகாந்தியுள்ளதுமானரதத்தால்போரில் ருக்மியை ஜயித்துப் பீஷ்மபுத்திரியான ருக்மிணியைக் கொண்டுவந்தீர். உம்மால் இந்திரத்யும்னனும் யவனனும் கசேருமானும் கோபத்தால் கொல்லப்பட்டனர். ஸௌப பதியான ஸால்வனும் கொல்லப்பட்டான். ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் ஸௌபமும் கீழே தள்ளப்பட்டது. இவ்விதம் இவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். திரும்பவும் மற்றவைகளையும் கேளும். யுத்தத்தில் கார்த்தவீர்யனுக்கு ஒப்பான போஜன் இராவதியில் கொல்லப்பட்டான். கோபதி தாலகேது என்ற இருவர் உம்மால் கொல்லப்பட்டார்கள். ஜனார்த்தனரே! ரிஷிகளுக்குப் பிரியமானதும் புண்யமானதும் ஸுகானுபவத்திற்குவேண்டும் பொருள்கள் நிரம்பினதுமான அந்தத்துவாரகையை உம்முடையதாகச்செய்து ஸமுத்திரத்தில் முழுகச்செய்யப்போகின்றீர். மதுஸூதனரே! தாசார்ஹரே! உம்மிடத்தில் கோபமில்லை; பொறாமையில்லை; பொய்யில்லை; தயையற்ற தன்மையுமில்லை; வக்கிரம் ஏது? அச்சுதரே! எல்லா ரிஷிகளும் [1]சைத்தியத்தின் நடுவிலிருந்து உமது தேஜஸால் பிரகாசிக்கும் உம்மிடம் வந்து மோக்ஷத்தை யாசித்தார்கள். பகைவரை வாட்டுபவரே! மதுஸூதனரே! யுகமுடிவில் நீராகவே எல்லாப்பூதங்களையும் சுருக்கி உம்மிடத்தில் அடக்கம்செய்துகொண்டு ஜகத்தாயினீர். வ்ருஷ்ணிகுலத்தில் பிறந்தவரே! இந்த எல்லா ஜகத்தையுமுடையவரும் ஸ்தாவர ஜங்கமப் பொருள்களுக்குக் குருவுமான பிரம்மாவானவர் யுகத்தின் ஆதியில் உம்முடைய நாபித்தாமரையிலிருந்து உண்டானார். பயங்கரர்களான மதுகைடபர் என்ற அஸுரர்கள் அவரைக்கொல்ல முயன்றார்கள். அவர்களின் அநியாயத்தைக்கண்டு கோபங்கொண்ட ஹரியான உம்முடைய நெற்றியிலிருந்து மூன்றுகண்ணுள்ளவரும் சூலத்தைக் கையில் தாங்கினவருமான சம்புவானவர் உண்டானார். இவ்விதம் தேவேசர்களான அவர்களும் உம்முடைய சரீரத்திலிருந்து உண்டாயினர். இவர்கள் உமது கட்டளையைச் செய்கின்றவர்களென்று எனக்கு நாரதர் சொன்னார். நாராயணரே! கிருஷ்ணரே! நீர் அவ்விதமே சைத்திரரதமென்றவனத்தில் அதிக தக்ஷிணையுள்ள யாகங்களுடன் பெரிய ஸத்திரயாகத்தைச் செய்தீர்.

1 யாகத்தில் அக்நிக்காகக் கட்டப்படும் மேடை.

தேவரே! புண்டரீகாக்ஷரே! அதிக பலமுள்ள நீர் குழந்தையாயிருந்துகொண்டே பலராமரை உதவியாகக்கொண்டு செய்த இவ்விதச்செயல்களைப் பிந்தினவர்களும் செய்யார்; முன்னுள்ளவர்களும் செய்ததில்லை. [1]வைராஜபவனத்திலும் ப்ரம்மாவுடன் நீர் வஸித்தீர்' என்றான்.

இவ்விதம், கிருஷ்ணருடைய ஆத்மாவான அர்ஜுனன் மஹாத்மாவான அவரைக்குறித்துச் சொல்லிவிட்டு மௌனமாயிருந்தான். பிறகு, வாஸுதேவர் அர்ஜுனனைப்பார்த்து இவ்விதம் சொல்லலானார். 'நீ என்னையே சேர்ந்தவன். நான் உன்னையே சேர்ந்தவன். எவர்கள் என்னைச் சார்ந்தவர்களோ அவர்கள் உன்னைச் சார்ந்தவர்கள். எவன் உன்னைப் பகைக்கின்றானோ அவன் என்னை பகைக்கின்றவனே. எவன் உன்னை அனுஸரிக்கின்றானோ அவன் என்னை அனுஸரிக்கின்றான். பிறரால் மீறமுடியாதவனே! நீ நரனாயிருக்கின்றாய். நான் ஹரியான நாராயணனா யிருக்கின்றேன். நரநாராயணர்களென்ற ரிஷிகளாகி ஒரு சமயத்தில் இவ்வுலகத்தை அடைந்தோம். பார்த்த! நீ என்னைவிட வேறில்லை; அப்படியே, நானும் உன்னைவிட வேறில்லை. பரதரில் சிறந்தவனே! நம்மிருவர்களுக்கும் பேதம் அறிய முடியாதது' என்றார். இவ்விதம், தாமரைக் கண்ணரும் புலன்களுக்கு ஈசருமான அந்த மாதவர் அர்ஜுனனை நோக்கி மிக்க பிரியவார்த்தை சொல்லிச் சந்தோஷத்துடன் அப்பொழுது மௌனமாயிருந்தார்.

மஹாத்மாவான கேசவரால் இவ்விதம் சொல்லப்பட்ட பிறகு, அந்த வீரர்களின் அக்கூட்டத்தில் அரசர்கள் கோபத்தை அடைந்தவுடன், திருஷ்டத்யும்னன் முதலியவீரர்களான சகோதரர்களால் சூழப்பட்டவளும் பாஞ்சாலராஜன்புத்திரியுமான திரௌபதியானவள், யாதவர்களுடன் வீற்றிருக்கும் ரக்ஷகரான தாமரைக் கண்ணரை அடைந்து, ரக்ஷணத்தை விரும்பினவளாகிச் சொல்லலானாள். 'வாஸுதேவரே! ஹ்ருஷீகேசரே! இந்திரனுக்குத் தம்பியானவரே! அச்சுதரே! தேவரே! (உம்மைத்) தேவர்களுக்கும் தேவர் என்று வியாஸர் சொன்னார். முன்னோர்கள், பிரஜைகளின் ஸ்ருஷ்டியில் உம்மொருவரையே ப்ரஜைகளுக்குப் பதியென்கிறார்கள். எல்லா உலகங்களையும் படைப்பவராக, அஸிதரும் தேவலரும் சொன்னார்கள். பகைவரால் மிஞ்சமுடியாதவரே!

1 'கைலாயமாகும் வீட்டிலும் பிராம்மணருடன்' என்பது வேறுபாடம்.

மதுஸூதனரே! நீர் விஷ்ணுவாகிறீர். நீர் யஜ்ஞமாகின்றீர். யாகம் செய்பவராயிருக்கிறீர்; யாகத்தால் ப்ரீதியடைபவர் நீரே என்று ஜாமதக்நியர் சொன்னார். புருஷோத்தமரே! உம்மை ரிஷிகள் பொறுமையென்றும் சத்தியமென்றும் சொல்லுகின்றார்கள். சத்தியத்திலிருந்து உண்டான யஜ்ஞம் என்று உம்மைக் கஸ்யபர் சொல்லியிருக்கின்றார். ஸாத்தியர்களுக்கும் தேவர்களுக்கும் [1] ருத்திரர்களுக்கும் ஈஸ்வரேஸ்வரரே! லோகத்தை உண்டுபண்ணுகிறவரே! லோகேசரே! நீர் இவ்விதம் இருக்கிறீரென்று நாரதரும் சொன்னார். நரஸ்ரேஷ்டரே! நீர் ப்ரம்மா சங்கரர் இந்திரன் முதலிய தேவக்கூட்டங்களுடன், குழந்தை பாவைகளுடன் விளையாடுவது போல, அடிக்கடி விளையாடுகிறீர். பிரபுவே! உமது சிரஸால் தேவலோகமும் கால்களால் பூமியும் பரவப்பட்டிருக்கின்றன. [2] உமது வயிறு இந்த லோகங்கள். நீர் ஸநாதனரான புருஷராகிறீர்; வித்தையிலும் தவத்திலும் கஷ்டப்பட்டவர்களும், தவத்தினால் சுத்தமான மனமுள்ளவர்களும், ஆத்மஜ்ஞானத்தினால் திருப்தி அடைந்தவர்களுமான ரிஷிகளுள் சிறந்தவராயிருக்கின்றீர். புருஷோத்தமரே! யுத்தங்களில் புறங்காட்டாதவர்களும் எல்லாத் தர்மங்களுடனுங் கூடினவர்களும் புண்ணியம் செய்தவர்களுமான ராஜரிஷிகளுக்கு அடையும் பொருளாயிருப்பவர் நீரே. பிரபுவும் நீரே; விபுவும் நீரே; பிராணிக்கு அந்தர்யாமி நீரே; நீரே வேலை செய்கிறீர். லோகபாலகர்களும் லோகங்களும் நக்ஷத்திரங்களும் பத்துத் திக்குக்களும் ஆகாசமும் சந்திரனும் சூரியனும் யாவரும் உம்மிடத்தில் அடங்கியிருக்கின்றனர். புஜபலமுள்ளவரே! (மற்றப்) பிராணிகளுக்கு மரணமடையும் தன்மையும் தேவர்களுக்கு அமரத் தன்மையுமான லோக கார்யம் யாவும் உம்மிடத்தில் அடங்கியிருக்கின்றன. மதுஸூதனரே! ஸ்நேகத்தால் அப்படிப்பட்ட நான் உம்மிடத்தில் துக்கத்தைச் சொல்லுகின்றேன். மனுஷ்யர்களும் தேவர்களுமாகிய எல்லாப் பிராணிகளுக்கும் நீர் ஈஸ்வரர். விபுவே! கிருஷ்ணரே! பாண்டவர்களுக்கு மனைவியும், உமக்குத் தோழியும், திருஷ்டத்யும்னனுடைய தங்கையுமான என்னைப் போன்றவள் எவ்விதம் ஸபையைக் குறித்து இழுக்கப்படலாம்? வீட்டுக்கு விலக்காயிருப்பவளும் நடுங்குகிறவளும் [3] ஒற்றைவஸ்திரத்தை யுடையவளும் துக்கத்தை யடைந்தவளுமான (நான்) கௌ

1 'சிவாநாம்' என்பது மூலம். 2 வேறு பாடம்.
3 'சோணிதேன ஸமுக்ஷிதா' என்னும் சொற்கள் விடப்பட்டன.

ரவர்களின் ஸபையில் இழுக்கப்பட்டேன். ஸபையில் அரசர்களுக்கு நடுவில், [1]பாவத்தில் மனமுள்ள திருதராஷ்டிரபுத்திரர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். மதுஸூதனரே! பாண்டு புத்திரர்களும் பாஞ்சாலர்களும் யாதவர்களும் ஜீவித்திருக்கும்போது அந்தத் துரியோதனுதியர் அடிமை யென்னும் எண்ணத்துடன் என்னை அனுபவிக்க விரும்பினுர்கள். கிருஷ்ணரே! பீஷ்மர், திருதராஷ்டிரர் இருவருக்கும் முறைப்படி மருமகளாகின்றேனல்லவா? அப்படிப்பட்ட நான் பலாத்காரமாகத் தாஸியாக்கப் பட்டேன். நற்கீர்த்தியுள்ள தர்மபத்னி கஷ்டப்படப் பார்த்திருந்தார்களென்பதுபற்றி, யுத்தத்தில் சிறந்தவர்களும் அதிக வலிமையுள்ளவர்களுமான பாண்டவர்களையே நிந்திக்கின்றேன். ஜனுர்த்தனரே! அற்பர்களால் துன்பப்படுத்தப்பட்ட என்னைப் பார்த்துப் பொறுத்திருந்தவர்களான அந்தப் பீமஸேனரின் பலத்தை நிந்திக்கவேண்டும்; அர்ஜுனரின் காண்டீவத்தையும் நிந்திக்கவேண்டும். கணவர்கள், அற்ப பலமுள்ளவர்களாயினும் மனைவியை ரக்ஷிக்கின்றுர்கள் என்கிற இந்தச் சாஶ்வத தர்மமார்க்கமானது எப்பொழுதும் ஸாதுக்களால் நடத்தப்பட்டது. மனைவி காப்பாற்றப்படும்போது பிரஜை காப்பாற்றப் பட்டதாகின்றது. பிரஜை காக்கப்படும்போது ஆத்மா ரக்ஷிக்கப்பட்டதாகின்றது. அவளிடத்தில் (பதி) தானே ஜனிப்பது பற்றியன்றோ ஜாயை ஆகின்றுள்? பாரியையினுல் ரக்ஷிக்கப்படவேண்டிய பர்த்தா (ஆகிய புத்ரன்) நான் ரக்ஷிக்கப்படாவிடில் எவ்விதம் என் வயிற்றில் உண்டாவன்? இந்தப் பாண்டவர்களோ சரணமடைந்தவனை ஒரு ஸமயத்திலும் விடார். அப்படிப்பட்ட இவர்கள் சரணமடைந்த என்னைக் காப்பாற்றவில்லையன்றோ? ஜனுர்த்தனரே! எனக்கு ஐந்துபதிகளாலும் மஹா பலமுள்ள குமாரர்கள் உண்டானுர்கள். இவர்களுக்காகவாவது காப்பாற்றப்பட வேண்டியவளாகின்றேன். யுதிஷ்டிரரிடமிருந்துஉண்டான ப்ரதிவிந்தியனும் பீமஸேனரிடமிருந்துஉண்டான ஸுதஸோமனும் அர்ஜுனரிடமிருந்துஉண்டான ஶ்ருதகீர்த்தியும் நகுலபுத்ரனுன சதானீகனும் ஸஹதேவரிடமிருந்துஉண்டான ஶ்ருதகர்மாவுமான யாவரும் உண்மையான பராக்ரமமுள்ளவர்கள். கோவிந்தரே! பிரத்யும்னன் எவ்விதமோ அவ்விதமே அவர்கள் மஹாரதர்கள்; வில்லில் சிறந்தவர்கள்;

1 'ரஜஸா அதிபரிப்லுதா' என்னும் சொற்கள் விடப்பட்டன.

யுத்தத்தில் பகைவர்களால் வெல்ல முடியாதவர்களல்லரோ? இவர்கள் எல்லாரும், அற்ப பலமுள்ளவர்களான திருதராஷ்டிர புத்ரர்களுக்கு வேலைக்காரர்களாகச் செய்யப்பட்டு அதர்மமாக ராஜ்யம் அபகரிக்கப்பட்டதை எதற்காகப் பொறுக்கின்றார்கள்? ஒற்றை வஸ்திரம் உள்ளவளும் வீட்டுக்கு விலக்கானவளுமான நான் ஸபையில் இழுக்கப்பட்டேன். மதுஸூதனரே! கோவிந்தரே! (பலதீமைகளைச் செய்த) துரியோதனன் ஒரு முகூர்த்தம் உயிரோடிருக்கிறானதலால் அர்ஜுனர், பீமஸேனர், நீர் ஆகிய உங்களைத் தவிர மற்றவனால் நாணேற்றுவதற்கும் முடியாத காண்டீவத்தை நிந்திக்கவேண்டும். பீமஸேனருடைய பலத்தையும் அர்ஜுனருடைய ஆண்மையையும் நிந்திக்கவேண்டும். மதுஸூதனரே! முற்காலத்தில், துரியோதனன், ஹிம்ஸைசெய்யாதவர்களும் நியமத்திலிருக்கிறவர்களும் அத்தியயனம் செய்கிறவர்களும் பாலர்களுமான இவர்களை மாதாவுடன் ராஜ்யத்திலிருந்து துரத்தினன். பாவியான அவன் பீமஸேனரின் ஆகாரத்தில் புதிதும் கொடியதும் ஸித்தஞ்செய்யப்பட்டதும் மயிர்க் கூச்சத்தையுண்டுபண்ணக்கூடியதுமான காலகூட விஷத்தை அதிகமாகப் போடுவித்தான். ஜனார்த்தனரே! புருஷோத்தமரே! மிக்க புஜபலமுள்ளவரே! பீமஸேனருக்கு (ஆயுள்) மிச்சமிருப்பதால் அன்னத்துடன் அவ்விஷம் துன்பமில்லாமலே ஜீர்ணமாயிற்று. கோவிந்தரே! அவ்விதமே கங்கைக்கரையிலுள்ள பிரமாணகோடி யென்னுமிடத்தில் நம்பிக்கையடைந்து தூங்கும் இந்தப் பீமசேனரைக் கட்டிக் கங்கையிலெறிந்து பட்டணம் வந்தான். தோள்வலிமையுள்ளவரும் அதிக பலமுள்ளவரும் குந்திபுத்திரருமான பீமஸேனர் விழித்தபொழுது கட்டை அறுத்துக்கொண்டு எழுந்தார். பல்லில் விஷமுள்ள கருநாகங்களைக்கொண்டு தூங்கும் இவரை எல்லா அங்கங்களிலும் கடிக்கவும் செய்தான். பகைவரைக் கொல்லும் (பீமஸேனர்) மரணத்தையடையவில்லை. இவர் விழித்து எல்லாப் பாம்புகளையும் கொன்றார்; அந்தத் துரியோதனனுக்கு இஷ்டனான ஸாரதியையும் புறங்கையால் அடித்துக்கொன்றார். திரும்பவும், வாரணாவதமென்னுமிடத்தில் படுத்துத் தூங்கும் பாலர்களை மாமியுடன் எரிக்க முயன்றான். எவன்தான் அந்தக் கொடிய செய்கையைச் செய்யத்தக்கவன்? மாமியானவள் பயத்தையடைந்தும், அக்னியால் சூழப்பட்டும், அதிக துக்கத்தை அடைந்தும், அழுதுகொண்டும், 'அந்தோ! கெட்டுவிட்டேன். இப்பொழுது எவ்விதம் இவ்வக்கினியி

லிருந்துநிவிருத்தியுண்டாகும்? பாலர்களான புத்திரர்களுடன் காப்பாற்றுபவர்களில்லாதவளாய் நாசமடையப்போகின்றேன்' என்று இவ்வார்த்தையைப் பாண்டவர்களை (நோக்கிச்) சொல்லியபொழுது, பெரிய தோளுள்ளவரும் வாயுவின் வேகமும் பராக்கிரமமும் போன்ற வேகமும் பராக்கிரமமுமுள்ளவரும் செந்நாயினுடைய வயிறுபோன்ற வயிறுள்ளவருமான பீமஸேனர், 'விநதையின் புத்திரனும் பக்ஷிராஜனுமான கருடபக்ஷிபோலத் தாவிக் குதிக்கின்றேன். இதில் உங்களுக்குப் பயமில்லை' என்று சொல்லி, மாமியையும் ப்ராதாக்களையும் தேற்றினர். மாமியை இடப்பக்கத்திலும் அரசரான தர்மபுத்திரரை வலப்பக்கத்திலும் நகுல ஸஹதேவர்களைத் தோள்களிலும் அர்ஜுனரை முதுகிலும் வைத்துக்கொண்டு, வீர்யமுள்ளவரும் பலமுள்ளவருமான அவர் யாவரையும் தூக்கிக்கொண்டு வேகத்துடன் சீக்கிரம் கிளம்பி ஸஹோதரர்களையும் மாமியையும் நெருப்பிலிருந்து விடுவித்தார். கீர்த்தியுள்ள அவர்கள் யாவரும் இரவில் தாயாருடன் கிளம்பிப் பெரிய காட்டில் சமீபத்திலுள்ள ஹிடிம்ப வனத்தை அடைந்தார்கள். அந்த இடத்தில் மிகவும் துக்கத்தை யடைந்து வாடின இவர்கள் தாயாருடன் தூங்கினர்கள். தூங்கும் இவர்களை நோக்கி ஹிடிம்பை என்கிற ராக்ஷஸி வந்தனள். அவள், அவ்விடத்தில் தாயுடன் பூமியில் தூங்கும் பாண்டவர்களைக் கண்டு, காமனுல் கலக்கப்பட்ட மனமுள்ளவளாய்ப் பீமஸேனரை விரும்பினள். பிறகு, அழகிய ஸ்திரீயான அவள் பீமஸேனருடைய கால்களைத் தன் மடியில் வைத்துக்கொண்டு சந்தோஷமுள்ளவளாகி மெதுவாகக் கையால் பிடித்தனள். உண்மையான பராக்கிரமமுள்ளவரும் அளவற்ற சக்தியுள்ளவரும் பலவானுமான பீமஸேனர் அவளை அறிந்து, 'குற்றமற்றவளே! இங்கே என்ன விரும்புகின்றாய்?' என்று வினவினர். இவ்விதம் பீமஸேனரால் சொல்லப்பட்டவளும் இஷ்டப்படி உருவம் மாறக்கூடியவளும் குற்றமற்றவளுமான ராக்ஷஸியானவள், மஹாத்மாவான பீமஸேனரைப் பார்த்து, 'இங்கிருந்து சீக்கிரம் ஓடிவிடுங்கள். பலமுள்ள இந்தச் சகோதரன் உங்களைக் கொல்வதற்கு வருவான். ஆகையால், போய்விடுங்கள். தாமதம் வேண்டாம்' என்று சொன்னள். பிறகு, பீமஸேனர் அகங்காரத்துடன் அவளை நோக்கிப் பின்வரும் வார்த்தையைச் சொன்னர். 'அவனிடமிருந்து நான் பயப்படேன். வந்தவனை நான் கொல்லுவேன்' என்றார். பயங்கரமான உருவ

முள்ளவனும் பயமான தோற்றமுள்ளவனும் ராக்ஷஸர்களுள் இழிந்தவனுமான (அவன்) அவர்களின் வார்த்தையைக் கேட்டுப் பெரிய சப்தத்தைச் செய்துகொண்டு வந்து சேர்ந்தான். அவன், 'ஹிடிம்பையே! எவனுடன் பேசுகின்றாய்? அவனை என் சமீபத்தில் அழைத்து வா; பக்ஷித்துவிடுவோம். தாமதம் செய்யத் தக்கவ ளல்லை' என்றான். அப்பொழுது, குற்றமற்றவளும் நல்ல மன முள்ளவளுமான அவள், கருணையால் பற்றப்பட்ட மனத்துடன் தயையினால் இவரை அவன் சொன்னபடி செய்வதற்கு இச்சிக்க வில்லை. மனிதர்களைத் தின்னும் அந்த ராக்ஷஸன் பயங்கரமான சப்தங்களைச் செய்துகொண்டு, அப்பொழுது பீமஸேனரைக் குறித்து வேகமாக ஓடிவந்தான். பலமுள்ள ராக்ஷஸன் கோபம் கொண்டு மிகுந்த வேகத்துடன் பீமஸேனரை எதிர்த்துச்சென்று அவர் கையைக் கையால் பிடித்தான். இந்திரனுடைய வஜ்ராயுதத் திற்கொப்பான தொடுகையுள்ளதும் வஜ்ரம்போன்ற உருவமுள் ளதுமான கையை உறுதியாக மடக்கிப் பீமஸேனரைச் சீக்கிரமா கக் குத்தினான். அப்பொழுது, தோள்வலி மிகுந்த பீமஸேனர் தமது கை ராக்ஷஸனுடைய கையால் பிடிக்கப்பட்டிருப்பதைப் பொறுமல் கோபங்கொண்டனர். அப்பொழுது எல்லா அஸ் திரங்களையும் அறிந்த பீமஸேனருக்கும் ஹிடிம்பனுக்கும், இந்திர னுக்கும் விருத்திரனுக்கும் நடந்தது போல, பயங்கரமும் நெருங் கியதுமான சண்டை நடந்தது. குற்றமற்றவரே! அப்பொழுது, அதிக வீர்யமும் பலமுமுள்ள பீமஸேனர் அரக்கனுடன் நெடுநேரம் விளையாடிப் பலமற்ற அவனைக் கொன்றார்.

பிறகு, பீமஸேனர் ஹிடிம்பனைக் கொன்று, கடோத்கசனைப் பெற்றவளான ஹிடிம்பையை முன்னிட்டுக்கொண்டு ஸகோதரர் களுடன் கிளம்பினர். பகைவர்களை வாட்டுபவர்களான யாவரும் அன்னையுடன்கூட அந்தணர் கூட்டங்களால் சூழப்பட்டு அங் கிருந்து ஏகசக்ர நகரத்தை நோக்கிப் போனார்கள். போகும் போது, இவர்களுக்குப் பிரியத்திலும் ஹிதத்திலும் விருப்பமுள்ள வியாஸர் ஆலோசனை சொல்பவரானர். கடுமையான விரதமுள்ள பாண்டவர்கள் அங்கிருந்து ஏகசக்ர நகரத்தை அடைந்தார்கள். அவ்விடத்திலும் ஹிடிம்பனோடு ஒப்பானவனும் பயத்தை விளை விக்கக்கூடியவனும் மனிதர்களைத் தின்பவனும் அதிகபலமுள்ளவனு மான பகனென்பவனை எதிர்த்தார்கள். யுத்தம் செய்பவர்களுள் சிறந்த பீமஸேனர் பயங்கரனான அவனையும் கொன்று சகோதரரெல்

லாருடனும் துருபதனுடைய பட்டணம் சென்றூர். கோவிந்தரே! பீஷ்மகபுத்திரியான ருக்மணி உம்மால் ஜபிக்கப்பட்டதுபோல் அவ்விடத்திலேயே வஸிக்கும் அர்ஜுனரால் நானும் அடையப்பெற்றேன். மதுஸூதனரே! இவ்விதம் ஸ்வயம்வரத்தில் பிறரால்செய்ய அரிதான பெரியகாரியத்தைச் செய்து பெரியயுத்தத்தில் அர்ஜுனரால் நான் ஜயிக்கப்பட்டேன். இவ்விதம் அதிகமான கஷ்டங்களால் வாட்டப்படுகிறவளும், அதிக துக்கத்தை யடைந்தவளும், மாமியை விட்டுப் பிரிந்தவளுமான நான், தௌம்யரை முன்னிட்டுக்கொண்டு வஸிக்கின்றேன். சிங்கம்போன்ற வலிமையுள்ளவர்களும் வீர்யத்தால்மேலானவர்களுமான இவர்கள் அற்பர்களான பகைவர்களால் துக்கங்களை அனுபவிக்கிறவர்களாக ஏன் என்னை அலக்ஷியம் செய்கின்றூர்கள்? மிக்க அற்ப பலமுள்ளவர்களும், பாவமான செய்கையைச்செய்பவர்களுமான பாவிகளின் இவ்வித துக்கங்களைப் பொறுத்துக்கொண்டு நீடித்த காலமாக எரிக்கப்படுகிறவளாகின்றேன். [1] மனிதர்க்குரிய முறையல்லாத முறையாலன்றோ பெரியகுலத்தில் ஜனித்தேன். மாதவரே! மஹாத்மாவான பாண்டுவின் மருமகளும், பாண்டவர்களுக்குப் பிரியமான பார்யையுமாகி, இந்திரனுக்கு ஒப்பான ஐந்துபேர்களும் பார்த்திருக்கும்போது, தலைமயிரின் இழுப்பையடைந்து என்னைப்போன்றளவள் உயிருடனிருப்பாள்?' என்றுசொல்லி மிருதுவாகப் பேசும் திரௌபதி [2] தாமரைமலர் போன்ற காந்தியுள்ள மிருதுவான கையினுல் முகத்தை மறைத்துக் கொண்டு அழுதாள்.

திரௌபதியானவள் பருத்தவைகளும் நன்கு அமைந்தவைகளும் அழகிய லக்ஷணங்களுள்ளவைகளும் சாயாதவைகளுமான ஸ்தனங்களைத் துக்கத்தால் உண்டான கண்ணீர்த்திவலைகளால் நனைத்தாள்; கண்களைத்துடைத்துக்கொண்டும் கோபத்துடன் அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டும், கண்ணீர்நிரம்பித் (தடைப்பட்ட) குரலுடன் வார்த்தைசொன்னுள். 'மதுஸூதனரே! எனக்குப் பதிகளில்லை; புத்திரர்களில்லை; பந்துக்களில்லை; சகோதரர்களில்லை; பிதாவுமில்லை; நீருமில்லை. ஏனெனில், நீங்கள் அற்பர்களால் துன்புறுத்தப்பெற்றஎன்னைத் துக்கமற்றவர்போல் அலக்ஷியம் செய்தீர்கள். அப்பொழுது, கர்ணன் சிரித்தானென்

1 'வயிற்றுலிருந்து பிறவாமல் யாககுண்டத்திலிருந்து பிறந்தேன்' என்பது. 2 'பத்மகோச' என்பது மூலம்; 'மலரும் தருணத்திலிருப்பது' என்பது பொருள்.

பதுபற்றின துக்கமும் எனக்கு ஆறவில்லை. கேசவரே! [1]ஸம்பந்தம் [2]கௌரவம் [3]சிநேகம் [4]பிரபுத்தன்மை ஆகிய நான்குகாரணங்களால் எப்பொழுதும் உம்மால் ரக்ஷிக்கப்படத்தகுந்தவளாகிறேன்' என்றுகூறினாள். பிறகு, கிருஷ்ணர், அவ்வீரர்களின் கூட்டத்தில் அவளைநோக்கி, 'கோபமுள்ளவளே! எவர்கள்விஷயத்தில் கோபங்கொண்டவளாகிறையோ அவர்களின் மனைவியரும் அர்ஜுனன் பாணங்களால் மறைக்கப்பட்டவர்களும் இரத்தப்பெருக்கால்நனைக்கப்பட்டவர்களும் கொல்லப்பட்டுப் பூதலத்தில் படுத்தவர்களுமான பர்த்தாக்களைப் பார்த்து இவ்விதமே அழப்போகின்றார்கள். பாண்டவர்கள்விஷயத்தில் எது செய்யத்தக்கதோ அதைச் செய்கின்றேன். சோகப்படாதே. உன்னிடம் உண்மையானபிரதிஜ்ஞை செய்கிறேன். அரசர்க்கரசியாவாய். திரௌபதி! சொர்க்கம் விழுந்தாலும் ஹிமயமலை வெடித்தாலும் பூமி பொடியானாலும் கடல் வற்றினாலும் என்வார்த்தை வீண்போகாது' என்றார்.

அந்தப்பாஞ்சாலகுமாரியான திரௌபதியானவள், கிருஷ்ணரிடமிருந்து அந்தச்சொல்லை மறுமொழியாகக்கேட்டு, அர்ஜுனனைக் குறுக்காகப் பார்த்தாள். மஹாராஜரே! அப்பொழுது, அர்ஜுனன் திரௌபதியைநோக்கி, 'அழகிய சிவந்த கண்களுள்ளவளே! சிறந்தநிறமுள்ளதேவியே! அழாதே. கண்ணபிரான் எதைச் சொன்னாரோ அது அவ்விதமே நடக்கும்; மாறாது' என்றுசொன்னான். திருஷ்டத்யும்னன், 'நான் துரோணரைக் கொல்லுவேன். சிகண்டி பீஷ்மரையும், பீமன் துரியோதனனையும், அர்ஜுனன் கர்ணனையும் கொல்லுவார்கள். தங்கையே! ராமகிருஷ்ணர்களை அடுத்து யுத்தத்தில் இந்திரனாலும் ஜயிக்கமுடியாதவர்களாயிருக்கின்றோம். யுத்தத்தில் திருதராஷ்டிர புத்திரர்களால் (ஜயிக்கமுடியாதவர்களென்பதில்) என்ன விருக்கின்றது?' என்றான். இவ்விதம் சொல்லப்பட்டவுடன், வீரர்கள் வாஸுதேவருக்கு எதிர்முகமாக ஸமீபத்தில் உட்கார்ந்தார்கள். அவர்களுக்குநடுவில் நீண்ட கைகளுள்ள கிருஷ்ணர் (பின்வரும்) வார்த்தையைச் சொன்னார்.

---

1 அத்தையின் பிள்ளையின் பார்யை என்ற ஸம்பந்தம்;
2 அக்னிகுண்டத்திலிருந்துண்டானகௌரவம்.
3 பக்தியிருப்பது.
4 உமது ஸாமர்த்தியம்.

பதின்மூன்றாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(கோவிந்தர் சூதாட்டக்காலத்தில் தாம் துவாரகையிலில்லாமையால் யுதிஷ்டிரருக்குக் கஷ்டம் நேர்ந்ததென்பதைச் சொல்லி அவரைத் தேற்றியது.)

வாஸுதேவர், 'பூபதியே! ஓ அரசரே! நான் துவாரகையில் இருந்திருப்பேனேயானால் சமீபத்தில் வந்திருப்பேன்; நீர் இந்தக் கஷ்டத்தை அடைந்தவராகமாட்டீர். ஓ! எதிர்க்கப்படமுடியாதவரே! அம்பிகா புத்திரரான அரசராலும் துரியோதனனாலும் கௌரவர்களாலும் அழைக்கப்படாதவனாயினும், நான் வந்திருப்பேன். அதிக தோஷங்களைக் காட்டி நான் சூதைத்தடுத்திருப்பேன். பீஷ்மர், துரோணர், கிருபர், பாஹ்லீகர் இவர்களை அழைத்து உமக்காக விசித்ரவீரிய புத்ரரான அரசரை நோக்கி,' கௌரவரே! ராஜேந்திரரே! பிரபுவே! உமது புத்திரர்களுக்குச் சூதாட்டம் போதும்' என்று, நீர் துரத்தப்பட்டதற்குக் காரணமாயிருந்த தோஷங்களையும் முன்பு வீரஸேனகுமாரனான நளன் ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டதற்குக் காரணமான தோஷங்களையும் அந்த விஷயத்தில் தெளிவாகச் சொல்லியிருப்பேன். அரசரே! சூதாட்டத்தினால் எதிர்பாராத நஷ்டத்தையும் (தோற்றாலும் இனி வெல்லலாமென்னும் ஆசையால்) ஆட்டத்தின் இடையறாமையையும் உள்ளபடி விரித்துரைத்திருப்பேன். ஸ்திரீகள், சூது, வேட்டை, குடி இந்நான்கும் ஆசையாலுண்டாவன. மனிதன் ஐச்வரியத்திலிருந்து நழுவிவிடக் காரணமான இவை துக்கமென்றே சொல்லப்படுகின்றன. சாஸ்திரம் அறிந்தவர்கள் அவைஎல்லாவற்றிலும் தோஷத்தை எண்ணுகின்றார்கள். சூதையறிந்தவர்கள் அதில் அதிகமான குற்றத்தைப் பார்க்கின்றார்கள். இவற்றில் ஒரே நாளில் பொருள் நாசமும் நிச்சயமான துக்கமும் பொருள்களின் அனுபவமின்றி அழிவும் மிகவும் கடினமான வார்த்தையுமட்டுமே நேரும். கடுமையான உத்பத்தியுள்ளதும் தொடர்ந்து வரக்கூடியதுமான இதையும் மற்றதையும் அம்பிகையின் புத்திரரை அடைந்து சூது விஷயத்தில் சொல்லுவேன். குருவம்சத்தை விருத்திசெய்பவரே! இவ்விதம் என்னால் சொல்லப்பட்டு என் வார்த்தையை அங்கீகரிப்பாரானால் குருக்களுக்கு க்ஷேமமும் தர்மமும் உண்டாகும். ஓ!

ராஜேந்திரரே! பரதஸ்ரேஷ்டரே! அவர் பத்தியமான எனது இனிய வார்த்தையை அங்கீகரியாவிடில் வலிமையால் அவரை அடக்கிவிடுவேன். ஸுஹ்ருத்துக்களென்னும் பகைவர்களான ஸபையிலுள்ளவர்கள் அநியாயத்துடன் அவரை அனுஸரிப்பார்களானுல், சூதாடச்செய்கிற அவர்களையும் கொல்லுவேன். கௌரவரே! அப்பொழுது, எனக்கு [1] ஆனர்த்ததேசத்தில் வாஸமில்லாமை நேர்ந்துவிட்டது. அதனுல், நீங்கள் சூதால் ஏற்பட்ட இந்தத் துக்கத்தை அடைந்தீர்கள். பாண்டுநந்தனரே! குருஸ்ரேஷ்டரே! அப்படிப்பட்ட நான் துவாரகையை அடைந்ததும், நீர் துக்கமுள்ளவரானதை நடந்தபடி சாத்யகியினிடமிருந்து கேட்டேன். அரசரே! ராஜேந்திரரே! கேட்டவுடனேயே, நான் மனத்தில் மிக்க துயரமடைந்து, உம்மைப் பார்க்கவிரும்பி, வேகமாக வந்தேன். பரதரேறே! அந்தோ! யாவரும் கஷ்டத்தையடைந்தவர்களாயிருக்கின்றோம். அப்படிப்பட்ட நான் உம்மைத் தம்பிகளுடன் துக்கத்தில் முழுகினவராகப் பார்க்கின்றேனே!' என்றார்.

பதினுன்காவது அத்யாயம்.

அர்ஜுனுபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(கோவிந்தர் தாம் வர முடியாமைக்குக் காரணமான ஸால்வ யுத்தத்தைக் கூறியது.)

யுதிஷ்டிரர், 'ஓ! வ்ருஷ்ணி நந்தனரே! கிருஷ்ணரே! உமக்கு (அங்கு) வாஸமில்லாமை எதனுல் உண்டாயிற்று? உமக்கு வெளியில் எங்கே செல்லவேண்டியிருந்தது? வெளியில் வஸித்து என்ன செய்தீர்?' என்றுவினவினுர். மாதவர், 'பரதஸ்ரேஷ்டரே! கௌரவஸ்ரேஷ்டரே! ஸௌபமென்கிற ஸால்வனுடைய நகரத்தை அழிப்பதற்கு நான் போனேன். அவ்விஷயத்தில் காரணத்தை என்னிடமிருந்து கேளும். பரதஸ்ரேஷ்டரே! மிக்க ஒளியுள்ளவனும் பெரிய கையுள்ளவனும் அதிக கீர்த்தியுள்ளவனும் தமகோஷனுக்குப் புத்திரனும் வீரனுமான அந்தச் சிசுபாலன், கெட்ட எண்ணமுள்ளவனுகி, உம்முடைய ராஜஸூயமென்கின்ற யாகத்தில் நடந்த பூஜையைக் குறித்துக் கோபவசத்தை அடைந்து பொறுக்கவில்லையாதலால் என்னுல் கொல்லப்பட்டான். ஓ! பாரதரே!

---

1 துவாரகை இருக்கிற தேசம்.

அவன் கொல்லப்பட்டது கேட்டு, ஸால்வன் கடுமையான கோபத்துடன் நான் இங்கு இருக்கும்போது ஒருவருமில்லாத துவாரகையை அடைந்தான். அவன் இஷ்டப்படி செல்லும் ஸௌபமென்னும் (ஆகாய விமானத்தில்) ஏறிக்கொண்டு குரூர [1]ஸ்வபாவமுள்ளவனுகி அவ்விடத்தில் குழந்தைகளான வ்ருஷ்ணிச்ரேஷ்டர்களுடன் சண்டைசெய்தான். ப்ரம்மாவின் அனுக்கிரகத்தால் பலகாலம் ஜீவிப்பவனும் கெட்டஎண்ணமுள்ளவனுமான அவ்வரசன் அப்பொழுது வ்ருஷ்ணிகளுள் சிறந்த வீரர்களான அந்த அநேகம் பாலர்களைக் கொன்று, பிறகு, பட்டணத்துத் தோட்டங்களையெல்லாம் நாசமாக்கினுன். ஓ! மிக்க புஜபலமுள்ளவரே! அந்த ஸௌபராஜன், 'விருஷ்ணிகுலத்தில் தாழ்ந்தவனும் வஸுதேவன்புத்திரனும் அற்ப புத்தியுள்ளவனுமான இப்படிப்பட்ட அந்தக் கிருஷ்ணன் எங்குப் போயினன்? யுத்தத்தில் விருப்பமுள்ள அவனுடைய கொழுப்பை யுத்தத்தில் நான் நாசமாக்கப் போகின்றேன். ஓ! ஆனர்த்தர்களே! உண்மையைச் சொல்லுங்கள்; அவன் எங்கே இருக்கின்றுனே அங்கே போகின்றேன். கம்ஸனையும் கேசியையும் கொன்ற அவனைக் கொன்று திரும்பிவருவேன்; கொல்லாமல் திரும்பேன். ஆணையுடன் ஆயுதத்தைத் தொடுகின்றேன். அவன் எங்கே? அவன் எங்கே?' என்று சொல்லிக்கொண்டு போரில் என்னுடன் யுத்தம்செய்ய விருப்பமுள்ளவனுகத் திரும்பவும் அங்கங்கு ஓடினுன். 'பாவச் செய்கையுள்ளவனும் நம்பிக்கைத் துரோகம் செய்பவனும் அற்பனுமான அவனை இப்பொழுது சிசுபாலனைக் கொன்ற கோபத்தால் யமன் வீட்டை அடையச் செய்வேன். கெட்ட ஸ்வபாவமுள்ள எவனுல் என்பிராதாவான சிசுபாலராஜன் கொல்லப்பட்டானே அவனைப் பூதலத்தில் கொல்லுவேன். பிராதாவும் பாலனும் யுத்தத்திறமையில்லாதவனும் அவதானமில்லாதவனும் வீரனுமான ராஜன் எவனுல் கொல்லப்பட்டானே அந்த ஜனுர்த்தனனைக் கொல்லுவேன்' என்றுன்.

ஓ! மஹாராஜரே! குருநந்தனரே! இவை முதலிய சொற்களைப்பிதற்றிக்கொண்டு அவன் இஷ்டப்படிசெல்லும் ஸௌபமென்னும் பட்டணத்துடன் என்னை நிந்தித்துக்கொண்டு ஆகாயத்தில் நின்றுன். கௌரவரே! மார்த்திகாவதகமென்ற தேசவாஸியும் கெட்ட எண்ணமுள்ளவனும் கெட்டஸ்வபாவமுள்ளவனுமான அந்த அரசன் என்விஷயத்தில் நடந்துகொண்டதை

---

1 ஒரு சொல் விடப்பட்டது.

நான் சென்று கேள்வியுற்றேன். கௌரவராஜரே! பிறகு, நானும் கோபத்தால்கலங்கின கண்களுள்ளவனுகி மனத்தால் நிச்சயித்து இவனுடையவதத்தில் மனங்கொண்டேன். கௌரவரே! ஆனர்த்ததேசத்தில் நடந்த சண்டையையும் என்னிடத்தில் வைத்த அவமதிப்பையும் கெட்ட காரியமுள்ள அவனுடைய மிகுந்தகர்வத்தையும் (அறிந்து) பிறகு, ஸௌபத்தை அழிப்பதற்கு நான் கிளம்பினேன். நாலுபக்கங்களிலும் தேடுகின்ற என்னுல் அவன் கடலால் சூழப்பட்ட ஒரு தீவில் பார்க்கப்பட்டவனுயினன். அரசரே! பிறகு, நான் பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தை ஊதி ஸால்வனை அழைத்து யுத்தகளத்தில் சண்டைக்கு நின்றேன். அவ்விடத்தில் எனக்கு அஸுரர்களுடன் அந்த யுத்தமானது ஒரு முகூர்த்தகாலம் நடந்தது. அவர்கள்யாவரும் என்னுல் பூமியில் வீழ்த்தப்பட்டுப் பிணமாயினர். ஓ! மிக்க புஜபலமமைந்தவரே! அஸ்தினுபுரியில் சூது அநியாயமாய் உண்டானதாகக் கேட்டும் அப்பொழுது நான் வராமைக்குக் காரணமாயிருந்த காரியம் இதுவே. மிகவும் துக்கமடைந்த உங்களைப்பார்க்க எண்ணங்கொண்டு வேகமாக வந்தேன்' என்று கூறினர்.

பதினைந்தாவது அத்யாயம்.

அர்ஜுனுபிகமன பர்வம். (தொடர்ச்சி.)

(கோவிந்தர், ஸால்வன் எதிர்த்தபோது உக்ரஸேனர் முதலியோர் துவாரகையைக் காத்ததைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், 'மிக்க தோள்வலிமை அமைந்தவரே! பேரறிவாளரே! வாஸுதேவரே! ஸௌபனுடைய வதத்தை விரிவாகச் சொல்லும். நீர் சொல்லும்போதே திருப்தியடையாதவனுயிருக்கின்றேன்' என்றுர்.

வாஸுதேவர், 'ஓ! அரசரே! பரத ஸ்ரேஷ்டரே! சிசுபாலன் என்னுல் கொல்லப்பட்டதைக் கேட்டு, ஸால்வன் துவாரகையைக் குறித்து வந்தனன். பாண்டுநந்தனரே! மிகவும் கெட்ட எண்ணமுள்ள அவன், ஆகாயத்தால்செல்லும் அந்த (ஸௌப) புரத்தை அணிவகுத்து நின்று, துவாரகையை நான்கு பக்கங்களிலும் முற்றுகையிட்டான். பிறகு, அவன் அங்கிருந்துகொண்டு அந்தத்

துவாரகா பட்டணத்துடன் சண்டைசெய்தான். அப்பொழுது, நான்கு பக்கத்திலும் எல்லா (ஆயுத) வருஷத்தாலும் சண்டை நடந்தது. பரதஸ்ரேஷ்டரே! அரசரே! துவாரகா பட்டணமானது கொடிமரத்துடன் கூடியதும், வெளிவாசலுடன் கூடியதும், (யுத்தம் செய்பவர்களின்) கூட்டத்துடன் கூடியதும், (அவர்களிருக்கும்) இடங்களுடன் கூடியதும், (பீரங்கி) யந்திரங்களுடனும், சுரங்கவழியாக ரகஸ்யவழியைச் செய்கிறவர்களுடனும் கூடியதும், இருப்புமுனையுள்ள முனைகளுடனும் தேர்வீதிகளுடனுங்கூடியதும், அன்னத்துடன் கூடிய உபரிகைகளையும் கோபுரங்களையுமுடையதும், சைனியத்தைச் சிறையிடுமிடத்துடன் கூடியதும், எரிகின்ற பந்தங்களுள்ளதும், எந்திரத்தில் கட்டப்பட்ட (கல்முதலிய) பகைவரை நாசம்செய்யும் பொருள்களுள்ளதும், மண்ணால் அல்லது தோலால் ஒட்டகைமுதுகுபோலச் செய்யப்பட்ட பாத்திரங்களுள்ளதும், பேரீ பணவம் ஆனகமென்னும் வாத்தியங்களுள்ளதும், தோமரங்களும் அங்குசங்களுமுள்ளதும், சதக்நியுடனும் கலப்பையுடனுங்கூடியதும், புசுண்டிகளும் உருண்டைக்கற்களுமுள்ளதும், ஆயுதங்களுள்ளதும், கோடாலிகளுள்ளதும், இரும்பினாலும் தோலினாலும் செய்யப்பட்ட கேடகங்களுள்ளதும், வெடிமருந்துகளுள்ளதும், கவண்கற்களும் கவண்களுமுள்ளதுமாகச் சாஸ்திரத்தில் சொல்லியமுறைப்படி நான்குபக்கத்திலும் நன்கமைந்ததாகச்செய்யப்பட்டிருந்தது. குருஸ்ரேஷ்டரே! அந்தத் துவாரகை மத்யம [1]குல்மத்தினால் காப்பாற்றுகிறவர்களான வெவ்வேறுவிதமான பல தேர்வீரர்களாலும், கதன், ஸாம்பன், உத்தவன் முதலானவர்களாலும் போரில் எதிர்த்துத் தடுக்கவல்லவர்களும், (முன்பு நடந்த) சண்டையில் காணப்பட்ட வீர்யமுள்ளவர்களும், பிரஸித்தகுலமுள்ளவர்களும், வீரர்களுமான காலாட்களாலும், பிறர் குல்மத்தைத் துரத்துகிற கொடிபிடித்த குதிரைவீரர்களாலும், நன்கு காப்பாற்றப்பட்டது. அஜாக்ரதையைத் தடுக்கிறவர்களான உக்கிரஸேனன், உத்தவர் முதலியோர்களால் கள்குடிக்கக்கூடாதென்று பட்டணத்தில் முரசறைவிக்கப்பட்டது. 'சால்வராஜன் மதிமயங்கினவர்களை அடித்துவிடுவானன்றோ?' என்று ஆலோசனைசெய்து அந்த எல்லா விருஷ்ணிகளும் அந்தகர்களும் ஜாக்ரதையாக இருந்தார்கள். அவ்வாறே, பணக்குவியலைக்காப்பாற்றுகிறவர்களால், ஆனர்த்ததேசத்தார்களான நடர், நர்த்தகர், காயகர்கள்யாவரும்

---

1 அரண், சேனையின் ஒரு வகுப்பு.

[1] சீக்கிரம் வெளியில் துரத்தப்பட்டார்கள். எல்லாப் [2] பாலங்களும் உடைக்கப்பட்டன. கப்பல்கள் தடுக்கப்பட்டன. ஓ! கௌரவரே! அகழ்களும் சூலங்களால் நன்கு அடர்ந்தவைகளாகச் செய்யப்பட்டன. ஓ! குருஶ்ரேஷ்டரே! கிணறுகளும் அம்பரீஷகமென்னும் மறைக்கப்பட்ட நெருப்புக்களும் அமைக்கப்பட்டன. ஒரு குரோசதூரம் விஷமமாக (இரும்புமுட்களடர்ந்ததாகச்) செய்யப்பட்டது. பாலங்கள் உடைக்கப்பட்டன. எல்லா மதில்களும் பழுதுபார்க்கப்பட்டன. குற்றமற்றவரே! நமது கோட்டையானது இயற்கையாகவே பிரவேசிக்க முடியாதது; இயற்கையாகவே நன்கு காப்பாற்றப்பட்டது; இயற்கையாகவே ஆயுதங்களுடன் கூடியது; அப்பொழுது, மிகவும் நுழையமுடியாததும் மிகவும் காக்கப்பட்டதும் மிகவும் ஆயுதங்களுள்ளதுமாயிற்று. ஓ! பரதஶ்ரேஷ்டரே! அப்பட்டணமானது எல்லா ஆயுதங்களுடனுங்கூடினதாகவும் நன்கு ரக்ஷிக்கப்பட்டதாகவும் மறைக்கப்பட்டதாகவும் இந்திரன்மாளிகைபோல் இருந்தது. அரசரே! ஸௌபன் வந்த அக்காலத்தில், வ்ருஷ்ணி அந்தக புரத்தில் (யாரும்) முத்திரையின்றி வெளியே போகிறதுமில்லை; முத்திரையின்றி உள்ளே விடப்படுகிறதுமில்லை. கௌரவரே! ராஜேந்திரரே! எல்லா வீதிகளிலும் நாற்சந்திகளிலும் அதிகமான யானைகளும் குதிரைகளுமுள்ள சேனை இருந்தது. அப்பொழுது, சேனையானது சம்பளமும் ஆகாரமும் கொடுக்கப்பட்டதும் ஆயுதங்களும் வஸ்திரங்களும் கொடுக்கப்பட்டதும் விசேஷப் பொருளுதவி செய்யப்பட்டதுமாயிற்று. ஒருவனும் பொன் வெள்ளி யல்லாத நாணயத்தைச் சம்பளமாயடையவில்லை. காலங்கடந்து சம்பளம் வாங்கினவனுமில்லை. ஒருவனும் சண்டைச் சமயத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டவனுமில்லை; பராக்ரமம் பார்க்கப்படாதவனுமில்லை. அரசரே! இவ்விதம் நன்கு அமைக்கப்பட்ட துவாரகையானது உக்ரஸேன ராஜரால் திறமையுள்ள ஏராளமான வீரர்களைக்கொண்டு நன்கு ரக்ஷிக்கவும்பட்டது.

---

1 வேறு பாடம். 2 இரண்டு முறை வருகிறது.

பதினாறாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(கோவிந்தர் ஸால்வனுக்கும் யாதவர்களுக்கும் நடந்த சண்டையைச் சொல்லியது.)

ராஜேந்திரரே! அப்பொழுது வந்த ஸௌபபதியான ஸால்வன் மிகுதியான மனிதர்களும் யானைகளும் நிறைந்த சேனையுடன் அப்பட்டணத்தில் பிரவேசித்தான். ஸால்வராஜனால் காப்பாற்றப் பட்டதும் தேர் யானை குதிரை காலாட்களுடன் கூடியதுமான அந்தச் சேனையானது அதிகமாகக் குளங்களுள்ள ஸமமான இடத்தில் நிறுத்தப்பட்டது. சேனையானது, சுடுகாடுகளையும் தேவாலயங்களையும் கறையான்புற்றுக்களையும் புண்ணிய விருக்ஷங்களுள்ள மேடைகளையும் விலக்கி, நன்கு அமர்ந்ததாயிற்று. அரசரே! சைனியங்கள் அணிவகுக்கப்பட்டதனால் ஸால்வனுடைய பாசறையில் வெளிப்படையான வழிகளும் மறைக்கப்பட்டன அவ்வாறே, ரகஸ்யமான வழிகளும் இல்லையே இல்லை. நரஸ்ரேஷ்டரே! கௌரவரே! எல்லா ஆயுதங்களுடனும் கூடினதும், எல்லாச் சஸ்திரங்களிலும் தேர்ந்ததும், தேர் யானை குதிரைகளடர்ந்ததும், காலாட்களடர்ந்ததும், மனமகிழ்ச்சியுடனும் நல்ல போஷணையுடனும் கூடிய வீரர்களுள்ளதும், வீரர்களின் லக்ஷணங்களுள்ளதும், நானாவிதமான கொடிகளும் கவசங்களுமுள்ளதும், பலவிதமான தேர்களும் விற்களுமுள்ளதுமான (சைனியத்தை) நிறுத்தி அப்பொழுது கருடன்போல வேகமாகத் துவாரகையில் புகச் செய்தான்.

எதிர்த்துவரும் ஸால்வபதியின் அந்தச் சேனையை அப்பொழுது கண்டு, சிறுவர்களான வ்ருஷ்ணிபுத்திரர்கள் வெளிவந்து சண்டை செய்தார்கள். கௌரவரே! ஸால்வனுடைய அந்த எதிர்ப்பைப் பொறுதவர்களான சாருதேஷ்ணன், ஸாம்பன், மஹாரதனான ப்ரத்யும்னன் ஆகிய அவர்கள் யாவரும் கவசம்அணிந்து அழகிய ஆபரணமும் த்வஜமுமுள்ளவர்களாய்த் தேரேறி ஸால்வராஜனுடைய மிகுதியான வீரஸ்ரேஷ்டர்களுடன் நன்கு எதிர்த்தார்கள். ஸாம்பன், யுத்தத்தில் மிக்க ஊக்கத்தையடைந்து வில்லையெடுத்துக்கொண்டு ஸால்வனுடைய மந்திரியும் சேனாபதியுமான க்ஷேமவ்ருத்தியுடன் யுத்தம் செய்தான். பரதஸ்ரேஷ்டரே! அவன்மீது ஜாம்பவதியின் புத்திரன், இந்திரன் மழைபெய்வது

போல, பெரிய அம்புமழையைப் பொழிந்தான். ஓ! மஹாராஜரே! சேனுபதியான அந்த க்ஷேமதூர்த்தி இமயமலைபோல அசைவற்றவனாக நெருக்கமான அந்த அம்புமழையைப் பொறுத்துக்கொண்டான். ராஜேந்திரரே! பிறகு, க்ஷேமதூர்த்தி, தானும் ஸாம்பனைக் குறித்து மாயையால் செய்யப்பட்ட அதிகமான சரக்கூட்டத்தைவிட்டான். பிறகு, அந்த ஸாம்பன் மாயாமயமான சரக்கூட்டத்தை மாயையாலேயே பிளந்து, ஆயிரம் பாணத்தால் அவனுடைய ரதத்தின் மீது பொழிந்தான். ஸாம்பனால் அடிக்கப்பட்ட சேனுபதியான அந்த க்ஷேமதூர்த்தி, பிறகு, ஸாம்பன் பாணங்களால் துன்புறுத்தப்பட்டு, வேகமுள்ள குதிரைகளுடன் ஓடினான். ஸால்வனுடைய சேனுபதியான அந்தச் சூரன் ஓடினவுடன், வேகவானென்னும் பலமுள்ள அஸுரன் என் பிள்ளையை எதிர்த்தான். ராஜேந்திரரே! எதிர்க்கப்பட்டவனும் வ்ருஷ்ணிகுலச்ரேஷ்டனும் வீரனுமான ஸாம்பன் வேகவானுடைய வேகத்தைப் பொறுத்துக்கொண்டு நின்றான். ஓ! கௌந்தேயரே! உண்மையான பராக்கிரமமுள்ளவனும் வீரனுமான அந்தச் சாம்பன் வேகவான்மீது வேகமுள்ள கதையைச் சுழற்றிப் பலத்துடன் எறிந்தான். அரசரே! காற்றினால் தள்ளப்பட்டதும் (யானை முதலியவற்றால்) மிதிக்கப்பட்டதும் வேர் அறுந்ததுமான மரம்போல, அந்தக் கதையால் அடிக்கப்பட்ட வேகவான் பூமியில் விழுந்தான். கதையால் முறிய அடிக்கப்பட்ட அந்த வீரனான பெரிய அஸுரன் விழுந்தவுடன், என் புத்திரன் பெரிய சேனையில் நுழைந்து சண்டை செய்தான். ஓ! மஹாராஜரே! மஹாரதனென்று அறியப்பெற்றவனும் பெரிய வில்லுள்ளவனும் விவிந்தியனென்னும் பெயருள்ளவனுமான அஸுரன் சாருதேஷ்ணனுடன் எதிர்த்தான். பிறகு, முன்பு இந்திரனுக்கும் விருத்திரனுக்கும் யுத்தம் உண்டானது போலச் சாருதேஷ்ணனுக்கும் விவிந்தியனுக்கும் மிகநெருக்கமான யுத்தம் உண்டாயிற்று. மிக்க வலிமையமைந்த சிங்கங்கள் போலச் சப்தித்துக்கொண்டு ஒருவர்மேலொருவர் மிகவும் கோபங்கொண்டு ஒருவரை ஒருவர் பாணங்களால் அடித்தார்கள். பிறகு, ருக்மிணியின் புத்திரன் அக்னிக்கும் ஸூரியனுக்கும் ஒப்பான காந்தியுள்ளதும் சத்துருவை நாசம் செய்வதுமான பாணத்தை மஹாஸ்திர மந்திரத்தால் ஜபித்துத் தொடுத்தான். வேந்தரே! மஹாரதனான அந்த என்னுடைய புத்திரன் கோபத்துடன் உரக்கக் கூப்பிட்டு விவிந்தியனைக் குறித்து (அந்த அம்பை) விடுத்தான்.

அவன் உயிர்போய்க் கீழே விழுந்தான். விவிந்தியன் கொல்லப் பட்டதையும் அந்தச் சேனை மிகக் கலக்கப்பட்டதையும் பார்த்து, அந்தஸால்வன், இஷ்டப்படி செல்லுகின்ற ஸௌபத்துடன் திரும் பவும் சமீபம் வந்தான். ஓ! மிக்க கைவன்மையுள்ளவரே! பிறகு, ஸௌபத்திலிருக்கும் ஸால்வனைப்பார்த்துப் பூமியிலிருக்கும் துவா ரகையிலுள்ள அந்தச்சேனையாவும் கலக்கமடைந்தன. மஹா ராஜரே! கௌரவரே! பிறகு, ப்ரத்யும்னன் வெளியில்வந்து ஆநர்த் தர்களின் அச்சேனையை நிலைநிறுத்தி வார்த்தையும் சொன்னான்: 'நீங்கள் யாவரும் நில்லுங்கள். யுத்தகளத்தில் அரசனுடன்கூடின ஸௌபத்தைப் போரில் வலிமையால் நான் தடுப்பதைப் பாருங்கள். ஓ! யாதவர்களே! பாம்புகள்போன்றவையும் வில்லிலிருந்து நன்கு இழுத்துவிடப்பட்டவையுமான பாணங்களால் இப்படிப்பட்ட நான் இப்பொழுது ஸௌபபதியின் சேனையை நாசமாக்குகிறேன். இளைப் பாறுங்கள்; பயப்படவேண்டாம். ஸௌபராஜன் இப்பொழுது நாசமடைகிறான். கெட்டஎண்ணமுள்ள அவன் என்னால் எதிர்க்கப் பட்டு ஸௌபத்துடன்கூட நாசமடையப்போகிறான்' என்றான். பாண்டுநந்தனரே! ப்ரத்யும்னன் மிக்க ஊக்கம்கொண்டு இவ்விதம் சொல்லும்போது போர்முகத்தில்நிற்கும் அந்தச் சேனையானது மகிழ்ந்து சண்டை செய்தது.

பதினேழாவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்ரீகோவிந்தர் ஸால்வனுக்கும் பிரத்யும்னனுக்கும் நடந்த யுத்தத்தைக் கூறியது.)

[1] பரதச்ரேஷ்டரே! ருக்மிணியின் புத்திரன் யாதவர்களை நோக்கி இவ்விதம் சொல்லிக் கவசம் பூண்ட குதிரைகளுடன்கூடிய பொற்றேரை அடைந்து திறந்தவாயுள்ளதும் அலங்கரிக்கப்பட்டது மான மகரக்கொடியை உயர்த்தி ஆகாயத்தின்மேல் பறப்பன போன்ற அதிகபலமுள்ள அந்தக் குதிரைகளுடன் பகைவர்களை நெருங்கினான். உயர்ந்த வில்லைச் சுழற்றிக்கொண்டும் மிக்க பல சாலிகளைப்பார்த்துக் கர்ஜிக்கச் செய்துகொண்டும் தூணீரம் கத்தி இவைகளைத் தரித்துக்கொண்டும், உடும்புத்தோலாலாகிய விர

---

[1] வேறுபாடம்.

டுறையை அணிந்துகொண்டும், மின்னல் அசைவதற்கொப்பான வில்லை ஒருகையிலிருந்து மற்றொருகையில் வாங்கி விளையாடிக் கொண்டும் சூரனான ப்ரத்யும்னன் ஸௌபத்தில் வஸிக்கும் எல்லா அஸுரர்களையும் மோகிக்கச்செய்தான். வில்லை இழுக்கிறவனும் அடிக்கடி (பாணங்களைத்) தொடுக்கிறவனும் போரில் பகைவர்களைக் கொல்லுகிறவனுமான அவனுடைய (அச்செயல்களில்) இடைநேரத்தை ஒருவரும் பார்க்கவில்லை. அவனுடைய முகத்தின் நிறம் பேதப்படவில்லை. அவனுடைய அங்கங்களும் அசையவில்லை. சிங்கத்திற்கு மேலாயிருக்கும்படி [1] கர்ஜிக்கும் அவனுடைய சிறந்த ஆச்சரியமான வீர்யத்தை உலகம் செவியுற்றது. ஜலத்தில் சஞ்சரிப்பதும் ஸுவர்ணஸ்தம்பத்திலிருப்பதும் திறக்கப்பட்டவாயுள்ளதும் சத்ருவின் பலத்தை அழிக்கக்கூடியதும் ஸால்வனின் சேனாமுகத்தில் பயத்தை விளைவிக்கக்கூடியதுமான சிறந்த மகரக்கொடியானது சிறந்த தேரில் பிரகாசித்தது. அரசரே! பிறகு, சத்ருவைக்கொல்லுகிற ப்ரத்யும்னன் வேகமாய்க் கிளம்பிச் சண்டைசெய்ய விரும்பி ஸால்வனையே எதிர்த்துச்சென்றான். குருகுலச்ரேஷ்டரே! பெரிய யுத்தத்தில் வீரனான பிரத்யும்னன் எதிர்த்துவந்ததை மிக்க கோபங்கொண்ட ஸால்வன் பொறுக்கவில்லை. பகைவரது பட்டணத்தை ஜயிப்பவனும் கோபத்தாலும் மதத்தாலும் கொழுத்தவனுமான அந்த ஸால்வன், இஷ்டப்படி செல்லுகிற (ஸௌபத்திலிருந்து) இறங்கி ப்ரத்யும்னனுடன் யுத்தம் செய்தான். ஸால்வனுக்கும் வ்ருஷ்ணிகளுள் சிறந்த வீரனான பிரத்யும்னனுக்கும், மஹாபலிக்கும் இந்திரனுக்கும் நேர்ந்ததுபோல, நேர்ந்த மிக நெருக்கமான யுத்தத்தை (அங்குக்)கூடிய ஜனங்கள் பார்த்தார்கள். ஓ! வீரரே! அவனுடைய மாயாமயமான ரதமானது தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டதும் கொடிமரத்துடன் கூடியதும் கொடியாடையுடன் கூடியதும் கீழுள்ள கட்டையுடன் கூடியதும் பாணப்பையுடன் கூடியதுமாக இருந்தது. ஓ! பிரபுவே! மிக்க பலமுள்ளவனும் காந்தியுள்ளவனுமான அவன் அந்தச்சிறந்த ரதத்திலேறிக்கொண்டு ப்ரத்யும்னனைக்குறித்துப் பாணங்களை எய்தான். பிறகு, ப்ரத்யும்னன் புஜவேகத்தால் ஸால்வனை நன்கு மோகிக்கச்செய்துகொண்டு யுத்தத்தில் அம்புமழையை வேகமாகப்பெய்தான். அந்த ஸௌபராஜன் அவைகளால் யுத்தத்தில் அடிக்கப்பட்டுப் பொறுக்கவில்லை; எரியும் அக்னிக்கொப்

[1] கர்ஜனத்தைக் கேட்டு வீர்யத்தையும் பார்த்ததென்பது கருத்து.

பான அம்புகளை என் புத்திரன்மேல் விட்டான். மிக்கவலிமையுள்ள அந்தப்ரத்யும்னன் அந்தப் பாணக்கூட்டத்தை வெட்டினான். பிறகு, பிரகாசிக்கும் வேறு அம்புகளை என் புத்ரனிடத்தில் பிரயோகம்செய்தான். ராஜேந்திரரே! அந்த ருக்மிணீபுத்திரன், ஸால்வன்பாணங்களால் அடிக்கப்பட்டு யுத்தத்தில் வேகத்தையடைந்து மர்மத்தைப் பிளக்கும் பாணத்தைவிட்டான். என் புத்திரனால் விடப்பட்ட சிறகுள்ள அந்தப் பாணமானது அவனது கவசத்தை உடைத்து வேகமாக மார்பில் நுழைந்தது. அவன் மிகவும் அடிபட்டு விழுந்தான். அந்த வீரனான ஸால்வராஜன் அறிவற்று விழுந்தவுடன், சிறந்த அஸுரர்கள் பூமியைப் பிளக்கின்றவர்களாக வேகமாக ஓடினார்கள். ஓ! அரசரே! அப்பொழுது, ஸௌபபதியான அரசன் அறிவற்று விழுந்தவுடன், அவனுடைய சேனையானது,'ஆ! ஆ!' என்று அலறுவதாயிற்று. அரசரே! மஹாபலமுள்ள (ஸால்வன்) பிறகு, பிரஜ்ஞையையடைந்து எழுந்து பிரத்யும்னனை நோக்கி வேகமாக அம்புகளை விட்டான். யுத்தத்தில் நிற்கிற பிரத்யும்னன் அப்பொழுது பெரிய அந்தப் பாணத்தால் கழுத்தெலும்பில் மிகவும் அடிக்கப்பட்டுத் துன்பத்தை அடைந்தவனாகக் காணப்பட்டான். மஹாராஜரே! அந்த ஸால்வன் அந்த ருக்மிணி புத்ரனை அடித்து ஒலியால் பூமியை நிரம்பச் செய்கிறவனாகிச் சிங்கநாதத்தைச் செய்தான். பாரதரே! பிறகு, கெட்ட மனமுள்ள அவன், மோகத்தையடைந்த என் புத்ரன்மீது வேகம்கொண்டு திரும்பவும் வேறு பாணங்களை விட்டான். கௌரவஶ்ரேஷ்டரே! அந்தப் பிரத்யும்னன் போர்க்களத்தில் அந்த அதிகமான அம்புகளால் அடிக்கப்பட்டு அதனால் மோகங்கொண்டு (கைகால்) அசைவற்றவனானான்.

பதினெட்டாவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(பிரத்யும்னன் மயங்க, ஸாரதி அவனை வேறிடம் கொண்டு சென்றதும், அவன் களைதெளிந்து ஸாரதியிடம் வருந்திக் கூறியதும்.)

பலமுள்ளவர்களுள் சிறந்த அந்தப் பிரத்யும்னன், ஸால்வனுடைய பாணங்களால் பீடிக்கப்பட்டவுடன், சேனாமுகத்திலுள்ள

விருஷ்ணிகள் எண்ணம் சிதறினவர்களாகி மிகவும் துயரமடைந்தார்கள். அரசரே! பிறகு, பிரத்யும்னன் மயக்கமடைந்தபொழுது, விருஷ்ணி அந்தக சைனியம் யாவும், 'ஆ! ஆ!' என்று அலறியது. ஸால்வன் மிகவும் களிப்படைந்தவனானான். அப்பொழுது, அவன் அவ்வாறு மோகமடைந்ததைக்கண்டு பயிற்சியடைந்த தேர்ப்பாகனான தாருகபுத்ரன் வேகமுள்ள குதிரைகளால் போரிலிருந்து சீக்கிரமாக அவனை வெளியில் கொண்டுபோனான். ரதமானது சிறிது தூரம் கொண்டுபோகப்பட்டவுடன், சிறந்த தேராளியான பிரத்யும்னன் அறிவை அடைந்து வில்லை எடுத்துக்கொண்டு சாரதியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:

'ஸூத புத்திரனே! என்ன காரியம் செய்தாய்? எதற்காகத் திரும்பிப் போகிறாய்? சிறந்த வீரர்களான விருஷ்ணிகளுக்கு யுத்தத்தில் இது தர்மமாகச் சொல்லப்படவில்லை. ஸூத புத்ர! உனக்குப் பெரிய யுத்தத்தில் ஸால்வனைப் பார்த்து மோகமாவது, சண்டையைப் பார்த்துத் துக்கமாவது இல்லாமலிருக்கின்றதா? உண்மையை நீ எனக்குச் சொல்' என்றான். ஸூத புத்ரன், 'ஓ! ஜனார்த்தன குமாரனே! எனக்கு மோகமில்லை; பயமும் என்னை அடையவில்லை. ஓ! கேசவநந்தன! ஆனால், ஸால்வன் உன்னால் ஜயிக்க முடியாதவனென்று நினைக்கின்றேன். ஓ! வீர! பாவம் செய்தவனும் பலமுள்ளவனுமான அப்படிப்பட்ட இவன் தொடர்ச்சியாக எதிர்த்து வருகிறான். சண்டையில் மோகமடைந்த சூரனை தேராளியானவன் தேர்ப்பாகனால் காக்கப்படத் தகுந்தவன். ஆயுஷ்மானே! 'சண்டையில் நீ என்னால் எப்பொழுதும் காக்கப்படத் தகுந்தவன். நானும் உன்னால் எப்பொழுதும் காக்கப்படத் தகுந்தவன்' என்று கருதி நான் விலகிச் செல்லுகின்றேன். ஓ! மிக்க புயவலியமைந்தவனே! ருக்மிணியின் புத்திர! நீயோ ஒருவனாயிருக்கிறாய். அஸுரர்களோ அநேகர்கள். (யுத்தத்தில்) எதிர்ப்பு ஸமனாயில்லையென்று எண்ணியே நான் விலகிச் செல்லுகின்றேன்' என்றான்.

கௌரவரே! அப்பொழுது, தேர்ப்பாகன் இவ்விதம் சொல்லுகையில், மகரத்வஜமுள்ள பிரத்யும்னன், மறுபடியும் தேரைத் திருப்பி, ஸூதனை நோக்கிச் சொல்லலுற்றான். 'ஓ! தாருகன் புத்திரனே! ஸூத புத்ர! நான் உயிருடனிருக்கும்போது ஒருசமயத்திலும் எக்காரணம்பற்றியும் இவ்விதம் போரிலிருந்து விலகிச் செல்வதைநீ திரும்பவும் செய்யாதே. யுத்தத்தைவிட்டுச் செல்லுகிற

வனும், கீழே விழுந்து, 'நான் உன்னைச் சார்ந்தவன்' என்று சொல்லு கிறவனைக் கொல்லுகிறனும், ஸ்திரீயையும் பாலனையும் கிழவனையும் தோற்றவனையும் தலைமயிரவிழ்ந்தவனையும் சஸ்திரமும் ஆயுதமும் ஒடிந்தவனையும் கொல்லுகிறவனும் வ்ருஷ்ணிகுலத்தில் பிறந்தவரல் லர். நீயும் ஸூத குலத்தில் பிறந்தவன்; தேரோட்டுவதில் ஞானத்தை அடைந்தவன். யுத்தங்களில் வ்ருஷ்ணிகளின் வழக்கத்தை அறிந் தவனாகவுமிருக்கிறாய். போர்முனையில் வ்ருஷ்ணிகளின் செயலை முழுமையும் அறிந்த அப்படிப்பட்ட நீ, இவ்விதம் விலகிச் செல் வதை எக்காரணம் பற்றியும் திரும்பவும் செய்யாதே. பின்வாங் கினவனும் முதுகிலடிக்கப்பட்டவனும் மயக்கத்தை யடைந்தவனும் யுத்தத்திலிருந்து ஓடினவனுமான என்னை, நெருங்கமுடியாதவரும் கதனுக்குத் தமையனுருமான மாதவர் என்ன சொல்லுவார்? கேசவருக்கு முன்னுண்டானவரும் நீலவஸ்திரமுள்ளவரும் மிக்க மதமுள்ளவரும் பெரிய தோளுள்ளவருமான பலதேவரும் வந்து சேர்ந்தால் என்ன சொல்வார்? ஓ! ஸூத! யுத்தத்தில் சிங் கம்போன்றவனும் மஹாரதனும் சினியின் பேரனுமான ஸாத்யகி யும் சண்டையில் ஜயிப்பவனுன ஸாம்பனும் யுத்தத்திலிருந்து பின் வாங்கின (என்னை) என்ன சொல்லுவர்? ஸாரதியே! ஜயிக்கமுடி யாத சாருதேஷ்ணனும் கதனும் ஸாரணனும் மஹா பாஹுவான அக்ரூரனும் என்னை என்ன சொல்லுவர்? சூரனும் நன்குமதிக்கப் பட்டவனும் சாந்தனும் எப்பொழுதும் ஆண்மையிற் சிறந்தவ னென்ற செருக்குள்ளவனுமான என்னை விருஷ்ணி வீரர்களின் மனைவியர் ஒன்றுசேர்ந்து என்ன சொல்லுவார்கள்? 'இந்தப் பிரத்யும்னன் பயந்து பெரிய சண்டையைவிட்டு வருகின்றான். இவனை நிந்திக்கவேண்டும்' என்று சொல்லுவார்கள்; 'நன்கு செய் தான்' என்று சொல்லார். ஓ! ஸூதபுத்திர! எனக்கோ என்னைப்போன்றவனுக்கோ, 'நிந்திக்கத்தக்கது' என்ற வார்த்தை யால் செய்யும் பரிகாஸமும் மரணத்தைவிட அதிகமானது. அப்படிப்பட்ட நீ திரும்பவும் பின்போகாதே. மதுவைக்கொன்ற ஹரியானவர் பாரத்தை என்னிடம்வைத்துவிட்டுப் பரதஶ்ரேஷ்ட ருடைய யாகத்திற்குப் போயிருக்கிறார். இப்பொழுது நான் பொறுத்திருத்தல் கூடாது. ஓ! ஸூதகுமார! வெளிக்கிளம்பப் போகிற வீரரான க்ருதவர்மா, 'நான் சால்வனைத் தடுக்கப்போகின் றேன். நீர் நில்லும்' என்று என்னால் தடுக்கப்பட்டார். ஹ்ருதி கரின் புத்திரரான அவரும் என்னைப் புகழ்ந்துகொண்டே திரும்பி

ஞர். யுத்தத்தைவிட்டு அந்த மஹாரதரை அடைந்து என்ன சொல்வேன்? சங்கசக்ரகதாதாரியும் பகைவரால் மீறமுடியாதவரும் பெரிய கைகளுள்ளவரும் புருஷருமான புண்டரீகாக்ஷரை நோக்கி என்ன சொல்வேன்? சாத்தியகியையும் பலதேவரையும் என்னுடன் எப்பொழுதும் போட்டி போடுகின்ற மற்றுமுள்ள அந்தக விருஷ்ணிகளையும் நோக்கி நான் என்ன சொல்லுவேன்? ஓ! ஸூதபுத்திர! இந்த யுத்தத்தைவிட்டுப் பாணங்களால் முதுகில் அடிபட்டவனும் ஸ்வாதீனமற்றவனும் உன்னால்பின்கொண்டுபோகப்பட்டவனுமாகி எவ்விதத்திலும் உயிருடன் இரேன். தாருகநந்தன! மறுபடியும் தேருடன் வேகமாகத் திரும்பு. ஆபத்துக்களிலும் எக்காரணம்பற்றியும் இவ்வாறு பிறகும் செய்யாதே. ஓ! ஸூதபுத்ர! நான் யுத்தத்திலிருந்து பயந்து முதுகில் பாணங்களால் அடிக்கப்பட்டுப் பின்வந்து உயிரை எவ்விதத்திலும் பெரிதாக நினையேன். ஓ! ஸூதபுத்திர! நான் பயத்தால் பீடிக்கப்பட்டுச் சண்டையைவிட்டு இழிவானவனைப்போலப் பின் வாங்கியதை நீ எக்காலத்திலாவது அறிந்ததுண்டா? ஓ! தாருகபுத்திரனே! சண்டையை விட்டுவிடுவதற்கு நான் தக்கவனல்லேன். யுத்தத்தை மிக விரும்புகின்ற எனக்காக அப்படிப்பட்டநீ யுத்தம் நடக்கிற இடத்துக்குப் போவாய்' என்றான்.

பத்தோன்பதாவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(ஸால்வன் பிரத்யும்னனால் தோல்வியடைந்து திரும்பிச் சென்றது.)

ஓ! கௌந்தேயரே! இவ்விதம் சொல்லக்கேட்ட ஸூதபுத்திரன், பிறகு, யுத்தவிஷயத்தில் ப்ரத்யும்னனை நோக்கிச் சாதுரியமானதும் இனியதுமான வாக்கியத்தை உடனே சொல்லலானான். 'ஓ! ருக்மிணி குமாரா! குதிரைகளை ஓட்டுகின்ற எனக்கு யுத்தத்தில் பயமில்லை. விருஷ்ணிகளுடைய யுத்தத்தை அறிந்தவனாகவும் இருக்கின்றேன். இவ்விஷயத்தில் இவ்வாறன்றி வேறுவிதம் செய்யத்தக்கதன்று. ஓ! ஆயுஷ்மானே! தேரோட்டும் காரியத்திலிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியங்களிலும் தேராளியைக் காப்பது முக்கியமென்பது உபதேசமாகக் கருதப்

பட்டது. நீயும் மிகவும் பீடிக்கப்பட்டிருக்கிறாய். ஓ! வீர! நீயோ ஸால்வனால் பிரயோகிக்கப்பட்ட பாணத்தால் மிகவும் அடிக்கப்பட்டாய். குழப்பங்கொண்ட நான் அங்கிருந்தும் வேறிடம்போனேன். ஸாத்வதர்களுட் சிறந்தவனே! கேசவநந்தன! அப்படிப்பட்ட நீ இப்பொழுது தற்செயலாக அறிவை அடைந்தாய். குதிரையோட்டுவதில் என்னுடைய பயிற்சியைப் பார். தாருகனாலுண்டானவனும் முறைப்படியே கற்பிக்கப்பட்டவனுமான நான் பயமற்றவனாக ஸால்வனுடைய பெரிதான இந்தச்சேனையில் பிரவேசிக்கின்றேன்' என்றான்.

இவ்விதம் சொல்லிய பிறகு, வீரனான ஸாரதி, அப்பொழுது, குதிரைகளைக் கடிவாளங்களால் இழுத்துத் தூண்டி வேகமாகப் போரில் எதிர்த்துச் சென்றான். அரசரே! சவுக்கினால் அடிக்கப்பட்டவைகளும் கடிவாளங்களால் இழுக்கப்பட்டவைகளுமான அந்தச் சிறந்த குதிரைகள் ஸமமானவைகளும் ஏற்றத் தாழ்வானவைகளுமான நானாவித மண்டலகதிகளையும் பலவிதமான வலசாரி இடசாரிகளையும் எல்லாவிதத்தாலும் (செய்துகொண்டு) ஆகாயத்தில் தாவுவனபோல விளங்கின. ஓ! அரசரே! அப்பொழுது அவைகள் தாருகபுத்திரனைக் கைதேர்ந்தவனென்று அறிந்து, (அவனால்) உயரத்தூக்கப்படுவனபோலக் கால்களால் பூமியைத் தொடவில்லை. பரதஶ்ரேஷ்டரே! அவன் சிறுமுயற்சியாலேயே அந்த ஸால்வனுடைய சேனையை இடமாகச் சுற்றிவந்தான். அது ஆச்சரியமாயிருந்தது. யுத்தத்தில் பயங்கரனான ஸால்வன் இடமாக வந்ததைப் பொறாமல் அவனுடைய தேர்ப்பாகனை மூன்று பாணங்களால் சீக்கிரமாக நன்கு அடித்தான். ஓ! புஜபலமிக்கவரே! தாருகனுடைய புத்திரனோ, அந்தப் பாணவேகத்தை மதியாமல், மறுபடியும் இடப்பக்கமாகவே போனான். வீரரே! பிறகு, அந்த ஸௌப ராஜன் பலவித பாணங்களை மறுபடியுமே ருக்மிணி புத்ரனான என்னுடைய மகன்மீது விடுத்தான். பகை வீரர்களைக் கொல்பவனான ருக்மிணியின் புத்திரன் புன்னகை செய்து கைத்திறமையைக் காண்பித்துக்கொண்டு அந்தப்பாணங்களைத் (தன்னிடம்) வருமுன்னரே கூர்மையான பாணங்களால் துண்டாக்கினான். ஸௌபராஜன் அந்த அம்புகள் ப்ரத்யும்னனால் அறுக்கப்பட்டதைக்கண்டு பயங்கரமான ஆஸுரமாயையை அடைந்து அம்புகளை எய்தான். பிரத்யும்னன், மஹாபலமுள்ள தைதேயாஸ்திரம் பிரயோகிக்கப்படுதலை அறிந்து, பிரம்மாஸ்திரத்தினால் அதனை வரும்

வழியிலேயே துண்டாக்கி வேறுபாணங்களை விட்டான். இரத்தத்தைக் குடிக்கும் அந்தப் பாணங்கள் அவனால் விடப்பட்ட (வேறு) அஸ்திரத்தைச் சீக்கிரம் தள்ளி (அவனைத்) தலையிலும் மார்பிலும் முகத்திலும் அடித்தன. அவன் மயக்கத்தை அடைந்தான்; (கீழேயும்) விழுந்தான். அந்த அற்பனான ஸால்வன் பாணத்தால் நன்கு பீடிக்கப்பட்டு விழுந்தவுடன், பகைவரை வாட்டுகின்ற ருக்மிணீபுத்ரன் வேறு பாணத்தைப் பூட்டினான். கூட்டமான தாசார்ஹரனைவராலும் ஆசீர்வாதங்களால் பூஜிக்கப்பட்டதும் சூரியனுக்கும் அக்னிக்கும் ஒப்பான காந்தியுள்ளதும் நாணில் பூட்டப்படுகின்றதுமான அந்தப் பாணத்தைக்கண்டு ஆகாசமானது 'ஆ! ஆ!' என்ற ஒலியுள்ளதாயிற்று.

பிறகு, இந்திரனுடனும் குபேரனுடனும் கூடின தேவக்கூட்டத்தாரனைவரும் நாரதரையும் மனோவேகமுள்ள வாயுவையும் அனுப்பினார்கள். அவர்கள் ருக்மிணீ புத்திரனை அடைந்து, 'ஓ! வீர! ஸால்வராஜன் உன்னால் எவ்விதத்திலும் கொல்லத்தக்கவனேயல்லன். திரும்பவும் பாணத்தை இழுத்துக்கொள். யுத்தத்தில் உன்னால் இவன் கொல்லப்படான். இந்தப் பாணத்திற்கும் யுத்தத்தில் கொல்லத்தகாத மனிதன் ஓரிடத்திலுமில்லை. மிக்க புஜபலமுள்ளவனே! தேவகீபுத்திரனான கிருஷ்ணன் யுத்தத்தில் இவனுக்கு மரணத்தைச் செய்பவனென்று பிரம்மாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறான். அது பொய்யாகாது' என்னும் தேவர்களின் வசனத்தைச் சொல்லினர். பிறகு, பிரத்யும்னன் மிக்க களிப்படைந்து மேலான பாணத்தைச் சிறந்த வில்லிலிருந்து எடுத்து அம்புப்பெட்டியிலும் வைத்துவிட்டான். ஓ! ராஜேந்திரரே! பிரத்யும்னனது பாணத்தால் பீடிக்கப்பட்ட ஸால்வன் மிக்க மனவருத்தமுற்று எழுந்து சேனைகளுடன் அங்கிருந்து வேகமாக விலகிச் சென்றான். ஓ! ராஜேந்திரரே! விருஷ்ணிகளாற் பீடிக்கப்பெற்ற அந்தஸால்வன் த்வாரகையை விட்டு ஸௌபத்தை அடைந்து அப்பொழுது ஆகாயத்தை அடைந்தான்.

இருபதாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமன பர்வம். (தொடர்ச்சி.)

(மாதவர் தாம் ஸால்வனுடன் போர்செய்ததை யுதிஷ்டிரருக்குக் கூறியது.)

அரசரே! உம்முடைய ராஜஸூயமென்னும் பெரிய யாகமானது முடிந்தவுடன், அங்கிருந்து, அப்பொழுது (அவனால்) விடப்பெற்ற ஆனர்த்தநகரத்தை நான் அடைந்தேன். ஓ! மஹாராஜரே! நான், த்வாரகையைக் காந்தியிழந்ததும் வேதாத்தியயனமும் வஷட்காரங்களும் அற்றதும் அணியிழந்த சிறந்த ஸ்திரீகளுள்ளதுமாகக் கண்டேன். அறியமுடியாத (=சிதைக்கப்பட்ட) உருவமுள்ள த்வாரகையின் தோட்டங்களைக் கண்டு சங்கை அடைந்த நான், கிருதவர்மாவை நோக்கி, 'ஓ! ஆண்மையிற் சிறந்தவனே! இந்த விருஷ்ணிகளுடைய மாளிகையானது மிகவும் அமைதியற்ற ஆண் பெண்களுள்ளதாயிருக்கின்றது. இஃதென்ன? உண்மையாகக் கேட்க விரும்புகின்றேன்' என்று கேட்டேன். ஓ! அரசிற் சிறந்தவரே! இவ்விதம் என்னால் வினவப்பட்டவனும் ஹ்ருதிகன் புத்திரனுமான அவனும், ஸால்வன் தகைந்ததும் விடுத்ததுமான இதனை விரிவாகச் சொல்லினன். ஓ! பரதஶ்ரேஷ்டரே! யாவற்றையும் மிச்சமின்றிக் கேட்ட பிறகு, ஸால்வராஜனுடைய நாசத்தில் நான் அப்பொழுதே புத்தியைச் செலுத்தினேன். ஓ! பரதஶ்ரேஷ்டரே! பிறகு, நான் பட்டணத்திலுள்ள ஜனங்களையும் தேறுதல்செய்து உக்கிரஸேனமஹாராஜரையும் ஆகுகனையும் வஸுதேவரையும் எல்லா விருஷ்ணி வீரர்களையும் ஸந்தோஷப்படுத்திக் கொண்டு அப்பொழுது பேசினேன்.

'ஓ! யாதவஶ்ரேஷ்டர்களே! எப்பொழுதும் பட்டணத்தில் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். நான் ஸால்வராஜனைக் கொல்லுவதற்காகச் சென்றேனென்று அறியுங்கள். அவனைக் கொல்லாமல் த்வாரகா பட்டணத்தைக் குறித்துத் திரும்பேன். அவனை உள்ளிட்ட ஸௌப நகரத்தைக் கொன்று திரும்பவும் உங்களைப் பார்ப்பேன். பகைவரைப் பயமூட்டும் இந்தத் துந்துபியானது (கீழ்மேல் நடுவென்ற) மூன்றுஸ்வரமுள்ளதாக அடிக்கப்படட்டும்' என்றேன். ஓ! பரதஶ்ரேஷ்டரே! அந்த வீரர்கள் எல்லாரும் என்னால் உள்ளபடி தேறுதல் செய்யப்பட்டுச் சந்தோஷமடைந்து,

'பகைவர்களை வெல்லும்; போம்' என்று என்னை நோக்கிச் சொன்னார்கள்.

நான் பிராம்மணச்ரேஷ்டர்களை ஸ்வஸ்திவாசகங்களைச் சொல்லச் செய்து மிக்க மனக்களிப்புற்ற அந்த (யாதவ) வீரர்களாலும் ஆசீர்வாதங்களால் மகிழ்விக்கப்பட்டுச் [1]சிவபெருமானைத் தலையால் வணங்கிப் பாஞ்சஜன்யமென்கிற சிறந்த சங்கத்தை ஊதித் திக்குக்களைச் சப்திக்கச் செய்துகொண்டு சைப்யம் ஸுக்ரீவமென்னும் குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்துடன், முயற்சியுள்ளதும் (தேர் யானை குதிரை காலாளாகிய) நான்கு அங்கங்களுள்ளதும் வ்யூஹிதம் செய்யப்பட்டதும் ஜயத்தால் விளங்குகின்றதுமான பெரிய சேனையால் சூழப்பெற்றுக் கிளம்பினேன். அனேக தேசங்களையும் அனேக மரமடர்ந்த மலைகளையும் குளங்களையும் நதிகளையும் தாண்டி மார்த்திகாவதமென்னும் தேசத்தை அடைந்தேன். ஓ! புருஷப் புலியே! அவ்விடத்தில் ஸமுத்திரத்திற்கருகில் ஸௌபத்தை அடைந்து ஸால்வன் போவதைக் கேட்டேன். அவனை நான் பின்னால் தொடர்ந்து போனேன். ஓ! ராஜேந்திரரே! பிறகு, ஸால்வ ராஜனை ஸமீபத்தில் பார்த்தேன். பகைவரைக் கொல்பவரே! அங்கிருந்து ஸமுத்திரத்தை அடைந்து பெரிய அலைகளுள்ள அதனுடைய நடுவில் ஸமுத்திரத்தின் உள்ளே ஸால்வன் ஸௌபத்தை அடைந்து இருந்தான். அவன் என்னைப் பார்த்துச் சண்டைக்காகத் தன்னுடைய சேனையை உடனே அனுப்பினான். யுதிஷ்டிரரே! என்னுடைய கையினால் சேனையானது சிறிதே மிச்சமாகச் செய்யப்பட்டபொழுது, கெட்டஸ்வபாவமுள்ள அவன் கர்வமுற்று நன்றாகப் பார்த்து அடிக்கடி (என்னை) யுத்தத்திற்காகவே விரைந்து அழைத்தான். வில்லிலிருந்துவிடப்பட்டவையும் உயிர்நிலைகளைப் பிளக்கக் கூடியவையுமான அனேகம் பாணங்களாலும் அவனுடைய புரமானது நாசம்பண்ணப்படவில்லை. பிறகு, என்னைக் கோபம் வந்தடைந்தது. அரசரே! அஸுரர்களுள் இழிவானவனும் பாவத்தன்மையுள்ளவனும் நெருங்கமுடியாதவனுமான அவனும் ஆயிரக்கணக்கான பாணவர்ஷங்களை என்மீது பெய்தான். அவன் என்னுடைய சேனையிலுள்ளவர்கள் மீதும் தேர்ப்பாகன்மீதும் குதிரைகள்மீதும் அம்புகளை இறைத்தான். நாங்கள் பாணங்களைப் பொருட்படுத்தாதவர்களாக யுத்தம்

1 'பவம்' என்பது மூலம், 'ஹரம்' என்பதும், 'ஆஹுகம்' என்பதும் வேறு பாடங்கள்.

செய்தோம். பிறகு, ஸால்வன்பின்வந்த வீரர்கள், சண்டையில், வணங்கின கணுக்களுள்ள பாணங்களுடைய நூறுயிரங்களை என்னிடத்தில் எறிந்தார்கள். மர்மங்களைப் பிளக்கின்ற அந்தப்பாணங்களால் அந்த அஸுரர்கள் குதிரைகளையும் தேரையும் த்வஜத்தையும் தாருகனையும் மறைத்தார்கள். ஓ! வீரரே! என்னுடைய சேனையிலுள்ளவர்களும் நானும் குதிரைகளும் பாணங்களால் மூடப்பட்டுக் காணப்படவில்லை. கௌந்தேயரே! பிறகு, நானும் தேவர்களின் முறையுடன் ஜபிக்கப்பட்ட பல பதினுயிரம் பாணங்களை வில்லினுல் பிரயோகம் செய்தேன். ஓ! பாரதரே! அவ்விடத்தில் என்னுடைய சேனைக்கு (ஒன்றும்) புலப்படவில்லை. ஆகாயத்திலிருக்கும் அந்த ஸௌபமானது ஒரு குரோச தூரத்திலிருப்பதுபோலக் காணப்பட்டது. பிறகு, ஆகாயத்தையடைந்து பார்த்துக்கொண்டிருக்கும் எல்லாத் தேவர்களும் உரத்த சிங்கநாதத்தாலும் கையொலியினுலும் என்னைச் சந்தோஷப்படுத்தினுர்கள். [1] என் கை நுனியினுல் விடப்பட்டவைகளும் பலவிதமான புங்கங்களையுடையவைகளுமான அம்புகள் அஸுரர்களின் அங்கங்களில் விட்டிற் பூச்சிகள் போல நுழைந்தன. பிறகு, கூரிய கணைகளால் ஸௌபமத்தியில் அடிக்கப்படுகின்றவர்களும் பெரிய கடலில் விழுகின்றவர்களுமாகிய இவர்களுடைய ஹலஹலவென்ற சப்தமானது அதிகரித்தது. அந்த அஸுரர்கள் தோள்களும் கழுத்துக்களும் அறுக்கப்பட்டுத் தலையில்லாத முண்டங்களின் வடிவமாகக் காணப்படுகின்றவர்களாகிப் பயங்கரமாகக் கத்திக்கொண்டு விழுந்தார்கள். விழுந்த அவர்களும் சமுத்திரஜலத்தில் வஸிப்பவைகளால் தின்னப்பட்டார்கள். பிறகு, நான் பசுவின் பாலுக்கும் முல்லைப்பூவுக்கும் சந்திரனுக்கும் தாமரைத் தண்டுக்கும் வெள்ளிக்கும் ஒப்பான காந்தியுள்ள பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தை உரக்க ஊதினேன்.

ஸௌபபதியான ஸால்வன், போரில் அந்தக்கடலில் விழுந்த அவர்களைக்கண்டு, பிறகு, பெரிய கபடயுத்தத்தால் என்னுடன் சண்டைசெய்தான். பிறகு, கதாயுதங்களும், கலப்பைகளும், ப்ராஸங்களும், சூலங்களும், சக்திகளும், கோடாலிகளும், கத்திகளும், (முறையே ஸுப்ரம்மண்யர், இந்திரன், வருணன், யமன் இவர்களின் ஆயுதங்களான) சக்தி குலிசம் பாசம் தண்டம் இவற்றை ஒத்த அம்புகளும், பட்டஸங்களும், புசுண்டிகளும் என்னிடத்தில் எப்பொழுதும் விழுந்தன. அந்த மாயையை நான் ஏற்று மாயை

1 வேறு பாடம்.

யினாலேயே சீக்கிரமாக நாசம் செய்தேன். அந்த மாயை நாசம் செய்யப்பட்டவுடன், அவன் மலையின் கொடுமுடிகளால் யுத்தம் செய்தான். ஓ! பாரதரே! பிறகு, இருட்டுப்போலவும் வெளிச்சம் போலவும், மேகத்தால் மறைந்த தினம்போலவும் மேகமில்லாத தினம்போலவும் தோன்றின. பாரதரே! குளிர்ச்சியும் உஷ்ணமும் நெருப்புமாரியும் புழுதிமழையும் ஆயுதமழையும் உண்டாயின. இவ்விதம், சத்ருவானவன் மாயையைச் செய்து கொண்டு என்னுடன் யுத்தம் செய்தான். அவை அனைத்தையும் நான் அறிந்துகொண்டு மாயையாலேயே நாசம் செய்தேன். காலங் கடவாமல் பாணங்களைக்கொண்டு சண்டையால் எல்லாவற்றையும் ஊதிவிட்டேன். ஓ! மஹாராஜரே! பிறகு, மாயையானது என்னால் யுத்தத்தில் அழிக்கப்பட்டவுடன், அஸுரன், புத்தியை மோகிக்கச்செய்யும் வேறு மாயையைச் செய்தான். ஓ! மஹாராஜரே! கௌந்தேயரே! பிறகு, ஆகாயமானது நூறு சூரியரை உடையது போலவும் நூறு சந்திரரை உடையதுபோலவும் ஆயிரம் பதினாயிரம் நக்ஷத்திரங்களையுடையது போலவும் ஆயிற்று. பிறகு, அப்பொழுது, பகலும் ராத்திரியும் திக்குக்களும் அறியப்படவில்லை. நான் மோகத்தையடைந்தேன். பிறகு, ப்ரஜ்ஞாஸ்த்ரத்தைப் பிரயோகம் செய்தேன். அவனுடைய அஸ்திரமானது என் அஸ்திரத்தால் நாணற் பூப்போலச் சிதற அடிக்கப்பட்டு அழிந்தது. அப்படி அந்த நெருக்கமான சண்டையானது மயிர்க்கூச்சத்தை உண்டுபண்ணக் கூடியதாயிருந்தது. ஓ! ராஜேந்திரரே! மறுபடியும், வெளிச்சத்தை அடைந்து திரும்பவும் பகைவனுடன் யுத்தம் செய்தேன்.

இருபத்தோராவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(கோவிந்தருக்கும் ஸால்வனுக்கும் நடந்த யுத்தத்தில் ஸால்வன் மாயையால் வஸுதேவரை வெட்டிக் காட்டிக் கோவிந்தரை மயக்கியதும், அவர் அது மாயை என்றறிந்து மறுபடியும் சண்டை தொடங்கியதும்.)

இவ்விதம் ஆண்மையிற் சிறந்தவனும் அரசர்களுக்குப் பெரும் பகைவனுமான அந்தஸால்வன் யுத்தத்தில் என்னுடன் சண்டை

செய்கிறதற்காகத் திரும்பவும் ஆகாயத்தை அடைந்தான். ஓ! மஹாராஜரே! பிறகு, மந்தபுத்தியுள்ள ஸால்வன், ஜயத்தை விரும்பிக்கொண்டு, பீரங்கிகளையும் பிரகாசிக்கும் பெரியகதைகளையும் சூலங்களையும் உலக்கைகளையும் கத்திகளையும் கோபத்தால் என்மேல் எறிந்தான். நான் ஆகாயத்திலிருந்து வருகின்ற அவைகளை விரைவில் விடப்பட்ட பாணங்களால் ஆகாயத்திலேயே சீக்கிரம் தடுத்து இரண்டு மூன்றாக வெட்டினேன். பிறகு, ஆகாயத்தில் சப்தம் உண்டாயிற்று. பின்னர் அவன், வணங்கின கணுக்களுள்ள நூறாயிரம் பாணங்களால் தாருகன்மீதும் குதிரைகள்மீதும் தேர்மீதும் நன்கு தூற்றினான்.

ஓ! வீரரே! பிறகு, தாருகன், மயங்கினவன்போல என்னை நோக்கி, 'ஸால்வ பாணத்தால் நன்கு பீடிக்கப்பட்டேன். இருக்க வேண்டுமே என்று இருக்கின்றேன். என்னுடைய அங்கம் மிகவும் சோர்வை அடைகின்றது. இருப்பதற்குச் சக்தியற்றிருக்கின்றேன்' என்று சொன்னான். இவ்விதம் அந்த ஸாரதியினுடைய தீனமான வார்த்தையை நான் கேட்டு அந்த ஸாரதியை நன்கு பார்த்து, அவன் பாணங்களால் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கண்டேன். பாண்டவச்ரேஷ்டரே! அவனுடைய மார்பிலும் தலையிலும் சரீரத்திலும் கையிரண்டிலும் அம்புகளால் நிரப்பப்படாத இடத்தைக் காணவில்லை. மலையிலுண்டாகும் தாதுப்பொடியுள்ள மலையானது மேகங்களால் பொழியப்பட்டு (ச்சிவந்த ஜலத்தைப் பெருக்குவது போல) அவன் சிறந்த பாணங்களின் காயத்திலிருந்து அதிகமான இரத்தத்தைப் பெருகவிட்டான். நீண்டகைகளையுடையவரே! கையில் கடிவாளமுள்ளவனும் யுத்தத்தில் ஸால்வ பாணத்தால் பீடிக்கப்பட்டவனும் தளர்ச்சியடைந்தவனுமான அந்த ஸாரதியைப் பார்த்துத் தேறுதல் செய்தேன். ஓ! பாரதரே! பிறகு, துவாரகையில் வஸிக்கின்றவனும் ஆஹுகனுடைய வேலைக்காரனுமான ஒரு மனிதன் விரைபவனாகி என்தேரிலேறி நட்பினால் சொல்வதுபோல வருத்தமுற்று என்னை நோக்கி அந்த ஆஹுகனுடைய வார்த்தையையே தழுதழுத்த குரலுடன் சொல்லினன். வீரரே! யுதிஷ்டிரரே! அதனை அறிந்து கொள்ளும். (அவன்,) 'துவாரகாதிபதியும் வீரருமான ஆஹுகர் உமக்குச் செய்திசொன்னார். ஓ! கேசவரே! வாரும். உமது பிதாவின் தோழரான ஆஹுகர் உமக்குச் சொல்லிய செய்தியை அறிந்து கொள்ளும். ஓ! வ்ருஷ்ணி

நந்தனரே! யாராலும் எதிர்க்க முடியாதவரே! நீர் (வேறு காரியத்தில்) தலையிட்டிருக்கும்போது, துவாரகையை யடைந்து ஸால்வனால் வஸுதேவர் பலாத்காரமாய்க் கொல்லப்பட்டார். ஓ! ஜனார்த்தனரே! ஆகையால், சிறந்த யுத்தம் செய்தது போதும்; திரும்பிவிடும். துவாரகையையே காப்பாற்றும்; உமக்கு இது பெரிய காரியம்' என்றான்.

இவ்விதமான அவனது வார்த்தையைக் கேட்டு நான் மிக்க மனவருத்தமடைந்து செய்யத்தக்கதும் செய்யத்தகாததுமான காரியத்தின் நிச்சயத்தை அறியவில்லை. ஓ! வீரரே! அந்தப் பெரிய அப்பிரியத்தைக் கேட்டு மனத்தினால் சாத்தியகியையும் பலதேவரையும் மஹாரதனான ப்ரத்யும்னனையும் நிந்தித்தேன். ஓ! குருநந்தனரே! நானே துவாரகையின் பாதுகாவலையும், பிதாவின் ரக்ஷணத்தையும் அவர்களிடத்தில் வைத்து ஸௌபத்தைத் தள்ளும் விஷயத்தில் கிளம்பினேன். பெரிய கையுள்ளவரும் பகைவரைக் கொல்லுபவருமான பலதேவரும் ஸாத்யகியும் ப்ரத்யும்னனும் வீர்யமுள்ள சாருதேஷ்ணனும் சாம்பன் முதலானோர்களும் உயிருடனிருக்கிறார்களோ (இல்லையோ) என்று நான் மிக்க மனவருத்தமுள்ளவனானேன். ஓ! மனிதரிற் சிறந்தவரே! இவர்கள் உயிருடனிருக்கும்போது, வஸுதேவர், நேரில் வந்த இந்திரனாலும் எப்பாடுபட்டும் கொல்லமுடியாதவர். வஸுதேவர் நிச்சயமாகக் கொல்லப்பட்டால் பலதேவர்முதலிய இவர்கள்யாவரும் நிச்சயமாக உயிரையிழந்தார்கள் என்பது என்னுடைய உறுதியான எண்ணம். ஓ! மஹாராஜரே! அந்த எல்லாருடைய நாசத்தையும் அடிக்கடி எண்ணிக்கொண்டு கலங்காமல் திரும்பவும் ஸால்வனுடன் யுத்தம் செய்தேன். ஓ! வீரரே! மஹாராஜரே! அப்பொழுது, அந்த ஸௌபத்திலிருந்து விழுகின்ற வஸுதேவரை நான் பார்த்தேன். பிறகு, என்னை மோகம் வந்தடைந்தது. ஓ! நராதிபரே! விழுகின்ற என்னுடைய அந்தப் பிதாவின் ரூபமானது, புண்ணியமற்றவனாக ஸ்வர்க்கத்திலிருந்து பூதலத்தைக்குறித்து விழுகின்ற யயாதியினுடைய ரூபம்போல (இருந்தது). அவிழ்ந்துபோனதும் அழுக்கடைந்ததுமான தலைப்பாகையும் அவிழ்ந்த உடையும் தலைமயிரும் உள்ளவராக விழுகின்ற அவர் புண்ணியமற்றுவிழும் கிரகம்போலக் காணப்பட்டார். ஓ! கௌந்தேயரே! பிறகு, விற்களுள் சிறந்த சார்ங்கமானது என்னுடையகையிலிருந்து நழுவிற்று. நானும் மோகத்தை அடைந்தவனாகித் தேரின்தட்டில் உட்கார்ந்தேன். ஓ!

பாரதரே! நினைவுதவறித் தேரினுள்ளிருக்கும் என்னை உயிரிழந்தவன்போலப் பார்த்து, பிறகு, என்னுடைய சேனை முழுதும் 'ஆ! ஆ!' என்று அலறியது. கைகளைநீட்டிக்கொண்டும் கால்களை நீட்டிக்கொண்டும் விழுகின்ற என் பிதாவின் ரூபமானது, விழுகின்ற பக்ஷியினுடைய ரூபம்போல விளங்கிற்று.

தோள்வலியமைந்தவரே! வீரரே! சூலத்தையும் பட்டஸத்தையும் கையில் ஏந்தியவர்கள், விழுகின்ற அவரை மிகவும் அடிக்கின்றவர்களாகி என்னுடையமனத்தையும் கலக்கினார்கள். பிறகு, நான், அப்பொழுது, ஒரு முகூர்த்தநேரத்தில் நினைவையடைந்து அந்தப் பெரிய சண்டையில் ஸௌபத்தையும் பார்க்கவில்லை. பகைவனான ஸால்வனையும் பார்க்கவில்லை. வயது முதிர்ந்த பிதாவையும் பார்க்கவில்லை. பிறகு, இது மாயை யென்ற நிச்சயம் என் மனத்திலுண்டாயிற்று. பிறகு, மிக்கமனத்தெளிவை அடைந்தேன்; திரும்பவும், நூற்றுக்கணக்கான பாணங்களை இறைத்தேன்.

இருபத்திரண்டாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(கோவிந்தர் ஸால்வவதத்தைக்கூறி ஸுபத்ரையையும் அபிமன்யுவையும், திருஷ்டத்யும்னன் திரௌபதி புத்திரர்களையும், திருஷ்டகேது தன் தங்கையான நகுலன் மனைவியையும் அழைத்துக்கொண்டு தம் தம் ஊருக்குச் சென்றது.)

ஓ! பரதச்ரேஷ்டரே! பிறகு, நான், அழகிய வில்லைத் தாங்கி, பாணங்களால் ஸௌபத்திலிருந்து அஸுரர்களுடைய தலைகளை வீழ்த்தினேன். பாம்புக்கொப்பான சரீரமுள்ளவையும் உயரப் போகக்கூடியவையும் மிக்க கூர்மையுள்ளவையும் நல்ல கணுக்களுள்ளவையும் வில்லிலிருந்து விடுபட்டவையுமான பாணங்களை ஸால்வராஜனைக் குறித்துப் பிரயோகம்செய்தேன். ஓ! குருகுலத்தை வகிப்பவரே! அப்பொழுது, பிறகு, ஸௌபம் காணப்படவில்லை. மாயையால் மறைந்ததாயிற்று. பிறகு, நான் ஆச்சரியமடைந்தவனானேன். ஓ! மஹாராஜரே! பாரதரே! நான் தைர்

யத்துடன் நிற்கும்போது அந்த அஸுரக்கூட்டத்தினர் விகாரமானமுகமும் தலைமயிருமுள்ளவர்களாகி உரக்கச் சப்தம் செய்தார்கள். பிறகு, பெரிய சண்டையில் சப்தத்தைக் குறிவைத்து அடிக்கும் அஸ்திரத்தை வேகமுள்ளவனாகி அவர்களைத் தொலைக்கவேண்டிப் பிரயோகம் செய்தேன். பிறகு, சப்தம் ஒய்ந்தது. அந்தச் சப்தத்தை உண்டுபண்ணின அந்த அஸுரர்கள் யாவரும், சப்தத்தையே குறியாகவுடையவையும் ப்ரகாசிக்கின்றவையும் சூரியனுக்கொப்பானவையுமான பாணங்களால் கொல்லப்பட்டார்கள். ஓ! மஹாராஜரே! அந்தச் சப்தம் ஒய்ந்தவுடன், மறுபடியும், மற்றோரிடத்தில் வேறு சப்தம் உண்டாயிற்று. அங்கும் பாணங்களால் அடித்தேன். ஓ! பாரதரே! இவ்விதம் பத்துத் திக்குக்கள் முழுமையும் குறுக்கிலும் மேலும் அஸுரர்கள் சப்தம் செய்தார்கள். அவர்களும் என்னால் கொல்லப்பட்டார்கள். ஓ! வீரரே! என்னுடைய கண்களை மயக்கிக்கொண்டு இஷ்டப்படி செல்லும் ஸௌபமானது அங்கிருந்து ப்ராக்ஜ்யோதிஷம் என்னும் பட்டணத்தை அடைந்து மறுபடியுமே காணப்பட்டது. பிறகு, லோகங்களுக்கு நாசத்தைச் செய்யும் பயங்கரமான சரீரமுள்ள அஸுரன் பெரிய கல்மாரியால் சீக்கிரமாக என்னை மூடினான். ஓ! ராஜேந்திரரே! அப்படிப்பட்ட நான் கல்மழையால் நான்கு பக்கத்திலும் பீடிக்கப்பட்டு மலைகளால் மறைக்கப்பட்ட கறையான்புற்றுப்போல இருந்தேன். பிறகு, [1] நான் குதிரைகளுடனும் தேர்ப்பாகனுடனும் கொடிமரத்துடனும் பர்வதங்களால் மறைக்கப்பட்டுப் (பிறரால்) பார்க்க முடியாமையை அடைந்தேன். பிறகு, அப்பொழுது எனது சேனையை அடைந்தவர்களான விருஷ்ணிஶ்ரேஷ்டர்கள் யாவரும் பயத்தால் பீடிக்கப்பட்டுத் திக்குக்களை நோக்கி விரைந்து ஓடினார்கள். ஓ! அரசரே! பிறகு, அவ்விதம் நான் காணப்படாதபொழுது ஸ்வர்க்கம் பூமி ஆகாயம் யாவும், 'ஆ! ஆ!' என்னும் ஒலியுள்ளதாயிற்று. ஓ! மன்னரே! பிறகு, என்னுடைய நேயம்மிக்க ஜனங்கள் மனத்தளர்ச்சியுற்றுத் துக்கமும் சோகமும்அடைந்து அழுது கூக்குரலிட்டார்கள். பகைவர்களுக்குச் சந்தோஷமும் சிநேகிதர்களுக்குத் துக்கமும் உண்டாயின. ஓ! தவறுதலில்லாதவரே! வீரரே! இவ்விதம் (ஸால்வன் என்னை) ஜயித்தான் என்பதைப் பிறகு (ஸாரதியிடமிருந்து) கேட்டேன். பிறகு, நான் இந்திரனுக்குப் பிரியமானதும் எல்லாக் கற்களையும் தொலைக்கக் கூடியதுமான வஜ்ரா

---

1 ஒரு சொல் விடப்பட்டது.

யுதத்தை உயரத் தூக்கிக்கொண்டு அந்த எல்லாப் பர்வதங்களையும் நாசம் செய்தேன். ஓ! மஹாராஜரே! பிறகு, பர்வதங்களின் பாரத்தால் பீடிக்கப்பட்டு உயிரும் செயலும் ஒடுங்கினவைகளான என்னுடைய குதிரைகள் நடுங்குகின்றவைபோலாயின. ஆகாயத்தில் மேகக் கூட்டத்தை விலக்கி வெளிவந்த சூரியனைப்போலக் (கற்குவியலிலிருந்து) வெளிவந்த என்னைப் பந்துக்கள் யாவரும் பார்த்துத் திரும்பவும் சந்தோஷத்தை அடைந்தார்கள். பிறகு, பர்வதங்களின் பாரத்தால் பீடிக்கப்பட்டவையும் உயிரும் செயலும் ஒடுங்கினவையுமான குதிரைகளைக் கண்டு ஸூதன் என்னைக்குறித்து அக்காலத்திற்குரிய வார்த்தையைச் சொல்லலானான்.

'வ்ருஷ்ணி குலத்தில் பிறந்தவரே! நிற்கின்ற ஸௌபபதியான ஸால்வனை நன்கு பாரும். கோவிந்தரே! இவனை அலக்ஷியம் செய்தது போதும். நன்கு முயற்சியைச் செய்யும். ஓ! மிக்க புஜபலமுள்ளவரே! கேசவரே! ஸால்வனிடம் மெதுவாயிருத்தலையும் [1] தாக்ஷிண்யத்தையும் இப்பொழுதே விலக்கிவிடும். இவனை நாசம் செய்யும். இவனை உயிருடன் விடாதீர். ஓ! பகைவரைக் கொல்லுகின்ற வீரரே! பகைவனை எல்லாவித பராக்கிரமத்தாலும் கொல்ல வேண்டும். பலசாலியானவன், பகைவன் பலமற்றவனாயிருந்தாலும் தனது காலடியிலிருந்தாலும் மதிக்கத்தகாதவனாயிருந்தாலும் அவனை அலக்ஷியம் செய்யலாகாது; சண்டையிலிருப்பானாயின் சொல்லவும் வேண்டுமா? ஓ! புருஷப் புலியே! விருஷ்ணி குல ச்ரேஷ்டரே! பிரபுவே! அப்படிப்பட்ட நீர் இவனை எல்லா முயற்சிகளாலும் கொல்லும். நீர் திரும்பவும் காலதாமதம் செய்ய வேண்டாம். கோடிக்கணக்கான மிகப் பலவருஷங்களில் [2]பரசுராமரை ஜயித்த இவன் மற்றவரால் கொல்லப்படத் தகாதவனன்றோ? உம்மைத் தவிர (வேறு) ஒருவரும் (இவனைக் கொல்லக் கூடியவர்) இல்லை. ஓ! வீரரே! உம்மை அடித்தவனும் த்வாரகையை அழித்தவனுமான இவன் மெதுவாக ஜயிக்கப்படத்தக்கவனென்று எண்ணப்படவில்லை; உமக்குச் சிநேகிதனுமல்லன்' என்றான்.

ஓ! கௌந்தேயரே! இது முதலிய ஸாரதியின் வார்த்தையைக் கேட்டு நான் இது உண்மையென்று அறிந்து சண்டையில் ஸால்வராஜனைக் கொல்லுவதற்கும் ஸௌபத்தைத்தள்ளுவதற்கும் புத்தியை உறுதிப்படுத்தினேன். வீரரே! தாருகனை, 'ஒருமுகூர்த்தம் பொறு' என்றும் சொன்னேன். பிறகு, தடுக்கப்படாததும்

---

1 'ஸகிதாம்' என்பது மூலம். 2 ஸபாபர்வம், 161-ம் பக்கத்தில் காண்க.

திவ்யமானதும் பிளக்கமுடியாததும் மிக்க வீர்யமுள்ளதும் அதிக காந்தியுள்ளதும் யாவரையும் தொலைக்கக் கூடியதும் விருப்பமான தும் யுத்தத்தில் அஸுரநாசம் செய்யக்கூடியதுமான ஆக்நேயாஸ் திரத்தை அப்பொழுது வில்லுடன் சேர்த்தேன். யுத்தத்தில், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், அஸுரர்கள், மிலேச்சஅரசர்கள் இவர் களைச் சாம்பலாக்கக்கூடியதும் பெரிதும் கூர்மையான முனையுள்ள தும் காலனுக்கும் அந்தகனுக்கும் யமனுக்குமொப்பானதும் பள பளப்பானதும் குற்றமற்றதும் ஒப்பற்றதும் பகைவர்களை நாசமாக் கக்கூடியதுமான சக்ரத்தை நான் ஜபம்செய்து, 'எவர்கள் இப் பொழுது எனது சத்ருக்களோ அவர்களையும், ஸௌபத்தையும் உன்னுடைய வீர்யத்தால் நாசம்செய்' என்று சொல்லித் தோள் வலிமையால் அவனைக்குறித்துக் கோபத்துடன் ப்ரயோகம் செய் தேன். அப்பொழுது, ஆகாயத்தில் போகின்ற ஸுதர்சனத்தி னுடைய உருவமானது யுகமுடிவில் மிக எரிக்கப்போகின்ற இரண் டாவது ஸூரியனுக்கொப்பாக இருந்தது. அது காந்தியற்ற ஸௌபநகரத்தை அடைந்து, வாளானது உயரத்தில் வைக்கப் பட்டகட்டையைப் பிளப்பதுபோல் நடுவாகப் பிளந்துவிட்டது. பிறகு, ஸுதர்சனத்தின் பலத்தால் அடிக்கப்பட்ட ஸௌப மானது இரண்டாகச்செய்யப்பட்டு, மஹேஶ்வர பாணத்தால் அடிக் கப்பட்ட த்ரிபுரம்போலவிழுந்தது. அந்தஸௌபமானது விழுந்த வுடன், சக்கரமானது எனதுகையை அடைந்தது. திரும்பவும் வேகத்துடன் எடுத்து, 'ஸால்வனின்பொருட்டுச்செல்' என்று நான் சொன்னேன். அது பெரிய யுத்தத்தில் பெரிய கதையைச் சுழற்றி அடிக்கின்ற ஸால்வனைச் சீக்கிரமாக இரண்டாகச் செய்து தேஜ ஸுடன்பிரகாசித்தது. அவ்வீரன் கொல்லப்பட்டவுடன், அஸுரர் கள், மனத்தில் பயமடைந்து எனது பாணங்களால் பீடிக்கப்பட்டு, 'ஆ! ஆ!' என்று சொல்லிக்கொண்டு திக்குக்களை நோக்கிச் சென்றார் கள். பிறகு, நான் ஸௌபத்தின் அருகில் தேரை நிறுத்திச் சந்தோ ஷத்துடன் சங்கத்தை ஊதி ஸ்நேகிதர்களைச் சந்தோஷப்படுத்தி னேன். மேருவின் கொடுமுடிக்கொப்பானதும் நாசம் பண்ணப் பெற்ற உப்பரிகைகளும் கோபுரங்களுமுள்ளதுமான அந்த ஸௌ பம் எரிக்கப்படுவதைப் பார்த்து அந்த ஸ்திரீகள் நன்கு ஓட்டம் பிடித்தார்கள். இவ்விதம் யுத்தத்தில் ஸௌபத்தைத் தள்ளி ஸால் வனைத் தொலைத்து [1] ஆநர்த்ததேசத்துக்குத் திரும்பிவந்து சிநேகி

---

1 'ஆநர்த்தாந்' என்று திருத்தப்பட்டது.

தர்களுக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணினேன். ஓ! அரசரே! ஆகையால், இந்தக் காரணம்பற்றி அஸ்தினபட்டணத்தை நான் அடையவில்லை. ஓ! பகைவர்களைக் கொல்பவரே! வந்திருப்பேனுகில் துரியோதனன் உயிருடனிருக்கமாட்டான். ஓ! வீரரே! அல்லது, யான் வந்திருந்தால் அவ்விதம் சூது நடந்திராது. இப்பொழுது நான் என்ன செய்வேன்? உடைந்த அணையானது ஜலத்தைத் தடுக்க முடியாதன்றோ?' என்றார்.

பெரிய கையுள்ளவரும் புருஷோத்தமரும் நித்திய ஸ்ரீயுடன் கூடியவருமான கேசவர் இவ்விதம் தர்மபுத்திரரை நோக்கிச் சொல்லிவிட்டு, பாண்டவர்களிடம் அனுமதிபெற்றுப் புறப்பட்டார். பெரிய கைகளுள்ள அந்தக் கோவிந்தர் தர்மராஜரான யுதிஷ்டிரரை நமஸ்கரித்து அரசரான அவராலும் பீமனாலும் உச்சியில் முகரப்பட்டும் அர்ஜுனனால் ஆலிங்கனம் செய்யப்பட்டும் இரட்டையரால் நமஸ்கரிக்கப்பட்டும் தௌம்யரால் நன்குமதிக்கப்பெற்றும் திரௌபதியினால் கண்ணீருடன் பூஜிக்கப்பெற்றும் பாண்டவர்களால் பூஜிக்கப்பட்டும் ஸுபத்ரையையும் அபிமன்யுவையும் பொன்மயமான தேரில் ஏற்றிக்கொண்டு தாமும் அதில் ஏறினார். அவர் தர்மபுத்திரரைச் சமாதானப்படுத்தி ஸூரியனுக்கு ஒப்பான காந்தியுள்ளதும் சைப்யம் ஸுக்ரீவம் என்னும் குதிரைகள் பூட்டப்பெற்றதுமான தேருடன் த்வாரகையைக்குறித்துச் சென்றார். அவர்போனபிறகு, பார்ஷதனான த்ருஷ்டத்யும்னனும், திரௌபதியின் புத்திரர்களை அழைத்துக்கொண்டு, அப்பொழுது தன் பட்டணத்தைக்குறித்துச் சென்றான். பிறகு, சேதிராஜனான த்ருஷ்டகேதுவும், பாண்டவர்களைப்பார்த்துவிட்டு, [1] ஸஹோதரியை அழைத்துக்கொண்டு அழகிய சுக்திமதி என்ற பட்டணத்தைக் குறித்துச் சென்றான். ஓ! பாரதரே! அந்தக் [2] கேகயர்களும் அளவற்ற காந்தியுள்ள தர்மபுத்திரரால் விடை அளிக்கப்பெற்று எல்லாப் பாண்டவர்களிடமும் சொல்லிக்கொண்டு போனார்கள். பிராம்மணர்களும் வைஸ்யர்களும் மற்றும் தம் தேசத்தில் வசிப்பவர்களும் நன்கு அனுப்பப்பட்டவர்களாயிருந்தாலும் பாண்டவர்களை விடவில்லை. ஓ! ராஜேந்திரரே! பரதரிற் சிறந்தவரே! காம்யகவனத்தில் அந்த மஹாத்மாக்களின் கூட்டமானது மிக்க

---

1 'நகுலனின் மனைவி; கரேணுமதி என்று பெயருள்ளவள்' என்பது பழையவுரை. இப்பெயர் ரேணுமதி என்றும் வழங்கும்.

2 'இவர்கள் ஸஹதேவன்மைத்துனர்கள்' என்பது பழையவுரை.

ஆச்சரியமான காட்சியுள்ளதாக இருந்தது. பெரியமனமுள்ள தர்மபுத்ரரும் அந்தப் பிராம்மணர்களிடம் அனுமதிபெற்று உரிய காலத்தில், 'ரதத்தைப் பூட்டுங்கள்' என்று ஆட்களை உத்தரவு செய்தார்.

இருபத்துமூன்றாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமன பர்வம். (தொடர்ச்சி.)

(மாதவர் முதலியோர் திரும்பிச் சென்றபின் யுதிஷ்டிரர் நகர ஜனங்களைத் தேற்றி அனுப்பியது.)

அந்த யாதவபதியான மாதவர் போனவுடன், பரமசிவனுக்கு ஒப்பான காந்தியுள்ள வீரர்களான யுதிஷ்டிரரும் பீமஸேனனும் அர்ஜுனனும் இரட்டையரும் திரௌபதியும் புரோஹிதரும் நிஷ்க மென்னும் பொன்னாணயங்களையும் வஸ்திரங்களையும் கோக்களையும், சிக்ஷை வேதங்கள் ப்ரணவம் ஆகிய இவற்றை அறிந்தவர்களுக்குக் கொடுத்து, ஒன்றுசேர்ந்து, சிறந்த குதிரைகளுடன் கூடின மிக்க விலையுள்ள தேர்களில் ஏறிக் காட்டைநோக்கிப் புறப்பட்டார்கள். [1] இருபது வேலைக்காரர்களும் (மற்ற) யாவரும் முன்னரே ஆயுதம் பிடித்தவர்களாகி (பாண்டவர்களுடைய) விற்களையும் சஸ்திரங்களை யும் பிரகாசிக்கின்ற [2] சரங்களையும் நாண்கயிறுகளையும் யந்திரங்களை யும் [3] ஸாயகங்களையும் எடுத்துக்கொண்டு தொடர்ந்துசென்றார் கள். பிறகு, செவிலித்தாயர்களும் வேலைக்காரிகளும் ராஜபுத்ரியி னுடைய ஆடைகளையும் ஆபரணங்களையும் எடுத்துக்கொண்டு தொடர்ந்துசென்றார்கள். இந்திரசேனன் வேகத்துடன் கூடியவ னாகி அவர்களை அழைத்துக்கொண்டு தேருடன் தொடர்ந்து போனான். பிறகு, பெரியமனமுள்ள பட்டணத்து ஜனங்கள் தர்மபுத்திரரை அடைந்து பிரதக்ஷிணம்செய்தார்கள்; தெளி வுள்ள பிராம்மணர்களும் குருஜாங்கலதேசத்தார்களுள் முக் கியமான யாவரும் அந்த யுதிஷ்டிரரிடம் விடைகேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது, அரசரும் பெரியஸ்வபாவமுள்ள வருமான அந்தத் தர்மராஜர் தெளிவுள்ளவராகித் தம்பிகளுடன் சேர்ந்தே அவர்களுக்கு விடையளித்தார்; குருஜாங்கல தேசத் தின் ஜனக்கூட்டத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கவும் நின்

யலர் என்னும் பொருளை யுடையது. 2, 3 – அம்பின் வகை.

ருர். கௌரவர்களில் சிறந்தவரும் மஹாத்மாவுமான அவர், பிதா புத்திரர்களிடத்தில் ஸ்நேகத்தைச் செய்வதுபோல, அவர்களிடத்தில் ஸ்நேகத்தைச் செய்தார். அவர்களும் பரதஸ்ரேஷ்டரான அவரிடத்தில் புத்திரர்கள் பிதாவினிடத்திலிருப்பதுபோல இருந்தார்கள். பிறகு, மஹாஜனக் கூட்டத்தினர் குருக்களுள் சிறந்த வீரரான அவரை நெருங்கிச் சூழ்ந்துகொண்டு இருந்தார்கள். யாவரும், 'ஆ! நாத! ஆ! தர்ம' என்று சொல்லுகிறவர்களும் 1 வெட்கத்தை அடைந்தவர்களும் கண்ணீருடன் கூடிய முகமுள்ளவர்களுமானார்கள். 'குருக்களுள் சிறந்தவரும் ப்ரஜைகளுக்கு அரசருமான தர்மராஜர், பிதா புத்திரர்களை விடுவதுபோலப் பட்டணத்திலுள்ளவர்களும் தேசத்திலுள்ளவர்களுமான இந்த நம்மனைவரையும் விட்டு எங்குச் செல்லுகிறார்? ஓ! நரேந்திரரே! கொடியவர்களும், பாவிகளும், தர்மமே என்றும் இருப்பதென்று கருதும் உமக்குக் கெடுதலை விரும்புகின்றவர்களுமான சிறிதும் இரக்கமற்றபுத்தியுள்ள துரியோதனனையும் பாவத்தில்புத்தியுள்ள சகுனியையும் கர்ணனையும் நிந்திக்கவேண்டும். மஹாத்மாவும் வீண்போகாத செய்கையுள்ளவருமான தர்மராஜர் தாம் சிவனுடைய புரத்திற்கு ஒப்பானதும் ஒப்பற்றதுமான இந்திரப்ரஸ்தமென்ற பட்டணத்தை அமைத்து அதனை விட்டுவிட்டு எங்கேயோ செல்லுகிறாரே? தேவஸபைபோல விளங்குவதும் ஒப்பற்றதும் மஹாத்மாவான மயன் செய்ததும் தேவர்களால் காப்பாற்றப்பட்ட தேவமாயை போன்றதுமான ஸபையைவிட்டுத் தர்மராஜர் எங்குச் செல்லுகிறார்?' என்றார்கள்.

அறம் பொருள் இன்பங்களை அறிந்தவனும் சிறந்த பராக்ரமமுள்ளவனுமான அர்ஜுனன், கூடியிருக்கிற அவர்களை நோக்கி, உரக்கச் சொல்லலானான். 'அரசர் இந்த வாஸத்தைக் காடுகளில் கழித்துப் பகைவர்களின் கீர்த்திகளை (த்தாம்) கவர்ந்துகொள்ளப் போகிறார். பிராம்மணஸ்ரேஷ்டர்களே! நீங்கள், சேர்ந்தும் தனித்தும் இருக்கிறவர்களும் அறம் பொருள்களை அறிந்தவர்களுமான தவசிகளை அடைந்து அருள்வரச் செய்து எங்களுடைய மேலான விருப்பம் நிறைவேறும்படி ப்ரார்த்திக்கவேண்டும்' என்றான். ஓ! அரசரே! இவ்விதம், அர்ஜுனனால் வார்த்தை சொல்லப்பட்டவுடன், அந்தப் பிராம்மணர்களும் மற்ற எல்லாஜாதியார்களும்

1 'கெட்ட அரசனதாளுகையிலிருக்க நேர்கிறதென்ற கவலையால் வெட்கம்' என்பது பழைய வுரை.

சந்தோஷத்துடன் அங்கீகரித்தார்கள். தர்மத்தைச் செய்கிறவர்களுள் சிறந்த தர்மபுத்ரரை ஒன்று சேர்ந்து பிரதக்ஷிணம் செய்தார்கள். தர்மபுத்ரரையும் பீமனையும் அர்ஜுனனையும் திரௌபதியையும் இரட்டையர்களையும் கேட்டுக்கொண்டு ஸந்தோஷமற்றவர்களாயும் தர்மபுத்திரரால் விடைகொடுக்கப்பட்டவர்களாயும் தம் தம் ராஜ்யத்தைக் குறித்துப் புறப்பட்டார்கள்.

இருபத்து நான்காவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் நெடுநாள் வஸிக்க நிச்சயித்துத் துவைதவனம் சென்றது.)

பிறகு, அவர்கள் போனவுடன் குந்தியின் புத்ரரும் ஸத்யமான ப்ரதிஜ்ஞையுள்ளவரும் தர்மத்தில் மனமுள்ளவருமான யுதிஷ்டிரர் எல்லாச் சகோதரர்களையும் பார்த்துச் சொல்லலானார்: 'ஜனமில்லாத வனத்தில் இந்தப் பன்னிரண்டு வருஷம் நாம் வஸிக்கவேண்டும். பெரியகாட்டில் இந்தப் பன்னிரண்டு வருஷமும் நாம் ஸுகமாக வஸிக்கக்கூடியதும் அனேக மான்களும் பக்ஷிகளும் உள்ளதும் பலவகை மலர்களும் கனிகளுமுள்ளதும் அழகியதும் புண்ணியமானதும் புண்ணியசாலிகளுக்குத் தக்கதுமான இடத்தைப் பாருங்கள்' என்றார்.

இவ்விதம் சொல்லப்பட்டவுடன், அர்ஜுனன், நல்ல மனமுள்ளவரும் மனிதர்களுட் சிறந்தவருமான தர்மபுத்திரரைக் குருவைப் போலப் பூஜித்து விடைகூறினன். 'நீரே மஹரிஷிகளையும் பெரியோர்களையும் உபாஸிப்பவர். மனிதலோகத்தில் உம்மால் அறியப்படாதது ஒன்றுமில்லை. உம்மாலோ என்றும் வேதத்தின் கரையை அடைந்தவர்களான வியாஸர் முதலிய அந்தணர்களும், மிக்கதவமுள்ளவரும் புலன்களை அடக்கினவரும் தேவலோகத்திலிருந்து பிரம்மலோகம், கந்தர்வ அப்ஸரஸுகளுடைய லோகம் ஆகிய எல்லா லோகவாயில்களிலும் எப்பொழுதும் சஞ்சரிக்கின்றவருமான நாரதரும் உபாஸிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஓ! ராஜரே! பிராம்மணர்களுடைய அபிப்பிராயங்களையும் அறிவீர். ஸந்தேஹமில்லை. எல்லாருடைய சக்திகளையும் நீரே அறிவீர். ஓ! ராஜரே! நன்மைக்குக் காரணத்தையும் நீரே அறிவீர்; ஓ!

மஹாராஜரே! எந்த இடத்தில் வாஸம்செய்ய விரும்புகின்றீரோ அந்தவிடத்தில் செய்கின்றோம். இந்த த்வைதவனம் என்னும் தடாகமோ புண்ணிய ஜனங்களால் வஸிக்கப்பட்டதும் அதிக புஷ்பமும் பழமுமுள்ளதும் பலவிதமான பக்ஷிகளுள்ளதும் அழகியதுமாக இருக்கின்றது. அரசரே! உமக்கு இஷ்டமானால், இந்த இடத்தில் இந்தப் பன்னிரண்டு வருஷங்களை இனிதாகக் கழிப்போமென்று விரும்புகிறேன். நீர் வேறு எதை நினைக்கின்றீர்?' என்றான். யுதிஷ்டிரர், 'ஓ! பார்த்த! உன்னால் எது சொல்லப்பட்டதோ அது எனக்கும் இஷ்டமே. புண்ணியத்தால் பிரசித்திபெற்ற [1] த்வைதவனமென்னும் பெரிய தடாகத்தைக் குறித்துச் செல்வோம்' என்றார்.

பிறகு, தர்மானுஷ்டானம் செய்யும் அந்த எல்லாப் பாண்டவர்களும் அநேகம் பிராம்மணர்களுடன்கூட த்வைதவனமென்னும் புண்ணியமான தடாகத்தைக் குறித்துச் சென்றார்கள். அக்னிஹோத்திரத்துடன் கூடிய பிராம்மணர்களும் அப்படியே அக்னியில்லாதவர்களும் வேதாத்யயனம் செய்யும் ப்ரம்மசாரிகளும் ஸந்யாஸிகளும் வானப்ரஸ்தர்களும் தபஸ்விகளும் மெய்பேசுவதையே இயற்கையாயுடையவர்களும் கடுமையான விரதமுள்ளவர்களுமான அனேகம் பிராம்மணர்களும் அங்கே யுதிஷ்டிரரை நூற்றுக்கணக்காக வளைந்துகொண்டார்கள். பரதஸ்ரேஷ்டர்களான அந்தப் பாண்டவர்கள் அனேகம் பிராம்மணர்களுடன் அவ்விடத்தில் போய்ப் புண்ணியமானதும் அழகியதுமான த்வைதவனத்தை அடைந்தார்கள். வர்ஷாகாலத்தில் புஷ்பங்களைத் தரித்துக்கொண்டிருக்கும் ஸாலம், பனை, மா, இலுப்பை, அடம்பு, கடம்பு, ஸர்ஜம், மருது, கோங்கு என்னும் மரங்களோடு கூடிய அந்தப் பெரியவனத்தை அரசர் பார்த்தார். அந்தக் காட்டில் மயில், நீர்க்கோழி, சகோரம் ஆகிய இவைகளின் கூட்டங்களும் மயில்களும் குயில்களும் பெரிய மரங்களின் உச்சிகளில் மனத்தை மகிழ்விக்கும் குரலுடன் கூவிக்கொண்டிருந்தன. அதிக மதமுள்ளவைகளும், மலைபோன்றவைகளும், பெண்யானைகளின் கூட்டங்களுடன் கூடியவைகளும், கூட்டங்களுக்குத் தலைமையானவைகளுமான

1 'த்வைதவனம்' என்பது ஒரு தடாகம் என்றும், அதனை உடைய இடத்துக்கும் 'த்வைதவனம்' என்று பெயருண்டென்றும் தெரிகிறது. 'த்வி=சோகமோகங்களாகிய இரண்டு; இதௌ=போய்விட்டன, அது த்வீதம்; த்வீதம் என்பது த்வைதம் என்றாயிற்று. வனம்=ஜலம், த்வைதமான ஜலமிருப்பது; அதாவது, அந்தத் தடாகம்.

பெரிய யானைகளின் பெரிய கூட்டங்களை அவ்வனத்தில் அரசர் பார்த்தார். அழகிய ஸரஸ்வதீநதியை அடைந்து பரிசுத்த மனமுள்ளவர்களும் மரவுரியையும் ஜடையையும் தரிப்பவர்களுமான தர்மம் செய்பவர்களுக்கு இருப்பிடமான அவ்வனத்தில் ஸித்திபெற்ற அனேகக் கூட்டங்களைப் பார்த்தார். பிறகு, தர்மத்தில் மனமுள்ளவர்களுள் சிறந்தவரான அந்த அரசர் தேரிலிருந்து இறங்கித் தம்பிமார்களுடனும் ஜனங்களுடனும், அளவற்ற சக்தியுள்ள இந்திரன் ஸ்வர்க்கத்தை அடைவதுபோல, அந்தக் காட்டை அடைந்தார். ஸத்தியஸந்தரான அவரை ஸித்தசாரணக்கூட்டத்தினரும் பார்க்க விருப்பமுள்ளவராக ஒன்று சேர்ந்து வந்தார்கள். நல்ல மனமுள்ளவரும் அரசருள் சிங்கம் போன்றவருமான அவரைக் காட்டில் வஸிப்பவர்களும் சூழ்ந்து நின்றார்கள். தர்மம் செய்பவர்களுள் சிறந்தவரான அவர் எல்லாப் பெரியோர்களையும் வணங்கித் தேவர்போலவும் அரசர் போலவும் பிரதிமரியாதை செய்யப்பெற்று எல்லாப் பிராம்மணஸ்ரேஷ்டர்களுடனும் கூடிக் கைகூப்பிக்கொண்டு அவ்விடத்தில் புகுந்தார். தம் பிதாவைப்போலப் புண்ணியஸ்வபாவமுள்ளவரும் மஹாத்மாவுமான அந்த அரசர், தர்மத்தில் முயன்றவர்களான தவசிகளால் அருகில்வந்து பூஜிக்கப்பெற்றவராகப் புஷ்பமுள்ள பெரிய மரத்தின் அடியில் உட்கார்ந்தார். பரதஸ்ரேஷ்டர்களான பீமனும் அர்ஜுனனும் இரட்டையரும் திரௌபதியும் அந்த வேலைக்காரருமான யாவரும் வாகனங்களைவிட்டு, (அரசருக்கு) அடங்கினவர்களாகி அவ்விடத்தில் நின்றார்கள். கொடிகள் படர்ந்திருத்தலால் வளைந்திருக்கிற அந்தப் பெரியமரமானது, வாஸத்தை அடைந்தவர்களும் மஹாத்மாக்களும் வில்லாளிகளுமான பஞ்சபாண்டவர்களால் யானைக்கூட்டத்தின் தலைமை யானைகளால் பெரியமலை விளங்குவதுபோல விளங்கிற்று.

இருபத்தைந்தாவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் பாண்டவர்களிடம் வந்து தர்மோபதேசம் செய்து வடக்கே சென்றது.)

அந்தக் காட்டை அடைந்து, ஸுகமடையத் தகுந்தவர்களான ராஜபுத்திரர்கள், கஷ்டமான வாஸத்தை அடைந்து, மங்கள

கரமான அந்த ஸரஸ்வதீநதியின் ஸாலமரக்காடுகளில் இந்திரனுக்கு ஒப்பானவர்களாக ப்ரீதியுடன் வஸித்தார்கள். குருஸ்ரேஷ்டரும் மஹானுபாவருமான அந்த அரசர் அவ்வனத்தில் அதிகமான கனி கிழங்குகளால் முனிவர்களும் துறவிகளும் பிராம்மணஸ்ரேஷ்டர்களுமான யாவரையும் திருப்தி அடைவித்தார். அந்தப் பெரிய வனத்தில் வஸிக்கின்ற பாண்டவர்களான அரசர்களுக்கு நிரம்பின தவமகிமையுள்ள புரோகிதரான தௌம்யர் தந்தைபோல இஷ்டிகளையும் பிதிருக்களைக் குறித்த கர்மங்களையும் செய்தார். ராஜ்யத்திலிருந்து விலகி (வனத்தில்) வஸிக்கின்ற [1] ஸ்ரீமான்களான அந்தப் பாண்டவர்களுக்கு மிக நிறைந்த தேஜஸுள்ளவரும் புராதனருமான மார்க்கண்டேய ரிஷியானவர் அதிதியாக அந்த ஆஸ்ரமத்தைக் குறித்து வந்தார். ஜ்வலிக்கின்ற நெருப்புக்கொப்பான காந்தியுள்ளவரும் தேவர்களாலும் ரிஷிகளாலும் மனிதர்களாலும் பூஜிக்கப்பெற்றவரும் (அங்கே) வந்தவருமான அந்த மஹா முனிவரை ஒப்பற்ற பலமும் வீர்யமுமுள்ளவரும் பெரியமனமுள்ளவரும் குருகுல ஸ்ரேஷ்டருமான யுதிஷ்டிரர் பூஜைசெய்தார். அளவற்ற தேஜஸுள்ளவரும் யாவும் அறிந்தவரும் மஹாத்மாவுமான் அவர், மனவருத்தமடைந்த த்ரௌபதியையும் தர்மபுத்திரரையும் பீமஸேனனையும் அர்ஜுனனையும் பார்த்து மனத்தினால் ஸ்ரீராமரை நினைத்துக்கொண்டு தவசிகளின் நடுவில் சிரித்தார்.

தர்மபுத்திரர், மனந்தளர்ந்து, 'இந்த எல்லாத் தவசிகளும் ஸங்கோசத்துடனிருக்கின்றார்கள். நீர், தவசிகள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, என்னைப்பார்த்து மகிழ்ந்து சிரிக்கிறீர். இது என்ன?' என்று அவரைக் கேட்டார். மார்க்கண்டேயர், 'ஐய! நான் ஸந்தோஷப்படவுமில்லை; சிரிக்கவுமில்லை; களிப்பினாலுண்டான கொழுப்பும் என்னை அடையவில்லை. ஆனால், இப்பொழுது உன்னுடைய ஆபத்தைப் பார்த்து ஸத்யமான வ்ரதமுள்ள தசரத புத்திரரான ராமரை நினைக்கின்றேன். பார்த்தனே! அரசரான அவரும் (உன்னைப்போலவே) தந்தையின் கட்டளைப்படி வில்லேந்தி (த் தம்பியான) லக்ஷ்மணனுடன் காட்டில் வாஸத்தைச் செய்பவராகி முன்பு ரிஸ்யமூக பர்வதத்தின் தாழ்வரையில் என்னாலேயே பார்க்கப்பட்டார். இந்திரனுக்கொப்பானவரும் பெரிய மனமுள்ளவரும் யமனை அடக்குகிறவரும் நமுசியைக்கொன்றவரும் குற்றமற்றவருமான (அந்த) ராமர்

1 'ஸ்ரீமான்கள்=சோபையுடையவர்கள்.' 'வனத்தில வஸிக்கையிலும் சோபைகுறையாதவர்கள்' என்பது.

பிதாவின் கட்டளையினால் காட்டில்சஞ்சரித்துக்கொண்டு தமது தர்மத்தைச் செய்தார். இந்திரனுக்கொப்பான வலிமையுள்ளவரும் மஹானுபாவரும் யுத்தங்களில் ஜயிக்கமுடியாதவருமான அந்த (ராமரும்) ஸுகங்களைவிட்டுக் காடுகளில் சஞ்சரித்தார். ஆதலால், 'நான் மிக்க வலிமையுள்ளவன்' என்று அதர்மத்தைச்செய்யக்கூடாது. குழந்தாய்! நாபாகன் பகீரதன் முதலிய அரசர்களும் கடலை முடிவாகவுடைய இந்தப் பூமியை ஜயித்துச் சத்தியத்தாலேயே நல்ல லோகங்களை ஜயித்தார்கள். 'மிக்க வலிமையுள்ளவன்' என்று அதர்மத்தைச் செய்யக்கூடாது. ஓ! நரச்ரேஷ்டனே!காசி கருசங்களுக்கு அரசனும் பெரியோனுமான அலர்க்கனை, ராஜ்யங்களையும் பொருள்களையும்இழந்தபோதும், விரதம் தவறாமலிருந்தவனென்று சொல்லுகிறார்கள். 'மிக்க வலிமையுள்ளவன்' என்று அதர்மத்தைச் செய்யக்கூடாது. ஓ! நரச்ரேஷ்டனே! பிரம்மாவினால் முந்தின வேதவாக்யங்களினால் விதிக்கப்பட்டதை ஸாதுக்களான ஸப்தரிஷிகள் கௌரவித்துக்கொண்டு ஆகாயத்தில்விளங்குகின்றார்கள். 'மிக்கவலிமையுள்ளவன்'என்று அதர்மத்தைச் செய்யக்கூடாது. ஓ! நரச்ரேஷ்டனே! அரசனே! அதிக பலமுள்ளவையும் மலைகளின் கொடுமுடிகளுக்கொப்பானவையும் தந்தங்களுள்ளவையுமானயானைகளும் ஈசனது கட்டளையிலிருப்பதைப் பார். 'மிக்க வலிமையுள்ளவன்' என்று அதர்மத்தைச் செய்யக்கூடாது. ஓ! நரேந்திரா! அப்படியே, எல்லாப் பிராணிகளையும் பார். ஈசனால் கட்டளையிடப்பட்டபடி தமது ஜாதிக்கேற்றவாறு எப்பொழுதும் செய்கையைச் செய்கின்றன. 'மிக்க வலிமையுள்ளவன்' என்று அதர்மத்தைச் செய்யக்கூடாது. ஓ! பார்த்த! சத்தியத்தாலும் தர்மத்தாலும் தகுந்த நடையினாலும் வெட்கத்தாலும் உனது புகழும் தேஜஸும், ஒளியையே பொருளாகவுடைய ஸூர்யனது காந்தி போல, எல்லாப்பிராணிகளையும் மிஞ்சினவையாக விளங்குகின்றன. ஓ! மஹானுபாவ! அரசனே! பிரதிஜ்ஞைசெய்தபடி காட்டில் கஷ்டமான இந்த வாஸத்தைச் செய்து, பிறகு, விளங்கும் (ராஜ்ய) லக்ஷ்மியைக் கௌரவர்களிடமிருந்து, அந்தத் தேஜஸால் அடையப்போகிறாய்' என்றார். அந்த மஹரிஷியானவர் தவசிகளின் நடுவில் சினேகிதர்களுடன் கூடிய அவரை (நோக்கி) இவ்விதம் வார்த்தை சொல்லிவிட்டுத் தௌம்யரையும் கூடினவர்களான பார்த்தர்களையும் கேட்டுக்கொண்டு அங்கிருந்து வடக்குத்திக்கை நோக்கிப் புறப்பட்டார்.

இருபத்தாறுவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(தால்பியர், க்ஷத்திரியரின் வளர்ச்சிக்குப் பிராம்மணர் காரண மென்பதை யுதிஷ்டிரருக்குச் சொல்லியதும், மஹ ரிஷிகள் யுதிஷ்டிரரிடம் வந்ததும்.)

த்வைதவனத்தில் மஹாத்மாக்களான பாண்டவர்கள் வஸிக்கும்போது, (அந்தப்) பெரிய காடானது பிராம்மணர்களால் நிரம்பப்பெற்றதாயிற்று. எப்பொழுதும் எங்கும் சொல்லப்படுகின்ற வேதகோஷத்தால் புண்ணியமான த்வைதவனமென்னும் தடாகமானது பிரம்மலோகத்திற்கு ஒப்பானதாயிற்று. நான்கு பக்கங்களிலும் சொல்லப்படுகின்ற யஜுஸ், ரிக்கு, ஸாமம், [1]ப்ராம்மணம் இவற்றினுடைய சப்தமானது மனத்திற்கினியதாக இருந்தது. பார்த்தர்களுடைய நாண் ஒலியும் புத்திமான்களான பிராம்மணர்களின் வேதகோஷமும் மனத்துக்கு இனியவையாயிருந்தன. பிராம்மணருடன் சேர்ந்த க்ஷத்திரியஜாதியும் மிகவும் விளங்கிற்று. பிறகு, தால்ப்ய குடும்பத்தைச் சேர்ந்த [2]பகரென்பவர் (சந்தியைப்) பூஜித்து உட்கார்ந்தவரும், ரிஷிகளால் சூழப்பட்டவரும், குந்தியின் புத்திரரும், தர்மராஜருமான யுதிஷ்டிரரைப் பார்த்துச் சொல்லலானார்.

'ஓ! குருஸ்ரேஷ்டரே! ஓ! பார்த்தரே! த்வைதவனத்தில் தவசிகளான பிராம்மணர்களுடைய அக்னி நன்குஜ்வலிக்கின்ற ஹோமவேளையைப்பாரும். இந்தப் புண்யவனத்தில் பிருகுவம்சத்தினரும் அங்கிரஸ் வம்சத்தினரும் வஸிஷ்டவம்சத்தவரும் கஸ்யபவம்சத்தினரும் மிக்கபாக்யசாலிகளான அகஸ்தியவம்சத்தவரும் சிறந்த விரதமுள்ள அத்ரிவம்சத்தவர்களும், உலகமுழுமையிலும் சிறந்தவர்களுமான பிராம்மணர்கள் உம்முடன்சேர்ந்து உம்மால்காக்கப்பட்டுத் தர்மங்களைச் செய்கிறார்கள். ஓ! கௌரவரே! பார்த்தரே! கௌந்தேயரே! உம்மைநோக்கிச் சொல்லப்போகிற என்னுடைய இந்தவார்த்தையை ஒருவழிப்பட்ட மனத்தோடு தம்பிகளுடன் கேளும். க்ஷத்திரியஜாதியுடன் கூடிய பிராம்மணஜாதியும் பிராம்

1 'கத்யா நாம்' என்பது மூலம்; 'ப்ராம்மணம்' என்பது பழைய உரை. பாதம் அக்ஷரம் இவற்றின் வரையறை யின்றி யிருப்பது ப்ராம்மணம்.

2 இவர் தால்ப்யருடைய ப்ராதா என்று தெரிகிறது.

மண ஜாதியுடன் கூடிய க்ஷத்திரியஜாதியும் கிளம்பி, வனங்களை நெருப்பும் காற்றும் எரிப்பதுபோலப் பகைவர்களை எரிக்கும். இவ்வுலகத்தையும் அவ்வுலகத்தையும் ஜயிக்கவிரும்பினவன் நெடுங் காலம் பிராம்மணனோடு சேர்ந்திராதவனாக இருக்கவிரும்பக் கூடாது. அரசன் அறம்பொருள்களையறிந்தவனும் கலக்கமற்ற வனுமான பிராம்மணனையடைந்து பகைவர்களைக் கொல்லுகின் றான். ப்ரஜைகளைக் காப்பதால் செய்யப்படும் மோக்ஷத்திற்கு ஹேதுவான தர்மத்தைச்செய்கின்ற பலியானவன், பிராம்மணனை விட வேறு சிறந்த உபாயத்தை உலகில் அறியவில்லை. பிராம்மண ரின் சேர்க்கையால் பூமியை அடைந்து அஸுரனான பலிசக்கர வர்த்திக்குச் செல்வம் குறைவற்றதாயுமிருந்தது. வேண்டிய வஸ் துக்களால் குறைவில்லாமையும் இருந்தது. அந்தப் பிராம்மணர்க ளிடத்தில் கெடுதலைச் செய்து, பிறகு நாசத்தை அடைந்தான். ஐச்வர்யத்துடன்கூடின இந்தப் பூமியானது, பிராம்மணனோடில் லாத இரண்டாவது வர்ணமான (க்ஷத்திரியனை) நெடுங்காலம் அடைந்திராது. நீதிநூல்களைக் கற்றவனும் பிராம்மணனால் கட் டளையிடப்படுகின்றவனுமான அரசனுக்கு உலகம் வணங்குகின் றது. சண்டையில் நடத்துபவனற்ற யானையினுடைய பலம் குறை வதுபோலப் பிராம்மணர்களுடன் சேர்ந்திராத க்ஷத்திரியனுடைய பலமானது குறைவடைகின்றது. பிராம்மணனுடைய பார்வையா னது ஒப்பற்றது. க்ஷத்திரியனுடைய பலம் ஒப்பற்றது. அவ்விரண் டும் சேர்ந்து ஸஞ்சரிக்கும்போது உலகம் தெளிவையடைகிறது. நெருப்பானது காற்றுடன்கூடி மிகப் பெரிதாகிப் புதரை எரிப்பது போல, க்ஷத்திரியன் பிராம்மணனுடன் கூடிப் பகைவனை எரிக்கின் றான். அடையாததை அடைவதற்கும் அடைந்ததை விருத்திசெய் வதற்கும் ஆலோசனையைப் பிராம்மணர்களிடத்திலேயே செய்ய வேண்டும். அடையப்படாததை அடைவதற்கும், கிடைத்ததை விருத்திசெய்வதற்கும், தக்க பாத்திரத்தில் தானம் செய்வதற்கும் கீர்த்தியுள்ளவனும் வேதமறிந்தவனும் பண்டிதனும் பலநூல்களைக் கற்றவனுமான பிராம்மணனையே (தன்னிடத்தில்) வஸிக்கச்செய்ய வேண்டும். ஓ! யுதிஷ்டிரரே! எப்பொழுதும் உமக்குப் பிராம்மணர் களிடத்தில் உத்தமமான பக்தியிருக்கின்றது. அதனால், உமது கீர்த் தியானது எல்லா உலகங்களிலும் பிரசித்தமாக விளங்குகின்றது' என்றார். பிறகு, அந்தப் பிராம்மணர்கள் யாவரும் தால்ப்யரான பகரைப் பூஜித்தார்கள்; யுதிஷ்டிரர் ஸ்தோத்திரம் பண்ணப்படும்

போது, மிக்க மகிழ்ச்சியுற்றவரானார்கள். த்வைபாயனர், நாரதர், ஜாமதக்நியர், ப்ருதுச்ரவஸ், இந்திரத்யும்னர், பாலுகி, கிருத சேதஸ், ஸஹஸ்ரபாத், கர்ணச்ரவஸ், முஞ்சர், லவணாச்வர், காச்ய பர், ஹாரீதர், ஸ்தூணகர்ணர், அக்னிவேச்யர், சௌனகர், க்ருத வாக், ஸுவாக், ப்ருஹதச்வர், விபாவஸு, ஊர்த்வரேதஸ், வ்ருஷாமித்ரர், ஸுஹோத்ரர், ஹோத்ரவாஹனர் ஆகிய இவர்க ளும் மற்றும் கடுமையான விரதமுள்ள அனேக பிராம்மணர்களும் இந்திரனை ரிஷிகள் பூஜிப்பதுபோலத் தர்மபுத்திரரைப் பூஜித் தார்கள்.

இருபத்தேழாவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதி பீமன்முதலியவருக்கு எதிரில் யுதிஷ்டிரரிடம் துயரத்தோடு முறையிட்டது.)

பிறகு, துக்கசோகங்களுக்கு இருப்பிடமானவர்களும் காட் டை அடைந்தவர்களுமான பார்த்தர்கள் திரௌபதியுடன் மாலைக் காலத்தில் உட்கார்ந்து கதைகளைச் சொன்னார்கள். பிறகு, ப்ரிய மானவளும் பார்க்கத்தகுந்தவளும் கற்றறிந்தவளும் பதிவ்ரதையு மான திரௌபதியானவள் தர்மபுத்திரரை நோக்கிப் பின்வருமாறு வார்த்தையைச் சொல்லினள்.

'கெட்ட எண்ணமுள்ளவனும் குரூரனும் பாவியுமான அந்தத் துரியோதனனுக்கு நாம் (கஷ்டப்படும்போது) சிறிதளவேனும் துக்கமில்லை; நிச்சயம். ஓ! அரசரே! துஷ்டஸ்வபாவமுள்ளவனும் கெட்ட புத்தியுள்ளவனுமான அவன், தோலாடை உடுத்த உம்மை என்னுடன் காட்டுக்கனுப்பிய பின்னும் தாபத்தை அடையவில் லையே? தர்மபரரும் உயர்ந்தவருமான உம்மை அப்பொழுது ஸபை யில் சொல்லக்கூடாத குரூரவார்த்தைகளைக் கேட்கச் செய்தானே? பாவச்செய்கையுள்ள அவனுடைய மனமானது இரும்பினாலா னதே; நிச்சயம். கெட்ட மனமுள்ளவனும் பாவியுமான அவன், நண்பர்கூட்டத்துடன் கூடி, துக்கம் அடையத் தகாதவரும் ஸுக மடையத்தக்கவருமான (உம்மை) இவ்வித துக்கத்தை அடையச் செய்து ஸந்தோஷிக்கின்றான். ஓ! பாரதரே! அரசரே! நீர் தோலை ஆடையாகக்கொண்டு காட்டிற்குக் கிளம்பினபோது பாவிகளான துரியோதனன், கர்ணன், கெட்ட எண்ணமுள்ள சகுனி, கெட்ட

ஸகோதரனும் குரூரனுமான அந்தத் துச்சாஸனன் (ஆகிய இந்த) நான்குபேர்களுக்கு மாத்திரமே அப்பொழுது கண்ணீர்விழவில்லை. ஓ! கௌரவரிற் சிறந்தவரே! துக்கத்தால் முற்றும் சூழப்பட்ட மற்ற எல்லாக் கௌரவர்களுடைய கண்களிலிருந்தும் ஜலம் விழுந்தது. ஓ! மஹாராஜரே! முன்னிருந்த உமது படுக்கையையும் இந்தப் படுக்கையையும் பார்த்துத் துக்கத்திற்கு உசிதமில்லாதவரும் ஸுகத்திற்கு உரியவருமான உம்மைக் குறித்துத் துக்கிக்கின்றேன். ஸபையின் நடுவிலிருந்ததும் தந்தத்தினால் செய்யப்பட்டதும் ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான ஆஸனத்தையும் இந்தக் குசாஸனத்தையும்பார்த்து இந்தச் சோகம் என்னைப் பிளக்கின்றது. ஓ! அரசரே! ஸபையில் அரசர்களால் சூழப்பட்ட உம்மைப்பார்த்தபடி, (இப்பொழுது) பாராதவளாயிருக்கிற என்னுடைய மனத்திற்கு ஆறுதல் ஏது? ஓ! பாரதரே! ஸூர்யனுக்கு ஒப்பானகாந்தியுள்ளவரும் சந்தனத்தினால் பூசப்பெற்றவருமான உம்மைப்பார்த்த நான், சேற்றாலும் அழுக்காலும் பூசப்பட்ட உம்மைப்பார்த்து மயக்கத்தை அடைகின்றேன். ராஜேந்திரரே! உம்மை முந்தி வெண்மையான பட்டாடைகளை அணிந்தவராகப் பார்த்தவளான நான் இப்பொழுது மரவுரிதரித்தவராகப் பார்க்கிறேன். அரசரே! பிரபுவே! விரும்பக்கூடிய எல்லாப் பொருள்களுமுள்ளதாகச் சமையல்செய்யப்பட்ட அன்னம் உம்முடைய வீட்டிலிருந்து பொற்பாத்திரங்களால் அப்பொழுது ஆயிரக்கணக்கான ப்ராம்மணர்களுக்காகக் கொண்டுபோகப்பட்டதையும், ஸந்நியாஸிகளுக்கும் பிரம்மசாரிகளுக்கும் கிருஹஸ்தர்களுக்கும் மிக்க சுவையுள்ள ஆகாரம் உம்மால் கொடுக்கப்பட்டதையும், முந்தி, வீட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் கொடுத்தலால் பூஜிக்கப்பட்டதையும், நன்கு ஸித்தம் செய்யப்பட்டவையும் விரும்பப்படுகின்றவையுமான எல்லாப் பொருள்களாலும் நீர் பிராம்மணர்களைப் பூஜித்ததையும் (இப்பொழுது) பாராதவளாயிருக்கிற என்னுடைய மனத்திற்கு ஆறுதல் ஏது? சுத்தம் செய்யப்பட்ட குண்டலங்களணிந்த யுவாக்களான சமையற்காரர்கள், நன்கு சமையல் செய்யப்பட்ட சுத்தமான அன்னங்களால் உம்முடைய ஸகோதரர்களைப் போஜனம் செய்வித்தார்கள். துக்கத்தை அடையத் தகாதவர்களான அவர்கள் யாவரும் இப்பொழுது காட்டிலுள்ள (ஆகாரத்தால்) காட்டில் ஜீவிக்கின்றதைப் பார்க்கின்றேன். என் மனம் ஆறு

தலை அடையவில்லை. வனத்தில் வஸிப்பவரும் துக்கத்தை அடைந்தவருமான இந்தப் பீமஸேனரை நினைக்கின்ற உமக்கு உசிதகாலத்தில் கோபமானது ஏன் விருத்தி அடையவில்லை? அரசரே! காரியங்களைத் தாமே செய்கிறவரும் தவறுதலில்லாதவரும் ஸுகமடையத் தக்கவருமான பீமஸேனரைத் துக்கத்தை அடைந்தவராகப் பார்த்தும் ஏன் உபேக்ஷை செய்கின்றீர்? அனேகவிதமான வாகனங்களாலும் பலவிதமான வஸ்திரங்களாலும் பூஜிக்கப்பட்ட அவர் காட்டை அடைந்திருப்பதைக் கண்டும் உமக்குக் கோபம் ஏன் விருத்தி அடையவில்லை. இந்தப் பிரபுவானவர் யுத்தத்தில் எல்லாக் குருக்களையும் கொல்லுவதற்கு ஊக்கமுள்ளவர். உமது பிரதிஜ்ஞைக்குக் கட்டுப்பட்டு இவர் பொறுத்திருக்கின்றார். இரண்டு கைகளுள்ளவராயிருந்தும், பாணங்களை வேகமாக விடுவதால் ஆயிரம் கைகளுள்ள கார்த்தவீரியார்ஜுனனுக்கொப்பானவரும், காலனுக்கும் அந்தகனுக்கும் யமனுக்கும் ஒப்பானவரும், உமது யாகத்தில் தமது ஆயுதவல்லமையால் எல்லா அரசர்களும் வணங்கிப் பிராம்மணர்களைப் பூஜிக்கச் செய்தவரும், தேவர்களாலும் அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்டவரும், கவலைப்படுகின்றவரும், புருஷச்ரேஷ்டருமான இந்த அர்ஜுனரைப் பார்த்தும் நீர் ஏன் கோபமடையவில்லை? பாரதரே! ஸுகத்திற்கு உரியவரும் துக்கத்திற்குத் தகுதியில்லாதவருமான அர்ஜுனர் காட்டை அடைந்திருக்கக் கண்டும் உமக்குக் கோபம் விருத்தியடையவில்லையே? அதனால் மதிமயக்கத்தை அடைகின்றேன். எவர் ஒரே தேருடன் தேவர்களையும் மனிதர்களையும் நாகர்களையும் வென்றாரோ அவர் காட்டை அடைந்திருக்கக் கண்டும் உமக்குக் கோபம் ஏன் விருத்தி அடையவில்லை? பகைவர்களை வாட்டுபவரே! எவர் ஆச்சரியமான வடிவமுள்ள வாகனங்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் சூழப்பட்டு அரசர்களிடமிருந்து பொருள்களை வலிந்து கவர்ந்தாரோ, எவர் ஒரே முறையில் ஐந்நூறு பாணங்களை விடுவாரோ அவர் காட்டை அடைந்திருக்கக் கண்டும் உமக்கு ஏன் கோபம் விருத்தி அடையவில்லை? யுத்தத்தில் கேடகங்களுள்ளவர்களுள் சிறந்தவரும் யௌவனமுள்ளவரும் பருத்தவரும் கரியநிறமுள்ளவருமான நகுலரைக் காட்டில் கண்டும் உமக்குக் கோபம் ஏன் விருத்தியடையவில்லை? ஓ! அரசரே! யுதிஷ்டிரரே! அழகிய தோற்றமுள்ளவரும் சூரரும் மாத்ரியின் புத்திரருமான ஸஹதேவரைக் காட்டில் கண்

டும் ஏன் பொறுக்கின்றீர் ? ஓ ! வேந்தரே ! துக்கத்தை அடையத் தகாதவர்களான நகுல ஸஹதேவர் இருவரையும் துக்கத்தையடைந்தவர்களாகப் பார்த்தும் ஏன் உமக்குக் கோபம் விருத்தியடையவில்லை ? துருபதனுடைய குலத்தில் பிறந்தவளும், மஹாத்மாவான பாண்டுவின் மருமகளும், த்ருஷ்டத்யும்னனுக்குத் தங்கையும், வீரர்களுடைய பத்னியும், அவர்களை அனுஸரித்தவளுமான நான் காட்டையடைந்ததைக்கண்டும் ஏன் பொறுத்திருக்கின்றீர்? ஓ ! பரதருள் சிறந்தவரே ! தம்பிமார்களையும் என்னையும் பார்த்தும் உம்முடைய மனம் கஷ்டப்படாத காரணத்தால், உமக்குக் கோபமென்பது சிறிதும் இல்லை; இது நிச்சயம். உலகத்தில் கோபமில்லாத க்ஷத்திரியனில்லை. க்ஷத்திரிய னென்னும் சொல்லுக்கு ஹிம்ஸிப்பவனென்பது உறுப்புப்பொருளென நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. க்ஷத்திரியரான உம்மிடத்தில் அதனை இப்பொழுது மாறுபாடுள்ளதாகக் காண்கின்றேன். ஓ ! பார்த்தரே ! எந்த க்ஷத்திரியன், காலம்வந்தபோது, கோபத்தைக் காண்பிக்கவில்லையோ, அவனை எல்லாப் பிராணிகளும் எப்பொழுதும் அவமதிக்கின்றன. ஆகையால், பகைவர்களைக்குறித்து எவ்விதத்திலும் நீர் பொறுக்கலாகாது. அவர்கள் சக்தியினாலேயே கொல்லப்படத்தகுந்தவர்கள். இவ்விஷயத்தில் ஸந்தேகமில்லை. அப்படியே, எந்த க்ஷத்திரியன் பொறுமைக்குரிய காலத்தில் பொறுக்கவில்லையோ (அவன்) எல்லாப் பிராணிகளுக்கும் வெறுக்கத்தக்கவனாகி இம்மையிலும் மறுமையிலும் கேட்டை அடைகின்றான்.

இருபத்தெட்டாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(காலத்துக்குத் தக்கபடி கோபத்தையும் பொறுமையையும் அடையவேண்டுமென்பதற்குப் பலிப்ரஹ்லாதர்களுடைய ஸம்வாதத்தை உதாரணமாக எடுத்துக் காட்டி, அந்த ஸமயம் கோபத்தை அடையவேண்டு மென்று திரௌபதி யுதிஷ்டிரருக்குச் சொல்லியது.)

இந்த விஷயத்திலும் விரோசனனது புத்திரனான பலிக்கும் ப்ரஹ்லாதனுக்கும் நடந்த ஸம்வாதரூபமான இந்தப் பழைய இதிஹாஸத்தைச் சொல்லுகின்றார்கள். அஸுரச்ரேஷ்டனும் மஹா

புத்திமானும் தர்மங்களின் ரகஸ்யத்தை அறிந்தவனும் பிதாவின் பிதாவும் அஸுரர்களிலும் தைத்யர்களிலும் சிறந்தவனுமான ப்ரஹ்லாதனைப் பலியானவன் கேட்கலானான். 'ஓ! ஐயா! பொறுமை மேலானதா? அல்லது [1] கோபம் மேலானதா? இந்தச் சந்தேகத்தைக் கேட்கின்ற எனக்கு உள்ளபடி சொல்லும். தர்மம் தெரிந்தவரே! இந்த விஷயத்தில் எது மேலானதோ அதை எனக்குச் சந்தேகமறச் சொல்லும். அந்த உபதேசத்தை முழுமையும் கேட்டு அதன்படி செய்வேன்' என்றான். எல்லா நிச்சயத்தையும் அறிந்தவனும் மிக்க அறிஞனுமான பாட்டன், இவ்விதம் கேட்கப்பட்டபொழுது, சந்தேகத்தை வினவுகின்ற அவனுக்கு அவையாவற்றையும் சொல்லலானான். 'ஓ! குழந்தாய்! 'கோபமானது எப்பொழுதும் மேலானதன்று; பொறுமையும் எப்பொழுதும் மேலானதன்று' என்று இந்த இரண்டையும் ஸந்தேஹமறத் தெரிந்துகொள்ளு. ஓ! குழந்தாய்! எவன் எப்பொழுதும் பொறுக்கின்றானோ அவன் அனேக தோஷங்களை அடைகின்றான். அவனை வேலைக்காரர்களும் பகையும் நட்புமில்லாத பொதுவானவர்களும் பகைவர்களும் அவமதிக்கின்றார்கள். எல்லா ஜனங்களும் ஒரு ஸமயத்திலும் அவனை வணங்கார். ஓ! குழந்தாய்! ஆனதுபற்றிக் கற்றோர்களாலும் எப்போதுமே பொறுமையானது விலக்கப்பட்டிருக்கின்றது. அற்ப புத்தியுள்ள வேலைக்காரர்கள் ([2] பொறுமையால்) ஹிதமாயிருப்பவனை அவமதித்து அதிக தோஷமுள்ள தன்மையை அடைகின்றார்கள். அவனுடைய பொருள்களைக் கவர்வதற்கும் விரும்புகின்றார்கள். புத்தியில்லாதவர்களான வேலைக்காரர்கள் எஜமானனுடைய வாகனத்தையும் ஆடைகளையும் அலங்காரங்களையும் படுக்கைகளையும் ஆஸனங்களையும் போஜனங்களையும் பானங்களையும் எல்லாப் பண்டங்களையும் இஷ்டப்படி எடுத்துக்கொள்வார்கள். யஜமானன் உத்தரவிற்கிணங்க, கட்டளையிடப்பட்டுக் கொடுக்கத்தக்க (வஸ்துக்களையும்) கொடார். யஜமானனை அவனுக்குரிய

---

1 'தேஜஸ்' என்பது மூலம்; அதற்கு, சக்தி, அதாவது, பகைவரை அடக்கும்வன்மை முதலிய பல பொருள்கள் உண்டு. இந்த அத்யாயத்தில் கோபம் என்று வருமிடமெல்லாம், மூலத்தில், 'தேஜஸ்' என்று இருக்கிறது. அதற்கு, 'குரோதம்' என்பது பழையவுரை.

2 'அவனை அவமதித்து அதிக தோஷமுள்ள தன்மையை அடைகின்றார்களன்றோ' என்றும் கொள்ளலாம்.

பூஜைகளினால் ஒருபொழுதும் பூஜியார்கள். இவ்வுலகத்தில், அவ மதிப்பானது மரணத்தைப்பார்க்கிலும் நிந்திக்கப்பட்டது. ஓ! குழந்தாய்! அப்படிப்பட்ட பொறுமையுள்ளவனை, வேலைக்காரர் களும் புத்திரர்களும் பரிசாரகர்களும் பொதுநிலையிலிருப்பவர் களும் கடுமையான வார்த்தைகளையும் சொல்லுகின்றார்கள். பொறுமையுள்ள அவனுடைய மனைவியையும் (அவனை) அவ மதித்து விரும்புகின்றார்கள். அவனுடைய ஸ்திரீகளும் புத்தியில் லாமல் இஷ்டப்படி ப்ரவிருத்திக்கின்றார்கள். யஜமானனிடமிருந்து அற்பதண்டனையையும் அடையாமலிருந்தால், துஷ்டர்கள் எப்பொ தும் களிப்படைந்து தோஷத்தை அடைவார்கள்; அபகாரத் தையும் செய்வார்கள். ஒருமனிதன் பெரியவனாயினும் பிறருக்குத் தீங்கு செய்யாதவனாயின் அவன் பூஜிக்கப்படான். மனிதர்கள் ஸர்ப்பங்களைப் பூஜிக்கின்றார்கள்; நாகங்களைக் கொல்லுகின்ற கரு டனைப் பூஜிப்பதில்லை. எப்பொழுதும் பொறுமையுள்ளவர் களுக்கு இவையும் மற்றும் பலதோஷங்களும் உண்டு. ஓ! விரோ சன புத்திரனே! பிறகு, பொறுமையில்லாதவர்களுடைய இந்தத் தோஷங்களை அறிந்துகொள். கோபமுள்ளவன் எப்பொழுதும் ரஜோகுணத்தால் சூழப்பட்டு (க் கோபிக்கத்) தகாதவிடத்திலோ அல்லது (கோபிக்கத்) தக்கவிடத்திலோ தனது சக்தியால் அநேக விதமான சிக்ஷைகளைச் செய்கிறான். கோபத்திற்கு வசப்பட்ட வன் சிநேகிதர்களுடன் விரோதத்தையும் அடைகிறான். உலகத்தா ராலும் அப்படியே உறவினர்களாலும் பகையையும் அடைகிறான். அந்த மனிதன் அவமானத்தினால் பொருள் நாசத்தையும் நிந்தை யையும் அனாதரவையும் மனக்கொதிப்பையும் பகையையும் மயக் கத்தையும் பகைவர்களையும் அடைகிறான். மனிதனானவன் கோபத் தால் மனிதர்களிடத்தில் அநியாயமாக அநேகம் சிக்ஷைகளை (ச் செய்கிறான்). ஐச்வர்யத்திலிருந்தும் ப்ராணன்களிலிருந்தும் பந்து ஜனங்களிலிருந்தும் சீக்கிரமாக நழுவிவிடுகிறான். எவன் தனசாலை முதலியவற்றைப் பெருக்குகிறவர்களையும் திருடர்களையும் கோபத் தாலேயே அணுகுகின்றானோ, வீட்டிலிருக்கும் பாம்பினிடம் நடுங்கு வதுபோல அவனிடமிருந்து உலகம் நடுங்குகிறது. எவனிடமிருந்து உலகம் நடுங்குகிறதோ அவனுக்குச் செல்வம் எவ்விதம் உண்டா கும்? அவனுக்குச் சமயத்தைப் பார்த்துக்கொண்டு உலகமானது அபகாரத்தைச் செய்கின்றது;இது நிச்சயம். ஆகையால்,கோபத்தை அதிகம் வெளியிடக்கூடாது; எப்பொழுதும் மென்மையுள்ளவனாக

வும் இருக்கக்கூடாது. அந்த அந்தக் காலம்வந்தபோது மென்மையுள்ளவனாகவோ அல்லது கோபமுள்ளவனாகவோ இருக்கவேண்டும். எவன் (மென்மைக்குரிய) காலத்தில் மெதுவாகவும் (கோபத்துக்குரிய) காலத்தில் கோபமுள்ளவனாகவும் ஆகிறானோ அவனே இம்மையிலும் மறுமையிலும் ஸுகத்தை அடைகிறான். எப்பொழுதும் விடத்தகாதவைகளும் வித்வான்கள் சொல்லுகின்றவைகளுமான பொறுமைக்குத்தக்க காலங்களை உனக்கு விரிவாகச் சொல்லுகின்றேன். என்னிடமிருந்து கேள்.

எவன் உனக்கு முன் உபகாரியாயிருந்தானோ அவன் பெரிய குற்றம்செய்தவனாயினும்,குற்றம்செய்த அவனுடைய அந்தக்குற்றத்தை உபகாரத்தால் பொறுக்கவேண்டும். அறியாமையை அடைந்த குற்றவாளிகளுடைய குற்றத்தையும் பொறுக்கவேண்டும். எல்லா விஷயத்திலும் மனிதனால் பாண்டித்தியமானது எளிதில் அடையமுடியாததன்றோ? மேலும்,புத்திபூர்வமாகச் செய்து அதைத் தெரியாமல்செய்ததாகச் சொல்வார்களானால்,குற்றம் சிறிதானாலும்,அவ்விதம்கபடமாயுள்ள அந்தப்பாவிகளைக் கொல்லவேண்டும். நீ எல்லாப் பிராணிக்கும் ஒரு பிழை பொறுக்கவேண்டும். இரண்டாவது குற்றம் சிறிதானாலும் (செய்தவன்) கொல்லப்படத்தக்கவனே. அறியாதவனால் ஒருகுற்றம் செய்யப்பட்டதாயிருக்குமானால் பரிசீலனையினால் நன்கு பரீக்ஷைசெய்து அவன் விஷயத்தில் பொறுக்கவேண்டுமென்றே சொல்லுகின்றார்கள். ஸாமோபாயத்தால் குரூரனைக் கொல்லுகிறான். ஸாமோபாயத்தால் நல்லவனையும் கொல்லுகின்றான். ஸாமோபாயத்தால் ஸாதிக்கக்கூடாதது ஒன்றுமில்லை. ஆகையால், ஸாமோபாயமே மிக்க கடுமையானது. காலங்களையும் பிறகு தன்னுடைய பலாபலத்தையும் நன்கு தெரிந்துகொண்டு காரணத்தையும் ஆலோசித்துப்பார்த்துக் கோபமோ அல்லது பொறுமையோ செய்யத்தகுந்தது. தேசகாலங்களை எதிர்பார்ப்பவர்களுக்குத் தேசகாலமில்லாதபோது ஒன்றும்செய்ய இயலாது. அப்படியே, உலகபயத்தாலும் குற்றத்தைப் பொறுக்கவேண்டும். பொறுமைக்கு இவ்வாறான இந்தக் காலங்கள் சொல்லப்பட்டன. இதற்கு வேறாக வருமிடங்களில் கோபத்திற்குச் சமயமென்று சொல்லப்படுகிறது' என்றான். ஓ! நராதிபரே! ஆகையால், பேராசைகொண்டவர்களும் எப்பொழுதும் அபகாரிகளுமான த்ருதராஷ்டிரபுத்திரர்களிடத்தில் உம்முடைய கோபத்திற்கு (இது) காலமென்று நான் நினைக்கின்றேன். இப்பொழுது கௌரவர்

களைக் குறித்துப் பொறுமைக்குரியகாலம் ஒன்றும் இல்லையன்றோ? கோபத்திற்குக் காலம் வந்தபோது, நீர் கோபத்தைச் செலுத்த வேண்டும். மெதுவாயிருப்பவன் அவமதிக்கப்பட்டவனாகிறான். கடுமையாயிருப்பவனிடமிருந்து உலகம் நடுக்கமடைகிறது. காலம் வந்தபோது இரண்டையும் எவன் அறிகிறானோ அவனே பூமிக்கு அரசன்.

இருபத்தோன்பதாவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் திரௌபதியைப் பார்த்துக் கோபத்தில் பல குற்றங்களிருப்பதை எடுத்துக் காட்டிக் கோபத்தை நிந்தித்தது.)

இனிமையான அக்ஷரமும் பதமுமுள்ளதும் அழகியதுமான திரௌபதியின் வார்த்தையைக்கேட்டு அரசரான யுதிஷ்டிரர், புன்னகைசெய்து, அவளைநோக்கிச் சொல்லலானார்:—'மிக்க அறிவுள்ளவளே! கெட்ட புத்தியுள்ள துரியோதனன்நிமித்தம் நீ கோபங்கொண்டாய். அதனால், கோபத்தைப் பலவிதமாகக் கொண்டாடுகிறாய். எல்லாவற்றையும் வேரோடு நாசம்செய்யும் கோபமென்கிற சத்துருவைக் காரணங்களுடன் என்னிடமிருந்து கேட்பாயாக. கோபம் மனிதர்களைக் கொல்லுகின்றது. அதுவே திரும்பவும்(அடக்கப்பட்டால்)மேன்மைப் படுத்துகின்றது.ஓ! பேரறிவுள்ளவளே! இவ்விதம் ஆக்கமும் கேடும் கோபத்தைக் காரணமாயுடையன என்று அறிந்துகொள். மிக்க மங்களமுள்ளவளே! எவன் கோபத்தை அடக்குகின்றானோ அவனுக்கு ஐசுவரியம் உண்டாகிறது; எவன் கோபத்தை அடக்கவில்லையோ அவனுக்குக்கேடு உண்டாகிறது; நிச்சயம். மங்களமுள்ளவளே! ஆகையால், கோபம் கேட்டிற்குக் காரணமாகிறது. ஓ! சுபமானவளே! எப்பொழுதும் கோபத்தை வெளிவிடுகின்றமனிதனுக்கு, மிக்க பயங்கரமான அந்தக் கோபமானது கேட்டிற்கு ஏதுவாகின்றது. இவ்வுலகத்தில் கோப மூலமாகவே ப்ராணிகளுக்கு நாசம் காணப்படுகிறதன்றோ? ஆகையால், என்னைப்போன்றவன் உலகத்தை நாசம் செய்யும் கோபத்தை எவ்விதம் வெளிவிடுவன்? கோபங்கொண்ட மனிதன் பாவத்தைச் செய்வான். கோபங்கொண்டவன் குருக்களையும் கொன்றுவிடுவான். கோபங்கொண்

டவன் குரூரமான வார்த்தையால் பெரியோர்களையும் அவமதிக்கின்றான். கோபங்கொண்டவன் சொல்லத்தகுந்ததையும் சொல்லத்தகாததையும் ஒருபோதும் அறியான். கோபங்கொண்டவனுக்குச் செய்யத்தகாதது இல்லை; அதுபோல, சொல்லத்தகாததுமில்லை. கோபத்தால் கொல்லத்தகாதவர்களையும் கொல்லுவான். கொல்லத்தக்கவர்களை நன்கு பூஜையும் செய்வான். கோபங்கொண்டவன் தன்னையும் எமன்வீட்டை அடையச் செய்வான். இந்தத்தோஷங்களைப் பார்க்கின்றவர்களும் இம்மையிலும் மறுமையிலும் மிகச்சிறந்த ஸ்ரேயஸை விரும்புகின்றவர்களுமான கற்றறிந்த பெரியோர்களால் கோபம் ஜயிக்கப்பட்டிருக்கின்றது. பண்டிதர்களால் விலக்கப்பட்ட அந்தக்கோபத்தை எவ்விதம் என்போன்றவன் செய்வன்? திரௌபதி! இதை எண்ணியே எனக்குக் கோபம் விருத்தி அடையவில்லை. கோபிக்கிறவனுக்குப் பிரதி கோபியாதவன் தன்னையும் பிறர்களையும் பெரிய பயத்திலிருந்தும் காப்பாற்றுகிறான். இவன் இருவருக்கும் தோஷத்தைப் போக்குகிறவன். சக்தியற்றவனும் மூடனும் துன்பமடைந்தவனுமான மனிதன், தன்னிலும் வலியவர்களான மனிதர்களின்மேல் கோபிப்பானாகில், கடைசியில் தேகத்தை விடுகின்றான். மனத்தையடக்காதவனாகிச் சரீரத்தைவிடும் அவனுக்கு உலகங்கள் நசிக்கின்றன. ஓ! திரௌபதி! ஆகையால், சக்தியற்றவனுக்குக் கோபத்தை அடக்குதல் (சிறந்ததென்று) எண்ணப்பட்டிருக்கிறது. அப்படியே, சக்தனான எந்த அறிஞன் துன்பம் செய்யப்பட்டவனாகிக் கோபிக்கின்றானே அவன் சத்ருவை நாசம்செய்து பரலோகத்தில் சந்தோஷத்தை அடையான். ஆகையால், பலமுள்ளவனாலும் பலமற்றவனாலும், எப்பொழுதும், ஆபத்துக்களிலும் அறிவுள்ளவன் பொறுத்துக்கொள்ள வேண்டும். ஓ! திரௌபதி! இங்கே ஸாதுக்கள் கோபத்தை ஜயிப்பதைப் புகழ்கின்றார்கள். பொறுமையுள்ள ஸாதுவானவன் கோபத்தை ஜயித்தல் எப்பொழுதும் இவ்வுலகத்தில் ஸாதுக்களுக்கு ஸம்மதமானது. ஸத்தியமானது பொய்யைக்காட்டிலும் மேலானது. குரூரத்தன்மையைக் காட்டிலும், குரூரமில்லாமை மேலானது. ஆகையால், இவ்விதம் அனேக தோஷமுள்ளதும் ஸாதுக்களால் விலக்கப்பட்டதும் எல்லாலோகத்தையும் நாசம்செய்யக்கூடியதுமான அந்தக் கோபத்தை என்னைப் போன்றவன் விடவேண்டும். தீர்க்கதர்சிகளான பண்டிதர்கள், எவனைப் பராக்கிரமமுள்ளவனென்று சொல்லுகின்றார்களோ, அவனுக்கு

கோபம்[1] விரும்பப்பட்டதாக ஆகாதென்பது நிச்சயம். எவன் உண்டான கோபத்தை அறிவால் தடுக்கின்றானோ அவனை உண்மையறிந்த கற்றோர்கள் பராக்ரமமுள்ளவனாக அறிகின்றார்கள். அழகிய இடையுள்ளவளே! கோபமுள்ளவன் கார்யத்தை உள்ளபடியே பார்க்கிறதில்லை; கோபமுள்ள மனிதன் அகார்யத்தை ஆலோசித்துப் பார்ப்பதில்லை; மரியாதையையும் நினைக்கிறதில்லை. கோபங்கொண்டவன் சொல்லத் தகாதவர்களையும் கொல்லுகின்றான். கடுமையான (வார்த்தைகளால்) குருக்களையும் துன்பப்படுத்துகின்றான். ஆகையால், பராக்ரமத்தைக் காட்ட வேண்டிய போது, கோபமானது நெடுந் தூரத்தில் விலக்கத்தக்கது. வினைமுடிக்குந்திறமை, பகைவருக்குத் துன்பம் விளைவிக்கும் உபாயத்தை ஆலோசித்தல், பகைவரை அடக்கும் திறமை, காரியத்தைச் சீக்கிரம் முடிக்குந்தன்மை ஆகியநான்கும் தேஜஸியின்குணங்கள். இவைகள் கோபமூண்டவனால் உள்ளபடி அடையத்தக்கவை அல்ல. மனிதன் கோபத்தைவிட்டாலன்றோ நன்கு பராக்ரமத்தை அடைவான்? மிக்க புத்தியுள்ளவர்களானாலும் கோபமடைந்தால் காலதேசத்திற்கேற்ற சக்தியானது நன்கு அடையமுடியாது. அறியாதவர்களால் கோபமானது பராக்ரமமென்று அடிக்கடி நிச்சயிக்கப்பட்டது. லோகநாசத்திற்காக மனிதர்களைக் குறித்து ரஜோகுணத்தின்கார்யமான கோபமானது ஏற்படுத்தப்பட்டது. ஆகையால், அடிக்கடி நற்காரியத்தைச் செய்யும் மனிதன் கோபத்தை விடவேண்டும். தன்னுடைய தர்மத்திலிருந்து விலகாதவன் சிறந்தவனென்பதும் (தன் தர்மங்களை விட்ட) கோபங்கொண்டவன் சிறந்தவனல்லனென்பதும் நிச்சயம். நிந்திக்கத்தகாதவளே! புத்தியில்லாத மூடர்களுக்கு எல்லாவற்றிலும் தவறுதல் ஏற்படுமானால் என்போன்றவனுக்கு எவ்விதம் தவறுதல் ஏற்படும்? மனிதர்களுள் பூமிக்கொப்பான பொறுமையுள்ளவர்கள் இரார்களானால் மனிதர்களுக்குச் சேர்க்கை உண்டாகாது. பகையானது கோபத்தை மூலமாக உடையதன்றோ? துன்பம் செய்யப்பட்டவன் பிறருக்குத் துன்பத்தை உண்டுபண்ணுவான். குருவினால் துன்புறுத்தப்பட்டவன் (குருவையும்) துன்புறுத்துவான். இவ்விதமானால் பிராணிகளுக்கு நாசத்தை யுண்டுபண்ணும் அதர்மம் பரவினதாகும். வாயினால் வையப்பட்ட மனிதன், பிறகு, யாவரையும் திருப்பி வைவான்; அடிக்கப்பட்டால், திருப்பி அடிப்பான். துன்பம் செய்யப்பட்

1 'அப்யந்தர:' என்பது மூலம்.

டால் அப்படியே துன்பம் செய்வான். பிதாக்கள் புத்திரர்களை அடிக்கின்றார்களன்றோ? அதுபோலப் புத்திரர்கள் பிதாக்களையும் அடிக்கின்றார்கள். கணவர்கள் மனைவிகளையும், மனைவிகள் கணவர்களையும் அடிக்கின்றார்கள். அழகிய முகமுள்ள திரௌபதி! லோகம் இவ்விதம் மிக்க கோபத்தை அடைந்தபோது உத்பத்தியுண்டாகாது. ப்ரஜைகளின் பிறப்பை (த் தம்பதிகளின்) ப்ரீதியைக் காரணமாகஉடையதென்றுஅறிந்துகொள். ஓ! திரௌபதி!அப்படிப்பட்ட கோபங்கொண்ட எல்லா மனிதர்களும் சீக்கிரம் குறைவடைவார்கள். ஆகையால், கோபமானது ப்ரஜைகளுக்கு நாசத்திற்கும் செல்வக்குறைவிற்கும் (காரணமானது). உலகத்தில் பூமிக்கொப்பான பொறுமையுள்ளவர்கள் காணப்படுகிற காரணத்தால் ப்ராணிகளுக்குப் பிறப்பும் ஐஶ்வரியமும் உண்டாகின்றன. கல்யாண குணமுள்ளவளே! இங்கே பொறுமையுள்ளவனிடமிருந்தே ப்ராணிகளின் பிறப்பும் சொல்லப்படுதலால், எல்லா ஆபத்துக்களிலும் மனிதன் பொறுத்துக்கொள்ளவேண்டும். பலமுள்ளவனால் நிந்திக்கப்பட்டாலும், அடிக்கப்பட்டாலும், கோபிக்கப்பட்டாலும் அசக்தன் பொறுப்பதுபோலப் பொறுத்துக்கொள்ளுகிறவனும், எப்பொழுதும் கோபத்தை ஜயித்தவனும் சிறந்த வித்வானுமான பெருமைவாய்ந்தவனுக்கு அழிவற்ற உலகங்கள் கிடைக்கின்றன. கோபிப்பவன் அறிவு குறைந்தவனாகி இம்மையிலும் மறுமையிலும் நாசத்தையடைகிறான். ஏ! கிருஷ்ணையே! இவ்விஷயத்திலும் பொறுமையுள்ளவர்களில் சிறந்தவரும் மஹாத்மாவுமான காஶ்யபரால் சொல்லப்பட்டவையும் எப்பொழுதும் பொறுமையுள்ளவர்களைப் பற்றியவையுமான ஶ்லோகங்களைச்சொல்லுகின்றார்கள்.

'பொறுமையே தர்மம். பொறுமையே யாகம். பொறுமையே வேதங்கள். பொறுமையே சாஸ்திரம். எவன் அதை இவ்விதம் அறிகிறானோ அவன் யாவற்றையும் பொறுத்துக்கொள்ளத் தக்கவனாகிறான். பொறுமையே [1] ப்ரம்மம். பொறுமையே ஸத்தியம். பொறுமையே சென்றதும் வருவதும். பொறுமையே தவம். பொறுமையே சௌசம். பொறுமையினாலேயே இந்த ஜகத்தானது தரிக்கப்பட்டிருக்கின்றது. பொறுமையுள்ளவர்கள் யஜ்ஞத்தையறிந்தவர்களின் லோகங்களைத் தாண்டி அவைகளுக்கும் மேலான ஸ்தானத்தை அடைகின்றார்கள். ப்ரம்மத்தை அறிந்தவர்களின் உலகத்தையும் தபஸ்விகளின் உலகங்களையும் தாண்டி மேலான

1 'ப்ரம்ம' என்பது மூலம், 'ப்ராம்மணஜாதி' என்பது பழையவுரை.

உலகமடைகின்றார்கள். யாகம் செய்கிறவர்களுடைய உலகங்கள் வேறு. (குளம் வெட்டுதல், தேவாலயம் கட்டுதல், தோட்டம்வைத்தல் முதலிய) கர்மாவைச் செய்கிறவர்களுடைய உலகங்கள் வேறு. பொறுமையுள்ளவர்களுக்கு ப்ரம்மலோகத்தில் மிகப் பூஜிக்கப்பட்ட உலகங்கள் (உண்டு). பொறுமையே சக்தியுள்ளவர்களுடைய சக்தி. பொறுமையே தவசிகளின் தவம். பொறுமையே சத்தியமுள்ளவர்களுடைய சத்தியம். பொறுமையே யாகம். பொறுமையே மன அடக்கம். ஓ! கிருஷ்ணையே! எந்தப் பொறுமையில் வேதமும், சத்தியமும், யாகங்களும், லோகங்களும் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட அந்தப் பொறுமையை என்போன்றவன் எவ்விதம் விடுவன்? யாகம் செய்கிறவர்களுக்கு (வேறு) உலகங்கள் சொல்லப்படுகின்றன. அதுபோலவே, பொறுமையுள்ளவர்களுக்கும் வேறுஉலகங்கள் சொல்லப்பட்டன. அறிவுள்ளவனான மனிதன் எப்பொழுதும் பொறுத்துக்கொள்ளவேண்டும். எப்பொழுது யாவற்றையும் பொறுக்கிறானோ அப்பொழுது பிரம்மமாகிறான். பொறுமையுள்ளவர்களுக்கே இந்த உலகம் (உண்டு). பொறுமையுள்ளவர்களுக்கே பரலோகமும் உண்டு. பொறுமையுள்ளவர்கள் இவ்வுலகத்தில் நன்குமதிப்பை அடைகின்றார்கள்; பரலோகத்திலும் மேலான கதியை அடைகின்றார்கள். எந்த மனிதர்களுடைய கோபமானது எப்பொழுதும் பொறுமையால் தடைசெய்யப்பட்டதோ அவர்களுக்கு [1] மிகச்சிறந்த லோகங்களுண்டு. ஆகையால், பொறுமை சிறந்ததென்று கருதப்பட்டது. எப்பொழுதும் பொறுமையுள்ளவர்களின் பெருமைகள் இவ்விதம் காச்யபரால் சொல்லப்பட்டன. ஓ! திரௌபதி! நீ பொறுமையின் பெருமையைக் கேட்டுச் சந்தோஷம் அடைவாயாக; கோபியாதே. சந்தனுவின் குமாரரும் பிதாமஹருமான பீஷ்மர் நமது அடக்கத்தைப் புகழுவார். தேவகீபுத்திரரான கேசவரும் அடக்கத்தைப் புகழுவார். துரோணாசாரியரும் க்ஷத்தாவான விதுரரும் அடக்கத்தையே மேலாகச் சொல்லுவார்கள். கிருபரும் ஸஞ்சயனும் அடக்கத்தையே (மேலென்று)சொல்லுவார்கள். ஸோமதத்தனும் யுயுத்ஸுவும் அசுவத்தாமாவும் அப்படியே அடக்கத்தை மேலானதாகச் சொல்லுவார். எங்கள் பாட்டனாரான வியாஸரும் எப்பொழுதும் அடக்கத்தைப்(புகழ்ந்து)சொல்லுகின்றார். துரியோதனராஜன் இவர்களால்

---

1 ஸத்தியலோகத்தில் அனுபவிக்கத்தக்க பொருள்கள் உண்டு என்பது.

ஸமாதானத்தைக் குறித்து ஏவப்பட்டு, ராஜ்யத்தை நிச்சயமாய்க் கொடுப்பானென்பது என்னுடைய எண்ணம். பேராசையால் கொடாவிடில் நாசத்தைஅடைந்துவிடுவான். பரதர்களுடையநாசத் திற்காகப் பயங்கரமான இந்தக் காலம் வந்திருக்கிறது என்னும் நிச்சயம் முந்தியே எனக்கு எப்பொழுதும் உண்டு. பொறுமையா னது துரியோதனன் யோக்கியனல்லனென்று என்னையே அடை கின்றது. ஆகையால், அவ்விஷயத்தில் நானே தக்கவனென்று இவ்விதம் பொறுமை என்னை அடைகின்றது. இது விவேகிகளின் நடை. இது ஸநாதனமான தர்மம். ஆகையால், நான் பொறுமை யையும் அஹிம்ஸையையும் உண்மையாக அனுஷ்டிக்கப்போகி றேன்' என்றார்.

முப்பதாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(கணவர்களுடைய கஷ்டங்களைப் பார்த்துத் துன்பமடைந்த திரௌபதி தர்ம முதலியவற்றைக் காட்டிலும் தெய்வமே பெரிதென்று கூறியது.)

திரௌபதி, 'உமக்கு மோகத்தை உண்டுபண்ணினவர்களான ஈச்வரருக்கும் பூர்வகர்மாவுக்கும் வணங்குகின்றேன். நீர் ஆளத் தகுந்ததும் தகப்பன் பாட்டன் முறையாகக் கிடைத்ததுமான ராஜ்யத்தில் உமக்கு வேறான புத்தி உண்டாயிருக்கின்றது. ஒவ் வொரு பிறவியிலும் வெவ்வேறுவிதமான போக்யவஸ்துவானது வினைக்குத் தக்கபடி ஏற்படுத்தப்பட்டது. ஆகையால், கர்மாக்கள் நிச்சயமான பயனுள்ளவைகள். மோகத்தால் கர்மபலன்களை விட விரும்புகிறான். இவ்வுலகத்தில் பொறுக்கமுடியாத இந்தத் துக்க மானது உமக்கு நேர்ந்திருந்தால், தர்மத்தாலும் அஹிம்ஸையா லும் பொறுமையாலும் நேர்மையாலும் கருணையுள்ளவனாயிருப்ப தாலும் ஒருபோதும் ஐச்வரியத்தை ஒருவன் அடையான். நீரும் இந்தத்துக்கத்துக்குத் தக்கவரல்லீர்; மிக்க பராக்கிரமமுள்ள உமது இந்தப் பிராதாக்களும் ஸஹிக்கத்தக்கவரல்லர். பாரதரே! அவர் கள் அக்காலத்திலும் இப்பொழுதும் ஒருகாலும் ஒன்றையும் தர் மத்தைவிட மிக்க பிரியமாகக் கருதவில்லை. (தர்மத்தை) உயிரை யும்விட மேலானதாக நினைக்கின்றனர். 'தர்மத்திற்காகவே உம்

முடைய ராஜ்யம். தர்மத்திற்காகவே உம்முடைய உயிர்வாழ்க்கை' என்று பிராம்மணர்களும் குருக்களும் தேவதைகளும் அறிவார்கள். பீமார்ஜுனர்களையும் மாத்ரியின் புத்திரர்களான இருவர்களையும் என்னையும் நீர் விட்டுவிடுவீரென்பது என்னுடைய எண்ணம்; ஆனால், தர்மத்தையோ விடமாட்டீர். தர்மத்தைக் காப்பாற்றுகின்ற அரசனை அப்படி காக்கப்பட்ட தர்மம் காப்பாற்றுகின்றதென்று பெரியோர்களிடமிருந்து நான் கேட்டிருக்கிறேன். உம்மையோ அது காப்பாற்றுதென்று நினைக்கின்றேன். ஓ! மனிதரிற் சிறந்தவரே! மற்றவர்களைவிட்டு நித்யமாக எப்பொழுதும் தர்மத்திலேயே உம்முடைய புத்தியானது மனிதனைத் தன்னுடைய நிழல்போல அநுஸரிக்கின்றது. ஸமமானவர்களையும் தாழ்ந்தவர்களையும் நீர் அவமதிக்கமாட்டீர். சிறந்தவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? எல்லாப் பூமியையும் அடைந்தும், ப்ரபுவென்ற அபிமானம் உமக்கு விருத்தியடையவில்லை. ஓ! பார்த்தரே! ஸ்வாஹாகாரங்களால் தேவதைகளையும் ஸ்வதாகாரங்களால் பிதிருக்களையும் பூஜைகளால் ப்ராம்மணர்களையும் எப்பொழுதும் உபாஸிக்கின்றீர். ஓ! பார்த்தரே! பாரதரே! மோக்ஷத்தை அடைய விருப்பமுள்ள ஸந்யாஸிகளும் கிருஹஸ்தருமான ப்ராம்மணர்கள் எப்பொழுதும் எல்லாப் பதார்த்தங்களைக்கொண்டும் உம்மால் திருப்தியடைவிக்கப்பட்டார்கள். தங்கப்பாத்திரங்களால் சாப்பிட்டார்கள். போஜனம் செய்விக்கும் விஷயத்தில் நான் வேலைக்காரியாக இருந்தேன். காட்டிலுள்ளவர்களுக்குக் காட்டிலுள்ள போஜனங்களைக் கொடுக்கின்றீர். ப்ராம்மணர்களுக்குக் கொடுக்கக்கூடாதது உம்முடைய வீட்டில் ஒன்றுமில்லை. வைச்வதேவத்தின் முடிவில் காலையிலும் மாலையிலும் அதிதிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் கொடுத்து மிஞ்சின அன்னத்தைக்கொண்டு ஜீவிக்கின்றீர். ஓ! குற்றமற்றவரே! காம்யங்களும் நைமித்திகங்களுமான இஷ்டிகளும் பசுபந்தங்களும் பாகயஜ்ஞங்களுமான யஜ்ஞங்கள் எப்பொழுதும் நடக்கின்றன. ராஜ்யத்தைவிட்டு ஜனமற்றதும் திருடர்களால் வஸிக்கப்பட்டதுமான இந்தப் பெரியகாட்டில் வஸிக்கையிலும், வஸிக்கின்ற உமக்குத் தர்மம் குறைவையடையவில்லை. அச்வமேதமும் ராஜஸூயமும் பௌண்டரீகமும் கோஸவமும் மற்றுமுள்ள அநேக யஜ்ஞங்களும் தக்ஷிணையுடன் உம்மால் செய்யப்பட்டன. ஓ! பார்த்தரே! தீங்குள்ள தான சூதின் அபஜயத்தில் விபரீதமான புத்தியால் சிநேகிதர்களையும் எங்களையும் தனங்களையும்தோற்றீர். கோணலில்லாதவரும்

தயையுள்ளவரும் மிகக்கொடுக்கிறவரும் புத்திமானும் உண்மைபேசுகிறவருமான உமக்குச் சூதென்னும் வ்யஸனத்தில் செல்லும் புத்தி எப்படி உண்டாயிற்று? ஓ! பார்த்தரே! மிகவும் பொறுக்கமுடியாத உம்முடைய இந்தத் துக்கத்தைப் பார்த்து மிக்கமயக்கம்வருகிறது. மனம் வருத்தத்தையடைகிறது. உலகமானது ஈச்வரருடைய வசத்தில் கட்டுப்பட்டிருப்பதுபோலத் தன் வசத்தில் கட்டுப்பட்டிருக்கவில்லை என்பதைப்பற்றி இந்த இதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள்.

முந்தியகர்மாவைப் பெரிதாக அநுஸரிக்கிறவரும் ஸ்ருஷ்டிப்பவருமான ஈச்வரரே பிராணிகளுக்கு ஸுகதுக்கங்களும் பிரியாப்பிரியங்களுமான எல்லாவற்றையும் கொடுக்கிறார். அரசரே! ஒரே இடத்தில் மனத்தை நிறுத்தினவனும் தீரனுமான மனிதன் கட்டையால்செய்யப்பட்ட பெண்பதுமையை எவ்விதம் சரீரத்தையும் ஒவ்வோர் அவயவங்களையும் ஆட்டிவைக்கிறானோ அவ்விதமே இந்த ப்ரஜைகளை ஆட்டிவைக்கிறார். பாரதரே! ஈச்வரர் ஆகாயம்போல இங்கு எல்லாப்ராணிகளையும் வ்யாபித்துநின்று க்ஷேமத்தையும் கெடுதலையும் செய்விக்கிறார். கயிற்றால் கட்டப்பட்ட கிளிபோல இந்த ஜீவன் தன் வசமில்லாதவனாக நடத்தப்படுகிறான்; ஈச்வரருடைய வசத்திலிருந்துகொண்டிருக்கிறான்; ஆதலால், மற்றவர்களுக்கும் தனக்கும் யஜமானனல்லன். நூலில் கோக்கப்பட்ட மணிபோலவும், மூக்குக்கயிற்றால் கோக்கப்பட்ட காளைபோலவும், தன்மயனாயும் அவருக்கு அடங்கினவனாயுமிருந்துகொண்டு ஈச்வரருடைய கட்டளையை அநுஸரிக்கிறான். நழுவி விழுந்து ப்ரவாகத்தினுடைய நடுவையடைந்த கரையிலுள்ள மரம்போல இந்த மனிதன் அஸ்வதந்திரனாகி[1] ஈச்வரரை அநுசரிக்கிறான். அறிவற்ற இந்த மனிதன் ஈச்வரரால் ஏவப்பட்டுத் தன்னுடைய ஸுகதுக்கங்களில் ஸ்வதந்திரமில்லாமல் ஸ்வர்க்கத்தையோ நரகத்தையோ அடைவான். ஓ! பாரத! புல்நுனிகள் பலமுள்ள காற்றினுடைய வசத்தை எவ்விதம் அடைகின்றனவோ அவ்விதம் எல்லாப்ராணிகளும் ஈச்வரருடைய வசத்தை அடைகின்றன. ஈச்வரரோ ப்ராணிகளை நல்லகர்மாவிலோ கெட்ட கர்மாவிலோ சேர்த்துக்கொண்டு பரவியிருக்கிறார். இவர் இப்படிப்பட்டவர் என்று காணப்படவில்லை. ஈச்வரர் சுபத்தையும் அசு

---

1 'காலம் பஜதி' என்பது மூலம். 'பரமாத்மாவை அடைகிறான்' என்பது பழையவுரை.

பத்தையும் பயனுகவுடைய கர்மாக்களை எதனுல் செய்விக்கிருரோ, க்ஷேத்திரமென்று பெயரையுடைய அப்படிப்பட்ட இந்தச் சரீரமானது ஈசருக்குக் காரணமாத்திரமே. எவர் தம்முடைய மாயையால் பிராணிகளை மோகிக்கச்செய்து பிராணிகளைக்கொண்டே கொல்லுகின்ருரோ, அப்படிப்பட்ட ஈசரால் செய்யப்பட்ட இந்த மாயையின் மகிமையானது எவ்விதமென்பதைப் பாரும். உண்மையைக் கண்டவர்களான முனிவர்களால் வேறுவிதமாகப் பார்க்கப்பட்டவைகள் (மூடர்களுக்கு) [1] வாயுவின் வேகம்போல வேறுவிதமாகச் சுற்றுகின்றன. அந்த அந்த வஸ்துக்களைக் குறித்து மனிதர்கள் வேறு விதமாகவே கொள்ளுகிருர்கள். அவைகளை ஈஸ்வரர் வேறு விதமாக ஆக்கவும் அழிக்கவும் செய்கிருர். அசைவற்றதும் அறிவற்றதுமான கட்டையைக் கட்டையாலும், கல்லைக் கல்லினுலும், இரும்பை இரும்பினுலும் எவ்விதம் வெட்டுவானே அவ்விதம் தாமாயுண்டானவரும் ப்ரம்மாவின் பிதாவும் தேவருமான அந்தப் பகவான் மாயையைச்செய்து, பிராணிகளைக்கொண்டுபிராணிகளைக் கொல்லுகிருர். பாலன் விளையாட்டுப்பொருள்களினுல் விளையாடுவதுபோலத் தாம்விரும்பியபடி செய்யும் பிரபுவான இந்தப் பகவான் சேர்த்தும் பிரித்தும் பிராணிகளால் விளையாடுகின்ருர். அரசரே! ஈஸ்வரர் மாதாபிதாவைப்போலப் பிராணிகளிடத்திலிருக்கவில்லை. இந்த மற்றமனிதர்கள்போலக் கோபத்தோடு பிரவிர்த்திக்கிருர். நல்லொழுக்கமுள்ள மேலோர்கள் வெட்கமுள்ளவர்களும் ஜீவனத்திற்காகக் கஷ்டப்படுகின்றவர்களுமாயிருத்தலையும், துஷ்டர்கள் மெய்ம்மறந்து ஸுகமுள்ளவர்களாயிருத்தலையும் கண்டு ஆலோசனை செய்கின்றேன். ஓ! பார்த்தரே! உமக்கு நேர்ந்திருக்கிற இந்த ஆபத்தையும் துரியோதனனிடத்திலிருக்கிற செல்வத்தையும் பார்த்து இந்த மாருன நிலைமையைப் பார்க்கிற அந்த ஈஸ்வரரை நிந்திக்கின்றேன். மேலோர்களின் சாஸ்திரத்தைக் கடந்தவனும் குரூரனும் பேராசையுள்ளவனும் தர்மத்தை அழிப்பவனுமான துரியோதனனிடத்தில் செல்வத்தைக்கொடுத்து ஈஸ்வரர் என்ன பயனை அடைகிருர்? செய்யப்பட்ட வினையானது செய்தவனையேயன்றி மற்றவனை அடையாதானுல், அந்தத் தீவினையால் ஈஸ்வரர் நிச்சயம் பற்றப்படுகிருர். செய்யப்பட்ட பாபகர்மாவானது செய்தவனையே அடையாவிடில் இவ்விஷயத்தில் (மனித) வலிமையே

1 'வேகா இவ நபஸ்வத:' என்பது மூலம். 'சூரியகிரணங்கள் போல' என்பது பழையவுரை.

காரணமென்று எண்ணி இங்கே பலமற்ற ஜனங்களைக் குறித்துத் துக்கிக்கின்றேன்' என்றாள்.

முப்பத்தோராவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் தர்மத்துக்குப் பயனுண்டென்று திரௌபதிக்குக் கூறியது.)

யுதிஷ்டிரர், 'ஓ! யஜ்ஞசேனன் குமாரியே! சுபமானதும் அழகிய சொல்லுள்ளதும் இனியதுமாக உன்னால் சொல்லப்பட்ட வார்த்தையானது எம்மால் கேட்கப்பட்டது. ஆனால், நாஸ்திக்யத்தைப் பேசுகிறாய். ஓ! ராஜபுத்ரீ! நான் தர்மத்தில் பயனை விரும்பிக்கொண்டு செய்யவில்லை; கொடுக்க வேண்டுமென்றே கொடுக்கிறேன்; யாகம் செய்யவேண்டுமென்றே யாகம் செய்கிறேன். ஓ! கிருஷ்ணையே! இவ்விஷயத்தில் பயன் இருக்கட்டும்; அல்லது, இல்லாமல் போகட்டும். கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கும் மனிதன் எதைச் செய்யவேண்டுமோ அதைச் சக்திக்கேற்றவாறு செய்கின்றேன். ஓ! அழகிய இடையுள்ளவளே! சாஸ்திரங்களை மீறாமலும் ஸாதுக்களின் ஆசாரத்தைப் பார்த்தும் தர்மத்தைச் செய்கின்றேனேயல்லாது தர்மபலத்திற்குவேண்டிச் செய்யவில்லை. ஓ! கிருஷ்ணையே! இயற்கையிலேயே என்னுடைய மனம் தர்மத்திலேயே நாட்டப்பட்டிருக்கிறது. தர்ம வியாபாரம் செய்கிற அற்பன் தர்மவாதிகளுள் தாழ்ந்தவன். தர்மத்தின் பயனை அடைய விரும்புகிறவனும் நாஸ்திக்யத்தால் பாவத்தில் மனமுள்ளவனாய்த் தர்மத்தைச் செய்து ஸந்தேகப்படுகிறவனும் தர்மபலத்தை அடையமாட்டார். மார்க்கத்தை விட்டுப் பேசுவதாலும் மதத்தினாலும் தர்மத்தைக் குறித்துச் சங்கையடையாதே. தர்மத்தில் ஸந்தேஹிக்கும் மனிதன் குறுக்கான கதியில் நோக்கமுள்ளவன். உறுதியற்ற மனமுள்ள எவனுக்குத் தர்மமும் வேதத்திற்சொல்லிய வாக்யமும் சங்கிக்கத்தக்கவையோ அவன் வேதத்திலிருந்து சூத்திரன் போல ஜராமரணமில்லாத லோகத்திலிருந்து விலகிவிடுவன். நல்ல மனமுள்ளவளே! வேதாத்யயனம் செய்தவனும் தர்மத்தை முக்யமாகக்கொண்டவனும் நற்குலத்தில் பிறந்தவனுமான அவன் தர்மானுஷ்டானம் செய்கிற அரசர்களால் பெரியோர்களிடத்தில்

சேர்க்கத் தகுந்தவன். சாஸ்திரத்தை மீறின அற்பபுத்தியுள்ள எவன் தர்மத்தைக் குறித்து அதிகமாகச் சங்கைப்படுகிறானோ அவன் சூத்திரர்களைக் காட்டிலும் திருடர்களைக் காட்டிலும் மிக்க பாவமுள்ளவன். அறியமுடியாத ஸ்வபாவமுள்ளவரும் தர்மத்தால் வெகுகாலம் ஜீவிப்பவரும் மிக்க தவமுடையவரும் (திரும்பிப்) போகிறவருமான மார்க்கண்டேய ரிஷியானவர் நேராகவே உன்னால் பார்க்கப்பட்டாரன்றோ? வ்யாஸர், வஸிஷ்டர், மைத்திரேயர், நாரதர், லோமசர், சுகர், மற்றுமுள்ள ரிஷிகள் ஆகிய எல்லாரும் தர்மத்தாலேயே நல்லமனமுள்ளவர்கள். திவ்யயோக சக்தியுடன் கூடினவர்களும் சபிக்கவும் வாழ்விக்கவும் வல்லவர்களும் தேவர்களைக்காட்டிலும் மேலானவர்களுமான இவர்களை நேராகவே பார்க்கின்றாயன்றோ? குற்றமற்றவளே! சாஸ்திரத்தில் பிரத்யக்ஷமான அறிவுள்ளவர்களும் தேவர்களுக்கொப்பானவர்களுமான இவர்கள் முதலில் தர்மத்தையே செய்யவேண்டுமென்று எப்பொழுதும் சொல்லுகின்றார்களன்றோ? ஓ! கல்யாணி! ஆகையால், ஈச்வரரையும் தர்மத்தையும், ரஜோகுணத்தால் மோகமடைந்த மனத்தினால், நிந்திப்பதற்கும் சங்கைப்படுவதற்கும் தக்கவளல்லை. விவேகமில்லாதவன் தத்வநிச்சயத்தை அடைந்த யாவரையும் பித்தர்களாக எண்ணுகிறான். தர்மத்தில் அதிக சங்கைகொண்டவன் வேறிடத்தில் நம்பிக்கை வைக்கமாட்டான். (தன்) மனத்தையே பிரமாணமாயுடைய கர்விஷ்டன் பெரியோர்களை அவமதிக்கின்றான், அவிவேகியானவன் புலன்களுக்குப்ரீதி செய்வதுடன்கூடியதும் லோகத்திற்குத் தெரிந்ததுமான (விஷய) ஸுகத்தையே (இவ்வளவுதான் என்று) நினைக்கிறான். வேறு விஷயத்தில் அறியாமையை அடைகிறான். எவன் தர்மத்தைக் குறித்து ஸந்தேகப்படுகின்றானோ அவனுக்குப் பிராயச்சித்தமில்லை. (விஷயங்களைச்) சிந்திப்பவனும் கிருபணனுமான அந்தப் பாவி நல்ல லோகங்களை அடையமாட்டான். வேத சாஸ்திரங்களின் அர்த்தத்தை நிந்திக்கிறவனும் ப்ரமாணத்தைவிட்டு விலகினவனுமான மூடன், காம லோபங்களுக்கு உடன்பட்டவனாகி நரகத்தையடைகிறான். ஏ! கல்யாணி! கற்றறிந்த எவன் சங்கைப்படாமல் எப்பொழுதும் தர்மத்தையே அடைகின்றானோ அவன் சுத்தமான மனமுள்ளவனாகி மறுமையில் மோக்ஷத்தை அடைகின்றான். வேதப்ரமாணத்தை மீறித் தர்மத்தைச் செய்யாதவனும் எல்லாச் சாஸ்திரங்களையும் விட்டவனுமான மூடன் பிறப்புக்களில் ஸுகத்தை

அடையமாட்டான். ஓ! பெண்ணே! எவனுக்கு ரிஷிகளின் வாக்கியமும் சிஷ்டாசாரமும் ப்ரமாணமில்லையோ அவனுக்கு இந்தலோகமுமில்லை, பரலோகமுமில்லை என்பது நிச்சயம். ஓ! கிருஷ்ணையே! எல்லாவற்றையும் பார்ப்பவர்களும் எல்லாவற்றையும் அறிந்தவர்களுமான ரிஷிகளால் சொல்லப்பட்டதும் சிஷ்டர்களால் அனுஷ்டிக்கப்பட்டதும் வெகுகாலமாயுள்ளதுமான தர்மத்தைக் குறித்து ஸந்தேகப்படாதே. ஓ! திரௌபதி! சமுத்திரத்தின் கரையை (அடைய) விரும்புகின்ற வியாபாரிக்கு அந்த ஓடம்போல ஸ்வர்க்கத்தையடைகிறவர்களுக்குத் தர்மமே ஓடம்; வேறில்லை. ஓ! குற்றமற்றவளே! தர்மானுஷ்டானம் செய்கிறவர்களால் செய்யப்பட்ட தர்மம் பயனற்றதாயிருக்குமானல், இழிவான இருளில் (அஜ்ஞானத்தில்) இந்த உலகம் முழுகிவிடும். ஒருவரும் ஸுகத்தை அடையார். பசுவைப்போல் ஜீவனம்செய்வார்கள். கெடுதலுடனேயே சேர்வார்கள்; ஒரு பயனையும் அடையார்கள். தவமும் ப்ரம்மசரியமும் யஜ்ஞமும் வேதாத்யயனமும் தானமும் நேர்மையுமான இவைகள் பயனற்றவைகளாயிருக்குமானல், பின்னுள்ளவர்களும் அவரிலும் பின்னுள்ளவர்களும் தர்மத்தைச் செய்யார்கள். கிரியைகள் பயனற்றவைகளானல் அது மிகவும் வஞ்சனையாகும். ரிஷிகளும், தேவர்களும், கந்தர்வர்களும், அஸுரர்களும், ராக்ஷஸர்களும், பெரியோர்களும் எந்தக்காரணத்திற்காக ஆதரவுடன் தர்மத்தைச் செய்வார்கள்? ஓ! கிருஷ்ணையே! அவர்களோ கடவுளைப் பயனை அளிக்கிறவராக அறிந்துகொண்டு நன்மைக்காகத் தர்மத்தைச்செய்தார்களென்பது நிச்சயம். அந்தத் தர்மம்தான் வெகுகாலமாயுள்ளது. அந்தத் தர்மம் பயனுள்ளதே. தர்மம் பயனற்றதென்று சொல்லப்படவில்லை. வித்தைகளுக்கும் தவங்களுக்கும் பலன்கள் காணப்படுகின்றனவன்றோ? ஓ! கிருஷ்ணையே! உன் விஷயத்தில் இந்தப் பிறவியைக் கேட்டபடி அறிந்துகொள். ப்ரதாபமுள்ள திருஷ்டத்யும்னன் எவ்விதம்ஜனித்தானென்பதை உள்ளபடி அறிகிருய். ஓ! அழகியசிரிப்புள்ளவளே! கர்மாக்களுக்குப்பயனுண்டென்பதற்கு உபமானம் இவ்வளவே போதுமானது. வித்வான் அற்பத்தாலும் (அதாவது கிடைத்ததைக்கொண்டும்) சந்தோஷிக்கிருன். கற்றறியாத புத்தியீனர்கள் அதிகத்தாலும் ஸந்தோஷத்தை அடையவேமாட்டார்கள். அவர்களுக்குத் தர்மத்தாலுண்டான கர்மாவோ ஸுகமோ மறுமையில் சிறிதும் இல்லை. ஓ! பெண்ணே! நல்வினை தீவினைகளுடைய பயனையடைதலும், ஸ்ருஷ்டி

ப்ரளயமும், தேவரகஸ்யங்கள். [1] இவைகளை எவனுமறியான். இந்தப்பிராணிகள் இவ்விஷயத்தில் மோகத்தை அடைகின்றன. [2] இவைகள் தேவர்களால் இரகசியமாக வைத்துக்கொள்ளத்தக்கவைகள். ஏனெனில், தேவர்களோ மாயையை மறைத்துவைப்பவர்கள். இளைத்த அங்கமுள்ளவர்களும் நல்ல விரதமுள்ளவர்களும் தவத்தினால் பாவத்தை எரித்தவர்களும் தெளிவான மனமுள்ளவர்களுமான ப்ராம்மணர்கள் இவற்றைப் பார்க்கின்றார்கள். பயன் தெரியாததால், தர்மம் ஸந்தேகிக்கப்படத்தக்கதன்று. தேவர்களும் ஸந்தேகிக்கப்படத்தக்கவர்களல்லர். முயற்சியுடன் யாகம் செய்யவேண்டும். அஸூயையில்லாதவனுக்குக் கொடுக்கவேண்டும். இந்த விஷயத்தில், 'கர்மங்களுக்குப் பயனிருக்கின்றது' என்று ப்ரம்மா புத்திரர்களுக்குச் சொல்லிய தர்மோபதேசத்தைக் காஶ்யபரிஷியானவர் அறிவர். ஓ! கிருஷ்ணையே! ஆகையால், உன்னுடைய ஸந்தேகமானது பனிபோல நசிக்கட்டும். எல்லாம் இருக்கிறதென்று ஆலோசனை செய்து, நாஸ்திக்யமான எண்ணத்தை விடு. ப்ராணிகளை உண்டுபண்ணுகிற ஈஶ்வரரையும் நிந்தியாதே. அவரை வேண்டிக்கொள். அவரை வணங்கு. இவ்விதமான புத்தி உனக்கு இனி உண்டாக வேண்டாம். ஓ! கிருஷ்ணையே! எவருடைய அனுக்கிரகத்தால், அவருடைய பக்தனான மனிதன், தேவத்தன்மையை அடைகின்றானோ (அந்த) மேலான தேவதையை எவ்விதத்திலும் நிந்தியாதே' என்றார்.

முப்பத்திரண்டாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(ஒரு ப்ராம்மணனிடமிருந்து கேட்ட பிருஹஸ்பதிநீதியைத் திரௌபதி யுதிஷ்டிரனுக்குச் சொல்லியது.)

திரௌபதி, 'ஓ! பார்த்தரே! நான் தர்மத்தை எவ்விதத்திலும் அவமதிக்கவில்லை; நிந்திக்கவுமில்லை. ப்ரஜைகளுக்குப் பதியான கடவுளை நான் எங்கு அவமதிக்கப் போகிறேன்? ஓ! பாரதரே! நான் துக்கத்தை அடைந்தமையால் இவ்விதம் பிதற்றுகின்றேனென்று அறிந்துகொள்ளும். திரும்பவும் பிதற்றப்போகின்

---

1 வேறு பாடம். 2 அதிகபாடமான அரைஶ்லோகம் விடப்பட்டது.

றேன். நீர் நல்ல மனத்துடன் என்னிடமிருந்து கேளும். ஓ! பகைவர்களை வாட்டுபவரே! இவ்வுலகில் பிறந்தவனால் கர்மாவோ செய்து தீரவேண்டும். [1] ஸ்தாவரங்கள் கர்மாவில்லாமல் ஜீவிக்கின்றனவேயன்றி மற்றவைகளும் மனிதர்களும் அப்படி ஜீவிக்கவில்லை. ஓ! யுதிஷ்டிரரே! மாதாவின் முலைப்பால் குடிப்பது முதல் (தளர்ந்து) படுக்கையை அடையும் வரையில் அசையும் பிராணிகள் கர்மாவால் பிழைப்பை அடைகின்றன. ஓ! பரதரிற் சிறந்தவரே! அசையும் பிராணிகளிலும் விசேஷமாக மனிதர்கள் கர்மாவினாலேயே இம்மையிலும் மறுமையிலும் ஜீவனத்தையடைய விரும்புகின்றார்கள். ஓ! பாரதரே! எல்லா மனிதர்களும் தாம் மேன்மையடையும் உபாயத்தை அறிகின்றார்கள்; நேராகவே உலகத்தினர் பார்க்கும்படி கர்மங்களின் பயனை அனுபவிக்கின்றார்கள்; ஜந்துக்கள் தமது மேன்மையடையும் உபாயத்தைப் பார்த்துக்கொண்டே ஜீவிக்கின்றார்கள். கொக்கானது ஜலத்தில் தன் வேலையைச் செய்வதுபோல ஈசரும் தர்மமும் தம்முடைய கர்மாவைச் செய்கிறார்கள். வேலையற்ற ப்ராணிகளுக்கு ஒருவிதப் பிழைப்பும் உண்டாகாதன்றோ? அந்தக் கர்மாவையே அடுக்கவேண்டும்; ஒருபோதும் விடக்கூடாது; கர்மாவைச் செய்யும்; விடாதீர்; கர்மாவினால் சூழப்பட்டிரும். செய்யத்தக்கதை அறிபவன் ஆயிரத்தில் ஒருவன் இருப்பானோ இரானோ? அவனுக்கும் செல்வத்தைப்பெருக்குவதிலும் ரக்ஷணத்திலும் செய்யத்தகுந்தவேலையுண்டு. புதுவரும்படியில்லாமல் செலவு செய்யப்படுமானால் இமயமலையானாலும் குறைந்துவிடுமன்றோ? பிரஜைகள் கர்மாவைச்செய்யாமலிருக்குமானால் எல்லாம் நாசத்தை அடைந்துவிடும். அதுபோலவே, கர்மாவானது பயனற்றதாயிருக்குமானால் அவைகள் விருத்தியடையா. பயனை எதிர்பாராமல் கர்மாவைச்செய்பவர்களையும் பார்க்கிறோம். பலனை எதிர்பார்த்துக் கர்மாவைச்செய்யும் ஜனங்களையும் பார்க்கிறோம். அப்படியில்லாவிடில், ஜனங்கள் ஜீவனத்தை எவ்விதத்திலும் அறியமாட்டார்கள். லோகத்தில் தெய்வத்தையே மேலானதென்றுசொல்பவனும், பிடிவாதமாகத் தெய்வமில்லையென்று பேசுகிறவனும் வஞ்சிப்பவர்கள். கர்மாவில்புத்தியுள்ளவன் புகழப்படுகிறான். எவன் வேலையற்றவனாக ஸுகமாய்த்தூங்கிக்கொண்டு தெய்வமே மேலானதென்கிறானோ அதிககெட்டபுத்தியுள்ள அவன், பச்சைமண்குடம் ஜலத்தில்

---

1 'ஸ்தாவரங்களும் மற்ற ஜனங்களும் கர்மமின்றி ஜீவிக்கிறதில்லை' என்பது பழையவுரை.

நாசமடைவதுபோல நாசத்தையடைகிருன். அதுபோலவே, பிடிவாதபுத்தியுள்ளஎவன் கர்மாவைச்செய்வதில் சக்தியுள்ளவனுயிருந்தும் கர்மாவைச்செய்யாதவனுயிருக்கிருனே அவன் காப்பவனில்லாத துர்ப்பலன்போல நெடுங்காலம் ஜீவிக்கமாட்டான். ஒருகாரணமுமின்றி இங்கு ஒருவன்பலனையடைந்தால் அதனைப் பிடிவாதத்தாலென்று நினைக்கின்றுர்கள். ஏனென்றுல், அந்தப்பயன் ஒருவனுடைய முயற்சியினுலும் உண்டானதன்றன்றே? ஓ! பார்த்தரே! தேவப்ரீதிகரமானவிதியால் ஒருவன் அடையும்பயன் தெய்வச்செயலென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. மனிதன் எந்தப்பயனைக் கர்மாவினுல் அடைகின்றுனே, பிரத்யக்ஷமாகக் கண்ணுல்பார்க்கப்பட்டஅது மனிதமுயற்சியால் அடையப்பட்டதென்று கேள்வி. ஓ! மனிதரிற்சிறந்தவரே! ஒருவன் ஸ்வபாவமாக ப்ரவ்ருத்தித்து, காரணமின்றிஅடைகிற பலனை ஸ்வபாவத்தாலுண்டானதென்று அறியும். இவ்விதம் பிடிவாதத்தாலும் தெய்வத்தாலும் ஸ்வபாவத்தாலும் கர்மாவினுலும் ஒருவன்அடையும் பயன் பூர்வகர்மங்களின்பயன். தாதாவான ஈச்வரரும் அந்தஅந்தக்காரணங்களால் மனிதர்களுக்கு முன் செய்யப்பட்ட கர்மாக்களைப் பிரித்து இம்மையில் பயனை அளிக்கிறுர். ஒருவன் நல்லகாரியத்தைச் செய்வதும் கெட்ட காரியத்தைச்செய்வதும் ஈச்வரரால் ஏற்படுத்தப்பட்ட முன்வினைப்பயனென்று அறிவீராக. அந்த ஈச்வரர் ஒவ்வொரு பயனையும் கொடுப்பதில் இந்தத் தேகமானது காரணமாயிருக்கின்றது. அவர் எவ்விதம் இந்தச் சரீரத்தை ப்ரேரணைசெய்கின்றுரோ, அதற்குத்தக்கபடி இது தன்வசமின்றிச் செய்கின்றது. ஓ! குந்தீபுத்திரரே! எல்லாப்பிராணிகளும் கார்யங்களைச் செய்யச் சக்தியற்றவைகளாயிருந்தாலும் மஹேச்வரர் அந்த அந்தக் கார்யங்களில் ஏவிச்செய்விக்கிறுர். ஓ! வீரரே! ஒருவன் தானே மனத்தினுல் பலன்களை நிச்சயம்செய்துகொண்டு, பிறகு, புத்திபூர்வமாகக் கர்மாவினுல் பயனைஅடைகிற அவ்விஷயத்தில் மனிதன் காரணமாகிருன். ஓ! ஆண்மையிற் சிறந்தவரே! கர்மாக்கள் கணக்கிடமுடியாதவைகள். வீடு, பட்டணம் இவைகளின் ஸித்தியானது மனிதனைக் காரணமாகவுடையது. எள்ளினுள் எண்ணெயையும் மாட்டில் பாலையும் கட்டையினுள் நெருப்பையும் இவற்றை அடைவதற்குத்தக்க உபாயத்தையும் தீரன் அறியவேண்டும். அதற்குப் பிறகு, இவற்றினுடைய ஸித்திக்குத்தக்க காரணங்களில் பிரவிருத்திக்கின்றுன். இங்கு ப்ராணிகள் கர்மாவினுடைய அந்தஸித்தியை அடுத்து ஜீவிக்

கின்றன. 'ஸமர்த்தனை கர்த்தாவினுல் இந்தக்கர்மாவானது நன்கு செய்யப்பட்டது; மூடனுல் இது செய்யப்பட்டது' என்பது வேறு பாட்டினுல் அறியப்படுகிறது. கர்மாவினுல் உண்டுபண்ணக்கூடிய பலன்களில் இந்த மனிதன் காரணமில்லாவிட்டால் 1 இஷ்டம் 2 பூர்த்தம் இவைகளின் பலன் உண்டாகாது. சிஷ்யன் இரான். குருவும் இருக்கமாட்டான். மனிதன் கர்த்தாவாயிருப்பதினுலேயே கர்மம் ஸித்தித்தால் புகழப்படுகிருன்; ஸித்திக்காவிடில் இங்கு நிந்திக்கப்படுகிருன். இந்த விஷயத்தில் கர்மநாசம் எப்படி ஏற்படும்? யாவையும் சிலர் பிடிவாதத்தாலென்றும், சிலர் தெய்வத்தாலென்றும் சொல்லுகிருர்கள். மனிதனுடைய முயற்சியால் உண்டாகிறதென்று சிலர் சொல்லுகிருர்கள். தெய்வத்தால் உண்டாவது என்பதே மேலானது. இவ்வளவினுல் மாத்திரம் கார்யம் (சித்தியாதென்று) சிலர் நினைக்கின்ருர்கள். தெய்வமும் தற்செயலுமான யாவும் பார்க்க முடியாதனவாயிருக்கின்றன. பிடிவாதத்திலிருந்தும் தெய்வத்திலிருந்தும் பயனினுடைய தொடர்ச்சியானது காணப்படுகிறதன்ருே? மனிதன் சில பலனைத் தெய்வத்தாலும் சிலவற்றைப் பிடிவாதத்தாலும் சிலவற்றைத் தன்கர்மாவினுலும் அடைகின்ருன். இதில் நான்காவது காரணமில்லையென்று ஸமர்த்தர்களும் உண்மையறிந்தவர்களுமான மனிதர்கள் உறுதி கூறுகிருர்கள். அதுபோலவே, ஜீவர்களுக்கு விருப்பு வெறுப்புக்களான பலன்களைக்கொடுக்கிற ஈச்வரர் இல்லாமல்போனுல் அவர்களுள் ஒருவனும் எளியவனுக இருக்கமாட்டான். முந்தின வினைப்பயன் இல்லாவிடில் மனிதன் எந்த எந்தப் பயனை அடையவேண்டுமென்ற விருப்பமுள்ளவனுகக் கர்மாவைச் செய்கிருனே அது அது ஸபலமாகவே ஆகும். எந்த மனிதர்கள் கார்யஸித்திக்கும் அநர்த்தஸித்திக்கும் (கீழ்ச்சொன்ன) மூன்றும் பரம்பராகாரணமென்று அறியவில்லையோ அவர்கள் நாஸ்திகர்கள்போன்றவர்களே. கர்மாவானது செய்யப்படவேவேண்டுமென்றஇது மனுவினுடைய நிச்சயம். இப்பொழுது நம்மிடத்தில் இந்த முயற்சியில்லாமையானது நிச்சயமாயிருக்கின்றது. ஓ! யுதிஷ்டிரரே! (கர்மாவைச்) செய்கிறவனுக்கு அனேகமாக இங்கு (பலன்) அவச்யமுண்டாகும். சோம்பலுள்ளவன் ஒருபோதும் நிச்சயமான பலஸித்தியை அடையமாட்டான். (கர்மம் செய்து) பயன்கிடைக்காவிடில் அதன் தோஷத்தை

1 யாகம் முதலியன. 2 குளம், கிணறு, தோட்டம், கோவில் முதலியவற்றை அமைத்தல்.

விலக்கும் உபாயம் காணப்படுகிறது. ராஜச்ரேஷ்டனே! அவ்விதம் கர்மாவைச்செய்தால் கடனின்மையை அடைகிறான். சோம்பலாகப் படுத்திருக்கும் இந்த மனிதனை அமங்களமானது அடைகிறது. ஸமர்த்தனானவன் ஸந்தேகமின்றிப் பலனையடைந்து ஐச்வரியத்தை அடைகிறான். சம்சயமுள்ளவர்கள் எல்லாவற்றையும் பயனற்றவைகளாகவும் ஸந்தேகமுள்ளவைகளாகவும் சொல்லுகிறார்கள். தைரியமுள்ளவர்களும் ஸந்தேகமற்றவர்களும் கர்மாவில் முயன்றவர்களுமான மனிதர்கள் ஒரு விஷயத்திலும் அப்படிச் சொல்வதில்லை. இப்பொழுது நம்மிடத்தில் இந்தக் கஷ்டமானது நிச்சயமாக இருக்கிறது. நீர் கர்மாவைச் செய்தால் ஸம்சயமின்றி அந்தக் கஷ்டம் இராது. அல்லது, (முயன்றும்) காரியம் ஸித்திக்காமலே இருந்தால், அதுவே உமக்கும் பீமஸேனருக்கும் அர்ஜுனருக்கும் இரட்டையர்களான தம்பிகளுக்கும் மகிமையாகிறது. கர்மாவைச் செய்தவன் முடிவில் பயனை அறிவதுபோல நமக்கோ பிறருக்கோ கர்மம் பயன்படுமென்பது விளம்பித்து அறியப்படும். இவ்வுலகத்தில் பூமியைக் கலப்பையினால் உழுது விதையை விதைக்கிறான். பிறகு, உழுகிறவன் சும்மா இருக்கிறான். அவ்விஷயத்தில் மேகம் காரணமாகிறது. மழை உதவி செய்யாவிடில் அவ்விஷயத்தில் உழுகிறவன் குற்றமுள்ளவனல்லன். 'வேறு மனிதன் எதைச் செய்வானோ அது என்னால் முழுவதும் செய்யப்பட்டது. அது இந்தப்பயனை உடையதாயிருக்கிறது. ஓரிடத்திலும் என்னுடைய குற்றமில்லை' என்று தைரியமுள்ளவன் ஆலோசனை செய்துகொண்டு, அவ்விஷயத்தில் தன்னை நிந்திக்கக்கூடாது. ஓ! பாரதரே! செய்கின்ற எனக்கு அர்த்தஸித்தியானது உண்டாகிறதில்லையென்று வெறுப்பையும் அடையக்கூடாது. எந்தக் கர்மாவுக்கும் இரண்டுவித முடிவு உண்டு. ஸித்தியோ அஸித்தியோ உண்டாகட்டும். பிரவிருத்தியின்மை கூடாது. அனேகம் பதார்த்தங்களின் சேர்க்கையிலிருக்கும்போதன்றோ கர்மாவானது ஸித்திக்கின்றது. குணஸாதனமில்லாவிட்டால் பயன் குறைகிறது; அல்லது, பலனில்லாமலும் போகிறது. செய்யாமல் போனால் ஒருவிஷயத்திலும் பலனும் காணப்படுகிறதில்லை; குணமும் காணப்படுகிறதில்லை. தீரன் யுக்திக்கும் பலத்திற்கும் தக்கபடி நன்மையுண்டாக வேண்டிப் புத்தியால் தேசகாலங்களையும் உபாயங்களையும் மங்களங்களையும் சேர்க்கிறான். பராக்கிரமமே அக்காரியத்தை உபாயத்தால் உபதேசிக்கின்றது.

அதனை உபாயத்தாலும் செய்யலாம். (ஆனாலும்) கார்யங்களில் பராக்கிரமம் மிகமுக்கியமானது. எல்லாமே பராக்கிரமத்தால் ஆவன. ஏனென்றால், புத்திமான் அதில் அனேக குணங்களுடன் க்ஷேமத்தைப் பார்க்கிறான். ஆதலால், அதிலிருந்து ஸமாதானத்தாலேயே அர்த்தத்தையடைய விரும்பவேண்டும். அதற்குத்தக்க வேலையையும் செய்ய வேண்டும். ஓ! யுதிஷ்டிரரே! பகையானது கடலேயானாலும் மலையேயானாலும் அதற்கும் தீங்கையும் தேசத்தை விடுதலையும்[1] விரும்பவேண்டும். மனிதன்விஷயத்தில் சொல்லவும்வேண்டுமா? பகைவர்களின் இடைவெளியைத் தேடும் விஷயத்தில் எப்பொழுதும் முயற்சியுள்ள மனிதன் தன்விஷயத்திலும் பிறர்விஷயத்திலும் கடனற்றிருக்கும் தன்மையை அடைகிறான். மனிதன் ஒருபோதும் தன்னை அவமதிக்கக்கூடாது; தன்னை அவமதித்தவனுக்கு நல்ல செல்வம் உண்டாகாதன்றோ? ஓ! பாரதரே! உலகத்தினுடைய இந்தச் சித்தியானது இவ்வித நிலைமையுள்ளது. காலம், அவஸ்தை இவைகளின் பேதத்தால் ஸித்தியின் ஸ்வரூபமானது அனேகவிதமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஓ! பரதரிற்சிறந்தவரே! முன் என்னுடைய பிதாவானவர் பண்டிதரான ஒரு ப்ராம்மணரை (வீட்டில்) வஸிக்கச்செய்தார். (அவர்) என் பிதாவுக்கு இந்த எல்லா அர்த்தத்தையும் முன் சொன்னார். அவர் பிருஹஸ்பதியால் சொல்லப்பட்ட நீதியை என்உடன்பிறந்தோர்களைக்குறித்து உபதேசித்தார். நான் அப்பொழுது வீட்டில் அவர்களின் பக்கத்திலிருந்து இதனைக் கேட்டேன். ஓ! அரசரே! யுதிஷ்டிரரே! ஒரு காரியத்தைக்குறித்துப் பிதாவினிடம் வந்து கேட்க விருப்பத்துடன் உட்கார்ந்திருக்கும் எனக்கு அவர் நன்மொழி கூறி (இதனைச்) சொன்னார்' என்றாள்.

முப்பத்துமூன்றாவது அத்யாயம்.

அர்ஜுனாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் சண்டைசெய்து ராஜ்யத்தைப் பெறவேண்டுமென்பதை நீதியுடன் தர்மபுத்ரருக்குக் கூறியது.)

திரௌபதியின் வார்த்தையைக்கேட்டுப் பீமஸேனன் பொறுதவனாகிக் கோபமூண்டு பெருமூச்சுவிட்டுக்கொண்டு ஸமீபத்தில்

1, வேறுபாடம்.

வந்து அரசரை நோக்கிச் சொல்லலானன். 'அரசரே! ஸத்புருஷர் களுக்குத் தக்கதும் தர்மத்தைவிட்டுவிலகாததுமான நல்லவழியை அடையும். தர்மார்த்த காமங்களையிழந்த நமக்குத் தபோவனத்தில் வஸிப்பதால் என்ன பயன்? துர்யோதனனால் அந்த ராஜ்யமானது கபடமான சூதைக்கொண்டே கவரப்பட்டதேயன்றித் தர்மத்தாலன்று; ஒழுங்கினாலும் அன்று; பராக்கிரமத்தினாலும் அன்று; பலமற்றதும் இதரப்ராணிகள் சாப்பிட்டு மிகுந்ததைச் சாப்பிடுகிறதுமான நரியினால் வலிமையுள்ள சிங்கங்களினிடமிருந்து மாமிசம் கவரப்படுவதுபோல நமது ராஜ்யம் கவரப்பட்டது. ஓ! அரசரே! ப்ரதிஜ்ஞையைக் காப்பாற்றுவதென்னும் சிறுதர்மத்தால் மறைக்கப்பட்டதனால் தர்மகாமங்களுக்குக் காரணமான அரசாட்சியாகிய அர்த்தத்தைவிட்டு ஏன் துக்கத்தால் வாட்டப்படுகிறீர்? காண்டீவத்தை வில்லாகவுடைய அர்ஜுனனால் காப்பாற்றப்பட்டதும் இந்திரனாலும் கவரமுடியாததுமான ராஜ்யமானது உம்முடைய அஜாக்கிரதையினாலே நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது எங்களை அலக்ஷியம்செய்து கவரப்பட்டது. கைநொண்டிகள் (பார்த்திருக்கும்போது) பில்வப்பழம் கவரப்படுவது போலவும் கால்நொண்டிகள் (பார்த்திருக்கும்போது) பசுக்கள் கவரப்படுவதுபோலவும், நாங்கள் உமக்காக ஜீவிக்கும்போது, ஐச்வரியம் கவரப்பட்டது. தர்ம இச்சையில் நம்பிக்கையை அடைந்த உமக்கு ப்ரியமென்று இப்படிப்பட்ட அதிக துக்கத்தை இவ்விதம் ஏற்றுக்கொண்டோம். ஓ! பரதரிற் சிறந்தவரே! உம்முடைய கட்டளையால் எங்களை அடக்கிக்கொண்டு நம் மித்திரர்களைக் கஷ்டப்படுத்துகிறோம்; பகைவர்களையும் சந்தோஷப்படுத்துகிறோம். உமது கட்டளையை ஏற்றுக்கொண்டு நாங்கள் அப்பொழுதே இந்தத் திருதராஷ்டிரரின் புத்திரர்களைக் கொல்லாமலிருந்ததென்னும் பாவமானது எம்மை வாட்டுகின்றது. ஓ! அரசரே! கிருஷ்ணரும் அர்ஜுனனும் அபிமன்யுவும் ஸ்ருஞ்சயரும் நானும் நகுல ஸஹதேவர்களும் சந்தோஷிக்காததும் வீரர்களால் நடத்தப்படாததும் பலமற்றவர்களால் மேற்கொள்ளப்பட்டதுமான நம்முடைய இந்த நடையை ஒரு மிருகத்தின் நடையைப்போலப் பாரும். நீர் எப்பொழுதும், 'தர்மம், தர்மம்' என்று விரதத்தால் இளைத்திருக்கின்றீர். ஓ! அரசரே! வெறுப்பினால், நபும்ஸகனுடைய ஜீவனத்தை நீர் அடையாமலிருக்கின்றீரா? தம்முடைய செல்வத்தைத் திரும்ப அடைவதற்குச் சக்தியற்ற அற்பமனிதர்களன்றோ எல்லாவற்றை

யும் நாசம் செய்வதும் பிரயோஜனமற்றதுமான வைராக்யத்தைப் பிரியமாகக் கொள்கிறார்கள், ஓ! அரசரே! கண்ணுள்ளவரும் சக்தியுள்ளவருமான நீர் எங்களிடத்தில் பராக்கிரமத்தைப் பார்த்திருந்தும், குரூரமில்லாமலிருப்பதை மேற்கொண்டு, உம்முடைய ப்ரயோஜனத்தை அறியவில்லை. இந்தத் திருதராஷ்டிரபுத்திரர்கள் முதலியோர் துன்பம் செய்யாதவர்களும் பொறுத்துக்கொள்ளுகிறவர்களுமான நம்மைச் சக்தியற்றவர்களாகவே எண்ணுகின்றார்கள். அதுதான் துக்கம், சண்டையில் மரிப்பது துக்கம் அன்று. அவ்விஷயத்தில் கபடமில்லாமல் சண்டைசெய்கின்றவர்களும் திரும்பாதவர்களுமான (நமக்கு) எல்லாவிதத்தாலும் மரணம் மேலானதன்றோ? சரீரத்தைவிட்டு (நல்ல) உலகங்களை அடைவோமன்றோ? ஓ! பரதரிற் சிறந்தவரே! அல்லது, நாமே இவர்களைக்கொன்று எல்லாப்பூமியையுங்கொள்வோம். அப்படியிருந்தாலும் நமக்கு க்ஷேமமே. வைரத்திற்குப் பிரதிசெய்ய விரும்புகிறவர்களும் அதிகமான கீர்த்தியை விரும்புகிறவர்களும் சொந்தத்தொழிலைச் செய்கிறவர்களுமான நமக்கு இது எவ்விதத்திலும் செய்யத்தகுந்ததே. செய்யத்தகுந்ததாகவே இருப்பதும் உயிர்வாழ்க்கைக்கு உரியதுமான (யுத்தத்தில்) தமக்காகச் சண்டைசெய்கிறவர்களுடைய ராஜ்யம் பகைவரால் அபகரிக்கப்பட்டாலும் புகழேயன்றி இகழ்ச்சியில்லை. அரசரே! எந்தத் தர்மமானது(=செய்கையானது) 1 மித்ரர்களுக்கும் தனக்கும் சிரமத்தையே பயனாகவுடையதோ அது துக்கமே. அது தர்மமன்று. அது கெட்டவழி. எவ்விதத்திலும் தர்மத்தை நித்யமாயுடையவனும் தர்மம்செய்து இளைத்தவனுமான மனிதனை, இறந்தவனைச் சுகதுக்கங்கள் விடுவதுபோலத் தர்மார்த்தங்கள்விட்டுவிடுகின்றன. எவன் தர்மத்தைத் தர்மத்திற்காகவேசெய்கின்றானோ அவன் கஷ்டத்தை அடைகிறவனே. அவன் தேர்ந்த அறிவுள்ளவனல்லன். குருடன் சூரியனுடைய காந்தியை அறியாததுபோல அவன் தர்மத்தினுடைய பயனை அறியமாட்டான். அர்த்தமானது எவனுக்கு அர்த்தத்தையே ப்ரயோஜனமாயுடையதோ அவன் அர்த்தவிஷயத்தில் தெரிந்தவனல்லன். அவன் காட்டில் மாடுகளைக்காக்கும் வேலைக்காரன்போன்றவனே. எவன் அர்த்தத்தையே மிக விரும்பிக்கொண்டு மற்றவைகளை அனுஷ்டிக்கவில்லையோ நிந்திக்கப்பட்ட அவன் ப்ரம்மஹத்தி செய்தவன்போல எல்லாப் பிராணிகளாலும் கொல்லப்படத்தகுந்தவன். எவன் எப்

1 வேறுபாடம்.

பொழுதும் காமத்தையே விரும்புகின்றவனாக மற்றவைகளை அனுஷ்டிக்கவில்லையோ அவனுக்குச் சிநேகிதர்கள் அற்றுப்போகிறார்கள். அவன் தர்மத்தாலும் அர்த்தத்தாலும் விடப்படுகிறான். தர்மார்த்தமில்லாத காமத்தினால் விளையாடுகிற அவனுக்குக் காமத்தின்முடிவில், ஜலம் வற்றும்போது மீனுக்கு மரணம் நிச்சயமாயிருப்பது போல, மரணம் நிச்சயம். ஆகையால், பண்டிதர்கள் எப்பொழுதும் தர்மார்த்தங்களில்தவறுதலை அடையார். ஏனெனில், அக்னிக்கு அரணி காரணமாவதுபோலக் காமத்திற்கு அது காரணம். எவ்விதத்திலும் அர்த்தமானது தர்மத்தைக்காரணமாயுடையது. தர்மமும் அர்த்தத்தைப்பற்றியது. மேகமும் ஸமுத்திரமும்போல,ஒன்று மற்றொன்றினால் நடத்தப்படுபவைகளென்று அறிந்துகொள். போக்யவஸ்துக்களை அனுபவிப்பதாலும் தனத்தைப்பெறுவதாலும் உண்டாகும் ப்ரீதியே காமம். அது மனத்தின் ஸங்கல்பமே. அதற்குச் சரீரம் காணப்படவில்லை. ஓ! அரசரே! அர்த்தத்தை விரும்புகின்ற மனிதன் பெரிய தர்மத்தைச் செய்ய விரும்புகின்றான். காமத்தை விரும்புகிறவன் அர்த்தத்தை விரும்புகின்றான். காமத்திலிருந்து மற்றதை விரும்புவதில்லை; ஏனெனில், [1] புத்திமான்களால் அர்த்தத்தின் பயனாகக் காமம் அனுபவிக்கவே படுவதனால், கட்டையிலிருந்து உண்டான சாம்பலிலிருந்து வேறுபொருள்உண்டாகாததுபோல, ஒருகாமத்திலிருந்து வேறுகாமம்ஸித்திக்கிறதில்லை. ஓ! வேந்தரே! வேடன் இந்தப்பக்ஷிகளைக்கொல்லுவதுபோலப் பிராணிகள் விஷயத்தில் கொல்வதென்னும் இதுவும் அதர்மத்தின் ரூபம். எவன் காமத்தாலும் லோபத்தாலும் தர்மத்தின்வழியில் செல்லவில்லையோ அந்தக் கெட்டபுத்தியுள்ளவன் இம்மையிலும் மறுமையிலும் எல்லாப் பிராணிகளாலும் கொல்லப்படத்தகுந்தவன். ஓ! அரசரே! செல்வத்தால் ஸம்பாதிக்கப்படும் காமம் உமக்கு நன்குதெரியும். அந்தச் செல்வத்தின் தன்மையையும் அதிகமானவேறுபாடுகளையும் அறிவீர். அந்தச்செல்வம் [2] கிடையாவிடினும் (கிடைத்து) ஜரையினாலோ மரணத்தினாலோ அழிந்தாலும் அனர்த்தமென்று கருதுகின்றனர். அந்த அனர்த்தம் நம்மிடத்தில் இருக்கிறது; விஷயத்தில் பற்றுகிற ஐந்துஇந்திரியங்கள் மனம் ஹ்ருதயம் இவைகளுக்கு உண்டாகிற பிரீதியானது காமமென்பது என்னுடைய எண்ணம். அது கர்மங்களின் உத்தமமான பலன். இவ்விதமே தர்மார்த்தங்களையும் காமத்தையும் வெவ்வேறாகவே

1, 2 வேறுபாடம்.

பார்த்து மனிதன் தர்மத்திலேயே முயன்றவனாயிருக்கக்கூடாது; அர்த்தத்திலேயே முயன்றவனாகவும் இருக்கக்கூடாது; காமத்திலேயே முயன்றவனாகவும் இருக்கக்கூடாது; எல்லாவற்றையும் எப்பொழுதும் செய்யவேண்டும்; நாளின் முற்பாகத்தில் தர்மத்தையும் நடுப்பாகத்தில் தனத்தையும் கடைசியில் காமத்தையும் செய்யவேண்டும். இவ்விதம் இந்தவிதியானது சாஸ்திரத்தால் செய்யப்பட்டது. முந்தியவயதில் காமத்தைச் செய்யவேண்டும். நடுவயதில் தனத்தைச்சம்பாதிக்கவேண்டும். கடைசியான வயதில் தர்மத்தைச் செய்யவேண்டும். இவ்விதம் இந்த விதியானது சாஸ்திரத்தினால் செய்யப்பட்டிருக்கின்றது. ஓ! பேசுகிறவர்களுள் சிறந்தவரே! காலமறிந்த பண்டிதன் தர்மம், அர்த்தம், காமம் இவைகளை உள்ளபடி பிரித்து, எல்லாவற்றையும் காலத்தில் அனுபவிக்கவேண்டும். ஓ! அரசரே! குருநந்தனரே! (இவைகளை விட்டுவிடுவதாகிய) மோக்ஷம் மிகமேலானது; ஸுகத்தை விரும்புகிறவர்களுக்கு (ஸாம தான பேத தண்ட மென்கிற) உபாயத்தோடுகூடிய புத்தியையடைந்து (அதனால்) அரசாட்சியையும் அடைவது மேலானது. ஓ! வேந்தரே! மோக்ஷமாவது சீக்கிரமாய்ச் செய்யப்படட்டும்; (ராஜ்ய) ப்ராப்தியாவது அடையப்படட்டும். (இரண்டுக்கும்) நடுவிலுள்ளவனுடைய உயிர்வாழ்க்கையானது ரோகியினுடைய உயிர்வாழ்க்கைபோலத் துக்கத்தைக் கொடுக்கிறது. தர்மமானது என்னால் அறியப்பட்டுமிருக்கிறது; உம்மால் எப்பொழுதும் செய்யப்பட்டுமிருக்கிறது. அறிவுள்ளவர்களான அன்பர்கள் உம்மிடத்தில் கர்மானுஷ்டானத்தைச் சொல்லுகிறார்கள். ஓ! அரசரே! தானம், யாகங்கள், ஸாதுக்களின் பூஜை, வேதத்தைத் தரித்தல், கபடமற்றிருத்தல் ஆகிய இவை மேலான தர்மம்; இங்கும் இறந்தபிறகும் பயன் தருவன. ஓ! வேந்தரே! ஆண்மையிற் சிறந்தவரே! மற்ற எல்லாக் குணங்களுமிருந்தாலும், இந்தத் (தர்மம்) அர்த்தமில்லாதவனால் செய்யமுடியாது. ஓ! அரசரே! ஜகத்தானது தர்மத்தைக் காரணமாகவுடையது. தர்மத்தைக்காட்டிலும் மற்றது மேலாகாது. அரசரே! தர்மமும் அதிக அர்த்தத்தால் செய்யக்கூடியது. அர்த்தமானது பிக்ஷையெடுப்பதால் அடையமுடியாதது; எளிமையால் ஒருபோதும் அடையமுடியாதது; அதுபோலத் தர்மபுத்தியால்மாத்திரமும் அடையமுடியாதது. எதனால் த்விஜன் ஸித்தியை அடைவனோ (அந்த) இரத்தலானது உமக்கு(ச் சாஸ்திரத்தால்) தடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்மையிற் சிறந்த

வரே! சக்தியினாலேயே அர்த்தத்தையடையும் விருப்பத்தில் முயற்சி செய்யும்; க்ஷத்ரியனுக்குப் பிக்ஷை எடுப்பது (சாஸ்திரத்தில்) விதிக்கப்படவில்லை. (க்ஷத்ரியனுக்கு) வைஸ்ய சூத்திரர்களுடைய ஜீவனஹேதுவும் விதிக்கப்படவில்லை. சரீரபலமே விசேஷமான தர்மம். ஓ! பார்த்தரே! ஸ்வதர்மத்தை மேற்கொள்ளும். எதிர்த்து வருகிற பகைவர்களை நாசஞ்செய்யும். பார்த்தனாலும் என்னாலும் தார்த்தராஷ்டிரர்களாகிற வனத்தை அழியும். கற்றறிந்த புத்திமான்கள் தலைவனாயிருத்தலையே தர்மமென்கிறார்கள். தலைமையை அடையக்கடவீர். நீர் தாழ்ந்த தன்மையிலிருப்பதற்குத் தக்கவரல்லீர். ஓ! ராஜேந்திரரே! பிறகு, ஆலோசனை செய்யும். பழமையான தர்மங்களை அறிவீர். எதனிடமிருந்து பிராணியானது பயத்தை அடையுமோ அந்தஹிம்ஸாரூபமானதொழிலுள்ளவராகப் பிறந்திருக்கிறீர். ஓ! அரசரே! பிரஜைகளைக் காப்பதாலுண்டான பயன் உமக்கு இழிவானதன்று. இது உமக்குப் பழமையான தர்மமாக ஈஸ்வரனால் விதிக்கப்பட்டது. ஓ! பார்த்தரே! அதிலிருந்து விலகினால், உலகத்தில் பரிஹாஸத்தை அடைவீர். மனிதர்களுக்குத் தம் தர்மத்திலிருந்து சலிப்பது புகழப்படுவதன்றன்றோ? ஓ! கௌரவரே! அப்படிப்பட்ட (நீர்) மனத்தை க்ஷத்ரியத்தன்மையுள்ளதாகச் செய்துகொண்டு, இந்தத் தளர்ந்த மனத்தைவிட்டு, வீர்யத்தையடைந்து காளைமாடுபோலப் பாரத்தைத் தாங்கும். ஓ! அரசரே! ஒரு வேந்தனும் தர்மம் ஒன்றிலேயே மனத்தைச் செலுத்தி ஒருபோதும் பூமியை ஜயித்ததில்லை; மேன்மையை அடைந்ததில்லை; அரசச்செல்வத்தையும்ஜயித்ததில்லை. வேடன் மிருகங்களுக்கு விருப்பமான நல்ல ஆகாரத்தைக்கொடுத்து (நம்பச்செய்து) பிறகு (அவைகளை) ஆகாரமாக அடைவதுபோல (அரசன்) ஆசைகொண்ட மனமுள்ள அனேகம் பகைவரின்பக்ஷத்தினரை ஏமாற்றுதலால் அரசாட்சியை அடைகிறான்.

ஓ! பாண்டவரிற் சிறந்தவரே! முன்னுண்டானவர்களும் நன்கு ஐஸ்வரியத்தை அடைந்தவர்களும் ப்ராதாக்களுமான அஸுரர்கள் (தேவர்களால்) எல்லாவிதத்தாலும் கபடமாகவே ஜயிக்கப்பட்டார்கள். ஓ! பூமிக்கு அரசரே! புஜபலமமைந்தவரே! பலமுள்ளவனுக்கே யாவுமென்னும் இதனை அறிந்துகொண்டு, மிக்க கபடத்தையுடையவர்களான பகைவர்களை அழிப்பீராக. அர்ஜுனனுக்கொப்பாக யுத்தத்தில் வில்லெடுத்துச் சண்டைசெய்பவனும் எனக்குச்சமானமாகக் கதையெடுத்தவனும் உண்டானதுமில்லை; உண்டாகப்

போகிறதுமில்லை. ஓ! அரசரே! மிக்கபலமுள்ளவன் தன் வலிமையினாலே யுத்தம் செய்கிறானேயல்லாமல் கூட்டத்துடனாவது சத்ரு கக்ஷியில் சேர்ந்து பலாபலங்களைத் தெரிந்துகொண்டாவது செய்கிறதில்லை. ஓ! பாண்டவரே! வலிமையுள்ளவராயிரும். வன்மையே அர்த்தத்திற்குக் காரணம்; மற்றது வீண். ஹேமந்தருதுவிலுள்ள மரத்தின் நிழல்போல அது பயனற்றதாகும். ஓ! கௌந்தேயரே! விதையை விரும்புமவன் முதலில் விதையை விதைத்துச் செலவு செய்வதுபோல அதிகமான பொருளை விரும்புகின்றவன் பொருளின் செலவும் செய்யவேண்டிவரும். உமக்கு இதில் சந்தேகம் வேண்டாம். எங்கே பொருளின் செலவும் வரவும் ஸமமாயிருப்பதன்றி லாபமில்லையோ அங்கே வியாபாரம் செய்யக்கூடாது. அது [1] கழுதைக்குச் சொறிந்து கொடுப்பதாகும். ஓ! அரசரே! இப்படியே [2] அற்பமான தர்மத்தைவிட்டுப் பெரிய தர்மத்தைச் செய்கிற மனிதன் புத்தியுள்ளவனென்பது நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பண்டிதர்கள் தம்முடைய நண்பர்களைக்கொண்டு பகைவர்களுடைய நண்பர்களைப் பிரிக்கிறார்கள். வேறுபட்ட மித்திரர்களால் விடப்பட்டுப் பலங்குறைந்தவனைத் தன் வசப்படுத்துகிறார்கள். ஓ! அரசரே! மிக்கபலமுள்ளவனும் பலத்துடன் யுத்தம்செய்து எல்லா ப்ரஜைகளையும் தன்வசப்படுத்துகிறானேயல்லாமல் முயற்சியினாலும் நன்மொழிகூறி அழைப்பதாலும் வசப்படுத்துவதில்லை. பகைவன் மிக்க பலமுள்ளவனாயிருந்தாலும் வண்டுகளால் தேன்எடுப்பவன் கொல்லப்படுவதுபோலத் துர்ப்பலர்களால் ஒன்றுசேர்ந்தே கொல்லப்படக்கூடியவனாகிறான். ஓ! அரசரே! சூரியன் கிரணங்களால் எல்லாப்ரஜைகளையும் நீரைப் பெய்து காப்பதுபோலவும் நீரை வற்றச்செய்து அழிப்பதுபோலவும் நீரும் ஸூரியனுக்கு ஒப்பாகக்கடவீர். அரசரே! நமது முன்னோர்களால் விதிப்படி செய்யப்பட்ட பூமியின் பாலனம் அனாதியான தவமென்று எனக்குக் கேள்வி. அரசரே! க்ஷத்திரியன் தன் தர்மமான யுத்தத்தைச்செய்து வென்றோ, மரித்தோ (நல்ல) உலகங்களை அடைவதுபோலத் தவத்தால் அடையான். இந்த உம்முடைய துக்கத்தைப் பார்த்து, ஸூரியனிடமிருந்து

1 பயனின்மையோடு பாவமும் உண்டாகுமென்பது.

2 'பிரதிஜ்ஞையைக் காப்பதாகிய அற்பதர்மத்தைவிட்டு ராஜ்யலாபத்தால் செய்யக்கூடிய தானம் யாகம் முதலிய பெரிய தர்மங்களைச் செய்பவன்' என்பது பழையவுரை.

காந்தியும் சந்திரனிடமிருந்து அழகும் விலகிவிடுமென்று உலகம் நிச்சயித்திருக்கிறது. அரசரே! தனித்தனிகூடின கூட்டத்தினர்கள் உம்முடைய ஸ்தோத்திரங்களோடும் பகைவனுடைய நிந்தைகளோடும் பேசிக்கொள்ளுகிறார்கள். ஓ! அரசரே! ப்ராம்மணர்களும் குருக்களும் ஒன்றுசேர்ந்து ஸந்தோஷத்துடன் உம்முடைய இந்தச் சொல்தவறாமையை மேலானதாகச் சொல்லுகிறார்கள். உம்மால் அறியாமையாலும் எளிமையாலும் பேராசையாலும் பயத்தாலும் காமத்தாலும் பொருள் நிமித்தத்தாலும் சிறிதும் பொய் சொல்லப்பட்டதில்லை. அரசன் பூமியை அடைவதற்காக எந்த அற்பமான பாவத்தைச் செய்கிறானோ அதையெல்லாம், பிறகு, அதிக தக்ஷிணையுள்ள யாகங்களால் போக்குகிறான். ஓ! அரசரே! வீரரே! ஆயிரக்கணக்கான கோக்களையும் கிராமங்களையும் ப்ராம்மணர்களுக்குக் கொடுத்து [1] இருட்டிலிருந்து சந்திரன் விடப்படுவதுபோலப் பாவங்களிலிருந்து விடப்படுகிறான். ஓ! குருநந்தனரே! யுதிஷ்டிரரே! பட்டணத்திலும் தேசத்திலுமுள்ள பிராயமுதிர்ந்தவரும் பாலரும் உள்ளிட்ட யாவரும் ஒன்றுசேர்ந்து பெரும்பான்மையாக உம்மைத் துதிக்கிறார்கள். பாரதரே! துரியோதனனிடத்தில் ராஜ்யமிருப்பது நாய்த்தோற்பையில்பாலும், சூத்திரனிடத்தில் வேதமும், திருடனிடத்தில் மெய்யும், ஸ்திரீயினிடத்தில்பலமும் இருப்பது போன்றது என்று உலகத்தில் நிச்சயவார்த்தை நடக்கிறது. மேலும், இந்த ஸ்திரீகளும் பாலர்களும் (மேல் சொல்லிய நாய்த்தோலில் பாலென்கிற பொருளுள்ள சுலோகத்தை) வேதமாகப் படிக்கின்றார்கள். ஓ! பகைவரை அடக்குபவரே! எங்களுடன் நீரும், இந்த அவஸ்தையை அடைந்து உமக்குக் கஷ்டம்உண்டானபொழுது நாங்கள் யாவரும் நாசமடைந்தவர்களானோம். அப்படிப்பட்ட நீர் எல்லாவிதமான போர்க்கருவிகளுடனுங்கூடின ரதத்தை அடைந்து ப்ராம்மணர்களுக்கு அர்த்தத்தைக் கொடுப்பதற்கு விரைந்து (பகைவரை) எதிர்த்துச் செல்லக்கடவீர். ப்ராம்மணர்களை ஆசீர்வதிக்கச்செய்து, அஸ்திரமறிந்தவர்களும் உறுதியான வில்லுள்ளவர்களும் ஸர்ப்பம்போன்றவர்களும் வீரர்களுமான ஸகோதரர்களால் இந்திரன் தேவர்களால் சூழப்படுவதுபோலச்

---

1 சந்திரனைக்கண்ட இருள் விலகுவதுபோல இவனிடமிருந்து பாவம் விலகுமென்பது; 'மேகங்களிலிருந்து சந்திரன் விடுபடுவதுபோல' என்பது ஆங்கில மொழிபெயர்ப்பு.

சூழப்பட்டு அஸ்தினாபுரத்தையடைந்து, அஸுரர்களை இந்திரன் நொறுக்குவதுபோலப் பகைவர்களைப் பராக்கிரமத்தால் பொடி செய்துகொண்டு துரியோதனனிடமிருந்து ராஜ்யத்தை மீட்டுக் கொள்வீராக. காண்டீவத்திலிருந்து விடப்பட்டவைகளும் கழுகிறகு பூண்டவைகளும் ஸர்ப்பம்போல விளங்குகின்றவைகளுமான பாணங்களுடைய ஸ்பரிசத்தை ஒருமனிதனும் தாங்கமாட்டானன்றோ? பாரதரே! கோபங்கொண்ட என்னுடைய கதாயுத வேகத்தை யுத்தத்தில் பொறுக்கக்கூடிய வீரனுமில்லை; யானையுமில்லை; குதிரையுமில்லை. கௌந்தேயரே! ஸ்ருஞ்சயர்களுடனும் கைகேயர்களுடனும் வ்ருஷ்ணிகளுள்சிறந்த கோவிந்தருடனும் (இருத்தலால்) ராஜ்யத்தை யுத்தத்தில் ஏன் அடையமாட்டோம்? அரசரே! பெருஞ்சேனையுடன்கூடி இவ்விஷயத்தில் முயற்சியைச் செய்தால் சத்துருவின் கையையடைந்த பூமியை ஏன் அடையமாட்டீர்?' என்றான்.

முப்பத்துநான்காவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் தாம்செய்த பிரதிஜ்ஞையை விடமுடியாதென்பதையும் பிரதிஜ்ஞையின் முடிவுக்காலத்தை எதிர்பார்த்திருக்கவேண்டுமென்பதையும் பீமனுக்குச்சொல்லியது.)

ஸத்தியத்தையே விரதமாகவுடையவரும் அதிக மஹிமையுள்ளவருமான அந்த அஜாதசத்ருவான அரசர், பீமஸேனனால் இவ்விதம் சொல்லப்பட்டு, பிறகு, தைர்யத்துடன் பின்வரும் வார்த்தையைச் சொல்லலானார். 'ஓ! பாரத! இது உண்மை; ஸந்தேகமில்லை. வாக்கியமாகிற பாணங்களால் ஏன் என்னைப் பீடித்துத் துன்புறுத்துகிறாய்? உன்னை நான் நிந்திக்கவில்லை. தகாத இந்தத் துன்பமானது என்னுடைய அநியாயத்தினாலன்றோ உங்களுக்குண்டாயிற்று? நான் திருதராஷ்டிரபுத்திரனிடமிருந்து தேசத்துடன் அரசாட்சியை அபகரிக்கவிருப்பங்கொண்டு சூதை அனுஸரித்தேன். அதில் வஞ்சகனும் ஸுபலன் குமாரனுமான சகுனி துரியோதனனுக்காக எதிர் ஆட்டம் ஆடினான். மஹாமாயையுள்ளவனும் மலைநாட்டரசன் புத்திரனுமான சகுனி ஸபையின் நடுவில் கூட்டமான சூதுக்காய்களை உருட்டி, மாயையற்ற

என்னை மாயையால் வென்றுவிட்டான். ஓ! பீமஸேன! அதி லிருந்து துன்பத்தைப் பார்த்தேன். சகுனியின் விருப்பத்துக் கேற்றபடி சூதுக்காய்கள் இரட்டைப்படையும் ஒற்றைப்படையு மாக விழுவதைப்பார்த்து என்னால் மனம் அடக்கத்தக்கதாயிற்று. கோபம் மனிதனுடைய தைரியத்தைக் கெடுக்குமன்றோ? குழந் தாய்! பீமஸேன! பௌருஷத்தாலும் அகங்காரத்தாலும் வீரியத் தாலும் கட்டப்பட்டமனமானது அடக்கமுடியாதது. (அதனால்) உன்னுடைய வார்த்தைகளில் குற்றங்கூறவில்லை. அது அவ்விதம் ஆகவேண்டியதாக இருந்ததென்று நினைக்கின்றேன். திருதராஷ்டிர ரின் புத்திரனான அந்த அரசன் ராஜ்யத்தைவிரும்பிக்கொண்டு நம் மைத் துக்கத்தில் தள்ளினான்; ஓ! பீமஸேன! நம்மை அடிமையு மாக்கினான். அதில் திரௌபதி நம்மைக் காப்பவளானாள். திரும் பவும் நாம் சூதாட்டத்திற்காக அந்த ஸபையைநோக்கி வந்த போது, பரதர்களுக்கெதிரில் என்னை நோக்கித் திருதராஷ்டிரபுத் திரன் ஒரே பந்தயத்திற்காக, 'ஓ! ராஜபுத்திர! அஜாதசத்ருவே! காட்டில் இஷ்டப்படி பன்னிரண்டுவருஷங்கள் பிறர் அறியும்படி யும், பிறகு மற்ற ஒருவருஷம் எல்லாத்தம்பிகளுடனும் உருவம் மறைந்து ஒருவராலும் அறியப்படாதபடியும் ஸஞ்சரிக்கக்கடவாய். ஓ! ஐயா! நீ அவ்விதம் ஸஞ்சாரம் செய்வதைக்கேட்டுப் பாரதர் களின் ஒற்றர்கள் அறிவார்களானால் மற்ற அவ்வளவுவருஷங்களும் நீ அவ்விதமே ஸஞ்சரிக்கவேண்டும். ஓ! பார்த்த! அதை நிச் சயித்துப் பிரதிஜ்ஞை செய். ஓ! அரசனே! என்னைச் சார்ந்தவர் களை அறியமுடியாமற்செய்து ஸாவதானமுள்ளவனாக இக்காலம் முழுவதும் ஒற்றர்களால் அறியப்படாவிட்டால் அந்த (விதஸ்தை முதலிய) ஐந்துநதிகள் பாயும் தேசம் உன்னுடையதே. இந்தக் குருஸபையில் ஸத்தியமாகச் சொல்லுகிறேன். பாரத! நீ எங் களை ஜயித்துவிட்டால் நாங்களனைவரும் அவ்வளவுகாலம் போ கங்களைவிட்டு ஸஞ்சரிப்போம்' என்று முன்பு குருக்களுக்கு நடுவில் அந்த அரசன் சொன்னான். 'அப்படியே ஆகட்டும்' என்று நான் அவனுக்குச் சொன்னேன். இதையெல்லாம் நீயும் தனஞ்சய னும் அறிவீர். அப்பொழுது கடைசியான சூதாட்டம் நடந்தது. அதில் யாவரும் ஜயித்துத் துரத்தப்பட்டு, இவ்விதம் கஷ்டமடைந்த உருவமுள்ளவர்களாகித் தேசங்களிலும் கஷ்டமான காடுகளிலும் ஸஞ்சரிக்கிறோம். அந்தத் துரியோதனனும் ஸமாதானத்தை விரும்பாதவனாகித் திரும்பவும் கோபத்தின் வசத்தை அடைந்

தான் ; எந்தச் சிலகுருக்கள் அவனுடையவசத்தை அடைந்திருக்கிறார்களோ அவர்கள் எல்லாரையும் ராஜ்ய கார்யங்களில் இருக்கச் செய்தான். ஸாதுக்களின் முன்னிலையில் அந்த நிச்சயத்தை அடைந்து இங்கு ராஜ்யத்திற்காக எவன் தான் (அதை) விடுவன்? பெரியோருக்குத் தர்மத்தைவிட்டுப் பூமியை ஆளுகிறது மரணத்தைக்காட்டிலும் கொடிதென்று எண்ணுகிறேன். பீம! நீ சூதாட்டத்தில் பரிகமென்னும் ஆயுதத்தைத்தொட்டு என்கைகளை எரிக்கவும் கருதி அர்ஜுனனால் தடுக்கப்பட்டபொழுதே வீரச்செய்கையைச் (சண்டையைச்) செய்திருந்தால் என்ன கெடுதி வந்திருக்கும்? இவ்விதம் உடன்பாட்டைச் செய்வதற்கு முந்தியே உனது ஆண்மையை அறிந்த நீ ஏன் சொல்லவில்லை? வந்த மரணம்போன்ற துன்பத்தை ஏற்றுக்கொண்டு பிறகு என்னைக் குறித்து இப்பொழுது ஏன் வரைகடந்து பேசுகிறாய்? ஓ! பீம! துன்புறுத்தப்படுகின்ற திரௌபதியைப் பார்த்தும் பொறுக்கப்பட்டதனால், அதிக துக்கம் எனக்கு உண்டாகிறது. ஓ! பீமஸேன! விஷத்தின் ரஸத்தைக் குடித்துவிட்டுப் பரிதாபத்தை அடைவதுபோல மிக்க பரிதாபத்தை அடைகிறேன். ஓ! பரதருட்சிறந்தவீர! குருவீரர்களின் நடுவில் (ப்ரதிஜ்ஞை) செய்து சொல்லப்பட்டதை இப்பொழுது (மாற்றுவது) முடியாது. விதை விதைப்பவன் விளைச்சலின் முதிர்ச்சியை எதிர்பார்ப்பதுபோல ஸுகம் உண்டாவதற்குரிய காலத்தை எதிர்பார். 'முன் அவமதிக்கப்பட்டவன் பகைவர்கூட்டம் [1] மலர்களுடன் கூடியதாகவும் கனிகளுடன் கூடியதாகவும் இருப்பதை அறிந்து பராக்கிரமத்தினால் எப்பொழுது நாசம்செய்வானோ அப்பொழுது ப்ராணிலோகத்தில் வீரனான அவன் பெரிய குணத்தையடைந்து உயிர்வாழ்பவனாகிறான்; லோகத்தில் பூர்ணமான செல்வத்தையும் அடைகிறான். இவனைப் பகைவர்கள் வணங்குகிறார்கள். ஸ்நேகிதர்களும் இவனை மிக்க ப்ரியத்துடன் அடைகிறார்கள். தேவர்கள் இந்திரனை அடுப்பதுபோல (யாவரும் இவனை) அடுத்துப் பிழைக்கிறார்கள்' என்று நினைக்கிறேன். என்னுடைய பிரதிஜ்ஞையை உண்மை என்றறி. தேவத்தன்மையையும் உயிரையுங்காட்டிலும் ஸத்தியத்தை விரும்புகிறேன். ராஜ்யம், புத்திரர்கள், கீர்த்தி, தனம் ஆகிய யாவும் ஸத்தியத்தின் பதினாறில் ஒன்றுக்கும் ஈடாகா' என்றார்.

---

1 புதியவரும் பழையவருமான துணையரசருடன் இருப்பதை.

முப்பத்தைந்தாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் வனவாஸத்தை நிறைவேற்றாமலே துரியோதனனை வெல்ல வேண்டுமென்பதை யுக்தியுடன் யுதிஷ்டிரரிடம் கூறியது.)

பீமஸேனன், 'காலத்துக்குக் கட்டுப்பட்டவரும் நுரைபோல ஸாரமற்றவரும் பழம்போல விழக்கூடியவரும் அப்படியே மரிக்குந்தன்மையுடையவருமான நீர் நாசமாக்குகிறதும் பாணம்போல் வேகமாகப் போகக்கூடியதும் முடிவற்றதும் அளவிட முடியாததும் (எப்பொழுதும் போய்க்கொண்டிருக்கும்) வெள்ளம்போன்றதும் யாவற்றையும் அடித்துக்கொண்டு போவதுமான காலத்தினால் உடன்பாட்டைச்செய்துகொண்டு காலத்தை ப்ரத்யக்ஷமாக எண்ணுகிறீர். ஓ! கௌந்தேயரே! ஊசியால் குத்தி எடுக்கப்படும் மைப்பொடிபோல இமைக்கொட்டுதலாலும் ஆயுள் குறைக்கப்படும் மனிதன் எப்படி காலத்தை எதிர்பார்க்கலாம்? எவன் அளவிற்கடங்காத ஆயுளுள்ளவனோ, அல்லது, ஆயுளின் ப்ரமாணத்தை அறிந்தவனோ, யாவற்றையும் நேராகக்கண்டவனன்றோ (தொழிலைச்செய்தற்குக்) காலத்தை எதிர்பார்க்கலாம்? ஓ! அரசரே! நம்மால் எதிர்பார்க்கப்படும் காலமோ பதின்மூன்றுவருஷமாகும். அது ஆயுளின் குறைவைச்செய்து மரணத்தைக்குறித்துக் கொண்டுபோய்விடும். தேகமுள்ளவர்களுக்கு மரணமானது எப்போதும் தேகத்தில் பற்றியிருக்கிறது. ஆகையால், மரணத்திற்கு முந்தியே ராஜ்யத்தைக்குறித்து முயற்சிசெய்வோம். பெரியோர் வரிசையில் எண்ணப்படாத புகழற்றவன் பூமிக்குப் பாரமாகிறான். அவன் பகைவரைப் போக்கமாட்டாமல் எருதைப்போலக் கஷ்டத்தை அடைகிறான். அற்பமான பலமும் முயற்சியுமுள்ள எந்த மனிதன் பகைவரை வெல்லவில்லையோ, தீயபிறைப்புள்ள அவனுடைய பிறப்புப் பயனற்றதென்று நான் நினைக்கின்றேன். உமது கைகள் பொன்னை வழங்கியவை. உமது புகழ் [1] உலக முழுதும் பரவியது. யுத்தத்தில் சத்ருவைக்கொன்று புயவலிமையால் ஜயிக்கப்பட்ட செல்வத்தை அனுபவியும். ஓ! அரசரே! மனிதன் வஞ்சகனைக் கொன்று உடனே [2] நரகத்தை அடைந்தாலும் அவனுக்கு அந்த (நரகமானது) ஸ்வர்க்கத்திற்கொப்பானது.

1 'ப்ருது சக்ரவர்த்தியினுடையதுபோன்றது' என்பது பழையவுரை.
2 'ஆபத்தை' என்பது பழையவுரை.

எதனால் வாட்டப்பட்ட நான் இரவும் பகலும் தூங்கவில்லையோ பொறுமையாலுண்டான அந்தத்தாபமோ நெருப்பைக்காட்டிலும் மிக வெப்பமானது. நாணையிழுப்பதில் சிறந்த பார்த்தனான இந்த அர்ஜுனனும் குகையிலுள்ள சிங்கம்போல (அடங்கி) மிக்க தாபத்தை அடைந்தவனாயிருக்கிறான். ஓ! அரசரே! உலகத்திலுள்ள எல்லா வில்லாளிகளையும் ஒருவனாகவே நாசம் செய்யக் கூடிய இவன் மனத்திலுண்டான தாபத்தைப் பெரியயானை அடக்குவதுபோல அடக்குகிறான். நகுலனும் ஸஹதேவனும் வீரரையீன்றவளும் வயதுமுதிர்ந்தவளுமான தாயும் உம்முடைய பிரியத்தையே விரும்பிக்கொண்டு மூடர்போலவும் ஊமையர்போலவும் இருக்கின்றார்கள். ஸ்ருஞ்சயர்களுடன்கூடின எல்லா உறவினர்களும் உமக்குப் பிரியத்தையே விரும்புகிறார்கள். ப்ரதிவிந்தியன்மாதாவான திரௌபதியும் நான் ஒருவனுமே தாபத்தை அடைந்தோம். மேலும், எதைச் சொல்லுகிறேனோ அது யாவருக்கும் இஷ்டமானதே. யாவரும் துன்பத்தை அடைந்திருக்கிறார்கள். யாவரும் சண்டையைக் கொண்டாடுகிறார்கள். ஓ! அரசரே! அற்பபலமுள்ள நீசர்களால் நமது ராஜ்யமானது கவரப் பட்டு அனுபவிக்கப்படுகிறதென்பதைக்காட்டிலும் மிக்க கொடிய ஓர் ஆபத்தும் வரப்போகிறதில்லை. ஓ! பகைவரை வாட்டுபவரே! குரூரத்தன்மை இல்லாமையாகிற ஸ்வபாவதோஷத்தால் தயையுடன்கூடிக் கஷ்டங்களைப் பொறுக்கிறீர். இதனை மற்ற எவனும் புகழமாட்டான். அரசரே! மிக்க மந்தனும் அர்த்தஜ்ஞானமில்லாதவனுமான வேதாக்ஷரத்தைக் கற்றவனுடைய குரு சொல்வதைத் திருப்பிச் சொல்வதால் கெட்டுப்போன புத்திபோல இந்த உம்முடைய புத்தியானது உண்மையான அர்த்தத்தைக் கண்டதன்று. தயையுள்ள பிராம்மணரூபியாயிருக்கிறீர்; க்ஷத்திரியர்களிடத்தில் எப்படி ஜனித்தீர்? இந்த க்ஷத்திரியப் பிறப்பில் அநேகமாகக் குரூரபுத்தியுள்ளவர்களன்றோ ஜனிக்கின்றார்கள்? நீர், மனு எவ்விதம் சொன்னாரோ அவ்விதம் குரூரமானவையும் கபடத்துடன்கூடியவையும் பொறுமையற்றவையும் விதிக்கப்பட்டவையுமான ராஜதர்மங்களைக் கேட்டிருக்கின்றீரா? ஓ! மஹாராஜரே! கெட்ட எண்ணமுள்ள த்ருதராஷ்டிரபுத்திரர்களை ஏன் பொறுக்கிறீர்? செய்யவேண்டியகாரியத்தில் (முயற்சியில்லாமல்) மலைப் பாம்புபோல் ஏன் (சும்மா) இருக்கின்றீர்? புத்தி, வீர்யம், படிப்பு, நற்குலம் இவற்றுடன்கூடின நீர் எங்களை மறைக்கவிரும்புவது ஒரு

பிடி புல்லினால் இமயமலையை மறைக்க விரும்புவதுபோலும். ஓ! பார்த்தரே! ஆகாயத்தில் சூரியனைப்போலப் பூமியில் கீர்த்திபெற்ற உம்மால் மறைந்து அஜ்ஞாதவாஸமானது செய்யமுடியாது. அதிக ஜலமுள்ள இடத்தில் கிளைகளும் மலர்களும் இலைகளுமுள்ள பெரிய தேக்கமரம்போலவும் வெண்மையான யானைபோலவும் அர்ஜுனன் அறியப்படாதவனாக எவ்விதம் சஞ்சரிப்பான்? சிங்கத்திற்கு ஒப்பானவர்களும் ஸகோதரர்களும் ஒன்றுசேர்ந்தவர்களும் சிசுக்களுமான இந்த நகுலஸஹதேவர்களும் (அறியப்படாமல்) எவ்விதம் ஸஞ்சரிப்பார்கள்? ஓ! பார்த்தரே! புண்ணிய கீர்த்தியுள்ளவளும் வீரரையீன்றவளும் பிரஸித்திபெற்றவளும் ராஜபுத்திரியும் துருபதபுத்ரியுமான இந்தக்கிருஷ்ணையானவள் அறியப்படாதவளாக எவ்விதம் ஸஞ்சரிக்கப்போகிறாள்? ஓ! அரசரே! இந்த ஜனங்கள் என்னையும் குழந்தைமுதல் நன்கு அறிவார்கள். (ஆகவே, நமது) அஜ்ஞாதவாஸத்தை மேருவினுடைய மறைவைப்போல எண்ணுவார்கள். அப்படியே, நம்மால் தேசத்திலிருந்து துரத்தப்பட்ட அனேகம் அரசர்களும் அரசகுமாரர்களும் த்ருதராஷ்டிர புத்ரனை அனுஸரித்திருக்கின்றார்கள். துரத்தப்பட்டவர்களும் வஞ்சிக்கப்பட்டவர்களுமான அவர்களும் சமனத்தையடையார்களன்றோ? அவனது பிரியத்தை விரும்பின அவர்களால் நமக்கு அவஶ்யம் அபகாரம் செய்யத்தக்கதாகும். அவர்களும் நம்மிடத்தில் மறைந்த அனேகம் ஒற்றர்களை அனுப்புவார்கள்; நம்மையறிந்து சொல்லியும்விடுவார்கள். அதிலிருந்து நமக்கு அதிகபயமுண்டாகும். நாம் காட்டில் பதின்மூன்று மாஸங்கள் பூர்ணமாக வஸித்துவிட்டோம். அவற்றை ஓர் அளவினால் அவ்வளவு வருஷங்களாகப் பாரும். ஸோமலதைக்குப் பூதீகங்கள்(=சீந்திற்கொடி)பிரதிநிதியாயிருப்பதுபோல (வருஷத்திற்கு) மாஸம் பிரதிநிதியாக இருக்கிறதென்று வித்வான்கள் சொல்லுகின்றனர். அவ்விதம் இது செய்யப்படட்டும். அல்லது, நல்லதும் நன்கு பாரத்தைச் சுமக்கின்றதுமான காளைக்குப் (புல்லைக்கொடுத்து) த்ருப்திசெய்விப்பதால் இந்தப் பாவத்திலிருந்து விடப்படுகிறான். ஓ! அரசரே! ஆகையால், நீர் சத்ருவதத்தில் நிச்சயத்தைச் செய்வீராக. ஏனெனில், எல்லா க்ஷத்திரியருக்கும் சண்டையைவிட வேறான தர்மமில்லை' என்றான்.

முப்பத்தாறுவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமன பர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரரும் பீமனும் பேசிக்கொண்டிருக்கையில் வியாஸர்வந்து யுதிஷ்டிரருக்குப் பிரதிஸ்ம்ருதிவித்தையை உபதேசித்ததும், யுதிஷ்டிரர் வியாஸர் கட்டளைப்படி பரிஜனங்களுடன் காம்யகவனம் சென்றதும்.)

குந்தீபுத்திரரும் ஆண்மையிற்சிறந்தவரும் பகைவரை வாட்டுபவருமான யுதிஷ்டிரர் பீமனுடைய வார்த்தையைக் கேட்டுப் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆலோசித்தார்: 'என்னால் ராஜதர்மங்களும் வர்ணதர்மங்களும் தனித்தனியே கேட்கப்பட்டிருக்கின்றன. வருங்காலத்திலும் நிகழ்காலத்திலும் எவன் (அவைகளைப்) பார்த்து நடக்கிறானோ அவனே தெரிந்தவனாகிறான். அறிதற்கு மிக அருமையான தர்மத்தினுடைய மேலான வழியை அறிந்தவனான நான் மேருவைப் புரட்டுவதுபோலத் தர்மத்தைப் புரட்டுதலை பலாத்காரமாக எவ்விதம் செய்வேன்?' என்று அவர் ஒரு முகூர்த்தகாலம் ஆலோசித்து இவ்விதம் செய்யவேண்டியதென்பதை நன்கு நிச்சயித்துத் தாமதமின்றிப் பீமஸேனனை நோக்கி இந்த வாக்கியத்தைச் சொல்லலானார். 'தோள்வலியமைந்தவனே! பாரத! நீ சொல்லுகிறது உண்மையே. பேசுந்திறமையுள்ளவனே! இந்த என்னுடைய வேறு வாக்கியத்தை ஏற்றுக்கொள். ஓ! பாரத! பீமஸேன! கேவலம் பிடிவாதத்தால் தொடங்கப்படும் மிக்க தீயசெயல்கள் துன்பத்தைத் தருகின்றன. சிறந்த கைகளுள்ளவனே! காரியமானது நன்கு ஆலோசிக்கவும் நன்கு நிச்சயிக்கவும் நன்கு தொடங்கவும் நன்கு செய்யவும் பட்டபோது தெய்வமும் அனுகூலமாகி விருப்பங்கள் நிறைவேறுகின்றன. இந்தக் காரியத்தை மனவுறுதியில்லாமை ஒன்றினாலேயே பலத்தாலுண்டான கொழுப்புள்ளவனாகி ஸ்வயமே ஆரம்பிக்கத்தக்கதென்று எண்ணுகிறாய். அவ்விஷயத்தில் என்னிடமிருந்து கேளு. பூரிஸ்ரவஸும் சலனும் வீர்யமுள்ள ஜலஸந்தனும் பீஷ்மரும் துரோணரும் கர்ணனும் வீர்யமுள்ள அஸ்வத்தாமாவும் அசைக்கமுடியாத துரியோதனன் முதலிய திருதராஷ்டிர புத்திரர்களுமாகிய யாவரும் அஸ்திராப்பியாஸம் செய்தவர்கள்; எப்பொழுதும் [1] ஆததாயிகள். நம்மால் கஷ்டப்படுத்தப்பட்ட சிற்றரசர்களும்

[1] விராடபர்வம் 175-ம் பக்கம் குறிப்பில் காண்க.

பேரரசர்களும் கௌரவபக்ஷத்தை அடுத்து இப்பொழுது சிநேகத்தை அடைந்திருக்கிறார்கள். ஓ! பாரத! துரியோதனனுடைய நன்மையில் விருப்பமுள்ளவர்களும் நமது நன்மையில் விருப்பமில்லாதவர்களும் நிரம்பின பொக்கசமுள்ளவர்களும் சைனியத்துடன் கூடினவர்களுமான அவர்கள் அவனைக் காப்பதில் முயற்சிசெய்வார்கள். புத்ரர்களோடும் மந்திரிகளோடும் சேனைவீரர்களோடும் கூடின அவர்களெல்லாரும் கௌரவ சேனையினுடைய சம்பளத்தோடும் உணவு முதலியவற்றோடும் எல்லாவிதத்திலும் ஒப்பப்பகுத்துக் கொடுக்கப்பெற்றவர்களல்லரோ? துரியோதனனால் விசேஷமாக ஸம்மானம்செய்யப்பட்ட அந்த வீரர்கள் யுத்தத்தில் (அவனுக்காக) ப்ராணனையும் விடுவார்களென்பது என்னுடைய நிச்சயமான எண்ணம். சிறந்த கைகளுள்ளவனே! பீஷ்மர் துரோணர் மஹாத்மாவான கிருபர் இவர்களுக்கு நிலைமை நம்மிடத்திலும் அவர்களிடத்திலும் ஸமமாக இருக்குமானாலும் அரசன் அளித்த சோற்றுக்கடனைத் தீர்ப்பது அவஶ்யமாகும். ஆனது பற்றி, யுத்தத்தில், விடுவதற்கரிய உயிரையும் விடுவார்களென்பது என் கருத்து. யாவரும் திவ்யாஸ்திரம் அறிந்தவர்கள். யாவரும் தர்மத்தை முக்கியமாகக்கொண்டவர்கள். இந்திரனுடன்கூடின தேவர்களாலும் ஜயிக்கமுடியாதவர்களென்பதும் என்னுடையஎண்ணம். அவர்களுள்ளும், எல்லா அஸ்திரங்களையும் அறிந்தவனும் அசைக்கமுடியாதவனும் பிளக்கமுடியாத கவசத்தால் சூழப்பட்டவனும் பொறுமையுள்ளவனும் மஹாரதனுமான கர்ணன் எப்பொழுதும் முயற்சியுள்ளவனாயிருக்கிறான். உதவியில்லாத உன்னால் யுத்தத்தில் இந்த எல்லாப் புருஷஶ்ரேஷ்டர்களையும் ஜயிக்காமல் துரியோதனன் கொல்லப்படக்கூடியவனல்லன். ஓ! வ்ருகோதர! வில்லாளிகள் யாவரையும் அதிகரித்த கர்ணனுடைய லாகவத்தை ஆலோசனை செய்கிறதனால் நான் தூக்கத்தை அடைவதில்லை' என்றார். அதிக கோபமுள்ள பீமஸேனன் இந்த வார்த்தையை அறிந்துகொண்டு தமையனாருடைய வார்த்தையால் தடுக்கப்பட்டவனாகி அடக்கத்துடன் கூடியவனானான். அப்பொழுது, அந்த இரண்டு பாண்டவர்களும் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கையில், ஸத்யவதீபுத்திரரும் மஹாயோகியுமான வ்யாஸர் வந்தார். பேசுகிறவர்களுள் சிறந்தவரான அவர், பாண்டவர்களால் எதிர்சென்று முறைப்படி பூஜிக்கப்பட்டு யுதிஷ்டிரரை நோக்கி இந்தவார்த்தையைச் சொல்லலானார்.

'ஓ! மனிதரிற்சிறந்தவனே! யுதிஷ்டிர! உன்னுடையமனத்தி லிருப்பதைப் புத்தியினால் அறிகிறேன். அதனால் சீக்கிரம் வந்தவ னாகிறேன். ஓ! பாரத! பகைவரைக்கொல்பவனே! பீஷ்மரிட மிருந்தும் துரோணரிடமிருந்தும் கிருபரிடமிருந்தும் கர்ணனிட மிருந்தும் அச்வத்தாமாவிடமிருந்தும் ராஜபுத்திரனான துரியோ தனனிடமிருந்தும் துச்சாஸனனிடமிருந்தும் எந்தப் பயம் உன் னுடைய மனத்தில் சுழலுகிறதோ உன்னுடைய அந்தப்பயத்தைச் சாஸ்திரத்தில்கண்ட காரணத்தால் போக்குகின்றேன். அதைக் கேட்டுத் தைரியத்தையடைந்து செய்கையால் நிறைவேற்று. ராஜேந்திர! நிறைவேற்றி, பிறகு, சீக்கிரம் தாபத்தை விலக்கிக் கொள்' என்றார். பிறகு, வார்த்தையில் ஸமர்த்தரான வ்யாஸர் யுதிஷ்டிரரை ரகஸ்யத்தில் அழைத்துப்போய் யுக்தியுக்தமான அர்த்தத்தையுடைய இந்தவார்த்தையைச் சொல்லினர். 'ஓ! பாரத ருட்சிறந்தவனே! உனக்கு, அர்ஜுனன் வில்லைத்தரித்து யுத்தத் தில் பகைவர்களை ஜயிப்பதற்குரியதும் க்ஷேமத்திற்குரியதுமான வேறு காலமானது வந்திருக்கின்றது. சரீரமெடுத்துவந்த ஸித்தி யைப்போன்றதும் ப்ரதிஸ்ம்ருதியென்று பெயர்பெற்றதுமான வித்தையைச் சரணமடைந்த உனக்குச் சொல்லுகின்றேன். எதை அடைந்து மஹாபாகுவான அர்ஜுனன் (கார்யத்தைச்) சாதிப் பனோ என்னால் உபதேசிக்கப்பட்ட அதனைப் பெற்றுக்கொள். தவத்தினாலும் பராக்கிரமத்தினாலும் தேவர்களைப்பார்ப்பதற்குச் சக்தியுள்ளஇவன் அஸ்திரத்திற்காக மஹேந்திரனையும் ருத்ரரையும் வருணனையும் குபேரனையும் தர்மராஜனையும் அடையக்கடவன். அதிகதேஜஸுள்ளவனும் நாராயணரிஷியை ஸஹாயமாயுடையவ னும்வெகுகாலமாயுள்ளவனும் அழிவற்றவனும் அச்சுதனும் ஜயிக்க முடியாதவனும் தேவரிஷியும் பெரியகையுள்ளவனுமான இந்த அர்ஜுனன், இந்திரனிடமிருந்தும் ருத்திரரிடமிருந்தும் லோக பாலர்களிடமிருந்தும் அஸ்திரங்களையடைந்து பெரியகாரியத்தைச் செய்வான். ஓ! ப்ருதிவீபதியே! கௌந்தேய! உங்களுடைய வாஸத் திற்கு இந்த வனத்தைவிடச் சிறந்ததான வேறுவனத்தை ஆலோ சிக்கக்கடவாய். ஓர் இடத்தில் நெடுங்காலவாஸமானது ப்ரீதியை யுண்டுபண்ணுகிறதாகாது. வேதவேதாங்கங்களின் கரைகண்ட அனேகம் ப்ராம்மணர்களையும் காப்பாற்றுகின்றாய். ஆதலால், சாந் தர்களான தவசிகளுக்கு வெறுப்பை உண்டுபண்ணுகிறதாகும். மான்கள் (கிடைப்பதில்) தடையும், கொடிக்கும் பச்சிலைக்கும் நாச

மும் உண்டாகும்' என்றார். யோகத்தின் உண்மையை அறிந்தவரும் ப்ரபுவும் பூஜ்யருமான (வ்யாஸர்) இவ்விதம்சொல்லிச் சரணமடைந்தவரும் சுத்தருமான தர்மபுத்திரருக்கு ஒப்புயர்வற்ற யோகவித்தையை உபதேசித்தார். புத்திமானும் ஸத்தியவதியின்புத்திருமான அந்த வ்யாஸர் தர்மபுத்திரரிடம் அனுமதிபெற்று அவ்விடத்திலேயே மறைந்துவிட்டார். தர்மத்தில்மனமுள்ளவரும் அடங்கினவரும் மேதாவியுமான தர்மபுத்திரர் அந்தமந்திரத்தைக் காலந்தோறும் ஆவிர்த்திசெய்துகொண்டு எப்பொழுதும் மனத்தினால் தரித்தார். அவர் வ்யாஸர் வாக்யத்தால் ஸந்தோஷமடைந்து அந்தத்வைதவனத்திலிருந்து ஸரஸ்வதிநதியின்கரையிலுள்ள காம்யகமெனப்பெயர்பெற்றகாட்டை அடைந்தார். ஓ! மஹாராஜரே! வேதாங்கமானசிக்ஷையிலும் வேதத்திலும் வல்லவர்களும் தவத்துடன் கூடினவர்களுமான பிராம்மணர்கள் தேவேந்திரனை ரிஷிகள் தொடர்வதுபோல அவரைப் பின்தொடர்ந்தார்கள். பரதரில் சிறந்தவரே! மஹாத்மாவான அவர்களும் மந்திரிகளுடனும் காலாள்களுடனும் அங்கிருந்து திரும்பவும் காம்யகத்தையடைந்து இடம் அமைத்துக்கொண்டார்கள். அரசரே! வில்வித்தையில் தேர்ந்தவர்களும் நல்லமனமுள்ளவர்களுமான அந்தவீரர்கள், மேலான வேதத்தைச்சொல்லுகிறவர்களும் எப்பொழுதும் மானைவிரும்புகிறவர்களுமாகிச் சுத்தமான பாணங்களால் வேட்டையாடிக்கொண்டும் பித்ருக்களையும் தேவர்களையும் ப்ராம்மணர்களையும் விதிப்படி திருப்திசெய்துகொண்டும் அவ்விடத்தில் சிலகாலம் வாஸம் செய்தார்கள்.

முப்பத்தேழாவது அத்யாயம்.

அர்ஜுநாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் ப்ரதிஸ்ம்ருதிவித்தையை அர்ஜுனனுக்கு உபதேசித்து அஸ்திரம் பெறுதற்காக அவனை ஸ்வர்க்கத்துக்கனுப்பியதும், அவன் இந்திரகீலமலையில் தவஞ்செய்கையில் இந்திரனைக் கண்டதும், இந்திரன் அஸ்திரம்பெறுதற்காகத் தவத்தால் ஈசுவரனை மகிழ்வித்தற்கு அர்ஜுனனை ஸ்வர்க்கம் வரக் கட்டளையிட்டதும்.)

ஆடவருட் சிறந்தவரே! சிலகாலத்திற்குப் பிறகு, தர்மராஜரான யுதிஷ்டிரர் முனிவரின் உத்தரவை நினைத்துக்கொண்டு அறி

வாளியென்று பிரஸித்திபெற்ற அர்ஜுனனை இன்சொல்லை முன்னிட்டுப் புன்னகைசெய்து கையினால் தடவிக்கொண்டு தனிமையான இடத்தில் பின்வரும் சொல்லைச் சொல்லலானார். பகைவரையடக்குகிறவரான அந்தத் தர்மராஜர் ஒரு முகூர்த்தகாலம் வனவாஸத்தைப்பற்றிச் சிந்தித்து அர்ஜுனனை நோக்கி ரகஸ்யத்தில் இதைச் சொல்லலுற்றார்: 'பாரத! பீஷ்மர், துரோணர், கிருபர், கர்ணன், அச்வத்தாமா ஆகிய இவர்களிடத்தில் [1] நான்கு பாதங்களுள்ள தனுர்வேதமானது இப்பொழுது நிலைத்திருக்கிறது. அம்பு தொடுப்பதுடனும் பிறர் அம்புகளைத் தடுப்பதுடனுங்கூடின இந்திரன் முதலிய தேவர்களின் அஸ்திரத்தையும் ப்ரம்மாஸ்திரத்தையும் ஆஸுராஸ்திரத்தையும் (மற்ற) எல்லா அஸ்திரங்களின் பிரயோகத்தையும் முழுவதும் அறிகிறார்கள். அவர்கள் யாவரும் திருதராஷ்டிரனுடைய புத்திரனால் இன்மொழி கூறப்பட்டவர்களும் நன்கு உபகரிக்கப்பட்டவர்களும் மகிழ்ச்சியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அவனும் அவர்களிடத்தில் குருக்களிடத்திலிருப்பதுபோலிருக்கிறான். எல்லா யுத்தவீரர்களிடத்திலும் இந்தத் துரியோதனனுக்கு எப்பொழுதும் ப்ரீதி அதிகம். பூஜிக்கப்பட்ட ஆசார்யர்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாகித் தோஷபரிகாரத்தை(ச் செய்வதற்கு) முயற்சிசெய்கின்றார்கள். காலத்தில் பூஜிக்கப்பட்ட அவர்கள் சக்தியைக் குறையச் செய்யமாட்டார்கள். ஓ! பார்த்த! கிராமங்களுடனும் நகரங்களுடனும் சேர்ந்ததும் கடலுடனும் வனத்துடனும் ரத்னம்விளையுமிடத்துடனும் கூடினதுமான இந்தப் பூமி முழுவதும் இப்பொழுது துரியோதனனது வசத்தைஅடைந்திருக்கின்றது. பகைவரையடக்குபவனே! எங்களுக்கு நீயே ப்ரியமானவன். உன்னிடத்தில் பாரம் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் காலத்திற்கேற்ற ஒரு காரியத்தைப்பார்க்கிறேன். ஐயா! வ்யாஸரிடமிருந்து என்னால் ரஹஸ்யவித்தையானது கிரகிக்கப்பட்டிருக்கிறது. கிரகிக்கப்பட்ட அதனால் எல்லா உலகமும் நன்குபிரகாசிக்கின்றது. ஓ! ஐயா! நீ அந்தமந்திரத்துடன் கூடினவனாகி மனத்தை நன்குஅடக்கித் தகுந்தகாலத்தில் தேவதைகளின் அனுக்கிரகத்தை அடைவாயாக. ஓ! பரதரிற் சிறந்தவனே! உக்கிரமான தவத்துடன் உன்னைச் சேர்ப்பாயாக. குழந்தாய்! வில்லுள்ளவனும் கவசமுள்ளவனும் கத்தியுள்ளவனும் பெரி

1 'அம்புகளை எடுத்தல், தொடுத்தல், விடுத்தல், திருப்பியழைத்தல்' என்பது பழையவுரை.

யோர்களின் விரதத்திலிருப்பவனும் வேறெந்த விஷயத்துக்கும் இடங்கொடாமல்(இதனையே)தியானிப்பவனுமாகி வடக்குத்திக்கை நோக்கிச் செல்லு. ஓ! தனஞ்சய! இந்திரனிடத்தில் திவ்யமான எல்லா அஸ்திரங்களும் இருக்கின்றனவன்றோ? விருத்திரனிடமிருந்து பயந்த தேவர்களால் (எல்லா அஸ்திரங்களுமான) பலமானது அப்பொழுது இந்திரனிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த இந்திரனிடமிருந்து ஒரேயிடத்திலிருக்கின்ற அவை யாவற்றையும் நீ அடைவாய். அப்பா! அந்த மந்திரத்தினலேயே யாவற்றையும் அடையப்போகிருய். இந்திரனையே சரணம் அடைவாய். அவன் உனக்கு அஸ்திரங்களைக் கொடுப்பான். இப்பொழுதே தீக்ஷையடைந்து நீ தேவேந்திரனைப் பார்ப்பதற்குப் போவாயாக' என்ருர். அம்முறைப்படி தீக்ஷயடைந்தவனும் மனமொழி மெய்களை அடக்கியவனுமான அந்த அர்ஜுனனை நோக்கி இவ்விதம் சொல்லிப் பிரபுவான தர்மராஜர் உபதேசம் செய்தார். அப்பொழுது, முன்பிறந்த ஸஹோதரர், வீரனுன ஸஹோதரனுக்கு(ச் செல்ல) அனுமதி அளித்தார். தர்மராஜருடைய உத்தரவினுல் இந்திரனைப் பார்க்க விருப்பமுள்ளவனுகிக் காண்டீவமென்னும் வில்லையும் அப்படியே இரண்டு பெரிய அம்பறுத்தூணிகளையும் எடுத்துக்கொண்டு கவசம் தரித்தும் உள்ளங்கை உறைபூண்டும் உடும்புத்தோலால் செய்யப்பட்ட விரலுறை கட்டிக்கொண்டும், அக்னியில் ஹோமம்செய்தும் ப்ராம்மணர்களைத் தனங்களைக்கொடுத்து ஆசீர்வதிக்கச் செய்தும், தோள்வலிமையுள்ளவனும் பெரிய கையுள்ளவனும் விற்பிடித்தவனுமாகிக் கிளம்பினுன்; திருதராஷ்டிர புத்திரர்களின் வதத்திற்காகப் பெருமூச்செறிந்து உயரப் பார்த்தான். ப்ராம்மணர்களும் ஸித்தர்களும் மறைந்திருக்கும் பூதங்களும், விற்பிடித்த அந்த அர்ஜுனனை அப்பொழுது பார்த்து, 'ஓ! கௌந்தேய! மனத்தினுல் எதை எதை விரும்புகிருயோ அதை அதை விரைவில் அடையக்கடவாய். ஓ! கௌந்தேய! நன்கு போய்வா. உனக்கு ஜயமானது உறுதியாக உண்டாகட்டும்' என்று சொல்லினர். பிராம்மணர்கள் ஜயாசீர்வசனத்தைச் செய்து அர்ஜுனனை இவ்விதம் சொன்னுர்கள். ஸித்தசாரணர்களின் கூட்டங்களும் கந்தர்வர்களும், 'மஹாரதனே! க்ஷேமம் உண்டாகுக. விரதத்தை மேற்கொள். உன்னுடைய எண்ணம் கைகூடுவதாக. உன்னுடைய எல்லாவிருப்பங்களும் நன்கு நிறைவேறுவனவாக' என்றனர். இவ்விதம் சொல்லப்பட்ட

அர்ஜுனன், இவர்களை வணங்கி, இருகைகளையும் கூப்பிக்கொண்டு தபோயோகத்தில் மனமுள்ளவனாகிப் புரோகிதரையும் வணங்கினான். பிறகு, அவன், ப்ரீதியடைந்த மனமுள்ளவனாகி, அதிரதர்களும் ஸஹோதரர்களுமான அந்த யுதிஷ்டிரர் பீமன் இருவரையும் வணங்கினான். மிகவாடின மனமுள்ளவர்களும் மஹாரதர்களுமான நகுலஸஹதேவர்களிருவரும் அந்த அர்ஜுனனை அடைந்து வணங்கினார்கள். அந்தவீரர்கள் அர்ஜுனனை வணங்கி, 'ஓ! கௌந்தேய! இந்திரனிடமிருந்து அடையத்தக்க எல்லாத் திவ்யாஸ்திரங்களையும் மற்றும் மனத்தினால் எதை எதை விரும்புகிறாயோ அந்த அந்த அஸ்திரங்களையும் அடையக்கடவாய். ஓ! தனஞ்சய! தவறுதவைகளும் குற்றமற்றவைகளும் பெரியோர்களுக்கு ஸம்மதமுமான எல்லாச் சொற்களையும், இப்பொழுது, பாண்டவர்களுள் நீ ஒருவனே அடைந்திருக்கிறாய். ஓ! கௌந்தேய! தேவர்கள் அதர்மத்தை அடைந்தவனையும் ஸித்தியற்றவனையும் தவமற்றவனையும் சலித்தமனமுள்ளவனையும் வஞ்சகனையும் பார்க்க விரும்புகிறதில்லை. கடுமையாக இரைகிறவனும் அஸூயைப்படுகிறவனும் கொடுஞ்சொற்சொல்லுகிறவனும் வஞ்சகனும் தற்புகழ்ச்சி செய்கிறவனும் எறிந்து பேசுகிறவனும் கொல்லுகிறவனும் ஸந்தேகப்படுகிறவனும் நம்பச்செய்து கொல்பவனும் மாயையுள்ளவனும் கோபமுள்ளவனும் பொய்பேசுகிறவனும் அதிகபோஜனம் செய்கிறவனும் நாஸ்திகனும் ஈயாதவனும் மித்ரதுரோகம் செய்கிறவனும் எல்லாவற்றிலும் பயமுள்ளவனும் பரநிந்தை செய்கிறவனும் அதிக அகங்காரமுள்ளவனும் பயங்கரமானவனும் லோபியும் சஞ்சலமான மனமுள்ளவனும் திருடுகிறவனும் கட்குடிக்கிறவனும் [1] கர்ப்பத்தையழிப்பவனும் குருவின் சயனத்தை அடைந்தவனும் தன்னைத்தானே மிகப்புகழ்ந்துகொள்ளுகிறவனும் பரஹிம்ஸை செய்கிறவனுமாகிய இந்த மனிதர்கள் நல்ல உலகங்களையடையார். தனஞ்சய! அவர்கள் லோகமற்றவர்கள். ஓ! பல்குன! குரூரமில்லாமை, பச்சாத்தாபம், ஸத்தியம், துக்கத்தை அறியும்தன்மை, வெளியிலுள்ளபுலன்களையடக்குதல், மரியாதை, தைரியம், [2] தர்மம், பொறுமை, சிறந்த நற்கார்யம், தயை, மனஅடக்கம், குருபூஜை, நன்றியறிதல், நட்பு, ப்ராம்மணபக்தி,

1 'ப்ரூணஹா' என்பது மூலம்; ஸாங்க வேதங்கற்றவன் ப்ரூணன், அவனைக் கொன்றவன் எனினுமாம்.

2 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

நம்பிக்கை, எல்லாப் பிராணிகளிடத்திலும் தயை, ஈதல், புத்தி, ஞாபகம் ஆகிய இவை உன்னிடத்தில் குடிகொண்டிருக்கின்றன. கௌரவ்ய! தனஞ்சய! ஆனதுபற்றி, இந்திரனுடன் சேருவாய். தேவர்களுக்கு உன்போன்றவனுடன் சேர்க்கையன்றோ புகழத்தகுந்தது? ஐயா! பரதஸ்ரேஷ்ட! சிநேகிதர் சகோதரர்கள் யாவர்க்கும், தேவர்களுக்கு இந்திரன்போல நீயே சிறந்தகதி. மிக்க பல்வானே! அந்தப்பதின்மூன்றாவது வருஷத்தில் ஸகோதரர்களும் எல்லாச்சிநேகிதர்களும் உன்னுடையகைவன்மையை அடுக்கப்போகின்றார்கள். ஓ! பார்த்த! பகைவரை அடக்குபவனே! அப்படிப்பட்ட நீயே பிதாவான இந்திரனைக்குறித்துச் செல்வாய். எல்லா அஸ்திரங்களையும் இந்திரனிடமிருந்து கைவசப்படுத்திக் கொள்வாயாக. ஓ! மஹாபாகுவே! எல்லாப்பிராணிகளும் கேட்கும்போது, சதஸ்ருங்கமென்னுமிடத்தில் இந்திரன் உன்னை உச்சிமுகர்ந்து, 'ஓ! ஐய! ஜயமுள்ளவர்களுள் சிறந்தவனே! எல்லாப் பிராணிகளாலும் அறியப்பட்டவனாகித் தேவலோகத்தை அடையப்போகின்றாய்; புண்யம் செய்தவர்களுடைய உலகங்களை அடைந்து விளையாடுவாய். பார்த்த! தேவர்களால் மரியாதைசெய்யப்பட்டு மிகவும் ஸுகமாக ஸ்வர்க்கத்தில் விளையாடி உயர்ந்த அஸ்திரங்களை அடைந்து திரும்பவும் பூமியை அடைவாய்' என்று சொல்லினன். அப்பா! காண்டவவனத்தை எரித்தபோது, இந்திரன் உன் குணங்களை எல்லாப் பிராணிகளும் கேட்கும்படி திரும்பத் திரும்பச் சொன்னான். நரஸ்ரேஷ்ட! இந்திரனுடையதான அந்தச்சொல்லை நீ நிறைவேற்றக்கடவாய். இங்கிருந்து ஏதாவது ஓர் இடத்தை அடைந்து தவத்தில் பற்றின மனமுள்ளவனாகக்கடவாய். கௌரவனே! நன்மையைத் தருவதான இந்திரன்சொல்லைச் செய்யக்கடவாய். நீ இப்பொழுதே தீக்ஷையை அடைந்து போவாய். இந்திரனை நீ பார்ப்பாய்' என்றார்கள்.

புருஷஸ்ரேஷ்டனான அர்ஜுனன் அவ்விருவர்களையும் தழுவித் திரௌபதியிடமும் சொல்லிக்கொண்டு எல்லாருடைய மனங்களையும் கவர்ந்துகொண்டு கிளம்பினான். அப்பொழுது, திரௌபதியானவள், சிங்கம்போன்றதோள்வலிமையுள்ளவனும் அவ்விதம் புறப்பட்டவனும் வீரனுமான அந்தப் பாண்டவனை நோக்கி இரு கைகளையும் கூப்பித் தேவர்களுக்கு நமஸ்காரத்தைச் செய்து மிகச் சுத்தமானவையும் மங்களமானவையுமான வார்த்தைகளுடன் சொல்லினள். 'ஈஸ்வரனுக்கும் கர்மாவுக்கும் நமஸ்காரம்.

க்ஷேமமாக ஒருகாட்டிலிருந்து மறுகாட்டை அடைவீர். ஓ! பார்த்தரே! தனஞ்சயரே! தர்மம் உம்மை அடையட்டும். சூரியனும் அக்னியும் ப்ரம்மாவும் பிராம்மணர்களும் உம்மைக் காக்கக்கடவர். பரதஸ்ரேஷ்டரே! தமையனுருடைய சொல்லில் நிற்பவரும் தமையனுரைப் பூஜிப்பவருமான நீர் வஸுக்களையும் ருத்திரர்களையும் தேவக்கூட்டங்களுடன் கூடின ஆதித்யர்களையும் விஸ்வேதேவர்களையும் ஸாத்யர்களையும் துன்பங்கள் நீங்குவதற்காகச் சரணமடைவீராக. பரதர்களுட் சிறந்தவரே! ஆகாயத்திலுள்ளவைகளும் ஸ்வர்க்கத்திலுள்ளவைகளும் பூமியிலுள்ளவைகளும் மற்ற இடங்களிலுள்ளவைகளுமாகிய எல்லா இடையூறுகளிலிருந்தும் உமக்கு க்ஷேமம் உண்டாகட்டும். பிறருக்குக் கட்டுப்பட்டிருப்பதைக்காட்டிலும் காட்டில் வஸிப்பதைக்காட்டிலும் எல்லாப் பொருளும் கவரப்பட்டதைக்காட்டிலும் புத்திரர்களை விட்டுப் பிரிந்ததைக்காட்டிலும் இதனை மிக்க துக்கமாக நினைக்கிறேன். நமக்குத் திரும்பவும் க்ஷத்திரியகுலத்தில் ஒருபோதும் பிறப்பு வேண்டாம். எவர்களுக்கு ஆயுதத்தால் பிழைப்பில்லையோ (அந்தப்) பிராம்மணர்களுக்கு வணங்குகிறேன். அந்தப் பாவியான துரியோதனன் சிரித்துக்கொண்டு ராஜஸபையில் என்னைப் பார்த்து, 'பசு' என்று சொல்லியது மேலான துக்கம். அந்தச் சபையின் நடுவில் தகாத சொற்கள் பலவற்றைப் பேசினது அந்தத் துக்கத்தைவிட மேலான துக்கமென்பது என்னுடைய எண்ணம். ஓ! பரதஸ்ரேஷ்டரே! உம்முடைய வீட்டிலிருந்தும் ராஜ்யத்திலிருந்தும் துரத்தப்பட்டு வனத்தில் வஸிப்பவராகியும் ஸ்னேகத்தால் நிற்கிறீர். ஓ! பரதரில் சிறந்தவரே! எல்லாப் பகைவர்களையும் ஜயித்தவரும் அக்னியைத் திருப்திசெய்தவருமான நீர் இப்பொழுது நடந்து செல்வதை ஜனங்கள் பார்க்கின்றனர். இந்தப் பெரிய காட்டில் உம்முடைய ஸகோதரர்களும் ஸ்னேகிதர்களும் சாரணர்களும் அப்படியே ரிஷிகளும் உம்முடைய கதைகளைச் சொல்லப்போகின்றார்கள். நிச்சயம். ஓ! புஜபலம் அமைந்தவரே! தனஞ்சயரே! கௌந்தேயரே! நீர் பிறந்தபோது உமக்காகக் குந்திதேவியார் விரும்பினதும் நீர் ஸ்வயமே விரும்புகிறதும் முழுவதும் உமக்கு உண்டாகுக. ஓ! பார்த்தரே! வஸுதேவரின் தங்கையாரும் எனது மாமியாருமான குந்திதேவியார் திரும்பி வந்த உம்மை, அதிதி இந்திரனைப் பார்ப்பதுபோலப் பார்க்கக்கடவர். உம்முடைய ஸகோதரரெல்லாரும் விழித்திருக்கும்போ

தெல்லாம் உம்முடைய கதைகளினால் அடிக்கடி உம்முடைய செய்கைகளையே சொல்லிக்கொண்டு மகிழ்வார்கள். நிச்சயம். ஓ! பார்த்தரே! நீர் நீண்டகாலம் வெளியில் போயிருக்கும்போது எங்களுக்குப் போகங்களில் மகிழ்ச்சியும் தனத்தில் விருப்பமும் உண்டாகா. உயிரிலும் எங்களுக்கு விருப்பம் இராது. ஓ! பார்த்தரே! எங்கள் எல்லாருடைய ஸுக துக்கங்களும் வாழ்வும் மரணமும் ராஜ்யமும் ஐஸ்வர்யமும் உம்மிடத்தில் நிலைத்திருக்கின்றன. ஓ! கௌந்தேயரே! பாண்டவரே! எங்களைக் கேட்டுக்கொண்டீர். க்ஷேமத்தை அடையக்கடவீர். அஸ்திரங்களை அடைந்து, க்ஷேமத்துடன் திரும்பிவந்த உம்மைப் பார்ப்பேன். ஓ! குற்றமற்றவரே! மிக்க வலிமையுள்ளவரே! உம்மால் செய்யப்படவேண்டிய இந்தக்காரியம், பலவான்களுடன் எதிர்த்தும் செய்யத்தக்கது. சீக்கிரம் ஜயத்திற்காக இடையூறில்லாமல் போம். தனஞ்சயரே! ஹ்ரீ, ஸ்ரீ, கீர்த்தி, த்ருதி, புஷ்டி, உமை, லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆகிய இவர்கள், வழியிற்போகின்ற உம்மைக் காக்கக்கடவர்' என்றாள்.

திரௌபதியானவள் [1] ஆசீர்வாதங்களை இவ்விதம் சொல்லி, ஓய்வடைந்தாள். பிறகு, தோள்வலி மிக்க அர்ஜுனன், ஸஹோதரர்களையும் தௌம்யரையும் வலம்வந்து அழகிய வில்லையெடுத்துக்கொண்டு கிளம்பினான். பரதஸ்ரேஷ்டரே! பாரதரே! அதிக பலமுள்ளவீரன் பலத்தால் மரங்களையும் கொடிகளையும் செடிகளையும் நாசஞ்செய்துகொண்டு மரங்களில் தடைப்படாதவனாக வடக்குத் திக்கைநோக்கி மெதுவாகப் போனான். இந்திரனுடையதானத்யானத்துடன் கூடியவனும் பராக்கிரமமுள்ளவனும் பலமுள்ளவனும் போகிறவனுமான அவனுடைய வழியிலிருந்து எல்லாப்பிராணிகளும் விலகின. ஓ! ஐயா! பகைவரை வாட்டுபவனான அவன் தபோதனர்களால் வஸிக்கப்பட்ட மலைகளைத் (தாண்டித்) தேவர்களால் அடையப்பட்டதும் புண்ணியமானதும் அழகுபொருந்தியதுமான இமயமலையை அடைந்தான். பெரிய மனமுள்ளவனும் (இந்திரத்)தியானத்தோடு கூடியவனுமான அர்ஜுனன் காற்றுப் போலவும் மனம்போலவும் விரைந்துசெல்பவனாகி ஒரேநாளில் புண்ணியமான அந்தமலையை அடைந்தான். அவன் இமயமலையையும் கந்தமாதனத்தையும் தாண்டி இரவும்பகலும் சோம்பலின்றி அடர்ந்த காடுகளைத் தாண்டினான். பிறகு, அர்ஜுனன்

1 'க்ஷேமமுண்டாகும்படி கடவுளரை வேண்டி' என்பது.

அங்கிருந்து இந்திரகிலமலையையடைந்து தங்கினான். அந்தப்பாண்டவன் ஆறுபகலும் இரவும் (நடந்து)போய் ஏழாவதுநாளில் அழகிய இந்திரகிலத்தின் தாழ்வரையில் தவயோகத்தில் பற்றுள்ளவனாக இருந்தான். கைகளை உயரத்தூக்கினவனாகி அங்கங்களைச் சிறிதும் அசைக்கவேயில்லை. இந்திரபுத்திரனும் தவமுடையவனும் அடங்கினவனும் அடக்கப்பட்ட மனமுள்ளவனுமான அர்ஜுனன், அப்பொழுது,'நில்' என்ற வார்த்தையை ஆகாயத்தில் கேட்டான். அவன் அதைக்கேட்டு நான்குபக்கத்திலும் பார்வையைச் செலுத்தினான். பிறகு, அவன் மரத்தடியில் பிரம்மதேஜஸால் ப்ரகாசிக்கின்றவரும் பொன்னிறமுள்ளவரும் ஜடையுள்ளவரும் இளைத்தவருமான ஒருதவசியைப் பார்த்தான். மிக்க தவமுள்ள அவர் அவ்விடத்திலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்துச் சொல்லலானார். 'குழந்தாய்! வில்லுள்ளவனும் கவசமுள்ளவனும் பாணமுள்ளவனும் கத்தியையும் உள்ளங்கையுறையையும் கட்டிக்கொண்டவனும் க்ஷத்திரியதர்மத்தை அனுசரித்தவனும் இங்குவந்தவனுமான நீ யார்? ஐய! இங்கு, சஸ்திரத்தால் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. கோபமும் ஸந்தோஷமும் அற்றவர்களும் தவசிகளும் அடங்கினவர்களுமான பிராம்மணர்களின் ஆலயம் இது. இங்கு வில்லினால் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. இவ்விடத்தில் ஒருபோதும் சண்டையில்லை. அப்பா! இந்தவில்லை வைத்துவிடு; மேலானகதியை அடைந்தவனாகஇருக்கிறாய்' என்று இவ்விதம் அதிக சக்தியுள்ள வீரனான அர்ஜுனனை வேறு ஸாமான்யனைச் சொல்வதுபோலவே பிராம்மணர் அடிக்கடி சிரித்துக்கொண்டு சொல்லினர். நன்கு நிச்சயங்கொண்ட இவனைத் தைரியத்திலிருந்தும் அசைக்கமுடியவில்லை. பிறகு, அந்தப்பிராம்மணர் ஸந்தோஷமுள்ளவராகிச் சிரிப்பவர்போல அந்த அர்ஜுனனை நோக்கி, 'ஓ! பகைவரைப்பிளப்பவனே! நான் இந்திரன். உனக்கு க்ஷேமம் உண்டாகுக. வரத்தைக் கேட்டுக்கொள்ளு' என்றான். குருகுலஸ்ரேஷ்டனும் சூரனுமான தனஞ்சயன் இவ்விதம் சொல்லப்பட்டவனாகி இருகைகளையும் கூப்பி வணங்கி, இந்திரனை நோக்கி, 'ஓ! பகவானே! இப்பொழுது உம்மிடமிருந்து எல்லா அஸ்திரத்தையும் அறிய விரும்புகிறேன். இதுவே என்னால் விரும்பப்பட்ட விருப்பம். இந்த வரனை எனக்குக் கொடுப்பீராக' என்று சொன்னான்.

மஹேந்திரன் ப்ரீதி அடைந்த மனமுள்ளவனாகிச் சிரித்துக்கொண்டு அவனை நோக்கி, 'ஓ! தனஞ்சய! இங்குவந்த உனக்கு

அஸ்திரங்களால் என்ன பிரயோஜனம்? இஷ்டமான [1] லோகங்களைக் கேட்டுக்கொள். நீ மேலானகதியை அடைந்திருக்கின்றாய்' என்று மறுமொழி சொன்னான். இவ்விதம் சொல்லக்கேட்ட அர்ஜுனன் இந்திரனைப்பார்த்து, 'ஓ! தேவராஜரே! லோபத்தாலும் காமத்தாலும் தேவத்தன்மையையும் ஸுகத்தையும் எல்லாத் தேவர்களின் ஐச்வரியத்தையும் விரும்பவில்லை; (விரும்பினால்) அந்த ஸஹோதரர்களைக் காட்டில் விட்டுப் பகையையும் போக்காமல் எல்லாலோகங்களிலும் பல வருஷங்கள் அபகீர்த்தியை அடைவேன்' என்றான். எல்லாலோகங்களாலும் வணங்கப்பட்ட இந்திரன், அர்ஜுனன் இவ்விதம் சொல்லக்கேட்டு, இனியமொழியால் அர்ஜுனனைத் தேற்றிக்கொண்டு, 'ஓ! ஐயா! எப்பொழுது மூன்று கண்ணுள்ளவரும் சூலதாரியும் பூதேசருமான சிவபெருமானைப் பார்ப்பாயோ அப்பொழுது திவ்யாஸ்திரங்கள் எல்லாவற்றையும் உனக்குக் கொடுப்பேன். மேலான ஸ்தானத்திலிருக்கிற மகாதேவருடைய தரிசனத்தில் முயற்சியைச் செய். ஓ! கௌந்தேய! அந்தத் தேவருடைய தரிசனத்தினால் ஸித்தியை அடைந்தவனாகி ஸ்வர்க்கத்துக்குவருவாய்' என்றான். இந்திரன் இவ்விதம் பல்குனனைப்பார்த்துச் சொல்லித் திரும்பவும் மறைவை அடைந்தான். பிறகு, அர்ஜுனனும் யோகத்துடன் கூடினவனாகி அங்கேயே இருந்தான்'' என்றார்.

அர்ஜுனாபிகமன பர்வம் முற்றிற்று.

முப்பத்தெட்டாவது அத்யாயம்.

கைராதபர்வம்.

(அர்ஜுனன் தவஞ்செய்ததும், முனிவர்கள் அஞ்சிப் பரமசிவனிடம் முறையிட்டதும், அவர் அவர்களைத் தேற்றியனுப்பியதும்.)

ஜனமேஜயர் சொல்லலானார். "ஓ! பகவானே! அஸ்திரங்களையடைந்ததான வருந்தாதசெய்கையுள்ள அர்ஜுனனுடைய இந்தக்கதையை விரிவாகக் கேட்கவிரும்புகிறேன். நீண்டகையுள்ளவனும் புருஷஸ்ரேஷ்டனும் தேஜஸுள்ளவனுமான அர்ஜுனன் மனிதஸஞ்சாரமில்லாதவனத்தில் பயமற்றவனாகி எவ்விதம்

---

1 'போகங்களை' என்பது பழையவுரை.

பிரவேசித்தான்? ஓ! ப்ரம்மத்தை அறிந்தவர்களுட்சிறந்தவரே! அவ்விடத்தில் வஸிக்கிறஇவன் என்னசெய்தனன்? பகவானுனசிவனும் தேவராஜனும் எவ்விதம் ஸந்தோஷப்படுத்தப்பட்டனர்? ஓ! த்விஜோத்தமரே! உம்முடையஅனுக்கிரகத்தால் நான் இதனைக் கேட்கவிரும்புகின்றேன். ஓ! ஸர்வஜ்ஞரே! நீரோ தேவலோகத்திலுள்ளதையும் மனுஷ்யலோகத்திலுள்ளதையும் அறிவீர். ஓ! பேரறிவாளரே! அடிக்கிறவர்களுள் சிறந்தவனும் சண்டைகளில் திரும்பாதவனுமான அர்ஜுனன் ஒப்பற்றதும் அதிக ஆச்சரியகரமானதும் மயிர்க்கூச்சமுண்டாக்கக்கூடியதுமான சண்டையைச் சிவனுடன்கூட முன் செய்தானன்றே?எதைக்கேட்டு நரஶ்ரேஷ்டர்களும் சூரர்களுமான பார்த்தர்களுடையமனங்கள்கூட எளிமையாலும் மகிழ்ச்சியாலும் மிக்கவியப்பாலும் நடுங்கினவோ, அர்ஜுனன் மற்றும் எதைச்செய்தானே, அவையாவற்றையும் சொல்லும். சூரனுன இந்த அர்ஜுனனுடைய சரித்திரத்தை மிகச்சிறிய அளவுங்கூட நிந்திக்கப்பட்டதாகக் காணவில்லை. இவனுடைய அவையெல்லாவற்றையும் எனக்குச் சொல்லுவீராக" என்றார்.

வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர். "ஓ! ஐயா! கௌரவருள்புலிபோன்றவரே! ஆச்சரியம்போன்றதும் பெரிதும் திவ்யமானதும் பெரியசண்டையில் தேவதேவரான பரமேஶ்வரருடன் உடல்கட்டிப்புரண்டதைப்பற்றியதுமான மஹாத்மாவான அர்ஜுனனுடைய கதையையும், பிறகு, ஈஶ்வரர் என்றறிந்தவுடன் நன்கு (வணங்கி அவரை அவன்) அடைந்ததையும் சொல்லுவேன்; கேட்பீராக. அளவிற்கடங்காதபலமுள்ள அந்த அர்ஜுனன் யுதிஷ்டிரரின் கட்டளையினுல் ஸுரேஶ்வரனுன இந்திரனையும் தேவதேவரானசங்கரரையும் பார்க்கிறதற்காகப் போனுன். அரசரே! புருஷஶ்ரேஷ்டனும் அதிகபலமுள்ளவனும் நீண்டகையுள்ளவனும் கௌரவ்யனும் எல்லாலோகங்களிலும் மகாரதனும் இந்திரபுத்திரனுமான அர்ஜுனன் கார்யஸித்திக்காகத் திவ்யமான அந்த வில்லையும் கத்தியையும்எடுத்துக்கொண்டு வடக்குத்திக்கைநோக்கி இமயமலையின் கொடுமுடியைக் குறித்து அசையாதமனமுள்ளவனுகியும் மேலான வேகத்துடன்கூடினவனுகியும் தவம்செய்வதில் நிச்சயமுள்ளவனுகியும் ஒருவனுகவே முள்நிரம்பினதும் பயங்கரமானதும் பலவிதமான மலர்களுடனும் கனிகளுடனுங்கூடியதும் பலவிதபக்ஷிகளின் சப்தமுள்ளதும் அனேக மான்கூட்டங்களால் நிரம்பியதும் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பட்டதுமான காட்டை

அடைந்தான். பிறகு, மனிதரில்லாத வனத்தை அர்ஜுனன் அடைந்தபோது ஆகாசத்தில் சங்கத்தினொலியும் படகத்தினொலியும் உண்டாயின. பூதலத்தில் அதிகமான மலர்மாரியும் விழுந்தது. மேகக்கூட்டமானது எப்பொழுதும் எங்கும் மறைத்தது. அப்பொழுது அந்த அர்ஜுனன் பெரிய மலையினருகிலுள்ள அடர்ந்த காடுகளைத்தாண்டி இமயமலையின் சாரலில் வஸிக்கின்றவனாகி விளங்கினான். அதிரதனான அர்ஜுனன் அந்த அந்த இடத்தில் மலர்ந்தவைகளும் பக்ஷிகளால் இனிமையாகக் கூவப்பட்டவைகளுமான மரங்களையும், பெரிய சுழல்களுள்ளவைகளும் வைடூர்யத்துக்கும் நீலத்துக்கும் ஒப்பானவைகளும் அன்னங்களாலும் நீர்க்காக்கைகளாலும் ஒலிக்கப்பட்டவைகளும் அப்படியே ஸாரஸங்களால் சப்திக்கப்பட்டவைகளும் ஆண் குயில்களால் கூவப்பட்டவைகளும் க்ரௌஞ்சங்களாலும் மயில்களாலும் சப்திக்கப்பட்டவைகளும் அழகிய வனத்துடன் கூடியவைகளும் புண்ணியமான குளிர்ந்த அழுக்கற்ற ஜலமுள்ளவைகளுமான நதிகளையும் அந்த இடத்தில் பார்த்துக்கொண்டு மனத்தில் பிரீதி அடைந்தவனாயினன். பிறகு, அப்பொழுது அழகிய காட்டுப்பிரதேசத்தில் மகிழ்கின்ற அர்ஜுனன், உக்கிரமான தவத்திலிருந்துகொண்டு கடுமையான தேஜஸுள்ளவனும் நல்ல மனமுள்ளவனும் புல்லாலாகிய ஆடையைத் தரித்தவனும் தண்டத்தாலும் மான் தோலாலும் அலங்கரிக்கப்பட்டவனுமாகி முதல் மாதத்தில் பழுத்துப் பூமியில் உதிர்ந்த இலையை மூன்று நாளுக்கொருதரம் ஆகாரமாகக்கொண்டான்; இரண்டு மடங்கான காலத்தினால் (= ஆறுதினங்களுக்கொருதரம்) கனியைப் புசித்து இரண்டாவது மாஸத்தைப் போக்கினான். அவன் * பதினைந்துநாளுக்கொருதரம் ஆகாரம் செய்துகொண்டு மூன்றாவது மாதத்தையும் கழித்தான். பிறகு,

---

* 'பக்ஷேண' என்ற பாடம் கொள்ளப்பட்டது. 'துருவன் தவத்தில் மும்மூன்று நாளுக்கொருமுறை பழங்களையுண்டு முதல் மாதத்தையும், ஆறு ஆறு நாளுக்கொருமுறை, உதிர்ந்தபுல் இலை முதலியவற்றையுண்டு இரண்டாவது மாதத்தையும், ஒன்பது ஒன்பது நாளுக்கொருமுறை நீரைப் பருகி மூன்றாவது மாதத்தையும், பன்னிரண்டு பன்னிரண்டு நாளுக்கொருமுறை காற்றையுட்கொண்டு நான்காவது மாதத்தையும், ஹரியைப் பூஜித்துக்கொண்டு கழித்து, ஐந்தாவது மாதத்தில் உணவில்லாமலேயிருந்தனன்' என்பன ஸ்ரீபாகவதம், 4 வது ஸ்கந்தம், 8 வது அத்யாயம், 72 முதலிய சுலோகங்கள்.

நாலாவது மாதம் வந்தவுடன், பரதஸ்ரேஷ்டனும் தோள்வலியமைந்தவனுமான பாண்டுபுத்திரன் காற்றைப் புசித்துக்கொண்டும் கைகளை உயர்த்திக்கொண்டும் பிடிப்பற்றவனாகிக் காற்கட்டைவிரலின் முனையால் நின்றுகொண்டும் இருந்தான். அளவற்ற வல்லமையுள்ளவனும் மஹாத்மாவும் இப்படியிருப்பவனுமான அவனுக்கு எப்பொழுதும் ஸ்நானம்செய்வதால் மின்னலுக்கும் தாமரைக்கும் ஒப்பான சடைகளுண்டாயின. பிறகு, எல்லா மஹரிஷிகளும், அர்ஜுனன் உக்கிரமான தவத்திலிருப்பதைத் தெரிவிக்கவேண்டுமென்ற எண்ணமுள்ளவர்களாகித் தேவரான பரமசிவனை நோக்கிச் சென்றார்கள். யாவரும் நீலகண்டரான மஹாதேவரை வணங்கி ஆசீர்வாதம்பெற்று அர்ஜுனனுடைய அந்தச் செய்கையைத் தெரிவித்தார்கள், 'அதிக தேஜஸுள்ள அர்ஜுனன் ஒருவனாக இமயமலையின் சாரலையடைந்து திக்குக்களைப் புகையடையச்செய்துகொண்டு கரைகடந்த உக்கிரமான தவத்திலிருக்கிறான். ஓ! தேவேசரே! நாங்கள் யாவரும் அவனது எண்ணத்தை அறியவில்லை. (அவன்) எங்கள் யாவரையும் தாபத்தையடையச் செய்கிறான். அவனைத் (தவத்திலிருந்து) நன்கு திரும்பச்செய்வீராக' என்றார்கள். பூதங்களுக்கு ஈச்வரரான பார்வதீபதியானவர், பரமாத்ம த்யானம்செய்யும் அந்த முனிவர்களின் அவ்வார்த்தையைக் கேட்டு, இந்த வார்த்தையைச் சொல்லத்தொடங்கினார். 'அர்ஜுனனைக்குறித்து நீங்கள் யாவரும் வருந்தவேண்டாம். மனம் மயங்காமல் வந்ததுபோலச் சந்தோஷம் அடைந்து சீக்கிரம் போங்கள். நான் இவனுடைய மனத்திலிருக்கும் எண்ணத்தை அறிவேன். இவனுக்கு விருப்பம், சிறிதும் ஸ்வர்க்கத்திலுமில்லை; ஐச்வரியத்திலுமில்லை; ஆயுளிலுமில்லை. இவன் அடைய விரும்பியதை நான் இப்பொழுதே செய்வேன்' என்றார். சத்தியவாதிகளான ரிஷிகள் அந்தப் பரமசிவன் வார்த்தையைக் கேட்டு மனமகிழ்ந்து திரும்பவும் தம் தமக்குரிய ஆச்ரமத்தை அடைந்தார்கள்.

முப்பத்தோன்பதாவது அத்யாயம்.

கைராதபர்வம். (தொடர்ச்சி.)

(ஈச்வரவேடனால் அர்ஜுனன் தோற்றதும், அர்ஜுனனுடைய பூஜையாலும் துதியாலும் மகிழ்ந்த ஈச்வரர் அஞ்சிய அவனைத் தேற்றியதும்.)

மஹாத்மாக்களான அந்தத் தவசிகளெல்லாரும் போனவுடன், எல்லாப் பாவங்களையும் நாசம்செய்கிறவரும் பிநாகத்தைக் கையிலுடையவரும் பகவானுமான பரமசிவனார், தங்கமரத்திற் கொப்பான வேடன்வேஷத்தைத் தரித்துக்கொண்டும் வேறு மேருமலைபோலச் சரீரத்தால் விளங்கிக்கொண்டும் காந்தியுள்ள வில்லையும் ஸர்ப்பம்போன்ற அம்புகளையும் எடுத்துக்கொண்டும், புதரை எரிக்கின்ற மிக்க ஜ்வாலையுள்ள நெருப்புப்போன்றவராகிப் புறப்பட்டார். அவர், ஸ்ரீமானும், (தம்மோடு) ஒத்த விரதத்தையும் வேஷத்தையுமுடையவளான உமாதேவியுடன் இருப்பவரும், பலவித வேஷம்பூண்டவர்களாயும் மகிழ்ச்சியுள்ளவர்களாயுமிருக்கிற பூதங்களாலும் ஆயிரக்கணக்கான ஸ்திரீகளாலும் பின்தொடரப்பட்டவரும், வேட்வேஷத்தால் மறைக்கப்பட்டவருமாகி அப்பொழுது வெளிக்கிளம்பினார். ஓ! அரசரே! பாரதரே! அப்பொழுது அந்த இடம் மிகவும் விளங்கிற்று அப்பொழுது அவ்வனம் முழுதும் நொடிப்பொழுதில் சத்தமற்றதாயிற்று. அருவியொலியும் பறவையொலியும் ஓய்ந்தன. அவர், காரியங்களை எளிதில் செய்கின்ற அர்ஜுனனுடைய ஸமீபத்தில் வந்து, ஆச்சரியமான காட்சியுள்ளவனும் பன்றியின் உருவத்தை அடைந்து அர்ஜுனனை அதட்டுகிறவன்போன்றவனும் திதியின் புத்திரனுமான மூகனென்பவனைப் பார்த்தார். பிறகு, கலக்கமற்ற மனமுள்ள அர்ஜுனன் அவனைக் கொல்லுவதற்கு ஸர்ப்பம்போன்ற பாணங்களையும் காண்டீவமென்னும் வில்லையும் எடுத்து அந்தச் சிறந்தவில்லை நாணேற்றி நாணொலியால் (காட்டை) ஒலிக்கச்செய்து (அவ்வஸுரனைப்பார்த்து), 'இங்கு வந்த குற்றமற்ற என்னைக் கொல்ல விரும்புகிறாயாதலால், உன்னை முந்தியே நான் யமன்வீட்டை அடையச்செய்வேன்' என்றான். வேடனுருவங்கொண்ட சங்கரர் உறுதியான வில்லுள்ளவனும் அடிக்கப்போகின்றவனுமான அந்தஅர்ஜுனனை, 'கரியமேகத்துக் கொப்பான இந்தப் பன்றியானது என்னால் முந்தியே எதிர்க்கப்

பட்டது' என்றுசொல்லி, வேகமாய்த் தடுத்தார். பிறகு, அர்ஜுனன் அந்த வார்த்தையை அலக்ஷியம் செய்து அடிக்கவே, அதிக காந்தியுள்ள வேடனும் அக்னிஜ்வாலை போன்றதும் இடிக்கொப்பானதுமான பாணத்தை ஒரேகுறியான அந்தப்பன்றியில் ஒரேகாலத்தில் விட்டான். அப்பொழுது, அவ்விருவர்களாலும் விடப்பட்ட அந்த இரண்டு பாணங்களும் மலையின் முதுகுக்கொப்பானதும் விஸ்தீர்ணமாயுள்ளதுமான அந்த மூகனுடைய சரீரத்தில் ஒரேகாலத்தில் விழுந்தன. அப்பொழுது மலையில் வஜ்ராயுதத்தின் வீழ்ச்சிபோலவும் இடியின் வீழ்ச்சிபோலவும் அந்தப் பன்றியில் அந்தப் பாணங்களின்வீழ்ச்சி உண்டாயிற்று. அந்த ராக்ஷஸன் பாம்புகள்போன்றவைகளும் பிரகாசிக்கின்ற முனையுள்ளவைகளுமான அனேகம் பாணங்களால் அடிக்கப்பட்டவனாகித் திரும்பவும் பயங்கரமான ராக்ஷஸ ரூபத்தை எடுத்துக்கொண்டு இறந்தான். பிறகு, பகைவனைக் கொல்லும் அந்த அர்ஜுனன், ஸ்திரீயுடனிருப்பவரும் வேடன்வேஷத்தால் மறைக்கப்பட்டவரும் பொன்போன்ற ஒளியுள்ளவருமான ஒரு மனிதரைக் கண்டான். அர்ஜுனன் பிரியமான மனமுள்ளவனாகிச் சிரிக்கிறவன்போல அவரைநோக்கிச் சொல்லலானான். 'நீ யார்? ஸ்திரீக்கூட்டத்தால் சூழப்பட்டவனாகி ஜனமற்ற காட்டில் சஞ்சரிக்கின்றாய். ஓ! பொன்போன்ற மேனியுள்ளவனே! நீ இந்தப் பயங்கரமானகாட்டில் பயப்படவில்லை. என்னால் குறிவைக்கப்பட்ட இந்தப் பன்றியை நீ எதற்காக அடித்தாய்? இங்குவந்த இந்த ராக்ஷஸன் முந்தியே என்னால் குறிவைக்கப்பட்டானன்றோ? எதிருச்சையாகவோ (என்னை) அவமதித்தோ (இங்ஙனம் அடித்த) நீ பிழைத்து என்னிடமிருந்து விடுபடமாட்டாய். இப்பொழுது என்னிடத்தில் உன்னால் செய்யப்பட்ட இது வேட்டைக்குரிய முறையன்று. அதனால் மலையை இடமாயுடைய உன்னை உயிரிலிருந்து நழுவச் செய்வேன்' என்றான். இவ்விதம் அர்ஜுனனால் சொல்லப்பட்டவேடன் சிரித்துக்கொண்டு ஸவ்யஸாசியான அர்ஜுனனை நோக்கி மெதுவான வார்த்தையால், 'ஓ! வீர! காட்டினருகில் என்னைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். இந்தப் பூமியானது காட்டில் வசிக்கின்ற எங்களுக்கு எப்பொழுதும் உரியது. என்ன காரணத்தால் இங்குச் செய்தற்கரிய வாஸமானது உன்னால் விரும்பப்பட்டது? ஓ! தபோதன! நாங்களோ அனேகம் பிராணிகளுள்ள இவ்வனத்தில் வசிக்கின்றோம். நீயோ அக்கினிக்கு ஒப்

பான காந்தியுள்ளவன்; மென்மையானவன்; ஸுகத்திற்குரியவன். ஜனமற்ற இந்த இடத்தில் தனிமையாக ஏன் சஞ்சரிக்கின்றாய்?' என்று கேட்டான். அர்ஜுனன், 'அக்கினிக்கொப்பான நாராச பாணங்களையும் காண்டீவத்தையும் ஆதாரமாகக் கொண்டு இரண்டாவது [1] அக்னிபோலப் பெரிய காட்டில் வஸிக்கின்றேன். என்னைக் கொல்லுவதற்கு இங்கு வந்ததும், பன்றியுருவத்தை அடைந்ததுமான இந்தப் பயங்கரமான ராக்ஷஸ ஜந்துவும் என்னால் கொல்லப்பட்டது' என்று சொன்னான். வேடன் சொல்லலானான். 'என்னால் இது முந்தியே வில்லினின்று விடப்பட்ட பாணங்களால் அடிக்கப்பட்டதும் அடிக்கப்பட்டு எமன் வீட்டை அடைவிக்கப்பட்டதுமாகப் படுத்திருக்கின்றதன்றோ? இது முந்தி எனக்கே குறியாயிற்று; (ஆதலால்) என்னுடையதே; என்னுடைய அடியினாலேயே உயிரினின்றும் விடுவிக்கப்பட்டது. நீ உன்பலத்தால் கர்வங்கொண்டு உன்குற்றங்களைப் பிறர்மீது ஏற்றிச் சொல்லலாகாது. ஓ! மந்தபுத்தியுள்ளவனே! எதிர்த்தவனாயிருக்கிறேன். என்னால் உயிருடன் விடப்படமாட்டாய். நிலையுள்ளவனாக இரு. இடிகள்போன்ற பாணங்களை விடப்போகின்றேன். நீயும் மேலான சக்தியுடன் (சண்டைக்கு) முயற்சி செய். நீயும் பாணங்களை விடு' என்றான். அப்பொழுது அர்ஜுனன் அந்த வேடனுடைய அந்த வார்த்தையைக் கேட்டுக் கோபத்தை வருவித்துக்கொண்டான்; பாணங்களாலும் அடித்தான். பிறகு, பரமசிவன் மனமகிழ்ச்சியுடன் பாணங்களை ஏற்றுக்கொண்டார். 'ஓ! மந்த! ஓ! மந்த!' என்று மறுபடியும் மறுபடியும் சொன்னார். 'மர்மத்தைப் பிளக்கக்கூடிய இந்த நாராச பாணங்களைப் பிரயோகம் செய்' என்றும் சொன்னார்.

இவ்விதம் சொல்லப்பட்ட அந்த அர்ஜுனன் விரைவில் பாணமழைபெய்தான். பிறகு, அங்கு அவர்கள் பரபரப்புள்ளவர்களாகி அடிக்கடி கர்ஜித்துப் பாம்புபோன்ற வடிவமுள்ள பாணங்களால் ஒருவரை யொருவர் சீவினார்கள். பிறகு, அர்ஜுனன் வேடனிடத்தில் சரமாரியை நன்குபெய்தான். அதனைச் சிவன் சந்தோஷமுள்ள மனத்துடன் ஏற்றுக்கொண்டார். பினாகியானவர் ஒரு முகூர்த்தகாலம் அம்புமழையைத் தாங்கிக்கொண்டு மலைபோல அசைவற்றவராகிக் காயப்படுத்தப்படாத சரீரத்துடன் நின்றார்.

---

1 'பாவகி:' என்பது வேறு பாடம். 'ஸுப்ரம்மண்யர் போல' என்பது அதன் பொருள்.

அந்தத் தனஞ்சயன் சரமாரி வீண்போனதைக் கண்டு மேலான ஆச்சரியம் அடைந்தான்; 'நல்லது! நல்லது!' என்றும் சொன்னான். 'மெல்லிய அங்கமுள்ள இவன் இமயமலையின் சிகரத்தை அடைந்து காண்டீவத்திலிருந்து விடப்பட்ட நாராசங்களைக் கலக்கமற்றவனாகவே ஏற்றுக்கொள்ளுகிறான்; ஆச்சரியம். இவன் யார்? தேவரான ஸாக்ஷாத் ருத்திரரோ? யக்ஷனோ? தேவனோ? அஸுரனோ? இந்தச் சிறந்த இமயமலையில் தேவர்களின் கூட்டமிருப்பது பிரசித்தம். ஆயிரக்கணக்காக விடப்பட்ட என் பாணக்கூட்டங்களுடைய வேகத்தைப் பொறுப்பதற்குப் பிநாகத்தையுடைய தேவரைத் தவிர மற்றவன் சக்தனல்லனன்றோ? (யுத்த) முயற்சியடைந்த இவன் ருத்திரரைத் தவிர வேறான தேவனோ? அல்லது யக்ஷனோ? நான் இவனைக் கூர்மையான பாணங்களால் யமன் வீட்டை அடையச் செய்கிறேன்' என்றான். ஓ! அரசரே! பிறகு, அர்ஜுனன் மனமகிழ்ச்சியுள்ளவனாகி மர்மத்தைப் பிளக்கும் நாராசங்களைச் சூரியன் கிரணங்களைச் செலுத்துவதுபோல நூற்றுக்கணக்காக விட்டான். லோகத்தை விருத்திசெய்யும் சூலபாணியான பகவான் பிரஸன்னமான மனத்துடன் கல்மழையை மலையானது ஏற்றுக்கொள்வதுபோல அவைகளை ஏற்றுக்கொண்டார். அப்பொழுது, அர்ஜுனன் நொடிப்பொழுதில் பாணம் குறைந்தவனானான்; பிறகு, அந்தப் பாணத்தின் குறைவைக்கண்டு பயத்தையும் அடைந்தான். அர்ஜுனனே காண்டவவனத்தில் குறைவையடையாத அம்புத்தூணிகளைத் தனக்கு முன்பு கொடுத்த அக்னி பகவானை நினைத்தான். அதிககாந்தியுள்ள (அவன்), 'என்னுடைய பாணங்கள் செலவாகிவிட்டமையால் (இனி) எதை வில்லினால் விடுவேன்? இந்த யாரோ ஒருமனிதன் எல்லாப்பாணங்களையும் விழுங்கிவிடுகிறான். சூலத்தின் முனையால் யானையைக் கொல்வதுபோல நான் இவனை வில்முனையால் தண்டதாரியான யமனுடைய வீட்டை அடையச் செய்கிறேன்' என்றெண்ணி, பிறகு, (அவரை) வில்நுனியாலும் நாண்கயிற்றாலும் பிடித்திழுத்து வஜ்ராயுதம் போன்ற முஷ்டிகளாலும் குத்தினான். பகை வீரர்களைக்கொல்லுகின்ற அர்ஜுனன் வில்நுனியால் சண்டை செய்தான். மலையில் வஸிப்பவர் இவனுடையதிவ்யமான வில்லையும் பறித்துக்கொண்டார். வில் பறிக்கப்பட்ட அர்ஜுனன், பிறகு, கத்தியைக் கையில் தாங்கி நின்றான்; யுத்தத்தின் முடிவை விரும்பி வேகமாக அவரை எதிர்த்துச்சென்றான். அர்ஜுனன் மலைகளிலும்மழுக்கமடையாத கூர்மை

யான கத்தியைத் தோள்வலிமையால் ஓங்கி அவருடைய தலையில் எறிந்தான். அந்தச் சிறந்தகத்தியும் அவருடையதலையையடைந்து சிதறிற்று. பிறகு, அர்ஜுனன் மரங்களாலும் கற்களாலும் சண்டை செய்தான். அப்பொழுது, பெரியசரீரமுள்ளவரான வேடனுருவங் கொண்ட பகவான், மரங்களையும் கற்களையும் ஏற்றுக்கொண்டார். பிறகு, மிக்கபலமுள்ள அர்ஜுனன் வஜ்ராயுதம்போலத் தாக்கும் முஷ்டியால் முகத்தில் புகையையுண்டுபண்ணிக்கொண்டு, அசைக்க முடியாதவரும் வேடன்போன்றஉருவமுள்ளவருமான (சிவன்மீது) அடித்தான். பிறகு, வேடனுருவங்கொண்ட பகவான் இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு ஒப்பானதும் மிக்க பயங்கரமுமான கைக்குத்துக்களால் அர்ஜுனனைத் துன்புறுத்தினர். பிறகு, யுத்தம் செய்கிற வேடன் அர்ஜுனன்இவர்களின் கைக்குத்துக்களுடைய மிக்கபயங்கரமான சடசடவென்ற ஒலி உண்டாயிற்று. அவ்விருவருக்கும் ஒருமுகூர்த்தகாலம் மயிர்க்கூச்சத்தையுண்டு பண்ணக்கூடியதும் கைகளால் அடித்துக்கொள்வதுமான யுத்தமானது, இந்திரனுக்கும் விருத்திரனுக்கும் நடந்ததுபோல நடந்தது. ஓ! மஹாராஜரே! பிறகு, பலவானான அர்ஜுனன் வேடனையும், வேடன் சண்டைசெய்யும் அர்ஜுனனையும் மார்போடுமார்பு பலமாகத் தாக்கினர்கள். அவ்விருவர்களுடைய கைகளின் இறுகிய கட்டுக்களாலும் மார்புகளின் உரைதலாலும் அங்கங்களில் பொறியும் புகையுமுள்ள நெருப்பானது உண்டாயிற்று. பிறகு, மஹாதேவர் முன்னரேதுன்புறுத்தப்பட்ட அவனைத் தமது அங்கங்களால் இறுகக்கட்டி அவனுடைய மனத்தைக் கோபத்தால் மோகமடையச்செய்துகொண்டு பலத்தால் மிஞ்சினர். ஓ! பாரதரே! பிறகு, தேவதேவரால் சரீரத்தால்கட்டப்பட்ட அர்ஜுனன் இறுக்கப்பட்ட அவயவங்களால் உருண்டையாகச் செய்யப்பட்டவன் போலவிளங்கினன். பெரியமனமுள்ள அர்ஜுனன் மூச்சற்றவனும் அசைவற்றவனும் ஆனன்; பிறகு, ஒன்றுந்தெரியாமல் (மயங்கி) விழுந்தான். அதனல், சங்கரர் சந்தோஷமுள்ளவராயினர். அந்தப்பாண்டவன், இரண்டுநாழிகை அவ்விதமாக இருந்து திரும்பவும் அறிவுவந்தவனகி எழுந்து, இரத்தத்தால் நனைக்கப்பட்ட அங்கமுள்ளவனும் மிக்கதுயரமுள்ளவனுமாகி, ரக்ஷகரும் பகவானுமான பினகியைச் சரணமடைந்து மண்ணலான மேடையைச்செய்துகொண்டு அந்தச்சிவபிரானை மலர்மாலையால் பூஜித்தான். அப்பொழுது, பாண்டவஸ்ரேஷ்டனன அர்ஜுனன், அந்தமாலையை வேடனுடைய தலை

யில் இருக்கக் கண்டான். ஸந்தோஷத்தால் மனத்தெளிவை அடைந்து அவருடைய கால்களில் விழுந்தான். பிறகு, சங்கரர், அவன் விஷயத்தில் ப்ரீதியுள்ளவராயினர். பின்பு, அவர் மேகம் போலக் கம்பீரமான குரலுள்ளவராகி, ஆச்சரியத்தை அடைந்தவனும் சோர்வடைந்த எல்லா அவயவங்களுமுள்ளவனுமான இவனை நோக்கிச் சொல்லத்தொடங்கினர்.

'ஓ! ஓ! அர்ஜுன! உனது ஒப்பற்றசெய்கையினால் மகிழ்ச்சி அடைந்தேன். தைரியத்தாலும் இந்தப்பராக்ரமத்தாலும் உனக்கு ஒப்பானக்ஷத்திரியன் இல்லை. ஓ! குற்றமற்றவனே! இப்பொழுது எனக்கும் உனக்கும் சக்தியும் வீர்யமும் ஒப்பானவையே. ஓ! நீண்டகைகளுள்ளவனே! பரதரேறே! உன்விஷயத்தில் பிரீதி அடைந்தேன். என்னைப்பார். ஓ! விசாலமான கண்களையுடையவனே! உனக்கு [1] ஞானக்கண்ணைக் கொடுக்கிறேன். நீ முந்தி முனியாக இருந்தாய். யுத்தத்தில் பகைவர்கள் தேவர்களாயிருந்தாலும் யாவரையும் வெல்லுவாய். (பகைவரால்) தடுக்கமுடியாத அஸ்திரத்தைப் பிரியத்தால் உனக்குக் கொடுப்பேன். நீயன்றோ விரைவில் என்னுடைய அந்தஅஸ்திரத்தை ஏற்றுக்கொள்வதற்குச் சக்தியுள்ளவன்?' என்றார். பிறகு, அவ்விடத்தில் அர்ஜுனன் பிரகாசிப்பவரும் கிரிசரும் சூலத்தைக் கையில் தாங்கியவரும் மிக்க காந்தியுள்ளவருமான மஹாதேவரைப் பார்வதியுடன் பார்த்தான். பகைவர் பட்டணத்தைஜயிக்கும் அந்த அர்ஜுனன் [2] முழங்கால்களால் பூமியை அடைந்தும் தலையினால் வணங்கியும் சிவபெருமானை அருள்வரும்படிசெய்தான்.

அர்ஜுனன், 'ஓ! சடைமுடியுள்ளவரே! எல்லாப்பிராணிகளுக்குமீச்வரரே! பகனுடைய கண்களைக்கெடுத்தவரே! ஓ! தேவதேவரே! மஹாதேவரே! நீலகண்டரே! ஜடாதரரே! முக்கண்ணரான உம்மை எங்குமுள்ளவராகவும் காரணங்களுக்கும் மேலானவராகவும் தேவர்களுக்கும் அடையவேண்டிய தேவராகவும் அறிகிறேன். இந்த ஜகத்தானது உம்மால் உண்டுபண்ணப்பட்டது. தேவர் அஸுரர் மனிதர் இவர்களுடன்கூடிய மூன்று உலகங்களாலும் நீர் ஜயிக்கமுடியாதவர். விஷ்ணுரூபியானசிவனும் சிவரூபி

1 'எனது தேஜஸைப் பார்க்கக்கூடிய சக்தியைக் கண்ணுக்குக் கொடுக்கிறேன்' எனினுமாம்.

2 'முழந்தாளை மண்டியிட்டு வணங்குதல் வடதேசத்தில் இக்காலத்தும் வழங்குகிறது.

யானவிஷ்ணுவும் தக்ஷன்யஜ்ஞத்தை நாசமாக்கினவரும் ஹரிரூபி யும் நெற்றிக்கண்ணுள்ளவரும் சர்வரும் வர்ஷிக்கின்றவரும் சூல பாணியும் பிநாகமென்னும்வில்லால் (உலகத்தைக்) காப்பவரும் சூரியரும் மங்களத்தைக்கொடுப்பவரும் உண்டுபண்ணுகிறவருமான உமக்கு நமஸ்காரம். ஓ! ஸர்வபூதமஹேஸ்வரரே! பகவானே! லோககாரணத்திற்கும் காரணமானவரும் ஜகத்திற்குக்ஷேமத்தைச் செய்கிறவரும் பூதகணங்களுக்கு நாயகரும் ப்ரகிருதிக்கும் புருஷ னுக்கும் மேற்பட்டவரும் மிகநுட்பமானவரும் சிவனுமான உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். 'ஓ! பகவானே! சங்கரரே! என்னு டைய குற்றத்தைப் பொறுக்கக்கடவீர். தேவேசரே! [1] பகவா னை (உம்மைப்) பார்க்க விருப்பம்கொண்டவனாகி, ரிஷிகளுக்கு இருப்பிடமானதும் சிறந்ததும் உமக்குப் பிரியமுள்ளதுமான இந் தப் பெரியமலையை அடைந்தவனாகிறேன். ஓ! பகவானே! எல்லா உலகத்தாலும் வணங்கப்பட்ட உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். மஹாதேவரே! அறிவின்மையாலும் ஆலோசியாமையாலும் உம் முடன் என்னால் செய்யப்பட்ட சண்டையான இதனை என்னுடைய குற்றமாகக் (கொள்ளக்)கூடாது. சங்கரரே! இப்பொழுது சரண மடைந்த என்னைக்குறித்து அதனைப் பொறுத்துக்கொள்வீராக' என்று பிரார்த்தித்தான். மஹாதேஜஸ்வியான விருஷபத்வஜர் சிரித்துக்கொண்டும் அர்ஜுனனுடைய அழகியகையைப் பிடித்துக் கொண்டும், 'பொறுத்துக்கொள்ளப்பட்டது' என்றே அவனைக் குறித்துச் சொன்னார். விருஷபக்கொடியுள்ளவரும் பகவானும் ப்ரீதியடைந்த மனமுள்ளவரும் கங்கையால் அடையாளம் செய்யப் பட்ட ஜடையுள்ளவரும் சர்வருமான ஹரர் அதிககாந்தியுள்ள அர் ஜுனனுடைய அழகியதும் சிவந்தஉள்ளங்கையும் விரலுமுள்ளதும் உருண்டிருப்பதுமான கையைப்பிடித்துத் தமது இருகைகளாலும் அவனைத்தழுவிக்கொண்டு இன்சொல்லை முன்னிட்டுத் திரும்பவும் சொல்லலானார்.

---

1 'பகவத்' என மாற்றப்பட்டது.

நாற்பதாவது அத்யாயம்.

கைராதபர்வம். (தொடர்ச்சி.)

(மஹாதேவர் அர்ஜுனனுக்குத் தாம் பறித்துக்கொண்ட காண்டீவ முதலியவற்றைக் கொடுத்துப் பாசுபதாஸ்திரத்தையும் கொடுத்தது.)

'நீ முந்தியசரீரத்தில் நாராயணரைச் சகாயமாகவுடைய நரனுகிப் பதரிகாஸ்ரமத்தில் பல பதினுயிரம்வருஷங்கள் உக்கிரமான தவம்செய்தாய். புருஷோத்தமரான விஷ்ணுவினிடத்திலும் உன்னிடத்திலும் மேலான சக்தியிருக்கின்றது. புருஷஸ்ரேஷ்டர்களான உங்களாலேயே சக்தியினுல் ஜகத்தானது தரிக்கப்படுகின்றது. ஓ! பிரபுவே! இந்திரனுக்கு அபிஷேகம்செய்யும்காலத்தில் மேகசப்தமுள்ள மிகப்பெரிய வில்லையெடுத்து உன்னுலும் கிருஷ்ணனுலும் அஸுரர்கள்கொல்லப்பட்டார்கள். ஓ! ஆடவருட்சிறந்தவனே! பார்த்த! அந்தவில், என்னுல் மாயையை அடைந்து கவரப்பட்டதும் உன்னுடைய கைகளுக்கே தகுந்ததுமான இந்தக்காண்டீவமே. ஓ! பார்த்த! உன்கைகளுக்கேற்ற (இந்தத்) தூணிகளும் திரும்பவும் குறைவற்றவையாகும். ஓ! குருநந்தன! சரீரமும் நோயற்றதாகும்! ஓ! பார்த்த! ப்ரீதியுள்ளவனுயிருக்கின்றேன். நீ உண்மையான பராக்ரமமுள்ளவன். ஓ! மனிதருட்சிறந்தவனே! விரும்பப்பட்ட வரனை நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளு. ஓ! பகைவரையடக்கும்பாரத! மனிதர்களுள்ளோ தேவலோகத்திலோ உனக்கு நிகரான ஆண்பிள்ளை ஒருவனுமில்லை. க்ஷத்ரியஜாதியானது உன்னைத் தலைவனுகவுடையது' என்றுர்.

அர்ஜுனன் சொல்லத்தொடங்கினுன். 'ஓ! வ்ருஷபத்வஜரே! ப்ரபுவே! மஹாதேவரே! எனக்குப் பிரியத்துடன் இஷ்டமான வரனைக் கொடுப்பீராஞல் திவ்யமானதும், கோரமானதும், பயங்கரமான பராக்கிரமமுள்ளதும், பிரம்ம சிரஸென்று பெயருள்ளதும், பயங்கரமான யுகத்தின் முடிவு வந்தவுடன் எல்லா ஜகத்தையும் நாசமாக்குகின்றதும், 1 சண்டையில் தானவர்களையும் ராக்ஷஸர்களையும் அரசர்களையும் பிசாசர்களையும் கந்தர்வர்களையும் பன்னகர்களையும் ஜயிக்கக்கூடியதும், மந்திரிக்கப்பட்டால் ஆயிரம் சூலங்களும் பயங்கரமான தோற்றமுள்ள கதைகளும் பாம்புபோன்ற

1 அதிக பாடமான ஒரு ஸ்லோகம் இரட்டித்தலால் விடப்பட்டது.

வடிவமுள்ள பாணங்களும் உண்டாகக்கூடியதும், பீஷ்மருடனும் துரோணருடனும் க்ருபருடனும் எப்பொழுதும் கடுமையாய்ப் பேசுகின்ற கர்ணனுடனும் சண்டைக்களத்தில் சண்டைசெய்யக் கூடியதுமான பாசுபதாஸ்திரத்தை விரும்புகிறேன். ஓ! பகனது நேத்திரத்தை அழித்தவரே! பகவானே! உமது அனுக்கிரகத்தால், நான் செய்யவேண்டியதை நன்கு செய்தவனும் ஸமர்த்தனுமா யிருக்க வேண்டுமென்பதே என்னுடைய முதன்மையான விருப் பம்' என்றான்.

சங்கரர் சொல்லத் தொடங்கினர். 'ஓ! விபுவே! பாண்டவ! நான் பிரியமான பாசுபதமென்கிற அஸ்திரத்தை உனக்குக் கொடுக்கிறேன். தரிப்பதிலும், விடுவதிலும் மீட்பதிலும் நீ சக்தியுள் ளவன். அதனை மஹேந்திரனும் அறியான்; யமனும் அறியான்; குபேரனும் அறியான்; வருணனோ அல்லது வாயுவோ அறியார்; மனிதர்கள் எவ்விதம் அறிவார்? ஓ! பார்த்த! ஒரு மனிதனிடத் திலும் அவசரப்பட்டு இதனை நீ விடலாகாது. அற்பவலிமை யுள்ளவனிடத்தில் விடப்பட்டதானல் எல்லா உலகத்தையும் சாம்பலாக்கும். சராசரங்களுடன் கூடின மூன்று உலகங் களிலும் இதனல் கொல்லக்கூடாதவன் ஒருவனுமில்லை. மனத் தினாலும் கண்ணினாலும் வாக்கினாலும் வில்லினாலும் (இந்த அஸ்திரத்தால்) பகைவன் கொல்லப்படுகிறான்' என்றார். பிறகு, அந்த அர்ஜுனன் அதனைக்கேட்டு வேகத்துடன் சுத்தனாகியும் மனத்தை ஒரேயிடத்தில் நிறுத்தினவனாகியும், உலகங்களுக்கு ஈஸ்வரரான பரமசிவனைப் பாதங்களைப்பிடித்து வணங்கி, 'உபதே சம் செய்வீராக' என்று வேண்டினன். பிறகு, பரமர் பிரயோகிக் கும் முறை திருப்பியழைக்கும் முறை இவற்றின் ரகஸ்யங்களுடன் கூடியதும் சரீரமுள்ள எமன்போன்றதுமான அந்த அஸ்திரத்தை அர்ஜுனனைக் கற்கச் செய்தார். (அந்த அஸ்திரமானது)மூன்று கண்ணுள்ள உமாபதியை அடைந்ததுபோலவே மஹாத்மாவான அர்ஜுனனை வந்தடைந்தது. அப்பொழுது அர்ஜுனனும் ப்ரீதி யுள்ளவனாகி அதனைப் பெற்றுக்கொண்டான். பிறகு, மலைகளும் காடுகளும் மரங்களுமுள்ளதும் கடலையும் கானகத்தையுமுடைய தும், கிராமம், பட்டணம், ரத்னம்விளையுமிடம் இவைகளுடன் கூடியதுமான பூமியானது அசைந்தது. அந்த அஸ்திரம் அடை யப்பட்ட முகூர்த்தத்தில், ஆயிரக்கணக்கான பேரிகளின்முழக்கங் களும் சங்கதுந்துபிகளின் ஒலிகளும் பெரிய உத்பாதமும் உண்

டாயின. பிறகு, அளவற்ற தேஜஸுள்ள பாண்டவனுடைய பக்கத்தில் நிற்கின்றதும் சரீரமுள்ளதும் ப்ரகாசிக்கின்றதும் பயங்கரமானதுமான அஸ்திரத்தைத் தேவர்களும் அஸுரர்களும் பார்த்தார்கள். பிறகு, முக்கண்ணரால் தொடப்பட்டவனும் அளவற்ற வல்லமையுள்ளவனுமான அர்ஜுனனுடைய சரீரத்திலிருந்த தோஷங்கள் யாவும் நீங்கின. ஓ! அரசரே! அப்பொழுது, அர்ஜுனன் முக்கண்ணரால், 'ஸ்வர்க்கத்தையடை' என்று அனுமதிகொடுக்கப் பட்டு அவரைத் தலையால் வணங்கிக் கைகூப்பிக்கொண்டு பார்த்தான். பிறகு, ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களுக்குப்பதியும் ஜிதேந்திரியரும் ஸர்வஜ்ஞரும் உமாபதியும் பவரும் கிரிசருமான சிவபிரான் அஸுரர்களையும் பிசாசர்களையும் நாசம்பண்ணக்கூடியதும் பெரிதுமான காண்டீவமென்ற வில்லைப் புருஷச்ரேஷ்டனான அவனுக்குக்கொடுத்தார். பிறகு, அப்பொழுது ஈச்வரர் பார்வதியுடன் [1]வெண்மையான மலைத்தடங்களையும், தாழ்வரைகளையும் குகைகளையுமுடையதும் சுபமானதும் பக்ஷிகளாலும் மஹரிஷிகளாலும் அடையப்பட்டதுமான அந்தச் சிறந்த மலையைவிட்டுப் புருஷச்ரேஷ்டனான அர்ஜுனன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஆகாசத்தை அடைந்தார்.

நாற்பத்தோராவது அத்யாயம்.

கைராதபர்வம். (தொடர்ச்சி.)

(யமனும் வருணனும் குபேரனும் அர்ஜுனனுக்கு அஸ்திரங்களைக் கொடுத்ததும், இந்திரன் அர்ஜுனனை ஸ்வர்க்கத்துக்கு வரச் சொல்லியதும்.)

அர்ஜுனன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, பினாகமென்ற வில்லுள்ளவரும் விருஷபக்கொடியுள்ளவருமான சிவபெருமான் அஸ்தமயமடைந்த சூரியன் உலகத்திற்கு மறைவதுபோல மறைவையடைந்தார். ஓ! பாரதரே! பிறகு, பகைவீரர்களை அழிப்பவனான அர்ஜுனன், 'என்னால் மஹாதேவர் நேராகவே பார்க்கப்பட்டார்' என்று மேலான ஆச்சரியமடைந்தான். 'முக்கண்ணரும் பினாகியும் வரங்கொடுப்பவருமான ஹரர் என்னால் ரூபமுள்ளவராகப் பார்க்கவும் கையினால் தொடவும் பட்டமையால்

---

1 'ஸித' என்று பாடம் கொள்ளப்பட்டது.

ப்பாக்யவானும் அருள் செய்யப்பட்டவனுமாகிறேன். செய்யவேண்டியதைச் செய்தவனுயினேன். என்னை மிகவும் கிருதார்த்தனுக நானே மனத்தினுல் எண்ணுகிறேன். பகைவர்கள் யாவரையும் வெல்லப்பட்டவர்களாகவும் விரும்பியபயனைக் கைகூடினதாகவும் எண்ணுகிறேன்' என்றெண்ணினன். பிறகு, அதிக காந்தியுள்ள ப்பார்த்தன் இவ்விதம் ஆலோசனை செய்யும்போது வைடூர்யமணி நிறமுள்ளவனும் எல்லாத் திக்குக்களையும் விளங்கச் செய்பவனும் ஜல்ஜந்துக்களின் கூட்டத்தால் சூழப்பெற்றவனும் சோபையுள்ளவனுமான வருணன் வந்து சேர்ந்தான். நாகர்களோடும் 1 நதங்களோடும் 2 நதிகளோடும் அஸுரர்களோடும் ஸாத்தியர்களோடும் தேவக்கூட்டங்களோடும் ஜலஜந்துக்களுக்குத்தலைவனும் ஜிதேந்திரியனுமான வருணன் அந்தஇடத்தை அடைந்தான். பிறகு, பொன் போன்ற மேனியுள்ளவனும் யக்ஷர்களால் பின் தொடரப்பட்டவனும் பிரபுவுமானகுபேரன் மிக்ககாந்தியுள்ள விமானத்துடன்வந்து சேர்ந்தான். ஆகாயத்தைவிளக்குபவனும் 3 ஆச்சரியமானதோற்றமுள்ளவனும் தனங்களுக்கு அதிபதியுமான குபேரன் அர்ஜுனனைப் பார்க்கவந்தான். அப்படியே உலகத்திற்கு நாசத்தையுண்டு பண்ணுகிறவனும், பராக்ரமமுள்ளவனும், மனிதசரீரங்கொண்டவர்களும் லோகத்தை நிலைக்கச் செய்கிறவர்களுமான பித்ருக்களுடன் கூடியவனும், தண்டத்தைக் கையிற்கொண்டவனும், எல்லாப் பிராணிகளையும் நாசமாக்குகிறவனும், யோசிக்க முடியாத ஸ்வரூபமுடையவனும், சூரியபுத்திரனும், தர்மங்களுக்கு ராஜனும், காந்தியுள்ளவனுமான யமன் குஹ்யகர்களுடனும் கந்தர்வர்களுடனும் பன்னகர்களுடனுங் கூடின மூவுலகங்களையும், தன் விமானத்தினுல், யுகத்தின் முடிவுவந்தபோது உண்டாகும் இரண்டாவது சூரியன்போல, விளக்கிக்கொண்டு நேரில்வந்தான். இமய மலையின் பிரகாசமுள்ள விசித்திரமான கொடுமுடிகளை அடைந்து அவ்விடத்தில் தவத்துடன் கூடிய அர்ஜுனனைக் கண்டார்கள். பிறகு, ஒரு முகூர்த்தத்தினுள் பூஜ்யனுன இந்திரன் தேவகணங்களால் சூழப்பட்டு இந்திராணியுடன் ஐராவதத்தின்மீது ஏறிக் கொண்டு வந்துசேர்ந்தான். 4 யானைகளுள் சிரேஷ்டமான ஐராவ

1 நதம்=மேற்கே செல்லும் ஆறு. 2 நதி=கிழக்கே செல்லும் ஆறு.

3 'அத்புதோபமதர்சந:' என்பது மூலம்.

4 வேறு பாடங்கொண்டு, 'வெண்மேகத்தை அடைந்த சந்திரன் போல' என்பது பழையவுரை.

த்தின் மேலிருப்பவன் தலையில் பிடிக்கப்படும் வெண்மையான குடையினால் வெண்மேகத்தை அடைந்தவன்போல விளங்கினான். தபோதனர்களான ரிஷிகளாலும் கந்தர்வர்களாலும் நன்கு துதிக்கப்படுகிறவனாகி உதித்த சூரியன்போல மலையின் கொடுமுடியை அடைந்துநின்றான். பிறகு, தெற்குத்திக்கையடைந்தவனும் மேலான தர்மமறிந்தவனும் நல்லபுத்தியுள்ளவனுமான யமன் மேகம்போன்ற குரலுள்ளவனாகி அழகியவார்த்தையைச்சொல்லலானான். 'ஓ! அர்ஜுன! ஓ! அர்ஜுன! வந்திருக்கும் லோகபாலர்களான எங்களைப் பார். உனக்கு இப்பொழுது பார்க்கும் திறமையைக் கொடுக்கின்றோம். நீ (எங்களைத்) தரிசிப்பதற்குரியவன். ஓ! ஐயா! அளவிடப்படாத புத்தியுள்ளவனும் அதிக பலமுள்ளவனும் நரனென்னும் பெயர்பெற்ற பழைய ரிஷியுமான நீ ப்ரம்மாவின் உத்தரவினால் மனிதனாயிருத்தலை அடைந்தாய். ஓ! குற்றமற்றவனே! மிகவும் தர்மத்தில் மனமுள்ளவரும் அதிக வீர்யமுள்ளவரும் வஸுவினிடமிருந்து உண்டானவரும் (உனது) பாட்டனாருமான பீஷ்மரும் உன்னால் போரில் வெல்லப்படத் தகுந்தவர். குருநந்தன! துரோணாசாரியரால் ரக்ஷிக்கப்பெற்றதும் அக்னிக்கொப்பான பரிசமுள்ளதுமான க்ஷத்திரிய ஜாதியும் மனிதப்பிறப்பையடைந்தவர்களும் அதிக வீர்யமுள்ளவர்களுமான அஸுரர்களும் நிவாதகவசர்களும் ஜயிக்கப்படத்தகுந்தவர்கள். ஓ! தனஞ்சய! எல்லாவுலகத்தையும் காய்கிறவனும் தேவனுமான என் பிதாவான (சூரியனுடைய) அம்சமான மிகப் பெரிய வீர்யமுள்ள கர்ணனும் உன்னால் கொல்லப்படத்தகுந்தவன். ஓ! கௌந்தேய! பகைவரை அழிப்பவனே! பூமியை யடைந்த தேவர், கந்தர்வர், ராக்ஷஸர் இவர்களுடைய அம்சமானவர்களும், யுத்தத்தில் உன்னால் கொல்லப்பட்டவர்களாகித் தம் தம் செய்கையின் பயனாகச் சம்பாதிக்கப்பட்ட கதியை அவரவர்களுக்குத் தக்கபடி அடையப்போகிறார்கள். ஓ! பல்குன! உலகத்தில் உன் கீர்த்தியானது அழிவற்றதாயிருக்கும். பெரிய சண்டையில் உன்னால் மஹாதேவர் நேரிலேயே மகிழ்விக்கப்பட்டாரன்றோ? விஷ்ணுவுடன் கூடிய (உன்னால்) பூமியும் பாரமற்றதாகச் செய்யப்படவேண்டியதாயிருக்கிறது. புஜபலமிக்கவனே! தடுக்க முடியாத தண்டமென்ற அஸ்திரத்தைப் பெற்றுக்கொள்ளு. இந்த அஸ்திரத்தால் நீ பெரிய செய்கையைச் செய்வாய் அன்றோ?' என்றான். குருநந்தனனான பார்த்தனும் மந்திரத்துடனும் (விடுதற்கும் அழைத்தற்கும் முன்னும் பின்னும் செய்

யும்) [1] உபசாரத்துடனும் விடுதலுடனும் திருப்புதலுடனும் (அந்த அஸ்திரத்தை) விதிப்படி பெற்றுக்கொண்டான். பிறகு, மேகம்போலக் கரியவனும் ஜலஜந்துக்களுக்குப் பதியும் ப்ரபுவுமான வருணன் மேற்குத் திக்கையடைந்து வார்த்தையைச் சொல்லுகிறவனாகி, 'ஓ! பார்த்த! நீண்டு சிவந்த கண்ணுள்ளவனே! நீ க்ஷத்திரியர்களுள் முக்கியமானவன்; க்ஷத்திரிய தர்மத்தில் நிலைபெற்றவன். என்னைப் பார். ஜலத்திற்கு ஈச்வரனான வருணனாக இருக்கிறேன். ஓ! கௌந்தேய! என்னால் பிரயோகிக்கப்பட்டு (எவராலும்) தடுக்கப்படாதவைகளான வருண பாசங்களை (விடுத்தல்) அழைத்தல் இவற்றின் ரகஸ்யங்களுடன் பெற்றுக்கொள்ளு. ஓ! வீர! அப்பொழுது தாரகாமயமென்னும் யுத்தத்தில் என்னால் மஹா தைர்யமுள்ள ஆயிரக்கணக்கான அஸுரர்கள் இவைகளால் கட்டப்பட்டனர். ஓ! மிக்க பலமுள்ளவனே! ஆகையால், எனது அருளுடன் வெளிவந்த இவைகளைப் பெற்றுக்கொள். இவற்றைக் கையிற்கொண்டு சண்டைசெய்யும் உன்னிடமிருந்து யமனும் விடுபடானன்றோ? நீ இந்த அஸ்திரத்துடன் யுத்தத்தில் சஞ்சரிக்குங்காலத்தில் பூமியானது க்ஷத்திரியர்களற்றதாகும்; ஸந்தேகமில்லை' என்றான். பிறகு, அஸ்திரங்களையறிந்தவர்களுள் சிறந்தவனும் இந்திரகுமாரனுமான அர்ஜுனன் திவ்யமான அந்த வாருணாஸ்திரங்களை வருணனிடமிருந்து முறைப்படி பெற்றுக்கொண்டான். பிறகு, வருணனும் யமனும் திவ்யாஸ்திரங்கள் கொடுக்கப்பட்டவுடன், கைலாஸத்தில் வஸிக்கும் குபேரன் சொல்லலானான். 'ஓ! புத்திமானே! பாண்டவா! மிக்க பலசாலியே! நான் கிருஷ்ணனுடன் சேர்ந்து மகிழ்வதுபோல உன்னுடன் சேர்ந்தும் உன்விஷயத்தில்மகிழ்ந்திருக்கின்றேன். ஓ! ஸவ்யஸாசியே! மிக்க கைவன்மையுள்ளவனே! நரனே! ஸநாதந! முன்பு தேவனாயிருந்தவனே! நீ முந்தியகல்பங்களில் எப்பொழுதும் எங்களுடன் கூடத் தவஞ்செய்பவனாக (இருந்தாய்.) ஓ! மனிதருட் சிறந்தவனே! இந்தத் திவ்யமான ஞானத்தை உனக்குத்தருகின்றேன். தோள்வலியமைந்தவனே! மனிதர்களல்லாத ஜயிக்கமுடியாதவர்களையும் ஜயிப்பாய். நீ சீக்கிரமாக என்னிடமிருந்தும் மேலான அஸ்திரத்தைப் பெற்றுக்கொள்வாயாக. இதனால் நீ தார்யோதனனுடைய சைனியங்களை எரித்துவிடுவாய். இந்திரியபலம் மனோபலம் சரீரகாந்தி இவைகளைக் கொடுக்கக்கூடியதும் பகைவருக்குத் தூக்கத்தை

[1] வேறு பாடம்.

உண்டுபண்ணக்கூடியதும் சத்ருக்களைக் கொல்லக்கூடியதும் எனக்குப் பிரியமானதுமான அந்தர்த்தானஸ்திரத்தையும் என்னிடமிருந்து நீ பெற்றுக்கொள்வாயாக. மஹாத்மாவான சங்கரரால் திரிபுரம் அழிக்கப்படுங்கால் இந்த அஸ்திரம் விடப்பட்டது. இதனால் பெரிய அஸுரர்கள் எரிக்கப்பட்டனர். உண்மையான பராக்ரமமுள்ளவனே! மேருவுக்கு ஒப்பான கௌரவமுள்ளவனே! உனக்கென்று இது என்னால் கொடுக்கப்பட்டது. இதனைத் தரிப்பதற்கு நீ தக்கவனாகிறாய்' என்றான். பிறகு, மிக்க பலமுள்ளவனும் பெரிய கையுள்ளவனும் குருநந்தனனுமான அர்ஜுனன் குபேரனுடையதான திவ்யாஸ்திரத்தை விதிப்படி பெற்றுக்கொண்டான். பிறகு, திவ்யதுந்துபிக்குஒப்பான குரலுள்ள இந்திரன் ச்ரமமின்றி வேலைசெய்யும் அர்ஜுனனை அழகியவாக்கினால் இன்மொழி கூறிக்கொண்டு, 'ஓ! குந்தியைத் தாயாகவுடைய மஹாபாகுவே! புராதனனும் ப்ரபுவுமான நீ மேலான ஸித்தியையடைந்து தேவர்களுக்கு முக்கியமாயிருத்தலை நேரில் அடைந்திருக்கின்றாய். பகைவரை அடக்குபவனே! மிக்க காந்தியுள்ளவனே! மிகப் பெரிதான தேவகார்யம் உன்னால் செய்யப்படவேண்டும். ஸ்வர்க்கமானது உன்னால் அடையப்படவேண்டும். ஸித்தம்செய்துகொள்ளக்கடவாய். உனக்காக மாதலியுடன் கூடின என்னுடைய ரதமானது [1]பூமிக்கு வரப்போகிறது. ஓ! கௌரவ! உனக்கு எல்லா அஸ்திரங்களையும் நான் அந்த ஸ்வர்க்கத்தில் தருகிறேன்' என்று சொன்னான். குந்தீ புத்திரனும் புத்திமானுமான அர்ஜுனன் மலையின் கொடுமுடியில் கூடியிருக்கும் அந்த லோகபாலர்களைப் பார்த்து ஆச்சரியத்தை அடைந்தான். பிறகு, ஒளிமிக்க அர்ஜுனன் வந்தவர்களான லோகபாலர்களைச் சொற்களாலும் ஜலங்களாலும் பழங்களாலும் முறைப்படி பூஜைசெய்தான். பிறகு, பேரறிவுள்ளவர்களான தேவர்களெல்லாரும் அர்ஜுனனுக்குப் பிரதிமரியாதை செய்து வந்ததுபோல இஷ்டப்படி மனோவேகமாகப் போயினர். பிறகு, புருஷச்ரேஷ்டனான அர்ஜுனன் அஸ்திரங்களைப் பெற்றுச் சந்தோஷமடைந்தான். பிறகு, அவன் தன்னைப் பூர்ணமான மனமுள்ளவனாகவும் கிருதார்த்தனாகவும் எண்ணினான்.

கைராதபர்வம் முற்றிற்று.

---

1 வேறு பாடம்.

நாற்பத்திரண்டாவது அத்யாயம்.

இந்திரலோகாபிகமன பர்வம்.

(அர்ஜுனன் மாதலிகொணர்ந்த தேரேறி ஸ்வர்க்கத்துக்குப் போனது.)

ஓ! ராஜேந்திரரே! லோகபாலர்கள் போனவுடன், பகைவரைக் கொல்லும் அர்ஜுனன் தேவராஜனது ரதத்தின் வரவைப்பற்றி ஆலோசித்தான். புத்திமானுன அந்தக் [1] குடாகேசன் ஆலோசனை செய்யும்போது அதிக காந்தியுள்ள ரதமானது மாதலியுடன் கூடினதாகி ஆகாயத்தை இருளற்றதாய்ச் செய்துகொண்டும் பெரிய மேக ஓசைக்கொப்பான ஒலிகளால் திக்குக்களை நிரப்பிக் கொண்டும் மேகங்களைப் பிளப்பதுபோல வந்து சேர்ந்தது. வாயு வேகமுள்ளவையும் பொன்னிறமுள்ளவையுமான பதினாயிரம் குதிரைகளால் இழுக்கப்பட்டதும் கண்ணைக்கவர்வதும் தேவலோகத்ததும் வியக்கத்தக்கதுமான அந்த ரதத்தில் கத்திகளும், பயங்கரமான சக்திகளும், கொடியதோற்றமுள்ள கதைகளும், திவ்யமான வல்லமையுள்ள பிராஸங்களும், மிக்க காந்தியுள்ள மின்னல்களும், அப்படியே அசனிகளும், சக்கரம் போடப்பட்டவையும் காற்றினால் வெடிப்பவையும் பெரிய மேகங்களின் முழக்கம் போன்ற முழக்கமுள்ளவையுமான [2] துலாகுடங்களும், பருத்த சரீரமுள்ளவைகளும் ஜ்வலிக்கின்றவாயுள்ளவைகளும் மிக்க அச்சந்தருபவைகளும் வெண்மையான மேகக்கூட்டத்தை ஒத்தவைகளும் கற்கள் போலச் சேர்ந்திருப்பவைகளுமான நாகங்களும் இருந்தன. அந்த ரதத்தில் நீலமணிமயமானதும் அதிக காந்தியுள்ளதும் நீலோத்பலம்போலக் கருமையானதும் பொன்னலங்காரமுள்ளதுமான வைஜயந்தமென்னும் மூங்கிற்கொடிமரத்தைப்பார்த்தான். அந்த ரதத்திலிருக்கிற புடமிட்ட பொன்னுல் அலங்கரிக்கப்பட்ட தேர்ப்பாகனை, புஜபல மிக்கவனுன அர்ஜுனன் பார்த்து, இந்திரனென்று எண்ணினுன். பிறகு, அந்த அர்ஜுனன் அவ்விதம் எண்ணும்போது, மாதலி(இறங்கி)வந்து வணங்கி, அர்ஜுனனைநோக்கி வார்த்தை சொல்லத்தொடங்கினுன். 'ஓ! ஓ! ஸ்ரீமானே! இந்திரபுத்திர! இந்திரன் உன்னைப் பார்க்கவிரும்புகின்றுன். நீ இந்திரனுக்குப் பிரியமான தேரில் சீக்கிரம் ஏறு. 'இங்கு

1 பீஷ்மபர்வம் 76-ம் பக்கம் குறிப்பிற் காண்க. 2 பீரங்கி வகை.

வந்த குந்தீபுத்திரனை அர்ஜுனனைத் தேவலோகத்தில் வஸிப்பு வர்கள் பார்க்கட்டும்' என்று தேவஸ்ரேஷ்டனும் உன்பிதாவுமான இந்திரன் என்னைநோக்கிச் சொல்லினன். இந்தஇந்திரன் உன்னைக்காணவிரும்பித் தேவர்களாலும் ரிஷிக்கூட்டங்களாலும் அவ்வாறே கந்தர்வர்களாலும் அப்ஸரஸ்திரீகளாலும் சூழப்பெற்றவனாகி எதிர்பார்க்கிறான். இந்திரனுடைய கட்டளையின்படி இவ்வுலகத்திலிருந்து என்னுடன்கூடித் தேவலோகத்தில் நீ ஏறு. அஸ்திரங்களை அடைந்து திரும்பிவருவாய்' என்றான்.

அர்ஜுனன் சொல்லலானான். 'ஓ! மாதலியே! நீ சீக்கிரம் போ; சிறந்ததேரில் ஏறு; மிகப்பெரும்பாக்யமுள்ளவர்களும் மிக்க தக்ஷிணைகொடுப்பவர்களும் யாகஞ்செய்தவர்களுமான அரசர்களாலும் நூற்றுக்கணக்கான ராஜஸூயங்களையும் அசுவமேதங்களையும் செய்வதனாலும் அடையமுடியாததும் தேவர்களாலும் அஸுரர்களாலும் ஏறமுடியாததுமான சிறந்தரதத்தில் (ஏறுவாயாக.) இந்தத்திவ்யமான சிறந்தரதமானது தவஞ்செய்யாதவனால் பார்ப்பதற்கோ, அல்லது, தொடுவதற்கோ முடியாதது; ஏறுவதற்கு எப்படிமுடியும்? ஓ! ஸாதுவே! நீ ரதத்திலேறிக் குதிரைகளும் அசைவற்றிருந்த பின்பு, நானும், புண்ணியம்செய்தவன் நல்லகதியில்ஏறுவதுபோலப் பின்னால் ஏறுகின்றேன்' என்றான். இந்திரஸாரதியானமாதலி அவனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு விரைவாக ரதத்தில் ஏறினான்; கடிவாளங்களால் குதிரைகளைப் பிடித்தான். பிறகு, குருநந்தனனும் குந்திபுத்திரனுமான அர்ஜுனன் மனமகிழ்ந்து கங்கையில்ஸ்நானம்செய்து சுத்தனாகி, ஜபிக்கவேண்டியதை முறைப்படி ஜபித்தான். பிறகு, பித்ருக்களை நியாயந்தவறாமல் முறைப்படி திருப்திஅடைவித்து மந்தரமென்னும் அந்தப்பர்வதராஜனிடம் விடைபெற்றுக்கொள்ளத் தொடங்கினான்.

'ஓ! சைலமே! ஸாதுக்களும் புண்யமானஸ்வபாவமுள்ளவர்களும் புண்ணியகார்யம்செய்கிறவர்களும் ஸ்வர்க்கத்தின் வழியை விரும்புகின்றவர்களுமான முனிவர்களுக்கு எப்பொழுதும் நீ இருப்பிடம். ஓ! மலையே! உனது அனுக்ரகத்தால் பிராம்மணரும் க்ஷத்ரியரும் வைசியரும் ஸ்வர்க்கத்தை அடைந்து தேவதைகளுடன்கூடி எப்பொழுதும் துக்கமற்றவர்களாகிச் சஞ்சரிக்கின்றார்கள். ஓ! மலையரசே! பெருமலையே! முனிவர்க்கிடமே! நீர்த்துறையுடையாய்! உன்னிடத்தில் ஸுகமாக வஸித்தவனாயிருக்கிறேன். உன்னிடம் சொல்லிக்கொண்டு போகிறேன். உன்னுடைய தாழ்வரைகளும்

கொடிப்பந்தல்களும் ஆறுகளும் அருவிகளும் நல்லபுண்யமான தீர்த்தங்களும் பெரும்பாலும் என்னால் பார்க்கப்பட்டன. ஆங்காங்கிருந்து நல்லவாசனையுள்ள பழங்களும் புஜிக்கப்பட்டன. நல்ல உயர்ந்தவாசனையுள்ளதும் உன்சரீரத்திலிருந்து வெளிவந்ததும் அமிருதம்போன்றசுவையுள்ளதும் பெருகுவதுமான அருவியின் ஜலமும் குடிக்கப்பட்டது. ஓ! மஹாப்ரபுவே! மலையரசே! குழந்தையானது தந்தையின்மடியில் ஸுகமாக உறங்குவதுபோல அப்ஸரஸ்திரீகளின்கூட்டங்களால் நிறையப்பெற்றதும் வேதகோஷத்தால் ஒலியுள்ளதுமான உன்னுடைய தாழ்வரையாகிறமடியில் நான் விளையாடினேன். மலையே! உன்னுடையதாழ்வரைகளில் எப்பொழுதும் ஸுகமே வசித்தனயிருக்கிறேன்' என்றான். பகைவீரர்களைக் கொல்லுகின்ற அர்ஜுனன் இவ்விதம்சொல்லிவிட்டு மலையினிடம் விடைபெற்றுக்கொண்டு பிரகாசப்படுத்தும் சூரியன்போலத் திவ்ய ரதத்தில் ஏறினான். அந்தப் புத்திமானான அர்ஜுனன் ஸந்தோஷமுள்ளவனாகிச் சூரியனுடைய ரூபமுள்ளதும் தேவலோகத்திலிருப்பதும் ஆச்சரியமான செயலுள்ளதுமான அந்த ரதத்தால் உயரக் கிளம்பினான். அவன் (அங்குத்) தர்மானுஷ்டானம் செய்யும் மனிதர்களுக்குப் பார்க்கமுடியாத மார்க்கத்தை அடைந்து ஆச்சரியமானரூபமுள்ள ஆயிரக்கணக்கான விமானங்களைப் பார்த்தான். அவ்விடத்தில் ஸூரியனாவது சந்திரனாவது. அக்கினியாவது பிரகாசிக்கிறதில்லை. புண்ணியத்தால் அடையப்பட்ட தமது காந்தியாலேயே அவ்விடத்தில் யாவும் பிரகாசிக்கின்றன. காந்தியுள்ள எவைகள் மிகப்பெரியவைகளாக இருந்தாலும் ஆகாயத்தில் வெகு தூரத்திலிருப்பதால் சிறிய நக்ஷத்திரரூபங்களாகக் காணப்படுகின்றனவோ அவைகளை அர்ஜுனன் அவ்விடத்தில் மிக்ககாந்தியும் தம்வடிவமும் உள்ளவைகளும் தம்மிடங்களில் தம்காந்தியால் பிரகாசிக்கின்றவைகளுமாக இருக்கக்கண்டான். அங்கே ராஜரிஷிகளும் ஸித்தர்களும் யுத்தத்தில் கொல்லப்பட்ட வீரர்களும் தவத்தால் ஜயிக்கப்பட்ட ஸ்வர்க்கத்துக்குப் போய்க்கொண்டிருந்தனர். ஸூர்யன்போல ஜ்வலிக்கும் தேஜஸுள்ள ஆயிரக்கணக்கான கந்தர்வர்களையும் குஹ்யகர்களையும் ரிஷிகளும் அப்ஸரஸுகளுமாகிய வர்களின் கூட்டங்களையும்தாமாகவே பிரகாசிக்கின்ற லோகங்களையும் அர்ஜுனன் பார்த்து ஆச்சரியமுள்ளவனாகி மாதலியைநோக்கிப் ப்ரீதியுடன் வினவினன். அவனும் இவனைநோக்கி, 'ஓ! பார்த்த! தமது ஸ்தானங்களிலிருக்கின்ற இவர்கள் புண்யம்செய்தவர்கள்.

ஓ! விபுவே! இவைகளே(த்தான்) பூமியிலிருந்து நக்ஷத்திரரூபங்களாகப் பார்த்தாய்' என்றான்.. பிறகு, (ஸ்வர்க்க) வாயிலில் நிற்பதும், மதங்கொண்டதும், ஜயமுள்ளதும், கொம்புமுடிகளுடன் கூடின கைலாயம் போன்றதும், நான்கு தந்தமுள்ளதுமான ஐராவதமென்ற யானையைக் கண்டான். குருபாண்டவர்களுள் சிறந்தவனான அவன் முற்காலத்தில் அரசர்களுள்மேலான மாந்தாதா விளங்கியது போல ஸித்தமார்க்கத்தை அடைந்து விளங்கினான். தாமரைமலர் போன்ற கண்ணுள்ள அந்த அர்ஜுனன் அரசர்களின் லோகங்களைத் தாண்டினான். மிக்ககீர்த்தியுள்ள அவன் இவ்விதம் அந்த ஸ்வர்க்கலோகத்தில் போய்க்கொண்டு, பிறகு, இந்திரனுடைய பட்டணமான அந்த அமராவதியைப் பார்த்தான்.

நாற்பத்துமூன்றாவது அத்யாயம்.

இந்திரலோகாபிகமன பர்வம். (தொடர்ச்சி.)

(இந்திரன் அர்ஜுனனுக்கு மரியாதை செய்து அவனைத் தன் அர்த்தாஸனத்தில் வீற்றிருக்கச்செய்தது.)

அந்த அர்ஜுனன் எல்லாருதுக்களின் புஷ்பங்களையுமுடைய புண்ணியமான மரங்களால் சமீபத்தில் விளங்கச்செய்யப்பெற்றதும் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பெற்றதுமான அழகிய பட்டணத்தைப் பார்த்தான். அவ்விடத்தில் பரிசுத்தமான வாஸனையுள்ள ஸௌகந்திக(=செங்கழுநீர்)மலர்களுடன் சேர்ந்த பரிசுத்தமான வாஸனையுள்ள காற்றினால் வீசப்படுகின்றவனாகி அப்ஸரஸுகளின் கூட்டத்தினால் அடையப்பெற்றதும் திவ்யமான புஷ்பங்களால் அழைப்பனபோலிருக்கிற மரங்களுடன் கூடியதுமான திவ்யமான நந்தனவனத்தைப் பார்த்தான். புண்ணியம் செய்தவர்களுடைய அந்த உலகமானது தவம்செய்யாதவனாலும் அக்னியாதானம் செய்யாதவனாலும் பார்க்கவும் முடியாதது. யுத்தத்தில் புறங்காட்டினவர்களாலும் விதிப்படி யாகம் செய்யாதவர்களாலும் விரதமற்றவர்களாலும் வேதாத்யயனமில்லாதவர்களாலும் (புண்ணிய)தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யாத அங்கமுள்ளவர்களாலும் யஜ்ஞத்திலும் தானத்திலும் விலக்கப்பட்டவர்களாலும் யாகத்தைக்கெடுத்த அற்பர்களாலும் கட்குடிப்பவர்களாலும் குருவின்சயனத்தை அடைகின்றவர்களாலும் மாமி

சம் தின்னும் கெட்ட எண்ணமுள்ளவர்களாலும் எவ்விதமும் பார்க்கமுடியாதது. திவ்யமானகானத்தால் ஒலியுள்ளதாகச் செய்யப்பெற்ற அந்தத் திவ்யவனத்தைக் கைவன்மையுள்ள அவன் பார்த்துக்கொண்டு இந்திரனுக்குப் பிரியமான பட்டணத்தில் நுழைந்தான். அவ்விடத்தில் இஷ்டப்படி செல்லக்கூடிய தேவவிமானங்களை ஆயிரக்கணக்காக நிற்கின்றவைகளாகவும் பதினாயிரக்கணக்காக நாற்புறமும் செல்லுகின்றவைகளாகவும் அப்பொழுது பார்த்தான். அர்ஜுனன் கந்தர்வர்களாலும் அப்ஸரஸுகளாலும் நன்கு துதிக்கப்பெற்றுப் புஷ்பவாஸனையுள்ள புண்ணியமான காற்றுக்களால் வீசப்பெற்றான். பிறகு, கந்தர்வர்களுடன் கூடின தேவர்களும் ஸித்தர்களும் சிறந்த ரிஷிகளும் சந்தோஷமுள்ளவர்களாகி ஶ்ரமமற்று வேலைசெய்யும் அர்ஜுனனை நன்கு பூஜித்தனர். கைவன்மையுள்ள (அர்ஜுனன்) தேவலோகத்திலுள்ள வாத்யசப்தங்களுடன் கூடின ஆசீர்வாதங்களால் துதிக்கப்பெற்றுச் சங்கதுந்துபிகளின் முழக்கமுள்ளதும் ஸுரவீதி என்று பெயர்பெற்றதுமான விரிவான நக்ஷத்திரமார்க்கத்தை அடைந்தான். அவன் இந்திரனுடைய கட்டளையால் நான்கு பக்கங்களிலும் துதிக்கப்பெற்றவனாகிச் சென்றான். பிறகு, பகைவரையடக்குபவனும் குருநந்தனனுமான அந்த அர்ஜுனன், அவ்விடத்தில் ஸாத்தியர்கள், விஶ்வேதேவர்கள், மருத்துக்கள், அஶ்விநிதேவர்கள், ஆதித்யர்கள், வஸுக்கள், ருத்திரர்கள், குற்றமற்ற ப்ரம்மரிஷிகள், அநேகம் ராஜரிஷிகள், திலீபன் முதலிய அரசர்கள், தும்புரு, நாரதர், ஹாஹா ஹூ ஹூவென்ற இரண்டு கந்தர்வர்கள் ஆகிய அவர்கள் யாவரையும் முறைப்படி அடைந்து, பிறகு, தேவராஜனான இந்திரனைக் கண்டான். பிறகு, வலியதோளுள்ள அர்ஜுனன் உயர்ந்த ரதத்திலிருந்து இறங்கிப் பொற்காம்புள்ளதும் அழகியதும் வெண்மையானதுமான குடையுடனும் தேவலோகத்திலுள்ள வாஸனையுடன்கூடிய அசைகிற விசிறியுடனும் (கூடினவனும்) விஶ்வாவஸு முதலிய துதித்துவணங்குகிறவர்களான கந்தர்வர்களாலும் ருக்கு, யஜுஸ், ஸாமம் இவைகளின் துதிகளால் சிறந்த பிராம்மணர்களாலும் துதிக்கப்படுகிறவனும் தேவராஜனும் தந்தையுமான இந்திரனை நேரில்பார்த்தான். பிறகு, பலமுள்ள அர்ஜுனன் அருகில் சென்று தலையால்வணங்கினான். அவனும், உருண்டு பருத்திருக்கின்றகைகளால் இவனைத் தழுவிக்கொண்டான். பிறகு, இந்திரன் தேவரிஷிக்கூட்டங்களால் அடையப்பட்ட புண்ணியமான இந்திராசனத்

தில் கைகளைப்பிடித்து இவனை உட்கார்ரச்செய்தான். பகைவீரர்களைக்கொல்லுகின்ற இந்திரன் வணக்கத்தால் தலைகுனிந்த இவனை உச்சிமோந்து அப்பொழுது மடியில் ஏற்றிவைத்துக்கொண்டான். அப்பொழுது இந்திரனுடைய உத்தரவினால் இந்திராசனத்தை [1]அடைந்தவனும் அறியமுடியாத மகிமையுள்ளவனுமான அந்த அர்ஜுனன் இரண்டாவது இந்திரன்போலவீற்றிருந்தான். பிறகு,இந்திரன் இன்சொற்கூறி அழகிய அர்ஜுனன்முகத்தைப் பிரியத்துடன் நறுமணமுள்ளகையால் தடவிக்கொடுத்தான். வஜ்ராயுதம்பிடித்தவனும் ஆயிரம்கண்களையுடையவனும் விருத்திரனைக்கொன்றவனுமான இந்திரன் வஜ்ராயுதத்தைப்பிடித்து வடுப்பட்டகையினால் நாண்கயிற்றையிழுப்பதால் கடினமானவையும் பொற்றூண்போன்றவையும் நீண்டவையுமான இந்த அர்ஜுனனுடைய அழகியகைகளை மெதுவாகத் தடவிக்கொடுத்துக்கொண்டும் அடிக்கடி இன்சொற்கூறிக்கொண்டும் அர்ஜுனன்கைகளை மெதுவாகத்தட்டிக்கொண்டும் புன்சிரிப்புள்ளவனும் ஸந்தோஷத்தால்மலர்ந்த கண்ணுள்ளவனுமாகிக் குடாகேசனை அவனைப்பார்த்து (ப்போதுமென்கிற) திருப்தியை அடையவில்லை. ஒரேஆஸனத்திலுட்கார்ந்த அவ்விருவரும் சதுர்த்தசியிலுதித்த சூரியசந்திரர்கள் ஆகாயத்தை விளக்குவதுபோலச் சபையைவிளங்கச்செய்தார்கள். அவ்விடத்தில் கீதங்களிலும் ஸாமங்களிலும் தேர்ந்தவர்களும் தும்புருவைத்தலைவனாகவுடையவர்களுமான கந்தர்வர்கள் மிக்கஅழகான ஸாமவேதத்தால் காதைகளைப் பாடினார்கள். க்ருதாசி, மேனகை, ரம்பை, பூர்வசித்தி, ஸ்வயம்ப்ரபை, ஊர்வசி, மிச்ரகேசி, தண்டகௌரி, வரூதினி, கோபாலி, ஸஹஜன்யை, கும்பயோகி, ப்ரஜாகரை, சித்ரஸேனை, சித்ரலேகை,இனியகுரலுள்ள ஸஹை ஆகிய அழகிய புன்சிரிப்புள்ள இவர்களும் மற்றவர்களும், அசைகின்றகொங்கைகளால் ஸித்தர்களின்மனத்தையும் கலக்கவல்லவர்களும், தாமரையிதழ்போன்றகண்களையுடையவர்களும், சிறந்தஇடையும் பின்தட்டுமுள்ளவர்களும், அழகிய புன்னகையுள்ளவர்களுமாகிப் (பார்ப்பவர்களின்) எண்ணத்தைக்கவரும் கடைக்கண்பார்வையுடனும் உறுதியைக்கவரும் சிருங்காரச்செயலுடனும் மனத்தைக்கவரும் இனிமையுடனும் ஆங்காங்கு நர்த்தனம்செய்தார்கள். பிறகு, கந்தர்வர்களுடன்கூடின தேவர்கள் இந்திரனுடைய அபிப்பிராயத்தை அறிந்து விரைவில் சிறந்த பூஜாத்திரவ்யங்களைக்கொண்டுவந்து அர்ஜுனனைப்

---

1 வேறுபாடம்.

பூஜித்தார்கள். [1] பாத்யத்தையும் ஆசமனம் செய்யக்கூடிய ஜலத்தையும் ராஜகுமாரனான அர்ஜுனனைப் பெற்றுக்கொள்ளச்செய்து, பிறகு, இந்திரன் அரண்மனையில் பிரவேசிக்கச்செய்தார்கள். பாண்டவனான அர்ஜுனன் பிதாவானஇந்திரனுடையஅரண்மனையில் இவ்விதம் நன்குபூஜிக்கப்பட்டவனாகி அவனுடையகையிலிருந்து திருப்புமுறையுடன்கூடின பெரியஅஸ்த்ரங்களையும் அவனுக்குப்பிரியமானதும் பகைவரால் தாங்கமுடியாததுமான வஜ்ராஸ்திரத்தையும், அதிகநாதமுள்ளவையும் [2] மேகங்களையும் மயில்களையுங்கொண்டு அறியக்கூடியவையுமான அசனிகளையும் கற்றுக்கொண்டு வஸித்தான். பாண்டவனான அர்ஜுனன் அஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டு ஸகோதரர்களை நினைத்தான். இந்திரனுடைய உத்தரவின்படி ஸுகியாக(அங்கே) ஐந்துவருஷங்கள் வஸித்தான். பிறகு, இந்திரன் காலம்வந்தபோது அஸ்திரங்களைக்கற்றுக்கொண்ட அர்ஜுனனைநோக்கி, 'ஓ! கௌந்தேய! நர்த்தனத்தையும் பாட்டையும் சித்திரஸேனனிடமிருந்து அடைவாயாக. ஓ! கௌந்தேய! மனிதலோகத்திலில்லாததும் தேவர்களால் செய்யப்பட்டதுமான வாத்யத்தையும் அவனிடமிருந்தே கற்றுக்கொள். உனக்கு நன்மையுண்டாகும்' என்று சொன்னான். இந்திரன் இவனுக்கு நண்பனாகச் சித்திரஸேனனையும் கொடுத்தான். அந்த அர்ஜுனன் அவனுடன் சேர்ந்து கவலையற்றவனாகி மகிழ்ந்திருந்தான்.

(சித்ரஸேனன்) கீதத்தையும் வாத்யத்தையும் நர்த்தனத்தையும் அடிக்கடி உபதேசம்செய்தான். அவ்விதமிருந்தாலும் பலமுள்ள (அர்ஜுனன்) சூதாட்டத்தில் செய்யப்பட்டதை (நினைத்துக்கொண்டு) ஸுபலபுத்ரனான சகுனியையும் துச்சாஸனனையும் நாசம் செய்யவேண்டிக் கோபங்கொண்டு (மனத்தில்) ஸுகத்தையடையவில்லை. பிறகு, அவனுடன் சிற்சிலசமயத்தில் ஒப்பற்றபிரீதியையடைந்து கானத்தையும் ஒப்பற்றநர்த்தனத்தையும் வாத்தியத்தையும் கற்றுக்கொண்டான். பகைவீரர்களைக் கொல்லுகின்ற அவன் அநேகம் நர்த்தனகுணங்களையும் வாத்தியம் கீதம் இவைகளின் அர்த்தகுணங்கள் யாவற்றையும் கற்பிக்கப்

---

1 கால் அலம்பும்ஜலம்.

2 'அகாலத்தில் கிளம்பும் மேகங்களையும் கூத்தாடும் மயில்களையுங் காண்போர் வேறிடத்தில் அசனியஸ்திரம் பிரயோகிக்கப்பட்டிருக்கலாமென்று அவற்றைக்கொண்டு ஊகிக்கும்படியிருப்பவை' என்பது.

பெற்றுச் சகோதரர்களையும் மாதாவான குந்தியையும் நினைத்துக் கொண்டு (மனத்தில்) ஸுகத்தையடையவில்லை.

நாற்பத்துநான்காவது அத்யாயம்.

இந்திரலோகாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனனுக்கு விருப்பமிருப்பதாகக்கருதிய இந்திரன் சித்திர ஸேனனைக்கொண்டு ஊர்வசியை அர்ஜுனனிடம் அனுப்பியதும், அவள் அர்ஜுனன் இணங்காமையால் அவனைச் சபித்ததும், இந்திரன் அந்தச் சாபத்தை அஜ்ஞாதவாஸத்தில் உபயோகப் படும்படி மாற்றியதும்.)

ஒருசமயம் தேவஸ்ரேஷ்டனான அந்த இந்திரன் அர்ஜுனனுடைய பார்வை ஊர்வசியினிடம் பற்றினதை அறிந்து, சித்திரஸேனனை நோக்கி, ரகஸ்யத்தில், 'ஓ! கந்தர்வராஜனே! இப்பொழுது என்னால் அனுப்பப்பட்டு அப்ஸரஸுகளுள் சிறந்தவளான ஊர்வசியினிடம் போ. அவள் புருஷஸ்ரேஷ்டனான அர்ஜுனனை அடையவேண்டும். [1] அஸ்திரவித்தையைப் பெற்றவனும் எனது கட்டளையால் எல்லாராலும் பூஜிக்கப்பட்டவனுமான அர்ஜுனன் உன்னால் (காந்தர்வ)வித்தையில் ஸமர்த்தனுக்கப்பட்டது போலவே ஸ்திரீகளை அடைவதிலும் ஸமர்த்தனுகச் செய்யப்படவேண்டும்' என்று கூறினான்.

இவ்விதம் சொல்லப்பட்ட அந்தக் கந்தர்வராஜன், 'அப்படியே' என்றுசொல்லி இந்திரனிடமிருந்து விடைபெற்றுச் சிறந்த அப்ஸரஸான ஊர்வசியிடம் சென்றான். அவன் அவளால் அறிந்து வரவேற்று மரியாதை செய்யப்பெற்று ஸந்தோஷமடைந்து ஸுகமாக உட்கார்ந்து, ஸுகமாக வீற்றிருக்கும்அவளை நோக்கி, புன்சிரிப்பைமுன்னிட்டுக்கொண்டு, 'சிறந்தஇடையுள்ளவளே! உனக்கு மகிழ்ச்சியுண்டாக்குவதில் நாட்டமுள்ளவனும் தேவலோகத்துக்கு முக்கிய அரசனுமான இந்திரனால் நான் அனுப்பப்பட்டு இங்கு வந்தேனென்பதை நீ அறியக்கடவாய். உடன்பிறந்த குணங்களால் தேவர்களுள்ளும் மனிதர்களுள்ளும் கீர்த்திபெற்றவனும், செல்வத்தாலும் ஒழுக்கத்தாலும் அழகினாலும் கல்வியினாலும் பலத்தாலும் பிரஸித்திபெற்றவனும், தேகவலிமையும்மனவலிமையும்அமைந்தவ

---

1 வேறு பாடம்.

வனும், [1]பிரதிபையுள்ளவனும், தேஜஸுள்ளவனும், நல்லொழுக்கமுள்ளவனும், பொறுமையுள்ளவனும், பொறுமையைவென்றவனும், அங்கங்களுடனும் உபநிஷத்துகளுடனுங்கூடியவையும் இதிஹாஸத்தை ஐந்தாவதாகவுடையவையுமான நான்குவேதங்களையும் [2] எட்டுக்குணங்களை உண்டுபண்ணுபவையான குருசுஶ்ரூஷையையும் [3] மேதையையும் கற்றிருப்பவனும், ப்ரம்மசரியத்தாலும் ஸாமர்த்யத்தாலும் குலத்தாலும் பிராயத்தினாலும் ஒருவனாகவே இந்திரன் போலத் தேவலோகத்தைக் காக்கத்தக்கவனும், தன்னைப் புகழாதவனும், (பிறரை) மரியாதைசெய்பவனும், நுட்பமான விஷயங்களையும் ஸ்தூலமானவிஷயங்களைப்போல எளிதில் அறிபவனும், பிரியமாகப் பேசுகிறவனும், சிநேகிதர்களுக்குப் பலவிதமான அன்னபானங்களைப் பொழிகின்றவனும், மெய் பேசுகின்றவனும், [4]உறுதியுள்ளவனும், நன்கு பேசக்கூடியவனும், நல்ல ரூபமுள்ளவனும், அகங்காரமற்றவனும், அடுத்தவர்களிடத்தில் இரக்கமுடையவனும், ஸுகத்தைத்தருபவனும், பிரியமானவனும், சொல் தவறாதவனும், விரும்பத்தகுந்த குணக்கூட்டங்களால் இந்திரனுக்கும் வருணனுக்கும் ஒப்பானவனும், ஸ்வர்க்கமாகிற பலனையடைந்தவனும், வீரனுமான அந்த அர்ஜுனன் உன்னால் அறியப்பட்டவனே; இந்திரனால் உத்தரவுகொடுக்கப்பெற்று இப்பொழுது உன்னுடைய பாதங்களை அடையக்கடவன். ஓ! கல்யாணி! ஆகையால், அவ்விதம் செய்வாயாக. அர்ஜுனன் உன்னைச் சரணமடைந்திருக்கிறான்' என்ற வார்த்தையைச் சொன்னான்.

இவ்விதம் சொல்லக்கேட்ட குற்றமற்ற ஊர்வசியானவள் புன்னகை செய்து தன்னையும் புகழ்ந்து பிரீதியுள்ளவளாகிச் சித்திரஸேனனை நோக்கி மறுமொழி சொல்லலானாள். 'ஓ! குற்றமற்றவனே! நீ சொல்லிய இது உண்மையாக அவனுடைய குணத்

1 ஸமயத்தில் தோன்றும் அறிவு.

2 'பிரம்மசர்யம், ஸாமர்த்தியம், காத்தல், தன்னைப் புகழாமை, (பிறரை) மரியாதை செய்தல், ஸூக்ஷ்மமான விஷயங்களையும் ஸ்தூலமான விஷயங்களைப்போல எளிதில் அறிதல், பிரியமாகப் பேசுதல், நண்பர்களுக்கு உணவு முதலானவற்றை மிகுதியாக அளித்தல் ஆகிய எட்டும் சுஶ்ரூஷையின் குணம். மெய்பேசுதல், நன்குபேசுதல், நல்லரூபமுடைமை, அகங்காரமின்மை, அடுத்தவர்களிடம் தயையுடைமை, ஸுகத்தைத் தருதல், பிரியமுடைமை, சொல்தவறாமை ஆகிய எட்டும் மேதையின் குணம்' என்பது பழையவுரை.

3 கற்றது மறவாமை.

4 'பூஜித:' என்பது வேறு பாடம்.

தில் ஒருபாகமே. ஸ்திரீயானவள் அப்படிப்பட்ட அர்ஜுனனைப் பற்றிக்கேட்டு அவனைவிட வேறொருவனைப் பிரியனாகவிரும்புவளா? உன்வழியாக வந்த இந்திரனுடைய கட்டளையாலும் மிக்க காதலாலும் அர்ஜுனனுடைய குணக்கூட்டத்தாலும் நான் அவனிடத்தில் காமமுள்ளவளாக இருக்கிறேன். நீ போ. ஏனெனில், நான் இஷ்டப்படி ஸுகமாகவருவேன்' என்றாள். பிறகு, கந்தர்வனை அனுப்பிவிட்டு விருப்பம் கைகூடினவளும் அழகிய சிரிப்புள்ளவளுமாயிருக்கிற ஊர்வசியானவள் அர்ஜுனனை வேண்டுவதில் ஆசை கொண்டவளாகி ஸ்நானம் செய்தனள். அர்ஜுனரூபங்காரணமாக மன்மதனால் எய்யப்பட்ட பாணங்களினால் மிகஅடிக்கப்பட்ட மனத்தையுடையவளும் மன்மதனால் எரிக்கப்பட்டவளும் திவ்யமான மேல்விரிப்பினால் மூடப்பட்டதும் விரிவானதுமான உயர்ந்த படுக்கையில் மனத்தின் நினைவினால் அடையப்பட்ட அர்ஜுனனைத் தனது மனம் எண்ணியபடி, நல்லமனமுடையவளும் வேறிடத்தில் மனத்தைச் செலுத்தாதவளுமாகித் தனது ஸ்நானத்தாலும் அலங்காரத்தாலும் வேஷத்தாலும் சிறந்த வாஸனையுள்ள மாலைகளாலும் சந்தோஷிக்கச் செய்பவள் போன்றவளும் அழகிய இடையையுடையவளுமான அந்த ஊர்வசியானவள் பிரதோஷகாலங் கடந்து சந்திரன் உதயமாவதைக்கண்டு அர்ஜுனனுடைய பெரிய வீட்டைக் குறித்துப் புறப்பட்டாள். போகின்றவளும் மகிழ்விக்கும் தன்மையுடையவளுமான அவள் மெல்லியதும் சுருண்டதும் நீண்டதும் சிறந்த மலர்களை அணிந்ததுமான கூந்தலுடன் புருவத்தை அசைத்தலாலும் பேச்சினாலும் ச்ருங்காரசேஷ்டைகளாலும் காந்தியாலும் அழகினாலும் முகசந்திரனால் சந்திரனைச் (சண்டைக்கு) அழைப்பவள்போல விளங்கினாள். திவ்யமான பூச்சுடையவையும் அழகிய நுனியுள்ளவையும் திவ்ய சந்தனத்தால் பூசப்பெற்றவையும் ஹாரத்தால் அழகியவையுமான போகின்ற அவளுடைய ஸ்தனங்கள் அசைந்தன. அவள் ஸ்தனங்களைச் சுமக்கும் கஷ்டத்தால் அடிதோறும் அடிதோறும் 1 துவளுகிறவளாகி மூன்றுமடிப்புக்களாகிற அணிகளால் மிக அழகாக விளங்குகின்ற இடையுள்ளவளாக இருந்தனள். 2 மலையின் தாழ்வரைபோல அகன்றதும், உயர்ந்தும் பருத்துமுள்ள நிதம்பத்தையுடையதும், சுத்தமானதும், மேகலையால் அலங்கரிக்கப்பட்டதும், தேவலோகத்திலுள்ள ரிஷிகளின் மனத்தையும் கெடுப்பதற்

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

குக் காரணமாவதும், மெல்லிய உடைதரித்ததும், குற்றமற்றதும், மன்மதனுடைய வீடுமான ஜகனமும் பிரகாசித்தது. இவளுடைய பாதங்கள், மறைந்த பரடுகளுள்ளவையும் சிவந்த உள்ளங்கால்களும் நீண்ட விரல்களுமுள்ளவையும் ஆமைமுதுகுபோலுயர்ந்தவையும் சலங்கைகளின் வடுக்களுள்ளவையுமாக விளங்கின. அவள் சிறிதான மதுபானத்தாலும் மன்மதனுலும் சந்தோஷத்தையடைந்தவளும் பலவகையான விளையாட்டுக்களாலும் மிகப் பார்க்கத்தக்கவளுமாயினள். ஊர்வசியானவள் மிகுந்த ஆச்சரியமுள்ள ஸ்வர்க்கத்திலும் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் கந்தர்வர்களாலும் ஸாத்தியர்களாலும் பார்க்கத்தக்க வடிவமுள்ளவளாகச் சென்முள். மிக மெல்லியதும் மேகம்போன்ற நிறமுள்ளதும் விளங்குகின்றதுமான மேலாடையால் ஆகாயத்தில் சிறிய மேகத்தால் மறைக்கப்பட்ட சந்திரகலைபோலப் போனுள். பிறகு, தீவினைசெய்தவர்களால் மனத்தாலும் அடைய முடியாதவளும் அழகிய புன்னகையுள்ளவளுமான (அவள்) பாண்டு புத்திரனை அர்ஜுனனுடைய வீட்டை அடைந்தாள். ஓ! நரஸ்ரேஷ்டரே! அழகிய கண்ணுள்ள ஊர்வசியானவள், அவ்விடத்தே வாயிலை அடைந்து வாயில் காப்போரால் அர்ஜுனனுக்குத் தெரிவிக்கப் பட்டு, நன்கு மனத்தைக் கவரக்கூடியதும் அழுக்கற்றதுமான அந்த வீட்டினுள் சென்முள். அரசரே! அந்த அர்ஜுனன் ராத்ரியில் அந்த ஊர்வசியைப் பார்த்து மனத்தில் ஐயத்துடன் 'வெட்கத்தினல் கண்களை மூடிக்கொண்டு அவளை எதிர்கொண்டு சென்முன்; (அவளுக்கு) நமஸ்காரத்தைச்செய்து குருவினிடத்திற்போல மரியாதைசெய்தான்.

அர்ஜுனன், 'உத்தமமான அப்ஸரஸுகளுள் சிறந்தவளே! உன்னைத் தலையால் வணங்குகிறேன். நீ வந்த காரியம் என்ன? யாவற்றையும் உள்ளபடி சொல்லுவாய். ஓ! தேவி! என்ன கட்டளையிடுகிறுய்? நான் உனக்கு வேலைக்காரனுகி வந்திருக்கிறேன்' என்று சொன்னுன். அப்பொழுது, குறிப்பறிந்த ஊர்வசியானவள் அர்ஜுனனை ஆசையற்றவனுக அறிந்து கந்தர்வன் சொன்னதையெல்லாம் அவனிடத்தில் சொல்லலானுள்.

ஊர்வசி, 'ஓ! மனிதருட்சிறந்தவனே! சித்திரஸேனன் எனக்கு என்னகாரணத்துடன் சொன்னுன் என்பதையும் நான் இங்கு என்ன காரணத்துடன் வந்தேனென்பதையும் உனக்கு நான் சொல்லுகிறேன். மனிதருட் சிறந்தவனே! இந்திர குமாரனே!

விசாலமான கண்களையுடையவனே! குருகுலத்தைத் தாங்குப வனே! பார்த்த! உன்னுடைய வரவின் ஸந்தோஷத்தால் ஸ்வர்க் கத்தில் பெரிய உத்ஸவமானது நடக்கையில், அழகான இந்திர ஸேவையில், ருத்ரரும் ஆதித்யருமாகிய யாவரும் வந்தும், அச் வினீ தேவதைகளும் வஸுக்களும் வந்துசேர்ந்தும், மஹரிஷிக் கூட்டங்கள் சிறந்த ராஜரிஷிகள் ஸித்தர் சாரணர் யக்ஷர் பெரிய நாகர்களின் கூட்டங்கள் ஆகிய யாவரும் ஸ்தானத்துக்கும் கௌர வத்திற்கும் மஹிமைக்கும் தக்கபடி உட்கார்ந்து அக்கினியும் சந்திர னும் சூரியனும்போன்ற சரீரங்களுடன் ஐச்வரியத்தால் பிரகாசித் தும், கந்தர்வர்களால் வீணைகள் வாசிக்கப்பட்டும், தேவலோகத்தி லுள்ள மனத்திற்குப்பிடித்த கானம்தொடங்கியும் முக்கியமான எல்லா அப்ஸரஸுகளும் நர்த்தனம் செய்யும்போது, நீ அங்கே இமைக்கொட்டில்லாதவனாகி என்னை ஒருத்தியையே பார்த்தா யன்றோ? தேவலோகத்திலுள்ளவர்களின் அந்த ஸேவை முடிவ டைந்தபோது, தேவர்கள் உன் பிதாவினால் விடையளிக்கப்பட்டுத் தமது இருப்பிடங்களை அடைந்தார்கள். அப்படியே, சிறந்த அப் ஸரஸுகளெல்லாரும் தம்தம் வீட்டை அடைந்தார்கள். ஓ! பகைவ ரைக் கொல்பவனே! பின்னும் மற்ற அப்ஸரஸுகளும் உன் பிதா வினால் அனுப்பப்பட்டார்கள். தாமரையிதழ்போன்ற கண்ணுள் ளவனே! பிறகு, சித்ரஸேனன் இந்திரனால் அனுப்பப்பட்டு என் அரு கில்வந்து தானாகவே என்னைநோக்கிக் கூறலானான். 'ஓ! ஸ்திரீகளுள் சிறந்தவளே! நான் உனக்காக இந்திரனால் அனுப்பப்பட்டேன். இந்திரனுக்கும் எனக்கும் உனக்குமே ப்ரியத்தைச் செய்வாயாக. அழகிய பின்தட்டுள்ளவளே! இந்திரனுக்கொப்பானவனும் யுத்தத் தில் சூரனும் ரூபம் உதாரத்தன்மை (முதலிய) குணங்களுடன்கூடி னவனுமான அர்ஜுனனை நீ ப்ரார்த்திப்பாயாக' என்று இவ்விதம் அப்பொழுது சொன்னான். ஓ! குற்றமற்றவனே! பகைவரை அடக்கு பவனே! பிறகு, நான் அந்த உன் பிதாவினால் கட்டளையிடப்பட்ட வளாகி உன்னிஷ்டப்படி நடப்பதற்காக உன் சமீபம் வந்தேன். ஓ! வீர! இந்திரனால் அனுப்பப்பட்டுமட்டும் நான் இங்கு வந்தவ ளல்லேன். இந்த விருப்பமானது என்னுடைய வெகுகாலமாக விரும் பப்பட்டதே' என்றாள். தேவனுக்கு ஒப்பான அர்ஜுனன், அவள் அவ்விதம் சொல்லியதைக் கேட்டு, மிக்க லஜ்ஜையுள்ளவனாகிக் கைகளால் காதுகளைப் பொத்திக்கொண்டு சொல்லலானான். 'அழ கிய அங்கமுள்ளவளே! காந்தியுள்ளவளே! சிறந்த முகமுள்ள

வளே! நீ என்னை நோக்கிச்சொல்லுகிறது எனக்குக் கேட்கத் தகாததாகும். எனக்கு நீ குருபத்னிக்கு ஒப்பானவள்; நிச்சயம். அழகிய நீ எனக்கு அதிக பாக்யமுள்ள குந்தியையும் சுத்தையான இந்திராணியையும் போன்றவளே. இவ்விஷயத்தில் ஆலோசனை செய்யத்தக்கதில்லை. ஓ! நல்லவளே! நல்ல சிரிப்புள்ளவளே! நீ என்னால் விசேஷமாகவும் வெளிப்படையாகவும் பார்க்கப்பட்டதற்குரிய காரணங்களனைத்தையும் உண்மையாக என்னிடமிருந்து கேள். 'நல்ல தந்தங்களுள்ள இவள் பௌரவ வம்சத்திற்கே தாய்' என்று அப்பொழுது நான் ஆச்சரியத்தால் மலர்ந்த கண்ணுள்ளவனுகி உன்னைப் பார்த்தேன். ஓ! அப்ஸரஸே! கல்யாணி! என்னை வேறுவிதமாக எண்ணத்தக்கவளல்லை. நீ எனக்குக் குருவுக்கும் மேலான குருவாயிருப்பவள். நீ என்னுடைய வம்சத்தை விருத்தி செய்தவள்' என்றான்.

ஊர்வசி, 'ஓ! தேவராஜன் புத்திரனே! நாங்களனைவரும் கட்டுப்பாடில்லாதவர்களாயிருக்கிறோம். ஓ! வீர! நீ இப்பொழுது என்னைக் குருஸ்தானத்தில் வைப்பது தகாது. தந்தைகளோ ஸகோதரர்களோ புத்திரர்களோ பேரன்மாரோ, தவத்தால் இங்கு வந்தவர்கள் எங்களைச் சேருகின்றார்கள். அவர்களுக்கு (அது) குற்றமன்று. மானத்தைக் கொடுப்பவனே! ஆகையால், தயைசெய். பீடிக்கப்பட்ட என்னை விடுவது தக்கதன்று. மன்மதனால் மிக வாட்டப்பட்டவளும் அடுத்தவளுமான (என்னை) அடை' என்று சொல்லினள். அர்ஜுனன், 'ஓ! குற்றமற்றவளே! அழகிய தொடைகளையுடையவளே! உன்னை நோக்கி உண்மையாகச்சொல்வதைக் கேள். தேவதையுடன் கூடின திக்குக்களும் மூலைத்திசைகளும் என்னிடமிருந்து கேட்கக்கடவன. எவ்விதம் எனக்குக் குந்தியும் மாத்ரியும் இங்கு (உள்ள) சசியும் (தாய்முறையில்) ஸமமோ அவ்விதமே நீயும். மேலும், வம்சத்திற்கே தாயான நீ இப்பொழுது எனக்கு மிகப்பெரியவளுமாகிறாய். ஓ! உத்தமமானவளே! உன்னுடைய பாதங்களைத் தலையால் வணங்கினவனாயிருக்கின்றேன். போவாயாக. நீயோ என்னால் தாயைப்போலப் பூஜிக்கப்படத்தகுந்தவள். நான் உன்னால் பிள்ளைபோல ரக்ஷிக்கப்படத்தகுந்தவன்' என்றான். பிறகு, அர்ஜுனனால் அவமதிக்கப்பெற்ற ஊர்வசியானவள் கோபத்தால் கலங்கினவளும் துடிக்கிறவளுமாகிப் புருவத்தைக் கோணலாக்கிக்கொண்டு, அர்ஜுனனைச் சபித்தாள். அவள், 'உன்பிதாவினால் கட்டளையிடப்பட்டவளும், உன்வீட்டை நோக்கி

வலியவந்தவளும், காமபாணத்திற்கு வசமானவளுமான என்னை மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளாமையால், நீ மாதர்களின் நடுவில் கௌரவமில்லாதவனும் நர்த்தகனும் ஆண்தன்மையில்லாதவனென்று பிரஸித்தி பெற்றவனுமாகிப் பேடிபோலத் திரிவாய்' என்றாள்.

இவ்விதம் அர்ஜுனன்விஷயத்தில் சாபத்தைக் கொடுத்த பிறகு, உதடுகள் துடிப்பவளாகிப் பெருமூச்செறிந்துகொண்டு ஊர்வசி திரும்பவும் தன்வீட்டை நோக்கி விரைவாக வந்தனள். அர்ஜுனனும் அந்தச் சாபத்தையடைந்து சந்தோஷமில்லாதவனுகக் காலையில் எல்லாவற்றையும் சித்ரஸேனனுக்குச்சொல்ல விருப்பமுள்ளவனாகி அந்த இரவு முழுவதும் துயரத்துடன் வஸித்தான். பிறகு, அர்ஜுனன், காலையில் வெளிச்சமானவுடன், கந்தர்வனான சித்திரஸேனனுக்கு (அவற்றை) உள்ளபடி அப்பொழுது தெரிவித்தான். சித்திரஸேனனும் நடந்தபடி அவையாவற்றையும் சாபத்தையும் முழுமையும் உண்மையாக இந்திரனுக்குத் தெரிவித்தான். அப்பொழுது, இந்திரனும் புத்திரனை ஏகாந்தத்தில் வருவித்து, அழகிய வார்த்தைகளால் தேறுதல் செய்து புன்சிரிப்புள்ளவனாகி, 'ஐயனே! மிகமேலானவனே! புத்திரனான உன்னால் இப்போது குந்தி நல்லபுத்திரனை உடையவளானாள். ஓ! பெரியகையுள்ளவனே! உனது தைரியத்தால் ரிஷிகளும் ஜயிக்கப்பட்டார்களல்லரோ? கௌரவத்தைக்கொடுப்பவனே! ஐயா! ஊர்வசி உனக்குக்கொடுத்த சாபமும் உனக்குப் பிரயோஜனத்தைச் செய்வதும் ஸாதகமுமாகும். குற்றமற்றவனே! வீர! பூதலத்தில், நீங்கள் (வனத்துக்கு வந்த) பதின்மூன்றாவது வருஷத்தில் அஞ்ஞாதவாஸம் செய்ய வேண்டும். அப்பொழுது, இந்தச் சாபத்தை நீ போக்குவாய். அந்த நட்டுவவேஷத்துடனும் அப்படியே அலித்தன்மையுடனும் ஒருவருஷம்முழுவதும் திரிந்து, பிறகு, ஆண்தன்மையை அடைவாய்' என்று கூறினன். இவ்விதம் இந்திரனால் சொல்லப்பட்டவனும் பகைவீரர்களைக் கொல்லுகிறவனுமான அர்ஜுனன் மேலானசந்தோஷத்தை அடைந்தான். சாபத்தைப்பற்றியும் மிகக் கவலைப்படவில்லை. அந்தப் பாண்டுபுத்திரனான அர்ஜுனன் கீர்த்தியுள்ள சித்திரஸேனகந்தர்வனுடன்கூடி ஸ்வர்க்கமாளிகையில் மகிழ்ந்திருந்தான். இந்தஅர்ஜுனனுடைய உறுதியை எப்பொழுதும் கேட்பவனுக்குப் பாவத்தைத்தரக்கூடிய (தகாதவிடத்துக்) காமங்களில் ஆசை உண்டாகாது. இந்திரபுத்திரனான அர்ஜுனனுடைய இந்தக் கடுமையானதும் சுத்தமுமான சரித்திரத்தைக்

கேட்டு, அரசர்கள் மதம், கர்வம், ஆசை ஆகிய தோஷங்களற்றவர்களாகி ஸ்வர்க்கத்தை அடைந்து மகிழ்கிறார்கள்.

நாற்பத்தைந்தாவது அத்யாயம்.

இந்திரலோகாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(இந்திரன் ஸ்வர்க்கத்துக்கு வந்த லோமசருக்கு அர்ஜுனனுடைய மகிமையைக்கூறி அவனது வரலாற்றை யுதிஷ்டிரருக்குத் தெரிவிக்கும்படி அவரை வேண்டினது.)

[1] பிறகு, ஒருசமயம் (உலகங்களில்) ஸஞ்சரிக்கும் லோமசரென்ற மஹரிஷி இந்திரனைப்பார்க்கவிருப்பம்கொண்டு இந்திரன் வீட்டை அடைந்தார். அந்த மஹாமுனிவர் வந்து தேவராஜனை வணங்கி இந்திரனுடைய பாதிஆசனத்திலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்தார். பிறகு, பிராம்மணஸ்ரேஷ்டர் மஹரிஷிகளால்பூஜிக்கப்படுகிறவராகி இந்திரனால் அனுமதிகொடுக்கப்பெற்றுத் தர்ப்பாஸனம் விரித்துள்ள ஆசனத்தில் உட்கார்ந்தார். இந்திரனுடைய ஆசனத்திலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து, 'க்ஷத்திரியனான அர்ஜுனன் இந்திராசனத்தை எவ்விதம் அடைந்தான்? இவனுடைய புண்ணிய கர்மமென்ன? (இவனால்) எந்த லோகங்கள் ஜயிக்கப்பட்டன? தேவர்களால் நமஸ்கரிக்கப்பட்ட ஸ்தானத்தை அவன் இவ்விதம் அடைந்திருக்கின்றானே?' என்று அவருக்கு எண்ணமுண்டாயிற்று. வ்ருத்திரனைக்கொன்றவனும் சசியின்பதியுமான இந்திரன் லோமசருடைய கருத்தையறிந்து சிரித்துக்கொண்டு அவரை நோக்கி இந்த வார்த்தையைச் சொல்லலானான். 'ஓ! தேவரிஷியே! நீர் மனத்தில் அறிய விரும்பியதைக் கேளும். இவன் கேவலம் மனிதனல்லன். மகரிஷியே! க்ஷத்ரியத்தன்மையடைந்தவனும் நீண்ட கைகளையுடையவனுமான இவன் குந்தியினிடத்தில் எனக்குப் பிறந்த புத்திரன். வேறு ஒருகாரணத்தால் அஸ்திரத்துக்காக இங்கு வந்திருக்கிறான். பழைய சிறந்த ரிஷியான இவனை நீர் தெரிந்துகொள்ளவில்லை. ஆச்சரியம். இவன் யாரென்பதையும் இங்கு வரக்

---

1 முன் நாற்பத்துமூன்றாவது அத்தியாயத்தில் 33-வதுஸ்லோகமுதலுள்ள எட்டுஸ்லோகங்களை இவ்வத்தியாயத்தின் முதலில் அதிகபாடமாகப் போடப்பட்டிருத்தலாலும் இவை வ்யாக்யான புத்தகத்தில் இந்த இடத்தில் இல்லாமையாலும் விடப்பட்டன. 165-ம் பக்கம் 32-வது வரி முதல் 166-ம் பக்கம் 21-வது வரிவரை பார்க்க.

காரணம் யாதென்பதையும் சொல்லுகின்ற என்னிடம் கேளும். நரநாராயணர்களென்னும் பேர்பெற்ற பழைய சிறந்த ரிஷிகளே இந்தக் கிருஷ்ணார்ஜுனர்கள் என்று அறியக்கடவீர். மூவுலகிலும் புகழ்பெற்ற அந்த நரநாராயணரிஷிகள் காரியத்திற்காகப் புண்ணியத்திற்கு இருப்பிடமான பூமியில் அவதரித்தனர். அந்தணரே! தேவர்களாலோ மஹாத்மாக்களான ரிஷிகளாலோ பார்க்கமுடியாததும் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பெற்ற கங்கை பெருகுமிடமும் பதரியென்று பெயர்பெற்றதும் புண்யமுமான ஆஸ்ரமபதம் விஷ்ணுவுக்கும் அப்படியே அர்ஜுனனுக்கும் வஸிக்குமிடமாயிருந்தது. ஓ! ப்ரம்மரிஷியே! அதிக வீர்யமுள்ளவர்களும் மிக்க காந்தியுள்ளவர்களுமான அவர்கள் என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கிப் பூமியில் பிறந்து பூமியினது பாரத்தைக் குறைக்கப்போகின்றார்கள். வரங்களை அடைந்தமையால் மயங்கினவர்களும் நமக்குத் தீங்கிழைப்பவர்களுமான நிவாதகவசர்களென்ற சில அஸுரர்கள் கெட்ட நடையுடையவர்களும் பலத்துடனும் கொழுப்புடனுங் கூடினவர்களுமாகித் தேவர்களைக்கொல்ல எண்ணுகிறார்களன்றோ? பாதாளவாஸிகளும் குரூரர்களும் அதிக பலமுள்ளவர்களும் தனுவின் புத்திரர்களும் அப்படி வரம்பெற்றவர்களுமான அவர்கள் தேவர்களை மதிக்கவில்லை. அவர்களை எல்லாத் தேவர்களின்கூட்டங்களும் எதிர்க்கச்சக்தியற்றவை. விபுவே! பூமியையடைந்தவரும் லக்ஷ்மியுடன் கூடியவரும் மதுவைக் கொன்றவரும் ஹரியும் ஜயிக்கப்படாதவரும் பகவானுமான இந்த விஷ்ணு, பாதாளத்தைத் தோண்டுகிறவர்களும் மிக்க உறுதியுள்ளவர்களுமான ஸகரபுத்திரர்களை முன்பு பார்வையினாலேயே கொன்ற கபிலர் என்று பெயர்பெற்ற தேவராகஇருக்கிறார். ஓ! த்விஜஸ்ரேஷ்டரே! பெரியயுத்தத்தில், சேர்ந்தவர்களான அந்தக் கிருஷ்ணார்ஜுனர் இருவராலும் நமக்குப் பெரியகார்யம் செய்யவேண்டியிருக்கிறது. ஸந்தேகமில்லை. அந்த அர்ஜுனன் பரிவாரத்துடன் கூடின நிவாதகவசர்களென்கிற அஸுரர்களனைவரையும் பெரியமடுவில் நாகங்களைக்கொல்வதுபோலப் பார்வையினாலேயே கொல்லச் சக்தியுள்ளவன். ஆதலால், பலம் மிகத்திரண்டிருக்கும் மதுஸூதனர் அல்பகாரியத்திற்காக அறிவிக்கப்படத்தகுந்தவரல்லர். அறிவிக்கப்பட்டால் உலகத்தை நன்கு எரித்துவிடுவார். அந்த எல்லா நிவாதகவசர்களையும் எதிர்ப்பதில் வல்லவனான இந்தச்சூரன் அவர்களைச் சண்டையில்கொன்று திரும்பவும் மனிதலோகத்தை அடை

வான். நீர் நமதுஉத்தரவினால் பூதலத்தையடைவீராக. காம்யக வனத்தில் வஸிக்கின்ற வீரனையுதிஷ்டிரனைப் பார்ப்பீர். சொல் தவறாதவனும் தர்மத்தில்மனமுள்ளவனுமான அவனிடம் எனது வார்த்தையால், 'அர்ஜுனன்விஷயத்தில் கவலைவேண்டாம்; அஸ்திரங்களைப்பெற்றுக்கொண்டு திரும்பிவருவான். யுத்தத்தில், பீஷ்மர் துரோணர்முதலியோர் சுத்தமான தோள்வலிமையில்லாதவனாலும் அஸ்திரங்களில் தேர்ச்சியில்லாதவனாலும் போரில் எதிர்த்து நிற்கமுடியாதவர்கள். அஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டவனும் நல்லமனமுள்ளவனும் பெரியதோளுள்ளவனுமான அர்ஜுனன் தேவலோகத்திலுள்ள நர்த்தனம், வாத்யம், கீதம் இவைகளின்கரையை அடைந்தான். மனிதர்களுக்குஈச்வரனே! பகைவர்களை அடக்குகிறவனே! நீயும் எல்லாச் சகோதரர்களுடனும் புண்ணியமான தீர்த்தங்களைப் பார்க்கக்கடவாய். கவலையற்றுப் புண்ணியதீர்த்தங்களில் முழுகிப் பாவமற்றவனும் கலக்கமற்றவனும் ஸுகியுமாகித் தர்மமாக ராஜ்யத்தை அனுபவிப்பாய்' என்று சொல்லவேண்டும். ஓ! த்விஜ ச்ரேஷ்டரே! பிராம்மணர்களில் முதன்மையானவரே! தபோபலத்துடன்கூடின நீரும் பூதலத்தில் ஸஞ்சரிக்கும் அவனைக் காக்கவேண்டும். மலைகளில் செல்லமுடியாத இடங்களிலும் மேடுபள்ளமான இடங்களிலும் குரூரர்களான ராக்ஷஸர்கள் எப்பொழுதும் வஸிக்கின்றார்கள். அவர்களிடமிருந்து காப்பாற்றுவீராக' என்றான்.

இவ்விதம் இந்திரனால் சொல்லப்பட்டவுடன், அர்ஜுனனும், அடக்கமுள்ளவனாகி லோமசரைநோக்கி, 'தர்மபுத்திரரைக் காப்பாற்றும். ஸாதுச்ரேஷ்டரே! மஹாமுனிவரே! உம்மால் காக்கப்பட்ட அரசர் தீர்த்தங்களில் ஸஞ்சரிக்கும்படியும் தானத்தைச் செய்யும்படியும் செய்வீராக' என்ற சொல்லைச் சொன்னான். மிகப் பெரியதவமுள்ளவரான லோமசர், 'அவ்விதமே ஆகுக' என்று ஒத்துக்கொண்டு காம்யகவனம் (செல்லக்) கருதிப் பூதலத்தைஅடைந்தார்; அவ்விடத்தில் தவசிகளாலும் சகோதரர்களாலும் நான்கு பக்கத்திலும் சூழப்பட்டவரும் பகைவரை அடக்குகிறவரும் குந்திபுத்திரருமான தர்மராஜரைப் பார்த்தார்'' என்றார்.

நாற்பத்தாறுவது அத்யாயம்.

இந்திரலோகாபிகமன பர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரன் அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றது ஸ்வர்க்கலோகம் போனது முதலியவற்றைக் கேட்டுத் துரியோதனுதியரைப்பற்றி ஸஞ்சயனிடம் புலம்பியது.)

ஜனமேஜயர் சொல்லலானார். "அளவற்ற தேஜஸுள்ள அர்ஜுனனுடைய அதிக ஆச்சரியமான இந்தக்கார்யத்தை அவ்விடத்தில் மிக்கபலவானான திருதராஷ்டிரன் கேட்டு என்ன சொன்னான்?" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

"அம்பிகா புத்திரனான திருதராஷ்டிரன், அர்ஜுனன் இந்திரலோகம் சென்றதாக ரிஷிஶ்ரேஷ்டரான வியாஸரிடமிருந்து கேட்டு ஸஞ்சயனைநோக்கி (ப்பின்வருமாறு) வார்த்தையைச் சொல்லத்தொடங்கினான். 'ஓ! ஸூத! ஸாரதியே! புத்திமானாகிய அர்ஜுனனுடைய கார்யம் முழுவதும் என்னால் கேட்கப்பட்டது. உண்மையாகவே உனக்கும் தெரிந்திருக்குமே. கிராம்ய தர்மங்களில் மிகமயங்கியவனும் மந்தபுத்தியுள்ளவனும் பாவத்தில் நிச்சயமுள்ளவனும் மிக்க கெட்டபுத்தியுள்ளவனுமான என்புத்திரன் பூமியை நாசம்செய்யப்போகிறான். எந்த மஹாத்மாவினுடைய வார்த்தைகள் தற்செயலாக(ச் சொல்லப்பட்ட)போதும் எப்பொழுதும் ஸத்தியமாகவேயிருக்கின்றனவோ, எவனுக்காகச் சண்டைசெய்பவன் அர்ஜுனனோ அந்தத் தர்மபுத்திரனுடையதே இந்த மூவுலகமும் ஆகும். கூர்மையான முனையுள்ளவையும் சாணையில் தீட்டப்பட்டவையுமான கர்ணிகளையும் நாராசங்களையும் விடுகின்ற அர்ஜுனனுக்கு எதிரில் மூப்பில்லாத யமனும் நிற்கமாட்டான். எவர்களுக்கு எதிர்க்கப்படுதற்கரியவர்களான பாண்டவர்களுடன் யுத்தம் நேர்ந்திருக்கின்றதோ அந்தக் கெட்டஎண்ணமுள்ள என்புத்திரர்கள் யாவரும் யமன்வசத்தை அடைந்தவர்களே. யுத்தகளத்தில் காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அந்த அர்ஜுனனுடைய சண்டையில் அவனை எதிர்ப்பவனை எப்பொழுதும் ஆலோசனைசெய்தும் நான் காணவில்லை. யுத்தத்தில் துரோணகர்ணர்களோ அல்லது பீஷ்மரோ எதிர்ப்பார்களானாலும் உலகத்தில் (உலகம் நிலைக்குமோ அழியுமோ என்ற)

பெரிய சந்தேகம் உண்டாகும். (ஆயினும்) நமக்கு ஜயத்தை நான் பார்க்கவேயில்லை. கர்ணன் அஜாக்ரதையும் தயையுமுள்ள வன். குருவான துரோணரும் முதியவர். அர்ஜுனன் கோப முள்ளவன்; பலவான்; சுறுசுறுப்புள்ளவன்; உறுதியான பராக் கிரமமுள்ளவன். [1] எல்லாவிதத்திலும் அபஜயமற்ற மிக்க நெருக் கமான சண்டை உண்டாகும். ஏனெனில், யாவரும் அஸ்திரமறிந் தவர்; சூரர்; யாவரும் மிக்க கீர்த்தியையடைந்தவர்கள்; [2] தோற்று எல்லாவற்றுக்குந் தலைவனுயிருக்கும் தன்மையையும் விரும்பார்க ளன்றோ? இவர்களுக்காவது அர்ஜுனனுக்காவது வதம் நேருங் காலத்தில்தான் ஓய்வு உண்டாகும்;இதுநிச்சயம். ஆனால், அர்ஜுன னைக்கொல்லுகிறவன் இல்லை. அவனை ஜயிக்கிறவனுமில்லை. மந்தர்க ளைக்குறித்துண்டான அந்த அர்ஜுனனுடைய கோபம் எவ்விதம் தணியும்? தேவேந்திரனுக்கொப்பான அந்த வீரன் காண்டவ வனத்தில் அக்னியைத் திருப்திஅடைவித்தான். ராஜஸூயமென்ற பெரிய யாகவிஷயத்தில் எல்லா அரசர்களையும் ஜயித்தான். ஓ! ஸஞ்சய! ஐயனே! மலையின் தலையில் விழுந்த வஜ்ராயுதம் மிச்சம் வைக்கும்; அர்ஜுனனால் போடப்பட்ட பாணங்கள் மிச்சமே வையா. சூரியனுடைய கிரணங்கள் இங்கு ஸ்தாவர ஜங்கமங்க ளான பொருள்களை எரிப்பதுபோல அர்ஜுனனது கையால்விடப் பட்ட பாணங்கள் என் புத்திரர்களை எரிக்கும். ஸவ்யஸாசியான அர்ஜுனனுடைய அந்தத் தேரின் சப்தத்தினாலுண்டான பயத் தால் பீடிக்கப்பட்ட பாரத சைனியமானது நான்குபக்கத்திலும் பிளக்கப்பட்டதுபோலத் தோன்றுகின்றது. யுத்தத்தில் பாணங் களை எடுத்து இறைப்பவனும் கொல்லுதற்கு முயன்றவனுமான அர்ஜுனன், பிரம்மாவினால் யாவற்றையும் நாசம்செய்கிறவனாகப் படைக்கப்பட்ட யமன்போலத் தடுக்கமுடியாதவனாக நிற்பவனே ஆவன்' என்றான்.

ஸஞ்சயன் சொல்லலானான். 'ஓ! அரசரே! பூமிக்குப் பதியே! நீர் துர்யோதனனைக் குறித்து இவ்விதம் சொல்லியவை யாவும் உண்மையே; பொய்யல்ல. அரசரே! மஹாராஜரே! கீர்த்தி பெற்ற தர்மபத்னியான திரௌபதி, ஸபையில் இழுக்கப்பட்ட தைப் பார்த்தும், கடுமையாகக் கிளம்பும் துச்சாஸனன் கர்ணன் இவர்களுடைய அந்தச் சொற்களைக் கேட்டும், கோபத்துடன்

1 வேறு பாடம். 2 'எல்லாவற்றுக்கும் தலைவனுயிருக்கும் தன்மை கிடைத்தாலும், தோல்வியை விரும்பார்கள்' என்பது.

கூடினவர்களும் அதிக சக்தியுள்ளவர்களுமான பாண்டவர்கள் தூங்காரென்பது என்னுடைய எண்ணம். ஓ! மகாராஜரே! பதினொரு சரீரமுள்ளவரும் எல்லாத் தேவர்களுக்கும் ஈசரும் பகவானும் சடைமுடியுள்ளவருமான பரமசிவன் அர்ஜுனனை அறிந்துகொள்ளவேண்டி வேடன்வேஷத்தையடைந்து தாமே சண்டைசெய்ததையும் சண்டையில் அர்ஜுனன் ஈஸ்வரரை வில்லால் மகிழ்வித்ததையும் அதிக காந்தியுள்ள அவன் பாசுபதமென்னும் சிறந்த அஸ்திரத்தை அடைந்ததையும் அப்பொழுது அஸ்திரத்திற்கு வேண்டித் தவத்தினால் முயன்ற கௌரவஸ்ரேஷ்டனான இந்த அர்ஜுனனுக்கு அந்த லோகபாலர்கள் காட்சியளித்ததையும் நீர் கேட்டிருக்கிறீர். உலகில் அர்ஜுனனைத் தவிர மற்ற மனிதன் இந்த ஈஸ்வரர்களுடைய பிரத்யக்ஷ தரிசனத்தை அடைவதற்கு நினைக்கவுமாட்டான். ஓ! அரசரே! எந்த அர்ஜுனன் மஹேஸ்வரரால் விழுங்க (=கட்ட)ப் பெற்ற சரீரமுள்ளவனாகியும் ஜீர்ணத்தை (=முடிவை)அடையவில்லையோ அவனை யுத்தத்தில் வெல்வதற்கு வீரனான எந்த ஆண்பிள்ளை உத்ஸாஹமுள்ளவனாவன்? திரௌபதியை நான்குபக்கத்திலும்இழுக்கிறவர்களும் பாண்டவர்களைக் கோபிக்கச் செய்கிறவர்களுமான (உமது புத்திரர்களால்) மயிர் பொடித்தலை உண்டுபண்ணக்கூடியதும், நெருக்கமானதும், துரியோதனனால் திரௌபதிக்கு (த் தட்டி)க் காட்டப்பட்ட இரண்டுதொடைகளையும் கண்டு பீமன் துடிக்கும் உதடுள்ளவனாகி, 'பாவி! கபடமாகச் சூதாடுகின்ற உன்னுடைய தொடைகளை வஜ்ரத்திற்கொப்பான கதையென்னும் ஆயுதத்தால் பதின்மூன்று வருஷங்களுடைய முடிவில் பிளக்கப்போகின்றேன்' என்று அர்த்தமுள்ள வார்த்தையைச் சொல்லியதுமான இந்தக் கோரமானது அடையப்பட்டது. யாவரும் அடிப்பவர்களுள் சிறந்தவர்கள்; யாவரும் அளவற்ற பராக்கிரமமுள்ளவர்கள்; யாவரும் எல்லா அஸ்திரங்களையும் அறிந்தவர்கள்; தேவர்களாலும் ஜயிக்கமுடியாதவர்கள். வீர்யத்துடனும் பகைவரைப் பொறாமையுடனுங் கூடின பார்த்தர்கள் கோபம் மூண்டவர்களாகி யுத்தத்தில் உமது புத்திரர்களுடைய நாசத்தைச்செய்வார்களென்று எண்ணுகிறேன்' என்றான்.

திருதராஷ்டிரன் சொல்லலானான். 'ஓ! ஸஞ்சய! கடுமையான வார்த்தையைச் சொல்லுகின்ற கர்ணனால் என்ன செய்யப்பட்டது? அந்தத் திரௌபதி ஸபையை அடைந்ததும் இவ்வளவு

பகையுமாகவே முடிந்தது. எவர்களுக்குக் குருவான மூத்ததமையன் நியாயத்திலிருக்கவில்லையோ அந்த மந்தபுத்தியுள்ள என்னுடைய புத்திரர்கள் இப்பொழுதாவது இருப்பார்களா? ஓ! ஸூத! என்னைக் கண்ணில்லாதவனும் செயலற்றவனும் அறிவற்றவனுமாகக் கருதி மூடர்களையடைந்த அவன் என்னுடைய வார்த்தையைக் கேட்கவும் விரும்பவில்லை. மூடர்களான கர்ணன் சகுனி முதலிய மந்திரிகள் விபரீத புத்தியுள்ளவர்களாகி அவனுடைய தோஷங்களை மிக வளர்க்கிறார்கள். அளவற்ற சக்தியுள்ள அர்ஜுனனால் தற்செயலாக விடப்பட்ட பாணங்களும் என் புத்திரர்களை எரிக்கும். கோபத்தினால் விடப்பட்டால் கேட்கவும்வேண்டுமா? அர்ஜுனனுடைய கைவன்மையால் விடப்பட்டவைகளும் பெரிய வில்லிலிருந்து வெளிவந்தவைகளும் திவ்யாஸ்திரமந்திரத்தால் மகிழ்விக்கப்பட்டவைகளுமான (அஸ்திரங்கள்) தேவர்களையும் நாசம்செய்யுமல்லவா? மூவுலகத்திற்கும் நாதரும் ஜனார்த்தனருமான அந்த ஹரியை நண்பரும் காப்பவரும் மந்திரியுமாகவுடையவனுக்கு ஜயிக்கப்படாதது ஏது? ஓ! ஸஞ்சய! மஹாதேவருடன் கைகளால் கலந்தான் என்று கேட்ட அர்ஜுனனுடைய இந்தச் செய்கை இவ்வுலகில் மிகப் பெரிய ஆச்சரியமானது. அக்னிக்கு உதவிசெய்யவேண்டிக் கிருஷ்ணனாலும் அர்ஜுனனாலும் காண்டவ வனத்தில் முன்னர்ச்செய்யப்பட்டது எல்லா உலகத்துக்கும் ப்ரத்தியக்ஷமானதே. அர்ஜுனன், பீமன், ஸாத்வதனான கிருஷ்ணன் ஆகிய இவர்கள் கோபங்கொண்டபோது என்னுடைய புத்திரர்கள் மந்திரிகளுடனும் பந்துக்களுடனும் எவ்விதத்திலும் இரார்' என்றான்'' என்று சொன்னார்.

நாற்பத்தேழாவது அத்யாயம்.

இந்திரலோகாபிகமனபர்வம். (தொடர்ச்சி.)

(வைசம்பாயனர், பாண்டவர்களுக்குக் காட்டில் உணவுப்பொருள் இன்னதென்பதை ஜனமேஜயருக்குச் சொல்லியது.)

ஜனமேஜயர், வைசம்பாயனரைப் பார்த்து, ''ஓ! முனிவரே! வீரர்களான பாண்டவர்களைக் காட்டுக்கு அனுப்பிவிட்டுத் திருதராஷ்டிரராஜர் இவ்விதம் துக்கித்ததெல்லாம் பயனற்றது. மஹாரதர்களான பாண்டுபுத்திரர்களைக் கோபமூட்டுகின்றவனும் அற்பபுத்தியுள்ளவனும் ராஜபுத்திரனுமான அந்தத் துரியோதனனை

எவ்விதம் உபேக்ஷிக்கலாம்? காட்டில் பாண்டுபுத்திரர்களுக்கு என்ன ஆகாரமிருந்தது? சொல்லவேண்டும். காட்டிலுள்ளதா? அல்லது, உழுது விளைந்த தான்யமா? இதனை நீர் எனக்குச் சொல்லும்'' என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

“மஹாரதர்கள் காட்டிலுள்ள காய் கனி முதலியவற்றையும் சுத்தமான பாணங்களால் கொல்லப்பட்ட மான்களையும் பிராம்மணர்களுக்கு முதலில் 1 தெரிவித்துவிட்டுப் புஜித்தார்கள். ஓ! அரசரே! அப்பொழுது, வனத்தில் வஸிக்கின்றவர்களும் பெரிய வில்லுள்ளவர்களும் சூரர்களுமான அவர்களை அக்னியுடன் கூடினவர்களும் (கிருகஸ்தர்களும், வானப்ரஸ்தர்களும்) அவ்வாறே அக்னியற்றவர்களும் (பிரம்மசாரிகளும் ஸந்யாஸிகளும்) ஆன பிராம்மணர்கள் பின்தொடர்ந்தார்கள். அவ்வாறு பின்தொடர்ந்த மஹாத்மாக்களும் ஸ்நாதகர்களும் மோக்ஷமறிந்தவர்களுமான பிராம்மணர்களுள் பதினாயிரவரை யுதிஷ்டிரர் போஷிக்கிறார். ருருவென்னும் மான்களையும் கருமையான மான்களையும் மனத்திற்குப் பிடித்த சுத்தமான மற்றவைகளையும் பலவித பாணங்களால் பிளந்து பிராம்மணர்களுக்குத் 2 தெரிவித்தார். அவ்விடத்தில் ஒருவனும் நிறங்கெட்டவனாவது நோயுள்ளவனாவது இளைத்தவனாவது பலங்குறைந்தவனாவது தீனனாவது பயந்தவனாவது காணப்படவில்லை. கௌரவஸ்ரேஷ்டரும் தர்மராஜருமான யுதிஷ்டிரர், அன்புடையவர்களான தம்பிமார்களைப் புத்திரர்களைப்போலவும் ஞாதிகளை ஸகோதரர்களைப்போலவும் போஷித்தார். அப்பொழுது, கீர்த்தியுள்ள திரௌபதி எல்லாப் பிராம்மணர்களையும் பதிகளையும் தாய்போல முதலில் உண்பித்து மிஞ்சியதை(த் தான்) உண்டாள். ஒவ்வொருநாளும், மாமிசத்துக்காகத் தர்மபுத்திரர் கிழக்குத்திக்கையும் பீமன் தெற்குத்திக்கையும் நகுலஸகதேவர்கள் மேற்குத்திக்கையும் வடக்குத்திக்கையும் வில்லைத்தரித்தவர்களாகி அடைந்து மான்களை அடித்தலைச் செய்தனர். அவ்விதம் காம்யகவனத்தில் வஸிக்கின்றவர்களும் அர்ஜுனன் இல்லாதவர்களும் (அவனைப்பார்க்க) ஆசையுள்ளவர்களும் அத்தியயனம் செய்கின்றவர்களும் ஜபிக்கின்றவர்களும் ஹோமம் செய்கின்றவர்களுமான அவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் கழிந்தன.

---

1 'நிவேத்ய' என்பது மூலம். 2 'ந்யவேதயத்' என்பது மூலம்.

நாற்பத்தெட்டாவது அத்யாயம்.

இந்திரலோகாபிகமன பர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரன், பாண்டவர்களின் பராக்ரமத்தை எண்ணித் தன் பிள்ளைகளைப்பற்றி ஸஞ்சயனிடம் வருந்தியதும், கிருஷ்ணன் முதலியோர் வனத்தில் துரியோதனதியரைக் கொல்வதாகப் பிரதிஜ்ஞை செய்ததை ஸஞ்சயன் சாரராலறிந்து திருதராஷ்டிரனுக்குச் சொல்லியதும்.)

ஓ! பரதஶ்ரேஷ்டரே! மனுஷ்யர்களை அதிக்கிரமித்ததும் ஆச்சரியமானதுமான அவர்களுடைய அந்தச் சரித்திரத்தைக் கேட்டு அம்பிகாபுத்திரனான திருதராஷ்டிரன் கவலையாலும் சோகத்தாலும் மூடப்பெற்ற மனமுள்ளவனாகியும் கோபத்தால் மிக நிறைந்தவனாகியும் நீளமாயும் உஷ்ணமாயும் பெருமூச்செறிந்து ஸூதனான ஸஞ்சயனைக் கூப்பிட்டு வார்த்தை சொல்லலானான். 'ஓ! ஸூத! சூதாட்டத்தாலுண்டானதும் கோரமானதும் முன் நடந்ததுமான அந்த அநியாயத்தையும் பொறுக்க முடியாத வீர்யமுள்ள அந்த ப்ராதாக்களுடைய சௌரியத்தையும் மேலான உறுதியையும் தைரியத்தையும் ஒருவர்மேல் ஒருவர்க்குள்ள மனித இயற்கைக்கு மேற்பட்ட அன்பையும் நன்கு ஆலோசித்து, இரவிலோ அல்லது பகலிலோ க்ஷணமாவது நான் ஆறுதலையடையவில்லை. ஸஞ்சய! தேவபுத்திரர்களும் மஹாபாக்யவான்களும் தேவராஜனுக்கொப்பான காந்தியுள்ளவர்களும் பாண்டுபுத்திரர்களும் யுத்தத்தில் அடங்காத மதமுள்ளவர்களும் உறுதியான ஆயுதமுள்ளவர்களும் தூரத்தில் விழும்படி அம்பெய்கிறவர்களும் யுத்தத்தில் செய்யப்பட்ட நிச்சயமுள்ளவர்களும் சீக்கிரமாக (அஸ்திரங்களைப் பிரயோகிக்கும்) கையுள்ளவர்களும் நிலைத்த கோபமுள்ளவர்களும் எப்பொழுதும் முயற்சியுள்ளவர்களும் தேரிலிருப்பவர்களும் சிங்கம்போன்ற நடையுள்ளவர்களும் (பிறரால்) பொறுக்கமுடியாதவர்களும் அஶ்விநிதேவதைகள்போன்றவர்களுமான அந்த நகுலஸஹதேவர்கள் எப்பொழுது போர்க்களத்தில் பீமனையும் அர்ஜுனனையும் முன்னிட்டுக்கொண்டு நிற்பார்களோ அப்பொழுது என்னுடைய சேனை மிச்சமிராதென்பதை இப்பொழுது பார்க்கிறேன். மிக்ககோபமுள்ளவர்களும் போரில் எதிரியற்றவர்களும் மஹாரதர்களுமான அந்தத் தேவபுத்திரர்கள், திரௌப

திக்கு உண்டாக்கின அந்தக் கஷ்டத்தைப் பொறுக்கமாட்டார்கள். மேலும், பெரிய வில்லுள்ள விருஷ்ணிகளும், மிக்க பராக்ரமமுள்ள பாஞ்சாலர்களும், கருதியதைத் தவறாமல் முடிப்பவனான கிருஷ்ணனால் காப்பாற்றப்பட்டவர்களான பார்த்தர்களும் போரில் என் புத்திரர்களின் சேனையைச் சாம்பலாக்குவார்கள். ஓ! ஸூதநந்தன! பலராமனாலும் கிருஷ்ணனாலும் நடத்தப்பட்ட விருஷ்ணிகளுடைய மலைகளாலும் தாங்கமுடியாத வேகமானது பொறுக்க முடியாதது. அவர்களுள் பயங்கரமான பராக்ரமமுள்ளவனும் பெரிய வில்லுள்ளவனுமான பீமன், [1] உறியிலிருப்பதும் பகைவீரர்களைக் கொல்லுகின்றதுமான கதையுடன் ஸஞ்சரிக்கப்போகிறான். அப்படியே, இடியின் முழக்கம்போன்ற காண்டீவத்தின் சப்தத்தையும் பீமனது கதையின் வேகத்தையும் அரசர்கள் தாங்குவதற்குச் சக்தரல்லர். ஆகையால், துரியோதனன் வசத்தையடைந்த நான், முந்தி என்னால் செய்யப்படாதவையும் நினைக்கத்தக்கவையுமான ஸ்நேகிதர்களின் சொற்களை நினைக்கப்போகிறேன்' என்றான்.

ஸஞ்சயன் சொல்லலானான். 'ஓ! அரசரே! அறியாமையால் புத்திரன் உம்மால் தடுக்கப்படாமையால், ஸமர்த்தராயிருந்தும் பெரிய இந்தத் தவறுதலானது உம்மால் உபேக்ஷிக்கப்பட்டது. மதுஸூதனரான இந்த அச்சுதர் சூதாட்டத்தில் பாண்டவர்கள் ஜயிக்கப்பட்டதைக் கேட்டு வேகமாக வந்து, காம்யகவனத்திலிருக்கும் பாண்டவர்களைத் தேற்றினார். அவ்விதமே த்ருஷ்டத்யும்னனை முதல்வனாயுடைய த்ருபத புத்திரர்களும் விராடனும் த்ருஷ்டகேதுவும் மஹாரதர்களான கேகயர்களும் தேற்றினார்கள். ஓ! அரசரே! தோல்வியடைவிக்கப்பட்ட பாண்டவர்களைப் பார்த்து அவர்கள் சொல்லியவற்றையெல்லாம் ஒற்றர்கள் அறிந்துவந்தனர். நானும் உமக்குத் தெரிவித்திருக்கிறேன். அவ்விடத்தில் மதுஸூதனர் பாண்டவர்களோடு சேர்ந்து போர்க்களத்தில் அர்ஜுனனுக்குத் தேரோட்டும் விஷயத்தில் வரம் கேட்கப்பட்டார். ஹரியும், 'அப்படியே' என்று அவர்களை நோக்கிச் சொன்னார். அப்பொழுது, மான்தோலை மேலாடையாயுடையவர்களாகி வந்த பாண்டவர்களைப் பார்த்துக் கிருஷ்ணரும் கோபங்கொண்டு தர்மபுத்திரரை நோக்கிச் சொல்லலானார். 'வேறு அரசர்களால் அடைய முடியாததான பாண்டவர்களுடைய அந்த ஐஸ்வர்யத்தை இந்திர

---

1 'பூமியைப் பிளந்துகொண்டு போகுமோ என்ற பயத்தால் உயர வைக்கப்பட்டதென்பது பொருள்' என்பது பழையவுரை.

ப்ரஸ்தத்தில் ராஜஸூயயாகம் நடக்கும்போது நான் பார்த்தேன். இந்திரப்ரஸ்தத்தில்,வங்கர், அங்கர், பௌண்ட்ரர், ஓட்ரர், சோளர், த்ரவிடர், ஆந்த்ரர், [1] ஸாகராநூபகர், பட்டணத்தில் வஸிக்கின்றவர்கள், ஸிம்ஹளர், பர்ப்பரர், மிலேச்சர், மற்றும் லங்காவாஸிகள், மேற்கிலுள்ள நூற்றுக்கணக்கான ராஜ்யங்களிலும் கடலோரங்களிலு மிருப்பவர்கள், பல்லவர், தரதர், கிராதர், யவனர், சகர், ஹாரஹூணர், சீனர், துஷாரர், ஸைந்தவர், ஜாகுடர், ராமடர், முண்டர், ஸ்திரீராஜ்யத்தில் வஸிப்பவர், தங்கணர், கேகயர், மாளவர், காஶ்மீரகர் முதலிய எல்லா அரசர்களும், சஸ்திர சக்தியால் பிடிக்கப்பட்டவர்களும் அழைக்கப்பட்டவர்களுமாகி, உமது யாகத்தில் எல்லாரும் பரிமாறுகின்றவர்களாயிருந்ததை நான் கண்டேன். இழிவானவர்களை அடையும் தன்மையுள்ளதும் நிலைத்திராததுமான அந்த உம்முடைய ஐஶ்வரியமானது எவர்களால் கவரப்பட்டதோ அவர்களுடைய உயிரைக் கவர்ந்து அந்த ஐஶ்வரியத்தை நான் அபகரிப்பேன். ஓ! கௌரவ்யரே! பாரதரே! பலராமர், பீமன், அர்ஜுனன், இரட்டையரான நகுலஸஹதேவர், அக்ரூரர், கதன், ஸாம்பன், ப்ரத்யும்னன், ஆஹுகன், வீரனான த்ருஷ்டத்யும்னன், சிசுபாலபுத்ரன் ஆகிய இவர்களுடன் கூடி யுத்தத்தில் துர்யோதனன், கர்ணன், துச்சாஸனன், சகுனி ஆகிய இவர்களையும் மற்றும் எதிர்க்கிறவனையும் உடனே கொன்று, பிறகு, நீர் தம்பிகளுடன் அஸ்திநபட்டணத்தில் வஸிப்பவராகித் திருதராஷ்டிரனுடையதான ஐஶ்வரியத்தையடைந்து இந்தப்பூமியை ஆளுவீராக' என்றார்.

பிறகு, தர்மபுத்திரர் அந்த வீரர்கூட்டத்தில் த்ருஷ்டத்யும்னன் முதலிய இந்த வீரர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்போது, கிருஷ்ணரை நோக்கி, 'ஓ! தோள்வலி அமைந்தவரே! ஜனார்த்தனரே! இந்த உண்மையான உம்முடைய வார்த்தையைப் பெற்றுக்கொள்ளுகிறேன். பதின்மூன்றாவது வருஷத்திற்குமேல் என்னுடைய பகைவர்களைத் தொடர்ந்து வந்தவர்களுடன் நாசம்செய்வீர். ஓ! கேசவரே! என்னை மெய்யனாகச் செய்யக்கடவீர். அரசர்களின் நடுவில் என்னால் இந்த வனவாஸமானது பிரதிஜ்ஞை செய்யப்பட்டதன்றோ?' என்றார். அந்தத் திருஷ்டத்யும்னன் முதலிய ஸபையிலுள்ளோர் தர்மபுத்திரரின் வார்த்தையைக் கேட்டுக் கோபங்கொண்ட மாதவரை நோக்கிக் காலத்திற்கேற்ற இனிய

---

1. கடற்கரையை ஒட்டியிருப்பவர்.

வார்த்தைகளால், 'தகுதியானது' என்றார்கள். (அவர்கள்,) வாஸுதேவர் கேட்டுக்கொண்டிருக்கும்போது, குற்றமற்ற திரௌபதியை நோக்கிச் சொல்லலாயினர். 'ஓ! மேலானவளே! தேவி! உனது கோபத்தால் துரியோதனன் உயிரை விடப்போகிறான். ஸத்தியமாக உனக்குப் பிரதிஜ்ஞை செய்கிறோம். நீ துக்கப்படாதே. ஓ! கிருஷ்ணையே! அப்பொழுது உன்னைப்பார்த்துச் சிரித்த அந்தக்கௌரவர்களின் மாம்ஸங்களைச் செந்நாய்களும் பக்ஷிகளும் தின்றுகொண்டு இழுக்கப்போகின்றன. ஸபையில் உன்னை இழுத்தவர்களின் தலைகளைக் கழுகுகளும் அவ்வாறே நரிகளும் இழுத்துக்கொண்டு இரத்தத்தைக் குடிக்கப்போகின்றன. ஓ! பாஞ்சாலி! பூதலத்தில் மாம்ஸத்தைத்தின்னும் ஜந்துக்களால் இழுக்கப்படுகின்றவையும் அடிக்கடி தின்னப்படுகின்றவையுமான அவர்களின் சரீரங்களையும் பார்ப்பாய். அவ்விடத்தில் உன்னை இழுத்தவர்களும் அநாதரணை செய்தவர்களுமான அவர்களுடைய தலை அறுக்கப்பட்டு ரக்தத்தைப் பூமி குடிக்கப்போகிறது' என்று எல்லாரும் புருஷச்ரேஷ்டர்களும் சக்தியுள்ளவர்களும் எல்லாரும் சூரர்களும் லக்ஷணத்துடன் கூடினவர்களுமான அவர்கள் இவ்விதம் பலவிதவார்த்தைகளைச் சொன்னார்கள். தர்மராஜரால்வேண்டப்பட்டவர்களும் பலராமர், கிருஷ்ணர், அர்ஜுனன், ப்ரத்யும்னன், ஸாம்பன், ஸாத்யகி, பீமன், மாத்ரிபுத்திரர்களான நகுலஸஹதேவர்கள், கேகய ராஜபுத்திரர், விராடராஜனுடன் கூடிய பாஞ்சாலபுத்திரர் ஆகிய மஹாரதர்களுமான அவர்கள் பதின்மூன்றாவது வருஷத்திற்குமேல் வாஸுதேவரை முன்னிட்டுக்கொண்டு வரப்போகிறார்கள். லோகவீரர்களும் ஜயிக்கமுடியாதவர்களும் மஹாத்மாக்களும் பரிவாரங்களுடன் கூடினவர்களும் சேனையுடன் கூடினவர்களுமான இவர்கள்யாவரையும், உயிரில் ஆசையுள்ள எவன், கோபங்கொண்டவையும் நேரேநிற்கும் பிடரிமயிருள்ளவையுமான சிங்கங்களை எதிர்ப்பதுபோல யுத்தத்தில் எதிர்ப்பான்?' என்றான். திருதராஷ்டிரன் சொல்லத் தொடங்கினான். 'சூது நடக்கும்போது, விதுரன், 'ஓ! நரேந்திரரே! நீர் பாண்டவர்களை ஜயிப்பீரேயாகில் இந்த ஜயமானது குருக்களுக்கு அதிக பயத்தையுடையதும் உதிரப்பெருக்கையுடையதுமான முடிவுக்காலமாகும். இது திண்ணம்' என்று என்னை நோக்கிச் சொல்லினன். ஸூத! முன்பு விதுரன், 'வரப்போகிறது' என்று என்னை நோக்கிச் சொல்லிய இந்த யுத்தமானது பாண்டவர்களுக்குப் பிரதிஜ்ஞாகாலம்

கழிந்தவுடன், அவன் சொன்னபடி, வரப்போகிறது. ஸந்தேக மில்லையென்று எண்ணுகிறேன்' என்றான்" என்றார்.

இந்திரலோகாபிகமனபர்வம் முற்றிற்று.

நாற்பத்தொன்பதாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம்.

(யுதிஷ்டிரரும் பீமனும் பேசிக்கொண்டிருக்கையில் பிருகதஸ்வர் வந்து யுதிஷ்டிரருக்கு நளோபாக்யானத்தைச் சொல்லத் தொடங்கியது.)

ஜனமேஜயர், "மஹாத்மாவான அர்ஜுனன் அஸ்திரத்துக்காக இந்திரலோகம் சென்றவுடன், யுதிஷ்டிரர் முதலிய பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"மஹாத்மாவான அர்ஜுனன் அஸ்திரம் பெறுதற்காக இந்திரலோகத்துக்குப் போனவுடன், பரதஸ்ரேஷ்டர்கள் திரௌபதியுடன் காம்யகவனத்தில் வஸித்தார்கள். பிறகு, ஒரு சமயம் பரதஸ்ரேஷ்டர்கள், துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களாகவும் அர்ஜுனனைக்குறித்துச் சோகப்படுகிறவர்களாகவும் கண்ணீரால் தடைப்பட்ட குரலுள்ளவர்களாகவும் மிக்க துக்கத்தை அடைந்தவர்களாகவும், திரௌபதியுடன், சுத்தமாயும் ஏகாந்தமாயுமிருக்கிற மெதுவான புல்லுள்ள இடத்தில் உட்கார்ந்தார்கள். அவனுடைய பிரிவால் பீடிக்கப்பட்ட அவர்களைச் சோகம் சூழ்ந்துகொண்டது. பிறகு, அர்ஜுனனைப் பிரிந்ததாலும் ராஜ்யம் நழுவிவிட்டதாலும் [1] துக்கித்த புஜபலமுள்ள பீமன் யுதிஷ்டிரரைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான். 'ஓ! மஹாராஜரே! எவனிடத்தில் பாண்டுபுத்திரர்களின் பிராணன்கள் நிலைபெற்றிருக்கின்றனவோ, எவன் நாசமடைந்தால் புத்திரர்களுடன் பாஞ்சாலனும் அப்படியே நாமும் ஸாத்தியகியும் கிருஷ்ணரும் நாசமடைந்துவிடுவோமென்பதில் சந்தேகமில்லையோ இந்தப் பரதஸ்ரேஷ்டனான அர்ஜுனன் உம்முடைய உத்தரவினால் போனான். நாமெல்லாரும் எந்த மஹாத்மாவின் கைகளை அடுத்து யுத்தத்தில் பகைவர்களை ஜயிக்கப்பட்டவர்களாகவும் பூமியை

---

1 'துக்கித:' என்ற பாடம் கொள்ளப்பட்டது.

அடையப்பட்டதாகவும் எண்ணுகிறேமோ, நாம் சபையின் நடுவில் வில்லாளியான எவனுடைய மகிமையால் சகுனியுடன் திருதராஷ்டிரபுத்திரர்கள் யாவரையும் ஜயிக்கப்பட்டவர்களாக எண்ணுகிறேமோ, எவனுடைய மகிமையின் நிமித்தம் சபையின் நடுவில் அதிக பலமுள்ள தார்த்தராஷ்டிரர்கள் சகுனியுடன் என்னுல் அந்த உலகத்தை அடைவிக்கப்படவில்லையோ இந்தத் தர்மாத்மாவான அர்ஜுனன் அதிக கிலேசங்களை எண்ணிக்கொண்டு உம்முடைய உத்தரவினுல் போனுன். அதைக்காட்டிலும் மேலான துக்கம் என்ன இருக்கிறது? தோள்வன்மையுள்ள அப்படிப்பட்ட நாங்கள் கோவிந்தரால் காக்கப்பட்டவர்களாகி உம்மைக் காரணமாகவுடையதும் உண்டானதுமான எங்கள் கோபத்தைப் பொறுக்கின்றேம். கிருஷ்ணருடன்கூடின என்னுல் கர்ணன் முதலிய பகைவர்களைக் கொன்று என்கையால் ஜயிக்கப்பட்ட இந்தப் பூமி முழுமையையும் ஆளும். ஓ! மன்னரே! குறைவற்ற பௌருஷமுள்ள நாம் யாவரும் (உம்முடைய சூதாட்ட தோஷத்தால்) துன்பமடைந்தோம். கப்பங்களை வாங்குதலால், [1] சிறுவர்களான பகைவர்கள் மிக்க பலமுள்ளவர்களாயினர். ஓ! மஹாராஜரே! க்ஷத்திரியதர்மத்தை நீர் பார்க்கக்கடவீர். மஹாராஜரே! காட்டை அடைவது க்ஷத்திரியனுடைய தர்மமில்லையன்றே? அரசாட்சியே க்ஷத்திரியனுக்கு மேலான தர்மமென்று வித்வான்கள் எண்ணுகிறர்கள். அரசரே! க்ஷத்ரிய தர்மமறிந்த அப்படிப்பட்ட நீர் தர்மவழியிலிருந்து (விலகி) நாசமடைய வேண்டாம். ஓ! அரசரே! அர்ஜுனனை வனத்திலிருந்து திருப்பியழைத்தும் கோவிந்தரை வரவழைத்தும் பன்னிரண்டுவருஷங்கள் முடியுமுன்னரே தார்த்தராஷ்டிரர்களைக் கொல்லுவோம். மனிதர்களுக்குத் தலைவரே! மஹாராஜரே! அணிவகுக்கப்பட்டசேனையுள்ள திருதராஷ்டிரபுத்ரர்களைப் பெரிய யுத்தத்தில் வேகமாகவே பரலோகத்தை அடையச் செய்வோம். சகுனியுடன் கூடின தார்த்தராஷ்டிரர்களையும் துரியோதனனையும் கர்ணனையும் மற்றும் எதிர்ப்பவர் யாவரையும் நான் கொல்லுவேன். ஓ! அரசரே! இவ்விதம் என்னுல் அடக்கப்பட்டபின் நீர் திரும்பவும் காட்டையடையலாம். இவ்விதம் செய்யப்பட்டபோது உமக்குத் தோஷம் வராது. பகைவரையடக்குபவரே! மஹாராஜரே! ஐயா! செய்யப்பட்டபாவத்தைப் பலவித யாகங்களால் போக்கிவிட்டு மேலான ஸ்வர்க்கத்தை

1 வேறு பாடம்.

அடைவோம். அரசரே! அரசன் சிறுவன்போல வீண் பிடிவாத மில்லாதவனாயிருந்தால் இது இவ்விதமே நடக்கும். நீர் தர்மத்தையே முக்கியமாகக் கொண்டீரானால், (விரைந்து செய்யவேண்டியதைத் தாமதித்துச் செய்வதாகிய) தீர்க்கஸூத்ரமென்னும் குற்றம் நமக்கு நேரும். கபட எண்ணமுள்ளவர்கள் கபடத்தால்கொல்லப்படத்தக்கவர்கள் என்பது நிச்சயம். கபடம் செய்பவனைக் கபடத்தால் கொல்லுவது பாவமென்று சொல்லப்படவில்லையன்றோ? ஓ! பாரதரே! மஹாராஜரே! அப்படியே இவ்வுலகத்தில் தர்மம் அறிந்தவர்களால் தர்மானுஷ்டானங்களில் ஒரு பகலும் இரவும் சேர்ந்து ஒருவருஷத்துக்கொப்பாகுமென்பது காணப்படுகிறது. ஓ! விபுவே! அப்படியே, எப்பொழுதும் வேதவசனமும் கேட்கப்படுகிறது. மஹாராஜரே! வருஷமானது 1 க்ருச்ரத்தினாலும் பூர்ணமாகிறது. ஓ! தர்மத்தினின்றும்வழுவாதவரே! வேதங்கள் உமக்குப் பிரமாணமானால் இன்றையிலிருந்து பதின்மூன்று நாட்கள் சென்றால் பிரதிஜ்ஞாகாலமானது முடிவுபெற்றதாக அறியக்கடவீர். பகைவரை அடக்குபவரே! பரிவாரங்களுடன் கூடின துரியோதனனைக் கொல்ல (இதுவே) காலம். ஓ! அரசரே! (கொல்லாவிடின்) அவன் பூமி முழுமையையும் தன் ஒருவனுக்கே உரியதாகச் செய்துவிடுவான். ராஜேந்திரரே! சூதில்பிரியமுள்ள உம்மால் அது அவ்விதம் செய்யப்பட்டது. அஜ்ஞாதவாஸத்தில் நாம் யாவரும் அனேகமாக நாசமடைவிக்கப்பட்டவராவோம். மிகக் கொடியவனும் கெட்ட எண்ணமுள்ளவனுமான அந்தத் துரியோதனன் நம்மைச் சாரர்களால் அறியமுடியாததும் நாம் வஸிக்கக்கூடியதுமான இடத்தை நான் பார்க்கவில்லை. அற்

---

1 க்ருச்ரம் = பாவத்துக்குப் பிராயச்சித்தமாகச் செய்யப்படும் விரதம். அது, பிராஜாபத்ய க்ருச்ரம், ஸாந்தபன க்ருச்ரம், தப்த க்ருச்ரம் முதலாகப் பலவாம். அவற்றுள், முதல் மூன்றுநாள் இரவில் ஒருவேளை மட்டும் இருபத்திரண்டு கவளமும், மறுமூன்றுநாள் பகலில் ஒருவேளைமட்டும் இருபத்தாறு கவளமும் பின் மூன்றுநாள் தானாகக்கிடைத்ததில் இருபத்துநான்கு கவளமும் புசித்துக் கடைசி மூன்றுநாள் பட்டினியிருப்பது பிராஜாபத்ய க்ருச்ரமென்னப்படும். பிறர் பிறவாறுங் கூறுவர். விவரத்தை ஸ்மிருதி முக்தாபலம் முதலிய நூல்களில் கண்டுகொள்க. 'முப்பது ப்ராஜாபத்ய க்ருச்ரங்களால் ஒருவருஷம் ஆகிறது. இப்படி பத்து ப்ராஜாபத்ய க்ருச்ரத்துக்கொப்பான மித்ரவிந்தேஷ்டி, பவித்ரேஷ்டி, ம்ருகாரேஷ்டி முதலியவற்றால் பன்னிரண்டு வருஷத்தையும் இப்பொழுதே போக்கிவிடலாம் என்பது கருத்து' என்பது பழைய உரை.

பனும் பாவியுமான அவன் எவ்விதமேனும் நம்மை அறிவானுனல் நம் யாவரையும் அறிந்து அங்கிருந்து பிறகும் இந்த வனவாஸத்தைக் குறித்துக் கபடமாகத் துரத்துவான். ஓ! மஹாராஜரே! அஜ்ஞாதவாசத்தையும் தாண்டின (நம்மைக்) கண்டு திரும்பவும் சூதாட்டத்திற்குக் கூப்பிடுவான். உமக்குத் திரும்பவும் சூதுச்சண்டை உண்டாகும். திரும்பவும் கூப்பிடப்பட்ட நீர் சூதினுலேயே (செல்வத்தைப்) போக்கிவிடுவீர். மதிகெட்ட அவன் சூதுக்காய் விஷயத்தில் அவ்வளவு சமர்த்தன் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிருன். ஓ! மஹாராஜரே! எங்களை உயிருள்ளவரையிலும் செயலற்றவராகச் செய்யவிரும்புவீரானுல் திரும்பவும் காடுகளில் வாஸங்களைச் செய்வீர். வேததர்மங்கள் முழுமையையும் பாரும். கபடத்தில் புத்தியுள்ளவன் கபடத்தால் கொல்லப்படத்தக்கவன் என்பது நிச்சயமானது. உம்மால் விடைஅளிக்கப்பெற்றுப் போய், எறியப்பட்டதும் காற்றை உதவியாக உடையதுமான தீயானது புதரை எரிப்பதுபோலச் சக்திக்குத்தக்கவாறு மந்தனுன துரியோதனனைக் கொல்லுவேன். எனக்கு நீர் விடைதருவீர்' என்றுன்.

இவ்விதம் சொல்லுகின்ற பாண்டவனுன பீமனைத் தர்மராஜரான யுதிஷ்டிரராஜர் இன்சொற்கூறி உச்சியில்மோந்து சொல்லத் தொடங்கினுர். 'ஓ! மிக்க தோள்வலிமையுள்ளவனே! பதின்மூன்று வருஷத்திற்குமேல் காண்டீவவில்லையுடைய அர்ஜுனனுடன்கூடித் துரியோதனனைக் கொல்லுவாய். ஸந்தேகமில்லை. ஓ! பார்த்த! வல்லவனே! காலம்வந்துவிட்டதென்று நீ சொல்லுகிருய். நான் பொய்யைச் சொல்லுவதற்குத் துணிவற்றவனுயிருக்கின்றேன். இப்படிப் பொய்சொல்வது என்னிடத்தில் இல்லையன்றே? ஓ! கௌந்தேய! (பகைவரால்) மீறமுடியாதவனே! பாவத்தில் உறுதியுள்ள துரியோதனனைத் 'தொடர்ந்துவந்தவர்களுடன் நீ கபடமில்லாமலே கொல்பவனுக இருக்கின்றுய்' என்றுர். தர்மராஜரான யுதிஷ்டிரர் இவ்விதம் பீமனுக்குச் சொல்லும்போது மகாமகிமையுள்ள ப்ருஹதஸ்வரென்ற மகரிஷியானவர் வந்தார். தர்மபுத்தியுள்ள தர்மராஜர் தர்மானுஷ்டானம் செய்கின்ற அவர் வந்ததைக்கண்டு சாஸ்திரப்படி [1] மதுபார்க்கத்தால் பூஜைசெய்தார்.

---

1 பெரியோர்கள்வரும்பொழுது மரியாதையாகக் கொடுக்கப்படுவது; மணமகனுக்கு மணமகளின் தந்தையினுல் விவாககாலத்தில் முதலில் கொடுக்கப்படுவது இக்காலத்தும் வழங்குகிறது. ஆதிபர்வம் 446-ம் பக்கத்திலும் ஸபாபர்வம் 76-ம் பக்கத்திலும் குறிப்புக்களில் காண்க.

புஜபலம் மிக்க யுதிஷ்டிரர், இவர் உட்கார்ந்து களைதீர்த்துக் கொண்டதை அறிந்து அருகில் உட்கார்ந்து எளிமையுடன் பலவற்றைச் சொல்லலானார்.

'ஓ! பகவானே! சூதாட்டந் தெரியாதவனான என்னுடைய தனமும் ராஜ்யமும் சூதாடுவதில் தேர்ந்தவர்களும் மோசத்தில் எண்ணமுள்ளவர்களும் பாவத்தில் நிச்சயமுள்ளவர்களுமான வஞ்சகர்களால் சூதாட்டத்தில் வலிய அழைத்துக் கபடமாகப் பறிக்கப்பட்டன. எனது உயிருக்கும் மேலான மனையாளும் சபைக்கு இழுக்கப்பட்டாள். திரும்பவும், சூதாட்டத்தால் என்னை ஜயித்து மிக்க பயங்கரமான வனவாசத்தைக் குறித்துத் தோல்களை உடுக்கச்செய்து பெரிய காட்டை நோக்கித் துரத்திவிட்டார்கள். [1]நான் வனத்தில் கஷ்டமான வாஸங்களைச் செய்துகொண்டும், மிக்க துக்கமடைந்து சூதாட்டத்தின் சம்பந்தத்தால் மிகக் கொடிய சொற்களைக் கேட்டுக்கொண்டும், துக்கமடைந்தவர்களும் சூதாட்டம் தொடங்கியது முதல் சொல்லுகிறவர்களுமான சிநேகிதர்களுடையசொற்கள் என்மனத்தில் பதிந்திருப்பவற்றை ராத்திரிமுழுவதும் நினைத்துக்கொண்டும் (இருக்கிறேன்.) எந்த அர்ஜுனனிடத்தில் நாங்கள் எப்பொழுதும் அடங்கினவர்களோ மிக்க பலசாலியான அவன் அஸ்திரங்களைப் பெறுவதற்காக இந்திரலோகம் போனான். மஹாத்மாவான அவன் இல்லாமல் உயிர்போனவர்கள்போல இருக்கின்றோம். 'அஸ்திரங்களைக் கற்றுக்கொண்டவனும் திரும்பிவந்தவனுமான அர்ஜுனனை எப்பொழுது பார்ப்பேன்?' என்று பெரிய வில்லுள்ள அர்ஜுனனை யாவரும் நினைக்கிறோம். பாவபுத்தியுள்ளவர்களும் சூதாட்டத்தில் பிரியமுள்ளவர்களும் அதனை அறிந்தவர்களுமான அவர்கள் நான் தம்பிமார்களுடன் வனவாஸத்திலிருந்து திரும்பிவந்ததை அறிந்து திரும்பவும் சூதுக்காய்கொண்டு ஆடும் சூதாட்டத்துக்கு வலிய அழைப்பார்கள். திரும்பவும் சூதாட்டத்தில் கூப்பிடப்பட்டாலும் மறுக்க முடியாதவனாக இருக்கிறேன். பந்தய விஷயத்தில் எனக்குப் பொருள் ஒரு சிறிதுமில்லை. இந்தக் காரணத்தாலும் தம்பிகளுடன் நான் துக்கத்தை அடைந்தேன். இது முழுமையையும் பகலும் இரவும் எண்ணுகிறவனாகிக் கவலைகொண்டேன். என்னைக்காட்டிலும் மிக்க துக்கமுள்ள மனிதன் இவ்வுலகில் ஒருவனுமில்லை; மிக அற்பமான பாக்கியமுள்ள அரசன் ஒருவனும் பூமியில் எவ்விடத்திலும்

1 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

என்னால் முன் பார்க்கப்படவும் முன் கேட்கப்படவும் இல்லை. உம்மால் எவ்விடத்திலாயினும் முன் பார்க்கப்பட்டவனாவது முன் கேட்கப்பட்டவனாவது உண்டா? என்னைவிட மிக்க துக்கமடைந்த மனிதன் இல்லையென்பது என்னுடைய எண்ணம்' என்றார்.

பகவானான ரிஷியானவர் புத்திமானும் தர்மராஜருமான அரசருடைய கோபத்தைப் போக்குகிறவராகி, துக்கத்தால் பீடிக்கப்பட்டு இவ்விதம்சொல்லுகிற (அவரைநோக்கிச்) சொல்லலானார்: 'ஓ! புத்திமான்களுள் சிறந்தவனே! நீ துக்கத்தில் மனத்தைச் செலுத்தாதே. அர்ஜுனன் வந்துவிடுவான்; பகைவர்களையும் ஜயிப்பான். ஓ! மகாராஜ! பாண்டவ! 'ஓரிடத்திலும் என்னைக்காட்டிலும் மிக்க அற்பபாக்கியமுள்ள ஆண்பிள்ளை ஒருவனுமில்லை' என்று சொல்லுகிறாய். குற்றமற்றவனே! பூபதியே! ஒருவன் இருக்கிறானென்னும் இவ்விஷயத்தில் நீ கேட்க விரும்புவாயானால் உன்னிலும் மிக்க துயரப்பட்டவனாயிருந்த அரசனை உனக்குச் சொல்லுகிறேன்' என்றார். பிறகு, அரசர், 'இந்த அவஸ்தையையடைந்த ராஜனைப்பற்றிக் கேட்கவிரும்புகிறேன். பகவானான நீர் சொல்ல வேண்டும்' என்று அவரைக் கேட்டனர். ப்ருஹதச்வர், 'ஓ! அரசனே! சொல்தவறாதவனே! ப்ருதிவீபதியே! உன்னைவிட மிக்க துயரமடைந்திருந்த அரசனைப்பற்றி ஸகோதரர்களுடன் ஸாவதானமாகக் கேட்பாயாக. நிஷததேசத்தில் வீரஸேனன் என்ற பெயர்பெற்ற ஓர் அரசன் இருந்தான். அவனுக்குத் தர்மம் அர்த்தம் இவைகளில் ஸமர்த்தனான நளனென்ற பெயருள்ளபுத்திரன் ஒருவன் இருந்தான். அந்த அரசன் புஷ்கரனென்ற அரசனால் கபடமாக ஜயிக்கப்பட்டானென்று நமக்குக் கேள்வி. அவன் மிக்க துக்கத்தால் பீடிக்கப்பட்டவனாகி மனைவியுடன் வனவாஸத்தைச் செய்தான். ஓ! வேந்தனே! காட்டில் வஸிக்கின்ற அவனுக்கு ஒருபொழுதும் வேலைக்காரர்களும் ரதமும் ஸஹோதரனும் பந்துக்களும் இருந்தார்களென்று கேட்கப்படவில்லை. நீயோ வீரர்களும் தேவர்களுக்கொப்பானவர்களுமான ஸகோதரர்களாலும் பிரம்மாவுக்கொப்பான சிறந்த பிராம்மணர்களாலும் சூழப்பட்டிருக்கிறாய். ஆதலால், நீ துயரப்படலாகாது' என்றார். யுதிஷ்டிரர், 'ஓ! பேசுகிறவர்களுள் சிறந்தவரே! சிறந்த மஹாத்மாவான நளனது சரித்திரத்தை விரிவாக யான் (கேட்க) விரும்புகிறேன். அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றார்.

ஐம்பதாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தமயந்தியிடம் காதல்கொண்ட நளன் சோலையில் அன்னமொன்றைப் பிடித்ததும், அது பிரதியுபகாரம்செய்வதாகச்சொல்லித் தன்னைவிடு வித்துக்கொண்டு தமயந்தியிடம்போய் நளனுடைய சிறப்பைச் சொல்லி அவனிடம் அவளுக்குவிருப்பத்தை உண்டாக்கியதும்.)

பிருஹதஸ்வர் சொல்லலானார். 'வீரஸேனன்புத்திரனும் பலமுள்ளவனும் விரும்பப்பட்ட குணங்களமைந்தவனும் ரூபமுள்ளவனும் அஸ்வவித்தையறிந்தவனும் யாகம் செய்கிறவனும் தானம் செய்கிறவனும் திறமைவாய்ந்தவனும் எப்பொழுதும் நல்லொழுக்கத்தை முதன்மையாகக் கொண்டவனுமான நளனென்னும் ஓர் அரசன் இருந்தான். நிஷததேசத்தில் பிராம்மணர்களுக்கு அனுகூலமானவனும் வேதமறிந்தவனும் சூரனும் சூதாட்டத்தில் பிரியமுள்ளவனும் உண்மைபேசுகிறவனும் பூஜிக்கத்தக்கவனும்[1] பெருஞ்சேனைக்குத் தலைவனும் உத்தம ஸ்திரீகளால் விரும்பப்பட்டவனும் உதார குணமுள்ளவனும் புலன்களை அடக்கினவனும் ப்ரஜைகளைக் காப்பாற்றுகிறவனும் வில்லாளிகளுள் சிறந்தவனுமான (அந்த) அரசன் தேவராஜன்போலவும் ஒளியால் எல்லாவற்றுக்கும் மிகமேலேயிருக்கிற சூரியன்போலவும் தானே நேரில் வந்த மனுப்போலவும் எல்லா அரசர்களுக்கும் மேலானவனாக இருந்தான். அப்படியே, விதர்ப்ப தேசத்தில் பயங்கரமான பராக்ரமமுள்ளவனும் சூரனும் எல்லாக் குணங்களுமமைந்தவனும் பிள்ளையில்லாதவனும் பிள்ளையில்விருப்பமுள்ளவனுமான அந்தப்பீமன் (என்னும் ஓர் அரசன்) இருந்தான். அவன் புத்திரனை அடையும்விஷயத்தில் சித்தத்தை அடக்கி மேலான முயற்சியைச்செய்தான். பாரத! தமனரென்னும்ப்ரம்மரிஷி அவனை அடைந்தார். ஓ! ராஜேந்திர! தர்மமறிந்தஅந்தப்பீமன் மனைவியுடன், பிள்ளையைவிரும்பிக்கொண்டு, நல்ல காந்தியுள்ள அவரை உபசரணையால் சந்தோஷப்படுத்தினான். மிக்க கீர்த்தியுள்ள தமனர் பிரீதியடைந்தவராகி மனைவியுடனிருக்கும் அவனுக்குக் கன்யாரத்னமான தமயந்தியையும், எல்லாக் குணங்களுடனுங்கூடினவர்களும்

---

1 'அக்ஷௌஹிணீபதி:' என்பது மூலம். அக்ஷௌஹிணியின் விவரணத்தை ஆதிபர்வம் 31-ம் பக்கத்தில் காண்க.

பயங்கரமான பராக்கிரமமுள்ளவர்களும் பயங்கரமானவர்களும்
உதாரர்களுமான தமன், தாந்தன், நல்லகாந்தியுள்ள தமனன் என்
னும் மூன்று குமாரர்களையும் வரமாகக் கொடுத்தார். அழகிய
இடையுள்ள தமயந்தியோ ரூபத்தாலும், ஒளியாலும், சீரத்தா
லும், அழகினாலும், ஸௌபாக்கியத்தாலும் உலகங்களில் புகழை
அடைந்தாள். பிறகு, பருவம் வந்தவுடன், அலங்கரிக்கப்பட்ட
நூற்றுக்கணக்கான வேலைக்காரிகளும் தோழிகளும் இந்திராணி
யைச் சூழ்வதுபோல அவளை அப்பொழுது நாற்புறத்திலும் சூழ்ந்
துகொண்டிருந்தனர். எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்
பட்ட பீமன்புத்திரியானவள் அங்கே தோழிகளின் நடுவில் குற்ற
மற்ற அங்கமுள்ளவளாகி மாரிக்காலமேகத்தின் மேலிருக்கும் மின்
னற்கொடிபோலவும் மிக்கஅழகுவாய்ந்தவளும் நீண்டகண்களுள்ள
வளுமான லக்ஷ்மிபோலவும் விளங்கினாள். அழகுள்ளவளும் சிறுமி
யும் தேவர்களுடைய மனத்தையும் கலக்கக்கூடியவளுமான அவ்வித
ரூபமுள்ளவள் தேவர்களுள்ளும் யக்ஷர்களுள்ளும் மற்றமனிதர்களு
ள்ளும் ஓரிடத்திலும் முன்பார்க்கப்பட்டதுமில்லை; கேட்கப்பட்
டதுமில்லை. நரஸ்ரேஷ்டனானநளன் தானும் ரூபத்தால் சரீரமுள்ள
மன்மதன் போன்றவனும் பூமியில் ரூபத்தால் ஒப்பற்றவனுமாக
இருந்தான்.

(உலக விருத்தாந்தந் தெரிவிப்பவர்) அந்தத் தமயந்தியினிடம்
குதூஹலத்துடன் நளனைப் புகழ்ந்தார்கள்; நளனிடமும் தம
யந்தியை அடிக்கடி புகழ்ந்தார்கள். ஓ! கௌந்தேய! ஒருவர் மற்
றொருவருடைய குணங்களை எப்பொழுதும் கேட்கின்ற அவ்விருவ
ருக்கும் (ஒருவரை ஒருவர்) பாராமலே இச்சையானது உண்டா
யிற்று. மனத்திலுள்ள அந்தக் காமம் மிக வளர்ந்தது. அப்பொ
ழுது, நளன் மனத்தால் காமத்தை அடக்க இயலாதவனாகி அந்தப்
புரத்தினருகிலுள்ள சோலையில் ஏகாந்தமான இடத்தை அடைந்
திருந்தான். பிறகு, அவன் பொன்மயமான சிறகுள்ள அன்னங்
களைப் பார்த்தான்; சோலையில் விளையாடுகின்ற அவைகளுள் ஒரு
பக்ஷியைப் பிடித்தான். பிறகு, (அந்தப்) பறவை அப்பொழுது
நளனை நோக்கி, 'ஓ! அரசனே! உன்னால் கொல்லப்படத் தக்கவ
னல்லேன். உனக்குப் பிரியத்தைச் செய்வேன். ஓ! நைஷத! குற்ற
மற்றவனே! மனிதர்களுள் புலிபோன்றவனே! தமயந்தியினிடம்,
அவள் உன்னைத்தவிர வேறொரு புருஷனை ஒருபொழுதும் எண்
ணாதபடி உன்னைப்பற்றிச் சொல்லுவேன். (அவளை) உனக்கே

மனைவியாகும்படியும் செய்வேன்; அப்படிப்பட்ட நீ எனக்கு விடை கொடு' என்ற சொல்லைச் சொல்லிற்று. இவ்விதம் சொல்லக் கேட்ட அரசன், பிறகு, அன்னத்தை விட்டுவிட்டான். பிறகு, அந்த அன்னங்கள் உயரக்கிளம்பி விதர்ப்பதேசத்தை அடைந்தன. அப்போது விதர்ப்ப நகரியையடைந்து அந்தப் பக்ஷிகள் தமயந்தியின் அருகில் இறங்கின. பிறகு, அந்தப்பக்ஷிகளை அவள் பார்த்தாள். அவள் ஆச்சரியமான ரூபமுள்ள அன்னப்பறவைகளைக் கண்டு சந்தோஷமுள்ளவளாயும் தோழியர் கூட்டங்களால் சூழப்பட்டவளாயும் விரைபவளாயும் அவைகளைப் பிடிப்பதற்குத் தொடங்கினாள். பிறகு, அன்னங்கள் ஸ்திரீகளுக்குரிய உத்யானவனத்தில் நான்குபக்கத்திலும் ஓடின. அப்பொழுது கன்னிகைகள் தனித்தனி அந்த அன்னங்களைப் பின்தொடர்ந்தார்கள். தமயந்தி பின்தொடர்ந்த அன்னமானது மனிதவாக்கை அமைத்துக்கொண்டு, பிறகு, அவளைப் பார்த்து, 'ஓ! தமயந்தி! நிஷத தேசத்தில் நளனென்னும் அரசன் ரூபத்தில் அச்வினிதேவர்களுக்கொப்பானவன். அவனுக்கொப்பான மனிதர்களில்லை. தானே ரூபத்தால் உருவங்கொண்ட மன்மதன்போலிருக்கிறான். மிகச்சிறந்தவளே! அழகிய இடையுள்ளவளே! நீ அவனுக்கே மனைவியானால் உன் பிறப்பும் இந்த அழகும் பயனுள்ளனவாகும். தேவர்களையும் கந்தர்வர்களையும் மனிதர்களையும் உரகர்களையும் ராக்ஷஸர்களையும் நாங்கள் பார்த்திருக்கிறோம். எங்களால் அந்த நளன் போன்றவன் முன் பார்க்கப்பட்டதில்லை. நீயும் பெண்களுள்சிறந்தவள். நளனும் மனிதர்களுள் சிறந்தவன். சிறந்தவளுக்குச் சிறந்தவனுடன் சேர்க்கையானது குணமுள்ளதாகும்' என்று சொல்லிற்று. ஓ! மன்னரே! அவ்விடத்தில் அன்னத்தால் இவ்விதம் சொல்லப்பட்ட தமயந்தியானவள், 'நீ இவ்விதம் நளனிடமும் சொல்வாயாக' என்று அன்னத்தை நோக்கிச் சொன்னாள். ஓ! நராபதிபனே! பக்ஷியானது, 'அப்படியே' என்று விதர்ப்பன்புத்திரியிடம் சொல்லி நிடதநாட்டைத் திரும்பவும் அடைந்து நளனிடத்தில் எல்லாவற்றையும் தெரிவித்தது.

ஐம்பத்தோராவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர் இந்திரன் முதலியோரிடம் தமயந்தியின் சிறப்பையும் அவள் ஸ்வயம்வரத்திலிருப்பதையும் சொல்லியதும், ஸ்வயம்வரத்துக்குவரும் இந்திரன்முதலியோர் வழியில் நளனைக்கண்டு தமயந்தியினிடம் தங்களுக்காகத் தூது செல்ல வேண்டினதும்.)

ஓ! பாரத! அந்தத் தமயந்தியோ அன்னத்தின் அந்தச் சொல்லைக்கேட்டு அதுமுதல் நளனையே எண்ணிக்கொண்டு தன் நிலையற்றவளாயினள். அப்பொழுது தமயந்தியானவள் அதுமுதல் கவலைகொண்டவளும் எளிமையுற்றவளும் நிறங்குன்றிய முகமுள்ளவளும் இளைத்தவளும் மிக்க பெருமூச்செறிகின்றவளுமாயினள்; பிறகு, மன்மதனால் ஆக்ரமிக்கப்பெற்ற அறிவுள்ளவளும் நொடிப்பொழுதில் வெளுத்த நிறமுள்ளவளும் கவலைப்படுகிறவளும் உயரப் பார்வையுள்ளவளும் பித்திபோன்ற தோற்றமுள்ளவளும் ஆயினள்; படுக்கை, ஆஸனம், ஸுகானுபவம் இவைகளில் ஒருபோதும் ஆசையை அடையவில்லை; அடிக்கடி, 'ஆ! ஆ!' என்று அழுகின்றவளாகி இரவிலும் பகலிலும் உறங்கவில்லை. அந்தத் தோழிமார்கள் அவ்வித ரூபமுள்ள அவளைக் குறிப்புக்களால் தன் நிலையில்லாதவளாக அறிந்தார்கள். ஓ! நரேஸ்வர! பிறகு, தமயந்தியின் தோழிகள் அந்தத் தமயந்தி தன்னிலையிலில்லாமலிருப்பதை விதர்ப்பராஜனுக்குத் தெரிவித்தார்கள். அரசனான பீமன் தமயந்தியின் தோழிக்கூட்டத்தினிடமிருந்து அதனைக்கேட்டுத் தன் பெண்ணைப் பற்றிய மிக்க பெரிதான அந்தக் காரியத்தைப்பற்றி, 'எதற்காக என் பெண் இப்பொழுது நல்ல நிலைமையிலில்லாதவள்போலக் காணப்படுகிறாள்?' என்று ஆலோசித்தான். அந்த அரசன் தன் பெண் யௌவனம் அடைந்ததைக் கண்டு அவளதுவிஷயத்தில் ஸ்வயம்வரம் செய்யவேண்டுமென்று தானாக எண்ணினான். ஓ! பிரபுவே! அந்த அரசன், 'ஓ! வீரர்களே! இந்தஸ்வயம்வரம் (உங்களால்) பார்க்கப்படட்டும்' என்று (எல்லா) அரசர்களையும் வரவழைத்தான். பூமியை ஆளுகின்ற வீரர்களான அரசர்கள்யாவரும் தமயந்தியின் ஸ்வயம்வரத்தைக் கேட்டு, பிறகு, பீமன் கட்டளையினால், யானை, குதிரை, தேர் இவைகளின் நாதத்தால் பூமியையொலிக்

கச் செய்துகொண்டு, விசித்திரமானமாலைகளாலும் ஆபரணங்களாலும் நன்கு அலங்கரிக்கப்பெற்றவையும் பார்க்கத்தக்கவையுமான சேனைகளுடன் வந்தார்கள். மிக்க தோள்வலியமைந்த பீமன் மஹாத்மாக்களான அந்த அரசர்களுக்குத் தகுதிப்படி பூஜை செய்தான். அவர்கள் உபசரிக்கப்பட்டவர்களாகி அவ்விடத்தில் வஸித்தார்கள்.

இதே காலத்தில், (எப்போதும் உலகங்களில்) ஸஞ்சரிக்கின்றவர்களும் பேரறிவாளர்களும் பெரிய விரதமுள்ளவர்களும் மஹாத்மாக்களுமான நாரதர் பர்வதரென்கிற சிறந்த இரண்டு தேவரிஷிகள் இவ்வுலகத்திலிருந்து தேவலோகத்தை அடைந்து நன்கு பூஜிக்கப்பெற்றவர்களாகித் தேவராஜனுடைய மாளிகையில் பிரவேசித்தார்கள். பிறகு, பெருமைவாய்ந்த இந்திரன் அவர்களைப் பூஜித்து எல்லாவற்றிலும் குறைவற்ற க்ஷேமத்தையும் நோயின்மையையும் அவர்களிடம் கேட்டான். நாரதர் சொல்லலானார். 'ஓ! தேவ! ஈஸ்வர! விபுவே! எங்களுக்கு எல்லாவற்றிலும் க்ஷேமமானது அடையப்பட்டிருக்கிறது. ஓ! மகவானே! எல்லா உலகங்களிலும் அரசர்கள் க்ஷேமமாயிருக்கிறார்கள்' என்றனர். பலாஸுரனையும் வ்ருத்திரனையுங் கொன்ற இந்திரன், நாரதர் சொல்லியதைக் கேட்டு, 'தர்மந்தெரிந்தவர்களும் உயிரைவிட்டும் சண்டை செய்கின்றவர்களும் (சண்டைக்)காலத்தில் புறங்காட்டாதவர்களும் சஸ்திரத்தால் மரணத்தையடைகிறவர்களுமான அரசர்களுக்கு அக்ஷயமான இந்த லோகமானது, எனக்குக் கொடுப்பது போலவே, இஷ்டத்தைக் கொடுக்கின்றது. அந்தச் சூரர்களான க்ஷத்திரியர்கள் எங்கே? எனக்கு விருப்பமுள்ளவர்களான அதிதிகளாக வருகின்ற அந்த அரசர்களை நான் பார்க்கவில்லையே?' என்று கேட்டான். இவ்விதம் இந்திரனால் வினவப்பட்ட நாரதர், 'ஓ! மகவானே! அரசர்கள் காணப்படாமைக்குக் காரணத்தை என்னிடமிருந்து கேள். தமயந்தியென்று பெயர்பெற்ற விதர்ப்பராஜன்மகள் ரூபத்தால் பூமியிலுள்ள எல்லா ஸ்திரீகளையும் அதிக்கிரமித்தவளாயிருக்கிறாள். ஓ! சக்ர! அவளுடைய ஸ்வயம்வரம் சமீபத்தில் வரப்போகிறது. அவ்விடத்தில் அரசர்களும் ராஜபுத்திரர்களுமாகிய எல்லாரும் போகிறார்கள். ஓ! பலனையும் வ்ருத்திரனையும் கொன்றவனே! உலகத்துக்குச் சிறந்த ரத்னமான அவளை வேந்தர்கள் மிக்க விருப்பத்துடன் எதிர்பார்க்கிறார்கள்' என்றார். இது சொல்லப்படும்போது, அக்னியுடன் கூடின அமரசிரேஷ்டர்

களான லோகபாலர்கள் தேவராஜனின் சமீபத்தில் வந்தார்கள். பிறகு, அவர்கள் யாவரும் நாரதருடைய சிறந்த வார்த்தைகளைக் கேட்டார்கள். கேட்டதுமே மகிழ்ச்சியுற்றவர்களாகி, 'ஆனால், நாமும் போவோம்' என்று சொன்னார்கள். ஓ! மஹாராஜனே! பிறகு, யாவரும் பரிவாரங்களுடனும் வாகனங்களுடனும் அந்த எல்லா அரசர்களும் கூடியிருக்கும் விதர்ப்பதேசத்தை அடைந்தார்கள். ஓ! கௌந்தேய! அரசனான நளனும் அரசர்கள் கூடுவதைக் கேட்டு, தமயந்தியினிடம் ஆசையுள்ளவனாகி, மனத்தில் ஊக்கத்துடன் வந்தனன். பிறகு, தேவர்கள் பூதலத்திலிருக்கின்றவனும் அழகு நிரம்பியிருத்தலால் சரீரத்துடன் நேரில் நிற்கும் மன்மதன்போன்றவனுமான நளனை வழியில் பார்த்தார்கள். அந்த லோகபாலர்கள், விளங்கும் சூரியன்போன்ற அவனைக்கண்டு ரூபத்தின் ஸம்பத்தால் ஆச்சரியம்கொண்டவர்களும் தமயந்தியை அடையும் எண்ணமற்றவர்களுமாகி நின்றார்கள். மன்னவ! பிறகு, தேவர்கள் விமானங்களை ஆகாயத்தில் நிறுத்தி ஆகாயத்திலிருந்து இறங்கி, நளனை நோக்கி, 'ஓ! ஓ! நிஷதராஜேந்திர! நளனே! மெய் பேசும் விரதமுள்ள நீ எங்களுக்கு உதவி செய்யக்கடவாய். நரோத்தம! தூதனாகக் கடவாய்' என்று சொன்னார்கள்.

ஐம்பத்திரண்டாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(நளன் இந்திரன்முதலியவருடைய கட்டளையைத்
தமயந்தியிடம் தெரிவித்தது.)

ஓ! பாரத! நளன், 'செய்கின்றேன்' என்று அவர்களுக்கு உறுதிகூறிப் பிறகு கைகூப்பி வணங்கி, 'நீங்கள் யாவர்? நான் யாருக்குத் தூதுசெல்ல விரும்பப்பட்டேன்? அங்கு நான் என்னசெய்ய வேண்டும்? உண்மையாகச் சொல்லுங்கள்' என்று அவர்களை வினவினன். நளன் இவ்விதம் சொல்லியபோது, இந்திரன், 'எங்களைத் தமயந்தியை உத்தேசித்து வந்த தேவர்களாக அறிந்துகொள். ஓ! அரசனே! நான் இந்திரன்; இவன் அக்கினி; அப்படியே இவன் வருணன்; இவனும் மனிதர்களின் சரீரத்தை நாசம் செய்கின்ற யமன். நீ, நாங்கள் வந்திருப்பதை, 'இந்திரன் முதலிய லோகபாலர்கள் பார்க்க விருப்பமுள்ளவர்களாகி வருகிறார்கள். தேவர்க

ளான இந்திரனும் அக்னியும் வருணனும் யமனும் உன்னை அடைய விரும்புகின்றார்கள். அவர்களுள் ஒருவனைக் கணவனாக வரிப்பாயாக' என்று தமயந்திக்குத் தெரிவிக்கக்கடவாய்' என்று சொன்னான். இந்திரனால் இவ்விதம் சொல்லப்பட்ட அந்த நளன், கைகூப்பிக்கொண்டு, 'ஒரே பிரயோஜனத்தைக்குறித்து வந்த என்னை நீங்கள் அனுப்புவது தகாது. ஓ! அமரேஸ்வர! ஒருஸ்திரீயினிடம் ஆசையுள்ள மனிதன் (அவளைப்பார்த்துப்) பிறனுக்காக இவ்விதம் சொல்ல எப்படி [1] உடன்படுவான்? அதனை ஆலோசனை செய்' என்று சொன்னான். நளனால் இவ்விதம் சொல்லப்பட்ட இந்திரன் திரும்பவும், 'ஓ! நளனே! 'செய்வேன்' என்று முந்தி எங்களிடத்தில் உறுதிகூறி எதனால் நீ செய்யாமல் போவாய்? ஓ! நைஷத! போ. தாமதம் வேண்டாம். அப்படிப்பட்ட நீ நாங்கள் வந்திருப்பதைத் தமயந்திக்குத் தெரிவிப்பாய். நீ தேவர்களின் உத்தரவைச் செய்வாயானால் மேன்மையை அடைவாய்' என்றான். அந்தத்தேவர்களால் இவ்விதம் சொல்லப்பட்ட அந்த நைஷதன், திரும்பவும், 'நன்கு காவல் செய்யப்பட்ட மாளிகைகளுள் நுழைய எப்படித் துணிவேன்?' என்றான். இந்திரன், 'நுழைவாய்' என்று அவனுக்கு மறுபடியும் சொல்லினன். அவன், 'அப்படியே ஆகுக' என்று சொல்லித் தமயந்தியின் வீட்டை அடைந்தான். அவ்விடத்தில் தோழியரின் கூட்டங்களால் சூழப்பெற்றவளும் சரீரத்தாலும் சோபையாலும் மிகப் பிரகாசிக்கின்றவளும் சிறந்த நிறமுள்ளவளும் மிக்க ஸௌகுமாரமான அங்கமுள்ளவளும் சிறுத்த இடையுள்ளவளும் அழகிய கண்ணுள்ளவளும் தன்காந்தியால் சந்திரனையும் பழிக்கிறவள்போன்றவளுமான அந்தத் தமயந்தியைப் பார்த்தான். அழகிய சிரிப்புள்ளவளான அவளைப்பார்த்தவுடனே, அவனுக்குக் காமம் வளர்ந்தது. (தேவர்களின் கட்டளையை) உண்மையாக நிறைவேற்ற எண்ணித் தன் விருப்பத்தை அடக்கிக்கொண்டான். பிறகு, அந்தச் சிறந்த மங்கையர்கள் நளனைப்பார்த்துப் பரபரப்புள்ளவர்களும் அவனது காந்தியால் மேற்கொள்ளப்பட்டவர்களுமாகி ஆஸனங்களிலிருந்து எழுந்திருந்தார்கள். ஆச்சரியத்துடன் கூடியவர்களான அவர்கள், நன்கு பிரீதியுள்ளவர்களாகி நளனைப் புகழ்ந்தார்கள். இவனை நோக்கிப் பேசவுமில்லை. 'இந்த மஹாத்மாவின் ரூபம் ஆச்சரியமாயிருக்கிறது, காந்தி ஆச்சரியமாயிருக்கிறது. தைரியமும் ஆச்சரியமாயிருக்கிறது. இவன்

---

1 'உத்ஸஹேத' என்று பாடம் கொள்ளப்பட்டது.

யார்? தேவனாகவோ யக்ஷனாகவோ அல்லது கந்தர்வனாகவோ இருக்கவேண்டும்' என்று மனத்தாலேயே பூஜித்தார்கள். அவனுடைய தேஜஸினால் மேற்கொள்ளப்பட்ட அந்தச் சிறந்த ஸ்திரீகள் லஜ்ஜையுள்ளவர்களாகி அவனை எதுவும் சொல்லுதற்குச் சக்தியற்றிருந்தார்கள். பிறகு, சிரிப்பவள்போலிருப்பவளும் புன்னகையுடன் முந்திப்பேசுகிறவளும் ஆச்சர்யமடைந்தவளுமான தமயந்தி வீரனான நளனைப்பார்த்துச் சொல்லலானாள். 'ஓ! குற்றமற்ற எல்லா அங்கங்களுமுள்ளவனே! எனக்கு விருப்பத்தை விருத்தி செய்பவனே! வீர! குற்றமற்றவனே! நீ யார்? தேவன்போல வந்திருக்கின்றாய். (உன்னை) அறிந்துகொள்ள விரும்புகிறேன். இங்கு எப்படி வந்தாய்? (காவலர்களால்) எவ்விதம் காணப்படாதவனாயிருக்கிறாய்? என் வீடு நன்குகாப்பாற்றப்பட்டிருக்கின்றதன்றோ? அரசரும் கடுமையான ஆஜ்ஞையுள்ளவர்' என்றாள். தமயந்தியால் இவ்விதம் சொல்லப்பட்ட நளன் அவளைப் பார்த்து, 'ஓ! கல்யாணி! என்னை நளனென்றும், தேவதூதனாக இங்கு வந்தவனென்றும் அறிந்துகொள். தேவர்களான இந்திரனும் அக்னியும் வருணனும் யமனும் உன்னை அடையவிரும்புகிறார்கள். ஓ! அழகியே! அவர்களுள் ஒரு தேவனைப் பதியாக வரிப்பாயாக. நான் அவர்களின் மஹிமையாலேயே பார்க்கப்படாதவனாகிப் பிரவேசித்தேன். பிரவேசிக்கின்ற என்னை ஒருவனும் பார்க்கவும்இல்லை; தடுக்கவும் இல்லை. ஓ! சுபமானவளே! நான் இதற்காகத் தேவஸ்ரேஷ்டர்களால் அனுப்பப்பட்டேன். ஓ! நல்ல காந்தியுள்ளவளே! இதைக் கேட்டு விருப்பப்படி புத்தியைச்செலுத்துவாயாக' என்று மறுமொழி சொன்னான்.

ஐம்பத்துமூன்றாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(நளனும் தமயந்தியும் பேசியதும், நளன் தமயந்தியின் சொல்லை இந்திராதியர்க்குத் தெரிவித்ததும்.)

அவள், தேவர்களுக்கு நமஸ்கரித்து (ச் சிரித்துக்கொண்டு) நளனைநோக்கி, 'அரசனே! (என்னை) உள்ளபடி நம்பு. உனக்கு நான் என்னசெய்யவேண்டும்? நானும் மற்றும் என்னுடைய பொருள் முழுமையும் உன்னுடையவையே. ஓ! ஈஸ்வர! உறுதியாக

நம்பு. . ஓ! அரசனே! ஹம்ஸங்களின்சொல் என்னை எரிக்கிறது. ஓ! வீர! உன்னை வருவித்தற்காகவன்றோ அரசர்கள் என்னால் கூட்டப்பட்டார்கள்? ஓ! பெருமையையளிப்பவனே! நீ (உன்னிடம்) அன்புவைத்த என்னை மறுப்பாயானால் உன்னிமித்தம் விஷத்தையோ அக்கினியையோ ஜலத்தையோ கயிற்றையோ அடைவேன்' என்றாள்.

தமயந்தியால் இவ்விதம் சொல்லப்பட்ட நளன், அவளை நோக்கி, 'லோகபாலர்கள் இருக்கும்போது மனிதனை ஏன் விரும்புகிறாய்? நான், மஹாத்மாக்களும் உலகத்தைப் படைக்கின்றவர்களும் ஈச்வரர்களுமான அவர்களுடைய பாத தூளிக்கும் ஒப்பாக மாட்டேன். அவர்களிடத்தில் உன்னுடைய மனம் செல்வதாகுக. தேவர்களுக்கு அப்ரியத்தைச் செய்கின்ற மனிதன் மரணத்தை அடைகின்றானன்றோ? குற்றமற்ற அங்கமுள்ளவளே! என்னைக் காப்பாற்று. தேவச்ரேஷ்டர்களை வரிப்பாயாக. அழுக்கற்ற வஸ்திரங்களையும் தேவலோகத்திலுள்ள சித்திரமான மாலைகளையும் திவ்யமான பூஷணங்களையும் தேவர்களை அடைந்து அனுபவிப்பாயாக. எவன் இந்தப் பூமி முழுமையையும் சுருக்கித் திரும்பவும் விழுங்குகின்றானோ தேவர்களுக்கு ஈசனான அந்த அக்னியை எவள் கணவனாக வரிக்கமாட்டாள்? எவனுடைய தண்டபயத்தால் எல்லாப் பிராணிக்கூட்டங்களும் ஒன்றுசேர்ந்து தர்மத்தையே அனுஸரிக்கின்றனவோ அந்த யமனை எவள் பதியாக வரிக்கமாட்டாள்? தர்மத்தில் மனமுள்ளவனும் மஹாத்மாவும் தைத்யரையும் தானவர்களையும் கொல்லுகின்றவனும் எல்லாத் தேவர்களுக்கும் மேலானவனுமான அந்த இந்திரனை எவள் பதியாக வரிக்கமாட்டாள்? எண்ணுவாயானால், லோகபாலர்களுள் வருணனைச் சங்கையற்ற மனத்தினால் (பர்த்தாவாகச்) செய்துகொள். இந்த நண்பன் வார்த்தையைக் கேள்' என்று மறுமொழி சொன்னான்.

நைஷதனால் இவ்விதம் சொல்லப்பட்ட அந்தத் தமயந்தியானவள் பிறகு சோகத்தாலுண்டான ஜலத்தால் நன்கு நனைக்கப்பட்ட கண்களுடன், 'ஓ! ப்ருதிவீபதியே! நான் எல்லாத் தேவர்களுக்கும் நமஸ்கரித்து உன்னையே பர்த்தாவாக வரிக்கிறேன். இதனை ஸத்யமாக உனக்குச் சொல்லுகிறேன்' என்றசொல்லைச் சொன்னாள். பிறகு, நடுங்குகின்றவளும் கைகூப்பினவளுமான அவளை நளன், 'ஓ! கல்யாணி! நான் தூதனாக வந்து என் பிரயோஜனத்தை

[1] விரும்புவதற்குத் துணியவில்லை. நான் விசேஷமாகத் தேவர்களுக்கு உறுதி கூறி (அந்தப்) பிறர்விஷயத்தில் முயற்சிசெய்த பின்னர் [2] எவ்விதம் என் பிரயோஜனத்தை இங்கு விரும்புவேன்? (நான் சொல்லும்) இது தர்மமானால் எனக்கு அதிலிருந்து என் பிரயோஜனமும் கைகூடும். இவ்விதம் என் பிரயோஜனத்தைச் செய்வேன். சுபமானவளே! நீயும் அவ்விதம் செய்' என்றான். பிறகு, சுத்தமான சிரிப்புள்ள தமயந்தி மறுமொழி சொல்லுபவளாகிக் கண்ணீரால் தடைப்பட்ட சொல்லை மெதுவாக நளராஜனை நோக்கிச் சொல்லலானாள். 'ஓ! நரேச்வர! அரசனே! எவ்விதத்திலும் உனக்குத் தோஷம்வரக்கூடாததும் அபாயமற்றதுமான உபாயமானது என்னால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஓ! நரச்ரேஷ்ட! என்னுடைய ஸ்வயம்வரம் நடக்குமிடத்துக்கு நீயும் இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் சேர்ந்து வாருங்கள். மனிதப் புலியே! மனிதர்க்கதிபனே! பிறகு, நான் லோகபாலர்களின் முன்னிலையில் உன்னை வரிப்பேன். இவ்விதம் (செய்தால்) தோஷம் வராது' என்றாள். ஓ! வேந்தனே! தமயந்தி இவ்விதம் சொல்லக் கேட்ட அரசனான நளன் தேவர்கள் கூடியிருக்குமிடத்துக்குத் திரும்பவும் வந்தனன். மஹேச்வரர்களான லோகபாலர்கள், அவ்விதம் வருகின்ற அவனைப் பார்த்தார்கள். பிறகு, அவனைப் பார்த்து, 'ஓ! அரசனே! சுத்தமான சிரிப்புள்ள தமயந்தி உன்னால் பார்க்கப்பட்டாளா? பூமிபதியே! குற்றமற்றவனே! எங்களெல்லாரையும்பற்றி என்ன சொன்னாள்? எங்களுக்குச் சொல்' என்று அந்த எல்லா விருத்தாந்தத்தையும் அவனைக் கேட்டார்கள். நளன் சொல்லலானான். 'நான் உங்களால் கட்டளையிடப்பட்டு மிக விசாலமான கட்டுக்களுள்ளதும் கோல்பிடித்த கிழவர்களால் சூழப்பட்டதுமான தமயந்தியின் மாளிகையில் நுழைந்தேன். அவ்விடத்தில் பிரவேசிக்கின்ற என்னை அந்த ராஜகுமாரியைத் தவிர ஒருமனிதனும் உங்களுடைய சக்தியினாலேயே பார்க்கவில்லை. இவளுடைய தோழிகளும் என்னால் பார்க்கப்பட்டார்கள். அவர்களாலும் நான் பார்க்கப்பட்டேன். ஓ! தேவர்களுக்குத் தலைவர்களே! யாவரும் என்னைப்பார்த்து ஆச்சரியமுள்ளவர்களுமானார்கள். ஓ! ஸுரோத்தமர்களே! நீங்கள் என்னால் புகழப்படும்போதும் அழகிய முகமுள்ள அவள் வேறு எண்ணமற்

1 'ஈப்ஸிதம்' என்னும் பாடம் கொள்ளப்பட்டது
2 இரட்டித்தலால், 'கதம்னு' என்பது விடப்பட்டது.

றவளாகி என்னையே வரிக்கிறாள். சிறுமியான அவள், 'ஓ! மனிதரிற் சிறந்தவனே! என் ஸ்வயம்வரம் நடக்குமிடத்துக்கு உன்னுடன் கூடத் தேவர்கள் வரக்கடவர். ஓ! நிடதநாடனே! மிக்க தோள்வன்மையுள்ளவனே! அவர்களுடைய முன்னிலையில் நான் உன்னை வரிப்பேன். இவ்விதமானால் உனக்குக் குற்றம் வராது' என்றும் என்னிடம் சொன்னாள். ஓ! தேவர்களே! என்னால் இவ்வளவு (செய்தி) தான் நடந்தபடி கொண்டுவரப்பட்டது. [1] மிச்ச விஷயத்தில் தேவேஸ்வரர்களான நீங்களே பிரமாணம்' என்றான்.

ஐம்பத்துநான்காவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம் (தொடர்ச்சி.)

(ஸ்வயம்வர மண்டபத்தில் இந்திரன்முதலியோர் நளனுருக்கொண்டு அவன் பக்கத்திலேயே இருந்ததும், தமயந்தியின் குணத்துக்கு மகிழ்ந்த இந்திராதியர்அருளால் அவள் நளனுக்கே மாலை சூட்டியதும்.)

பிறகு, சுபமானகாலமும் புண்ணியமான திதியும் அப்படியே க்ஷணமும் வந்தபோது, பீமராஜன் ஸ்வயம்வரத்தில் அரசர்களை அழைத்தான். எல்லா அரசர்களும் அதனைக்கேட்டுக் காமத்தால் பீடிக்கப்பட்டவர்களாகித் தமயந்தியை அடையவிருப்பங்கொண்டு விரைவாக வந்தார்கள். அந்த அரசர்கள் பொன்னாலாகிய தூண்களால் அழகியதும் தலைவாயிலால் விளங்கப்பெற்றதுமான மண்டபத்தில் பெரிய சிங்கங்கள் மலையில் பிரவேசிப்பதுபோலப் பிரவேசித்தார்கள். நன்கு சுத்தம்பண்ணப்பட்ட ரத்னமயமான குண்டலமணிந்தவர்களும் வாஸனையுள்ள மாலை தரித்தவர்களுமான எல்லா அரசர்களும் அங்குப் பலவித ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். நராதிப! நாகர்களால் நிறைந்த போகவதி என்னும் பட்டணம்போலவும் புலிகளால் நிறைந்த மலையின் குகைபோலவும் புருஷஸ்ரேஷ்டர்களால் நன்குநிறைந்த அந்தராஜஸபையில் [2] புண்ணியஸ்லோகனான நளன் தேவர்களுடன் பிரவேசித்தான். அங்குப் பரிகாயுதம்போன்ற பருத்த கைகள், வடிவத்திலும் நிறத்திலும்

---

1 மிச்ச விஷயங்கள் உங்களைப் பொறுத்திருக்கின்றன என்பது.

2 புண்யத்தைத் தரும் சரித்திரத்தை அல்லது புகழை உடையவன்; நளனும் யுதிஷ்டிரரும் கிருஷ்ணரும் ஸீதையும் திரௌபதியும் புண்யஸ்லோகர் எனப்படுவர். சப்தகல்பத்ருமம் பார்க்க.

மிக அழகிய ஐந்துதலையுள்ள நாகங்கள்போலக் காணப்பட்டன. அழகிய கேசத்தின் முனைகளையுடையவையும் அழகியவையும் நல்ல மூக்குள்ளவையும் சுபமானவையுமான அரசர்களின் முகங்கள் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் போல விளங்கின. பிறகு, அழகிய முகமுள்ள தமயந்தி, காந்தியால் அரசர்களின் கண்களையும் மனங்களையும் கவருகிறவளாகி ஸபாமண்டபத்தில் பிரவேசித்தாள். பார்க்கின்ற அந்த மஹாத்மாக்களுடைய பார்வையானது அவளுடைய அங்கங்களில் எக்கெங்கேவிழுந்ததோ அங்கங்கே பதிந்துவிட்டது; அசையவே இல்லை. ஓ! பாரத! பிறகு, அங்கே மன்னர்களின் பேர்கள் சொல்லப்படும்போது, ஒத்தவடிவமுள்ள ஐந்து ஆடவர்களைத் தமயந்தி பார்த்தாள். பிறகு, அவள் வேற்றுமையில்லாத வடிவத்துடனிருக்கிற அவர்கள் யாவரையும் பார்த்துச் சந்தேகத்தால் அரசனான நளனை அறியவில்லை. அழகிய அவள் அங்கு வேற்றுமையில்லாத பிராயமும் வேஷமும் ரூபமும் உள்ள அவர்களுள் எவனெவனைப் பார்த்தாளோ அவனவனை நளராஜனாக எண்ணினாள். பிறகு, அந்தப்பெண் ஆலோசிக்கின்றவளாகி, 'எவ்விதம் தேவர்களை அறிவேன்? எவ்விதம் நளராஜனை அறிவேன்?' என்று புத்தியால் ஆராய்ந்தாள். பாரத! இங்ஙனம்ஆலோசிப்பவளும் மிக்க துயரடைந்தவளுமான அந்தத்தமயந்தி முன் கேட்டிருந்த தேவர்களின் அடையாளங்களை நினைத்தாள். 'பெரியோர்களிடமிருந்து என்னால் கேட்கப்பட்ட தேவர்களுடைய அடையாளங்களைப் பூமியில் நிற்கின்றவர்களுள் ஒருவருக்காவது நான் காணவில்லை' என்று இப்படிப் பலவாறாக எண்ணியும் அடிக்கடி ஆராய்ந்தும் தேவர்களைச் சரணமடைவதைத் தக்கதென்றெண்ணினாள். அவள் வாக்கினாலும் மனத்தாலும் தேவர்களுக்கு நமஸ்காரம் செய்து கை கூப்பிக்கொண்டு நடுங்குகிறவளாகிப் பின் வருமாறு சொல்லலானாள்.

'அன்னங்களின் சொல்லைக்கேட்டு எனக்குப் பதியாயிருக்கும் விஷயத்தில் நளன் வரிக்கப்பட்டானென்னும் ஸத்யத்தினால் தேவர்கள் எனக்கு அந்த நளனைக் காட்டக்கடவர். நான் மனத்தாலும் வாக்கினாலும் தவறாமலிருக்கிறேனென்னும்ஸத்தியத்தினால் தேவர்கள் அவனையே எனக்குக் காட்டக்கடவர். தேவர்களால் அந்த நிஷதராஜன் எனக்குப் பர்த்தாவாகச்செய்யப்பட்டானென்னும் ஸத்யத்தால்[1] தேவர்கள் அவனையே எனக்குக் காட்டக்கடவர்.

1 'மே' என்னும் ஒரு சொல் விடப்பட்டது.

என்னால் நளனுடைய ஆராதன விஷயத்தில் இந்த விரதமானது தொடங்கப்பட்டதென்னும் என்னுடைய ஸத்யத்தால் தேவர்கள் அவனையே எனக்குக் காட்டக்கடவர். நான் புண்யச்லோகனான நராதிபனை அறியும்படி மகேச்வரர்களான லோகபாலர்கள் தம் உருவத்தையே விளக்கக்கடவர்' என்றாள். தேவர்கள் தமயந்தியின் அந்த மனத்தையுருக்கும் புலம்பலையும் நளனிடத்தில் மேலான நிச்சயத்தையும் உண்மையான அன்பையும் மனச்சுத்தியையும் புத்தியையும் பக்தியையும் நளனிடத்தில் ஆசையையும் கண்டு (அவள்) சொன்னபடி அடையாளத்தைத் தரிப்பதில் (இருந்த ரூபத்திலேயே தேவர்களென்பதைக் காட்டுவதாகிய) திறமையைச் செய்தார்கள். அவள், எல்லாத் தேவர்களையும் வேர்வையற்றவர்களும் கண்ணிமையாதவர்களும் வாடாமாலையுள்ளவர்களும் புழுதியில்லாதவர்களும் பூமியைத் தொடாமல் நிற்கின்றவர்களுமாகப் பார்த்தாள். நிழலை இரண்டாவதாயுடையவனும் வாடின மாலையும் புழுதியும் வெயர்வையுமுள்ளவனும் பூமியிலிருப்பவனுமான நளன் இமைக்கொட்டாலும் அறிவிக்கப்பட்டான். ஓ! பாரத! பாண்டவ! அந்தத் தமயந்தியோ அந்தத் தேவர்களையும் புண்யச்லோகனான நளனையும் நன்கு பார்த்து நளனைத் தர்மமாக வரித்தாள். நீண்ட கண்ணுள்ள அவள் மிக்க லஜ்ஜையுள்ளவளாகி அவனது முன்தானையைப் பிடித்தாள்; மிக்க அழகான மாலையை அவன் கழுத்தில் போட்டாள். உத்தமஸ்திரீயான அவள் அவனையே பதியாக வரித்தாள். பிறகு, அரசர்களால் விரைவாக, 'ஆ! ஆ!' என்ற சப்தம் செய்யப்பட்டது. ஓ! பாரத! அங்கே அரசனான நளனைப் புகழ்கின்றவர்களும் ஆச்சரியமடைந்தவர்களுமான தேவர்களும் மஹாரிஷிகளும், 'நன்று, நன்று' என்ற சொல்லைச் சொல்லினர்.

ஓ! கௌரவ்ய! வீரஸேனன் மைந்தனான அரசன், மனமகிழ்ச்சியுடன், சிறந்த இடையையுடைய தமயந்தியை நோக்கி, 'ஓ! கல்யாணி! அழகிய சிரிப்புள்ளவளே! நீ தேவர் முன்னிலையில் என்னைக் கணவனாக அடைகின்றாயாதலால், என்னை உன் வார்த்தையில் கட்டுப்பட்டவனென்றும் பர்த்தா (=போஷிப்பவன்) என்றும் அறிந்துகொள்' என்னும் இதனையும், 'என் தேகத்தில் உயிருள்ளவரையிலும் உன்னிடத்திலேயே இருப்பேன்' என்னும் இதனையும் ஸத்தியமாக உனக்குச் சொல்லுகிறேன்' என்று இன்சொல் கூறினான். அதுபோலத் தமயந்தியும், 'அப்படியே' என்று இன்சொற்களால் ஒப்புக்கொண்டு கைகூப்பினாள். அவ்விருவர்களும்

ஒருவரிடத்து ஒருவர் பிரியமுள்ளவர்களாகி அக்னி முதலிய தேவர்களைப்பார்த்து,அப்பொழுது அவர்களையே மனத்தால் சரணமடைந்தார்கள். தமயந்தியால் நளன் வரிக்கப்பட்டவுடன், அதிககாந்தியுள்ள எல்லாலோகபாலர்களும் மனமகிழ்ந்து நளனுக்கு எட்டுவரன்களைக் கொடுத்தார்கள். சசீபதியான இந்திரன், ப்ரீதியுள்ளவனாகி, யாகத்தில் (தன்னை) நேரில் காண்பதையும் மேலான நல்ல கதியையும் நளனுக்குக் கொடுத்தான். ஹுதாசனனான அக்னி நளன் விரும்புமிடத்தில் தனது உத்பத்தியையும் தன்போன்ற ஒளியுள்ள லோகங்களையும் அவனுக்குக் கொடுத்தான். யமனோ அன்ன [1] ரஸத்தையும் தர்மத்தில் மேலான நிலைமையையும் கொடுத்தான். வருணன், நளன் விரும்புகிறவிடத்தில் ஜலங்களின் உற்பத்தியையும் சிறந்த மணம் மிகுந்த மாலைகளையும் கொடுத்தான். யாவரும்(தனித்தனி) இரண்டு இரண்டு வரன்களைக் கொடுத்தார்கள். அந்தத் தேவர்கள் இவ்விதம் வரன்களை இவனுக்குக் கொடுத்து ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். பாரத! மஹாராஜனே! இவை யாவற்றையும் நளனும் தமயந்தியும் மற்ற ஜனங்களும் ஸ்வப்னம்போலப் பார்த்தார்கள்.

ஓ! அரசனே! பிறகு, பீமராஜன் எல்லாப் பூபாலர்களும் சேர்ந்திருக்கும்போது மனிதர்களால் செய்ய முடியாத ஸ்வயம்வரத்தைச் செய்தான். ஓ! பாரத! பீமபுத்ரியான தமயந்தியும் ஐஶ்வரியமுள்ள அந்த ராஜமண்டலத்தைப் பார்த்து ஆலோசனை செய்து தர்மமாக நளனை வரித்தாள். தமயந்தியால் நளன் வரிக்கப்பட்டு ஸ்வயம்வரம் முடிந்தவுடன், எல்லா அரசர்களும் வந்தது போலவே போயினர். அரசர்கள் இவனுக்கும் தமயந்திக்கும் (நடந்த) விவாக (நிச்சய)த்தைப் பார்த்து ஆச்சரியமுள்ளவர்களாகிச் சந்தோஷமடைந்து வந்ததுபோலப்போயினர். ராஜஶ்ரேஷ்டர்கள் போனவுடன், பெரிய மனமுள்ள பீமராஜன் மனமகிழ்ந்து தமயந்திக்கும் நளனுக்கும் விவாகத்தை நடத்தினான். மனிதஶ்ரேஷ்டனான நைஷதன் அங்கு இஷ்டப்படி வஸித்துப் பீமனால் விடையளிக்கப்பட்டவனாகித் தன் நகரத்தை அடைந்தான். ஓ! அரசனே! புண்யஶ்லோகனான நளனும் ஸ்திரீ ரத்னத்தை அடைந்து பலாஸுரனையும் விருத்ரனையும் கொன்ற இந்திரன் இந்திராணியுடன் மகிழ்ந்ததுபோல அவளுடன் மகிழ்ந்திருந்தான்.

---

[1] அவன் சமைத்தது என்ன அன்னமானாலும் அது சுவையுள்ளதாயிருத்தலை என்பது.

மிக்க சந்தோஷமடைந்த வீரனான ராஜன் ஸூரியன்போல விளங்குகின்றவனாகிப் பிரஜைகளைத் தர்மத்துடன் காப்பாற்றிக்கொண்டு மகிழ்வித்தான். புத்தியுள்ள அவன் நஹுஷபுத்திரனான யயாதிபோல அச்வமேதத்தாலும் பூர்ணதக்ஷிணையுள்ள மற்றும் அனேகயாகங்களாலும் தேவர்களைத் திருப்திசெய்தான். திரும்பவும் தேவனுக்கொப்பானநளன் தமயந்தியுடன் அழகியவனங்களிலும் தோட்டங்களிலும் விளையாடினான். பிறகு, பெரியமனமுள்ள (அவன்) தமயந்தியினிடம் இந்திரசேனனென்னும் புத்திரனையும் இந்திரசேனை என்னும் கன்னியையும் உண்டுபண்ணினான். இவ்விதம் அந்தநராதிபனான அரசன் யாகம்செய்பவனாகவும் விளையாடுபவனாகவும் தனத்தால் நிரம்பின பூமியைக் காத்துவந்தான்.

ஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(இந்திரன் முதலியோர் கலியையும் துவாபரனையும் வழியிற்கண்டதும், தமயந்தி நளனைவரித்ததைஅறிந்து கலி துவாபரனைத் துணைகொண்டு நளனை அவமானப்படுத்துவதாக உறுதிகூறியதும்.)

தமயந்தியால் நளன் வரிக்கப்பட்டவுடன், மிக்கஒளியுள்ள லோகபாலர்கள், போம்பொழுது, கலியுடன்வருகின்ற துவாபரனைப் பார்த்தார்கள். பிறகு, பலனையும் விருத்ரனையும்கொன்றஇந்திரன் கலியைப்பார்த்து, 'ஓ! கலியே! நண்பனான துவாபரனுடன் எங்கே போகின்றாய்? சொல்' என்றுவினவினான். பிறகு, கலி (இந்திரனை நோக்கி), 'தமயந்தியின்ஸ்வயம்வரத்தை அடைந்து அவளை வரிக்கப்போகிறேன். என்னுடையமனம் அவளை அடைந்திருக்கிறது' என்றுசொன்னான். இந்திரன் அவனைநோக்கிச் சிரித்துக்கொண்டு, '(அந்த) ஸ்வயம்வரம் முடிந்துவிட்டது. அவளால் எங்கள்சமீபத்தில் நளராஜன் பதியாகவரிக்கப்பட்டான்' என்றுசொன்னான். இவ்விதம் இந்திரனால்சொல்லப்பட்டகலி, கோபங்கொண்டு, அந்தத் தேவர்கள்யாவரையும் அழைத்து, அப்பொழுது, 'அவள் தேவர்களுக்குநடுவில் மனிதனைப்பதியாக அடைந்தமையால், அவளுக்குப் பெரியதண்டனைசெய்வது நியாயமாகுமன்றோ?' என்று இந்தச்சொல்லைச் சொன்னான். இவ்விதம் கலியால்சொல்லப்பட்டவுடன், அந்தத்தேவர்கள், 'எங்களால் அனுமதியளிக்கப்பட்ட

பிறகே தமயந்தியால் நளன் வரிக்கப்பட்டான். கலியே! விதிப்படி வ்ரதானுஷ்டானம்செய்து எல்லாத்தர்மங்களையும் அறிந்தவனும் எல்லாக்குணங்களுடனுங்கூடினவனுமான நளராஜனை எவள்தான் வரிக்கமாட்டாள்? இதிஹாஸத்தை ஐந்தாவதாகவுடைய நான்கு வேதங்களையும் முழுமையும் அத்யயனம்செய்தவனும், தன்வீட்டில் தர்மமாக யாகங்களில் எப்பொழுதும் தேவர்களைத் திருப்திசெய்பவனும், கொல்லாமையில் மிக்கபற்றுள்ளவனும், மெய்பேசுகின்றவனும், உறுதியானவிரதமுள்ளவனும், லோகபாலர்களுக்கு ஒப்பானவனும், புருஷஸ்ரேஷ்டனும், தன்னிடம் ஸாமர்த்தியமும் தைரியமும் ஞானமும் தவமும் சௌசமும் தமமும் சமமும் நிலைத்திருப்பவனும், இவ்விதரூபமுள்ளவனுமான நளராஜனை எவன் சபிக்க விரும்புகிறானோ அந்தமூடன் தன்னையே சபித்துக்கொண்டவனாவான்; தானாகவே தன்னைக்கொல்பவனுமாவான். கலியே! எவன் இப்படிப்பட்டகுணமுள்ளநளனைச் சபிக்கவிரும்புகின்றானோ அவன் கஷ்டமானதும் ஆழமுள்ளதும் விரிந்ததுமான நரகமாகிறமடுவில் முழுகுபவன்' என்றுமறுமொழிசொல்லினர். தேவர்கள் கலியையும் த்வாபரனையும் இவ்விதம்சொல்லிவிட்டு ஸ்வர்க்கத்தைஅடைந்தனர்.

பிறகு, தேவர்கள் போனவுடன், கலி, த்வாபரனைநோக்கி, 'ஓ! த்வாபர! கோபத்தைஅடக்கச் சக்தியற்றவனாயிருக்கிறேன்; நளனிடத்தில் வஸிப்பேன்; அவனை ராஜ்யத்தினின்றும் நழுவச்செய்வேன். (அவன்) தமயந்தியுடன் ரமிக்கப்போகிறதில்லை. நீயும் சூதுக்காய்களில் நுழைந்து உதவிசெய்யவேண்டும். என்னுடைய ப்ரியத்திற்காக இதில் நீயும் வேலைசெய்பவனாவாய்' என்று சொன்னான்.

ஐம்பத்தாறுவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(கலியின் தூண்டுதலால் புஷ்கரன் நளனைச் சூதுக்கழைத்ததும், இருவரும் சூதாடியதும்.)

இவ்விதம் அந்தக் கலி த்வாபரனுடன் உடன்பாடுசெய்துகொண்டு, பிறகு, அந்த நிடதராஜனிருக்குமிடத்திற்கு வந்துசேர்ந்தான். அவன் தினந்தோறும் (நளனை அடைதற்கு அவன் தவறுசெய்வதான) அவகாசத்தை எதிர்பார்த்துக்கொண்டு நிஷததே

சத்தில் நெடுங்காலம் வஸித்தான். பிறகு, கலியானவன் பன்னிரண்டாவது வருஷத்தில் இவனுடைய அவகாசத்தைக் கண்டான். நைஷதன் ஜலமோசனம்செய்து, கால்களைச் சுத்தம் செய்யாமல் ஆசமனம்செய்து ஸந்தியை உபாஸித்தான். அப்பொழுது அவனிடம் கலி பிரவேசித்தான். அவன் நளனிடம் பிரவேசித்து (மற்றொரு வடிவத்துடன்) புஷ்கர ராஜனது சமீபத்தை அடைந்து, 'வா; நளனுடன் சூதாடு. நீ என்னுடன் சேர்ந்து காய்களைக்கொண்டு ஆடும் சூதில் நளனை வெல்வாய்; நளராஜனையும் ராஜ்யத்தையும் ஜயித்து நிஷத தேசத்தை அடைவாய்' என்று புஷ்கரனை நோக்கிச் சொன்னான். இவ்விதம் கலியினால் சொல்லப்பட்ட புஷ்கரன் நளனை அடைந்தான். கலியும் [1] பாச்சிகை உருவங்கொண்டு அந்தப் புஷ்கரனைப் பின் தொடர்ந்தான். பகைவீரரைக் கொல்லும் பிராதாவான புஷ்கரன் வீரனான நளனை அடைந்து, நாம் [2] பாச்சிகைகளைக் கொண்டு சூதாடுவோம்' என்று அடிக்கடி சொன்னான். பிறகு, பெரியமனமுள்ள அரசன் (அதனைப்) பொறுக்கவில்லை. தமயந்தி பார்த்துக் கொண்டிருக்கையில், (தானும் அவனைச் சூதுக்கு) அழைப்பதே தக்கதென்று எண்ணினான். தெய்வத்தினால் ஆவேசிக்கப்பெற்ற அந்தப் புஷ்கரராஜன் தெய்வத்தினால் அவமதிக்கப்பெற்ற பிராதாவான நளராஜனுடன் விரைந்து சூதாட நன்குதொடங்கினான். அப்பொழுது, கலியினால் ஆவேசிக்கப்பெற்ற நளன் சூதில் வெள்ளி, பொன், வாகனங்கள், ஆடைகள் இவைகளை இழந்தான். பகைவரை அடக்குபவனான அவன் சூதாடும் மதத்தால் மிக மயங்கிச் சூதாடுகின்றதை நண்பருள் ஒருவரும் தடுப்பதில் சக்தியுள்ளவராகவில்லை. ஓ! பாரத! பட்டணத்து ஜனங்கள் யாவரும், கஷ்டதசையிலிருக்கிற அரசனைப் பார்ப்பதற்கும் தடுப்பதற்கும் மந்திரிகளுடன் வந்தார்கள். பிறகு, ஸூதன், தமயந்தியின் ஸமீபம் வந்து, 'ஓ! தேவி! இந்தப் பட்டணத்து ஜனங்கள் காரியமுள்ளவர்களாக வாசலில் நிற்கின்றனர். 'எல்லா ஜனங்களும் அறம்பொருள்களை அறிந்த அரசருடைய [3] விசனத்தைப் பொறாதவர்களாக நிற்

[1] 'வ்ருஷ:' என்பது மூலம்; அதற்கு, காளை முதலிய பல பொருள்களுண்டு. நீலகண்ட வியாக்யானத்திலும், இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக்களிலும் பாச்சிகை யென்று பொருள் செய்திருக்கிறது. நளவெண்பாவிலும் நைடதத்திலும் காளை என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

[2] 'வ்ருஷேண' என்பது மூலம்; 'காளையைப் பந்தயமாக வைத்து' என்பது வேறு பொருள்.

[3] சாந்திபர்வம் 181-ம் பக்கம் குறிப்பில் காண்க.

கின்றூர்கள்' என அரசருக்குத் தெரிவிக்கக்கடவாய்' என்று தெரிவித்தான். பிறகு, அந்தத் தமயந்தி சோகத்தால் அறிவு கலங்கியவளாகவும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவளாகவும் கண்ணீரால் தழுதழுத்த குரலுடன் நைஷதனை நோக்கிச் சொல்லலானுள்.

'ஓ! அரசரே! பட்டணத்து ஜனங்கள் ராஜபக்தியை முன்னிட்டுக்கொண்டு எல்லா மந்திரிகளுடனும் பிராயமுதிர்ந்த சிறந்த பிராம்மணர்களுடனும் வணிகர்களுடனும் கூடி உம்மைப் பார்க்க விருப்பத்துடன் வாயிலில் நிற்கின்றனர். ஓ! வேந்தரே! உமது அருளை அடுத்தவர்களும் சேர்ந்து வந்தவர்களுமான அந்த ஜனங்களைப் பார்க்கக்கடவீர்' என்று இவ்விதம் அடிக்கடி சொல்லினள். கலியினுல் ஆவேசிக்கப்பெற்ற மன்னன் அழகிய கடைக்கண்ணுள்ளவளும் அவ்விதம் புலம்புகிறவளுமான அவளைப் பார்த்து ஒன்றும் சொல்லவில்லை. பிறகு, அந்த எல்லாமந்திரிகளும் அந்தப் பட்டண வாஸிகளும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களாயும் வெட்கமடைந்தவர்களாயும், 'இல்லை; இவன் இருக்கமாட்டான்' என்று சொல்லிக்கொண்டு வீடுகளை அடைந்தார்கள். ஓ! யுதிஷ்டிர! நளனுக்கும் புஷ்கரனுக்கும் பல மாதங்கள் அந்தச் சூதாட்டமானது அவ்விதம் நடந்தது. புண்யஸ்லோகனுன நளன் ஜயிக்கப்பட்டான்.

ஐம்பத்தேழாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தமயந்தி, சூதில் நளன் தோற்றுவிடுவனென்றறிந்து மக்களைப் பாகனுடன் பீமன்நகருக்கு அனுப்பியது.)

ஓ! அரசனே! பிறகு, கலக்கமற்றவளும் பீமன்மகளுமான தமயந்தி, புண்யஸ்லோகனுன அரசன் பித்துக்கொண்டவன் போலச் சூதில் புத்தி செலுத்தினதைக்கண்டு அதிலிருந்து அச்சமும் துயரமும் மேற்கொண்டவளாகி அரசனைக்குறித்து அந்தப் பெரிய காரியத்தைச் சிந்திக்கலானுள். அவள் அவனுக்குக் கெடுதியைச் சந்தேகித்து அவனுக்குப் பிரியத்தைச் செய்ய எண்ணங்கொண்டு, அவனைப் பொருளனைத்தும் கவரப்பட்டவனுக அறிந்து, மிக்க புகழுள்ளவளும் செவிலித்தாயும் வேலைக்காரியும் அனுகூல

மானவளும் எல்லாம் செய்ய வல்லவளும் அன்புள்ளவளும் அழகாகப் பேசுகின்றவளுமான அந்தப்ப்ருஹத்ஸேனை என்பவளை நோக்கி, 'ஓ! பிருஹத்ஸேனையே! போ; நளராஜரின் உத்தரவினால் மந்திரிகளை வரவழைத்து, பொருள்களில் எவ்வளவு கவரப்பட்டதென்பதையும், எவ்வளவு மிச்சமிருக்கிறதென்பதையும் சொல்வாயாக' என்று சொன்னாள். நரேச்வரனே! அந்தப் பிருஹத்ஸேனை இவ்விதம் கட்டளையிடப்பெற்றாள். அவள் மந்திரிகளிடம் தேவியின் வார்த்தையைச் சொன்னாள். பிறகு, அந்த மந்திரிகள் யாவரும் நளன் உத்தரவை அறிந்து, 'நமக்கு க்ஷேமம் உண்டாகுமா?' என்று சொல்லிக்கொண்டு திரும்பவும் வந்தார்கள். அந்த எல்லா ஜனங்களும் இரண்டாவது முறையும் வந்துசேர்ந்தார்கள். (வந்தவர்களைத்) தமயந்தி தெரிவித்தாள். (நளன்) அதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தத்தமயந்தி தனது கணவன் தன்சொல்லை ஏற்றுக்கொள்ளாததைப் பார்த்து வெட்கங்கொண்டவளாகித் திரும்பவும் வீட்டை அடைந்தாள். எப்பொழுதும் காய்கள் நளனுக்கு விரோதமாயிருப்பதையும் நளன் எல்லாப் பொருளுங்கவரப்பட்டவனானதையும்கண்டு திரும்பவும் செவிலித்தாயை நோக்கி, 'ஓ! பிருஹத்ஸேனையே! கல்யாணி! திரும்பவும் போ; நளராஜர் உத்தரவினால் வார்ஷ்ணேயனென ஸூதனை அழைத்துவா. பெரிய காரியம் வந்திருக்கின்றது' என்றாள்.

அந்தப்பிருஹத்ஸேனையும், தமயந்தியின் சொல்லைக் கேட்டு, அந்தரங்கமான வேலைக்காரர்களைக்கொண்டு வார்ஷ்ணேயனை வரவழைத்தாள். பிறகு, தேசகாலமறிந்தவளும் குற்றமற்றவளுமான தமயந்தி வார்ஷ்ணேயனை மெதுவான வாக்கினால் இன்சொற்கூறிக்கொண்டு காலத்திற்கேற்றதைச் சொல்லலானாள். 'அரசர் எப்பொழுதும் உன்விஷயத்தில் நன்கு நடந்துகொள்ளுகிறார் என்பதை நீ அறிவாய். கஷ்டத்திலிருக்கும் அவருக்கு நீ உதவியைச் செய்யக்கடவாய். அரசர் புஷ்கரனால் ஜயிக்கப்படப்பட அவருக்குச் சூதில் ஆசையானது மிகவளர்கிறது. புஷ்கரனுக்குக் காய்கள் ஸ்வாதீனமாக இருந்துகொண்டு (அநுகூலமாக) விழுவதுபோல அரசருக்குக் காய்களில் விபரீதமாக விழுவதும் காணப்படுகின்றது. இந்த நளராஜர் நண்பர்களின் சொற்களையும் உறவினர்களின் சொற்களையும் கேளாததுபோலவே என்சொல்லையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஓ! ஸாரதியே! இப்பொழுது மகாத்மாவான நைஷதராஜருக்கு விளங்குகின்ற செல்வங்களில் மிச்சமில்லையென்று உறுதியாக

நினைக்கின்றேன். ஓ! ஸாரதியே! மயக்கமடைந்த மன்னர் என் சொல்லை ஏற்றுக்கொள்ளாமையால் உன்னைச் சரணமடைகிறேன். நான் சொல்வதைச்செய். பாகனே! (பொருள்களின்) அழிவைக் குறித்து எனது எண்ணம் தெளிவாயில்லையன்றோ? ஆகையால், அரசருக்குப் பிரியமானவையும் மனோவேகமுள்ளவையுமான குதிரைகளைத் தேரில்பூட்டி இரண்டு குழந்தைகளையும் ஏற்றிக்கொண்டு குண்டினபுரத்தை அடையக்கடவாய். என் உறவினர்களிடத்தில் குழந்தைகளையும் அப்படியே தேரையும் இந்தக் குதிரைகளையும் அடைக்கலமாக வைத்துவிட்டு இஷ்டப்படி வஸிப்பாய்; அல்லது, வேறிடத்திலாவது செல்வாய்' என்றாள்.

வார்ஷ்ணேயனென்ற நளஸாரதி தமயந்தியின் அந்தச்சொல்லை முக்கியமாக நளனுடைய மந்திரிகளிடம் முழுதும் தெரிவித்தான். ஓ! மஹீபதியே! அவன் அவர்களால் ஒன்றுசேர்ந்து நிச்சயித்து விடையளிக்கப்பட்டவனாகி, குழந்தைகளைத் (தேரில்) ஏற்றிவைத்துக்கொண்டு அந்த வாகனத்துடன் விதர்ப்பதேசத்தை அடைந்தான். ஸூதன் அவ்விடத்தில் குதிரைகளையும் அந்தச்சிறந்த தேரையும் இந்திரசேனையென்னும் அந்தக் கன்னிகையையும் இந்திரசேனனென்னும் சிறுவனையும் வைத்துவிட்டு, பீமராஜனிடம் விடைபெற்றுக்கொண்டு, நளராஜனைக் குறித்துத் துக்கித்துக் கஷ்டமடைந்தவனாகி, 'எங்குப் போவேன்?' என்று அடிக்கடி மனத்தால் சிந்தித்துக்கொண்டே அப்பொழுது அங்கிருந்து நடந்து அயோத்தி நகரத்தை அடைந்தான். அவன் மிக்கதுயரமுள்ளவனாகி ருதுபர்ணராஜனை அடைந்தான்; ஸாரத்தியத்தில் நியமிக்கப்பட்டான். அவனும் இவனுக்குச் சம்பளத்தைக் கொடுத்தான்.

ஐம்பத்தெட்டாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(நளன் சூதில் புஷ்கரனால் ஜயிக்கப்பட்டுத் தமயந்தியுடன் காட்டுக்குப்போனதும், பறவைகள் நளனது ஆடையுடன் ஆகாயத்தில் சென்றதும்.)

வார்ஷ்ணேயன் போனபிறகும், சூதாடுகிற நளனுடைய மிச்சமிருந்த சிறிது தனமும் ராஜ்யமும் புஷ்கரனால் அபகரிக்கப்பட்டன. ஓ! அரசனே! புஷ்கரன் நாட்டைப் பறிகொடுத்த நளனைநோக்

கிச் சிரித்துக்கொண்டு, 'திரும்பவும் சூது நடக்கட்டும். உனக்கு எதிர்ப்பந்தயம் என்ன இருக்கின்றது? உனக்குத் தமயந்தி ஒருத்தி மிச்சமாயிருக்கிறாள். மற்ற எல்லாம் என்னால் பறிக்கப்பட்டன. நல்லதென்று எண்ணுவாயானால் தமயந்தி பந்தயமாக இருக்கட்டும்' என்றான். புஷ்கரன் இவ்விதம் சொல்லியதைக் கேட்ட நளனுடைய நெஞ்சம் கோபத்தால் பிளக்கப்பட்டதுபோலாயிற்று. (ஆயினும்) அவனை ஒன்றும் சொல்லவில்லை. பிறகு, நளன் புஷ்கரனைப்பார்த்து மிக்க கோபமுள்ளவனாகி, 'ஓ! நராதம! வேறுதனமும் எனக்கு இருக்கின்றது' என்று சொன்னான். புண்யஸ்லோகனான அரசன், மிக்கதுயருற்ற மனமுள்ளவனாகி, (தனது) மேலாடையையும் அப்படியே அவளுடைய ஆபரணங்களையும் (தனது) ஆபரணங்களையும் எல்லா அங்கங்களிலுமிருந்து கழற்றிப் பந்தயமாக வைத்துத் தோற்றுவிட்டு, பிறகு, ஒரே ஆடையுள்ளவனும் போர்த்துக்கொள்ளாதவனும் சினேகிதர்களுக்குத் துயரத்தை மிக வளர்ப்பவனுமாகி மிகப்பெரிதான செல்வத்தையிழந்து வெளிக்கிளம்பினான். பிறகு, தமயந்தி, ஒரேவஸ்திர முள்ளவளாகி, போகிற அவனைப் பின்தொடர்ந்து சென்றாள். அந்த நளன் அவளுடன் நகரத்திற்கருகில் மூன்றுராத்ரி வஸித்தான். ஓ! மஹாராஜனே! புஷ்கரனோ, 'நளனிடத்தில் எவன் நன்கு நடப்பனோ அவன் என்னால் கொல்லத்தக்க நிலைமையை அடைவன்' என்று பட்டணத்தில் முரசறைவித்தான். ஓ! யுதிஷ்டிர! பட்டணத்து ஜனங்கள் அந்தப் புஷ்கரனுடைய சொல்லாலும் அவனுடைய விரோதம் வருமென்ற எண்ணத்தாலும் அந்த நளனுக்கு உபசரணையைச் செய்யவில்லை. பூஜைக்குத்தக்கவனான அந்த அரசன் அப்படிப் பூஜிக்கப்படாதவனாகப் பட்டணத்துக்கு ஸமீபத்தில் ஜலத்தைமட்டும் குடித்துக்கொண்டு மூன்றுராத்திரி வஸித்தான்.

அரசன் அங்கே பசியால் வருத்தமுற்றுப் பழங்களையும் கிழங்குகளையும் [1] தேடுதற்கு அங்கிருந்து கிளம்பினான். தமயந்தியும் அவனைப் பின்தொடர்ந்தாள். நளன் பசியால் பீடிக்கப்படுகின்றவனாகிப் பலநாள் சென்றபின் பொன்போன்ற சிறகுள்ள சில பக்ஷிகளைக் கண்டான். அப்பொழுது, பலசாலியான அந்த நிஷதாதிபதி, 'இப்பொழுது எனக்கு ஆகாரமுமிருக்கின்றது. இது தனமுமாகும்' என்று ஆலோசனை செய்தான். பிறகு, அவன் அவைகளை அரையிலிருந்த வஸ்திரத்தால் நன்கு மூடினான். (அவை)

1 'கர்ஷயங்' என்பது மூலம்.

யாவும் அவனுடைய அந்த ஆடையை எடுத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றன. பிறகு. உயரக்கிளம்பின பக்ஷிகள் நளன் திக்கை வஸ்திரமாயுடையவனும் தலைகுனிந்து தீனனுமாகிப் பூமியில் நிற்கக்கண்டு, 'ஓ! மிக்க கெட்டபுத்தியுள்ளவனே! நாங்கள் சூதுக்காய்கள். உன் ஆடையைக்கவர விருப்பங்கொண்டு வந்தோம். நீ வஸ்திரத்துடன் போவதில் எங்களுக்கு விருப்பமில்லையன்றோ?' என்று இந்தச்சொல்லைச் சொல்லின. அப்பொழுது, புண்யஶ்லோகனை அரசன் அந்தக் காய்கள் போவதையும் தான் வஸ்திரமற்றிருப்பதையும் பார்த்து, பிறகு, தமயந்தியை நோக்கி, 'ஓ! குற்றமற்றவளே! நான் எவைகளுடைய கோபத்தால் ஐஶ்வரியத்தினின்றும் நழுவினவனும் பசியுடன்கூடித் துக்கத்தை அடைந்தவனுமாகி ஆகாரத்தை அடையவில்லையோ, எவைகளுக்காக நிஷததேசத்திலுள்ளவர்கள் என்விஷயத்தில் உபசரணைசெய்யவில்லையோ அப்படிப்பட்ட இந்தக்காய்கள் பறவைகளாகி என் ஆடையையும் கவர்ந்தன. மிக்க விபரீதநிலைமையை அடைந்தவனும் அறிவற்றவனும் துக்கத்தைஅடைந்தவனுமான நான் உன்பர்த்தா (=போஷகன்). இந்தவார்த்தையை உனக்கு நல்லதென்று அறிந்துகொள்ளு. இந்தப் பலவழிகள் தக்ஷிணாபதத்தைக்குறித்து அவந்திநகரத்தையும் ரிக்ஷவான்என்ற மலையையும் தாண்டிப் போகின்றன. இது விந்தியமென்னும் பெரியமலை. (இந்தப்) பயோஷ்ணிநதியும் ஸமுத்திரத்தை அடைகின்றது. மஹரிஷிகளுடைய ஆஶ்ரமங்களும் பல கிழங்குகளுடனும் கனிகளுடனும் கூடினவையாயிருக்கின்றன. இது விதர்ப்பதேசத்தின்வழி. இந்தவழி கோஸலதேசத்திற்குச் செல்லுகின்றது. இதற்குமேல் தெற்கிலுள்ள இந்தத்தேசம் தக்ஷிணாபதமென்பது' என்றுசொன்னான்.

ஓ! பாரத! நளராஜன் மனத்தை அடக்கிப் பீமபுத்ரியான தமயந்தியை நோக்கித் துக்கத்தை அடைந்தவனாகி அடிக்கடி இந்தவாக்கியத்தைச் சொன்னான். பிறகு, துக்கத்தால் வாட்டமடைந்த அந்தத் தமயந்தியானவள் கண்ணீரால் தழுதழுத்த சொல்லால் அந்த நைஷதனைநோக்கி மனத்தை உருக்கும் வார்த்தையைச் சொல்லினள். 'ஓ! பார்த்திவரே! உமது எண்ணத்தை அடிக்கடி ஆலோசிக்கின்ற என் மனம் மிக நடுங்குகிறது. எல்லா அங்கங்களும் தளர்ச்சியடைகின்றன. நாடிழந்தவரும் பொருளைப் பறிகொடுத்தவரும் வஸ்திரமற்றவரும் பசியுடனும் சிரமத்துடனும் கூடியவருமான உம்மை ஜனமில்லாத காட்டில் விட்டு நான் எவ்

விதம் போவேன்? ஓ! மஹாராஜரே! ஶ்ரமத்தை அடைந்தவரும் பசியால் பீடிக்கப்பட்டவரும் அந்தஸுகத்தை எண்ணுகின்றவரு மான உம்முடைய சிரமத்தைப் பயங்கரமான காட்டில் நான் போக்குவேன். எப்போதும் கஷ்டத்தை அடைந்த மனிதனுக்கு எல்லாத் துக்கங்களிலும் மனைவிக்கு ஒப்பான மருந்து ஒன்று மில்லை. இதனை உமக்கு ஸத்யமாகச் சொல்லுகின்றேன்' என்றாள். நளன், 'ஓ! அழகிய இடையுள்ள தமயந்தி! நீ சொல்லுகின்ற இது இவ்விதமே. கஷ்டமடைந்த மனிதனுக்கு மனைவிக்கொப்பான நண்பனும் மருந்தும் இல்லை. நானும் உன்னை விட்டுவிட விருப்ப முள்ளவனல்லேன். பயந்தவளே! ஏன் மிக்க ஸந்தேகத்தையடை கிறாய்? நான் தேகத்தை விடுவேன்; குற்றமற்றவளே! உன்னை விட வே மாட்டேன்' என்றான்.

தமயந்தி சொல்லலானாள்:—'ஓ! மஹாராஜரே! இங்கு நீர் என்னை விட்டுவிட விரும்பவில்லையானால், அப்படியிருக்கையில், விதர்ப்பதேசத்தின் வழியை எதற்காக நன்கு உபதேசிக்கிறீர்? அரசரே! என்னையோ விடத்தக்கவரல்லீர்; நானும் அறிவேன். ஓ! மஹீபதியே! மனம்கலங்கியிருத்தலால் ஒருகால் என்னை விடு வீரோவென்று நானும் (சந்தேகிக்கிறேன்.) ஓ! தேவருக்கு ஒப் பான நரோத்தமரே! எனக்கு அடிக்கடி வழியையும் சொல்லு கின்றீர். இதுகாரணமாக எனக்குத் துயரத்தை வளர்க்கின்றீர். அரசரே! உமக்கு இந்த எண்ணமிருக்குமானால், (நீரும்வர) எண்ணினால், சேர்ந்தே விதர்ப்பதேசத்தை அடைவோம். கௌர வத்தைக் கொடுப்பவரே! அங்கு விதர்ப்பராஜர் உம்மைப் பூஜிப் பார். அரசரே! அவரால் நீர் பூஜிக்கப்பெற்றுச் சுகமாக எங்கள் வீட்டில் வசிப்பீர்' என்றாள்.

ஐம்பத்தோன்பதாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(நளன் தமயந்தியினது ஆடையின் ஒருபாதியைக் கிழித்துக்கொண்டு அவளைத் தனியேவிட்டுச் சென்றது.)

அப்பொழுது, தேவியினால் இவ்விதம் சொல்லப்பட்ட நளன், 'பிதாவின் ராஜ்யம் உனக்கு எவ்விதமோ அவ்விதமே எனக்கு மென்பதில் ஸந்தேகமில்லை. ஆனால், கஷ்டத்திலிருப்பவனாகி எவ்

விதத்திலும் அங்குப் போக மாட்டேன். (ஐஸ்வரியம்) நிறைந்த நான் (முன்) உனக்கு மகிழ்ச்சியை வளர்ப்பவனுகச் சென்று (இபொழுது) கஷ்டத்தை அடைந்து உனக்குத் துயரத்தை வளர்ப்பவனுக எவ்விதம் போவேன்?' என்ற சொல்லைச் சொன்னுன்.

நளராஜன் இவ்விதம் சொல்லிக்கொண்டு வஸ்திரத்தின் பாதியைச் சுற்றிக்கொண்டிருக்கிற கல்யாணியான தமயந்திக்கு அடிக்கடி இன்சொல் கூறினுன். அவ்விருவரும் ஒரே வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டும் இங்கும் அங்கும் அலைந்துகொண்டும் பசிதாகங்களால் களைத்தவர்களாகி ஒரு மண்டபத்தை அடைந்தார்கள். அப்பொழுது, அந்த நிஷதாதிபதியான அரசன் அந்த மண்டபத்தை அடைந்து தமயந்தியுடன் பூதலத்தில் உட்கார்ந்தான். ஆடையற்றவனும் அழுக்கடைந்தவனும் நிறம்மாறினவனும் புழுதியால் பூசப்பட்டவனுமான அவன் களைத்துத் தமயந்தியுடன் பூதலத்தில் உறங்கினுன். அரசனே! பிறகு, அழகியவளான தமயந்தி தன் ஆடையின் தலைப்பைப் பூமியில் விரித்துப் பதியைத் தழுவிக்கொண்டு உறங்கினுள். பிறகு, சோகிக்கப்படத்தக்கவளும் அழகியும் கல்யாணியுமான தமயந்தியும் துக்கத்தை அடைந்து விரைவாக நித்திரையால் இழுக்கப்பட்டாள். ஓ! அரசனே! தமயந்தி உறங்கினவுடன், அரசனை நளனே துயரத்தால் கலக்கப்பட்ட மனமுள்ளவனுகி முன்போலப் படுக்கவில்லை. அவன் அந்த ராஜ்யம் கவரப்பட்டதையும் நண்பர்களை முழுமையும் பிரிந்ததையும் வனத்தில் (ஆடைகவரப்பட்டது முதலிய) அந்தக் கஷ்டத்தையும் கண்டு, 'இதனைச் செய்தால் எனக்கு என்னவரும்? செய்யாவிடில் எனக்கு என்னவரும்? எனக்கு மரணம் மேலானதா? மனைவியை விடுதல் மேலானதா? என்னைக் குறித்து ஆசைகொண்ட இவள் எனக்காக இவ்விதம் துயரத்தை அடைகிருள். இவள் என்னுல் விடப்பட்டாலோ ஒருகால் தன் உறவினரைக் குறித்துச் செல்லுவாள். இவள் என்னுடன் தொடர்ந்தால் துயரத்தை அடைவாளென்பதில் ஸந்தேகமில்லை. விட்டுவிடுவதில் ஒருகால் ஸுகத்தை அடைவாளோ என்ற ஸந்தேகமுண்டு' என்ற ஆலோசனையை அடைந்தான்.

நராதிபனே! அவன் அடிக்கடி பலவாறு ஆலோசித்து உறுதி செய்து தமயந்தியை விடுவது நல்லதென்று கருதினுன். 'இவள் புகழுள்ளவளும் மிக்க பாக்யவதியும் என்னிடத்தில் பக்தியுள்ளவளும் பதிவ்ரதையுமாயிருக்கிருள். இவள் வழியில் ஒருவராலும்

பலத்தால் அவமதிக்கத்தகாதவள்' என்று அவனுடைய எண்ணமானது கெட்ட எண்ணமுள்ள கலியினால் தமயந்திவிஷயத்தில் அப்பொழுது இவ்விதம் அவளை விடுவதில் திரும்பிற்று. அந்த அரசன் தனக்கு ஆடையில்லாமலிருப்பதையும் அவளுக்கும் ஓர் ஆடையே இருப்பதையும் ஆலோசித்து வஸ்திரத்தின் பாதியைக் கிழிக்க எண்ணங்கொண்டான். 'எவ்விதம் வஸ்திரத்தை அறுப்பேன்? எவ்விதம் என் காதலியும் விழித்துக்கொள்ளாமலிருப்பள்?' என்று இவ்விதம் அரசனான நளன் ஆலோசித்து அப்பொழுது மண்டபத்தில் நான்குபக்கத்திலும் திரிந்தான். ஓ! பாரத! நளன் இங்குமங்கும் ஓடுகிறவனாகி மண்டபத்தின் ஓரிடத்தில் உறையற்ற சிறந்த கத்தி ஒன்றை அடைந்தான். பகைவரை வாட்டுபவனான நளன் அதனால் ஆடையின் ஒரு பாதியைக் கிழித்துக் கட்டிக்கொண்டு, பிரஜ்ஞையற்றவளாகித் தூங்கும் விதர்ப்பநாடன்மகளான தமயந்தியைவிட்டு ஓடினான்.

பிறகு, நிடதத்தார்கோமான் தமயந்தியினிடத்தில் மனம் பற்றினவனாகித் திரும்பவும் அந்த மண்டபத்தை அடைந்து அவளைக்கண்டு அப்பொழுது, 'எனது காதலியும் முன்னே வாயுவினாலும் சூரியனாலுங்கூடப் பார்க்கப்பட்டிராதவளுமான இவள் இப்பொழுது நாதனற்றவள்போல மண்டபத்தின் நடுவில் பூமியில் உறங்குகின்றாள். அழகிய சிரிப்புள்ள இவள் விழித்துக்கொண்டு கிழிக்கப்பட்ட (பாதி) ஆடையைச் சுற்றிக்கொண்டவளாகி என்னைப் பிரிந்து, பித்துக்கொண்டவள்போல எவ்விதம் இருப்பள்? அழகிய பதிவ்ரதையான தமயந்தி, என்னைப் பிரிந்து மிருகங்களாலும் பாம்புகளாலும் அடையப்பெற்ற பயங்கரமான காட்டில் ஒருத்தியாக எவ்விதம் ஸஞ்சரிப்பாள்?' என்று அழுதான். நளன், 'மிக்க பாக்கியமுள்ளவளே! ஆதித்யர்களும் வஸுக்களும் ருத்ரர்களும் மருத்கணங்களுடன்கூடின அச்வினீதேவர்களும் உன்னைக் காக்கக் கடவர். தர்மத்தால் சூழப்பட்டவளாயிருக்கின்றாய்' என்று ரூபத்தால் பூமியில் ஒப்பற்ற ப்ரியமான மனைவியைக் குறித்து இவ்விதம் சொல்லிவிட்டுக் கலியினால் அறிவு கவரப்பட்டவனாகி முயற்சியுடன் கிளம்பினான். அரசனான நளன் அடிக்கடி போய்ப் போய் மண்டபத்துக்குத் திரும்பி வருகிறான். கலியினால் இழுக்கப்படுகிறான்; அன்பினால் திருப்பியிழுக்கப்படுகிறான். துயரமடைந்த அவனுடைய மனமானது அப்பொழுது இரண்டுபோலாயிற்று. ஊஞ்சல்போல, அடிக்கடி வருகின்றான்; அடிக்கடி

போகின்றான். ஆயினும், கலியினால் இழுக்கப்பட்ட நளன் மயக்கங்கொண்டு இரக்கத்துடன் மிகப் புலம்பித் தூங்குகின்ற அந்தப்பாரியையை விட்டுவிட்டு ஓடினான். கலியால் ஆவேசிக்கப்பட்டு மனமழிந்து அடிக்கடி அதை அதை எண்ணிக்கொண்டு மயங்கினவனாகி நிர்ஜனமான காட்டில் (காப்பாற்றற்குரிய) மனைவியைத் தனிமையாய் விட்டுப் போயினன்.

அறுபதாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(காட்டில் அலையும் தமயந்தியை மலைப்பாம்பு பிடித்துக்கொண்டதும், ஒரு வேடன் அதனைக் கொன்று அவளை விரும்பினதும், அவள் தனது கற்பினால் அவனைக்கொன்றதும்.)

ஓ! வேந்தே! நளன் விட்டுப் போனவுடன், சிறந்த இடையுள்ளவளும் பயந்தவளுமான தமயந்தி ஜனமற்ற காட்டில் சிரமம் நீங்கினவளாகி விழித்துக்கொண்டாள். கணவனைக் காணாமல் சோகத்துடனும் துக்கத்துடனும் கூடினவளாகிப் பயந்து நளனைக் குறித்து, 'ஓ! மஹாராஜரே! ஆ! நாதரே! ஆ! மஹாராஜரே! ஆ! ஸ்வாமி! ஏன் என்னை விடுகின்றீர்? ஆ! கெட்டுவிட்டேன்; நாசமடைந்தவளாகிறேன். ஓ! மஹாராஜரே! தர்மந்தெரிந்தவரும் சொல்தவறாதவருமாக இருக்கின்றீரல்லவா? அப்படிப்பட்ட நீர் தூங்கும் என்னை எவ்விதம் விட்டுப்போனீர்? மேலும், (என்னால்) தீங்கிழைக்கப்படாத நீர் அடங்கினவளும் பின்தொடர்ந்துவந்தவளும் பாரியையுமான (என்னை) விட்டு எவ்விதம் போகிறீர்? பிறனாலன்றோ தீங்கிழைக்கப்பட்டீர்? ஓ! அரசரே! என் விஷயத்தில் லோகபாலர்களுக்கு எதிரில் முந்தி உம்மால் சொல்லப்பட்ட சொற்களை ஸத்யமாகச் செய்யச் சக்தியற்றவராகிவிட்டீரா? புருஷச்ரேஷ்டரே! மனைவியானவள் உம்மால் விடப்பட்டும் முகூர்த்தமாவது உயிருடனிருக்கின்றாளாதலால் மனிதர்களுக்கு அகாலத்தில் மரணம் விதிக்கப்படவில்லை. ஓ! புருஷச்ரேஷ்டரே! இந்தப் பரிஹாஸம் இவ்வளவு போதுமானது. பகைவரால் மீற முடியாதவரே! மிகவும் பயந்திருக்கிறேன். தலைவரே! உம்மைக் காட்டக்கடவீர். அரசரே! பார்க்கப்படுகின்றீர்; பார்க்கப்படுகின்றீர். நிடதநாடரே! நீர் இதோ நிற்கின்றீர். புதர்களால் உம்மை மறைத்துக்கொண்டு

ஏன் எனக்கு மறுமொழி கூறாமலிருக்கிறீர்? ராஜேந்திரரே! அரசரே! குரூரமானவளும் இங்கே இந்நிலையை அடைந்தவளும் புலம்புகிறவளுமான என்னைத் தழுவித் தேற்றவில்லையே? கஷ்டம்! நான் என்னைக் குறித்தும் மற்ற எதைக் குறித்தும் துயரப்படவில்லை. அரசரே! ஒன்றியாக எவ்விதம் இருப்பீரென்று உம்மைப்பற்றி வருந்துகிறேன். மன்னரே! தாகமுள்ளவரும் பசியுள்ளவரும் சிரமத்தால் இளைத்தவருமாகி மாலைக்காலத்தில் என்னைப் பாராமல் மரத்தடிகளில் எவ்விதம் இருப்பீர்?' என்று உரக்கக் கதறினாள். பிறகு, அவள் கடுமையான துக்கத்தினால் பீடிக்கப்பட்டவளும் கோபத்தினால் எரிகிறவள்போன்றவளுமாகித் துயரமுற்று அழுதுகொண்டு இங்கும் அங்கும் ஓடினாள். சிறுமியான அவள் அடிக்கடி எழுந்திருந்தாள். அடிக்கடி தளர்ந்து விழுந்தாள்; அடிக்கடி பயந்து ஒளிந்துகொண்டாள்; அடிக்கடி அலறினாள்; அழுதாள். துயரத்தால் மிக வாட்டப்பட்டவளும் தளர்ச்சியுற்றவளும் பதிவ்ரதையுமானபீமன்மகள், அடிக்கடி 1 பெருமூச்செறிந்து அழுதுகொண்டு, 'நிஷதாதிபரான இவர் எந்தப் பூதத்தின் சாபத்தால் துக்கத்தால் பீடிக்கப்பட்டவராகி மகிழவில்லையோ அந்தப்பூதத்திற்கு அவருடைய துக்கத்தைப் பார்க்கிலும் அதிக துக்கம் உண்டாகவேண்டும். எந்தப்பாவி பாவஎண்ணமில்லாத நளராஜரை இவ்விதம்செய்தானோ அவன் அவரைக்காட்டிலும் அதிக துக்கத்தை அடைந்து ஸுகமற்ற ஜீவனத்தைச் செய்யக்கடவன்?' என்று சொன்னாள்.

மஹாத்மாவான அரசனுடைய மனைவியான அவளோ இவ்விதம் புலம்பிக்கொண்டு துஷ்டமிருகங்களால் அடையப்பட்ட வனத்தில் நாயகனைத் தேடினாள். பீமபுத்திரியானவள் பித்துக்கொண்டவள்போல, 'ஆ! ஆ! அரசரே!' என்று இடந்தோறும் அடிக்கடி புலம்பிக்கொண்டு இங்கும் அங்கும் ஓடினாள். மிகவாடினவளும் குரரி என்ற பக்ஷிபோல இரக்கத்துடன் மிகக் கதறுகிறவளும் துயரப்படுகிறவளும் புலம்புகிறவளும் அழகிய இடையுள்ளவளும் ஸமீபத்தில் ஸஞ்சரிக்கிறவளும் எதிரில் வந்தவளுமான அந்தத் தமயந்தியை, ஆடுகளை விழுங்கும் பெரிய சரீரமுள்ள ஒரு பாம்பு பசியுடன் கூடியதாகி விரைந்து பிடித்தது. பாம்பினால் விழுங்கப்படுகின்ற அவள் சோகத்தால் பீடிக்கப்பட்டவளாகி, எவ்விதம் நளனைக்குறித்துத் துக்கித்தாளோ அவ்விதம் தன்னைக் குறித்துத் துக்கிக்கவில்லை. 'ஆ! நாதரே! ஜனமற்ற இந்தவனத்தில் இந்தப்பாம்பினால்

1 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

விழுங்கப்படும் குற்றமற்ற என்னை இப்பொழுது ஏன் நீர்தொடர்ந்து ஓடிவரவில்லை? பிரபுவே! காட்டில் என்னை விட்டுவிட்டு நீர் இப்பொழுது எவ்விதம் போனீர்? நிஷதராஜரே! பாவத்திலிருந்து விடப்பட்டுத் திரும்பவும் அறிவையும் மனத்தையும் தனங்களையும் அடைந்தபின் என்னைத் திரும்பவும் நினைத்து எவ்விதம் ஜீவித்திருப்பீர்? ஓ! நிஷத மன்னரே! அரசப்புலியே! குற்றமற்றவரே! ச்ரமமடைந்தவரும் பசியால் பீடிக்கப்பட்டவரும் வாடினவருமான [1] உம்முடைய ச்ரமத்தை எவன் போக்குவான்?' என்றாள்.

அடர்ந்த காட்டில் திரிகிற ஓர் மிருக வேடன் அவள் அழுவதைக் கேட்டு வேகமாக ஓடிவந்தான். அவ்விதம் பாம்பினால் விழுங்கப்படும் நீண்ட கண்ணுள்ள அவளைக் கண்டு அடர்ந்த காட்டில் திரிகின்றவனும் மிருக வேட்டையாடுகிறவனுமான வேடன் விரைய வணுகி வந்து கூர்மையான கத்தியினால் அதனை வாயில் விரைந்து பிளந்தான். ஓ! பாரத! மிருகத்தால் ஜீவிக்கும் அந்த வேடன் அசைவற்றிருக்கும் அந்தப் பாம்பைப் பிளந்து அவளை விடுவித்து ஜலத்தாலும் அலம்பித் தேற்றி, (அவள்) ஆகாரம் செய்த பிறகு, 'ஓ! மான்குட்டியினுடைய கண்போன்ற கண்ணுள்ளவளே! நீ யாரைச்சார்ந்தவள்? எப்படி இந்த வனத்தை அடைந்தாய்? ஓ! காந்தியுள்ளவளே! எப்படி இந்தப் பெரிய கஷ்டத்தையும் அடைந்தவளாகிறாய்?' என்று வினவினான். ஓ! பாரத! அரசனே! அவனால் அவ்விதம் கேட்கப்பட்ட தமயந்தி இவையாவற்றையும் நடந்தபடி அவனுக்குச் சொல்லினள். பாதிவஸ்திரம் தரித்தவளும் பருத்தபின் தட்டும் கொங்கையுமுள்ளவளும் அழகிய குற்றமற்ற அங்கங்களுள்ளவளும் பூர்ணசந்திரன் போன்ற முகமுள்ளவளும் வளைந்த இமைமயிருடன்கூடின கண்ணுள்ளவளும் இனிமையாகப் பேசுகின்றவளுமான அவளைப் பார்த்து மிருகவேடன் காமத்திற்கு வசமாயினன். பிறகு, காமத்தால் பீடிக்கப்பட்ட அவன் மெல்லிய அழகிய சொல்லால் அவளுக்கு இன்மொழி கூறினான். தமயந்தி அதனை அறிந்துகொண்டாள். பதிவ்ரதையான தமயந்தியும் அவனைக் கெட்டஎண்ணமுள்ளவனாக அறிந்து தீவிரமான கோபாவேசங்கொண்டவளாகிக் கோபத்தால் ஜ்வலிக்கின்றவள் போலானாள். கெட்ட எண்ணமுள்ளவனும் அற்பனும் (காம) ஆதுரனுமான அவனோ அக்னிஜ்வாலைபோல ப்ரகாசிக்கின்ற அவளைப் பலாத்கரிக்க ஆலோசித்தான். பர்த்தாவை

1 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

யும் ராஜ்யத்தையும் பிரிந்த தமயந்தியோ துக்கத்தால் பீடிக்கப் பட்டவளாகிப் பேச்சுமுறை தவறிப்போன போது, 'நான் நளராஜரைத் தவிர வேறொருவனை மனத்தாலும் சிந்திக்கவில்லை யென்னும் இதனால் இந்த அற்பனான வேடன் உயிரை இழந்தவனாகி விழக்கடவன்' என்று அவனைக் கோபத்தால் சபித்தாள். அவளால் அந்தச் சொல் சொல்லப்பட்டவுடன், அந்தமிருகவேடன் உயிரற்றவனாகித் தீயால் எரிக்கப்பட்ட மரம்போலப் பூமியில் விழுந்தான்.

அறுபத்தோராவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தமயந்தி நளனைத்தேடும்போது ஆஸ்ரமமண்டலத்தில் முனிவர்களுடன் பேசியதும், அவர்கள் அம்மண்டலத்துடன் மறைந்தபின் அவள் தேர் யானை குதிரைகளுடன் ஜனக்கூட்டத்தைக்கண்டு அதன் தலைவனுடன் பேசினதும்.)

தாமரை மலர்போன்ற கண்ணுள்ள அவள், மிருகவேடனைக் கொன்று, பயங்கரமானதும் ஜனமற்றதும் சிள்வண்டுக் கூட்டங்களால் ஒலிக்கப்பட்டதும் சிங்கம், சிறுத்தை, மான், புலி, பன்றி, கரடி இவைகளின் கூட்டங்களுள்ளதும் பலவகைப் பறவைக்கூட்டங்களால் சூழப்பட்டதும் மிலேச்சர்களாலும் திருடர்களாலும் அடையப்பெற்றதும் ஸாலம், மூங்கில், 1 தவம், அரசு, திந்துகம், இங்குதி, பலாசு, மருது, அரிஷ்டம், ஸ்யந்தனம், முள்ளிலவு இவைகளால் மறைக்கப்பட்டதும் நாவல், மா, லோத்ரம், கருங்காலி, தேக்கு, பிரம்பு இவைகளாலடர்ந்ததும் பத்மகம், நெல்லி, ப்லக்ஷம், கடம்பு, அத்தி இவைகளால் சூழப்பட்டதும் இலந்தைகளாலும் பில்வங்களாலும் மறைக்கப்பட்டதும் ஆலமரங்களால் அடர்ந்ததும் ப்ரியாளம், பனை, பேரீந்து, கடுக்காய், தான்றி இவைகளுள்ளதுமான காட்டை நோக்கிப் புறப்பட்டாள். அவள் அங்குப் பலவித தாதுக்களுள்ள பலவித மலைகளையும் பறவைகளால் ஒலிக்கப்பட்ட கொடிப்பந்தல்களையும் ஆச்சரியமான தோற்றமுள்ள குகைகளையும் நதிகளையும் ஸரஸ்ஸுகளையும் வாவிகளையும் ஸஞ்சரிக்கும் நானாவிதமான பறவைகளையும் பயங்கரமான ரூபமுள்ள பிசாசர் உரகர் அரக்கர் ஆகிய பலரையும் குட்டைகளை

---

1 ஒருவகை மரம்.

யும் தடாகங்களையும் மலையின் கொடுமுடிகளையும் ஆச்சரியமான தோற்றமுள்ள நதிகளையும்[1] அருவிகளையும் அப்பொழுது பார்த்தாள். விதர்ப்பராஜன்மகள் அங்கே எருமைகளையும் பன்றிகளையும் நரிகளையும் கரடிகளையும் குரங்குகளையும் பாம்புகளையும் கூட்டங் கூட்டமாகப் பார்த்தாள். வல்லமையுடனும் புகழுடனும் ஒளியுடனும் மேலான தைரியத்துடனும் கூடின தமயந்தி ஒருத்தியாக அப்பொழுது நளனைத்தேடிக்கொண்டு அலைந்தாள். ராஜபுத்திரியும் கணவனைப் பிரிந்த துயரத்தால் இளைத்தவளுமான அந்தத் தமயந்தி அப்பொழுது பயங்கரமான காட்டை அடைந்து அங்கு ஒன்றுக்கும் பயப்படவில்லை. பிறகு, விதர்ப்பன்பெண்ணானவள் மிக்க துயரமுற்றுக் கணவனைப் பிரிந்த துயரால் சூழப்பட்ட அங்கங்களுள்ளவளாகி ஒருகற்பாறையை அடைந்து புலம்பலானாள்.

தமயந்தி, 'சிங்கத்தினுடைய மார்புக்கு ஒப்பான மார்புள்ளவரே! மிக்க தோள்வலிமையுள்ளவரே! நிஷததேசத்து ஜனங்களுக்கு அதிபரே! அரசரே! நீர் நிர்ஜனமான காட்டில் என்னை விட்டு எங்குப் போயினீர்? வீரரே! மனிதப்புலியே! பூர்ணமான தக்ஷிணையுள்ள அஸ்வமேதமுதலிய யாகங்கள் செய்து ஏன் என்னிடத்தில் பொய்யாக நடக்கின்றீர்? நரஸ்ரேஷ்டரே! மிக்க காந்தியுள்ளவரே! சுபமானவரே! அரசருட் சிறந்தவரே! எனக்கெதிரில் உம்மால் சொல்லப்பட்டதை மெய்யாக்கக்கடவீர். ஓ! பூபதியே! அன்னப்பறவைகளால் உம்மிடத்தில் சொல்லப்பட்டதையும் என்னிடத்தில் சொல்லப்பட்டதையும் ஆலோசிக்கக்கடவீர். ஓ! மனிதருட் புலிபோன்றவரே! நன்கு ஓதப்பட்டவையும் அங்க உபாங்கங்களுடன் கூடினவையும் விஸ்தாரத்துடன் கூடியவையுமான நான்குவேதங்களும் ஒரு பக்கமும் ஸத்தியம் ஒன்று ஒரு பக்கமுமன்றோ? பகைவரைக்கொல்பவரே! அரசரே! வீரரே! ஆகையால், முற்காலத்தில் என்னிடம் சொல்லியசொல்லை உண்மையாக்கக்கடவீர். அந்தோ! வீரரே! குற்றமற்றவரே! நான் உமக்குப் பிரியமானவளன்றோ? பயங்கரமான இந்தக் காட்டில் ஏன் எனக்கு மறுமொழி சொல்லவில்லை? பயங்கரமானதும் வாயைத் திறந்துகொண்டிருப்பதும் பயங்கரமான சரீரமுள்ளதும் பசிகொண்டதுமான காட்டுக்கு அரசனான இந்தச் சிங்கமானது என்னைப் பயமுறுத்துகின்றது; ஏன் என்னைக் காப்பாற்ற வேண்டியவராகவில்லை? கல்யாணரே! அரசரே! 'எனக்கு உன்னைவிடப் பிரிய

[1] வேறு பாடம்.

மானவள் வேறு ஒருத்தியுமில்லை' என்று அப்பொழுது சொன்னீரே? முன் சொல்லப்பட்ட அந்தச் சொல்லை உண்மையாகச் செய்யக் கடவீர். ஓ! நராதிபரே! என்னால் நீர் விரும்பப்பட்டவராயிருக்கிறீர். பித்துக்கொண்டவளும் புலம்புகிறவளும் பிரியமானவளும் உம்மால் விரும்பப்பட்டவளும் மனைவியுமான எனக்கு ஏன் மறுமொழி கூறவில்லை. பூபதியே! பெரியகண்ணுள்ளவரே! பூஜ்யரே! பகைவரை வாட்டுபவரே! இளைத்தவளும் தீனையும் நிறம்மாறியவளும் அழுக்கடைந்தவளும் பாதி ஆடையைச் சுற்றிக் கொண்டவளும் நாதனில்லாதவள்போலப் புலம்புகின்றவளும் கூட்டத்தைப் பிரிந்த ஒற்றை மான்போலத் தனியாயிருப்பவளும் அழுகின்றவளுமான [1] என்னை ஏன் தேற்றவில்லை? ஓ! மஹாராஜரே! இந்தப் பெரியகாட்டில் தனியே இருப்பவளும் பதிவ்ரதையும் பேசுகின்றவளும் சொந்தமனைவியுமான [2] எனக்கு ஏன் மறுமொழி சொல்லவில்லை? மஹாராஜரே! நற்குலத்துடனும் நல்லொழுக்கத்துடனும் கூடியவளும் அழகிய எல்லா அங்கங்களாலும் விளங்குகின்றவளும் அநுஸரித்தவளுமான எனக்கு ஏன் உத்தரம்சொல்லவில்லை? ஓ! நரோத்தமரே! நிஷதாதிபரே! மனிதரிற் சிறந்தவரே! என் சோகத்தைப் போக்குகின்றவரே! இப்பொழுது இந்த மலையிலும் மிகப் பயங்கரமானதும் சிங்கங்களாலும் புலிகளாலும் அடையப்பட்டதுமான இந்தக்காட்டிலும் உம்மைப் படுத்திருப்பவராகவோ உட்கார்ந்திருப்பவராகவோ நிற்பவராகவோ நடப்பவராகவோ நான் காணவில்லை. துக்கத்தால் பீடிக்கப்பட்டவளும் உமது விஷயத்தில் சோகத்தால் இளைத்தவளுமான (நான்) யாரிடம் சென்று, 'காட்டில் அரசர் உன்னால் பார்க்கப்பட்டாரா?' என்று கேட்பேன்? அழகியவரும் மஹாத்மாவும் பகைவர் படையை அழிப்பவருமான அரசரை, 'இந்தக் காட்டில் இருக்கிறார்' என்று எவன் எனக்கு இப்பொழுது சொல்லுவன்? 'தாமரைமலர்போன்ற கண்ணுள்ளவரும் நீ தேடுகின்றவருமான நளராஜர் இவர்தாம்' என்னும் எவனுடைய மதுரமானசொல்லை இப்பொழுது கேட்கப்போகிறேன்? காந்தியுள்ளதும் நான்கு வளைந்த பற்களுள்ளதும் பெரிய மோவாயுள்ளதும் அரண்யராஜனுமான இந்தப் புலியானது எதிர்முகமாக வருகின்றது. அச்சமற்றவளாகி இதனைக் கேட்கிறேன். 'நீ மிருகங்களுக்கு அரசன். நீ இந்தக் காட்டில் (ஸஞ்சரிப்பதில்) வல்லவன். என்னை விதர்ப்பராஜன் புத்ரியும்,

1, 2 இரட்டித்தலால் இரண்டு சொற்கள் விடப்பட்டன.

பகைவரைக்கொல்லுகின்றவரும் நிஷததேசாதிபதியுமான நளராஜருடைய பாரியையும், பதியைத்தேடுகிறவளும், ஒன்றியாயிருப்பவளும், துன்பப்படுகிறவளும், சோகத்தால் இளைத்தவளுமான தமயந்தி என்றறி. மிருகேந்திர! சிங்கத்திற்கு ஒப்பான தோளுள்ளவரும் பெரிய கையுள்ளவரும் தாமரை இதழ்போன்ற கண்ணுள்ளவருமான அரசர் இங்கு உன்னால் பார்க்கப்பட்டாராகில் (எனக்குசொல்லித்) தேற்றுவாயாக; ஓ! அரண்யராஜனே! மிருகஶ்ரேஷ்ட! அல்லது, அவரை நீ சொல்லாவிட்டால் என்னைத் தின்றுவிடு. இந்தத்துயரத்தினின்றும் விடுவி' (என்றுசொல்லியும்,) இந்த மிருகராஜன் காட்டில் என்னுடைய புலம்பலைத் தான் கேட்டுச் சுத்தமான ஜலமுள்ளதும் கடலுக்கு ஒப்பானதுமான நதியைநோக்கிச் செல்லுகின்றது. உயர்ந்தவையும் ஆகாயத்தை அளாவியவையும் பலநிறமுள்ளவையும் மனத்தை மகிழ்விப்பவையுமான பல கொடுமுடிகளால் விளங்குகின்ற இந்த மலையைக் கேட்கிறேன். பலவிததாதுக்கள் சிதறியிருப்பதும் பலவிதக்கற்களால் அலங்கரிக்கப்பெற்றதும் இந்தப்பெரிய காட்டிற்கு உயர்ந்தகொடிமரம் போன்றதும் சிங்கம், வேங்கை, யானை, பன்றி, கரடி, மான் இவைகளுடன் கூடியதும் பலவிதமான பறவைகளால் நான்கு பக்கங்களிலும் ஒலிக்கப்பெற்றதும் பலாசு, அசோகு, மகிழ், புன்னை இவைகளால் விளங்குவதும், நன்கு புஷ்பித்த கோங்குகளாலும் தவங்களாலும் ப்லக்ஷங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் பக்ஷிகளுடன்கூடின நதிகளாலும் கொடுமுடிகளாலும் அடர்ந்ததும் பூமிக்கு அழகியவடிவமுள்ள சூடாமணிபோலிருக்கின்றதுமான இந்தச் சிறந்தமலையை நளராஜரைக் குறித்துக் கேட்கிறேன்.

'ஓ! பகவானே! மலைகளுட் சிறந்தமலையே! அழகிய தோற்றமுள்ளவனே! புகழ்பெற்றவனே! புகலிடமானவனே! மிகவும் சுபமானவனே! மலையே! உனக்கு நமஸ்காரம். நான் உன்னை அடைந்து தலையால் வணங்குகிறேன்; என்னை அரசன்மகளும் அரசன்மருமகளும் அரசன்மனைவியும் புகழ்பெற்றவளுமான தமயந்தியென்று அறி. விதர்ப்பதேசாதிபதியும் மஹாரதனும் பூமிக்குப்பதியும் நான்கு ஜாதிகளையும் ரக்ஷிக்கின்றவனும் மிக்கதக்ஷிணையுள்ள ராஜஸூயம் அஶ்வமேதம் என்னும் யாகங்களைச் செய்தவனும் அரசர்களுள் சிறந்தவனும் பெரிய மிக அழகிய கண்களுள்ளவனும் [1] பிராம

1. வேதங்களில் எனினும், வைதிக கர்மங்களில் எனினும், கடவுளிடத்தெனினும் ஆம்.

மணரிடம் பிரியமுள்ளவனும் நல்ல நடையுள்ளவனும் சொல்தவருதவனும் பொருமையற்றவனும் நல்லியற்கையுள்ளவனும் வீர்யமுள்ளவனும் மிக்கசெல்வமுள்ளவனும் தர்மந்தெரிந்தவனும் சுத்தமானவனும் விதர்ப்பதேசத்தை நன்கு காப்பாற்றுகிறவனும் பகைவர்கூட்டங்களை வென்றவனும் பிரபுவுமான பீமன் என்னும் பெயர் பெற்ற அரசன் என் தந்தை. பகவானே! உன் அருகில்வந்த என்னை அவனுடைய மகளென்று அறி. நிஷததேசத்தில் நரஸ்ரேஷ்டரும் வீரஸேனரென்ற பெயர்கொண்டவரும் மிக்கபுகழ்பெற்றவருமான மஹாராஜர் எனது மாமனார். ஓ! மலைகளுட் சிறந்த மலையே! ஐஸ்வரியத்தையிழந்தவளும், பர்த்தாவைப் பிரிந்தவளும், நாதனற்றவளும், விசனத்துடன் கூடியவளும், நரஸ்ரேஷ்டருள் மேலானவரும் பர்த்தாவுமான நளராஜரைத் தேடுகின்றவளும், இங்கு வந்தவளுமான என்னை அந்த வீரஸேனராஜரின் புத்திரரும் வீரரும் செல்வமுள்ளவரும் உண்மையான பராக்ரமமுள்ளவரும் பகைவரைக் கொல்லுகின்றவரும் பொன்னிறமுள்ளவரும் புண்ய ஸ்லோகரென்று புகழ்பெற்றவரும் ப்ராம்மணப்ரியரும் வேதத்தை அறிந்தவரும் பேசத்தெரிந்தவரும் புண்ணியம் செய்கின்றவரும் ஸோமபானஞ் செய்தவரும் அக்னிசயனம் செய்தவரும் (மற்ற) யாகங்களைச்செய்தவரும் கொடையாளியும் சண்டை செய்கிறவரும் நன்கு ஆள்பவருமான எந்த நளராஜர் பிதாவினிடமிருந்து கிரமமாகக் கிடைத்த தமது ராஜ்யத்தை நன்கு ஆளுகின்றாரோ அவருடைய பாரியையாக அறியக்கடவாய். ஓ! மலையரசே! உன்னால் ஆகாயத்தைப் பிளக்கின்ற இந்த நூறு கொடுமுடிகளால் இந்தப்பயங்கரமான காட்டில் நளராஜர் பார்க்கப்பட்டது உண்டா? சிறந்தயானை போன்ற நடையுள்ளவரும் புத்தியுள்ளவரும் நீண்டகையுள்ளவரும் (பகைவரைப்) பொருதவரும் பராக்ரமமுள்ளவரும் பலமுள்ளவரும் வீரரும் அதிககீர்த்தியுள்ளவரும் நிஷததேசத்திற்கு அதிபதியுமான எனது பர்த்தாவான நளராஜர் உன்னால் பார்க்கப்பட்டது உண்டா? சிறந்தமலையே! புலம்புகிறவளும் தனியாயிருப்பவளும் கலங்கினவளுமான என்னை, துக்கத்தை அடைந்த உனது மகளைத் தேற்றுவதுபோல ஏன் இப்பொழுது சொல்லால் தேற்றவில்லை? வீரரே! பகைவரை மிஞ்சியவரே! தர்மத்தை அறிந்தவரே! சொல் தவருதவரே! மஹீபதியே! அரசரே! இந்த வனத்தில் இருப்பீரானால் உம்மை நீரே காட்டக்கடவீர். மிக இனிமையானதும் கம்பீரமானதும் மேகமுழக்கம்போன்றதும் அமிர்தத்திற்கு ஒப்பானதும்

தெளிவானதும் அழகியதும், 'விதர்ப்பகுமாரீ! வா' என்று என்னை அழைப்பதும் அர்த்தம் நிரம்பினதும் என்சோகத்தை நாசம்செய்யக்கூடியதுமான மஹாத்மாவும் நிஷதாதிபருமான அரசருடைய அந்தச்சொல்லை நான் எப்பொழுது கேட்பேன்?' என்று அந்த ராஜபுத்ரியான தமயந்தி அந்தச் சிறந்தமலையைப்பார்த்துச் சொல்லி அங்கிருந்து மறுபடியும் வடக்குத்திக்கை நோக்கிச் சென்றாள்.

சிறந்த ஸ்திரீயான அவள், மூன்று பகலிரவுகள்சென்று, ஒப்பற்றதும் திவ்யமான சோலைகளால் விளங்குவதுமான தவசிகளின் வனத்தைக் கண்டாள். வஸிஷ்டருக்கும் பிருகுவுக்கும் அத்ரிக்கும் ஒப்பானவர்களும் நியமமுள்ளவர்களும் ஆகாரவரையறையுள்ளவர்களும் அடக்கத்தையும் தூய்மையையும் உடையவர்களும் நீரைமட்டும் பருகுகின்றவர்களும் காற்றைமட்டும் புசிப்பவர்களும் அப்படியே இலைகளைமட்டும் உட்கொள்ளுகிறவர்களும் புலன்களை வென்றவர்களும் மிக்க பாக்யசாலிகளும் ஸ்வர்க்கத்தின் வழியைக் காண விருப்பமுள்ளவர்களும் மரவுரிகளையும் தோல்களையும் தரித்தவர்களும் தியானம் செய்கின்றவர்களும் இந்திரியங்களை நன்கு அடக்கினவர்களுமான தவசிகளால் விளங்குவதும் தவசிகளால் வஸிக்கப்பெற்றதுமான அழகிய ஆச்ரம மண்டலத்தைக் கண்டாள். பலவித மான்கூட்டங்களால் நிரம்பினதும் குரங்குக்கூட்டத்துடன் கூடியதும் தவசிகளுடன் கூடியதுமான (அந்த ஆச்ரம மண்டலத்தைப்) பார்த்தவுடனே அவள் தேறுதலை அடைந்தாள். அழகிய புருவமுள்ளவளும் அழகிய கூந்தலுள்ளவளும் அழகிய பின்தட்டுள்ளவளும் அழகிய கொங்கையுள்ளவளும் அழகிய பற்களமைந்த வாயுள்ளவளும் காந்தியுள்ளவளும் அழகியஜகனமுள்ளவளும் நன்கு கறுத்தும் நீண்டுமிருக்கின்ற கண்களுள்ளவளுமான அந்த வீரசேன புத்திரன் பாரியையானவள், ஆச்ரமங்களுள்ளிடத்தில் நுழைந்தாள். ஸ்திரீரத்னமும் மிக்க பாக்யவதியும் இரங்கப்படத்தக்கவளுமான அந்தத் தமயந்தி தவமுதியோர்களை நமஸ்கரித்து வினயத்தால் தலைகுனிந்து நின்றாள். சிறந்த தவசிகளானஅவர்களனைவராலும், 'உன் (வரவு) நல்வரவாகுக' என்று சொல்லப்பட்டாள்.

அந்தத் தபோதனர்கள் அங்கு இவளுக்கு முறைப்படி உபசாரம்செய்து, பிறகு, 'உட்காரக்கடவாய். நாங்கள் என்ன செய்ய வேண்டும்? சொல்' என்று சொன்னார்கள். அழகிய இடையுள்ள (அவள்), 'ஓ! குற்றமற்றவர்களே! மிக்கபாக்யவான்களே! இங்கே பூஜ்யர்களான உங்களுக்குத் தவங்களிலும் அக்னிகளிலும் தர்மங்களி

லும் மிருகங்களிலும் பறவைகளிலும் ஸ்வதர்மானுஷ்டானங்களி லும்க்ஷேமமிருக்கின்றதா?' என்று அவர்களைக் கேட்டனள். அவர்கள் புகழுள்ள அவளைப் பார்த்து, 'சுபமானவளே! எல்லாவற்றிலும் குசலமே. எல்லா அங்கங்களிலும் குற்றமற்றவளே! நீ யார்? எதைச் செய்யவிரும்புகின்றாய்? சொல்வாயாக. இங்கே உனது சிறந்த உருவத்தையும் மேலானகாந்தியையும் கண்டே எங்களுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. தேறுதலடை; துயரப்படாதே. கல்யாணி! நீ இந்த வனத்தின் தேவதையா? இந்தமலையின் தேவதையா? அல்லது இந்த நதியினுடைய தேவதையா? இகழப்படாதவளே! உண்மையைச் சொல்' என்று கேட்டனர்.

அவள் அந்த ரிஷிகளை நோக்கி, 'ஓ! அந்தணர்களே! யான் இந்தவனத்தின் தேவதை அல்லேன்; இந்தமலையின் தேவதையு மல்லேன்; நதியின்தேவதையுமே அல்லேன். ஓ! தபோதனர்களே! நீங்கள்யாவரும் என்னை மானிடமங்கையாகஅறியக்கடவீர். விவரமாகச்சொல்லுகிறேன். அதனை முழுமையும் என்னிடமிருந்து கேளுங்கள். விதர்ப்ப தேசத்தில் பீமன்என்னும் அரசன் ஆண்டுகொண்டிருக்கிறான். பிராம்மணஸ்ரேஷ்டர்களே! என்னை அவனுடையபெண்ணாக யாவரும் அறியக்கடவீர். நிஷததேசாதிபதியும் புத்திமானும் புகழ்மிக்கவரும் வீரரும் யுத்தத்தில் ஜயிக்கின்றவரும் கற்றறிந்தவருமான நளராஜரென்னும் அரசர் எனது நாயகர். தேவதைகளைப்பூஜிப்பதை முக்கியமாகக்கொண்டவரும் பிராம்மணஜனங்களிடத்தில் அன்புள்ளவரும் நிஷத வம்சத்தைக் காப்பாற்றுகிறவரும் மிக்க தேஜஸுள்ளவரும் மிக்க பலமுள்ளவரும் மெய்ம்மையுடையவரும் தர்மத்தைஅறிந்தவரும் அறிவாளரும் சொல்தவறாதவரும் பகைவரை நொறுக்குகின்றவரும் பிராம்மணப்ரியரும் தெய்வத்தை முக்கியமாகக் கொண்டவரும் காந்தியுள்ளவரும் பகைவர்பட்டணங்களை ஜயிப்பவரும் இந்திரனுக்கு ஒப்பான காந்தியுள்ளவரும் நீண்ட கண்ணுள்ளவரும் பூர்ணசந்திரன் போன்ற முகமுள்ளவரும் பகைவர்களைக் கொல்லுகிறவரும் சிறந்த யாகங்களைச் செய்தவரும் வேதவேதாங்கங்களின் கரையை அடைந்தவரும் பகைவரைப் போரில் கொல்லுகின்றவரும் ஸூரியனும் சந்திரனும் போன்ற காந்தியுள்ளவரும் பூமிபாலரும் ஸத்தியத்தையும் தர்மத்தையும் முக்கியமாயுடையவரும் ராஜஸ்ரேஷ்டருமான நளராஜரென்னும் அந்த எனது பர்த்தா, ரகஸ்யமாகக் கெடுப்பதில் எண்ணமுள்ளவர்களும் கல்வியறிவில்லாதவர்களும்

சூதில் தேர்ந்தவர்களும் கபடமுள்ளவர்களுமான இழிவானவர் சிலரால் (சூதில்) அழைக்கப்பட்டு ராஜ்யத்தையும் தனத்தையும் தோற்றார். தமயந்தியென்று பெயர்பெற்றவளும் நாயகரைக் காண்பதில் ஆசைகொண்டவளுமான என்னை அந்த ராஜஸ்ரேஷ்டருடைய பாரியையாக அறியுங்கள். அப்படிப்பட்ட நான் துயரமடைந்தவளாகிப் போரில் வல்லவரும் மகாத்மாவும் அஸ்த்ரமறிந்தவரும் பர்த்தாவுமான நளராஜரைச் சோலைகளிலும் மலைகளிலும் தடாகங்களிலும் ஆறுகளிலும் அப்படியே எல்லாக்குட்டைகளிலும் அப்படியே காடுகளிலும் எங்கும் தேடிக்கொண்டு இங்கு ஸஞ்சரிக்கிறேன். நான் எவர்நிமித்தம் மிகக்கொடியதும் பயத்தையுண்டுபண்ணக்கூடியதும் கோரமானதும் புலிகளாலும் மான்களாலும் அடையப்பட்டதுமான இந்தத் துக்கமான வனத்தை அடைந்தேனோ நிஷததேசத்து ஜனங்களுக்குப் பதியான நளராஜரென்னும் அந்த அரசர் பகவான்களான உங்களுடைய இந்த அழகிய தபோவனத்தை அடைந்ததுண்டா? சில பகலிரவுகளில் நளராஜரைப் பாரேனாகில் இந்தத் தேகத்தைவிட்டு ஜீவனை மோக்ஷத்துடன் சேர்ப்பேன். அந்தப்புருஷஸ்ரேஷ்டரில்லாமல் இந்த உயிர் வாழ்க்கையினால் எனக்கு என்ன பயன்? கணவரைப் பிரிந்த துயரால் வருத்தப்பட்ட நான் எவ்விதம்இருப்பேன்?' என்று சொன்னாள். பிறகு, வனத்தில் அவ்விதம் புலம்புகின்றவளும் தனியாயிருப்பவளும் பீமபுத்ரியுமான தமயந்தியை ஸத்யவாதிகளான அந்தத் தவசிகள், 'ஓ! கல்யாணி! சுபமானவளே! வருங்காலம் உனக்கு க்ஷேமத்தைத் தருவதாகுமென்பதை நாங்கள் தவத்தால் காண்கிறோம். நளனை விரைவில் பார்ப்பாய். ஓ! பீமன்மகளே! நிஷததேசத்திற்கதிபதியும் பகைவர்களைக்கொல்லுகின்றவனும் தர்மானுஷ்டானஞ்செய்பவருள் சிறந்தவனுமான நளனைத் துன்பமற்றவனாகப் பார்ப்பாய். ஓ! கல்யாணி! எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டவனும் எல்லா ரத்னங்களுடனுங்கூடினவனும் அதே சிறந்த நகரத்தை ஆளுகின்றவனும் பகைவரை அடக்குகின்றவனும் பகைவர்களுக்குப் பயத்தைச் செய்பவனும் நண்பர்களுக்குத் துயரைப் போக்குகிறவனும் க்ஷேமங்களுக்கிருப்பிடமானவனும் அரசனுமான பதியை அடைவாய்' என்று சொல்லினர். அந்தத் தவசிகள் ராஜபுத்ரியான நளனுடைய பிரியமான மனைவியைப் பார்த்து இவ்விதம் சொல்லி, அக்னிஹோத்ரங்களுடனும் ஆஸ்ரமங்களுடனும் மறைந்தனர். அப்பொழுது, குற்றமற்ற அங்க

முள்ளவளும் வீரசேனராஜன் மருமகளுமான அந்தத் தமயந்தி பெரிய ஆச்சரியத்தைக் கண்டு வியப்படைந்தனள். தமயந்தி, 'நான் பார்த்தேனே இது என்ன? என்னால் கனவு காணப்பட்டதோ? இங்கு என்ன ஸம்பவம் நேர்ந்தது? அந்தத் தவசிகள் யாவரும் எங்கே? அந்த ஆச்ரமமண்டலம் எங்கே? புண்யமான ஜலமுள்ளதும் பக்ஷிகளால் அடையப்பெற்றதும் அழகியதுமான அந்நதி எங்கே? கனிகளாலும் மலர்களாலும் விளங்கும் அழகிய அந்த மரங்கள் எங்கே?' என்று ஆலோசித்தாள்.

மனிதப்புலியே! இவ்விதம் ஆச்சரியமடைந்தவளும் தாமரை மலர்போன்ற கண்ணுள்ளவளும் பீமன்மகளும் அழகிய சிரிப்புள்ளவளுமான தமயந்தி நெடுநேரம் ஆலோசித்துக் கணவனைப்பிரிந்த துயரமிக்கவளும் எளிமையுற்றவளும் நிறம்மாறின முகமுள்ளவளும் ஆயினள். பிறகு, அவள் அங்கிருந்து வேறிடத்தை அடைந்து கண்ணீரால் (தடைப்பட்டு) விளங்காத சொல்லுடன் ஓர் அசோக மரத்தைக் கண்டு கண்ணீரால் நிறைந்த கண்களுள்ளவளாகி, வனத்தில் மலர்ந்ததும் தளிர்களால் அலங்கரிக்கப்பெற்றதும் மனத்திற்குப்பிடித்ததும் பக்ஷிகளால் சப்திக்கப்பெற்றதும் மரங்களுட்சிறந்த மரமுமான ஓர் அசோக மரத்தை அடைந்து, 'அந்தோ! கஷ்டம்! இந்தக்காட்டின் நடுவில் அழகிய இந்த மரமானது பலவான (மலர் கனி முதலிய) அலங்காரங்களுடன் அழகிய சிறந்த மலைபோல் விளங்குகின்றது. ஓ! இனிய தோற்றமுள்ளவனே! அசோக! சீக்கிரம் என்னைச் சோகமற்றவளாகச் செய். அரசர் துயரமும் அச்சமும் துன்பமுமற்றவராயிருப்பதை நீ பார்த்ததுண்டா? பகைவரை அடக்குகின்றவரும் தமயந்தி யென்ற எனக்குப் பிரிய பதியும் நிஷததேசத்தின் அதிபதியும் ஒற்றை வஸ்திரத்தின் பாதியால் சுற்றப்பட்டவரும் அழகிய உடம்பின் தோலுள்ளவரும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவரும் வீரரும் இந்தக் காட்டை அடைந்தவருமான நளராஜரென்னும் எனது நாயகரைப் பார்த்திருக்கின்றாயா? ஓ! அசோக மரமே! நான் துயரமற்றவளாகச் செல்லும்படிசெய். அசோகமே! என்னுடைய சோகத்தைப் போக்குவதால் (அசோகன் = சோகத்தைப் போக்குகிறவன் என்னும்) உண்மையான பெயருள்ளவனாகக் கடவாய்' என்று புலம்பினாள்.

இவ்விதம், பீமபுத்ரியான அந்தச் சிறந்த ஸ்திரீ துன்பமுற்றவளாகி அந்த அசோக மரத்தைச் சுற்றிக்கொண்டு மிக்க பயங்கர

மான (வேறு) ஓர் இடத்தை அடைந்தாள். அவள் அனேக மரங்களையும் பல ஆறுகளையும் அப்படியே அழகிய பல மலைகளையும் பல மிருகங்களையும் பறவைகளையும் கண்டாள். அப்பொழுது, பீமன் மகள் கணவனைத் தேடிக்கொண்டு அங்குள்ள குகைகளையும் தாழ்வரைகளையும் ஆச்சரியமான தோற்றமுள்ள நதிகளையும் பார்த்தாள். பிறகு, அழகிய சிரிப்புள்ள தமயந்தி அதிக வழியைக் கடந்து, தெளிவான ஜலமுள்ளதும் அழகியதும் மிகக் குளிர்ந்த ஜலமுள்ளதும் அகன்றதும் மடுக்களுள்ளதும் நீர்நொச்சிகளால் சூழப்பட்டதும் கிரௌஞ்சங்களாலும் குரரங்களாலும் மிக ஒலிக்கப்பெற்றதும் சக்ரவாகங்களால் கத்தப்பெற்றதும் ஆமைகளும் முதலைகளும் மீன்களும் அடர்ந்ததும் விஸ்தாரமான திட்டுக்களால் விளங்குவதும் ரம்யமாயுள்ளதுமான ஒரு நதியைத் தாண்டுகின்றதும் யானைகளாலும் குதிரைகளாலும் தேர்களாலும் நெருங்கினதுமான பெரிய ஜனக்கூட்டத்தைக் கண்டாள். புகழுள்ளவளும் சிறந்த இடையுள்ளவளும் பித்துக்கொண்டவள் போன்ற உருவமுள்ளவளும் துயரத்தால் பீடிக்கப்பட்டவளும் அப்படியே பாதி ஆடையுடுத்தவளும் இளைத்தவளும் நிறம்மாறினவளும் அழுக்கடைந்தவளும் புழுதியுடன் கூடிய அவிழ்ந்த கூந்தலுள்ளவளும் நளனது மனைவியுமான அவள், பெரிய ஜனக்கூட்டத்தைக் கண்டவுடனே, அருகிற்போய் ஜனங்களின் நடுவில் நுழைந்தாள். மனிதர்கள் அங்கு அவளைக்கண்டு, சிலர் பயந்து ஓடினர்; சிலர் கவலைமிக்கவராயிருந்தனர்; அங்கே சிலர் கூக்குரலிட்டனர்; சிலர் அவளைப் பரிஹஸித்தனர்; சிலர் பொறாமைப்பட்டனர். ஓ! பாரத! சிலர் அவளிடத்தில் தயையைச் செய்தனர். 'ஓ! கல்யாணி! நீ யார்? யாரைச் சார்ந்தவள்? காட்டில் எதைத் தேடுகின்றாய்? நாங்கள் இங்கே உன்னைக்கண்டு அஞ்சுகிறோம். நீ மானிடப்பெண்ணா? கல்யாணி! நீ இந்த வனத்திற்காவது மலைக்காவது அல்லது திக்குக்காவது தேவதையா? நீ இயக்கியா? ராக்ஷஸியா? அல்லது தேவ ஸ்திரீயா? உண்மையைச்சொல். உன்னை நாங்கள் சரணமடைந்தோம். எல்லாவிதத்திலும் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்வாயாக. குற்றமற்றவளே! எங்களை ரக்ஷிப்பாயாக. ஓ! கல்யாணி! இந்தக் கூட்டமானது,' எல்லாவிதத்தாலும் க்ஷேமமுள்ளதாகி, இங்கிருந்து விரைவாகச் செல்லும்படியும் எங்களுக்கு க்ஷேமமுண்டாகும்படியும் செய்வாயாக' என்றும் வேண்டுதலும்செய்தனர்.

ராஜபுத்ரியும் கற்புள்ளவளும் கணவனைப் பிரிந்த துயரால் வருத்தப்பட்டவளுமான தமயந்தி, அந்தக் கூட்டத்தால் அவ்விதம் சொல்லப்பட்டவளாகி, பிறகு, கூட்டத்தலைவனையும் கூட்டத்தையும் நோக்கி, 'யௌவனமுள்ளவர்களும் முதியவர்களும் சிறுவர்களும் கூட்டத்தின் முன்போகின்றவர்களுமான இங்குள்ள அனைவரும் என்னை அரசன் மகளும் அரசன்மருமகளும் அரசன் மனைவியும் கணவரைக்காண்பதில் ஆசையுள்ளவளுமான மனிதப் பெண்ணாக அறியக்கடவீர். விதர்ப்பதேசத்தரசன் எனது தந்தை. நளராஜரென்று பெயர்பெற்றவரும் மிக்க பாக்யசாலியுமான நிஷததேசத்தரசர் எனது நாயகர். பகைவரால் வெல்லப்படாத அவரைத் தேடுகின்றேன். புருஷஶ்ரேஷ்டரும் பகைவர்கூட்டத்தைக்கொல்லுகின்றவரும் எனது நாயகருமான நளராஜரை அறிந்திருப்பீர்களானால் சீக்கிரம் சொல்லுங்கள்' என்று மறுமொழி சொன்னாள். பெரியகூட்டத்திற்குத் தலைவனும் சுசியென்று பெயருள்ளவனுமான கூட்டத்தை நடத்துபவன் குற்றமற்ற அங்கமுள்ள அவளை நோக்கி, 'ஓ! கல்யாணி! என்வார்த்தையைக் கேள். அழகிய சிரிப்புள்ளவளே! நான் கூட்டத்தை நடத்தும் கூட்டத்தலைவன். புகழுள்ளவளே! நளனென்று பெயருள்ள மனிதனை நான் பார்க்கவில்லை. மனிதரல்லாத மற்றப் பிராணிகளால் அடையப்பட்ட இந்தக் காடு முழுவதிலும் யானைகளையும் வேங்கைகளையும் காட்டெருமைகளையும் சிறுத்தைகளையும் கரடிகளையும் மான்களையும் பார்க்கிறேன். பெரியகாட்டில் உன்னைத்தவிர வேறு மானிடப்பெண்ணையாவது மானிடனையாவது நான் பார்க்கவில்லை. ஆதலால், யக்ஷராஜனான 1 மணிபத்திரன் எங்களுக்கு அருள்புரிவானாக' என்றான். பிறகு, அவள் எல்லா வியாபாரிகளையும் அந்தக் கூட்டத்தலைவனையும் நோக்கி, 'இந்தக்கூட்டம் எங்கே போகின்றது? இதனைச் சொல்லுங்கள்' என்று வினவினாள். கூட்டத்தலைவன், 'ஓ! அரசன் மகளே! இந்தக் கூட்டமானது உண்மையைக்காண்பவனான ஸுபாஹுவென்னும் சேதிராஜனுடைய தேசத்தைக்குறித்து லாபத்திற்காக விரைந்து போகின்றது' என்றான்.

---

1. 'மணிபத்ரன் குபேரனுக்கடுத்தபடியான யக்ஷர் தலைவன். காடுகளையும் மலைகளையும் கடந்துசெல்லும் பிரயாணிகளையும் வர்த்தகக்கூட்டங்களையும் காக்கும்தெய்வம்' என்பது இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு.

அறுபத்திரண்டாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தமயந்தி வர்த்தகர்கூட்டத்துடன்சென்று இரவு ஒரு குளக்கரையில் தங்கியதும், நீர்குடிக்கவந்த யானைகள் தமயந்தியைத்தவிரப் பெரும்பாலரைக் கொன்றதும், மிஞ்சினவர்களுடன் தமயந்தி சேதிநகர் அடைந்ததும், அந்நாட்டரசன்தாய் அவளைத் தன்அந்தப்புரத்தில் வஸிக்கச் செய்ததும்.)

குற்றமற்ற அங்கமுள்ள அவள் அப்பொழுது கூட்டத்தலைவனுடைய அந்தச்சொல்லைக்கேட்டுக் கணவனைக் காண்பதில் ஆசைகொண்டவளாகி அந்தக் கூட்டத்துடன்கூடவே போயினள். பிறகு, வியாபாரிகள் பலநாட்கள் சென்றபின் பயங்கரமான பெரிய காட்டில் நான்கு பக்கத்திலும் அழகியதும் தாமரைமலர்களுடனும் ஸௌகந்திக மலர்களுடனுங் கூடியதும் ரம்யமானதும் மிக்க புற்களும் விறகுகளுமுள்ளதும் அனேகம் கிழங்குகளுடனும் கனிகளுடனும் கூடினதும் பலவித பக்ஷிகளால் அடையப்பட்டதுமான தடாகத்தைக் கண்டார்கள். மிகக்களைத்த வாகனங்களுள்ள அவர்கள் சுத்தமான ஜலமுள்ளதும் மனத்தைக் கவரக்கூடியதும் நன்கு குளிர்ந்ததுமான அந்தத் தடாகத்தைக் கண்டு தங்குவதற்கு எண்ணங்கொண்டார்கள்; கூட்டத்தலைவனுடைய ஸம்மதத்தின்மேல் சிறந்தவனத்திலும் நுழைந்தார்கள். பெரியகூட்டமானது ராத்ரி முழுதும் தாமரைத் தடாகத்தை அடைந்து வஸித்தது. பிறகு, ஒலிஅடங்கிய பாதி ராத்திரிவேளையில் இருட்டில் வர்த்தகக் கூட்டம் அப்பொழுது களைத்துத் தூங்கும்போது, மதப்பெருக்கால் கலங்கின ஒரு யானைக்கூட்டமானது மலையின் தாழ்வரையினின்றும் நீர் குடிப்பதற்காக வந்தது; பிறகு, அந்த வர்த்தகக்கூட்டத்தையும் கூட்டத்திலுள்ள அனேகம் யானைகளையும் பார்த்தது. அப்பொழுது, அதிக மதமுள்ள அந்தக் காட்டுயானைகளெல்லாம் அந்தக் கிராமத்து யானைகளைக்கண்டு கொல்ல எண்ணங்கொண்டு வேகமாக எதிர்த்தோடிவந்தன. எதிர்த்துவரும் அந்த யானைகளின்வேகமானது மலையின் உச்சியினின்றும் சிதறிப் பூமியில்விழும் கொடுமுடிகளுடைய வேகம்போலத் தாங்கமுடியாததாயிருந்தது. யானைகள் வேகமாக ஓடும்போது காட்டிலுள்ள வழிகள் மறைந்துபோயின.

தாமரைக்குளத்தின்வழியை மறைத்துக்கொண்டு நன்கு தூங்குகிறதும் பூமியில் புரளுகின்றதுமான அந்தப் பெரிய கூட்டத்தை அந்தக் காட்டியானைகள் விரைந்து துகைத்தன. தூக்கத்துடன் பேரிரைச்சலிடுகின்றவர்களும் புகலிடத்தை விரும்புகிறவர்களும் பெரிய பயங்காரணமாகக் காட்டிலுள்ள புதர்களைக்குறித்து ஓடுகிறவர்களுமான அவர்கள் கொல்லப்பட்டார்கள். யானைகளால் சிலர் தந்தங்களாலும் சிலர் துதிக்கைகளாலும் சிலர் கால்களாலும் அடிக்கப்பட்டவர்களாகவும் கொல்லப்பட்ட ஒட்டகங்களாலும் குதிரைகளாலும் நிறைந்தவர்களாகவும் கலங்கின காலாள் ஜனங்களுள்ளவர்களாகவும் பயத்தால் ஓடுகின்றவர்களாகவும் அப்பொழுது ஒருவராலொருவர் அடிக்கப்பட்டவர்களாகவும் பயங்கரமான சப்தங்களை வெளியிட்டுக்கொண்டு பூதலத்தில் விழுந்தார்கள்; மரங்களில் தாக்கி நொறுங்கினவர்களாகி மேடுபள்ளமான இடங்களிலும் விழுந்தார்கள். அரசனே! மிக்க செல்வத்துடனிருந்த வியாபாரிக்கூட்டம் இப்படி பலவாற்றாலும் பலயானைகளால் தெய்வ வசத்தால் ஆக்ரமித்துக் கொல்லப்பட்டது.

'கஷ்டமான இந்த அக்னி உண்டாயிற்று; காப்பாற்றுங்கள்; இப்பொழுது ஓடுங்கள்; இந்தரத்னக்குவியல் சிதறிவிட்டது; எடுத்துக்கொள்ளுங்கள்; ஏன் ஓடுகின்றீர்கள்? இந்தப்பணம் பொதுவானதே. என்வார்த்தை பொய்யன்று. மிகப்பயந்தவர்களே! திரும்பவுமே சொல்லுகிறேன். ஆலோசனை செய்யுங்கள்' என்று மூவுலகத்திற்கும் பயத்தைஉண்டுபண்ணும் பெரியசப்தம் உண்டாயிற்று. இவ்விதம் சொல்லிக்கொண்டு, (அவர்கள்) அப்பொழுது பயத்தால் ஓடினார்கள். பயங்கரமான அந்த ஜனங்களின் நாசமானது அவ்விதம் நடக்கும்போது தமயந்தி பயத்தால் கலங்கினமனமுள்ளவளாகி விழித்துக்கொண்டாள். அவ்விடத்தில் எல்லா உலகத்திற்கும் பயத்தை உண்டுபண்ணும் நாசத்தைப் பார்த்தாள். தாமரைமலருக்கு ஒப்பான கண்ணுள்ள சிறுமியானவள் முன் பார்த்திராத அதனைக் கண்டு, (அந்தத் துயரத்தில்) ஸம்பந்தமுள்ளவள் போலத் தேறுதலற்றவளாயும் பயத்தால் கலங்கினவளாயும் எழுந்தாள். அங்கு, கூட்டத்தினின்றும் அதிக காயப்படாதவர்களாக விடப்பட்டவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து, 'இது எந்தக் கர்மத்தின் பயன்? நம்மால் மிக்க கீர்த்தியுள்ள மணிபத்திரனும் பூஜிக்கப்படவில்லை. அப்படியே, யக்ஷர்களுக்கு அதிபதியும் செல்வமுள்ளவனும் பிரபுவுமான குபேரனும் பூஜிக்கப்படவில்லை. நிச்சயம். அல்

லது, இடையூறுசெய்யும் தேவதைகளுக்கு முதலில் பூஜைசெய்யப் படவில்லை. அல்லது, இது சகுனங்களுடைய விபரீதமான பயனென்பது நிச்சயம். கிரஹங்களோ விபரீதமில்லை. வேறு எது இவ்விதம் வந்தது?' என்றனர். மற்றும் சிலர், இரங்கப்படத்தக்கவளும் சுற்றமும் பொருளுமற்றவளும் பித்துக்கொண்டவள்போன்ற தோற்றமுள்ளவளும் விகாரமான உருவமுள்ளவளும் மனிதரல்லாத உருவத்தைச் செய்துகொண்டு இப்பொழுது பெரிய கூட்டத்தினுள் நுழைந்தவளுமான இந்தப்பெண்ணால் மிக்க பயங்கரமானமாயை முன்னரே இவ்விதம் செய்யப்பட்டது. (இவள்) அரக்கியோ? அல்லது இயக்கியோ? அல்லது பயத்தை உண்டுபண்ணும் பேய்ச்சியோ? இந்தத் தீமைமுழுதும் இவளுடையதே; இது நிச்சயம். இவ்விஷயத்தில் ஆலோசனைசெய்ய வேண்டாம். கூட்டத்தைக் கொன்றவளும் பலருக்குத் துக்கத்தை உண்டுபண்ணுகின்றவளும் கூட்டத்திற்கே பிசாசு போன்றவளுமான அந்தப் பாவியைப் பார்ப்போமானால் கற்களாலும் புழுதிகளாலும் புற்களாலும் கட்டைகளாலும் முஷ்டிகளாலும் அவஶ்யமாகவே கொல்ல வேண்டும்' என்று சொன்னார்கள். தமயந்தியோ, மிக்க பயங்கரமான அவர்களின் அந்த வார்த்தையைக்கேட்டு வெட்கமுற்றுப் பயந்தவளாகி நடுங்கிக்கொண்டு அந்தத் தீமை வருமோ என்று சந்தேகித்துக் காடுள்ள இடத்துக்கு ஓடினாள். அவள், 'அந்தோ! என்மேல் தெய்வத்திற்குப் பயங்கரமான பெரிய கோபமிருக்கின்றதே? க்ஷேமத்தைத் தொடர்வதாயுமில்லையே? இது எந்தக் கர்மத்தின் பயன்? செய்கையாலோ மனத்தாலோ வாக்கினாலோ ஒருவருக்கும் ஒரு கெடுதியும் அணுவளவேனும் செய்யப்பட்டதாக நான் நினைக்கவில்லையே. இது எந்தச்செய்கையின்பயன்? வேறுஜன்மத்தில் செய்யப்பட்ட மஹத்தானபாவம் என்னை அடைந்திருக்கிறதென்பது திண்ணம். நான், பர்த்தாவின் ராஜ்யம் கவரப்பட்டதும் தன்னுடைய ஜனத்திலிருந்தும் தோல்வியும் கணவனைப் பிரிதலும் மக்களைப் பிரிதலும் நாதனில்லாமையும் பல துஷ்ட ஜந்துக்களடர்ந்த வனத்தில் வாஸமும் ஆகிய மீளமுடியாததும் கஷ்டமாயுள்ளதுமான இந்த ஆபத்தை அடைந்துவிட்டேனே' என்று தன்னைப்பற்றி அழுதாள்.

ஓ! நராதிப! பிறகு, மறுநாள் வந்தவுடன், கொல்லப்பட்டவர்கள் போக மிஞ்சின ஜனங்கள் காட்டுப் புதரிலிருந்து வெளிவந்து அப்பொழுது கொலைசெய்யப்பட்ட உடன்பிறந்தானையும் தந்தையையும் மகனையும் நண்பனையும் குறித்துத் துக்கித்தார்கள். அழ

கிய சிரிப்புள்ள தமயந்தி அப்பொழுது, கூட்டம் கொல்லப்படுகை யில், பிராம்மணர்களுடனிருந்தமையால் அந்த வனத்தில் அழிக்கப் படவில்லை. அங்கே தமயந்தி, 'என்னால் என்ன பாவம் செய்யப் பட்டதோ? ஜனமற்ற காட்டில் என்னால் அடையப்பட்ட இந்த ஜனக்கடலும் என்னுடைய துரதிருஷ்டத்தாலேயே யானைக்கூட்டத் தால் கொல்லப்பட்டது. என்னால் இப்பொழுதும் அந்தத் துயரம் நெடுங்காலம் அடைய வேண்டியிருக்கின்றதென்பது நிச்சயம். காலம்வராமல் (மனிதன்) மரிக்கமாட்டான் என்னும் பெரியோரின் உபதேசத்தைக் கேட்டிருக்கிறேன். (அதனால்தான்) துக்கத்தை அடைந்த நான் இப்பொழுது யானைக் கூட்டத்தால் துகைக்கப் படவில்லை. இவ்வுலகில் மனிதர்களுக்குத் தெய்வத்தால் செய்யப் படாதது ஒன்றும் இல்லை. என்னால், குழந்தைப்பருவத்திலும், இந் தத் துக்கம் வருவதற்குக் காரணமான பாவச்செயல் செய்கையா லும் மனத்தாலும் சொல்லாலும் சிறிதும் செய்யப்பட்டதில்லை. ஸ்வயம்வரத்திற்காக வந்த லோகபாலர்களான தேவர்கள் அந்த ஸ்வயம்வரத்தில் நளராஜருக்காக என்னால் மறுக்கப்பட்டார்கள். அவர்களுடைய பிரபாவத்தாலேயே நான் பிரிவை அடைந்தேன் என்று நிச்சயமாக நினைக்கிறேன்' என்று வருந்தினாள். அரசப் புலியே! துக்கத்தால் பீடிக்கப்பட்டவளும் சிறந்த ஸ்திரீயும் கற்புள்ளவளுமான அந்தத் தமயந்தி இவை முதலிய அந்தப் புலம்பல்களைப் புலம்பித் துக்கமும் சோகமும் மேலிட்டவளாகி, அப்பொழுது கொல்லப்பட்டவர்கள் போக மிஞ்சினவர்களும் வேதத்தின் கரைகண்டவர்களுமான பிராம்மணர்களுடன் சென்ற னள். போகின்ற அந்தச் சிறுமியானவள் நெடுநேரம் சென்றபின் மாலைக்காலத்தில் மெய் பேசுகிறவனும் சேதிராஜனுமான ஸுபா ஹுவினுடைய பெரிய பட்டணத்தை அடைந்தாள்.

அழகான எல்லா அங்கங்களுமுள்ளவளும் பாதி ஆடையுடுத் தவளுமான அவளோ உயர்ந்த கோபுரத்தையுடைய ஸுபாகுவின் அந்தச் சிறந்த பட்டணத்தில் நுழைந்தாள். தளர்ச்சியுற்றவளும் இளைத்தவளும் எளிமையுற்றவளும் அவிழ்ந்த கூந்தலுள்ளவளும் அழுக்கடைந்தவளும் பித்துக்கொண்டவள்போலப் போகின்றவளு மான அவளை நகரவாசிகள் பார்த்தார்கள். அப்பொழுது, சேதி ராஜனது பட்டணத்தில் நுழைகின்ற அவளை அங்கே கண்டு கிராம வாஸிகளின் புத்திரர்களான சிறுவர்கள் குதூஹலத்தினால் பின் தொடர்ந்தார்கள். அவள் அவர்களால் சூழப்பட்டவளாகி ராஜ

மாளிகையின் ஸமீபத்தை அடைந்தாள். உப்பரிகையிலிருக்கும் அரசன்தாய் ஜனங்களால் சூழப்பட்ட அவளைக் கண்டு செவிலியை நோக்கி, 'போ; அவளை இங்கே என்னிடம் அழைத்துவா. துயரமுற்றவளும் பாதுகாவலை விரும்புகிறவளுமான சிறுமியானவள் ஜனங்களால் துன்புறுத்தப்படுகிறாள். பித்துக்கொண்டவள்போல வேஷமுள்ளவளும் லக்ஷ்மிபோன்றவளும் நீண்ட கண்ணுள்ளவளுமான கல்யாணியானவள் எனது வீட்டை விளங்கச் செய்கிறாள். (அவளுடைய) அவ்வித ரூபத்தையும் பார்க்கிறேன்' என்று சொல்லினள். அரசனே! அந்தச் செவிலியானவள் அந்த ஜனங்களைத் தடுத்துத் தமயந்தியைச் சிறந்த உப்பரிகையில் ஏறிவரச்செய்து, ஆச்சரியமடைந்து, 'இவ்விதம் அஸௌகத்தை அடைந்தவளாயிருந்தும் சிறந்த சரீரத்தைத் தரிக்கிறாய். மேகங்களில் மின்னல் விளங்குவதுபோல விளங்குகிறாய். நீ யார்? எவனைச் சார்ந்தவள்? சொல்லுவாயாக. ஓ! தேவதைபோன்ற காந்தியுள்ளவளே! ஸகாயமற்றவளாயிருந்தும் ஆடவர்களிடமிருந்து பயப்படாமலிருக்கின்றாய். ஆபரணங்களில்லாமலிருந்தாலும் உன்னுடைய ரூபம் மனிதர்களுடையதாயில்லை' என்று கேட்டனள். தமயந்தி, அவளுடைய அந்தச் சொல்லைக் கேட்டு ராஜமாதாவையும் பார்த்து மறுமொழி சொல்லலானாள்.

'என்னைக் கணவரைப் பின்பற்றியவளும் நல்லகுலத்தில்பிறந்த ஸைரந்த்ரியும் வேலைக்காரியும் இஷ்டப்படி வஸிக்கின்றவளும் கனிகளையும் கிழங்குகளையும் ஆகாரமாயுடையவளும் தனியாயிருப்பவளும் பொழுதுபோனவிடத்தில் தங்குபவளுமான மானிடப் பெண்ணாக அறியக்கடவீர். என் கணவர் எண்ணமுடியாத குணமுள்ளவர்; என்னையும் எப்பொழுதும் அனுசரித்தவர். வழியில் நிழல் தொடர்வதுபோல நானும் அந்த வீரரைப் பக்தியுடன் அனுசரித்தவள். அவருக்குத் தெய்வச்செயலாக நன்கு சூதாடுவதில் மறுக்கமுடியாத பற்று வரைகடந்து உண்டாயிற்று. அவர் சூதில் ஜயிக்கப்பட்டவராகித் தனியே காட்டை அடைந்தார். ஒற்றை ஆடையுடுத்தவரும் பித்துக்கொண்டவர்போலக் கலங்கினவருமான அந்தப் பர்த்தாவைத் தேறுதல்செய்துகொண்டு நானும் காட்டை அடைந்தேன். அந்த வீரர் காட்டில் வேறு ஒரு காரணத்தில் ஒரு சமயம் பசியுடன்கூடினவராகி (போய்விடுமென்று) எண்ணாமல் ஒருவஸ்திரத்தையும் விட்டுவிட்டார். ஆடையற்றவரும் பித்துக்கொண்டவரைப்போல நினைவற்றவருமான அவரை

ஒற்றை ஆடையுடனிருந்த நான் எப்பொழுதும் பின்தொடர்ந்தவளாகிப் பல இரவுகள் தூங்கவில்லை. பிறகு, பலநாள் சென்றபின், ஓர் இடத்தில் தூங்குகின்ற என்னைவிட்டு, வஸ்திரத்தின்பாதியைக் கிழித்துக்கொண்டு குற்றமற்ற என்னைப் பிரிந்துபோயினர். அப்படிப்பட்ட நான் தாமரையின் உட்காய்போன்ற காந்தியுள்ளவரும் மனத்திற்குப் பிடித்தவருமான அந்தப் பர்த்தாவைத் தேடுகிறவளும் காணுதவளும் பகலும் இரவும் எரிக்கப்படுகின்றவளுமாகி, தேவனுக்கு ஒப்பானவரும் பிரியமானவரும் பிரபுவுமான பிராணேஶ்வரரை அடையவில்லை' என்று சொல்லிக் குற்றமற்ற அங்கமுள்ள அவள் நீர்நிரம்பின கண்ணுள்ளவளாயும் நடுங்குகின்றவளாயும் மிக்க துக்கத்தை அடைந்தவளாயும் நின்றனள்.

அரசன் தாய், கண்ணீர் நிரம்பின கண்ணுள்ளவளும் தீனமானஸ்வரத்துடன் அவ்விதம் மிகப் புலம்புகின்றவளுமான அந்தத் தமயந்தியைப் பார்த்துத் துயரமுற்றவளாகித் தானே சொல்லலானுள். 'கல்யாணி! நீ இங்கு வாஸம் செய். எனக்கு உன்னிடத்தில் சிறந்த ப்ரீதியிருக்கின்றது. சுபமானவளே! உனது பர்த்தாவை எனது வேலைக்காரர்கள் தேடுவார்கள். அல்லது, இங்கும் அங்கும் திரிந்துகொண்டு (அவர்) தாமாகவேயும் வருவர். சுபமானவளே! இங்கேயே வஸிக்கில் பர்த்தாவை அடைவாய்' என்முள். ராஜமாதாவின் சொல்லைக்கேட்டுத் தமயந்தி, 'ஓ! வீரரைப் பெற்றவளே! உடன்பாட்டுடன் உன்னிடம் வஸிக்க விரும்புகிறேன். 'எச்சிலை உண்ணவே மாட்டேன். பிறர்காலை அலம்பமாட்டேன். வேறு ஆண்பிள்ளைகளுடன் எக்காரணம்பற்றியும் பேசேன்' என்று என்னுல் விரதம் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. என்னை ஓர் ஆண்பிள்ளை விரும்புவனுனல் அவன் உன்னுல் தண்டிக்கப்படவேண்டும். அடிக்கடி (விரும்புவனுனல்) மூடனுன அவன் கொல்லவும் படவேண்டும். பர்த்தாவைத்தேடும்பொருட்டு மட்டும் பிராம்மணர்களைப் பார்ப்பேன். இப்படியானுல், உன்னிடம் இங்கு வஸிப்பேன்; சந்தேகமில்லை. இப்படியில்லையானுல், ஓர் இடத்திலும் வஸிப்பதில்லை யென்பது என்மனத்திலிருக்கின்றது' என்ற சொல்லைச் சொன்னுள். தமயந்தியால் இவ்விதம் சொல்லப்பட்ட ராஜமாதாவோ, 'இதை முழுமையும் செய்வேன். தெய்விகமாக உன்விரதமும் இவ்விதமிருக்கின்றது' என்னும் இதைச் சொல்லினள். ஜனுதிப! பாரத! ராஜமாதா தமயந்தியை இவ்விதம்சொல்லி, பிறகு, ஸுநந்தை என்னும் பெயருள்ள தன்

மகளை நோக்கி, 'ஓ! ஸுநந்தையே! தேவரூபமுள்ள (இவளை) ஸைரந்திரி என்று அறிந்துகொள். பிராயத்தால் ஒப்புமையை அடைந்த இவள் உனக்குத் தோழியாகஇருக்கட்டும். இவளுடன் கூடிக் கவலையற்ற மனமுள்ளவளாகி எப்பொழுதும் மகிழ்வாயாக' என்னும்இதனைச் சொன்னாள். பிறகு, ஸுநந்தை மிக்க மகிழ்ச்சி அடைந்து தமயந்தியை அழைத்துக்கொண்டு (மற்றத்) தோழிகளால் சூழப்பட்டவளாகி வீட்டை அடைந்தாள். ஓ! அரசனே! அழகிய கண்களையுடைய அந்தத் தமயந்தி வீரனான நளனை எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டு ஸுநந்தை என்ற ராஜபுத்ரியுடன் வாஸம்செய்தாள்.

அறுபத்துமூன்றாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தமயந்தியைப் பிரிந்து காட்டில் திரியும் நளனைக் காட்டுத் தீயில் அகப்பட்ட கர்க்கோடகன் தன்னைக் காக்கவேண்டினதும், நளன் விடுவித்தவுடன், கர்க்கோடகன், அவனைக் கடித்து உருவை விகாரப்படுத்தி, முன்னுருவை அடையவிரும் பும்போது தன்னை நினைந்து உடுக்கும்படி சொல்லி ஆடையளித்ததும்.)

ஓ! வேந்தனே! நளராஜனோ தமயந்தியைவிட்டுச் (சென்று) செல்லமுடியாத காட்டில் எரிகின்ற பெரிய காட்டுத்தீயைப் பார்த்தான். அங்கு நடுவில், 'ஓ! நள! வா' என்றும், 'புண்யஶ்லோக!' என்றும் உரக்க அழைத்த ஒரு பிராணியின் சப்தத்தைப் பலமுறை கேட்டான். நளனும், 'அஞ்சாதே' என்று சொல்லி அக்னியின் நடுவிற்சென்று, சுருட்டிக்கொண்டு படுத்திருக்கின்ற அந்த நாகராஜனைப் பார்த்தான். அந்த நாகமும் அப்பொழுது நடுங்கிக்கொண்டு கைகூப்பி, 'அரசனே! மனிதரைக் காப்பவனே! என்னைக் கர்க்கோடகனென்ற நாகனாக அறி. ஓ! மனிதர்க்கதிபனே! [1] குற்றமற்றவரும் மிக்க பெருந்தவமுள்ளவருமான ஒரு பிரம்மரிஷி என்னால் வஞ்சிக்கப்பட்டார். கோபத்தால் சூழப்பட்ட அவரால், 'நீ ஸ்தாவரம்போல நளன் வரும்வரையில் இருக்கக்கடவாய்.

---

1 'அநாகாஃ' என்பது மூலம்; அநாகஸர் என்னும் முனிவர் என்றும் கொள்ளலாம். 'நாரதர்' என்பது நீலகண்டவியாக்யான பாடம்.

அவன் இங்கிருந்து உன்னை (வேறு) ஓர் இடத்துக்குக் கொண்டு போவான். [1] அங்கே என்னால் செய்யப்பட்ட சாபத்தினின்றும் விடுபடுவாய்' என்று சபிக்கப்பட்டேன். அவரது சாபத்தால் ஓர் அடியிலிருந்து மற்றோர் அடி அசைவதற்கும் சக்தியற்றிருக்கிறேன். உனக்கு க்ஷேமத்தை உபதேசிப்பேன். நீ என்னைக் காப்பாற்றக் கடவாய். உனக்குத் தோழனும் ஆவேன். எனக்கு ஒப்பான பன்னகன் இல்லை. உனக்குக் கனக்காதவனும் ஆவேன். சீக்கிரம் என்னை எடுத்துச் செல்' என்று நளனை நோக்கிச் சொல்லிற்று. இவ்விதம் சொல்லி அந்த நாகச்ரேஷ்டன் கட்டைவிரல் அள வுள்ளதாயிற்று. நளன் அதனை எடுத்துக்கொண்டு காட்டுத் தீயில்லாத இடத்தை அடைந்தான். அக்னியற்ற இடைவெளியுள்ள இடத்தை அடைந்து விட எண்ணங்கொண்ட அவனைக் கர்க்கோ டகனென்னும் நாகம் திரும்பவும் சொல்லிற்று. 'நைஷத! நீ உன் னுடைய சில அடிகளை எண்ணிக்கொண்டுபோ. நீண்ட கைகளையு டையவனே! அங்கு நான் உனக்குச் சிறந்த க்ஷேமத்தைச் செய் வேன்' என்றது பிறகு, எண்ணத் தொடங்கின அவனைப் [2] பத்தா வது அடியில் கடித்தது. கடிக்கப்பட்ட அந்த நளனுடைய அந்த உருவம் விரைவில் மறைந்து (மாறி) விட்டது. அந்த நளன் தான் விகாரப்படுத்தப்பட்டதைக் கண்டு ஆச்சரியமுள்ளவனாகி நின்றான். அந்த அரசன் தன் சொந்த ரூபத்தைத் தரித்த நாகத் தைப் பார்த்தான்.

பிறகு, கர்க்கோடக நாகம் நளனைத் தேற்றிக்கொண்டு, 'ஓ! நள! உன்னை ஜனங்கள் தெரிந்துகொள்ளாதபடி உன்னுடைய ரூபம் என்னால் மறைக்கப்பட்டது. எந்தக் கலிநிமித்தம் அதிக துக் கத்தால் வஞ்சிக்கப்பட்டாயோ அந்தக் கலி என்னுடைய விஷத்தி னால் துக்கப்பட்டுக்கொண்டு உன்னிடத்தில் வஸிப்பான். மஹாராஜ! அவன் உன்னை விடுவரையில் விஷத்தால் நன்கு மறைக்கப்பட்ட அங்கங்களுடனும் துயரத்துடனும் [3] உன்னிடம் வஸிப்பான். ஓ! அரசனே! குற்றமற்றவனும் (வஞ்சிக்கத்) தகாதவனுமான நீ எவனால் வஞ்சிக்கப்பட்டாயோ அவனைக் கோபத்தால் வெறுத்து உனக்கு என்னால் ரக்ஷை செய்யப்பட்டது. ஓ! மனிதப்புலியே! தெற்றுப்பல் லுள்ள ப்ராணிகளிடமிருந்தும் பகைவர்களிடமிருந்தும் உனக்குப்

---

1 வேறு பாடம்.

2 'தச' என்ற வடசொல்லுக்கு, 'பத்து' என்றும், 'கடி' என்றும் பொரு ளுண்டாதலால் கடிக்கச்சொன்னதாகக்கொண்டது. 3 வேறு பாடம்.

பயமில்லை. நராதிப! எனது அனுக்கிரகத்தால் நீ [1] பிரம்மவித்தும் ஆவாய். அரசனே! விஷ நிமித்தமான பீடையும் உனக்கு உண்டாகாது. ஓ! ராஜேந்திர! யுத்தங்களில் அடிக்கடி வெற்றியையும் அடைவாய். அரசனே! நிஷதத்தார் தலைவனே! 'நான் பாகுகன் என்ற தேர்ப்பாகன்' என்று சொல்லிக்கொண்டு இங்கிருந்து அழகிய அயோத்தி நகரத்தில் ருதுபர்ணராஜனிடம் இப்பொழுதே செல். அவனே சூதாடும்திறத்தை அறிந்தவன். இக்ஷ்வாகு குலத்திலுண்டான ஸ்ரீமானான அந்த ராஜன் அச்வஹ்ருதயமென்ற வித்தையைப் பெற்றுக்கொண்டு அக்ஷஹ்ருதயமென்ற வித்தையை உனக்குத் தருவான்; நண்பனுமாவான். அக்ஷவித்தையை அறிந்தபின் க்ஷேமத்துடன் சேருவாய். அப்பொழுது, நீ உன்மனைவியுடனும் ராஜ்யத்துடனும் மக்களுடனும் சேர்வாய். சோகத்தில் மனத்தைச் செலுத்தாதே. இதனை உண்மையாக உனக்குச் சொல்லுகிறேன். ஓ! நராதிப! சொந்த ரூபத்தை எப்பொழுது பார்க்க விரும்புவாயோ அப்பொழுது நீ என்னை நினைக்கக்கடவாய். இந்த ஆடையையும் உடுத்துக் கொள்வாய். இந்த வஸ்திரத்தால் மறைக்கப்பட்டவனால் சொந்த ரூபத்தை அடைவாய்' என்று சொல்லி அவனுக்குத் தெய்வத் தன்மைபொருந்திய இரண்டு ஆடைகளை அப்பொழுது கொடுத்தான். ஓ! கௌரவ! வேந்தனே! நாகராஜன் இவ்விதம் நளனுக்குச் செய்திசொல்லிவிட்டு, வஸ்திரத்தையும் கொடுத்து, பிறகு அங்கேயே மறைந்தான்.

அறுபத்துநான்காவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(நளன், தன் பெயர் பாகுகன் என்று சொல்லிக்கொண்டு அயோத்தியில் ருதுபர்ணராஜனிடம் சென்றதும், ருதுபர்ணன் நளனைத் தேர்ப்பாகனாக நியமித்ததும்.)

அந்த நாகம் மறைந்தவுடன், நைஷதனான நளன் புறப்பட்டுச்சென்று பத்தாவது நாளில் ருதுபர்ணனுடைய நகரத்தில் நுழைந்தான். அவன், 'நான் பாஹுகனென்னும் பெயரையுடையவன். குதிரைகளை நடத்துவதில் எனக்கு ஒப்பான ஸமர்த்

1 பிராம்மணர்களிடமிருந்தும் பயமில்லை' என்பது வேறுபாடத்தின் பொருள்.

தன் பூமியில் இல்லை. சிரமமான காரியங்களிலும் உபாயங்களி லும் என்னுடன் நீங்கள் ஆலோசிக்கலாம். உணவுப்பொருள்களைச் சமைப்பதையும் பிறரைவிட விசேஷமாக அறிவேன். இந்த உலகத்திலுள்ள சிற்பங்களையும் மற்றும் செய்ய மிகஅரிய யாவற்றை யும் செய்ய முயலுவேன். ஓ! ருதுபர்ண! என்னைப் போஷிக்கக் கடவாய்' என்று சொல்லிக்கொண்டு (ருதுபர்ண) ராஜனை அடைந் தான். பூமிக்குப்பதியே! பிறகு, நளனால் இவ்விதம் சொல்லப் பட்ட அந்த ருதுபர்ணராஜன் அவனைப் பார்த்து மனத்தில் மிக்க ப்ரீதியை அடைந்து, 'ஓ! பாஹுக! (இங்கே) வஸிப்பாயாக. உனக்கு க்ஷேமமுண்டாகுக. இவற்றையெல்லாம் செய்வாய். எனக்கு எப்பொழுதும் விரைவாகச் (சவாரி) செல்வதில் எண்ணம் முக்கியமாக இருக்கிறது. அப்படிப்பட்ட என்னுடைய குதிரைகள் விரைவாகச் செல்லக்கூடிய உபாயத்தைச் செய். குதிரைகளுக்குத் தலைவனாயிரு. உனக்குப் பதினாயிரம் (பொன்) சம்பளம். ஓ! பாஹுக! உனக்கு எப்பொழுதும் வார்ஷ்ணேயனும் ஜீவலனும் அருகிலிருந்து ஏவினவைகளைச் செய்வர். இவர்களுடன் கூடி மகிழ்வாய். என்னிடத்தில் வசிக்கக்கடவாய்' என்றான். இவ்விதம் அவனால் சொல்லப்பட்ட நளன் வார்ஷ்ணேயனுடனும் ஜீவலனுடனும் ருதுபர்ணனுடைய அந்த நகரத்தில் கௌரவிக்கப்பட்டவனாகி வஸித்தான்.

அந்த அரசன் அங்கே தமயந்தியைச் சிந்தித்துக்கொண்டு மாலைதோறும், 'இரங்கப்படத்தக்க அவள் பசிதாகங்களால் பீடிக்கப்பட்டவளும் களைத்தவளுமாகி அந்த மந்தனுடைய செயலை நினைத்துக்கொண்டு எங்குப் படுத்திருக்கிறாளோ? எவனை அடைந்து சேவிக்கிறாளோ?' (என்ற பொருளுள்ள) இந்த ஒரு சுலோகத்தைச் சொல்லிக் கொண்டு வசித்தான். இவ்விதம் சொல்லுகின்ற அரசனை ராத்ரியில் ஜீவலன், 'ஓ! பாகுக! எப்பொழுதும் எவளைக்குறித்து [1] இவ்விதம் சோகிக்கின்றாய்? எவளைக் குறித்து இவ்விதம் துக்கிக்கின்றாயோ அவள் யாருடைய ஸ்திரீ என்பதைக் கேட்கவிரும்புகிறேன்' என்று சொன்னான். நளராஜன் அவனை நோக்கிச் சொல்லலுற்றான்:—'குறைந்த அறிவுள்ள ஒருவனுக்கு மிக்க பிரியமான ஒரு ஸ்திரீ இருந்தாள். அவனும் அவளுக்கு மிக்க ப்ரியமானவன். அந்த மந்தன் ஒரு காரணத்தினால் அவளைவிட்டுப் பிரிந்தான். பிரிந்த மதிகெட்ட

1 'ஏவம்' என்று பாடம் கொள்ளப்பட்டது.

அவன் துக்கத்தால் பீடிக்கப்பட்டவனாகி அலைந்து திரிகிறான். அவன் சோகத்தால் வாட்டப்படுகின்றவனும் ஒப்பற்றவனுமாகி இரவும் பகலும் அவளை நினைத்துக்கொண்டு இராக்காலத்தில் ஒரு ச்லோகத்தைக் கானம் செய்கிறான். அவன் பூமிமுழுதும் சுற்றிக் கொண்டு ஓர் இடத்தில் ஒன்றை அடைந்து, (துக்கத்திற்குத்) தகா தவனாயினும் அந்தத் துக்கத்தைத் திரும்பவுமே நினைத்துக்கொண்டு வஸிக்கிறான். கஷ்டத்திலும் காட்டில் அந்தப் புருஷனைப் பின் தொடர்ந்தவளும் அற்பபாக்யமுள்ள அவனால் விடப்பட்டவளு மான அந்த ஸ்திரீயோ உயிருடனிருப்பது அரிது. தனிமையான வளும் சிறுமியும் அறியாதவளும் தேடுகின்றவளும் அவ்விதம் தேடு வதற்குத் தகாதவளும் பசிதாகம் மேலிட்ட அங்கமுள்ளவளுமான (அவள்) ஜீவிப்பது அரிது. ஐயா! எப்பொழுதும் துஷ்ட மிருகங் களால் ஸஞ்சரிக்கப்பெற்றதும் பயங்கரமாயுள்ளதுமான பெரிய காட்டில் (அவள்), அற்ப புத்தியுள்ளவனும் அற்பபாக்யமுள்ளவனு மான அவனால் விடப்பட்டாள்' என்றான். இவ்விதம் நைஷத ராஜன் தமயந்தியை நினைத்துக்கொண்டு அவ்வரசனது வீட்டில் அஜ்ஞாத வாஸத்தைச் செய்தான்.

அறுபத்தைந்தாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(பீமராஜன் நளதமயந்தியரைத் தேடும்பொருட்டுப் பிராம்மணர்களைப் பல தேசங்களுக்கும் அனுப்பியதும், ஸுதேவனென்னும் அந்தணன் சேதிராஜன் அரண்மனையில் தமயந்தியைக் கண்டதும், தமயந்தி அந்தணனிடம் கண்ணீர் விட்டுக்கொண்டு பேசுவதைக் கண்ட அரசன்தாய் தமயந்தியின் குலமுதலியவற்றை அவனிடம் கேட்டதும்.)

நாடு கவரப்பட்ட நளன் பார்யையுடன் காணாமற்போன போது, பீமராஜன் மந்திரிகளுடன் கூடிப் பலமுறை ஆலோசனை செய்தான். எல்லாப் பிராமணர்களையும் வரவழைத்துப் பின்வரும் வார்த்தையைச் சொல்லலானான். 'எந்தப் பிராமணன் தமயந்தியை யும் நளனையும் எல்லாப் பக்கத்திலும் தேடிக்காண்கிறானோ அந்த

அந்தணனுக்கு [1] அக்ரகாரத்தையும் பட்டணத்திற்கு ஒப்பான கிராமத்தையும் கொடுப்பேன்; நூறுயிரம்பசுக்களையும் கொடுப்பேன்' என்று த்விஜோத்தமர்களான எல்லாப் பிராமணர்களையும் அழைத்துச் சொல்லி, அவ்விருவரையும் பார்க்கும் விருப்பத்தால் அப்பொழுது பயணப்படுத்தினன். பீமன், நிரம்பின தனத்தைக் கொடுத்து, 'நளனையும் என் பெண்ணான தமயந்தியையும் தேடுங்கள். நளன் அறியப்பட்டு இந்தக் காரியம் நிறைவேறினவுடன், உங்களுள் அவ்விருவரையும் அழைத்துவருபவனுக்கு ஆயிரம்பசுக்களைக் கொடுப்பேன். அக்ரகாரங்களையும் பட்டணத்திற்கு ஒப்பான கிராமத்தையும் தங்கத்தையும் அப்படியே வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் கொடுப்பேன். தமயந்தியையாவது நளனையாவது இங்கு அழைத்துவர முடியாமற்போனாலும் அறியப்பட்ட மாத்திரத்திலும் ஆயிரம்பசுக்களாகிய தனத்தைக் கொடுப்பேன்' என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான். இவ்விதம் சொல்லப்பட்ட அந்த அந்தணர்கள் சந்தோஷமடைந்தவர்களாகிப் பட்டணங்களிலும் தேசங்களிலும் பாரியையுடன் கூடின நளனைத் தேடிக்கொண்டு எல்லாத்திக்குக்களிலும் சென்றனர்; நளனையாவது பீமபுத்திரியையாவது ஓர் இடத்திலும் பார்க்கவில்லை. பிறகு, தேடுபவனான ஸுதேவனென்று பெயருள்ள அந்தணன் சேதிபுரியில் அரசன்மாளிகையில் தமயந்தியைக் கண்டனன். ராஜமாதாவும் அந்தத் தமயந்தியைக் கொண்டே பிராம்மணர்களுக்குப் பரிமாறுவித்தாள். ஸுதேவனும் போஜனத்திற்காக அங்கேயே பிரவேசித்தான். இளைத்தவளும் நிறம்மாறினவளும் அழுக்கடைந்தவளும் கணவனைப் பிரிந்த துயரை முக்கியமாக உடையவளும் புகைக்கூட்டத்தால் சூழப்பட்ட அக்னியின் காந்தியைப் போலச் சிறிது பிரகாசித்தும் ஒப்பற்றதான ரூபத்துடன்கூடியவளும் நீண்டகண்ணுள்ளவளும் மிக்க அழுக்கடைந்து இளைத்திருப்பவளுமான அவள் [2] அரசனுடைய வாழ்த்துக்காலத்தில் ஸுநந்தையுடனிருப்பதைக் கண்டு அடையாளங்களால் ஆராய்ந்து தமயந்தியென்று ஊகித்தான்.

ஸுதேவன், 'இந்தஸ்திரீ முன் என்னால் காணப்பட்ட உருவமுள்ளவளாக இருக்கிறாள். லோகத்திற்கு அழகான லக்ஷ்மி

---

1 'அக்ரம் = பிராம்மண போஜனம், அதற்காக அரசன் சொத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்படும் நிலமுதலியவை அக்ரகாரம்' என்பது பழைய வுரை. 2 'புண்யாஹவாசநே ராஜ்ஞ:' என்பது மூலம்.

போன்றவளும், பூர்ண சந்திரன்போன்ற முகமுள்ளவளும், [1] ஸ்யாமையும், அழகிய வட்டமான கொங்கையுடையவளும், ஒளியால் எல்லாத்திக்குக்களேயும் இருளற்றவையாகச் செய்கின்றவளும், தேவியும், அழகிய பத்மம்போன்ற நீண்டகண்ணுள்ளவளும், மன்மதனுடைய ரதிதேவியைப்போன்றவளும், எல்லா உலகத்திற்கும் பூர்ணசந்திரனின் காந்தியைப்போல விருப்பமானவளும், அந்த விதர்ப்பதேசமாகிற குளத்தினின்றும் தெய்வக்குற்றத்தால் வெளியில் எடுக்கப்பட்டதும் அழுக்கினாலும் சேற்றினாலும் பூசப்பட்ட அங்கமுள்ளதும் மிக வாடினதுமான தாமரைக் கொடியைப் போன்றவளும், ராகுவால் விழுங்கப்பட்ட சந்திரனையுடைய பூர்ணிமை ராத்திரியைப் போன்றவளும், பதியைப்பிரிந்த சோகத்தால் கலங்கினவளும், நீர்ப்பெருக்குக் குறைந்த நதியைப் போல எளிமையுற்றவளும், தாமரையிலேகளும் மலர்களுமழிந்ததும் பயமுறுத்தப்பட்ட பக்ஷிகளேயுடையதும் யானையின் துதிக்கையால் பீடிக்கப்பட்டுக் கலங்கினதுமான தாமரைத்தடாகத்தைப் போன்றவளும், ஸுகுமாரியும், நன்கு அமைந்த அங்கமுள்ளவளும், ரத்னங்களாலிழைக்கப்பட்ட மாளிகையில் வசிக்கத்தக்கவளும், களைந்தெறியப்பட்டுச் சூரியனால் காய்கின்ற தாமரைக் கொடிபோன்றவளும், ரூபத்துடனும் பெருந்தன்மையுடனும் நற்குணத்துடனும்கூடியவளும், அலங்காரத்திற்குத் தக்கவளாயினும் அலங்கரிக்கப்படாதவளும், ஆகாயத்தில் கறுத்தமேகத்தால் மறைக்கப்பட்ட புதிதான சந்திரகலையைப்போன்றவளும், ஸுகங்களும் இஷ்டானுபவங்களு மில்லாதவளும், பந்து ஜனத்தைப் பிரிந்தவளும், சரீரம் இளைத்தும் பர்த்தாவைப் பார்க்க விருப்பத்தால் (அதனைத்) தரிக்கின்றவளுமான இந்தத் தமயந்தியைக் கண்டு, இப்பொழுது கிருதார்த்தனயினேன். ஸ்திரீக்குப் பூஷணமில்லாவிடினும் பர்த்தாவே மேலான பூஷணமன்றோ? பிரகாசிக்கின்ற இவ்வளோ அழகுள்ளவளாயிருந்தும் கணவனைப்பிரிந்

1. இதற்கு, கருமைநிறமுள்ளவள், நடு யௌவனத்திலிருப்பவள், மக்களைப் பெறாதவள், காளி, அறுகு, மஞ்சள், அவுரி முதலிய பல பொருள்களுண்டு. 'குளிர்காலத்தில் இனிய சூடுள்ளவையும் கோடைக்காலத்தில் இனிய குளிர்ச்சியுள்ளவையுமான அங்கங்களும் புடமிட்ட பொன்னிறமுமுள்ள ஸ்திரீ' என்று கூறி இதனை விளக்க ஒரு சுலோகமும் காட்டுவர் பட்டி காவிய உரைகாரருள் ஒருவரான பரதமல்லிகர். விரிவை இவர் அந்நூலுக்குச் செய்துள்ள முக்தபோதவுரையில் காண்க.

திருத்தலால் பிரகாசிக்கவில்லை. நளன் இவளைப்பிரிந்தும் சோகத்தால்வாடாமல் தன்சரீரத்தை வைத்திருக்கிறானதலால் மிகவும் செயற்கரியசெயலைச் செய்கிறான். கருமையான கூந்தலின் நுனியுள்ளவளும் தாமரைமலர்போல நீண்டகண்ணுள்ளவளும் ஸுகத்திற்குத்தக்கவளுமான இவளைத் துயரமடைந்தவளாக்கண்டு எனது மனமும் கலங்குகின்றது. அழகுள்ள இந்தப் பதிவ்ரதையானவள் ரோகிணி சந்திரனை அடைவதுபோலக் கணவனை அடைந்து துக்கத்தின்கரையை எப்பொழுதுதான் கடப்பாளோ? நாட்டை இழந்த ஓர் அரசன் திரும்பவும் நாட்டை அடைந்து மகிழ்வதுபோல நளன் இவளை மறுபடியும் அடைவதால் மகிழ்ச்சியை அடைவான். இது நிச்சயம். ஒத்த ஒழுக்கமும் பிராயமும் உள்ளவளும் ஒத்தநற்குலத்துடன் கூடினவளுமான தமயந்திக்கு நளன் தகுதியானவன். கருமையான கண்ணுள்ள இவளும் அந்த நளனுக்குத் தகுதியானவள். அளவிடமுடியாதவனும் வீர்யமும் பலமுமுள்ளவனுமான அந்த நளனுடையமனைவியும் பதியைப்பார்க்க விருப்பமுள்ளவளுமான இவளைத் தேற்றுவது எனதுகடமை. பூர்ணசந்திரன்போன்ற முகமுள்ளவளும் துக்கத்தைப் பார்த்தேஇராதவளும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவளும் கவலையும் அழுகையும் மேலிட்டவளுமான இவளை யான் தேறுதல் செய்கிறேன்' என்று ஆலோசித்தான்.

இவ்விதம் ஸுதேவன் என்ற பிராம்மணன் பற்பலகாரணங்களாலும் அடையாளங்களாலும் அவளைத் தமயந்தி என்று நிச்சயித்துப் பிறகு அருகில்போய், 'ஓ! தமயந்தி! நான் உன்பிராதாவுக்கு இனியநண்பனான ஸுதேவன். பீமராஜனுடைய சொல்லால் உன்னைத்தேடுவதற்கு இங்குவந்தேன். ஓ! அரசியே! உன்பிதாவும் மாதாவும் உன்ஸகோதரர்களும் க்ஷேமமாயிருக்கின்றனர். அங்கிருப்பவர்களும் நீண்டஆயுளுள்ளவர்களுமான உன்மக்களும் சௌக்யமே. பந்துக்கூட்டங்களும் உன்நிமித்தம் உயிரை இழந்தவர்கள் போல இருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கான பிராம்மணர்களும் (உன்னைத்) தேடிக்கொண்டு பூமியைச் சுற்றுகின்றனர்' என்றான். ஓ! யுதிஷ்டிர! தமயந்தி அந்த ஸுதேவனை அறிந்துகொண்டு தன்னுடைய அந்த எல்லாநண்பர்களையும்பற்றிக் கிரமமாகக் கேட்டாள். ஓ! அரசனே! தமயந்தி பிராதாவுக்கு இஷ்டனும் பிராம்மணச்ரேஷ்டனுமான ஸுதேவனைப்பார்த்துச் சோகத்தால் விரைந்து பீடிக்கப்பட்டவளாகி மிகவும் அழுதாள். ஓ! பாரத! தனிமையில்

ஸுதேவனுடன் பேசுகிறவளும் அழுகிறவளுமான அவளை ஸுநந்தையானவள் கண்டு, பிறகு, துன்பமுற்று வருந்தி, 'ஸைரந்திரியானவள் பிராம்மணனுடன் மிக அழுகிறாள். வேண்டுமானால், வந்து அவளை அறிவாயாக' என்று தன் தாயாருக்குச் சொல்லியனுப்பினாள். பிறகு, அப்பொழுது சேதிபதியான அரசனின் தாயானவள் அந்தப்புரத்தினின்றும் அந்தச்சிறுமி பிராம்மணனுடனிருந்தஇடத்திற்குப் போனாள். வேந்தனே! பிறகு, ராஜமாதா ஸுதேவனை அழைத்து, (இந்த) ஸ்திரீ எவனுடைய மனைவி? எவனுடைய மகள்? அழகியகண்ணுள்ள இவள் உறவினரிடமிருந்தும் கணவனிடமிருந்தும் எவ்விதம் காணாமற்போனாள்? அந்தணனே! இவ்விதம் இருக்கின்ற பதிவ்ரதையானவள் உன்னால் எவ்விதம் அறியப்பட்டாள்? இவற்றையெல்லாம் மிச்சமின்றி உன்னிடமிருந்து கேட்கவிரும்புகின்றேன். தேவரூபமுள்ள (இவளைக்) கேட்கின்ற எனக்கு உண்மையாகச் சொல்' என்று வினவினள். ஓ! அரசனே! இவ்விதம் அவளால் வினவப்பட்ட பிராம்மணஶ்ரேஷ்டனான ஸுதேவன் ஸுகமாக உட்கார்ந்து தமயந்தியின் உண்மையைச் சொல்லலானான்.

அறுபத்தாறுவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(அரசன்தாய் ஸுதேவனால் தமயந்தியின் உண்மையை அறிந்து அவளுக்கிருந்த மச்சத்தாலும் தமயந்தியென்று நிச்சயித்து அவளைத் தகப்பனிடம் அனுப்பியது.)

ஸுதேவன், 'தர்மாத்மாவும் பயங்கரமான பராக்ரமமுள்ளவனுமான பீமனென்பவன் விதர்ப்பதேசத்தரசன். கல்யாணியான இவள் தமயந்தியென்று பெயர்பெற்ற அவனுடைய மகள். வீரஸேனபுத்திரனாகிய நளனென்பவன் நிஷததேசத்தரசன். இந்தக் கல்யாணி புத்திமானும் புண்யஶ்லோகனுமான அவனுடைய மனைவி. பெரியமனமுள்ளவனும் பிராதாவினால் சூதாட்டத்தால் ஜயிக்கப்பட்டவனும் நாட்டைப் பறிகொடுத்தவனும் தமயந்தியுடன் சேர்ந்து போனவனுமான அவன் ஒருவராலும் அறியப்படவில்லை. அப்படி (தேடிவந்த) நாங்கள் தமயந்திநிமித்தம் இந்தப்பூமி முழுவதும் ஸஞ்சரிக்கின்றோம். ஓ! தேவி! அப்படிப்பட்ட இந்தச் சிறுமி உன்னுடைய வீட்டில் அடையப்பட்டாள்.

ரூபத்தால் இவளுக்கொப்பான மானிடப்பெண் இல்லையன்றோ? ஸ்யாமையான இவளது புருவங்களின் நடுவில் உடன் பிறந்ததும் மேலானதும் தாமரைமலர்போன்றதும் மறைந்ததுமான இந்த மறுவானது, இவளது அழுக்கால் மறைக்கப்பட்டு மேகத்தால் மறைக்கப்பட்ட சந்திரன்போல என்னால் பார்க்கப்பட்டது. இவள் எல்லாரிலும் சிறந்து விளங்குவளென்பதற்கு அடையாளமாகப் பிரம்மாவால் அமைக்கப்பட்ட இது (வளர்பிறை) பிரதமையில் தெளிவாகத் தெரியாத சந்திரகலைபோல நன்கு விளங்கவில்லை. இவளுடைய சரீரமானது அழுக்கால் மிகப் பூசப்பட்டிருந்தும் ரூபம் மறைந்துபோகவில்லை; (நீராட்டமுதலிய) சுத்திகள் செய்யப்படாமலிருந்தும் பொன்போல விளங்குகின்றது. சிறுமியான இந்தத் தேவி, மறைக்கப்பட்ட அக்னியானது சூட்டினால் அறியப்படுவதுபோல இந்தச் சரீரத்தாலும் இந்த மச்சத்தாலும் குறிப்பிக்கப்பட்டு என்னால் அறியப்பட்டாள்' என்றான்.

ஓ! அரசனே! அந்த ஸுதேவனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, ஸுநந்தை மச்சத்தை மறைத்துக்கொண்டிருந்த அழுக்கைத் துடைத்தாள். அந்தத் தமயந்தியினுடைய அந்த மறுவானது அழுக்குப் போக்கப்பட்டவுடன், மேகமற்ற ஆகாயத்தில் சந்திரன் விளங்குவதுபோல மிக விளங்கிற்று. ஓ! பாரத! மச்சத்தைக் கண்டவுடன், ஸுநந்தையும் ராஜமாதாவும் அவளைக் கட்டிக்கொண்டு ஒரு முகூர்த்த காலம் அழுதுகொண்டு நின்றனர். ராஜமாதா கண்ணீரைவிட்டுக்கொண்டு, மெள்ள, 'இந்த மறுவினால் என் உடன்பிறந்தாளின் பெண்ணென்று குறிப்பிக்கப்பட்டவளாகிறாய். ஓ! அழகிய தோற்றமுள்ளவளே! நானும் உன் தாயும், தசார்ணதேசாதிபதியும் மகாத்மாவுமான ஸுதர்மாவென்ற அரசனுடைய பெண்கள். அவள் பீமராஜனுக்குக் கொடுக்கப்பட்டாள். நானோ வீரபாகுவேந்தருக்குக் கொடுக்கப்பட்டேன். தசார்ணதேசத்தில் என் பிதாவின் வீட்டில் நீ பிறந்ததை நான் பார்த்தேன். ஓ! அழகியவளே! உனக்கு இதுவும் பிதாவின் வீடுபோன்றதே. தமயந்தி! இந்தச் செல்வம் எனக்கு எவ்விதமோ அவ்விதமே உனக்கும்' என்னும் இதனைச் சொன்னாள். மன்னவ! தமயந்தி சந்தோஷமுள்ள மனத்துடன் அந்த மாதாவின் ஸஹோதரியை வணங்கி, 'அறியப்படாதவளாயிருந்தும் வேண்டிய எல்லா வஸ்துக்களாலும் திருப்தி செய்யப்பட்டவளும் எப்பொழுதும் உன்னால் காப்பாற்றப்பட்டவளுமாகி உன்னிடத்தில் ஸுகமாக வாஸஞ்

செய்தேன். ஸுகவாஸத்திலிருந்து மிக்க ஸுகமானவாஸம் உண்டாகப்போகின்றது. இதில் ஸந்தேகமில்லை. தாயே! நெடுங்காலம் பிரிந்திருந்த எனக்கு அனுமதி கொடுக்கக்கடவாய். குழந்தைகளான என்னுடைய பிள்ளையும் பெண்ணும் அழைத்துப் போகப்பட்டு அங்கு வஸிக்கின்றார்கள். பிதாவையும் என்னையும் பிரிந்தவர்களும் துயரத்தால் பீடிக்கப்படுகின்றவர்களுமான அவர்கள் எவ்விதம் இருக்கின்றார்களோ? விதர்ப்பதேசத்திற்கு விரைந்து செல்ல விரும்புகிறேன். என்னிடத்தில் சிறிதும் ப்ரியத்தைச்செய்ய விரும்புவாயானால் இந்த விஷயத்தில் எனக்கு வாஹனத்தைக் கட்டளையிடுவாயாக' என்னும் இந்த வசனத்தைச் சொன்னாள்.

ஓ! அரசனே! பரதஸ்ரேஷ்ட! பிறகு, தாயின் ஸஹோதரியான ராஜமாதா களிப்புற்று, 'சரி' என்றே அவளுக்குச் சொல்லிப் புத்திரனுடைய அனுமதிப்படி, பெரிய சேனையால் காக்கப்பட்டவளும் சோபையுள்ளவளுமான (அவளை) நல்ல அன்னத்துடனும் பானத்துடனும் வஸ்திரங்களுடனும் கூடியவளாக மனிதரால் சுமக்கப்படும் வாகனத்துடன் அனுப்பினாள். பிறகு, அழகிய அவள் விரைவாகவே விதர்ப்பதேசத்தை அடைந்தாள். பந்துஜனங்களனைவரும் மிக்க களிப்புற்று அவளைப் பூஜை செய்தனர். ஜனாதிப! புகழ்பெற்ற தமயந்திதேவி, உறவினர்களும் அந்தக் குழந்தைகளும் மாதாபிதாக்கள் இருவரும் தோழியரனைவரும் மற்ற யாவரும் க்ஷேமமாயிருப்பதைக் கண்டு, தேவதைகளையும் பிராம்மணர்களையும் சிறந்த முறையுடன் பூஜைசெய்தனள். அரசனும் பெண்ணைக் கண்டு உடனே ப்ரீதியுள்ளவனாகி ஸுதேவனை ஆயிரம் பசுக்களாலும் கிராமத்தாலும் தனத்தாலும் திருப்தி செய்தனன். 'ஓ! அரசனே! அந்த ஸ்திரீ பிதாவின் அந்த வீட்டில் இரவு வாஸம் செய்து ஸ்ரமத்தைப் போக்கிக்கொண்டவளாகி மாதாவை நோக்கிப் பின்வரும் வார்த்தையைச் சொல்லலானாள்.

அறுபத்தேழாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தமயந்தியால் அனுப்பப்பட்ட அந்தணர்கள் நளனைப் பலவிடங்களிலும் தேடியது.)

தமயந்தி, 'தாயே! உனக்கு உண்மையைச் சொல்லுகின்றேன். என்னை உயிருடனிருக்க விரும்புவையாயின், நரவீரரான நளராஜ

ரை வரவழைப்பதில் திரும்பவும் முயற்சி செய்வாயாக' என்றாள். தமயந்தியால் அவ்விதம் சொல்லப்பட்ட அரசியான அந்தத் தேவியும் மிக்க துக்கத்தை அடைந்தவளும் கண்ணீரால் மறைக்கப்பட்டவளுமாகி உத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது, அந்த அவஸ்தையையுடைய அவளைக் கண்டு அந்தப்புரம் முழுதும், 'ஆ! ஆ!' என்னும் ஒலிமிக்கதாகி மிகவும் அழுதது. பிறகு, பீமமஹாராஜனை நோக்கி (அவனுடைய) மனைவி, 'ஓ! மனிதரைக் காப்பவரே! தமயந்தி பர்த்தாவைக்குறித்து மிகத்துயரப்படுகிறாள். விபுவே! அவள் வெட்கத்தை விலக்கித் தானே சொல்லினள். உமது வேலைக்காரர்கள் புண்யச்லோகனை நளனைக் காண முயலக்கடவர்' என்றாள். அவளால் தூண்டப்பெற்ற அரசன் தன்வசத்திலிருக்கின்ற பிராம்மணர்களை, 'நளனைப்பார்க்கும் விஷயத்தில் முயற்சிசெய்யுங்கள்' என்று சொல்லி எல்லாத் திசைகளிலும் அனுப்பினான். பிறகு, அந்த ப்ராம்மணர்கள் அப்பொழுது விதர்ப்பாதிபதியின் உத்தரவினால் புறப்பட்டுத் தமயந்தியிடம் [1]வந்து, 'நாங்கள் நளனைத் தேடப் புறப்பட்டோம்' என்று சொல்லினர். பிறகு, தமயந்தி அவர்களைப்பார்த்து, 'எல்லாராஜ்யங்களிலும் ஜனக்கூட்டங்களிலும் ஆங்காங்கு, 'சூதாடியே! காதல! தூங்குகின்றவளும் காதலியுமான நாயகியான என்னைக் காட்டில் விட்டு என் பாதிஆடையைக் கிழித்துக்கொண்டு நீ எங்கே போயினை? அந்தச் சிறுமி உன்னால் காணப்பட்டது போலவே பாதி ஆடையால் சுற்றப்பட்டவளும் மிகஎரிக்கப்படுகிறவளுமாகி உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள். ஓ! அரசே! தேவ! அந்தச் சோகத்தினால் எப்பொழுதும் அழுகின்ற அவள் விஷயத்தில் தயை செய். மறுமொழியையும் சொல்' என்ற இந்த வார்த்தையை அடிக்கடி சொல்லுங்கள்' என்று சொல்லி, 'காற்றால் அசைக்கப்படுகின்ற நெருப்பானது காட்டை எரிக்குமன்றோ? மனைவியானவள் கணவனால் எப்பொழுதும் போஷிக்கப்படத் தகுந்தவளும் காக்கப்படத் தகுந்தவளுமன்றோ? தர்மத்தை அறிந்திருக்கின்ற உத்தமனான உனக்கு யாது காரணத்தால் அவ்விரண்டும் இல்லாமற்போயின? புகழ்பெற்றவனும் புத்திமானும் நற்குலத்தில் உதித்தவனும் எப்பொழுதும் தயையுடன் கூடியவனுமான நீ என் பாக்கியக்குறைவினால் தயையற்றவனாயினையென்று ஸந்தேகிக்கிறேன். மனிதப்புலியே! ஆன்றுபற்றி, என்விஷயத்தில் தயை செய்வா

---

1 வேறு பாடம்.

யாக. மனிதரிற் சிறந்தவனே! குரூரமில்லாமையானது மேலான தர்மமென்று உன்னிடமிருந்தன்றோ என்னால் கேட்கப்பட்டது?' என்பதையும் இப்படி என்னிடத்தில் தயை செய்யக்கூடியவாறு மற்றதையும் சொல்லக்கடவீர். இவ்விதம் சொல்லுகின்ற உங்களுக்கு ஒருவன் மறுமொழி சொல்வானானால், 'அவன் யார்? எங்கு இருக்கிறான்?' என்று அம்மனிதனை எவ்விதத்தாலும் நீங்கள் அறியவேண்டும். ஓ! பிராம்மணஸ்ரேஷ்டர்களே! எந்த மனிதன் இவ்வித வார்த்தையைக் கேட்டு மறுமொழியைச் சொல்லுவனோ அவனது அந்த வார்த்தையைக் கிரகித்து வந்து எனக்குத் தெரிவிக்கவேண்டும். நீங்கள், அஜாக்ரதையில்லாதவர்களாகி, பீமராஜர் உத்தரவால் ஸஞ்சரிப்பதையும் திரும்பி இங்கு வருவதையும் எவரும் அறியாதபடி செய்யவேண்டும். அவன் தனமுள்ளவனாயிருந்தாலும், அல்லது தனமற்றவனாயிருந்தாலும், அல்லது சக்தியற்றவனாயிருந்தாலும் அவனது தொழிலை அறிந்துவரக்கடவீர்' என்றாள்.

ஓ! அரசனே! இவ்விதம் சொல்லக்கேட்ட அந்தப்ப்ராம்மணர்கள், அவ்விதம் துக்கமடைந்த நளனைத் தேடுவதற்கு அப்பொழுது எல்லாத் திக்குக்களிலும் சென்றார்கள். ஓ! வேந்தனே! அந்தப் பிராம்மணர்கள் ராஜ்யங்களுடன் கூடின பட்டணங்களிலும் கிராமங்களிலும் இடைச்சேரிகளிலும் அவ்விதமே ஆஸ்ரமங்களிலும் தேடியும் நளனை அடையவில்லை. ஜனாதிப! பிராம்மணர்யாவரும் தமயந்தியால் சொல்லப்பட்ட அந்த வாக்கியத்தையும் ஆங்காங்கு (உள்ளவர்கள்) கேட்கச் சொல்லினர்.

அறுபத்தேட்டாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(பர்ணாதனென்னும் பிராம்மணன் ருதுபர்ணனதரண்மனையில் பாஹுகன் கேட்கத் தமயந்தியின் சொல்லைச் சொல்லியதும், அவன் தனிமையில் பர்ணாதனுக்கு மறுமொழி சொல்லியதும், பர்ணாதன் திரும்பி வந்து தமயந்திக்கு அதனைத் தெரிவித்ததும், அவளால் ஸந்தேகித்து அனுப்பப்பட்ட ஸுதேவன் அயோத்தி சென்று, மறுநாள் தமயந்தியின் ஸ்வயம்வரமென்பதை ருதுபர்ணனுக்குத் தெரிவித்ததும்.)

பிறகு, நீண்டகாலஞ் சென்று, பர்ணாதனென்னும் பிராம்மணன், (விதர்ப்ப) நகரத்தைத் திரும்பவும் அடைந்து தமயந்தியை

நோக்கி இவ்வார்த்தையைச் சொல்லினன்: 'ஓ! தமயந்தி! இரவும் பகலும் நளனைத்தேடுகின்ற நான் அயோத்தி நகரத்தை அடைந்து [1] பாகஸ்வரி என்னும் ருதுபர்ணனை அடைந்தேன். சிறந்த நிற முள்ளவளே! மிக்க பாக்யசாலியான ருதுபர்ணன் ஜனக்கூட்டத்தில் உனது வாக்யத்தை நீ சொல்லியபடி கேட்கச் செய்யப் பட்டான். என்றால் அடிக்கடி சொல்லப்பட்டும் அதைக்கேட்டு ருதுபர்ணராஜனும் ஒன்றும் சொல்லவில்லை; ஸபையிலுள்ள ஒருவனும் சொல்லவில்லை. அரசனால் விடையளிக்கப்பட்ட என்னிடம் ஏகாந்தத்தில் ருதுபர்ணனுடைய வேலைக்காரனும் பாஹுகனென்னும் பெயரினால் பிரஸித்திபெற்றவனும் அந்த நரேந்திரனுக்குத் தேர்ப்பாகனும் விகார வடிவமுள்ளவனும் குறுகிய கையுள்ளவனும் வாகனங்களை விரைந்து செலுத்துவதில் வல்லவனும் உணவுப் பொருள்களை நன்கு சமைப்பவனுமான ஒருவன் பேசினன். அவன் மிக்க பெருமூச்செறிந்தும் அடிக்கடி அழுதும் என்னைக் குசலத்தைக்கேட்டுமே, பிறகு, 'குலஸ்திரீகளான பதிவ்ரதைகள் கஷ்டத்தையடைந்தார்களாயினும் தம்மைத் தாமாகவே காக்கின்றனர். (அவர்களால்) ஸ்வர்க்கம் ஜயிக்கப்பட்டதென்பதில் ஸம்சயமில்லை. மேலான ஸ்திரீகள் பர்த்தாக்களால் விடப்பட்டார்களாயினும் ஒருபொழுதும் கோபியார்; ஒழுக்கத்தைக் கவசமாகவுடைய பிராணன்களைத் தரிக்கின்றார்கள். கஷ்டத்திலிருப்பவனும் மூடனும் ஸுகத்திலிருந்து நழுவினவனுமான அவனால் விடப்பட்ட விஷயத்தில் அவள் கோபிப்பது தகாது. உணவை விரும்பினவனும் பறவைகளால் ஆடை கவரப்பட்டவனும் மனோவியாதிகளால் எரிக்கப் படுகின்றவனுமான (அவன்) விஷயத்தில் ஸ்யாமையானவள் கோபிப்பது தகாது. மரியாதை செய்யப்பட்டவளாயிருந்தாலும், மரியாதை செய்யப்படாதவளாயிருந்தாலும் ஸ்யாமையானவள், அவ்விதம் போனவனும் ராஜ்யத்தை இழந்தவனும் செல்வமற்றவனுமான பர்த்தாவைக் கண்டு கோபிப்பது தகாது' என்று இதனைச்சொன்னான். அவனது அந்த வார்த்தையைக் கேட்டு நான் விரைவாக இங்கே வந்தேன். கேட்டு, நீ உன் விருப்பப்படி செய். அரசனுக்குமே தெரிவிப்பாயாக' என்றான்.

ஓ! மனிதர்க்கதிபதியே! தமயந்தி பர்ணாதனுடைய இந்தச் சொல்லைக் கேட்டு, நீர்நிரம்பின கண்ணுள்ளவளாகி ரஹஸ்யமாக

---

1 'பாங்காஸுரி' என்பது வேறு பாடம். 'பங்காஸுரன் குமாரன்' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

மர்த்ர்வைய்ண்டந்து, 'தாயே! பீமராஜரிடத்தில் இந்த விஷயத்தை ஒருபொழுதும் தெரியப்படுத்தக் கூடாது. நான் உன் முன்னிலையில் ஸுதேவனென்கிற பிராம்மணஸ்ரேஷ்டனை ஏவுவேன். எனக்குப் பிரியத்தை விரும்புவாயானால் பீமராஜர் எனது அபிப்ராயத்தை அறியாதபடி நீ செய்யவேண்டும். தாயே! ஸுதேவனால் (கடவுள் வணக்க முதலிய) எவ்வித மங்களத்தைச் செய்து சீக்கிரம் பந்துக்களைக் குறித்து நான் அழைத்துவரப்பெற்றேனோ அவ்விதமங்களத்துடனே இப்பொழுது ஸுதேவன் ருதுபர்ணனுடைய பட்டணத்தில் வஸிக்கின்றவரும் பகைவரை அடக்குகின்றவருமான நளராஜரை அழைத்துவர இங்கிருந்து அயோத்யாபுரிக்குச் செல்லக்கடவன்; தாமதம் வேண்டாம்' என்று சொன்னாள். பிறகு, விதர்ப்பன்குமாரியான தமயந்தி ஸ்ரமபரிகாரம் செய்து கொண்ட த்விஜ ஸ்ரேஷ்டனான பர்ணாதனை மிக்க தனத்தால் ஸம்மானம் செய்தாள். மிக்க தனத்தால் பூஜைசெய்து அவனை நோக்கி, 'ஓ! அந்தணரே! நளராஜர் இங்கு வந்ததும் திரும்பவும் உமக்குப் பொருளைத் தருவேன். ஓ! த்விஜோத்தமரே! மற்றவன் செய்யமுடியாததும் நான் பர்த்தாவுடன் விரைவில் சேரத்தக்கதுமான (மிக்க) உபகாரம் எனக்கு உம்மாலன்றோ செய்யப்பட்டது?' என்றும் கூறினாள். பிறகு, இவ்விதம் சொல்லக் கேட்டவனும் விருப்பம் நிறைவேறியவனும் நல்ல பெரிய மனமுள்ளவனுமான அவன் மிக்க மங்களமான ஆசீர்வாதங்களால் தமயந்தியைத் தேற்றி வீட்டை அடைந்தான்.

ஓ! யுதிஷ்டிர! பிறகு, தமயந்தி ஸுதேவனை வரவழைத்து, துக்கசோகங்களுடன் கூடியவளாகி, மாதாவின் எதிரில், 'ஓ! ஸுதேவரே! (அயோத்யா) நகரியை அடைந்து, அயோத்யா வாஸியான ருதுபர்ணராஜனிடம், 'பீமபுத்திரியான தமயந்தி வேறு பர்த்தாவை அடையவிருப்பமுள்ளவளாகி மறுபடியும் ஸ்வயம்வரத்தில் இருக்கப்போகிறாள். அங்கு எல்லா அரசர்களும் அரசகுமாரர்களும் செல்லுகிறார்கள். அப்படியே குறிப்பிடப்பட்ட அந்தக் காலமும் நாளைத் தினமேயாகும். பகைவரை அடக்குபவனே! இப்படிச் செல்வது உனக்கு முடியுமானால், விரைவாகச் செல்லு. அவள், ஸூரியோதயத்தில் இரண்டாவது பர்த்தாவை வரிக்கப்போகின்றாள். வீரனான அந்த நளன் உயிருடன் இருப்பதாகவோ மரித்ததாகவோ அறியப்படவில்லை' என்ற சொல்லைச்சொல்லும்' என்றாள். மஹாராஜனே!

பிராம்மணனை ஸுதேவன் அவளால் சொல்லப்பட்டபடி அப்பொழுது ருதுபர்ணராஜனை அடைந்து சொல்லினன்.

அறுபத்தொன்பதாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(ருதுபர்ணன் பாகுகனைத் தேரோட்டச்செய்து வார்ஷ்ணேயனுடன் தமயந்தி ஸ்வயம்வரத்திற்காகப் புறப்பட்டுச் சென்றதும், வார்ஷ்ணேயன் பாகுகனது தேரோட்டும் திறமையைப் பார்த்து அவனை நளனென்று சந்தேகித்ததும்.)

நராதிபனான அந்த ருதுபர்ணராஜன் ஸுதேவன் வார்த்தையைக் கேட்டு, வார்ஷ்ணேயன் முதலிய ஸாரதிகளை வரவழைத்துப் பாகுகனையும் அழைத்துப் பிராம்மணனிடமிருந்து கேட்ட தமயந்தியின் ஸ்வயம்வரச் செய்தியைச் சொன்னான். மெல்லிய வார்த்தையால் இன்மொழி கூறிக்கொண்டு, பாகுகனை நோக்கி, 'குதிரையின் தத்வமறிந்தவனே! ஓ! பாகுக! (முடியுமென்று) எண்ணுவையாயின், தமயந்தியின் ஸ்வயம்வரத்தை(க் குறித்து) விதர்ப்ப தேசத்துக்கு ஒரே நாளில் செல்லவிரும்புகிறேன்' என்று சொன்னான். ஓ! கௌந்தேய! அந்த அரசன் இவ்விதம் சொல்லக்கேட்ட நளனுடைய மனமானது துக்கத்தால் வெடித்தது. பெரிய மனமுள்ள அவன், 'துக்கத்தால் மயக்கப்பட்ட தமயந்தி இவ்விதம் ஆகிவிடுவாளா? என்ன? அல்லது, என் விஷயத்தில் இந்தப் பெரிய உபாயம் சிந்திக்கப்பட்டிருக்குமா? கெட்ட எண்ணமுள்ள அற்பனான என்னால் வஞ்சிக்கப்பட்டவளும் எளியவளும் இரங்கப்படத் தக்கவளுமான தமயந்தி கொடுமையைச் செய்ய எண்ணங்கொண்டாள். ஆ! கஷ்டம்! உலகில் ஸ்திரீகளின் இயற்கை சஞ்சலமானது; எனது குற்றமும் பயங்கரமானது. சிறிய இடையுடைய அவள் விட்டுப் பிரிந்ததால் அன்பு நீங்கினவளும் எனது சோகத்தால் கலங்கினவளுமாகி (நான் வருவேனென்னும்) ஆசையற்றமையால் இவ்விதம் செய்துமிருக்கலாம். அவள் முக்யமாகக் குழந்தைகளையுடையவளாயிருத்தலால், ஒருகால் இவ்விதம் செய்யாமலும் இருக்கலாம். இவ்விஷயத்தில் உண்மையா, பொய்யா என்னும் நிச்சயத்தைப் போய் அறிவேன். ருதுபர்ணனது விருப்பத்தை எனக்காகவும் யான் செய்கிறேன்' என்று ஆலோசனையும் செய்தான். வாடின மனமுள்ள பாகுகன் இவ்வாறு மனத்தால்

நிச்சயித்துக் கைகூப்பிக்கொண்டு ருதுபர்ணராஜனை நோக்கி, 'உனது கட்டளையைச் செய்வதாக உறுதிகூறுகிறேன். மனிதப் புலியே! நராதிப! அரசனே! ஒரேநாளில் விதர்ப்பநகரியை அடைவேன். நாளைத்தினம் ஸூரியோதய காலத்தில் அங்கே விதர்ப்ப தேசத்தை அடைவாய்' என்னும் இதனைச் சொன்னான்.

இவ்விதம் சொல்லப்பட்டஅரசன் சிரித்துக்கொண்டு பாஹுகனைப் பார்த்து, 'ஓ! பாஹுக! உன் விஷயத்தில் ஸந்தோஷமுடையவனாயிருக்கிறேன். இப்பொழுது உனக்கு எந்தவிருப்பத்தைச் செய்யக்கடவேன்?' என்று வினவினான். பாஹுகன், 'ஓ!ருதுபர்ண! யான் இந்த வாகனத்தை ஸித்தம் செய்வேன்' என்றான். ஓ! அரசனே! பிறகு, அந்தப் பாகுகன், பாகஸ்வரிராஜனது கட்டளையால் குதிரைச்சாலையை அடைந்து குதிரைகளைப் பரீக்ஷை செய்தான். அந்தப்பாஹுகன் ருதுபர்ணனால் பலமுறை விரைவுபடுத்தப்பட்டுக் குதிரைகளை அறியவிரும்பி அடிக்கடி ஆலோசனை செய்து மெல்லியவைகளும் வல்லமையுள்ளவைகளும் நெடுவழி செல்வதில் திறமையுள்ளவைகளும் காந்தியுடனும் பலத்துடனும் கூடியவைகளும் நல்ல ஜாதியும் நல்ல தன்மையுமுள்ளவைகளும் கெட்ட லக்ஷணங்களில்லாதவைகளும் பருத்தமூக்குள்ளவைகளும் பெரிய மோவாயுள்ளவைகளும் பத்துச் சுழிகளால் சுத்தமானவைகளும் ஸிந்துதேசத்திற்பிறந்தவைகளும் காற்றுவேகமுள்ளவைகளும் அங்கங்களால் மெல்லியவையாகக் காணப்படுகின்றவைகளும் வழிச் செல்வதில் வேகத்தினால் ஒப்பில்லாதவைகளுமான குதிரைகளைத் தேர்ந்தெடுத்தான். அரசன் பலமற்ற அவைகளைக்கண்டு கோபத்துடன்கூடியவனாகி, 'நீ செய்ய விரும்பிய இது என்ன? உன்னால் நாம் வஞ்சிக்கத்தக்கவர்களல்லோம். அற்பமான [1] பலமும் [2] பிராணனுமுள்ள இந்தக் குதிரைகள் தேரை எவ்விதம் இழுக்கும்? மார்க்கமோ பெரிது. அதுவும் ஒரேநாளில் இவ்விதமான குதிரைகளால் எப்படி செல்லத்தக்கதாகும்?' என்றான். பாஹுகன், '[3] நெற்றியில் ஒன்றும் தலையில் இரண்டும் விலாவிலும் அவற்றின் பக்கத்திலும் இரண்டிரண்டும் மார்பில் இரண்டிரண்டும் பின்புறத்தில் ஒன்றுமேஎன அறியத்தக்க (சுழிகளுள்ள) இந்தக்

---

1 பாரத்தைப் பொறுக்கும் தன்மை. 2 வேகம்.

3 முன்னே பத்துச்சுழிகளென்று கூறப்பட்டுள்ளது. இங்கே பன்னிரண்டு சொல்லப்படுகின்றன. இதற்குப் பொருள் விளக்கிவிட்டு இந்த ஶ்லோகம் சில பிரதிகளில் இல்லையென்று பழையவுரை கூறுகிறது.

குதிரைகள் விதர்ப்பதேசத்தை (நாளையே) அடையும். இந்த விஷயத்தில் சந்தேகமில்லை. ஓ! அரசனே! நீ எண்ணுகிற மற்றக் குதிரைகளைச் சொல். அவைகளை உனக்காகப் பூட்டுகிறேன்' என்றான். ருதுபர்ணன், 'ஓ! பாஹுகா! நீயே குதிரையின் தன்மையை அறிந்தவனும் ஸமர்த்தனுமாயிருக்கிறாய். நீ எவைகளைத் திறமையுள்ளவைகளென்று எண்ணுகிறாயோ அவைகளையே விரைவில் பூட்டுவாயாக' என்றான்.

பிறகு, ஸமர்த்தனான நளன், நற்குலத்துடனும் நன்னடையுடனும் கூடியவைகளும் வேகமுள்ளவைகளுமான நான்கு நல்லகுதிரைகளைத் தேரில் பூட்டினான். பிறகு, அரசன் விரைவுடன்கூடியவனாகி (க் குதிரைகள்) பூட்டப்பட்டரதத்தில் ஏறினான். பிறகு, அந்தச் சிறந்த குதிரைகள் முழங்கால்களால் பூமியில் விழுந்தன. வேந்தே! பிறகு, சோபையுள்ளவனும் மனிதரிற் சிறந்தவனுமான நளராஜன் தேஜஸுடனும் பலத்துடனும்கூடிய அந்தக் குதிரைகளைத் தேற்றினான். அந்த நளன் கடிவாளங்களால் நன்கு தூக்கிப்பிடித்து வார்ஷ்ணேயனென்கிற தேர்ப்பாகனை ஏற்றி வைத்துக்கொண்டு மிக்கவேகத்துடன் போகவிரும்பினான். அந்தச் சிறந்தகுதிரைகள் முறைப்படி பாஹுகனால் ஓட்டப்பட்டுத் தேரிலிருக்கும் அரசனை மயங்கச்செய்வது [1] போல ஆகாயத்தில் கிளம்பின. ஸ்ரீமானான அயோத்யாதிபதியோ காற்று வேகமுள்ளவையும் அவ்விதம் சுமக்கின்றவையுமான அந்தக்குதிரைகளைக்கண்டு மிக்கவியப்பை அடைந்தான். வார்ஷ்ணேயனோ அந்தத் தேரொலியைக்கேட்டும் அந்தக்குதிரைகளைப் பிடிப்பதைப் (பார்த்தும்) பாஹுகனின் குதிரைகளின் உண்மை அறியும் தன்மையைப்பற்றி, 'இவன் தேவராஜனுடைய ஸாரதியான மாதலியாயிருப்பனோ? அவ்விதம் வீரனான பாஹுகனிடம் பெரிதான அந்த (மாதலியின்ஸாரத்திய) லக்ஷணம் காணப்படுகின்றது; அல்லது, மிக்கஅழகானமனிதசரீரத்தைஅடைந்தவரும் அஸ்வங்களின்குலத்தின் உண்மையை அறிந்தவருமான [2] சாலிஹோத்ரமுனியோ? அல்லது (இங்கு) வந்த இவன் பகைவர்பட்டணத்தை ஜயிக்கின்றவனும் ஜனங்களுக்குப்பதியுமான அந்தநளராஜனாக இருப்பனோ? அல்லது, இந்தப்பாஹுகன் அதேவித்தையை நளனிடமிருந்து அடைந்திருப்பனோ? ஏனெனில், பாஹுகனுக்கும் நளனுக்குமுள்ள ஞா

---

1 வேறு பாடம்.

2 'அஸ்வசாஸ்திரம் இயற்றிய ஆசார்யர்' என்பது பழைய உரை.

னத்தை ஒத்ததாகவே காண்கிறேன். மேலும், பாஹுகனுக்கும் நளனுக்கும் இந்தவயதும் ஸமமாயிருக்கின்றது. இவன் மிக்கவீர்ய முள்ள நளனல்லன். அவனுடைய வித்தையையுடையவனுக இருக்க லாம். மஹாத்மாக்களோ, விதிவசத்தாலாவது சாஸ்திரத்திற் சொல்லிய முறையை அனுஷ்டித்தலாலாவது மறைந்து இந்தப் பூமியில் சஞ்சரிக்கிறார்கள். வடிவத்தோற்றத்தின் மாறுபாட்டைக் குறித்து எனது எண்ணம் மாறவேண்டாம். அளவினால் குறைந்தவ னுகவே இருத்தலால் மாறலாமென்பது எனது கருத்து. பிராயத் தின் அளவானது அவனுக்கு ஒப்பாயிருக்கின்றது; ரூபத்தாலோ. மாறுபாடிருக்கின்றது. பாஹுகனே நிச்சயமாக எல்லாக்குணங்களு டனும்கூடியநளனென்றே எண்ணுகிறேன்' என்று ஆலோசித்தான். ஓ! மஹாராஜனே! புண்யஶ்லோகனுடைய ஸாரதியான வார்ஷ் ணேயன் இப்படி மனத்தால் பலவாறு தர்க்கித்து நன்கு ஆலோ சித்தனன். ராஜஶ்ரேஷ்டனான ருதுபர்ணராஜனும் பாஹுகனது குதிரைஅறியும் தன்மையை ஆலோசிக்கின்றவனுகி வார்ஷ்ணே யனென்னும் ஸாரதியுடன் ஸந்தோஷித்தான். (புத்தியின்)ஒருவழிச் செல்லும் தன்மையையும், அப்படியே உத்ஸாகத்தையும், அந்தக் குதிரைகளைப் பிடிப்பதையும், திறமையையும் நன்கு நோக்கி மிக்க ஸந்தோஷத்தை அடைந்தான்.

எழுபதாவது அத்யாயம்.

நளோபாக்யான பர்வம். (தொடர்ச்சி.)

(ருதுபர்ணன் பாஹுகனுடைய குதிரை நடத்தும் திறமையைக் கண்டு கோத்துக்கோத்தாயுள்ள பொருள்களைக் கணக்கிடுவதில் தனக்குத் திறமையிருப்பதை அவனுக்குச் சொல்லியதும், ருதுபர்ணன் ஒரு மரத்தின் இலைகளை எண்ணிக்காட்ட வியந்த நளன் அஶ்வஹ்ருதயமென்னும் வித்தையைக் கொடுப்ப தாகச் சொல்லி ருதுபர்ணனிடமிருந்து அக்ஷ ஹ்ருதயமுதலிய வித்தைகளைப்பெற்றதும், பின்பு, நளன் தேகத்திலிருந்து வெளி வந்த கலி நளன் சபிப்பனே என்று பயந்து அவனுக்கு வரங்கொடுத்துத் தான்றி மரத்தை அடைந் ததும்.)

அவன் நதிகளையும் மலைகளையும் வனங்களையும் குளங்களை யும் பறவை ஆகாயத்தில் ஸஞ்சரித்துத் தாண்டுவதுபோல விரை

வாகத் தாண்டினன். அப்பொழுது, தேரானது அவ்விதம் செல்லுகையில், பகைவர்பட்டணங்களை வெல்லுபவனை பாகஸ்வரிராஜன் மேலாடை கீழேவிழுந்ததைக் கண்டான். அப்பொழுது, வஸ்திரம் விழுந்தவுடன், நல்ல மனமுள்ள அந்த அரசன், அதனை எடுக்கக் கருதி விரைவாக நளனை நோக்கி, 'மிக்க புத்திமானே! வார்ஷ்ணேயன் எனது இந்த வஸ்திரத்தை இங்கே எடுத்து வரும் வரையில் மிக்க வேகமுள்ள இந்தக்குதிரைகளை இழுத்துப் பிடி' என்றான். நளன், 'உனது ஆடை தூரத்தில் விழுந்துவிட்டது. ஒருயோஜனை தூரம் தாண்டிவிட்டாய். திரும்பவும் எடுத்து வர முடியாது' என்று அவனுக்கு விடைகூறினன்.

அரசனே! பிறகு, நளன் இவ்விதம்சொல்லக் கேட்ட அரசன், மனத்தில் சிறிது அதிருப்தியுள்ளவனுகிக் காட்டில் பழமுள்ள ஒரு தான்றிமரத்தை அணுகினன். அரசன் அதனைக்கண்டு விரைபவனுகி, பாஹுகனை நோக்கி, 'ஓ! ஸூத! எண்ணுவதில் என்னுடைய சிறந்தவன்மையை நீ பார். எல்லாரும் எல்லாவற்றையும் அறியார். எல்லாம்அறிந்தவன் ஒருவனுமில்லை. ஒருபொழுதும் ஒரேமனிதனிடத்தில் ஞானம்முழுமையும் சேர்ந்திருப்பது ஓரிடத்திலும் இல்லை. ஓ! பாஹுக![1] இந்தமரத்தில் இருக்கிற இலைகளையும் பழங்களையும்காட்டிலும் கீழே உதிர்ந்துகிடக்கிற இலைகள் நூறு அதிகமும் பழங்கள் ஒன்றுஅதிகமுமாகும். பாஹுக! இந்த இரண்டுகிளைகளிலும் (ஒன்றில்) ஓர்இலை அதிகமும் (மற்றொன்றில்) ஒருபழம் அதிகமுமாக ஐந்துகோடி இலைகள் இருக்கின்றன. நீ எண்ணப்போகிற இந்தக்கிளைகளிலுள்ள பழங்களைச் சொல்லுவேன். இந்த மரத்தின் இரண்டுகிளைகளையும் (அவற்றிலுள்ள) மற்றச்சிறுகிளைகளையும் கூட்டிப்பார். இவைகளில் இரண்டாயிரத்துத்தொண்ணூற்றைந்து பழங்களிருக்கின்றன' என்றான். பிறகு, பாஹுகன் தேரினின்றும் இறங்கி அரசனை நோக்கி, 'ஓ! பகைவரை மெலிவிப்பவனே! அரசனே! எனக்குத் தெரியாததுபோலத் தற்புகழ்ச்சி செய்துகொள்ளுகிறாய். தான்றி(க்கிளை)யை ஒடித்து இதனை நேரில் கணக்கிடுவேன். வேந்தே! பிறகு, எண்ணப்பட்டவுடன், உனது (கணக்குத்) திறமையை அறிவேன். ஓ! மஹாராஜ! உனக்கெதிரிலேயே தான்றியை[2] ஒடிப்பேன். இது இவ்விதம் இருக்குமோ இராதோ யான் அறியேன். ஓ! ஜனாதிப! நீ பார்க்கும்பொழுதே இதன் பழங்களை எண்ணுவேன். வார்ஷ்ணேயன் குதிரைகளின் கடி

1 வேறு பாடம். 2 வேறு பாடம்.

வாளத்தை ஒரு முகூர்த்தம் பிடிக்கக்கடவன்' என்று சொல்லினன். அரசன், 'தாமதிக்க இது காலமன்று' என்று பாகனை அவனுக்குச் சொல்லினன். பாஹுகனோ மிக்க முயற்சியை அடைந்தவனாகி, அவனை நோக்கி, 'நீ ஒரு முகூர்த்தகாலம் பொறுத்திரு. அல்லது, நீ விரைவுபட்டால், மங்களமான இந்தவழி போகின்றது; வார்ஷ்ணேயனைத் தேர்ப்பாகனாக்கிக்கொண்டு போ' என்றான். ஓ! குருநந்தன! ருதுபர்ணன் அவனுக்கு இன்மொழிகூறிக்கொண்டு, 'ஓ! பாஹுக! உலகத்தில் தேர் ஓட்டுகிறவன் நீ ஒருவனே; மற்றவனில்லை. ஓ! குதிரைகளை அறிந்தவனே! உன்னைக்கொண்டே விதர்ப்பதேசத்தை அடையவிரும்புகிறேன். உன்னைச் சரணமடைந்தவனாக இருக்கின்றேன். தடைசெய்யாதே. ஓ! பாஹுக! இன்று விதர்ப்பதேசத்திற்குச் சென்று சூரியனை எனக்குக் காண்பிப்பாயானால் என்னிடம் நீ சொல்லும் உனது இஷ்டத்தையும் செய்வேன்' என்று சொன்னான்.

பிறகு, பாஹுகன், 'தான்றியை எண்ணினபின்பு விதர்ப்பதேசத்திற்குச் செல்லுவேன். இவ்விதம் எனது வார்த்தையைச் செய்' என்று அவனுக்குச் சொல்லினன். அரசன், விருப்பமில்லாதவனாக, 'எண்ணுவாய்; குற்றமற்றவனே! குதிரைகளின் தன்மை அறிந்தவனே! என்னால் உத்தரவு செய்யப்பட்ட கிளையின் ஒரு பாகத்தை எண்ணு. அதிலிருந்து நீ திருப்தியடை' என்று அவனுக்குச் சொல்லினன். அவன் விரைவாகத் தேரினின்றும்இறங்கி அந்த மரக்கிளையை ஒடித்தனன். பிறகு, சொல்லப்பட்டபடி அவ்வளவு பழங்களையே அவன் எண்ணி வியப்படைந்து அரசனை நோக்கி, 'அரசனே! இந்த மிக்க ஆச்சரியமான உனது திறமையைக் கண்டேன். ஓ! மன்னவ! இதனை அறியக்கூடிய அந்த வித்தையைக் கேட்கவிரும்புகிறேன்' என்னும் இதைச் சொல்லினன். வேந்தே! பிறகு, போவதில் விரைவுள்ளவனான அரசன், 'என்னை [1]அக்ஷஹ்ருதயத்தை அறிந்தவனென்றும் கணக்கிடுவதிலும் வல்லவனென்றும் அறிவாயாக' என்று அவனுக்குச் சொல்லினன். பிறகு, பாஹுகன் அவனை நோக்கி, 'மனிதரிற்சிறந்தவனே! இரண்டு வித்தையையும் கொடு. என்னிடமிருந்தும் அஸ்வஹ்ருயத்தைப் பெற்றுக்கொள்' என்று சொன்னான்.

பிறகு, ருதுபர்ணராஜன் காரியகௌரவத்தாலும் குதிரை வித்தையில் ஆசையாலும் அந்தப் பாஹுகனை நோக்கி, 'அப்

1 சூதாட்டத்திற்குரிய தேவதையை வசப்படுத்தும் மந்திரம்.

படியே. ஓ! பாஹுக! நீ இந்தச் சிறந்த அக்ஷஹ்ருதயத்தைச் சாஸ்திரத்திற் சொல்லப்பட்டபடி பெற்றுக்கொள். எனது அச்வ ஹ்ருதயமானது உன்னிடத்தில் அடைக்கலமாக இருக்கட்டும்' என்னும் சொல்லைச் சொன்னான். இவ்விதம் சொல்லி ருதுபர்ணன் நளனுக்கு வித்தையைக் கொடுத்தான். அக்ஷஹ்ருதயத்தை அறிந்த அவனது சரீரத்தினின்றும் கொடிதான கர்க்கோடக விஷத்தை வாயினால் எப்பொழுதும் கக்கிக்கொண்டு கலியானவன் வெளி வந்தான். அப்பொழுது, (தமயந்தியின் சாபத்தினால்) பீடிக்கப் பட்ட அந்தக் கலியினுடைய அந்தச் சாபாக்னியானது (அவனை விட்டு) வெளிப்பட்டது. கலியானவன் முன்பு அவனைப் பித்தன் போன்ற உருவமுள்ளவனாகவும் காந்தியற்றவனாகவும் மிகத் துன் புறுத்தப்பட்டவனாகவும் செய்தான். அந்த அரசன் அந்தக் கலியி னால் நீண்டகாலம் மெலிவிக்கப்பட்டு உருமாறியிருந்தான். பிறகு, கலி விஷத்தால் விடுபட்ட சரீரமுள்ளவனாகித் தனது (முன்) உருவத்தை அடைந்தான். நிஷதாதிபதியான நளன் கோபங்கொண்டு அவனைச் சபிக்கவிரும்பினான். கலியானவன் பயந்து நடுங்கிக் கரங் குவித்துக்கொண்டு அவனை நோக்கி, 'அரசனே! கோபத்தை அடக்கு. உனக்குச் சிறந்த புகழைத் தருவேன். இந்திரஸேனனின் தாய் முன்பு உன்னால் விடப்பட்டபொழுது கோபங்கொண்டு என்னைச் சபித்தாள். ஓ! ராஜேந்திர! ஜயிக்கப்படாதவனே! அதனால், யான் மிகப்பீடிக்கப்படுகிறவனும் நாகராஜனின் விஷத் தால் இரவும் பகலும் எரிக்கப்படுகிறவனுமாகி உன்னிடத்தில் மிக்க துயருடன் வஸித்தேன். உன்னைச் சரணமடைந்தவனாக இருக்கிறேன். எனது இந்தச் சொல்லையும் கேள். உலகத்தில் எந்த மனிதர்கள் ஶ்ரத்தையுடன் உன்னைச் சொல்லுவார்களோ அவர் களுக்கு என்னிடமிருந்து உண்டாகும் பயம் ஒருபொழுதும் ஏற் படாது. மஹாராஜனே! பயத்தால் பீடிக்கப்பட்டுச் சரணம டைந்த என்னை நீ சபிக்காமலிருந்தால், எவர்கள் நள(னென உன்) னைச் சொல்லுவார்களோ அவர்களுக்கு மனத்தைப்பற்றியதும் மெய்யைப்பற்றியதும் சொல்லைப்பற்றியதுமான (பயம்) உண் டாகாது' என்றான். இவ்விதம் சொல்லக் கேட்ட நளராஜன் தனது கோபத்தை அடக்கினான். பிறகு, கலி பயத்துடன் விரை வாகத் தான்றிமரத்தில் நுழைந்தான். கலி நளனுடன் பேசின பொழுது பிறனால் பார்க்கப்படவில்லை.

கலி நன்கு மறைந்தவுடன், பகைவீரர்களைக் கொல்லும் நிடத ராஜன் தாபம் நீங்கினவனாகி அதன் பழங்களையும் எண்ணி, பிறகு, மிக்க களிப்புடனும் மிக்க காந்தியுடனும் கூடித் தேரிலேறி விளங்குபவனாகி வேகமான குதிரைகளுடன் சென்றான். ஓ! பாண்டு நந்தன! ராஜேந்திர! அதுமுதல் இவ்வுலகில் தான்றிமரமானது, கலி அடைந்திருத்தலால், விலக்கப்பட்டதாயிற்று. அடிக்கடி பக்ஷிகளைப் போல உயரக்கிளம்புகின்ற சிறந்த குதிரைகளை நளன் மிக்க ஸந்தோஷமுள்ள மனத்துடன் நடத்தினான். மிக்க புகழ்பெற்ற அந்த அரசன் விதர்ப்பதேசத்தை நோக்கிச் சென்றான். நளன் நெடுந்தூரம் சென்றவுடன், கலியும் தன் வீட்டை அடைந்தான். அரசனே! பிறகு, கலியால் விடப்பட்டவனும் உருவம்மட்டும் மாறினபடியிருப்பவனும் பூமிக்குப் பதியுமான நளராஜன் கவலையற்றவனாயினன்.

எழுபத்தோராவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(ருதுபர்ணன் குண்டினபுரத்தில் நுழைந்ததும், அவனது தேரொலியைக் கேட்ட தமயந்தி அதனை ஓட்டுபவனை நளனென்றெண்ணி அதனை அறிதற்காகத் தூதியை அனுப்பியதும்.)

பிறகு, உண்மையான பராக்ரமமுள்ள ருதுபர்ணன் ஸாயங்காலத்தில் விதர்ப்பதேசத்தை அடைந்திருப்பதை ஜனங்கள் பீமராஜனுக்குத் தெரிவித்தார்கள். அந்த அரசன், பீமனிடம் அனுமதிபெற்றுத் தேரொலியினால் மூலைத்திசைகளுடன் கூடின எல்லாத் திக்குக்களையும் முழங்கச் செய்துகொண்டு குண்டினபுரத்தில் நுழைந்தான். பிறகு, அங்குள்ள நளனுடைய குதிரைகள் அந்தத் தேரொலியைக் கேட்டன; கேட்டவுடன், முன் நளனெதிரில் மகிழ்வதுபோல மிகமகிழ்ந்தன. மழைக்காலத்தில் முழங்குகின்ற மேகத்தின் ஒலியைப் போன்ற நளனுடைய கம்பீரமான அந்தத் தேரொலியைத் தமயந்தியும் கேட்டாள். மிக உரத்த சப்தத்தைக்கேட்டு மிக்க வியப்படைந்த தமயந்தியும், அப்படியே நளனது குதிரைகளும், அந்தத் தேரொலியை, முன்பு நளனால் அவனுடைய குதிரைகள் ஓட்டப்படும்போது உண்டான ஒலிக்கு ஒப்பாக எண்ணினார்கள். உப்பரிகையிலிருக்கும் மயில்களும் யானைச்சாலை

யினும் குதிரைச்சாலையிலுமுள்ள யானைகளும் குதிரைகளும் அந்த அரசனுடைய தேரொலியைக் கேட்டன. ஓ! அரசனே! யானைகளும் அப்படியே மயில்களும் அந்தத் தேரொலியைக்கேட்டு மேகத்தின் வரவைப் பார்த்து ஒலிப்பதுபோல எதிர்முகமாக ஒலித்தன.

தமயந்தி, 'பூமியை நிரப்புவதுபோன்ற இந்தத் தேரொலியானது எனது மனத்தை மகிழ்விக்கின்றதாதலால் இதனை ஒட்டுபவர் நளராஜரே. இப்பொழுது சந்திரன்போலப் பிரகாசிக்கும் முகமுள்ளவரும் எண்ணுதற்கரிய குணமுள்ளவரும் வீரருமான அந்த நளராஜரைப் பாரேனாகில் கெடுவேன்: சந்தேகமில்லை. யான் இப்பொழுது அந்த வீரருடைய இனிய தொடுகையுள்ள கைகளின் நடுவை அடையேனாகில் இருக்கமாட்டேன்: ஸந்தேகமில்லை. மேக முழக்கம்போன்ற குரலுள்ள நளராஜர் என்னை அடையாவிடில் இப்பொழுது பொன்போன்ற நிறமுள்ள தீயில் பாய்வேன். சிங்கம் போன்ற பராக்ரமமுள்ளவரும் மதங்கொண்ட யானைபோல் நடப்பவருமான ராஜஶ்ரேஷ்டர் என்னை அடையாவிடில் நாசத்தை அடைவேன்:ஸந்தேகமில்லை. (அவரிடத்தில்) சிறிதும் பொய் இருப்பதாக நான் எண்ணவில்லை; அபகாரம் செய்யும் தன்மையுமிருப்பதாக எண்ணவில்லை. தற்செயலான பேச்சுக்களிலும் (அந்த) மஹாத்மாவினுடைய சொல் பழுதுபோனதில்லை. பிரபுவும் பொறுமையுள்ளவரும் வீரரும் ஈகையுள்ளவரும் மற்ற அரசர்களைக்காட்டிலும் மேலானவருமான என்னுடைய நிஷதராஜர் பேடிபோல அற்பர்களை அடுத்திருக்கிறார். கஷ்டம்! அவருடைய குணங்களை நினைக்கிறவளும் பகலும் இரவும் அவரையே பற்றியுள்ளவளுமான எனது இந்த மனமானது காதலரைப் பிரிந்ததாகிச் சோகத்தால் பிளக்கின்றது' என்றாள்.

இவ்விதம் அவள் அறிவற்றவள் போலப் புலம்பிக்கொண்டு, புண்யஶ்லோகனைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பத்தால் உயர்ந்த உப்பரிகையில் ஏறினாள். ஓ! அரசனே! நல்லமனமுள்ள தமயந்தி நாற்புறமும் பார்த்துப் பிறகு நடுக்கட்டில் தேர் இருப்பதையும் ருதுபர்ணராஜன் வார்ஷ்ணேயனுடனும் பாஹுகனுடனுமிருப்பதையும் கண்டாள். பிறகு, வார்ஷ்ணேயனும் பாகுகனும் அந்தச் சிறந்த தேரினின்றும் இறங்கி அந்தக் குதிரைகளைக் (கடிவாளத்தைத்) தளர்த்திவிட்டுத் தேரை நிறுத்தினார்கள். அந்த நராதிபனை ருதுபர்ணன் தேர் நடுவிலிருந்து இறங்கிப் பயங்கரமான பராக்ரமமுடைய பீமமஹாராஜனை வந்தடைந்தான். பீமன், அவனை மிக்க

ஸந்தோஷத்துடனும் மரியாதையுடனும் வரவேற்றான். நராதிபனை அந்த ருதுபர்ணன் அந்த அரசனால் பூஜிக்கப்பெற்றான். அழகிய அந்தக் குண்டினபுரத்தில் வந்திருக்கிற [1] அந்த அரசன் [2] அப்பொழுது அடிக்கடி பார்த்தும் விதர்ப்பாதிபதியான அரசனுடன் சேர்ந்திருந்தும் (விசேஷம்) ஒன்றையும் காணவில்லை. சடிதியில் அடையப்பட்ட ஸ்திரீகளின் ரகஸ்ய ஆலோசனையை, காரணமில்லாமையால், பீமன் அறியவில்லை. பாரத! பீமராஜன் ருதுபர்ணனை, 'உன் வரவு நல்வரவாகுக; என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டான். அந்தப் பீமராஜன், (ருதுபர்ணன்) தன் மகள்விஷயமாக வந்ததை அறியவில்லை. புத்தியுள்ளவனும் உண்மையான பராக்ரமமுள்ளவனுமான அந்த ருதுபர்ண ராஜன் ஓர் அரசனையாவது ஒரு ராஜகுமாரனையாவது காணவில்லை. ஸ்வயம்வரப் பேச்சையும் பிராம்மணர்களின் வரவையும் ஸ்வயம்வர காரியத்தைக்குறித்து மற்றும் ஒரு யத்தனத்தையும் காணவில்லை. பிறகு, கோஸலாதிபனாகிய அரசன் மனத்தில் ஒன்றும் தோன்றாதவனாகி, 'உங்களை நமஸ்கரிப்பதற்காக வந்திருக்கிறேன்' என்று அந்தப் பீமனுக்குச் சொல்லினன். பீமராஜனும், சிரித்துக்கொண்டு, பல கிராமங்களைத் தாண்டி நூறுயோஜனைக் கதிகதூரம் அவனது வரவின் காரணத்தை மனத்தால் நன்கு ஆலோசித்தனன். உண்மையை அறியவில்லை. அந்த அரசன், 'வரவின் காரணமானது சிறிய காரியமுடையதாக அவனால் குறிப்பிடப்பட்டது. (ஆனால்,) இது இவ்விதமன்று. காரணம் எதுவாகுமென்பதைப் பின்பு முடிவில் தெரிந்துகொள்வேன்' என்றெண்ணி, அவனை மரியாதைசெய்து, 'வாட்டமடைந்திருக்கிறாய்; இளைப்பாறக்கடவாய்' என்று அடிக்கடி சொல்லி அனுப்பினான்.

அன்புள்ள பீமராஜனால் மரியாதை செய்யப்பட்டவனும் மனம் மிக மகிழ்ந்தவனும் அன்புள்ளவனுமான அந்த ருதுபர்ணராஜன் பீமராஜனுடைய வேலைக்காரர்களால் பின்தொடரப்பட்டவனாகிக் குறிப்பிடப்பட்ட விடுதியை அடைந்தான். வேந்தே! ருதுபர்ணராஜன் வார்ஷ்ணேயனுடன் சேர்ந்து போனபிறகு, பாகுகன் ரதத்தை ஓட்டிக்கொண்டு ரதசாலையை அடைந்தான். அவன் அந்தக் குதிரைகளை அவிழ்த்துவிட்டு, முறைப்படி உபசரித்து அவைகளைக் களைப்பாற்றித் தானும் தேர் நடுவில் உட்கார்ந்தான். விதர்ப்பராஜகுமாரியான தமயந்தியும் சோகத்தால்

1, 2 இரட்டித்தலால் இரண்டு சொற்கள் விடப்பட்டன.

துன்பமடைந்து பாகஸ்வரிராஜனையும் ஸூதபுத்ரனான வார்ஷ்ணே யனையும் அப்படியிருக்கும் பாஹுகனையும் கண்டு,'இது யாருடைய தேரின் ஒலி? நளராஜருடைய தேரொலிபோலப் பெரிதாகஇருந் தது. நிஷதராஜரையோ காணவில்லை. அதே வித்தையானது வார்ஷ்ணேயனால் கற்கப்பட்டிருக்கவேண்டுமென்பது நிச்சயம். அதனால், இந்தத் தேரொலியானது இப்பொழுது நளராஜருடைய தேரொலிபோலப் பெரிதாக இருந்திருக்கவேண்டும். அல்லது, ருது பர்ணனும் நளராஜர்போலவே (அச்வஹ்ருதயம் தெரிந்தவனா யிருக்கவேண்டும்.) நிஷதராஜருடைய தேரொலிபோலவே இந்தத் தேரொலியும் காணப்படுகிறது' என்று ஆலோசித்தாள். அரசனே! அழகிய அந்தத் தமயந்தியோ இவ்விதம் ஆலோசித்து நிஷதராஜ னைத் தேடும் விஷயத்தில் வேலைக்காரியை அனுப்பினாள்.

எழுபத்திரண்டாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தமயந்தியால் அனுப்பப்பட்டகேசினி நளனிடம் பேசித் திரும்பிவந்து, பேசும்பொழுது உண்டான குறிப்புக் களைத் தமயந்தியிடம் தெரிவித்தது.)

தமயந்தி, 'ஓ! கேசினி! ரதத்தின் நடுவில் உட்கார்ந்தவனும் விகாரத்தை அடைந்தவனும் குறுகிய கையுள்ளவனுமான இந்தத் தேர்ப்பாகன் யார்? போ; தெரிந்துவா. சுபமானவளே! குற்ற மற்றவளே! இந்தமனிதனிடம் சென்று ஸாவதானமுள்ளவளாகி நயத்துடன் க்ஷேமத்தை உள்ளபடி வினவுவாயாக. என் மனத்திற் குச் சந்தோஷமும் ஹ்ருதயத்திற்கு ஸுகமும் உண்டாதலால் இவர் நளராஜராக இருக்கவேண்டுமென்ற பெரிய சங்கையானது இவர்விஷயத்தில் எனக்கிருக்கின்றது. குற்றமற்றவளே! நீ பேச் சின் முடிவில், பர்ணாதன் சொல்லியசொல்லையும் இவரை நோக்கிச் சொல்லக்கடவாய். நீ மறுமொழியையும் அறிந்து வருவாயாக' என்றாள். தூதியானவள் ஸாவதானமாகச் சென்று பாகுகனை நோக்கிப் பின்வருமாறு சொன்னாள். கல்யாணியான தமயந்தி யும் உப்பரிகையில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

கேசினி, 'ஓ! மனுஷ்யேந்திரரே! உமது வரவு நல்வரவாகுக. யான் உமக்கு க்ஷேமத்தைச் சொல்லுகின்றேன். மனிதரேறே!

தமயந்தியின் சொல்லை நன்கு அறியக்கடவீர். நீங்கள் எப்பொழுது புறப்பட்டீர்கள்? எதற்காக இங்குவந்தீர்கள்? நியாயப்படி, உண்மையை உரைப்பீராக. தமயந்தி கேட்க விரும்புகிறாள்' என்றாள். பாஹுகன், 'மகாத்மாவான கோஸலராஜன் நாளைத் தினம் தமயந்திக்கு இரண்டாவது ஸ்வயம்வரம் நடக்கப்போகிறதென்று பிராம்மணனிடமிருந்து கேட்டான். இதைக்கேட்டு, அரசன் நூறுயோஜனம் செல்லக் கூடியவையும் காற்றுவேகமுள்ளவையுமான முக்கியமான குதிரைகளுடன் புறப்பட்டான். நான் இவனுடைய தேர்ப்பாகன்' என்றான். கேசினி, 'உங்களுள் மூன்றாமவனான இவன் எங்கிருந்தவன்? எவனுடையவன்? நீர் யாரைச் சேர்ந்தவர்? எவ்விதம் இந்தக்காரியம் உம்மிடத்தில் அமைந்தது?' என்று கேட்டாள். பாஹுகன், 'புண்யஸ்லோகனுடைய ஸூதன் வார்ஷ்ணேயனென்று பெயர்பெற்றவன். சுபமானவளே! அவன் நளன் ஓடிப்போனதும் பாகஸ்வரியை அடைந்தான். குதிரைத் தொழிலில் வல்லவனும் தேரோட்டுவதில் புகழ்பெற்றவனுமான யானும் ருதுபர்ணனால் தேரோட்டுவதிலும் சமையல் செய்வதிலும் வலிய வேண்டப்பட்டேன்' என்று விடையளித்தான். கேசினி, 'ஓ! பாஹுகரே! நளராஜர் எங்குப்போனாரென்று வார்ஷ்ணேயன் அறிவானா? அவனால் உம்மிடத்தில் ஏதாவது சொல்லப்பட்டது உண்டா?' என்றாள். பாஹுகன், 'இவன் நளனுடைய அழகிய தோற்றமுள்ள மக்களை இங்கேயேவிட்டுப் பிறகு இஷ்டப்படி போயினன். நளனை அறியான். புகழுள்ளவளே! மற்றும் எந்தமனிதனும் நளனை அறியான். பூமிக்கு அரசனான அவன் உருவம் மாறினவனாகி இவ்வுலகில் மறைந்து ஸஞ்சரிக்கிறான். நளனை அவனது [1]ஆத்மாவே அறியும்; அந்த ஆத்மாவுக்கு அடுத்தபடியானவளும் (அறிவாள்.) நளனுக்கு உரிய அடையாளங்கள் ஒருபொழுதும் அவனைக்காட்டா' என்றான். கேசினி, அப்பொழுது, 'சூதாடியே! காதலனே! என்னுடைய பாதி வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, பிரியமுள்ளவளும் தூங்குகின்றவளும் காதலியுமான என்னைக் காட்டில்விட்டு எங்கே சென்றனை? பகலும் இரவும் எரிக்கப்படுகின்றவளும் பாதி ஆடையைச் சுற்றிக்கொண்டவளுமான அவள் [2] உன்னால் காணப்பட்ட

---

1 அவனே அறிவானென்பது.

2 'ஸமாதிஷ்டா' என்பது மூலம்; முன் 67-வது அத்யாயத்தில் 'த்வயா த்ருஷ்டா' என்றிருக்கிறது. இங்கும் அந்தப்பாடமே கொள்ளப்பட்டது. உ௪அ-ம் பக்கம் உக-வது வரி பார்க்க.

படி உன்னை எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறாள். அரசனே! அந்தத் துக்கத்தால் எப்பொழுதும் அழுகின்ற அப்படிப்பட்ட எனக்குத் தயைசெய். வீர! மறுமொழியும் சொல். ஓ! அறிவிற்சிறந்தவனே! அவள் விரும்பும் அந்த வரலாற்றைச் சொல். குற்றமற்ற தமயந்தியானவள் அதே வார்த்தையைக் கேட்க விரும்புகின்றாள்' (என்ற) இந்த ஸ்திரீவார்த்தைகளை அடிக்கடி சொல்லிக்கொண்டு முதலில் அயோத்தியை அடைந்த அந்தணனுக்கு இவற்றைக் கேட்டு, நீர் முன்பு மறுமொழி சொன்னீரல்லவா? அதனைத் திரும்பவும் தமயந்தி கேட்க விரும்புகிறாள்' என்றாள்.

ஓ! குருநந்தன! இவ்விதம் கேசினியால் சொல்லப்பெற்ற நளனது மனமானது துக்கமடைந்ததாயிற்று. கண்களும் நீர் நிரம்பினவை ஆயின. பாரத! எரிக்கப்படுகின்ற அந்த அரசன் தனது துக்கத்தை அடக்கிக்கொண்டு, கண்ணீரால் விளங்காத சொல்லுடனே திரும்பவும் பின்வருமாறு சொல்லலானான். 'குலஸ்திரீகளான கற்புள்ளபெண்கள் கஷ்டத்தைஅடைந்தவர்களாயினும் தாமே தம்மைக் காத்துக்கொள்ளுகின்றார்கள். (அவர்களால்) ஸ்வர்க்கமானது ஜயிக்கப்பட்டது. ஸம்சயமில்லை. பர்த்தாக்களால் விடப்பட்டார்களாயினும், ஒருபொழுதும், கோபியார். உத்தமஸ்திரீகள் ஒழுக்கத்தைக் கவசமாயுடைய உயிர்களைத் தரிக்கின்றார்கள். கஷ்டத்திலிருப்பவனும் மூடனும் ஸுகத்திலிருந்து நழுவினவனுமான அவனால்விடப்பட்டவிஷயத்தில், அவள்கோபிப்பது தகாது. உணவை விரும்பினவனும் பறவைகளால் ஆடை கவரப்பட்டவனும் மனோவியாதிகளால் எரிக்கப்படுகின்றவனுமான (அவன்) விஷயத்தில் ஸ்யாமையானவள் கோபிப்பது தகாது. மரியாதை செய்யப்பட்டவளாயினும் அல்லது செய்யப்படாதவளாயினும் ராஜ்யத்தை இழந்தவனும் செல்வமற்றவனும் பசியுள்ளவனும் துக்கத்தில் முழுகியவனுமான அவ்விதமான பர்த்தாவைக்கண்டு' என்று இவ்விதம் அவ்வார்த்தையைச் சொல்லுகின்ற நளன் மிக்க மனவருத்தங்கொண்டு கண்ணீரை அடக்கச் சக்தியற்றவனாகி மிக அழுதான். பிறகு, அந்தக் கேசினி திரும்பிப்போய் அவனது அந்தச் சொல்அனைத்தையும் அந்தச் சரீரத்திலுண்டான வேறுபாடுகளையும் தமயந்திக்குத் தெரிவித்தாள்.

எழுபத்துமூன்ருவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(கேசினி, பாஹுகன் நீரும் நெருப்பும் உண்டுபண்ணிக்கொண்டதைத் தமயந்திக்குத் தெரிவித்ததும், தமயந்தி பரிசோதிப்பதற்காக மக்களை அனுப்பியதும், பாதுகன் கண்ணீருடன் மக்களைத் தழுவியதும், கேசினியிடம் அவர்களைத் தான்தழுவினதற்கு வேறு காரணம் சொல்லியதும்.)

அரசனே! தமயந்தி, கேசினியின் அந்தச் சொல்லைக் கேட்டு, அவனை நளனென்று ஸந்தேகித்துக் கேசினியை நோக்கி, 'ஓ! கேசினி! நீ திரும்பவும் போ. பாகுகனிடம் சோதனையைச்செய். ஒன்றும் சொல்லாமல் ஸமீபத்திலிருந்துகொண்டு அவனுடைய செயல்களைப் பார். ஓ! விளக்கமுள்ளவளே! அவன் ஒரு காரியத்தைச் செய்யும்பொழுது அதன் காரணத்தையும் அதில் வேலை செய்கின்ற(அவனுடைய)செய்கையையும் உற்றுநோக்கக்கடவாய். ஓ! கேசினி! நிர்ப்பந்தித்தாலும், அவனுக்கு நெருப்புக் கொடாதே. யாசித்தாலும், தாமதித்தாயினும் ஒரு முறையும் நீரும் கொடாதே. நீ இந்தச் செயலனைத்தையும் நன்கு பார்த்து எனக்குத் தெரிவிப்பாயாக. நீ பாஹுகனிடத்தில் காணும் தேவர்க்குரியவையும் மனிதர்க்குரியவையுமான குறிப்புக்களையும் மற்றும் பார்ப்பதையும் நீ எனக்குச் சொல்ல வேண்டும்' என்னும் இதனைச் சொல்லினள்.

தமயந்தியால் இவ்விதம் சொல்லப்பட்ட அந்தக் கேசினி பின்னும் போயினள்; பிறகு, குதிரைகளை அறிந்தவனுடைய குறிப்புக்களைக் கண்டு திரும்பவும் வந்தனள். அவள் பாஹுகனிடத்தில் தேவர்க்குரியவையும் மனிதர்க்குரியவையுமான தான் கண்ட குறிப்புக்கள் முழுமையையும் நடந்தபடியே தமயந்திக்குத் தெரிவித்தாள். கேசினி, 'ஓ! தமயந்தி! இவன் உறுதியாகச் சுத்தமான செய்கையுள்ளவன். இப்படிப்பட்ட மனிதன் ஓர் இடத்திலும் முன்பு என்னுல் பார்க்கப்பட்டதுமில்லை; கேட்கப்பட்டதுமில்லை. இது நிச்சயம். தாழ்வான வாயிலை அடைந்தும் இவன் ஓரிடத்திலும் குனியவில்லை. ஆனுல், அவனைக் கண்டு மேலே படாதபடியும் ஸுகமாகச் செல்லும்படியும் (வாயில்) உயர்ந்துவிடுகின்றது. நெருக்கமான இடத்திலும், இவனுக்கு மிகப்பெரிதும் அதி

கமுமான இடம் உண்டாகின்றது. மேலும், பீமராஜனுல் ருதுபர் ணனுக்காகப் பலவகை உணவுப்பொருள்களும் ஆடு முதலியவற்றி னுடையவையான பலவகை மாமிசங்களும் அவ்விடத்தில் அனுப் பப்பட்டன. அவற்றை அலம்புவதற்காக அங்குக் குடங்கள் வைக் கப்பட்டன. பிறகு, அவனுல் பார்க்கப்பட்ட அந்தக் குடங்கள் (நீர்) நிரம்பினவையாகவே ஆயின. பிறகு, பாஹுகன், அலம்பு தலைச்செய்து (அடுப்பில்) வைத்து ஒருபிடி துரும்பை எடுத்து அதனைச் சூரியனுக்கெதிரில் பிடித்தான். பிறகு, அங்கு நெருப்பு விரைவாக மூண்டது. அந்த மிக்க ஆச்சரியத்தைக் கண்டு நான் வியப் படைந்து இங்கு வந்தேன். சுபமானவளே! மிகப்பெரிய வேறு ஆச்சரியமும் அவனிடத்தில் என்னுல் பார்க்கப்பட்டது. அவன் நெருப்பைத்தொட்டும் அது அவனைச் சுடவேயில்லை. குடம் சாய்க்கப்பட்டால் ஜலமும் அவனுடைய இஷ்டப்படி வேகமாகப் பெருகுகின்றது. வேறு மிகப்பெரிய ஆச்சரியத்தையும் நான் மிகுதியாகக் கண்டேன். அவன் புஷ்பங்களைக் கைகளால் எடுத்து மெல்லக் கசக்கினுன். அவனுல் கைகளினுல் கசக்கப்பட்ட புஷ் பங்கள் மாறுபடவில்லை; அதிகமாக மலர்ந்தவையும் நல்ல மண முள்ளவையுமே ஆயின. ஓ! விசாலாக்ஷி! பாகுகனிடம் ஆச்சரிய மான இந்தச் செய்கைகளைக் கண்டு நான் மிக்க ஆச்சரியத்தை அடைந்தேன்' என்றுள்.

தமயந்தியோ, புண்யஸ்லோகனுடைய அந்தச் செய்கையைக் கேட்டு, வந்திருப்பவனை (ச் சமையல் முதலிய) காரியங்களாலும் (பூத ஜயம் முதலிய) செய்கைகளாலும் குறிப்பிடப்பட்ட நளனென்று எண்ணினுள். அவள் பாகுகரூபமுள்ளவனைப் பர்த்தாவான நள னென ஐயமுற்று அழுதுகொண்டு கேசினியைநோக்கி மெதுவான சொல்லால், 'விளங்குபவளே! திரும்பவும் செல்வாய்; பாகுகன் பராக்காயிருக்கும்பொழுது சமையல் அறையிலிருந்து சமையல் செய்யப்பட்டதும் சம்பாரம் சேர்க்கப்பட்டதுமான மாம்ஸத்தை இங்குக் கொண்டுவா' என்று, திரும்பவும் சொன்னுள். ஓ! குரு நந்தன! அந்தக் கேசினியானவள், பாகுகன் வேறு காரியத்தில் மனஞ்செலுத்திக்கொண்டிருக்கும் ஸமயம்பார்த்து, மிக்க உஷ்ண மாகவே அந்த மாமிசத்தை அவனுக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு அங்கிருந்து வேகமுள்ளவளும் பிரியத்தைச்செய்பவளு மாகிவந்து அதேக்ஷணத்தில் தமயந்திக்குக் கொடுத்தாள். முன்பு

பலமுறை நளனால் பாகம் செய்யப்பட்ட மாமிசத்தைப் புசித்தவளான அவள், (அதனைப்) புஜித்து, ஸோதனை நளனாக எண்ணி மிக்க துக்கத்துடன் அழுதாள். ஓ! பாரத! மிக்க தளர்ச்சியை அடைந்து, பிறகு, முகத்தை அலம்பிக்கொண்டு, கேசினியுடன் ஆணும் பெண்ணுமான இருகுழந்தைகளையும் அனுப்பினாள். அரசனான பாகுகன் இந்திரசேனையையும் அவள் தமயனையும் நன்கு அறிந்துகொண்டு அப்பொழுது எதிரில் ஓடிவந்து (அவர்களைத்) தழுவி மடியில் வைத்துக்கொண்டான். பாகுகனோ தேவர்களின் குழந்தைகள் போன்ற குழந்தைகளை அடைந்து மிக்க துக்கத்தால் நிரம்பிய மனமுள்ளவனாகி உரத்தகுரலுடன் அழுதான். அப்பொழுது, நைஷதன் (துயரச்) செயல்களை அடிக்கடி காண்பித்து விரைவாகக் குழந்தைகளைவிட்டுக் கேசினியை நோக்கி, 'ஓ! சுபமானவளே! இந்த இரண்டு குழந்தைகளும் என் குழந்தைகளை ஒத்திருக்கிறார்கள். ஆகையால், பார்த்தவுடனே, நான் விரைவாகக் கண்ணீரை விட்டேன். அடிக்கடி வருகின்ற உன்னை ஜனங்கள் தோஷமுள்ளவளாக ஸந்தேகிப்பார்கள். நாங்களும் தேசத்திற்குப் புதியவர்கள். சுபமானவளே! ஸுகமாகச் செல்லக்கடவாய்' என்றான்.

எழுபத்துநான்காவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தமயந்தி பெற்றோரிடம் அனுமதிபெற்றுக் கேசினியை அனுப்பிப் பாகுகனைத் தன் மாளிகைக்கு வரவழைத்து அவனுடன் பேசியதும், அவன் தான் நளனென்பதைச் சொல்லிக் கர்க்கோடகனை நினைத்து அவன் கொடுத்த ஆடையைஅணிந்து நளரூபத்தை அடைந்ததும், தமயந்தி அவனைத் தழுவியதும்.)

கேசினி, புத்திமானான புண்யஶ்லோகனின் செயலனைத்தையும்கண்டு விரைவாகவந்து தமயந்திக்குத் தெரிவித்தாள். பிறகு, தமயந்தி, நளனைக் [1] காணும் ஆசையால் துக்கத்தால் பீடிக்கப்பட்டு, மறுபடியும் தன் தாயினிடம், 'நளனென்னும் ஐயத்தால் பாகுகன் பலமுறை என்னால் பரீக்ஷிக்கப்பட்டான். ரூபத்தில் மட்டும் ஒருஸம்சயம் எனக்கு இருக்கிறது. (அதனை) நான் நேரில்

---

1 வேறு பாடம்.

அறியவிரும்புகிறேன். தாயே! அவனையாவது வரச்செய். எனக்காவது போக அனுமதி கொடு. என் பிதாவுக்குத் தெரிவித்தோ தெரிவியாமலோ (இதனை) ஏற்பாடு செய்' என்று சொல்லும்படி கேசினியை அனுப்பினாள். இவ்விதம் தமயந்தியால் சொல்லப்பட்ட தேவியானவள் குமாரியின் விருப்பத்தைப் பீமனிடம் சொன்னாள். அந்தஅரசன் அனுமதி கொடுத்தான். ஓ! பரதருட்சிறந்தவனே! கௌரவ்ய! அவளோ தந்தையினாலும் தாயினாலும் அனுமதியளிக்கப்பெற்று, அவர்களின் உத்தரவுப்படி, கேசினியிடம், 'ஓ! கேசினி! நீ விரைவாகச்செல். பிதாவின் உத்தரவினால் பாகுகனை அழைத்துவா. நீ என்தாய்போல எனக்குப் பிரியத்தைச் செய்வாயாக' என்னும் இதனைக் கூறினள். கேசினியோ, விரைவாகச் சென்று பாகுகனைப் பார்த்து, 'ஸுந்தரே! பாகுகரே! நான் பீமராஜரின் உத்தரவினால் வந்தேனென அறிவீர். அரண்மனைக்கு நீர் வரக்கடவீர்' என்ற சொல்லைச் சொல்லினள். ஓ! பரதரிற்சிறந்தவனே! பாரத! இவ்விதம் சொல்லக்கேட்ட புஜபலமுள்ள பாகுகனோ நெடுநேரம் ஆலோசனைசெய்து கேசினியுடன் தமயந்தியின் மாளிகையில் நுழைந்தான். (கேசினி) நளனைத் தமயந்தியிருக்குமிடத்துக்கு அழைத்துப்போனாள். நளராஜன் அந்தத் தமயந்தியைப் பார்த்தவுடனே சோகதுக்கங்களால் சூழப்பட்டவனும் கண்ணீரால் நனைக்கப்பட்டவனுமாயினன். அப்பொழுது, சிறந்த நிறமுள்ள தமயந்தி அந்த நளன் அப்படியிருப்பதைக் கண்டு கடுந்துயரத்தையடைந்தவளாயினள்.

ஓ! மஹாராஜ! பிறகு, அழுக்கடைந்தவஸ்திரம் அணிந்தவளும் ஜடையுள்ளவளும் அழுக்கும் சேறுமுள்ளவளுமான தமயந்தி, பாகுகனைநோக்கி, 'ஓ! பாகுக! காட்டில் உறங்குகின்ற மனைவியை விட்டுப்போனவரும் (தமது) கடமையை அறிந்தவரென்னப்படுபவருமான ஒரு மனிதரை நீ பார்த்திருக்கவேண்டும். குற்றமற்றவளும் பிரியமானவளும் சிரமத்தால் மயக்கத்தை அடைந்தவளுமான மனைவியைப் புண்யச்லோகராகிய நளராஜரைத்தவிர எவன்தான் ஜனமற்ற இடத்தில் விட்டுச்செல்லுவன்? காட்டில் தூக்கத்தால் பீடிக்கப்பட்ட என்னை விட்டுப்போன அரசருக்கு என்னால் சிறுபிராயமுதல் என்ன தீங்குசெய்யப்பட்டது? நேரில் வந்த தேவர்களைவிட்டு முந்தி என்னால் வரிக்கப்பட்ட அவர், பின்பற்றியவளும் அவரால் விரும்பப்பட்டவளும் குழந்தைகளுள்ளவளுமான

(என்னை)எவ்விதம் விட்டார்? அக்னியின் முன்னிலையில் பாணிக்ரகணம் செய்யப்பட்டவளும் ஹம்ஸங்களின் வார்த்தைகளில் இருப்பவளுமான (என்னை,) 'காப்பாற்றுவேன்' என்று ஸத்யமாக உறுதி கூறியது எங்கே போயிற்று?' என்று வினவினள்.

பகைவரை அடக்குபவனே! இவை யாவற்றையும் தமயந்தி சொல்லும்பொழுது (அவளுடைய) கண்களினின்றும் சோகத்தால் உண்டானதும் சூடானதுமான கண்ணீர் மிகப் பெருகிற்று. நளன், கடை சிவந்த கருவிழிகளினின்றும் மிகப்பெருகும் அந்த ஜலத்தைப் [1] பார்த்துச் சோகத்தால் பீடிக்கப்பட்டவனாகி, 'ஓ! விசாலமான பின்தட்டுள்ளவளே! நளன் நானே. சுபமானவளே! அந்தக் கலியால் ஆவேசிக்கப்பட்டு மயக்கத்தின்வசத்தையடைந்து உன்னைவிட்டுப் போனேன். பயந்தவளே! எனது நாட்டையிழந்ததையும் உன்னை விட்டதையும் நான் ஸ்வதந்திரனாகச் செய்யவில்லை. கலியே அவற்றைச் செய்தான். தர்மஸங்கடத்தில், காட்டிலிருப்பவளும் துயரத்தை அடைந்தவளும் பகலும் இரவும் என்னைக் குறித்துச் சோகிக்கின்றவளுமான உன்னால் முன் சாபத்தால் அடிக்கப்பட்ட அந்தக் கலியானவன், உனது சாபத்தால் எரிக்கப்படுகின்றவனாகி, எனது சரீரத்தில் வஸித்தனன். எப்பொழுதும் உனது சாபத்தால் எரிக்கப்படுகின்றவனும் அக்னியில் அக்னி வைக்கப்பட்டது போல (க் கர்க்கோடகனது விஷாக்கினியுள்ள எனது சரீரத்தில் வஸித்தவனுமான) அவன் எனது முயற்சியாலும் தவத்தினாலும் ஜயிக்கப்பட்டான். சுபமானவளே! நம்மிருவருக்கும் இது துக்கத்தின் முடிவாக இருக்கவேண்டும். விசாலமான பின்தட்டுள்ளவளே! பாவியானவன் என்னை விட்டுப் போயினன். அதனால், நான் இங்கு உனக்காக வந்தேன். எனக்கு வேறு காரியம் இல்லை. ஓ! பயந்தவளே! (வேறு) ஒரு ஸ்திரீயானவள், ஆசைகொண்டவனும் அனுஸரித்தவனுமான பர்த்தாவை விட்டு, உன்னைப் போல, வேறொருவனை எப்பொழுதாயினும் வரிப்பளா? அரசனுடைய கட்டளையால் தூதர்கள், 'தமயந்தி ஸ்வதந்திரமான நடையுள்ளவள்போலத் தன் இஷ்டப்படி தனக்கு ஒத்த இரண்டாவது கணவனை வரிக்கப்போகிறாள்' என்று சொல்லிக்கொண்டு பூமிமுழுமையும் திரிகிறார்களல்லரோ? பாகஸ்வரியானவன் இவ்விதம் கேட்டுத்தான் விரைபவனாகி வந்திருக்கின்றான்' என்ற இதனைச்சொன்னான்.

---

1 வேறுபாடம்.

தமயந்தியோ, நளனது அந்தப் புலம்பலைக்கேட்டுப் பயந்து நடுங்கிக் கைகூப்பிக்கொண்டு, 'கல்யாணரே! குற்றத்தினால் என்னைச் சந்தேகிப்பது தகாது. நிஷதாதிபரே! நான் தேவர்களை விட்டு உம்மையே வரித்தேனல்லவா? உம்மை அடையும் பொருட்டே, பிராம்மணர்கள் எனது வாக்யங்களைப் பாட்டுக்களாகப் பாடிக்கொண்டு பத்துத் திக்குக்களிலும் எங்கும் போயினர். ஓ! அரசரே! பிறகு, கற்றறிந்தவனும் பர்ணாதனென்னும் பெயருள்ளவனுமான பிராம்மணன் கோஸலதேசத்தில் ருதுபர்ணன் அரண்மனையில் உம்மை அடைந்தான். ஓ! நைஷதரே! அவன் (நான்) சொல்லியதைச் சொல்லி அப்படியே நன்கு மறுமொழியையும் கொண்டுவந்தவுடன், உம்மைவருவிப்பதற்காக, இந்த உபாயம் என்னால் காணப்பட்டது. ஓ! ப்ருதிவீபதியே! நராதிபரே! உலகில் உம்மைத் தவிர மற்றவன் ஒரேநாளில் குதிரைகளால் நூறு யோஜனைதூரம் செல்லுதற்குவல்லவனல்லனன்றோ?[1] ஓ! பூமிக்கு அரசரே! நான் மனத்தாலும் சிறிதும் தீங்கு செய்யாதவளாக இருக்கிறேனென்று ஸத்தியத்துடன் இந்த உம்முடைய கால்களைத் தொடுகிறேன். இந்த உலகில் இந்த வாயுவானவன் பிராணிகளுக்குச் சாக்ஷியாக ஸஞ்சரிக்கிறான். நான் தீமையைச் செய்கிறேனாகில் இவன் எனது பிராணன்களை விடச்செய்யக்கடவன். ஸூரியன் எப்பொழுதும் உலகமெங்கும் ஸஞ்சரிக்கிறான். நான் தீமையைச் செய்கிறேனாகில் அவன் என்னுடைய பிராணன்களை விடச் செய்யக்கடவன். சந்திரன் எல்லாப்பிராணிகளுள்ளும் ஸாக்ஷி போல ஸஞ்சரிக்கிறான். நான் தீமையைச் செய்கிறேனாகில் அவன் எனது பிராணன்களை விடச்செய்யக்கடவன். இம்மூன்று தேவர்களும் மூவுலகங்களையும் முழுமையும் நிலைத்திருக்கச் செய்கிறார்கள். தேவர்கள் இது மெய்தானா என்பதைச் சொல்லக்கடவர். (உண்மையல்லாவிடில்) என்னை விட்டுவிடக்கடவர்' என்றாள்.

இவ்விதம் சொல்லப்பட்டவுடன், வாயு ஆகாயத்தினின்று, 'ஓ! நள! இவள் தீமையைச் செய்தவளல்லள். உனக்கு உண்மையாகச் சொல்லுகின்றேன். அரசனே! பெருகிய நல்லொழுக்கமாகிற நிதியானது, தமயந்தியால் நன்கு ரக்ஷிக்கப்பட்டது. நாங்கள் (இந்த) மூன்று வர்ஷங்களும் இவளுக்கு ஸாக்ஷியும் பாதுகாவலுமாக (இருந்தோம்.) உனக்காக இவளால் ஒப்பற்ற இந்த உபாயம்

---

[1] பொருந்தாமையால் அதிக பாடமான அரைஸ்லோகம் விடப்பட்டது.

செய்யப்பட்டது. இவ்வுலகில் உன்னைத் தவிர வேறு ஆண்பிள்ளை ஒரே பகலில் நூறு யோஜனை செல்லக்கூடியவன் இல்லையன்றோ? ஓ! அரசனே! தமயந்தி உனக்கும் நீ தமயந்திக்கும் ஏற்றவர். இவ் விஷயத்தில் நீ ஸந்தேகப்படலாகாது. மனைவியுடன் சேர்ந்திருக் கக்கடவாய்' என்று சொன்னான். வாயு அவ்விதம் சொல்லும் பொழுதே மலர்மாரி பெய்தது; தேவதுந்துபிகள் முழங்கின; மங்களகரமான காற்றும் வீசிற்று. ஓ! பாரத! பிறகு, பகைவரை அடக்குகின்ற இந்த நளராஜன், அந்த அத்புதத்தைக் கண்டு, தம யந்தியிடம் (கொண்ட) அந்த ஸந்தேகத்தை விட்டனன். பிறகு, பூபதியான நளன், அழுக்கற்றவையான அந்த (க் கர்க்கோடகன்) கொடுத்த ஆடைகளை, அந்த நாகராஜனை நினைத்து, உடுத்துக்கொண் டான். உடனே, தனது (பழைய) வடிவத்தை அடைந்தான். ஸ்வரூபத்தை அடைந்த பர்த்தாவைக்கண்டு, குற்றமற்ற தமயந்தி, அப்பொழுது, புண்யச்லோகனை அந்த நளனைத் தழுவிக்கொண்டு உரக்க அழுதாள். நளராஜனும், முன்போல விளங்குகின்றவனா கித் தமயந்தியையும் தன் மக்களையும் தழுவிக்கொண்டு, உள்ளபடி மகிழ்ந்தான். பிறகு, அழகிய முகமுள்ளவளும் நீண்ட கண்ணுள் ளவளுமான (அவள்) அந்தத் துக்கத்தால் சூழப்பெற்றவளாகித் [1] தனது மார்பில் அவனது முகத்தை வைத்துக் கொண்டு பெருமூச் செறிந்தாள். அப்படியே, புருஷச்ரேஷ்டனான அவனும், சோகத் தால் சூழப்பட்டவனாகி, அழுக்கால் பூசப்பட்ட அங்கமுள்ளவளும் அழகிய சிரிப்புள்ளவளுமான அவளைத் தழுவிக்கொண்டு நெடு நேரம் துயரில் முழுகி நின்றான்.

அரசனே! பிறகு, தமயந்திக்கும் நளனுக்கும் (நடந்த) அனைத் தையும், தமயந்தியின் தாய், நடந்தபடி, பிரீதியுடன் பீமனுக்குச் சொன்னாள். பிறகு, மஹாராஜன், 'நான், சுத்திசெய்துகொண் டவனும் தமயந்தியுடன் சேர்ந்திருப்பவனும் (இரவு) ஸுகமாக வஸித்தவனுமான நளனைக் காலையில் பார்ப்பேன்' என்று சொன் னான். அரசனே! பிறகு, அவ்விருவரும் சேர்ந்து, காட்டில் நடந்த பழையசரித்திரம் யாவற்றையும் சொல்லிக்கொண்டு, இரவு மகிழ்ந்து வஸித்தார்கள். தமயந்தியும் நளனும் ஒருவருக்கொருவர் ஸுகத் தைவிரும்பினவர்களாயும் மனம் மிகமகிழ்ந்தவர்களாயும் பீமராஜ

1 'தனது முகத்தை அவனது மார்பில் வைத்துக்கொண்டு' என்பது இங்கிலிஷ் மொழி பெயர்ப்பு.

னுடைய அரண்மனையில் வஸித்தார்கள். பிறகு, அவன் நான்காவது வருஷத்தில் பாரியையுடன் சேர்ந்து எல்லா விருப்பங்களும் நன்கு நிறைவேறினவனாகி மிக்கமகிழ்ச்சியை அடைந்தான். தமயந்தியும், பர்த்தாவை அடைந்து, பாதிவளர்ந்த பயிரையுடைய பூமியானது ஜலத்தை அடைந்து திருப்தி அடைவதுபோல, மிக்கதிருப்தியை அடைந்தாள். அந்தத் தமயந்தியானவள் இவ்விதம் நளனுடன் சேர்ந்து தனது ஆயாஸத்தைப் போக்கித் தாபம் தணிந்தவளாகவும் மகிழ்ச்சிபெருகிய மனமுள்ளவளாகவும் விரும்பினவற்றை அடைந்தவளாகவும், உதயமான சந்திரனால் ராத்ரி விளங்குவது போல, விளங்கினாள்.

எழுபத்தைந்தாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் காலையில் நளதமயந்தியரைப் பார்த்ததும், ருதுபர்ணன் நளனை க்ஷமிக்கும்படி வேண்டி அவனிடமிருந்து அச்வஹ்ருதயத்தைப் பெற்று அயோத்தி சென்றதும்.)

பின்பு, நளராஜன் அந்த ராத்ரியைப் போக்கி, (காலையில்) நன்கு அலங்கரித்துக்கொண்டு தமயந்தியுடன் சேர்ந்து பீமராஜனைப் பார்த்தான். பிறகு, பரிசுத்தனான நளன் மாமனை வணங்கினான். பிறகு, அழகிய தமயந்தியும் பிதாவை வணங்கினாள். பீமன், மிக்க ஸந்தோஷத்துடன் புத்திரனைப்போல நளனைத் தழுவிக்கொண்டான். பிரபுவான பீமன், (நளனைத்) தக்கபடி பூஜித்துத் தேற்றினான். பீமராஜன் அங்கு நளனுடனிருப்பவளும் பதிவ்ரதையுமான தமயந்தியை மேலான மரியாதையுடன் அனுக்ரகித்தான். நளராஜன் அந்தப் பூஜையை முறைப்படி பெற்று அவனுக்குத் 1 தனது மரியாதையை உள்ளபடி தெரிவித்தான். பிறகு, பட்டணத்தில் அவ்விதம் வந்த நளனைக்கண்டு நன்கு சந்தோஷத்தை அடைந்த ஜனங்களின் ஸந்தோஷத்தால் உண்டாகிற பெரிய ஒலி உண்டாயிற்று. (பீமன்) நகரத்தைப் பதாகைகளுடனும் த்வஜங்களுடனும் மாலைகளுடனும் கூடினதாக அலங்கரிக்கச்செய்தான். ராஜவீதிகள், நீர் தெளித்து நன்குபெருக்கிப் புஷ்பங்களை நிரப்பி

1 'தான் செய்துவந்த தொழிலை' என்றும் கொள்ளலாம்.

நன்கு அலங்கரிக்கப்பெற்றன. பட்டணத்து ஜனங்களின் வீட்டு வாயில்தோறும் புஷ்பபலியானது செய்யப்பட்டது. தேவாலயங்களெல்லாம் பூஜிக்கப்பெற்றன.

ருதுபர்ணராஜனும், நளன் பாஹுகவேஷத்தில் மறைந்திருந்ததையும் தமயந்தியுடன் சேர்ந்துவிட்டதையும் கேட்டுச் சந்தோஷித்தான். ருதுபர்ணராஜன் அந்த நளராஜனை அழைத்து க்ஷமிக்கவேண்டினன். புத்திமானான அந்த நளனும் காரணங்களுடன் அவனைப் பொறுக்கச்செய்தான். மரியாதை செய்யப்பெற்ற அந்த ருதுபர்ணராஜன், சிரித்த முகமுள்ளவனாகி, 'நீ தெய்விகமாக உனது பத்னியுடன் கூடினாய்' என்று நளனைப் புகழ்ந்தான். 'பூபதியே! நைஷத! எனது வீட்டில் மறைந்து வஸித்த உனக்குத் தீமைசெய்யாமலிருந்தேனா? தெரிந்தோ தெரியாமலோ என்னால் சில அகாரியங்கள் செய்யப்பட்டிருந்தாலும் அவைகளை நீ பொறுக்கக்கடவாய்' என்றான். நளன், 'ஓ! பார்த்திவ! நீ எனக்குச் சிறிதும் தீங்கு செய்யவில்லை. செய்திருந்தாலும் எனக்குக் கோபமில்லை. உன் விஷயத்தில் நான் பொறுக்கவேண்டுமன்றோ? ஓ! ஜநாதிப! நீ முந்தியும் எனக்குத் தோழனும் ஸம்பந்தியுமாயிருக்கிறாய். இதற்கு மேலும், மிக்கப்ரீதியை உண்டு பண்ணக்கடவாய். விரும்பினவைவையெல்லாம் நன்கு செய்யப்பட்டமையால், உன்னிடத்தில் ஸுகமாக வாஸஞ்செய்தேன். ஓ! அரசனே! உனது வீட்டில் எப்பொழுதும் ஸுகமாக இருந்தது போல எனதுவீட்டில் இல்லை. ஓ! பார்த்திவ! உன்னுடைய இந்த அஶ்வஹ்ருதயமும் என்னிடத்தில் இருக்கின்றது. நீ விரும்பினால் அதனைக் கொடுக்க விரும்புகிறேன்' என்றான். நளன் இவ்விதம் சொல்லி ருதுபர்ணனுக்கு வித்தையைக் கொடுத்தான். அவனும் சாஸ்திரத்திற்சொல்லிய செய்கையால் அதனைப் பெற்றுக்கொண்டான். அரசனே! பாகஸ்வரிராஜனும் அஶ்வஹ்ருதயத்தைப் பெற்றும், பிரீதியடைந்து நைஷதனுக்கு அக்ஷஹ்ருதயத்தைக் கொடுத்தும், வேறு ஸூதனை அழைத்துக்கொண்டு தன்பட்டணத்தையே அடைந்தான். அரசனே! ருதுபர்ணன் போனபின், நளராஜன் குண்டினநகரத்தில் நீண்டகாலம் வஸிக்கவில்லை.

எழுபத்தாறுவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(நளன் தன்னகர்சென்று புஷ்கரனை மறுசூதில் வென்று அவனை அவனூருக்கு அனுப்பியது.)

ஓ! கௌந்தேய! அந்த நைஷதன் ஒருமாதம் வஸித்துப் பீமனிடம் விடைபெற்றுச் சிறிது சேனையுடன் (குண்டின) புரத்தி லிருந்து நிஷத தேசத்தைக்குறித்துப் போயினன். வெண்மை யான ஒரு தேருடனும் பதினாறு யானைகளுடனும் ஐம்பது குதிரை களுடனும் அறுநூறு காலாட்களுடனும் பெரிய மனமுள்ள அவன் பூமியை நடுங்கச்செய்கிறவன்போலக் கோபங்கொண்டு விரைந்து பெரிய பட்டணத்தைத் திடீரென்று அடைந்தான். பிறகு, வீரஸேன புத்ரனான நளன், புஷ்கரனை அடைந்து, 'மிக்க பொருள் என்னால் சம்பாதிக்கப்பெற்றிருக்கிறது. திரும்பவும் சூதாடுவோம். ஓ! புஷ்கர! தமயந்தியும் மற்றும் என்னிடமுள்ள பொருள் முழுமையும் எனது பந்தயமாவர். உனக்கோ ராஜ்யம் பந்தயமாகட்டும். திரும்பவும் சூது தொடங்கப்பட வேண்டும். உனக்கு க்ஷேமம் உண்டாகுக. ஒரே பந்தயத்தில் (நமது) உயிர் களையும் பந்தயம் வைத்து ஆடுவோம். பிறன் உடைமை, நாடே யாயினும் செல்வப்பொருளேயாயினும், (அதனை) ஜயித்து (அவ னிடமிருந்து) கவர்தலும் எதிர்ப்பந்தயம் கொடுக்கவேண்டுமென் பது [1] சிறந்த முறையென்று சொல்லப்படுகிறது. நீ அந்தச் சூதை விரும்பாமற்போனால் யுத்தமாகிற சூது தொடங்கப்படவேண்டும். அரசனே! இரண்டு தேர் ஒன்றை ஒன்று எதிர்த்துச் செய்யும் சண்டையினால் உனக்காவது எனக்காவது ஒழிவு உண்டாகட்டும். இந்த ராஜ்யமானது வம்சபரம்பரையாக அனுபவிக்கப்படுவதாத லால் எந்த உபாயத்தினாலும் விரும்பத்தக்கதென்பது பெரியோர் களின்கட்டளை. ஓ! புஷ்கர! இப்பொழுது கபடத்தினால் சூதாடு வது அல்லது வில்லை வளைத்துச் சண்டைசெய்வது (என்ற இந்த) இரண்டினுள் ஒன்றில் புத்தியைச் செலுத்து' என்றான்.

நைஷதனால் இவ்விதம் சொல்லப்பட்ட புஷ்கரனோ, உரக்கச் சிரித்துத் தனக்கு ஜயத்தையே உறுதியாக எண்ணி, நளனை நோக்கி, 'ஓ! நைஷத! எதிர்ப்பந்தயம் வைப்பதற்காக உன்னால்

---

1 வேறு பாடம்.

தெய்வாதீனமாகப் பொருள் சம்பாதிக்கப்பட்டது. தெய்வாதீனமாகத் தமயந்தியின் தீவினையும் நாசத்தை அடைந்தது. ஓ! நைஷத! அரசனே! எனது லாபத்தைக்குறித்துத் தெய்வாதீனமாகப் பிரியப்படுகின்றாய். ஆண்பிள்ளைகளுள் மிகச் சிறந்தவனே! தெய்விகமாகத் திரும்பவும் சூதாடுவதில் உனக்கு எண்ணம் உண்டாயிருக்கிறது. ஜயிக்கப்பட்ட இந்தத் தனத்துடன், அலங்கரிக்கப்பட்ட தமயந்தியும், தேவலோகத்தில் அப்ஸரஸானவள் இந்திரனை அடைவதுபோல என்னை அடைவாளென்பது திண்ணம். ஓ! நைஷத! உன்னைத் தினந்தோறும் நினைத்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். [1] பகைவர் கூட்டங்களுடன் சூதாடுவதனால் எனக்கு ஸந்தோஷம் உண்டாகிறதில்லை. இப்பொழுதோ, சிறந்த இடையுள்ளவளும் குற்றமற்றவளுமான தமயந்தியை ஜயித்துக் கிருதக்ருத்யன் (=மேற்கொண்ட காரியத்தைச் செய்தவன்) ஆவேன். அவளோ எப்பொழுதும் எனது மனத்தில் இருக்கின்றாள்' என்று கூறினான்.

அந்த நளனோ, அந்தச் சொற்களைக்கேட்டுக் கோபங்கொண்டு, தப்பாகப்பேசுகிற அவனுடைய தலையைக் கத்தியால் வெட்ட விரும்பினான். கோபத்தால் சிவந்த கண்ணுள்ள நளராஜனோ, சிரித்துக்கொண்டு, அவனைப்பார்த்து, 'பந்தயம் வைத்து ஆடுவோம். ஏன் பேசுகின்றாய்? ஜயிக்கப்பட்டால் பேசாய்' என்றான். பிறகு, நளனுக்கும் புஷ்கரனுக்கும் சூதாட்டம் தொடங்கிற்று. உனக்கு க்ஷேமம் உண்டாகுக. அந்தப் புஷ்கரன் (தானும்) பந்தயம் வைத்தானாயினும் ரத்னங்கள் பொக்கசங்கள் இவற்றின் குவியல்களுடனும் உயிருடனும் அவன் ஒரே பந்தயத்தால் நளனால் தோல்வி அடைவிக்கப்பெற்றான். நளராஜன், புஷ்கரனை ஜயித்துச் சிரித்துக்கொண்டு,'அரசர்களுள் இழிவானவனே! பகைஒழிந்ததும் கலக்கமற்றதுமான இந்த ராஜ்யமுழுதும் என்னுடையது. தமயந்தி உன்னால் பார்ப்பதற்கும் முடியாதவள். மூட! நீ பரிவாரங்களுடன் அவளுக்கு அடிமையாயிருத்தலை அடைந்தாய். நான் முன்பு ஜயிக்கப்பட்டதும் உன்னால் செய்யப்பட்டகாரியமன்று. அந்தக்காரியம் கலியால் செய்யப்பட்டது. ஓ! மூட! நீ அறியவில்லை. நான் பிறரால் செய்யப்பட்ட குற்றத்தை உன்னிடத்தில் எவ்விதமும் சுமத்தமாட்டேன். நீ ஸுகமாகப் பிழைத்திருக்கக்கடவாய். உனது உயிரை உனக்குக் கொடுக்கிறேன். அப்படியே எல்லாப்பொருள்களுமுள்ள

1 வேறு பாடம்.

(உனக்குச்) சொந்தமான பாகத்தை உனக்குத் தருகிறேன். ஓ! வீர! எனக்கு உன்னிடத்தில் அன்பும் முன்போலவே இருக்கிற தென்பதில் ஸந்தேகமில்லை. எனக்கு உன்னிடமுள்ள நட்பும் ஒரு பொழுதும் குறையாது. ஓ! புஷ்கர! நீயோ எனது ஸஹோதரன். நூறுவருஷம் நன்கு உயிர்வாழக்கடவாய்' என்னும்இதனைச் சொன்னான். ஸத்யமானபராக்ரமமுள்ள நளன் ஸஹோதரனை இவ்வித வார்த்தைகளால் தேற்றித் திரும்பத்திரும்பத் தழுவி மகிழ்வித்தான். அரசனே! இவ்விதம் நளனால் தேற்றப்பட்டபுஷ்கரன், புண்ய ச்லோகனான நளனை அப்பொழுது வணங்கிக் கைகூப்பிக்கொண்டு, 'ஓ! பார்த்திவ! நீ எனக்கு உயிரையும் இருப்பிடத்தையும் கொடுக்கின்றாயாதலால், உனதுபுகழ் அழிவற்றதாகுக. பதினாயிரம்வருஷம் ஸுகியாக உயிர்வாழக் கடவாய்' என்று மறுமொழி கூறினான். புருஷச்ரேஷ்ட! அப்பொழுது அந்தப்புஷ்கரராஜன் நளனால் அவ்விதம் மரியாதைசெய்யப்பெற்று ஒருமாதம் அங்கே மகிழ்ந்து வஸித்துத் தனதுஜனங்களால் சூழப்பெற்றுப் பெரியசேனையுடனும் வணங்கின வேலைக்காரர்களுடனும், சரீரத்தால் சூரியன்போல விளங்கிக்கொண்டு, தனதுபட்டணத்தை அடைந்தான். ஸ்ரீமானான நளராஜன் புஷ்கரனைத் தனமுள்ளவனாகவும் துன்பமற்றவனாகவும் அனுப்பி மிக்கஅலங்காரமுள்ள தனதுநகரத்தில் பிரவேசித்தான். நிஷதராஜன் பிரவேசித்து நகரவாஸிகளைத் தேற்றலும் செய்தான். எப்பொழுதும் இவர்களுடைய நன்மைகளிலே தந்தைபோல மனம் பற்றினவனாக இருந்தான். பட்டணத்திலும் தேசத்திலுமுள்ள ஜனங்கள் யாவரும் புளகமெய்தி மந்திரி முதலியோருடன்கூடிக் கைகளைக் கூப்பிக்கொண்டு, 'ஓ! அரசனே! பட்டணத்திலும் தேசத்திலும்(உள்ள நாங்கள்)இப்பொழுதுதான் ஸௌக்யமாயிருக்கிறோம். தேவர்கள் மறுபடியும் இந்திரனை ஸேவிக்கவந்ததுபோல, நாங்கள் உன்னை மறுபடியும் ஸேவிக்க வந்திருக்கிறோம்' என்று சொன்னார்கள்.

எழுபத்தேழாவது அத்யாயம்.

நளோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(நளன் புஷ்கரனைத் துரத்தியபின் குண்டினபுரத்திலிருந்து தமயந்தியை யும் குழந்தைகளையும் தருவித்துக்கொண்டு ஸுகமாக அரசு செலுத்தியதும், பிருஹதச்வர் நளன் கதையை முடித்து யுதிஷ்டிரருக்கு அக்ஷஹ்ருதயத்தை உபதேசித்து ஹரிச்சந்திரன் கதையைச் சுருக்கமாகச் சொல்லிச் சென்றதும், யுதிஷ்டிரர் அர்ஜுனனைப்பற்றிக் கவலைப் பட்டதும்.)

பட்டணமானது [1] சோகமற்று ஸந்தோஷமடைந்து மஹோத்ஸவமும் தொடங்கியவுடன், நளராஜன் (குண்டினபுரத்திலிருந்து) தமயந்தியைப் [2] பெரிய சேனையுடன் வரவழைத்தான். பரதரில் சிறந்தவனே! அரசனான பீமன் புண்யச்லோகன் ராஜ்யத்தில் நிலை பெற்றதாகக் கேட்டு மேலான ஸந்தோஷத்துடன் கூடியவனாயினன். பிறகு, பீமராஜன் மனமகிழ்ந்து தன் மகளான தமயந்தியைப் புத்திமானான புண்யச்லோகனிடம் செல்லும்பொருட்டுப் பெரிய சேனையுடன் புறப்படச் செய்தான். பகைவீரர்களைக் கொல்லுகின்றவனும் அளவிடமுடியாத சக்தி பொருந்தியவனும் பயங்கரமான பராக்கிரமமுடையவனும் பிதாவுமான பீமனும் தமயந்தியை மரியாதைசெய்து அனுப்பினான். நளராஜனோ, குழந்தைகளுடன் தமயந்தி வந்தபின், தேவராஜன் நந்தனவனத்தில் மகிழ்ந்திருப்பதுபோல மகிழ்ந்திருந்தான். ஜம்பூத்வீபத்தில் அரசர்களுள் அப்படி விளக்கத்தை அடைந்தவனும் மிக்க புகழ்பெற்றவனுமான அந்த நளன் மறுபடியும் தனது நாட்டைத் திருப்பி அடைந்து அதில் வஸித்தான்; நிரம்பின தக்ஷிணையுள்ள பலவித யாகங்களையும் விதிப்படி செய்தான். அரசர்க்கு அரசனே! அப்படியே, நீயும் விரைவில் ஸ்நேகிதர்களுடன்கூடி விளங்குவாய். மனிதருட் சிறந்தவனே! பரதரேறே! பகைவர் பட்டணங்களை ஜயிக்கின்ற நளன் சூதாட்டத்தால் மனைவியுடன் இம்மாதிரியான துக்கத்தை அடைந்தான். பூமியை ஆள்பவனே! நளன் ஒருவனாகவேயிருந்து மிகப்பெரிய பயங்கரமான துக்கத்தை அடைந்து திரும்பவும்

---

1 'அமைதியடைந்து' எனினுமாம்.

2 'பெரிய சேனையை அனுப்பி' எனினுமாம்.

க்ஷேமத்தை அடைந்தான். ஓ! பாண்டவ! அரசனே! நீயோ பிராதாக்களுடனும் திரௌபதியுடனும் சேர்ந்து கதைகளைக் கேட்டுக்கொண்டும் தர்மத்தையே சிந்தித்துக்கொண்டுமிருப்பதுடன், வேதவேதாங்கங்களின் கரைகடந்தவர்களும் மிக்க புகழ்பெற்றவர்களுமான பிராம்மணர்களால் எப்பொழுதும் சூழப்பட்டுமிருக்கிறாய். அப்படியிருக்கையில், துக்கம் ஏன்? கர்க்கோடக நாகன், தமயந்தி, நளன், ராஜரிஷியான ருதுபர்ணன் இவர்களின் கீர்த்தியைச் சொல்லுவது கலியைப் போக்குவதாகும். தவறாதவனே! அரசனே! உன்னைப் போன்றவன், கலியைப் போக்குவதான இந்த இதிஹாஸத்தைக்கேட்டும் தேறுதலடையவேண்டும். புருஷார்த்தம் எப்பொழுதும் நிலையற்றிருத்தலை ஆலோசித்தும், அதன் தோற்றத்திலும் அழிவிலும் நீ கவலைப்படலாகாது. அரசனே! இதிஹாஸத்தைக் கேட்டுத் தேறுதலடை; துயரப்படாதே. ஓ! மஹாராஜ! வியஸனத்தில் நீ துயரப்படத்தக்கவனல்லை. தெய்வம் விபரீதமாகி முயற்சியும் பயனற்றுப்போனபொழுது, தைர்யசாலிகளான மனிதர்கள் தம்மைத் துயரத்துக்குள்ளாக்கிக்கொள்ளார். எவர்கள் நளனது இந்தச் சிறந்த சரித்திரத்தை அடிக்கடி சொல்லுகின்றார்களோ கேட்கின்றார்களோ அவர்களை அமங்களமானது அடையாது. அங்ஙனம் செய்பவனுடைய விருப்பங்கள் கைகூடும். (அவன்) செல்வவானாயிருத்தலையும் அடைவான். சிறந்ததும் புராதனமுமான இந்த இதிஹாஸத்தைக் கேட்டுப் புத்ரர்களையும் பௌத்ரர்களையும் பசுக்களையும் மனிதர்களுள் தலைமையையும் அடைவான்; நோயின்மையும் அன்புமுள்ளவனுவான்.

ஓ! பார்த்திவ! 'சூதாடத்தெரிந்த (துரியோதனன்) என்னைத் திரும்பவும் ஆட அழைப்பான்' என்று நீ பயத்தால் நடுங்குகிறாய். அந்த உனது பயத்தை நான் போக்குவேன். ஸத்யமான பராக்கிரமமுள்ளவனே! நான் அக்ஷஹ்ருதயத்தை முழுதும் அறிவேன். ஓ! கௌந்தேய! மகிழ்ச்சியடைந்தேன்; உனக்கு உபதேசிக்கிறேன்; பெற்றுக்கொள்' என்று சொன்னார். பிறகு, அரசர் மனமகிழ்ந்து பிருஹதச்வரை நோக்கி, 'ஓ! பகவானே! அக்ஷஹ்ருதயத்தை உண்மையாக அறியவிரும்புகிறேன்' என்று சொன்னார். குந்தீ புத்ரரால் இவ்விதம் சொல்லப்பட்ட பிருஹதச்வமாமுனிவர், பிறகு, மஹாத்மாவான பாண்டவருக்கு அக்ஷஹ்ருதயத்தை உபதேசித்தார். பாண்டவராஜரும் (அதனை) அடைந்து சோகமற்றவராயினர்.

1 பிருஹதச்வர் சொல்லலானார். 'மஹாராஜனே! உனது துயரமனைத்தையும் போக்கும்பொருட்டே உன்னைவிடத் துயரத்தை யடைந்த (வேறோர்) அரசனை மறுபடியும் சொல்லுகிறேன். கேள். இக்ஷ்வாகு குலத்தில் மஹாத்மாவும் ராஜராஜனும் மிக்ககாந்தியுள்ளவனுமான திரிசங்குவென்னும் புகழ்பெற்ற ஓர் அரசன் உண்டானான். முக்யமானவையும் பலவிதமானவையும் மிக்கதக்ஷிணையுள்ளவையுமான யாகங்களைச் செய்தமையால் அந்த அரசனிடமிருந்து குணக்கடலாகிற ஹரிச்சந்திரன் உண்டானான். புண்யச்லோகனும் மிக்க புகழுள்ளவனும் மெய்பேசுகிறவனும் இனியசொல்லுள்ளவனும் ஸத்யத்துடன் மிகப்பேசுகிறவனுமான அவன், உலகில் ஆண்பிள்ளைகளுள் சிறந்தவனாயிருந்தான். அவனுக்குப் பூமியில் நல்லொழுக்கத்தால் அலங்கரிக்கப்பட்டவளும் நல்ல லக்ஷணங்களுள்ளவளுமான உசீனரராஜரிஷியின் மகள் மனைவியானாள். அழகிய அவள், ஸ்வயம்வரத்தில் கூடியிருக்கின்ற அரசர்களின் நடுவில், மிக்க பாக்யசாலியும் மேன்மைபெற்றவனுமான ஹரிச்சந்திரனைப் பர்த்தாவாக வரித்தாள். பூபாலனான அந்த அரசன் மனத்துக்கினியவளும் ஸத்யவதியுமான அவளுடன் தன் நாட்டை அடைந்து நெடுங்காலம் மகிழ்ந்திருந்தான். அந்தத் தேவியினிடம் ஹரிச்சந்திரனுக்குத் தாமரைமலர்போன்ற கண்ணுள்ளவனும் புண்யவான்களுள் சிறந்தவனும் லோஹிதாச்வனென்னும் பெயர்பெற்றவனுமான புத்ரன் உண்டானான். புண்யச்லோகனும் மிக்க புகழுள்ளவனும் வஸிஷ்டருடைய சிஷ்யனுமானஅரசன் தேவியுடனும் புத்ரனுடனும் சேர்ந்து புண்யமான பெரிய யாகங்களைச் செய்தான். இதேகாலத்தில் ஸ்வர்க்கத்தையடைந்த விச்வாமித்ரரோ இந்திரனைக் காண்பதற்காக அழகிய இந்திரபட்டணத்தை அடைந்தார். மஹாத்மாவான தேவேந்திரனது பூஜை நடக்கும்பொழுது, வாமதேவரைத் துணையாகக்கொண்ட வஸிஷ்டரும் வந்தார். அப்பொழுது, பூஜை நடந்து இந்திரன் ஸுகமாக வீற்றிருந்து ஸத்ய

---

1 இந்த ஹரிச்சந்திரன் சரித்திரம் நீலகண்டவியாக்யான பாடத்திலும் இங்கிலிஷ் மொழிபெயர்ப்புக்களிலும் இல்லை. ஸபாபர்வத்தில் வந்துள்ளது; 43-45ம் பக்கம் பார்க்க.

ஹரிச்சந்திரோபாக்யானம் என்னும் பெயரோடு, மஹாபாரதத்திலுள்ளதென ஒன்றும், ஸ்காந்தத்திலுள்ளதென ஒன்றும், இடங்குறிக்கப்படாமல் ஒன்றும் ஆக மூன்று நூல்கள் உள்ளன. அவற்றை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்; பின்னர் வெளியிடுவேன்.

வாதிகளான அரசர்களும் சொல்லப்படுகையில், அந்த ஸபையில், ஹரிச்சந்திரன், வேள்வி கொடை தவம் ஒழுக்கம் மெய்பேசுதல் உறுதியானவிரதம் ஆகிய இவைகளால் எல்லாரையுங்காட்டிலும் புகழ்ப்பெற்றான். வஸிஷ்டர், தம் சிஷ்யனைப் புகழ்ந்ததனால், மிக்க மகிழ்ச்சியடைந்தார். அப்படியாயினும், அவன் ஸத்யத்தால் அலங்கரிக்கப்பெற்றதை விஶ்வாமித்ரர் பொறுக்கவில்லை. அப்பொழுது விஶ்வாமித்ரருக்கும் வஸிஷ்டருக்கும் ஹரிச்சந்திரனைக் குறித்துப் பந்தயம் ஏற்பட்டது. அதன்பிறகு, விஶ்வாமித்ரரால் அரசன் ராஜ்யத்தினின்றும் ஸுகத்தினின்றும் விரைவில் நீக்கப்பெற்று மரணத்தைவிடக் கெடுதலான மிக்க துக்கத்தை அடைந்தான்' என்றார்.

பிறகு, தர்மராஜரான யுதிஷ்டிரர், தம்பிமாருடனும் திரௌபதியுடனும் பிராம்மணர்களுடனும் அதனைக்கேட்டு (த் தம்நிலையில்) மிக்க திருப்தியுடன் மேலான ஆச்சரியத்தை அடைந்து, 'நல்லது! நல்லது' என்று சொன்னார். பிறகு, ராஜஶ்ரேஷ்டரான தர்மபுத்ரர், ஹரிச்சந்திரன் கதையை [1] முழுமையுங் கேட்டுச் சோகத்தை விட்டுத் திரும்பவும் மிக்க கீர்த்தியுள்ள ஹரிச்சந்திரனை நினைத்துக் கொண்டு ஸந்தோஷித்தார். அப்படியே, பிருஹதஶ்வர், ஹரிச்சந்திரனையும் நளனையும் பற்றிய கதைகளை இவ்விதம் சொல்லிமுடித்து, எல்லாப் பாண்டவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டுபோயினர். பெருந்தவமுள்ள அவர், [2] சொல்லிவிட்டு, நீராட்டமுதலியன செய்வதற்கு விரைவாகத் தடாகத்தை அடைந்தார். உறுதியான விரதமுள்ள யுதிஷ்டிரர், பிருஹதஶ்வர் சென்றவுடன், ஸவ்யஸாசியும் புத்திமானுமான அர்ஜுனன் காற்றை உணவாகக் கொண்டு உக்ரமான தவத்திலிருப்பதை, தவசிகளும் ஆங்காங்குத் தீர்த்தங்களிலும் மலைகளிலும் வனங்களிலுமிருந்து வருகின்றவர்களும் ஒருங்குசேர்ந்தவர்களுமான அந்தணர்களிடமிருந்து, 'மிக்க புஜபலமுள்ள பார்த்தன் பிறரால் அடையமுடியாத தவத்தை அடைந்திருக்கிறான்' என்றும், 'பிருதாபுத்ரனை அர்ஜுனன்

---

1 'ஸர்வாம்' என்று பாடம் கொள்ளப்பட்டது.

2 'தத்வாசஅஶ்வசிர:' என்று பாடம் ஓதி, 'அஶ்வஹ்ருதயத்தையும் கொடுத்து' என்று பொருள் கூறி, 'முனிவருக்கு இந்த வித்தையாலேயே பிருஹதஶ்வர் என்று பெயர் வந்தது' என்பது பழையவுரை. 'அஶ்வசிரஸ் என்னும் தீர்த்தத்தை அடைந்தார்' என்பது இங்கிலிஷ்மொழிபெயர்ப்பு.

நியமமான விரதமுள்ளவனும் தியானஞ்செய்பவனும் ஒருவனுக ஸஞ்சரிப்பவனும் காந்தியுள்ளவனும் தர்மமே வடிவெடுத்து வந்தது போன்றவனுமாகத் தவஞ்செய்வதுபோல வேறெவனும் கடுந் தவஞ்செய்ததாக முன்பு காணப்பட்டதில்லை' என்றும் சொல்லக் கேட்டார். அரசரே! குந்திபுத்ரராகிய பாண்டவர், [1] ஜயத்தை உடையவனும் பிரியமானவனும் ஸஹோதரனுமான அந்த அர்ஜுனன் பெரிய காட்டில் தவஞ்செய்வதைக் கேட்டுத் துயரத்தை அடைந்தார். ரக்ஷகனை விரும்புகின்ற யுதிஷ்டிரர், எரிக்கப்படுகின்ற மனத்துடன், பெரிய காட்டில் பல கலைகளையும் அறிந்த அந்தணர்களை வினவினர். மன்னரே! குந்தீ புத்ரராகிய யுதிஷ்டிரர் அக்ஷஹ்ருதயத்தைப் பெற்றுப் பீமஸேனன் முதலியோருடன் சேர்ந்து மனம் மகிழ்ந்திருந்தார். குந்திபுத்ரராகிய அவர், ஸஹோதரர்கள் கூடியிருப்பதைப் பார்த்து அங்கே அர்ஜுனனைக் காணுமல் கண்ணீரால் நனைக்கப் பட்டவராயினர். குந்திபுத்ரர், மிகவாட்டப்படுகின்றவராகிப் பீமஸேனனை நோக்கி, 'ஓ! பீம! இங்கு உனக்குப் பின்பிறந்தவனை பார்த்தனை எப்பொழுது பார்ப்பேன்? குருஸ்ரேஷ்ட! (அவன்) எனக்காகவன்றோ மேலான தவத்தைச் செய்கிறுன்? அவனுக்கு நான் அக்ஷஹ்ருதய ஞானத்தை எப்பொழுது உபதேசிப்பேனே? விபுவே! புருஷஸ்ரேஷ்டனுன அவன் என்னுல் நன்கு கற்கப்பட்ட அக்ஷஹ்ருதயத்தைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுள்ளவனுவானென்பதில் ஸந்தேகமில்லை' என்று சொன்னுர்'' என்றுர்.

நளோபாக்யானபர்வம் முற்றிற்று.

---

1 'ஜயஃ' என்பது மூலம்; 'ஜயனென்னும் ஸஹோதரனை' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

எழுபத்தெட்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம்.

(அர்ஜுனனுடைய பிரிவினால் காம்யகவனத்தில் வஸிக்க விருப்பமற்ற பாண்டவர்கள் அந்த வனத்தை விட்டு வேறிடம் செல்ல நிச்சயித்தது.)

ஜனமேஜயர் வினவலானார்: "பகவானே! என்னுடைய ப்ரபிதாமஹரான அர்ஜுனர் (திவ்யாஸ்திரங்களைப் பெறுவதற்காகக்) காம்யக வனத்தை விட்டுச் சென்றவுடன், அந்த ஸவ்யஸாசியை விட்டுப்பிரிந்த அந்தப் பாண்டவர்கள் யாது செய்தனர்? (பகைவர்களுடைய) படையை ஜயிப்பவரும் பெரிய வில்லுள்ளவருமான அந்த அர்ஜுனர் தேவர்களுக்கு விஷ்ணு கதியாயிருப்பது போலப் பாண்டவர்களுக்குக் கதியாக இருந்தாரென்றே எனக்குத் தோன்றுகிறது. இந்திரனுக்குச் சமமான வல்லமையுள்ளவரும் யுத்தங்களில் திரும்பாதவருமான அந்த அர்ஜுனரைப் பிரிந்திருக்கிற வீரர்களான (என்னுடைய) பாட்டனார்கள் வனத்தில் எவ்வண்ணமிருந்தார்கள்?" என்று வினவ, வைசம்பாயனர் கூறலானார்.

"ஐயா! பாண்டுகுமாரனான அர்ஜுனன் காம்யகவனத்தை விட்டுச் சென்றவுடன், அந்தப் பாண்டவர்கள் மனவருத்தமும் க்லேசமும் மேலிட்டவர்களானார்கள். பிறகு, அவர்கள் அனைவரும் (கோக்கப்பட்ட) நூல் அறுந்த ரத்னங்கள் போலவும் சிறகுகள் வெட்டப்பட்ட பக்ஷிகள் போலவும் மகிழ்ச்சியற்ற மனமுள்ளவரானார்கள். புகழத்தக்க செய்கைகளை உடைய அந்த அர்ஜுனனால் விடுபட்ட அந்த வனமானது குபேரனால் விடுபட்ட சைத்ரரதமென்னும் உத்யானவனம் போலாயிற்று. ஜனமேஜயரே! ஆண்மையிற் சிறந்தவர்களான அந்தப் பாண்டவர்கள் அந்த அர்ஜுனனை விட்டுப் பிரிந்ததனால் ஸந்தோஷத்தை அடையாதவர்களாகவே காம்யகவனத்தில் அப்பொழுது வஸித்துவந்தனர். பரதர்களுள் சிறந்தவரே! பிராம்மணர்களுக்காகப் பராக்கிரமம் செலுத்துபவர்களும் மஹாரதர்களும் புருஷஶ்ரேஷ்டர்களும் பகைவரை அடக்குகிறவர்களுமான (பாண்டவர்கள் கானகத்தில்) மிக அலைந்து சுத்தமான பாணங்களால் யாகத்துக்குத் தக்கவையான பலவித மிருகங்களைக் கொன்று வனத்தில் கிடைப்பதான (அந்த) ஆகாரத்தைக் கொண்டுவந்து நாள்தோறும் ப்ராம்மணர்களுக்குக் கொடுத்தார்

கள். அரசரே! தனஞ்சயன் சென்றபிறகு, புருஷஸ்ரேஷ்டர்களான அவர்களனைவரும் மனமகிழ்ச்சியில்லாதவர்களாகவும் (அர்ஜுனனை அடைவதில்) மிக்க ஆவலுள்ளவர்களாகவும் அந்த வனத்தில் இவ்வண்ணம் வாஸம்செய்தார்கள். வேந்தரே! பிறகு, பாஞ்சாலியானவள் வேறிடம் போயிருக்கிற நடுவாமவனை நாயகனை நினைத்துப் பாண்டவர்களுள் சிறந்தவராகிய யுதிஷ்டிரரைப் பார்த்து இந்த வசனத்தை உரைக்கலானாள்:

'இரண்டு கைகளுள்ள எந்த அர்ஜுனர் அனேகம் கைகளுள்ள (கார்த்த வீர்ய) அர்ஜுனனோடு ஒப்பானவரோ அந்தப் பாண்டவ ஸ்ரேஷ்டரில்லாமல் இந்தவனமானது எனக்கு அழகாகத் தோற்றவில்லை. இந்தப் பூமியை ஆங்காங்கு ஒன்றுமில்லாததைப் போலக் காண்கிறேன். பூத்திருக்கிற மரங்களுடன் கூடியதும் பல ஆச்சர்யப் பொருள்களுள்ளதுமாயிருந்தாலும், இந்த வனமானது அந்த ஸவ்யஸாசியைப் பிரிந்தபின் முன்போல ரமணீயமாக இல்லை. கரிய மேகத்திற்கு ஒப்பான ஒளி பொருந்தியவரும் மத யானை போல நடப்பவரும் செந்தாமரை மலர்போன்ற கண்களுள்ளவருமான அர்ஜுனரில்லாமல் காம்யக வனமானது எனக்கு அதிகமாக விளங்கவில்லை. அரசரே! எவருடைய வில்லின் நாணொலியானது இடிமுழக்கம் போலக் கேட்கப்படுகிறதோ அந்த ஸவ்யஸாசியை நான் நினைத்துக்கொண்டே ஸுகத்தை அடையாமலிருக்கிறேன்' என்றாள்.

மகாராஜரே! பகை வீரர்களைக் கொல்லுபவனான பீமஸேனன் அவ்வாறு அடிக்கடி புலம்புகிற அந்தத்ரௌபதியைப் பார்த்து, 'கல்யாணி! அழகிய இடையுள்ளவளே! மனத்துக்கு மகிழ்ச்சியைச் செய்வதும் நீ சொல்லுகிறதும் அம்ருதபானம் போன்றதுமான அந்த (இன் சொல்லானது) என் உள்ளத்தை மகிழச்செய்கிறது. எவனுடைய இரு கரங்களும் நீண்டவையும் பருத்தவையும் ஸமஅளவுள்ளவையும் பரிகாயுதத்திற்கு ஒப்பானவையும் நாண்கயிறு உரைவதனால் தழும்பு உண்டுபண்ணப்பட்டவையும் உருண்ட வடிவமுள்ளவையும் கத்தியையும் மற்ற ஆயுதங்களையும் வில்லையும் தரித்தவையும் பதக்கங்களாலும் தோள்வளைகளாலும் அலங்கரிக்கப்பட்டவையுமாக இரண்டு ஐந்துதலை நாகங்கள்போல விளங்குகின்றனவோ ஆண்மையில் சிறந்தவனான அந்த அர்ஜுனனில்லாமல் (இந்தக் காம்யக வனமானது) ஸூர்யனை இழந்த வானம்போல் (ஒளியை இழந்ததாக ஆயிற்று.) மிக்க புஜபலமுள்ள

எவனை ஆதாரமாகக்கொண்டு பாஞ்சாலர்களும் அவ்வாறே கௌரவர்களும் (போருக்கு) முயன்ற தேவர்களுடைய சேனைகளிலும் அஞ்சுவதில்லையோ, மகாத்மாவான எவனுடைய இருகரங்களையும் அடுத்து நாமெல்லோரும்பகைவர்களை யுத்தத்தில்ஜயிக்கப்பட்டவர்களாகவும் பூமியை அடையப்பட்டதாகவும் எண்ணுகிறோமோ அப்படிப்பட்ட வீரனான பல்குனனைப்பிரிந்து காம்யகவனத்தில் நான் அமைதியை அடையவில்லை. எல்லாத் திசைகளையும் இருளால் மூடப்பட்டவைகளைப் போலக் காண்கிறேன்' என்னும் இதனைக் கூறினான். பிறகு, பாண்டுநந்தனனான நகுலன் கண்ணீரால் தடைப்பட்டகுரலுள்ளவனாக, 'யுத்தரங்கத்தில் எவனிடத்திலுள்ள மனித இயற்கைக்கு மேற்பட்ட செய்கைகளைத் தேவர்களும் புகழ்ந்து பேசுகிறார்களோ போர்புரிபவர்களுள் சிறந்த அந்த அர்ஜுனனைப் பிரிந்து காம்யகவனத்தில் என்ன ஸந்தோஷமிருக்கிறது? அதிக காந்தியுள்ளவனும் பிரியமானவனுமான எந்த அர்ஜுனன் வடதிசையில் சென்று மஹா பலசாலிகளான சிறந்த கந்தர்வர்தலைவர்களைப் போரில் நூற்றுக்கணக்காக வென்று தித்திரிபக்ஷி நிறமுள்ளவையும் சித்ரவர்ணமுள்ளவையும் ஒளியுள்ளவையும் காற்றுப்போல வேகமுள்ளவையுமான குதிரைகளைக் கைப்பற்றி ராஜஸூயமென்கிற மகாயாகத்தில் ப்ராதாவான தர்மராஜருக்கு அன்பினால் கொடுத்தானோ பயங்கரமான வில்லை உடையவனும் பீமனுக்குப் பின்பிறந்தவனும் தெய்வம் போன்றவனுமான அந்த அர்ஜுனனில்லாமல் காம்யகவனத்தில் இப்பொழுது நான் வாஸத்தை விரும்பவில்லை' என்று சொன்னான். ஸஹதேவன், 'பரதகுலத்திலுதித்தவரே! எவன் யுத்தத்தில் படைநடுவை அடைந்து மிக்க பலசாலிகளான பகைவர்களை நூறுநூறாகக் கொன்று தனங்களையும் கன்னியர்களையும் [1] ஜயித்து ராஜஸூயமென்கிற மகாயாகத்தில் யுதிஷ்டிர மகாராஜருக்கு முற்காலத்தில் கொண்டு வந்து கொடுத்தானோ, அளவிறந்த காந்தியுள்ள எந்த அர்ஜுனன், ஒருவனாகவே, கூடியிருக்கிற யாதவர்களைப் போரில்வென்று வாஸுதேவருடைய ஸம்மதத்தினால் ஸுபத்ரையைக் கொண்டுவந்தானோ, எந்த அர்ஜுனன் யுத்தத்தில் மஹாத்மாவான த்ருபத ராஜனுடைய பாதி ராஜ்யத்தைக் கவர்ந்து த்ரோணருக்குக் குருதக்ஷிணை கொடுத்தானோ அந்த அர்ஜுனனுடைய ஆஸனம் வீட்டில் சூன்யமாயிருப்பதைக் கண்டு என்னுள்ளமானது அமைதிபெறவில்லை. பகைவரை அடக்

---

1 வேறு பாடம்.

குபவரே! இந்த வனத்திலிருந்து வெளிச்செல்வதை நான் விரும்புகிறேன். அந்த வீரனான அர்ஜுனனில்லாமல் இந்தக் காடானது நமக்கு மகிழத்தக்கதாக இல்லையன்றோ?' என்று கூறினான்.

எழுபத்தோன்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் காம்யகவனத்திற்கு வந்த நாரதரை வணங்கி, பூமியை வலம் வந்து தீர்த்தயாத்திரை செய்வதன் பயனைவினவ, நாரதர் அந்த விஷயமாகப் புலஸ்தியருக்கும் பீஷ்மருக்கும் நடந்த ஸம்வாதத்தைக் கூறத்தொடங்கியது.)

மஹாரதர்களும் மஹாபாக்யசாலிகளுமான அந்தப்பாண்டவர்களோ அந்தக் காட்டில் தனஞ்சயனிடத்தில் மிக்க ஆவலுள்ளவர்களாக த்ருபதராஜகுமாரியான கிருஷ்ணையுடன் வாஸம்செய்தனர். தனஞ்சயனிடத்தில் ஆவலுள்ளவர்களான ஸஹோதரர்களும் கிருஷ்ணையும் ஆகிய இவர்களுடைய வாக்கியங்களைக் கேட்டுத் தர்மராஜரும் மனவருத்தமுள்ளவரானார்; பிறகு, மஹாத்மாவும் தேவரிஷியும் பிரம்மதேஜஸினால் விளங்குபவரும் ஜ்வலிக்கின்ற நெருப்புக்கு ஸமமான தேஜஸுள்ளவருமான நாரதரை அந்த வனத்தில் கண்டார். தர்மராஜர் அந்த நாரதர் வந்ததைக் கண்டு ஸஹோதரர்களுடன் எழுந்திருந்து மஹாத்மாவான அந்த நாரதருக்கு விதிப்படி பூஜை செய்தார். கௌரவர்களுள் சிறந்தவரும் ஸ்ரீமானுமான அந்தத் தர்மராஜர் அந்தத் தம்பிமார்களால் சூழப்பட்டு மிகப்பிரகாசிக்கின்ற ஒளியுள்ள இந்திரன் தேவர்களால் சூழப்பட்டுவிளங்குவதுபோல் அதிகமாக விளங்கினார். ஸாவித்ரி வேதங்களை விட்டு விலகாததுபோலவும் சூரியனுடையஒளி மேருமலையை விட்டு விலகாததுபோலவும் திரௌபதியானவள் குந்தீபுத்திரர்களான தன் கணவர்களை (தான் நடந்துகொள்ளவேண்டிய)முறையில் விட்டு விலகாமலிருந்தாள். பிறகு, தவறுதவரான யுதிஷ்டிரர் அர்க்யத்தையும் பாத்யத்தையும் கொண்டுவந்து அபிவாதனம்செய்தார். மிக்க தேஜஸுள்ள நாரதரோ, 'க்ஷேமம் உண்டாகுக' என்று சொன்னார். பிறகு, குருநந்தனரான யுதிஷ்டிரராஜர் தேவரிஷிகளுள் மிக்க மேன்மைபெற்ற நாரதரைக் கண்டு முறைப்படியும் தகுதிப்படியும் பூஜித்தார். குற்றமற்றவரே! பகவானான நாரத

ரிஷியானவர் அந்தப் பூஜையைப் பெற்றுக்கொண்டு தர்மநந்தன ருக்குத் தகுதிப்படி தேறுதல் கூறினர்.

அவர், மஹாத்மாவும் தர்மராஜருமான யுதிஷ்டிரரைப் பார்த்து, 'தார்மிகர்களுள் சிறந்தவனே! எதில் உனக்கு விருப்பம்? உனக்கு எதைக் கொடுக்கக்கடவேன்? சொல்' என்று கேட்டார். பிறகு, தர்மபுத்ரரான அரசர், ஸஹோதரர்களுடன் தெய்வம்போன்ற நாரதரை நமஸ்காரம்செய்து இருகரங்களையும் குவித்துக்கொண்டு, 'மஹாபாக்யமுள்ளவரே! நல்ல விரதத்துடன் கூடியவரே! எல்லா உலகங்களாலும் பூஜிக்கப்படுகிற தேவரீர் ஸந்தோஷமடைந்துவிட்டால் தேவரீருடைய அருளால் (எல்லாம்) செய்யப்பட்டதென்றே நான் நினைக்கிறேன். தோஷமற்றவரே! ரிஷிகளுள் மேன்மைவாய்ந்தவரே! ஸஹோதரர்களுடன் சேர்ந்திருக்கிற நான் அனுக்கிரகிக்கப்படத்தகுந்தவனுகில் தேவரீர் உண்மையை உபதேசித்து என் ஸந்தேஹத்தைப் போக்கக்கடவீர். எவன் தீர்த்தயாத்ரையில் பற்றுதலுடன் பூமியை ப்ரதக்ஷிணம்செய்கிருனே அவனுக்கு உண்டாகும் பயன் யாது? அதனைத் தேவரீர் மிச்சமின்றிச் சொல்லக்கடவீர்' என்று வினவ, நாரதர் சொல்லலானர். 'அரசனே! சிறந்த புத்தியுள்ள பீஷ்மராலே புலஸ்தியரிடமிருந்து கேட்கப்பட்ட இவை அனைத்தையும் நீ கருத்துடன் கேள். தர்மத்தைத் தரிப்பவர்களுள் சிறந்தவரான பீஷ்மர் முற்காலத்தில் கங்கைக்கரையில் பித்ருதேவதைகளை த்ருப்தியடையச் செய்கிற விரதத்தை மேற்கொண்டு ரிஷிகளுடன் வஸித்து வந்தார். அரசனே! மஹா பாக்யமுள்ளவனே! நிகரில்லாத ஒளி பொருந்தின அந்தப் பீஷ்மர், மங்களகரமானதும் புண்யமானதும் தேவரிஷிகளால் அடையப்பட்டதும் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்டதுமான அப்படிப்பட்ட கங்காத்வாரமென்னுமிடத்தில் பித்ருக்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் சாஸ்திரத்தில் சொல்லிய கர்மாக்களைச் செய்து த்ருப்தியடையும்படி செய்தார். பிறகு, சிறிதுகாலம் சென்றபின், மிக்க புகழுள்ள பீஷ்மர் மந்திரங்களை ஜபித்துக்கொண்டே இருக்கும்பொழுது அத்புதமான தோற்றமுள்ளவரும் ரிஷிகளுள் மிக்க மேன்மைபெற்றவருமான புலஸ்தியரைக் கண்டார். அந்தப் பீஷ்மர் கடுந்தவமுள்ளவரும் தேஜஸினால் ஜ்வலிப்பவர்போலிருப்பவருமான அந்தப் புலஸ்தியரைக் கண்டு நிகரில்லாத மகிழ்ச்சியை அடைந்ததுடன் மிக்க ஆச்சர்யத்தையும் அடைந்தார். பரத குலத்தில் உதித்தவனே! தார்மிகர்களுள் சிறந்தவரான பீஷ்மர் வந்தி

ருக்கின்ற மஹாபாக்யசாலியான புலஸ்தியரைச் சாஸ்திரத்தில் கண்ட செய்கையினால் பூஜித்தார். சுத்தரும் மனத்தை அடக்கினவருமான பீஷ்மர் தலையினால் பூஜாத்ரவ்யத்தை எடுத்துக்கொண்டு ப்ரம்மரிஷிகளுள் மிகச்சிறந்த அந்தப்புலஸ்தியரிடத்தில், 'நல்ல விரதமுள்ளவரே! நான் பீஷ்மன். தேவரீருக்கு மங்களம். நான் தேவரீருக்கு அடிமை. தேவரீருடைய தர்சனத்தினாலேயே நான் எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டேன்' என்று தம் பெயரைச் சொன்னார். மஹாராஜனே! யுதிஷ்டிர! தார்மிகர்களுள் சிறந்தவரான பீஷ்மர் இவ்விதம் சொல்லிவிட்டுப் பேச்சை நிறுத்திக் கைகூப்பிக்கொண்டு மௌனமாக இருந்தார். பிறகு, முனிவர், விரதத்தாலும் வேதாத்தியயனத்தினாலும் குருகுலஶ்ரேஷ்டரான அந்தப் பீஷ்மர் மெலிந்திருப்பதைக் கண்டு மனமகிழ்ந்தவராயினர். பெருந்தவமுள்ளவரும் தர்மத்தை அறிந்தவருமான அந்தப் புலஸ்தியர் மனமகிழ்ந்து இனிய குரலுடன் (பின்வரும்) வாக்கியங்களை உரைக்கலானார்.

எண்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(புலஸ்தியர் பீஷ்மருக்குப் புஷ்கர முதலிய தீர்த்தங்களின் மஹிமையைச் சொல்லியது.)

புலஸ்தியர், 'தர்மத்தை அறிந்தவனே! மிக்க பாக்கியமுள்ளவனே! நல்ல விரதத்துடன் கூடியவனே! உன்னுடைய இந்த வணக்கத்தாலும் (இந்திரியங்களுடைய) அடக்கத்தாலும் உன்னுடைய ஸத்யத்தாலும் மகிழ்ச்சியடைந்தவனாக இருக்கிறேன். தோஷமற்றவனே! புத்ரனே! பித்ருவாக்யத்தினால் அடையப்பட்ட உன்னுடைய இப்படிப்பட்ட இந்தத் தர்மத்தினால் நீ என்னைக் காண்கிறாய். உன்னிடத்தில், எனக்கு, இணையில்லாத அன்பும் இருக்கிறது. பீஷ்ம! நான் [1] வீண்போகாத காட்சியுள்ளவன். உனக்கு என்ன செய்யக்கடவேன்? சொல். கௌரவர்களுள் சிறந்தவனே! குற்றமற்றவனே! நீ எதைச் சொல்லுவாயோ அதைக் கொடுப்பேன்' என்றார்.

---

1 தம்மைக் காண்பது பயனுள்ளதாகவே இருக்கு மென்பது.

பீஷ்மர், 'மஹாபாக்யமுள்ளவரே! நான் ப்ரபுவான உம்மைத் தரிசித்தமையினாலும் எல்லா உலகங்களாலும் பூஜிக்கப்பட்ட தேவரீர் மகிழ்ச்சியடைந்தமையினாலும் (எல்லாம்) செய்யப்பட்டனவென்றே நான் எண்ணுகிறேன். தார்மிகர்களுள் சிறந்தவரே! நான் உம்மால் அநுக்ரஹிக்கப்படத்தக்கவனாகில் ஒரு ஸந்தேகத்தை உம்மிடம் சொல்லுவேன். என்னுடைய அந்த ஸந்தேஹத்தைத் தேவரீர் போக்கக்கடவீர். பகவானே! எனக்குத் தீர்த்தங்களைப்பற்றி ஒரு ஸம்சயமிருக்கிறது. நான் அதனைக் கேட்க விரும்புகிறேன். அதைத் தேவரீர் சொல்லக்கடவீர். தெய்வம் போன்றவரே! பிரம்மரிஷியே! எவன் பூமியைப் பிரதக்ஷிணம்செய்கிறானோ அவனுக்கு என்ன பயன் உண்டாகிறது? தபோதனரே! அதனை எனக்குச் சொல்வீராக' என்று வினவ, புலஸ்தியர் சொல்லலானார். 'ஸந்தோஷம். ரிஷிகளுக்கு எது முக்கியகதியாக இருக்கிறதோ அதை உனக்கு நன்கு எடுத்துரைப்பேன். ஐயா! தீர்த்தங்களில் கிடைக்கும்பயனைக் கருத்துடன் கேள். எவனுடைய *கைகளும் கால்களும் மனமும் கல்வியும் தவமும் கீர்த்தியும் நன்கு அடக்கப்பட்டிருக்கின்றனவோ அவன் தீர்த்தபலனை அடைகிறான். தானம் வாங்காதவனும் கிடைத்ததைக் கொண்டு மகிழ்பவனும் நான் என்கிற அஹம்பாவத்தினின்று விடுபட்டவனுமான மனிதன் தீர்த்தபலனை அடைகிறான். டம்பம் முதலியவையில்லாதவனும் (பயனை எதிர்பார்த்துக் கார்யங்களைத்) தொடங்காதவனும் லகுவான ஆகாரமுள்ளவனும் புலன்களை வென்றவனுமாயிருப்பவன், எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டுத் தீர்த்தபலனை அடைகிறான். ராஜஸ்ரேஷ்டனே! கோபமில்லாதவனும் இயற்கையாகவே உண்மை பேசுகிறவனும் உறுதியான விரதமுள்ளவனும் எல்லாப்பிராணிகளையும் தனக்கொப்பாக நினைப்பவனுமாயிருப்பவன் தீர்த்தபலனை அடைகிறான். இவ்வுலகில் ரிஷிகளால்

* 1 'கைகளை அடக்குதலாவது—தகாத தானங்களை வாங்காமை, பிறரைத் துன்புறுத்தாமை முதலியன. 2 கால்களை அடக்குதலாவது—கண்ணால் பார்த்துச் சுத்தமான இடத்தில் அடிவைத்தல். 3 மனத்தை அடக்குதலாவது—பிறனுக்குத் தீங்கு நினையாமை. 4 கல்வியை அடக்குதலாவது—அபிசாரம் செய்யாமை; அதாவது, மந்திர முதலியவற்றால் பிறருக்குத் தீங்கு செய்யாமை. 5 தவத்தை அடக்குதலாவது—கர்வ மில்லாமை. 6 கீர்த்தியை அடக்குதலாவது—அபகீர்த்தியில்லாமை' என்பது பழையவுரை.

தேவர்கள்விஷயமாக(ச்செய்யவேண்டிய) யாகங்களும் அந்தயாகங்களுக்கு முறைப்படி இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கும் பயனும் முழுமையும் உள்ளபடி கூறப்பட்டிருக்கின்றன. அரசனே! அந்த யஜ்ஞங்கள் பொருளில்லாதவனால் செய்துமுடிக்கக்கூடியவையல்ல. பலஸாதனங்களுள்ளவையும் பலவகைப்பட்ட விரிவான பொருளுள்ளவையுமான யஜ்ஞங்கள் இந்த அரசர்களாலாவது செல்வத்தால்நிறைந்த மனிதர்களாலாவது ஒருஸமயத்தில் செய்யப்படுகின்றன. பொருளும் மற்றஸாதனங்களும் குறைந்தவர்களாலும் ஸஹாயமற்றவர்களாலும் மனைவிமக்களில்லாதவர்களாலும் செய்யப்படமுடியா. மஹாராஜனே! யுத்தம் செய்பவர்களுள் சிறந்தவனே! எளியவர்களும் செய்யக்கூடியதும் புண்யமான யாகபலன்களைஒத்த பலன்தருவதுமான செய்கையை நீ தெரிந்துகொள். பரதர்களுள் மிகச்சிறந்தவனே! ரிஷிகளுடைய பரமரஹஸ்யமாயுள்ள இந்தப் புண்யமான தீர்த்தயாத்ரையானது, யாகங்களைக்காட்டிலும் சிறந்ததாகும். தீர்த்தங்களை அடையாமையாலும், (அடைந்தும்) மூன்றுநாள் உபவாஸம் இராமையாலும், பொன்னையும் பசுக்களையும் கொடாமையாலும், மனிதன் தரித்ரனாகப் பிறக்கிறான் அன்றோ? (மனிதன்) தீர்த்தாடனத்தினால் எந்தப்பலனை அடைகிறானோ அந்தப்பலனை அதிகதக்ஷிணைகளுள்ள அக்நிஷ்டோமமுதலிய யாகங்களைச்செய்தும் அடையான். ராஜஸ்ரேஷ்டனே! மிக்க பாக்யசாலியானவன் எல்லாத்தீர்த்தங்களுள்ளும் மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற 1 புஷ்கரம் என்கிற பெயர்பெற்ற தீர்த்தத்தை அடையவேண்டும். பேரறிவுள்ளவனே! குருநந்தன! பதினாயிரங்கோடி தீர்த்தங்கள் புஷ்கரத்தில் மூன்று ஸந்தியாகாலங்களிலும் வருகின்றன. பிரபுவே! ஆதித்யர்களும் வஸுக்களும் ருத்ரர்களும் மருத்கணங்களும் ஸாத்யர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் எப்பொழுதும் புஷ்கரத்தில் வஸிக்கிறார்கள். மஹாராஜனே! அந்தத்தீர்த்தத்தில் தேவர்களும் அஸுரர்களும் அப்படியே பிரம்மரிஷிகளும், தவத்தைச்செய்து சிறந்தயோகமுள்ளவர்களும் பெரும் புண்ணியத்தையடைந்தவர்களும் அதிகதேஜஸுள்ளவர்களுமாகிப் பல சிறந்த தவங்களால் (அடையக்கூடிய) ஸ்தானங்களை அடைந்தார்கள். நல்ல எண்ணமுள்ளவனுக்குப் புஷ்கரதீர்த்தங்களை அடைய மனத்தினால்

1 சிலதீர்த்தங்கள் பலமுறை வருகின்றன. சில தீர்த்தமுதலியவற்றுக்கு நீலகண்டவியாக்யான பாடத்தில் பெயர்கள் வேறுபடுகின்றன.

விரும்புவதாலும் பாவங்களனைத்தும் நாசமடைகின்றன. (அவன்) ஸ்வர்க்கத்திலும் பூஜிக்கப்படுகிறான். மிக்கபுகழ்பெற்றவரும் தேவாஸுரர்களுள் மிக்க மேன்மைபெற்றவருமான பிரம்மதேவர், அந்தப் புஷ்கரதீர்த்தத்தில் எப்பொழுதுமே நிகரற்ற பிரியமுடையவராக வஸித்தார். புகழுள்ளவனே! முற்காலத்தில் ரிஷிக்கூட்டங்களுடன் கூடின தேவர்கள் பெரிய புண்ணியத்துடன் சேர்ந்தவர்களாகிப் புஷ்கரதீர்த்தத்தில் ஸித்தியை நன்கு அடைந்தார்கள். அந்ததீர்த்தத்தில் ஸ்நானம்செய்து பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் செய்பவன் எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டுப் பிரம்மலோகத்திலும் பூஜிக்கப்படுகிறான். ஓ! பீஷ்ம! புஷ்கரதீர்த்தத்தின் கரையிலுள்ள வனத்தைஅடைந்து ஒருபிராம்மணனையாவது உண்பிப்பவன் அந்த நற்செய்கையால் இம்மையிலும் மறுமையிலும் மகிழ்கிறான். கற்றறிந்தமனிதன் கீரைகளாலோ கிழங்குகளாலோ பழங்களாலோ எதனால் தான் ஜீவனம் செய்கிறானோ அதனை ஶ்ரத்தையுள்ளவனாகவும் அஸூயை இல்லாதவனாகவும் (அங்கே) பிராம்மணனுக்குக் கொடுக்கக் கடவன்; அதனாலேயே அஶ்வமேதபலனை அடைவான். தீர்த்தபாத்திரங்களையாவது (கொடுத்துப்) பிராம்மணர்களைக் கொண்டு மங்களாசீர்வாதத்தைச் சொல்லுவிக்கவேண்டும். அந்தப்பூஜையினாலும், இறந்தபின் விரைவில் மோக்ஷத்தை அடைகிறான். ராஜஶ்ரேஷ்டனே! (புஷ்கர) தீர்த்தத்தில் ஸ்நானம்செய்த மஹாத்மாக்கள் பிராம்மணர்களாயினும் க்ஷத்திரியர்களாயினும் வைசியர்களாயினும் சூத்திரர்களாயினும் பிறவியை அடையார். பரதர்களுள் சிறந்தவனே! முக்கியமாகக் கார்த்திகைமாதத்துப் பௌர்ணமாஸியில் புஷ்கரத்தை அடைகிறவன் அந்தத் தீர்த்தத்தில் அக்ஷயமான பலனை அடைகிறான். பரதகுலத்தில் தோன்றியவனே! காலையிலும் மாலையிலும் கைகுவித்துக்கொண்டு புஷ்கரத்திலுள்ள தீர்த்தங்களை நினைப்பவன் எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம்செய்தவனாவான். அந்த மனிதன் பிரம்மலோகத்தில் அழிவற்ற இடங்களையும் அடைவான். ஸ்த்ரீகளுக்கோ புருஷர்களுக்கோ பிறந்தது முதல் உள்ளபாவமனைத்தும் புஷ்கரத்தில் ஸ்நானம்செய்தமாத்திரத்திலேயே நீங்கிவிடுகின்றது. அரசனே! மதுஸூதனர் எல்லாத்தேவர்களுக்கும் முதன்மையாயிருப்பதுபோலப் புஷ்கரமானது எல்லாத்தீர்த்தங்களுக்கும் முதன்மையாயிருப்பதென்று சொல்லப்படுகிறது. நியமமுள்ளவனாகவும் சுத்தனாகவும் புஷ்கரத்தில் பன்னிரண்டு வர்ஷகாலம் வஸிப்பவன் எல்லா

யாகங்களின் பலனையும் அடைந்து பிரம்மலோகத்தையும் அடைகிறான். ஒருவன் பூர்ணமாக நூறுவருஷகாலம் அக்நிஹோத்ரத்தைச் செய்தாலும், அல்லது, புஷ்கரத்தில் கார்த்திகை மாதத்துப் பூர்ணிமைஒருதினம் மாத்திரம் வஸித்தாலும் அவ்விரண்டிற்கும் பலன் ஒன்றே. வெண்மையான மூன்று மலைச்சிகரங்களும் மூன்று நீரோட்டங்களும் தொன்றுதொட்டுப் புஷ்கரமென்னும் பெயரால் வழங்குகின்றன. அது விஷயத்தில் காரணத்தை நாம் அறியோம். புஷ்கரத்தை அடைவதும் அரிது; புஷ்கரத்தில் தவஞ்செய்வதும் அரிது; புஷ்கரத்தில் தானங்கொடுப்பதும் அரிது; புஷ்கரத்தில் வஸிப்பதுமே மிக அரிது. (மனிதன்) நியமமுள்ளவனாகவும் ஆகார நியமமுள்ளவனாகவும் புஷ்கரத்தில் பன்னிரண்டு நாள் வஸித்துவிட்டு அதனை வலமாகச்சுற்றிவந்து ஜம்பூமார்க்கத்தை அடையவேண்டும். தேவர்களாலும் ரிஷிகளாலும் பித்ருக்களாலும் அடையப்பட்ட ஜம்பூமார்க்கத்தை அடைந்தால் அஸ்வமேத பலனை அடைந்து விஷ்ணுலோகத்துக்கும் செல்லுகிறான். மனிதன் பகலில் [1] ஆறாவதுகாலம் வரையில் பசியைப்பொறுத்துக்கொண்டு அந்த ஜம்பூமார்க்கத்தில் ஐந்து இரவுகள் வஸித்தால் நரகத்தை அடையான்; உத்தமமான ஸித்தியையும் அடைகிறான். அறிவுமிக்கவனான மனிதன் அங்குச் சென்று உறுதியான விரதத்துடன் ஸ்ராத்தத்தைச் செய்யக்கடவன். (அப்படிச் செய்பவன்) வாஜபேயயாகத்தின் பலனை அடைகிறான். அவனுடைய பாவமும் தொலைகிறது. ஜம்பூமார்க்கத்தினின்று திரும்பி ஸ்தண்டிலகாஸ்ரமத்துக்குச் செல்லவேண்டும். (அப்படிப் போகிறவன்) நரகத்தை அடையான்; பிரம்மலோகத்தையும் அடைகிறான். அரசே! அகஸ்தியருடைய ஸரஸை அடைந்து பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பதில் பற்றுதலுள்ளவனாக மூன்று நாள் உபவாஸமிருப்பவன் அக்னிஷ்டோமயாகத்தின் பலனை அடைவான். (அங்கே) இலைகளையாவது பழங்களையாவது உணவாகக் கொண்டிருப்பவன் ஸௌப்ரம்மண்யருடைய ஸ்தானத்தை அடைகிறான். பரதர்களுள் சிறந்தவனே! பிறகு, லக்ஷ்மீ வாஸம் பொருந்தியதும் உலகத்தால் பூஜிக்கப்பட்டதுமான கண்வாஸ்ரமத்துக்குச் செல்லவேண்டும். அந்தத் தர்மாரண்யம் புண்யமானதும் ஆதியில் உண்டானதுமன்றோ? அந்த இடத்தில் ப்ரவேசித்த மாத்திரத்தினாலேயே (மனிதன்)

1 சாந்திபர்வம் 900-ம் பக்கத்திலும் ஆஸ்வமேதிகபர்வம் 248-ம் பக்கத்திலும் குறிப்பிற்காண்க.

எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிறான். நியமமுள்ளவனாக வும் ஆஹார நியமமுள்ளவனாகவும் பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பவன், விரும்பிய எல்லாம் நிரம்பினவன் ஆவான்; யாக பலனையும் அடைகிறான். பிறகு, (அதனை) வலம் செய்து யயாதி பதனமென்னுமிடத்தை அடைய வேண்டும். (அடைபவன்) அங்கே அஸ்வமேத யாகத்தின் பயனை அடைகிறான். பிறகு, நியம முள்ளவனாகவும் நியமமான ஆஹாரமுள்ளவனாகவும் மஹாகால மென்னுமிடத்தைக்குறித்துச் செல்லவேண்டும். (அங்குள்ள) கோடி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் அஸ்வமேத பலனை அடை வான். பிறகு, தர்மங்களை அறிந்த மனிதன் பத்ரவடமென்கிற பெயருள்ளதும் மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்றதுமான உமா பதியாகிய ஸ்தாணுவினுடைய தீர்த்தத்தை அடையவேண்டும். அந்தத்தீர்த்தத்தில் ஈசானனை அடைந்து (வணங்கினால்) ஆயிரம் பசுக்களைத் தானம் செய்வதனாலுண்டாகும் பலனை அடைவான்; மஹாதேவருடைய அருளால் கணங்களுக்குத் தலைமையையும் அடைகிறான். மனிதஸ்ரேஷ்டன் அவ்விடத்தில் சென்று செல் வப் பெருக்குள்ளதும் பகைவரில்லாததும் அழகியதுமான அர சர்க்கரசனாயிருக்கும் பதவியையும் அடைவான். அந்த மனிதன் மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற நர்மதாநதியை அடைந்து பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் செய்தால் அக்நி ஷ்டோமத்தின் பலனை அடைவான். பிரம்மசர்யமுள்ளவனும் பொறிகளைவென்றவனுமான மனிதன் தென்திசையிலுள்ள [1]ஸிந்துநதியைஅடைந்தால் அக்நிஷ்டோமயாகத்தின்பலனை அடை வதுடன் விமானத்தின்மீதும் ஏறுகிறான். நியமமுள்ளவனாகவும் ஆகாரநியமமுள்ளவனாகவும் [2] சர்மண்வதீ நதியையடைந்து ரந்தி தேவனால் அநுமதிகொடுக்கப்பட்டிருக்கிற அக்னிஷ்டோமபலனை அடைவான். [3] யுத்தத்தில் ஸ்திரமாயிருப்பவனே! அங்கிருந்து எந்த இடத்தில் முற்காலத்தில் பூமியில் துவாரமிருந்ததோ ஹிம

1 'தக்ஷிணம் ஸிந்தும்' என்பது மூலம்; 'தென்கடலை' என்பது இங்கி லிஷ் மொழிபெயர்ப்பு.

2 துரோணபர்வம் 217 ம் பக்கத்திலும் சாந்திபர்வம் 95 - ம் பக்கத்தி லும் பார்க்க.

3 'யுதிஷ்டிர!' என்பது மூலம்; பீஷ்மருக்கானமையால் இங்ஙனம் பொருள் செய்யப்பட்டது; இந்த ஸம்பாஷணையில் பின்வருமிடங்களிலும் இங்ஙனமே கொள்க.

வானுடைய பிள்ளையும் தர்மங்களை அறிந்ததுமான அந்த அர்ப்புதத்தை அடையவேண்டும். அந்த இடத்தில் மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற வஸிஷ்டருடைய ஆஸ்ரமம் இருக்கிறது. அங்கே ஓர் இரவு வாஸம்செய்தால் ஆயிரம் பசுக்களைத் தானம்செய்த பலனைப் பெறுவான். மனிதர்களுள் சிறந்தவனே! பிரம்மசர்யமுள்ளவனும் ஐம்புலன்களையும் வென்றவனுமான மனிதன் பிங்க தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தலால், நூறு கபிலைப் பசுக்களைக் கொடுக்கும்பலனைப் பெறுகிறான். ராஜஸ்ரேஷ்டனே! பிறகு, உலகத்தில் புகழ்பெற்றதும் தேவகணங்களால் பூஜிக்கத் தக்கதும் ரிஷிகளால் அடையப்பட்டதுமான பிரபாஸதீர்த்தத்துக்குச் செல்லவேண்டும். வீரனே! அந்த ப்ரபாஸதீர்த்தத்தில் ஹவிஸையுண்பவனும் தேவதைகளுக்கு வாயாக இருப்பவனும் காற்றை ஸாரதியாகவுடையவனுமான அக்னியானவன் தானே எப்பொழுதும் நேரிலிருக்கிறான். மனிதன் சுத்தனாகவும் மனத்தை நன்கு அடக்கினவனாகவும் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுவதால் அக்நிஷ்டோமத்தினாலும் அதிராத்ரத்தாலும் உண்டாகிற பலனை அடைகிறான். பிறகு, ஸரஸ்வதீநதியும் ஸமுத்திரமும் சேருமிடத்தில் சென்று (ஸ்நானம் செய்தால்) அவனுக்கு ஆயிரம்பசுக்களைத் தானம் செய்தபலன் உண்டாகிறது. (அவன்) ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். பரதஸ்ரேஷ்டனே! ராஜேந்திரனே! அதில் ஸ்நானம்செய்து மாசற்ற ஸூர்யன்போன்ற காந்தியுடையவனாகி ஒளியினால் எப்பொழுதும் அக்நிபோலப் பிரகாசிக்கிறான். அந்தஇடத்தில் மூன்றுநாள் வஸித்து ஸ்நானம்செய்து பித்ருக்களையும் தேவர்களையும் திருப்தியடையச் செய்யவேண்டும். அப்படிச் செய்பவன் சந்திரன்போலப்பிரகாசிப்பதுடன் அஸ்வமேதத்தின் பலனையும்அடைகிறான். பரதகுலத்தில் பிறந்தவர்களுள்உத்தமனே! யுத்தத்தில் ஸ்திரமாயிருப்பவனே! பிறகு, எதில் துர்வாஸரிஷியினால் விஷ்ணுவுக்கு வரம் அளிக்கப்பட்டதோ அந்தவரதானமென்கிற தீர்த்தத்தைக் குறித்துச் செல்லவேண்டும். மனிதன் வரதானத்தில் ஸ்நானம்செய்தால் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்தபலனை அடைவான். பிறகு, மனிதன் நியமமுள்ளவனாகவும் நியமமான ஆகாரமுள்ளவனாகவும் த்வாரகையைக் குறித்துச் செல்லவேண்டும். ஒருவன் பிண்டாரகத்தில் ஸ்நானம் பண்ணினால் பல ஸுவர்ணங்களைத் தானஞ்செய்தபலனை அடைவான். மஹாபாக்கியமுள்ளவனே! அந்தத் தீர்த்தத்தில் தாமரைமலர் முத்ரை

போடப்பட்ட நாணயங்கள் இன்றும்காணப்படுகின்றன. பகைவரையடக்குபவனே! அது ஆச்சரியம். குருநந்தன! மூவிலைச்சூல அடையாளமுள்ள தாமரைமலர்கள் காணப்படுகின்றன. மனிதருட்சிறந்தவனே! அங்கே மஹாதேவருடைய ஸாந்நித்யம் இருக்கின்றது. பரதர்களுள் சிறந்தவனே! அடைவதற்கு அரியதும் கடலும் ஸிந்துநதியும்கூடுவதுமான இடத்தை அடைந்து மன அடக்கத்துடன் தீர்த்தராஜனான வருணனுடைய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பித்ருக்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் திருப்திசெய்து தன்தேஜஸினால் [1] ஜ்வலிக்கின்ற வருணலோகத்தை அடைகிறான். யுத்தத்தில் ஸ்திரமாயிருப்பவனே! தேவரான சங்குகர்ணேஶ்வரரை அர்ச்சித்து அஶ்வமேதயாகபலனுக்குப் பத்து மடங்கானபலனை அடைகிறானென்று புத்திமான்கள் கூறுகின்றனர். பரதர்களுள் சிறந்தவனே! சிறந்த கௌரவர்களுள் சிறந்தவனே! வலமாகச்சென்று மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்றதும் எல்லாப் பாவங்களையும் போக்குவதும் சமியென்னும் பெயர் வழங்குவதுமான தீர்த்தத்தை அடையவேண்டும். அந்தத் தீர்த்தத்தில் பிரம்மாமுதலியதேவர்கள் மஹேஶ்வரரை உபாஸிக்கிறார்கள். அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து தேவகணங்களால் சூழப்பட்டிருக்கிற ருத்ரரை அர்ச்சித்தால் அர்ச்சிப்பவனுக்குப் பிறந்தது முதலுள்ள பாவம் அழிந்துவிடுகிறது. புருஷஶ்ரேஷ்டனே! இங்குள்ள [2] சமீ தீர்த்தமானது எல்லாத் தேவர்களாலும் புகழப்பட்டிருக்கிறது. நரஶ்ரேஷ்டனே! பேரறிவுள்ளவனே! அரசனே! முற்காலத்தில் பிரபுவான விஷ்ணு தேவசத்துருக்களைக் கொன்றபின் சென்று சுத்திசெய்துகொண்டதான சமீதீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் அஶ்வமேதபலனை அடைவான். தர்மங்களை அறிந்தவனே! பிறகு, துதிக்கப்பட்டிருக்கிற வஸோர்த்தாரைக்குச் செல்லவேண்டும். மனிதன் அங்கே செல்வதனாலேயே அஶ்வமேதபலனை அடைவான். கௌரவர்களுள் சிறந்தவனே! ஒருவன் மனத்தை அடக்கினவனும் இந்திரியங்களை அடக்கினவனுமாகி

---

1 'தீப்யமாநஃ' என்ற பாடங்கொண்டு, 'ஜ்வலிக்கின்றான்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

2 'சமீச' என்பது மூலம்; 'சமீச' என்று சகாரம் கொடுத்திருப்பதனால், 'சமீ' அங்குள்ள மரமாயிருக்கலாமென்றும் அதனாலேயே அந்தத் தீர்த்தத்துக்கு, சமீதீர்த்தமென்று பெயர் வந்திருக்கலாமென்றும்தோன்றுகிறது.

அதில் நீராடித் தேவர்களையும் பித்ருக்களையும் த்ருப்தி செய்தால் விஷ்ணுலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். பரதஸ்ரேஷ்டனே! இந்தத் தீர்த்தத்தில் வஸுக்களுடைய புண்ணியமான தடாகம் இருக்கிறது. ஒருவன் அதில் ஸ்நானம் செய்தும் தீர்த்தத்தைப் பானம் பண்ணியும் வஸுக்களுக்குப் பிரியனாவான். நரஸ்ரேஷ்டனே! எல்லாப்பாவங்களையும் போக்குவதான ஸிந்தூத்தமம் என்கிற ப்ரஸித்தமான தீர்த்தம் இருக்கிறது. ஒருவன் அதில் ஸ்நானம் செய்து அனேக ஸுவர்ணங்களைத் தானஞ்செய்த பலனை அடைவான். ஒருவன் பரிசுத்தனாகி நன்னடையுடன் பிரம்ம தீர்த்தத்தை அடைந்து (ஸ்நானம் செய்தால்) பிரம்மலோகத்தை அடைவதுடன் உத்தமமான கதியையும் அடைவான். ஸித்தர்களாலே அடையப்பட்ட இந்திரனுடைய குமாரிகளின் தீர்த்தம் இருக்கிறது. ஒருவன் அதில் ஸ்நானம்செய்தால் விரைவில் ஸ்வர்க்கலோகத்தை அடைவான். அந்த இடத்திலேயே ஸித்தர்களால் அடையப்பட்ட ரேணுகையின் தீர்த்தம் இருக்கிறது. ஒரு பிராம்மணன் அதில் ஸ்நானம்செய்தால் சந்திரன்போல நிர்மலனாவான். பிறகு, ஒருவன் நியமமுள்ளவனாகவும் நியமமானஆகாரமுள்ளவனாகவும் பஞ்சநதத்தையடைந்து ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லப்பட்ட ஐந்துயாகங்களின் பலனை அடைகிறான். ராஜஸ்ரேஷ்டனே! பிறகு, ஒருவன் உத்தமமான பீமையினுடைய ஸ்தானத்தை அடையவேண்டும். பரதர்களுள் சிறந்தவனே! அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் பிறவியில் பிறக்கமாட்டான். அரசனே! ஒருமனிதன் புடமிட்ட பொன்னாலாகிய குண்டலங்களை அணிந்து தேவியின் புத்திரனாவான்; லக்ஷம்பசுக்களைத் தானம் செய்த பலனையும் அடைவான். ஒருவன் மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற கிரிகுஞ்சத்தை அடைந்து பிரம்மதேவரை வணங்கினால் ஆயிரம் பசுக்களைத் தானம்செய்தபலனைப் பெறுவான். தர்மங்களை அறிந்தவனே! பிறகு, ஒருவன் பொன்னிறமும் வெள்ளிநிறமுமுள்ள மீன்கள் இப்பொழுதும் காணப்படுகின்ற உத்தமமான விமலமென்கிற தீர்த்தத்தைக்குறித்துச் செல்லவேண்டும். ஒருவன் அதில் ஸ்நானம் செய்து இந்திரலோகத்தை விரைவில் அடைவான்; எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டுச் சுத்தனாகிச் சிறந்தகதியை அடைவான். பரதவம்சத்தில் பிறந்தவனே! ஒருவன் விதஸ்தையை அடைந்து பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் நன்கு தர்ப்பணம் செய்து வாஜபேயத்தின் பலனை அடைகிறான்.

காஸ்மீரதேசத்திலேயே தக்ஷகன்என்கிற ஸர்ப்பத்துக்கு இருப்பிடமும் எல்லாப்பாவங்களினின்றும் விடுவிப்பதும் விதஸ்தை என்கிறபெயரினுல் ப்ரஸித்திபெற்றதுமான தீர்த்தம் இருக்கிறது. ஒருவன் அதில் ஸ்நானம்செய்து நிச்சயமாக வாஜபேயயாகத்தின் பலனை அடைவான். எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டுச் சுத்தனுகிச் சிறந்தகதியையும் அடைவான். பிறகு, ஒருவன் மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற மலதையை அடையவேண்டும். அரசனே! ஸாயம்ஸந்தியாகாலத்தில் விதிப்படி அதில் ஸ்நானம் செய்து தன் சக்திக்குத்தக்கவாறு அக்னிக்குச் [1] சருவை நிவேதனம்செய்யவேண்டும். வித்வான்கள் பித்ருக்களுக்கு (அங்கே செய்யப்படும்) தானத்தை அக்ஷயமானதாகச் சொல்லுகிறுர்கள். மனிதர்களுக்குத்தலைவனே! ரிஷிகளும் பித்ருக்களும் தேவர்களும் கந்தர்வர்களுடைய கூட்டங்களும் அப்ஸரஸுகளுடைய கூட்டங்களும் குஹ்யகர்களும் கின்னரர்களும் யக்ஷர்களும் ஸித்தர்களும் வித்யாதரர்களும் மனிதர்களும் ராக்ஷஸர்களும் தைத்யர்களும் ருத்ரர்களும் பிரம்மாவும் நியமமுள்ளவர்களாக ஆயிரம் வருஷகாலம் நிகரற்றதீக்ஷையைஅடைந்து விஷ்ணுவுக்கு அருள்வரச் செய்பவர்களாகி அப்படியே சருவையும் நன்கு பக்குவம்செய்து (நிவேதனம்செய்தார்கள்.) ஏழுஏழு ரிக்குக்களால் கேசவரை ஸ்தோத்திரம் செய்தார்கள். கேசவரோ ஸந்தோஷமடைந்து அவர்களுக்கு எட்டுமடங்கான ஐஸ்வர்யத்தைக் கொடுத்தார். வேந்தே! அந்தத்தேவர் மற்றும் அவர்கள் விரும்பியவற்றையும் விரும்பினவண்ணம் கொடுத்து மேகங்களில் மின்னல் மறைவதுபோல அவ்விடத்திலேயே மறைந்துவிட்டார். பரதவம்சத்தில் பிறந்தவனே! அதனுல், (அந்தத்தீர்த்தம்) உலகங்களில் ஸப்தசரு என்கிற பெயரினுல் ப்ரஸித்திபெற்றதாயிற்று. அந்தஇடத்தில் அக்நிக்குச் சருவைநிவேதனம்செய்வது லக்ஷம்பசுக்களின் தானத்தைக்காட்டிலும் நூறு ராஜஸூய யாகங்களைக்காட்டிலும் ஆயிரம் அஸ்வமேதங்களைக்காட்டிலும் மேன்மையுள்ளது. ராஜஸ்ரேஷ்டனே! பிறகு, அங்கிருந்து திரும்பி ருத்ரபதத்தை அடையவேண்டும். ஒருவன் அங்கே மஹாதேவரை அர்ச்சித்து அஸ்வமேதபலனை அடைவான். அரசனே! ஒருவன் மணிமான்என்கிற தீர்த்தத்தை

---

1 தேவர்களையாவது பித்ருக்களையாவது உத்தேசித்து வைதிகாக்நியில் விதிப்படி யவைஅல்லதுநெல்லரிசியில் பால்விட்டுப் பக்வஞ்செய்யப்படுவதும் கஞ்சிவடியாததும் பக்குவமானதும் சூடாறினதுமான அன்னம்.

அடைந்து ஸ்நானம்செய்து பிரம்மசர்யமுள்ளவனுகவும் மனஅடக்கமுள்ளவனுகவும் ஓர்இரவு அங்குவஸித்தலால் அக்நிஷ்டோமபலனை அடைவான். ராஜேந்திரனே! பரதஸ்ரேஷ்டனே! பிறகு, ஒருவன் பிராம்மணர்களுக்கு உத்பத்தி (ஸ்தானம்) என்று கேட்கப்படுவதும் உலகங்களில் ப்ரஸித்திபெற்றதுமான தேவிகையைக்குறித்துச் செல்லவேண்டும். மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற த்ரிசூலபாணியினுடைய ஸ்தானமும் (அங்கு) இருக்கிறது. பரதஸ்ரேஷ்டனே! ஒருவன் தேவிகையில் ஸ்நானம்செய்து மஹேஸ்வரரை நன்குபூஜித்து அந்தப்பூஜையில் சக்திக்குத்தக்கவாறு சருவை நிவேதனம்செய்தால் விரும்பின எல்லாம் நிரம்பின யாகத்தினுடையபலனை அடைகிறுன். பரதவம்சத்திலுதித்தவனே! அந்தஇடத்தில், தேவர்களால்அடையப்பட்டிருக்கிற காமமென்று பெயர்பெற்ற ருத்ரருடைய தீர்த்தம் இருக்கிறது. ஒருவன் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து சீக்கிரம் ஸித்தியை அடைகிறுன். (அங்குள்ள) யஜனம், யாஜனம், ப்ரம்மவாலுகம், புஷ்பாம்பஸ் என்கிற தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த மனிதன், மரணமடைந்தபிறகு, துக்கிக்கவேண்டாம். தேவர்களாலும் ரிஷிகளாலும் அடையப்பட்டதும் புண்யமுமான இந்தத் தேவிகையை அரையோஜனை அகலமுள்ளதும் ஐந்துயோஜனை நீளமுள்ளதுமாகவன்றே சொல்லுகிறுர்கள். தர்மத்தைஅறிந்தவனே! பிறகு, வரிசைப்படி தீர்க்கஸத்ரத்தைக் குறித்துச் செல்லவேண்டும். அந்தஇடத்தில் பிரம்மாமுதலியதேவர்களும் ஸித்தர்களும் நிகரில்லாதரிஷிகளும் தீக்ஷைபெற்றவர்களாகவும் தவருத விரதமுள்ளவர்களாகவும் தீர்க்கஸத்ரமென்னும் யாகத்தைச் செய்கிறுர்கள். ராஜேந்திரனே! பகைவரைஅடக்குபவனே! பரதவம்சத்திலுதித்தவனே! ஒருவன் தீர்க்கஸத்ரமென்னும்அந்தஇடத்தை அடைவதனுலேயே ராஜஸூயத்தாலும் அஸ்வமேதத்தாலும் உண்டாகக்கூடிய பலனைப் பெறுகிறுன். பிறகு, ஒருவன் மேருவின்மேல் எந்தவிடத்தில் ஸரஸ்வதீநதியானது பூமியினுள் மறைந்தோடி, பிறகு, சமஸத்திலும் சிவோத்பேதத்திலும் நாகோத்பேதத்திலும் காணப்படுகிறதோ அந்தவிநசனத்தை நியமமுள்ளவனும் ஆகாரவரையறையுள்ளவனுமாக அடையவேண்டும். நரஸ்ரேஷ்டனே! அதில் ஸ்நானம்செய்பவன் சந்திரன்போல எப்பொழுதும் பிரகாசிக்கிறுன். சமஸோத்பேதத்தில் ஸ்நானம்செய்பவன் அக்னிஷ்டோமபலனை அடைகிறுன். ஒருமனிதன் சிவோத்

பேதத்தில் ஸ்நானம்செய்தால் ஆயிரம்பசுக்களைத் தானம்செய்த பலனை அடைகிறான். ஒருமனிதன் நாகோத்பேதத்தில் நீராடினால் நாகலோகத்தை அடைவான். ராஜேந்திரனே! பாரத! மஹாராஜனே! நரச்ரேஷ்டனே! ஸரஸ்வதிநதியில் எந்தச் சசயானதீர்த்தத்தில் நூறுவருஷங்களாகத் தாமரைமலர்கள் கார்த்திகைமாதத்துப் பூர்ணிமைதோறும் 1 பலநிறமுள்ளவையாகக் காணப்படுகின்றனவோ அடைதற்கரிதான அந்தத்தீர்த்தத்தை ஒருவன் அடைந்து அதில் ஸ்நானம்செய்து எப்பொழுதும் சந்திரன்போலப் பிரகாசிக்கிறான். பரதரேறே! ஆயிரம்பசுக்களைத் தானம்செய்வதால் விளையும்பலனையும் அடைவான். குருநந்தனனே! ஒருவன் நியமமுள்ளவனாகக் குமாரகோடிதீர்த்தத்தை அடைந்து பித்ருக்களையும் தேவர்களையும் பூஜிப்பதில் பற்றுதலுள்ளவனாகி அதில் நீராடக்கடவன்; அவன் பதினாயிரம்பசுக்களைத் தானம்செய்தபலனை அடைவதுடன் குலத்தையும் நன்குகரையேற்றுவான். தர்மங்களை அறிந்தவனே! பிறகு, அடக்கமுள்ளவனாக ருத்ரகோடியைக்குறித்துச் செல்லவேண்டும். மஹாராஜனே! முற்காலத்தில் அந்தஇடத்தில் கோடிரிஷிகள் பெருமகிழ்ச்சியுடன் ருத்ரரைத்தரிசிக்கும் விருப்பத்தால் கூடினார்கள். பாரத! அரசனே! ரிஷிகள், 'விருஷபத்வஜரை நான் முந்திப் பார்ப்பேன்; நான் முந்திப் பார்ப்பேன்' என்று இவ்வண்ணம் புறப்பட்டு வந்தார்களாம். பூமிக்குநாதனே! பிறகு, மனத்தை அடக்கினவர்களான அந்தரிஷிகளின் விவாதம் ஒழிவதற்காக யோகீச்வரரால் யோகத்தைஅடைந்து உண்டுபண்ணப்பட்ட கோடிருத்ரர்கள் (அந்த) ரிஷிகளின் முன்னிலையில் வந்துநின்றார்கள். அந்தரிஷிகள், 'ருத்ரர் என்னாலேயே முதல்முதலில் பார்க்கப்பட்டார்' என்று தனித்தனியாக நினைத்தார்கள். அரசனே! மஹாதேவர் மனத்தைஅடக்கினவர்களான அந்தரிஷிகளுடைய உத்தம பக்தியினால் மகிழ்ந்து அவர்களுக்கு, 'இன்றுமுதல் உங்களுக்குத் தர்மப்பெருக்கம் உண்டாகும்' என்று வரன்அளித்தார். நரச்ரேஷ்டனே! ஒரு மனிதன் சுத்தனாக அந்த ருத்ரகோடியில் ஸ்நானம் செய்து அச்வமேதபலனைப் பெறுவதுடன் குலத்தையும் நன்கு கரையேற்றுவான். ராஜேந்திரனே! பிறகு, எந்தத் தீர்த்தத்தில் பிரம்மாவை முதன்மையாகக் கொண்ட தேவர்களும் தவத்தைத்

---

1 சிறிதுவேறுபாடம்கொண்டு,'ஸாரஸப்பறவைகள் சசங்களில் மறைந்துபோய் வருஷந்தோறும் கார்த்திகைப்பூர்ணிமையில் காணப்படுகின்றன' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

தனமாகக் கொண்ட ரிஷிகளும் கேசவரை உபாஸிப்பதற்காகச்சித்திரை மாதத்து வளர்பிறைச் சதுர்த்தசியில் வருகிறார்களோ, மிக்க புண்யமானதும் உலகத்தில் ப்ரஸித்திபெற்றதுமான அந்த ஸரஸ்வதியினுடைய ஸங்கமத்தை அடையவேண்டும். நரஸ்ரேஷ்டனே! ஒருவன் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பல ஸுவர்ணங்களைத் தானஞ்செய்த பலனை அடைவான்; எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டுச் சுத்தமான ஆத்மாவுடன் பிரம்மலோகத்தையும் அடைகிறான். நராதிபனே! ஒரு மனிதன் எந்த இடத்தில் ரிஷிகளுடைய ஸத்ர யாகங்கள் நிறைவேறினவோ அந்த ஸரஸ்வதீ ஸங்கமத்தை அடைந்து ஆயிரம் பசுக்களைத் தானம் செய்வதன் பலனை அடைவான்.

எண்பத்தோராவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(புலஸ்தியர் பற்பல தீர்த்தங்களின் மகிமையைப் பீஷ்மருக்குச் சொல்லியது.)

ராஜேந்திரனே! பிறகு, ஒருவன், (எல்லோராலும்) புகழப்பட்ட [1] குருக்ஷேத்திரத்தை அடையவேண்டும். அந்தக் குருக்ஷேத்திரத்தை அடைந்த எல்லாப் பிராணிகளும் பாவங்களினின்று விடப்படுகின்றன. எவன், 'நான் குருக்ஷேத்திரம் செல்வேன்; குருக்ஷேத்திரத்தில் வஸிப்பேன்' என்று இவ்வண்ணம் எப்பொழுதும் சொல்வனோ அவனும் பாவங்களால் விடப்படுகிறான். குருக்ஷேத்திரத்தில் காற்றினால் தூற்றப்பட்ட புழுதிகளும் (மேனியில் பட்ட மாத்திரத்தினாலேயே) பாவச் செயலுள்ளவனையும் மேலான கதியை அடையச் செய்கின்றன. ஸரஸ்வதீ நதிக்குத் தெற்கிலும் த்ருஷத்வதீ நதிக்கு வடக்கிலுமுள்ள குருக்ஷேத்திரத்தில் எவர்கள் வஸிக்கிறார்களோ அவர்கள் ஸ்வர்க்கத்தில் வஸிக்கிறார்கள். போர் புரிபவர்களுள் உத்தமனே! பூபதியே! பாரத! தீரனாயிருப்பவன் எந்தக் குருக்ஷேத்திரத்தில் ப்ரம்மாதி தேவர்களும் ரிஷிகளும் ஸித்தர்களும் சாரணர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸு

---

[1] 'பாவத்தைப் போக்கிக் காப்பாற்றுவதனால் குருக்ஷேத்ரம் என்றாயிற்று' என்பது பழையவுரை.

களும் யக்ஷர்களும் பன்னகர்களும் மிக்க புண்யமான [1] ப்ரம்ம க்ஷேத்திரத்தைக் குறித்து வருகின்றார்களோ அந்தக் குருக்ஷேத்திரத்தில் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஒருமாதம் வஸிக்கவேண்டும். யுத்தம் செய்பவர்களுள் சிறந்தவனே! குருக்ஷேத்திரத்தை அடைய மனத்தினால் விரும்புகிறவனுக்கும் பாவங்கள் தொலைகின்றன. அவன் ப்ரம்மலோகத்தையும் அடைகிறான். கௌரவர்களுள் சிறந்தவனே! ஒருமனிதன் ஶ்ரத்தையுடன் குருக்ஷேத்திரத்தை அடைந்து ராஜஸூய யாகத்தாலும் அஶ்வமேத யாகத்தாலும் உண்டாகும் பலனை அடைகிறான். அரசனே! பிறகு, வாயில் காப்பவனும் மஹாபலசாலியுமான மங்குகன் என்கிற யக்ஷனை நமஸ்கரிப்பதனாலேயே ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலனை அடைவான். தர்மங்களை அறிந்தவனே! ராஜேந்திரனே! பிறகு, ஒருவன், எந்த இடத்தில் ஹரியானவர் ஸான்னித்தியம் செய்கிறாரோ அந்த ஸததமென்கிற ப்ரஸித்தமான விஷ்ணுவினுடைய சிறந்த ஸ்தானத்தைக் குறித்துச் செல்லவேண்டும். அந்த இடத்தில் ஸ்நானம் செய்தும் மூவுலகங்களுக்கும் காரணமாயிருக்கிற ஹரியை அர்ச்சித்தும் அஶ்வமேத யாகத்தின் பலனை அடைவதுடன் விஷ்ணுலோகத்தையும் அடைகிறான். பாரத! ஒருவன் பிறகு, மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற பரிப்லவமென்கிற தீர்த்தத்தை அடையவேண்டும். அவன் அக்னிஷ்டோமத்தாலும் அதிராத்ரத்தாலும் உண்டாகும் பலனை அடைகிறான். ஒருவன் ப்ருதிவீதீர்த்தத்தை அடைந்து ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலனை அடைவான். நராதிபனே! தீர்த்தயாத்ரை செய்பவன், பிறகு, சாலூகினியை அடைந்து தசாஶ்வமேத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து (அந்தப்) பத்து அஶ்வமேத யாகங்களின் பலனையே அடைவான், ஒருவன் ஸர்ப்பதர்வி என்கிற நாகங்களுடைய உத்தம தீர்த்தத்தை அடைந்து (ஸ்நானம் செய்தால்) அக்னிஷ்டோம யாக பலனை அடைகிறான்; நாகலோகத்தையும் அடைகிறான். தர்மங்களை அறிந்தவனே! ஒருவன், பிறகு, த்வாரரக்ஷகனான அருந்துகனை அடையவேண்டும். அந்த இடத்தில் ஓர் இரவு வாஸம் செய்தால் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலனை அடைவான். பிறகு, பஞ்சநதத்தையடைந்து நியமமுள்ளவனாகவும் நியதமான ஆகாரமுள்ளவனாகவும் கோடிதீர்த்தத்

1 'பிரம்மத்தை அடைதற்கிடமான குருக்ஷேத்திரத்தை' என்பது பழைய உரை.

தில் ஸ்நானம்பண்ணி அஸ்வமேத யாகத்தின்பலனைப் பெறுவான். அஸ்வினீதேவர்களுடைய தீர்த்தத்தையடைந்து ஸ்நானம் செய்து நல்ல ரூபமுள்ளவனாகிறான். தர்மங்களையறிந்தவனே! ஒருவன், பிறகு, எந்த இடத்தில் எங்கும் வ்யாபித்தவரான விஷ்ணுவானவர் வராஹவடிவத்துடன் இருந்தாரோ அந்த உத்தமமான வாராஹதீர்த்தத்தை அடையவேண்டும். நரஸ்ரேஷ்டனே! அந்தத் தீர்த்தத்தில் நீராடி அக்னிஷ்டோமபலனைப் பெறுவான். ராஜேந்திரனே! பிறகு, ஜயந்தியில் ஸோமதீர்த்தத்தை அடையவேண்டும். ஒருமனிதன் அதில் ஸ்நானம் செய்து ராஜஸூயயாகபலனை அடைகிறான். ஒரு மனிதன் ஏகஹம்ஸத்தில் ஸ்நானம்செய்து ஆயிரம் கோதானபலனை அடைகிறான். நராதிபனே! தீர்த்தயாத்திரை செய்பவன் சதசௌசத்தை அடைந்து பௌண்டரீக யாகபலனை அடைகிறான்; சுத்தி செய்து கொண்டவனுமாவான். அதற்குப் பிறகு, மஹாத்மாவான ஸ்தாணுவினுடைய முஞ்சவடமென்கிற ஸ்தானத்தை அடைந்து அந்தஇடத்தில் ஓரிரவு உபவாஸமிருந்து கணங்களுக்குத் தலைமையைப் பெறுகிறான். மகாராஜனே! அந்த இடத்திலேயே உலகத்தில் கியாதிபெற்ற ஒரு [1] யக்ஷிணி இருக்கிறாள். ராஜேந்திரனே! அவளை அடைந்து வணங்கினால் விரும்பின எல்லாவற்றையும் அடைவான். பரதஸ்ரேஷ்டனே! ராஜனே! அது குருக்ஷேத்திரத்திற்குப் பிரஸித்திபெற்றவாயிலாக இருக்கிறது. தீர்த்தயாத்ரை செய்பவன் மனஅடக்கத்துடன் அதை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிவந்து புஷ்கரங்களுக்கு ஸமமான அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து பித்ருதேவதைகளை அர்ச்சித்துக் கிருதக்ருத்யன் ஆவான்; அஸ்வமேதபலனையும் அடைகிறான். அந்தத் தீர்த்தமானது பெரிய மஹாத்மாவும் ஜமதக்நிகுமாரருமான பரசுராமரால் உண்டுபண்ணப்பட்டது. தீர்த்தயாத்திரை செய்பவன், பிறகு, மனஅடக்கத்துடன் ராமஹ்ரதங்களை அடையவேண்டும். ராஜேந்திரனே! நரஸ்ரேஷ்டனே! ஜ்வலிக்கிற தேஜஸுள்ளவீரரான பரசுராமராலே அந்த இடத்தில் பலத்தினால் க்ஷத்திரியர்களைக்கொன்று அவர்களுடைய ரக்தத்தால் நிறைத்து ஐந்துமடுக்கள் அமைக்கப்பட்டனவென்று நாம் கேட்டிருக்கிறோம். (அந்த இரத்தத்தால்) பித்ருக்களும், அவ்வாறே, ப்ரபிதாமஹர்களுமான அனைவரும்

---

1 'யக்ஷிணீ' என்பது மூலம். 'யக்ஷிணீம்' என்ற பாடங்கொண்டு 'யக்ஷிணீ தீர்த்தம்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

த்ருப்தி செய்யப்பட்டார்கள். நராதிபனே! பிறகு, அந்தப் பித்ருக்கள் ப்ரீதியடைந்து ராமரைப்பார்த்து, 'ராம! ராம! மகாபாக்கியமுள்ளவனே! ப்ருகுநந்தனனே! ப்ரபுவே! உன்னுடைய இந்தப் பித்ருபக்தியினாலும் விக்ரமத்தினாலும் உன்விஷயத்தில் த்ருப்தியடைந்தவர்களாக இருக்கிறோம். மிக்க காந்தியுள்ளவனே! வரத்தைக் கேட்பாயாக. உனக்கு மங்களம். எதைவிரும்புகிறாய்?' என்று வினவினார்கள். ராஜஸ்ரேஷ்டனே! இவ்வாறு சொல்லக் கேட்டவரும் அடிப்பவர்களுள் சிறந்தவருமான அந்தப் பரசுராமர், இரு கைகளையும் குவித்துக்கொண்டு, ஆகாயத்தில் நிற்கின்ற பித்ருக்களைப் பார்த்து, 'நீங்கள் என்விஷயத்தில் ப்ரீதியுள்ளவர்களாகில் என்னிடத்தில் (தங்களால்) அனுக்ரஹிக்கப்படத்தக்க தன்மையும் இருந்தால் பித்ருக்களுடைய அருளால் மீண்டும் தவத்தையும் நல்ல வேதாத்தியயனத்தையும் விரும்புகிறேன். மேலும், நான் கோபவசப்பட்டு க்ஷத்திரியர்களைக்கொன்ற பாவத்தினின்றும் உங்களுடைய தேஜஸினால் விடுபடக்கடவேன். என்னால் உண்டு பண்ணப்பட்ட ரக்தமடுக்களும் பூமியில் பிரசித்தியுள்ள தீர்த்தங்களாக வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். பித்ருக்கள், ராமருடைய இந்த மங்களவாக்கியத்தைக்கேட்டு, அப்பொழுது அதிக ப்ரீதியடைந்தவர்களாகவும் ஸந்தோஷத்துடன் கூடியவர்களாகவும் ராமரைப்பார்த்து,'பித்ருபக்தியினால் உன்னுடைய தவமானது மீண்டும் விசேஷமாக விருத்தியடையட்டும். நீ கோபத்துக்கு வசப்பட்டுக்ஷத்ரியர்களைக்கொன்ற பாவத்தினின்றும்விடுபட்டுவிட்டாய். அவர்கள் தங்கள் கர்மங்களாலேயே மாண்டார்கள். உன்னாலுண்டு பண்ணப்பட்ட மடுக்களும் தீர்த்தங்களாகும். இதில் ஸம்சயமில்லை. எந்தமனிதன் அந்த மடுக்களில் ஸ்நானம்செய்து பித்ருக்களுக்கு நன்கு தர்ப்பணம் செய்வானோ அவனுக்குப் ப்ரீதியடைந்தபித்ருக்கள் பூமியில் கிடைத்தற்கரியதும் விரும்பப்பட்டதுமான மனோபீஷ்டங்களையும் சாச்வதமான ஸ்வர்க்கத்தையும் கொடுப்பார்கள்.' என்று மறுமொழி கூறினார்கள். அரசனே! ராமருடைய பித்ருக்கள் இவ்வாறு வரன்களைக்கொடுத்து அப்பொழுது மகிழ்ச்சியுடன் பார்க்கவரான அவரிடம் விடைபெற்றுக்கொண்டு அங்கேயே மறைந்தார்கள். மகாத்மாவான பார்க்கவருடைய ராமஹ்ரதங்கள் இப்படிப் புண்யமானவை. ராஜேந்திரனே! ஒருவன் பிரம்மசர்யமுள்ளவனும் சுத்தவிரதமுள்ளவனுமாகி ராமஹ்ரதங்களில் ஸ்நானம்செய்து ராமரைப் பூஜித்துப் பல பொன்னாணயங்களைத்

தானம்செய்தபலனை அடைவான். கௌரவர்களைத் தாங்கு பவனே! அரசனே! தீர்த்தயாத்ரைசெய்பவன் வம்சமூலகத்தை அடைந்து அந்த வம்சமூலகத்தில் ஸ்நானம்செய்து தன் வம்சத்தைக் கரையேற்றுவான். பரதர்களுள் மிகச்சிறந்தவனே! காயசோதனமென்கிற தீர்த்தத்தை அடைந்து, அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவனுக்குச் சரீரசுத்தி உண்டாவது திண்ணம். (அவன்) சுத்ததேகமுள்ளவனாகி மங்களகரமானவையும் எல்லாவற்றிலும் சிறந்தவையுமான உலகங்களையும் அடைகிறான். தர்மங்களை அறிந்தவனே! ஒருவன், பிறகு, முற்காலத்தில் எந்த இடத்தில் பிரபுவான விஷ்ணுவினால் உலகங்கள் மேலே தூக்கப்பட்டனவோ மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற அந்தத்தீர்த்தத்தைக் குறித்துச் செல்லவேண்டும். அரசனே! மூவுலகத்தாராலும் பூஜிக்கப்பட்ட லோகோத்தாரமென்கிற அந்தத்தீர்த்தத்தை அடைந்து அந்த உத்தமதீர்த்தத்தில் நீராடித் தனக்குச் சிறந்த உலகங்களைப் பெறுகிறான். ஸ்ரீதீர்த்தத்தையுமடைந்து மனஅடக்கத்துடன் ஸ்நானம்செய்து பித்ருக்களையும் தேவர்களையும்அர்ச்சித்து உத்தமமான ஶ்ரேயஸை அடைகிறான். பிரம்மசர்யமுள்ளவனும் மனத்தை ஒருவழிப்படுத்தினவனுமான மனிதன் கபிலாதீர்த்தத்தை அடைந்து அதில் ஸ்நானம்செய்து தன் பித்ருக்களையும் தேவதைகளையும் அர்ச்சித்து ஆயிரம் கபிலைப் பசுக்களின் தானபலனை அடைகிறான். ஸூர்யதீர்த்தத்தைஅடைந்து மனத்தை நன்கு அடக்கிக்கொண்டு அதில் ஸ்நானம்செய்து பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சித்து உபவாஸமிருப்பவன் அக்நிஷ்டோமபலனை அடைகிறான். ஸூர்யலோகத்தையும் அடைகிறான். தீர்த்தாடனம்செய்பவன் கிரமப்படி கோபவனம் என்கிற தீர்த்தத்தை அடைந்து அதில் ஸ்நானம்செய்தால் ஆயிரம் கோதானபலனை அடைகிறான். கௌரவர்களைத் தாங்குபவனே! தீர்த்தயாத்ரை செய்கின்ற மனிதன் சங்கினீ தீர்த்தத்தையடைந்து தேவீதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து உத்தமமான ரூபத்தைப்பெறுகிறான். ராஜேந்திரனே! பிறகு, துவாரரக்ஷகனான அருந்துகனை அடையவேண்டும். ஸரஸ்வதியில் மஹாத்மாவான யக்ஷராஜனுடைய அந்தத்தீர்த்தம் இருக்கிறது. அரசனே! மனிதன் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து அக்னிஷ்டோமபலனை அடைவான். ராஜேந்திரனே! மனிதர்களுள் சிறந்தவனானஒருவன் பிறகு ப்ரம்மாவர்த்தத்தை அடையவேண்டும். அந்தமனிதன் பிரம்மாவர்த்தத்

தில் ஸ்நானம்செய்து பிரம்மலோகத்தையடைவான். ராஜேந்திரனே! ஒருவன், பிறகு, ஸர்வோத்தமமான ஸுதீர்த்தத்தைக் குறித்துச் செல்லவேண்டும். அந்த இடத்தில் பித்ருக்கள் தேவதைகளுடன் நித்யம் ஸாந்நித்யம் செய்கிறார்கள். ஒருமனிதன் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யக்கடவன். அவன் பித்ருக்களையும் தேவர்களையும் [1] அர்ச்சிப்பதில் பற்றுள்ளவனாகி அஸ்வமேத பலனை அடைகிறான்; பித்ருலோகத்தையும் அடைகிறான். தர்மங்களையறிந்தவனே! அதனால் அம்புமதியிலுள்ள ஸுதீர்த்தம் எல்லாவற்றிலும் சிறந்ததாகும். பரதர்களுள் சிறந்தவனே! கோசேஸ்வரனுடைய தீர்த்தங்களில் ஸ்நானம்செய்பவன் எல்லா நோய்களினின்றும் விடுபட்டுப் பிரம்மலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். பாரத! அரசே! அந்த இடத்திலேயே மாத்ருதீர்த்தம் இருக்கிறது. அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தவனுக்கு ஸந்ததியானது விசேஷமாக விருத்தியடைகிறது. அவன் பெருஞ்செல்வத்தை அடைகிறான். மகாராஜனே! பிறகு, மனிதன் நியமமுள்ளவனும் ஆகாரநியமமுள்ளவனுமாகிப் பெரிதும் வேறிடத்தில் கிடையாததுமான அங்குள்ள சீதவனம்என்கிற தீர்த்தத்தை அடைய வேண்டும். நராதிபனே! அந்தத் தீர்த்தத்தைநோக்கிச் செல்வதனாலேயே மனிதன் தன் ஒருகுலத்தைப் பரிசுத்தம் செய்கிறான். பாரத! அந்தத் தீர்த்தத்தைத் தலைமயிர்களில் [2] தெளித்துக்கொண்டால் பரிசுத்தனாகிறான். மகாராஜனே! நரஸ்ரேஷ்டனே! பரதர்களுள் மிகச்சிறந்தவனே! கற்றறிந்தவர்களும் தீர்த்தத்தில் பற்றுதலுள்ளவர்களுமான பிராம்மணர்கள் எதில் ஸ்நானம்செய்து உயர்ந்தகதியை அடைகிறார்களோ அந்த [3] ஸ்வானலோமாபஹம் என்னும் தீர்த்தம் அங்கு (இருப்பதாகக்) கருதப்பட்டது. பரதஸ்ரேஷ்ட! பிராம்மணோத்தமர்கள் ஸ்வானலோமாபநயன தீர்த்தத்தில் ப்ராணாயாமங்களால் தம்தேகத்திலுள்ள ரோமங்

---

1 அர்ச்சித்து என்பது.

2 'அப்யுக்ஷ்ய' என்பது மூலம்; 'நீராடி' என்றும் கொள்ளலாம். தெளித்தல் மூன்றுவகைப்படும். 1 ப்ரோக்ஷணம்—நிமிர்த்தகையால் ஜலத்தைத் தெளித்தல்; 2 அப்யுக்ஷணம்—கையை வளைத்துப் பக்கத்தால் தெளித்தல்; 3 அவோக்ஷணம்—கையைக்கவிழ்த்துத் தெளித்தல் என்பன. 'க்ஷெளரம் செய்து கொண்டு' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

3 'ஸ்வாநலோமாப நயநம்' என்பதும் இதுவே; 'ஸ்வாவில்லோமாபஹம்' என்பது வேறுபாடம்.

களை உதிர்ந்துபோகும்படி செய்கின்றனர். ராஜேந்திரனே! ஆத்மா பரிசுத்தமாகி உத்தமகதியை அடைகின்றார்கள். பூமிக்கு அரசனே! அந்தத்தீர்த்தத்தில் தசாஸ்வமேதிகம் என்கிற தீர்த்தமும் இருக்கிறது. மனிதர்களுள் சிறந்தவனே! ஒருவன் அதில் நீராடினால் சிறந்தகதியை அடைவான். அரசர்களுள் சிறந்தவனே! அரசனே! பிறகு, எந்த இடத்தில் வேடனால் நாற்புறங்களிலும் துன்புறுத்தப்பட்ட கருமைநிறமுள்ள மான்கள் அங்குள்ள ஸரஸில் விழுந்து மனிதரூபத்தை அடைந்தனவோ அந்த இடத்தில் உலகங்களில் பிரஸித்திபெற்ற மானுஷமென்கிற தீர்த்தத்தை அடையவேண்டும். ஒருமனிதன் பிரம்மசர்யத்துடனும் மனஅடக்கத்துடனும்அந்தத்தீர்த்தத்தில்நீராடி,எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டு ஆத்மா சுத்தியடைந்தவனாகி, ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். பூமிக்கு நாதனே! மானுஷதீர்த்தத்துக்குக் கீழ்ப்புறத்தில் ஒருகுரோசதூரத்தில் புகழ்பெற்றதும் சித்தர்களால் அடையப்பட்டதுமான ஆபகை என்கிற நதி இருக்கிறது. அந்தஇடத்தில் எவன் தேவர்களையும் பித்ருக்களையும் உத்தேசித்துச் சாமைஅரிசியினால்செய்த போஜனத்தை (ப்ராம்மணர்களுக்குக்)கொடுக்கிறானோ அவனுக்குப் பெரிதான தர்மபலன் உண்டாகிறது. (அங்கே) ஒரு ப்ராம்மணன் போஜனம்செய்விக்கப்பட்டால் கோடிப்ராம்மணர்கள் போஜனம் செய்விக்கப்பட்டவர்களாகிறார்கள். ஒருவன் அந்த ஆபகாதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து பித்ருக்களையும் தேவதைகளையும் அர்ச்சித்து ஓர் இரவு அவ்விடத்தில் வாஸம்செய்தால் அக்நிஷ்டோமபலனைப் பெறுவான். ராஜேந்திரனே! பாரத! பிறகு, பூமியில் பிரம்மோதும்பரமென்னும் பெயராலேயே விளங்குகின்ற உத்தமமான பிரம்மாவினுடைய ஸ்தானத்தைக்குறித்துச் செல்லவேண்டும். நரஶ்ரேஷ்டனே! ராஜேந்திரனே! அந்த இடத்தில் ஒருவன் சுத்தனும் மிக்க மனஅடக்கமுள்ளவனுமாக ஸப்தரிஷி குண்டங்களிலும் கபிஞ்சலமஹர்ஷியினுடைய கேதாரத்திலும் ஸ்நானம் செய்து பிரம்மாவை வந்தனம்செய்தால் எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டுப் பரிசுத்தமான ஆத்மாவுடன் பிரம்மலோகத்தை அடைகிறான். ஒருவன் கிடைக்க மிகஅரிதான கபிஞ்சலருடைய கேதாரத்தை அடைந்து தவத்தினால் பாவங்களை எரித்து அந்தர்த்தானத்தை (=ஒருவர்கண்ணுக்கும் புலப்படாமை என்னும் சக்தியை) அடைகிறான். ராஜேந்திரனே! ஒருவன், பிறகு, உலகங்களில் புகழ்பெற்ற சங்கரதீர்த்தத்தைக்குறித்துச் செல்லவேண்டும்.

கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் விருஷபத்வஜரைத் தரிசித்தால் விரும்பின எல்லாவற்றையும் அடைவதுடன் ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். குருநந்தன! அரசே! சங்கரதீர்த்தத்திலும் ருத்ரகோடியிலும் அவ்வாறே கூபத்திலும் மடுக்களிலும் மூன்றுகோடி தீர்த்தங்கள் இருக்கின்றன. பரதஶ்ரேஷ்ட! அந்த இடத்திலேயே சுத்தாஸ்பதம் என்கிற தீர்த்தம் இருக்கிறது. அதில் ஸ்நானம் செய்தும் தேவதைகளையும் பித்ருக்களையும் அர்ச்சித்தும் மனிதன் நரகத்தை அடையான்; வாஜபேய யாகத்தின் பலனையும் அடைகிறான். அரசனே! பாரத! ஒரு மனிதன் கிந்தானத்திலும் கிஞ்சப்யத்திலும் ஸ்நானம்செய்து அளவிடமுடியாத தானபலனையும் மந்திரஜபத்தின் பலனையும் அடைகிறான். ஒரு மனிதன் ஶ்ரத்தையுள்ளவனாகவும் இந்திரியங்களை வசப்படுத்தினவனாகவும் கலசிதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அக்நிஷ்டோமயஜ்ஞ பலனைப் பெறுகிறான். குருகுலத்தவருள் உத்தமனே! சங்கரதீர்த்தத்திற்குக் கீழ்புறத்தில் மஹாத்மாவான நாரதருடைய அஜானந்தை என்கிற ப்ரஸித்தமானதீர்த்தம் இருக்கிறது. பரதவம்சத்தில் பிறந்தவனே! ஒரு மனிதன், அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால், பிராணனைவிட்ட பிறகு, நாரதரால் அனுமதி கொடுக்கப்பட்டவனாகி, மிகச் சிறந்த உலகங்களை அடைகிறான். சுக்லபக்ஷ தசமியில் புண்டரீக தீர்த்தத்தை அடையவேண்டும். அரசனே! ஒரு மனிதன் அதில் நீராடினால் பௌண்டரீக யாக பலனைப் பெறுவான். பிறகு, மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற த்ரிவிஷ்டபத்தைக்குறித்துச் செல்லவேண்டும். அந்த இடத்தில் பாவங்களைப் போக்குந் தன்மையுள்ள [1] வைதரணீ என்கிற புண்ணியநதி ஓடுகிறது. அதில் ஸ்நானம் செய்தும் சூலத்தைக் கையிலேந்திய வ்ருஷபத்வஜரை அர்ச்சித்தும், எல்லாப் பாவங்களும் விடுபட்டுப் பரிசுத்தனாகி உயர்ந்த கதியை அடைவான். ராஜஶ்ரேஷ்டனே! அவ்விடத்திலிருந்து உத்தமமான பலகீவனத்தைக் குறித்து யாத்திரை செய்யவேண்டும். வேந்தனே! தேவர்கள் அவ்விடத்தில் எப்பொழுதும் பலகீவனத்தை அடைந்து பல்லாயிர வர்ஷங்களாகப் பெருந்தவம் புரிகின்றார்கள். பாரத! மனிதன் த்ருஷத்வதியில் ஸ்நானம்செய்தும் தேவதைகளுக்குத் தர்ப்பணம் செய்தும் அக்நிஷ்டோமம் அதிராத்ரம் என்கிற யாகங்களின் பலனை அடைகிறான். பரதர்களுள் சிறந்தவனே!

---

1 இது வேறு.

ராஜேந்திரனே! ஒரு மனிதன் ஸர்வதேவர்களுடைய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தும் ஆயிரம் பசுக்களைத் தானம்செய்த பலனைப் பெறுகிறான். பாரத! ஒரு மனிதன் பாணிகாதத்தில் ஸ்நானம் செய்தும் தேவதைகளைத் திருப்தி செய்தும் அக்நிஷ்டோமம் அதிராத்ரம் என்கிற யாகங்களின் பலனைப் பெறுகிறான்; ராஜஸூய யாக பலனையும் பெறுகிறான்; ரிஷிலோகத்தையும் அடைகிறான். ராஜஶ்ரேஷ்டனே! அவ்விடத்தினின்று உத்தமமான மிஶ்ரகமென்கிற தீர்த்தத்தைக்குறித்துச் செல்லவேண்டும். ராஜேந்திரனே! அரசருள் புலிபோன்றவனே! அந்த இடத்தில் மஹாத்மாவான வ்யாஸரால் பிராம்மணர்களுக்காகத் தீர்த்தங்கள் ஒன்றோடொன்று மிஶ்ரம்செய்ய (=சேர்க்க)ப்பட்டனவென்று நாம் கேட்டிருக்கிறோம். எந்த மனிதன் மிஶ்ரகத்தில் ஸ்நானம் செய்கிறானோ அவன் எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவனாகிறான். ஒரு மனிதன் நியமமுள்ளவனாகவும் நியமமான ஆஹாரமுள்ளவனாகவும் அந்தத் தீர்த்தத்திலிருந்து வியாஸவனத்தை அடையவேண்டும்; மனோஜவத்தில் ஸ்நானம் செய்தால் ஆயிரம் பசுக்களைத் தானம்செய்த பலனை அடைவான். ஒரு மனிதன் சுத்தனாகத் தேவியின் ஸ்தானமான மதுவடியையும் அடைந்து அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தும் பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சித்தும், தேவியினால் நன்கு அனுக்ரஹிக்கப்பட்டவனாகி, ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலனைப் பெறுவான். பாரத! கௌசிகீ த்ருஷத்வதீ என்கிற இரண்டு மஹா நதிகளின் ஸங்கமத்திலும் ஆகார நியமமுள்ளவனாகி ஸ்நானம்செய்கிறவன் எல்லாப் பாவங்களாலும் விடப்படுகிறான். அதற்கப்புறத்தில், எந்த க்ஷேத்திரத்தில் புத்திர சோகத்தால் எரிக்கப்பட்ட புத்திமானான வ்யாஸர் தேகத்தை விடுவதில் நிச்சயம் செய்து, பிறகு, தேவர்களால் அப்பொழுது மீண்டும் தேகத்துடன் எழுப்பப்பட்டாரோ அந்த வியாஸஸ்தலி என்கிற க்ஷேத்ரம் இருக்கிறது. அந்த வியாஸருடைய ஸ்தலியை அடைந்து, ஆயிரம் பசுக்களைத் தானம்செய்தபயனைப் பெறுவான். குருவம்சத்தைத் தாங்குபவனே! ஒருவன் கிந்தத்தம் என்கிற கிணற்றை அடைந்து ஒரு [1] பிரஸ்தம் எள்ளைத் தானம் செய்து, கடன்களால் விடுபட்டவனாகி உத்தமமான ஸித்தியை அடை

[1] பன்னிரண்டு பிடி தானியம்கொண்டது ஒரு குடவம்; நான்கு குடவம் கொண்டது ஒருபிரஸ்தம்.

வான். ஒரு மனிதன் வேதீ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பயனைப் பெறுவான். மனிதரில் சிறந்தவனே! அஹஸ் ஸுதினம் என்கிற இரண்டு தீர்த்தங்களும் உலகங்களில் ப்ரஸித்திபெற்றவை. அவைகளில் ஸ்நானம் செய்தால் ஸூர்யலோகத்தை அடைவான். அரசர்களுள் சிறந்தவனே! அந்தத் தீர்த்தத்தினின்று மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற மிருகதூமத்தை அடையவேண்டும்; அங்கே, கங்கையில் ஸ்நானம் செய்யவேண்டும்; மஹாதேவரை அர்ச்சித்தால் அஶ்வமேத யாகத்தின் பலனை அடைவான். ஒருமனிதன் தேவீதீர்த்தத்தில் நீராடினால் ஆயிரம் கோதான பலனைப் பெறுவான். அந்தத் தீர்த்தத்தினின்று மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற வாமனதீர்த்தத்தை அடையவேண்டும். அந்த இடத்தில் விஷ்ணுபதத்தில் ஸ்நானம் செய்தும், வாமனரை அர்ச்சித்தும் எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டுத் தூயமனமுள்ளவனாகி விஷ்ணு லோகத்தை அடைகிறான். ஒரு மனிதன், பிறகு, குலம்புனத்தில் ஸ்நானம் செய்து தன் குலத்தைப் பரிசுத்தப்படுத்துகிறான். புருஷஶ்ரேஷ்டனே! பவனனுடைய மடுவில் ஸ்நானம் செய்து உத்தமமான மருத்துக்களுடைய தீர்த்தத்தை (அடைந்து) அதிலும் ஸ்நானம் செய்து விஷ்ணுலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். அமரர்களுடைய மடுவில் ஸ்நானம்செய்து அமராதிபனை இந்திரனை நன்கு அர்ச்சித்து அமரர்களுடைய ப்ரபாவத்தினால் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். சிறந்தமனிதருள் சிறந்தவனே! சாலிஹோத்ரருடைய சாலிசூர்ப்பம் என்கிற தீர்த்தத்திலும் விதிப்படி ஸ்நானம் செய்து ஆயிரம் கோதானபலனை அடைவான். பரதர்களுள் உத்தமனே! ஸ்ரீகுஞ்சமென்பது ஸரஸ்வதியினுடைய தீர்த்தம். புருஷஶ்ரேஷ்டனே! ஒருவன் அதில் ஸ்நானம்செய்தால் அக்நிஷ்டோமபலனைப் பெறுவான். கௌரவர்களைத் தாங்குபவனே! ராஜேந்திரனே! பிறகு, நைமிஷகுஞ்சத்தை அடையவேண்டும். ராஜஶ்ரேஷ்டனே! முற்காலத்தில் நைமிஷாரண்யவாஸிகளும் தபஸ்விகளுமான ரிஷிகள் தீர்த்தயாத்திரையை முன்னிட்டுக் கொண்டு குருக்ஷேத்திரத்தை அடைந்தார்களாம். ஒருமனிதன் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்வதால் அஶ்வமேதயாகத்தின் பலனை அடைவான். பரதஶ்ரேஷ்டனே! பிறகு, ரிஷிகளுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணக்கூடிய பெரிய வெளியிருக்கும்படி ஸரஸ்வதியினுடைய (கரையில்) குஞ்சம் (=கொடிப்பந்தல்) உண்டு

பண்ணப்பட்டது. ஒரு மனிதன் அந்தக்குஞ்சத்தில் ஸ்நானம் செய்தால் அக்நிஷ்டோமபலனை அடைவான். தர்மங்களை அறிந்தவனே! ஒருமனிதன் அவ்விடத்தினின்று ஸர்வோத்தமமான கன்யாதீர்த்தத்தை அடையவேண்டும்; கன்யாதீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால் ஆயிரம் கோதானபலனை அடைவான். ராஜேந்திரனே! அந்தத்தீர்த்தத்திலிருந்து உத்தமமான பிரம்ம தீர்த்தத்தை அடையவேண்டும். தாழ்ந்தவர்ணத்தானுன மனிதன் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து பிராம்மணத்தன்மையை அடைகிறுன். பிராம்மணனும் ஸ்நானம்செய்தால் ஆத்மா பரிசுத்தமாகி உத்தமகதியை அடைவான். மனிதருட் சிறந்தவனே! அந்தத் தீர்த்தத்தினின்று சிறப்புற்ற ஸோமதீர்த்தத்தை அடையவேண்டும். அரசனே! ஒருமனிதன் அதில் ஸ்நானம்செய்தால் ஸோமலோகத்தை அடைவான். வேந்தே! ஒருவன், பிறகு, எந்தத்தீர்த்தத்தில் உலகத்தில் பிரஸித்திபெற்ற மங்கணகர் என்கிற மஹரிஷியானவர் ஸித்தியடைந்தாரோ அந்த ஸப்தஸாரஸ்வத தீர்த்தத்தை அடையவேண்டும். அரசனே! 'முற்காலத்தில் மங்கணகர் என்கிற ரிஷி தம்முடையகையில் தர்ப்பத்தின்நுனியினுல் அறுக்கப்பட்டார். அதினின்று [1] சாகரஸம் பெருகியது. அந்த மங்கணகர் சாகரஸத்தைக்கண்டு களிகொண்டு கூத்தாடினுர். வீரனே! பிறகு, அவர் கூத்தாடினபோது ஸ்தாவரமும் ஜங்கமுமான இருவகைப்பொருள்களும் அந்தரிஷியினுடைய தேஜஸினுல் மயக்கப்பட்டுக் கூத்தாடின. அரசனே! நராதிபனே! பிரம்மவாதிகளும் தேவர்களும் தபோதனர்களான மகரிஷிகளும் மஹாதேவரை, 'தேவரே! இந்தரிஷி கூத்தாடாமலிருக்கும்படி தேவரீர் செய்யக்கடவீர்' என்று ரிஷியின்நிமித்தம் விண்ணப்பம்செய்தனர். மகாதேவர் தேவர்களுடையநன்மைக்காக, களிப்பினுல் கவரப்பட்ட மனத்துடன் அதிகமாக நர்த்தனம்செய்கின்ற அந்தரிஷியை அடைந்து, 'ஓ! ஓ! மஹரிஷியே! தர்மங்களை அறிந்தவனே! எதற்காக நீ நர்த்தனம்செய்கிறுய்? முனிஶ்ரேஷ்ட! உனக்கு இப்பொழுது ஸந்தோஷத்திற்குக் காரணம் யாது? எதற்காக நர்த்தனம் செய்கிறுய்?' என்று வினவினுர். ரிஷியானவர், 'பிராம்மணஶ்ரேஷ்டரே! பிராம்மணரே! தர்மமார்க்கத்தில் நிலைபெற்றிருக்கிற தப்ஸ்வியான என்னுடைய கையிலிருந்து சாகரஸம் பெருகுவதை நீர் பார்க்கவில்லையா? அந்தச் சாகரஸத்தை நான் பார்த்து அதிக

1 கீரை அல்லது காய்கறிகளின் சாறு.

ஸந்தோஷத்தோடு 1 மிகக் கூத்தாடுகிறேன்' என்று விடை அளித்தார். மஹாதேவர், ரஜோகுணத்தால் மதிமயக்கமுற்ற அந்த ரிஷியைப்பார்த்து நகைத்து, 'பிராம்மணு! நான் ஆச்சர்யத்தை அடையவில்லை. என்னைப் பார்' என்ருர். நரஸ்ரேஷ்டனே! ராஜேந்திரனே! தோஷமற்றவனே! இவ்வாறு கூறி விட்டுச் சிறந்தபுத்தியுள்ள மஹாதேவர் விரல்நுனியினுல் தமது கட்டைவிரலைத் தட்டினுர். அரசனே! அந்தக்காயத்திலிருந்து பனிக்கொப்பான பஸ்மம் வெளிவந்தது. அரசனே! அந்தரிஷியானவர் அதைப்பார்த்து வெட்கி அவருடைய இருகால்களிலும் தண்டனிட்டுத் தேவரான ருத்ரரைக்காட்டிலும் வேறொன்றைப் பெரிதும் மிகச்சிறந்ததுமாக எண்ணவில்லை. அவர், 'சூலாயுதத்தைத் தரிப்பவரே! தேவரீர் தேவாஸுரர்களுடன்கூடின உலகத்துக்குக் கதியாக இருக்கிறீர். ஜங்கமங்களுடனும் ஸ்தாவரங்களுடனும்கூடின இந்த மூவுலகம் முழுமையும் உம்மால் படைக்கப்பட்டது. யுகமுடிவில் மறுபடியும் தேவரீரே எல்லாவற்றையும் பக்ஷிக்கிறீர். தேவர்களாலேகூட உம்மை அறியமுடியாது; என்னுல் எப்படி அறியமுடியும்? தோஷமற்றவரே! தேவரீரிடத்தில் பிரம்மாமுதலிய எல்லாத் தேவர்களும் காணப்படுகிருர்கள். நீர் எல்லாமாகவுமிருக்கிறீர். உலகங்களைப் படைப்பவரும் படைக்கும்படி செய்பவரும் நீரே; உம்முடைய அனுக்ரஹத்தினுல் எல்லாத்தேவர்களும் ஓரிடத்தினின்றும் பயமில்லாதவர்களாக வஸிக்கிருர்கள்' என்ருர். இவ்வண்ணம் மஹாதேவரைத்துதித்து, ரிஷியானவர், 'மஹாதேவரே! உம்முடைய அனுக்கிரகத்தினுல் என் தவமானது குறையாமல் இருக்கவேண்டும்' என்கிற வசனத்தை உரைத்தார். பிறகு, மஹாதேவர், மனம் மிகமகிழ்ந்து, பிரம்மரிஷியைப் பார்த்து, 'பிராம்மணு! என்னுடைய அனுக்ரஹத்தினுல் உன்னுடைய தவம் ஆயிரமடங்காக வளரட்டும். மஹாமுனியே! உன்னுடன்கூடவே இந்த ஆஶ்ரமத்தில் வஸிப்பேன். எவர்கள் ஸப்தஸாரஸ்வதத்தில் ஸ்நானம்செய்து என்னை அர்ச்சிப்பார்களோ அவர்களுக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் கிடைக்கஅரியது ஒன்றுமில்லை. அவர்கள் ஸாரஸ்வதலோகத்தையும் அடைவார்களென்பதில் ஸம்சயமில்லை' என்று சொன்னுர். இவ்வண்ணங்கூறி, மஹாதேவர் அவ்விடத்திலேயே மறைந்தார்' என்று நாம் கேட்டிருக்கிறோம். பாரத! பிறகு, எதில் ப்ரம்மாமுதலிய தேவர்களும் தவத்தையே

1 வேறு பாடம்.

பொருளாகக்கொண்ட ரிஷிகளும் மகிமைபொருந்திய ஸௌப்ரம் மண்யரும் ப்ருகுபுத்திரனான சுக்கிரனுக்கு ப்ரியத்தைச்செய்யும் விருப்பத்தால் தினந்தோறும் மூன்று ஸந்த்யாகாலங்களிலும் ஸாந்நித்யம் செய்கிறார்களோ அந்த மூவுலகங்களிலும் பிர ஸித்திபெற்ற ஔசனஸதீர்த்தத்தை அடையவேண்டும். கபால மோசனமென்கிற தீர்த்தம் எல்லாப் பாவங்களினின்றும் விடு விப்பது. புருஷஶ்ரேஷ்டனே! ஒருவன் அந்தத் தீர்த்தத் தில் ஸ்நானம்செய்தால் எல்லாப் பாவங்களாலும் விடப் படுகிறான். நரஶ்ரேஷ்டனே! ஒருவன் அந்தத்தீர்த்தத்திலிருந்து அக்னிதீர்த்தத்தைக்குறித்துச் செல்லவேண்டும். அதில் ஸ்நானம் செய்தால் அக்னிலோகத்தை அடைவதுடன் குலத்தையும் நன்கு கரையேற்றுவான். பரதருள் சிறந்தவனே! அந்த இடத்திலேயே விஶ்வாமித்ர தீர்த்தம் இருக்கிறது. நரஶ்ரேஷ்டனே! அதில் ஸ்நானம்செய்து ப்ராம்மண்யத்தை அடைகிறான். நரஶ்ரேஷ் டனே! ஒருவன் சுத்தனும் மனஅடக்கமுள்ளவனுமாகி ப்ரம்ம யோனி என்னும் தீர்த்தத்தை அடைந்து அதில் ஸ்நானம் செய்து பிரம்மலோகத்தை அடைகிறான்; ஏழு தலைமுறை வரை யில் குலத்தைச் சுத்தம் செய்கிறான். இந்த விஷயத்தில் ஸம்சய மில்லை. ராஜேந்திரனே! அரசனே! பிறகு, ஒருவன் மூவுலகங்களி லும் ப்ரஸித்திபெற்ற ப்ருதூதகமென்கிற ஸௌப்ரம்மண்யருடைய தீர்த்தத்தை அடையவேண்டும். பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பதில் பற்றுதலுள்ளவனாகி அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். பரதவம்சத்திலுதித்தவனே! மனிதர்க்குரிய (அல்ப) புத்தியுள்ள ஸ்த்ரீயினாலோ புருஷனாலோ, தெரிந்தோ தெரியாமலோ, செய்யப்பட்ட பாவமனைத்தும் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தஅளவில் நாசமடைகின்றன. அவனுக்கு அஶ்வ மேதயாக பலன் உண்டாகிறது. அவன் ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். குருக்ஷேத்திரத்தைப் புண்யமானதென்று சொல்லு கிறார்கள். குருக்ஷேத்திரத்தைக் காட்டிலும் ஸரஸ்வதீநதி புண்யமானது. ஸரஸ்வதியைக் காட்டிலும் [1] தீர்த்தங்கள் புண்ய மானவை. (எல்லாத்) தீர்த்தங்களைக் காட்டிலும் ப்ருதூதகம் புண்யமானது. எல்லாத்தீர்த்தங்களுள்ளும் உத்தமமான ப்ருதூத கத்தில் எவன் மந்திரஜபத்தில் பற்றுள்ளவனாகத் தன் சரீரத்தை

[1] 'மற்ற எல்லாத்தீர்த்தங்களும் சேர்ந்து' என்பது இங்கிலிஷ் மொழி பெயர்ப்பு.

விடுவனே அவனை மறுபடியும் மரணமானது வருத்தாது. அரசனே! ஸநத்குமாரராலும் மஹாத்மாவான வ்யாஸராலும் புகழப்பட்டதும் வேதத்திலும் புகழப்பட்டதுமான ப்ருதூதகத்தைக் குறித்துத் தவருமல் யாத்ரை செய்யவேண்டும். கௌரவர்களுள் சிறந்தவனே! வேறு ஒரு தீர்த்தமும் ப்ருதூதகத்தைவிடச் சிறந்த தீர்த்தம் அன்று. அது பரிசுத்தமானது. அது பாவத்தைப் போக்குவது; புண்ணியமானது. ஸந்தேகமில்லை. நரஸ்ரேஷ்டனே! பாவஞ்செய்த மனிதர்களும்கூட அந்த ப்ருதூதகத்தில் ஸ்நானம் செய்து ஸ்வர்க்கத்தை அடைகிருர்களென்று இவ்வாறு அறிஞர்கள் கூறுகின்றனர். பரதர்களுள் சிறந்தவனே! அவ்விடத்திலேயே மதுஸ்ரவமென்கிற தீர்த்தம் இருக்கிறது. வேந்தனே! ஒரு மனிதன் அதில் நீராடினுல் ஆயிரம் கோதானத்தின் பலனை அடைவான். ராஜஸ்ரேஷ்டனே! அந்தத் தீர்த்தத்தினின்று க்ரமம் தவருமல் தேவீ தீர்த்தத்தை அடையவேண்டும். ஒரு மனிதன் உலகத்தில் ப்ரவிஸித்திபெற்ற ஸரஸ்வதீ அருணை என்னும் நதிகளின் ஸங்கமத்தில் மூன்று நாள் உபவாஸமிருந்து ஸ்நானம் செய்தால் பிரம்மஹத்தி தோஷத்தால் விடப்படுகிருன். ஒரு மனிதன் அக்னிஷ்டோம யாகத்தாலும் அதிராத்ரயாகத்தாலுமுண்டாகிற பயனை அடைவான். பரதஸ்ரேஷ்டனே! ஏழாவது தலைமுறைவரையில் குலத்தையும் பரிசுத்தமாகச் செய்கிருன். குருவம்சத்தைத் தாங்குபவனே! அந்த இடத்திலேயே அவதீர்ணமென்கிற தீர்த்தம் இருக்கிறது. அது முற்காலத்தில் பிராம்மணர்களிடமுள்ள கருணையினுல் சார்ங்கியினுல் உண்டுபண்ணப்பட்டது. ஒரு ப்ராம்மணன் (அந்தத்தீர்த்தத்தில் நீராடி) விரதத்தையும் உபநயனத்தையும் செய்வதனுல், அல்லது, உபவாஸமிருப்பதனுல், க்ரியைகளுடனும் மந்திரங்களுடனும் கூடினவனுவான். ஸந்தேகமில்லை. நரஸ்ரேஷ்டனே! க்ரியைகளாலும் மந்திரங்களாலும் விடுபட்டவனும் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால் விரதானுஷ்டானம் செய்தவனும் எல்லாவற்றையும் அறிந்தவனுமாவான். இந்த விஷயம் முன்னேர்களால் காணப்பட்டிருக்கிறது. தர்ப்பியினுல் நான்கு ஸமுத்திரங்களும் வரவழைக்கப்பட்டன. நரஸ்ரேஷ்டனே! அவைகளில் ஸ்நானம்செய்பவன் நரகத்தை அடையமாட்டான். அவன் நாலாயிரம் பசுக்களைத் தானம்செய்த பயனையும் அடைவான். தர்மங்களை அறிந்தவனே! பிறகு, அந்த இடத்திலேயே இருப்பவையும் உலகங்களில் ப்ரவிஸித்திபெற்றவையுமான சதஸஹஸ்ரகம்,

ஸாஹஸ்ரகம் என்கிற இரண்டு தீர்த்தங்களையும் அடையவேண்டும். இந்த இரண்டு தீர்த்தங்களிலும் ஒருமனிதன் ஸ்நானம் செய்தால், ஆயிரம் பசுக்களைத் தானம்செய்த பயனைப் பெறுவான். தானமோ உபவாஸமோ ஆயிரம்மடங்கு செய்யப்பட்டதாகும். ராஜேந்திரனே! ஒருவன், பிறகு, உத்தமமான ரேணுகா தீர்த்தத்தை அடையவேண்டும். பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பதில் பற்றுதலுள்ளவனாக அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். அவன் எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டு ஆத்மாபரிசுத்தமாகி அக்நிஷ்டோம பலனைப் பெறுவான். அவன் கோபத்தையும் இந்திரியங்களையும் அடக்கி விமோசனத்தில் ஸ்நானம் செய்தால் தானம் வாங்குவதாலுண்டான எல்லாத் தோஷங்களாலும் விடப்படுகிறான். பிரம்மசர்யமுள்ளவனும் ஜிதேந்திரியனுமாயிருக்கிறவன், அதற்குப் பிறகு, எந்த இடத்தில் யோகேஶ்வரரும் விருஷபத்வஜருமான ஸ்தாணுவானவர் தாமே ஸாந்நித்யம் செய்கிறாரோ அந்தப் பஞ்சவடியை அடைந்து அதிகமான புண்யத்துடன் சேர்ந்தவனாகி ஸாதுக்களுடைய உலகத்தில் பூஜிக்கப்படுகிறான். தேவர்களுக்குத் தலைவரான அவரை[1] அர்ச்சிப்பதற்காக அந்த இடத்துக்குச்செல்வதனாலேயே ஸித்தி அடைகிறான். எந்த இடத்தில் ப்ரம்மா முதலான தேவர்களாலும் தவத்தைத் தனமாகக் கொண்ட ரிஷிகளாலும் அக்காலத்தில் தேவர்களின் சேனைக்குத் தலைவராக இருக்கும் பதத்தில் ஸுப்ரம்மண்யர் அபிஷேகம் செய்யப்பட்டாரோ, தன் ஒளியினால் ப்ரகாசிக்கின்ற வருணனைச் சார்ந்த தைஜஸம் என்கிற அந்தத் தீர்த்தம் இருக்கிறது. கௌரவர்களுள் சிறந்தவனே! தைஜஸத்திற்குக் கீழ்த்திசையில் குருதீர்த்தம் இருக்கிறது. ஒருமனிதன் ப்ரம்மசர்யமுள்ளவனும் ஜிதேந்திரியனுமாகிக் குருதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டு ஆத்மா பரிசுத்தமாகி ப்ரம்மலோகத்தை அடைகிறான். ஒருமனிதன், பிறகு, நியமமுள்ளவனும் நியமமான ஆகாரமுள்ளவனுமாகி ஸ்வர்க்கத்வாரத்தை அடையவேண்டும். அதனை அடைகிறவன் ஸ்வர்க்கலோகத்தை அடைவதுடன் ப்ரம்மலோகத்தையும் அடைகிறான். நராதிபனே! தீர்த்தயாத்ரைசெய்பவன் அவ்விடத்தினின்று அநரகமென்கிற தீர்த்தத்தை நோக்கி யாத்திரை செய்யவேண்டும். அரசனே! ஒருமனிதன் அதில் நீராடினால் நரகத்தை அடையமாட்டான். பூமிக்குநாதனே! புருஷஶ்ரேஷ்டனே!

[1] 'அர்ச்சிதும்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

அந்தத்தீர்த்தத்தில் ப்ரம்மதேவர் ஸ்ரீமந்நாராயணரை முதன்மையாகக்கொண்ட தேவர்களுடன் தாமே எப்பொழுதும் ஸாந்நித்யம் செய்கிறார். குருவம்சத்தைத் தாங்குபவனே! ராஜேந்திரனே! அந்தத்தீர்த்தத்தில் ருத்ரபத்னியின் ஸாந்நித்யம் இருக்கிறது. ஒருமனிதன் அந்தத் தேவியை வணங்கினால் நரகத்தை அடையமாட்டான். மகாராஜனே! அந்த இடத்திலேயே விஶ்வேஶ்வரரும் உமாபதியுமான மஹாதேவரை வணங்கி எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிறான். பகைவரை அடக்குகிறவனே! மஹாராஜனே! தாமரைமலர்போன்ற நாபியுள்ள நாராயணரையும் வணங்கி விளங்குபவனாகி விஷ்ணுலோகத்தையும் அடைகிறான். புருஷஶ்ரேஷ்டனே! அவன் ஸர்வதேவர்களுடைய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால், எல்லாத் துக்கங்களாலும் விடுபட்டுச் சந்திரன் போல விளங்குகிறான். நராதிபனே! தீர்த்தயாத்ரை செய்பவன், பிறகு, ஸ்வஸ்திபுரத்தைக் குறித்து யாத்ரை செய்யவேண்டும். ஒருவன் அதை வலமாகச்சுற்றிவந்தால் ஆயிரம் கோதானபலனை அடைவான். பாரத! ஒருவன் பாவனமென்கிற தீர்த்தத்தை அடைந்து பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் செய்யக்கடவன். (அவன்) அக்நிஷ்டோம யாகத்தினுடைய பலனை அடைகிறான். பரதர்களுள் சிறந்தவனே! அந்தஇடத்திலேயே கங்காஹ்ரதமும் கூபமும் இருக்கின்றன. பூமிக்கு நாதனே! அந்தக் கூபத்தில் மூன்றுகோடி தீர்த்தங்கள் இருக்கின்றன. அரசனே! ஒருமனிதன் அதில் நீராடினால் ஸ்வர்க்கலோகத்தை அடைகிறான். ஒருமனிதன் ஆபகையில் நீராடி மஹேஶ்வரரை அர்ச்சித்துக் கணங்களுக்குத் தலைவனாக இருக்கும் பதத்தையும் பெறுவதுடன் குலத்தையும் கரையேற்றுவான். பிறகு, மூவுலகங்களிலும் புகழ்பெற்ற ஸ்தாணுவடத்தைக்குறித்துச் செல்லவேண்டும். அதில் நீராடி ஓர் இரவு அங்கு இருந்தால் ருத்ரலோகத்தை அடைவான். ஒருமனிதன் பதரீகானனத்தைக்குறித்துச் செல்லவேண்டும். அந்த இடத்தில் வஸிஷ்டாஶ்ரமத்தை அடைந்து மூன்றுநாள் உபவாஸமிருந்து இலந்தைப்பழத்தைப் புசிக்கவேண்டும். மனிதர்களுக்கு அதிபதியே! (வேறிடத்தில்) பன்னிரண்டு வர்ஷகாலம் இலந்தைப்பழத்தை சாப்பிட்டுக்கொண்டிருப்பவனோடு, இங்கே மூன்றுநாள் உபவாஸமிருப்பவன் ஒப்பாகிறான். அரசே! தீர்த்தயாத்ரை செய்பவன் இந்திரமார்க்கத்தை அடைந்து ஓர் இரவும் பகலும் உபவாஸமிருப்பதனால் இந்திரலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். ஒருமனிதன்

நியமமுள்ளவனும் ஸத்யவாதியுமாகி ஏகராத்ர தீர்த்தத்தை அடைந்து ஒருநாள் வஸித்தால் பிரம்மலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். ராஜச்ரேஷ்டனே! பிறகு, எங்கே ஒளித்திரளாயிருப்பவனும் மஹாத்மாவுமான ஆதித்யனுடைய ஆச்ரமம் இருக்கிறதோ அந்த மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற தீர்த்தத்தை அடையவேண்டும். ஒருமனிதன் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸூர்யனைப் பூஜித்தால் ஆதித்யலோகத்தை அடைவதுடன் குலத்தையும் கரையேற்றுவான். ஜனநாதனே! தீர்த்த யாத்ரையில் பற்றுள்ள மனிதன் ஸோமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸோமலோகத்தை அடைகிறான். இதில் ஸம்சயமில்லை; தர்மங்களை அறிந்தவனே! அரசனே! பிறகு, எந்தத்தீர்த்தத்தில் தவத்துக்கு நிதியாக இருப்பவரும் ஸரஸ்வதீ நதியின் புத்ரருமான அந்த அங்கிரஸ்[1] பிறந்தாரோ மிக்க புண்யமானதும் பரிசுத்தமானதும் உலகத்தில் புகழ்பெற்றதுமான மகாத்மாவான ததீசருடைய அந்தத் தீர்த்தத்தைக் குறித்துச் செல்லவேண்டும். அந்தத்தீர்த்தத்தில் ஒரு மனிதன் ஸ்நானம் செய்தால் அச்வமேதத்தின்பலனை அடைவான்; ஸரஸ்வதியின் உலகத்தையும் அடைகிறான். இதில் ஸம்சயமில்லை. ஒருவன், பிறகு, நியமமுள்ளவனும் பிரம்மசர்யமுள்ளவனுமாகிக் கன்யாச்ரமத்தைக் குறித்துச் செல்லவேண்டும். அரசனே! நியமமுள்ளவனும் நியமமான ஆகாரமுள்ளவனுமாகி அங்கு மூன்றுநாள் உபவாஸமிருப்பவன் தேவகன்னியர் நூற்றுவரை அடைவதுடன் ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். தர்மங்களை அறிந்தவனே! ஒருவன் அந்தத்தீர்த்தத்தினின்று[2] ஸந்நிஹதி என்கிற தீர்த்தத்தைக்குறித்தும் செல்லவேண்டும். அந்தத்தீர்த்தத்தில் பிரம்மாதி தேவர்களும் தவத்தையே பொருளாகவுடைய ரிஷிகளும் அதிக புண்யத்துடன் கூடினவர்களாகி மாதந்தோறும் வருகிறார்கள். எந்தமனிதன் ஸூர்யன் ராகுவினால் பற்றப்படும்போது ஸந்நிஹதியில் ஸ்நானம்செய்கிறானோ அவனால் அந்த இடத்தில் நூறு அச்வமேதங்கள் அடிக்கடி செய்யப்பட்டவையாகும். நராதிபனே! நரச்ரேஷ்டனே! பூமியிலுள்ள எல்லாத்தீர்த்தங்களும்ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றதீர்த்தங்களும் நதிகளும் மடுக்களும்தடாகங்

---

1 வேறு பாடம்.

2 'ஸந்நிஹத்யா' என்றும் வழங்குகிறது. 'குருக்ஷேத்திரத்துக்கே ஸந்நிஹதி என்றும் பெயர்' என்பது பழைய வுரை.

களும் எல்லா மலைஅருவிகளும் கிணறுகளும் வாவிகளும் தீர்த்தங்களும்ஆயதனங்களும் மாதந்தோறும் அமாவாஸ்யையில்ஸந்நிஹதியில் நிச்சயமாக வந்துசேருகின்றன. ஸந்தேகமில்லை. தீர்த்தங்கள் வந்து சேர்ந்து ஸாந்நித்யம் செய்வதனாலேயே அந்தத்தீர்த்தமானது ஸந்நிஹத்யா என்று ப்ரஸித்திபெற்றிருக்கிறது. ஒரு மனிதன் அதில் ஸ்நானம்செய்தும் தீர்த்தத்தைப் பானம் செய்தும் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். அந்தஸந்நிஹதியிலேயே அமாவாஸ்யையில் ஸூர்யன் ராகுவினால் பற்றப்படும்போது எந்த மனிதன் ஸ்ராத்தம்செய்கிறானோ அவனுடைய புண்ய பலனைக் கேட்பாயாக. ஒருமனிதன் ஸ்நானம் செய்து ஸ்ராத்தத்தைச் செய்தமாத்திரத்திலேயே நன்குசெய்யப்பட்ட ஆயிரம் அஸ்வமேதயாகங்களின் பலனை அடைகிறான். ஸ்த்ரீயினாலோ புருஷனாலோ செய்யப்பட்ட பாவமனைத்தும் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்த மாத்திரத்தினாலே நாசமடைகின்றன. இதில் ஸந்தேகமில்லை. தாமரைமலரின் நிறமுள்ள விமானத்தினால் பிரம்மலோகத்தை அடைகிறான். ஒருவன், பிறகு, கோடிதீர்த்தத்தை அடைந்து அதில்ஸ்நானம்செய்து த்வாரபாலனான மசக்ருகனென்கிற யக்ஷனை வணங்கினால் பல பொன்னாணயங்களைத் தானஞ் செய்த பலனை அடைவான். பரதஸ்ரேஷ்டனே! அந்த இடத்திலேயே கங்காஹ்ரதமென்கிற தீர்த்தம் இருக்கிறது. தர்மங்களை அறிந்தவனே! ஒரு மனிதன் பிரம்மசர்யத்துடன் மனத்தை ஒரு வழிப்படுத்தி அதில் ஸ்நானம் செய்வதனால் ராஜஸூய யாகத்தாலும் அஸ்வமேதயாகத்தாலுமுண்டாகிற பலனை அடைகிறான். பூமியில் நைமிசாரண்யத்திலுள்ள தீர்த்தம் மிக்க புண்யமானது. அந்தரிக்ஷத்தில் புஷ்கரதீர்த்தம் மிகவும் பாவனமானது. மூவுலகங்களுள்ளும் குருக்ஷேத்ரம் மிகச் சிறந்தது. குருக்ஷேத்ரத்தினின்று காற்றினால் தூற்றப்பட்ட புழுதிகளும் மேலே பட்ட அளவில், பாவிகளையும் உத்தமகதியை அடையச்செய்கின்றன. ஸரஸ்வதிக்குத் தென்புறத்திலும் த்ருஷத்வதீநதிக்கு வடபுறத்திலுமுள்ள குருக்ஷேத்ரத்தில் எவர்கள் வஸிக்கிறார்களோ அவர்கள் ஸ்வர்க்கத்தில் வஸிக்கிறார்கள். ஒருமனிதன், 'குருக்ஷேத்திரத்திற்குப் போவேன்; குருக்ஷேத்திரத்தில் நான் வஸிப்பேன்' என்கிற ஒரு வார்த்தையை வெளிப்படுத்தினாலும் எல்லாப் பாவங்களாலும் விடப்படுகிறான். ப்ரம்மரிஷிகளால் அடையப்பட்டிருக்கிறதும் புண்யமுமான குருக்ஷேத்திரமானது ப்ரம்மதேவருடைய யாகவேதி

அந்த இடத்தில் எவர்கள் வாஸம் செய்கிறார்களோ அவர்கள் எவ்விதத்தாலும் துக்கிக்கப்படத்தக்கவர்களல்லர். தரந்துகத்திற்கும் அருந்துகத்திற்கும் ராமஹ்ரதங்களுக்கும் மசக்ருகத்திற்கும் மத்தியிலிருக்கிற இடமாகிய அப்படிப்பட்ட இந்தக் குருக்ஷேத்திர ஸமந்தபஞ்சகமானது, ப்ரம்மதேவருடைய உத்தரவேதியென்று சொல்லப்படுகிறது.

எண்பத்திரண்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(புலஸ்தியர் பீஷ்மருக்குப் பற்பல தீர்த்தங்களின் மகிமையை எடுத்து உரைத்தது.)

மகாராஜனே! பிறகு, ஸர்வோத்தமமான தர்ம தீர்த்தத்தைக் குறித்து யாத்ரை செய்யவேண்டும். அந்த இடத்தில் மகாபாக்யவானான தர்மதேவன் நிகரற்ற தவத்தைச்செய்து ஸித்திபெற்றான். அந்தத் தர்மதேவனால் தன் பெயரால் ப்ரஸித்திபெற்ற புண்யமான தீர்த்தம் உண்டுபண்ணப்பட்டது. ராஜனே! ஒரு மனிதன், தர்மசீலனும் மனஅடக்கமுள்ளவனுமாகி அதில் ஸ்நானம் செய்தால் ஏழாவது தலைமுறைவரையில் குலத்தைப் பரிசுத்தமாக்குகிறான். இதில் ஐயமில்லை. ராஜேந்திரனே! பிறகு, உத்தமமான ஞானபாவனத்தை அடையவேண்டும்; அதனை அடைந்தவன் அக்நிஷ்டோமபலனை அடைகிறான்; முனிலோகத்தையும் அடைகிறான். அரசனே! ஒருவன் அந்தத் தீர்த்தத்திலிருந்து ஸௌகந்திகவனத்தை அடையவேண்டும். அந்த வனத்தில் ப்ரம்மா முதலிய தேவர்களும் தவத்தைத் தனமாகக்கொண்ட ரிஷிகளும் ஸித்தர்களும் சாரணர்களும் கந்தர்வர்களும் கின்னரர்களும் மஹோரகர்களும் வஸிக்கின்றார்கள். (ஒருவன்) அந்த வனத்தில் ப்ரவேசிக்கும்பொழுதே, எல்லாப் பாவங்களிலிருந்தும் விடப்படுகிறான். அந்த வனத்தினின்று நதிகளுள் சிறந்ததும் புண்யமானதும் தேவியுமான ஸரஸ்வதி நதியானது தேவியான ப்லக்ஷை என்று கருதப்பட்டது. புற்றிலிருந்து பெருகிவருகிற அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சித்து அஸ்வமேதயாகபலனைப் பெறுவான். புற்றி

விருந்து [1] சம்யையைச் சுழற்றி எறிந்தால் எவ்வளவுதூரம் போய் விழுமோ அதைவிட ஆறுமடங்கு தூரத்தில் கிடைக்க மிக அரிதான கவேராத்யுஷிதமென்கிற தீர்த்தம் இருக்கிறது. நரஸ்ரேஷ்டனே! அதில் ஸ்நானம் செய்து ஆயிரம் கபிலைப்பசுக்களின் தானபலனை அடைவதுடன் அஸ்வமேதயாகபலனையும் அடைகிறான். இது [2] பழைய நூல்களில் காணப்பட்டது. பாரத! புருஷஸ்ரேஷ்டனே! ஒரு மனிதன் ஸுகந்தையையும் சதகும்பையையும் பஞ்சயக்ஷையையும் அடைந்தால் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். பாரத! அந்த இடத்திலேயே இருக்கிற த்ரிசூலகாதத்தை அடைந்து பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பதில் ஆதரவுள்ளவனாக அதில் ஸ்நானம் செய்யவேண்டும். அவன் தேகத்தை விட்டுக் கணங்களுக்குப் பதியாக இருக்கும் பதத்தைப்பெறுகிறான். இதில் ஸம்சயமில்லை. ராஜேந்திரனே! பிறகு, கிடைக்கமிகஅரிதான தேவியின் ஸ்தானத்தைக்குறித்துச் செல்ல வேண்டும். அந்தத் தேவியானவள் சாகம்பரி என்று பெயர்பெற்றவள்; மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்றவள். நராதிபனே! நல்லவிரதத்தையுடையவளான அந்தத்தேவியானவள் தேவவருஷத்தில் ஆயிரம்வருஷகாலம் மாதமொருமுறை சாகத்தால் ஆகாரம்செய்துகொண்டு வந்தாள். தேவியினுடைய பக்தியினால் தபோதனர்களான ரிஷிகள் அந்தஇடத்தில் வந்தார்கள். பாரத! அவர்களுக்குத் தேவியினால் சாகத்தாலேயே விருந்துசெய்யப்பட்டது. அதனால், சாகம்பரீ என்றே அவளுக்குப் பெயர் நிலைத்தது. பாரத! ஒருமனிதன் பிரம்மசர்யமுள்ளவனும் மனத்தை அடக்கினவனும் சுத்தனுமாகிச் சாகம்பரியை அடைந்து மூன்றுநாள் வஸித்துச் சாகத்தைப் புஜித்தால் பன்னிரண்டுவர்ஷகாலம் சாகத்தையே ஆகாரம்செய்தவனுக்குள்ள புண்யபலன் அவனுக்குத் தேவியின் இச்சையால் உண்டாகிறது. அவ்விடத்தினின்று மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற ஸுவர்ணமென்கிற தீர்த்தத்தை நோக்கிச் செல்லவேண்டும். அந்தஇடத்தில் முற்காலத்தில் விஷ்ணுவானவர் ப்ரஸாதத்திற்காக ருத்ரரை ஆராதித்தார்; தேவதைகளாலும்

---

1 துரோண் பர்வம் 211-வது, சாந்தி பர்வம 93-வது, 818-வது பக்கங்களில் குறிப்பிற் காண்க.

2 'புராதநே' என்பது மூலம், 'பவிஷ்யபுராண முதலியவற்றில்' என்பது பழையவுரை.

அடையமுடியாத அனேக வரன்களை அடைந்தார். பாரத! ஸந்தோஷமடைந்த த்ரிபுராரியானவர், விஷ்ணுவைநோக்கி, 'க்ருஷ்ண! நீர் உலகத்தில் (எல்லாப்ராணிகளுக்கும்) மிக்கஅன்புக்குரியவராவீர். உலகமனைத்தும் உம்மைத் தலைவராகக்கொண்டதாகும். ஸந்தேகமில்லை' என்று சொல்லினர். ராஜேந்திரனே! ஒருவன் அந்த விருஷபத்வஜரை அடைந்து பூஜைசெய்து அஸ்வமேதயாகபலனைப் பெறுகிறான்; ப்ரமதகணங்களுக்குத் தலைமையையும் அடைகிறான். ஒருமனிதன், பிறகு, தூமாவதியைக்குறித்துச் செல்லவேண்டும். (அங்கே) மூன்றுநாள் உபவாஸமிருந்தால் மனத்தினால்வேண்டப் பட்ட எல்லா அபீஷ்டங்களையும் அடைகிறான். இதில் ஸம்சயமில்லை. நராதிபனே! தேவிக்குத்தென்புறத்தில் ரதாவர்த்தமென்கிற (பர்வத) மிருக்கிறது. தர்மங்களைஉணர்ந்தவனே! ஸ்ரத்தையுள்ளவனாகவும் இந்திரியங்களைவென்றவனாகவும் அதில் ஏறவேண்டும். (அவன்) மகாதேவருடைய அருளால் உத்தமகதியை அடைவான். பரத ஸ்ரேஷ்டனே! பேரறிவாளனே! அந்த (மலையை) வலம் வந்து எல்லாப்பாவங்களினின்றும் விடுவிப்பதான தாரை என்கிற தீர்த்தத்தை அடையவேண்டும். நரஸ்ரேஷ்டனே! நராதிபனே! ஒருவன் அதில் ஸ்நானம்செய்தால் துயரத்தைஅடையான். தர்மத்தை அறிந்தவனே! பிறகு, மஹாகிரியை நமஸ்கரித்து அவ்விடத்திலிருந்து (கங்காத்வாரத்தைக் குறித்து) யாத்ரைசெய்யவேண்டும். [1] ஸ்வர்க்கத்வாரத்தோடு ஒத்ததென்று உறுதியாகச் சொல்லப் படுகிற கங்காத்வாரத்தை அடையவேண்டும். சித்தத்தை அடக்கினவனாகி அவ்விடத்திலுள்ள கோடிதீர்த்தத்தில் நீராட வேண்டும். நீராடுபவன் பௌண்டரீகயாகபலனை அடைகிறான்; குலத்தையும் கரையேற்றுவான். அந்தத்தீர்த்தத்தில் ஓர் இரவு வஸித்தால் ஆயிரம் கோதான பலனைப்பெறுவான்; ஸப்தகங்கையிலும் த்ரிகங்கையிலும் சக்ராவர்த்தத்திலும் விதிப்படி தேவர்களையும் பித்ருக்களையும் த்ருப்தியடையச்செய்பவன் புண்ய லோகத்தில் பூஜிக்கப்படுகிறான். ஒருமனிதன், பிறகு, கனகலத்தில் ஸ்நானம்செய்து மூன்றுநாள் உபவாஸமிருந்தால் அஸ்வமேத பலனை அடைகிறான். ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். நராதிபனே! தீர்த்தயாத்திரை செய்பவன், பிறகு, கபிலாவடம் போகவேண்டும். அந்த இடத்தில் ஓரிரவு உபவாஸமிருந்தால் ஆயிரம்பசுக்களைத் தானம்செய்தபலனைப் பெறுவான்.

---

1 அதிக பாடமான இரண்டு ஸ்லோகங்கள் விடப்பட்டன.

ராஜேந்திரனே! கௌரவர்களுள் மிகச்சிறந்தவனே! எல்லா உலகங்களிலும் புகழ்பெற்ற மஹாத்மாவான கபிலனென்னும் நாகராஜனுடைய தீர்த்தம் இருக்கிறது. நராதிபனே! ஒருமனிதன் அந்த நாகதீர்த்தத்தில் ஸ்நானம்செய்யவேண்டும். அவன் ஆயிரம் கபிலைப்பசுக்களைத் தானம்செய்த பலனை அடைகிறான். ஒரு மனிதன், பிறகு, உத்தமமான சந்தனுவினுடைய லலிதகமென்கிற தீர்த்தத்தை அடையவேண்டும். அரசனே! அதில் ஸ்நானம் செய்தால் நரகத்தை அடையமாட்டான். கங்கையும் யமுனையும் சேருமிடத்தில்அவற்றினிடையில் ஸ்நானம்செய்கிறமனிதன் பத்து அச்வமேதயாகபலன்களை அடைகிறான்; குலத்தையும் கரையேற்றுவான். ராஜேந்திரனே! ஒருவன், பிறகு,உலகத்தில் ப்ரவஸித்திபெற்ற ஸுகந்தமென்கிறதீர்த்தத்தை அடையவேண்டும். அதனை அடைந்தவன் எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டு ஆத்மா பரிசுத்தமாகி ப்ரம்மலோகத்தில் கொண்டாடப்படுகிறான். அரசனே! தீர்த்தாடனம் செய்பவன், பிறகு, ருத்ராவர்த்தத்தை அடையவேண்டும். அரசனே! ஒருமனிதன் அதில் ஸ்நானம்செய்தால் ஸ்வர்க்கலோகம் செல்லுகிறான். நரஶ்ரேஷ்டனே! கங்கையும் ஸரஸ்வதியும் சேருமிடத்தில் நீராடினால் அஶ்வமேதபலனைப் பெறுகிறான்; ஸ்வர்க்க லோகத்தையும் அடைகிறான். பத்ரகர்ணேஶ்வரத்தை அடைந்து விதிப்படி தேவரைஅர்ச்சிப்பவன் நரகத்தை அடையான்; ஸ்வர்க்கலோகத்திலும் பூஜிக்கப்படுகிறான். அரசனே! பிறகு, தீர்த்தயாத்ரைசெய்பவன் குப்ஜாவதியை அடையவேண்டும். அந்த மனிதன் ஆயிரம்பசுக்களைத் தானம்செய்த பலனைப் பெறுகிறான்; ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். நராதிபனே! தீர்த்தயாத்ரைசெய்பவன் அருந்ததீவடத்தைக்குறித்துச் செல்லவேண்டும். ஒருமனிதன் பிரம்மசர்யமுள்ளவனும் மனத்தை ஒருவழிப்படுத்தினவனுமாகி அங்குள்ள ஸாமுத்ரகத்தில் ஸ்நானம்செய்து மூன்றுநாள் உபவாஸமிருந்தால் அஶ்வமேதபலனை அடைவான்; ஆயிரம்கோதானபலனையும் அடைவான்; குலத்தையும் நன்கு கரையேற்றுவான். அவ்விடத்தினின்று பிரம்மசர்யத்துடனும் மனஅடக்கத்துடனும் பிரம்மாவர்த்தத்தை அடையவேண்டும். அந்தப் புண்யபூமியை அடைந்தால் அஶ்வமேதபலனை அடைகிறான்; ஸோமலோகத்துக்கும் செல்லுகிறான். யமுனையின் உத்பத்தியைஅடைந்து யாமுனதீர்த்தத்தில் நீராடினால் அஶ்வமேதபலனைப்பெற்று ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். ஒருவன்

மூவுலகத்தாராலும் பூஜிக்கப்பட்ட தர்வீஸங்கிரமணதீர்த்தத்தை அடைந்தால் அஸ்வமேதபலனைப் பெறுகிறான்; ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான்; ஸித்தர்களாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்ட விந்துவின் உத்பத்தியை அடைந்து அந்தஇடத்தில் ஐந்து இரவு வாஸஞ்செய்தால் மிக்கபொன்னைத் தானஞ்செய்தபலனை அடைவான். ஒருமனிதன், பிறகு, எவ்விதத்தாலும் அடைய முடியாத வேதியைஅடைந்தால் அஸ்வமேதபலனை அடைகிறான்; [1] சுக்ரபதத்தையும் அடைவான். பாரத! ஒருவன் ரிஷிகுல்யையையும் வாஸிஷ்டையையும் அடையவேண்டும். வாஸிஷ்டையை அடைந்த எல்லா வர்ணத்தார்களும் ப்ராம்மணர்களாகிறார்கள். ஒருமனிதன் ரிஷிகுல்யையை அடைந்து அதில்நீராடினால் பாவம்தொலைந்து தேவர்களையும் பித்ருக்களையும் அர்ச்சித்து ரிஷிலோகத்தை அடைகிறான். நராதிபனே! ஒருமனிதன் சாக ஆகாரம்செய்துகொண்டு அந்தஇடத்தில் ஒருமாதம் வஸித்தால் த்வாதசாஹயஜ்ஞத்தின்பலனை அடைகிறான்; ப்ருகுதுங்கத்தை அடைந்தால் அஸ்வமேதபலனைப் பெறுவான்; வீரப்ரமோக்ஷத்தை அடைந்தும் எல்லாப் பாவங்களாலும் விடப்படுகிறான். பாரத! ஒருமனிதன் கிருத்திகாதீர்த்தத்தையும் மாகதீர்த்தத்தையும் அடைந்தால் அக்னிஷ்டோமத்தினாலும் அதிராத்ரத்தினாலும் உண்டாகிற பலனை அடைகிறான். அந்த இடத்திலுள்ள ஸர்வோத்தமமான வித்யாதீர்த்தத்தை ஸந்தியாகாலத்தில் அடைந்து எந்த இடத்திலாவது ஸ்நானம்செய்து வித்தையை அடைகிறான். எல்லாப் பாவங்களினின்றும் பிராணிகளைவிடுவிக்கிற மஹாஸ்ரமம் என்னும் இடத்தில் ஓர் இரவு வாஸம்செய்யவேண்டும். (அங்கு) ஒருகாலம் ஆகாரமில்லாமலிருப்பவன் நல்ல உலகங்களில் வாஸம் செய்கிறான். மஹாலயத்தில் ஒரு மாதகாலம் பகலின் ஆறுவது காலம் வரையில் உபவாஸமிருப்பதனால் எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டுச் சுத்தமான ஆத்மாவுடன் மிக்க பொன்னைக் கொடுத்த பலனை அடைவான். தன்குலத்தில் பிந்திப் பத்துத்தலைமுறையாரையும் முந்திப் பத்துத்தலைமுறையாரையும் கரையேற்றுகிறான். பிறகு, ப்ரம்மதேவரால் அடையப்பட்ட வேதஸிகையை அடைந்து அஸ்வமேதபலனை அடைகிறான்; சுக்ரபதத்தையுமடைகிறான். பிறகு, ஸித்தர்களால் அடையப்பட்ட ஸௌந்தரிகாதீர்த்

---

[1] 'ஔசநஸீம்கதிம்' என்பதுமூலம்; 'சுக்ரத்வம்' என்பது பழைய உரை.

த்தை அடைந்து சிறந்த வடிவழகைப் பெறுகிறான். இந்தவிஷயம் முன்னோர்களால் காணப்பட்டது. பிறகு, பிரம்மசர்யமுள்ளவனாகவும் இந்திரிய ஜயமுள்ளவனாகவும் ப்ரம்மதீர்த்தத்தை அடைந்து அதில் நீராடினால் தாமரைமலர் நிறம்போன்ற நிறமுள்ள விமானத்தினால் ப்ரம்ம லோகத்தை அடைகிறான். பிறகு, ஸித்தர்களால் அடையப்பட்ட புண்யமான நைமிஷத்தைக் குறித்து யாத்ரைசெய்யவேண்டும். அந்த நைமிஷத்தில் ப்ரம்மா தேவர்களுடைய கூட்டங்களோடு எப்பொழுதும் வாஸம் செய்கிறார். நைமிஷத்தை (எங்கே உள்ளது என்று) தேடுகிறவனுக்குப் பாதிப்பாவம் நாசமடைகிறது. அதில் ப்ரவேசித்த மாத்திரத்தினால் மனிதன் எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிறான். கற்றறிந்தவன் தீர்த்தத்தில் பற்றுள்ளவனாக அந்த நைமிஷத்தில் ஒருமாதம் பூர்ணமாக வஸிக்கவேண்டும். பூமியில் எந்தத் தீர்த்தங்களுண்டோ அந்தத்தீர்த்தங்களனைத்தும் நைமிஷத்தில் இருக்கின்றன. பாரத! நியமமுள்ளவனும் நியமமான ஆகாரமுள்ளவனுமாயிருப்பவன் அதில் நீராடினவுடனே கோமேதயஜ்ஞபலனை அடைகிறான். பரதர்களுள் மிகச்சிறந்தவனே! ஏழாவது தலைமுறைவரையில் குலத்தையும் பரிசுத்தம் செய்கிறான். 'நைமிஷத்தில் உபவாஸமிருந்து பிராணனைவிடுபவன் எல்லா உலகங்களிலும் ஸந்தோஷத்தை அடைவான்' என்று இவ்வண்ணம் அறிஞர்கள் கூறுகின்றனர். ராஜஸ்ரேஷ்டனே! நைமிஷமானது எப்பொழுதும் சுத்தமானது; புண்யமானது. மனிதன் கங்கோத்பேதத்தை அடைந்து மூன்றுநாள் உபவாஸமிருந்தால் வாஜபேயயாகபலனை அடைவான்; எப்பொழுதும் பிரம்மத்தன்மையை அடைந்தவனாவான். ஒருவன் ஸரஸ்வதியை அடைந்து பித்ருக்களையும் தேவர்களையும் திருப்திசெய்யவேண்டும். அப்படிச் செய்பவன் ஸரஸ்வதியின் உலகங்களில் ஆனந்தத்தை அடைகிறான். இதில் ஐயமில்லை. ஒருவன், பிறகு, பாகுதையைக்குறித்துச் செல்லவேண்டும். குருகுலத்தில் தோன்றியவனே! ப்ரம்மசர்யத்துடனும் ஒருவழிப்பட்ட மனத்துடனும் அங்கே ஓர் இரவு வாஸம் செய்தால் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான்; தேவஸத்ரமென்னும் யஜ்ஞத்தின் பலனை அடைகிறான். அந்தத்தீர்த்தத்தினின்று புண்யமானதும் மிக்க புண்யசாலிகளால் சூழப்பட்டதுமான க்ஷீரவதியை அடையவேண்டும். அங்கே பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பதில் பற்றுள்ளவனாக இருந்தால் வாஜபேயயாக

பலனை அடைகிறான். விமலாசோகத்தை அடைந்து பிரம்மசர்யத்துடனும் மன அடக்கத்துடனும் அந்த இடத்தில் ஓர் இரவு வாஸம்செய்தால் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். மஹாராஜனே! ஒருவன், பிறகு, எந்தத்தீர்த்தத்தில் ராமர் பரிஜனங்களுடனும் சேனையுடனும் யானை குதிரைகளுடனும் தேகத்தை விட்டு அந்தத் தீர்த்தத்தின் தேஜஸினால் ஸ்வர்க்கத்தை அடைந்தாரோ ஸரயூநதியைச்சார்ந்த கோப்ரதாரமென்கிற அந்த உத்தம தீர்த்தத்தை அடையவேண்டும். பாரத! நராதிபனே! மனிதன் உறுதியுடன் அந்தக் கோப்ரதார தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால் ராமருடைய அனுக்கிரகத்தினால் எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டுச் சுத்தமான மனத்துடன் தேவலோகத்தில் கொண்டாடப்படுகிறான். குருநந்தன! ஒருமனிதன் கோமதியில் ராமதீர்த்தத்தில் நீராடினால் அச்வமேதபலனை அடைகிறான்; குலத்தையும் பரிசுத்தம் செய்கிறான். பரதர்களுள் சிறந்தவனே! அந்த இடத்திலேயே சதஸாஹஸ்ரகம் என்கிற தீர்த்தம் இருக்கிறது. பரதச்ரேஷ்டனே! நியமத்துடனும் ஆகாரநியமத்துடனும் அதில் நீராடினால் புண்யமான ஆயிரம் கோதானபலனை அடைகிறான். ராஜேந்திரனே! பிறகு, மிகச்சிறந்ததான பர்த்ருஸ்தானத்தை அடையவேண்டும். ஒரு மனிதன், அதனை அடைவதினால் அச்வமேதபலனை அடைகிறான். அரசனே! ஒருமனிதன் கோடிதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஸுப்ரம்மண்யரை அர்ச்சித்தால் ஆயிரம் பசுக்களைத் தானம்செய்தபயனை அடைவான். அவன் தேஜஸ்வியுமாவான். ஒரு மனிதன், பிறகு, [1] வாராணஸியை அடைந்து வ்ருஷபத்வஜரை அர்ச்சித்துக் கபிலாஹ்ரதத்தில் ஸ்நானம் செய்தால் ராஜஸூயயாகபலனை அடைவான். குருவம்சத்தைத் தாங்குபவனே! தீர்த்தயாத்ரை செய்பவன் அவிமுக்தத்தை அடைந்து தேவதேவருடைய தரிசனத்தினால் பிரம்மஹத்தி தோஷத்தால் விடப்படுகிறான். ஒரு மனிதன் அவ்விடத்திலேயே உயிரை விட்டால் மோக்ஷத்தை அடைகிறான். ராஜேந்திரனே! உலகத்தில் ப்ரஸித்தமான கோமதீகங்காஸங்கமத்திலுள்ள கிடைக்க அரிதான மார்க்கண்டேயதீர்த்தத்தை அடைந்தால் அக்நிஷ்டோமபலனை அடைகிறான்; குலத்தையும் நன்கு கரையேற்றுகிறான். ஒருவன், பிறகு, ப்ரம்மசர்யத்துடன் இந்திரியங்களை அடக்கினவனாகிக் கயைக்குச் சென்றால் அச்வமேதபலனை

[1] காசி; வரணை அஸி என்கிற இரண்டுநதிகளின் இடையிலிருப்பது.

அடைகிறான்; குலத்தையும் கரையேற்றுவான். அந்த இடத்தில் அக்ஷயவடமென்கிற ஆலமரம் மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்றது. அந்த ஆலமரத்தினடியில் பித்ருக்களை உத்தேசித்துக் கொடுக்கப்பட்டது அக்ஷயமாகிறதென்று சொல்லப்படுகிறது. ஒருமனிதன் மஹாநதியில் ஸ்நானம்செய்து பித்ருதேவதைகளைத் திருப்தி அடையச்செய்யவேண்டும். அவன் அக்ஷயலோகங்களை அடைவான்; குலத்தையும் கரையேற்றுவான். பிறகு, தர்மாரண்யத்தினால் ப்ரகாசிக்கின்ற பிரம்மஸரஸை அடைந்து ஓர் இரவு விடியுமட்டும் வஸித்தால், பிரம்மலோகத்தை அடைகிறான். அந்த ஸரஸில் பிரம்மாவினால் ஒரு சிறந்த யூபஸ்தம்பம் நிமிர்த்து நாட்டப்பட்டது. அந்த யூபத்தை ப்ரதக்ஷிணம் செய்தால் வாஜபேயபலனை அடைவான். ராஜேந்திரனே! பிறகு, உலகத்தில் பெயர்பெற்ற தேனுக தீர்த்தத்தை அடையவேண்டும். அரசனே! அவ்விடத்தில் ஓரிரவு வாஸம் செய்து [1] திலதேனுவைத் தானம்செய்யவேண்டும். அவன் எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டுச் சுத்தாத்மாவாகி நிச்சயமாக ஸோமலோகத்தை அடைவான். அரசனே! பாரத! அந்த இடத்தில் மலையில் ஸஞ்சரித்த கபிலை அதன் [2]கன்று இவற்றின் பெரிய அடிச்சுவடுகள் (அவைகளால்) அமைக்கப்பட்டு இன்றும் மிகப் பெரியவையாகக் காணப்படுகின்றன. ராஜஸ்ரேஷ்டனே! அரசர்களுள் மேன்மைவாய்ந்தவனே! பாரத! அந்தக்கபிலையின் காலடிகளில் ஸ்நானம் செய்தவனுடைய பாவமனைத்தும் அழிந்துபோகிறது. பிறகு, சிறந்த புத்தியுள்ள மகாதேவருக்கு வாஸஸ்தானமான க்ருத்ரவடத்தை அடையவேண்டும். அவ்விடத்திலுள்ள வ்ருஷபத்வஜரை வணங்கி, பஸ்மத்தினால் ஸ்நானம் செய்யவேண்டும். அப்படி (பஸ்மஸ்நானம் செய்த) பிராம்மணனால் பன்னிரண்டு வர்ஷகாலங்களில் நிறைவேறும் விரதமானது நன்கு அனுஷ்டிக்கப்பட்டதாகும். மற்ற வர்ணத்தார்களுக்கு எல்லாப் பாவங்களும் நாசமடைகின்றன. ஒருவன், பிறகு, பாடலால் ஒலியுள்ளதான உதய பர்வதத்தைக் குறித்துச் செல்லவேண்டும். பரதஸ்ரேஷ்டனே! அந்த மலையில் ஸாவித்ரியினுடைய காற்சுவடு காணப்படுகிறது. அந்த இடத்தில் ப்ராம்மணன் கடுமையான விரதமுள்ளவனாகி ஸந்த்யையை உபாஸிக்கவேண்டும். அப்படி உபா

---

1 அநுசாஸனபர்வம் 357-ம் பக்கத்திலும் ஆஸ்வமேதிகபர்வம் 293-ம் பக்கத்திலும் குறிப்புக்களில் காண்க.

2 இரட்டித்தலால் சில சொற்கள் விடப்பட்டன.

ஸிப்பவனால் பன்னிரண்டுவர்ஷகாலம் ஸந்தி உபாஸிக்கப்பட்டதாகும். பரதஸ்ரேஷ்டனே! அந்த இடத்திலேயே ப்ரஸித்திபெற்ற யோநித்வாரம் இருக்கிறது. ஒருமனிதன் அந்த இடத்தில் சென்றால் [1] பிறவித்துன்பத்தினின்று விடப்படுவான். அரசனே! கயையில் கிருஷ்ணபக்ஷம் சுக்லபக்ஷம் இந்த இரண்டு பக்ஷங்களும் வஸிப்பவன், ஏழாவது தலைமுறைவரையில் குலத்தைப்பரிசுத்தம் செய்கிறான். இதில் ஸம்சயமில்லை. 'ஒருவனாவது கயைக்குப் போவான்; ஒருவனாவது [2] கௌரியென்னும் கன்னியை மணப்பான் ஒருவனாவது [3] நீலவ்ருஷத்தை உத்ஸர்ஜனம் செய்வான்' என்கிற எண்ணத்தால் உலகத்தில் மனிதர்கள் அனேகம் புத்திரர்களை அடைய விரும்பவேண்டும். அரசனே! நராதிபனே! தீர்த்த யாத்ரைசெய்பவன், பிறகு, பல்குவை அடையவேண்டும். அதை அடைந்தவன் அஸ்வமேதபலனை அடைகிறான்; அதிகமான ஸித்தியையும் அடைவான். ராஜேந்திரனே! ஒருவன், பிறகு, மன அடக்கத்துடன் தர்மப்ரஸ்தத்தைக்குறித்துச் செல்லவேண்டும். மகாராஜனே! யுதிஷ்டிர! அந்தஇடத்தில் தர்மமானது நித்யவாஸம் செய்கிறது. ஒருவன் அந்தஇடத்தில் கிணறுவெட்டித் தீர்த்தத்தை உண்டுபண்ணி அதனால் ஸ்நானம்செய்து அவ்வண்ணம் சுத்தனாகிப் பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் நன்கு தர்ப்பணம்செய்தால், பாவத்தினின்று விடுபட்டுத் தேவலோகம்செல்வான். பரமாத்மத்யானம்செய்கிற மதங்கமஹரிஷியினுடைய ஆஸ்ரமம் அங்கு இருக்கிறது. ஒருமனிதன் இளைப்பையும் துயரையும் போக்குவதும் அழகியதுமான அந்தஆஸ்ரமத்தில்சென்றால் கவாமயநயஜ்ஞ பலனை அடைகிறான். அந்தஇடத்தில் [4] தர்மத்தை நன்கு அனுஷ்டித்தால் அஸ்வமேதபலனை அடைவான். ராஜஸ்ரேஷ்டனே! ஒருவன், பிறகு, ஸர்வோத்தமமான ப்ரம்மஸ்தானத்தை அடையவேண்டும். ராஜேந்திரனே! புருஷஸ்ரேஷ்டனே! அந்த இடத்தில் ப்ரம்மாவை வணங்கினால் ராஜஸூயத்தாலும் அஸ்வமேதத்தாலும் வரும் பலனை அடைகிறான். நராதிபனே! தீர்த்தயாத்ரைசெய்

1 வேறு பாடம். 2 கௌரி = எட்டுவயதுப் பெண்; 'அஸ்வமேதம்செய்வான்' என்பது வேறு பாடத்தின் பொருள்.

3 சிவப்பு நிறமும் முகத்திலும் வாலிலும் சிவப்புக்கலந்த வெண்மை நிறமும் குளம்புகளிலும் கொம்புகளிலும் வெண்மை நிறமுமுள்ள காளை.

4 'தர்மம் அபிஸம்ஸ்ப்ருஸ்ய' என்பது மூலம்; 'தர்மதேவதையின் பிம்பத்தைத் தொடுவதனால்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

பவன், பிறகு, ராஜக்ருஹத்தைக்குறித்துச் செல்லவேண்டும். பிறகு, அந்தஇடத்தில் ஸ்நானம்செய்தால் கக்ஷீவான்போல மகிழ்கிறான். ஒருமனிதன் அந்த இடத்தில் சுத்தனாகி யக்ஷிணிக்கு நிவேதனம் செய்ததைப்புஜிக்கவேண்டும். யக்ஷிணியினுடைய அருளால், ப்ரம்ம ஹத்திதோஷத்தால் விடுப்படுகிறான். பிறகு, மணிநாகத்தை அடைந்தால் ஆயிரம்கோதானபலனை அடைகிறான். பாரத! மணி நாகதீர்த்த ஸம்பந்தமானதைப் புசிப்பவன் ஸர்ப்பத்தால் கடிக் கப்பட்டாலும், அவன் தேகத்தில் விஷம் பரவுகிறதில்லை. அந்த இடத்தில் ஓர் இரவு வாஸம்செய்தால் ஆயிரம்கோதானம் செய்த பயனைப் பெறுவான். அதினின்று பிரம்மரிஷியான கௌதம ருடைய பிரியமானவனத்தை அடையவேண்டும். அகலிகையினு டைய மடுவில் ஸ்நானம்செய்தால் உத்தமகதியை அடைவான். அர சனே! ஒருமனிதன் அந்த ஆஸ்ரமத்தைஅடைந்தால் ஆத்மஸம் பத்தை அடைகிறான். தர்மங்களை அறிந்தவனே! அந்தஇடத்தில் மூவுலகங்களிலும் புகழ்பெற்ற ஒருகிணறு இருக்கிறது. அதில் ஸ்நானம்செய்தால் அஸ்வமேதபலனைப் பெறுவான். தேவர்களால் பூஜிக்கப்பட்ட ராஜரிஷியான ஜனகருடையகிணறு இருக்கிறது. அதில் நீராடினால் விஷ்ணுலோகத்தை அடைவான். ஒருவன், பிறகு, எல்லாப் பாவங்களையும் போக்குகிற விநசனத்தைக்குறித்துச்செல் லவேண்டும்; அவன் வாஜபேயயாகபலனை அடைவான்; ஸோமலோ கத்தையும் அடைவான். பரிசுத்தமான எல்லாத்தீர்த்தங்களும் தன்னிடத்தே தோன்றப்பெற்ற கண்டகியை அடைந்து நீராடி னால் வாஜபேயயாகபலனை அடைகிறான்; ஸூர்யலோகத்தையும் அடைகிறான். ஒருவன், பிறகு, மூன்று உலகங்களிலும் பிரசித்தி பெற்ற விசல்யைஎன்கிற நதியைஅடைந்தால்அக்னிஷ்டோமபலனை அடைகிறான்; ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். தர்மங்களை அறிந்தவனே! ஒருவன், பிறகு, அங்கிருந்து வங்கதேசத்திலுள்ள வனத்தை அடைந்து வஸிக்கவேண்டும். மகாராஜனே! அவன் குஹ்யகர்களினிடையில் மகிழ்கிறான். இதில் ஸம்சயமில்லை. ஸித் தர்களால் அடையப்பட்ட கம்பனை என்கிற நதியை அடைந்தால் பௌண்டரீகயாகபலனை அடைகிறான்; ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். பூமிக்கு அதிபதியே! ஒருவன், பிறகு, மஹேஸ் வரருடையதான தாரையை அடைந்தால் அஸ்வமேத பலனை அடைகிறான்; குலத்தையும் நன்குகரையேற்றுகிறான். நராதிபனே! ஒருவன் தேவர்களுடைய புஷ்கரிணியை அடைந்தால் நரகத்தை

அடையான்; அச்வமேதபலனையும் அடைகிறான். ஒருவன், பிறகு, பிரம்மசர்யத்துடனும் மன அடக்கத்துடனும் [1] ஸோம பதத்தை அடையவேண்டும். மாஹேச்வரபதத்தில் நீராடினால் அச்வமேதபலனை அடைவான். பரதச்ரேஷ்ட! அதில் ப்ரக்யாதிபெற்ற கோடிதீர்த்தங்கள் இருக்கின்றன. ராஜேந்திரனே! மன்னவ! ஆமைவடிவங்கொண்டவனும் கெட்ட எண்ணமுள்ளவனுமான ஓர் அஸுரனால் அபகரிக்கப்பட்ட தீர்த்தகோடியானது பிரபுவான விஷ்ணுவால் மீட்டுக் கொண்டுவரப்பட்டது. யுத்தத்தில் ஸ்திரமாயிருப்பவனே! அந்தத் தீர்த்தகோடியில் மனிதன் ஸ்நானம் செய்யவேண்டும். அவன் பௌண்டரீகயாகபலனை அடைகிறான்; விஷ்ணுலோகத்தையும் அடைகிறான். ராஜச்ரேஷ்டனே! ஒருவன், பிறகு, நாராயணருடைய ஸ்தானத்தைக்குறித்து யாத்ரை செய்யவேண்டும். பாரத! அந்த இடத்தில் எப்பொழுதும் விஷ்ணு ஸாந்நித்யம் செய்துகொண்டிருக்கிறார். அந்தஇடத்தில் ப்ரம்மா முதலிய தேவர்களும் தபோதனர்களான ரிஷிகளும் ஆதித்யர்களும், வஸுக்களும் ருத்ரர்களும் ஜநார்த்தனரை உபாஸிக்கிறார்கள். ஸாலக்ராமரென்று ப்ரஸித்திபெற்றவரும் ஆச்சர்யமான செய்கைகளுள்ளவருமான விஷ்ணு இருக்கிறார். மூவுலகத்துக்கும் நாதரும் வரன்களைக் கொடுப்பவரும் அழிவில்லாதவருமான விஷ்ணுவை வணங்கி அச்வமேதபலனை அடைகிறான்; விஷ்ணுலோகத்தையும் அடைகிறான். தர்மங்களைஅறிந்தவனே! எல்லாப் பாவங்களினின்றும் விடுவிப்பதான ஒரு கிணறு அந்த இடத்தில் இருக்கிறது. அந்தக் கிணற்றில் நான்கு ஸமுத்திரங்கள் எப்பொழுதும் ஸாந்நித்யம் செய்கின்றன. ராஜேந்திரனே! அதில் ஸ்நானம் செய்தவன் நரகத்தை அடையமாட்டான். மனிதர்களுக்கு இறைவனே! த்ரிலோகநாதரும் வரன்களை அளிப்பவரும் அழிவற்றவருமான விஷ்ணுவை வணங்கினால் மேகத்தினின்றுவிடுபட்ட சந்திரன்போல ப்ரகாசிக்கிறான். ஒருவன் சுத்தனும் மனத்தை நன்கு அடக்கினவனுமாகி ஜாதிஸ்மரமென்கிற தீர்த்தத்தில் ஆசமனம் செய்து ஸ்நானம் செய்தால் முற்பிறப்புக்களின் உணர்ச்சியை அடைகிறான். அதில் ஸம்சயமில்லை. வடேச்வரபுரத்தைஅடைந்து கேசவரை அர்ச்சித்து உபவாஸத்தால் வேண்டியவரன்களை அடைகிறான்; ஸந்தேகமில்லை. அந்த இடத்திலிருந்து எல்லாப்பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறவாமனரை அடைந்து தேவரான அந்த

1 ஸோமன் = சிவன்; உமையுடன் இருப்பவர்.

ஹரியை வணங்கினால் மனிதன் நரகை அடையமாட்டான். ஒரு மனிதன் எல்லாப்பாவங்களினின்றும் விடுவிக்கிற பரதருடைய ஆஶ்ரமத்திற்குப் போகவேண்டும். அந்த ஆஶ்ரமத்தில் கொடிய பாவங்களையும் போக்குகிற கௌசிகியை அடையவேண்டும். அவன் ராஜஸூயயாக பலனை அடைகிறான். ராஜஶ்ரேஷ்டனே! ஒருவன், பிறகு, உத்தமமான சம்பகாரண்யத்தை அடையவேண்டும். அந்த இடத்தில் ஓர்இரவு வாஸம்செய்பவன் ஆயிரம்பசுக்களைத் தானம்செய்தபலனைஅடைவான். பிறகு, அடைதற்கரிய ஜேஷ்டிலதீர்த்தத்தை அடைந்து அந்த இடத்தில் ஓர் இரவு வாஸம்செய்தால் ஆயிரம்பசுக்களைத் தானம்செய்த பயனை அடைவான். புருஷஶ்ரேஷ்டனே! அந்த இடத்தில் தேவியையும் மகாகாந்தியுள்ள விஶ்வேஶ்வரரையும் தரிசித்தால் மித்ராவருணர்களுடைய லோகங்களை அடைகிறான். அவ்விடத்தில் மூன்று நாள் உபவாஸமிருந்தால் அக்கினிஷ்டோமபலனை அடைவான். புருஷஶ்ரேஷ்டனே! ஒருவன் நியமத்துடனும் நியமமான ஆகாரத்துடனும் கன்யாஸம்வேத்யதீர்த்தத்தை அடைந்தால் மனு என்னும் ஸ்ருஷ்டிகர்த்தருடைய உலகங்களை அடைகிறான். பாரத! கன்யாதீர்த்தத்தில் செய்யப்படும் அணுஅளவுதானமும் அக்ஷயமானதென்று கடுமையான விரதமுள்ள ரிஷிகள் சொல்லுகிறார்கள். அந்தத் தீர்த்தத்திலிருந்து மூன்று உலகங்களிலும் புகழ்பெற்ற நிர்வீரதீர்த்தத்தை அடைந்து அஶ்வமேதபலனை அடைகிறான்; விஷ்ணுலோகத்தையும் அடைகிறான். மனிதருட்சிறந்தவனே! எந்த மனிதர்கள் நிர்வீராஸங்கமத்தில் விறகைக் கொடுக்கிறார்களோ அவர்கள் துன்பமற்றதான இந்திரலோகத்தை அடைகிறார்கள். அங்கே, மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற வஸிஷ்டருடைய ஆஶ்ரமமிருக்கிறது. அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம்செய்பவன் வாஜபேயயாகபலனை அடைவான். ஒருவன் பிரம்ம ரிஷிகளின் கூட்டங்களால் அடையப்பட்ட தேவகூடத்துக்குச் சென்றால் அஶ்வமேதபலனை அடைகிறான்; தன் குலத்தையும் கரையேற்றுவான். ராஜேந்திரனே! பிறகு, எதில் குசிகவம்சத்தில் பிறந்த விஶ்வாமித்ரர் உத்தமமான ஸித்தியைப் பெற்றாரோ கௌசிக முனிவருடைய அந்த மடுவை அடையவேண்டும். வீரனே! பரதஶ்ரேஷ்டனே! கௌசிகியில் ஒரு மாதம் வஸிக்கவேண்டும். அப்படி ஒருமாதம் வஸிப்பதால் அஶ்வமேதத்திற்குரிய புண்யத்தை அடைகிறான். எல்லாத்தீர்த்தங்களிலும் சிறந்த

ம்ஹூர்த்தத்தில் வாஸம்செய்பவன் நரகத்தை அடையமாட்டான். பல ஸுவர்ணங்களின் தானபலனை அடைகிறான். ஒருமனிதன் பிறகு, வீராஸ்ரமத்தில் வஸிக்கின்ற ஸுப்ரம்மண்யரை நமஸ்கரித்தால் அஸ்வமேதபலனை அடைகிறான். இதில் ஸம்சயமில்லை. மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற அக்நிதாரையை அடைந்து அங்கு நீராடுபவன் அக்நிஷ்டோமபலனை அடைவான். [1] மஹாதேவரும் வரன்களை அளிப்பவரும் அழிவற்றவருமான விஷ்ணுவை வணங்கி இமயமலைக்கு அருகிலுள்ள பிதாமஹஸரஸை அடைந்து அதில் ஸ்நானம்செய்பவன் அக்னிஷ்டோமபலனை அடைவான். அந்த இடத்திலேயே உலகங்களைப் பரிசுத்தமாகச் செய்கிறதும் மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்றதுமான குமாரதாரையானது பிதாமஹஸரஸினின்று பெருகி வருகிறது. அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவன், 'நான் க்ருதார்த்தன்' என்று தன்னை நினைக்கிறான். (பகலில்) ஆறாவது காலம்வரையில் உபவாஸமிருப்பதனால் பிரம்மஹத்திதோஷத்தினால் விடப்படுகிறான். தர்மங்களை அறிந்தவனே! தீர்த்தாடனத்தில் பற்றுள்ளவன், பிறகு, மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற மஹாதேவருடைய பத்னியாகிய கௌரியின் மலைச்சிகரத்தை அடையவேண்டும். நரஸ்ரேஷ்டனே! அதில் ஏறி ஸ்தநகுண்டங்களில் செல்லவேண்டும்; ஸ்தநகுண்டத்தில் ஆசமனம் செய்தால் வாஜபேயயாகபலனை அடைவான். அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பித்ருக்களையும் தேவர்களையும் பூஜிப்பதில் பற்றுள்ளவன் அஸ்வமேதபலனை அடைகிறான்; இந்திரலோகத்தையும் அடைகிறான். ஒருமனிதன் பிரம்மசர்யத்துடனும் மனஅடக்கத்துடனும் தாம்ராருணதீர்த்தத்தை அடைந்தால் அஸ்வமேதபலனைப்பெறுகிறான்; பிரம்மலோகத்தையும் அடைகிறான். நராதிபனே! ஒருவன் நந்திநியில் தேவர்களால் அடையப்பட்ட கூபத்தை அடைந்தால் நரமேதத்திற்குள்ள புண்யத்தை அடைகிறான். அரசனே! கௌசிகி அருணை என்கிற நதிகளில் காளிகாஸங்கமத்தில் சென்று ஸ்நானம்செய்து மூன்றுநாள் உபவாஸமிருப்பவன் எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிறான். கற்றறிந்த மனிதன் உர்வசீதீர்த்தத்தை அடைந்து, பிறகு ஸோமாஸ்ரமத்தையும் கும்பகர்ணாஸ்ரமத்தையும் அடைந்தால் மண்ணுலகில் பூஜிக்கப்படுகிறான். ஒருவன் பிரம்மசர்யத்துடனும் அடக்கமாகிற விர

[1] 'வரன்களையளிப்பவரும் விஷ்ணுவும் அழிவற்றவருமான மஹாதேவரை' என்றும் கொள்ளலாம்.

தத்துடனும் கோகாமுகத்தில் ஸ்நானம்செய்தால் முற்பிறப்புக்களின் உணர்ச்சியைப் பெறுகிறான். இது முன்னோர்களால் காணப்பட்டது. பிராம்மணன் ப்ராங்நதியை அடைந்தால் மனத்தூய்மைஉள்ளவன் ஆகிறான். எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டுச்சுத்தமான ஆத்மாவுடன் இந்திரலோகத்தையும் அடைகிறான். பரிசுத்தமானதும் [1] கிரௌஞ்சகிரியைப் பிளந்த இடமுமான ரிஷபத்வீபத்தைஅடைந்து ஸரஸ்வதியில் ஸ்நானம்செய்தால் விமானத்திலிருந்துகொண்டு பிரகாசிக்கிறான். மகாராஜனே! ரிஷிகளால் அடையப்பட்ட ஔத்தாலகதீர்த்தத்தை அடைந்து அதில் நீராடினால் எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிறான். ப்ரம்மரிஷிகளால் அடையப்பட்ட புண்யமான தர்மதீர்த்தத்தை அடைந்தால் வாஜபேயயாகபலனை அடைகிறான். விமானத்தில் இருந்துகொண்டு பூஜிக்கவும்படுகிறான். பிறகு, பம்பையை அடைந்து பாகீரதியில் ஜலதர்ப்பணம்செய்து தண்டார்த்தத்தை அடைந்தால் ஆயிரம் கோதானபலனைப் பெறுவான். ஒருவன், பிறகு, புண்யமானதும் புண்யாத்மாக்களால் அடையப்பட்டதுமான லேவலிகையை அடையவேண்டும்; அவன் வாஜபேயயாகபலனை அடைகிறான். விமானத்திலிருந்துகொண்டு பூஜிக்கவும்படுகிறான்.

எண்பத்துமூன்றாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர், புலஸ்தியர் பீஷ்மருக்குச் சொல்லிய தீர்த்த மஹிமையை யுதிஷ்டிரருக்குக் கூறிச் சென்றது.)

மனிதன், பிறகு, உத்தமமான ஸம்வேத்யதீர்த்தத்தை ஸந்தியாகாலத்தில் அடைந்து அதில் ஸ்நானம் செய்தால் (ப்ரம்ம) வித்தையை அடைகிறான். இதில் ஸம்சயமில்லை. அரசனே! முற்காலத்தில் ராமருடைய அருளால் உண்டுபண்ணப்பட்ட அந்த லௌஹித்யதீர்த்தத்தை அடைந்தால் அனேக ஸுவர்ணங்களைத் தானஞ்செய்தபலனை அடைவான். கரதோயையை அடைந்து மூன்று தினம் உபவாஸமிருக்கிற மனிதன் அச்வமேதபலனை அடைகிறான். இந்த விதியானது பிரம்மதேவரால் ஏற்படுத்தப்

---

[1] 'கிரௌஞ்சநிஷூதநம்' என்பது மூலம்.

பட்டது. ராஜேந்திரனே! அந்த இடத்தில் கங்கை ஸமுத்ரம் இவற்றின் ஸங்கமத்தில் (ஸ்நானம் செய்பவனுக்கு) அஸ்வமேதத் துக்குப் பத்துமடங்கு பலன் உண்டென்று கற்றறிந்தவர்கள் சொல்லுகின்றனர். அரசனே! கங்கையின் அக்கரையை அடைந்து ஸ்நானம் செய்து மூன்றுநாள் வஸிக்கிற மனிதன் விரும்பின எல்லாவற்றையும் அடைவான். ஒரு மனிதன், பிறகு, எல்லாப்பாவங் களினின்றும் விடுவிக்கிற வைதரணியை அடைந்து விரஜாதீர்த் தத்தை அடைந்தால் சந்திரன்போலப் பிரகாசிக்கிறான்; புண்ய குலத்திலும் பிறக்கிறான்; எல்லாப் பாவங்களையும் போக்குகிறான்; ஆயிரம்கோதானபலனைப் பெற்றுத் தன்குலத்தைப் பரிசுத்தம் செய்கிறான். சோணம் ஜ்யோதிரத்யை இவற்றின் ஸங்கமத்தில் (நீராடி) நியமத்துடனும் தூய்மையுடனும் பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம்செய்தால் அக்நிஷ்டோமபலனை அடைவான். குருநந்தன! சோணம் நர்மதை இவற்றின் 1 பிரி விடமான வம்சகுல்மத்தில் ஸ்நானம்செய்தால் அஸ்வமேத பலனை அடைவான். நராதிபனே! ஒரு மனிதன் கோஸலையில் ரிஷபதீர்த்தத்தை அடைந்து மூன்றுநாள் உபவாஸமிருந்தால் வாஜபேயயாகபலனை அடைவான்; ஆயிரம் கோதானபலனைப் பெறுவான்; குலத்தையுமே கரையேற்றுவான். ஒருவன் கோஸலையை அடைந்து காலதீர்த்தத்தில் ஸ்நானம்செய்யவேண்டும். அவன் பதினொருவிருஷபங்களைத் தானம்செய்த பலனை அடை கிறான்; இதில் ஸம்சயமில்லை. அரசனே! புஷ்பவதியில் நீராடி மூன்றுதினம் உபவாஸம் இருக்கும் மனிதன் ஆயிரம் கோதான பலனை அடைந்து தன்குலத்தைப் பரிசுத்தம்செய்கிறான். பரத ஸ்ரேஷ்டனே! ஒருவன், பிறகு, பதரிகாதீர்த்தத்தில் நீராடினால் நீண்ட ஆயுளை அடைகிறான்; ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். சம்பையை அடைந்து பாகீரதியில் ஜலதர்ப்பணம் செய்பவன் தண் டத்தை அடைந்த மாத்திரத்தில் ஆயிரம் கோதானபலனை அடை வான். ஒருவன், பிறகு, புண்யபுருஷர்களால் விளங்குகிற புண்ய மான லபேடிகையை அடையவேண்டும். அவன் வாஜபேயயாக பலனை அடைகிறான்; எல்லாத்தேவர்களாலும் பூஜிக்கவும்படுகி றான். ஒரு மனிதன் அந்தத்தீர்த்தத்தினின்று ஜமதக்னியின் குமாரரால் அடையப்பட்ட மகேந்திரமலையை அடைந்து ராமதீர்த்

---

1 'ப்ரபேதே' என்பது மூலம்; 'உத்பத்தி' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

த்தில் ஸ்நானம்செய்தால் அஸ்வமேதபலனை அடைவான். குரு நந்தன! அந்த இடத்திலேயே மதங்கருடைய கேதாரமிருக்கிறது. குருஸ்ரேஷ்டனே! அதில் ஸ்நானம்செய்தால் ஆயிரம் பசுக்களைத் தானம்செய்தபலனை அடைவான். ஒருவன் ஸ்ரீபர்வதத்தை அடைந்து நதீதீரத்தில் ஸ்நானம்செய்யவேண்டும். அவன் வ்ருஷபத்வஜரைப் பூஜித்தால் அஸ்வமேதபலனைப் பெறுகிறான். ஸ்ரீபர்வதத்தில் தேவியுடன் மிக்க காந்தியுள்ள மகாதேவரும் தேவர்களோடுகூட மிக்கப்ரியமுள்ள பிரம்மாவும் வாஸம்செய்தார்கள். ஒருவன் அங்குள்ள தேவஹ்ரதத்தில் சுத்தனாகவும் சுத்தமனமுள்ளவனாகவும் நீராடினால் அஸ்வமேதபலனைப் பெறுகிறான்; குலத்தையுமே கரையேற்றுவான். பாண்டியநாட்டில் அரசர்களால் பூஜிக்கப்பட்ட ரிஷபமலையை அடைந்தால் வாஜபேயயாகபலனை அடைகிறான்; தேவலோகத்திலும் மகிழ்கிறான். பிறகு, அப்ஸரஸுகளுடைய கூட்டங்களால் சூழப்பட்ட காவேரியை அடையவேண்டும். அரசே! ஒருமனிதன் அதில் நீராடினால் ஆயிரம் கோதானபலனைப் பெறுவான். ஒருவன், பிறகு, ஸமுத்திரதீரத்தில் கன்யாதீர்த்தத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். ராஜேந்திரனே! அந்தத் தீர்த்தத்தைத் தொட்டால் எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிறான். ராஜேந்திரனே! பிறகு, ஸமுத்திரமத்தியில் எதில் பிரம்மாமுதலான தேவர்களும் தபோதனர்களானரிஷிகளும் பூதங்களும் யக்ஷர்களும் பிசாசர்களும் கின்னரர்களும் மஹோரகர்களும் ஸித்தர்களும் சாரணர்களும் கந்தர்வர்களும் மனிதர்களும் பன்னகர்களும் ஆறுகளும் ஸமுத்திரங்களும் மலைகளும் உமாபதியை உபாஸிக்கிறார்களோ மூவுலகங்களிலும் புகழ்பெற்றதும் எல்லா உலகத்தாலும் வணங்கப்பெற்றதுமான அந்தக் கோகர்ணத்தை அடைந்து அங்கே ஈசானரைப் பூஜித்து மூன்றுதினங்கள் உபவாஸமிருக்கும் மனிதன் அஸ்வமேதபலனை அடைகிறான்; ப்ரமதகணங்களுக்குத் தலைமையையும் அடைகிறான். ஒரு மனிதன் (அங்கே) பன்னிரண்டுநாள் வஸித்தால் பரிசுத்தாத்மா ஆவான். அங்கிருந்தே மூவுலகத்தாராலும் பூஜிக்கப்பட்ட காயத்ரியினுடைய ஸ்தானத்தை (அடையவேண்டும்.) அங்கே மூன்றுநாள் வஸிப்பவன் ஆயிரம் கோதானபலனை அடைவான். நராதிபனே! பிராம்மணர்களுக்கு உதாரணம் (அந்த விஷயத்தில்) பிரத்யக்ஷமானதே. அரசனே! அப்படியே கலப்புஜாதியாகப் பிறந்தவன் காயத்ரியை (நன்றாக) உச்சரித்தாலும் அது (வசனம்போல) ஸ்வரநியமமில்லாததும்

(கிராம்யகீதம்போல்) ஸ்வரவர்ண விகாரமுள்ளதும் ஆகிறது. பிராம்மணனல்லாதவன் காயத்ரியை உச்சரித்தால் 1 அது அழிந்து விடுகிறது. அடைதற்கரிதான பிரம்மரிஷியான ஸம்வர்த்தருடைய வாவியை அடைந்தால் அழகடைந்தவனுகிருன்; நல்ல செல்வமுள்ளவனும் ஆகிருன். பிறகு, வேணையை அடைந்து மூன்றுநாள் உபவாஸமிருக்கிற மனிதன் மயில்களுடனும் அன்னப்பறவைகளுடனும் கூடின விமானத்தை அடைகிருன். ஒருமனிதன் பிறகு, எப்பொழுதும் ஸித்தர்களால் அடையப்பட்ட கோதாவரியை அடைந்தால் கோமேதபலனைப் பெறுகிருன்; உத்தமமான வாஸுகியின் உலகத்தையும் அடைகிருன். ஒருவன் வேணையின் ஸங்கமத்தில் ஸ்நானம் செய்தால் அஸ்வமேத பலனைப் பெறுவான்; வரதாநதியின் ஸங்கமத்தில் நீராடினல் ஆயிரம் கோதானபலனைப் பெறுவான். பிரம்மஸ்தானத்தை அடைந்து மூன்று தினங்கள் உபவாஸமிருக்கும் மனிதன் ஆயிரம் கோதானபலனை அடைவான்; ஸ்வர்க்கலோகத்தையும் அடைவான். குசப்லவனத்தை அடைந்து ப்ரம்மசர்யமுள்ளவனும் மனஅடக்கமுள்ளவனுமாகி ஸ்நானம் செய்து மூன்றுநாள் வஸிப்பவன் அஸ்வமேதபலனை அடைவான். ஒருமனிதன், பிறகு எந்த இடத்தில் தேவராஜன் நூறு யாகங்களைச்செய்து ஸ்வர்க்கத்தை அடைந்தானே அந்த வனத்தில் க்ருஷ்ணவேணையின் ஜலத்தினுலுண்டான தேவஹ்ரதத்திலும் ஜாதிஸ்மரம் என்கிற மடுவிலும் ஸ்நானம் செய்தால் முற்பிறப்புக்களின் உணர்ச்சியுள்ளவனவான். பாரத! ஒருவன் அவற்றைக்குறித்துச் செல்வதனுலேயே அக்னிஷ்டோம பலனை அடைவான். ஒருவன், பிறகு, ஸர்வஹ்ரதத்தில் ஸ்நானம் செய்தால் ஆயிரம்பசுக்களைத் தானம்செய்தபலனை அடைவான். அதன் பிறகு, பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பதில் பற்றுள்ளவன் மஹாபுண்யை என்கிற வாவியையும் நதிகளுள் சிறந்த பயோஷ்ணியையும் (அடைந்தால்) ஆயிரம்கோதானபலனை அடைவான், அரசனே! ஒருவன், புண்யமான தண்டகாரண்யத்தைஅடைந்து, (அங்குள்ள தீர்த்தத்தில்) ஸ்நானம் செய்ய வேண்டும். பாரத! ஸ்நானம்செய்த அளவிலேயே அவனுக்கு ஆயிரம் கோதானபலன் உண்டாகிறது. ஒருமனிதன் சரபங்காஸ்ரமத்தையும் மஹாத்மாவான சுகருடைய ஆஸ்ரமத்தையும் அடைந்தால் நரகத்தை அடையமாட்டான்; குலத்தையும் சுத்தம்செய்கி

1 விளங்காதென்பது.

றான். ஒருமனிதன், பிறகு, ஜாமதக்னியரால் அடையப்பட்ட சூர்ப்பாரகத்தைக்குறித்துச் செல்லவேண்டும்; ராமதீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால் பலஸுவர்ணங்களைத் தானஞ்செய்த பலனைப் பெறுவான். ஒருவன் நியமமுள்ளவனும் நியமமான ஆகாரமுள்ளவனுமாகி ஸப்தகோதாவரத்தில் ஸ்நானஞ்செய்தால் அதிகமான புண்யத்தைப் பெறுகிறான்; தேவலோகத்தையும் அடைகிறான். ஒருமனிதன், பிறகு, நியமமுள்ளவனும் நியமமான ஆகாரமுள்ளவனுமாகத் தேவபதத்தை அடைந்தால் தேவஸத்ரத்திற்குரிய புண்யத்தையே அடைகிறான். முற்காலத்தில் ஸாரஸ்வத ரிஷியானவர், ப்ரம்மசர்யத்துடன் இந்திரியங்களைஅடக்கித் துங்க காரண்யத்தைஅடைந்து அங்கே (முனிவர்களுக்கு) வேதங்களை ஓதுவித்தார். வேதங்கள் மறந்துபோனபொழுது, எவரால் எது முன்பு கற்கப்பட்டிருந்ததோ அது அனைத்தும், அங்கிரஸின் குமாரரான அவர் அந்தஇடத்தில் ரிஷிகளின்உத்தரீயங்களில் ஸுகமாக நன்கு வீற்றிருந்து ஓங்காரத்தை முறைப்படி நன்குஉச்சரிக்கச் செய்ததால் நன்கு ஞாபகத்துக்கு வந்தது.[1] அந்த இடத்தில் ரிஷிகளும் தேவர்களும் வருணனும் அக்னியும் பிரஜைகளின்பதியும் நாராயணரானஹரியும் அப்படியே மகாதேவரும் மிக்ககாந்தியுள்ள பகவானான பிரம்மதேவரும் தேவர்களுடன் மிக்கதேஜஸுள்ள பிருகுவை யாகம்செய்விப்பதற்காகக் கட்டளையிட்டனர். பிறகு, பகவானானஅவர் அப்பொழுது எல்லாரிஷிகளுக்கும் சாஸ்திரத்தில் காணப்பட்ட செய்கையினால் முறைப்படி புநராதானம் செய்வித்தார். அந்தஇடத்தில் விதிப்படி ஆஜ்யபாகத்தால் அக்னியைத் திருப்திசெய்து தேவர்களும் ரிஷிகளும் கிரமப்படி தங்கள் தங்கள் வாஸஸ்தானத்திற்குச் சென்றார்கள். ராஜஶ்ரேஷ்டனே! அந்தத் துங்ககாரண்யத்தில் ப்ரவேசித்தவுடனே ஸ்த்ரீகளுக்கோ புருஷர்களுக்கோ உள்ளபாவங்களெல்லாம் அழிந்துவிடுகின்றன. அரசனே! தீரனானவன் நியமமுள்ளவனும் நியமமான ஆஹாரமுள்ளவனுமாகி அந்தஇடத்தில் ஒருமாதகாலம் வஸிக்கவேண்டும். அவன் பிரம்மலோகத்தை அடைவான். குலத்தையும் நன்குகரையேற்றுவான். ஒருவன், மேதாவிகத்தைஅடைந்து பித்ருக்களையும் தேவர்களையும் திருப்தியடையச் செய்யவேண்டும். அவன் அக்நிஷ்டோமபலனை அடைகிறான்; ஞாபகசக்தியையும் மேதையையும் அடைகிறான். ஒருவன் இங்கே உலகத்தில் ப்ரஸித்தி

1 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

பெற்ற காலஞ்சரபர்வதத்தைஅடைந்து அங்குள்ளதேவஹ்ரதத்தில் ஸ்நானம்செய்தால் ஆயிரம் கோதானபலனை அடைவான். அரசே! ஒருமனிதன் அந்தக் காலஞ்சரகிரியில் தன்னை ஸ்நானம் செய்விக்கவேண்டும். அவன் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுவான். இதில் ஐயமில்லை. பிரஜைகளைக்காப்பவனே! பிறகு, சிறந்தமலைகளுள் சிறந்ததான சித்ரகூடத்தில் எல்லாப் பாவங்களையும் போக்குகிற [1] மந்தாகினி என்கிற நதியை அடைந்து அதில் நீராடிப் பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பதில் பற்றுள்ளவன் அஸ்வமேதபலனை அடைகிறான்; உத்தமகதியையும் அடைவான். தர்மங்களை அறிந்தவனே! அரசனே! அந்த இடத்திலிருந்து எந்த இடத்தில் பெரிய ஸேனையுள்ள ஸுப்ரம்மண்யர் நித்யம் ஸாந்நித்யம் செய்கிறரோ ஸர்வோத்தமமான அந்தப் பர்த்ருஸ்தானத்தைக்குறித்துச் செல்லவேண்டும். ராஜஸ்ரேஷ்டனே! அங்கே [2] செல்வதனலேயே மனிதன் ஸித்தி அடைகிறான். ஒருமனிதன் கோடிதீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் ஆயிரம் கோதானபலனைப் பெறுவான். ஒருமனிதன் ப்ரதக்ஷிணமாகச் சுற்றிக்கொண்டு ஜ்யேஷ்டஸ்தானத்தை அடைய வேண்டும். அங்கே மஹாதேவரை வணங்கினல் சந்திரன்போல விளங்குகிறான். மகாராஜனே! பரதஸ்ரேஷ்டனே! யுத்தத்தில் ஸ்திரமாயிருப்பவனே! [3] அந்த இடத்திலுள்ள கூபத்தில் ப்ரஸித்தியுள்ள நான்கு ஸமுத்திரங்கள் வஸிக்கின்றன. ராஜேந்திரனே! அதில் நீராடிப் பித்ருக்களையும் தேவர்களையும் அர்ச்சிப்பதில் ஸ்ரத்தையுள்ளவனும் அடக்கப்பட்ட மனமுள்ளவனுமாயிருக்கிற மனிதன் பரிசுத்தனுகி உத்தமகதியை அடைவான். ராஜேந்திரனே! மகாராஜனே! ஒருவன் அந்த இடத்தினின்றும் முற்காலத்தில் எங்கே தசரதருடைய புதல்வரான ராமர் (கங்கையைத்) தாண்டினரோ பெரிதான அந்த ஸ்ருங்கபேரபுரத்தைக் குறித்துச் செல்லவேண்டும். மிக்க புஜபலமுள்ளவனே! அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால் பாவங்களால் விடப்படுகிறான். ஒருமனிதன் பிரம்மசர்யமுள்ளவனும் ஒருவழிப்பட்ட மனமுள்ளவனுமாகிக் கங்கையில் ஸ்நானம்செய்தால் பாவங்களை உதறினவனுகிறான்; வாஜபேயபலனையும் அடைகிறான். பிறகு, சிறந்த புத்தியை உடையவரான மகாதேவருக்கு இருப்பிடமான

[1] மந்தாகினி—சித்ரகூட பர்வதத்தில் ஓடுகிற ஒரு சிற்றாறு. இது கங்கையன்று. [2] ஒரு சொல் விடப்பட்டது. [3] ஒரு சொல் விடப்பட்டது.

முஞ்சவடத்தை அடையவேண்டும். பார்த! ஒருவன் மகாதேவரைத் தரிசித்தும் வந்தனம் செய்தும் பிரதக்ஷிணமாகச் சுற்றிவந்தால் கணங்களுக்குப் பதியாக இருக்கும்பதத்தைப் பெறுவான். கங்கையில் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால் பாவங்களால் நன்குவிடப்படுகிறான். ராஜேந்திரனே! பிறகு, பிரம்மதேவர் முதலிய தேவர்களும் திக்பாலகர்களுடன் கூடின திக்குக்களும் லோகபாலர்களும் ஸாத்தியர்களும் உலகத்தால் நன்குமதிக்கப்பட்ட பித்ருக்களும் ஸநத்குமாரர்முதலிய பரமரிஷிகளும் சுத்தர்களான அங்கிரஸ்முதலிய பிரம்மரிஷிகளும் நாகர்களும் ஸுபர்ணர்களும் ஸித்தர்களும் ஸூர்யன் முதலிய கிரஹங்களும் நதிகளும் ஸமுத்திரங்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் பிரம்மதேவரால் பூஜிக்கப்பட்ட பகவானான ஹரியும் எந்த இடத்தில் ஸாந்நித்தியம்செய்கிறார்களோ ரிஷிகளால் புகழப்பட்ட அந்தப் பிரயாகையை அடையவேண்டும். எல்லாத்தீர்த்தங்களாலும் பூஜிக்கப்பட்ட கங்கையானது எவற்றின் மத்தியில் ப்ரயாகையினின்று வெளிப்பட்டுவருகின்றதோ அந்த மூன்று அக்னிகுண்டங்கள் அவ்விடத்தில் இருக்கின்றன. மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்றதும் ஸூர்யபுத்திரியும் தேவியும் உலகத்தைப் பரிசுத்தமாக்குவதுமான யமுனையானது கங்கையோடு அங்கே கலக்கிறது. கங்கையமுனைகளின் நடுவானது பூமி என்கிற பெண்ணுக்கு [1] ஜகனமென்று கருதப்பட்டது. ரிஷிகள் ப்ரயாகத்தை ஜகனத்தின் முடிவிலிருக்கிற ஜநநேந்திரியமாக அறிகிறார்கள். ப்ரதிஷ்டானத்துடன் கூடின ப்ரயாகம், அப்படியே கம்பளம், அஸ்வதரம், போகவதீதீர்த்தம்ஆகிய இவைகள் பிரம்மதேவருக்கு யாகவேதி. யுத்தத்தில் ஸ்திரமாயிருப்பவனே! அந்த இடத்தில் வடிவெடுத்தவையான வேதங்களும் யஜ்ஞங்களும் தபோதனர்களான ரிஷிகளும் பிரம்மாவை உபாஸிக்கின்றார்கள். தேவர்களும் அவ்வாறே சக்ரவர்த்திகளான அரசர்களும் யாகங்களைச் செய்கிறார்கள். பாரதனே! பிரபுவே! அதனால் ப்ரயாகத்தை மூவுலகங்களிலும் மிக்க பரிசுத்தமென்றும் எல்லாத் தீர்த்தங்களையுங்காட்டிலும் சிறந்ததென்றும் சொல்லுகிறார்கள். ஒருமனிதன் அந்தப்ரயாகதீர்த்தத்தின் மகிமையைக் காதால் கேட்பதாலும் அதன்பெயரைச் சொல்வதாலும் மரண

---

1 மேருப்ருஷ்டத்தைத் தலையாகவுடைய பூமி யென்னும் பெண்ணுக்கு ஹரித்வாரம் முதல் (உறுப்புக்கள் சொல்லி) இந்த இடம், 'ஜகனமாகக் கருதப்பட்டது' என்பது பழைய வுரை.

கால பயத்தினின்றும் பாவத்தினின்றும் விடப்படுகிறான். உல கத்தில் புகழ்பெற்றதான அந்தக் கங்கையமுனைகளின்ஸங்கமத்தில் ஸ்நானம் செய்பவன் ராஜஸூயம் அஸ்வமேதம் என்கிற யாகங் களின் புண்யபலனை அடைகிறான். அது நாற்புறமும் செப்பனிடப் பட்டதான தேவர்களுடைய யாகபூமியன்றோ? பாரத! அந்த இடத்தில் கொடுக்கப்பட்டது சிறிதாயினும் பெரிதாகிறது. ஐயா! வேதவாக்கியத்தாலும் உலகத்தாருடைய வசனத்தாலும் ப்ரயா கத்தில் [1] உயிரை விடுவதைப்பற்றி உன்னுடையபுத்தியானது மாற் றப்படத் தக்கதன்று. குருநந்தன! (ஏனெனில்,) பதினாயிரம் தீர்த்தங்களும் அப்படியே வேறு அறுபதுகோடி தீர்த்தங்களும் இந்தப்ரயாகத்திலேயே ஸாந்நித்யம் செய்கின்றனவென்பது சொல் லப்பட்டிருக்கிறது. நான்குவேதங்களையும் அறிந்தவனுக்கும் உண்மைசொல்லுகிறவர்களுக்கும் எந்தப்புண்யமுண்டோ அந்தப் புண்யத்தை மனிதன் கங்கையமுனைகளின் ஸங்கமத்தில் ஸ்நானம் செய்ததனாலேயே அடைகிறான். அந்த இடத்தில் வாஸுகியி னுடைய போகவதி என்கிற உத்தமதீர்த்தம் இருக்கிறது. அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்பவன் அஸ்வமேதபலனை அடைவான். குருநந்தன! அந்த இடத்தில் கங்கையில் மூன்று உலகங்களிலும் பிரஸித்திபெற்ற ஹம்ஸப்ரபதனதீர்த்தமும் தசாஸ்வமேதிக தீர்த்தமும் இருக்கின்றன. இவற்றுள், எதில் ஸ்நானம் செய்தா லும் கங்கையானது [2] குருக்ஷேத்திரத்திற்குச் சமமானது. கன கலத்தில் அதனிலும் அதிகபுண்யம் வரும். ப்ரயாகத்தில் அதனி லும் மிகப்பெரும் புண்யம் வரும். எவன் கங்கையில் ஸ்நானம் செய்வனோ அவன் நூறு அகார்யங்களைச் செய்திருந்தாலும் அவ னுடைய அந்தத் தீச்செயல்களாலுண்டான பாவங்களனைத்தையும் கங்காதீர்த்தமானது, விறகை நெருப்பு எரிப்பதுபோல எரித்து விடுகிறது. க்ருதயுகத்தில் எல்லா இடமும் புண்யமானது; த்ரேதா யுகத்தில் புஷ்கரம் புண்யமானதென்று கருதப்பட்டது; த்வாபரத் தில் குருக்ஷேத்திரம் புண்யமானது; கலியுகத்தில் கங்கை புண்ய மானதென்று கருதப்பட்டது. புஷ்கரத்தில் தவம்புரியவேண்டும்.

1 'இது காசியில் மரிப்பதுபோலத் தற்செயலாக உயிரை விடுவதைப் பற்றியதேயன்றி, பலாத்காரமாக உயிரை விடுவதான ஹடமரணத்தைப் பற்றியதன்று. ஆதலால், ஹடமரணம் செய்யலாகாது' என்று கூறி, வேதம் ஸ்மிருதி முதலியவற்றிலிருந்து ஆதாரங்காட்டி நிச்சயிப்பது பழைய வுரை.

2 குருக்ஷேத்திரம் தருவது போன்ற புண்யபலனைத் தருமென்பது.

மஹாலயத்தில் தானம் கொடுக்கவேண்டும். மலயமலையிலோ அக்னியில் ஆரோஹணம் செய்யவேண்டும். ப்ருகுதுங்தத்திலோ அநசனவிரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். புஷ்கரத்திலும் குருக்ஷேத்திரத்திலும் கங்கையிலும் மகதங்களிலும் ஒருமனிதன் ஸ்நானம் செய்தால் மேல் ஏழுதலைமுறையாரையும் அப்படியே கீழ் ஏழுதலைமுறையாரையும் கரையேற்றிவிடுகிறான். கங்கையானது வாக்கினால் சொல்லப்பட்டால் பாவஞ்செய்தவனைப் பரிசுத்தனாக்குகிறது; பார்க்கப்பட்டால் மங்களத்தைக் கொடுக்கிறது; ஸ்நானம் செய்யப்பட்டாலும் பானம் செய்யப்பட்டாலும் ஏழுதலைமுறைவரையில் குலத்தைச் சுத்தியடையச்செய்கிறது. அரசனே! ஒருமனிதனுடைய எலும்பானது எவ்வளவு காலம்வரையில் கங்கையின் ஜலத்தைத் தொட்டுக்கொண்டிருக்குமோ அவ்வளவுகாலம் வரையில் அந்தமனிதன் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். ஒருமனிதன் [1] புண்யதீர்த்தங்களையும் புண்யமானக்ஷேத்ரங்களையும் அடைந்து புண்யத்தைப்பெற்றுத் தேவலோகத்தை அடைந்தவனாகிறான். கங்கைக்கு ஒப்பான தீர்த்தம் இல்லை; கேசவரைக் காட்டிலும் மேலான தெய்வம் இல்லை; பிராம்மணர்களைக் காட்டிலும் மேலான வஸ்து இல்லை. இவ்வண்ணம் பிரம்மதேவர் கூறுகிறார். மஹாராஜனே! 'எந்த இடத்தில் கங்கை ஓடுகிறதோ அது தேசம்; அது தபோவனம். கங்கையின்கரையை அடுத்திருக்கிற அந்த இடம் ஸித்திக்ஷேத்ரம்' என்றும் அறியவேண்டும். இது உண்மை. ப்ராம்மணர்கள், ஸாதுக்கள், தனக்கு [2] ஆப்தர்களான ஸ்நேஹிதர்கள், அனுஸரித்துக்கொண்டிருக்கிற சிஷ்யன் ஆகிய இவர்களின் காதில் இதனை ஜபிக்கவேண்டும். இது தன்யமானது; இது பரிசுத்தமானது; இது ஸ்வர்க்கத்துக்கு ஸாதனமானது; இது ஸுகமானது; இது புண்யமானது; இது ரம்யமானது; பாவனமானது; தர்மத்தைவிட்டு விலகாதது; உத்தமமானது; இது மஹரிஷிகளுடைய ரஹஸ்யம்; எல்லாப் பாவங்களினின்றும் மனிதனை விடுவிப்பது. ஒருமனிதன் பிராம்மணர்களுடைய மத்தியில் (இதைக்) கற்றறிந்தால் மாசற்றவனாகி ஸ்வர்க்கத்தை அடைவான். தீர்த்தபரம்பரையைச் சொல்வது ஐச்வர்யத்தைத் தருவது; ஸ்வர்க்கலோகத்தை அடைவதற்கும் ஹிதமானது; அவ்வாறே புண்யமானது; பகைவர்களை அடக்

1 பொருந்தாமையால் 'யதா' என்னும் ஒரு சொல் விடப்பட்டது.

2 'ஆத்மந:' என்பது மூலம்; 'தன்னுடைய குமாரன்' என்பது ஆங்கில மொழிபெயர்ப்பு.

குவது; மங்களகரமானது; சிறந்தமேதையை உண்டுபண்ணுவது. (அப்படிச் சொல்வதனால்), புத்திரனில்லாதவன் புத்திரனை அடைகிறான்; பொருளில்லாதவன் பொருளை அடைவான்; அரசன்பூமியை ஜயிப்பான்; வைஶ்யன் பொருளை அடைவான்; சூத்ரன் விரும்பினவைகளை விரும்பினபடி அடைவான். பிராம்மணன் படித்தால் (வேதசாஸ்திரங்களில்) கரைகாண்கிறான். சுத்தனாக இருந்துகொண்டு தினந்தோறும் இந்தத் தீர்த்தபுண்யத்தைக் கேட்கும் மனிதன் (முந்தின) பலபிறப்புக்களை அறிகிறான். தேவலோகத்திலும் மகிழ்கிறான். அடையக்கூடியவையும் அடைதற்கரியவையுமாக எந்தத் தீர்த்தங்கள் சொல்லப்பட்டனவோ, அவைகளை, மனிதன் எல்லாத் தீர்த்தங்களையும் தரிசனம் செய்யும் விருப்பத்துடன் மனத்தால் அடையவேண்டும். இந்தத் தீர்த்தங்கள் வஸுக்களாலும் ஸாத்யர்களாலும் ஆதித்யர்களாலும் மருத்துக்களாலும் அஶ்வினீதேவர்களாலும் தேவர்களுக்கு ஒப்பான ரிஷிகளாலும் புண்யத்தை விரும்பி ஸ்நானம் செய்யப்பட்டன. குருவம்சத்தில் உதித்தவனே! நல்லவிரதமுள்ளவனே! இவ்வண்ணம் நீயும் நியமமுள்ளவனாகவும் புண்யத்தைப் புண்யத்தால் விருத்தியடையச்செய்பவனாகவும் இந்தவிதியினால் தீர்த்தங்களை அடைவாயாக. சாஸ்திரார்த்தங்களைக்கண்டவர்களான பெரியோர்களால்[1] சுத்தமான அந்தக்கரணங்களுடன் முந்திஇருக்கிற ஆஸ்திக்யத்தாலும் ஶ்ருதிகளின் தர்சனத்தாலும் அந்தத்தீர்த்தங்கள் அடையப்படுகின்றன. சாஸ்திரார்த்தங்களின் உண்மையை அறிந்தவர்களும் பெரியோர்களுமான பிராம்மணர்களுடன் நீ தீர்த்தங்களை அடைவாயாக. கௌரவ்ய! விரதங்களைச்செய்யாதவனும், மனத்தை வசப்படுத்தாதவனும், சுத்தி இல்லாதவனும், திருடனும், வக்ரபுத்தியுள்ள மனிதனும், தீர்த்தங்களில் ஸ்நானம்செய்யார். ஐயா! நல்லநடையுள்ளவனும் எப்பொழுதும் தர்மார்த்தங்களைக் காண்பவனுமான உன்னாலோ எல்லாப்பித்ருக்களும் பிரபிதாமஹர்களும் கரையேற்றப்பட்டார்கள். வேந்தே! தர்மங்களை அறிந்தவனே! உன்னுடைய[2] தகப்பனும் பாட்டனும் எல்லாமுப்பாட்டன்மார்களும் பிரம்மாவை முதன்மையாகக்கொண்டவர்களும் ரிஷிகளுடையகூட்டங்களோடு கூடியவர்களுமான தேவர்களும் உன்னுடையதர்மத்தால் நித்யமே மகிழ்விக்கப்பட்டார்கள். இந்திரனுக்கு ஒப்பானவனே! நீ வஸுக்களுடைய உலகங்களை அடைவாய். பீஷ்ம! பூலோகத்தில் பெரிதும் அழியா

1 வேறுபாடம். 2 அதிகபாடமான அரைஶ்லோகம் விடப்பட்டது.

ததுமான கீர்த்தியையும் அடைவாய்' என்றுகூறினர். பகவானான புலஸ்தியரிஷியானவர் ப்ரீதியுள்ளமனத்துடன் இவ்வண்ணம் சொல்லிவிட்டுப் பீஷ்மரிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் அந்தஇடத்திலேயே மறைந்தார். கௌரவர்களுள் சிறந்தவனே! சாஸ்திரங்களின் உண்மைப்பொருளைக் கண்டறிந்தவரானபீஷ்மரும் புலஸ்தியருடைய வசனத்தினுல் பூமியைச் சுற்றி வந்தார். மிக்கமகிமையுள்ளதும் மிக்கபுண்யமானதும் எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கின்றதுமான இந்தத்தீர்த்தயாத்திரையானது இவ்வண்ணம் பிரயாகத்தில் முடிவடைகிறது. எந்தமனிதன் இந்தவிதியினுல் பூமியில் ஸஞ்சரிப்பனே அவன் இறந்தபின் நூறுஅச்வமேதபலனை முழுமையையும் அனுபவிக்கிருன். குந்தீநந்தனனே! கௌரவர்களுள் மிகச்சிறந்தவரானபீஷ்மர் முன்பு அடைந்த தர்மத்தைவிட எட்டுமடங்கான உத்தமதர்மத்தை அடைவாய். நீ ரிஷிகளையும் அழைத்துக்கொண்டு போகிறவனுயிருத்தலால் உனக்கு எண்மடங்கு பலன் உண்டாகும். பாரத! குருநந்தன! ராக்ஷஸர்களுடைய கூட்டங்களால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கிற இந்தத்தீர்த்தங்கள் உன்னைத்தவிர மற்றஅரசர்களால் அடையமுடியாதவைகள். எல்லாத்தீர்த்த சரிதங்களுடனும் கலந்திருப்பதான தேவர்கள் ரிஷிகள் இவர்களுடைய இந்தச்சரித்திரத்தை எவன் படிப்பனே அல்லது கேட்பனே அவன் எல்லாப் பாவங்களாலும் விடப்படுகிருன். மகாராஜனே! ரிஷிகளுள் முக்கியர்களான வால்மீகி, கச்யபர், ஆத்ரேயர், குண்டஜடரர், விச்வாமித்ரர், கௌதமர், அஸிதர், தேவலர், மார்க்கண்டேயர், காலவர், பரத்வாஜர், வஸிஷ்டர், உத்தாலகமுனிவர், புத்ரருடனிருக்கும் சௌனகர், தவசிகளுள் சிறந்த வ்யாஸர், முனிச்ரேஷ்டரான துர்வாஸர், மகாதபஸ்வியானஜாபாலி ஆகிய தபோதனர்களான இந்த ரிஷிச்ரேஷ்டர்களனைவரும் எந்தத்தீர்த்தவிஷயத்தில் எப்பொழுதும் உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருர்களோ அப்படிப்பட்ட இந்தத்தீர்த்தங்களைக்குறித்து இந்தரிஷிகளுடன் தொடர்ந்துசெல்வாயாக. மகாராஜனே! அளவற்றதேஜஸுள்ள இந்த லோமசமகரிஷியானவர் வருவார். இவருடன் தொடர்ந்து செல்வாயாக. தர்மங்களை அறிந்தவனே! என்னேடுகூடவும் இந்தத்தீர்த்தங்களை வரிசைப்படி அடைவாயாக. (சந்தனுவாகப் பிறந்த) [1] மகாபிஷனென்கிற அரசன்போல மிக்ககீர்த்தியை அடை

---

1 வேறுபாடம்.

வாய். கௌரவர்களுள் சிறந்தவனே! தர்மாத்மாவான யயாதி போலவும் அரசனான புரூரவன்போலவும் நீ ஸ்வதர்மத்தினால் பிர காசிக்கிறாய். அரசனான பகீரதன்போலவும் ப்ரஸித்திபெற்ற ராமர் போலவும் நீ எல்லா அரசர்களையுங்காட்டிலும் (மேன்மையுள்ளவ னாக) ஸூர்யன்போல விளங்குகிறாய். மஹாராஜனே! மனுவும் இக்ஷ்வாகுவும் மிக்ககீர்த்தியுள்ளபூருவும் வேனகுமாரனனப்ருது வும்போல நீயும் புகழ்பெற்றிருக்கிறாய். முற்காலத்தில் தேவராஜன் எவ்வாறு வ்ருத்ரனைக்கொன்று எல்லாப்பகைவர்களையும் எரித்து மனக்கவலையைவிட்டவனாகி மூவுலகங்களையும் காப்பாற்றினானோ அவ்வாறு நீ பகைவர்களை நாசம்செய்து ப்ரஜைகளைப் பரிபாலிப் பாய். தாமரை மலர்போன்ற கண்களையுடையவனே! உன்தொழி லால் ஜயிக்கப்பட்ட பூமியை அடைந்து கார்த்தவீர்யார்ஜுனனைப் போலத் தர்மத்தினால் க்யாதியைஅடைவாய்' என்று கூறினார்.

மகாராஜனே! ரிஷியான நாரதபகவான் அரசரை இவ்வண் ணம் தேற்றி அனுமதி பெற்றுக்கொண்டு, அந்தஇடத்திலேயே மறைந்தார். தர்மாத்மாவான யுதிஷ்டிரரும் அந்தவிஷயத்தையே எண்ணிக்கொண்டு, தீர்த்தயாத்ரையைப்பற்றிய புண்யத்தை ரிஷி களுக்குத் தெரிவித்தார்.

எண்பத்துநான்காவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் அர்ஜுனனை விட்டுப்பிரிந்ததனால் தமக்குக் காம்யகவனத் தில் வஸிக்க விருப்பமின்மையைக்கூறி வாஸத்துக்காக வேறுஇடத்தைச் சொல்லும்படி தௌம்யரை வேண்டினது.)

யுதிஷ்டிரராஜர், தம்பிமார் புத்திமானான நாரதர் ஆகிய இவர் களின் கருத்தைஅறிந்து பிரம்மதேவருக்கு ஒப்பானதௌம்யரைப் பார்த்து, 'புருஷச்ரேஷ்டனும் ஸத்யமான பராக்கிரமமுள்ளவனும் மிக்கபுஜபலமுள்ளவனும் அளவுகடந்த தைர்யமுள்ளவனுமான அந்தஜிஷ்ணுவானவன் அஸ்திரங்களைப்பெறுவதற்காகத் தேசாந் தரத்திற்கு என்னால் அனுப்பப்பட்டான். அந்தஅர்ஜுனன் வீர்ய முள்ளவன்; அன்புள்ளவன்; சமர்த்தன்; தவத்தைப்பொருளாகக் கொண்டவன்; பிரபுவான வாஸுதேவரைப்போல அஸ்திரத்தில்

மிக்கதேர்ச்சியுள்ளவன். பிராம்மணரே! நான் இந்த இரண்டுக்ருஷ்ணர்களையும் பகைவர்களைக் கொல்லுகிறவர்களென்றும் மிக்க வல்லமையுள்ளவர்களென்றும் அறிகிறேன். அவ்வாறே, வ்யாஸரும், பகைவரைவாட்டுபவர்களான வாஸுதேவர் தனஞ்சயன்இருவரையும் [1] த்ரியுகர்களென்றும் நேரேவந்த இரண்டு விஷ்ணுக்களென்றும் அறிந்திருக்கிறார். எனக்கு எப்பொழுதும் அவர்களைப் புகழ்ந்துசொல்லிய நாரதரும் அவ்வாறே அறிந்திருக்கிறார். அவ்வண்ணம் நானும் அவ்விருவரையும் நரநாராயணரென்னும் ரிஷிகளென்று அறிகிறேன். 'இவன் ஸாமர்த்தியமுள்ளவன்' என்றெண்ணி, என்னால் அந்தஅர்ஜுனன் அனுப்பப்பட்டான். தேவகுமாரனான அர்ஜுனன் இந்திரனைவிடக் குறைந்தவனல்லனென்றெண்ணித் தேவர்களுக்குத்தலைவனான இந்திரனைப் பார்ப்பதற்கும் இந்திரனிடத்திலிருந்து அஸ்திரங்களைப் பெறுதற்கும் அனுப்பப்பட்டான். அதிரதர்களான பீஷ்மத்ரோணர்களும் க்ருபரும் (பிறரால்) ஜயிக்கமுடியாத அஶ்வத்தாமாவும் திருதராஷ்டிரபுத்திரனால் நன்கு தாங்கப்பட்டவர்கள்; மிக்க பலசாலிகள்; எல்லாரும் வேதங்களை அறிந்தவர்கள்; சூரர்கள்; அப்படியே எல்லாரும் எல்லாஅஸ்திரங்களிலும் நல்லதேர்ச்சியுடையவர்கள்; எல்லாரும் மகாரதர்கள்; முக்கியர்கள்; எல்லாரும் ஶ்ரமத்தை ஜயித்தவர்கள். மஹாபலசாலிகளான அவர்கள் எப்பொழுதும் அர்ஜுனனோடு யுத்தம் செய்யவிருப்பமுள்ளவர்கள். திவ்யாஸ்திரங்களை அறிந்தவனும் ஸூதபுத்திரனும் மஹாரதனுமான அந்தக் கர்ணனும் அர்ஜுனனுடன் போர்புரிவதில் விருப்ப

---

1 'கிருதயுகத்தில் தர்மருடைய மனைவியான மூர்த்தியென்பவளிடம் அவதரித்த நரநாராயணர்கள். அவர்களே த்வாபரயுக முடிவில் கேசவரும் அர்ஜுனனுமாகப் பிறந்தனர். ஆகவே மூன்று யுகத்திலுமிருந்த புராணபுருஷர்; நம்போன்ற மனிதரல்லர்; அல்லது, எல்லாவற்றுக்கும் தலைமை, ஞானம், புகழ், செல்வம், வைராக்யம், தர்மம் ஆகிய பகமென்னும் பெயருள்ள ஆறு ஐஶ்வர்யமுள்ளவர்; அல்லது முற்றறிவுடைமை, த்ருப்தி, அநாதியானபோதம், ஸ்வதந்திரமுடைமை, என்றும் குறையாத ஆற்றலுடைமை, முடிவில்லாத ஆற்றலுடைமை என்னும் ஆறு அங்கங்களுள்ளவர். சிலர், 'ஞானம் ஐஶ்வர்யம், வீர்யம் பலம், தேஜஸ் பாராக்ரமம் என்னும் மூன்று இரட்டைகளுள்ளவர்' என்பர்; இது ஆதாரமில்லாதது; கூறியது கூறலென்னும் குற்றமுமாகும்; ஆதலால் பொருந்தாது' என்பது பழையவுரை.

முள்ளவன். அஸ்திரவேகமாகிற காற்றின் பலமுள்ளதும் பாணங்களாகிற ஜ்வாலையுள்ளதும் கையில் நாண்கயிறு உரைவதனாலுண்டாகும் சப்தமாகிற ஒலியுள்ளதும் ரஜோகுணத்தின் கார்யமான க்ரோதமாகிற புகையுள்ளதும் அஸ்திரங்களாகிற வீழ்ச்சியுள்ளதும் திருதராஷ்டிர புத்திரர்களாகிற காற்றினால் மூட்டப்பட்டதுமான எந்தக் (கர்ணனாகிறநெருப்பானது) காலனால்வைக்கப்பட்டஊழித் தீப்போல என்னுடைய ஸைன்யரூபமான துரும்புக்காட்டை ஸந்தேகமில்லாமல் எரிக்கப்போகிறதோ நன்றாகஎரிகிற அந்தக் கர்ணனாகிற நெருப்பைக் கிருஷ்ணனாகிற காற்றினால் எழுப்பப்பட்டதும் திவ்யாஸ்திரங்களாகிற [1]மின்னலுள்ளதும் பெரியதும் வெண்மையான குதிரைகளாகிற கொக்குக்களுள்ளதும் காண்டீவமென்கிற வானவில்லிருப்பதனால் தாங்கமுடியாததும் முழக்கமுள்ளதும் கிளம்பினதுமான இந்த அர்ஜுனனாகிற மேகமானது யுத்தத்தில் பாணமாகிற (நீர்த்) தாரைகளால் அவிக்கப்போகிறது. பகைவரின் பட்டணங்களை ஜயிப்பவனான அந்தப் பீபத்ஸுவானவன் இந்திரனிடத்தினின்று நேரிலேயே திவ்யாஸ்திரங்களனைத்தையும் முறைப்படி பெறுவான். அவன் அவர்களனைவருக்கும் போதுமானவனென்று எனக்கு எண்ணம் இருக்கிறது. சண்டையில் பகைவர்களுக்குப் பிரதிசெய்வது அவனுக்குப் பெரியகாரியமன்றன்றோ? அப்படிப்பட்ட நாங்கள் எல்லாரும், அஸ்திரங்களைப் பெற்றுக் கொண்டவனும் பகைவரை அடக்குபவனுமான [2] அர்ஜுனனைக் காணவில்லை. பீபத்ஸுவானவன் (கார்ய) பாரத்தைத்தாங்கி வருந்துகிறானல்லவா? மனிதருட்சிறந்தவரே! நாங்கள் அந்த வீரனை விட்டு இந்தக் காம்யகவனத்தில் த்ரௌபதியுடன் நல்லிருப்பை அடைகிறோமில்லை. நாங்கள் ஸத்யமான விக்கிரமமுள்ளவனும் வீரனுமான அர்ஜுனனை, மழையில் விருப்பமுள்ளவர்கள் மேகத்தை எதிர்பார்ப்பதுபோல எதிர்பார்த்துக்கொண்டு சிறிது காலம் வாஸம் செய்யக்கூடியதும் நல்லதும் மிகுதியான ஆகாரங்களுள்ளதும் பழங்களுள்ளதும் சுத்தமானதும் அழகியதும் புண்யஞ்செய்தவர்களால் அடையப்பட்டதுமான அந்த வேறுகாட்டைத் தேவரீர் சொல்வீராக. [3] பிராம்மணர்களிடமிருந்து கேட்கப்

---

1 ஜ்வலநः' என்பது மூலம்.

2 'அர்ஜுனனைப் பார்க்கப்போகிறோம். பீபத்ஸுவானவன் கார்ய பாரத்தைத்தாங்கி வாட்டமடையமாட்டான்' என்பது இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு. 3 'ப்ரதிஸ்ருதாः' என்பது மூலம்.

பட்ட பற்பலவிதமான சில ஆஸ்ரமங்களையும் தடாகங்களையும் நதிகளையும் அழகியமலைகளையும் சொல்வீராக. பிராம்மணரே! எனக்கு அந்த அர்ஜுனனைவிட்டு இந்தக் காம்யகவனத்தில் வாஸம்செய்வது ருசிக்கவில்லை. வேறுதிசையை நோக்கிச்செல்வோம்' என்று கூறினர்.

எண்பத்தைந்தாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(தௌம்யர் யுதிஷ்டிரருக்குக் கீழ்த்திசையிலுள்ள பற்பல தீர்த்தங்களைக் கூறியது.)

(அர்ஜுனனைக் காண்பதில்) ஆவலுள்ளவர்களும் தீனமான மனமுள்ளவர்களுமான அந்தப் பாண்டவர்களனைவரையும் பார்த்துப் பிருஹஸ்பதிக்கு ஒப்பான தௌம்யர் அவ்வாறு தேறுதலடையச்செய்து கூறலானர். பரதஸ்ரேஷ்டனே! தோஷமற்றவனே! அரசனே! நரேஸ்வரனே! எவைகளைச் சொல்லுகின்றஎன்னிடத்தினின்று கேட்டு நீ இந்த த்ரௌபதியுடனும் பிராதாக்களுடனும் சோகம் நீங்கினவனுவையோ பிராம்மணர்களால் அங்கீகரிக்கப்பட்ட அந்தப் புண்யாஸ்ரமங்களையும் திசைகளையும் தீர்த்தங்களையும் மலைகளையும் சொல்லுகின்ற என்னிடத்தினின்று கேட்பாயாக. பாண்டவ! அவைகளைக் கேட்பதனாலேயே நீ புண்யத்தை அடைவாய். நரஸ்ரேஷ்டனே! அவைகளுக்கே சென்றால் நூறுமடங்கு புண்யத்தை அடைவாய். வேந்தனே! யுதிஷ்டிர! தேவகணங்களாலும் ரிஷிகணங்களாலும் அடையப்பட்ட அழகிய கீழ்த்திசையைக் கேள். தோற்றினவரையில் அதனை உனக்குச் சொல்லுவேன். பாரத! எந்தத்திசையில் தனித்தனியாகத் தேவர்களுடைய புண்யதீர்த்தங்கள் இருக்கின்றனவோ தேவர்களாலும் ரிஷிகளாலும் பிரியத்துடன் அடையப்பட்ட அந்தக் கீழ்த்திசையில் நைமிஷம் இருக்கிறது. எந்தத்திசையில் புண்யமானதும் அழகியதும் தேவர்களாலும் ரிஷிகளாலும் அடையப்பட்டதுமான அந்தக் கோமதீநதியும் தேவர்களுடைய யாகபூமியும் ஸூர்ய புத்திரனுன யமனுடைய யஜ்ஞபசுவின் மாரணஸ்தானமும் இருக்கின்றனவோ, எதில் மங்களமானதும் தேவர்களாலும் ரிஷிகளாலும் அடையப்பட்டதுமான பிரம்மஸரஸ் இருக்கிறதோ

அந்தத் திசையில் புண்யமான கிரிவரம் இருக்கிறது. புருஷ ஶ்ரேஷ்டனே! முன்னோர்கள் எவனுடையவிஷயத்தில், 'பல புத்திரர்களை விரும்பவேண்டும்; ஒருவனாவது கயைக்குப்போவான்; ஒருவனாவது [1] கௌரிஎன்கிற கன்னியை மணந்துகொள்வான்; ஒருவனாவது நீலவ்ருஷத்தை உத்ஸர்ஜனம்செய்வான்; ஒருவனாவது, தன்ஸந்ததியினால், முந்திய பத்துத்தலைமுறையாரையும் பிந்திய பத்துத்தலைமுறையாரையும் கரையேற்றுகிறான்' என்று சொல்லுகிறார்களோ ராஜரிஷிகளால் பூஜிக்கப்பட்ட அந்தக்கயனும் இருக்கிறான். அரசே! எந்தஇடத்தில் பித்ருக்களைஉத்தேசித்துக் கொடுக்கப்படும் கவ்யங்களை அக்ஷயமாகச்செய்கிற அந்தஆலமரம் இருக்கிறதென்று பிராம்மணர்கள் சொல்லுகிறார்களோ அந்த இடத்தில் ஒரு மகாநதியும் இருக்கிறது; அப்படியே கயனுடைய சிரஸாும் இருக்கிறது. பிரபுவே! எந்தஇடத்தில் பித்ருக்களை உத்தேசித்துக் கொடுக்கப்பட்ட அன்னமானது அக்ஷயமாகிறதோ புண்யஜலத்துடன்கூடின பல்கு என்கிற அந்த மகாநதியும் அந்த இடத்தில் இருக்கிறது. பரதஶ்ரேஷ்டனே! தபோதனரான விஶ்வாமித்திரர் எந்தநதியில் பிராம்மணத்தன்மையை அடைந்தாரோ அதிகமானகிழங்குகளும் பழங்களுமுள்ள அந்தக் கௌசிகீநதி இருக்கிறது. பகீரதமகாராஜன் எந்தஇடத்தில் எந்தநதியின்கரையில் அதிக தக்ஷிணைகளுள்ள பல யாகங்களால் தேவர்களைப் பூஜித்தானோ அந்தஇடத்தில் அந்தப் புண்யமான கங்காநதி இருக்கிறது. குருவம்சத்தில் உதித்தவனே! எந்த இடத்தில் குசிகவம்சத்தில் பிறந்தவரான விஶ்வாமித்ரர் [2] இந்திரனோடு யாகம்செய்தாரோ அந்த உத்பலாவதத்தைப் பாஞ்சால நாட்டிலுள்ளதாகச் சொல்லுகிறார்கள். பகவானான பரசுராமர் மனிதர்களின் ஐஶ்வரியத்தை மீறி இருக்கிற விஶ்வாமித்திருடைய அந்த ஐஶ்வர்யத்தைக்கண்டு எந்த இடத்தில் (அவரை) வம்சத்தை அனுஸரித்து அவ்வாறு புகழ்ந்தாரோ அந்தக் கான்யகுப்ஜத்தில் விஶ்வாமித்ரர் இந்திரனுடன் ஸோமரஸத்தைப் பானம் செய்தார். பிறகு, அவர் க்ஷத்திரியஜாதியினின்று விலகினார்; 'பிராம்மணனாகிறேன்' என்றும் சொன்னார். வீரனே! எந்த இடத்தில் பூதாத்மாவான பிரம்மதேவர் முந்தியே யாகம் செய்தாரோ உலகங்களில் பிரஸித்திபெற்ற அந்தக் கங்கையமுனைகளின் ஸங்கமம்

1 எட்டுவயதுப்பெண். 'அஶ்வமேதம் செய்வான்' என்பது வேறு பாடத்தின் பொருள். 2 'புத்ரனோடு' என்பது வேறுபாடம்.

பவித்ரமானது(=ப்வியென்னும் வஜ்ராயுதம்போன்ற பிறப்பு இறப்பு முதலிய துக்கங்களினின்று காப்பாற்றுவது); ரிஷிகளால் அடையப் பட்டது; தர்மம் வளரக் காரணமானது; பாவத்தைப்போக்குவது; சிறந்தது; பரதர்களுள் மிகச்சிறந்தவனே! அந்தப் (பிரம்மதேவர் யாகம்செய்த ஸ்தலமாக இருப்பதால்) பிரயாகமென்று பிரவித்தி பெற்றது. ராஜஸ்ரேஷ்டனே! அரசனே! அந்தப்ரயாகத்தில் அகஸ் தியருடைய சிறந்த ஆஸ்ரமம் இருக்கிறது. அப்படியே ரிஷிகளால் ப்ரகாசிக்கின்ற அந்தத் தாபஸாரண்யமும் இருக்கிறது. காலஞ்சர கிரியில் பெரிதும் அழகியதும் பரிசுத்தமானதும் மலைகளுள்சிறந்த தும் மங்களகரமானதுமான ஹிரண்யபிந்து என்கிற அகஸ்தியபர்வ தம் சொல்லப்பட்டது. கௌரவ்ய!மஹாத்மாவான பரசுராமருக்கு இருப்பிடமான மஹேந்திரமென்கிறமலையும் இருக்கிறது. குந்தீநந் தன! அந்த மகேந்திரகிரியில் முந்தியே பிரம்மதேவர் யாகம்செய் தார். யுதிஷ்டிரனே! பிரஜைகளுக்கு அதிபதியே! எந்தஇடத்தில் புண்யமான பாகீரதியானது மணிகர்ணிகைஎன்கிற ஸரஸில் ப்ரவே சித்ததோ, எந்தஇடத்தில் புண்யமானதும் பாவத்தை உதறினவர் களால் நிறைந்ததுமான அந்தப்பாகீரதி பிரம்மசாலையென்று பிர வித்திபெற்றதோ அந்த இடத்தில் அந்தப்பாகீரதியினுடைய தர் சனமும் புண்யமானது. பரிசுத்தமானதும் மங்களத்தை உண்டு பண்ணுகிறதும் உலகத்தில் பிரவித்திபெற்றதும் தொன்றுதொட் டிருப்பதும் மிகச்சிறந்ததுமான மதங்கருடைய கேதாரமென்னும் பெரிய ஆஸ்ரமமும் இருக்கிறது. எந்தஇடத்தில் தாகம்கொண்ட நிஷதராஜன் ஜலத்தையும் ஸுகத்தையும் அடைந்தானே, எந்த இடத்தில் புண்யமானதும் ரிஷிகளால் விளங்குகின்றதுமான தேவ வனம் இருக்கிறதோ, எந்த இடத்தில் மலையுச்சியில் பாகுதாநதியும் நந்தையும் பெருகுகின்றனவோ மிகுதியான கிழங்குகளும் பழங் களும் ஜலமுமுள்ள அழகிய அந்தக் குண்டோதமென்கிறமலை இருக்கிறது. மகாராஜனே! கீழ்த்திசையிலுள்ள தீர்த்தங்களும் நதி களும் மலைகளும் புண்யமான ஆயதனங்களும் என்னால் உனக்குச் சொல்லப்பட்டன. மற்ற மூன்றுதிக்குக்களிலுமிருக்கிற புண்ய மான தீர்த்தங்களையும் நதிகளையும் மலைகளையும் புண்யமான ஆய தனங்களையும் என்னிடமிருந்து கேள்.

எண்பத்தாறுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(தௌம்யர் தென்திசையிலுள்ள பற்பல தீர்த்தங்களை யுதிஷ்டிரநுக்குச் சொல்லியது.)

பாரத! எந்தத்திசையில் புண்யமானதும் அனேக உத்யான வனங்களுள்ளதும் மிக்கஜலமுள்ளதும் தவசிகள் வஸிப்பதும் மங்களகரமுமான கோதாவரீநதியானது சொல்லப்படுகிறதோ அந்தத் தென்திசையிலுள்ளவையும் என்புத்திக்கு எட்டினவரையில் விரிவாகக் கூறப்படுகின்றவையுமான அந்தப் புண்யதீர்த்தங்களைக் கேள். மிருகங்களாலும் பக்ஷிகளாலும் சூழப்பட்டவையும் தவசிகளுடைய ஆஶ்ரமங்களால் அலங்கரிக்கப்பட்டவையும் பாபபயத்தைப் போக்குகின்றவையுமான வேணை, பீமரதி என்கிற நதிகள் இருக்கின்றன. பரதஶ்ரேஷ்டனே! ரம்யமான துறைகளுள்ளதும் அதிக ஜலமுள்ளதும் ப்ராம்மணர்களால் அடையப்பட்டதுமான பயோஷ்ணி என்கிற அந்த ந்ருகனென்னும் ராஜரிஷியினுடைய நதியும் இருக்கிறது. மேலும், மகாயோகியும் மிக்க புகழுள்ளவருமான மார்க்கண்டேயர் இங்கே யாகம் செய்கின்ற ந்ருகனுடைய முன்னிலையில் பூபதியான அந்த ந்ருகனுடைய வம்சத்தைப் பற்றிய காதையைப் பாடினாரென்று நாம் கேட்டிருக்கிறோம். பயோஷ்ணியிலுள்ள உத்தமமான வராஹ தீர்த்தத்தில் யாகம் செய்கின்ற ந்ருகனுடைய யாகத்தில், இந்திரன் ஸோமபானத்தால் களிப்படைந்தான்; பிராம்மணர்கள் தக்ஷிணைகளால் களிப்படைந்தார்கள்; மருத்துக்கள் பரிமாறினார்கள்; தேவர்கள் ஸதஸ்யர்களாக இருந்தார்கள். பயோஷ்ணியின் ஜலமானது, கொண்டுவரப்பட்டதானாலும் (அங்கேயே) தரையிலிருப்பதானாலும் காற்றினால் வீசப்பட்டதானாலும் (அதனை உபயோகித்தவனுக்கு) மரணம் வரையிலுள்ள பாவத்தைப் போக்குகிறது. ஒருவன், எங்கே ஸ்வர்க்கத்தைக்காட்டிலும் மிகஉயர்ந்ததும் மாசற்றதும் ஆத்மாக்களின் உஜ்ஜீவனார்த்தமாக ஏற்படுத்தப்பட்டதும் சிவதனமுமான 1 விஷாணமிருக்கிறதோ அங்கே அதனைத்தரிசித்தால் மனிதன் சிவபுரத்தை அடைவான். ஜலம் மிகுதியாகவுள்ள கங்கை முதலிய

1 விஷாணம் என்பது சிவனுடைய வடிவம் என்பது இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு.

எல்லா நதிகளும் ஒருபக்கம், (எல்லாத்)தீர்த்தங்களையுங்காட்டிலும் புண்யமான பயோஷ்ணியானது ஒருபக்கம் என்பது எனது எண்ணம். மிகுதியான கிழங்குகளும் கனிகளுமுள்ளதும் மங்களகரமானதும் புண்யமுமான மாடரருடையவனம் இருக்கிறது. பரதஸ்ரேஷ்டனே! வருணஸ்ரோதஸமென்கிற மலையில் யூபஸ்தம்பமும் இருக்கிறது. ப்ரவேணியின் வடபாகத்திலும் அவ்வாறே புண்யமான கண்வாஸ்ரமத்திலும் தவசிகளுடைய அரண்யங்கள் நான் கேட்டிருந்தபடி சொல்லப்பட்டன. அப்பா! சூர்ப்பாரகத்தில் மகாத்மாவான ஜமதக்னியின் யாகவேதி இருக்கிறது. பாரத! அழகிய பாஷாணதீர்த்தையும் புரஸ்சந்த்ரையும் இருக்கின்றன. கௌந்தேய! அந்த இடத்திலேயே பலஆஸ்ரமங்களுள்ள அசோகதீர்த்தமும் இருக்கிறது. யுதிஷ்டிர! பாண்டியதேசத்தில் அகஸ்திய தீர்த்தமும் வருணதீர்த்தமும் இருக்கின்றன. புருஷஸ்ரேஷ்டனே! பாண்டியநாட்டிலேயே புண்யமான குமாரீதீர்த்தங்கள் சொல்லப்பட்டன. குந்தியின் புதல்வனே! தாம்ரபர்ணியைப் பற்றிச் சொல்லுவேன்; அதனைக்கேள்: பாரத! மோக்ஷபலனை விரும்புகிற தேவர்களால் எந்த இடத்தில் ஆஸ்ரமத்தில் தவம் செய்யப்பட்டதோ கோகர்ணமென்று மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற அந்த க்ஷேத்திரம் இருக்கிறது. ஐயா! அவ்விடத்தில், குளிர்ந்த ஜலமுள்ளதும் அதிக ஜலமுள்ளதும் புண்யமானதும் மங்களகரமானதும் மனத்தை அடக்காத மனிதர்களால் அடைய மிகஅரியதுமான அந்தமடு இருக்கிறது. அந்த இடத்திலுள்ள தேவஸஹமென்கிறகிரியில் மரங்களாலும் புல் முதலியவைகளாலும் நிறைந்ததும் கனிகளும் கிழங்குகளுமுள்ளதும் புண்யமானதுமான அகஸ்தியசிஷ்யருடைய ஆஸ்ரமம் இருக்கிறது. அந்தஇடத்தில் காந்தியுள்ளதும் மணிமயமானதும் மங்களமானதுமான வைடூர்யமலை இருக்கிறது. ஏராளமான கிழங்குகளும் பழங்களும் ஜலமுமுள்ள அகஸ்தியருடைய ஆஸ்ரமமும் இருக்கிறது. நராதிபனே! ஸௌராஷ்டிரதேசத்திலுள்ள புண்யமான ஆயதனங்களையும் ஆஸ்ரமங்களையும் நதிகளையும் தடாகங்களையும் சொல்லுவேன். பிராம்மணர்கள் அந்தஇடத்தில் சமஸோத்பேதனத்தையும் ஸமுத்ரத்தில் மூவுலகங்களிலும் ப்ரக்யாதிபெற்ற பிரபாஸதீர்த்தத்தையும் சொல்லுகின்றனர். அந்தஇடத்தில் தவசிகளால் வஸிக்கப்பட்ட மங்களகரமான பிண்டாரகம் இருக்கிறது. விரைவில் ஸித்தியை உண்டுபண்ணுகிறதும் பெரிது

மான உஜ்ஜயந்தமென்கிறமலையும் இருக்கிறது. யுதிஷ்டிர! அந்த உஜ்ஜயந்தகிரியில் தேவரிஷிகளுள் சிறந்தவரான நாரதரால் சொல்லப்பட்ட புராதனமான ஸ்லோகம் ஒன்று கேட்கப்படுகிறது. அதை நீ தெரிந்துகொள். (அதன்பொருள்), 'மிருகங்களாலும் பக்ஷிகளாலும் அடையப்பட்டதும் புண்யமானதுமான ஸௌராஷ்ட்ரதேசத்திலுள்ள உஜ்ஜயந்தமென்கிற பர்வதத்தில் தவத்தால் வாட்டப்பட்ட மேனியை உடையவன் ஸ்வர்க்கலோகத்தில் கொண்டாடப்படுகிறான்' என்பது. லக்ஷ்மியோடிருப்பவரும் பாற்கடலை இருப்பிடமாகக்கொண்டவருமான இந்த நாராயணர் ஆதிசேஷனென்கிற கட்டிலைவிட்டு மதுராபட்டணத்திற்கு வந்துவிட்டாரன்றோ. எந்தப் பட்டணத்தில் புராணரும் தேவருமான இந்த மதுஸூதனர் நேரில் வஸிக்கிறாரோ அந்தப் புண்யமான துவாரகையும் அங்கே இருக்கிறது. அந்தக் கோவிந்தர் ஸநாதனமான தர்மஸ்வரூபியன்றோ? எந்தப்பிராம்மணர்கள் வேதங்களை அறிந்திருக்கிறார்களோ, எந்த ஜனங்கள் வேதாந்தசாஸ்திரத்தை உணர்ந்திருக்கிறார்களோ அவர்கள் மஹாத்மாவான வாஸுதேவரை ஸநாதனமான தர்மமென்று சொல்லுகிறார்கள். கோவிந்தர் பரிசுத்தவஸ்துக்களுள் சிறந்த பரிசுத்தவஸ்துவென்று சொல்லப்படுகிறார். தேவர்களுக்குத் தேவரும் ஸநாதனருமான இந்தப்புண்டரீகாக்ஷர் மூவுலகங்களிலும் புண்யங்களுக்கும் புண்யமும் மங்களங்களுக்கும் மங்களமுமாயிருக்கிறார். அழிவற்ற உருவமுள்ளவரும் அழியக்கூடிய வஸ்துக்களில் வியாபித்திருப்பவரும் க்ஷேத்ரஜ்ஞரும் பரமேஸ்வரரும் மனத்தினால் நினைக்கமுடியாத ஸ்வரூபமுள்ளவரும் மதுவென்கிற அஸுரனை வதம்செய்தவருமான ஸ்ரீ ஹரியானவர் அவ்விடத்திலேயே இருக்கிறார்.

எண்பத்தேழாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(தௌம்யர் மேல்திசையிலுள்ள தீர்த்தங்களை யுதிஷ்டிரனுக்குக் கூறியது.)

மேல்திசையில் அவந்தி தேசத்திலிருக்கும் பவித்ரமானவையும் புண்யமானவையுமான [1] ஆயதனங்களை உனக்குச்சொல்லு

---

1 இடங்கள்.

வேன். பாரத! [1]ப்ரியங்கு வ்ருக்ஷங்களடர்ந்த தோப்புக்களாலும் மாமரங்களடர்ந்த தோப்புக்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் பழுத்திருக்கிற வஞ்சிமரங்களின் வரிசைகளுடன் கூடியதும் பரிசுத்தமுமான நர்மதாநதியானது அந்த இடத்தில் மேற்குமுகமாக ஓடுகிறது. கௌரவர்களுள் சிறந்தவனே! பாரத! மூவுலகங்களிலுள்ள [2]தீர்த்தங்களும் புண்யமான ஆயதனங்களும் நதிகளும் காடுகளும் சிறந்தமலைகளும் ப்ரம்மதேவருள்ளிட்டதேவர்களும் ஸித்தர்களோடும் ரிஷிகளோடும் சாரணர்களோடும்கூட நர்மதையிலுள்ளதீர்த்தங்களில் புண்யத்தின்மிகுதியால் ஸ்நானம்செய்வதற்காக எப்பொழுதும் வருகிறார்கள். எதில் நிதிகளுக்குத்தலைவனும் மனிதர்களை வாகனமாகக் கொண்டவனுமான குபேரன் பிறந்ததான விஸ்ரவஸ்முனிவருடைய புண்யமானவீடு இருப்பதாகக் கேட்கப்படுகிறதோ, பரிசுத்தமும் மங்களகரமுமான அந்த வைதூர்யசிகரமென்கிற சிறந்தமலை இருக்கிறது. அந்தமலையில் மரங்கள் எப்பொழுதும் மலர்களாலும் கனிகளாலும் நிறைந்தவைகளாகவும் பசுமைநிறமான இலைகளுள்ளவைகளாகவும் இருக்கின்றன. பூமிக்கு அதிபதியே! மகாராஜனே! அந்தமலையின் உச்சியில் புண்ணியமானதும் மலர்ந்ததாமரைமலர்களுள்ளதும் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்டதுமான தடாகம் இருக்கிறது. மகாராஜனே! புண்யமானதும் ஸ்வர்க்கம்போன்றதும் தேவர்கள் ரிஷிகள் ஆகியஇவர்களுடைய கூட்டங்களால் அடையப்பட்டதுமான அந்தமலையில் பலஆச்சர்யங்கள் காணப்படுகின்றன. எந்தநதியின்கரையில் நகுஷனுடைய குமாரனை யயாதிமகாராஜன் (ஸ்வர்க்கத்திலிருந்து) ஸாதுக்களின்நடுவில்விழுந்து மீண்டும் தர்மமானவையும் சாஸ்வதமானவையுமானஉலகங்களை அடைந்தானோ, விஸ்வாமித்திரரால் தவத்தினால் உண்டுபண்ணப்பட்டதும் எல்லாரையும் பரிசுத்தம் செய்வதும் மடுவுள்ளதும் புண்யமானதுறைகளையுடையதுமான ராஜரிஷியினுடைய அந்தநதியானது அந்தமலையில் ஓடுகிறது. அந்தநதியில் புண்யமானஒருமடு இருக்கிறது. பிரஸித்திபெற்ற மைநாகமென்கிறமலையும் இருக்கிறது. அளவற்றகிழங்கும் கனிகளுமுள்ள அஸிதமென்கிறமலை இருக்கிறது. யுதிஷ்டிர! அந்தமலையில் கக்ஷஸேனருடைய பாவனமான ஆஸ்ரமம் இருக்கிறது. பாண்டவ!

1 ஒருவகைக்கொடி எனினுமாம்.

2 அவற்றின் அதிதேவதைகள் என்பது.

அந்தமலையில் ப்ரஸித்திபெற்ற ச்யவனருடையஆஸ்ரமமும் இருக்கிறது. பிரபுவே! அந்தஇடத்தில் மனிதர்கள் சிறிது தவத்தினாலேயே ஸித்தியை அடைகிறார்கள். மகாராஜனே! சாந்தியுள்ளவர்களுள் சிறந்தவனே! மிருகங்களாலும் பக்ஷிகளாலும் அடையப்பட்டதான மனத்தையடக்கினவர்களான ரிஷிகளுடைய ஜம்பூமார்க்கமென்கிற ஆஸ்ரமம் இருக்கிறது. வேந்தனே! பூமிக்கு நாதனே! அதற்கு அப்புறத்தில் மிக்கபுண்யமானதும் எப்பொழுதும் ரிஷிகளுடன்கூடியதுமான கேதுமாலையும் மேத்யையும் கங்காத்வாரமும் இருக்கின்றன. பிரஸித்தியுள்ளதும் புண்யமானதும் பிராம்மணர்களால் அடையப்பட்டதுமான ஸைந்தவாரண்யம் இருக்கிறது. பெயரால் புஷ்கரமென்றுபிரஸித்தியுள்ள புண்யமான பிரம்மஸரஸும் இருக்கிறது. (தவத்தில்) ஸித்திபெற்றவர்களான வைகானஸர்களென்கிற ரிஷிகளுக்குப் பிரியமான ஆஸ்ரமம் இருக்கிறது. கௌரவர்களுள் சிறந்தவனே! புண்யவான்களுள் சிறந்தவனே! பிரஜைகளைப்படைப்பவரான பிரம்மதேவர் இந்தப் புஷ்கரங்களிலுள்ள புண்யஸ்தலங்களைஅடைந்து வஸிப்பதன் பொருட்டு, 'மனத்தினாலாவது புஷ்கரங்களை அடையவிரும்புகிற நல்லமனமுள்ளவனுடைய பாவங்கள் முற்றிலும் நாசமடைகின்றன. அவன் ஸ்வர்க்கத்திலும் ஆனந்தத்தை அடைகிறான்' (என்னும்பொருளுள்ள) காதையைப் பாடினார்.

எண்பத்தெட்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(தௌம்யர் வடதிசையிலுள்ள தீர்த்தங்களை யுதிஷ்டிரனுக்குக் கூறியது.)

ராஜஸ்ரேஷ்டனே! வடதிசையிலுள்ள 1 புண்யமான ஆயதனங்களை உனக்குச் சொல்வேன். பிரபுவே! சொல்லுகின்ற என்னிடத்தினின்று எல்லாவற்றையும் அவதானத்துடன் கேள். வீரனே! கதைகளை மனத்தில் அமைத்தல் மங்களகரமான ஸ்ரத்தையை உண்டுபண்ணுகிறது. பாண்டவ! குற்றமற்றவனே! பாரத! யுதிஷ்டிர! குருஸ்ரேஷ்ட! எந்தஇடத்தில் மிக்கபுண்யமானதும் மடுக்களுடன்கூடியதும் தீர்த்தங்களின் வரிசைகளுள்ளதுமான

1 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

ஸரஸ்வதீநதி இருக்கிறதோ, எந்தஇடத்தில் யமுனாநதியானது மிக்கவேகத்துடன்கூடியதாகி ஸமுத்திரத்தைக்குறித்துச் செல்லுகிறதோ, எந்தஇடத்தில் மிக்கபரிசுத்தமானதும் மிக்கபுண்யமுமான பிலக்ஷாவதரணமென்கிறதீர்த்தம் இருக்கிறதோ, எந்த இடத்தில் பிராம்மணர்கள் ஸரஸ்வதியில் ஸ்நானத்துக்காக வந்திருக்கிறவர்களுடன் யாகம்செய்து அவப்ருதத்தைச் செய்கிறார்களோ, எந்தஇடத்தில் புண்யமானதும் திவ்யமானதும் மங்களகரமுமான அக்னிசிரஸ் என்கிற க்ஷேத்ரமானது சொல்லப்படுகிறதோ, எந்தஇடத்தில் (ஸ்ருஞ்சயனுடையபுத்திரனான) ஸஹதேவன், இதேவிஷயத்தில் இந்திரனால் கானம்பண்ணப்பட்டதும் இவ்வுலகத்தில் பிராம்மணர்களால் கானம்செய்யப்படுகின்றதும், 'ஸஹதேவனால் யமுனைஆற்றின் அருகில் செய்யப்பட்ட அவனுடைய அக்னிசயனங்கள் லக்ஷக்கணக்கான தக்ஷிணையுள்ளவையாயிருந்தன' (என்னும் பொருளுள்ளதுமான) அந்தக்காதைஉலவுகின்ற 1 சம்யாக்ஷேபமென்னும் யாகத்தைச் செய்தானோ அந்த இடத்திலேயே பெரும்புகழ்பெற்ற சக்கரவர்த்தியான பரதனென்கிற அரசன் 2 நூற்றுநாற்பத்தெட்டு அஸ்வமேதயாகங்களைச் செய்தான். ஐயா! எந்த ஆஸ்ரமமானது முன்போலவே பிராம்மணர்களுக்கு விரும்பினவற்றை உண்டுபண்ணுகிறதென்று கேட்கப்படுகிறதோ மிக்க புண்யமானதும் பிரஸித்திபெற்றதுமான அந்தச் சரபங்கருடைய ஆஸ்ரமம் இருக்கிறது. மகாராஜனே! குந்தீபுத்திரனே! எந்த இடத்தில் முற்காலத்தில் வாலகில்யரிஷிகளால் யாகம் செய்யப்பட்டதோ எப்பொழுதும் ஸாதுக்களால் பூஜிக்கப்பட்ட அந்த ஸரஸ்வதீநதியானது ஓடுகிறது. யுதிஷ்டிர! மனிதருட்சிறந்தவனே! குந்தீபுத்ர! மனிதர்க்கதிபதியே! பரதர்களுள் மிகச்சிறந்தவனே! எந்தஇடத்தில் மிக்க பரிசுத்தமானதும் பிரஸித்தியுள்ளதுமான த்ருஷத்வதீநதியானது ஓடுகிறதோ எந்தஇடத்தில் ந்யக்ரோதரென்கிற பெயருள்ளவரும் பாஞ்சாலதேசத்துக்கு நன்மையைச் செய்பவருமான பாஞ்சால்யரும் தால்ப்யகோஷரும் தால்ப்யரும் வஸிக்கிறார்களோ, எந்தப் பூமியில் அழிவற்றபுகழ்பெற்றவரும் அளவற்றகாந்தியுள்ளவரும் மஹாத்மாவுமான ஸுவ்ரதருடைய மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற

1 பலசாலியான ஒருவன் எறியும் சம்யையென்னும் தடி போய் விழுந்தூரம் இடமமைத்துச் செய்யும் யாகம்.

2 'முப்பத்தைந்து' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

புண்யாஸ்ரமமானது இருப்பதாகச் சொல்லப்படுகிறதோ எந்த இடத்தில் கிருஷ்ணமென்கிற மானின் நிறமுள்ளவர்களும் [1] நிறமில்லாதவர்களும் பிரஸித்தர்களும் வேதங்களை அறிந்தவர்களும் வேதங்களிலுள்ள நுட்பமான அர்த்தங்களை நன்கு கற்றறிந்தவர்களும் [2] வேதங்களையும் வித்தைகளையும் அறிந்தவர்களுமான நரநாராயணர்கள் இருவரும் புண்யமான முக்கிய யாகங்களைச் செய்தார்களோ, முற்காலத்தில் இந்திரனோடும் வருணனோடும்கூடின தேவர்கள் பலவாறாக ஒன்று சேர்ந்துவந்து அந்த விசாகயூபத்தில் தவம் புரிந்தார்கள். அதனால் அந்த இடம் மிக்கபரிசுத்தமானது. மகா பாக்கியமுள்ளவரும் மிக்க புகழுள்ளவரும் பிரபுவுமான ஜமதக்னி மஹரிஷியானவர், எந்த யாகத்தில் சிறந்த எல்லாநதிகளும் தத்தம் தீர்த்தத்தை எடுத்துவந்து சூழ்ந்துகொண்டு ரிஷிகளுள் சிறந்தவரான(அவரை)நேரில் உபாஸித்தனவோ அந்தயாகத்தைப் புண்யமாகவும் ரம்யமாகவுமிருக்கிற பலாசகங்களில் செய்தார். மகாராஜனே! வீரனே! மேலும், அந்த இடத்தில் மஹாத்மாவான ஜமதக்னியினுடைய தீக்ஷையைப்பார்த்து விஸ்வாவஸுவானவன் அப்பொழுது 'யாகஞ்செய்கின்ற மஹாத்மாவான ஜமதக்னியினுடைய யாகத்தில் நதிகள் வந்து பிராம்மணர்களை மதுவினால் திருப்தியடையச் செய்தன' (என்னும்பொருளுள்ள) இந்த ஸ்லோகத்தைத் தானாகவே பாடினான். யுதிஷ்டிர! கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் அப்ஸரஸுகளாலும் அடையப்பட்டதும் கிராதர்களுக்கும் கின்னரர்களுக்கும் இருப்பிடமானதும் மலைகளுள் சிறந்ததுமான மலையைக் கங்கையானது வேகத்தால் பிளந்தது. அது கங்காத்வாரமென்று சொல்லப்படுகிறது. வேந்தே! பிரம்மரிஷிகளுடைய கூட்டங்களால் அடையப்பட்ட அந்தக் கங்காத்வாரமானது புண்யமானதென்று சொல்லப்படுகிறது. கௌரவ்ய! அப்படியே, ஸநத்குமாரர் கனகலத்தைப் புண்யமானதென்று கூறுகிறார். எந்த மலையைப் புரூரவமகாராஜன் அடைந்தானோ அந்தப் புரு என்கிற ப்ரஸித்தமான மலையும் இருக்கிறது. அரசனே! மஹரிஷிகளுடைய கூட்டங்களால் அடையப்பட்ட எந்த இடத்தில் ப்ருகுமஹரிஷி தவம்செய்தாரோ [3] ப்ருகுதுந்தமென்கிற பெரியமலையானது அந்த ஆஸ்ரமமென்று

---

1 'செம்மை வெண்மை கருமை ஆகிய ரஜஸ் ஸத்வ தமோகுணங்களில்லாதவர்கள்' என்பது பழையவுரை. 2 வேறு பாடம்.

3 'ப்ருகுதுங்கம்' என்பதும் இதுவே.

ப்ரஸித்திபெற்றது. பரதஸ்ரேஷ்ட! எவர் சென்றதும் வருவதும் நிகழ்வதுமாயிருப்பவரோ அவர் நாராயணர்; பிரபு; விஷ்ணு; சாஸ்வதர்; புருஷோத்தமர். மிக்க புகழுடையவரான அவருடைய மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற புண்யாஸ்ரமமானது புண்யமான விசாலை என்கிற பதரியின் ஸமீபத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. வேந்தே! முற்காலத்தில் விசாலை என்கிற பதரியின் ஸமீபத்தில் கங்கையானது உஷ்ணஜலமுள்ளதாகவும் குளிர்ந்த ஜலமுள்ளதாகவும் ஸ்வர்ணமயமான மணலுள்ளதாகவும் ஓடிற்று. எந்தஇடத்தில் ரிஷிகளும், மஹாபாக்கியசாலிகளும் மிக்க தேஜஸுள்ளவர்களுமான தேவர்களும், தேவரும் பிரபுவுமான நாராயணரை அடைந்து எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றார்களோ, எந்த இடத்தில் தேவரும் பரமாத்மாவும் ஸநாதனருமான நாராயணர் இருக்கிறாரோ அந்தஇடத்தில் எல்லா உலகங்களும் தீர்த்தங்களும் ஆயதனங்களும் மிச்சமின்றி இருக்கின்றன. எதை அறிந்து சாஸ்திரங்களைக் கண்ணாகக்கொண்டிருக்கிற வித்வான்கள் சோகத்தை அடைகிறதில்லையோ அது புண்யமானது; அது பரப்ரம்மம்; அது தீர்த்தம்; அது தபோவனம்; அது மேன்மையுள்ளது; சிறந்ததெய்வம்; ப்ராணிகளுக்குச் சிறந்த அதிபதி; அது சாஸ்வதமாயுள்ளது; எல்லாவற்றிலும் சிறந்தது; (உலகத்தைப்) போஷிக்கிறது; அது சிறந்த ஸ்தானம். அந்தஇடத்தில் தேவரிஷிகளும் ஸித்தர்களும் எல்லாத்தபோதனர்களும் வஸிக்கிறார்கள். எந்தஇடத்தில் தேவர்களுக்கெல்லாம் ஆதியாக இருப்பவரும் மகாயோகியுமான மதுஸூதனர் இருக்கிறாரோ அந்த இடமானது புண்யக்ஷேத்திரங்களுள் புண்யமான க்ஷேத்திரம். இதில் உனக்கு ஸம்சயம் உண்டாகவேண்டாம். பூமிக்கு இறைவனே! அரசனே! புருஷஸ்ரேஷ்டனே! பூமியிலுள்ள புண்யமான இந்தத்தீர்த்தங்களும் ஆயதனங்களும் சொல்லப்பட்டன. இவைகள் வஸுக்களாலும் ஸாத்தியர்களாலும் ஆதித்யர்களாலும் மருத்துக்களாலும் அஸ்வினீதேவர்களாலும் தேவர்களுக்கு ஸமானர்களும் மஹாத்மாக்களுமான ரிஷிகளாலும் அடையப்பட்டவை. குந்தீநந்தந! பிராம்மணஸ்ரேஷ்டர்களோடும் மஹாபாக்கியசாலிகளான ஸஹோதரர்களோடும் சேர்ந்து நீ இவைகளில் யாத்திரை செய்கின்றவனாகிக் கவலையை வெல்வாய்' என்றார்.

எண்பத்தோன்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர், இந்திரன் கட்டளைப்படி, அர்ஜுனன் பாசுபதம் முதலிய அஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டதை யுதிஷ்டிரருக்குச் சொல்லி இந்திரன் சொல்லிய செய்தியையும் தெரிவித்தது.)

கௌரவநந்தனரே! தௌம்யர் இவ்வண்ணம் சொல்லிக்கொண்டிருக்கையில், மஹாதேஜஸ்வியான அந்த லோமசரிஷியானவர் அங்குவந்தார். பரிஜனங்களுடனிருப்பவரும் பாண்டவர்களுள் மூத்தவருமான அரசரும் அந்தப் பிராம்மணர்களும் மிக்க பாக்கியமுள்ளவரான அந்த லோமசரை, ஸ்வர்க்கத்தில் இந்திரனைத் தேவர்கள் உபசரிப்பதுபோலத் தக்கபடி உபசரித்தார்கள். தர்மநந்தனரான யுதிஷ்டிரர் நியாயப்படி நன்றாகப்பூஜித்து அவருடைய வரவில் காரணத்தையும் தேசாடனத்திலுள்ள பயனையும் வினவினார். பாண்டுபுத்திரரான யுதிஷ்டிரரால் கேட்கப்பட்டவரும் உதாரமனமுள்ளவருமான அந்தலோமசர் பிரீதியுள்ளவராக மதுரமான வாக்கினால் பாண்டவர்களை மகிழ்வித்துக்கொண்டு பின்வருமாறு கூறலானார். 'குந்தீ நந்தன! எல்லா உலகங்களிலும் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறேன். தற்செயலாக இந்திரனுடையமாளிகையை அடைந்தேன். அந்தஇடத்தில் தேவராஜனைப் பார்த்தேன். வீரனும் ஸவ்யஸாசியும் இந்திரனுடைய அர்த்தாஸனத்தில் வீற்றிருப்பவனுமான உன்னுடைய ஸஹோதரனையும் பார்த்தேன். புருஷஶ்ரேஷ்டனே! அப்படி அடைந்திருக்கிற அர்ஜுனனைக்கண்டு எனக்குப் பெரிதான ஆச்சர்யம் உண்டாயிற்று. அந்தஇடத்தில் தேவராஜன் என்னைநோக்கி, 'பாண்டுபுத்திரர்களைக் குறித்துச் செல்வீராக' என்றுசொன்னான். அப்படிப்பட்டநான் இந்திரனுடையவசனத்தினாலும் மஹாத்மாவான பார்த்தனுடைய வசனத்தினாலும் இளையஸஹோதரர்களுடனிருக்கும் உன்னைப் பார்க்கவிருப்பமுள்ளவனாகி விரைவாகவந்தேன். ஐயா! பாண்டவர்களை ஆனந்தமடையச்செய்பவனே! உனக்குப் பெரிய பிரியத்தைச் சொல்வேன். அரசனே! பிராதாக்களுடனும் திரௌபதியுடனும் சேர்ந்து அதனைக் கேட்பாயாக. பரதர்களுள்சிறந்தவனே! பிரபுவே! மிக்கபுஜபலமுள்ள அர்ஜுனன் எந்தஅஸ்திரத்தைப் பெறும்

படி உன்னால் சொல்லப்பட்டானோ ஒப்பற்ற அந்தஅஸ்திரமானது பார்த்தனால் ருத்திரரிடத்தினின்று பெற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. பிரம்மசிரஸென்றுபிரஸித்திபெற்ற எந்த அஸ்திரமானது தவத்தினால் ருத்திரரை வந்தடைந்ததோ அம்ருதத்திலிருந்து உண்டான அந்த ரௌத்ராஸ்திரமானது (ப்ரயோக) மந்திரத்துடனும் திருப்பியழைக்குமுறையுடனும் பிராயச்சித்த மங்களத்துடனும் ஸவ்யஸாசியினால் அடையப்பட்டது. யுதிஷ்டிர! குருநந்தன! வஜ்ரத்தையும் தண்டம் முதலிய வேறுஅஸ்திரங்களையும் திவ்யாஸ்திரங்களையும் அளவுகடந்தவிக்கிரமமுள்ள அர்ஜுனன் யமனிடத்தினின்றும் குபேரனிடத்தினின்றும் வருணனிடத்தினின்றும் இந்திரனிடத்தினின்றும் கற்றுக்கொண்டான். விச்வாவஸுவின் குமாரனிடமிருந்து கானத்தையும் நர்த்தனத்தையும் ஸாமகானத்தையும் நான்குவித வாத்தியங்களையும் முறை தவறாமல் விதிப்படி பெற்றுக்கொண்டான். மனோதைர்யமுள்ளவனும் குந்தீ புத்ரனும் உன்னுடைய தம்பிக்குத் தம்பியுமான பீபத்ஸுவானவன் இவ்வண்ணம் அஸ்திரங்களில் தேர்ச்சியடைந்து காந்தர்வவேதத்தையும் (கற்று) ஸுகமாக வஸிக்கிறான். யுதிஷ்டிர! எதற்காகத் தேவராஜன் என்னைநோக்கி இந்த வசனத்தைச் சொன்னானோ அதையும் உனக்குச் சொல்லுவேன். என்னிடமிருந்து தெரிந்துகொள்.

இந்திரன், 'பிராம்மணோத்தமரே! தேவரீர் மானிட உலகத்துக்கும் போவீர். இதில் ஐயமில்லை. அங்கே யுதிஷ்டிரனைப் பார்த்து, 'உன்னுடைய தம்பியான அர்ஜுனன் அஸ்திரங்களில் தேர்ச்சியடைந்தவனாகித் தேவர்களால் செய்யமுடியாத பெரிதான தேவகார்யத்தைச் செய்து விரைவில் வருவான். நீ ப்ராதாக்களோடுகூட உன்னைத் தவத்துடன் சேர்ப்பாயாக. தவத்தைவிடச் சிறந்தது இல்லையன்றோ? தவத்தினால் (மனிதன்) மகிமையை அடைகிறான். பரதர்களுள் சிறந்தவனே! நானும் கர்ணனை ஸத்யம் தவறாதவனும் மிக்க உத்ஸாகமுள்ளவனும் மிக்க வீர்யமுடையவனும் மிக்க பலமுள்ளவனும் மகா யுத்தங்களில் நிகரற்றவனும் மகா யுத்தங்களில் ஸாமர்த்தியமுள்ளவனும் பெரிய வில்லைத் தரித்தவனும் வீரனும் பெரிய அஸ்திரங்களையுடையவனும் மிக்க அழகுள்ளவனும் மஹேச்வரருடைய குமாரரான ஸுப்ரமண்யருக்கு ஒப்பானவனும் ஸூர்யனுடைய புதல்வனும் ப்ரபுவுமானவனென்று உள்ளபடி அறிவேன். அப்படியே அர்ஜுனனையும் உன்னதமான தோள்

களுள்ளவனும் பிறப்பிலமைந்த மிக்க ஆண்மையுள்ளவனுமாயிருப்பவனென்றும் உள்ளபடி அறிவேன். அந்தக்கர்ணன் யுத்தத்தில் அர்ஜுனனுடைய பதினாறில் ஓர் அம்சத்துக்கும் ஈடாகான். பகைவரையடக்குகிறவனே! கர்ணன் காரணமாக எந்தப்பயம் உன்னுடைய மனத்தில் நிலைபெற்றிருக்கிறதோ அந்தப்பயத்தையும் ஸவ்யஸாசியானவன் வந்தவுடனே (கர்ணனுடைய கவசகுண்டலங்களைப் பறிப்பதால்) போக்குவேன். வீரனே! இந்தத் தீர்த்தயாத்திரையைக்குறித்து நீ அறியக்கருதுவதை உனக்கு அந்த லோமசமஹரிஷியானவர் ஸந்தேஹமின்றிக் கூறுவார். பாரத! தவத்துடன் கூடினதாகத் தீர்த்தங்களிலுள்ள பலனை இந்த ப்ரம்மரிஷியானவர் உனக்குச் சொல்வார். அது வேறுவிதமாக எண்ணத்தக்கதன்று' என்று என் வசனத்தால் சொல்வீராக' என்று சொன்னான்.

தொண்ணூறுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர் தம்முடன்சேர்ந்து தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்று அர்ஜுனன் சொல்லியதை யுதிஷ்டிரருக்குத் தெரிவித்ததும், யுதிஷ்டிரர் லோமசருடைய கட்டளையினால் அதிக பரிஜனங்களை விட்டதும்.)

யுதிஷ்டிர! தனஞ்சயன் சொல்லியதையும் கேட்பாயாக. 'தபோதனரே! என் பிராதாவான யுதிஷ்டிரரைத் தர்மத்திலமைந்த புத்தியுடன் சேர்ப்பீராக. நீரோ உத்தம தர்மங்களையும் தவங்களையும் அறிந்திருக்கிறீர். ஸ்ரீமான்களான மன்னர்களுடைய ஸநாதனதர்மத்தையும் அறிகிறீர். அப்படிப்பட்ட தேவரீர் மனிதனுக்கு எது பரமபாவனமோ அதை அறிகிறீர். தேவரீர் அந்தத்தீர்த்த புண்யத்துடன் பாண்டவர்களைச் சேர்ப்பீராக. அந்த அரசர் எவ்வாறு தீர்த்தங்களைக்குறித்து யாத்திரை செய்வரோ, பசுக்களை எவ்வாறு தானம் செய்வரோ அவ்வாறு எல்லாவிதத்தாலும் செய்யக்கடவீர்' என்று என்னை அர்ஜுனன் சொன்னான். 'இவர் உம்மால் ரக்ஷிக்கப்பட்டவராகி எல்லாத்தீர்த்தங்களையுங்குறித்து யாத்திரை செய்யவேண்டும். நுழையமுடியாத மேடுபள்ளமானகாடுகளில் ராக்ஷஸர்களிடத்திலிருந்து காப்பாற்றப்படவேண்டும். பிராம்மணோத்தமரே! ததீசர் தேவேந்

திரனைக்காத்ததுபோலவும் அங்கிரஸ்மகரிஷி ஸூர்யனைக்காத் ததுபோலவும் குந்திபுத்திரர்களை ராக்ஷஸர்களிடத்திலிருந்து பாது காப்பீராக. ராக்ஷஸர்கள் அநேகர்கள் இருக்கிறார்களன்றோ? மலைக்குகைப்பான உருவங்களுள்ள ராக்ஷஸர்கள் உம்மால்காக்கப் பட்ட குந்திபுத்ரர்களின்பக்கத்தில் திரும்பமாட்டார்கள்' என்றான். அப்படிப்பட்டநான் இந்திரனுடைய வசனத்தினாலும் அர்ஜுன னுடையதூண்டுதலாலும் பயங்களினின்று உன்னை ரக்ஷித்துக் கொண்டு உன்னுடன்கூட ஸஞ்சரிப்பேன். குருநந்தன! என்னால் முந்தித் தீர்த்தங்கள் இரண்டுமுறை பார்க்கப்பட்டிருக்கின்றன. அந்தத்தீர்த்தங்களையே உன்னுடன்கூட இதோ மூன்றாவதுமுறை பார்க்கப்போகிறேன். யுதிஷ்டிர! மகாராஜனே! புண்யம்செய்த வர்களான மனுமுதலிய ராஜரிஷிகளாலும் (நரக) பயத்தைப் போக்குகிற இந்தத்தீர்த்தயாத்திரையானது செய்யப்பட்டிருக் கிறது. கௌரவ்ய! உள்ளும்புறமும் ஒத்திராதவனும் மனத்தை அடக்காதவனும் (வேத) வித்தைஇல்லாதவனும் பாவத்தைச்செய் பவனும் வக்ரபுத்தியுள்ளவனுமானமனிதன் தீர்த்தங்களில் ஸ்நா னம்செய்யமாட்டான். நீயோ எப்பொழுதும் தர்மத்தில் புத்தி யுடையவன்; தர்மங்களைஅறிந்தவன்; சொல்தவறாதவன். மீண்டு மே எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டவனாவாய். கௌந் தேய! பாண்டவ! பகீரதராஜனும் கயன்முதலிய அரசர்களும் யயாதியும் இருந்ததுபோலவே நீயும் இருக்கிறாய்' என்றுசொன்னார்.

யுதிஷ்டிரர், 'மஹரிஷியே! ஸந்தோஷத்தினால் இந்த வாக் கியத்திற்கு ஓரிடத்திலும் உத்தரத்தை நன்றாகக் காணவில்லை. தேவராஜன் என்னை நினைக்கிறானென்பதைக்காட்டிலும் மேலா னது எது இருக்கிறது? எவனுக்குத் தேவரீரோடு சேர்க்கையோ, எவனுக்குத் தனஞ்சயன் பிராதாவோ, எவனை இந்திரன் நினைக்கி றானோ அவனைவிட மேலானவன் யார்? தீர்த்தங்களுக்குச் செல்வ தைக்குறித்துப் பகவானை இந்திரன் என்னைநோக்கிச்சொல்லுகிற இந்தநிச்சயமானது தௌம்யருடையவசனத்தினால் முந்தியே என் னால் செய்யப்பட்டிருக்கிறது. பிராம்மணரே! ஆதலால், தீர்த்தங்க ளைத் தர்சனம்செய்வதற்காக எப்பொழுது தேவரீர் செல்ல விரும்பு கிறீரோ அப்பொழுதே தீர்த்தங்களைஉத்தேசித்து நான் புறப் படுவேன்; இது என்னுடைய சிறந்த நிச்சயம்' என்று சொன்னார். தீர்த்தயாத்திரையில் மனம்வைத்தவரான பாண்டவரைப்பார்த்து லோமசர், 'மகாராஜனே! நீ சொற்பபரிவாரங்களுள்ளவனாக

வேண்டும். லகுபரிவாரமுள்ளவனுனல் நீ உன்னிஷ்டப்படி செல்வாய்' என்றுசொன்னர். யுதிஷ்டிரர், 'எந்தப்ராம்மணர்களும் ஸன்யாஸிகளும் பிக்ஷைஎடுத்துப் புஜிக்கிருர்களோ அவர்கள் திரும்பக்கடவர். எவர்கள் பசி தாஹம் வழிநடையினுலுண்டாகிற ஸ்ரமம் ஆயாஸம் குளிர்ஆகிய இவைகளாலுண்டாகும் துன்பம்பொறுக்கமாட்டார்களோ, எந்தப்ராம்மணர்கள் ம்ருஷ்டான்னபோஜனம் செய்பவர்களோ அவர்களனைவரும் திரும்பக்கடவர். எவர்கள் பக்குவமான அன்னங்களையும் நக்கிச் சாப்பிடத்தக்கவைகளையும் பருகத்தக்கவைகளையும் மாம்ஸங்களையும் [1]பலவகையாகப்பக்குவம் செய்பவர்களோ, எவர்கள் சமையற்காரர்களைப் பின்தொடர்ந்து வருகிருர்களோ அவர்களனைவரும் திரும்பக்கடவர். என்னல் பட்டணத்து ஜனங்களான எவர்கள் வேலைக்காரர்முதலியோராலும் மானியமுதலியவற்ருலும் பகுத்துக்கொடுக்கப்பட்டு ராஜபக்தியை முன்னிட்டுக்கொண்டு என்னைப் பின்தொடர்ந்து வருகிருர்களோ, அவர்களும் திருதராஷ்டிரமகாராஜரை அடையக்கடவர். அவர் யாருக்கு எது உசிதமான சம்பளமோ அதைக் காலம்தவருமல் கொடுப்பார். மனிதர்களுக்கதிபதியான அந்தத் திருதராஷ்டிரர் தக்க ஜீவனத்தைக் கொடாமல் போனல் நம்முடைய பிரியத்திற்காகவும் ஹிதத்திற்காகவும் பாஞ்சாலராஜன் உங்களுக்கு ஜீவனத்தைக் கொடுப்பான்' என்று சொன்னர். பிறகு, திருதராஷ்டிரனிடத்தில் பாரம் வைக்கப்பட்டவுடன், பட்டணத்துஜனங்களும் பிராம்மணர்களும் முக்கியமான யதிகளும் பெரும்பாலும் ஹஸ்திநபட்டணத்தைக்குறித்துச் சென்ருர்கள். அம்பிகாபுத்திரனன அரசன் அவர்களனைவரையும் தர்மராஜரிடத்திலுள்ள அன்பினல் விதிப்படி வரவேற்ருன்; தனங்களாலும் நன்கு திருப்தியடையச்செய்தான். பிறகு, குந்தீபுத்திரரான அரசர் ஸ்வல்பப்ராம்மணர்களுடனும் லோமசருடனும் மிக்க ப்ரீதியுள்ளவராக மூன்றுநாள் காம்யகவனத்தில் வஸித்தார்.

---

1 வேறு பாடம் கொண்டு, 'நன்ருயிருக்கின்றன, நன்ருயில்லையென்று வேறுபாடு கூறுபவர்கள்' என்பது பழைய வுரை.

தொண்ணூற்றோராவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் லோமசர் முதலியவர்களோடு தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டதும், வழியில் பிராம்மணர்பலர் உடன் வருவதாகச்சோல்ல, அவர் அழைத்துச் செல்ல ஸம்மதித்ததும்.)

அரசரே! பிறகு, புறப்பட்டுச் செல்லுகிற குந்தீபுத்திரரை வனத்தில் வஸிக்கிற பிராம்மணர்கள் அப்பொழுது அடைந்து இந்த வசனத்தை உரைக்கலானார்கள். 'வேந்தரே! பிராதாக்களோடும் தேவரிஷியும் மஹாத்மாவுமான லோமசரோடும்சேர்ந்து புண்யதீர்த்தங்களை அடைகிறவராயிருக்கிறீர். மகாராஜரே! பாண்டவரே! எங்களையும் அழைத்துச் செல்லக்கடவீர். குருவம்சத்தினுதித்தவரே! உம்முடைய உதவி இல்லாவிடில் அந்தத் தீர்த்தங்கள் எங்களால் அடைய முடியாதவைகளன்றோ? மனிதர்களுக்குத் தலைவரே! துஷ்டமிருகங்களால் அடையப்பட்டவைகளும் அடைதற்கரியவைகளும் மேடுபள்ளங்களிலிருப்பவைகளுமான தீர்த்தங்கள் அல்பமனிதர்களால் அடைய முடியாதவைகள். உம்முடைய பிராதாக்கள் சூரர்கள்; எப்பொழுதும் விற்பிடித்தவர்களுள் சிறந்தவர்கள். நாங்களும், சூரர்களான உங்களால் பாதுகாக்கப்பட்டவர்களாக வருகிறோம். பூமிபாலரே! ப்ரஜைகளுக்கு அதிபரே! உம்முடைய அருளாலன்றோ நாங்கள் தீர்த்தங்களையும் வனங்களையும்அடைவதன்பலனைச் சுகமாக அடைவோம். அரசரே! உம்முடையவீர்யத்தால் காப்பாற்றப்பட்டுச் சுத்தர்களும் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தவர்களும் தீர்த்த [1] ஸந்தர்சனத்தினால் பாவத்தை உதறினவர்களும் ஆகக்கடவோம். பாரதரே! அரசரே! நீரும், தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, அரசனான கார்த்தவீர்யனும், அஷ்டகனென்கிற ராஜரிஷியும், ரோமபாதனும், வீரனும் உலகமுழுதுமுடையவனுமான பரதனும் அடைந்தவையும் அடைதற்கரியவையுமான உலகங்களை நிச்சயமாக அடைவீர். பூமியைக்காப்பவரே! நாங்கள் உம்முடன்கூடச் சூரர்களான உங்களால் பாதுகாக்கப்பட்டு, பிரபாஸமுதலியதீர்த்தங்களையும் மஹேந்

[1] 'ஸம்ஸ்பர்சனம்' என்பது வேறு பாடம். அதற்கு, 'ஸ்நானம் செய்தல்' என்பது பொருள்.

திரமுதலியமலைகளையும் கங்கைமுதலியநதிகளையும் பிலக்ஷமுதலிய மரங்களையும் (மற்றுமுள்ள)தீர்த்தங்களையும் ஆயதனங்களையும் பார்க்கவிரும்புகிறோம். ஜனாதிபரே! உமக்கு ப்ராம்மணர்களிடத்தில் அன்பு சிறிதிருக்குமாகில் எங்களுடையவசனத்தை விரைவாகச்செய்வீராக. அதனால், நன்மையை அடைவீர். மிக்கபாகுபலமுள்ளவரே! தீர்த்தங்கள் எப்பொழுதும் தவத்துக்கு இடையூறு செய்கிற ராக்ஷஸர்களால் வியாபிக்கப்பட்டிருக்கின்றன அல்லவா? அவர்களிடமிருந்து எங்களைக் காக்கக்கடவீர். நராதிபரே! தௌம்யராலும் புத்திமானான நாரதராலும் எந்தத்தீர்த்தங்கள் சொல்லப்பட்டனவோ, மிக்கதவமுள்ள தேவரிஷியானலோமசர் எவைகளைச்சொன்னாரோ அந்த எல்லாத்தீர்த்தங்களையுங்குறித்து நீர் லோமசரால் பாதுகாக்கப்பட்டுப் பாவத்தை உதறினவராகி எங்களுடன் விதிப்படி யாத்திரைசெய்வீராக' என்றனர்.

அவர்களால் பூஜிக்கப்பட்டவரும் பாண்டவர்களுள் சிறந்தவருமானஅந்தத்தர்மராஜர் ஸந்தோஷத்தால் கண்ணீரால்நனைக்கப்பட்டவராகவும் வீரர்களான பீமஸேனன்முதலிய ஸஹோதரர்களால் சூழப்பட்டவராகவும், 'அப்படியே ஆகட்டும்'என்று அந்த எல்லாரிஷிகளையும்பார்த்துக் கூறினார். பிறகு, இந்திரியங்களை அடக்கிய அந்தப்பாண்டவஸ்ரேஷ்டர் பிராதாக்களுடனும் குற்றமற்ற அங்கங்களுள்ள த்ரௌபதியுடனும் லோமசரையும் புரோகிதரான தௌம்யரையும் விடைகேட்டுக்கொண்டு செல்ல மனம்வைத்தார். பிறகு, புத்திமான்களான மகாபாக்கியசாலியான வ்யாஸரும் அப்படியே பர்வதரும் நாரதரும் காம்யகத்தில் பாண்டவரைப் பார்ப்பதற்காக வந்தார்கள். யுதிஷ்டிரராஜர் அவர்களுக்கு விதிப்படி பூஜைசெய்தார். பூஜிக்கப்பட்ட மிக்கபாக்கியசாலிகளான அவர்கள், பிறகு, யுதிஷ்டிரரைப்பார்த்து, 'யுதிஷ்டிர! இரட்டையரே! பீம! நீங்கள் மனத்தினால் உள்ளும்புறமும் ஒத்தவராகக்கடவீர். மனத்தினால் சுத்திசெய்துகொண்டு சுத்தர்களாகித் தீர்த்தங்களை அடையக்கடவீர். பிராம்மணர்கள் சரீரநியமத்தை மானுஷவிரதமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் மனத்தினால் சுத்தமான புத்தியைத் தெய்வவிரதமென்றும் சொல்லுகிறார்கள். நராதிபனே! மனம் தோஷமற்றிருப்பதே சுத்திக்குப் போதுமானது. மித்திரபாவனையுள்ள புத்தியைஅடைந்து சுத்தர்களாகத் தீர்த்தங்களை அடையுங்கள். அப்படிச்செல்லும் நீங்கள், அந்தக் கரணங்களாலும் சரீரநியமங்களாலும் சுத்தர்களாகித் தெய்வவிர

த்தைக் கைக்கொண்டு சாஸ்திரங்களில் சொல்லப்பட்டபடி பலனை அடையக்கடவீர்' என்று சொன்னார்கள். ராஜஸ்ரேஷ்டரே! வீரர்களான அந்த எல்லாப்பாண்டவர்களும் திரௌபதியுடன்கூட, 'அப்படியே' என்று ப்ரதிஜ்ஞைசெய்து தேவரிஷிகளாலும் மனுஷ்யரிஷிகளாலும் மங்கலவாழ்த்துக் கூறப்பெற்று லோமசர் த்வைபாயநர் தேவரிஷியான நாரதர் பர்வதர் ஆகிய இவர்களுடைய அடிகளை வணங்கித் தௌம்யரோடும் அப்படியே வனவாஸிகளான அவர்களோடும் மார்கழிமாதம் சென்றபிறகு, புஷ்யமாதத்தில் புறப்பட்டார்கள். ஜனமேஜயரே! வீரர்களான அந்தப் பாண்டவர்கள் தடிகளை எடுத்துக்கொண்டு மரவுரியும் மான்தோலும் சடையும் தரித்தும் பிளக்கமுடியாத கவசங்கள் பூண்டும் அந்தஇடத்தினின்று தீர்த்தங்களைக்குறித்துச் சென்றார்கள். இந்திரஸேனன் முதலிய வேலைக்காரர்களோடும் பதினான்குக்கு மேற்பட்ட ரதங்களோடும் அப்படியே மடைப்பள்ளியிற் சூழ்ந்துள்ள மற்றப் பரிசாரகர்களோடும் கூடினவர்களாகவும் ஆயுதங்களுள்ளவர்களாகவும் கத்திகட்டினவர்களாகவும் அம்புத்தூணிகளும் அம்புகளுமுள்ளவர்களாகவும் கீழ்த்திசையை நோக்கிச் சென்றார்கள்.

தொண்ணூற்றிரண்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர் தர்மமும் அதர்மமும் முறையே செல்வத்துக்கும் வறுமைக்கும் காரணமென்பதை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், 'தேவரிஷிகளுள் மிகச்சிறந்தவரே! என்னைக் குணமில்லாதவனென்று நான் நினைக்கவில்லை. ஆயினும், வேறோர் அரசன் பட்டிராத அப்படிப்பட்ட துக்கத்தால் மிகஎரிக்கப்பட்டவனாக இருக்கிறேன். லோமசரே! பகைவர்களைக் குணங்களில்லாதவர்களாகவும் தர்மங்களை அடையாதவர்களாகவும் நினைக்கிறேன். யாதுகாரணத்தால் அவர்கள் இவ்வுலகத்தில் மிகவும் செழிக்கிறார்கள்?' என்று வினவ, லோமசர் சொல்லலானார்.

'அரசனே! குந்திபுத்திர! அதர்மத்தில் ருசியுள்ளஜனங்கள் அதர்மத்தினால் விருத்தியடைவார்களென்னும் இந்தவிஷயத்தில் உன்னால் எவ்விதத்தாலும் மனவருத்தம் அடையத்தக்கதன்று.

மனிதன் அதர்மத்தினுல் விருத்தியடைகிருன்; அதனுல், மங்களங்களைக் காண்கிருன்; அதனுல் பகைவர்களை ஜயிக்கிருன்; பிறகு, அடியோடு அழிந்துவிடுகிருன். அரசர்களுள் மிகச்சிறந்தவனே! எங்கே அரசர்கள் தர்மத்தினுல் விருத்தியடைகின்ருர்களோ, எல்லாப்பகைவர்களையும் அழிக்கிருர்களோ அங்கே அவர்களுடைய ராஜ்யமானது விருத்தியடைகிறது. வேந்தே! தைத்யர்களும் தானவர்களும், அதர்மத்தினுல் வளர்ந்ததும் மறுபடியும் அழிவை அடைந்ததும் என்னுல் பார்க்கப்பட்டிருக்கின்றன. பிரபுவே! என்னுல் முன்பு தேவயுகத்தில் எல்லாம் பார்க்கப்பட்டன. தேவர்கள் தர்மத்தை விரும்பினுர்கள். அஸுரர்கள் தர்மத்தை விட்டார்கள். பாரத! தேவர்கள் தீர்த்தங்களை அடைந்தார்கள். அஸுரர்கள் அவைகளை அடையவில்லை. அதர்மத்தால் உண்டு பண்ணப்பட்ட கொழுப்பானது அந்தஅஸுரர்களை முந்தியே அடைந்துவிட்டது. கொழுப்பினுல் அகங்காரமானது உண்டாயிற்று. அகங்காரத்தால் கோபம்உண்டாயிற்று. கோபத்தினுல் (அகார்யங்களில்) வெட்கமில்லாமை உண்டாயிற்று. அதனுல், நிந்தைஎன்கிறதோஷத்தில் பயமின்மை உண்டாயிற்று. அதனுல் அவர்களுடைய நடை கெட்டுவிட்டது. பிறகு, நிந்தைவருமென்ற பயமில்லாதவர்களும் செல்வத்தை இழந்தவர்களும் கெட்டநடையுள்ளவர்களும் பயனற்ற விரதமுள்ளவர்களுமான அந்தஅஸுரர்களைப் பொறுமையும், லக்ஷ்மியும், ஸ்வதர்மமும், சீக்கிரத்தில் விட்டுவிட்டன. அரசனே! லக்ஷ்மியோ தேவர்களை அடைந்தாள். அலக்ஷ்மியானவள் அஸுரர்களை அடைந்தாள். பிறகு, அலக்ஷ்மியினுலே நன்கு அடையப்பட்டவர்களும், கொழுப்பினுல் கெடுக்கப்பட்ட மனமுள்ளவர்களுமான அந்தத் தைத்யர்களையும் தானவர்களையும் கலியும் அடைந்தான். குந்தீபுத்திர! அலக்ஷ்மியினுல் நன்கு அடையப்பட்டவர்களும், கலியினுல் கெடுக்கப்பட்டவர்களும்,கொழுப்புமேலிட்டவர்களும், நற்செய்கைகளால் விடுபட்டவர்களும், புத்தியில்லாதவர்களும், அகங்காரம் மேலிட்டவர்களுமான அவர்களை விரைவில் விநாசம் வந்தடைந்தது. வேந்தே! அப்படி கீர்த்தி இழந்தவர்களும், அதர்மத்தில் ருசியுள்ளவர்களும், அலக்ஷ்மியினுல் ஆக்ரமிக்கப்பட்டவர்களுமான தைத்யர்கள் முழுமையும் நாசமடைந்தார்கள். தர்மத்தை இயற்கையாகக்கொண்ட தேவர்களோ கடல்களையும், ஆறுகளையும் குளங்களையும், புண்யமான ஆயதனங்களையும்குறித்துச் சென்ருர்

கள். பாண்டவ! தவங்களாலும், யாகங்களாலும், தானங்களாலும், ஆசீர்வாதங்களாலும், தேவர்கள் எல்லாப் பாவங்களையும் தொலைத்தார்கள்; மேன்மையும் பெற்றார்கள். இவ்வண்ணம் தேவர்கள் உள்ளும் புறமும் ஒத்திருத்தல்முதலிய நியமமுள்ளவர்களாகவும் தேவர்கள்முதலியவர்களாலும் தடைஉண்டுபண்ணப்படாதவர்களாகவும் தீர்த்தங்களை அடைந்தார்கள். அதனால் உத்தமமான ஸம்பத்தை அடைந்தார்கள். ராஜேந்திரனே! அப்படியே, நீயும் இளையஸஹோதரர்களோடு தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து அந்தலக்ஷ்மியை மீண்டும் அடைவாய். இது சாஸ்வதமான வழி. மஹாராஜனே! ராஜஸ்ரேஷ்டனே! ந்ருகன் என்கிற அரசனும் உசீநரதேசாதிபதியான சிபியும், பகீரதனும், வஸுமநஸுவும், கயனும், பூருவும், புரூரவஸுவும் தவத்தைச் செய்கின்றவர்களாகியும், தினந்தோறும் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம்செய்வதனாலும் தீர்த்தங்களைக்குறித்துச் செல்வதனாலும் மஹாத்மாக்களினுடைய தர்சனத்தினாலும் பரிசுத்தர்களாகியும், எப்படி புகழையும் புண்ணியத்தையும் தனங்களையும் அடைந்தார்களோ அப்படியே நீயும் மிகப்பெரிய செல்வத்தை [1] அடைவாய். புத்திரர்களுடனும் ஜனங்களுடனும் பந்துக்களுடனும் கூடின இக்ஷ்வாகுவும் முசுகுந்தனும் மாந்தாதாவும் மருத்தராஜனும் தேவரிஷிகளும் தபோபலத்தினால் எவ்வாறு புண்ணியமான கீர்த்தியைப் பெற்றார்களோ அவ்வாறே நீயும் எல்லாவற்றையும் அடைவாய். அதர்மத்தினாலும் அஜ்ஞானத்தினாலும் வசப்படுத்தப்பட்ட த்ருதராஷ்டிர புத்திரர்களோ அஸுரர்கள்போல விரைவில் நாசமடைவார்கள்; இதில் ஐயமில்லை' என்றார்.

தொண்ணூற்றுமூன்றாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர்முதலியவர்கள் அடைவில் பிரம்மஸரஸை அடைந்ததும், அங்கே சமடர் கயனுடைய யாகத்தை அவர்களுக்குச் சொல்லியதும்.)

பூமியைப் பாதுகாக்கிறவரே! வீரர்களான அந்தப் பாண்டவர்கள் அவ்வண்ணம்ஒன்றுசேர்ந்து ஆங்காங்குவஸித்துக்கொண்டு அடைவில் நைமிசாரண்யத்தை வந்தடைந்தார்கள். அரசே! பாரத!

1 வேறுபாடம்.

பிறகு, பாண்டவர்கள் புண்யமான கோமதீநதியின் தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து பசுக்களையும் தனத்தையும் கொடுத்தார்கள். பாரத! பூமியைப் பாதுகாப்பவரே! குருவம்சத்தவர்களான அனைவரும் அந்தக் கோமதியில் தேவர்களையும் பித்ருக்களையும் பிராம்மணர்களையும் மறுபடியும் மறுபடியும் திருப்தியடையச் செய்து கன்யாதீர்த்தத்திலும் அஶ்வதீர்த்தத்திலும் கோதீர்த்தத்திலும் காலகோடியிலும் விஷப்ரஸ்தமென்கிற மலையிலும் வஸித்துப் பாகுதாநதியில் ஸ்நானம் செய்தார்கள். பூமிக்கு அதிபதியே! தேவர்களுடையயாகபூமியான பிரயாகையில் ஸ்நானம்செய்து அங்கு வஸித்தார்கள்; உத்தமமானதவத்தையும் செய்தார்கள். சொல் தவறாதவர்களும் பாவமில்லாதவர்களும் மஹாத்மாக்களுமான அவர்கள் கங்கையமுனைகளின் ஸங்கமத்தில் தனத்தைப் பிராம்மணர்களுக்குக் கொடுத்தார்கள். அரசரே! பாரதரே! பிறகு, பாண்டுவின் புதல்வர்கள் பிராம்மணர்களுடன்கூடத் தவசிகளால் அடையப்பட்ட பிரம்மதேவருடைய யாகவேதியை அடைந்தார்கள். வீரர்களானஅவர்கள் எப்பொழுதும் வனத்தில் கிடைத்தவற்றால் செய்த ஹவிஸினால் பிராம்மணர்களைத் திருப்தி செய்பவர்களாகி அந்த இடத்தில் வாஸம்செய்துகொண்டு உத்தமமானதவத்தையும் செய்தார்கள். நிகரற்றகாந்தியுடையவரே! பிறகு, எந்த இடத்தில் கயசிரஸ்என்கிற மலையும் புண்யமானதும் [1] வானீரத்துறைகளை இரண்டுபக்கங்களிலுமுடையதும் அழகியதும் மணல்திட்டுக்களால் விளங்குவதுமான நதியும் இருக்கின்றனவோ, எந்தவிடத்தில் திவ்யமானதும் பரிசுத்தமான சிகரங்களுள்ள பவித்ரபர்வதத்தையுடையதும் ரிஷிகளால் அடையப்பட்டதும் மிக்க புண்யமானதும் ஒப்பற்றதுமான பிரம்மசிரஸென்கிற அந்தத்தீர்த்தமும் இருக்கிறதோ, எந்த இடத்தில் அகஸ்தியபகவான் வைவஸ்வதனிடம் சென்றாரோ, தர்மங்களையறிந்தவனும் புண்யஞ்செய்தவனுமான கயனென்னும் ராஜரிஷியினால் சென்று பூஜிக்கப்பட்ட அந்த மலையை அடைந்தார்கள். அரசே! எந்த இடமானது எல்லாநதிகளுக்கும் உற்பத்திஸ்தலமோ அந்த இடத்தில் ஸனாதனனான தர்மராஜன் தானே வஸித்தான். எந்த இடத்தில் பிநாகம் என்கிற வில்லைத்தாங்கியவரும் பரிபூர்ணரும் சிறந்த ஜ்யோதிஸ்வரூபியும் பரமாத்மாவும் ஸநாதனரும் பிரம்மதேவர்முதலியவர்களால் உபாஸிக்கத்தக்கவரும் பக

[1] வானீரம் = நீர்வஞ்சி, ஒருவகைக்கரும்பு, அல்லது பிரம்பு.

வானும் மஹாதேவருமான பரமேஶ்வரர் நித்யம் ஸாந்நித்யம்செய்கிறரோ அந்தஇடத்தில் நான்கு புருஷார்த்தரூபமான பயன்களைக் கொடுப்பவரான அந்தமகாதேவரை நமஸ்காரம்செய்து, மோக்ஷத்தைவிரும்புகிறவர்களனைவருக்கும் இது ஸித்திக்ஷேத்ரமென்று எண்ணி,வீரர்களான பாண்டவர்கள் அந்தஇடத்தில் அப்பொழுது சாதுர்மாஸ்ய விரதங்களால் பூஜித்தார்கள். எந்த இடத்தில் பெரிதான அக்ஷயவடம் இருக்கிறதோ, அக்ஷயமான எந்தத் தேவயஜனக்ஷேத்ரத்தில் பெரிய ரிஷியஜ்ஞத்தினால் அக்ஷயமானபலன் கிடைக்கிறதோ அந்த இடத்தில் [1] அவர்கள் மனவுறுதியுடன் உபவாஸத்தைச் செய்தார்கள். அந்த இடத்தில் தபோதனர்களான பிராம்மணர்கள் நூற்றுக்கணக்காகவந்தார்கள். (அவர்கள்)அப்பொழுது வேதவிதிப்படி சாதுர்மாஸ்யயாகத்தைச் செய்தார்கள். அந்த யாகத்தில் ஸதஸிலிருப்பவர்களும் வித்தையினாலும் தவத்தாலும் முதிர்ந்தவர்களும்வேதங்களின் கரையைக் கண்டவர்களுமான பிராம்மணர்கள் மஹாத்மாக்களுடைய புண்ணியமானகதையைக் கூறினார்கள். அரசரே! அந்த இடத்தில் வித்யாஸ்நானத்தையும் வ்ரதஸ்நானத்தையும்செய்து [2] கௌமாரவிரதத்தைக் கைக்கொண்டசமடர் ஆதூர்த்தரஜஸின் குமாரனான கயனைப் பற்றிச் சொல்லலானார்.

'பாரத! ராஜரிஷிகளுள் மிகச்சிறந்தவனான கயன் ஆதூர்த்தரஜஸினுடைய புத்திரன். அவனுடைய அந்தப் புண்ணியமான செயல்களை என்னிடத்தினின்றுகேள். அரசனே!எந்தக்கயனுடைய யஜ்ஞமானது இங்கே மிக்கஅன்னமுள்ளதாகவும் மிக்கதக்ஷிணையுள்ளதாகவுமிருந்ததோ, எந்தயஜ்ஞத்தில் அன்னமலைகள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும், நெய்யாறுகளும் அப்படியே தயிராறுகளும் பலநூற்றுக்கணக்காகவும், விலையுயர்ந்த வியஞ்சன ப்ரவாஹங்கள் ஆயிரக்கணக்காகவும், நாள்தோறும், யாசிக்கிறவர்களுக்கு இவ்வண்ணம் நன்கு கொடுக்கப்பட்டனவோ, மற்றப் பிராம்மணர்களும் நன்கு பக்குவம்செய்யப்பட்ட அன்னத்தைப் புஜித்தார்களோ, அந்த யாகத்தில் தக்ஷிணைகள் கொடுக்கும் ஸமயத்தில் (ப்ராம்மணர்களின்) வேதகோஷமானது வானுலகை அளாவியது. பாரத! வேதகோஷத்தால் ஒன்றும் அறியப்படவில்லை. அரசே! பரவுகின்ற புண்யமான வேதகோஷத்தால் பூமி

1 வேறு பாட்டம்.

2 ப்ரம்மசர்ய வ்ரதம் என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

யும் எல்லாத்திசைகளும் ஆகாயமும் அவ்வாறே அந்தரிக்ஷமும் நிரம்பினவாயின. அதுவும் பெரிய ஆச்சரியமாக இருந்தது. பரதர்களுள் சிறந்தவனே! குருநந்தன! எந்தயஜ்ஞத்தில் மனிதர்கள் மங்களகரமான அன்னபானங்களால் திருப்தியடைந்தவர்களாகவும் நல்லதேஜஸுள்ளவர்களாகவும் தேசந்தோறும், 'கயனுடைய யாகத்தில் (புசித்த) எந்தப் பிராணிகள் இப்பொழுது புசிக்கவிரும்பும்? அங்கே சாப்பிட்ட மிச்சம் இருபத்தைந்து மலைகள் இருந்தன. அளவிறந்தகாந்தியுள்ளவனும் ராஜரிஷியுமான கயன் யஜ்ஞத்தில் எதைச் செய்தானோ அதை முந்தியிருந்த ஜனங்களும் செய்யவில்லை; பிந்தினவர்களும் செய்யார். கயனால் ஹவிஸினால் திருப்திசெய்யப்பட்ட தேவர்கள் மற்றவர்களால் கொடுக்கப்பட்டவைகளை மறுபடியும் வாங்கிக்கொள்வதற்கு எவ்வாறு சக்தியுள்ளவர்களாவார்கள்? உலகத்தில் எப்படி மணல்களும் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களும் பொழிகிற மேகத்தினுடைய நீர்த்தாரைகளும் ஒருவராலும் எண்ணமுடியாதவைகளோ அப்படியே கயனுடைய யஜ்ஞத்தில் தக்ஷிணைகள் எண்ணமுடியாமலிருந்தன' என்னும் (பொருளுள்ள) காதைகளைப் பாடுகிறார்களோ இப்படிப்பட்ட அந்தக் கயராஜனுடைய மிகப்பலயாகங்கள் இந்தப்பிரம்மசிரஸின் ஸமீபத்தில் நடந்தேறின' என்று கூறினார்.

தொண்ணூற்றுநான்காவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர் யுதிஷ்டிரநுக்கு அகஸ்தியருடைய சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கி வாதாபி இல்வலன் ஆகிய இவர்களின் வரலாற்றையும் லோபாமுத்திரையினுடைய உத்பத்தியையும் சொல்லியது.)

பிறகு, (தீர்த்த யாத்திரைக்காகப்) புறப்பட்டவரும் மிக்க தக்ஷிணை கொடுப்பவரும் அரசருமான யுதிஷ்டிரர் அகஸ்தியருடைய ஆஸ்ரமத்தை அடைந்து துர்ஜயை (என்கிற வாதாபியினுடைய மணிமதீ நகரி) யில் வஸித்தார். பேசுகிறவர்களுள் சிறந்தவரான அரசர் அந்த இடத்திலேயே லோமசரைப்பார்த்து, 'இந்த இடத்தில் அகஸ்தியரால் வாதாபி எதற்காக நாசம்செய்யப்பட்டான்? மனிதர்களுக்கு முடிவைச் செய்துகொண்டிருந்த

அந்த அஸுரன் என்னபெருமை உள்ளவனாக இருந்தான்? மகாத்மாவான அகஸ்தியருக்கு எதற்காகக் கோபம் மூட்டப்பட்டது?' என்று வினவினர்.

லோமசர், 'கௌரவநந்தன! முற்காலத்தில் மணிமதிஎன்கிற பட்டணத்தில் இல்வலனென்கிற ஓர் அஸுரன் இருந்தான். அவனுக்கு வாதாபி என்கிற தம்பி ஒருவன் இருந்தான். அந்த அஸுரன் தவத்துடனிருக்கும் ஒரு ப்ராம்மணனைப் பார்த்து, 'பகவானான (நீர்) எனக்கு இந்திரன்போன்ற ஒரு பிள்ளையைக் கொடுக்க வேண்டும்' என்று சொன்னான். அந்தப் பிராம்மணன் அவனுக்கு இந்திரனுக்கு நிகரான புத்திரனைக் கொடுக்கவில்லை. பிறகு, அந்த அஸுரன் அந்தப்பிராம்மணன்விஷயத்தில் மிகவும்கோபம்கொண்டான். ராஜேந்திரனே! அதுமுதல் இல்வலன் என்கிற அஸுரன் பிராம்மணர்களைக் கொல்பவனாகிவிட்டான். பிறகு, கோபமுள்ளவனும் மாயாவியுமான அவன் தம்பியை ஆடாகச்செய்தான். நினைத்த உருவங்களை எடுக்கும் வாதாபியானவன் ஒரு நொடியில் ஆட்டின் உருவமுள்ளவனானான். (இல்வலன்) அதனைப் பக்குவம் செய்து போஜனம் செய்வித்துப் பிறகு பிராம்மணனைக் கொல்ல விரும்பினான். அந்த இல்வலன் யமலோகத்தை அடைந்த எவனை வாக்கினால் அழைக்கிறானோ அவன் மீண்டும் தேகத்தை எடுத்துக்கொண்டு உயிருள்ளவனாக நேரில் காணப்பட்டான். பிறகு, வாதாபி என்கிற அஸுரனை ஆடாகச் செய்து நன்கு சமைத்து அதனைப் பிராம்மணனைப் புஜிப்பித்து மறுபடியுமே அழைத்தான். அரசனே! ஜனாதிப! இல்வலனால் உரத்த குரலால் சொல்லப்பட்ட அந்தச்சொல்லைக்கேட்டு மாயை மிகுந்தவனும் பலசாலியும் பிராம்மணருக்குப் பகைவனும் பெரிய அஸுரனுமான அந்த வாதாபி அந்தப் பிராம்மணனுடைய விலாவை விரைவில் பிளந்துகொண்டும் உரக்கச் சிரித்துக்கொண்டும் வெளிப்பட்டான். வேந்தே! கெட்டபுத்தியுடைய அந்த இல்வலன்என்கிற அஸுரன் இவ்வண்ணம் மறுபடியும் மறுபடியும் பிராம்மணர்களைப் புஜிப்பித்துக் கொன்றுவந்தான். இந்த ஸமயத்திலேயே அகஸ்தியபகவானும் தம் பித்ருக்கள் ஒருபள்ளத்தில் தலைகீழாகத் தொங்குவதைக் கண்டார். அவர், தொங்குகிற அந்தப் பித்ருக்களைப் பார்த்து, 'பகவான்களான நீங்கள் எதில் விருப்பமுள்ளவர்கள்? இந்தப்பள்ளத்தில் நீங்கள் தலைகீழாக எதற்காகத்தொங்குகிறீர்கள்?' என்று கேட்டார். பிரம்மவாதிகளான அவர்கள்,

'ஸந்தானத்தின்பொருட்டு' என்று மறுமொழி கூறினர்கள். அவர்கள், 'நாங்கள் உன்னுடைய சொந்தப் பித்ருக்கள். இந்தப் பள்ளத்தை அடைந்து ஸந்ததியை எதிர்பார்த்துக்கொண்டு தொங்குகிறோம். அகஸ்திய! எங்களுக்காக உத்தமமான பிள்ளையை நீ உண்டுபண்ணுவாயாகில் எங்களுக்கு இந்த நரகத்தினின்று மோக்ஷம் உண்டாகும். புத்திரனே! நீயும் நற்கதியை அடைவாய்' என்று அவருக்குச் சொன்னார்கள். தேஜஸுள்ளவரும் ஸத்யத்திலும் தர்மத்திலும் நிலைபெற்றிருப்பவருமான அவர் அவர்களைப் பார்த்து, 'பித்ருக்களே! (உங்களுடைய) விருப்பத்தைச் செய்வேன். உங்களுடைய மனத்திலுள்ள நோய் நீங்குக' என்று சொன்னார். பிறகு, பகவானான முனிவர் ஸந்ததியின் தொடர்ச்சியைப் பற்றி ஆலோசித்துப் பிள்ளையை அடையும் விஷயத்தில் தமக்குத் தகுதியுள்ள மாதைக் காணவில்லை. அவர் ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வோர் அங்கம் சிறந்திருப்பதை நன்கறிந்து அந்த அங்கங்களுக்குச் சமமான அங்கங்களுடன் ஒப்புயர்வற்ற ஒரு ஸ்திரீயை [1] உண்டுபண்ணினர். பெருந்தவமுள்ள அந்த முனிவர் தமக்காக உண்டுபண்ணப்பட்ட அந்தப்பெண்ணைப் புத்திரனை விரும்புகிறவனும் வாடுகிறவனுமான விதர்ப்பதேசத்தரசனுக்குப் (பிறக்கும்படி) கொடுத்தார். மிக்க பாக்யசாலியான அவள் மிக்க ஒளி பொருந்திய மின்னல்போல அங்கே பிறந்தாள்; சரீரத்தால் விளங்குகின்றவளாகவும் மங்களகரமான முகமுள்ளவளாகவும் வளர்ந்தாள். பாரத! விதர்ப்பராஜன், பிறந்தமாத்திரத்தில் அந்தப்பெண்ணைக்கண்டு மிக்க மகிழ்ச்சியுடன் பிராம்மணர்களுக்குத் தெரிவித்தான். பூமிக்கு அதிபதியே! எல்லாப் பிராம்மணர்களும் அந்தப்பெண்ணைப் புகழ்ந்தார்கள். அந்தப் பிராம்மணர்கள் அவளுக்கு [2] லோபாமுத்ரைஎன்று பெயரையும் இட்டார்கள். மஹாராஜனே! அந்தப்பெண் உத்தமரூபத்தைத் தரித்தவளாக ஜலத்தில் தாமரைக்கொடிபோலவும் அக்கினியினுடைய மங்களகரமான ஜ்வாலைபோலவும் சீக்கிரம் வளர்ந்தாள். ராஜேந்திரனே! யௌவனத்திலிருப்பவளும் கல்யாணியுமான அவளை நன்றாக அலங்கரித்துக்கொண்ட நூறு கன்னியர்களும் நூறு தாதியர்களும்

1 உண்டாகும்படி மனத்தால் எண்ணினர்.

2 பிராணிகளிடமுள்ள அழகிய இடை, கண் முதலிய சிறந்த முத்திரைகளுக்கு (= லக்ஷணங்களுக்கு) லோபத்தை (= அவமதிப்பை) உண்டுபண்ணுகிறவள்; அதாவது அழகைக் கவர்கிறவள் என்பது பழையவுரை.

அவளுக்கு வசப்பட்டவர்களாகிச் சூழ்ந்திருந்தார்கள். அந்தக் கன்னியானவள் நூறு கன்னியரின் நடுவில் நூறுதாதிமார்களால் சூழப்பட்டு ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற ரோஹிணிபோல ஒளியுள்ளவளாயிருந்தாள். நல்லியற்கையுடனும் ஆசாரத்துடனும் கூடியவளான அவளை, யௌவனப்பருவத்தில் இருந்தும், மஹாத்மாவான அந்த அகஸ்தியருடைய பயத்தினால் ஒரு புருஷனாவது வரிக்கவில்லை. ஸத்யமுள்ளவளும் உருவத்தினால் அப்ஸரஸையைவிட மேற்பட்டவளுமான அந்தக்கன்னியானவள் நன்னடையினால் பிதாவையும் அப்படியே பந்துஜனங்களையும் மகிழ்வித்தாள். அப்படிப்பட்ட (ஸ்வபாவத்துடனும் ஆசாரத்துடனும்) கூடிய வைதர்ப்பி யௌவனமடைந்ததைப் பிதா பார்த்து, 'யாருக்கு இந்தப் பெண்ணைக்கொடுப்பேன்?' என்று மனத்தினால் ஆலோசித்தான்.

தொண்ணூற்றைந்தாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(விதர்ப்பராஜன் ஸந்தானத்துக்காகக் கன்னியை விரும்புகிற அகஸ்தியருக்கு லோபாமுத்திரையை விதிப்படி கொடுத்ததும், அகஸ்தியர் லோபாமுத்திரையை விலையுயர்ந்த ஆடையாபரணங்களைவிட்டு மாவுரி முதலியவற்றை அணிவித்துத் தம் ஆச்ரமத்திற்கு அழைத்து வந்ததும், ருதுகாலத்தில் அழைக்கப்பட்ட அவள் சிறந்த ஆடையாபரணங்களை விரும்ப அகஸ்தியர் அவற்றைத் தேடிவரப் புறப்பட்டதும்.)

அகஸ்தியர் எப்பொழுது அவளை இல்லறத்தில் தகுதியுள்ளவளென்று நினைத்தாரோ அப்பொழுது விதர்ப்பதேசத்தரசனை அடைந்து, 'அரசனே! புத்திரனை அடைவதற்காக எனக்கு விவாஹம் செய்துகொள்வதில் எண்ணம் இருக்கிறது. பூபாலனே! உன்னிடம் லோபாமுத்திரையை வரிக்கிறேன்; எனக்குக் கொடு' என்று சொன்னார். முனிவரால் இவ்வண்ணம் உரைக்கப்பட்ட அந்த அரசன் ப்ரஜ்ஞையை இழந்தவனாகி மறுப்பதற்கும் சக்தியற்றவனானான்; கொடுப்பதற்கும் விரும்பவில்லை. பிறகு, அந்த அரசன் மனைவியிடம் சென்று, 'வீர்யமுள்ள இந்த மஹரிஷியான

வர் கோபம்கொண்டால் சாபாக்னியினால் எரித்துவிடுவார்' என்று சொன்னான். அவ்வண்ணம் துக்கமடைந்தவனும் மனைவியுடனிருப்பவனுமான அந்த அரசனைக்கண்டு லோபாமுத்திரையானவள் அருகில் சென்று, 'பூமிபாலரே! எனக்காக வருத்தத்தை அடையத்தக்கவரல்லீர். பிதாவே! என்னை அகஸ்தியருக்குக் கொடும். என்னால் உம்மைக் காப்பாற்றிக்கொள்ளும்' என்கிற இந்த வசனத்தை ஸமயத்தில் சொன்னாள். வேந்தே! பிறகு, அந்த விதர்ப்பராஜன் பெண்ணினுடைய வசனத்தால் மஹாத்மாவான அகஸ்தியருக்கு லோபாமுத்திரையைச் சாஸ்திரவிதியை முன்னிட்டுத் தானம்செய்தான். அகஸ்தியரோ லோபாமுத்திரையை மனைவியாக அடைந்து, 'மிகுவிலையுள்ளவைகளான இந்த வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் விட்டுவிடு' என்று சொன்னார். பிறகு, வாழைமரம்போன்ற தொடைகளுள்ளவளும் நீண்ட கண்களுள்ளவளுமான அவள் அழகுள்ளவைகளும் விலையுயர்ந்தவைகளும் மெல்லியவைகளுமான ஆடைகளை எறிந்துவிட்டாள். பிறகு, மரப்பட்டைகளையும் தோல்களையும் ஆடையாகக்கொண்டாள். நீண்டகண்ணுள்ள அவள் ரிஷியோடு ஒத்தவிரதமும் ஒழுக்கமும் உள்ளவளானாள். பிறகு, ரிஷிகளுள் மிகச்சிறந்த அகஸ்தியபகவான் கங்காத்வாரத்திற்குவந்து அனுகூலையான பத்தினியுடன் கடுந்தவம்புரிந்தார். அப்பொழுது அவள் பதியை அன்பினாலும் நன்மதிப்பினாலும் உபசரித்தாள். பிரபுவான அகஸ்தியரும் பார்யையினிடத்தில் அதிகப்ரீதியை அடைந்தார். அரசனே! பிறகு, பலநாட்கள் செல்லவே பகவானான அகஸ்தியரிஷியானவர் தவத்தினால் விளங்குகின்றவளும் (ருது) ஸ்நானம்செய்தவளுமான லோபாமுத்திரையைப் பார்த்தார். அவர் அவளுடைய பணிவிடையாலும் சுத்தியாலும் அடக்கத்தாலும் காந்தியாலும் ரூபத்தாலும் பிரீதியடைந்தவராகி அவளைச் சேர்வதற்காக அழைத்தார். பிறகு, அந்தப்பெண், வெட்கமுள்ளவளாகி, கரங்களைக் குவித்துக்கொண்டு, அப்பொழுது பகவானான அகஸ்தியரைப் பார்த்து, 'ரிஷியே! பதியானவன் பார்யையை அடைவது பிரஜைகளை அடைதற்காகவே என்பதில் ஐயமில்லை. உம்மையடையும் விஷயத்தில் என்னுடைய விருப்பம் எதுவோ அதனை நீர் செய்யக் கடவீர். பிராம்மணரே! பிதாவினுடைய அரண்மனையில் உள்ள உப்பரிக்கையில் எப்படி என்னுடைய படுக்கை இருந்ததோ அப்படிப்பட்ட படுக்கையில் நீர் என்னை இந்த இடத்தில் அடையக்

கடவீர். புஷ்பமாலைகளை அணிந்தவரும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவருமான உம்மைத் திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட நான் இஷ்டப்படி அடைவதற்கு விரும்புகிறேன். நான் வேறுவிதமாகக் காஷாயவுடை உடுத்து உம்மை அடையமாட்டேன். பிரம்மரிஷியே! இப்பொழுது அணிந்துள்ளவை எவ்விதத்தாலும் அசுத்தமாதல் கூடாது' என்ற வசனத்தைக் காதலுடன் கூறினள். அகஸ்தியர், 'அழகிய இடையுள்ளவளே! கல்யாணி! லோபாமுத்ரையே! உன் தகப்பனுருக்கு எவ்விதமான தனங்கள் இருக்கின்றனவோ அவ்விதமான தனங்கள் உனக்குமில்லை; எனக்குமில்லை' என்று சொன்னர். லோபாமுத்ரை, 'தபோதனரே! ஜீவலோகத்திலிருக்கிற தனமெல்லாவற்றையும் ஒருக்ஷணத்தில் தவத்தினுல் கொண்டுவருவதற்குத் தேவரீர் ஸமர்த்தராக இருக்கிறீர்' என்றுசொன்னுள். அகஸ்தியர், 'நீசொல்லுகிறஇது இவ்வண்ணமே. ஆனுல், அது தவத்தைக் குறைப்பதாகும். என்னுடையதவம் அழியாதபடி என்னை ஏவுவாயாக' என்று சொன்னர். லோபாமுத்ரை, 'தபோதனரே! என்னுடைய இந்த ருதுகாலமானது சிறிதே மிகுதியுள்ளதாக இருக்கிறது. நான் வேறுவிதமாக உம்மைஅடைவதற்கு எவ்விதத்தாலும் விரும்பவில்லை. உம்முடைய தர்மத்தையும் எவ்விதத்தாலும் அழிப்பதற்கு நான் விரும்பவில்லை. இவ்விதமான என்னுடையவிருப்பத்தை நீர் நிறைவேற்றக்கடவீர்' என்றுசொன்னுள். அகஸ்தியர், 'ஸௌபாக்யவதியே! கல்யாணி! இந்தவிருப்பமானது உன்னுடைய புத்தியினுல் நிச்சயிக்கப்பட்டிருந்தால் நான் (அவற்றைக்)கொண்டுவருகிறதற்குப் போகிறேன். நீ இந்த இடத்திலிருந்து (என்) விருப்பப்படி நடப்பாயாக' என்று சொன்னர்.

தொண்ணூற்றுருவது அத்யாயம்.

தீர்த்தயாத்ரா பர்வம் (தொடர்ச்சி.)

(பொருளுக்காக ச்ருதர்வாமுதலிய மூவரைஅடைந்த அகஸ்தியர் அவர்களுடையபொருள் வரவும்செலவும் ஒத்திருப்பதை அறிந்து அவர்களுடன் இல்வலனிடம்சென்றது.)

கௌரவனே! பிறகு, அந்தஅகஸ்தியர் அரசர்களுள் எவனை (பொருள்) மிக்கவனென்று அறிந்தாரோ அந்தச்ருதர்வாஎன்கிற

அரசனைப் பொருளையாசிப்பதற்காக அடைந்தார். அந்த அரசனோ அகஸ்தியர் தன்னாட்டெல்லையில் வந்ததையறிந்து மந்திரிகளோடு (போய்) நன்குபூஜித்து வரவேற்றான். அரசன் அவருக்கு முறைப்படி அர்க்கியத்தைக் கொண்டுவந்து கைகூப்பி மிக்கஅடக்கமுள்ள வனாகி வரவில் விருப்பத்தை வினவினான்.

அகஸ்தியர், 'பூபதியே! என்னைப் பொருளைவேண்டிவந்தவனென்று தெரிந்துகொள். பிறரைத்துன்புறுத்தாமல் சக்திக்குத் தக்கபடி கொடுக்கக்கூடிய பாகத்தைக் கொடு' என்றுசொன்னார். பிறகு அரசன், 'கற்றறிந்தவரே! வரவுசெலவுகள் ஒத்திருக்கின்றன. ஆதலால், இந்தத்தனத்தில் மிச்சமிருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள்' என்றுஅவருக்குத் தெரிவித்தான். ஸமபுத்தியுள்ள பிராம்மணர், பிறகு,வரவுசெலவுகள் ஒத்திருப்பதைக்கண்டு (பொருளைப்) பெற்றுக்கொள்வதில் பிராணிகளுக்கு எல்லாவிதத்தாலும் துன்பம்உண்டாவதை நினைத்தார். அவர் ச்ருதர்வாவை அழைத்துக் கொண்டு ப்ரத்நச்வனை அடைந்தார். அவனும் அவர்களைத் தன் தேசத்தினுடைய எல்லையில் விதிப்படி வரவேற்றான். ப்ரத்நச்வன் அவ்விருவருக்கும் அர்க்யத்தையும் பாத்யத்தையும் கொடுத்து அனுமதிபெற்று, 'முனிச்ரேஷ்டரே! விருப்பத்தைச்சொல்லும். உம்முடையவரவினால் தன்யனாகிறேன்' என்று அவருடையவரவில் காரணத்தை வினவினான். அகஸ்தியர், 'பூமிப! எங்களிருவரையும் தனத்தில் விருப்பமுள்ளவர்களாக இங்கு வந்தவர்களென்று நீ அறி. பிறரைத் துன்புறுத்தாமல் உன் சக்திக்குத் தக்கபடி எங்களுக்குத் தனத்தைக்கொடு' என்று சொன்னார். பிறகு, அரசன், 'வரவும் செலவும் ஒத்திருக்கின்றன. இதை அறிந்து இந்தத்தனத்தில் மிச்சமிருப்பதாகத்தெரிந்தால் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று அவர்களுக்குத் தெரிவித்தான். பிறகு, ஸமபுத்தியுள்ள பிராம்மணர் வரவுசெலவுகள் ஒத்திருப்பதைக் கண்டு பொருளைப் பெறுவதனால் எல்லாவிதத்தாலும் பிராணிகளுக்குத் துன்பமுண்டாவதை நினைத்தார். அதற்குப் பிறகு, அகஸ்தியரும் ச்ருதர்வாவும் அரசனான ப்ரத்நச்வனும் மிக்க பொருளுள்ள புருகுத்ஸனுடைய குமாரனான த்ரஸதஸ்யுவை அடைந்தார்கள். மஹாராஜனே! பெரிய மனமுள்ள த்ரஸதஸ்யுவோ அவர்களைத் தன் தேசத்தின் எல்லையிலே எதிர் சென்று கண்டு விதிப்படி வரவேற்றான். இக்ஷ்வாகுவம்சத்தவனான (அந்த) ராஜச்ரேஷ்டன் முறைப்படி அர்ச்சித்து, பிறகு, எல்லோரையும்

வரவில் ப்ரயோஜனத்தை வினவினான். அகஸ்தியர், 'அரசே! எங்களைத் தனத்தில் விருப்பத்துடன் இங்குவந்தவர்களாக நீ அறி. பிறரைத்துன்புறுத்தாமல் சக்திக்குத்தக்கபடி எங்களுக்குப் பொருளைக்கொடு' என்று சொன்னார். பிறகு, அரசன், 'வரவும் செலவும் ஒத்திருக்கின்றன. இதை அறிந்து இந்தத்தனத்தில் மிச்சமிருந்தால் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று அவர்களுக்குத் தெரிவித்தான். ஸமபுத்தியுள்ள பிராம்மணர், பிறகு, வரவுசெலவுகள் ஸமமாக இருப்பதைக்கண்டு (தனத்தை) க்ரஹிப்பதனால் எல்லாவிதத்தாலும் பிராணிகளுக்குத் துன்பமுண்டாவதை நினைத்தார். மகாராஜனே! பிறகு, அந்த அரசர்களனைவரும் ஒன்று சேர்ந்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு அந்த மஹாமுனிவரை நோக்கி, 'பிராம்மணரே! இல்வலனென்கிற இந்த அஸுரன் பூமியில் மிக்க தனமுள்ளவனாக இருக்கிறான். அவனை அடைந்து நாமெல்லாரும் இப்பொழுது பொருளை யாசிப்போம்' என்று இந்த வசனத்தைக் கூறினார்கள். அரசனே! இல்வலனையாசிப்பதே உசிதமென்று அவர்களுக்கு அப்பொழுது தோன்றியது. பிறகு, அவர்கள் ஒன்றுசேர்ந்தவர்களாக இல்வலனிடம் விரைந்து சென்றார்கள்.

தொண்ணூற்றேழாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(இல்வலன் அகஸ்தியருக்கு ஆஹாரமாகச்செய்யப்பட்ட வாதாபியின் மாம்ஸத்தைப் பரிமாறியதும், இல்வலன் வாதாபியை அழைக்க அகஸ்தியர் தாம் அவனை ஜீர்ணமாக்கியதைச் சொல்லியதும், பயந்த இல்வலன் பொருள்கொடுத்தலை முன்னிட்டு அவரைக்கொல்ல எண்ணிப் பின்தொடர்ந்ததும், அவர் ஹுங்காரத்தால் இல்வலனைச் சாம்பலாக்கி லோபாமுத்ரைக்கு ஏராளமான தனத்தைக் கொடுத்து அவளிடத்தில் குணசாலியான ஒருபிள்ளையை உண்டுபண்ணியதும்.)

இல்வலனோ அந்த அரசர்கள் மஹரிஷியுடன் சேர்ந்து தன்தேசத்தின்எல்லையில் வந்ததை அறிந்து மந்திரிகளுடன்கூடினவனாகி (அவர்களைப்) பூஜித்தான். குருவம்சத்திலுதித்தவனே!

பிறகு, அஸுரஸ்ரேஷ்டன் அப்பொழுது நன்றாகப் பக்குவம்பண்ணப்பட்டபிராதாவான வாதாபியினால் அவர்களுக்கு விருந்துசெய்தான். பிறகு, பெரியஅஸுரனானவாதாபி ஆடாகிப் பக்குவம்பண்ணப்பட்டதைக் கண்டு எல்லாராஜரிஷிகளும் துயரமடைந்தவர்களும் பிரஜ்ஞையையிழந்தவர்களும் ஆனார்கள். பிறகு, ரிஷிகளுள் மிகச்சிறந்தவரான அகஸ்தியர் அந்த ராஜரிஷிகளைப்பார்த்து, 'நீங்கள் துயரமடையவேண்டாம். பெரியஅஸுரனை நான் பக்ஷிப்பேன்' என்றுசொன்னார். பிறகு, மஹரிஷியானவர், அக்ராஸனத்தைஅடைந்து அதில் வீற்றிருந்தார். அஸுரஸ்ரேஷ்டனான இல்வலன் உரக்கச்சிரித்துக்கொண்டு அதனைப் பரிமாறினான். பிறகு, அகஸ்தியரே வாதாபிமாம்ஸம் முழுமையையும் பக்ஷித்தார்; தாம் பக்ஷித்துக்கொண்டே, 'எனக்கு உன்னுடைய அன்னத்தில் மிக்க ஆசைஇருக்கிறது' என்றுசொன்னார். அவர்போஜனம்செய்தபிறகு, இல்வலனென்கிறஅஸுரன், 'வாதாபியே! தவத்தினால் ஜயிக்கப்படமுடியாத இந்தஅகஸ்தியர் உன்னை மீறுவதற்குமுன் பலத்தையும் தேஜஸையும் காண்பித்துக்கொண்டு விழித்துக்கொள்' என்று அவனை அழைத்தான். பிறகு, வாதாபி அவருடைய வயிற்றைப் பிளப்பதற்கு வேகத்தைக் கைக்கொண்டான். பெருந்தவமுள்ளவரும் தேஜஸ்வியுமான கும்பமுனிவர் அதனைத் தெரிந்துகொண்டார். தவத்தினால் உக்கிரமானவரும் பகவானுமான அந்தமுனிவர் வீர்யத்தால் கர்ஜித்தார்; தேஜஸினால் நன்றாகஜ்வலித்துக்கொண்டு, மிகுந்த பரபரப்புடன், 'வாதாபியே! உலகத்தின் க்ஷேமத்துக்காக இதோ என்னால் ஜீர்ணமாக்கப்படுகிறாய்' என்று இவ்வண்ணம் மூன்று முறை சொல்லித் தம்கைநுனியினால் வயிற்றைத் தட்டினார். ஐயனே! பிறகு, மகாத்மாவான அந்த அகஸ்தியருக்குக் கர்ஜிக்கின்றமேகம்போலப் பெரியசப்தத்தோடு வாயுவானது கீழ்நோக்கிப் புறப்பட்டது. இல்வலன், 'வாதாபியே! வெளிக்கிளம்பு' என்று திரும்பவும் திரும்பவும் சொன்னான். அரசனே! ரிஷிகளுள்மிகச்சிறந்தவரான அகஸ்தியர் அந்தஇல்வலனைப்பார்த்து, உரக்கச்சிரித்து, 'எங்கிருந்து வெளிப்படுவதற்கு வல்லவனாவன்? என்னால் அந்தஅஸுரன் ஜீர்ணமாக்கப்பட்டுவிட்டானன்றோ?' என்று சொன்னார். இல்வலனோ, பெரியஅஸுரன் ஜீர்ணமாக்கப்பட்டதைக்கண்டு துயரமடைந்தவனானான். அவன் மந்திரிகளுடன் சேர்ந்து கரங்குவித்துக்கொண்டு, 'எதற்காக நீங்கள் வந்தீர்கள்? உங்களுக்கு என்னசெய்யக்கடவேன்? சொல்லுங்கள்' என்ற

சொல்லச்சொன்னான். பிறகு, அகஸ்தியர், அப்பொழுது இல்வலனைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு, 'அஸுர! நீ பிரபுவாக இருக்கிறாய். நாங்கள் எல்லோரும் உன்னைத் தனங்களுக்கு உடையவனென்று அறிகிறோம். இவர்கள் அதிகதனமுள்ளவர்களல்லர். எனக்குத் தனத்தில் ஆசை அதிகமாக இருக்கிறது. பிறரைத் துன்புறுத்தாமல் சக்திக்குத்தக்கபடி எங்களுக்குப் பாகம் கொடு' என்று மறுமொழி உரைத்தார். பிறகு, இல்வலன், அந்தரிஷியை அவமதித்து, 'நான் கொடுக்க விரும்பியதை நீர் அறிகிறீராகில், பிறகு, உமக்குத் தனத்தைக் கொடுப்பேன்' என்ற வசனத்தைச் சொன்னான். அகஸ்தியர், 'அஸுரனே! பெரிய அஸுரனே! இந்த அரசர்கள் ஒவ்வொருவருக்கும் நீகொடுக்க விரும்பினவை பதினாயிரம் பசுக்களும் அவ்வளவே பொன்களுமாம். மகாஸுரனே! எனக்கு நீ கொடுக்க விரும்பினவை அவற்றைவிட இரண்டுமடங்கும் ஸ்வர்ணமயமானஒரு ரதமும் மனோவேகமுள்ள இரண்டுகுதிரைகளுமாம்' என்று சொன்னார். இல்வலனோ முனிவரைப்பார்த்து, 'நீர் என்னைநோக்கிச் சொல்லுகிறவை அனைத்தும் இருக்கின்றன. பொன்னும்பசுக்களுமாகிய இந்தத் தனமனைத்தையும் கொடுப்பேன். என்னைநோக்கிச் சொல்லிய ஸ்வர்ணமயமான ரதத்தை நான் அறியேன்' என்றுசொன்னான். அகஸ்தியர், 'மஹாஸுரனே! பொய்யான வசனம் ஒன்றுகூட என்னால்முந்திச் சொல்லப்பட்டதில்லை. நன்கு ஆலோசித்தறியக் கடவாய். பொன்மயமான ரதம் இருக்கிறது நிச்சயம்' என்று சொன்னார். கௌந்தேய! ஆலோசித்தபோது அந்த ஸ்வர்ணமயமான ரதம் இருந்தது. பிறகு, அஸுரன் அதிக மனவருத்தமுள்ளவனாகி அதிகமான தனத்தைக் கொடுத்தான். பாரத! அந்தரதத்தில் பூட்டப்பட்ட விவாஜி ஸுவாஜி என்கிற அந்தக் குதிரைகள் அந்தத் தனங்களுடனும் அகஸ்தியருடனும் கூடின எல்லா அரசர்களையும் ஒரு நிமிஷத்திற்குள்ளாக அகஸ்தியருடைய ஆஸ்ரமத்தைக் குறித்து விரைவில் சுமந்துகொண்டுவந்தன. இல்வலனோ இந்த அகஸ்தியரைப் பின்தொடர்ந்து கொல்ல விரும்பினான். மகாதேஜஸ்வியான அகஸ்தியர் ஹுங்காரத்தால் மகாஸுரனைச் சாம்பலாகச்செய்தார். அப்பொழுது, ராஜரிஷிகள் அகஸ்தியரால் அனுமதி கொடுக்கப்பட்டுச் சென்றார்கள். அகஸ்தியமுனிவர் லோபாமுத்திரையினால் விரும்பப்பட்ட எல்லாவற்றையும் செய்தார். லோபாமுத்ரை, 'பகவானே! எனக்கு விருப்பமான அஃதனைத்தையும் செய்துவிட்டீர். ஒருமுறை சிறந்த பராக்கிரம

முள்ள குழந்தையை என்னிடத்தில் உண்டுபண்ணும்' என்று சொன்னாள். அகஸ்தியர், 'கல்யாணி! மங்களகரியே! உன்னுடைய சரித்திரத்தினால் நான் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். குழந்தைவிஷயத்தில் ஓர் ஆலோசனையை உனக்குச் சொல்வேன்; அதைக் கேள். உனக்கு ஆயிரம்பிள்ளைகள் வேண்டுமா? அல்லது, ஆயிரம்பிள்ளைகளுக்குச் சமமான நூறுபிள்ளைகள் வேண்டுமா? அல்லது, நூறுபிள்ளைகளுக்குச் சமமான பத்துப்பிள்ளைகள் வேண்டுமா? அல்லது, ஆயிரத்தையும் வெல்லக்கூடிய ஒருபிள்ளை வேண்டுமா?' என்று வினவினார். லோபாமுத்ரை, 'தபோதனரே! ஆயிரம்பிள்ளைகளுக்கு ஸமனான ஒரு புத்திரன் உண்டாகட்டும். கற்றறிந்தவனும் தார்மிகனுமான ஒரு புத்திரன் துஷ்டர்களான பல பிள்ளைகளைக்காட்டிலும் சிறப்புடையவன்' என்று சொன்னாள். அந்தமுனிவர், 'அப்படியே ஆகட்டும்' என்று ப்ரதிஜ்ஞைசெய்து ச்ரத்தையுள்ளவராகி ச்ரத்தையுள்ளவளும் தம்மோடு ஒத்த ஒழுக்கமுள்ளவளுமான அவளுடன் தக்கசமயத்தில் சேர்ந்தார். பிறகு, அந்த அகஸ்தியர் அந்தக் கர்ப்பத்தை உண்டுபண்ணிவிட்டுக் காட்டுக்கே சென்றார். அவர் காட்டுக்குப்போனபிறகு, கர்ப்பமானது ஏழுவருஷம் வளர்ந்தது. பாரத! ஏழாவது வருஷமும் சென்றபிறகு, அந்தக் கர்ப்பம் மகிமையால் விளங்கிக்கொண்டு த்ருடஸ்யு என்னும் மஹாகவியாகப் பிறந்தது. மிக்க தவமுள்ளவனும் தேஜஸுள்ளவனும் மஹானுமான அந்த ரிஷி அங்கங்களுடனும் உபநிஷத்துக்களுடனும்கூடிய வேதங்களை ஜபித்துக்கொண்டே அந்த அகஸ்தியரிஷிக்குப் புத்திரனாகப் பிறந்தான். தேஜஸுள்ள அவன் பாலனாக இருந்துகொண்டே அந்தப் பிதாவினுடைய வீட்டில் ஸமித்துக்களுடைய சுமையைக் கொண்டுவந்தான். அதனால், அவன் இத்மவாஹன் என்கிற பெயருள்ளவனானான். அப்படி (வேதமோதலுடனும் ஸமித்துக்கொண்டுவருதலுடனும்) கூடின அந்தப்பிள்ளையைப் பார்த்து அந்த அகஸ்தியமுனிவர் அப்பொழுது மகிழ்ந்தார். பாரத! அவர் இவ்வண்ணம் உத்தமமான குழந்தையை உண்டுபண்ணினார். அரசே! அவருடைய பித்ருக்களும் விரும்பப்பட்ட உலகங்களை அடைந்தார்கள். ப்ரஜைகளுக்கு அதிபதியே! மஹாராஜனே! அதற்குமேல், இந்த அகஸ்தியருடைய ஆச்ரமமானது புத்திமானான அந்தப் புத்ரனுடைய தேஜஸினால் உலகில் க்யாதியை அடைந்தது. வேந்தே! பிரஹ்லாதனுடைய குலத்தில் பிறந்தவனான வாதாபி இப்படி பிராம

மணர்களைக் கொல்பவனும் துஷ்டபுத்தியுள்ளவனுமாயிருந்தான்; மஹாத்மாவான அகஸ்தியரால் இவ்வண்ணம் அழிக்கப்பட்டான். அரசனே! மகிழத்தக்க குணங்களுடன் கூடின இந்த ஆஸ்ரம மானது அந்த அகஸ்தியருடையது. புண்யமானதும் தேவர்களா லும் கந்தர்வர்களாலும் அடையப்பட்டதுமான இந்தப் பாகீரதி யானது ஆகாயத்தில் காற்றினால் அசைக்கப்பட்ட கொடித்துணி போல விளங்குகிறது. இந்தப் பாகீரதியானது, எப்பொழுதும் பள்ளங்களில் ஓடுவதுபோலச் சிகரங்களில் நன்குபரவிக்கொண்டும் ஸர்ப்பம்போலக் கற்களுடைய அடிகளில் மறைந்துகொண்டும் செல்லுகிறது; தாய்போலத் தென்திசை முழுமையும் நனைத்துப் போஷிக்கிறது. ஸமுத்ரராஜனுக்குப் பிரியமகிஷியாகிய இந்தக் கங்கையானது முற்காலத்தில் சிவனுடைய ஜடையினின்று நழுவி விழுந்தது. மிக்க புண்யமான இந்தநதியில் இஷ்டப்படி ஸ்நானம் செய்யவேண்டும்.

தொண்ணூற்றெட்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் ப்ருகுதீர்த்தம் சென்றதும், லோமசர், தசரதராமர் பரசுராமருடைய தேஜஸைக் கவர்ந்ததையும் பரசுராமர் பிதாவின்கட்டளையினால் ப்ருகுதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மீண்டும் அந்தத்தேஜஸைப் பெற் றதையும் யுதிஷ்டிரருக்குச் சொல்லியதும்.)

யுதிஷ்டிர! மஹாராஜனே! மூவுலகங்களிலும் பிரஸித்திபெற் றதும் மஹரிஷிகளுடைய கூட்டங்களால் அடையப்பட்டதுமான இதனை, பரசுராமர் எந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து (ரகுராம ரால்) கவரப்பட்ட அந்தத்தேஜஸைப் பெற்றாரோ அந்த ப்ருகு தீர்த்தமென்று தெரிந்துகொள். பாண்டுநந்தந! இந்தத்தீர்த்தத் தில் நீ ஸஹோதரர்களுடனும் திரௌபதியுடனும் ஸ்நானம்செய்து (ரகுராமருடன்) பகைத்த பரசுராமர் தேஜஸை எவ்வாறு மீண்டும் அடைந்தாரோ அவ்வாறு துரியோதனனால் கவரப் பட்ட தேஜஸை மீண்டும் அடையக்கடவாய்' என்று சொன்னார். பாரதரே! பாண்டவரான அவர் அந்தப் பிருகுதீர்த்தத்தில் தம்பி மார்களுடனும் பாஞ்சாலியுடனும் ஸ்நானம்செய்து தேவர்களையும்

பித்ருக்களையும் திருப்தியடையச்செய்தார். அந்தத்தீர்த்தத்தினுடைய ரூபமானது காந்தியுள்ள பொருள்களைக்காட்டிலும் அதிககாந்தியுள்ளதாக விளங்கியது. புருஷஸ்ரேஷ்டரே! (யுதிஷ்டிரர்) பகைவர்களால் சிறிதும் அவமதிக்கமுடியாதவரும் ஆனார். ராஜேந்திரரே! பாண்டுபுத்திரரான தர்மராஜர் லோமசரைப் பார்த்து, 'பகவானே! பிரபுவே! எதற்காகப் பரசுராமருடைய தேஜஸானது அபஹரிக்கப்பட்டதாயிற்று? எவ்வாறு அது மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டது? இதனை வினவுகின்ற எனக்குச் சொல்வீராக' என்று வினவினர். லோமசர், 'ராஜேந்திரனே! தாசரதிராமர் சிறந்தபுத்தியுள்ள பரசுராமர் இவர்களுடைய வரலாற்றைக் கேள். விஷ்ணுவானவர் ராவணனுடைய வதத்துக்காகத் தம் சரீரத்தால் மஹாத்மாவான தசரதருக்கு ராமரென்கிற புதல்வராகப் பிறந்தார். அதிலிருந்து அந்த விஷ்ணுவை அயோத்தியில் தசரதபுத்ரராகப் பிறந்தவராகக் காண்கிறோம். [1] ரிசீகருடைய பேரரும் ப்ருகுவின் ப்ரபௌத்ரரும் ரேணுகையின்புத்ரருமான (பரசு) ராமர் இகழத்தகாத செய்கைகளுள்ள அந்தத் தாசரதிராமருடைய (பராக்ரமத்தைக்) கேட்டு அப்பொழுது குதூஹலமுள்ளவராகவும் தசரதகுமாரரான ராமருடைய வீர்யத்தை அறிய எண்ணம்கொண்டவராகவும் க்ஷத்ரியர்களை அடக்குவதான அப்படிப்பட்ட திவ்யமான்வில்லை எடுத்துக்கொண்டு மறுபடியும் அயோத்தியை அடைந்தார். தசரதர், அந்தப் பரசுராமர் தம் தேசத்து எல்லையை அடைந்ததைக்கேட்டுப் பரசுராமருடைய வரவேற்புக்காகத் தம் புத்ரரான ராமரை அனுப்பினர். குந்தீ நந்தன! அந்தப் பரசுராமர் எதிர்கொண்டுவந்தவரும் ஆயுதம்பிடித்து நிற்பவருமான அந்த ராமரைப்பார்த்து, பரிகஸிக்கிறவர்போல, 'ராஜஸ்ரேஷ்டனே! பிரபுவே! இந்தவில் என்னால் நெடுங்காலமாக உபயோகிக்கப்பட்டதன்றோ? அரசனே! நீ வல்லமையுள்ளவனாகஇருந்தால் பிரயத்தனத்தால் இதனை நாணேற்றுவாயாக' என்கிற வசனத்தைச் சொன்னார். இவ்வண்ணம் சொல்லப்பட்ட (தாசரதிராமர்), 'பகவானே! நீர் (என்னை) அவமதிப்பதற்குத் தகுதியுள்ளவரல்லீர். க்ஷத்ரியர்களுடைய தர்மத்தில் நானும் மிகத் தாழ்ந்தவனல்லேன். இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்தவர்களுக்குப் புஜபல விஷயத்தில் பிராம்மணர்களிடம் விசேஷமாகப் புகழ்ந்துபேசுவது தக்கதன்று' என்று சொன்னார். இவ்வண்ணம் சொல்லுகிற

1 'ரிசீகநந்தந:' என்பது மூலம்.

அவரைப் பரசுராமர் அப்பொழுது, 'ராகவனே! பெருமை பேசாதே. வில்லில் நாணேற்றுவாயாக' என்கிற வசனத்தை உரைத்தார். பிறகு, தசரதகுமாரரான ராமர் ரோஷத்தோடு சிறந்த க்ஷத்திரியர்களைப் பிளப்பதான திவ்யமான வில்லைப் பரசுராமருடைய கையிலிருந்து வாங்கிக்கொண்டார். பாரத! வீர்யவானான ராமர் விளையாடுகிறவர்போல வில்லில் நாணேற்றினார். புன்னகைசெய்துகொண்டு நாணொலியையும் செய்தார். பிராணிகள் அந்த ஒலியைக்கேட்டு இடியைக்கேட்டுப் பயப்படுவது போலப் பயந்தன. பிறகு, தாசரதிராமர் [1] அப்பொழுது பரசுராமரைப்பார்த்து, 'பிராம்மணரே! இது நாணேற்றப்பட்டது. வேறு எதை உமக்கு நான் செய்யக்கடவேன்?' என்று சொன்னார். ஜமதக்னிகுமாரரான ராமர் அந்த மஹாத்மாவான ராமருக்கு, 'இந்த அம்பைக் காதோரம்வரையில் இழு' என்று திவ்யமான ஓர் அம்பைக் கொடுத்தார். ராமர் இந்த வார்த்தையைக்கேட்டுக் கோபத்தால் ஜ்வலிப்பவர்போலப் பரசுராமரைப் பார்த்து, 'பார்க்கவரே! நீர் அகங்காரத்தால் நிறைந்திருக்கிறீர் என்று கேட்டிருக்கிறேன்; பொறுக்கவும் பொறுக்கிறேன். பிதாமஹருடைய அனுக்ரஹத்தினால், உம்மால், க்ஷத்திரியர்களை வென்றதிலிருந்து பராக்ரமம் விசேஷமாக அடையப்பட்டது. அதனால், என்னை எறிந்துபேசுகிறீர்; இது நிச்சயம். என்னை ஸ்வரூபத்தோடு பாரும். நான் உமக்கு ஞானக்கண்ணைக் கொடுக்கிறேன்' என்று சொன்னார். பாரத! யுதிஷ்டிர! பிறகு, பரசுராமர் ராமருடைய சரீரத்தில் ஆதித்யர்களையும் வஸுக்களையும் ருத்ரர்களையும் மருத்கணங்களையும் ஸாத்யர்களையும் பித்ருக்களையும் அக்னியையும் நக்ஷத்திரங்களையும் அவ்வாறே க்ரஹங்களையும் கந்தர்வர்களையும் அரக்கர்களையும் இயக்கர்களையும் நதிகளையும் தீர்த்தங்களையும் பிரம்மமானவர்களும் ஸனாதனர்களுமான வாலகில்ய ரிஷிகளையும் தேவரிஷிகளையும் எல்லா ஸமுத்ரங்களையும் அப்படியே எல்லா மலைகளையும் வஷட்காரங்களையும் யாகங்களையும் உபநிஷத்துக்களையும் வேதங்களையும் [2] சைதன்யமுள்ள ஸாமங்களையும் தனுர்வேதத்தையும் மேகக்கூட்டங்களையும் மழைகளையும் மின்னல்களையும் பார்த்தார். பாரத! பிறகு, பகவானும் விஷ்ணுவுமான அந்த ராமர் அந்தப் பாணத்தைவிட்டார். (அப்பொழுது) பூதலமானது பெரிய உற்கைகளாலும் பெரிய புழுதிமழையாலும் மேகங்களின்

1 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது. 2 சரீரமுள்ள.

மழைகளாலும் பூகம்பங்களாலும் பெரிய இடிமுழக்கங்களாலும் நெருப்பிடிகளாலும் நிரம்பியது. ராமருடைய கையால் விடப்பட்ட அந்தப்பாணமானது பரசுராமரை மயங்கியவராகச்செய்து தேஜஸைமாத்திரம் போக்கிவிட்டுப் பிரகாசத்துடன் திரும்பிவந்தது. அந்தப் பரசுராமரோ,மயக்கத்தையடைந்து, பின்பு, நினைவை மீண்டும்பெற்று, உயிர் திரும்பிவந்தவராகி, விஷ்ணுதேஜஸுள்ளவரான ராமரைத் தண்டனிட்டார். (அந்த) விஷ்ணுவால் விடையளிக்கப்பட்ட அந்தப் பரசுராமர் மறுபடியும் மஹேந்திரமலைக்குச் சென்றார். பெருந்தவமுள்ள பரசுராமர் வெட்கமுள்ளவராகவும் பயந்தவராகவும் அந்தமலையில் வாஸம்செய்தார். பிறகு, ஒரு வர்ஷகாலம் சென்றபின் பித்ருக்கள் வல்லமைகவரப்பட்டிருக்கிற பரசுராமரை மதமற்றவரும் துக்கமுள்ளவருமாகக் கண்டு, 'புத்திர! விஷ்ணுவை (=ராமரை) எதிர்த்து (ப்படும்) இந்த மனவருத்தமானது நல்லதன்று. அவர் மூவுலகங்களிலும் எப்பொழுதும் பூஜிக்கப்படத்தக்கவரும் நன்குமதிக்கத்தக்கவரும் அல்லரோ? புத்திரனே! வதூஸரம் என்கிற பெயர்கொண்ட புண்யநதிக்குச் செல்வாயாக. அதிலுள்ள தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து மீண்டும் சரீரத்தை (=பலத்தை) அடைவாய். ராம! எந்தத்தீர்த்தத்தில் உன்னுடைய பிரபிதாமஹரான பிருகுவானவர் தேவயுகத்தில் உத்தமமான தவத்தைச் செய்தாரோ அந்தத்தீர்த்தமானது தீப்தோதம் என்று பிரஸித்திபெற்றது' என்று சொன்னார்கள். கௌந்தேய! ராமர் [1] பித்ருக்களுடைய வாக்கியத்தினால் அதை அவ்விதம் செய்தார். பாண்டுநந்தன! இந்தத்தீர்த்தத்தில் தேஜஸை மீண்டும் அடைந்தார். ஐயா! மஹாராஜனே! முற்காலத்தில் சிறந்த செய்கையுள்ள பரசுராமரால் விஷ்ணுவான ராமரை எதிர்த்து இப்படிப்பட்ட இந்தத் தேஜோபங்கமானது அடையப்பட்டதாயிற்று' என்று சொன்னார்.

---

1 'பிது:' என்பது மூலம்.

தொண்ணூற்றேன்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(விருத்ராஸுரனால் துன்புறுத்தப்பட்ட இந்திரன் முதலியவர்கள் பிரம்மதேவரின் கட்டளைப்படி வஜ்ராயுதம் செய்வதற்காகத் ததீசரை அடைந்து அவருடைய எலும்பை வேண்டியதும், த்வஷ்டா ததீசருடைய எலும்பினால் வஜ்ராயுதத்தைச் செய்ததும்.)

யுதிஷ்டிரர், 'பிராம்மணோத்தமரே! புத்திமானான அந்த அகஸ்தியமகரிஷியினுடைய செய்கைகளின்விரிவை மறுபடியுமே நான் கேட்கவிரும்புகிறேன்' என்று வினவ, லோமசர் சொல்லலானார். 'அரசனே! மகாராஜனே! திவ்யமானதும் ஆச்சர்யமானதும் மனிதர்களுடைய சரித்திரத்தைத் தாண்டியிருப்பதுமான அளவிறந்த தேஜஸுள்ள அகஸ்தியருடைய கதையையும் பிரபாவத்தையும் கேள். கிருதயுகத்தில் கோரமானவர்களும் யுத்தத்தில் கெட்டமதமுள்ளவர்களும் காலகேயர்களென்று பிரஸித்திபெற்றவர்களும் மிக்க பயங்கரர்களுமான அஸுரர்கள் கூட்டங்களாக இருந்தார்கள். அவர்கள் விருத்ரனை அடுத்துப் பலவிதஆயுதங்களை எடுத்துக்கொண்டு மஹேந்திரன்முதலிய தேவர்களைநோக்கி நாற்புறங்களிலும் (எதிர்த்து) ஓடினர். பிறகு, தேவர்கள் முற்காலத்தில் வ்ருத்ரனைக்கொல்வதில் முயற்சியைச் செய்தார்கள்; இந்திரனை முன்னிட்டுக்கொண்டு பிரம்மாவை அடைந்தார்கள். பிரம்மதேவர் அஞ்சலிபந்தம் செய்துகொண்டிருக்கிற அவர்களனைவரையும் பார்த்து, 'தேவர்களே! நீங்கள் செய்யவிரும்பின காரியமனைத்தும் எனக்குத்தெரிந்தது. வ்ருத்ரனைக் கொல்லத்தக்க உபாயத்தைச் சொல்லுவேன். ததீசர் என்று ப்ரஸித்திபெற்ற உதாரபுத்தியுள்ள ஒரு மஹரிஷி இருக்கிறார். நீங்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து அவரைஅடைந்து ஒருவரத்தை நன்கு வேண்டிக்கொள்ளுங்கள். தர்மாத்மாவானஅவர் மிக்கப்ரீதியுள்ள உள்ளத்தோடு உங்களுக்கு அளிப்பார். ஜயத்தை விரும்புகின்றவர்களும் ஒன்றுசேர்ந்தவர்களுமான நீங்களனைவரும் அவரை, 'மூன்றுஉலகத்துக்கும் நன்மைக்காகத் தேவரீருடைய எலும்புகளைத் தரக்கடவீர்' என்று சொல்லவேண்டும். அவர் சரீரத்தைவிட்டு எலும்புகளைக் கொடுப்பார். அவருடைய எலும்புகளால் மிக்கபயங்கரமானதும் பெரிய

தும் பகைவர்களைக்கொல்வதும் அச்சந்தருவதும் ஆறுபட்டை யுள்ளதும் அச்சந்தரும் பேரொலியுள்ளதுமான வஜ்ராயுதமானது உறுதியாகச் செய்யப்படவேண்டும். இந்திரன் அந்தவஜ்ராயுதத் தால் வ்ருத்ரனைக்கொல்லுவான். இதுமுழுமையும் உங்களுக்குச் சொல்லப்பட்டது. ஆதலால், விரைவாகச் செய்யக்கடவீர்' என்று சொன்னார். பிறகு, இவ்வண்ணம் சொல்லப்பட்ட தேவர்கள் பிரம்மாவிடம் விடைபெற்றுக்கொண்டும் நாராயணரை முன்னிட் டுக்கொண்டும் ததீசருடைய ஆஶ்ரமத்தை நோக்கிச் சென்றனர். ஸரஸ்வதிநதியினுடைய அக்கரையிலிருப்பதும், பலவிதமரங்களா லும் கொடிகளாலும் சூழப்பட்டதும், [1] ஸாமகானம்பண்ணுகிறவர் கள்போன்ற வண்டுகளினுடைய உரத்தபாடலோசைகளால் முழக்கப்பட்டதும், ஆண்குயில்களுடைய ஒலியுடன்கலந்ததும், சகோரங்களால் ஒலிக்கப்பெற்றதும், புலியின் பயத்தால் விடுபட்ட எருமைகளாலும் பன்றிகளாலும் ஸ்ருமரங்களாலும் சமரங்களா லும் ஆங்காங்கு ஸஞ்சரிக்கப்பட்டதும், பெண்யானைகளாலும் மதம்பெருக்கும் துவாரங்களின் வாய்பிளந்திருப்பவைகளும் தடா கங்களில் மூழ்கிவிளையாடுகின்றவைகளுமான ஆண்யானைகளாலும் நாற்பக்கங்களிலும் முழக்கப்பட்டதும், பேரொலிசெய்கின்ற சிங்கங் களாலும் புலிகளாலும் முழக்கப்பட்டதும், குகைகளிலும் மலைப் பொந்துகளிலும் படுத்திருப்பவைகளும் பதுங்கிஇருப்பவைகளு மான மற்றவைகளாலும் அந்தஅந்தஇடங்களில்பிரகாசிக்கின்றதும், மனத்திற்கு மிக்க மகிழ்ச்சியைத்தருகின்றதும், ஸ்வர்க்கத்துக்குச் சமமான ஒளியுள்ளதுமான ததீசருடைய ஆஶ்ரமத்தை அடைந் தார்கள். அந்தத் தேவர்கள் அந்த ஆஶ்ரமத்தில் சூரியனுக்குச் சமமான காந்தியுள்ளவரும் சரீரத்தால் நேரே வந்த பிரம்மதேவர் போல மிக ஜ்வலிப்பவருமான ததீசரைக் கண்டார்கள். அர சனே! தேவர்கள் எல்லோரும் அவருடைய கால்களில் நமஸ் கரித்து அபிவாதனம்செய்து பிரம்மதேவர் சொல்லியவண்ணம் வரத்தை வேண்டினார்கள். பிறகு, ததீசர், மிக நம்பினவராகி, அந்தத் தேவஶ்ரேஷ்டர்களைப் பார்த்து, 'தேவர்களே! இப் பொழுது உங்களுக்கு எது நன்மையோ அதைச் செய்கிறேன்.

---

1 'ஸாமகை:' என்பது மூலம். 'ஸாமகானம் செய்பவர்கள்' என்பது அதன்பொருள்; உபமானஉபமேயங்கள் பொருந்தாமையால், தொழிற் பெயராகக் கொண்டு, 'ஸாமகானங்கள்' என்றேகொள்ளலாம். ஆர்ஷமாத லால் இங்ஙனம் வந்தது என்க.

என் தேகத்தையும் நானே விட்டுவிடுகிறேன்' என்று சொன்னார் மனிதர்களுள் மிகச்சிறந்தவரும் இந்திரியங்களை அடக்கினவருமான அந்தத் ததீசர் இவ்வண்ணம் சொல்லித் தம் உயிரை விட்டார். பிறகு, அந்தத் தேவர்கள் மரித்த அந்தத் ததீசருடைய எலும்பைப் பிரம்மதேவர் உபதேசித்தவண்ணம் எடுத்தார்கள். தேவர்கள் மிக்க களிப்புள்ளவர்களாக ஜயத்தின்பொருட்டு த்வஷ்டாவை அடைந்து அந்தக்காரியத்தைச் சொன்னார்கள். த்வஷ்டாவோ, அவர்களுடைய சொல்லைக்கேட்டு, மிக்கமகிழ்ச்சியுள்ளவனும் நியமமுள்ளவனுமாகி முயற்சியினால் மிகவும் பயங்கரமான ரூபமுள்ள வஜ்ராயுதத்தைச் செய்தான். அவன் அந்த ஆயுதத்தைச்செய்து ஸந்தோஷமுள்ளவனாக இந்திரனைப்பார்த்து, 'தேவனே! இந்தச் சிறந்த வஜ்ரத்தினால் உக்கிரனான தேவசத்துருவை இப்பொழுது சாம்பலாகச் செய்வாயாக. பிறகு, பகைவனைக்கொன்ற நீ (தேவ) கணங்களுடன் ஸ்வர்க்கத்தில் நிலைபெற்றுத் தேவலோகம் முழுமையையும் ஸுகமாகப் பரிபாலனம் செய்வாயாக' என்று சொன்னான். த்வஷ்டாவினால் அவ்வண்ணம் சொல்லப்பட்டபுரந்தரனோ அதிகஸந்தோஷமுள்ளவனாகவும் நியமமுள்ளவனாகவும் அந்த வஜ்ராயுதத்தைப் பெற்றுக்கொண்டான்.

நூறாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(இந்திரன் விருத்ரனைக் கொன்றதும், அஸுரர்கள் தேவகணங்கள்செய்த துன்பத்தைப் பொறாமல் கடலுள்சென்று உலகத்தை அழிக்க நிச்சயித்ததும்.)

பிறகு, வஜ்ராயுதம் பிடித்தவனும் வலாஸுரனைக் கொன்றவனுமான அவன் தேவர்களால் நாற்புறங்களிலும் பாதுகாக்கப்பட்டவனாகி, ஆகாயத்தையும் பூமியையும் வ்யாபித்துக்கொண்டிருப்பவனும், பெரிய சரீரமுள்ளவர்களும் ஆயுதமெடுத்தவர்களும் கொடுமுடிகளுடன்கூடிய மலைகள்போன்றவர்களுமான காலகேயர்களால் நான்குபக்கங்களிலும் சூழ்ந்து காக்கப்பட்டிருக்கிறவனுமான வ்ருத்ரனை எதிர்த்தான். பரதஶ்ரேஷ்டனே! பிறகு, தேவர்களுக்கு அஸுரர்களோடு உலகத்துக்குப் பயத்தை உண்டுபண்ணுகிற பெரிய யுத்தமானது ஒரு முகூர்த்த காலம் நடந்தது.

வீரர்களுடைய கைகளால் ஓங்கி வீசப்பட்டவைகளும் சரீரங்களில் போடப்படுகின்றவைகளுமான கத்திகளுடைய சப்தமானது மிக நெருங்கினதாயிற்று. மஹாராஜனே! ஆகாயத்திலிருந்து விழுகின்ற தலைகளால் பூமியானது காம்பிலிருந்து நழுவிவிழுந்த பனம்பழங்களால் நிறைந்ததுபோலக் காணப்பட்டது. அந்தக்[1] காலேயர்கள் பொற்கவசங்களைப் பூண்டவர்களும் பரிகங்களை ஆயுதமாகக்கொண்டவர்களுமாகிக் காட்டுத்தீயினால் எரிக்கப்பட்ட மலைகள்போலத் தேவர்களை எதிர்த்தார்கள். சிறந்த வேகமுள்ளவர்களும் ஒன்றுசேர்ந்தவர்களும் எதிர்த்து ஓடிவருகிறவர்களுமான அந்தக்காலேயர்களுடைய வேகத்தைத் தாங்குவதற்குத் தேவர்கள் சக்தியற்றவர்களானார்கள். அந்தத்தேவர்கள் தோற்றுப் பயத்தினால் ஓடினார்கள். ஆயிரம்கண்களுள்ள புரந்தரன் பயந்து ஓடுகின்ற அந்தத் தேவர்களைப்பார்த்து, வ்ருத்ரனும் விருத்தியடையும்பொழுது பெரிய மதிமயக்கத்தை அடைந்தான். காலேயர்களுடைய பயத்தால்நடுக்கமுற்ற தேவனானபுரந்தரன் தானே அந்தப் பிரபுவான நாராயணரை விரைவாகச் சரணமடைந்தான். ஸநாதனரான விஷ்ணுவானவர் அந்தஇந்திரன் மதிமயக்கத்தால் கவரப்பட்டதைக்கண்டு அவனுடைய பலத்தை அதிகமாக வ்ருத்திசெய்பவராகித் தம்முடையதேஜஸை இந்திரனிடத்தில் வைத்தார். பிறகு, தேவக்கூட்டத்தார்களும் அப்படியே குற்றமற்ற பிரம்மரிஷிகளும் இந்திரன் விஷ்ணுவினால் ரக்ஷிக்கப்பட்டதைக்கண்டு தம் தம்தேஜஸையும் அவனிடம் வைத்தார்கள். அந்தஇந்திரன், விஷ்ணுவினாலும் தேவதைகளாலும் மிக்கபாக்யசாலிகளான ரிஷிகளாலும் நன்றாகத் தேஜஸினால் வ்ருத்தியடையும்படி செய்யப்பட்டுப் பலமுள்ளவனானான். வ்ருத்ரன் தேவராஜனைப் பலமுள்ளவனாக அறிந்து உரத்தசப்தங்களை (வெளியிட்டுக்கொண்டு) கர்ஜித்தான். அவனுடைய பேரொலியினால் பூமியும் திசைகளும் ஆகாயமும் ஸ்வர்க்கமும் மலைகளும் ஆகியஎல்லாம் அசைந்தன. அரசனே! பிறகு, மஹேந்திரன் கோரமான பேரொலியைக் கேட்டு மிக்க வாட்டமடைந்தவனும் பயத்தில் முழுகினவனும் விரைபவனுமாகி, அந்தவ்ருத்ரனைக் கொல்லும்பொருட்டுப் பெரியவஜ்ரத்தை எறிந்தான். இந்திரனுடைய வஜ்ரத்தால் அடிக்கப்பட்டவனும் பொன்மாலை தரித்தவனுமான அந்தமஹாஸுரன் முற்காலத்தில் விஷ்ணுவினுடையகையினின்றுவிடுபட்ட அந்த மந்தரமென்கிற பெரிய

---

1 கஶ்யபருடைய மனைவியான காலை என்பவளின் பிள்ளைகள்.

சிறந்தமலைபோல் விழுந்தான். அந்த அஸுரச்ரேஷ்டன் கொல்லப்பட்டவுடனே இந்திரன் பயத்தால் பீடிக்கப்பட்டவனாகி ஒரு தடாகத்தினுள் பிரவேசிப்பதற்கு விரைவாக ஓடினான்; தன்கையினின்று வஜ்ராயுதம் விடப்பட்டதைப் பயத்தால் நினைக்கவில்லை; வ்ருத்ரன் கொல்லப்பட்டதையும் நினைக்கவில்லை. எல்லாத்தேவர்களும் மஹரிஷிகளும் மகிழ்ந்தவர்களாகவும் மிகக்களித்தவர்களாகவும் இந்திரனைத்துதித்துக்கொண்டு வஜ்ரத்தால் அடிக்கப்பட்டுச் சிதறினமலைபோலக் [1] கொல்லப்பட்ட விருத்ரனைப் பூமியில் கண்டார்கள். தேவர்கள் விரைவாக ஒன்றுசேர்ந்து விருத்ரனுடைய வதத்தினால் வாடியிருக்கிற எல்லா அஸுரர்களையும் கொன்றார்கள். ஒன்றுசேர்ந்த தேவர்களால் கொல்லப்படுகின்ற அந்த அஸுரர்கள் பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாகிக் கடலிலேயே பிரவேசித்தார்கள். அளத்தற்கரியதும் மீன்களால் நிரம்பியதும் முதலைகளால் மிக நிரம்பியதுமான ஸமுத்திரத்தில் நுழைந்து அப்பொழுது தக்க முயற்சியினால் மூவுலகங்களையும் அழிப்பதற்காக ஒன்றுசேர்ந்து ஆலோசனைசெய்தார்கள். புத்திநிச்சயத்தை அறிந்தவர்களான சிலஅஸுரர்கள் அந்த அந்த உபாயங்களை விரித்துரைத்தார்கள். அங்கே ஆலோசனைசெய்கின்ற அந்த அஸுரர்களுக்கு, 'எவர்கள் கல்வியும் தவமும் நிரம்பியிருக்கிறார்களோ அவர்களுடைய விநாசத்தையே முதலில் செய்யவேண்டும். உலகங்களனைத்தும் தவத்தினால் நிலைபெற்றிருக்கின்றனவல்லவா? ஆதலால், தவத்தை அழிப்பதற்கு விரைவுபடுங்கள். பூமியில் தவசிகளாகவும் தர்மங்களை அறிந்தவர்களாகவும் தவசிகளையும் தர்மவித்துக்களையும் அறிந்தவர்களாகவும் எவர்கள் இருக்கிறார்களோ அவர்களுடைய வதத்தை விரைவாகவே செய்யவேண்டும். அவர்களழிந்தால் உலகம்அழிந்தது' என்கிற கோரமான எண்ணமானது, அடைவில் செல்லும் காலவசத்தால் உண்டாயிற்று. இவ்வண்ணம் எல்லோரும் உலகங்களை அழிப்பதில் புத்திநிச்சயத்தை அடைந்தவர்களாகிப் பெரிய அலைகளோடு கூடியதும் ரத்னங்களுக்கு இருப்பிடமுமான ஸமுத்திரமாகிற துர்க்கத்தை அடைந்து மிக்க மனக்களிப்புள்ளவர்களாக இருந்தனர்.

---

[1] இந்த விருத்ரவதம் உத்யோகபர்வத்தில் வேறுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது; ஷெ பர்வம் ௩௧-௩௨-ம் பக்கங்களில் காண்க.

நூற்றோராவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(கடலில் மறைந்துகொண்டிருக்கிற அஸுரர்கள்
இரவுதோறும் வெளிவந்து ஆஸ்ரமங்களி
லுள்ள ரிஷிகணங்களைக் கொன்றதும்,
தேவகணங்கள் நாராயணரைச்
சரணமடைந்ததும்.)

அந்தக் காலேயர்கள் ஜலங்களுக்கு நிதியும் வருணனுக்கு இருப்பிடமுமான ஸமுத்திரத்தை அடைந்து மூவுலகங்களையும் அழிப்பதில் நன்றாக முயற்சிசெய்தார்கள். அவர்கள் மிக்ககோபத்துடன் ஆஸ்ரமங்களிலும் புண்யமான ஆயதனங்களிலும் எந்த ரிஷிகளிருக்கின்றார்களோ அவர்களை எப்பொழுதும் இரவில் பக்ஷித்தார்கள். துராத்மாக்களான அவர்களாலே வஸிஷ்டருடைய ஆஸ்ரமத்தில் நூற்றெண்பத்தெட்டுப் பிராம்மணர்களும் வேறு ஒன்பது தவசிகளும் பக்ஷிக்கப்பட்டார்கள். புண்யமானதும் பிராம்மணர்களால் அடையப்பட்டதுமான ச்யவனருடைய ஆஸ்ரமத்தையடைந்து கனிகிழங்குகளைப் புசிப்பவர்களான நூறுரிஷிகள் தின்னப்பட்டார்கள். துராத்மாக்களும் தபோதனர்களைப் பக்ஷிக்கிறவர்களுமான அந்தக் காலேயர்கள் இரவில் இவ்வண்ணம் செய்தார்கள்; பகலில் கடலில் பிரவேசித்தார்கள். பரத்வாஜருடைய ஆஸ்ரமத்திலும், நியமமுள்ளவர்களும் பிரம்மசர்யமுள்ளவர்களும் காற்றைப்புசிப்பவர்களும் ஜலத்தைப் புசிப்பவர்களுமான இருபதின்மர் கொல்லப்பட்டார்கள். அப்பொழுது இப்படி நாளடைவில் அந்த அஸுரர்கள் கடல்நீரின் பலத்தை அடைந்திருந்துகொண்டு இரவில் அந்த எல்லா ஆஸ்ரமங்களையும் பீடித்தார்கள். அநேகம் பிராம்மணக்கூட்டங்களைக் கொல்லுகிற அந்தக் காலேயர்கள் காலத்தினால் பற்றப்பட்டார்கள். மனிதர்களுள் சிறந்தவனே! பரிதாபப்படத்தக்க தவசிகளின் விஷயத்தில் இவ்விதம் தொடங்கின இப்படிப்பட்ட அந்த அஸுரர்களை மனிதர்கள் அறியவில்லை. குரூரர்களான அவர்கள் உலகத்தை அழிப்பதன்பொருட்டுப் பூமியில் எங்கும் திரிந்தார்கள். ஆகாரநியமங்களால் மெலிந்திருக்கிற முனிவர்கள் உயிர்போன சரீரங்களோடு தரையில் விழுந்திருப்பவர்களாகக் காலையில்

காணப்பட்டார்கள். தசைகுறைந்தவைகளும் ரக்தமில்லாதவைகளும் மஜ்ஜையும் நரம்புமில்லாதவைகளும் பொருத்துக்களற்றவைகளும் எங்கும் சிதறிக்கிடக்கின்றவைகளுமான (சரீரங்களால்) நிறைக்கப்பட்ட பூமியானது சங்குகளின்குவியல்களால் நிறைக்கப்பட்டது போலிருந்தது. உடைக்கப்பட்ட கலசங்களாலும் அப்படியே ஒடிக்கப்பட்ட ஸ்ருவங்களாலும் இறைக்கப்பட்ட அக்னிஹோத்ர ஸாதனங்களாலும் பூமியானது மறைக்கப்பட்டதாயிற்று. உலகமானது வேதாத்தியயனமும் ஹோமமுமில்லாததும் யஜ்ஞங்களும் உத்ஸவங்களும் கர்மானுஷ்டானங்களுமற்றதும் உத்ஸாஹம் நீங்கியதும் காலேயர்களின் பயத்தினால் துன்பமடைவிக்கப்பட்டதும் ஆகியது. அரசே! இவ்வண்ணம் அழிகின்ற மனிதர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதில் நோக்கமுள்ளவர்களாகவும் பயந்தவர்களாகவும் பயத்தினால் திக்குக்களில் ஓடினார்கள். சிலர் குஹைகளில் நுழைந்தார்கள். சிலர் மலை அருவிகளை அடைந்தார்கள். சிலர் மரணத்தில் பயந்து பயத்தினாலே உயிரைவிட்டார்கள். இச்சமயத்தில் பெரியவில்லைக் கையில்தாங்கினவர்களான சில சூரர்கள் மிக்க மகிழ்ச்சியுள்ளவர்களாகவும் தானவர்களைத் தேடுகின்றவர்களாகவும் அதிக முயற்சியைச் செய்தார்கள். அவர்கள் ஸமுத்திரத்தில் ஒளிந்துகொண்டிருக்கிற இந்த அஸுரர்களைக் காணவில்லை; அதிகச்ரமத்தையும் அடைந்தார்கள்; அழிவையுமே அடைந்தார்கள். மனிதர்களுக்கு அதிபதியே! உலகமானது யஜ்ஞங்களும் உத்ஸவங்களும் கர்மானுஷ்டானங்களும் அழிந்து நாசத்தை அடையவே தேவர்கள் மிக்க துன்பத்தை அடைந்தார்கள். தேவர்கள் ஒன்றுசேர்ந்து மகேந்திரனோடிருந்து பயத்தினால் ஆலோசனை செய்தார்கள். பிறகு, அந்தத்தேவர்கள் அனைவரும், ரக்ஷிப்பதில் ஸமர்த்தரும் ரக்ஷகரும் பிரகாசிப்பவரும் பிறப்பில்லாதவரும் எங்கும் வியாபித்திருப்பவரும் வைகுண்டரும் தோல்வியடைவிக்கப் படாதவரும் மதுஸூதனருமான நாராயணரை அடைந்து நமஸ்கரித்து அப்பொழுது சொல்லலாயினர். 'பிரபுவே! நீர் எங்களைப் படைத்தவர்; போஷிப்பவர். உலகத்தை அழிப்பவரும் நீர். ஜங்கமஸ்தாவரங்களான இந்த உலகம் உம்மால் உண்டுபண்ணப்பட்டது. செந்தாமரைக்கண்ணரே! மீண்டும் உம்மிடத்திலேயே அந்தஉலகம் லயத்தை அடைகிறது. தாமரைக்கண்ணரே! முற்காலத்தில் காணாமற்போயிருந்த பூமியானது உலகங்களின் நன்மைக்காகப் பன்றிவடிவமெடுத்து உம்மால்

ஸமுத்திரத்தினின்று தூக்கிக்கொண்டுவரப்பட்டது. புருஷோத்தமரே! முற்காலத்தில் மகாவீர்யமுள்ளவனும் தைத்யர்களுள் முந்தினவனுமான ஹிரண்யகசிபுவானவன் ந்ருஸிம்ம சரீரத்தை எடுத்து உம்மால் கொல்லப்பட்டான். எல்லாப்ராணிகளாலும் கொல்லமுடியாதவனான பலிஎன்கிற மகாஸுரனும் உம்மால் வாமனவடிவத்தை அடைந்து மூவுலகங்களினின்றும் விலக்கப்பட்டான். பெரியவில்லுள்ளவனும் யஜ்ஞங்களுக்குக்கலக்கத்தைச்செய்கிறவனும் குரூரனும் ஜம்பனென்று பிரஸித்திபெற்றவனுமான அஸுரனும் உம்மாலேயே வீழ்த்தப்பட்டான். இவைமுதலிய செய்கைகளுக்குக் கணக்கில்லை. மதுஸூதனரே! பயத்தால் நடுக்கமுற்றிருக்கிற எங்களுக்கு நீரே கதி. தேவ தேவர்களுக்கெல்லாம் அதிபதியே! ஆகையால், உலகங்களுக்காக உம்மை நினைவூட்டுகிறோம். உலகங்களையும் தேவர்களையும் இந்திரனையும் பெரியபயத்தினின்று காப்பாற்றுவீராக. சரணமடைந்தவர்களைப் பாதுகாப்பதில் நீர்ஒருவர் உறுதியான விரதமுடையவராக இருக்கிறீர்.

நூற்றிரண்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(விஷ்ணு கடலில் மறைந்த அஸுரர்களைக் கொல்வதற்காக அதனை வற்றச்செய்ய உபாயங் கூறியதும், தேவர்கள் பிரம்மலோகம் சென்றதும், பிரம்மதேவர் கட்டளையினால் அவர்கள் அகஸ்தியரிடம்சென்று கடலை வற்றச்செய்ய வேண்டினதும்.)

உம்முடைய அருளால் [1] நான்குவிதமான பிரஜைகள் எல்லாம் விருத்தியடைகின்றனர். (உம்மால்) போஷிக்கப்பட்ட அந்தப் பிரஜைகள் ஹவ்யகவ்யங்களால் தேவர்களைப்போஷிக்கிறார்கள். இவ்வண்ணம் உலகங்கள் ஒன்றை மற்றொன்று அடுத்து விருத்திஅடைகின்றன; உம்முடைய அருளால் பயமற்றவைகளாக இருக்கின்றன; உம்மாலேயே காப்பாற்றப்படுகின்றன. உலகங்களுக்கு இந்தப் பெரிதானபயம் வந்திருக்கிறது; எதனால் என்று அறியோம்; இரவில் பிராம்மணர்கள் கொல்லப்படுகிறார்கள். பிராம்மணர்கள் க்ஷீணித்துப்போனால் பூமியானது க்ஷயத்தை அடைந்துவிடும். பிறகு, பூமியானது க்ஷீணித்துவிட்டால் தேவலோகம் க்ஷயத்தை

1 'தேவர், மனிதர், விலங்கு, தாவரம்' என்பது பழையவுரை.

அடையும். மிக்க பாகுபலமுள்ளவரே! ஜகத்பதியே! உம்முடைய அருளால் எல்லாஉலகங்களும் உம்மாலேயே காப்பாற்றப்பட்டு விநாசத்தை அடையாமலிருக்கவேண்டும்' என்று சொன்னார்கள்.

விஷ்ணுவானவர், 'தேவர்களே! பிரஜைகளுடைய அழிவுக்குக் காரணமனைத்தும் எனக்குத் தெரிந்தது. உங்களுக்கும் சொல்வேன். மனக்கவலை அற்றுக் கேளுங்கள். காலேயர்கள்என்று பிரஸித்திபெற்ற மிக்கஉக்கிரமான (அஸுரர்களின்) கூட்டங்கள் இருக்கின்றன. விருத்ரனை அடுத்து அந்தக்கூட்டங்களால் உலகமனைத்தும் நாசம்செய்யப்பட்டது. அந்தக்கூட்டத்தார்கள் புத்திமானான இந்திரனால் விருத்ரன் கொல்லப்பட்டதைக்கண்டு உயிரைப்பாதுகாக்கிறவர்களாகி ஸமுத்திரத்தில் பிரவேசித்தார்கள். அவர்கள் கோரமானதும் முதலைகளாலும் க்ராகங்களாலும் நிரம்பியதுமான ஸமுத்திரத்தில் பிரவேசித்து உலகங்களை அழிப்பதற்காக இராக்காலத்தில் இவ்வுலகத்தில் ரிஷிகளைக் கொல்லுகிறார்கள். அவர்கள் நாசத்தை அடைவிக்கப்படமுடியாதவர்கள். ஸமுத்திரத்தை அடைந்திருக்கிறார்களன்றோ? ஸமுத்திரத்தை வற்றச்செய்வதில் உங்கள் எண்ணத்தை நிச்சயிப்பீர்களாக' என்றுசொன்னார். அந்தத்தேவர்கள் விஷ்ணுவினால் சொல்லப்பட்ட இந்தவசனத்தைக்கேட்டு அவரையேமுன்னிட்டுக்கொண்டு பிரம்மதேவரை அடைந்து, பிறகு, வணங்கினவர்களாகி, 'எல்லாஉலகங்களையும் அழிப்பதற்காகக் காலேயர்கள் நிச்சயம் செய்திருக்கிறார்கள்' என்கிற அதேவிஷயத்தைத் தெரிவித்தார்கள். ஸநாதநரான பிரம்மதேவர் இவர்களுடைய அந்தவசனத்தைக்கேட்டு மிக்கபிரியத்துடன் இந்தத்தேவர்களைப்பார்த்து, 'தேவர்களே! அஸுரர்களுடைய செய்கையையும் காலத்தால் தூண்டப்பட்ட காலேயர்களால் மனுஷ்யர்கள் முதலியவர்களின் அழிவையும் நான் அறிந்துகொண்டேன். எவர்கள் காலத்தால் கெடுக்கப்பட்டார்களோ அவர்களுக்கு நாசம் வந்துவிட்டது. ஸமுத்திரத்தை வற்றச்செய்வதில் உபாயத்தை நன்குசொல்வேன். மிக்கஅடக்கமுள்ளவரும் மித்ரனுக்கும் வருணனுக்கும் புத்திரருமான அகஸ்தியர் என்பவர் புகழ்பெற்றிருக்கிறார். நீங்கள் ஒன்றுசேர்ந்து அவரை அடைந்து இந்தப்ரயோஜனத்தை வேண்டிக்கொள்ளுங்கள். மிக்கதேஜஸுள்ள அவர் ஒருக்ஷணத்தில் பெரியகடலைப் பானம்பண்ணுவதற்குச் சக்தியுள்ளவரல்லரோ? ஸமுத்திரத்தை வற்றச்செய்வதில் அகஸ்தியரைத்தவிர வேறுஎவன் சக்தியுள்ளவன்? ஸமுத்திரத்தைவற்றச்

செய்தாலன்றி வேறுவிதத்தால் அந்தஅஸுரர்கள் (அழிக்கப் படக்) கூடியவராகார். ஸமுத்திரம் வற்றச்செய்யப்பட்டால் காலேயர்களைக் கொல்வீர்கள்' என்னும் பயனுள்ள சொல்லைச் சொல்லினர்.

தேவர்கள் பரமேஷ்டியான பிரம்மதேவருடைய இவ்வாறான வசனத்தைக்கேட்டுப் பிரம்மாவினிடம் விடைபெற்று அகஸ்தியருடைய ஆஸ்ரமத்துக்குச் சென்றார்கள். அங்கே மஹாத்மாவும் ஜ்வலிக்கிறதேஜஸுள்ளவரும் தேவர்களால் பிரம்மதேவர் உபாஸிக்கப்படுவதுபோல ரிஷிகளால் உபாஸிக்கப்படுகிறவருமான அகஸ்தியரைப் பார்த்தார்கள். அவர்கள் மகாத்மாவும் (விரதத்திலிருந்து) நழுவாதவரும் ஆஸ்ரமத்திலிருப்பவரும் தபோநிதியுமான மித்ராவருணகுமாரரான அகஸ்தியரை அடைந்து அவருடைய செய்கைகளால் துதிக்கலாயினர். தேவர்கள், 'தேவரீர் முற்காலத்தில் நகுஷனால் தவிக்கச்செய்யப்பட்ட உலகங்களுக்குக் கதியானீர். உலகங்களுக்கு முட்போலிருந்தநகுஷன் உலகங்களின் நன்மைக்காகத் தேவராஜபதவியிலிருந்து தள்ளப்பட்டான். ஸூர்யன் தன்னைத்தாண்டிச்செல்வதை(ப்பொறாமல்) கோபத்தால் மிகவளர்ந்து ஆகாயத்தைஅளாவினவிந்தியமலையானது உம்முடைய வசனத்தை மீறமாட்டாமல் வளராமலிருக்கிறது. உலகம் இருளால்சூழப்பட்டபொழுது மிருத்யுவினால் துன்புறுத்தப்பட்ட பிரஜைகள் உம்மையே காப்பவராக அடைந்து மிகச்சிறந்தஸுகத்தை அடைந்தார்கள். பயத்தால் நடுக்கமுள்ள எங்களுக்கு எப்பொழுதும் பகவானான தேவரீர் கதியாக இருக்கிறீர். ஆதலால், துன்பத்தைஅடைந்த நாங்கள் தேவரீரிடம் வரத்தை யாசிக்கிறோம். தேவரீர் வரங்களைக் கொடுப்பவரல்லரோ?' என்றனர்' என்று சொன்னார்.

நூற்றுமூன்றாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(விந்தியமலை வளர்தற்கும் அக்ஸ்தியர் அதனைத் தடுத்ததற்கும் காரணமும், தேவர்கள் கடலை வற்றச்செய்யவேண்ட அகஸ்தியர் அவர்களுடன் ஸமுத்திரத்திற்குச் சென்றதும்.)

யுதிஷ்டிரர், 'மகாமுனிவரே! விந்தியமலையானது யாதுகாரணம்பற்றிக் கோபம்பூண்டு விரைவாக வளர்ந்தது? நான் இதனை

விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன்' என்று வினவ, லோமசர் சொல்லலானார். 'மலைகளுள் சிறந்ததும் மிக்க அச்சந்தருவது மான மேருவென்கிற பொன்மலையை ஸூர்யன் உதயாஸ்தமய விஷயத்தில் வலமாகச்சுற்றிவந்தான். அப்படி (சுற்றிவருகிற) அவனைப்பார்த்து விந்தியமலையானது, 'சூரியனே! நீ மேருவைத் தினந்தோறும் அடைந்து பிரதக்ஷிணம் செய்வதுபோல என்னை யும் அடைந்து பிரதக்ஷிணம் செய்வாயாக' என்று சொல்லியது. இவ்வண்ணம் சொல்லப்பட்ட சூரியன், பிறகு, விந்தியத்தைப் பார்த்து, 'பர்வதமே! நான் என்னுடைய இச்சையினால் இந்த மேருவை ப்ரதக்ஷிணம் செய்யவில்லை. எவரால் இந்த உலகம் படைக்கப்பட்டதோ அவரால் இந்தவழி எனக்கு ஏற்படுத்தப்பட் டிருக்கிறது' என்று மறுமொழி கூறினான். பகைவரை வாட்டு பவனே! இவ்வாறு சொல்லக்கேட்ட அந்த விந்தியமலையானது சூரியசந்திரர்களுடைய வழியைத் தடுக்க விரும்பிக் கோபத்தால் விரைவாக வளர்ந்தது. பிறகு, இந்திரனுள்ளிட்ட எல்லாத் தேவர் களும் கூடிப் பெரியமலைகளுள்சிறந்த அந்தவிந்தியத்தை அணுகி உபாயத்தால் தடுத்தார்கள். அவர்கள் சொல்லியபடி அந்தமலை செய்யவில்லை. பிறகு, அந்தத்தேவர்கள் ஒன்றுகூடி, தவம்செய் பவரும் தார்மிகர்களுள் மிகமேலானவரும் மிக்கஆச்சர்யமான வீர்யத்தால் பிரகாசிப்பவரும் ஆஸ்ரமத்திலிருப்பவருமான அகஸ் தியமுனிவரை அடைந்தார்கள். அவரைப்பார்த்து, 'மஹரிஷியே! மலைகளுள்சிறந்த இந்தவிந்தியமானது கோபத்திற்கு வசப்பட்டு ஸூர்ய சந்திரர்களுடைய மார்க்கத்தையும் அவ்வாறே நக்ஷத்திரங் களுடைய வழியையும் தடுக்கிறது. பிராம்மணோத்தமரே! மஹா பாக்கியமுள்ளவரே! உம்மைத்தவிர வேறு ஒருவரும் அதனைத் தடுப்பதற்கு வல்லவரல்லர். ஆதலால், அதனைத் தடுப்பீராக' என்று அந்தவிஷயத்தை உரைத்தார்கள். பிராம்மணர் தேவர் களுடைய அந்த வசனத்தைக்கேட்டு விந்தியத்தைக்குறித்துச் சென்றார். அந்தஅகஸ்தியர் மனைவியுடன் விந்தியத்தை அடைந்து ஸமீபத்திலிருந்துகொண்டு, 'பர்வதோத்தம! நான் உன்னால் வழி விடப்பட விரும்புகிறேன். ஒருகார்யத்தினால் தென்திசையைக் குறித்துச் செல்லுவேன். நான்திரும்பிவரும்வரையில் (வளராமல் என்னை) எதிர்பார்த்திரு. மலைகளுள்சிறந்தவனே! நான் திரும்பி வந்தபிறகு, உன்இஷ்டப்படி வளரக்கடவாய்' என்றுசொன்னார். பகைவர்களை அழிப்பவனே! அந்தவருணகுமாரரான அகஸ்தியர்

விந்தியமலையோடு இவ்வாறு உடன்பாட்டைச் செய்து(சென்றவர்) தென்னாட்டினின்று இன்னும் திரும்பிவரவில்லை. அரசனே! விந்தியமலையும் அகஸ்தியரிடம் பயத்தினால் தன் அங்கத்தை ஒடுக்கிக் கொண்டு வளராமல் இருக்கிறது. நீ என்னைக் கேட்டதும் அகஸ்தியருடைய பிரபாவத்தால் விந்தியமலை வளராமலிருப்பதுமான இந்த விஷயமனைத்தும் உனக்குச் சொல்லப்பட்டது. அரசனே! அகஸ்தியரிடத்தினின்று வரத்தைப்பெற்று எல்லாத்தேவர்களாலும் எவ்வாறு காலேயர்கள் நாசம்பண்ணப்பட்டார்களோ அந்த விருத்தாந்தத்தைச் சொல்லுகின்றஎன்னிடத்தினின்று கேட்பாயாக. அகஸ்தியர் தேவர்களுடையவசனத்தைக்கேட்டு,'நீங்கள் எதற்காக என்னிடம் வந்திருக்கின்றீர்கள்? என்னிடத்தினின்று எந்த வரத்தை விரும்புகிறீர்கள்?' என்று வினவினர். பிறகு, அந்தமுனிவரால் இவ்வண்ணம் சொல்லப்பட்ட தேவர்களனைவரும் புரந்தரனை முன்னிட்டுக் கைகூப்பிக்கொண்டு முனிவரைப்பார்த்து, 'மஹாத்மாவே! மஹாஸமுத்திரம் உம்மால்குடிக்கப்படுவதை விரும்புகிறோம். இப்படி காரியமானது செய்யப்பட்டால், பிறகு, காலத்தால் பற்றப்பட்ட அந்தத்தேவசத்ருக்களைப் பந்துவர்க்கங்களோடுகூடக் கொல்வோம்'என்று சொன்னார்கள். முனிவர், தேவர்களுடைய மொழியைக்கேட்டு, 'அப்படியே உங்களுடைய விருப்பத்தைச் செய்வேன். உலகங்களுக்கும் பெரியஸுகத்தை உண்டுபண்ணுவேன்' என்று சொன்னார். நல்லவிரதமுள்ளவனே! இவ்வாறு கூறிவிட்டு, பிறகு, தவத்தினால் ஸித்தியடைந்தரிஷிகளோடும் தேவர்களோடும் கூட நதிகளுக்கு நாதனான ஸமுத்திரத்தைக்குறித்துச் சென்றார். மனிதர்களும் உரகர்களும் கந்தர்வர்களும் இயக்கர்களும் கிம்புருஷர்களும் அந்தஆச்சர்யத்தைப் பார்க்க விருப்பமுள்ளவர்களாக அப்படியே அந்த மஹாத்மாவைப் பின்தொடர்ந்தார்கள். பிறகு, (அவர்கள்) ஒன்று சேர்ந்து பயங்கரமாக முழங்குகின்ற ஸமுத்திரத்தைநோக்கிச் சென்றார்கள். அகஸ்தியரோடுகூடியவர்களும் கந்தர்வர்களோடும் மஹோரகர்களோடுங் கூடியவர்களுமான தேவர்களும் மஹாபாக்கியசாலிகளான ரிஷிகளும் அலைகளால் நர்த்தனஞ்செய்வதுபோலவும் காற்றினால் துள்ளிக்குதிப்பதுபோலவும் நுரைக்கூட்டங்களால் நகைப்பதுபோலவுமிருப்பதும் குகைகளில் இடறிவிழுவதும் பலவிதமுதலைகளால் நிரம்பினதும் பலவகைப் பறவைக்கூட்டத்தோடு கூடியதுமான ஸமுத்திரத்தை அடைந்தார்கள்.

நூற்றுநான்காவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(அகஸ்தியர் கடலைக்குடித்ததும், தேவர்கள் அஸுரர்களைக்கொன்றதும், தேவர்கள் மறுபடியும் கடலை நிரப்புவதற்காகக் குடித்தநீரை வெளியில் விடும்படி அகஸ்தியரை வேண்டினதும், அவர் அந்த நீரை ஜீர்ணமாக்கிவிட்டதாகச் சொல்ல அவர்கள் அதற்காகப் பிரம்ம தேவரை வேண்டியதும்.)

மித்ராவருணர்களுக்குப் புத்திரரும் பகவானுமான அந்த ரிஷியானவர் ஸமுத்திரத்தைஅடைந்து கூடியிருக்கிற தேவர்களை யும் வந்திருக்கிற ரிஷிகளையும் பார்த்து, 'இதோ நான் உலகங்களின் நன்மைக்காக ஸமுத்திரத்தைப் பானம்பண்ணுகிறேன். நீங்கள் செய்யவேண்டியதை விரைவில் செய்யுங்கள்' என்றுசொன்னார். (தவத்தினின்று) நழுவாதவரான அகஸ்தியர் இவ்வளவு வசனத்தைச்சொல்லிக் கோபமுள்ளவராகி எல்லாஉலகமும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸமுத்திரத்தைக் குடித்தார். அப்பொழுது அந்தக்கடல் குடிக்கப்படுவதைப்பார்த்து இந்திரனுள்ளிட்ட தேவர்கள் அதிகஆச்சர்யத்தை அடைந்தார்கள்; 'உலகங்களை நிலைநிறுத்துகிறவரே! நீர் எங்களைப் பாதுகாப்பவர். உலகங்களையும் படைப்பவர். உம்முடைய அனுக்ரஹத்தினாலே தேவர்களுடன்கூடின உலகமானது அழிவை அடையாமலிருக்கவேண்டும்' என்று ஸ்தோத்திரங்களால் பூஜையும்செய்தார்கள். மஹாத்மாவான அவர் தேவர்களால் பூஜிக்கப்படுகின்றவரும் எங்கும் கந்தர்வர்களுடைய தூரியவாத்தியங்கள் ஒலிக்கத் தேவலோகத்து மலர்களால் இறைக்கப்படுகின்றவருமாகி மஹாஸமுத்திரத்தை ஜலமற்றதாகச் செய்தார். மஹாஸமுத்ரம் நீரில்லாததாகச் செய்யப்பட்டதைக்கண்டு தேவர்கள் அனைவரும் மிக்கமனக்களிப்புள்ளவர்களாகவும் தளராத பலமுள்ளவர்களாகவும் திவ்யமான சிறந்த ஆயுதங்களைஎடுத்து அந்தஅஸுரர்களைக் கொன்றார்கள். மஹாத்மாக்களும், மிக்கபலமுள்ளவர்களும், வேகமுடையவர்களும், உரக்கஸிம்மநாதம்செய்பவர்களுமான தேவர்களால் கொல்லப்படுகின்ற அந்தஅஸுரர்கள் மஹாத்மாக்களும் வேகமுள்ளவர்களுமான தேவர்களுடைய வேகத்தைத் தாங்குவதற்கு அப்பொழுது

சக்தியற்றவர்களானார்கள். பாரத! தேவர்களால் வதம்செய்யப் படுகின்ற அந்தத் தானவர்கள் பயங்கரமான சப்தமுள்ளவர்களாக மிக்ககோரமான யுத்தத்தை ஒருமுகூர்த்தகாலம் செய்தார்கள். மனத்தையடக்கின ரிஷிகளால் முந்தியே தவத்தினால் எரிக்கப்பட்டவர்களும் சக்தியினால் மிகமுயல்கின்றவர்களுமான அந்த அஸுரர்கள் தேவர்களால் நாசம்பண்ணப்பட்டார்கள். பொற்பதக்கம் தரித்தவர்களும் குண்டலங்களையும் தோள்வளைகளையும் தரித்தவர்களுமான அந்தஅஸுரர்கள் கொல்லப்பட்டுப் பூத்திருக்கின்ற பலாசமரங்கள்போல அதிகமாகப் பிரகாசித்தார்கள். புருஷோத்தமனே! பிறகு, கொல்லப்பட்டவர்கள்போக மிகுந்திருக்கின்ற சிலகாலேயர்கள் பூதேவியைப் பிளந்துகொண்டு பாதாளதலத்தை அடைந்தார்கள். தேவர்கள், தானவர்கள் கொல்லப்பட்டதைப் பார்த்து ரிஷிகளுள் சிறந்த அவரைப் பலவித வசனங்களால் மகிழ்வித்தார்கள்.

தேவர்கள், 'மிக்க புஜபலமுள்ளவரே! தேவரீருடைய அருளால் உலகங்கள்அதிகமான ஸுகத்தை அடைந்தன. கொடிய பராக்ரமமுள்ள காலேயர்களும் தேவரீருடைய தேஜஸினால் கொல்லப்பட்டார்கள். மகாபாஹுவே! உலகங்களை நிலை நிறுத்துபவரே! கடலை நீரால் நிரப்புவீராக. உலகங்களைக் காப்பவரே! உம்மால் பானம் பண்ணப்பட்ட ஜலத்தை மீண்டும் இந்தக்கடலில் விட்டுவிடும்' என்ற இந்த வசனத்தை உரைத்தார்கள். இவ்வாறு சொல்லக் கேட்டவரும் ரிஷிகளுள் சிறந்தவருமான அகஸ்தியபகவான் அப்பொழுது இந்திரனுடன்கூடியவர்களும் ஒன்று சேர்ந்தவர்களுமான அந்தத் தேவர்களைப்பார்த்து, 'என்னால் அந்தத்தீர்த்தமானது ஜீர்ணம் செய்யப்பட்டுவிட்டது. கடலைநிரப்புவதன்பொருட்டு முயற்சியடைந்த நீங்கள் வேறு உபாயத்தை ஆலோசியுங்கள்' என்று மறுமொழி கூறினார். மனத்தை அடக்கிய மகரிஷியினுடைய இந்த வசனத்தைக்கேட்டு ஒன்று சேர்ந்திருக்கின்ற தேவர்கள் ஆச்சரியமுள்ளவர்களும் துயரமுள்ளவர்களும் ஆனார்கள். மஹாராஜனே! எல்லாப்ரஜைகளும் ஒருவரிடத்தொருவர் அனுமதிபெற்று ரிஷிச்ரேஷ்டரான அகஸ்தியரை வணங்கி வந்தபடியே திரும்பிச்சென்றார்கள். தேவர்கள் ஸமுத்திரத்தை நிரப்புவதன்பொருட்டு விஷ்ணுவுடன்கூட மறுபடியும் மறுபடியும் ஆலோசனைசெய்து பிரம்மதேவரை அடைந்தார்கள். அந்தத் தேவர்கள் எல்லோரும் விஷ்ணுவுடன் பிரம்மதேவரை அடைந்து

கைகுவித்துக்கொண்டு ஸமுத்திரத்தை நிரப்புவதைப்பற்றிச் சொன்னார்கள்.

நூற்றைந்தாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பிரம்மதேவர் பகீரதனால் ஸமுத்திரம் நிரப்பப் படுமென்றதும், யுதிஷ்டிரர்வினவ, லோமசர் ஸகரனுக்குப் பிள்ளைகள் பிறந்ததைச் சொல்லியதும்.)

அரசனே! உலகங்களுக்குப் பிதாமஹரான பிரம்மதேவர், ஒருங்கு திரண்டுவந்திருக்கிற தேவர்களைத் தேற்றிக்கொண்டு அப்பொழுது, 'தேவர்களே! நீங்களனைவரும் இஷ்டப்படி விரும்பின இடத்துக்குச் செல்லுங்கள். வெகுகாலங்கழிந்தபிறகு ஸமுத்திரமானது தனது நிலைமையை அடையும். மஹாராஜனான பகீரதன் ஞாதிகளைக் காரணமாகச் செய்து ஜலப்பெருக்குக்களால் ஸமுத்திரத்தைத் தீர்த்தங்களுக்கு நிதியாக நிரப்புவான்' என்று உரத்த குரலுடன்கூடிய வாக்கினால் சொல்லினர். தேவச்ரேஷ்டர்களனைவரும் பிதாமகரின் சொல்லைக்கேட்டு (உரிய) காலங்கூடுவதை எதிர்பார்க்கின்றவர்களாக வந்தபடியே திரும்பிச்சென்றார்கள்' என்று சொன்னார்.

யுதிஷ்டிரர், 'பிராம்மணரே! முனிவரே! இந்தக்கடலை நிரப்புவதில் எவ்வாறு ஞாதிகள் காரணமானார்கள்? இந்த விஷயத்தில் காரணம் என்ன? பகீரதனுடைய பரிச்ரமத்தினால் எவ்வாறு ஸமுத்திரம் நிறைக்கப்பட்டது? தபோதனரே! பிராம்மணரே! உம்மால் சொல்லப்படுகின்ற அரசர்களுடைய இந்த உத்தமசரித்திரத்தை நான் விஸ்தாரமாகக் கேட்கவிரும்புகின்றேன்' என்று சொன்னார். மஹாத்மாவான தர்மராஜரால் இவ்வாறு சொல்லப்பட்ட பிராம்மணோத்தமர் மஹாத்மாவான ஸகரனுடைய மகிமையை எடுத்துரைத்தார். லோமசர், 'ரூபத்துடனும் சௌரியத்துடனும் பலத்துடனும் கூடின ஸகரன்என்கிற அரசன் இக்ஷ்வாகு வம்சத்தினரின் குலத்தில் உதித்தான். பிரதாபமுள்ளவனான அவன் புத்திரனில்லாதவனாக இருந்தான். பாரத! அவன் ஹைஹயர்களையும் தாலஜங்கர்களையும் நாசம்செய்து அரசர்களை வச

மும் செய்து தன் ராஜ்யத்தை ஆண்டுவந்தான். பரதஸ்ரேஷ்டனே! பரதரேறே! அவனுக்கு அழகினாலும் யௌவனத்தினாலும் கர்வமுடையவர்களான வைதர்ப்பி, சைப்யை என்னும் இரண்டு மனைவிகள் இருந்தார்கள். ராஜேந்திரனே! அந்த அரசன் புத்திரர்களை விரும்பினவனாக மனைவிகளுடன் கைலாஸகிரியை அடைந்து பெருந்தவம் புரிந்தான். யோகத்துடன் கூடி மிகப் பெருந்தவம்புரிகிற அவன் மிக்க மகிமையுள்ளவரும் மூன்றுகண்களுள்ளவரும் முப்புரங்களையழித்தவரும் சங்கரரும் பவரும் ஈசானரும் பினாகமென்கிற வில்லைத் தாங்கியவரும் சூலத்தைக் கையில் ஏந்தியவரும் 1 மங்களரூபியும் உக்ரமான (கணங்களுக்குத்) தலைவரும் பல ரூபங்களுள்ளவரும் உமையவளுக்கு நாயகருமான பரமசிவனை அடைந்தான். புஜபலமிக்க அந்த அரசன் வரத்தைக்கொடுப்பவரான அவரைப் பார்த்தவுடனே மனைவிகளுடன் சேர்ந்து நமஸ்காரம்செய்து புத்திரன் வேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

பிரீதியுள்ள ஹரர் மனைவிகளுடனிருக்கும் அந்த ராஜஸ்ரேஷ்டனைப் பார்த்து, 'அரசனே! சிறந்த மனிதர்களுள் சிறந்தவனே! உன்னால் இந்த முகூர்த்தத்தில் நான் வரம் வேண்டப்பட்டேனாதலால், சூரர்களும், மிக்க கொழுப்புள்ளவர்களுமான அறுபதினாயிரம் பிள்ளைகள் ஒரு மனைவியினிடம் உண்டாவார்கள். அரசனே! அவர்களெல்லோரும் சேர்ந்து நாசமடைவார்கள். வம்சத்தைத் தரிக்கிற சூரனான ஒருபுத்திரன் ஒருமனைவியினிடத்தில் உண்டாவான்' என்றார். ருத்திரர் அவனை இவ்வண்ணம்கூறி அவ்விடத்திலேயே மறைந்தார். அந்த ஸகரராஜனும் மனைவிகளுடன்கூடத் தன் இருப்பிடத்துக்குச் சென்றான். அந்தஇடத்தில் அவன் அப்பொழுது மனம் மிகக்களித்தவனாகிச் சிவனுடைய வரத்தால் அடையப்பட்ட காலத்தை எதிர்பார்க்கின்றவனாகிக் காலத்தைக்கழித்தான். புருஷஸ்ரேஷ்டனே! தாமரைமலர்போன்ற கண்களுள்ளவர்களான வைதர்ப்பி சைப்யை என்னும் அவனுடைய இரண்டுமனைவிகளும் கர்ப்பிணிகளானார்கள். பிறகு, வைதர்ப்பியானவள் வெகுகாலம் சென்றபிறகு, சுரைக்காய்போன்ற கர்ப்பத்தைப் பெற்றாள். சைப்யையும் தேவன்போன்ற ரூபமுள்ளவனும் புத்தென்னும் நரகத்தினின்று காப்பவனுமான ஒரு குமாரனைப் பெற்றாள். அந்த அரசன் அப்பொழுது சுரைக்காய்போன்ற கர்ப்பத்தை எறிந்துவிடுவதற்கு மனத்தில் எண்ணினான். அரசே! பிறகு, 'ஸாஹஸம்

1 பொருள் இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

செய்யாதே. புத்திரர்களை நீ எறிந்துவிடத் தக்கவனல்லை. சுரைக்காயின் நடுவினின்று வித்துக்களை வெளியில் எடுத்து நெய்யினால் நிறைக்கப்பட்டவையும் ஸமீபத்தில்[1] ஆவியுடன் கூடியவையுமான பாத்திரங்களில் தனித்தனி போட்டு முயற்சியுடன் பாதுகாக்கக் கடவாய். அரசே! பிறகு, அறுபதினாயிரம் பிள்ளைகளை அடைவாய். நராதிபனே! உனக்கு மஹாதேவரால் இந்த முறையாகப் புத்ரோற்பத்தியானது கொடுக்கப்பட்டது. உன்னுடைய புத்தியானது, இதைவிட்டு, வேறுவிதமாகவேண்டாம்' என்று ஆகாயத்தினின்று உண்டானதும் கம்பீரமான குரலுள்ளதுமான வாக்கைக் கேட்டான்.

நூற்றுாறுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யாகதீக்ஷைபெற்ற ஸகரன்கட்டளைப்படி அவனுடைய அறுபதினாயிரம் பிள்ளைகள் குதிரையைத் திரியவிட்டதும், அது கடற்கரையில் மறைந்ததும், பிதாவின் நியமனப்படி குதிரையைத்தேடிக் கடற்கரையைத் தோண்டின ஸகரபுத்திரர்கள் பாதாளலோகத்தில் கபிலர் தவம்புரிவதையும் பக்கத்தில் குதிரை திரிவதையும் கண்டதும்.)

பரதர்களுள் சிறந்தவனே! ராஜச்ரேஷ்டனான அந்த அரசன் ஆகாயத்தில்தோன்றின இந்தவாக்கைக்கேட்டு ஶ்ரத்தையுள்ளவனாகி, பிறகு, ஆகாயவாக்குச் சொல்லியவண்ணம் அதனைச் செய்தான். பிறகு, அரசன் அந்தக் கர்ப்பபிண்டத்தினின்று வித்துக்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பிறகு எல்லாப்பாகங்களையும் நெய்யினால் நிரப்பப்பட்ட குடங்களில் வைத்தான்; புத்திரர்களைப்பாதுகாப்பதில் ஊக்கமுள்ளவனாக வளர்ப்புத்தாய்மாரிடமும் ஒருவரிடம் ஒருகுடம்வீதம் கொடுத்தான். பிறகு, நெடுங்காலம் கழித்து அந்தக் குடங்களிலிருந்து மஹாபலசாலிகளான (புத்திரர்கள்) எழுந்திருந்தார்கள். அரசே! ஒப்பற்ற வல்லமையுள்ள ராஜரிஷியான அவனுக்கு ருத்ரருடைய அருளால் அறுபதினாயிரம்பிள்ளை

---

1 'ஸோவஸ்வேஷு' என்பது மூலம்; 'In steaming vessels' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

கள் உண்டானார்கள். பயங்கரமானவர்களும் கொடியசெய்கையுள்ளவர்களும் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர்களும் பலராயிருப்பதனால் தேவர்களுள்ளிட்ட எல்லா உலகங்களையும் அவமதிக்கின்றவர்களும் சூரர்களும் போர்புரிகிறவர்களுமான அவர்கள் தேவர்களையும் கந்தர்வர்களையும் அரக்கர்களையும் எல்லாப்பிராணிகளையும் துன்பம்செய்தார்கள். மந்தபுத்தியுள்ளவர்களான ஸாகரர்களால் அப்பொழுது வதம் செய்யப்படுகின்ற ஜனங்கள், எல்லாத்தேவர்களோடும்கூடிப் பிரம்மதேவரைச் சரணமடைந்தார்கள். மஹாபாக்யமுள்ளவரும் எல்லாஉலகங்களுக்கும்பிதாமஹருமான பிரம்மதேவர் அவர்களைநோக்கி, 'தேவர்களே! நீங்களெல்லாரும் உலகத்து ஜனங்களுடன்கூட வந்தவண்ணம் திரும்பிச்செல்லுங்கள். தேவர்களே! தங்களால் செய்யப்பட்ட தீவினைகளால் ஸாகரர்களுக்குச் சிறிதுகாலத்திலேயே மிக்ககோரமான பெரிய அழிவு உண்டாகும்' என்று சொன்னார். மனிதர்களுக்கு அதிபதியே! இவ்வாறு சொல்லக்கேட்ட அந்தத்தேவர்களும் உலகத்து ஜனங்களும் பிதாமஹரிடம் அனுமதிபெற்று வந்தவண்ணம் திரும்பிச் சென்றார்கள். பரதர்களுள் சிறந்தவனே! பிறகு, நெடுங்காலம் சென்றபோது வீர்யவானான ஸகரராஜன் அஸ்வமேதத்தில் தீக்ஷை பெற்றான். அரசே! அவனுடைய குதிரையானது பெரிய உத்ஸாஹமுள்ள எல்லாப் புத்திரர்களாலும் நன்கு பாதுகாக்கப்பட்டுத் தன்னிஷ்டப்படி திரிவதாகப் பூமியில் ஸஞ்சரித்தது. அந்தக் குதிரையானது, முயற்சியுடன் காக்கப்பட்டும், ஜலமற்றதும் பயங்கரமான காட்சியுள்ளதுமான ஸமுத்திரத்தை அடைந்து அந்த இடத்திலேயே மறைந்துபோயிற்று. ஐயனே! பிறகு, அந்த ஸாகரர்கள் உத்தமமானகுதிரையானது கவரப்பட்டதென்றெண்ணித் தந்தையிடம் திரும்பிவந்து, குதிரை கவரப்பட்டுக் காணாமல் போனதைச் சொன்னார்கள். அவன், 'பிள்ளைகளே! குதிரையை எல்லாத்திசைகளிலும் தேடுங்கள்' என்று சொல்லினன். மஹாராஜனே! பிறகு, அந்தஸாகரர்கள் பிதாவினுடைய (விருப்பத்தை) அறிந்து அந்தக்குதிரையைப் பூதலமுழுமையும் எல்லாத்திசைகளிலும் தேடினார்கள். பிறகு, (பிரிந்துசென்ற) அந்தஸாகரர்களெல்லாரும் ஒருவரோடொருவர் சேர்ந்தும் குதிரையையும் குதிரையைக் கொண்டுபோனவனையும் அறியவேயில்லை.

பிறகு, (ஸாகரர்கள்) திரும்பிவந்து பிதாவின் முன்னிலையில் கைகுவித்துக்கொண்டு, 'மனிதரைக்காப்பவரே! அரசரே! மகீ

பதியே! உம்முடையஉத்தரவினால் எங்களால் ஸமுத்திரங்களுடனும் காடுகளுடனும் தீவுகளுடனுங் கூடியதும் நதிகளுடனும் நதங்களுடனும் குகைகளுடனுஞ் சேர்ந்ததும் மலைகளுடனும் காட்டு வெளிகளுடனுமிருப்பதுமான பூமிமுழுவதும் தேடப்பட்டுவிட்டது. குதிரையையும் குதிரையைக் கொண்டுபோனவனையுமே நாங்கள் அறியோம்' என்றுசொன்னார்கள். அரசனே! அவர்களுடைய சொல்லைக்கேட்டு அந்தஅரசன் கோபத்தினால் மயங்கி அப்பொழுது தெய்வவசத்தால் அவர்களெல்லாரையும் பார்த்து, 'திரும்பிவராமலிருப்பதன்பொருட்டுச் செல்லுங்கள். மீண்டும் குதிரையைத் தேடுங்கள். புத்திரர்களே! யாகத்துக்குரிய அந்தக்குதிரையின்றி நீங்கள் திரும்பிவரக்கூடாது' என்ற சொல்லைச் சொன்னான். அந்தஸகரகுமாரர்கள் பிதாவினுடைய கட்டளையை ஏற்றுக்கொண்டு மறுபடியுமே பூமியனைத்தையும் தேடத்தொடங்கினார்கள். பூமியைக்காப்பவனே! பிறகு; அந்த வீரர்கள் பூமிதோண்டப்பட்டிருப்பதையும் ஸமுத்திரத்தில் குதிரையினுடைய காலடியையும் வழியையும் கண்டார்கள். ஸகரகுமாரர்கள் அந்தப்பிலத்தைஅடைந்து முயற்சியைக்கைக்கொண்டு ஸமுத்ரத்தைக் குந்தாலிகளாலும் முஸலங்களாலும் தோண்டினார்கள். சேர்ந்திருக்கிறஸாகரர்களால் வெட்டப்படுகிற அந்த வருணாலயமானகடலானது எங்கும்பிளக்கப்படுவதாகி மிகஅதிகமான துன்பத்தைஅடைந்தது. ஸாகரர்களால் துன்பப்படுத்தப்படுகின்ற அஸுரர்களும் உரகர்களும் அரக்கர்களும் பலவிதமானபிராணிகளும் துன்பஒலியைச்செய்தனர். நூறு நூறாகவும் ஆயிரமாயிரமாகவும் பிராணிகள் தலையறுக்கப்பட்டவைகளும் உடலற்றவைகளும் முழங்கால்எலும்புகளும் தலைகளுமுடைந்தவைகளுமாகக் காணப்பட்டன. அவர்களுக்கு இப்படி ஸமுத்திரத்தை வெட்டுவதிலேயே மிகநெடுங்காலம் சென்றுவிட்டது; குதிரையும் காணப்படவில்லை. அரசனே! பிறகு, மிக்ககோபமுள்ளவர்களான ஸகரகுமாரர்கள் ஸமுத்திரத்தின் வடகிழக்கானஇடத்தில் பாதாளத்தைப்பிளந்து பின்பு அந்தஇடத்தில் பூமியில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிற குதிரையையும் மஹாத்மாவும் தேஜஸுகளின் கூட்டமாக இருப்பவரும் (ஒப்பு) உயர்வுஅற்றவருமான கபிலரையும் கண்டார்கள். ஜ்வாலைகளால் அக்நி பிரகாசிப்பதுபோலத் தேஜஸினால் பிரகாசிக்கின்ற அந்தக் கபிலரைக்கண்டு ஸகரகுமாரர்களனைவரும் ஆச்சர்யும் அடைந்தவர்களானார்கள்.

[1] நூற்றேழாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(குதிரையைத்திருடினவரென்றெண்ணிக் கொல்லவந்த ஸாகரர்களைக் கபிலர் கண்ணழலால் சாம்பலாக்கியதும், ஸகரன் கட்டளையினல் புறப்பட்ட அம்சுமான் கபிலரை மகிழ்வித்துக் குதிரையைக் கொண்டுவந்து ஸகரனுடையயாகத்தை நிறைவேற்றியதும், ஸகரனும் அம்சுமானும் ஸ்வர்க்கத்தை அடைந்தபிறகு திலீபன் கங்கையைப் பூமியில் கொண்டுவர முயன்றும் நிறைவேறமலே ஸ்வர்க்கத்தை அடைந்ததும்.)

அரசனே! அவர்கள் அந்தக்குதிரையைக்கண்டு மயிர்சிலிர்த்தவர்களும் காலத்தால்தூண்டப்பட்டவர்களும் மஹாத்மாவான கபிலரைஅவமதித்து மிகுந்தகோபமுள்ளவர்களும் குதிரையைக் கைப்பற்றுவதில் விருப்பமுள்ளவர்களுமாகி, மஹாத்மாவானகபிலரை அலக்ஷ்யம்செய்து எதிர்த்து ஓடினர்கள். மஹாராஜனே! பிறகு, முனிஸ்ரேஷ்டரான கபிலர் கோபங்கொண்டார். எந்த முனிபுங்கவரான கபிலரை வாஸுதேவரென்று சொல்லுகிறர்களோ ரிஷிகளுள்மேன்மையுள்ளவரும் மிகப்பெரியதேஜஸுள்ளவருமான [2] அவர் தம்கண்ணை விகாரப்படுத்தி (அதிலுண்டான) தீயை அவர்களின்மீது தாக்கச்செய்து மதியற்றவர்களான அந்த அறுபதினயிரம் ஸாகரர்களையும் ஒரேஸமயத்தில் எரித்தார். அவர்கள் சாம்பலானதைக்கண்டு மஹாதபஸ்வியாகிய நாரதர் ஸகரனிடம்வந்து அவனுக்கு அதனை உரைத்தார். அந்தஅரசன் ரிஷியினுடையவாக்கினின்று வெளிவந்த கோரமான அந்தவசனத்தைக் கேட்டு ஒருமுகூர்த்தகாலம் மனவருத்தமுற்றவனகி ஸ்தாணுவினுடையவாக்யத்தை நினைத்தான். புத்திரர்களுடையநாசத்தால் உண்டானதுக்கத்தில் நன்குமுழுகின அந்த ஸகரன் தன்னைத் தானே தேற்றிக்கொண்டு குதிரையையே நினைத்தான், பரதஸ்ரேஷ்டனே!

---

1 இந்த நூற்றேழாவது அத்யாயத்துக்குப்பதிலாக 25 • ஸ்லோகத்தில் ஓர் அத்யாயம் சிறிது பாடபேதத்துடன் ஒரு புஸ்தகத்தில் இருப்பதாக க்ருஷ்ணசார்யர் பதிப்பில் குறித்திருக்கிறது.

2 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

ஸகரன் அப்பொழுது அஸமஞ்சனுடையபுத்திரனும் தனக்குப் பேரனுமான அம்சுமானை அழைத்து, 'ஐயனே! அளவிறந்தபராக்கிரமசாலிகளான அறுபதினாயிரம்பிள்ளைகள் கபிலருடைய (கண்) நெருப்பைஅடைந்து என்நிமித்தம் நாசமடைந்தார்கள். அப்பா! தோஷமற்றவனே! தர்மத்தைப்பாதுகாக்கிறவனும் பட்டணத்து ஜனங்களுக்கு நன்மையைவிரும்புகிறவனுமான என்னால் உன்னுடையபிதாவும் விடப்பட்டான்' என்கிற இந்தவசனத்தை உரைத்தான்' என்றுசொன்னார். யுதிஷ்டிரர், 'தபோதனரே! அரசர்களுள் சிறந்தவனான ஸகரன், வீரனும் எவ்விதத்தாலும் விடத்தகாதவனுமான ஔரஸபுத்திரனை எதற்காகவிட்டான்? அதனை எனக்குச் சொல்வீராக' என்று வினவினர். லோமசர், 'அரசே! எவனைச் சைப்யை பெற்றாளோ ஸகரனுடைய அந்தப் பிள்ளையானவன் அஸமஞ்சனென்று பிரஸித்திபெற்றிருந்தான். அந்தஅஸமஞ்சன் ஆங்காங்கு விளையாடிக்கொண்டிருப்பவர்களும் பலஹீனர்களுமான பட்டணத்து ஜனங்களுடைய குழந்தைகளை விரைவில் அடைந்து மயிர்களைப்பிடித்து அலறும்பொழுதே நதியில் எறிந்தான். பிறகு, பயத்திலும் சோகத்திலும்முழுகின பட்டணத்து ஜனங்கள் (ஸகரனிடம்) வந்தார்கள். எல்லோரும் கைகளைக் குவித்துநின்று ஸகரனைப்பார்த்து, 'மஹாராஜனே! பகைவர்களுடையபடை முதலியவைகளால் (உண்டாகின்ற) பயத்தினின்று எங்களை நீ காக்கிறாய். அதனைவிடக் கோரமான அஸமஞ்சபயத்தினின்றும் எங்களைக்காக்கவேண்டியவனாகிறாய்' என்று சொன்னார்கள். ராஜஶ்ரேஷ்டனானஸகரன் கோரமான நகரஜனங்களுடைய வசனத்தைக்கேட்டு ஒருமுகூர்த்தகாலம் மனவருத்தமுற்றவனாகி மந்திரிகளைப்பார்த்து, 'என்னுடையபுத்திரனான அஸமஞ்சன் பட்டணத்திலிருந்து இப்பொழுது துரத்தப்படவேண்டும். நீங்கள் எனக்குப் பிரியத்தைச் செய்வதானால் இது சீக்கிரம்செய்யப்படவேண்டும்' என்கிற இதனைச்சொன்னான். நராதிபனே! அரசன் இவ்வண்ணம் சொல்லக்கேட்ட அந்தஅமைச்சர்கள், அரசன் எவ்விதம் ஆணையிட்டானோ அவ்விதமே விரைவாகச் [1] செய்தார்கள்.

மஹாத்மாவும் நகரவாஸிகளின்ஹிதத்தில் விருப்பமுள்ளவனுமான ஸகரனால் எவ்வாறு புத்திரன்துரத்தப்பட்டானோ இஃதனைத்தும் உனக்குக் கூறப்பட்டது. பெரியவில்லுள்ள அம்சுமானுக்கு ஸகரன் சொல்லியதனைத்தையும் உனக்குச் சொல்வேன்.

1 பொருந்தாமையால் 'யதோக்தம்' என்பது விடப்பட்டது.

சொல்லப்படுவதை என்னிடத்தினின்று தெரிந்துகொள். ஸகரன், 'குழந்தாய்! உன் தகப்பனைவிட்டதாலும் புத்திரர்களுடைய நாசத்தாலும் அப்படியே குதிரை அகப்படாமையாலும் நான் பரிதவிக்கின்றேன். பௌத்ரனே! ஆதலால், துக்கத்தால் நன்கு எரிக்கப்பட்டவனும் யாகம் தடைப்பட்டதனால் மதிமயங்கினவனுமான என்னைக் குதிரையைக்கொண்டுவருவதனால் நரகத்தினின்று கரையேற்றுவாயாக' என்று சொன்னான். மஹாத்மாவான ஸகரனால் இவ்விதம் சொல்லப்பட்ட அம்சுமானே, எந்தஇடத்தில் பூமி பிளக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தைத் துக்கத்துடன் அடைந்தான். அவன் அதேவழியினால் கடலில் பிரவேசித்தான்; மஹாத்மாவானகபிலரையும் அந்தக் குதிரையையும் கண்டான். அவன் தேஜஸ்ஸுகளுடைய ராசியாக இருப்பவரும் பழமையானவருமான ரிஷிஶ்ரேஷ்டரைக் கண்டு தலையினால் பூமியில் நமஸ்கரித்து அந்தரிஷியினிடம் கார்யத்தைத் தெரிவித்தான். மஹாராஜனே! பிறகு, கபிலர் அம்சுமானிடத்தில் பிரீதியுள்ளவரானார். பாரத! தர்மாத்மாவான அவர் இவனைப்பார்த்து, 'வரன்களைக்கொடுப்பவனாக இருக்கிறேன்' என்றும் சொன்னார். அந்த அம்சுமான் அந்தச்சமயத்தில் யஜ்ஞம் பூர்த்திஅடைவதன்பொருட்டு முதலில் குதிரையை வேண்டினான்; பித்ருக்களுக்குப் பரிசுத்தி உண்டாக்கும்விருப்பத்தால் இரண்டாவதாகத் தீர்த்தத்தை வேண்டினான். மிக்க தேஜஸ்வியும் முனிவர்களுள் சிறந்தவருமான கபிலர் அவனைப்பார்த்து, 'குற்றமற்றவனே! நீ எதை எதை வேண்டுகின்றாயோ அதை அதை உனக்குக் கொடுக்கக்கடவேன். உனக்கு மங்களம். உன்னிடத்தில் பொறுமையும் தர்மமும் ஸத்யமும் நிலைபெற்றிருக்கின்றன. ஸகரன் உன்னால் கிருதார்த்தனானான். உன் தகப்பன் உன்னால் புத்திரனுள்ளவனானான். என்னுடைய கோபத்தால் உண்டான நெருப்பில் எந்த ஸாகரர்கள் விட்டிற்பூச்சிகளின்தன்மையை அடைந்தார்களோ அவர்கள் உன்னுடைய பிரபாவத்தினால் ஸ்வர்க்கத்தையும் அடைவார்கள். உன்னுடைய பேரனும் ஸாகரர்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காக மஹேஶ்வரரை மகிழ்வித்துக் கங்கையைத் தேவலோகத்தினின்று கொண்டுவருவான். மனிதருட்சிறந்தவனே! யாகத்துக்குரியதான குதிரையைக் கொண்டுபோ. உனக்கு மங்களம். குழந்தாய்! மஹாத்மாவான ஸகரனுடைய யாகத்தை நிறைவேற்றக்கடவாய்' என்று சொன்னார்.

மஹாத்மாவான கபிலரால் இவ்வண்ணம் கூறப்பட்ட அம்சுமானே குதிரையைப் பிடித்துக்கொண்டு மஹாத்மாவான ஸகரனுடைய யாகசாலையை வந்தடைந்தான். பிறகு, அவன் மஹாத்மாவான ஸகரனுடைய கால்களில் தண்டனிட்டு அந்த ஸகரனுலும் உச்சியில்முகரப்பட்டு ஸாகரர்களுடைய அழிவு முழுமையையும் தான் கண்டபடியும் கேட்டபடியும் அவனுக்குத் தெரிவித்தான். அந்தக் குதிரை யாகசாலைக்கு வந்துவிட்டதையும் அவனுக்குச் சொன்னுன். அதைக்கேட்டு ஸகரராஜன் புத்திரர்களுடைய நாசத்தால் உண்டானதுக்கத்தை விட்டான்; அம்சுமானையும் மிகுதியாகக் கொண்டாடி அந்தயாகத்தையும் முடிவு பெறச்செய்தான். யாகத்தை முடித்தவனும் எல்லாத்தேவர்களாலும் ஸம்மானிக்கப்பட்டவனுமான ஸகரன் வருணனுக்குஆலயமான ஸமுத்திரத்தைத் தனக்குப் புத்திரனுயிருத்தலில் அமைத்துக் கொண்டான். தாமரைமலர்போன்ற கண்களுள்ள ஸகரன் ராஜ்யத்தை மிக நீண்டகாலம்ஆண்டு பேரனிடத்தில் (ராஜ்ய)பாரத்தை வைத்து அப்பொழுது ஸ்வர்க்கத்தை அடைந்தான். மஹாராஜனே! தர்மாத்மாவான அம்சுமானும் கடலை மேகலையாகவுடையபூமியைத் தன் பாட்டன் ஆண்டதுபோலவே ஆண்டுவந்தான். தர்மங்களை அறிந்தவனை திலீபனென்பவன் அவனுக்குப் புத்திரனுகப் பிறந்தான். அம்சுமானும் அவனிடத்தில் ராஜ்யத்தைவைத்து முடிவை அடைந்தான். பிறகு, திலீபனே பித்ருக்களுக்கு நேர்ந்த பெரிய நாசத்தைக் கேட்டுத் துக்கத்தால் பரிதவித்தான்; அவர்களுடைய கதியை ஆலோசித்தான். அரசன் கங்கையைப் (பூமியில்) இறங்கச் செய்வதில் மிகப்பெரியமுயற்சியையும் செய்தான்; தன்பலத்துக்கு இயன்றவரையில் காரியங்களைச்செய்தும் (கங்கையைப் பூமியில்) இறங்கச்செய்ய மாட்டாமற்போனுன். அவனுக்கு ஐஸ்வர்யமுள்ளவனும் தர்மத்தில் பற்றுதலுள்ளவனும் மெய்பேசுகிறவனும் அஸூயை இல்லாதவனுமான பகீரதன் என்கிற கியாதிபெற்ற புத்திரன் உண்டானுன். அவனுக்கு ராஜ்யத்தில் முடிசூட்டித் திலீபன் கானகத்தை அடைந்தான். பரதர்களுள் சிறந்தவனே! பாரத! அந்த அரசன் தவஸித்தியின் சேர்க்கையினுல் காட்டினின்று காலவசத்தால் ஸ்வர்க்கம் சென்றுன்.

நூற்றெட்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பகீரதன் கங்கையைப் பூமியில் இறங்கச்செய்வதற்காக அதனைக் குறித்துத் தவம்புரிந்ததும், பூமியிலிறங்கும் கங்கையின் வேகத்தைத் தாங்குவதற்காக அதன் கட்டளைப்படி தவத்தால் சங்கரரை மகிழ்வித்ததும்.)

பெரிய வில்லுள்ளவனும் சக்கரவர்த்தியும் மஹாரதனுமான அந்த அரசனே எல்லா ஜனங்களின் உள்ளத்தையும் கண்களையும் மகிழ்விப்பவனானன். மிக்கபுஜபலமமைந்த அவன் மஹாத்மாவான கபிலரால் பித்ருக்களுடைய பயங்கரமான நாசத்தையும் ஸ்வர்க்கத்தை அடையாமையையும் கேட்டான். அந்த அரசன் ராஜ்யத்தை மந்திரியினிடத்தில் வைத்துவிட்டுத் துயரப்படும்மனத்துடன் தவம்புரிவதற்கு இமயமலையின் தாழ்வரையை அடைந்தான். நரஸ்ரேஷ்டனே! தவத்தினல் பாவத்தைஎரித்தவனான அவன் கங்கையை ஆராதிக்க விருப்பங்கொண்டு மலைகளுள் மிகச் சிறந்த இமயமலையைக் கண்டான். பகீரதன் பலவித வடிவமுள்ளவைகளும் தாதுவர்க்கங்களுள்ளவைகளுமான சிகரங்களால் அலங்கரிக்கப்பட்டதும், காற்றின் வழியிற்செல்லுகிற மேகங்களால் நாற்புறமும் நனைக்கப்பட்டதும், ஜலத்துடன்கூடின நதிகளாலும் புதர்களாலும் தாழ்வரைகளாலும் விளங்குகின்றதும், குகைகளிலும் கற்சந்துகளிலும் பதுங்கிக்கொண்டிருக்கிற சிங்கங்களாலும் புலிகளாலும் அடையப்பட்டதும், விசித்திரமான அங்கங்களுள்ளவைகளும் பலவிதஒலிகளுடன் கூவுகின்றவைகளுமான பக்ஷிகளாலும் அவ்வாறே சிறந்தவண்டுகளாலும் அன்னங்களாலும் நீர்க்காக்கைகளாலும் நீர்க்கோழிகளாலும் மயில்களாலும் சதபத்ரங்களாலும் ஜீவஞ்சீவகங்களாலும் குயில்களாலும் அப்படியே [1]கறுத்த கடைக்கண்களுள்ளவைகளும் குஞ்சுகளிடத்தில் ப்ரீதியுள்ளவைகளுமான சகோரபக்ஷிகளாலும் சூழப்பட்டதும், அழகிய ஜலமுள்ள இடங்களில் தாமரைகளால் நெருங்கியதும், ஸாரஸங்களின் இனிய ஒலிகளால் அலங்கரிக்கப்பட்டதும், கின்னரர்களாலும்

---

[1] 'சகோரங்களாலும் அஸிதாபாங்கங்களாலும் அவ்வாறே புத்ரப்ரியங்களாலும்' என்றும் கொள்ளலாம்.

அப்ஸரஸுகளாலும் அடையப்பட்ட கல்தரைகளுள்ளதும், திக்கு யானைகளுடைய கொம்புநுனிகளாலே நாற்பக்கத்திலும் உரையப்பட்டமரங்களுள்ளதும், வித்யாதரர்களால் ஸஞ்சரிக்கப்பட்டதும், பலவித ரத்னங்களால் நிரம்பியதும், விஷம் மிகுந்தவைகளும் பிரகாசிக்கின்ற நாக்குள்ளவைகளுமான ஸர்ப்பங்களாலும் சூழப்பட்டதும், சிலவிடங்களில் பொன்போன்றதும், சிலவிடங்களில் வெள்ளிபோன்றதும், சிலவிடங்களில் மைக்குவியல்களைப்போலப் பிரகாசிக்கின்றதுமான இமயமலையை அடைந்தான். புருஷஶ்ரேஷ்டனான அந்தப்பகீரதனே அந்தமலையில் பழங்களையும் கிழங்குகளையும் தீர்த்தத்தையும் ஆகாரம் செய்துகொண்டு ஆயிரவருஷகாலம் கடுந்தவம்புரிந்தான். ஆயிரம் தேவவருஷங்கள் சென்ற பிறகு, மஹாநதியான கங்கையானவள் தானே சரீரமுள்ளவளாகி அப்பொழுது அவனைத் (தன்னைத்) தரிசிக்கச்செய்தாள். கங்கை, 'மஹாராஜனே! என்னிடத்தினின்று நீ எதை விரும்புகின்றாய்? நரஶ்ரேஷ்டனே! உனக்கு எதைக் கொடுக்கக்கடவேன்? அதைச் சொல். நீ சொல்வதைச் செய்வேன்' என்று சொன்னாள். அரசே! இவ்வாறு சொல்லக்கேட்ட அரசனானபகீரதன் கங்காநதியை அப்பொழுது நமஸ்காரம்பண்ணிக் கைகூப்பிக்கொண்டு, 'வரன்களைக்கொடுப்பவளே! மஹாநதியே! குதிரையைத்தேடுகின்ற என்பாட்டன்மார்கள் கபிலரால் யமனுடையவீட்டை அடைவிக்கப்பட்டார்கள். மஹாத்மாக்களான அந்தஅறுபதினாயிரம் ஸாகரர்கள் கபிலதேவரை அடைந்து க்ஷணத்தில் நாசமடைந்தார்கள். இவ்வாறு நாசமடைந்த அவர்களுக்கு ஸ்வர்க்கத்தில் வாஸம் இல்லை. மஹாநதியே! நீ ஜலங்களால் அந்தச்சரீரங்களை நனைக்காதவரையில் அந்த ஸாகரர்களுக்கு நற்கதியில்லை. மஹாபாக்யமுள்ளவளே! என் பித்ருக்களான ஸகரகுமாரர்களை ஸ்வர்க்கத்தை அடையும்படி செய். மஹாநதியே! அவர்களுக்காக நான் உன்னைவேண்டிக்கொள்ளுகிறேன்' என்று மறுமொழி சொன்னான்.

அரசனுடைய இந்தச்சொல்லைக்கேட்டு உலகங்களால் வணங்கப்பட்ட கங்கையானவள் மிக்க ப்ரீதியுடன் பகீரதனைப்பார்த்து, 'மஹாராஜனே! உன்வசனத்தைச் செய்வேன். இதில் சந்தேகமில்லை. அரசே! ஆகாயத்தினின்று பூமியில்விழுகிற என்னுடைய தாங்குதற்கரிய வேகத்தைத் தாங்குவதற்குத் தேவஶ்ரேஷ்டரும் நீலகண்டருமான மஹேஶ்வரரைத்தவிர வேறொருவரும் மூவுலகங்களிலும் சக்தியுள்ளவராகார். நீண்டகைகளையுடையவனே! வரன்

களைக் கொடுப்பவரான அந்தஈஸ்வரரைத் தவத்தினால் மகிழ்வி. அந்தத்தேவரோ (ஸ்வர்க்கத்தினின்று) வேகமாக விழுகின்ற என்னை முடியினால் தாங்குவார். மஹிமையுள்ளவரும் உலகங்களைக்காப்பவருமான அந்தச் சம்புவானவர் தவத்தினால் ஆராதிக்கப்பட்டு உன்பித்ருக்களுக்கு ஹிதத்தைச் செய்யும் விருப்பத்தால் உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவார்' என்ற இந்தவாக்கியத்தைச் சொன்னாள். அரசனே! பகீரதமஹாராஜன், இந்த வசனத்தைக் கேட்டு, பிறகு, கைலமலையை அடைந்து சங்கரரைமகிழ்வித்தான். அரசனே! அரசன், பிறகு, சிறிது காலத்துக்குப்பின், அவரையடைந்து, கங்கை இறங்கிவருதலை வேண்டினான். அரசே! புருஷோத்தமனான அவன் பித்ருக்களுக்கு ஸ்வர்க்கத்தில் வாஸத்தைக்கருதி அவரிடத்தினின்று கங்கையைத் தாங்குவதில் வரத்தையும் பெற்றான்.

நூற்றேன்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(சங்கரர் பகீரதனுடைய பிரார்த்தனையினால் விழுகின்ற கங்கையைத் தாங்கினதும், பகீரதன் தன்னைத் தொடர்ந்துவருகின்ற கங்கையினால் பித்ருக்களுக்குத் தர்ப்பணம்செய்து ஸாகரத்தை நிரப்பியதும்.)

பகவான் பகீரதனுடைய வசனத்தைக் கேட்டும், தேவர்களுடைய விருப்பத்தைச் செய்யக்கருதியும், அரசனைப்பார்த்து, 'இப்படியே ஆகட்டும். மஹாபாக்யமுள்ளவனே! ராஜஸ்ரேஷ்டனே! ஆகாயத்தினின்று நழுவிவிழுகின்றதும் மங்களமானதும் தேவலோகத்ததும் புண்யமுள்ளதுமான கங்கையை உனக்காகத் தாங்குவேன்' என்று மறுமொழி உரைத்தார். நீண்ட கைகளையுடையவனே! இவ்வண்ணம் உரைத்துக் கோரரூபிகளும் பலவித ஆயுதங்களை எடுத்தவர்களுமான பார்ஷதர்களால் சூழப்பட்டவராக இமயமலையை அடைந்தார். அந்தமலையில் நின்றுகொண்டு புருஷஸ்ரேஷ்டனான பகீரதனைப்பார்த்து, 'தோள்வலிமைமிக்கவனே! சைலராஜனுக்குப் புத்திரியான நதியை வேண்டிக்கொள். அரசனே! நான் உன் பித்ருக்களுடைய பரிசுத்தியின்பொருட்டுத் தேவலோகத்தினின்று விழுகின்ற அந்தச் சிறந்த நதியைத் தாங்

குவேன்' என்று சொன்னார். அரசன் சர்வரால் சொல்லப்பட்ட இந்த வசனத்தைக்கேட்டு மிக்க அடக்கமுள்ளவனும் வணங்கினவனுமாகிக் கங்கையை நன்கு தியானம் பண்ணினான். பிறகு, புண்ய மான ஜலமுள்ளதும் ரம்யமானதும் அரசனால் நன்கு தியானிக்கப் பட்டதுமான கங்கையானது ஈசானர் நிற்பதைக்கண்டு ஆகாயத்தி னின்று விரைவாக விழுந்தது. பிறகு, அந்தக்கங்கை நழுவி விழுவதைப் பார்த்து மஹரிஷிகளுள்ளிட்ட தேவர்களும், கந் தர்வர்களும், உரகர்களும், இயக்கர்களும் பார்க்க எண்ணமுள்ள வர்களாக வந்தார்கள். பிறகு, இமயமலையினுடைய மகளான கங்கையானது சுழித்துக்கொண்டு வருகின்ற பெரிய நீர்ச்சுழல் களுள்ளதும் மீன்களாலும் முதலைகளாலும் நிரம்பியதுமாக ஆகா யத்தினின்று விழுந்தது. அரசனே! ஹரர் முத்துமயமான மாலை போல நெற்றியில் விழுகின்றதும் ஆகாயத்துக்கு மேகலைபோன்றது மான அந்தக்கங்கையைத் தாங்கினார். அரசனே! அன்னப்பறவை களுடைய வரிசைபோன்ற நுரைக்கூட்டங்களால் சூழப்பட்ட ஜலமுள்ள அந்த நதியானது மூன்றாக ஓடுவதாயிற்று. அந்தக் கங்கை ஓரிடத்தில் விரிவும் வளைவுமுள்ளதாகவும் ஒவ்வோர் இடத் தில் தடுமாற்றமுள்ளதாகவும் நுரைகளாகிற வஸ்திரத்தை உடுத்த தாகவும் மதமுள்ளமங்கைபோல் சென்றது. ஓரிடத்தில் ஜலத் தின் ஒலிகளால் பேரொலியைச் செய்வதும் ஓரிடத்தில் ஆகா யத்தை நீர்ச்சுழல்களால் நாற்புறங்களிலும் சுருக்குவதுபோன் றதும் இவ்விதமான மிகப்பலசெயல்களைச் செய்வதுமாகி ஆகா யத்தினின்று நழுவின அந்தக்கங்கையானது பூமியை அடைந்து, பிறகு, பகீரதனைப்பார்த்து, 'மஹாராஜனே! வழியைக்காட்டு. எந்த வழியினால் நான் செல்வேன்? பூமிக்கு அதிபதியே! உனக்காகப் பூமியில் இறங்கியிருக்கிறேன்' என்று சொல்லியது. நரஶ்ரேஷ் டனே! பகீரதராஜன் இந்தவசனத்தைக்கேட்டு மஹாத்மாக்களான ஸாகரர்களுடைய அந்தச்சரீரங்கள் இருந்தவிடத்தில் அவற்றைப் புண்ணிய தீர்த்தத்தினால் நனைப்பதற்காகப் புறப்பட்டான். ஹரர் கங்கையைத் தாங்கி உலகங்களால் நமஸ்கரிக்கப்பட்டுத் தேவர்களு டன் மலைகளுள்சிறந்த கைலாஸத்தை அடைந்தார். அரசன் கங்கையுடன் சேர்ந்து ஸமுத்திரத்தையும் அடைந்து வேகத்தோடு வருணனுக்கு இருப்பிடமான அந்த ஸமுத்திரத்தை நிரப்பினான். அரசன் கங்கையைத் தனக்கு மகளாயிருத்தலிலும் அமைத்துக் கொண்டான். விருப்பம் நிறைவேறினவனாகி அந்தக்கங்கையில்

உதகதானத்தையும் செய்தான். மஹாராஜனே! பிரபுவே! ஸமுத்திரத்தை நிரப்புவதற்காக மூன்று வழியாகச்செல்லுகின்ற கங்கை பூமியில்இறக்கப்பட்டவிதமும் தேவர்களால் காலேயர்கள் அழிக்கப்பட்ட விதமும் மஹாத்மாவான அகஸ்தியரால் காரணார்த்தமாக ஸமுத்திரம் பானம்பண்ணப்பட்டவிதமும் பிராம்மணர்களைக்கொல்பவனான அந்தவாதாபி நாசத்தை அடைவிக்கப்பட்டவிதமும் ஆகிய நீ [1] என்னைக்கேட்ட இவையெல்லாம் என்னால் உனக்கு உரைக்கப்பட்டன' என்றுசொன்னார்.

நூற்றுப்பத்தாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் ரிஷபகூடமலையில் நந்தைஅபாநந்தை என்னும்நதிகளை அடைந்ததும், லோமசர், ரிஷபமுனிவர் நந்தைஇவர்களின் மகிமையைச்சொல்லியதும்.)

பரதஸ்ரேஷ்டனே!பிறகு, குந்தீபுத்திரர் பாவபயத்தைப்போக்கக்கூடிய நந்தை, அபரநந்தையென்கிறநதிகளை முறையே அடைந்தார். அந்தஅரசர் ஆரோக்யத்துக்கு இருப்பிடமான ஹேமகூடமலையைஅடைந்து நினைத்தற்கரியவைகளும் ஆச்சர்யமானவைகளுமான பலபொருள்களைக் கண்டார். எந்தமலையில் கோரமான மழையும் ஆயிரக்கணக்கான பாறைகளுமிருக்கின்றனவோ அம்மலையின்மீது ஜனங்கள் துயரமுற்றமனமுள்ளவர்களாக ஏறுவதற்குச் சக்தியற்றவர்களாகிறார்கள். அந்தமலையில் காற்று எப்பொழுதும் வீசுகிறது; (பர்ஜன்ய) தேவன் எப்பொழுதும் மழை பொழிகிறான். அப்படியே வேதவொலியும் கேட்கப்படுகிறது. (வேதாத்யயனம் செய்கிறவன்) காணப்படுகிறதில்லை. அக்னி பகவான் மாலையிலும் காலையிலும் காணப்படுகிறான். அந்தமலையில் தவத்துக்குஇடையூற்றைச்செய்கின்ற [2] கதண்டுகள் (மனிதர்களைக்)கடிக்கின்றன. அங்கே செல்வதில் வேண்டாமென்றஎண்ணம் உண்டாகிறது. ஜனங்கள் வீடுகளை(அடைய) நினைக்கிறார்கள். பாண்டவர் இவ்வண்ணம் ஆச்சரியமான பலவிதவஸ்துக்களைப் பார்த்து, பிறகு, மறுபடியுமே லோமசரைநோக்கி, 'பகவானே! மிக்ககாந்தியுள்ளவரே! மிக்கஒளிபொருந்திய இம்மலையிலிருக்கிற

---

1 ஒருசொல் விடப்பட்டது. 2 'மக்ஷிகா;' என்பது மூலம்;ஒருவகை ஈ.

இந்தஆச்சரியம்அனைத்தையும் விஸ்தாரமாக எனக்குச் சொல்வீராக' என்று அந்தஆச்சர்யத்தைப்பற்றி வினவினர். லோமசர், 'பகைவரை இளைக்கச்செய்பவனே! அரசனே! இது நம்மால் முற்காலத்தில் எவ்வாறு கேட்கப்பட்டதோ அவ்வாறு சொல்லுகின்ற என்னிடத்திலிருந்து அதனை (அது) ஒன்றிலேயே மனம்பற்றினவனாகித் தெரிந்துகொள். இந்தரிஷபகூடத்தில் பலநூறுவருஷங்கள் ஆயுளையுடையவரும் மிகுந்தகோபமுள்ளவரும் தவஞ்செய்பவருமான ரிஷபர்என்கிற ஒரு ரிஷி இருந்தார். அவர் பிறரால் பேசப்படுகின்றவராகிக் கோபத்தினால் [1] மலையைப்பார்த்து, 'எவன்ஒருவன் இவ்விடத்தில் பேசுவனோ அவன்மீது அப்படிக் கற்களைப்போடுவாயாக' என்றுசொன்னர். அந்தரிஷியானவர் காற்றையும்அழைத்து, 'நீ சத்தம்போடாதே' என்றும் சொன்னர். இந்தமலையில் பேசுகிற மனிதன் மேகத்தினுடையசப்தத்தினால் தடுக்கப்படுகிறான். அரசனே! அந்தமஹரிஷியினால் இவ்வண்ணம் கோபத்தினால் இந்தச் சிலகாரியங்கள் செய்யப்பட்டன; சிலகாரியங்கள் தடுக்கப்பட்டன. அரசனே! 'தேவர்கள் முற்காலத்தில் நந்தாநதியை அடைந்தார்கள்; மனிதர்கள் தேவர்களைப்பார்த்து விரைவாகப் பின்தொடர்ந்தார்கள். ஆதலால், அவர்கள் பாராமலிருப்பதைவிரும்பி, இந்திரனைத்தலைவனாகக்கொண்ட தேவர்கள், இந்தஇடத்தை அடைதற்கு அரிதாகவும் தடைவடிவமான மலையாகவும் செய்துகொண்டார்கள்' என்றுகேள்வி. குந்தீநந்தன! மனிதர்கள் அதுமுதற்கொண்டு எப்பொழுதுமே இந்தமலையை ஏறிட்டுப் பார்ப்பதற்குச் சக்தியற்றவர்களானார்கள். ஏறுவதற்கு எப்படிமுடியும்? குந்தீநந்தன! தவம் புரியாதமனிதனாலே இந்தமலையானது பார்ப்பதற்காவது ஏறுவதற்காவது கூடுவதாகாது. ஆதலால், நீ வாக்கைஅடக்கியவனாக இரு. பாரத! இந்தஇடத்தில் அப்பொழுது எல்லாத்தேவர்களும் உத்தமமானயாகங்களைச் செய்தார்கள். அவைகளுடைய அடையாளங்கள் இன்னும் காணப்படுகின்றன. பிரஜைகளுக்கு அதிபதியே! இதோ அறுகம்புல்லுகள் தர்ப்பங்களுடைய வடிவம்போன்ற வடிவமுள்ளவைகளாகவும் இதோ பூமியானது தர்ப்பங்களால் பரப்பப்பட்டதுபோலவும் இதோ பலமரங்கள் யூபஸ்தம்பங்கள் போலவும் இருக்கின்றன. பாரத! தேவர்களும் ரிஷிகளும் இப்பொழுதும் வஸிக்கிறார்கள். ஸாயங்காலத்திலும் அப்படியே காலையிலும் அவர்களுடைய அக்னியானது காணப்படுகின்றது.

[1] வேறுபாடம்.

குந்திபுத்திரனே! இதில் ஸ்நானம்செய்கிறவர்களுடைய பாவமானது உடனே நாசம்செய்யப்படுகிறது. குருஶ்ரேஷ்டனே! ஆதலால், நீ தம்பிமார்களுடன்கூட ஸ்நானம்செய்வாயாக. நீ நந்தையினுடைய தீர்த்தத்தில் ஸ்நானம்செய்த சரீரமுள்ளவனாகி, பிறகு, விஶ்வாமித்திரரால் எந்தநதியில் ஒப்புயர்வற்ற கடுந்தவம் புரியப்பட்டதோ அந்தக் கௌசிகீநதியைக்குறித்துச் செல்வாய்' என்றுசொன்னார். பிறகு, அரசர் பரிவாரங்களுடன் அந்தநதியில் சரீரங்களை ஸ்நானம்செய்வித்துப் பரிசுத்தமாயிருப்பதும் அழகியதும் குளிர்ந்தஜலமுள்ளதும் மங்களத்தை உண்டுபண்ணுகிறதுமான கௌசிகீநதியை அடைந்தார்.

நூற்றுப்பதினோராவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் கௌசிகீதீரத்தில் ரிஶ்யஶ்ருங்கருடைய ஆஶ்ரமத்தை அடைந்ததும், லோமசர் ரிஶ்யஶ்ருங்கருடைய உற்பத்தியையும் லோமபாதன் மழையில்லாமையைநீக்குதற்காக ரிஶ்யஶ்ருங்கரைஅழைத்துவரத் தாஸிகளை அனுப்பியதையும் அவர்கள் அவ்வனம்சென்றதையும் யுதிஷ்டிரருக்குக் கூறியதும்.)

லோமசர், 'பரதஶ்ரேஷ்டனே! இது கௌசிகியென்னும் பரிசுத்தமான தேவநதி. இங்கே இந்த அழகியதான விஶ்வாமித்திருடையஆஶ்ரமம் விளங்குகிறது. எவருக்குத் தவமுள்ளவரும், இந்திரியங்களையடக்கியவரும், தவத்தின்பெருமையினால் இந்திரனை மழைபொழியச்செய்தவரும், பலனையும் வ்ருத்ரனையும்கொன்ற இந்திரன் மழையற்றுப்போனகாலத்தில் தம்மிடம்பயந்து மழைபெய்யக் காரணமானவரும்,காஶ்யபருக்குப் பெண்மானிடத்தில் தேஜஸ்வியானபிள்ளையாகப் பிறந்தவரும், பிரபுவும், லோமபாதனுடைய தேசத்தில் பயிர்களழிந்துபோனபோது பெரியஆச்சர்யத்தைச் செய்தவரும், ஸூர்யன் ஸாவித்ரியைக்கொடுத்ததுபோல லோமபாதராஜன் தன்மகளானசாந்தையைக் கொடுக்கப்பெற்றவருமான ரிஶ்யஶ்ருங்கர் புத்ரரோ, அந்த மஹாத்மாவான காஶ்யபகோத்திரத்தில்தோன்றின விபாண்டகருடைய புண்யமென்கிற பெயருள்ள ஆஶ்ரமமும் விளங்குகிறது' என்றுசொல்ல, யுதிஷ்டிரர், 'ரிஶ்யஶ்ருங்கர் பெண்மானிடத்தில் எவ்வாறு காஶ்யபருக்குப்புத்திரராகத் தோன்றினர்? விரோதமான ஜாதிகளுக்கு ஸம்பந்த

மானது எப்படி தவத்தால் கூடிற்று? பலனையும் வ்ருத்ரனையும் கொன்ற இந்திரன் மழையின்மை நேர்ந்திருந்த தருணத்தில் புத்தி மானான அந்தச்சிறுவரிடம் பயத்தால் எதற்காக மழை பொழிந்தான்? எவள் மிருகமாக இருக்கிற அந்த ரிஸ்யஸ்ருங்கருடைய மனத்தை (விஷயானுபவத்தில்) ஆசைப்படும்படி செய்தாளோ பதிவிரதையும் ராஜபுத்ரியுமான அந்தச் சாந்தை எவ்விதமான வடிவழகுள்ளவள்? லோமபாதன் தார்மிகனான ராஜரிஷி என்று கேட்கப்படுகிறானே? அவனுடைய தேசத்தில் இந்திரன் யாது காரணத்தால் மழை பொழியாமலிருந்தான்? பகவானே! ரிஸ்யஸ்ருங்கருடைய செய்கையைக் கேட்க விரும்புகிற எனக்கு இதெல்லாவற்றையும் விஸ்தாரமாக உள்ளபடி உரைக்கக்கடவீர்' என்று வினவ, லோமசர் கூறலானார்.

'மஹாஹ்ரதத்தில் பிரம்மரிஷியும் தவத்தினால் மனத்தை யடக்கினவரும் வீண்போகாத வீர்யமுள்ளவரும் பிரம்மாவுக்கு ஸமமான காந்தியுள்ளவருமான விபாண்டகருக்கு, பிரதாபசாலியும் மிக்க தேஜஸுள்ளவரும் சிறுவரும் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவருமான ரிஸ்யஸ்ருங்கர் புத்ரராகப் பிறந்த விதத்தைக் கேள். தேவரிஷிபோன்ற கஸ்யபகுலத்தில் பிறந்த விபாண்டக முனிவர் மஹாஹ்ரதத்தை அடைந்து நெடுங்காலம் தவத்திலிருந்து மிகுந்த களைப்பை அடைந்தார். அரசனே! ஸ்நானம்செய்கின்ற அவருடைய வீர்யமானது (அவர்) ஊர்வசி என்கிற அப்ஸரஸைப் பார்த்தவுடன் ஜலத்தில் நழுவி விழுந்தது. அதனை அப்பொழுது தாகங்கொண்ட ஒருபெண் மான் தண்ணீருடன் குடித்தது. அதிலிருந்து, அது கர்ப்பமுள்ளதுமாயிற்று. முன்பு தேவகன்னியாயிருந்த அந்தப்பெண்மானானது உலகங்களைப் படைப்பவரும் மகிமையுள்ளவருமான பிரம்மதேவரால், 'நீ ஒரு பெண்மானாகப்பிறந்து ஒரு ரிஷியைப் பெற்று (அந்தப் பிறப்பிலிருந்து) விடுபடுவாய்' என்று சொல்லப் பட்டது. பிரம்மதேவர் வாக்குப் பயன்படாமல் போகாததாலும் தெய்வத்தாலேற்படுத்தப்பட்டது அவ்வண்ணமே ஆகவேண்டியதாயிருப்பதாலும் அந்தப்பெண்மானிடத்தில் அந்தக்காஸ்யபருக்கு மஹானும் ரிஷியுமாகிய புத்திரர் உண்டானார். (அந்த) ரிஸ்யஸ்ருங்கர் தவத்தில் நிலைபெற்றவராகி வனத்திலேயே வளர்ந்தார். வேந்தே! மஹாத்மாவான அவருக்குச் சிரத்தில் கொம்பு இருந்தது. அதனால் அப்பொழுது அவர் ரிஸ்யஸ்ருங்க

ரென்றே பிரஸித்திபெற்றவரானார். அந்த ரிஸ்யச்ருங்கரால் தம் பிதாவைத்தவிர வேறு மனிதன் முன் பார்க்கப்பட்டதில்லை. வேந்தனே! அதனால், அவருடைய மனமானது நித்யம் பிரம்மசரியத்திலேயே ஊன்றியிருந்தது. இந்தத்தருணத்தில் தசரதருக்கு மித்திரனும் லோமபாதனென்று பிரஸித்திபெற்றவனுமான ஓர் அரசன் அங்கதேசாதிபதியாக இருந்தான். பாரத! தர்மங்களை அறிந்தவனாக இருந்தும் தெய்வத்தால் மனம் கெடுக்கப்பட்ட அவனால் பிராம்மணர்களின் விருப்பம்[1] வீணாக்கப்பட்டதென்று கேள்வி. பரதர்களுள் மிகச்சிறந்தவனே! அப்பொழுது அவன் பிராம்மணர்களால் விடப்பட்டான். (மேலும்) அவ்வரசனுடைய புரோஹிதரது தற்செயலான குற்றத்தாலும் இந்திரன் மழை பொழியவில்லை. அதனால், பிரஜைகள் துன்புறுத்தப்பட்டார்கள். பூமிக்கு நாதனே! அவன் தபோபலமுள்ளவர்களும் கற்றறிந்தவர்களும் தேவேந்திரனை மழைபொழியச்செய்ய வல்லவர்களுமான பிராம்மணர்களைப்பார்த்து, 'மேகம் எவ்வாறு மழைபொழியும்? உபாயத்தை ஆலோசிப்பீர்களாக' என்று வினவினான். ஏவப்பட்ட அந்த வித்வான்கள் தங்கள் அபிப்பிராயங்களை அவனுக்குக் கூறினார்கள். அவர்களுள் ஒரு முனிஸ்ரேஷ்டர் அந்த அரசனைப்பார்த்து, 'ராஜேந்திரனே! உன்மீது பிராம்மணர்கள் கோபங்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிராயச்சித்தத்தைச் செய்துகொள். அரசனே! மானிடத்தினின்று பிறந்தவரும் பெண்களை அறியாதவரும் உள்ளும்புறமும் ஒத்திருத்தலில் பற்றுள்ளவருமான ரிஸ்யச்ருங்கரென்கிற ரிஷிகுமாரரையும் அழைத்துவா. மன்னவனே! மிக்க தவமுள்ளவரான அந்த ரிஸ்யச்ருங்கர் உன்னுடைய தேசத்தை அடைந்தால் உடனே பர்ஜன்யன் மழையைப் பொழிந்துவிடுவானென்பதில் எனக்கு ஐயமில்லை' என்று சொன்னார். அரசனே! இந்த வசனத்தைக்கேட்டு, அவன் பிராம்மணர்களிடம் சென்று தனக்குப் பிராயச்சித்தத்தைச் செய்துகொண்டு ப்ராம்மணர்கள் பிரஸன்னர்களானபிறகு, மறுபடியும் திரும்பிவந்தான். பிரஜைகள் அரசன் திரும்பிவந்ததை அறிந்து அவனைப் பிரீதியுடன் வரவேற்றார்கள். தகப்பன்போல எப்பொழுதும் ஹிதத்தைச்செய்கின்ற அவனும் அப்பொழுது அவர்களை அன்புடன் வரவேற்றான். பிறகு, அங்கதேசாதிபனான (அவன்)

1 கொடுப்பதாக முதலில் சொல்லிவிட்டுப் பிறகு சொல்லவில்லை என்று மறுப்பது.

ஆலோசனையில் வல்லவர்களான மந்திரிகளை அழைத்து ரிஸ்யஸ்ருங்கரை அழைத்துவருவதற்குரிய மந்திராலோசனை நிச்சயத்தில் முயற்சியைச் செய்தான். (ராஜ்யத்தைப் பாதுகாப்பதினின்று) தவறாதவனான அவன் சாஸ்திரங்களை அறிந்தவர்களும் (அவற்றின்) அர்த்தங்களை முழுமையும் உணர்ந்தவர்களும் நீதியில்நிலைபெற்றிருப்பவர்களுமான அந்த அமைச்சர்களுடன் உபாயத்தைஅறிந்து கொண்டான். அரசன், பிறகு, தாஸிகளுள் சிறந்தவர்களும் எல்லாவிஷயங்களிலும் ஸாமர்த்தியமுள்ளவர்களுமான வேசிகளை அழைத்துவரச் செய்தான். அந்த அரசன் அவர்களைப்பார்த்து, 'கல்யாணிகளே! ரிஷியினுடைய குமாரரான ரிஸ்யஸ்ருங்கரை உபாயத்தால் ஆசையை உண்டுபண்ணி நம்பச்செய்து என்னுடைய தேசத்திற்கு அழைத்துவாருங்கள்' என்று சொன்னான். அந்த ஸ்திரீகள் ராஜபயத்தினின்று பயந்தவர்களும் சாபத்தினின்றும் பயந்தவர்களும் துன்பமுற்றவர்களும் மதிமயக்கமுற்றவர்களுமாகி அந்தக் கார்யம் தங்களால் செய்யமுடியாததென்று சொன்னார்கள். அவர்களுள் வயதுசென்ற ஒருத்தி அரசனைப்பார்த்து, 'மகாராஜரே! அந்தத் தபோதனரை அழைத்துவருவதற்கு நான் முயல்வேன். நான் விரும்பிய விருப்பங்களை நீர் கொடுக்கக்கடவீர். அதனால், ரிஷிகுமாரரான ரிஸ்யஸ்ருங்கரை அழைத்துவருவதற்கு நான் திறமையுள்ளவளாவேன்' என்று சொன்னாள். அந்த அரசன் அவளால் விரும்பப்பட்ட எல்லாவற்றையும் (கொடுக்கும்படி) அனுமதியளித்தான். ஏராளமானபொருளையும் பற்பலவித ரத்தினங்களையும் கொடுத்தான். அரசனே! பிறகு, அவள் ரூபத்தோடும் நல்லவயதோடும்கூடின சில ஸ்திரீகளைக்கூட்டிக்கொண்டு விரைவாகக் காட்டை அடைந்தாள்.

நூற்றுப்பன்னிரண்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ஒரு தாஸி விபாண்டகரில்லாத ஸமயத்தில் அவருடைய ஆஸ்ரமத்தில் வந்து விலாஸங்களால் ரிஸ்யஸ்ருங்கரைமயக்கி ஆசைகாட்டிச் சென்றதும், விபாண்டகர் ஆஸ்ரமத்திற்குவந்து புத்ரர் மயங்கியிருப்பதைப் பார்த்துக் காரணத்தை வினவியதும்.)

பாரத! அவள் ராஜகார்யம் பயன்படும்பொருட்டு அரசனுடைய கட்டளையினாலும் தன் புத்தியினாலும் ஓடத்தில் ஓர் ஆஸ்ர

மத்தை அமைத்தாள். ஓடத்திலுள்ள அந்த ஆஶ்ரமத்தைப் பல விதபுஷ்பங்களும் பழங்களுமுள்ளவைகளும் பலவிதப் புதர்களோடும் கொடிகளோடும் சேர்ந்தவைகளும் ருசியுள்ள விருப்பமான பழங்களைக்கொடுப்பவைகளும் ஒளிபொருந்தியவைகளுமான போலிமரங்களால் மிகவும் அழகியதாகவும் மனத்தை மிகக் கவர்வதாகவும் ரம்யமாகவும் [1] ஆச்சர்யகரமானகாட்சியுள்ளதாகவும் செய்தாள். பிறகு, அவள் விபாண்டகருடைய ஆஶ்ரமத்திற்கு அருகில் ஓடத்தைக்கட்டிவிட்டு, அந்த முனிவர் வெளியில் புறப்பட்டுப்போகும் ஸமயத்தை ஆட்களால் தெரிந்துகொண்டாள்; பிறகு, (அவள்) தன்மனத்துக்குப் பிடித்தவளும் தன்மகளுமான வேசியை இவ்விதம் செய்யவேண்டுமென்பதை நன்கு அறிவித்து விபாண்டகர் இல்லாத ஸமயம்பார்த்து (ஆஶ்ரமத்திற்கு) அனுப்பினாள். ஸாமர்த்தியசாலியான அவள் அங்கேசென்று என்றும்தவமுள்ள (ரிஶ்யஶ்ருங்கமுனிவர்) பார்த்துக்கொண்டிருக்கையில் அந்த ஆஶ்ரமத்தை அடைந்து ரிஷிகுமாரரான அவரைப் பார்த்தாள். வேசி, 'முனிவரே! முனிவர்களுக்கு க்ஷேமமா? உங்களுக்குக் கிழங்குகளும் கனிகளும் நிரம்ப இருக்கின்றனவா? நீர் இந்த ஆஶ்ரமத்தில் மகிழ்கிறீரா? உம்மைப்பார்ப்பதற்காக நான் இப்பொழுது வந்திருக்கிறேன். தவசிகளுடைய தவம் பெருகிவருகிறதா? உம்முடையபிதா தேஜஸ் குறையாமலிருக்கிறாரா? பிராம்மணரே! உம்மால் அவர் ப்ரீதி அடைவிக்கப்படுகிறாரா? ரிஶ்யஶ்ருங்கரே! வேதாத்தியயனம் செய்யப்படுகிறதா?' என்று வினவினாள். ரிஶ்யஶ்ருங்கர், 'நீர் ஸம்ருத்தியினால் ஜோதிபோலப் பிரகாசிக்கிறீர். நான் உம்மை நமஸ்காரம்செய்யப்படத்தக்கவரென்று நினைக்கிறேன்; உமக்குப் [2] பாத்யத்தைப் பிரியத்துடன் கொடுப்பேன். தர்மம்தவறாமல் பழங்களையும் கிழங்குகளையும் கொடுப்பேன். மான்தோலால் மூடப்பட்டிருக்கிற தர்ப்பாஸனத்தில் ஸுகானுபவத்தின்பொருட்டு உமதுவிருப்பப்படி வீற்றிருப்பீராக. உம்முடைய ஆஶ்ரமம் எங்கிருக்கிறது? பிராம்மணரே! நீர் தேவன்போலஇருந்துகொண்டு என்னபெயருள்ள இந்தவிரதத்தை அனுஷ்டிக்கிறீர்?' என்றுகேட்டார். வேசி, 'காஶ்யபருடையபுதல்வரே! இந்தமலைக்கு மூன்றுயோசனைக்கப்பால் ரமணீயமான என்னுடைய ஆஶ்ரமமிருக்கிறது. அந்தஇடத்தில் வந்தனம்பெறாமலிருப்பது எங்களுக்கு ஸ்வதர்மமாக இருக்கிறது. பாத்யதீர்த்தத்தை நாங்கள்

---

1 'அத்புதோபமதர்சனம்' என்பது மூலம். 2 கால் கழுவ நீர்.

தொடமாட்டோம். உம்மால் நான் நமஸ்கரிக்கப்படத்தக்கவனல்லேன். என்னால் நீர் நமஸ்கரிக்கப்படத்தக்கவர். பிராம்மணரே! என்னால் தேவரீர் கட்டிக்கொள்ளத்தக்கவர். என்னுடைய விரதம் இவ்வாறுள்ளது' என்றுசொன்னாள். ரிஸ்யஸ்ருங்கர், 'நான் உமக்குக் கனிந்திருக்கிற பல்லாதகங்கள் நெல்லிகள் கரூஷகங்கள் மணிப்புன்குகள் தன்வனங்கள் (இவற்றின் பழங்களையும்) பிரியாளப்பழங்களையும் கொடுப்பேன். இஷ்டப்படி செய்யக்கடவீர்' என்று சொன்னார். அவள் அவைகளெல்லாவற்றையும் எறியச்செய்து விலைமதிப்பில்லாத பக்ஷ்யங்களையும் மிக்கசுவையுள்ளவைகளும் மிக்க அழகுள்ளவைகளுமான அந்தமோதகங்களையும் அந்தரிஸ்யஸ்ருங்கருக்குக் கொடுத்தாள்; நல்லவாஸனையுள்ள பூமாலைகளையும் பலவிதமானவைகளும் காந்தியுள்ளவைகளுமான வஸ்திரங்களையும் சிறந்தபானங்களையும் கொடுத்தாள்; பிறகு, ஸந்தோஷமடைந்தாள்; விளையாடினாள்; சிரிக்கவும் சிரித்தாள். அவள் அவரருகில் பழங்களுள்ள கொடிபோலத் துவள்கிறவளாகிப் பந்துவிளையாடினாள். தன்அவயவங்களால் அவருடைய அவயவங்களை அடைபவளாகி அந்தரிஸ்யஸ்ருங்கரை அடிக்கடி தழுவினாள். நன்கு பூத்திருக்கின்ற ஸர்ஜமரங்களையும் அசோகமரங்களையும் திலகமரங்களையும் வளைத்தும் ஒடித்தும் அதிகவெட்கமுள்ளவள்போன்றவளும் மதத்தால் கவரப்பட்டவளுமாகி மகரிஷியினுடைய குமாரரைத் தன்னிடத்தில் ஆசைகொள்ளச் செய்தாள். பிறகு, அவள் ரிஸ்யஸ்ருங்கரை மனோவிகாரத்தை அடைந்தவராகக் கண்டு மீண்டும் மீண்டும் அவருடைய சரீரத்தைத் தழுவிக்கொண்டு (அவரால்) பார்க்கப்படுகின்றவளாகி அப்பொழுது அக்னிஹோத்ரம் செய்யவேண்டுமென்கிற வ்யாஜத்தைச்செய்து மெதுவாகச் சென்றாள். அவள் சென்றவுடன், ரிஸ்யஸ்ருங்கர் மன்மதனால் மதங்கொண்டவரும் புத்தியையிழந்தவருமானார். அவளையே அடைந்தநினைவுடன் ஏகாந்தத்தில் பெருமூச்சுவிட்டுக்கொண்டு துன்பப்படும் உருவமுள்ளவராக இருந்தார். பிறகு, ஒருமுகூர்த்தகாலத்தில் [1] பசுமைநிறமுள்ளவையும் மஞ்சள்நிறமுள்ளவையுமான கண்களுடன் கூடியவரும் நகங்களின் நுனிவரையில் ரோமங்களால் நன்கு சூழப்பட்டவரும் வேதாத்யயனமுள்ளவரும் நல்ல ஒழுக்கத்துடனும் ஸமாதி

---

1 'ஹரிபிங்கலாக்ஷ:' என்பது மூலம்; சிங்கத்தினுடைய பிங்கள வர்ணமுள்ள கண்கள்போன்ற கண்களையுடையவரும்' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

யுடனும் கூடியவரும் காஶ்யபருடைய புத்திரருமான விபாண்டகர் வந்து சேர்ந்தார். அந்த விபாண்டகர், ஆஶ்ரமத்திற்குவந்து, உட்கார்ந்திருப்பவரும் அந்த வேசியையே நினைப்பவரும் தனித்திருப்பவரும் சித்தம் வேறுபட்டவருமான புத்ரரைஅணுகிப் பார்த்தார். அடிக்கடி பெருமூச்சுவிடுகிறவரும் மேல்நோக்குகிற பார்வையுள்ளவரும் தீனமாயிருப்பவருமான புத்திரரைப்பார்த்து, 'ஐயனே! ஏன் ஸமித்துக்கள் கொண்டுவந்து வைக்கவில்லை? உன்னால் இப்பொழுது அக்னிஹோத்ரம் செய்யப்பட்டதா? வாயிற்புறம் சுத்தம் செய்யப்படவில்லை. நல்ல மரங்களை ஒடிப்பதில் எவன் தொடங்கினன்? ஸ்ருக்கும் ஸ்ருவமும் நன்கு அலம்பப்பட்டனவா? இப்பொழுது ஹோமதேனுவானது உன்னால் கன்றுடன் கூடியதாகச்செய்யப்பட்டதா? புத்திரனே! இங்கே யாராவது சுஶ்ரூஷை செய்வதற்காக வந்தானா? விசித்திரமாயும் மிகுதியாயுமிருக்கிற இந்தப்பூமாலை ஏது? புத்திரனே! நீ முன்போல இல்லை. கவலையுற்றவனாகவும் பிரஜ்ஞையை இழந்தவனாகவுமிருக்கிறாய். ஏன் இப்பொழுது நீ மிகவும் எளிமையுற்றவனாகவும் மனவருத்தமுள்ளவனாகவுமிருக்கிறாய்? உன்னை நான் கேட்கிறேன். இந்த ஆஶ்ரமத்தில் இப்பொழுது எவன் வந்தான்?' என்று வினவினர்.

நூற்றுப்பதின்மூன்றாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ரிஶ்யஶ்ருங்கர் வேசியினிடத்தில் ரிஷிகுமாரனென்கிறபிரமத்தினால் அவளுடைய வரவையும் அவளுடைய அங்கங்களின் சேஷ்டைகளாலும் விலாஸங்களாலும் அவளிடத்திலேயே தம்மனம் பற்றியதையும் பிதாவுக்குச் சொல்லியது.)

ரிஶ்யஶ்ருங்கர், 'சடையுள்ளவனும் குட்டையில்லாதவனும் மிக்க உயரமில்லாதவனும் நல்லமனமுள்ளவனும் பொன்னிறமுள்ளவனும் தாமரைமலர்கள்போன்ற நீண்டகண்களுள்ளவனும் தேவர்களுடைய குமாரன்போல விளங்குபவனும் அழகு நிறைந்தவனும் சூரியன்போலப்பிரகாசிப்பவனும் மிக்க அழகிய வாக்குடையவனும் சகோரபக்ஷியினுடைய விழியைக்காட்டிலும் கருமையான விழியுள்ளவனுமான ஒருபிரம்மசாரி இங்கே வந்தான். (அவனுடைய) சடைகள் கருமையானவையும் பளபளப்பானவையும்

நறுமணம்பொருந்தியவையும் பொற்கயிற்றால் கட்டப்பட்டவையும் மிக நீண்டவையுமாயிருக்கின்றன. ஆகாயத்தில் மின்னல்விளங்குவதுபோல அவனுடைய கழுத்தில் பாத்திபோலச் சூழ்ந்த (ஒரு கண்டாபரணம்) விளங்குகிறது. அவனுடைய கழுத்துக்குக் கீழாக ரோமங்களில்லாதவைகளும் மனத்தை நன்கு கவர்கின்றவைகளுமான இரண்டு உருண்டைகள் இருக்கின்றன. அவன் நாபிதேசத்தில் மிக இளைத்த இடையுள்ளவன். அவனுடைய இடையும் மிக மெலிந்திருக்கிறது. அப்படியே, அவனுடைய வஸ்திரத்தின் மத்தியில் என்னுடைய இந்த(முஞ்சக்கயிறுகிய)மேகலைபோலப் பொன்மயமான மேகலை பிரகாசிக்கின்றது. அவனுடைய இருகால்களிலும் ஆச்சர்யமாகப் பார்க்கத்தக்க வேறு விசித்ரமான ஒலியும் விளங்குகிறது. இருகைகளிலும் அதுபோலவே ஒலிக்கின்றவையும் இந்த அக்ஷமாலைபோன்றவையுமான பூஷணவிசேஷங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவன் வேலைசெய்யும்பொழுது அவைகள் தடாகத்தில் மதங்கொண்ட அன்னப்பறவைகள் ஒலிப்பதுபோல ஒலிக்கின்றன. அவனுடையமரவுரிகள் ஆச்சர்யமான தோற்றமுள்ளவைகள். என்னுடைய இவைகள் அவற்றைப்போல அழகுள்ளவைகளல்ல. அவனுடையமுகமும் ஆச்சரியமாகப் பார்க்கத்தக்கது. பேச்சும் மனத்தை மகிழ்விப்பதுபோன்றது. அவனுடைய குரலும் ஆண் குயிலின் குரல்போன்றது. அதனைக்கேட்கின்ற என்னுடைய அந்தராத்மாவானது துன்புறுத்தப்பட்டது. பிதாவே! வைகாசி மாஸத்தின் மத்தியில் காற்றினால்[1] அசைக்கப்பட்ட காடானது எப்படி விளங்குமோ அப்படியே காற்றினால் வீசப்படுகின்ற அவன் மிகச்சிறந்த நறுமணமுள்ளவனாக விளங்குகிறான். சடைகள் பகுத்து நன்கு பின்னப்பட்டிருந்தாலும் நெற்றிப்புறத்தில் இரண்டாகப் பகுக்கப்பட்டு விளங்குகின்றன. அவனுடைய இரண்டு காதுகளும் நல்ல அழகுபொருந்திய பலநிறமான சக்கரவாகப் பறவைகளால் சூழப்பட்டவைகள்போலிருக்கின்றன. அப்படியே, விசித்திரமான உருண்டைவடிவமுள்ள ஒரு பழமானது அவனுடைய வலக்கையினால் அடிக்கப்படுகிறது. அது மீண்டும் மீண்டும் பூமியை அடைந்து அற்புதரூபத்துடன் மேலே எழும்புகிறது. அவன் அதனையும் அடித்துவிட்டுக் காற்றினால் அசைக்கப்பட்டுச் சுழலும் மரம்போலச் சுழன்று வருகிறான். தந்தையே! தேவகுமாரனைப்போன்ற அவனைப் பார்க்கின்ற எனக்கு ஸந்தோ

1 ஒருசொல் விடப்பட்டது.

ஷமும் பற்றுதலும் அதிகமாக உண்டாகிவிட்டன. அவன் என்னுடைய சரீரத்தை அடிக்கடி கட்டிக்கொண்டு சடைகளில் பிடித்து என் முகத்தைச்சாய்த்து முகத்தோடு முகத்தை வைத்துச் சப்தத்தைச் செய்தான். அது எனக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணியது. அவன், பாத்யத்தையும் என்னால் கொண்டுவரப்பட்ட இந்தப் பழங்களையும் சிறந்தனவாகக் கருதவில்லை; என்னைப்பார்த்து, 'நான் இவ்வித விரதமுள்ளவனாக இருக்கிறேன்' என்றும் சொன்னான்; வேறு புதிய பழங்களையும் எனக்குக் கொடுத்தான். எந்தப் பழங்கள் என்னால் உபயோகிக்கப்பட்டனவோ அந்தப் பழங்களுக்கு இந்தப் பழங்கள் ரஸத்தினால் ஒப்பாகா. இந்தப்பழங்களுக்கிருப்பதுபோல அந்தப்பழங்களுக்குத் தோலுமில்லை. இவைகளுக்கிருப்பதுபோல அவைகளுக்குச் சாறுகளுமில்லை. சிறந்த தோற்றமுள்ள வடிவத்தையுடைய அவன், எவற்றைக்குடித்தவுடனே எனக்கு மிக்க களிப்பு உண்டாயிற்றோ, பூமி அசைவதுபோலவுமிருந்ததோ, அந்த மிக்கமதுரமான தீர்த்தங்களையும் எனக்குப் பானம்பண்ணுவதற்காகக் கொடுத்தான். தவத்தினால்விளங்குகின்ற அவன் எவற்றை இவ்விடத்தில் இறைத்துவிட்டுத் தன் ஆஸ்ரமத்தைக்குறித்தே சென்றானோ பலநிறமுள்ளவைகளும் நறுமணம்பொருந்தியவைகளும் பட்டினால்தொடுக்கப்பட்டவைகளுமான அவனுடைய அந்தப் புஷ்பங்கள் இவை. சென்ற அவனால் நான் மனமிழந்தவனாகச் செய்யப்பட்டவனாகிறேன். என் தேகமும் நன்கு எரிக்கப்படுகிறதுபோலிருக்கிறது. நான் அவனருகில் விரைந்துசெல்லவும் அவனும் இங்கே எப்பொழுதும் வந்துகொண்டிருக்கவும் விரும்புகிறேன். ஐயரே! அவனது ஸமீபத்திலேயே செல்லுகிறேன். அவனுடைய அந்தப் பிரம்மசர்யத்தை என்னவென்று சொல்வது! நான் அவனுடன் ஸஞ்சரிக்க விரும்புகிறேன். சிறந்த தர்மமுள்ள அவன் எவ்வண்ணம் தவம்புரிகிறானோ அவ்வண்ணமே தவம்புரிவதற்கு என் உள்ளத்தில் விருப்பமிருக்கிறது. அவனைக் காணாமலிருப்பேனாகில் எனது உள்ளம் துன்பமடைகின்றது' என்று சொன்னார்.

நூற்றுப்பதினன்காவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(வேசி விபாண்டகரில்லாதஸமயத்தில் மறுபடியும் ஆஸ்ரமத்துக்குவந்து ரிஸ்யஸ்ருங்கரை ஓடத்தில் ஏற்றிக்கொண்டு அங்கதேசத்திற்கு வந்தவுடன் பெருமழை பெய்ததும், ரிஸ்யஸ்ருங்கர் லோமபாதனுடைய ப்ரார்த்தனையின்படி சாந்தையை மணந்ததும், லோமபாதன் விபாண்டகரைக் கோபந்தணியச் செய்ததும், ரிஸ்யஸ்ருங்கர் பிதாவின்கட்டளைப் படி புத்திரோத்பத்திவரையில் அங்கே வஸித்துப் பிறகு மனைவியுடன் தம் ஆஸ்ரமம் சென்றதும்.)

விபாண்டகர், 'புத்திர! நிகரற்ற வல்லமையுள்ளவர்களும் அழகுள்ளவர்களுமான இந்தராக்ஷஸர்கள் அத்புதமான காட்சியுள்ள அந்த உருவத்தோடு ஸஞ்சரிக்கின்றார்கள்; எப்பொழுதும் தவத்துக்கு இடையூற்றை நினைக்கின்றார்கள். ஐயா! நல்லவடிவழகுள்ள அவர்கள் பலவித உபாயங்களால் ஆசைகொள்ளச் செய்கிறார்கள். பயங்கரமான உருவமுள்ள அவர்கள் வனங்களில் முனிவர்களை ஸுகத்தினின்றும் உலகத்தினின்றும் தள்ளிவிடுகிறார்கள். மனத்தை அடக்கியவனும் பெரியோர்களுடைய உலகங்களை வேண்டுகிறவனுமான முனிவன் அந்த ராக்ஷஸர்களை எவ்விதத்தாலும் அடையக் கூடாது. தீச்செயலுள்ளவர்களான அவர்கள் ரிஷிகளுக்கு இடையூற்றை உண்டுபண்ணி ஸந்தோஷமடைகின்றார்கள். தவத்திலிருப்பவன் அவர்களைப் பார்க்கக்கூடாது. புத்திர! கீழோர்களால் குடிக்கப்படுகின்றனவும் குடிக்கத்தகாதனவுமான அந்த மதுக்கள் (நம்மால்) குடிக்கத்தக்கவையல்ல. பலவிதமாக விளங்குகிற நறுமணம்பொருந்திய இந்தப் புஷ்பமாலைகளும் முனிவர்களுக்கு (உரியவையென்று) கருதப்படவில்லை. அவர்கள் அரக்கர்கள்' என்று சொல்லிப் புத்திரரைத்தடுத்து அவளைத் தேடினர். அவர் மூன்றுதினங்கள் தேடியும் காணமல் ஆஸ்ரமத்திற்குத் திரும்பிவந்தார். அந்தவிபாண்டகர் விதிப்படி பழங்களைக் கொண்டுவருவதற்காக மறுபடியும் ஆஸ்ரமத்திலிருந்து வெளியிற்சென்ற ஸமயத்தில் அந்த வேசிப்பெண் ரிஸ்யஸ்ருங்கமுனிவரை மறுபடியும் ஆசைப்படும்படி செய்வதற்காகச் சென்றாள். ரிஸ்யஸ்ருங்கர் அவளைப் பார்த்தவுடனே மிக்க மனக்களிப்புள்ளவ

ரும் மயங்கிய உருவமுள்ளவருமாக அப்பொழுது அவளுக்கு எதிரில் ஓடிவந்தார்; 'என்பிதா இங்கே வருமுன்னரே உம்முடைய ஆஸ்ரமத்திற்கு நாமிருவரும் செல்வோம்' என்றும் அவளைப் பார்த்துச் சொன்னார். அரசனே! பிறகு, வேசிகள் விபாண்டகருடைய ஒரே புத்திரரை (ஓடத்தில்) ஏறச்செய்து வேகத்துடன் ஓடத்தை அவிழ்த்துவிட்டு, பலவித உபாயங்களால் ஆசைப்படச்செய்துகொண்டு, அங்கதேசத்தரசனுடைய ஸமீபத்தைவந்தடைந்தார்கள். பிறகு, செலுத்திவரப்பட்டதும் மிக்க வெண்ணிறமுள்ளதுமான அந்த ஓடத்தை அந்த ஆஸ்ரமம் கண்ணுக்குத் தெரியக்கூடிய தூரத்தில் நிறுத்திவிட்டு, அப்படியே கரைதொடங்கி விசித்ரமான வனத்தை [1] நாவ்யாஸ்ரமமென்னும் பெயருள்ளதாகச் செய்தாள். ஒரே பிள்ளையான அந்த விபாண்டகருடைய புத்திரரை அந்தப்புரத்திலிருக்கச் செய்தவுடன், உலகமானது மேகங்களால் மிகப்பொழியப்பட்டு ஜலத்தால் எங்கும் நிறைக்கப்படுகிறதை (அரசன்) பார்த்தான். விருப்பம் நிறைவேறியவனான அந்தரோமபாதன் ரிஸ்யஸ்ருங்கருக்குச் சாந்தை என்கிற (தனது) பெண்ணைக் கொடுத்தான். வருகிற விபாண்டகருடைய கோபந்தணியச் செய்வனவான காளைகளால் உழவையும் ஏராளமான பசுக்களையும் (இடையர்களையும்) வழிகளில் அமைத்தான். வீரர்களான இடையர்களை, 'புத்திரரிடத்தில் பேராவலுள்ள விபாண்டக மஹரிஷியானவர் உங்களைக் கேட்டால் நீங்கள் கைகுவித்துக்கொண்டு அவரை நோக்கி, 'இந்தப் பசுக்களும் உழுதபூமிகளும் உம்முடைய புத்திரருடையவை. மஹரிஷியே! உமக்கு என்னப்ரியத்தைச் செய்யக்கடவோம்? நாங்களனைவரும் உமக்கு அடிமைகள்; உம்முடையவாக்கில் கட்டுப்பட்டவர்கள்' என்று சொல்லவேண்டும்' என்று கட்டளையிட்டான். பிறகு, உக்கிரமான கோபமுள்ள அந்த முனிவர் கிழங்குகளையும் பழங்களையும் எடுத்துக்கொண்டு தம்முடைய ஆஸ்ரமத்திற்கு வந்தார். அந்த இடத்தில் புத்திரரைத்தேடியும் காணவில்லை. அதனால், அவர் மிக்க கோபங்கொண்டார். பிறகு, கோபத்தால் பிளக்கப்படுகின்ற அவர் (அதனை) அரசனுடைய செய்கையென்று ஸந்தேஹித்துப் பட்டணத்தோடும் ராஜ்யத்தோடும் அந்த அங்கராஜனை எரிப்பவராகிச் சம்பாநகரியை நோக்கிச் சென்றார். அந்தவிபாண்டகர் களைப்படைந்தவரும் பசித்தவருமாகி மிக்க செழிப்புள்ள அந்த இடைச்சேரிகளை

1 வேறு பாடம்.

அடைந்தார்; அந்த இடையர்களால் விதிப்படி பூஜிக்கப்படுகிற வராகி அங்கே அந்த இரவு முழுவதும் அரசன்போல வசித்தார். பூஜையைப்பெற்று மிக மகிழ்ந்த விபாண்டகர், 'பசுக்காப்பவர் களே! நீங்கள் யாரைச் சேர்ந்தவரென்று பிரஸித்தி பெற்றவர் கள்?' என்று வினவினர். அதன் பிறகு, அவர்கள் எல்லோரும் (முனிவரின்) எதிரில் நெருங்கிவந்து, 'இது உமதுபுத்திரருடைய தனமாகச் செய்யப்பட்டது' என்று சொன்னார்கள். இடங்கள் தோறும் பூஜிக்கப்படுகின்ற அவர், மதுரமான அந்த வசனங்களைக் கேட்கிறவரும் பெரும்பாலும் கோபந்தணிந்தவரும் மிக மகிழ்ந்த வருமாகி, நகரத்திலிருக்கின்ற அங்கதேசாதிபதியை அடைந்தார். புருஷஸ்ரேஷ்டனை அவனால் பூஜிக்கப்பட்ட அவர், ஸ்வர்க்கத்தில் தேவேந்திரன்போலிருக்கும் புத்திரரைக் கண்டார்; அங்கே ஆகா யத்தில் ஸஞ்சரிக்கிற மின்னல்போன்ற சாந்தை என்கிற மருமகளை யும் கண்டார். தம் புத்திரருடைய கிராமங்களையும் இடைச்சேரி களையும் சாந்தையையும் பார்த்து அவருடைய அதிகமான அந்தக் கோபம் தணிந்தது. அரசே! விபாண்டகர் அந்த அரசனுக்கு அதிகமான அனுக்கிரஹத்தையே செய்தார். ஸூர்யனுக்கும் அக்கினிக்கும் ஒப்பான மகிமையுள்ள அந்த மகரிஷியானவர் அந் தப்பட்டணத்தில் புத்திரரை இருக்கச்செய்து, 'இந்த அரச னுக்குப் பிரியமான எல்லாவற்றையும் செய்துவிட்டு, ஒரு புத்தி ரன் பிறந்தவுடன், வனத்தைக் குறித்தே வந்து சேருவாயாக' என்று சொன்னர். அந்த ரிஸ்யஸ்ருங்கர் அவருடைய வசனத் தை அப்படியே செய்து தம்முடைய பிதாவான அவரிருந்தவிடம் சென்றார். வேந்தனே! ஆகாயத்தில் ரோகிணியானவள் சந் திரனையும், மிக்க பாக்யசாலியான அருந்ததி வஸிஷ்டரையும், லோபாமுத்திரை அகஸ்தியரையும் உபசரித்ததுபோலச் சாந்தை யும் இவரை அநுகூலையாகி உபசரித்தாள். அஜமீடவம்சத்த வனே! பாண்டுபுத்ர! நரேந்திர! நளனுக்குத் தமயந்தியும் இந்திர னுக்கு இந்திராணியும் முத்கலருக்கு நளாயனியான இந்திரஸேனை யும் மஹாத்மாவான தசரதகுமாரருக்கு ஸீதையும் எப்படி வசப் பட்டிருந்தார்களோ, உனக்கு த்ரௌபதி எப்படி வஸ்யமாயிருக்கி றாளோ அப்படியே வனத்திலிருக்கிற ரிஸ்யஸ்ருங்கருக்குச் சாந் தையானவள் ப்ரீதியுடன் வஸ்யமாயிருந்து பணிவிடை செய்தாள். அரசனே! மஹாஹ்ரதத்தை விளக்கச்செய்கின்றதும் நல்ல புகழுள் ளதுமான புண்யமென்னும் அவருடைய ஆஸ்ரமமானது இதோ

பிரகாசிக்கின்றது. நீ ஸ்நானம் செய்து இதில் செய்யவேண்டிய காரியங்களைச் செய்தவனும் பரிசுத்தனுமாகி மற்றத் தீர்த்தங்களைக் குறித்துச் செல்வாயாக' என்று கூறினார்.

நூற்றுப்பதினைந்தாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் கங்காஸாகரஸங்கமம் முதலிய தீர்த்தங்களுக்குச் சென்றதும், லோமசர் அந்தஅந்தத் தீர்த்தங்கள் ஆஸ்ரமங்கள் இவற்றின் மஹிமையைச் சொல்லியதும்.)

ஜனமேஜயரே! பாண்டவர் அந்தக்கௌசிகீநதியினின்று புறப்பட்டுப் பின்பு வரிசையாக எல்லா ஆயதனங்களையும் அடைந்தார். அரசரே! அவர் கங்கை வந்து கலக்குமிடத்தில் ஸமுத்திரத்தை அடைந்து ஐந்நூறு நதிகளின் மத்தியில் ஸ்நானம்செய்தார். பாரதரே! பிறகு, வீரரான அரசர் ஸகோதரர்களுடன் சேர்ந்து கடற்கரையோடு கலிங்கதேசங்களைக்குறித்துச் சென்றார். லோமசர், 'குந்தீநந்தன! எங்கே வைதரணீநதி ஓடுகிறதோ, எங்கே தர்மதேவரும் தேவர்களைச் சரணமடைந்து யாகம் செய்தாரோ அந்தக் கலிங்கதேசங்கள் இவை. ரிஷிகளால் நன்றாக உபயோகிக்கப்பட்டதும் யாகம்செய்தற்குத் தகுந்ததும் மலைகளால் விளங்குகிறதும் எப்பொழுதும் பிராம்மணர்களால் அடையப்பட்டதுமான இதுவன்றோ(வைதரணியின்)வடகரை? ஸமமான தேவயான மார்க்கத்தினால் ஸ்வர்க்கத்தை அடையவிரும்பிய மற்ற ரிஷிகளும் இந்த இடத்தில் முற்காலத்தில் யாகங்களால் (தேவர்களை) ஆராதித்தார்கள். ராஜஸ்ரேஷ்டனே! இந்த இடத்திலேயே ருத்ரர் யாகத்தில் பசுவைக் கைப்பற்றினார். ராஜேந்திரனே! பசுவை எடுத்துக்கொண்டு, 'இது (என்) பாகம்' என்றும் சொன்னார். பரதர்களுள் சிறந்தவனே! அப்பொழுது, யாகபசுவானது அபஹரிக்கப்பட்டவுடன், தேவர்கள் அந்தருத்திரரைப் பார்த்து, 'பிறருடைய [1] பொருளை நீர் துரோகம் செய்ய வேண்டாம். தர்மமார்க்கத்தினின்று தவறிப்போகாதீர். ஜகதீஸ்வர! பகவானான நீர் ஸ்வயமே யஜ்ஞேஸ்வரராகவும் கர்மங்களுக்

---

[1] 'பிறருடைய பாகத்தைக் கெடுக்கவேண்டாமென்பது கருத்து' என்பது பழைய வுரை.

குப் பலன்களைக் கொடுப்பவராகவுமிருந்தும் யஜ்ஞத்தை அழிக்கத் தக்கவரல்லீர்' என்று சொல்லினர். அவர்கள் இவ்விதம் மங்கள ரூபமான வாக்குக்களால் ருத்திரரைத் துதித்தார்கள்; அப்பொழுது, அவரை இஷ்டியினாலும் திருப்தியடையச்செய்து பூஜித்தார்கள். பிறகு, அவர் பசுவை விட்டுவிட்டுத் தேவயானத்தால் சென்றார். யுதிஷ்டிர! இந்த விஷயத்தில், 'தேவர்கள் ருத்ரரிடத்தில் பயத்தினால் புதிதும் எல்லாப்பாகங்களையும்விடச் சிறந்ததும் சாஃவதமுமான பாகத்தை ருத்திரருக்கு ஏற்படுத்தினார்கள்' என்னும்[1] பரம்பரையாக வழங்கும் ருத்ரருடைய கதையாகிய இதனைச் சொல்லுகிற என்னிடமிருந்து தெரிந்துகொள். இங்கே எந்த மனிதன் இந்தக் காதையைப் பாடிக்கொண்டு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறானோ அவனுக்குத் தேவயானமார்க்கமும் கண்ணுக்குள திரில் தெரிகிறது' என்று சொன்னார். பிறகு, மஹா பாக்யசாலிகளான பாண்டவர்களனைவரும் அவ்வாறே திரௌபதியும் வைதரணியில் இறங்கிப் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தார்கள். யுதிஷ்டிரர், 'லோமசரே! இங்கே இந்தவைதரணி நதியில் விதிப்படிஸ்நானம்செய்து தபோபலத்தினால் மனிதர்க்குரிய இயற்கையினின்று விலகினவனாக இருக்கிறேன்; பாரும். நல்லவிரதமுள்ளவரே! உம்முடைய அருளால் எல்லாஉலகங்களையும் காண்கிறேன். மந்திரங்களை ஜபிக்கிறவர்களும் மஹாத்மாக்களுமான வைகானஸர்களுடையஒலி இது' என்று சொன்னார். லோமசர், 'யுதிஷ்டிரனே! எந்த இடத்தில் (இருந்து வருகிற) இந்தத்வனியைக் கேட்கிறாயோ அந்தஇடம் மூன்றுலக்ஷம் யோஜனைதூரத்தில் உள்ளது. அரசனே![2] பேசாமலிரு. எந்த இடத்தில் பிரதாபமுள்ளவரான பிரம்மதேவர் யாகம் செய்தாரோ பிரம்மதேவருடைய அப்படிப்பட்ட திவ்யமான இந்தவனம் விளங்குகிறது. அந்தயஜ்ஞத்தில் பிரம்மதேவரால் மலைகளோடும் வனப்ரதேசங்களோடும்கூடினபூமியானது மஹாத்மாவானகஸ்யபருக்குத் தக்ஷிணைக்காகக் கொடுக்கப்பட்டது. குந்தீநந்தன! அப்பொழுது, பூமியானவள், கொடுக்கப்பட்டவுடனே, மனவருத்தத்தையுமடைந்தாள்; கோபம்கொண்டவளாகி உலகங்களுக்கு ஈஃவரரும் பிரபுவுமான அவரைப்பார்த்து, 'பகவானே! எந்தமனிதனுக்கும் என்னை

---

1 'அநுவம்சம் என்பது மூலம்.

2 அங்குள்ள ஒலி இங்குக் கேட்பதுபோல அவர் பேச்சொலியும் அங்குக் கேட்டு அவர்களின் தவம் தடைப்படுமென்றபடி.

நீர்கொடுப்பது தகாது. உம்முடைய இந்தத்தானம் பயனற்றது. இதோ பாதாளத்தை அடைகிறேன்' என்கிறஇதனைக் கூறினாள். பிரஜைகளுக்கு நாதனே! பிறகு, விசனப்படுகிற அந்தப் பூமியைப் பார்த்து, பகவானான கச்யபரிஷியானவர், அதிலிருந்து அவளை மகிழச்செய்தார். பாண்டுநந்தன! பிறகு, பூமியானவள் அவருடைய தவத்தினால் மகிழ்ந்து மீண்டும் ஜலத்தினின்று எழுந்திருந்து வேதி (=மேடை) வடிவமாக இருந்து விளங்கினாள். அப்படிப்பட்ட இவள், வேதியின் வடிவத்தை லக்ஷணமாகக் கொண்டவளாகப் பிரகாசிக்கின்றாள். இந்த வேதியின் மீது ஏறினால் நீ வீர்யவானுவாய். அரசனே! அப்படிப்பட்ட [1] இந்த வேதி (உன்னால்) ஸமுத்திரத்தை அடைந்து அடையப்பட்டது. நீ ஒருவனாக இதன்மீதேறி ஸாகரத்தைத் தாண்டுவாயாக. உனக்கு மங்களம். நீ இப்பொழுது இந்தவேதியில் ஏறத்தக்கபடி உனக்கு நான் மங்களாசீர்வசனத்தைப் பிரயோகிப்பேன். அஜமீடவம்சத்திலுதித்தவனே! இந்தவேதியானது மனிதனாலே தொடப்பட்டால் அந்தஇடத்தினின்று ஸமுத்திரத்தில் முழுகிவிடுகின்றது. பாண்டவ! 'ஓம், உலகங்களை (ப்ரளயத்தில் உன்னிடம் மறைத்து) ரக்ஷிப்பவனும் உலகங்களைக்காட்டிலும் சிறந்தவனுமான உனக்கு வந்தனம். தேவேச! உப்புநீருள்ளகடலில் ஸாந்நித்தியம் செய்வாயாக. அக்னியும் ஸூர்யனும் ஜலஸ்வரூபியான உனக்குக் காரணம். பிரகாசிப்பவரும் எங்கும் வியாபித்திருப்பவருமான [2] 'பரமாத்மாவினுடைய சரீராகாரபரிணமத்திற்கு நீ அபிவ்யக்திஸ்தானமாக இருக்கிறாய். நீ அம்ருதத்திற்கு இருப்பிடமாகவுமிருக்கிறாய்' என்னும் பொருளுள்ள ஸத்யவாக்கியத்தை இவ்விதம்சொல்லிக்கொண்டு நீ இந்தவேதியின்மீது விரைவாகஏறு. பாண்டவ! 'உனக்கு அக்னி காரணம்; யஜ்ஞம் சரீரம்; விஷ்ணுவின்ஜீவன் உன்னிடத்தில் சேர்ப்பிக்கப்படுகிறது. நீ மோக்ஷத்திற்கு ஸாதனம்' என்னும் பொருளுள்ள ஸத்யவாக்கியத்தை இவ்விதம் ஜபித்துக்கொண்டு அங்கிருந்து நதிகளுக்குப்பதியான ஸமுத்திரத்தில் ஸ்நானம் செய்வாயாக. குருச்ரேஷ்டனே! குந்தீபுத்ர! தேவனுக்குஸ்தானமானதும் தீர்த்தங்களுக்குப் பதியுமான மஹோததியானது வேறுவிதமாகத் தர்ப்பத்தின் நுனியி

1 'இந்தவேதி ஸமுத்ரம்வரையில் செல்வது' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு. 2 பகவத்ஸ்வரூபம் வெளிப்பட்டுவிளங்கக் காரணமாயிருக்கிறுயென்பது.

ஞல்கூடத் தொடத்தக்கதன்று' என்று கூறினர். பிறகு, மகாத்மாவான யுதிஷ்டிரர் ஸ்வஸ்தியயனம் செய்யப்பட்டு ஸமுத்திரத்தை அடைந்தார்; இந்த லோமசருடைய அந்தக்கட்டளையனைத்தையும் செய்துவிட்டு மஹேந்திரமலையை அடைந்து அவ்விடத்தில் ஓர் இரவு வஸித்தார்.

நூற்றுப்பதினாறுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(அக்ருதவ்ரணர் பரசுராமருடைய சரித்திரத்தை யுதிஷ்டிரருக்குச் சொல்லத்தொடங்கியதும், ரிசீகர் தேவலோகத்துக் குதிரைகள் ஆயிரத்தைப் பரிசமாகக்கொடுத்துக் காதியின்மகளை மணந்ததும், காதியின்புத்ரியானஸத்யவதி பிருகுவின்அருளால் ஜமதக்னியைப்பெற்றதும்.)

அந்த அரசர், அங்கே அந்த ஓர் இரவு வசித்து, தம்பிமார்களுடன் தவசிகளுக்குச் சிறந்த பூஜையைச் செய்தார். பிறகு, லோமசர், பிருகுக்களும் அங்கிரஸர்களும் வஸிஷ்டர்களும் காச்யபர்களுமாகிய அந்தத் தவசிகளனைவரையும் அங்கே அவருக்குச்சொன்னர். ராஜரிஷியாகிய அந்த யுதிஷ்டிரர் அவர்களை அடைந்து நமஸ்கரித்துக் கைகுவித்துக்கொண்டு, பரசுராமருடன் கூடவே ஸஞ்சரிப்பவரும் வீரருமான அக்ருதவ்ரணரைப் பார்த்து, 'பகவானும் தவசியுமான ராமர் எப்பொழுது காட்சி தருவார்? தவத்துடன் கூடின அந்தப்பார்க்கவரை நான் பார்க்கவிரும்புகிறேன்' என்று வினவ, அக்ருதவ்ரணர், 'ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவரான ராமரால் நீ வரும்பொழுதே அறியப்பட்டாய். உன்னிடத்தில் ராமருக்கு ப்ரீதியும் இருக்கிறது. சீக்கிரம் உனக்குக் காட்சி தருவார். சதுர்த்தசியிலும் அஷ்டமியிலும் தவசிகள் ராமரைப் பார்க்கிறார்கள். இந்தராத்ரி சென்றபிறகு நாளைச் சதுர்த்தசி வரப்போகிறது. அப்பொழுது கிருஷ்ணாஜினத்தையும் ஜடைகளையும் தரித்த ராமரைப் பார்ப்பாய்' என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், 'தேவரீர் மகாபலசாலியும் ஜமதக்னியின் குமாரருமான ராமரைத்தொடர்ந்து செல்லுகிறவர். தேவரீர் முன் நடந்த (அவருடைய) எல்லாச்செய்கைகளையும் நேராகக்கண்டவர். எல்லா க்ஷத்திரியர்களும் யுத்தத்தில் ராமரால் யாதுகார

ணம்பற்றி எவ்வாறு ஜயிக்கப்பட்டார்கள்? அதனைத் தேவரீர் இப்பொழுது சொல்வீராக' என்று வினவ, அக்ருதவ்ரணர், 'அரசப்புலியே! பாரத! ஆச்சரியம். பிருகுக்களுடைய வம்சத்தில் அவதரித்தவரும் ஜமதக்நி புத்ரருமான ராமருடைய உத்தமமான பெரிய தேவசரித்ரம்போன்ற கதையையும் ஹேஹய தேசாதிபதியாகிய கார்த்தவீர்யார்ஜுனனுடையகதையையும் உனக்குச் சொல்வேன். பாண்டவ! ராமரால் ஹேஹயதேசாதிபதியாகிய அர்ஜுனனென்பவன் கொல்லப்பட்டான். அவனுக்கு ஆயிரம் கைகள் இருந்தன. பூமிக்கு நாதனே! தத்தாத்ரேயருடைய அருளால் (அவனுக்கு) ஸ்வர்ண விமானமும் அப்படியே பூமியில் எல்லா ப்ராணிகளுக்கும் தலைமையும் இருந்தன. மஹாத்மாவான அந்த அர்ஜுனனுடையதேரானது (எங்கும்) தடையற்ற ஸஞ்சாரமுள்ளதாக இருந்தது. வரத்தையடைந்ததால் மஹாபலசாலியான அவன் எப்பொழுதும் அந்தத்தேரினால் தேவர்களையும் இயக்கர்களையும் ரிஷிகளையும் எல்லாப்பக்கங்களிலும் துன்பம் செய்தான். அவன் எல்லா இடங்களிலும் எல்லாப்பிராணிகளையும் துன்பப்படுத்தினான். பிறகு, தேவர்களும் மஹாவிரதமுள்ள ரிஷிகளும் ஒன்றுசேர்ந்து தேவர்களுக்குத்தேவரும் தேவசத்ருக்களைக் கொல்பவரும் ஸத்யமான பராக்கிரமமுள்ளவருமான விஷ்ணுவை அடைந்து, 'பகவானே! பிரபுவே! பிராணிகளைக்காப்பாற்றுவதற்காக அர்ஜுனனை வதம்செய்வீராக. பிரபுவான ஹேஹயதேசாதிபதியானவன், திவ்விய விமானத்தால் இந்திராணியைத் துணைக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கிற இந்திரனை அவமதித்தான்' என்று சொன்னார்கள். பாரத! பிறகு, தேவரான பகவான் அப்பொழுது கார்த்தவீர்யனை அழிப்பதற்காக இந்திரனுடன் சேர்ந்து ஆலோசித்தார். உலகங்களால் பூஜிக்கப்பட்ட பகவான், பிராணிகளுக்கு ஹிதமான எந்த எந்தக் கார்யங்கள் தேவராஜனால் தெரிவிக்கப்பட்டனவோ அவை அனைத்தையும் (செய்வதாக) உறுதி கூறி, அழகிய பதரீவனத்திலிருக்கிற தம்முடைய ஆஶ்ரமமண்டலத்தையே அடைந்தார். இதே ஸமயத்தில் பூமியில் பூமிக்கு அதிபதியும் மிக்க பலமுள்ளவனும் காதி என்று உலகத்தில் பிரஸித்திபெற்றவனும் மஹானுமான ஓர் அரசன் கான்யகுப்ஜத்தில் இருந்தான். அவன் வனவாஸத்தை அடைந்தான். காட்டில் வஸிக்கிற அவனுக்கு அப்ஸரஸுக்கொப்பான ஒருபெண் பிறந்தாள். பாரத! ப்ருகுவினுடைய புத்திரரான ரிசீகர் அந்தப்பெண்ணை (மனைவியாக) வரித்

தார். பிறகு, காதியானவன் கடுமையான விரதமுள்ள அந்தப்பிராம் மணரைப்பார்த்து, 'நம்முடைய குலத்தில் முன்னோர்களால் எது அனுஷ்டிக்கப்பட்டதோ அது நமக்கு உசிதம். பிராம்மணோத்த மரே! ஒரு பக்கத்தில் கருமையான காதுள்ளவைகளும் வெண்மை யானவைகளும் வேகமுள்ளவைகளுமான ஆயிரம் குதிரைகளைக் கன்னியாசுல்கமென்று அறிவீராக. பார்க்கவரே! (கன்யாசுல்கம்) கொடுக்கவேண்டுமென்று பகவானுன உம்மை நான் சொல்ல லாகாது. உம்மைப்போன்ற மஹாத்மாவுக்கே என் பெண் கொடுக் கப்படத்தக்கவள்' என்று சொன்னான். ரிசீகர், 'ஒரு பக்கம் கருமை யான காதுள்ளவைகளும் வெண்மையானவைகளும் வேகமுள்ள வைகளுமான ஆயிரம் குதிரைகளை உனக்கு நான் கொடுப்பேன். உன்னுடைய பெண் எனக்குப் பார்யையாகட்டும்' என்று சொன் னார். காதியானவன், 'எனக்கு ஆயிரம் குதிரைகளைக் கொடுப்பீரா கில் என்னுடைய புத்திரி உமக்குப் பார்யையாகக்கடவள்' என்று சொன்னான். அரசனே! அவர், 'அப்படியே' என்று உறுதி கூறி, வருணனை நோக்கி, 'ஒருபக்கத்தில் கருமையான காதுள்ளவைக ளும் வெண்ணிறமுள்ளவைகளும் வேகமுள்ளவைகளுமான ஓர் ஆயி ரம் குதிரைகளைக் கன்யாசுல்கத்தின்பொருட்டுக் கொடுக்கக் கட வாய்' என்று சொன்னார். அப்பொழுது வருணன் அவருக்கு ஆயி ரங்குதிரைகளைக் கொடுத்தான். (கங்கையில்) எந்த இடத்தில் அந்தக்குதிரைகள் கிளம்பி வந்தனவோ அந்த இடம் அச்வதீர்த்த மென்று பிரஸித்தியடைந்தது. பிறகு, காதியானவன் ஸத்யவதி என்கிற தன்மகளைக் கான்யகுப்ஜத்தில் அந்த ரிசீகருக்குக் கொடுத் தான். அப்பொழுது, தேவர்கள் வரனுடைய பக்ஷத்தைச் சேர்ந்த வர்களானார்கள். அவர்கள், ஆயிரம் குதிரைகளும் அந்தப் பெண் ணும் அடையப்பட்டதைப் பார்த்து மிக்க வியப்பை அடைந்தார் கள்; ரிசீகரை [1] ஆகாயத்தில் நன்கு துதித்தார்கள். பிராம்ம ணோத்தமரான அவர் அந்த ஸத்யவதியைத் தர்மப்படி மனைவி யாக அடைந்து அழகிய இடையுள்ள அவளுடன் இஷ்டப்படி ஸுகமாக மகிழ்ந்தார். வேந்தனே! விவாஹம் செய்யப்பட்ட பிறகு, மனைவியுடனிருக்கும் அந்தப்புத்திரரை (பார்க்கவர்களுக் குத்) தலைவரான ப்ருகுவானவர் பார்க்க விரும்பி வந்தார்; புத்தி ரரைப்பார்த்து ஸந்தோஷத்தையும் அடைந்தார். தேவகணங்க ளால் அர்ச்சிக்கப்பட்டவரும் வீற்றிருக்கிறவருமான அந்தப்ப்ரு

1 'ஏவ' என்பது விடப்பட்டது.

குவை (அந்தத்) தம்பதிகள் அப்பொழுது அர்ச்சித்துப் பணிசெய்கின்றவர்களாகிக் கைகூப்பிநின்ருர்கள். பிறகு, பகவானுன அந்தப்பிருகுவானவர், மிகமகிழ்ந்து மருமகளைப்பார்த்து, 'ஸௌபாக்யவதியே! வரத்தைக்கேள். நீ விரும்பியதைக் கொடுப்பவனுக இருக்கிறேன்' என்று சொன்ஞர். அவள் தனக்கும் தன் தாய்க்கும் புத்திரர் உண்டாவதற்காகக் குருவான அவரை அருளுள்ளவராகச் செய்தாள். அவரும் அனுக்ரகத்தைச் செய்தார். ப்ருகு, 'நீயும் உன்தாயும் ருதுஸ்நானம் செய்தபின் புத்திரரைப் பெறுவதற்காக அவள் அரசமரத்தையும் நீ அத்திமரத்தையும் தனித்தனி கட்டிக்கொள்ளுங்கள். கல்யாணீ! உனக்கும் உன் தாய்க்குமாகவே விராட்புருஷனை மீண்டும் மீண்டும் தியானித்து என்னுல் முயற்சியுடன் ஸித்தம் செய்யப்பட்ட இந்த இரண்டு சருக்களும் ஶ்ரத்தையுடன் சாப்பிடவேண்டியவை' என்று அவ்விருவரையும் சொல்லிவிட்டு மறைதலை அடைந்தார். அவ்விருவரும் ஆலிங்கனத்திலும் சருவிலும் மாறுதலைச் செய்தார்கள். பிறகு, பல நாட்கள் சென்றபின் பகவானுன [1] அந்தப்ருகுவானவர் திவ்ய ஞானத்தாலறிந்து மறுபடியும் வந்தார். பிறகு, மஹாதேஜஸ்வியான ப்ருகுவானவர் மருமகளான ஸத்தியவதியைப் பார்த்து, 'கல்யாணி! அழகிய புருவங்களுள்ளவளே! உன்தாயால் சருவானது மாறுதலாக உபயோகிக்கப்பட்டது. மரத்தில் ஆலிங்கனமும் மாறுதலாகச் செய்யப்பட்டது. நீயும் வஞ்சிக்கப்பட்டாய். க்ஷத்திரியனுடைய செய்கையுள்ள பிராம்மணன் உனக்குப் புத்திரனுவான். பிராம்மணர்களின் ஆசாரமுள்ளவனும் மஹானும் மிக்க வீர்யமுள்ளவனும் ஸாதுக்களின் வழியிலிருப்பவனுமான க்ஷத்திரியன் உன் தாய்க்குப் புதல்வனுவான்' என்று சொன்ஞர். பிறகு, அவள், 'எனக்குப் புத்ரன் இவ்விதம் உண்டாகவேண்டாம்; புத்ரனுக்குப் புத்ரன் இஷ்டப்படி உண்டாகட்டும்' என்று மாமனுரைத் திரும்பத் திரும்ப (வேண்டி) அருள்வரச் செய்தாள். பாண்டவ! 'இப்படியே ஆகக்கடவது' என்று அவரால் அநுக்ரகிக்கப்பட்ட அவள் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு ஜாக்கிரதையுடன் கர்ப்பத்தைத் தரித்தாள். பிறகு, அவள், பிரஸவகாலம் வந்தவுடன், தேஜஸோடும் வர்ச்சஸோடும் கூடியவரும் பிருகுபுத்திரரான ரிசீகரை மகிழ்விப்பவருமான ஜமதக்னி என்கிற புதல்

[1] இரட்டித்தலால் 'புந:' 'பகவாந்' என்னும் இரண்டு சொற்கள் விடப்பட்டன.

வரை ஈன்ருள். பாண்டு நந்தன! தேஜஸ்வியாக வளர்கின்ற அவர் வேதாத்தியயனத்திஞலும் மஹாதேஜஸ்வியாகிப் பலரிஷிகளை மீறி இருந்தார். பரதஸ்ரேஷ்ட! சூரியனுக்குச்சமமானவர்ச்சஸுள்ள அவருக்குத் தனுர்வேதம் முழுமையும் [1] நான்கு விதமான அஸ்திரங்களும் (தாமே) விளங்கின.

நூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ஜமதக்நி ரேணுகையினிடத்தில் மானஸிகமான கற்பழிவைக்கண்டு ராமரையேவ, அவர் கோடாலியினுல் அவள்கழுத்தை வெட்டியதும், ஜமதக்னிமுனிவர் புத்ரரான ராமருடையபிரார்த்தனையினுல் ரேணுகையைப் பிழைப்பித்ததும், கார்த்தவீர்யன் ராமர்இல்லாதபொழுது ஆஶ்ரமத்துக்குவந்து ஜமதக்னியினுடையபசுவையும் கன்றையும் திருடி ஆஶ்ரமத்தை அழித்ததும், ராமர் வந்து கார்த்தவீர்யனைக் கொன்றதும், அவனுடையகுமாரர்கள் ராமரில்லாதபொழுது ஜமதக்னி முனிவரைக் கொன்றதும்.)

வேதாத்யயனத்தில் பொருந்தியவரும் மஹாதபஸ்வியுமான அந்தஜமதக்னியானவர் தவம்புரிந்தார்; பிறகு, நியமத்தால் தேவர்களைத் தம்வசமாக்கிஞர். அரசே! அவர் ப்ரஸேனஜித்என்கிற அரசனை அணுகி ரேணுகையை வரித்தார். அந்தஅரசனும் அவருக்கு (ரேணுகையைக்) கொடுத்தான். பிறகு, ரிசீகருடைய புதல்வரான அவர் ரேணுகையை மனைவியாகப்பெற்று அனுகூலையான அவளுடன் ஆஶ்ரமத்திலிருந்துகொண்டு தவம்புரிந்தார். அவளுக்கு ராமரை ஐந்தாமவராகவுடைய நான்குபிள்ளைகள் பிறந்தார்கள். கடைசியில் பிறந்தவரான ராமரே எல்லாரிலும்முதன்மையாயிருந்தார். பிறகு, ஒருஸமயம் எல்லாப்புத்ரர்களும் பழங்களைக் கொண்டுவரச் சென்றபின் நியமமான விரதமுள்ள ரேணுகையானவள் ஸ்நானம்செய்வதற்காகச் சென்ருள். அரசனே! வந்துகொண்டிருக்கிற அந்தரேணுகையானவள் சித்திரரதன்என்கிற

---

1 துரோணபர்வம் 26-ம் பக்கம் பார்க்க.

மார்த்திகாவதகதேசத்தரசனைத் தற்செயலாகக் கண்டாள். ரேணுகை, பார்யையுடனிருப்பவனும் தாமரைமலர்மாலை அணிந்தவனும் செல்வப்பெருக்குள்ளவனும் ஜலத்தில் விளையாடுபவனுமான (அவனைக்)கண்டு, பிறகு, அவனிடத்தில் ஆசைகொண்டாள். அவள் அந்தக்கற்பழிவினால் தண்ணீரிலேயே [1] மனவேறுபாட்டையடைந்தவளாகவும் அறிவையிழந்தவளாகவும் [2] அச்சமுற்றவளாகவும் ஆஶ்ரமத்தில் நுழைந்தாள். பர்த்தாவானஜமதக்னி அவள் (கற்பழிந்ததை) அறிந்துகொண்டார். அதிகதேஜஸுள்ளவரும் வீர்யமுள்ளவருமான அவர் அவள் தைர்யத்தினின்றுநழுவினதையும் பிரம்மதேஜஸினால்விடப்பட்டதையுங்கண்டு, 'சீ' என்னும்சொல்லால் நிந்தித்தார். பிறகு, ஜமதக்னியின் மூத்தகுமாரனான ருமண்வானென்பவனும், ஸுஷேணனும், வஸுவும், அப்படியே விஶ்வாவஸுவும் வந்தார்கள். பகவானான அவர் மூத்தவர் வரிசையாக அவர்களைத் தாயாரைக்கொல்வதில் ஏவினார். அவர்கள் மதிமயக்கமுற்றவர்களும் மனமிழந்தவர்களுமாகி ஒன்றும் சொல்லவில்லை. பிறகு,அவர் கோபத்தால் அவர்களைச் சபித்தார். அவர்கள் சபிக்கப்பட்டுப் புத்தியை இழந்தார்கள்; விரைவாக மிருகங்களையும் பக்ஷிகளையும் ஒத்தசெய்கையுள்ளவர்களும் (மரங்கொடி முதலிய அறிவற்ற) ஜடப்பொருளை ஒத்தவர்களும் ஆனார்கள். அதன்பிறகு, பகைவீரர்களைக்கொல்பவரானராமர் ஆஶ்ரமத்திற்கு வந்தார். மிக்ககோபமுள்ளவரும் மிக்கதவமுள்ளவருமான ஜமதக்னியானவர் அந்தராமரைப்பார்த்து, 'புத்திர! பாவியான இந்தஉன்தாயைக்கொல்வாயாக.நீ மனவருத்தமும்படாதே' என்றுசொன்னார். உடனே, ராமர் கோடாலியைஎடுத்துத் தாயின் தலையை வாங்கிவிட்டார். மகாராஜனே! பிறகு, மகாத்மாவான அந்த ஜமதக்னியின் கோபமானது உடனே போய்விட்டது. அவர் ப்ரஸன்னருமாகி, 'அப்பா! என்னுடைய கட்டளையால் செய்தற்கரிய இந்தக்கார்யம் உன்னால் செய்யப்பட்டது. தர்மங்களை அறிந்தவனே! மனத்தினால் விரும்புகிற விருப்பமுழுமையையும் கேள்' என்னும்இதனைச் சொன்னார். பாரத! அந்த ராமர் மீண்டும் தாயார் (உயிருடன்) எழுந்திருப்பதையும், தாம் வதம் செய்ததைத் தாயார் நினையாமலிருப்பதையும், அந்த (த்தாய்க்கொலையா

---

1 'க்லிந்நா'என்பது மூலம். இதற்குப் பழையவுரை வேறுபொருள் கூறுகிறது.

2 பொருந்தாமையால் அதிகபாடமான ஒருஶ்லோகம் விடப்பட்டது.

னுண்டான) 1 பாவத்தால் (தாம்) பற்றப்படாமல் இருப்பதையும், அப்படியே தமையன்மார்களுக்கு இயற்கையான நிலைமையையும், தாம் யுத்தத்தில் நிகரில்லாமலிருப்பதையும், நீண்ட ஆயுளையும் வரமாகக்கேட்டார். மஹாதபஸ்வியான ஜமதக்னியானவர் அந்த எல்லாஇஷ்டங்களையும் கொடுத்தார். பிரபுவே! ஒருஸமயம், அவருடைய எல்லாப்புத்திரர்களும் வெளியில்போயிருந்தார்கள். பிறகு, அனூபதேசாதிபதியும் வீரனுமான கார்த்தவீர்யன் (ஆஸ்ர மத்திற்கு) வந்தான். ஆஸ்ரமஸ்தானத்தை அடைந்த அவனை ரிஷி யானவர் பூஜைக்குரிய பொருளால் நன்குபூஜித்தார். அவன் யுத்தத் திலுள்ள மதத்தால் கொழுத்தவனாகி அவ்வாறான பூஜையில் மகிழ வில்லை. அந்தஆஸ்ரமத்திலிருந்து, ஹோமபசுவானது அலறும் பொழுதே,கன்றைப் பலாத்காரமாகஅடித்துக் கொண்டுபோனான்; பெரியமரங்களையும் ஒடித்தான். ராமர்வந்தவுடன்,பிதா தாமாகவே அதனைச் சொன்னார். பசு மிகஅலறுவதைப் பார்த்தும் ராமருக் குக் கோபம் மூண்டுவிட்டது. அவர் கோபத்திற்குவசப்பட்டவ ராகிக் கார்த்தவீரியனைத் தொடர்ந்தோடினார். அரசனே! பிறகு, பகைவீரர்களைக்கொல்லுகிறவரான பார்க்கவராமர் போரில்அழகிய வில்லைப்பிடித்து (அவனை)மிஞ்சிப் பரிகாயுதம்போன்ற அவனு டைய ஆயிரமாக எண்ணப்பட்டகைகளைக் கூர்மையான பல்லங்க ளால் அறுத்தார். ராமரால்வெல்லப்பட்ட கார்த்தவீர்யன் கால கதியை அடைந்தான். பிறகு, அர்ஜுனனுடைய புத்திரர்கள் ராம ரால்கோபம் உண்டுபண்ணப்பட்டவர்களாகி ராமரில்லாததருணத் தில் ஆஸ்ரமத்தில் ஜமதக்னியின் அருகில் ஓடிவந்தார்கள். அவர் கள், மகாவீர்யமுள்ளவரும் போர்புரியாதவரும் தவஞ்செய்பவரும் நாதனற்றவர்போல அடிக்கடி, 'ராம! ராம' என்று அலறுகிறவரு மான அவரைக் கொன்றார்கள். யுதிஷ்டிரனே! பகைவரைஅடக்கு கிறவர்களான கார்த்தவீர்யனுடையபுத்திரர்கள் அம்புகளால் ஜம தக்னியைக்கொன்றுவிட்டு வந்தபடியே சென்றார்கள். அவர்கள் ஓடிப்போய் ஜமதக்னியும் அவ்வண்ணம் இறந்தபொழுது, பிருகு நந்தனரான பரசுராமர் ஸமித்துக்களைக் கையில்கொண்டு ஆஸ்ர மத்துக்குவந்தார். வீரரான அவர், அப்பொழுது, ம்ருத்யுவின் வசத்தை அடைந்தவரும் அதற்குத்தகாதவரும் அப்படிஆனவரு மான பிதாவைப்பார்த்து அதிகதுக்கமுள்ளவராகிப் புலம்பினார்.

---

1 'கற்பழிவென்னும் பாவத்தால் தாய் பற்றப்படாமலிருப்பதையும்' என்றும் கொள்ளலாம்.

நூற்றுப்பதினெட்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(அக்ருதவ்ரணர், பாசுராமர் பித்ருவதத்தால் கோபங்கொண்டு க்ஷத்ரியரை இருபத்தோருமுறை கருவறுத்தகதையை யுதிஷ்டிரருக்குச் சொல்லியதும், யுதிஷ்டிரர் மறுதினம் சதுர்த்தசியில் வந்த பாசுராமருக்குப் பூஜைமுதலியவற்றைச்செய்து மஹேந்திரமலையினின்று புறப்பட்டுச் சென்றதும்.)

ராமர், 'ஐயா! தேவரீர் என்னுடைய அபராதத்தால் அற்பர்களும் மூர்க்கர்களுமான கார்த்தவீர்யனுடைய புத்திரர்களால் காட்டில் அம்புகளால் மிருகம் கொல்லப்படுவதுபோலக் கொல்லப்பட்டீர். ஐயா! தர்மங்களை அறிந்தவரும் நல்லவழியில் இருப்பவரும் எல்லாப் பிராணிகளிடத்திலும் எவ்விதத்தீங்கும் செய்யாதவருமான தேவரீருக்கு இவ்விதமான மரணம் எவ்வாறு தகும்? தேவரீர் தவத்தில் நிலைபெற்றவரும் யுத்தம் செய்யாதவரும் பிராயமுதிர்ந்தவரும் ஸாதுவுமாயிருந்தும் எவர்களால் கூர்மையுள்ள பலஅம்புகளால் அடித்துக்கொல்லப்பட்டீரோ அவர்களால் என்ன பாவம்தான் செய்யப்படவில்லை? யுத்தம் செய்யாதவரும் தர்மங்களை அறிந்தவரும் தனித்திருப்பவருமான (உம்மைக்) கொன்று, வெட்கமில்லாதவர்களான அவர்கள் அங்கே மந்திரிகளிடமும் நண்பர்களிடமும் என்ன சொல்லுவார்களோ?' என்றார். அரசனே! மிக்க தவமுள்ள (ராமர்) இப்படி இரக்கத்துடன் பலவிதமாக மிகப்புலம்பிப் பிதாவுக்குப் பிரேதகார்யங்களனைத்தையும் செய்தார். பகைவர்பட்டணங்களை ஜயிப்பவரான ராமர் பிதாவை அக்னியில் தகனமும் செய்தார். பாரத! எல்லா க்ஷத்திரியக் கூட்டங்களுடைய வதத்தையும் ப்ரதிஜ்ஞைசெய்தார். அதிக பலசாலியும் வீர்யமுள்ளவரும் எமனுக்கொப்பானவருமான அவர் மிக்க கோபங்கொண்டு ஒருவராகவே ஆயுதமெடுத்து யுத்தத்தில் கார்த்தவீர்யனுடைய புத்திரர்களைக்கொன்றார். க்ஷத்திரியஸ்ரேஷ்டனே! அடிப்பவர்களுள் சிறந்தவரான ராமர் எந்த க்ஷத்திரியர்கள் அவர்களைத்தொடர்ந்து வந்தார்களோ அவர்களனைவரையும் கொன்றார். பிரபுவான அவர் பூமியை இருபத்தொருமுறை க்ஷத்திரியர்களற்றதாகச் செய்து ஸமந்தபஞ்சகத்தில் ஐந்து ரத்தமடுக்களை உண்டுபண்ணினர். ப்ருகுகுலத்தைத் தாங்குபவரான அவர் அவைகளில்

பித்ருக்களைக்குறித்துத் தர்ப்பணம்செய்தார்; ரிசீகரையும் நேரில் கண்டார். அவரும் ராமரைத் தடுத்தார். பிறகு, பிரதாபசாலியான ஜாமதக்னியர் பெரிய யாகத்தால் தேவேந்திரனைத் திருப்தியடையச் செய்தார்; ரித்விக்குக்களுக்குப் பூமியைத் தானம் செய்தார். பிரஜைகளுக்கு நாதனே! நாற்பதுமுழம் நீளமும் அகலமுமுள்ளதும், முப்பத்தாறுமுழம் உயரமுள்ளதுமான ஸ்வர்ணமயமான ஒரு வேதியைச் செய்து மஹாத்மாவான கஸ்யபருக்குக் கொடுத்தார். வேந்தனே! அப்பொழுது [1] காண்டவாயனர்களென்று பிரஸித்திபெற்ற அந்தப் பிராம்மணர்கள், கஸ்யபருடைய அனுமதியினால் அதனைக் கண்டம் கண்டமாகப் பங்கிட்டுக்கொண்டார்கள். மிக்க பல பராக்கிரமங்களுள்ளவரும் அளவுகடந்த விக்கிரமமுள்ளவருமான அவர் மகாத்மாவான் அந்தக் கஸ்யபருக்குப் பூமியைக் கொடுத்துவிட்டு மிகப் பெரிய தவத்தை மேற்கொண்டு இந்த மஹேந்திரமென்கிற சிறந்தமலையில் வஸிக்கிறார். உலகத்தில் வஸிக்கிற க்ஷத்திரியர்களோடு அவருக்கு இவ்விதம் வைரமுண்டாயிற்று. அளவற்ற தேஜஸுள்ள ராமரால் பூமியும் ஜயிக்கப்பட்டது' என்றார். பிறகு, பெரியமனமுள்ள ராமர் சதுர்த்தசிதினத்தில் நியமப்படி அந்தப் பிராம்மணர்களுக்கும் தம்பிமாருடனிருக்கும் தர்மராஜருக்கும் காட்சியளித்தார். ராஜேந்திரரே! பிரபுவான அந்தத் தர்மராஜர் பிராதாக்களுடன் சேர்ந்து அவரைப் பூஜித்தார். அந்த ராஜஸ்ரேஷ்டர் பிராம்மணர்களுக்கும் சிறந்த பூஜையைச் செய்தார். அவர் பரசுராமரை அர்ச்சித்து அவரால் பூஜிக்கப்பட்டவரும் ஏவப்பட்டவருமாகி, மஹேந்திர பர்வதத்தில் அந்தஇரவு வஸித்துத் தென்திசையை நோக்கிப் புறப்பட்டார்.

நூற்றுப்பத்தோன்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் அடைவில் பிரபாஸதீர்த்தத்தை அடைந்ததும், கிருஷ்ணர் பலராமர் முதலியோர் அவரைப்பார்க்க வந்ததும்.)

பாரதரே! தீர்த்தங்களைக்குறித்துச் செல்லுகின்ற மஹானுபாவரான அந்த அரசர் புண்யமானவைகளும் அழகியவைகளும்

---

1 'பங்கு பிரித்துக்கொள்ளுகிறவர்கள்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

சிற்சிலவிடங்களில் பிராம்மணர்களால் விளங்குகின்றவைகளுமான ஸமுத்திரத்தினுடைய எல்லாத்தீர்த்தங்களையும் பார்த்தார். ஜனமேஜயரே! நன்னடையுள்ளவரும் கச்யபருடைய புத்திரனுன ஸூர்யனுக்குப்[1] பௌத்திரருமான பாண்டு புத்ரர் தம்பிமார்களுடன் அவைகளில் நீராடி ஸமுத்திரத்தைக் குறித்துச் செல்லுகிறதும் புண்யம் மிக்கதுமான பிரசஸ்தை என்கிற நதியை அடைந்தார். மகானுபாவரான அவர் அதிலும் ஸ்நானம்செய்து பித்ருக்களையும் தேவர்களையும் திருப்தியடையச் செய்தார். ப்ராம்மணச்ரேஷ்டர்களிடம் தனத்தைக்கொடுத்து ஸமுத்திரத்தை நோக்கிச் செல்லுகிற கோதாவரியை அடைந்தார். அரசரே! பிறகு, வீரரான அவர் பாவம் நீங்கினவராகி த்ரவிடதேசத்தில் ஸமுத்திரத்தை அடைந்து உலகத்திலுள்ள தீர்த்தங்களுள் புண்யமானதும் மிக்க பரிசுத்தமுமான அகஸ்திய தீர்த்தத்தையும் அப்பால் நாரீதீர்த்தங்களையும் கண்டார். அந்தப் பாண்டுகுமாரர் அவைகளில் மற்றவர்களால் செய்யமுடியாத சிறந்தவிற்பிடித்த அர்ஜுனனுடைய அந்தச் செய்கையைக் கேட்டும், நிகரற்ற ரிஷிகளின் கூட்டங்களால் பூஜிக்கப்பட்டும், அதிக ஸந்தோஷத்தை அடைந்தார். பூமியில் அரசர்க்கரசரான அவர் திரௌபதியுடனும் தம்பிமாருடனும் அந்தத் தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து அர்ஜுனனுடைய பராக்கிரமத்தை நன்கு புகழ்ந்து மகிழ்ந்தார். பிறகு, ஸமுத்திரத்தினுடைய அந்தத் தீர்த்தங்களில் ஆயிரம் பசுக்களைத் தானம்செய்து ஸந்தோஷமுள்ளவராக, தம்பிமார்களுடன், அர்ஜுனன் செய்த கோதானங்களை நன்ருகப் புகழ்ந்து பேசினுர். அரசரே! அந்த யுதிஷ்டிரர் ஸமுத்திரத்தினுடைய அந்தத் தீர்த்தங்களையும் புண்யமான மற்றெல்லாத்தீர்த்தங்களையும் முறையே அடைந்து விருப்பம் நிறைவேறினவராகிப் புண்யம் மிக்க சூர்ப்பாரகத்தைக் கண்டார். அங்கே கடல்நாட்டைச் சிறிது கடந்து பூமியில் பிரஸித்திபெற்ற வனத்தை அடைந்தார். அதில் முற்காலத்தில் தேவர்களால் தவம் புரியப்பட்டது. அப்படியே, புண்ணியத்தை முக்கியமாகக்கொண்ட அரசர்களால் யாகம் பண்ணப்பட்டது. நீண்ட பருத்த கைகளுள்ள அவர் அவ்விடத்தில் தவசிகளுடைய கூட்டங்களால் சூழப்பட்டதும் புண்ணியம் செய்தவர்களால் பூஜிக்கத்தக்கதுமான சிறந்தவிற்பிடித்த ரிசீகபுத்திர

1 'ஸூர்யனுக்குப் பிள்ளை யமன்; யமனுக்குப் பிள்ளை யுதிஷ்டிரர்' என்பது.

ருடைய அந்த வேதியைக் கண்டார். அரசரே! பிறகு, பூமிக் கதிபதியும் மஹாத்மாவுமான அந்த அரசர் வஸுக்கள், மருத் கணங்கள், அப்படியே அச்வினீதேவர்கள், யமன், ஆதித்யன், குபே ரன், இந்திரன், விஷ்ணு, பிரபுவான ஸவிதா, பகன், சந்திரன், திவாகரன், வருணன், ஸாத்தியர்களுடைய கணம், பிரம்மதேவர், பித்ருக்கள், கணங்களுடன் கூடின ருத்திரர், ஸரஸ்வதி, ஸித்த கணம், பூஷா, அப்படியே மற்றத்தேவர்கள் ஆகிய இவர்களுடைய புண்யமானவையும் நன்கு மனத்தைக் கவருகின்றவையுமான ஆய தனங்களையும் கண்டார். அந்த அரசர் அவைகளில் ஸமீபத்தில் வஸித்துக்கொண்டிருக்கிற பண்டிதர்களை வஸ்திரங்களாலலங் கரித்து, சிறந்த ரத்தினங்களையும் (அவர்களுக்கே) கொடுத்து, எல் லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம்செய்து மீண்டும் சூர்ப்பாரகத் தைக் குறித்து வந்தார். அவர் ஸஹோதரர்களோடு மறுபடியும் ஸமுத்திரத்தின் அந்தக்கரைவழியாகச் சென்று மஹான்களான பிராம்மணர்களோடு பூமியில் பிரஸித்திபெற்ற பிரபாஸதீர்த் தத்தை அடைந்தார். பெரிய சிவந்த கண்களுள்ளவரும் தம்பி மார்களுடனிருப்பவருமான அவரும், அவ்வாறே கிருஷ்ணையும், லோமசருடன் அந்தப் பிராம்மணர்களும், அதில் ஸ்நானம்செய்து தேவகணங்களுக்கும் பித்ருக்களுக்கும் தர்ப்பணம் செய்தார்கள். தர்மங்களைத் தரிப்பவர்களுள் மிகச்சிறந்த அவர் அப்பொழுது பன்னிரண்டு நாள் தீர்த்தத்தையும் காற்றையும் பக்ஷிக்கின்றவ ராகி இரவுகளிலும் பகல்களிலும் (முறையே) ஸ்நானம்செய்தும் நாற்புறங்களிலும் நெருப்புக்களை அருகில் எரியச்செய்தும் தவம் புரிந்தார். அவர் உக்கிரமான தவத்தை மேற்கொண்டுசெய் வதைப் பலராமரும் ஜனார்த்தனரும் கேட்டார்கள். எல்லா வ்ரு ஷ்ணிகளுள்ளும் மிகச் சிறந்த அவர்கள் ஸைநிகர்களுடன் கூடிய வர்களாகி ஆஜமீடரான யுதிஷ்டிரரை அடைந்தார்கள். வ்ருஷ்ணி களான அவர்கள் பூமியில் படுத்திருப்பவர்களும் அழுக்கினால் பூசப்பட்டமேனியுள்ளவர்களுமான பாண்டு புத்ரர்களைப் பார்த் தும் (அவ்வித கஷ்டத்துக்குத்) தகாதவளான திரௌபதியைப் பார்த்தும் மிக்க துயரமுற்றவர்களாகத் துன்பக்குரல்களை வெளி யிட்டுக்கொண்டு அழுதார்கள். பிறகு, தைர்யங்குறையாதவரான அந்த யுதிஷ்டிரர், பலராமரையும் ஜனார்த்தனரையும் பிரத்யும்ன னையும் ஸாம்பனையும் சினியினுடைய பௌத்ரனான ஸாத்யகியை யும் மற்ற வ்ருஷ்ணிகளையும் அணுகி முறைப்படி பூஜை செய்தார்,

அரசரே! அந்த வ்ருஷ்ணிகளும், பார்த்தர்களனைவரையும் பிரதி பூஜைசெய்து, அப்படியே அந்தப் பாண்டுபுத்திரர்களால் பூஜிக்கப் பட்டவர்களாகி, இந்திரனைத் தேவகணங்கள் சூழ்ந்திருப்பதுபோல, யுதிஷ்டிரரைச் சூழ்ந்து உட்கார்ந்தார்கள். மிக்க பிரஸித்தி பெற்றவரான அவர், அந்தப்பகைவர்களுடைய செய்கையனைத்தை யும்(தங்களுடைய)வனவாஸத்தையும் அஸ்திரங்களைப்பெறுதற்காக இந்திரனிடம்தேவராஜகுமாரனை அர்ஜுனன் போயிருப்பதையும் கிருஷ்ணரிடம் சொன்னார். பிரஸித்திபெற்றவர்களும் மிக்க பூஜைக்குரியவர்களும் மஹானுபாவர்களுமான அவர்கள் அவரு டைய வசனத்தைக்கேட்டும் மிகமெலிந்திருக்கிற அந்தப் பாண்ட வர்களைப் பார்த்தும் துக்கத்தினால் 1தோன்றிய கண்ணீரைச் சொரிந்தார்கள்" என்று கூறினார்.

நூற்றிருபதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பலராமர் வ்ருஷ்ணிகளும் பாண்டவர்களும் கூடியிருக்கிற ஸபையில் பீஷ்மர் திருதராஷ்டிரன் முதலியவர்களை நிந்தித்துப் பாண்டவர் களைக்குறித்து வருந்தியது.)

ஜனமேஜயர், "தபோதனரே! பிரபாஸதீர்த்தத்தைஅடைந்து பாண்டவர்களும் வ்ருஷ்ணிகளும் என்னசெய்தார்கள்? அந்தஇடத் தில் இவர்களுக்கு என்னபேச்சுக்கள் நடந்தன? வ்ருஷ்ணிகளும் பாண்டவர்களுமாகிய அவர்களெல்லாருமே மஹாத்மாக்களும் எல்லாச்சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்தவர்களும் அன்னி யோன்யம் நேசமுள்ளவர்களுமல்லரோ?" என்றுவினவ, வைசம்பா யனர் சொல்லலானார்.

"வீரர்களானவ்ருஷ்ணிகள் கடலின்துறையும் புண்ணியமான துமான பிரபாஸதீர்த்தத்தைஅடைந்து பாண்டவர்களைச் சூழ்ந் திருந்தார்கள். பிறகு, பசுவின்பால், குருக்கத்திப்பூ, சந்திரன், தாம ரைத்தண்டு, வெள்ளி இவைகளின் ஒளிபோன்ற ஒளியுடையவரும் வனமாலையைஅணிந்தவரும் கலப்பையையேந்தியவருமான ராமர், தாமரைக்கண்ணரான கோவிந்தரைப்பார்த்து, 'கிருஷ்ண! செய் யப்பட்டதர்மம் ஜீவனுக்கு நன்மைக்கு ஆவதில்லை; செய்யப்பட்ட

1. 'துக்கார்த்திஜம்' என்பது மூலம்.

அதர்மமும் தீமைக்கு ஆவதில்லை. ஏனெனில், மஹாத்மாவான யுதிஷ்டிரர் மரவுரிஉடுத்துச் சடைதரித்துக் கானகத்தை இருப்பிடமாகக்கொண்டு வருந்துகிறார்; துர்யோதனனும் பூமியை ஆளுகிறான்; இவனுக்கு (தேகம் மறைந்துபோவதற்கு) பூமியும் (வெடித்து) இடந்தரவில்லையன்றோ? அல்பபுத்தியுள்ளமனிதன் தர்மத்தைக்காட்டிலும் செய்யப்பட்டஅதர்மமே பெரிதென்று எண்ணுவான். துர்யோதனன் விருத்தியடைந்தும் யுதிஷ்டிரரும் ஸுகமில்லாமல் நாடுகவரப்பட்டுமிருக்கும்பொழுது, [1] இவ்விஷயத்தில் ப்ரஜைகளால் யாதுசெய்யத்தக்கதென்று மனிதர்களுக்கு, சாஸ்திரத்துக்கும் அனுபவத்துக்கும் விரோதமிருத்தலால், தர்மாதர்மங்களுள் எதுசிறந்ததென்னும் ஐயம் உண்டுபண்ணப்பட்டுவிட்டது. தர்மதேவதையின் புத்ரரும் தர்மத்தில்நிலைபெற்றவரும் ஸத்யத்தைத்தரித்தவரும் மிக்ககொடையாளரும் குந்தீபுத்ரருமான அப்படிப்பட்ட இந்தஅரசர் ராஜ்யத்தினின்றும் ஸுகத்தினின்றும் விலகினாலும் விலகலாம். தர்மத்தைவிட்டு விலகுவராயின் எவ்வாறு வ்ருத்தி அடைவார்? பீஷ்மரும் கிருபரும் பிராம்மணரான துரோணரும் குலத்தில்பிராயமுதிர்ந்தவரான (திருதராஷ்டிர) ராஜரும் பாண்டவர்களைத்துரத்திவிட்டு எவ்வாறு ஸுகத்தை அடைகிறார்கள்? கெட்டஎண்ணமுள்ளவர்களான பரதகுலமுக்யர்களை நிந்திக்கவேண்டும். பூமியை முக்கியமாகக்கொண்ட பாவியான த்ருதராஷ்டிரர் குற்றமற்றவர்களான புத்திரர்களை ராஜ்யத்தினின்று இறங்கச்செய்து, பரலோகத்தில் பித்ருக்களை அடைந்து, 'புத்திரர்கள்விஷயத்தில் நான் நன்கு நடந்துகொண்டேன்' என்று எதைத்தான் சொல்லுவார்? இவர், 'நான் எந்த(ப்பாவத்தைச்) செய்து பூமியில் அரசர்களுள் இவ்வண்ணம் பொட்டையனாகப் பிறந்தேனோ' என்றும், 'குந்தீபுத்ரனை ராஜ்யத்தினின்று துரத்தி (இன்னும்) எப்படிப்பட்டவனாவேனோ' என்றும் இப்பொழுது புத்தியினால் கண்டறியவில்லை. அந்தோ! விசித்ர வீர்யருடைய குமாரரான த்ருதராஷ்டிரர் புத்திரர்களுடன்கூடினவராகி இகழத்தக்க கார்யத்தைச் செய்து பித்ருலோக பூமியில் நிறைந்திருப்பவைகளும் மிகப்பூத்திருப்பவைகளுமான மரங்களைத் [2] தங்க நிறமுள்ளவைகளாகக் காண்கிறார்; இது நிச்சயம். ஏனெனில், அந்த த்ருதராஷ்டிரர் ஸந்தேகமுள்ளவராகி ஆயுதமெடுத்த யுதிஷ்டிர

---

1 பொருந்தாமையால் அதிகபாடமான அரைஶ்லோகம் விடப்பட்டது.

2 மரணம் நெருங்கியதைத் தெரிவிக்கும் குறிப்பு.

ரைத் தம்பிமார்களுடன் காட்டிற்குப் புறப்பட்டுப்போகும்படி செய்தார். அவர் இந்தப்பாண்டவர்கள் அகன்று உயர்ந்த தோள்களை உடையவர்களும் நீண்டு சிவந்த கண்களுள்ளவர்களுமாயிருப்பதைக் கேட்டறிந்து [1] மனமுடைந்துபோகிறார்; நிச்சயம். நீண்ட கைகளுள்ள இப்படிப்பட்ட எந்தப் பீமஸேனன் ஆயுதமில்லாதவனுகவே நிறைந்திருக்கின்ற பகைவர்களுடைய படையைக்கொல்வனோ எந்த வ்ருகோதரனுடைய சப்தத்தைக்கேட்டே (பகைவர்) சேனைகள் ஜலமலங்களை விடுமோ பசியினாலும் தாகத்தினாலும் வழிநடையினாலும் இளைத்திருப்பவனான அவன், (போரில்) எதிர்த்துப் பலமுள்ளவனும் பலவித ஆயுதங்களையும் அம்புகளையும் கையில் கொண்டவனுமாகி மிக்க கோரமான இந்த வனவாஸத்தை நினைத்துக்கொண்டு (பகைவரை) மிச்சம் வைக்கமாட்டான் என்பது எனது நிச்சயம். வீர்யத்தாலும் பலத்தாலும் இவனுக்குச் சமமான வேறொருவன் பூமியிலேயே இல்லை. குளிரினாலும் காற்றினாலும் வெய்யிலினாலும் மெலிவிக்கப்பட்ட அங்கங்களுள்ள அவன் போரில் பகைவர்களில் மிச்சம் வைக்கமாட்டான். அதிரதனும் பலமுள்ளவனுமான எந்தப் பீமஸேனன் கீழ்த்திசையில் பரிவாரங்களுடன்கூடின அரசர்களை யுத்தங்களில் ஒரே ரதத்தினால் ஜயித்து க்ஷேமத்துடன் திரும்பிவந்தானோ அப்படிப்பட்ட இவன் மரவுரியுடுத்துக் கானகத்தில் துன்பப்படுகிறான். எவன் ஸிந்து நதியின் கரையில் எதிர்த்துவந்தவர்களும் பூமிகாவலர்களுமான தென்னாட்டரசர்களை வென்றானோ சிறந்தபலமுள்ளவனான அப்படிப்பட்ட இந்த ஸஹதேவன் இப்பொழுது தாபஸர்களுடைய வேஷமும் உருவமுமுள்ளவனாயிருப்பதைப் பாருங்கள். எதிர்த்துப் போர்செய்வதில் வல்லவனான எந்தவீரன் மேற்றிசையில்சென்று யுத்தத்தில் அரசர்களை ஒரே தேரினால் வென்றானோ அப்படிப்பட்ட இந்த நகுலன் இந்தக்காட்டில் அழுக்கினால் பூசப்பட்ட மேனியுடனிருப்பதைப் பாருங்கள். எவள் அதிரதனான த்ருபதராஜனுடைய நிறைந்த யாகத்தில் (அவனுக்குப்) புத்திரியாக வேதியிலிருந்து எழுந்தாளோ ஸுகத்துக்குத் தகுதியுள்ளவளும் பதிவ்ரதையுமான அப்படிப்பட்ட இவள் இப்பொழுது காட்டில் மிகவும் துக்கமான இந்த வாஸத்தை எப்படிப் பொறுக்கிறாள்? ஸுகத்துக்குத் தக்கவர்களான (அறம் பொருள் இன்பமென்னும்) த்ரிவர்க்கத்துள் முக்யனான அறக்கடவுள், வாயு, இந்திரன்,

[1] 'ப்ருஞோதி' என்பது 'ப்ருணுதி' என்று திருத்தப்பட்டது.

அஶ்வினீ தேவர்கள் ஆகிய இந்தத்தேவர்களுடைய புதல்வர்கள் ஸுகத்தை இழந்து எப்படித்தான் காட்டில் ஸஞ்சரிக்கின்றார்கள்? தர்மபுத்திரர் ஜயிக்கப்பட்டும் மனைவியுடனும் ஸகோதரர்களுடனும் பரிஜனங்களுடனும் துரத்தப்பட்டும் துர்யோதனனும் விருத்தியடைந்தும் வருகையில், மலைகளுடன்கூடிய பூமியானது எப்படித் துயரப்படாமலிருக்கும்?' என்று சொன்னார்.

நூற்றிருபத்தோராவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ஸாத்யகி பாண்டவர்களை எதிர்பாராமல் தாங்களே துர்யோதனுதியரைக்கொன்று பாண்டவர்களின் வனவாஸ முடியும்வரையில் அபிமன்யுவுக்கு ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்ய வேண்டுமென்றதும், கோவிந்தர் பாண்டவர்கள் பிறர்தோள்வலிமையை அடுத்துப் பிழையாரென்பதையும் அவர்களுடைய மற்றக் குணங்களையும் சொல்லி அதனைத் தடுத்ததும்.)

ஸாத்யகி, 'ராமரே! புலம்புவதற்கு இது காலமன்று. யுதிஷ்டிரர் ஒன்றையும்சொல்லவில்லையாயினும் இந்தச்சமயத்தில் எது மேல் செய்யப்படவேண்டுமோ அதையே எல்லோரும் காலம் கடவாமல் செய்வோம். உலகத்தில் இப்பொழுது எவர்கள் நாதனுள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் தாமே தம் காரியத்தைத் தொடங்குகிறதில்லை. ராமரே! [1] யயாதியினுடைய கார்யங்களில் சிபி முதலியவர்கள் நாதரானதுபோல அவர்களுடைய கார்யங்களில் (உறவினர்) நாதராகிறார்கள். ராமரே! அப்படியே உலகத்தில் எவர்களுடைய கார்யங்களை நாதர்கள் தம் இஷ்டப்படி தொடங்குகிறார்களோ, நாதனுள்ளவர்களும் ஆண்பிள்ளைகளுள் சிறந்த வீரர்களுமான அவர்கள் நாதனற்றவர்கள்போலக் கஷ்டத்தை அடையார். இந்த ராமகிருஷ்ணர்களும் என்னோடு சேர்ந்தவர்களான ப்ரத்யும்னனும் ஸாம்பனும் ஆகிய த்ரிலோகநாதர்களை (நாதர்களாக) அடைந்தும் [2] பிருதாபுத்

---

1 ஆதிபர்வம் 320-ம் பக்கத்திலும், உத்யோகபர்வம் 405-ம் பக்கத்திலும் பார்க்க.

2 'பார்த்தா:' என்னும் பன்மை உயர்வுபற்றி வந்தது.

ரர் தம்பிமார்களுடன் ஏன் காட்டில் வாஸம்செய்கிறார்? இப்பொழுது தசார்ஹஸேனையானது ஏராளமான பலவித ஆயுதங்களும் பலவித கவசங்களும் தரித்து நன்கு புறப்படவேண்டும். துர்யோதனன் பந்துக்களுடன் வ்ருஷ்ணிகளின் படையால் அடிக்கப்பட்டு யமலோகத்தைக் குறித்துச் செல்லக்கடவன். நீரே கோபத்தால் இந்தப் பூமியைச் சுருட்டிவிடுவீர். சார்ங்கத்தை வில்லாகக்கொண்ட கிருஷ்ணர் இருக்கட்டும். தேவர்களுக்குப் பதியான மகேந்திரன் விருத்திரனைக் கொன்றதுபோல அப்படிப்பட்ட நீர் துரியோதனனை உறவினர்களுடன் கொல்லக்கடவீர். [1] மனிதர்கள் எதற்காகப் பிரதிகூலமாகப் பேசாதவர்களான நல்ல புத்திரனையும் சிஷ்யனையும் குருவையும் விரும்பினார்களோ அந்தவிஷயத்தில், (அந்தப் பிள்ளை முதலியோர்), யத்னம்பண்ணப்பட்டதும் சிறந்ததும் முதன்மையானதும் செய்தற்கரியதுமான அந்தக்காரியத்தைச் செய்கின்றனர். எந்தப் பார்த்தன் எனக்கு ப்ராதாவும் தோழனும் குருவும் கோவிந்தருக்கு ஆத்மாவைப் போன்றவனுமாயிருக்கிறானோ அவனுக்காக நிகரற்ற கர்ணன் முயற்சியுள்ளவனாகத் தடுக்க முடியாத அஸ்திரத்தை (வித்தம்) செய்கிறான். ராமரே! நான் அந்தக் கர்ணனுடைய எல்லா அஸ்திரவர்ஷங்களையும் சிறந்த அஸ்திரங்களால் நொறுக்கி யுத்தத்தில் தோற்கச் செய்து, ஸர்ப்பங்களுக்கும் விஷத்திற்கும் நெருப்புக்குமொப்பான சிறந்த அம்புகளால் அவனுடைய சரீரத்தினின்று தலையைக் கொய்வேன். போரில் நான் கூர்மையுள்ள கத்தியினால் அவனுடைய தலையை உடலிலிருந்து வலிய அறுத்து, அதன்பிறகு, அவனைத் தொடர்ந்துவந்த எல்லோரையும் துர்யோதனனையும் கௌரவர்களனைவரையும் கொல்வேன். ரோஹிணியின் புதல்வரே! யுத்தத்தில் பயங்கரமான கார்யங்களைச் செய்கிறவீரர்கள் ஸந்தோஷமுள்ளவர்களாகி, இந்த விஷயத்தில் ஆயுதமெடுத்தவனும் தனித்திருப்பவனும் கௌரவயுத்தவீரர்களுள் முக்கியமானவர்களைக் கொல்லுகின்றவனுமான என்னை முடிவுக்காலத்தில் பெரும்புதரை எரிக்கிற நெருப்பைப்போலப் பார்க்கக்கடவர். கிருபரும் த்ரோணரும் விகர்ணனும் கர்ணனும் பிரத்யும்னனால் விடப்படும் கூர்மையுள்ள பாணங்களைத் தாங்குவதற்குச் சக்தியுள்ளவர்களல்லர். கிருஷ்ண குமாரனான பிரத்யும்னன் எப்படி யுத்தத்தில் நிற்பனோ

1 பொருள் பொருந்தாமையால் இரண்டு ஸ்லோகங்கள் முன்பின்னாக மாற்றிச் சிறிது வலித்து பொருள் கொள்ளப்பட்டன.

அப்படியே 1 உம்முடைய புத்ரனது வீர்யத்தையும் நீர் அறிவீர். ஸாம்பன் ஸாரதியுடனும் ரதத்துடனுமிருக்கும் துச்சாஸனனைக் கைகளால் வலிந்து மிக அடித்துக்கொல்லக்கடவன். யுத்தத்தில் அதிகஸாமர்த்தியமுள்ள ஜாம்பவதீபுத்திரனுக்குப் போரில் தாங்க முடியாதது ஒன்றுமில்லையன்றோ? பாலனான இந்தப்ரத்யும்னனால் சம்பரனென்னும் அஸுரனுடைய ஸைன்யமானது சௌர்யத்தால் துரத்தப்பட்டது. யுத்தத்தில் நிகரில்லாதவனும் சிங்கம்போன்ற வீர்யமுள்ளவனும் பாவியுமான அந்தச் சம்பரன், தனித்திருந்த இவனால் யுத்தத்தில் கொல்லப்பட்டான். உருண்ட தொடைகளை உடையவனும் மிகவும் நீண்டு பருத்த கைகளுள்ளவனுமான அஸ்வசக்ரன் யுத்தத்தில் இவனால் கொல்லப்பட்டான். யுத்தத்தில் எவன்தான் மஹாரதனான ஸாம்பனுடைய தேரை நேரில் எதிர்த்துவருவான்? மனிதன் முடிவுக்காலத்தில் யமனுடைய வசத்தை அடைந்து எவ்வாறு வெளிவரமாட்டானோ அவ்வாறே யுத்தத்தில் இவனுடைய வசத்தை அடைந்தும் எவன்தான் உயிரோடு மீண்டும் திரும்பிவருவான்? வாஸுதேவர் அம்புகளினுடைய நெருப்புக்குவியல்களால் மஹாரதர்களான அந்தத் துரோணரையும் பீஷ்மரையும் புத்திரர்களால் சூழப்பட்ட ஸோமதத்தனையும் எல்லாச்சேனைகளையும் எரிப்பார். ஆயுதங்களை எடுத்தவரும் உத்தமமான அம்புகளைக் கையில் பிடித்தவரும் சக்ரத்தை ஆயுதமாகக் கொண்டவரும் யுத்தத்தில் நிகரில்லாதவருமான கோவிந்தருடைய (பராக்ரமத்தைத்) தேவர்களுடன் கூடின எல்லா உலகங்களிலும் தாங்கக்கூடியது எது இருக்கிறது? மேலும், அநிருத்தனும், கத்தியையும் கேடகத்தையும் கையில் தாங்கினவனாகி, யாகங்களில் தர்ப்பங்களால் வேதியை(ப் பரப்புவது)போலப் புத்தியில்லாதவர்களும் கொல்லப்பட்டவர்களும், தலையறுக்கப்பட்டவர்களுமான திருதராஷ்டிர குமாரர்களால் இந்தப் பூமியை (பரப்பப்பட்டதாகச்) செய்யக்கடவன். கதன், உல்முகன், பாஹுகன், பானு, நீதன், யுத்தத்தில் சூரனும் சிறுவனுமான நிசடன், கடும்போர்செய்கின்றவர்களான ஸாரணன், சாருதேஷ்ணன் ஆகிய எல்லோரும் குலத்திற்குத்தகுந்த செய்கையை நன்கு வெளியிடக்கடவர். வ்ருஷ்ணிகள் போஜர்கள் அந்தகர்கள் இவர்களின் போர்வீரர்களுள் முக்கியர்களுடன் கூடியதும் சேர்ந்துவந்தது

1 'ஜயாத்பஜஸ்ய' என்பதும், 'ஜாநாமி' என்பதும், வேறு பாடம்; 'அபிமன்யுவினுடைய' என்பதும், 'அறிவேன்' என்பதும் பொருள்.

மான ஸாத்வத சூரர்களுடைய சேனையானது யுத்தத்தில் அந்த த்ருதராஷ்டிரபுத்திரர்களைக்கொன்று உலகத்தில் மிக்கபுகழை அடையட்டும். தர்மங்களை அனுஷ்டிப்பவர்களுள் மிக்கமேன்மையுள்ளவரும் மஹாத்மாவுமான யுதிஷ்டிரர் சூதாட்டத்தில் குருகுலோத்தமரான [1] பீஷ்மரால் சொல்லப்பட்டவண்ணம் வனவாஸவ்ரதத்தை நிறைவேற்றும் வரையில், அபிமன்யுவானவன் பூமியை ஆளக்கடவன். பிறகு, தர்மராஜர் நம்மால் பிரயோகிக்கப்பட்ட அம்புகளால் பகைவர்களைஜயித்தவராகித் திருதராஷ்டிரபுத்திரர்களற்றதும் கர்ணன்கொல்லப்பட்டதுமான பூமியை அனுபவிப்பார். இதுவன்றோ நமக்குப் புகழைத்தரக்கூடிய மிகச்சிறந்தகார்யம்?' என்று சொன்னான்.

வாஸுதேவர், 'மாதவ! இது உண்மைஎன்பதில் ஐயமில்லை. தைர்யங் குறையாதவனே! உன்னுடைய வாக்கியத்தை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். கௌரவச்ரேஷ்டர் தம் கைகளால் ஜயிக்கப்படாத பூமியையோ எவ்விதத்தாலும் விரும்பமாட்டார். இந்தயுதிஷ்டிரர் காமத்தாலாவது பயத்தாலாவது லோபத்தாலாவது தம்முடையதர்மத்தை ஒருகாலும் விடமாட்டார். அதிரதர்களான பீமார்ஜுனர்களும் நகுல ஸஹதேவர்களும் த்ருபதகுமாரியான இந்த க்ருஷ்ணையும் அப்படியே. விருகோதரனும் தனஞ்சயனுமாகிய இருவருமே பூமியில் யுத்தத்தில் இணையில்லாதவர்கள். (அவர்களாலும்) மாத்ரீபுத்திரர்களாலும் முன்னிடப்பட்ட இவர் ஏன் பூமிமுழுமையையும் ஆளமாட்டார்? எப்பொழுது மகாத்மாவான பாஞ்சாலராஜனும் கேகயனோடு சேர்ந்த சேதிராஜனும் நாமும் ஒன்றுசேர்ந்தவர்களாக யுத்தத்தில் பராக்கிரமத்தைச் செலுத்திப் போர்புரிவோமோ அப்பொழுதே பகைவர்கள் அனைவரும் இரார்' என்று சொன்னார். யுதிஷ்டிரர், 'மதுவம்சத்தவனே! நீ சொல்லுகிற இது ஆச்சர்யமன்று. எனக்கு முக்கியமாகக் காப்பாற்றத்தக்கது ஸத்யமே; ராஜ்யமன்று. கோவிந்தர் ஒருவர் என்னை உள்ளபடி அறிகிறார். கோவிந்தரையும் நான் உள்ளபடி அறிகிறேன். சினிகளுள் சிறந்தவீர! மாதவ! ஆண்பிள்ளைகளுள் சிறந்தவீரரான இவர் எப்பொழுது வல்லமையைக்காட்டுதற்குத் தகுந்தகாலத்தை அறிவரோ அப்பொழுதே நீயும் இந்தக் கேசவரும் யுத்தத்தில் துர்யோதனனை ஜயிப்பீர். இப்பொழுது தசார்ஹவீரர்கள் திரும்பிப்போகக்கடவர்.

1 'குருஸத்தமேந' என்பது மூலம்; 'குருகுலத்திற் சிறந்தவரான தம்மால்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

மானிடஉலகத்துக்கு நாதர்களான நாதர்களால் நான் பார்க்கப் பட்டேன். அளத்தற்கரியவர்களான நீங்கள் தர்மத்தில் தவறுமை யைச் செய்யுங்கள். ஸுகமுள்ளவர்களும் ஒன்றுசேர்ந்தவர்களு மான உங்களை மறுபடியும் பார்ப்பேன்' என்றுசொன்னார். அவர் கள் ஒருவரிடத்தொருவர் சொல்லிக்கொண்டும், அப்படியே, பிராய முதிர்ந்தவர்களை வணங்கியும், சிறுவர்களனைவரையும் தழுவியும், யாதவவீரர்கள் தங்கள் வீடுகளை அடைந்தார்கள்; அந்தப்பாண்ட வர்களும் தீர்த்தங்களை ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றடைந்தார் கள். பிராதாக்களுடனும் வேலைக்காரர்களுடனும் கூடிய தர்ம ராஜர் வ்ருஷ்ணிகளை அனுப்பிவிட்டு, பிறகு, லோமசருடன்கூட, விதர்ப்பராஜனால் விருத்திபண்ணப்பட்டதும் நல்லதீர்த்தமுள்ள தும் புண்யமானதுமான பயோஷ்ணிஎன்கிறநதியை அடைந்தார். மஹாத்மாவானஅவர் அபிஷவம் (=பிழிதல்) செய்யப்பட்ட ஸோமரசத்துடன் கலந்த ஜலமுள்ள பயோஷ்ணியைஅணுகி ஸந் தோஷமுள்ளவர்களான பிராம்மணஸ்ரேஷ்டர்களால் சிறந்த ஸ்தோத்திரங்களால் நன்கு துதிக்கப்படுகிறவராகி அந்தப் பயோஷ்ணியில் ஜலத்தை மட்டும் ஆகாரமாகக்கொண்டிருந்தார்.

நூற்றிருபத்திரண்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர் பயோஷ்ணியின் கரையில் கயன் யாகஞ்செய்ததையும் ச்யவனர் ஸர்யாதிக்கு யாகம்செய்வித்ததுமுதலியவற்றையும் சொல்லியதும், யுதிஷ்டிரர் ச்யவனருடையசரித்திரத்தை விஸ்தாரமாகச் சொல்லவேண்டியதும்.)

லோமசர், 'அரசனே! இந்தஇடத்தில் யாகம்செய்கின்ற கய னால் ஸோமத்தினால் இந்திரன் திருப்திசெய்யப்பட்டான். திருப்தி யடைந்த அவன், ஸந்தோஷத்தைஅடைந்தானென்றுகேள்வி. இந்த இடத்தில் இந்திரனோடுசேர்ந்த தேவர்களும் ஸ்ருஷ்டிகர்த்தர்களும் மிக்கதக்ஷிணைகளுள்ள பலவித பெரியயாகங்களைச் செய்தார்கள். பிரபுவான ஆதூர்த்தரஜஸனென்கிற கயராஜனும் இந்தஇடத்தில் ஏழுஅஸ்வமேதங்களில் ஸோமரஸத்தால் இந்திரனைத் திருப்தி யடையச்செய்தான். அவனுடைய ஏழுயாகங்களிலும் யாகத்தில் இன்றியமையாதவையும் மரத்தால் செய்யப்படுகின்றவையும் மண்

ஞல் செய்யப்படுகின்றவையுமான பொருள்களுள்ளிட்ட எல்லாமும் பொன்னுல் செய்யப்பட்டிருந்தன. அவைகளுள், இவனுடைய யாகங்களில் உபயோகிக்கப்பட்ட [1] சஷாலங்கள், யூபங்கள், சமஸங்கள், ஸ்தாலிகள், பாத்ரிகள், ஸ்ருக்குக்கள், ஸ்ருவங்கள் ஆகிய ஏழும் பிரஸித்தமானவை. ஒவ்வொருயூபத்துக்கும் ஏழு ஏழு சஷாலங்கள் மேலே இருந்தன. யுதிஷ்டிர! அவனுடைய யாகங்களில்பிரகாசிக்கின்ற பொன்மயமானயூபங்களை இந்திரனுள்ளிட்டதேவர்கள் தூக்கிநட்டார்கள். அந்தக் கயராஜனுடைய அந்தச் சிறந்த யாகங்களில் இந்திரன் ஸோமரஸத்தாலும் பிராம்மணர்கள் தக்ஷிணைகளாலும் மதமடைந்தார்கள். பிராம்மணர்கள் (எண்ணமுடியாமல் காரீ, த்ரோணம் என்னும் அளவுக் கருவிகளால்) அளந்துபோடப்பட்ட (பொன்னுணயங்களைப்) பெற்றுக்கொண்டார்கள். மகாராஜனே! எப்படி உலகத்தில் மணல்களும் எப்படி ஆகாயத்தில் நக்ஷத்திரங்களும் எப்படி பொழிகிற மேகத்தின் தாரைகளும் ஒருவராலும் எண்ணமுடியாதவைகளோ அப்படியே கயன் அந்த ஏழுயஜ்ஞங்களிலும் ஸதஸ்யர்களுக்குக் கொடுத்த தனமும் எண்ணமுடியாதது. (என்னுல்)சொல்லப்பட்ட இவை எண்ணக்கூடியவையாகலாம். புகழுள்ளவனை அவனுடைய தக்ஷிணைகள் எண்ணமுடியாதவை. பலதிக்குக்களிலிருந்து வந்த பிராம்மணர்களை (அவன்) விஸ்வகர்மாவினுற் செய்யப்பட்ட பொன்மயமான பசுக்களாலும் திருப்தியடையச் செய்தான். பிரஜைகளுக்கு நாதனே! பூமியானது ஆங்காங்கு யாகம் செய்கின்ற கயனுடைய யாகவேதிகளால் நிறைக்கப்பட்டுச் சிறிதே மிச்சமிருந்தது பாரத! அவன் அந்தக் கர்மாவினுல் இந்திரனுடைய உலகங்களை அடைந்தான். பயோஷ்ணியில் ஸ்நானம்செய்பவன் அவனுடைய ஸாலோக்யத்தை அடைவான். ராஜஸ்ரேஷ்டனே! தர்மந்தவருதவனே! பூமியைக்காப்பவனே! ஆகையால், நீ பிராதாக்களுடன் சேர்ந்து இந்தப் பயோஷ்ணியில் ஸ்நானம்செய்தால் பாவங்களை உதறினவனுவாய்' என்று சொன்னுர். புருஷஸ்ரேஷ்டரான அவர் பிராதாக்களுடன் பயோஷ்ணியில் [2] ஸ்நானம் செய்தார். பாண்டவஸ்ரேஷ்டரான அந்த அரசர், பிறகு, வைதூர்யபர்வதத்தையும் நர்மதை என்கிற மகாநதியையுங் குறித்துப் புறப்பட்டார். தோஷ

---

1 உத்யோகபர்வம் 468-ம் பக்கம் குறிப்பில் காண்க. சஷாலம்=யூபகடகங்கள். பாத்திரிகள்=ஹவிஸை வைக்கிற பாத்ரங்கள்.

2 ஸ்நாத்வா' என்பது மூலம்.

மற்றவரே! தேஜஸ்வியான அவர் தம்பிமார்களுடன் சேர்ந்து (வைதூர்யபர்வதத்தை) வந்தடைந்தார். பகவானான லோமசரிஷியானவர் அங்கே இந்த யுதிஷ்டிரருக்கு ரமணீயமான எல்லாத் தீர்த்தங்களையும் புண்யமான ஆயதனங்களையும் கூறினர். அவர், தம்பிமார்களோடுகூடி, சேர்க்கைக்குத் தக்கபடியும் பிரியத்துக்குத் தக்கபடியும் சென்றார். அந்த அந்த இடங்களில் பிராம் மணர்களுக்கு ஆயிரம் ஆயிரமாகத் தனத்தைக்கொடுத்தார். லோமசர், 'கௌந்தேய! ஒருவன் வைதூர்யபர்வதத்தைப் பார்த்தும் நர்மதையில் நீராடியும் தேவர்கள் அரசர்கள் ஆகிய இவர்களின் ஸாலோக்யத்தை அடைகிறான். நரஸ்ரேஷ்டனே! இது த்ரேதை த்வாபரம் இவற்றின் [1] ஸந்தி. குந்தீபுத்ரனே! இதை அடைந்தால் மனிதன் எல்லாப் பாவங்களாலும் விடப்படுகிறான். ஐயா! மஹாபாக்யமுள்ளவனே! எந்த இடத்தில் இந்திரன் அஸ்வினீதேவர்களுடன் நேராகவந்து ஸோமபானம் பண்ணினானோ, மஹா தபஸ்வியான ச்யவனரும் மஹேந்திரன் விஷயத்தில் கோபம்கொண்டாரோ, பிரபுவான ச்யவனர் அந்த இந்திரனை அசைவற்று நிற்கும்படியும் செய்தாரோ, அவர் ஸுகன்யையென்கிற ராஜபுத்திரியையும் பார்யையாக அடைந்தாரோ, அஸ்வினீதேவர்களை ஸோமபானம் செய்கிறவர்களாகவும் செய்தாரோ, சர்யாதியினது யாகம் நடந்த அந்த இடம் இதோ விளங்குகிறது' என்று சொல்ல, யுதிஷ்டிரர், 'பகவானான அந்த இந்திரன் அவரால் எவ்வாறு ஸ்தம்பனம் செய்யப்பட்டான்? மஹா தபஸ்வியான ச்யவனரும் எதற்காகக் கோபங்கொண்டார்? பிராம் மணரே! அஸ்வினீதேவர்களை எப்படி ஸோமபானம் செய்பவர்களாகச் செய்தார்? பகவானான (தேவரீர்) இவை அனைத்தையும் எனக்கு நடந்தபடி சொல்லக்கடவீர்' என்று வினவினர்.

---

1 'ஸந்திஃ' என்பது மூலம். 'ஸந்திகாலம்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

நூற்றிருபத்துமூன்றாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ஸுகன்யோபாக்யானம்; சர்யாதிராஜன் பரிவாரங்களுடன் ச்யவனருடைய ஆஸ்ரமத்துக்கு வந்ததும், அங்கே அவன் மகளான ஸுகன்யை நெடுங்காலமாகத் தவத்திலிருக்கிற ச்யவனருடம்பில் வளர்ந்திருக்கும் புற்றைக் கண்டு ச்யவனருடைய கண்களை அறியாமையால் குத்தியதும், பிறகு, ச்யவனர் கோபந்தணிதற்காகச் சர்யாதி ஸுகன்யையை அவருக்கு மனைவியாகக் கொடுத்ததும்.)

பாரத! பிருகுமஹாிஷிக்கு ச்யவனரென்னும்புத்ரர் உண்டானார். மிக்ககாந்தியுள்ளவரான அவர் இந்த ஸரஸினருகில் தவம்செய்தார். பாண்டவ! அரசனே! மிக்க ஒளியையுடைய அவர் வீராஸனத்துடன் கம்பம் போன்றவராகி ஒரேயிடத்தில் நெடுங்காலம் இருந்தார். அரசனே! ரிஷியானவர், வெகுகாலம் செல்லவே, கொடிகளால் நன்கு சுற்றப்பட்ட (மரம்) போலப் புற்றோடு கூடியவரும் [1] கறையான்களால் நிரம்பினவரும் ஆனார். புத்திமானான அவர் அப்படி மண்முட்டுப்போல எல்லாப்பக்கங்களிலும் சூழப்பட்டவரானார்; புற்றினால் சூழப்பட்டுப் பயங்கரமான தவம் செய்தார். பிறகு, நெடுங்காலத்துக்குப் பின் சர்யாதி என்கிற அரசன் விளையாடுதற்காக இனிமையான இந்தச் சிறந்த ஸரஸுக்கு வந்தான். பாரத! அவனுக்கு நாலாயிரம் ஸ்திரீகள் மனைவிகளாக இருந்தார்கள். அழகிய புருவங்களுள்ள ஸுகன்யை என்கிற ஒரே புத்ரி இருந்தாள். திவ்யாபரணங்களாலலங்கரிக்கப்பட்ட அவள், தோழிகளால் சூழப்பட்டு உலாவுகின்றவளாகி ச்யவனருடைய புற்றை அடைந்தாள். தோழிகளால் சூழப்பட்ட அவள் அங்கே மனத்தை மிக மகிழ்விப்பதான பூமியைப் பார்த்துக்கொண்டும் மரங்களிலிருந்து மலர்களைப் பறித்துக்கொண்டும் விளையாடினாள். அவள் ரூபத்தாலும் பிராயத்தாலும் மன்மதனாலும் மதத்தாலும், மிகப்பூத்திருக்கிற காட்டிலுள்ள மரங்களின் கிளைகளை ஒடித்தாள். புத்திமானான ச்யவனர், ஸகிகளால் விடுபட்டவளும் தனித்திருப்ப

1 'பீபிலிகை:' என்பது மூலம்.

வளும் ஒற்றையாடை யுடுத்தவளும் அலங்கரிக்கப்பட்டவளுமான அவளை ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிற மின்னலைப்போலக் கண்டார். மிக்க காந்தியுள்ள அவர் ஜனங்களில்லாத இடத்தில் அவளைப் பார்த்து ஆனந்தமடைந்தார். குரல்மெலிந்தவரும் தபோபலத்துடன் சேர்ந்தவருமான பிரம்மரிஷியானவர் மங்களகரியான அவளுடன் பேசினார். அவளுக்கு இவருடைய சொல் கேட்கவில்லை. பிறகு, ஸுகன்யையானவள் புற்றில் ச்யவனருடைய கண்களைப் பார்த்து அறிவு மயக்கத்தால் வலிமை செய்யப்பட்டவளாகிக் குதூஹலத்தால் 'இது என்ன?' என்று சொல்லி முள்ளினால் இவருடைய கண்களைக் குத்தினாள். அவ்வாறு நேத்திரங்கள் குத்தப்படவே, மிக்க கோபமுள்ள அவர் கோபமடைந்தார். அதன் பிறகு, சர்யாதியினது சேனையின் மலஜலங்களைக் கட்டிவிட்டார். பிறகு, மலஜலங்கள் தடுக்கப்பட்டவுடன், சேனையானது அதிகத் துயரமுள்ளதாயிற்று. அப்படி ஆனதைக்கண்டு, அந்த அரசன், (தன் பரிஜனங்களைப்பார்த்து), 'தவத்தில் எப்பொழுதும் நிலைபெற்றவரும் பிராயமுதிர்ந்தவரும் மிக்க கோபமுள்ளவரும் மஹாத்மாவுமான ச்யவனருக்கு இப்பொழுது இங்கே தெரிந்தோ தெரியாமலோ யாரால் தீமை செய்யப்பட்டது? அதனை விரைவில் சொல்லுங்கள். தாமதம் கூடாது' என்று கேட்டான். ஸைனிகர்கள் அனைவரும், அரசனைப்பார்த்து, 'நாங்கள் தீமை செய்யப்பட்டதை அறியோம். நீர் இஷ்டப்படி எல்லா உபாயங்களாலும் அதனை அறிந்துகொள்ளும்' என்று சொன்னார்கள். பிறகு, அந்த அரசன் தானே நண்பர்கூட்டத்தை நயமாகவும் கடுமையாகவும் கேட்டான். அவர்கள் (ஒன்றையும்) அறியவேயில்லை. பிறகு, ஜலமல பந்தத்தினால் துன்புற்றதும் அஸௌக்கியத்தால் வருந்துகிறதுமான அந்தச் சேனையைப்பார்த்தும் துன்பமுற்ற பிதாவைப் பார்த்தும் ஸுகன்யையானவள், 'நான் இந்த இடத்தில் ஸஞ்சரிக்கின்றவளாகிப் புற்றில் எதிரில் ஜ்வலிக்கின்ற ஒரு பிராணியைக் கண்டேன். நான் அதனை மின்மினிப்பூச்சி போன்றதென்றெண்ணி அருகில் சென்று குத்திவிட்டேன்' என்னும் இதனைச் சொன்னாள். இதனைக் கேட்டு, சர்யாதி விரைவாகப் புற்றைநோக்கிச்சென்றான். அதில் சந்திரனும் சூரியனும் போன்ற ஒளியுள்ளவரான தவமுதியவரைக் கண்டான். பிறகு, அரசன், கைகூப்பிக்கொண்டு, 'சிறுமி அறியாமையால் உமக்குச் செய்ததைப் பொறுக்கக்கடவீர்' என்று வேண்டினான். பிறகு, ப்ருகுவின்

புதல்வரான ச்யவனர், அப்பொழுது அரசனைப்பார்த்து, 'அகங்காரத்தால் நிறைந்த இந்தப் பெண்ணால் நான் அவமதிப்பினால் குத்தப்பட்டேன். வேந்தனே! பூபதியே! ரூபத்துடனும் காம்பீர்யத்துடனும்கூடியவளும் லோபத்தாலும் மோகத்தாலும் வசப்படுத்தப்பட்டவளுமான உன்னுடைய அந்தப்பெண்ணையே நான் மணம்புரிந்தால் பொறுப்பேனென்னும் இதனை உனக்கு உண்மையாகச் சொல்லுகிறேன்' என்றார். ரிஷியினுடைய வசனத்தையறிந்து சர்யாதி ஆலோசியாமலே மஹாத்மாவான அந்த ச்யவனருக்குப் பெண்ணைக் கொடுத்தான். பகவானான அவர் அந்தப்பெண்ணைக் கைப்பற்றி அருளும்செய்தார். அருளைப்பெற்ற அரசனும் சேனைகளுடன் பட்டணத்திற்கு வந்தான். நிந்திக்கப்படாதவளான ஸுகன்னியும் தவசியைக் கணவராக அடைந்து அன்புடனும் தவத்துடனும் அடக்கத்துடனும் (அவருக்குத்) தினந்தோறும் பணிசெய்துவந்தாள். அஸூயை இல்லாதவளும் அழகிய முகமுள்ளவளுமான அவள் அக்னிகளுக்கும் அதிதிகளுக்கும் விரைந்து பணிசெய்து ச்யவனரை நன்கு ஆராதித்தாள்.

நூற்றிருபத்துநான்காவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ஸுகன்யோபாக்யானம்; ச்யவனாச்ரமம் வந்த அச்வினீதேவர்கள் ஸுகன்னியைத் தங்களுக்கு மனைவியாக வேண்டினதும், அவள் மறுக்க, அவர்கள் ச்யவனருக்கு அழகையும்யௌவனத்தையும் தம்மோடொத்த வடிவத்தையும் தருவோமென்றும் அப்பொழுது ஒத்தவடிவமுள்ள தம் மூவருள் ஒருவரை மணக்கவேண்டுமென்றும் அவளுக்குச் சொல்லியதும், பர்த்தாவின் கட்டளையால் அவள் ஸம்மதிக்க, அவர்கள் ச்யவனருடன் குளத்தில் முழுகி ஒத்தவடிவத்துடனெழுந்ததும், அவள் அம்மூவருள் ச்யவனரையே வரித்ததும், அவர் அச்வினீதேவர்களுக்கு யாகத்தில் ஸோமரஸம் கொடுக்கச் செய்வதாக உறுதிகூறியதும்.)

வேந்தே! சிலகாலம் சென்றபிறகு, அச்வினீதேவர்கள், ஸ்நானம் செய்தவளும் (ஆடையால்) மறைக்கப்படாதவளுமான அந்த ஸுகன்னியைக் கண்டார்கள். பார்த்தற்கு இனிய அங்கங்களுள்ளவளும் தேவராஜனுடைய புதல்வியைப்போன்றவளுமான

அவளைப்பார்த்து நாஸத்யர்களென்கிற அஸ்விநீதேவர்கள் எதிரில் ஓடிவந்து, 'அழகிய தொடைகளுள்ளவளே! நீ யாருடையவளாக இருக்கிறாய்? இந்தக் காட்டில் என்ன பண்ணுகிறாய்? கல்யாணி! உன்னை அறியவிரும்புகிறோம். அழகியே! உண்மையைச் சொல்' என்கிற இதனைச் சொன்னார்கள். பிறகு, ஸுகன்னி (ஆடையைச்) சுற்றிக்கொண்டு அந்தத் தேவஸ்ரேஷ்டர்களைப்பார்த்து, 'என்னை நீங்கள் சர்யாதியின் புதல்வியென்றும் ச்யவனருடைய மனைவியென்றும் தெரிந்துகொள்ளுங்கள். இந்த மானிடவுலகத்தில் நான் ஸுகன்னி என்கிற பெயர்பெற்றவள். அப்படிப்பட்டநான் எல்லாவிதங்களாலும் எப்பொழுதும் பர்த்தாவையே அனுசரித்தவள்' என்று சொன்னாள். அதன்பிறகு, அஸ்விநீதேவர்கள் சிரித்து, மறுபடியும் அந்தப் பெண்ணைப்பார்த்து, 'கல்யாணி! நீ எப்படி பிதாவினால் கொடுக்கப்பட்டு வனத்தில் வந்திருக்கிறாய்? பயந்தவளே! இந்தவனத்தில் நீ பிரகாசிக்கிற மின்னல்போல் விளங்குகிறாய். அழகுள்ளபெண்ணே! தேவர்களுள்ளும் உனக்கு ஸமமாக இருப்பவளை நாங்கள் பார்க்கவில்லை. கல்யாணி! ஆபரணங்களில்லாதவளும் சிறந்தஆடை தரியாதவளுமான நீ அலங்கரிக்கப்படாதவளாக இருந்தும் கானகத்தை அதிகமாகப் பிரகாசிக்கச் செய்கிறாய். குற்றமற்ற அவயவங்களுள்ளவளே! எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுச் சிறந்த வஸ்திரத்தை உடுத்தால் நீ பிரகாசிப்பாய். இவ்வண்ணம் அழுக்கும் சேறுமுள்ளவளாயிருந்தால் பிரகாசிக்கமாட்டாய். கல்யாணி! இப்படிப்பட்டவளாயிருந்தும், யாதுகாரணம்பற்றி மூப்பினால்தளர்ந்தவரும் காமபோகங்களுக்கு விலக்கானவருமான பதியை நீ அடுத்திருக்கிறாய்? நிர்மலமான புன்சிரிப்புள்ளவளே! அப்படிப்பட்ட நீ ரக்ஷிப்பதிலும் போஷிப்பதிலும் திறமை இல்லாத ச்யவனரை விட்டுவிட்டு எங்கள் இருவருள் ஒருவரை வரிப்பாயாக. தேவகன்னிகைபோன்ற காந்தியுள்ளவளே! (இந்தப்) பதிக்காக உன் யௌவனத்தை வீணாகச் செய்யாதே' என்று சொன்னார்கள். இவ்வாறு சொல்லக்கேட்ட ஸுகன்னியும், அந்தத் தேவர்களைப் பார்த்து, 'நான் பர்த்தாவான ச்யவனரிடத்தில் பற்றுதலுள்ளவள். என்னைப்பற்றி இவ்வண்ணம் நீங்கள் சந்தேகிக்கவேண்டாம்' என்னுமிதனைச் சொல்லினள். அவ்விருவரும் மறுபடியும் இவளைப்பார்த்து, 'நாங்கள் சிறந்த தேவ வைத்தியர்கள். உன்னுடைய பதியை யௌவனமுள்ளவரும் அழகுபொருந்தியவருமாகச் செய்வோம். பிறகு, அவ

ரும் நாங்களுமாகிய எங்களுள் ஒருவரைப் பதியாக வரிப்பாயாக. கல்யாணி! இந்த உடன்பாட்டினால் இந்தப் பதியை ஆலோசித்துக் கொள்' என்று சொன்னார்கள். அரசனே! அவள் அவர்களுடைய வசனத்தினால் ச்யவனரை அடைந்து அவர்கள் அந்த ச்யவனரைப்பற்றிச் சொல்லிய வாக்கியத்தைக் கூறினாள். அதனைக் கேட்டு, ச்யவனர் மனைவியை நோக்கி, 'செய்யலாம்' என்று கூறினார். பிறகு, பர்த்தாவினால் அனுமதி கொடுக்கப்பட்ட அவள், 'செய்யலாம்' என்று உரைத்தாள். 'செய்யலாம்' என்கிற அவளுடைய அந்த வசனத்தை அச்விநீதேவர்கள் கேட்டு அந்த ராஜ புத்திரியைப்பார்த்து, 'உன்னுடைய பதி ஜலத்தில் பிரவேசிக்கக் கடவர்' என்று சொன்னார்கள். அதன்பிறகு, ச்யவனர் ரூபத்தை விரும்பினவராகச் சீக்கிரம் ஜலத்தில் பிரவேசித்தார். அரசனே! அச்விநீ தேவர்களும் அப்பொழுது அந்தத் தடாகத்தில் பிரவேசித்தார்கள். பிறகு, ஒரு முகூர்த்த காலத்துக்குப் பின் அம் மூவரும்[1] எல்லாருமே திவ்ய ரூபத்தைத் தரித்தவர்களும் யௌவனமுள்ளவர்களும் மெருகிட்ட குண்டலங்களை அணிந்தவர்களும் ஒத்த வேஷத்தைப் பூண்டவர்களும் மனத்திற்குப் பிரியத்தைப் பெருக்குகிறவர்களுமாகி அந்தத் தடாகத்தினின்று கரையேறினார்கள். அவர்களனைவரும் ஒன்று சேர்ந்தவர்களாக, 'கல்யாணி! மங்களத்தை உண்டுபண்ணுகிறவளே! சிறந்த நிறமுள்ளவளே! எங்களுள் இஷ்டமான ஒருவரைப் பதியாயிருத்தலில் வரிப்பாயாக. புகழுள்ளவளே! மிக விளங்குபவளே! நீ அச்விநீதேவர்களுள் ஒருவரையாவது ச்யவனரையாவது யாரிடத்தில் விருப்பமுள்ளவளாக இருக்கிறாயோ அவரை வரிப்பாயாக' என்று சொன்னார்கள். அந்தத் தேவி ஒத்த ரூபத்தைத் தரித்து நிற்கின்ற அவர்கள் எல்லாரையும் பார்த்து மனத்தினாலும் புத்தியினாலும் நிச்சயித்துத் தன் பர்த்தாவையே வரித்தாள். ச்யவனரோ மனைவியையும் விரும்பப்பட்ட வயதையும் ரூபத்தையும் அடைந்து மகிழ்ந்தவரும் மிக்க தேஜஸுள்ளவருமாகி அந்த அச்விநீதேவர்களைப்பார்த்து, 'பிராய முதிர்ந்தவனாக இருந்த நான் உங்களால் நல்ல ரூபம் பொருந்தியவனாகவும் (யௌவனப்) பிராயத்துடன் கூடியவனாகவும் செய்யப்பட்டு இவளையும் பார்யையாக அடைந்தேனாதலால், நான் ப்ரீதியினால் உங்களைத் தேவராஜன் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே ஸோமரஸத்தைப் பருகுகிறவர்களா

1 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

கச் செய்வேன். இது உண்மையென்று உங்களுக்குச் சொல்லு கிறேன்' என்று சொன்னார். அவர்கள் அதனைக்கேட்டு மன மகிழ்ந்து ஸ்வர்க்கத்திற்குத் திரும்பிச் சென்றார்கள். ச்யவனரும் ஸுகன்னியும் தேவர்கள் போல இனிது வாழ்ந்தார்கள்.

நூற்றிருபத்தைந்தாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(சர்யாதி ச்யவனருடைய ஆஸ்ரமத்திற்கு வந்ததும், அவர் அவனுக்கு யாகம் செய்வித்ததும், அந்த யாகத்தில் அவர் அஸ்விநீதேவர் களுக்கு ஸோமரஸத்தைக் கொடுக்க முயலுகையில் இந்திரன் வஜ்ராயுதத்தை ஓங்கியதும், ச்யவனர் அவன் கையை ஸ்தம்பிக்கச்செய்து பிசாசை உண்டுபண்ணியதும், அது அவனிடம் சென்றதும்.)

பிறகு, சர்யாதி ச்யவனர் (யௌவனப்) பிராயத்திலிருப்பவ ராகச் செய்யப்பட்டதைக் கேட்டு மிகமகிழ்ந்து சேனையுடன் அவ ருடைய ஆஸ்ரமத்தை அடைந்தான். ச்யவனரும் ஸுகன்னி யும் தேவகுமாரனும் தேவ குமாரியும் போலிருப்பதைப் பார்த்து, மனைவியுடனிருக்கும் சர்யாதி பூமி முழுமையையும் அடைந்தாற் போல் மகிழ்ந்தான். அந்த ரிஷியினால் பூஜிக்கப்பட்டவனும் மனைவியுடனிருப்பவனுமான அரசன் அருகில் உட்கார்ந்து கொண்டு சுபமானவைவயும் மனத்தை மகிழ்விப்பவையுமான பேச் சுக்களைப் பேசினான். அரசனே! பிறகு, ச்யவனர் அவனை நோக்கி, இன்சொற்களைச் சொல்லிக்கொண்டு, 'அரசனே! நான் உனக்கு யாகத்தைச் செய்விப்பேன். யாகத்துக்குரிய பொருள் களைச் சித்தஞ் செய்வாயாக' என்று சொன்னார். மஹா ராஜனே! பிறகு, சர்யாதிமகாராஜன் மிக்க மனக்களிப்புற்று ச்யவன ருடைய அந்த வாக்கியத்தைப் புகழ்ந்தான். அவன் சிறந்ததும் யஜ்ஞத்திற்குரியதுமான தினத்தில் விரும்பிய எல்லாப்பொருளும் நிரம்பின உத்தமமான யாகசாலையைச் செய்வித்தான். அரசனே! அதில் ப்ருகுகுமாரரான ச்யவனர் அவனுக்கு யாகத்தைச் செய் வித்தார். அந்தயாகத்தில் நேர்ந்த அதிசயங்களை என்னிடமிருந்து தெரிந்துகொள். அப்பொழுது, ச்யவனர் அஸ்விநீதேவர்களுக்காக

ஸோமத்தை எடுத்துவைத்தார். அவர்களுக்காகக் [1] கிரகத்தைச்செய்கிற அவரை அந்த இந்திரன் தடுத்தான்.

இந்திரன், 'இந்த அச்விநீதேவர்களிருவரும் ஸோமத்துக்குத் தகாதவர்களென்பது என் எண்ணம். இவர்கள் ஸ்வர்க்கத்தில் தேவர்களுக்கு வைத்யர்கள். அந்தச் செய்கையினால் தகாதவர்கள்' என்று சொன்னான். ச்யவனர், 'மகேந்திரனே! என்னைத் தேவனைப்போல ஜரை இல்லாதவனாகச் செய்தவர்களும் மஹாத்மாக்களும் மிக்க அழகாகிய செல்வமுள்ளவர்களுமான அந்த நாஸத்யர்களை அவமதிக்காதே. உன்னையும் மற்றத் தேவர்களையும் தவிர அவர்கள் ஸோமத்தை யாது காரணத்தால் அடையத் தகாதவர்கள்? தேவேந்திர! புரந்தர! அச்விநீதேவர்களையும் தேவர்களென்று நீ அறிவாயாக' என்று சொன்னார். இந்திரன், 'சிகித்ஸை செய்பவர்களும் நினைத்த வண்ணம் ரூபத்தை எடுப்பவர்களும் மனிதர்களுடைய லோகத்தில் ஸஞ்சரிப்பவர்களுமான வேலைக்காரர்கள் இங்கே எவ்வாறு ஸோமபானத்துக்குத் தகுதியுள்ளவர்கள்?' என்று சொன்னான். அப்பொழுது இந்த வாக்கியத்தையே இந்திரன் அடிக்கடி சொல்ல, ச்யவனர் இந்திரனை அலக்ஷ்யம் செய்து, பிறகு, ஸோமக்ரஹத்தைச் செய்தார். அப்பொழுது, அச்விநீதேவர்களுக்காக உத்தமமான ஸோமத்தை எடுக்கப்போகிற அவரைப் பார்த்துத் தேவனான இந்திரன், 'இவர்களுக்காக நீர் ஸோமத்தை உம் இஷ்டப்படி கிரஹிப்பீராகில் கோர ரூபமுள்ளதும் தன்னினும் சிறந்ததில்லாததுமான வஜ்ரத்தால் உம்மை அடிப்பேன்' என்கிற இந்த வசனத்தை உரைத்தான். இவ்வாறு சொல்லப்பட்ட அந்தப் பார்க்கவர் இந்திரனைப் பார்த்து நகைத்துக்கொண்டு அச்விநீதேவர்களுக்காக விதிப்படி உத்தமமான ஸோமக்ரஹத்தைக் கிரகித்தார். பிறகு, இந்திரன் இவரைக் குறித்துக் கோர ரூபமுள்ள வஜ்ராயுதத்தை எறிந்தான். எறிகிற அவனுடைய கையை ச்யவனர் அசைவற்று நிற்கும்படி செய்தார். மிகப்பெரிய வல்லமையுள்ள அவர் அதனை ஸ்தம்பிக்கச் செய்து தேவனான அவனைக் கொல்ல முயல்பவராகி [2] க்ருத்யையை உண்டுபண்ண விரும்பி மந்திரத்தினால் அக்னியில்

[1] ஒவ்வொரு தேவதையையும் உத்தேசித்து, உரல் வடிவமாகச் செய்த மரப்பாத்திரத்தில் ஸோமரஸத்தை மந்திரத்துடன் எடுத்துவைத்துக்கொள்வது; க்ரஹம்=கிரஹித்தல்=எடுத்தல்.

[2] கர்ண பர்வம் 446-ம் பக்கம் குறிப்பிலும், சாந்திபர்வம் 762-ம் பக்கம் குறிப்பிலும் பார்க்க.

ஹோமம் செய்தார். பிறகு, அந்த முனிவருடைய தவ வலிமையி ஞல் அந்த அக்னியிலிருந்து மிக்க வீர்யமுள்ளதும் பெரிய சரீர முள்ளதும் மதமென்கிற பெயருள்ளதுமான பெரிய அஸுர ரூபி யான க்ருத்யை உண்டாயிற்று. அதனுடைய சரீரமானது தேவர்களாலும் அஸுரர்களாலும் இவ்விதமென்று சொல் லப்பட முடியாமலிருந்தது. அதனுடைய வாயானது பயங் கரமாகவும் முனை கூர்மையான பற்களுள்ளதாகவும் பெரி தாகவுமிருந்தது. அதனுடைய ஒரு மோவாய் பூமியிலிருந்த து; மற்றென்று ஆகாயத்தை அடைந்தது. நான்கு தெற் றுப்பற்கள் நூறு நூறு யோஜனம் நீண்டிருந்தன. அதனுடைய மற்றப் பற்கள் பத்து யோஜனதூரம் நீண்டவைகளாகவும் மாளி கைகளின் சிகரம்போன்ற வடிவமுள்ளவைகளாகவும் சூலாயுதத் தின் முனைபோன்ற தோற்றமுள்ளவைகளாகவும் இருந்தன. கை கள் பரிகாயுதம்போன்றவைகளாகவும் பதினயிரம் யோஜனை நீள முள்ளவைகளாகவும் ஒத்தவைகளாகவும் இருந்தன. இரு கண்களும் ஸூர்ய சந்திரர்கள்போலப் பிரகாசித்தன. வாயானது ஊழித் தீப்போன்றிருந்தது. அந்தப் பிசாசானது மின்னல் அசைவது போல் அசைகின்றதும் ஆவலுள்ளதுமான நாவினல் வாயைநக்கிக் கொள்வதும் வாயைத் திறந்துகொண்டதும் கோரமான கண்களுள் ளதும் உலகத்தை வலிமை செய்து விழுங்குகின்றதுபோன்றதும் மிக்க கோபங்கொண்டதும் பயங்கரமாகத் தோற்றும் பேரொலி யால் உலகங்களை எதிரொலியிடச் செய்வதுமாகி இந்திரனைத் தின்ன விரும்பி அருகில் ஓடியது.

நூற்றிருபத்தாறுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(இந்திரனல் துதிக்கப்பட்ட ச்யவனர் அவன்மீது ஏவின கிருத் யையைத் திருப்பி ஸ்திரீகள் முதலியவற்றில் பிரித்துவிட்ட தும், லோமசர் ஸுகன்யோபாக்யானத்தை முடித் துப் பல தீர்த்தங்களின் மகிமையைக் கூறியதும்.)

பிறகு, பயங்கரமான முகமுள்ளதும் யமன்போல் வாயைத் திறந்துகொண்டு வருகின்றதும் தின்னப் போவதுமான அந்த மதத்தைக்கண்டு, தேவனும் நூறு யாகங்களைச் செய்தவனும் அஞ்ச

யாதபடி செய்யப்பட்ட கையுள்ளவனும் பயத்தினுல் அடிக்கடி கடைவாய்களை நக்குகிறவனும் பயத்தினுல் பிடிக்கப்பட்டவனுமான தேவராஜன், ச்யவனரைப் பார்த்து, 'ப்ருகுநந்தனரே! இன்றுமுதல் இந்த அச்வினீதேவர்கள் (யாகங்களில்) ஸோமபானத்துக்குத் தகுதியுள்ளவர்களாவர். இந்த வசனம் உண்மை. பிராம்மணரே! என்விஷயத்தில் அருள்புரிவீராக. உம்முடைய நன்முயற்சி வீணுகவேண்டாம். இந்தச் செய்கை சிறந்ததாகுக. பிரம்மரிஷியே! நீர் பயனில்லாத கார்யத்தைச்செய்யமாட்டீர் என்று நான் அறிகிறேன். பிராம்மணரே! நீர் இந்த அச்வினீ தேவர்களை இப்பொழுது ஸோமத்தைக்குடிப்பவர்களாகச் செய்ததுபோல என்னையும் க்ஷேமத்தோடு சேர்க்கக் கடவீர். பார்க்கவரே! 'உம்முடைய வல்லமை அதிகமாகவே பிரகாசிக்கவேண்டும். ஸுகன்னியின் பிதாவான இவனுடைய கீர்த்தியும் உலகத்தில் ப்ரஸித்தியடையவேண்டும்' என்னும் எண்ணத்தால் உம்முடைய வல்லமையைப் பிரகாசப்படுத்தக்கூடிய இந்தக்கார்யம் என்னுல் செய்யப்பட்டது. ஆதலால், நீர் விரும்புகிறபடியே ஆகுக. என் விஷயத்தில் அருள் செய்வீராக' என்று சொன்னுன். இந்திரனுல் இவ்வாறு சொல்லப்பட்ட மஹாத்மாவான ச்யவனருடைய அந்தக் கோபமானது விரைவில் போய்விட்டது. இந்திரனையும் விடுவித்தார்.

அரசனே! மிக்க வல்லமையுள்ள ச்யவனர் முன்பு படைத்த மதத்தையும் மத்யபானத்திலும் ஸ்திரீகளிடத்திலும் பாச்சிகைகளிலும் வேட்டையிலும் மறுபடியும் மறுபடியும் பகுத்து வைத்தார். பேசுகிறவர்களுள் சிறந்த ச்யவனர் அப்பொழுது மதத்தை நன்கு அமைத்துவிட்டு, இந்திரனையும் அச்வினீதேவர்களுள்ளிட்ட தேவர்களையும் ஹோமத்தால் நன்கு திருப்தியடையச் செய்தும் அந்த அரசனுக்கு யாகத்தைச் செய்வித்தும் எல்லா உலகங்களிலும் தமது சக்தியைப் பிரஸித்தப்படுத்தியும் ஒத்து நடப்பவளான ஸுகன்னியுடன் வனத்தில் இனிது வாழ்ந்து வந்தார். வேந்தனே! பக்ஷிகள் ஒலித்துக்கொண்டிருக்கிற அவருடைய தடாகமானது இதோ விளங்குகிறது. இதில் ஸகோதரர்களுடன் நீ பித்ருக்களையும் தேவர்களையும் த்ருப்தியடையச் செய்வாயாக. பாரத! வேந்தனே! இதனையும் ஸிகதாக்ஷத்தையும் தரிசித்து ஸைந்தவாரண்யத்தை அடைந்து [1] குல்

[1] குல்யை = வெட்டப்பட்ட வாய்க்கால்; அல்லது சிற்றுறு.

யைகளுடைய தரிசனத்தைச் செய்வாயாக. மஹாராஜனே! எல்லாப் புஷ்கரங்களிலும் ஜலத்தில் ஸ்நானம் செய்வாயாக. பாரத! ஸ்தாணுவின் மந்திரங்களை ஜபித்து ஸித்தியை அடைவாய். நரஸ்ரேஷ்டனே! குந்தீபுத்திரா! எல்லாப் பாவங்களையும் போக்கும் திறமையுள்ள த்ரேதை த்வாபரம் இரண்டின் ஸந்திக்குத் துல்யமான காலம் இதோ காணப்படுகிறது. இது எல்லாப் பாவங்களையும் போக்குவது. இதிலும் நீ ஸ்நானம் செய்வாயாக. கற்றறிந்தவர்களுக்கு இருப்பிடமானதும் எப்பொழுதும் பழங்களுள்ளதும் எப்பொழுதும் பிரவாகமுள்ளதும் தேவதைகளுடைய உத்தம ஸ்தானமுமான ஆர்ச்சீக பர்வதமும் இருக்கிறது. யுதிஷ்டிர! இதோ பலவிதமான தேவதைகளினுடைய யாக வேதிகளும் இருக்கின்றன. இந்தச் சந்திர தீர்த்தத்தை வைகானஸர்கள் முதலிய ரிஷிகளும் அப்படியே வாலகில்ய ரிஷிகளும் அடைகிறார்கள். புண்யமான முக்கோண வடிவமுள்ள வாரணஸியும் திரிவேணி ஸங்கமமான ப்ரயாகையும் இருக்கின்றன. எல்லாவற்றையும் முறையே பிரதக்ஷிணம் செய்து இஷ்டப்படி ஸ்நானம் செய்வாயாக. ராஜேந்திர! மன்னவ! இங்கே சந்தனு ராஜனும் சுனக ராஜனும் நரநாராயணரிருவரும் ஈஸ்வரத்யானத்தில் பற்றுதலுள்ளவர்களாக நெடுங்காலம் தவம்புரிந்து அழிவற்ற ஸ்தானத்தை அடைந்தார்கள். யுதிஷ்டிர! இந்த ஆர்ச்சீக பர்வதத்தில் மஹரிஷிகளோடு கூடத் தேவர்களும் பித்ருக்களும் நித்திய வாஸம்செய்துகொண்டு தவம்புரிந்தார்கள். அவர்களை நீ பூஜிப்பாயாக. பிரஜைகளுக்கு அதிபதியே! இந்த இடத்தில் அந்த ரிஷிகள் சருக்களையும் புஜித்தார்கள். இந்த இடத்தில் யமுனையும் வற்றாத பெருக்குள்ளது; [1] கிருஷ்ணர் என்னும் வியாஸரும் தவம் புரிவதில் பற்றுதலுள்ளவர். பகைவர்களை அழிப்பவனே! பாண்டவ! நகுல ஸஹதேவர்கள், பீமஸேனன், திரௌபதி ஆகிய எல்லோரும் உன்னுடன்கூடவே இந்த இடத்தில் செல்வோம். மனிதர்களுக்கு அதிபதியே! எந்த இடத்தில், தாதாவும், விதாதாவும், வருணனும், மேலே வந்தார்களோ புண்யமான இந்திரனுடைய அந்த ப்ரஸ்ரவண தீர்த்தம் இது. அரசனே! சாந்தியுள்ளவர்களும், சிறந்த தர்மமுள்ளவர்களுமான அவர்களும் இங்கே வஸித்தார்கள். கபடமற்ற புத்தி

---

1 'க்ருஷ்ண:' என்பது மூலம்; 'கிருஷ்ணன்' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

யுடையவர்களான மித்திரகுமாரர்களுடைய மங்களகரமான சிறந்த மலை இதோ இருக்கிறது. [1] வேந்தனே! மஹரிஷிகளுடைய கூட்டங்களால் அடையப்பட்டதும், பலவித யாகங்களால் நிரம்பியதும் புண்யமானதும் பாப பயத்தைப் போக்குகிறதுமான அந்த யமுனை இது. கௌந்தேய! இங்கே பெரியவில்லுள்ளவனும் அரசனுமான மாந்தாதாவும் [2] ஸஹதேவன்மகனும் கொடுப்பவர்களுள் சிறந்தவனுமான ஸோமகனும் தாங்களே யாகம் செய்தார்கள்' என்று கூறினர்.

நூற்றிருபத்தேழாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர் மாந்தாதா என்னும் பெயர்க் காரணத்தையும் மாந்தாதாவின் சரித்திரத்தையும் கூறியது.)

யுதிஷ்டிரர், 'மஹாப்ராம்மணரே! மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்றவனும் அரசர்களுள் புலிபோன்றவனும் யுவனாஸ்வன்புத்ரனுமான மாந்தாதா என்னும் ராஜஸ்ரேஷ்டன் எவ்வாறு பிறந்தான்? எவனுக்கு, மூவுலகங்களும், மஹாத்மாவான விஷ்ணுவுக்கு வசப்பட்டிருந்ததுபோல் வசப்பட்டிருந்தனவோ அளவிறந்த காந்தியுள்ள அந்த மாந்தாதா எவ்விதம் இந்தப் பெரும் புகழையும் பெற்றான்? தோஷமற்றவரே! மெய்யான கீர்த்தி பெற்றவனும் புத்திமானுமான அந்த மாந்தாதாவினுடைய இந்தச் சரித்திரம் உம்மால் சொல்லப்படுவதை நான் கேட்க விரும்புகிறேன். இந்திரனுக்குச் சமமான ஒளியுள்ளவனும் நிகரற்ற வீர்யமுள்ளவனுமான அவனுக்கு மாந்தாதா என்கிற பெயரும் பிறப்பும் உண்டான விதத்தைச் சொல்லுவதற்கு நீர் வல்லவர்' என்று வினவ, லோமசர் கூறலானர்.

'அரசனே! மஹாத்மாவான அந்த அரசனுக்கு உலகங்களில் மாந்தாதா என்கிற பெயர் சொல்லப்படுகிற காரணத்தைக் கருத்துடன் கேள். யுவனாஸ்வனென்கிற அரசன் இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்தவன். அந்த அரசன் மிகுதியான தக்ஷிணைகளுள்ள

---

1 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

2 'ஸ்ருஞ்சயனுடைய பௌத்ரன்' என்பது பழையவுரை.

யாகங்களைச் செய்தான். தர்மத்தை வளர்ப்பவர்களுள் சிறந்தவனான அவன் ஆயிரம் அஸ்வமேதங்களைச் செய்து மிக நிரம்பின தக்ஷிணைகளுள்ள முக்கியமான மற்ற யாகங்களையும் செய்தான். புத்திரனில்லாதவனும் பெருந்தன்மையுள்ளவனுமான அந்த ராஜரிஷியானவன் மந்திரிகளிடம் அந்த ராஜ்யத்தை வைத்துவிட்டுப் பெரிய விரதமுள்ளவனும் மனத்தை வென்றவனுமாகிச் சாஸ்திரங்களில் கண்ட விதிப்படி மனத்தைக் கடவுளிடம் சேர்த்துத் தினமும் வனத்தில் வசித்துக்கொண்டிருந்தான். வேந்தனே! அந்த அரசன் ஒரு ஸமயத்தில் பட்டினியால் துன்பமுற்றவனாகவும் தாகத்தால் நெஞ்சுலர்ந்தவனாகவும் ப்ருகுவினுடைய ஆஸ்ரமத்தில் நுழைந்தான். ராஜஸ்ரேஷ்டனே! மகாத்மாவும் ப்ருகுநந்தனருமான மஹரிஷியானவர் ஸுத்யும்னனுடைய குமாரனான (அந்த) யுவநாஸ்வனுக்குப் புத்திரோத்பத்திக்காக அதே இரவில் ஓர் இஷ்டியைச் செய்தார். ராஜேந்திரனே! அவனுடைய மனைவியானவள் பருகி இந்திரனுக்கு ஸமனான புத்திரனைப் பெறுதற்குரியதும் மந்திரங்களால் பரிசுத்தமானதுமான தீர்த்தத்தால் நிறைக்கப்பட்ட பெரிய குடம் முந்தியே அங்கே வைக்கப்பட்டிருந்தது. அரசனே! நன்கு விதித்தம் செய்யப்பட்ட அந்தத் தீர்த்தம் வைக்கப்பட்டிருந்த கலசத்தை அந்த மகரிஷிகள் வேதியில் வைத்துவிட்டு உறங்கினார்கள். தொண்டையுலர்ந்தவனும் மிகவும் தாகத்தால் வருந்துகின்றவனுமான அந்த யுவனாஸ்வராஜன் குடி தண்ணீரை விரும்பி இரவில் விழித்திருந்தனால் களைத்த அந்த ரிஷிகளைத் தாண்டி அந்த ஆஸ்ரமத்தில் நுழைந்து சாந்தனாகிக் குடிநீரை யாசித்தான். அப்பொழுது, களைத்தவனும் பறவையின் ஒலிபோல உலர்ந்ததொண்டையால் அழைக்கிறவனுமான அவனுடைய குரல் ஒருவருக்கும் கேட்கவில்லை. பிறகு, அந்த அரசன் ஜலம் நிரம்பியிருந்த அந்தக்குடத்தைப் பார்த்து வேகத்துடன் அருகில் ஓடித் தண்ணீரைக்குடித்து (க்குடத்தை) எறிந்துவிட்டான். தாகத்தால் வருத்தப்பட்ட புத்திமானான அந்த அரசன் குளிர்ந்த நீரைக் குடித்துத் தாக சாந்தியையடைந்து அப்பொழுது மிக்க ஸுகமுள்ளவனானன். பிறகு, தபோதனர்களுடனிருக்கும் அந்த முனிவர்கள் விழித்துக்கொண்டார்கள். அவர்கள் எல்லோருமே அந்தக் கலசம் நீரில்லாமலிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் ஒன்றுசேர்ந்து, 'இது யாருடைய செய்கை?' என்று வினவினார்கள். யுவநாஸ்வன், 'இவ்விதச்

செய்கை என்னுடையது' என்று உண்மையை ஒப்புக்கொண்டான். அப்பொழுது, பகவானுன பார்க்கவர் அவனைப் பார்த்து, 'நீ செய்த காரியம் தக்கதன்று. ஏனெனில், புத்திரனை உண்டுபண்ணுவதற்காகத் தவத்தினுல் விதித்துஞ் செய்யப்பட்ட தீர்த்தம் வைக்கப்பட்டிருந்தது. ராஜரிஷியே! மிக்க பல பராக்கிரமங்களுள்ளவனே! உனக்குப் புத்திரனுண்டாவதற்காக உக்கிரமான தவத்தைச்செய்து இந்தக் கலச தீர்த்தத்தில் [1] ஒரு திவ்ய சக்தியானது வைக்கப்பட்டிருந்தது. அரசனே! தன் திறமையால் இந்திரனையும் யமன் வீட்டை அடைவிக்கக்கூடியவனும் மிக்க வலிமையுள்ளவனும் மிக்க வீர்யமுள்ளவனும் தவ வன்மையுடன் சேர்ந்தவனுமான புத்திரன் உண்டாகத் தக்க இந்த விதியினுல் என்னுல் இது விதித்துஞ் செய்யப்பட்டிருந்தது. அரசனே! உன்னுல் இப்பொழுது செய்யப்பட்ட தீர்த்த பானமானது தக்கதன்று. இப்பொழுது இதனை நம்மால் இதைக் காட்டிலும் வேறுவிதமாகச் செய்ய முடியாது. நீ இப்படிச் செய்தது தெய்வத்தாலேயே செய்யப்பட்டதென்பது நிச்சயம். மஹாராஜனே! என்னுடைய தவ வலிமையினுல் நிறைக்கப்பட்டதும் விதிப்படி மந்திரங்களால் பூஜிக்கப்பட்டதும் தாகங்கொண்ட உன்னுல் பருகப்பட்டதுமான தீர்த்தத்தால் நீ உன்னுலேயே இப்படிப்பட்ட புத்திரனைப் பெறுவாய். மஹாராஜனே! எப்படி, வீர்யமுள்ளவனுன நீ இந்திரனுக்கொப்பான புத்திரனைப் பெறுவாயோ, உனக்குப் பிராணனேடு பிரிவும் உண்டாகாதோ, கர்ப்பத்தைத் தாங்குவதனுலுண்டாகும் ச்ரமத்தையும் நீ அடையமாட்டாயோ அப்படிப்பட்ட ஆச்சரியமான இஷ்டியை நாம் உனக்குச் செய்வோம். ராஜேந்திர! நீ துயரப்படாதே. விதி மிக வலிதன்றே?' என்று சொன்னுர். பிறகு, நூறு வருஷம் நிரம்பினவுடன், மகாத்மாவான அந்த அரசனுடைய இடவிலாவைப் பிளந்துகொண்டு ஸூர்யன் போலிருப்பவனும் மகாதேஜஸ்வியுமான புதல்வன் வெளிப்பட்டான். அரசனுன அந்த யுவனுச்வனையும் மரணம் அணுகவில்லை. அது ஆச்சர்யமாயிருந்தது. பிறகு, மகாதேஜஸ்வியான இந்திரன் அந்தப் புத்திரனைப் பார்க்க விரும்பி வந்தான். பிறகு, தேவர்கள் அந்த மகேந்திரனைப் பார்த்து, 'இந்தக் குழந்தை தாயின் பாலில்லாமையால் எதைப் பருகும்?' என்று வினவினுர்கள். பிறகு, இந்திரன், 'இவன் (மாம்=) என்னை (தாஸ்யதி=)

---

1 'ப்ரம்ம' என்பது மூலம்.

பருகுவன்' என்று இவன் வாயில் தன் சுட்டு விரலை வைத்தான். இந்திரனால் இவ்வண்ணம் சொல்லப்படவே, இந்திரனுடன் கூடின தேவர்கள் இவனுக்கு, 'மாந்தாதா' என்று பெயரிட்டார்கள். அரசனே! அப்பொழுது அந்தக் குழந்தை இந்திரனால் கொடுக்கப்பட்ட சுட்டுவிரலைப்பருகி மகாதேஜஸ்வியாகப் பதின்மூன்று [1] முழ உயரம் வளர்ந்தான். தனுர்வேதத்துடன் கூடிய வேதங்களும் தேவ ஸம்பந்தமான அஸ்திரங்களும் தியானம் செய்யப்பட்டவுடனே பிரபுவான அந்த மகாராஜனை முழுமையும் வந்தடைந்தன. ஆஜகவமென்கிற வில்லும் ஸ்வர்க்கலோகத்தில் உண்டான அம்புகளும் பிளக்க முடியாத கவசமும் உடனே அவனை வந்தடைந்தன. பாரத! பகவானான இந்திரனால் நேரில் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்ட அந்த மாந்தாதா, மூன்று உலகங்களையும், விஷ்ணுவானவர் காலடிகளால் ஜயித்ததுபோலத் தர்மத்தால் ஜயித்தான். மகாத்மாவான அவனுடைய கட்டளையானது தடையற்றதாக நடைபெற்றது. ராஜரிஷியாகிய அவனை ரத்தினங்கள் தாமே வந்தடைந்தன. பூமிக்கு அதிபதியே! அவ்வரசனுடைய இந்தப் பூமியானது தனங்களால் நிறைந்திருந்தது. அந்த அரசனால் மிக நிரம்பின தக்ஷிணையுள்ள பலவகைப்பட்ட அநேக யாகங்கள் செய்யப்பட்டன. அரசனே! அக்னிசயனங்களைச் செய்தவனும் பேராற்றலுள்ளவனும் அளவிறந்த காந்தியுள்ளவனுமான அவன் மிக்க தர்மங்களைச்செய்து இந்திரனுடைய அர்த்தாஸனத்தைப் பெற்றான். தர்மத்தில் எப்பொழுதும் நிலைபெற்றவனும் புத்திமானுமான அவனால் ஸமுத்திரங்களுடனும் பட்டணங்களுடனும் கூடிய பூமியானது கட்டளையினாலேயே ஒரே தினத்தில் ஜயிக்கப்பட்டது. மகாராஜனே! மிக்கதக்ஷிணைகளுள்ள அவனுடைய யாகங்களின் மேடைகளால் நான்கு (ஸமுத்திரங்களை) எல்லையாகக் கொண்ட பூமியானது நிரம்பியதாயிற்று. (மேடைகளால்) மறைக்கப்படாத இடம் சிறிதுமில்லை. மகாராஜனே! அந்த மகாத்மாவினால் பிராம்மணர்களுக்கும் பத்துலக்ஷம்கோடிப் பசுக்கள் கொடுக்கப்பட்டனவென்று சொல்லுகிறார்கள். பன்னிரண்டு வர்ஷகாலம் மழை இல்லாமற்போனபொழுது அந்த மகாத்மாவினால் பயிர்கள் விருத்தி அடைவதற்காக வஜ்ரபாணியான இந்திரன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே மழை பொழியும்படி செய்யப்பட்டது. அவ

1 'சாண் எனினுமாம்' என்பது பழையவுரை.

னால் சந்திரவம்சத்தில் தோன்றினவனும் மகிமையுள்ளவனும் மகா மேகம்போலக் கர்ஜிப்பவனுமான காந்தார தேசாதிபதியானவன் அம்புகளால் மிக அடித்துக் கொல்லப்பட்டான். அரசே! மனத்தை அடக்கின அவனால் நான்குவிதமான பிரஜைகள் ரக்ஷிக்கப்பட்டன. மிக்க வல்லமையுள்ள அவனால் தன்தவத்தினால் உலகங்கள் வாட்டப்பட்டன. குருக்ஷேத்திரத்தின் மத்தியில் [1] மிக்க புண்யமான தேசத்தில் ஆதித்யனுடைய காந்திபோன்ற காந்தியுள்ள அவனுடைய யாகம் நடந்த இடம் இது. ராஜஶ்ரேஷ்டனே! பூபதியான மாந்தாதாவைப்போல நீயும் தர்மத்தைச் செய்து பூமியைக் காக்கக்கடவாய்; ஸ்வர்க்கலோகத்தையும் அடைவாய். பூபாலனே! நீ என்னைக் கேட்ட மாந்தாதாவினுடைய பெரிய சரித்திரமும் சிறந்த பிறப்பும் ஆகிய இவை முழுமையும் என்னால் உனக்குக் கூறப்பட்டன' என்று சொன்னார். பாரதரே! பிறகு, லோமசமஹரிஷியினால் இவ்வாறு கூறப்பட்ட அந்த யுதிஷ்டிரர் மறுபடியும் ஸோமகனைப்பற்றி வினவலானார்.

நூற்றிருபத்தெட்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ஸோமகனென்னும் அரசனுடைய நூறு மனைவியருள் மூத்தவளுக்கே ஒரு பிள்ளை பிறந்ததும், அவன் எறும்பு கடித்து வருந்துவதைக் கண்ட அரசன் பல பிள்ளைகளை அடைய உபாயங்கேட்டதும், புரோகிதர் அந்த ஒரு புத்ரனைப் பசுவாக்கி ஹோமம் செய்து அந்தப் புகையை முகர்வதனால் நூறு மனைவியரிடத்திலும் நூறு புத்திரர்கள் உண்டாவரென்றதும்.)

யுதிஷ்டிரர், 'கொடுப்பவர்களுள் சிறந்தவனான ஸோமகனென்கிற அந்த அரசன் எவ்வித வீர்யமுள்ளவனாக இருந்தான்? அவனுடைய செய்கைகளையும் பெருமையையும் உள்ளபடி கேட்க விரும்புகிறேன்' என்று வினவ, லோமசர், 'யுதிஷ்டிர! ஸோமகனென்று பிரஸித்திபெற்ற தர்மவானான ஓரரசன் இருந்தான். அரசனே! அவனுக்கு அப்பொழுது ஒத்தவர்களான நூறுமனைவியர் இருந்தனர். அந்த அரசன் நெடுங்காலம் பெருமுயற்சி செய்தும் அவர்

---

1 பொருந்தாமையால் ஒரு சொல் விடப்பட்டது.

களிடம் ஒரு புத்திரனைக்கூட அடையவில்லை. பிராய முதிர்ந்தவ னும் முயல்கின்றவனும் புத்திமானுமான அவனுக்கு ஒரு ஸமயத் தில் அவனுடைய மூத்த மனையாளிடத்தில் ஜந்துவென்கிற ஒரு புத்திரன் உண்டானான். பிரஜைகளுக்கு நாதனே! எல்லாத் தாய்மார்களும் காம போகங்களை அலக்ஷ்யம் செய்து, பிறந்திருக் கிற அவனை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். பிறகு, ஒரு ஸமயம் (அந்த) ஜந்துவை ஓர் எறும்பு அரையில் கடித்தது. வேந்தே! கடிக்கப்பட்ட அந்தச் சிறுவன் அந்தத் துக்கத்தால் அழுதான். அதனால் அந்தத் தாய்மார்களெல்லாரும் மிக்க துக்கத் தை அடைந்தவர்களாக ஜந்துவை விரைவாகச் சூழ்ந்துகொண்டு மிக அழுதார்கள். அந்தச் சப்தமானது நெருங்கியதாயிற்று. மந்திரிகளின் ஸபைநடுவில் புரோகிதருடன் உட்கார்ந்துகொண் டிருந்த அந்த அரசன் அந்தத் துன்பக்குரலைச் சடிதியிற் கேட் டான். பிறகு, அரசன், 'இது என்ன' என்று (அறிந்துவர) வாயில்காப்பவனை அனுப்பினான். வாயில்காப்பவன் புத்திரனைப் பற்றி நடந்ததை அவனுக்குச் சொன்னான். பகைவரை அடக்கு கிறவனான அந்த ஸோமகன் மந்திரிகளோடுகூட விரைவாக எழுந் திருந்து அந்தப்புரத்தில் நுழைந்து புத்திரனைத் தேற்றினான். அரசே! அரசன் அந்தப் புத்திரனைச் சமாதானப்படுத்தி, அந்தப் புரத்தினின்று வெளிவந்து புரோகிதருடனும் மந்திரிகளுடனும் சேர்ந்து உட்கார்ந்தான்.

ஸோமகன், 'இவ்வுலகத்தில் ஒரே புத்திரனையுடைமை இகழத்தக்கது. (அதனினும்) புத்திரனில்லாமை சிறந்ததாகும். பிராணிகளுக்கு எப்பொழுதும் நோயுண்டாதலால் ஒரே புத்தி ரனையுடைமை துக்கமே. பிராம்மணரே! பிரபுவே! புத்திரர் களை விரும்பின என்னால் பரீக்ஷித்து (எனக்குத்) தகுந்தவர்க ளான இந்த நூறு மனைவிகள் விவாகம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு ஸந்ததியில்லை. முயலுகின்ற எல்லா மனைவிக ளுள்ளும் (ஒரு மனைவியினிடத்தில்) எனக்கு இந்த ஜந்து என்கிற ஒரே புத்திரன் அதிகப்ரயாஸத்தால் பிறந்தான். இதைக்காட்டிலும் மேலான துக்கம் என்ன இருக்கிறது? பிராம்ம ணோத்தமரே! மனைவியருடனிருக்கும் எனக்குப் பிராயமும் சென்று விட்டது. இந்த ஸ்திரீகளுடைய பிராணன்களும் என்னுடைய உயிரும் இந்த ஒரு சிறிய புத்திரனையே பொறுத்திருக்கின்றன. பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ செய்வதற்கரியதாகவோ

இருக்கிற எந்தச்செய்கையினால் நூறுபுத்திரர்கள் உண்டா வார்களோ அப்படிப்பட்ட சிறந்த கர்மாவானது இருக்கிறதா?' என்று வினவ, புரோஹிதர் கூறலானார். 'ஸோமக! எதனால் நூறு புத்திரர்கள் உண்டாவார்களோ அப்படிப்பட்ட கர்மாவானது இருக்கிறது. அதை நீ செய்ய வல்லவனாயின் சொல்லுவேன்' என்று கூறினார். ஸோமகன், 'எதனால் நூறுபிள்ளைகள் உண்டாவார்களோ அந்தக்காரியம் செய்யக்கூடியதானாலும் செய்யக்கூடாததானாலும் என்னால் செய்யப்பட்டதென்றே நீர் அறியக்கடவீர். பகவானான தேவரீர் (அதனை) எனக்குச் சொல்லக்கடவீர்' என்று வினவ, புரோஹிதர், 'அரசனே! என்னால் உனக்குச் (செய்விக்கப்படும்) விரிவான யாகத்தில் நீ ஜந்து (என்கிற புத்திரனைப் பசுவாக்கி) அதனால் யாகம் செய்வாயாக. பிறகு, உனக்கு ஒளிபொருந்தின நூறுபிள்ளைகள் சீக்கிரம் உண்டாவார்கள். வபையானது ஹோமம் செய்யப்படும் பொழுது அந்தத் தாய்மார்கள் புகையை முகர்ந் தால், பிறகு, மிகுந்த வீர்யமுள்ள புத்திரர்களை உனக்குப் பெறு வார்கள். ஜந்துவானவன் மீண்டும் அந்தத்தாயினிடத்திலேயே உனக்குப் புத்திரனாகப் பிறப்பான். இவனுடைய இடவிலாவிலுள்ள பொன்னிறமான மச்சமும்இருக்கும்' என்றுகூறினார்.

நூற்றிருபத்தோன்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(புரோகிதர்கட்டளையால் ஸோமகன் ஜந்துவின்வபையை ஹோமஞ் செய்ததும், அதன் வாசனையை முகர்ந்ததனால் அவனுடைய நூறுமனைவியரிடமும் நூறுபுத்திரர்கள் உண்டானதும், அரசனும் புரோஹிதரும் இறந்தபின் தமது வினைகளின் பயனைச்சேர்ந்து அனு பவித்ததும்.)

ஸோமகன், 'பிராம்மணரே! எதை எதை எப்படி எப் படிச் செய்யவேண்டுமோ அதை அதை அப்படி அப்படிச் செய் வீராக. புத்திரர்களின்விருப்பத்தால் உம்முடையவசனம் முழுமை யையும் செய்வேன்' என்று சொன்னான்.

பிறகு, அந்தப் புரோகிதர் அந்த ஜந்துவைப் (பசுவாக்கி) ஸோமகனுக்கு யாகம் செய்வித்தார். தாய்மார்களோ, 'ஆ! ஆ!

நாங்கள் கெட்டுவிட்டோம்' என்று அலறுகிறவர்களும் கடுந்துயரத்தால் வருந்துபவர்களும் இரங்குபவர்களுமாகிப் புத்திரனை வலிந்து இழுத்தார்கள். அவர்கள் அவனை வலக்கையில் பிடித்து இழுத்தார்கள். யாகம் செய்விக்கிற பிராம்மணரும் இடக்கையில் பற்றி இழுத்தார். (அவர்கள்) அன்றிற்பேடுகள்போலத் துன்புற்றிருக்கும் பொழுதே (அவர்) அந்தப்புத்திரனைப் பற்றி இழுத்து அவனை விதிப்படி கொன்று அவனுடைய வபையை ஹோமம் செய்தார். குருநந்தன! வபையானது ஹோமம் செய்யப்படும்பொழுது தாய்மார்கள் மணத்தை முகர்ந்து துன்பமுற்றவர்களாக உடனே பூமியில் விழுந்தார்கள். பிறகு, அந்த ராஜஸ்திரீகளனைவரும் கர்ப்பம்தரித்தார்கள். பிரஜைகளுக்கு நாதனே! பாரத! பிறகு, பத்துமாதங்கள் சென்றவுடன், ஸோமகனுக்கு அந்த எல்லாரிடமும் குறைவின்றி நூறு புத்திரர்கள் உண்டானார்கள். ஜந்துவென்பவன் முன்போலத் தன்தாயினிடத்திலேயே மூத்த பிள்ளையாகப் பிறந்தான். அவன் அவர்களுக்கு இஷ்டமாக இருந்ததுபோல (அவர்களுடைய) மற்றச் சொந்தப் பிள்ளைகள் இருக்கவில்லை. அந்த ஜந்துவுக்கு இடவிலாவில் பொன்னிறமான அந்த மச்சமும் இருந்தது. அந்த நூறு பிள்ளைகளுள் அவன் குணங்களாலும் மூத்தவனாகவே இருந்தான்.

பிறகு, ஸோமகன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, அந்தக் குருவானவர் பரலோகத்தை அடைந்தார். பிறகு, ஸோமகனும் பரலோகம் சென்றான். பிறகு, அவன், கோரமான நரகத்தில் வேவிக்கப்படுகின்ற அவரைக் கண்டான்; 'பிராம்மணரே! நீர் யாது காரணம்பற்றி நரகத்தில் வேவிக்கப்படுகின்றீர்?' என்று அவரை வினவினான். பிறகு, அக்னியினால் மிகவும் வேவிக்கப்படுகின்ற அந்தக் குரு அவனைப் பார்த்து, 'அரசனே! நீ என்னால் யாகம் செய்விக்கப்பட்டாய். இது அந்தச் செய்கையின் பயன்' என்று கூறினார். பிறகு, அந்த ராஜரிஷியானவன் அதனைக் கேட்டு யமதர்மராஜனை நோக்கி, 'நான் இந்தநரகத்தில் பிரவேசிப்பேன். எனக்கு யாகம் செய்வித்தவர் விடப்படவேண்டும். மிக்க புண்ணியசாலியான இவர் எனக்காகவன்றோ நரகத் தீயினால் வேவிக்கப்படுகிறார்? அப்படிப்பட்ட நான் என் தேகத்தை நரகத்தில் போடுவேன். குருவானவர் விடப்படவேண்டும்' என்று சொன்னான். யமதர்மராஜன், 'அரசனே! ஒருவன் செய்த வினையின் பயனை மற்றொருவன் ஒருபொழுதும் அனுபவிப்பதில்லை. பேசுகிறவர்க

ளுள் சிறந்தவனே! உன்னுடைய கர்மபலன்கள் இதோ காணப் படுகின்றன' என்ருன். ஸோமகன், 'நான் பிரம்மவாதியான (குரு) இன்றிப் புண்ணியலோகங்களை விரும்பவில்லை. தேவலோகத் திலோ நரகத்திலோ நான் இவருடன் கூடவே வஸிக்க விரும்பு கிறேன். தர்மராஜனே! நான் செய்கையினுல் இவருக்குச் சம மானவன். தேவனே! இந்தப் புண்ணியபாவங்களுடைய பலனனது எங்களுக்குச் சமமாக இருக்கவேண்டும்' என்ருன். தர்மராஜன், 'அரசனே! உனக்கு இப்படி விருப்பமிருந்தால் இவனுடைய (பாப) பலனைச் சேர்ந்து அனுபவிப்பாயாக. பிறகு, இவனேடுகூட ஒரே ஸமயத்தில் நற்கதியை அடைவாய்' என்று சொன்னுன். தாமரை மலர்போன்ற கண்களுள்ள அந்த அரசன் அப்படியே எல்லாவற் றையும் செய்தான். அவன் பாவந்தொலைந்து குருவுடன் அந்த நரகத்தினின்று விடுபட்டான். அரசனே! குருவினிடம் பிரிய முள்ள அவன், நல்வினையினுல் வசப்படுத்தப்பட்டவையும் சுபமான வையுமான விரும்பப்பட்ட (உலகங்களைக்) குருவான அந்த அந் தணருடன் கூடவே அடைந்தான். அவனுடைய ஆஶ்ரமமானது இதோ எதிரில் விளங்குகிறது. ஒரு மனிதன் பொறுமையுள்ள வனுக இங்கு ஆறுதினங்கள் வஸித்தால் நற்கதியை அடைகிருன். ராஜஶ்ரேஷ்டனே! கவலையற்றவர்களாகவும் மனத்தை அடக்கி னவர்களாகவும் இந்த இடத்திலும் ஆறுநாள் வஸிப்போம். குரு வம்சத்தைத் தாங்குபவனே! நீ ஸித்தமாக இரு' என்று சொன்னர்.

---

[1] நூற்றுமுப்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர், மார்க்கண்டேயாஶ்ரமம்சென்றதும், லோமசர் மார்க்கண்டேயருடைய சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லியதும்.)

நியமமுள்ளவரும் பகைவரை அடக்குபவரும் தர்மராஜரு மான யுதிஷ்டிரர் பரிசுத்தமான ஸோமகனுடைய ஆஶ்ரமத்தில்

---

1 இந்த அத்யாயம் வியாக்யான பாடத்தில் இல்லை; கிருஷ்ணுசாரி யர் புத்தகத்தில் அதிகபாட அடையாளத்தினுள் போடப்பட்டிருக் கிறது.

தம்பிமார் முதலியவர்களோடு ஆறுதினங்கள் வஸித்து, அந்த இடத்தினின்று புறப்பட்டு அப்படியே விரைவாக வடதிசையை நோக்கிச் சென்றார். அந்த அரசர் அவ்விடத்தினின்று வெகு தூரம் சென்று அங்கே மனத்தைக் கவருகின்றதும் மிக்க மலர்களாலும் கனிகளாலும் நிரம்பியதும் மஹாநதியினால் விளங்குவதுமான காட்டைப் பார்த்து, முனிவர்களுள் சிறந்தவரான லோமசரை நோக்கி, 'அழகியதும் பல மிருகங்களும் பக்ஷிகளுமுள்ளதும் அநேக புஷ்பங்களோடும் பழங்களோடும் சேர்ந்ததும் முனிவர்களுடைய கூட்டங்களால் அடையப்பட்டதும் புண்ணியமான ஜலமுள்ள பெரிய நதியோடுகூடியதுமான வனம் காணப்படுகிறது. இது என்ன? முனிவரே! பற்பல விதமான ரிஷிகளுடைய புண்ணியமான ஆஸ்ரமங்கள் காணப்படுகின்றன. புண்ணியமான இந்த ஆஸ்ரமம் யாருடையது? தோஷமற்றவர்களான இந்த ரிஷிகள் எவரைச் சேர்ந்தவர்கள்? பேசுகிறவர்களுள் சிறந்தவரே! இதனை நான் கேட்க விரும்புகிறேன். நீர் சொல்லும்' என்று வினவினார்.

லோமசர், 'ராஜேந்திரனே! தோஷமற்றவனே! உனக்கு மங்களம். இப்பொழுது என்னால் சொல்லப்படுகின்ற புராதனமான இந்த வனத்தின் வரலாற்றை முழுமையும் கேள். மேதாவியும் விசாலமான புத்தியுள்ளவரும் எல்லா வித்தைகளிலும் தேர்ச்சியடைந்தவரும் ம்ருகண்டுவின் புதல்வருமான மார்க்கண்டேய மஹாமுனிவர் சிறுவராயிருக்கையிலேயே தாய் தந்தையருக்குப் பிரியத்தைச் செய்துகொண்டு தவம் புரிவதற்கு வனத்தில் பிரவேசித்தார். இங்கே ஆஸ்ரமஸ்தானத்தை அமைத்துக்கொண்டு மிக்க பயங்கரமான தவத்தைச் செய்தார். வெய்யில் காலத்தில் ஐந்து அக்னிகளின் மத்தியில் நின்று தவஞ்செய்பவரும் மாரிக்காலங்களில் திறந்த வெளியிலிருப்பவரும் குளிர்காலத்தில் ஜலத்திலிருப்பவருமாகி நெடுங்காலம் தவத்தில் நிலைபெற்றிருந்தார். அவர் கைகளை உயரத் தூக்கினவரும் பிடிப்பில்லாதவரும் கால்கட்டை விரல் நுனியினால் நிற்பவரும் இந்திரியங்களை வென்றவரும் சுவாஸத்தை அடக்கினவரும் அழிவற்ற பரமாத்மாவைத் திடமாகச் சிந்திக்கின்றவரும் ஆகாரமில்லாதவரும் கோபத்தை அடக்கினவருமாகி இவ்வண்ணம் நெடுங்காலம் இருந்தார். அரசனே! இந்த ஸமயத்தில், எல்லாவற்றையும் அழிக்கின்றதும் மிக்க பயங்கரமுமான மழையின்மையானது உண்டாயிற்று. அதனால், சராசரங்

கள் எரிக்கப்பட்டன. பஞ்சம் நேர்ந்தவுடன், எல்லாரும் நாசமடைந்தார்கள். மகாத்மாக்களான வேறு சில முனிவர்களும் பிராம்மண ஶ்ரேஷ்டர்களும் பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைஶ்யர்களும் சூத்திரர்களும் எல்லா ஸ்திரீகளும் பசுக்களும் பக்ஷிகளும் மிருகங்களும் ஆகிய எல்லாரும், பசியினாலும் தாகத்தாலும் மிக வருத்தப்பட்டவர்களும், இளைத்தவர்களும், உதடுகளும் தொண்டைகளும் வறண்டவர்களும், களைத்தவர்களும், பிரமித்தவர்களும், மனத்தை இழந்தவர்களுமாகி ஏதோ ஒரு புண்ணிய வசத்தால் புத்திமானான மார்க்கண்டேயருடைய ஆஶ்ரமத்தை மெள்ள வந்தடைந்து மூர்ச்சை அடைந்தவர்களாகி உடனே கீழே விழுந்தார்கள். பாரத! ஸமாதி கலைந்தெழுந்தவரும் [1]யோகியும் மிக்க தவமுள்ளவருமான அந்த மார்க்கண்டேயர் பசியினாலும் தாகத்தினாலும் நன்கு வருத்தப்பட்ட ஜனங்களால் நெருங்கியிருக்கிற அந்த வனத்தைக்கண்டு இரக்கத்தினால் இளகிய மனமுள்ளவராக ஹ்ருதய கமலத்தில் சிவனை த்யானம் செய்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக அப்பொழுது தவ மஹிமையினால் வேத ஸம்பந்தமான ஸ்வரத்தினால் கங்கையை அழைத்தார். அவரால் அழைக்கப்பட்டதும் மிக்க பரிசுத்தியுள்ளதும் வேதநதியென்னும் பெயராலேயே பிரஸித்திபெற்றதும் உலகங்களைப் பரிசுத்தம் செய்வதுமான கங்கையானது விரைவில் வந்தது. பாரத! அழைக்கப்பட்ட பர்யஜன்யனும் ஸுகமாக மழை பொழிந்தான். ராஜேந்திரனே! இங்கே பயிர்களும் செழித்தன; பழங்களும் கிழங்குகளும் மிகுதியாக உண்டாயின; அந்த எல்லாஜனங்களும் காப்பாற்றப்பட்டார்கள். அரசனே! எல்லாப் பிராம்மணஜனங்களும் மார்க்கண்டேயரைப் புகழ்ந்துகொண்டு அவரால் நன்கு காப்பாற்றப்பட்டவர்களாக நெடுங்காலம் ஸுகமாக இருந்தார்கள். அவர் புண்ணியமானசெய்கைகளுள்ள எல்லாருக்கும் இவ்வாறு பாதுகாவலைச் செய்து பரமேஶ்வரருடைய மகிழ்ச்சியின் பொருட்டு மீண்டும் தவம் புரிந்தார். இவ்வண்ணம் பலகாலம் சென்றபிறகு, மஹேஶ்வரர் எதிரில் தோன்றினார். எல்லாத் தேவர்களுக்கும் ஈஶ்வரரும் சந்திரனை முடியில் தாங்கியவரும் உமையவளுக்குப்பதியும் பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்களாலும் ஸித்தர்களாலும் வித்யாதரர்களாலும் உரகர்களாலும் சிறந்த கந்தர்வர்களாலும் இயக்கர்களா

1 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

னும் கின்னரர்களாலும் பறவைகளாலும் துதிக்கப்படுகிறவரும் மஹாதேவரும் அழிவற்றவரும் எங்கும்நிறைந்தவருமான சிவனைப் பார்த்து மார்க்கண்டேயமுனிவர் பக்தியோடு அடிக்கடி [1] ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். முனிவர் நமஸ்கரித்தெழுந்து விரைவாகக் கைகுவித்துக்கொண்டு உலகங்களுக்குப் பதியான மஹாதேவரைப் பலவித ஸ்தோத்திரங்களால் துதித்தார். மஹாதேவர் அந்த மார்க்கண்டேய மஹா முனிவரை, 'முனியே! உனக்கு மங்களம். வரத்தைக்கேள். உனக்கு வரங்களைக் கொடுப்பவனாக இருக்கிறேன்' என்று சொன்னார். பரமாத்மாவான அந்தச் சிவனால் இவ்வண்ணம் தெரிவிக்கப்பட்ட அவர் பரமேஸ்வரரைப்பார்த்து, 'சம்புவே! ஸ்வாமி! உம்முடைய சரணாரவிந்தத்தில் மற்றவர்களால் எளிதில் அடைய முடியாததும் வேறிடத்துச் செல்லாததுமான பக்தியைத் தவிர வேறு வரத்தை நான் வேண்டவில்லை' என்கிற இந்த வாக்யத்தைத் தடுமாற்றமுள்ள குரலுடன் சொன்னார். முனிவரால் இவ்வாறு சொல்லப்பட்டவரும் ஈஸ்வரர்க்கெல்லாம் ஈஸ்வரருமான பகவான் மறுபடியுமே மார்க்கண்டேய மஹாமுனிவரைப்பார்த்து, 'உன்னுடைய பிதாவினால் புத்திரன் உண்டாவதற்காகப் பக்தியுடன் நன்கு ஆராதிக்கப்பட்டேன். நான், 'நூறு பிராயமுள்ள குணமில்லாத புத்திரன் ஒருவன், பதினாறு பிராயமுள்ள நல்ல புத்திரன் ஒருவன் ஆகிய இருவருள் ஒருவனை விரும்பும்' என்று சொன்னேன். அவர் என்னைப்பார்த்து, 'தேவர்களுக்கு ஈஸ்வரரே! நூறு பிராயமுள்ள குணக்கேடனான புத்திரன் எனக்கு வேண்டாம். பதினாறு பிராயமுள்ள குணசாலியான புத்திரன் இப்பொழுது எனக்கு உண்டாகட்டும்' என்று சொன்னார். முற்காலத்தில் உன்னுடைய தகப்பனாரால் இவ்வாறு வரம் வேண்டப்பட்டது. முனியே! நான் உன்னால் செய்யப்பட்ட தவத்தினால் மிகவும் மகிழ்விக்கப்பட்டேன். என்னால் நீண்ட ஆயுளானது (உனக்குக்) கொடுக்கப்பட்டது. மிருத்யுவும் தடுக்கப்பட்டது' என்கிற வாக்கியத்தைச் சொன்னார். பகவானான ஈஸ்வரர் இவ்வண்ணம் சொல்லிவிட்டு அவ்விடத்திலேயே மறைந்தார். புண்யமான இந்த ஆஸ்ரமம் அந்த

1 பாதங்களும் முழங்கால்களும் கைகளும் மார்பும் தலையும் பூமியில் பட, புத்தியும் சொல்லும் பார்வையும் வந்தனம் பெறுபவரையே அடையச் செய்யும் நமஸ்காரம்; இருகாலும் இருகையும் இருதோளும் மார்பும் நெற்றியும் பூமியில்படச் செய்யும் வணக்கம் என்பர் சிலர்.

மார்க்கண்டேயருடையது. பாவமில்லாதவர்களான இந்தரிஷிகள் அவரைச் சார்ந்தவர்கள். இங்கே ஒருதினம் வஸிப்பவர்கள் அனைவரும் மிருத்யுவைக் கடக்கிறார்கள். பரதஸ்ரேஷ்டனே! பூமியைப் பாதுகாப்பவனே! இந்த ஆஸ்ரமத்திலேயே நியமமுள்ளவனாக வஸிக்கக்கடவாய்.

நூற்றுமுப்பத்தோராவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர் பல தீர்த்தங்களின் மகிமையைச் சொல்லியது.)

அரசனே! முற்காலத்தில் பிரம்மதேவர் இந்த இடத்திலன்றோ ஆயிரம் வருஷங்களில் நிறைவேறுவதான இஷ்டீக்ருதமென்கிற ஸத்ரத்தைத் தாமே செய்தார். நாபாகனுடைய குமாரனான அம்பரீஷனும் யமுனையாற்றின் அருகில் யாகம் செய்தான். அந்த இடத்தில் யாகம்செய்து ஸதஸ்யர்களுக்குப் பத்துப் [1]பத்மம் (தனங்களைக்) கொடுத்தான். அவன் யாகங்களாலும் தவத்தினாலும் சிறந்த ஸித்தியைப்பெற்றான். குந்தீ புத்திர! யாகம் செய்தவனும் புண்ணியகர்மங்களுள்ளவனும் உலகமுழுதுடையவனும் அளவிறந்த சௌர்யமுள்ளவனும் நஹுஷகுமாரனுமான யயாதியினுடைய தேசம் இது. இந்த இடத்தில் இந்திரனோடு பகைக்கின்ற அவனுடைய யாகபூமி இதோ இருக்கிறது. பலவித வடிவங்களுள்ள அக்னி (வைக்கும் மேடை)களால் நிறைக்கப்பட்டதும் முழுகுகின்றது போல யயாதியினுடைய யாக காரியங்களால் நிரம்பியதுமான பூமியைப்பார். அந்த ஓர் இலையுள்ள வன்னிமரத்தின் கிளை இது. உத்தமமான சகடம் இது. இந்த ராமஹ்ரதங்களைப்பார். நாராயணருடைய ஆஸ்ரமத்தையும் பார். பூமியைக் காப்பவனே! அபரிமிதமான சௌர்யமுள்ளவரும் யோகங்களால் பூமியில் ஸஞ்சரிப்பவருமான ரிசீகபுத்திரருடைய ஸஞ்சாரபூமியும் இதோ [2]வெண்ணிறமுள்ள ஸ்தலத்தில் இருக்கிறது. குருநந்தன! இங்கே உரல்களாகிய காதணிகளோடு கூடின ஒரு பெண்பேய் சொல்லியதும்

---

1 'பத்மம்=நூறு கோடி' என்பது பழைய வுரை. அநுசாஸன பர்வம் 583 ம் பக்கம் குறிப்பில் பார்க்க.

2 'ரௌப்யை யென்னும் நதியில் என்றும் கொள்ளலாம்' என்பது பழைய வுரை.

பரம்பரையாக வந்ததுமான கதையை, சொல்லுகின்ற என்னிடத்தினின்றும்கேள். [1]பிசாசானது, (புத்திரனுடன் கூட ஸ்நானம் செய்வதற்காக வந்த ஒரு பார்ப்பனியைப் பார்த்து), 'புத்ரனுடனிருக்கும் நீ யுகந்தரத்தில் தயிரைக்குடித்து அச்சுதஸ்தலத்தில் வஸித்து அப்படியே பூதலயத்தில் ஸ்நானம் செய்தமையால் இவ்விடத்தில் (ஒரே ராத்ரி) வஸிக்கத் தகுதியுள்ளவளாவாய். இந்த இடத்தில் நீ ஒரு ராத்திரி வஸித்து இரண்டாவது ராத்திரி வஸிப்பாயாகில் பகல் வஸிப்பதற்காக உனக்கு நடப்பது இது. இரவில் வஸிப்பதற்காக நடப்பது இதைக்காட்டிலும் வேறு விதமாகும்' என்று சொல்லியது. பரதர்களுள் சிறந்தவனே! இப்பொழுது இந்த இடத்தில் ஓர் இரவு வஸிப்போம். குந்தீபுத்ர! பாரத! இது குருக்ஷேத்திரத்திற்கு வாயிலன்றோ? அரசனே! இந்த இடத்திலேயே நகுஷனுடைய குமாரனை யயாதிராஜன்,

---

1 "இங்கே, 'ஒரு பெண்பேய், நீராடுவதற்காகப் புத்ரனுடன்வந்த ஒரு பார்ப்பனியைப்பார்த்து,'யுகந்தரமென்னும் தேசத்தில் ஒட்டகம் கழுதை முதலியவற்றின் பால் தயிராக்கப்படுகிறது. அச்சுத ஸ்தலமென்னும் கிராமத்தில் கலப்பு ஜாதியிற் பிறந்தவர்கள் வஸிக்கிறார்கள். பூதலயமென்னும் திருடரூரில் தீயினால் சுடப்பட்ட பிணங்களை எறியும் ஆறு ஒன்று இருக்கிறது. நீ யுகந்தரத்தில் தயிர் குடித்தாய்; அச்சுதஸ்தலத்தில் வஸித்தாய்; பூதிலயத்தில் நீராடினாய். ஆகவே, இப்படி மூன்று பாவங்களை நீ செய்தவளாகிறாய். இவற்றுக்கு மனுமுதலியவற்றில் பிராயச்சித்தம் விதிக்கப்படுகிறது. இங்ஙனம் பாவியான நீ இந்த இடத்தில் வஸித்தல் தகாது' என்றுசொல்லியும், அவள் கேளாமல் நீராட்ட முதலியன செய்தாள். அப்பொழுது, பேய் அவளுடைய செம்பு ஸ்தாலி முதலியவற்றை உடைத்து, 'பகல் வஸித்ததன் பயன் இது. இரவு வசித்தால் அதன்பயனைக் காண்பாய். அதாவது, உன்மகனையும் கொல்வேன். மேலும், இரண்டாம் இரவும் வஸிக்கவிரும்பினால் மிக்க தீமையைச் செய்வேன்' என்றது' என்பது முன்னோர்களின் அபிப்பிராயம். பிற்காலத்தவர்கள், 'பேய், 'நீ இந்த மூன்றையும் செய்தமையால், விரும்பினால் இங்கே ஓரிரவு வஸிக்கலாம். இரண்டாம் நாளும் வசிக்க விரும்பினால் (செம்பு முதலியவற்றை உடைப்பதாகச் சைகைகாட்டி), 'பகல் வஸித்தலின் பயன் இது; இரவின்பயன் உயிரைக் கவர்வது வரையுமாம்' என்றது என்று கொள்ளல் வேண்டும்' என்கின்றனர்" என்றுகூறி வேறு யோகபரமாகவும் விரிவாகப் பொருள் கூறுவது பழையவுரை. இந்தக் கதை" கர்ணபர்வம், 162-ம் பக்கத்தில் சிறிது மாறுபாட்டுடன் வந்திருத்தல் காண்க.

இந்திரன் மகிழ்ச்சியை அடைதற்குக் காரணமானவையும் பல ரத்னக்குவியல்களுடன் கூடினவையுமான அந்த யாகங்களைச் செய்தான். இது ப்லக்ஷாவதரணமென்கின்ற உத்தமமான யமுனையினது துறை. அறிஞர்கள் இதனைத் தேவலோகத்திற்கு வாயிலாகச் சொல்லுகிறார்கள். ஐயனே! சிறந்த ரிஷிகள் இந்த இடத்தில் [1] ஸாரஸ்வத ப்ராம்மணர்களான ரித்விக்குக்களைக் கொண்டு யாகம் செய்து யூபங்களையும் உரல்களையும் எடுத்துக்கொண்டு அவப்ருதஸ்நானத்தைக் குறித்துச் செல்லுகிறார்கள். அரசனே! இந்த இடத்தில் ராஜாவான பரதன் யாகங்களைச் செய்தான்; தர்மத்தால் பூமியை அடைந்து அஸ்வமேத யாகத்தில் கருமையானதும் உறுதியான அங்கங்களுள்ளதும் யாகத்துக்குரியதுமானகுதிரையைப் பலமுறை விட்டான். புருஷஸ்ரேஷ்டனே! மருத்தன் இந்த இடத்திலேயே ரிஷிகளுள் சிறந்தவரான ஸம்வர்த்தரால் பாதுகாக்கப்பட்டவனாக உத்தம யாகத்தைச் செய்தான். ராஜேந்திரனே! இந்த இடத்தில் ஸ்நானம் செய்தால் மனிதன் எல்லா உலகங்களையும் நன்கு காண்கிறான்; பாவத்தினின்றும் (விடுபட்டுப்) பரிசுத்தனாக்கப்படுகிறான். இதிலும் நீ ஸ்நானம் செய்வாயாக' என்று சொன்னார். பாண்டவஸ்ரேஷ்டர் தம்பிமார்களுடன் அதில் ஸ்நானம் செய்து மஹரிஷிகளால் துதிக்கப்படுகின்றவராக லோமசரைப்பார்த்து, 'ஸத்யபராக்கிரமமுள்ளவரே! இங்கிருந்தே தவத்துடன் (கூடியவனாகி) எல்லா உலகங்களையும் பார்க்கிறேன்; பாண்டவ ஸ்ரேஷ்டனான அர்ஜுனனையும் பார்க்கிறேன்' என்று சொன்னார். லோமசர், 'தோள்வலிமை மிக்கவனே! இது உண்மையே. சிறந்த ரிஷிகள் இதில் ஸ்நானம்செய்து [2] தவத்துடன் கூடியவர்களாகிச் சராசரங்களுடன் கூடின மூவுலகங்களையும் காண்கிறார்கள். நரஸ்ரேஷ்டனே! எதில் நீராடிப் பாவத்தை உதறினவனாவாயோ புண்யமானதும் புண்யத்தையே சரணமாகப் பற்றினவர்களால் சூழப்பட்டதுமான இந்த ஸரஸ்வதியைப் (பார்.) குந்தீபுத்ர! தேவரிஷிகளும் (பிரம்ம) ரிஷிகளும் அப்படியே ராஜ ரிஷிகளும் இந்த இடத்தில் ரித்விக்குக்களாக வரிக்கப்பட்ட ஸாரஸ்வத ப்ராம்மணர்களால் யாகங்களைச் செய்தனர். நான்குபக்கங்களிலும் ஐந்து யோஜன விஸ்தாரமுள்ள பிரம்ம

---

1 'ஸாரஸ்வதைர் யஜ்ஞை:' என்பது மூலம்; 'ஸாரஸ்வத முறைப்படி செய்கிற யாகக்ரியைகள்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

2 'தபோயுக்தாந்' என்பது, 'தபோயுக்தா:' என்று மாற்றப்பட்டது.

தேவருடைய யாகவேதி இது. இது யாகம் செய்வதையே சீ
மாகக்கொண்ட மகாத்மாவான குருவினுடைய க்ஷேத்ரம்.

நூற்றுமுப்பத்திரண்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர் ஸரஸ்வதீநதி முதலியவற்றின் மகிமையைக் கூறியதும், ஸ்யேனகபோதோபாக்கியானத்தைச் சொல்லத் தொடங்கியதும்.)

பாரத! இங்கே மனிதர்கள் சரீரங்களை விட்டு ஸ்வர்க்கத்தை அடைகிறார்கள். வேந்தனே! மனிதர்கள் இங்கே மரிக்க விருப்பத்துடன் ஆயிரம் ஆயிரமாக வருகிறார்கள். 'எந்த மனிதர்கள் இங்கே மரிப்பார்களோ அவர்கள் ஸ்வர்க்கத்தை ஜயித்தவர் என்கிற இவ்வித ஆசீர்வாதமானது முற்காலத்தில் (இங்கே) யாகம் செய்கின்ற தக்ஷனால் செய்யப்பட்டிருக்கிறதன்றோ? அழகியதும் திவ்யமானதும் பெருக்கமுள்ளதுமான ஸரஸ்வதீ நதியானது இதோ இருக்கிறது. ஜனாதிப! வீரனே! எவர்களுடைய குற்றத்தால் ஸரஸ்வதியானது, 'என்னை நிஷாதர்கள் அறியவேண்டாம்' என்று பூமியில் பிரவேசித்ததோ அந்த நிஷாதர்களுடைய ராஜ்யத்திற்கு த்வாரமான ஸரஸ்வதிநதியினுடைய அந்த விநசனமென்கிற க்ஷேத்திரம் இது. எந்த இடத்தில் ஸரஸ்வதியானது பார்க்கத்தக்கதாகிறதோ, எந்த இடத்தில் காந்தியுள்ளவையும் கடலைக் குறித்துச் செல்லுகின்றவையுமான புண்யநதிகள் இந்தஸரஸ்வதியை அடைகின்றனவோ அந்தச் சமஸோத்பேதம் இது. பகைவரை அடக்குபவனே! எந்த இடத்தில் லோபாமுத்ரை வந்து அகஸ்தியரைப் பர்த்தாவாக வரித்தாளோ அந்த ஸிந்துவினுடைய பெரியதீர்த்தம் இது. சூரியன்போன்ற ஒளியுள்ளவனே! இந்திரனுக்குப் பிரியமானதும் புண்யமானதும் பரிசுத்தமானதும் பாவத்தை அழிக்கிறதுமான ப்ரபாஸதீர்த்தம் இதோ விளங்குகிறது. இதோ விஷ்ணுபதமென்கிற உத்தம தீர்த்தம் காணப்படுகிறது. அழகியதும் மிகப் பரிசுத்தமானதுமான விபாசை என்கிற நதியும் இதோ காணப்படுகிறது. பகவானான வஸிஷ்டரிஷியானவர் புத்திரசோகத்தால் தம்மை(க் கயிற்றால்) கட்டிக்கொண்டு இந்தநதியில் விழுந்தார்.

கயிற்றுக் கட்டுக்களற்றவராகி மீண்டும் எழுந்தார். பகைவர்களை அடக்குபவனே! பாரத! எந்த இடத்தில் வடதிசையிலுள்ளவர்களான எல்லா ரிஷிகளுக்கும் நகுஷகுமாரனை யயாதிக்கும் அக்னிக்கும் காஸ்யபருக்கும் [1] ஸம்வாதம் நடந்ததோ எல்லாவற்றையும் காட்டிலும் புண்யமானதும் மஹர்ஷிகளாலும் வஸிக்கப்பட்டதுமான அந்தக் காஸ்மீர மண்டலம் இது. தம்பிமார்களுடன் இதைப் பார். மஹாராஜனே! மானஸஸரஸுக்குத் துவாரமான இது பிரகாசிக்கிறது. இந்த மலையின் நடுவில், தவருத பராக்ரமமுள்ளவரென்று பிரசித்திபெற்ற ஸ்ரீமானுன பரசுராமரால் வாஸஸ்தானம் அமைக்கப்பட்டது. அது விதேக தேசத்தின் வடக்கிலிருக்கிறது. அதன் துவாரத்தைக் [2] காற்றினுல் கொண்டுவரப்பட்ட (தாமரைமுதலியவற்றின்) குவியல் கடந்து செல்லவில்லை. புருஷஸ்ரேஷ்டனே! கௌந்தேய! இந்தத் தேசத்தில் (ஸௌர ஸாவன பார்ஹஸ்பத்ய நாக்ஷத்ர சாந்த்ர ஸம்வத்ஸரங்களின் முடிவுக்காலமாகிற) யுகமுடிவுக்காலத்தில் ப்ரமதகணங்களுடனும் உமையவளுடனும் கூட நினைத்த உருவத்தை எடுக்கக்கூடிய ருத்திரருடைய தர்சனமானது உண்டாகிறதென்னும் இந்த வேருர் ஆச்சர்யமிருக்கிறது. யாகம் செய்பவர்கள் மங்களத்தை விரும்பினவர்களாக இந்த ஸரஸில் சித்திரை மாதத்தில் பிநாகியை ஸத்ரங்களால் அடிக்கடி நன்கு ஆராதிக்கின்றுர்கள். ஒரு மனிதன் ஸ்ரத்தையுள்ளவனும் இந்திரியங்களை வென்றவனுமாகி இந்த ஸரஸில் ஸ்நானம் செய்தால் பாவந்தொலைந்து நல்ல உலகங்களை அடைகிருன். இதில் ஸம்சயமில்லை. ஸுப்ரம்மண்யரும், அருந்ததியின் துணைவரும் பகவானும் ரிஷியுமான வஸிஷ்டரும் எந்த இடத்தில் சாந்தியை அடைந்தார்களோ அப்படிப்பட்ட உஜ்ஜானகமென்கிற புண்யதீர்த்தம் இது. எதில் தாமரை மலர்கள் நூறு இதழ்களுடனிருக்கின்றனவோ அந்த ஜலமுள்ள மடுவும் இது. எந்த இடத்தில் (ருக்மிணியானவள்) கோபத்தை அடக்கிச் சாந்தியை அடைந்தாளோ அந்த ருக்மிணியினுடைய ஆஸ்ரமமும் இது. பாண்டுநந்தன! மஹாராஜனே! (பார்த்தவுடன்) நிஷ்டை செய்வதன் பயன் கைகூடுமிடமென்று நீ கேட்டிருக்கிற அந்த ப்ருகு

1 பொருந்தாமையால் ஒருசொல் விடப்பட்டது.

2 'வாதிகஷண்டர்' என்பது மூலம். 'காற்றினுல் கொண்டுவரப்பட்ட தாமரை முதலியவற்றின் குவியல்' என்பது பழையவுரை.

துங்கமென்கிற பெரிய மலையை நீ பார்ப்பாய், ராஜேந்திரனே! எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறதும் மஹரிஷிகளால் வஸிக்கப்பட்டதும் குளிர்ந்த ஜலமுள்ளதும் மிக நிர்மலமாயிருப்பதுமான விதஸ்தா நதியையும், உசீநரதேசாதிபதியானவன் எந்த இடத்தில் யாகம்செய்து இந்திரனைக்காட்டிலும் மேன்மைபெற்றானோ யமுனைக்கு இருபக்கங்களிலுமிருக்கிற அந்த ஜலை உபஜலை என்கிற நதிகளையும் பார். அரசனே! பாரத! இந்திரனும் அக்னியும் அரசர்களுள் சிறந்த அவனை அறிவதற்காக அவனுடைய அந்த யாக ஸபையை நோக்கி வந்தார்கள். வரன்களைக் கொடுப்பவர்களான இந்திரன் கழுகும், அக்னி புறவுமாகி மகாத்மாவான உசீநரனைப் பரீக்ஷித்தறிய எண்ணங்கொண்டு அவனுடைய யாகசாலையில் வந்தார்கள். அரசனே! கழுகினிடமிருந்து உண்டான பயத்தால் துன்பமுற்ற புறுவானது புகலிடத்தை வேண்டினதாக அப்பொழுது அரசனுடைய தொடையை அடைந்து ஒளிந்துகொண்டது.

நூற்றுமுப்பத்துமூன்றுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(சிபியைப் பரீக்ஷிப்பதற்காகக் கழுகாகிவந்த இந்திரன் புறவாகிவந்த அக்னியைத் துரத்தியதும், புற சிபியைச் சரணமடைந்ததும், அரசன் புறவைக் காக்கக் கருதித் தன் தசையை அறுத்துப் புறவுக்கு ஈடாகத் தராசில் வைத்ததும், புறத்தட்டுத்தாழ அவன் தானே தராசுத்தட்டில் ஏறியதும், இந்திரனும் அக்னியும் மகிழ்ந்து அவனைப்புகழ்ந்து தங்களுலகம் சென்றதும்.)

கழுகு, 'அரசனே! எல்லா அரசர்களும் உன்னை ஒருவனையே தர்மாத்மாவென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நீ யாது காரணம்பற்றித் தர்மவிரோதமான காரியத்தைச்செய்ய விரும்புகிறாய்? அரசனே! பசியினால் வருத்தப்படுகிற எனக்கு அமைந்த உணவைத் தர்மத்திலுள்ள பேராவலால் நீ கெடுக்காதே. தர்மத்தைவிட்டு நீ கெடாதே' என்றது. அரசன், 'பெரிய பறவையே! இந்தப் புறவையானது மிகப் பயந்த உருவமுள்ளதும் உன்னிடத்தினின்று பயந்ததும் உயிரில் விருப்பமுள்ளதும் பாதுகாப்பை விரும்பினதுமாகி என் ஸமீபத்தை அடைந்தது. கழுகே! இவ்வண்ணம் இவ்விடத்தில் வந்திருக்கிறதும் அபயத்தை வேண்டுகிறது

மான புறுவைக் கொடாமலிருப்பதில் சிறந்த தர்மம் இருக்கிறது. இந்த விஷயத்தில் நீ எப்படி எண்ணுகிருய்? கழுகே! புறு வானது மிக நடுங்குகிறதும் பரபரப்புள்ளதும் என்னிடமிருந்து உயிரை விரும்பினதுமாகக் காணப்படுகிறது. அதைக் (காப்பாற் ருமல்) விடுவது இகழத்தக்கது பிராம்மணர்களைக் கொல்பவ னுக்கும் உலகத்துக்குத் தாயான பசுவைக் கொல்பவனுக் கும் சரணமடைந்தவனைக் கைவிடுகிறவனுக்கும் பாவம் ஸமான மன்ருே?' என்று கூறினன். கழுகு, 'பூமிக்கு இறை வனே! எல்லாப் பிராணிகளும் உணவினுல் உண்டாகின்றன; உணவினுல் வளர்கின்றன. அதனுல் ஜந்துக்கள் உயிர்வாழ்கின் றன. விடமுடியாத விருப்பங்களை விட்டும் உயிர்வாழ முடியும்; உணவைவிட்டு நெடுநாள் உயிரோடிருப்பதற்கு முடியாது. அர சனே! உணவிலிருந்து விலக்கப்பட்ட என்னுடைய பிராணன் உடலை விட்டுவிட்டு, திரும்பிவராதவழியை அடையப்போகின்றது. தர்மாத்மாவே! நான் மாண்டுபோனுல், என்புத்திரன்மனைவிமுத லியவர்களெல்லாம் நாசமடைவார்கள். நீ புறுஒன்றைப் பாதுகாக் கின்றவனுகி அநேகஉயிர்களைப் பாதுகாக்கவில்லை. எந்தத்தர்மம் பலரைக் கெடுக்குமோ அது தர்மமாகாது. அது கொடியவழி. ஸத்யமானபராக்கிரமமுள்ளவனே! எந்தத்தர்மம் (மற்றவை களுக்கு) விரோதமில்லாமலிருக்குமோ அதுதான் தர்மம். பூமி யைக்காப்பவனே! விரோதமான தர்மங்களுள் (தீமையின்) மிகுதி யையும் குறைவையும் நிச்சயித்து எதில் (அதிக) தீமை இல்லையோ அந்தத்தர்மத்தைச் செய்யவேண்டும். அரசனே! தர்மாதர்மநிச்ச யத்தில் (நன்மையின்) மிகுதியையும் குறைவையும் நன்கு அறிந்து எதில் நன்மை அதிகமோ அதில் தர்மநிச்சயத்தைச் செய்வா யாக' என்று கூறியது. அரசன், 'சிறந்தபறவையே! நல்ல விஷ யங்களுடன் பல பேசுகிருய். தர்மத்தை அறிந்துபேசுகிருய். ஆத லால், நீ பக்ஷிராஜனுன கருடனு? என்ன? அப்படி தர்மங்க ளோடுகூடியவையாகவும் ஆச்சர்யகரமாகவும் பலவற்றைப் பேசு கிருயன்ருே? உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்று நான் உன்னை அறிகிறேன். ரக்ஷணத்தை வேண்டிவந்தவனை விடுவதை எவ்வாறு நல்லதென்று நினைக்கிருய்? பறவையே! உன்னுடைய இந்த முயற்சியானது ஆகாரத்திற்காக. உன்னுல் (இதைக்காட்டி லும்) அதிகமான ஆகாரங்கூட வேறுவிதத்தால் செய்துகொள்ள முடியும். காளையையோ பன்றியையோ மானையோ எருமைக்கடா.

வையோ உன்விஷயத்தில் (உணவாகச்) செய்வேன் இங்கே வேறு எதை விரும்புகிறாய்?' என்றுவினவினான். கழுகு, 'மகாராஜனே! பன்றியையாவது காளையையாவது அப்படியே பலவித மிருகங்களை யாவது நான் தின்னமாட்டேன். எனக்கு வேறொன்றால் என்ன பயன்? க்ஷத்திரியஸ்ரேஷ்டனே! பூமியைப்பாதுகாப்பவனே! எனக்கு எந்த ஆகாரமானது தெய்வத்தால் அமைக்கப்பட்டதோ அப்படிப்பட்ட இந்தப்புறாவையே எனக்குவிட்டுவிடு. கழுகுகள் புறாக்களையே தின்னுகின்றனவென்னும் இது தொன்றுதொட்ட வழக்கம். அரசனே! ஸாரத்தை அறியாமல் வாழையின்அடிமரத்தில் பற்றுவைப்பதுபோல் ஸாரமில்லாததர்மத்தில் பற்றுதலை வைக்காதே' என்று சொல்லிற்று. அரசன், 'சிறந்த பறவையே! என்னால் கொடுக்கப்பட்ட செழிப்பான சிபிவம்சத்தரசர்களுடைய இந்த ராஜ்யமனைத்தையும் பறவைகளால் அர்ச்சிக்கப்பட்டு அரசன் போல நீ ஆண்டுவருவாயாக. [1] கழுகே! பாதுகாவலை வேண்டி வந்த இந்தப் பறவையைத்தவிர எந்தவிருப்பத்தை நீ விரும்புகிறாயோ அதெல்லாவற்றையும் உனக்குக் கொடுப்பேன். மிக்க மேன்மையுள்ளபறவையே! நீ எந்தச்செய்கையினால் இதனை உயிர்வாழச் செய்வாயோ அதனைச் சொல்; செய்வேன். எளியபுறாவைக் கொடுக்கமாட்டேன்' என்று கூறினான். கழுகு, 'அரசே! உசீநர! ராஜஸ்ரேஷ்டனே! உனக்குப் புறாவினிடத்தில் நேசமிருந்தால் உனது தசையை அறுத்துப் புறாவைவைத்த தராசுத்தட்டுடன் நிறுத்து உன் தசை புறாவுக்குச்சமமானபோது நீ அந்தத் தசையை எனக்குக்கொடுக்கவேண்டும்' என்று சொல்லியது. அரசன், 'கழுகே! நீ என்னைக் கேட்கிற இதனை அனுக்ரஹமாக நினைக்கிறேன். ஆகையால், என்மாம்ஸத்தைத் தராசினால் (புறாவோடு ஸமமாக) நிறுத்து உனக்கு இப்பொழுது கொடுப்பேன்' என்று சொன்னான். குந்தீபுத்திர! பிரபுவே! பிறகு, உத்தமதர்மங்களை அறிந்தவனான அரசன் தன் மாம்ஸத்தை அறுத்துப் புறாவோடு ஸமமாக நிறுத்தான். (அரசனது) தசையுடன் நிறுக்கப்படுகின்ற புறாவோ மிக அதிக நிறையுள்ளதாக இருந்தது. உசீநரராஜன் மீண்டும் மாம்ஸங்களை அறுத்துக் கொடுத்தான். நிறுக்கப்பட்ட மாம்ஸம் புறாவோடு ஒப்பாகாமற் போனபொழுது தசையறுக்கப்பட்ட அந்த அரசன் தானே தராசில் ஏறினான். கழுகு, 'தர்மங்களை அறிந்தவனே! நான் இந்திரன்.

---

1 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

இந்தப்புரு அக்னிதேவன். தர்மத்தை அறிய எண்ணி யாகசாலையில் உன்னை வந்தடைந்தோம். அரசே! உன்னுடைய அவயவங்களி னின்று மாம்ஸங்கள் அறுக்கப்பட்டன என்னும் உனது இந்தச் சாஸ்வதமானகீர்த்தியானது உலகங்களைக் கீழ்ப்படுத்தும். அரசே! உலகத்தில் உன்னை மனிதர்கள் எவ்வளவு காலம்வரையில் சொல் லுவார்களோ அவ்வளவுகாலம்வரையில் உன்னுடைய கீர்த்தியும் புண்ய லோகங்களும் சாஸ்வதமாக இருக்கும்' என்று சொல்லி யது. அரசே! இந்திரனும் அக்னியும் இவ்வண்ணம் கூறி அந்த அரசனுக்கு வேண்டிய வரன்களைக் கொடுத்துப் புகழ்ந்து மன மகிழ்ந்து சென்றார்கள். தர்மாத்மாவான உசீநரராஜனும் சரீ ரத்தால் நன்கு விளங்குபவனாகித் தர்மத்தால் ஆகாயத்தையும் பூமியையும் வியாபித்துக்கொண்டு ஸ்வர்க்கத்தில் ஏறினான். வேந்தே! அப்படிப்பட்ட இந்த மாளிகை மஹாத்மாவான அந்த அரசனுடையது. புண்யமானதும் பாவங்களைப் போக்குகிறது மான இதனை என்னுடன் தர்சனம் செய்வாயாக. அரசனே! அந்த இடத்தில் தேவர்களும் பழமையான ரிஷிகளும் புண்ய முள்ள மகாத்மாக்களான பிராம்மணர்களால் எப்பொழுதும் காணப்படுகிறார்கள்.

நூற்றுமுப்பத்துநான்காவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் ஶ்வேதகேதுவின் ஆஶ்ரமத்தை அடைந்ததும், லோமசர் அஷ்டாவக்ரோபாக்யானத்தைச் சொல்லத் தொடங்கியதும், ஜனகனுடையபட்டணத்தை அடைந்த கஹோளரை வந்தி வென்று ஜலத்தில் அமிழ்த்தியதும், அதனை அறிந்த அஷ்டாவக்ரர் வந்தியை வெல்லுவ தற்கு ஶ்வேதகேதுவுடன் சென்றதும்.)

பாண்டு புத்திரர்களே! பூமியில் மந்திரங்களை அறிந்தவரென் றும் சிறந்த புத்தியுள்ளவரென்றும் சொல்லப்படுகிறவரும் உத்தா லகருடைய புதல்வருமான ஶ்வேதகேதுவினுடையதும் எப்பொழு தும் பழங்களுள்ள மரங்களோடுகூடினதுமான ஆஶ்ரமத்தைப் பாருங்கள். ஶ்வேதகேதுவானவர் ஸரஸ்வதியை இங்கே மானிட

வடிவமும் உருவமுமுள்ளவளாக நேரில் கண்டார். 'வாக்கை நா னறிவேன்' என்று வாதம் செய்வதற்குத் தொடங்கின ஸரஸ்வதி யுடன் ஶ்வேதகேது இந்த இடத்தில் ஸம்பாஷித்தார். இந்த யுகத்தில் பிரம்மவித்துக்களுள்சிறந்தவர்களும் மாமனும் மருமானு மான உத்தாலகருடைய புதல்வரான ஶ்வேதகேதுவும் [1]கஹோளருடைய புதல்வரான அஷ்டாவக்ரரும் ஆகிய இரண்டு முனிவர்கள் பூமியில் இருந்தார்கள். தீரர்களும் அளத்தற்கரியவர்களும் அம்மானும் மருமானுமான அவ்விருவரும் விதேஹராஜனுடைய யாகசாலையில் பிரவேசித்துக் கஹோளரை ஜயித்த வந்தியை, அவ் வரசனருகில் விவாதத்தில் வென்றூர்கள். குந்தீநந்தன! வாதம் செய்வதில் வன்மையுள்ளவரும் பிராம்மணர்களுள் தலைமைபெற் றவரும் சிறுவராயிருக்கையிலேயே ஜனகனுடைய யாகசாலையில் சென்று வாதத்தில் வந்தியைத் தோற்கச்செய்து நதியில் அமிழச் செய்தவருமான அஷ்டாவக்ரரை எவருக்குப் பேரனுகச் சொல்லு கிறூர்களோ அந்த (உத்தாலகருடைய) மிக்க பரிசுத்தமான ஆஶ்ர மத்தில் நீ தம்பிமார்களுடன் பிரவேசித்து (அதனை) வழிபடுவா யாக' என்று சொன்னூர். யுதிஷ்டிரர், 'அப்படிப்பட்ட வந்தியைத் தோல்வியடையச்செய்த அந்தப் பிராம்மணர் எவ்விதமகிமையுள் ளவராயிருந்தார்? விதேஹராஜனுடைய ஸமீபத்தில் எந்த விஷ யத்தைப்பற்றி அவ்விருவருக்கும் விவாதம் நடைபெற்றது? அவர் யாது காரணத்தால்அஷ்டாவக்ரர்என்கிற பெயருள்ளவரும்ஆனூர். லோமசரே! எனக்கு அவை எல்லாவற்றையும் உள்ளபடிசொல்வீ ராக' என்று வினவ, லோமசர் சொல்லலானூர்.

'அரசனே! உத்தாலகருக்கு நியமமுள்ளவரும் கஹோளர் என்கிற பெயருள்ளவருமான ஒருவர் சிஷ்யராக இருந்தார். அவர் குருபணிவிடை செய்துகொண்டு ஆசார்யருடையவிருப்பத்தைப் பின்பற்றினவராக நெடுங்காலம் வேதாத்தியயனம் செய்தார். [2] அவரை(மற்ற)ப்ராம்மணசிஷ்யர்களோ அவமதித்தார்கள். அந்த ஆசார்யர் அந்த அவமானத்தை அறிந்து அவருக்கு உடனே வேதசாஸ்திரங்களை (உபதேசித்து) ஸுஜாதை என்கிற தம் குமாரியையும் மனைவியாகக் கொடுத்தார். அவளிடத்தில் அக்

1 'கஹோடருடைய' என்பது வேறுபாடம்.

2 'அந்தச் சிஷ்யரான பிராம்மணர் அவருக்குப் பணிவிடை செய் தார். குருவான அவர் அந்தப்பணிவிடையை அறிந்து' என்பது வேறு பாடத்தின் பொருள்.

நிக்குச் சமமான கர்ப்பம் உண்டாயிற்று. பிறகு, அது அத்தியயனம் செய்யும் பிதாவைப் பார்த்து, 'பிதாவே! இரவு முழுவதும் அத்தியயனம் செய்கிறீர். இது திருத்தமாயில்லை போலும்' என்று சொல்லிற்று. சிஷ்யர்களுடைய மத்தியில் இகழப்பட்ட அந்த மஹரிஷியானவர் வயிற்றினுள்ளிருக்கிற அந்தக் கர்ப்பத்தை, 'நீ (கர்ப்பத்தில் கைகால்கள் முடங்கி) வக்ரமாயிருக்கையிலேயே பேசுகிறாயாதலால் எட்டுவிதமான கோணலுள்ளவனாகவே பிறப்பாய்' என்று கோபத்தால் சபித்தார். அவர் அப்படியே வக்ரமாகப் பிறந்தார்; மனிதர்களுள் அஷ்டாவக்ரர் என்று ப்ரஸித்தியும் பெற்றார். இவருக்கு ஶ்வேதகேது என்கிற அம்மான் ஒருவர் இருந்தார். அவர் பிராயத்தினால் அந்த அஷ்டாவக்ரருக்குச் சமமானவர். வயிற்றில் வளர்கின்ற புத்திரனால் மிகத் துன்புறுத்தப்படுகின்றவளும் தனமில்லாதவளும் தனத்தில் விருப்பமுள்ளவளுமான ஸுஜாதையானவள் அப்பொழுது ஏகாந்தத்தில் பர்த்தாவை அடைந்து மகிழ்வித்து, 'மஹரிஷியே! எனக்கு இந்த மாதமும் பத்தாவதாக இருக்கிறது. எதனால் இந்த ஆபத்தைத் தாண்டுவேனோ அப்படிப்பட்ட பொருளை எனக்குச் சிறிதும் கொடுப்பவன் ஒருவனுமே இல்லை. இப்பொழுது என்ன செய்வேன்?' என்று சொன்னாள். மனைவி இவ்வண்ணம் சொல்லக்கேட்ட கஹோளர், பிறகு, தனத்திற்காக ஜனகராஜனை அடைந்தார். அந்தப் பிராம்மணர் அப்பொழுது வாதத்தில் வல்லவனான வந்தியினால் தோல்வியடைவித்து ஜலத்தில் மூழ்கும்படி செய்யப்பட்டார். அப்பொழுது, உத்தாலகர் ஸூதனால் வாதத்தில் கஹோளர் அப்படி ஜலத்தில் முழுகுவிக்கப்பட்டதைக் கேட்டு, பிறகு, அங்கே அந்த ஸுஜாதையைப் பார்த்து,'இந்த விஷயத்தை அஷ்டாவக்ரனிடம் (தெரிவியாமல்)மறைத்துவைக்கவேண்டும்' என்றுசொன்னார். அவளும் இவருடைய அந்தஆலோசனையை (வெளியிடாமல்) காப்பாற்றினாள். அந்த அஷ்டாவக்ரர் பிறந்தபின்னும் இந்த விஷயத்தைக் கேட்டதேயில்லை. அந்த அஷ்டாவக்ரர் உத்தாலகரைப் பிதாவாகவும் அப்படியே ஶ்வேதகேதுவை ப்ராதாவாகவும் எண்ணிக்கொண்டிருந்தார். பிறகு, பன்னிரண்டாம் பிராயத்தில் ஶ்வேதகேதுவானவர், தம் பிதாவினுடைய மடியில் உட்கார்ந்திருக்கிற அஷ்டாவக்ரரை அழும்பொழுதே கையில்பிடித்து இழுத்து விட்டார்; 'இது உன் பிதாவினுடைய மடி அன்று' என்றும் சொன்னார். அவரால் அப்பொழுது சொல்லப்பட்ட கடு

ஞ்சொல் அந்த அஷ்டாவக்ரருடைய உள்ளத்தில் நிலைபெற்று மிக்க துயரத்தைச் செய்வதாயிற்று. பிறகு, அந்தப்ராம்மணர் வீட்டுக்குச்சென்று தம்தாயைப்பார்த்து, 'என்னுடைய பிதா எங்கே?' என்றுகேட்டார். பிறகு, ஸுஜாதையானவள் மிக்கதுயருற்ற உருவத்துடன் சாபத்தினின்றுபயந்து இவருக்கு உண்மையை உரைத்தாள். அந்தப்ராம்மணர் அந்த உண்மைஎல்லாவற்றையும் தெரிந்துகொண்டு இரவில் ஶ்வேதகேதுவைப் பார்த்து, 'ஜனக ராஜனுடைய யாகத்தைக்குறித்துச் செல்வோம். அவனுடைய யாகமானது மிக்க அற்புதமாக இருக்கிறதென்று கேள்வி. அங்கே பிராம்மணர்களுடைய (சாஸ்திர) விவாதத்தைக் கேட்போம். அங்கே சிறந்தஅன்னத்தையும் புஜிப்போம். நமக்கு (க்கல்வியில்) மிக்க தேர்ச்சியும் உண்டாகும். வேதகோஷமானது மங்களகரமானதும் மனத்தைக்கவர்வதுமன்றோ?' என்று சொன்னார். அம்மானும் மருமானுமான அவர்கள் செல்வப் பெருக்குள்ள ஜனகராஜனுடைய யாகத்தைக் குறித்துச் சென்றார்கள். அஷ்டாவக்ரர் வழியில் அரசனால் எதிரில்வந்து, 'வழியை விட்டு விலகிச்செல்' என்றுசொல்லப்பட்டவராகி இந்தவாக்கியத்தைச் சொல்லலானார்.

நூற்றுமுப்பத்தைந்தாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ஶ்வேதகேதுவுடன் ஜனகனுடையயாகசாலைக்குச் செல்லக் கருதின அஷ்டாவக்ரரை வாயில்காப்போன் தடுத்ததும், அஷ்டாவக்ரருக்கும் அவனுக்கும் ஸம்வாதமும், அரசன் அஷ்டாவக்ரருக்கு ஸபைக்கு வர அனுமதிகொடுத்ததும்.)

அஷ்டாவக்ரர், 'குருடனுக்கும் செவிடனுக்கும் ஸ்திரீகளுக்கும் சுமைகொண்டுவருகிறவனுக்கும் (விலகி) வழிவிடவேண்டும். பிராம்மணன்அருகில் வராதபோது வழி அரசனுடையதாகும்; நெருங்கிவிட்டாலோ வழி பிராம்மணனுடையதேயாகும்' என்று சொன்னார். அரசன், 'இப்பொழுது என்னால் உமக்கு இதோ வழி விடப்பட்டது. எந்தவழியினால் போகவிரும்புகிறீரோ அந்தவழியினால் உமதுஇஷ்டப்படி செல்லும். நெருப்பில் மிகவும் சிறியதான

நெருப்பு இல்லை. இந்திரன்கூட ப்ராம்மணர்களைத் தினம் நமஸ்காரம்பண்ணுகிறான்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லக்கேட்டஅவர் தம் மாதுலரோடுகூடவே இஷ்டமானவழியினால்சென்று யாகசாலையைஅடைந்து வாயில்காப்பவனால் முறைப்படி தடுக்கப்பட்டு, அவனைப்பார்த்து, 'ஐயா! நாங்கள் யாகத்தைப் பார்க்க வந்தோம். ஆவலானது மிகப்பெருகியிருக்கிறது. நாங்கள் அதிதிகளாக வந்திருக்கின்றோம். வாயில்காப்பானே! உள்ளே நுழைவதற்கு உன்னுடையகட்டளையை விரும்புகிறோம். இவ்விடத்தில் இந்திரத்யும்னனுடைய குமாரனான 1 ஜனகனுடைய யாகத்தைக் காணவந்த நாங்கள் வாதம்செய்ய விருப்பமுள்ளவர்களாகவும் ஜனகராஜனைப் பார்க்க விருப்பமுள்ளவர்களாகவும் இருக்கிறோம். வாயில் காப்பவனே! நீ கோபம்கொள்ளலாகாது. உத்தமனான வந்தியுடன் க்ஷணத்தில் சேர்ப்பிப்பாயாக' என்கிறவசனத்தைக் கூறினார். வாயில் காப்போன், 'நாங்கள் வந்தியினுடைய கட்டளையைச் செய்பவர்கள். என்னால் சொல்லப்படுகிற வாக்கியத்தை நீர் தெரிந்துகொள்ளும். இந்த இடத்தில் சிறுவர்களான பிராம்மணர்கள் பிரவேசிக்கிறதில்லை. முதிர்ந்தவர்களும் கற்றறிந்தவர்களுமான பிராம்மணஸ்ரேஷ்டர்களே பிரவேசிக்கின்றார்கள்' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'வாயில் காப்பவனே! இந்த இடத்தில் உள்ளே செல்வது முதிர்ந்தவர்கள் விஷயத்தில் நியமிக்கப்பட்டிருக்குமானால் நான் பிரவேசிப்பது தக்கதே. ஏனெனில், நாங்கள், முதிர்ந்தவர்களும் விரதங்களை அனுஷ்டித்தவர்களும் வேதமோதுவதனாலுண்டான பெருமையோடு கூடியவர்களும் (வேத சாஸ்திரங்களைக் கேட்பதில்) விருப்பமுள்ளவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களும் வேதாந்த சாஸ்திரத்திலும் நிச்சயத்தை அடைந்தவர்களுமாயிருக்கிறோம். (பெரியோர்கள், சிறுவனைச்) சிறுவனாக நினைக்கக் கூடாதென்று சொல்லுகிறார்கள். அக்நி சிறியதாயிருந்தாலும் தொட்டால் எரிக்கிறது' என்று சொன்னார். த்வாரபாலன், 'முனிவர்களால் அடையப்பட்டதும் அழிவற்ற பிரம்மத்தை அறிவிக்கின்றதும் (மந்திரம் அர்த்தவாதம் முதலியவைகளால்) அநேக ரூபமுள்ளதும் கர்மகாண்டத்தைக் காட்டிலும் சிறந்து விளங்குவதுமான சொல்லை (=உபநிஷத்தை), நீ அறிவாயாகில் சொல். ஏ! உன்னைச் சிறுவனென்றறி. ஏன் புகழ்ந்துகொள்ளுகிறாய்? வாதவிதித்தி

1 இவன் ஸீதையின் தந்தையல்லன்; முந்தினவனாயிருக்கவேண்டும்.

யானது உன்னால் எவ்விதத்தாலும் அடையமுடியாதது' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'இலவங்காயின் நடுவிலுள்ள பஞ்சு நன்கு பருத்திருப்பதுபோலச் சரீரம் பருத்திருப்பதைக்கொண்டு (அறிவு) முதிர்ச்சி கருதப்படுகிறதில்லை. ஒருவன் குட்டையானவனும் உடல்சிறியவனுமாயினும் (ஞான ரூபமான) பயனுள்ளவனாயிருந்தால் மிக முதியவனே. எவன் (ஞானப்) பயனில்லாதவனோ அவனுக்கு முதுமைத்தன்மை யில்லை' என்று கூறினார். த்வாரபாலன், 'சிறுவர்கள் இவ்வுலகில் முதிர்ந்தவர்களிடத்தினின்றே ஞானத்தைப் பெற்றுக்கொண்டு நாளடைவிலே வ்ருத்தர்களாகின்றார்களல்லவா? சிறிது காலத்தால் ஞானத்தை அடைவதும் ஸாத்யமன்று. பாலனான நீ யாதுகாரணத்தால் முதிர்ந்தவன் போலப் பேசுகிறாய்?' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'தலை நரைத்ததனால் மனிதன் முதிர்ந்தவனாகான். எவன் பாலனாக இருந்தாலும் வேத சாஸ்திரங்களை மிக அறிகிறானோ அவனைத் தேவர்கள் முதிர்ந்தவனென்று அறிகிறார்கள். ரிஷிகள் பிராயங்களாலும் நரைகளாலும் பொருள்களாலும் உறவினர்களாலும் (முதிர்ந்தவரை அறியும்) முறையை ஏற்படுத்தவில்லை. எவன் அங்கங்களுடன் கூடின வேதத்தை அத்தியயனம் செய்திருக்கிறானோ அவனே நமக்கு முதிர்ந்தவன். நான் ராஜ ஸபையில் வந்தியைப் பார்க்க விரும்பி வந்திருக்கிறேன். வாயில் காப்பவனே! [1] பொன் மாலையை அணிந்துகொண்டிருக்கிற அரசனுக்கு நான் வந்திருப்பதைத் தெரிவிப்பாயாக. வாயில்காப்பவனே! நாம் வித்வான்களோடு வாதம் செய்கின்றதை இப்பொழுது பார்ப்பாய். வந்தியோடுகூட வாதம் பெருகினால் அவனை ஜயிக்கப்பட்டவனாகவும் பார்ப்பாய். கல்வி நிரம்பினவர்களும் பிரதான புரோஹிதர்களுடன் கூடினவர்களுமான பிராம்மணர்கள் அரசனோடுகூடவே இப்பொழுது எல்லாரும் பேசாமலிருக்குந்தருணத்தில் உயர்வையோ தாழ்வையோ பார்க்கக்கடவர்' என்று சொன்னார். த்வாரபாலன், 'பத்து வயதுள்ளவனான நீ மிகக் கற்றவர்களான வித்வான்களால் நுழையத்தக்க யாகசாலையில் எவ்வாறு நுழையலாம்? நான் உனக்காக உபாயத்தால் முயல்வேன். உள்ளே செல்வதில் உள்ளபடி முயற்சியைச்செய். இதோ அரசர் உன்னுடைய சொல்

1 'புஷ்கரமாலினே' என்பது மூலம்; 'பொன் மாலையைத் தரித்த' என்பது பழையவுரை; 'தாமரை மலர் மாலையணிந்த' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

கேட்கக்கூடிய இடத்தில் வீற்றிருக்கிறார். நீ இவரைத் திருத்தமான சொற்களால் துதிப்பாயாக. இவர் உள்ளே வருவதில் அனுமதியையும் உனக்கிஷ்டமான அனைத்தையும் ப்ரீதியுடன் கொடுப்பார்' என்று சொன்னான்.

அஷ்டாவக்ரர், 'ஓ! ஓ! அரசனே! ஜனக வம்சத்தில் பிறந்த அரசர்களுள் மேன்மைவாய்ந்தவனே! நீயே ஸம்ராட்(=பேரரசன்). உன்னிடத்தில் எல்லாம் நிறைந்திருக்கின்றன. (இக்காலத்தில்) நீயும் முற்காலத்தில் யயாதி மஹாராஜன் ஒருவனுமே யாக கர்மாக்களைச் செய்கிறவர்கள். வித்வானான வந்தியானவன் வாதம் அறிந்தவர்களை, தனக்கு எதிரியில்லையென்றெண்ணி, வாதத்தில்வென்று தோற்றவர்களனைவரையும் உன்னால் கட்டளையிடப்பட்டவர்களும் உன்னிஷ்டத்தைச் செய்பவர்களுமான வேலைக்காரர்களைக்கொண்டு ஜலத்தில் அமிழ்த்துவிக்கிறானென்று எங்களுக்குக்கேள்வி. அப்படிப்பட்ட நான் (இதனைக்) கேட்டுப் பிராம்மணர்களினருகில் [1] வேத வேதாந்தார்த்தங்களை ஸபையில் சொல்வதற்கன்றோ வந்திருக்கிறேன்? அந்த வந்தி எங்கே? அவனை எதிர்த்துச் சூரியன் நக்ஷத்திரங்களை மறையச் செய்வதுபோல நாசம் செய்வேன்' என்று சொன்னார். அரசன், 'நீ எதிரியான வந்தியினுடைய வாக்கிய பலத்தை அறியாமலே அவனை ஜயிப்பதற்கு விரும்புகிறாய். (வந்தியின்) வல்லமையை நன்கறிந்தவர்கள் இவ்வண்ணம் சொல்லுதல்கூடும். வாதம் செய்வதில் தேர்ந்த பிராம்மணர்கள் இவனுடன் (வாதம் செய்து) பார்த்தும் விட்டார்கள். முற்காலத்தில் இந்த வந்தியினுடையபலத்தை அறியாமல் இவனை வெல்லவிரும்பின பிராம்மணர்கள் இவனோடு எதிர்த்து ஸூர்யனால் நக்ஷத்திரங்கள் ஒளியற்றனவாவதுபோல ஒளியற்றவராயினர். உனக்கு இதில் முயற்சியானது ஆசைபற்றியதன்றோ? அது வந்தியைஎதிர்த்தால் அவ்வாறே நாசமடையும். குழந்தாய்! மிக்க அறிவுடையவர்களே தோல்வி அடைவிக்கப்பட்டார்கள். நீ எவ்வாறு இந்த ஸபையை வெல்வதற்கு வல்லவனாவாய்?' என்றுசொன்னான். அஷ்டாவக்ரர், 'இவன் எம்போன்றவர்களோடு விவாதம் செய்விக்கப்படவில்லை. ஆதலால், சூரனாகக்கருதப்பட்டு அச்சமற்றுப் பேசுகிறான். இப்பொழுது என்னை எதிர்த்து (என்னால்) வெல்லப்பட்டவனாக வழியில் முறிந்துகிடக்கிற வலிமையற்ற

1 'ப்ரம்மாத்வைதம்' என்பதும் 'ப்ரம்மாத்யம்வை' என்பதும் வேறுபாடங்கள்.

அச்சுள்ள வண்டிபோலக் கிடக்கப்போகிறான்' என்றுசொன்னார். அரசன், 'ஆறு[1] நாபியுள்ளதும் பன்னிரண்டு அச்சுக்களுள்ளதும் இருபத்துநான்கு பொருத்துக்களையுடையதும் முந்நூற்றறுபது ஆர்களுள்ளதுமான (சக்கரத்தின்) பயனை எவன் அறிவனோ அவன் சிறந்தகவி' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'இருபத்துநான்கு பொருத்துக்களுள்ளதும் ஆறு நாபியுள்ளதும் பன்னிரண்டு அச்சுக்களுள்ளதும் முந்நூற்றறுபது ஆர்களுள்ளதும் எப்பொழுதும் ஓடிக்கொண்டேயிருக்கிறதுமான[2] (கால) சக்கரம் உன்னைப்பாதுகாக்கவேண்டும்' என்றுசொன்னார். அரசன், '(தேரில்) பூட்டப்பட்ட இரண்டு பெண்குதிரைகள்போலச் சேர்ந்திருப்பவைகளும் பருந்துகள்போல விழுகின்றவைகளுமான (இரண்டுவஸ்துக்களிருக்கின்றன.) தேவர்களுள் எவன் அவற்றைக் கர்ப்பத்தில் தரிக்கிறான்? அவ்விரண்டும் எந்தக்கர்ப்பத்தை உண்டுபண்ணுகின்றன?' என்றுகேட்டான். அஷ்டாவக்ரர், 'அரசனே![3] உன்னுடைய வீட்டிலும் உன்பகைவரின் வீட்டிலுங்கூட அவ்விரண்டும்[4] (மின்னலும் இடியும்) நேரவேண்டாம்.[5] மேகமானது (அவ்விரண்டையும்) உண்டுபண்ணுகிறது. அவை அந்த மேகத்தையே உண்டுபண்ணுகின்றன' என்றுசொன்னார். அரசன், 'எந்தப் பிராணி தூக்கத்தில் கண்ணை மூடாமல் இருக்கிறது? எந்த வஸ்துவானது பிறந்து அசைவற்றிருக்கிறது? எதற்கு இருதயம் இல்லை? எது வேகத்தால் வ்ருத்தியடைகிறது' என்று வினவ, அஷ்டாவக்ரர், '[6]மீன் தூக்கத்தில் கண்ணை மூடுகிறதில்லை. [7]முட்டையானது பிறந்தும் அசைகிறதில்லை. [8]சரீரமில்லாததற்கு இருதயமில்லை. [9]நதியானது வேகத்தால் வ்ருத்தி

---

1 ஆதிபர்வம் 64-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

2 'காலந்தவறாமல் செய்தஅறம்' என்பது பழையவுரை.

3 வேறுபாடம். 4,5 'துயரமும் மரணமும் என்பதும், மனம் என்பதும் கருத்து' என்பது பழையவுரை.

6 'ஜீவாத்மா என்பது கருத்து' என்பது பழைய வுரை.

7 'பிரம்மாண்டம் என்பது கருத்து' என்பது பழைய வுரை.

8 'உடலில் பற்றற்றவனுக்கு என்பது கருத்து' என்பது பழையவுரை.

9 'சித்தம் என்பது கருத்து' என்பதும், 'ஸ்வரூப ஞானத்துக்கு அழிவில்லை யென்பதும், காணப்படுவன வெல்லாம் ஜடமென்பதும், சரீரத்தில் பற்றற்றவனுக்கே முக்தி யென்பதும், மனமே பிரபஞ்சமென்பதும் இந்த விடைகளால் விளக்கப்பட்டன' என்பதும் பழைய வுரை.

அடைகிறது' என்று சொன்னார். அரசன், 'தேவன்போன்ற திறமை வாய்ந்தவனே! நான் உன்னை மனிதனாக எண்ணவில்லை. நீ பாலனல்லை. என்னால் முதிர்ந்தவனாகக் கொள்ளப்படுகிறாய். வாக்குக்களின் பிரஸங்கத்தில் உனக்கு ஒப்பான மனிதன் இல்லை. கற்றறிந்தவனே! ஆதலால், ஸபையில் நுழைவதற்கு இதோ நான் வழியைக் கொடுக்கிறேன்' என்று சொன்னான்.

நூற்றுமுப்பத்தாறுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ரா பர்வம். (தொடர்ச்சி.)

(அஷ்டாவக்ரநுக்தும் வந்திக்தும் வாதம் நடந்ததும், தோற்ற வந்தீ ஜலத்தில் அமிழ்ந்ததும், ஜலத்தில் அமிழ்த்தப்பட்டிருந்த எல்லாப் பிராம்மணர்களும் எழுந்ததும், அஷ்டாவக்ரர் தந்தையுடனும் அம்மானுடனும் தமதாச்ரமம் சென்றதும், அஷ்டாவக்ரர் பிதாவின் கட்டளையால் ஸமங்கை என்கிற நதியிலிறங்கியதும், அவருடம்பின் கோணல் நிமிர்ந்ததும்.)

அஷ்டாவக்ரர், '[1] உக்ரமான சேனையுள்ளவனே! அரசனே! இங்கே வந்து கூடியிருப்பவர்களும் ஒப்பற்றவர்களுமான இந்த அரசர்களுள், மஹா ஜனத்தில் பிரம்மத்தைப்பற்றிப் பேசுகிற வாதிகளுக்கு வேறு தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமில்லாததுபோல, எனக்கும், (வந்தியை அறிவதைத் தவிர) வேறு தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமில்லை. வாதஞ்செய்து

---

1 'உக்ரமான ஸேனையுடன் கூடியவனே! அரசனே! இச்சபையின்கண் வந்து கூடியிருப்பவர்களும் நிகரற்றவர்களுமான அரசர்களின் நடுவில் வாதிகளுள் சிறந்தவனான வந்தியை நான் அறியவில்லை. பெரிய நீர்நிலையில் அன்னப் பறவையைத் தேடுவதுபோல நான் அவனைத் தேடி யறிகிறேன். அதிவாதியென்று கர்வம் கொண்டவனே! பந்தயத்தை ஒப்புக்கொண்டவனும் நதியின் நீரோட்டம் போன்றவனுமான நீ இப்பொழுது நன்கு மூண்டெரிகின்ற (ஊழித்) தீப்போன்ற என்னை மீறிச் செல்லப் போகிறதில்லை. வந்தியே! இப்பொழுது இந்தச் சபையில் என் முன்னிலையில் உறுதியுள்ளவனாக இரு' என்பது வேறுபாட்டின் பொருள்.

(தோற்றவர்களை) முழுகச்செய்துகொண்டிருந்த நீ, தனமில்லாதவன் ஆற்றின் ஜலத்தில் விழுந்து மீளாமற்போவது போல விடுபடமாட்டாய். வந்தியே! நன்கு மூட்டப்பட்ட தீப்போலிருக்கிற என் விஷயத்தில் இப்பொழுது இங்கே ஸ்திரமாக இரு' என்று சொன்னார். 1 வந்தி, 'தூங்கிக்கொண்டிருக்கிற புலியை எழுப்பாதே. கடைவாய்களை நக்கிக்கொண்டிருக்கிற ஸர்ப்பத்தைத் தலையில் மிதித்தால், காலால் மிதிக்கப்பட்ட அதனிடமிருந்து நீ கடிக்கப்படாமல் விடுபடமாட்டாய். அதனைத் தெரிந்துகொள். திடமான தேகமுள்ளவனும் (புத்தி) பலம் சிறிதுமில்லாதவனுமான ஒரு மனிதன் கொழுப்பினால் மலையைக் குத்தினால் அவனுடைய கையே நகங்களுடன் பிளக்கப்படுகிறது. மலைக்குக் காயம் காணப்படுகிறதேயில்லையன்றோ?' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'மைநாகத்துக்கு மற்ற மலைகள் போலவும் வண்டியிழுக்கிற காளைக்குக் கன்றுக்குட்டிகள் போலவும் மிதிலாதிபதியான அரசனுக்கு எல்லா அரசர்களும் கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறார்கள். எப்படி தேவர்களுள் மஹேந்திரன் மிகச் சிறந்தவனோ, எப்படி நதிகளுள் கங்கை மிகச் சிறந்ததோ அப்படியே அரசர்களுள் நீ ஒருவனே மிகச் சிறந்தவன். வந்தியை என்னருகில் அழைத்துவரச் செய்வாயாக' என்று சொன்னார். அரசனே! அஷ்டாவக்ரர் ஸபையில் இவ்வண்ணம் கர்ஜித்துக் கோபம் மூண்டவராக வந்தியைப் பார்த்து, 'என்னால் சொல்லப்படும் வாக்கியத்துக்கு நீ விடை கூறுவாயாக. உன்னுடைய வாக்கியத்திற்கும் நான் விடை கூறுகிறேன்' என்று சொன்னார்.

வந்தி, 'அக்னி ஒருவனே பலவாறு மூட்டப்படுகிறான். ஸூர்யன் ஒருவனே இந்த உலகம் முழுமையிலும் பிரகாசிக்கிறான். வீரனான தேவராஜன் ஒருவனே பகைவரைக் கொல்லுகிறான். யமன் ஒருவனே பித்ருக்களுக்குத் தலைவன்' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'நண்பர்களான இந்திரனும் அக்

1 இந்தப் பகுதியும் அஷ்டாவக்ரர் சொன்னதாகவே கொண்டு, 'என்னைப் படுத்துக்கொண்டிருக்கிற புலியென்று அறிவாயாக. பிதாவினுடைய நிக்ரஹத்தினால் முந்தியே காலால் மிதிக்கப்பட்டிருக்கிறவனும் கடைவாய்களை நக்கிக்கொண்டிருக்கிற ஸர்ப்பம் போன்றவனுமான அப்படிப்பட்ட என்னுடைய தலையை மிதித்து, என்னிடத்தினின்று கடிக்கப்படாமல் நீ விடுபடமாட்டாய்' என்று பொருள் செய்வது பழைய வுரை.

னியும் இருவராகவே ஸஞ்சரிக்கிறார்கள். நாரதர் பர்வதர் என்கிற தேவரிஷிகளும் இருவரே. அஸ்வினீ தேவர்களும் இருவரே. ரதத்திற்குச் சக்கரங்களும் இரண்டே. ப்ரம்மதேவரால் ஏற்படுத்தப்பட்ட கணவனும் மனைவியும் இருவரே' என்று சொன்னார். வந்தி, 'இந்த ப்ரஜையானது தன்னுடைய வினையினால் [1] மூன்று விதமாகப் பிறக்கிறது. மூன்று வேதங்கள் (தாத்பர்யத்தோடு) சேர்ந்தவைகளாக (மூன்று ஆஸ்ரமங்களுக்கும் உரிய) எல்லாக் கர்மக் கூட்டங்களையும் தாங்குகின்றன. யாகத்தை நடத்துகின்ற மூன்று வர்ணத்தார்கள் [2] மூன்று ஸவநங்களைச் செய்கின்றார்கள். (ஸ்வர்க்கம் நரகம் பூமி என வினைப்பயனை அனுபவித்தற்கிடமான) உலகங்கள் மூன்றே என்றும், (ஸூர்யன் சந்திரன் அக்னி என) ஒளிகள் மூன்றே என்றும் சொல்லுகிறார்கள்' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'பிரம்ம வித்துக்களுக்கு ஞானத்தை அடைவதற்கிடமான ஆஸ்ரமங்கள் நான்கு. நான்கு வர்ணத்தார்கள் இந்த ஞான யாகத்தை நடத்துகிறார்கள். விராட் ஸூத்ராத்மா அந்தர்யாமி துரீய மூர்த்திகளின் ஸாக்ஷாத்கார ரூபமான நிலைமைகள் நான்கு உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைத்தெரிவிப்பனவான அகாரம், உகாரம், மகாரம், அர்த்தமாத்ரை ஆகிய அட்சரங்களும் நான்கு. வாக்கும், பரா பஸ்யந்தீ மத்யமா வைகரீ என்கிற நான்குபாதங்களுள்ளதென்று எப்பொழுதுமே சொல்லப்பட்டது' என்று கூறினார். வந்தி, 'அக்னிகள் [3] ஐந்து. [4] பங்க்திச்சந்தஸானது ஐந்துபாதங்களுள்ளது. [5] யாகங்கள் ஐந்தே. இப்படியே சப்தம் முதலியவற்றை க்ரஹிக்கிற இந்திரியங்களும் [6] ஐந்து.

---

1 நல்வினையினால், தேவர், தாவரம், மனிதர் என மூன்று; தீவினையினால் நரகர், தாவரம், திர்யக் என மூன்று.

2 ப்ராதஸ்ஸவனம், மாத்தியந்தினஸவனம், ஸாயம்ஸவனம்.

3 கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி, ஸப்யம், ஆவஸத்யம்.

4 'உக்தா, அத்யுக்தா, மத்யா, பிரதிஷ்டா, ஸுப்ரதிஷ்டிதா, காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தீ, த்ரிஷ்டுப், ஜகதீ, அதிஜகதீ, சக்வரீ, அதிசக்வரீ, அஷ்டீ, அத்யஷ்டீ, த்ருதி, அதித்ருதி, க்ருதி, ப்ராக்ருதி, ஆக்ருதி, விக்ருதி, ஸங்க்ருதி, அதிக்ருதி, உத்க்ருதி எனச் சந்தஸுகள் இருபத்தாறு' என்பன வ்ருத்தரத்னாகரம் முதல் அத்யாயம் 19, 20, 21-வது ஸ்லோகங்கள்.

5 அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸங்கள், சாதுர்மாஸ்யங்கள், பசு, ஸோமம். 6 கண்-மூக்கு-நாக்கு, செவி, த்வக்.

சரீராகாரமாகப் பரிணமிக்கின்ற ஜலப்ரதானமான ஐந்து பூதங்களில் சஞ்சரிக்கின்ற சிச்சக்தியும் ப்ரமாணம், விபர்யயம், விகல்பம், நித்ரை, ஸ்ம்ருதி என்கிற ஐந்து வ்ருத்திகளாகிற ஐந்து சிகைகளுடன் கூடியதாக வேதத்தில் காணப்பட்டிருக்கிறது. உலகத்திலும் ஐந்து விஷய ப்ரவாஹங்கள் புண்யமானவை என்று ப்ரஸித்திபெற்றிருக்கின்றன' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'ஆதானத்தில் ஆறு கோக்களைத் தக்ஷிணையாகச் சிலர் சொல்லுகிறார்கள். காலசக்கரத்தை நடத்துகிற இந்த ருதுக்களும் ஆறே. ஞானேந்திரியங்களும் [1] ஆறு. க்ருத்திகைகளும் ஆறு. எல்லா வேதங்களிலும் ஸாத்யஸ்கங்களென்கிற யஜ்ஞவிசேஷங்களும் ஆறு என்று காணப்பட்டிருக்கின்றன' என்று சொன்னார். வந்தி, இந்திரியங்களால் அநுபவிக்கத்தக்க உலக விஷயங்களில் பசுக்கள் போலப் பற்றுதலுள்ள [2] ஏழு கிராம்ய பசுக்களும் ஆமுஷ்மிக விஷயங்களில் பற்றுதலுள்ள ஏழு வந்ய பசுக்களும் ஏழு சந்தஸுகளும் ஒரு யாகத்தை நடத்துகின்றன. ரிஷிகளும் எழுவர். பூஜைகளும் ஏழு. வீணையும் ஏழு தந்தியுள்ளதென்று ப்ரஸித்தமாக இருக்கிறது' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'நூற்றுக் கணக்கானவைகளை அடக்கிக்கொண்டிருக்கிற சணல் நார்க்கோணிகள் [3] எட்டு. அப்படியே சிங்கத்தைக் கொல்லுகிற சரபம் எட்டுக்கால்களை உடையது. தேவதைகளுள் வஸுக்கள் எட்டுப் பேர்களென்று கேட்டிருக்கிறோம். எல்லா யஜ்ஞங்களிலும் யூபமும் எட்டுப் பட்டையுள்ளதாக விதிக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னார். வந்தி, 'பித்ருக்களை உத்தேசித்துச் செய்கிற யாகத்தில் ஸாமிதேனீ என்கிற அக்கினியை மூட்டுகிற ருக்குக்கள் [4] ஒன்பதென்று சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியே, முக்குண

---

1 முன் சொல்லிய கண் முதலிய ஐந்தனோடு மனமும் சேர்ந்து ஆறு.

2 முன் சொல்லிய கண் முதலிய ஆறுடன் புத்தியும் சேர்ந்து ஏழு. இவற்றின் விஷயங்களே இம்மைப்பயனில் வந்தபோது கிராம்ய பசுக்கள்; மறுமைப் பயனில் வந்தபோது வந்யபசுக்கள்.

3 முன் சொல்லிய கண் முதலிய ஏழும் அஹங்காரமும் சேர்ந்த எட்டின் விஷயங்கள்.

4 ஒரேருக்கு மூன்று முறை ஜபிக்கப்பட்டு ஒவ்வொரு முறையிலும் மும்மூன்று ஸமித்துக்கள் ஹோமம் செய்யப்படுதலால் ஸாமிதேனிகள் ஒன்பதாகின்றன.

மயமான பிரக்ருதியானது தன் குணங்களின் ஏற்றம் தாழ்ச்சி ஸமமென்கிற நிலைமைகளால் ஒன்பது எண்ணிக்கையைப் பெற்றுப் பலவித வஸ்துக்களை உண்டுபண்ணுகிறதென்று சொல்லுகிறார்கள். ப்ருஹதீச் சந்தஸானது (தனித்தனி) ஒன்பது அக்ஷரங்களடங்கின நான்கு பாதங்களுடன் கூடியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்பதுவரையிலுள்ள எண்களே வரிசைக்ரமம் மாறியிருந்து பல எண்களாகின்றன' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'இவ்வுலகத்தில் தேகமென்கிற பெயருள்ள புரத்தில் வஸிக்கின்ற ஜீவனுக்குத் [1] திசைகள் பத்தென்று சொல்லப்பட்டிருக்கின்றன. பத்து நூறுகளை நிறைந்த ஆயிரமாகச் சொல்லுகிறார்கள். கர்ப்பிணிகள் கர்ப்பங்களைப் பத்துமாதம் சுமக்கிறார்கள். தத்துவத்தை உபதேசிக்கிறவர்கள் பத்துப்பேர்கள். தத்துவத்தை நிராகரிப்பவர்கள் பத்துப்பேர்கள். தத்துவ வித்யோபதேசத்தைப் பெற்றுக்கொள்ளத் தக்க அதிகாரிகள் பத்துப் பேர்கள்' என்று சொன்னார். வந்தி, 'ஜீவபசுக்களுக்கு இந்திரியங்களால் அறியப்படுகிற விஷயங்கள் பதினொன்று. இந்தப் பதினொரு விஷயங்களே இந்த ஸம்ஸாரத்தில் ஜீவ பசுக்களுக்கு யூபங்களாக இருக்கின்றன. ப்ராணிகளுக்கு ஸந்தோஷம் துக்கம் முதலிய விகாரங்கள் பதினொன்று. தேவர்களுள் ருத்திரர்கள் பதினொருவர் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள்' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'வருஷத்தைப் பன்னிரண்டு மாதங்களுள்ளதாகச் சொல்லுகிறார்கள். ஜகதீச் சந்தஸின் பாதமானது பன்னிரண்டு அக்ஷரங்களையே உடையது. [2] ப்ரக்ருதியாகமானது பன்னிரண்டு நாள்களால் முடிக்கத்தக்கதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் அறிஞர்கள் ஆதித்யர்களைப் பன்னிருவர்களென்று சொல்லுகிறார்கள்' என்று கூறினார். வந்தி, 'த்ரயோதசி திதியானது சிறந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது. பூமியும் பதின்மூன்று த்வீபங்களுடன் கூடியது' என்று சொன்னான். வந்தியானவன் இவ்வளவுமட்டிலும் சொல்லி ஓய்ந்தான்.

அஷ்டாவக்ரர் ச்லோகத்தினுடைய பிந்தியபாதியை உரைத்தார். 'ஸங்கமில்லாத ஜீவாத்மாவானவன் பத்து இந்திரியங்கள் புத்தி மனம் அஹங்காரம் ஆகப் பதின்மூன்றையும் ஆச்ரயித்து விஷயேந்திரியஸம்பந்தரூபமான போகமென்கிற யஜ்ஞத்தில்

1 'வாக்கு முதலிய இந்திரியங்கள் பத்து' என்பது பழையவுரை.

2 'பிரஸித்தமான யாகம்' என்றும் கொள்ளலாம்.

நிலைபெற்றிருக்கிறான். [1] அதிஜகதீச்சந்தஸ்ஸுகளைப் பாதம் ஒன்றுக்குப் பதின்மூன்று முதலான அக்ஷரங்களுள்ளவைகளென்று சொல்லுகிறார்கள்' [2] என்று கூறினார்.

பிறகு, ஸூதபுத்ரனை வந்தி பேசாமல் தலைகுனிந்து மிக்க கவலையுள்ளவனாக இருப்பதையும் அஷ்டாவக்ரர் மேல்மேல் (விஷயங்களைச்) சொல்லிக்கொண்டே இருப்பதையும் பார்த்து, அப்பொழுது, ஸபையில் பெரிய ஆரவாரம் எழுந்தது. ஜனகராஜனுடைய எல்லாம் நிரம்பின அந்தயஜ்ஞமானது அவ்வாறு ஜனங்களுடைய ஆரவாரத்தால் குழப்பமடைந்திருக்கும் தருணத்தில், பிரஸித்தர்களான எல்லாப் பிராம்மணர்களும் கைகளைக்குவித்துக்கொண்டும் அஷ்டாவக்ரரைப் பூஜித்துக்கொண்டும் நேரில் வந்தார்கள். அஷ்டாவக்ரர், 'அரசனே! இவனாலேயே, முற்காலத்தில், பண்டிதர்களான பிராம்மணர்கள் வாதத்தில் ஜயிக்கப்பட்டு ஜலத்தில் அமிழ்த்தப்பட்டார்கள். இந்தவந்தி இப்பொழுது அந்தமுறைகளையே அடையக்கடவன். இவனை விரைவாகப்பிடித்து ஜலத்தில் அமிழ்த்து' என்று சொன்னார். வந்தி, 'ஜனகமகாராஜனே! நான் வருணராஜனுடைய புத்திரன். உன்னுடைய யாகம் இங்கு நடக்கும் போதே அந்தவருணலோகத்தில் பன்னிரண்டு வருஷங்களால் நிறைவேற்றத்தக்க ஸத்ரயாகம் நடந்துகொண்டிருந்தது. அதற்காக அந்தச் சிறந்தபிராம்மணர்கள் என்னால் அனுப்பப்பட்டார்கள். வருணனுடைய யஜ்ஞத்தைப் பார்ப்பதற்காகப் போயிருந்த அவர்களெல்லாரும் இதோ மீண்டும் வருகிறார்கள். எவரால் நான் தந்தையை அடையப்போகிறேனோ அந்தப் பூஜிக்கத்தக்க அஷ்டாவக்ரரைப் பூஜிக்கிறேன்' என்றுசொன்னான். அஷ்டாவக்ரர், 'பண்டிதர்களான எந்தப்பிராம்மணர்கள் வாக்குடனும் மேதையுடனும் தோல்வி அடைவிக்கப்பட்டவர்களாக ஸமுத்திர ஜலத்தில் மூழ்

---

1 'ஜ்ஞாநாவரணமான அஜ்ஞானத்தை அதிக்ரமித்திருக்கிற தர்மம் முதலியவைகள் புத்தி முதலிய பதின்மூன்று இந்திரியங்களைப் பக்ஷிக்கிறவைகளென்று சொல்லுகிறார்கள்' என்பது வேறுபொருள்

2 அஷ்டாவக்ரருக்கும் வந்திக்கும் ஒன்றுமுதல் பதின்மூன்று வரையுள்ள எண்களைக்கொண்டு நடந்த வாதத்தைத் தெரிவிக்கும் இந்த ஸ்லோகங்களுக்கு, வெளிப்படையாகத் தோற்றுகிற பொருள் ஒருவாறு இங்கே எழுதப்பட்டது. இவற்றுள் ஒவ்வோர் எண்ணுக்கும் தாத்பரியமாக ஒவ்வொரு ஸ்லோகம் எழுதி அவ்வவற்றின் உள்ளுறைப் பொருளை விளக்குவது பழைய வுரை. அதனை அவ்வுரையிற் காண்க.

கும்படி செய்யப்பட்டார்களோ அவர்களுடைய வேதமயமான அந்தவாக்கை மேதையுடன் நான் மீட்டேனென்பதை ஸாதுக்கள் ஆராய்ந்து பார்க்கக்கடவர். நடந்ததை அறியும் நெருப்பானது எரிக்கும் ஸ்வபாவமுள்ளதாக இருந்தாலும் மெய் பேசுபவர்களுடைய சரீரங்களை விட்டுப் பொய் சொல்பவர்களுடைய சரீரங்களை எரிப்பதுபோல, ஸத்புருஷர்கள், [1] சிறுவர்களோ புத்திரர்களோ பேசுந்திறமை குறைந்தவர்களாயினும் அவர்களுடைய பேச்சில் ஸாரத்தை ஆராய்வார்கள். [2] நறுவிலி மரத்தின் இலையில் போஜனம் செய்தோ பழத்தைச் சாப்பிட்டோ தேஜஸை இழந்தவனாக இருந்துகொண்டு வந்தியின் வசனத்தைக் கேட்கிறாயோ; அல்லது, அவனால் செய்யப்படும் ஸ்தோத்திரங்கள் உன்னை மதமடையும்படி செய்கின்றனவோ. ஜனக! நீ யானையைப்போல் வந்தியினால் அதிகமாகத் தூண்டப்பட்டவனாகி என்னுடைய இந்த வசனத்தைக் கேட்கவில்லை' என்று சொன்னார். ஜனகன், 'திவ்ய ரூபத்துடன் கூடியதும் மனுஷ்ய சக்திக்கு மேற்பட்டதுமான உம்முடைய வாக்கைக் கேட்கிறேன். நீர் நேரில் திவ்யரூபத்துடன் கூடியவராக விளங்குகிறீர். நீர் விவாதத்தில் வந்தியைத் தோல்வியடையச் செய்ததனால் இவன் இப்பொழுது உம்முடைய இஷ்டப்படி உமது வசத்திலிருப்பவனாக ஒப்பிக்கப்பட்டுவிட்டான்' என்று சொன்னான். அஷ்டாவக்ரர், 'வேந்தே! இந்த வந்தி உயிரோடிருப்பதனால் எனக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை. இவனுக்குப் பிதா வருணனேயாகில் ஸமுத்திரத்தில் இவனை மூழ்கும்படி செய்வாயாக' என்று சொன்னார். வந்தி, 'நான் வருணராஜனுடைய புத்திரனே. ஜலத்தில் முழுகச் செய்யப்படுவதில் எனக்குப் பயமில்லை. இந்த அஷ்டாவக்ரர், நெடுங்காலமாகக் காணாமல் போயிருந்த பிதாவான கஹோளரை இந்த முகூர்த்தத்தில் பார்ப்பார்' என்று சொன்னான்.

பிறகு, மகாத்மாவான வருணனால் பூஜிக்கப்பட்ட அந்தப் பிராம்மணர்கள் எல்லாரும் ஜனகனுடைய ஸமீபத்தில் அந்த ஜலத்

---

1 'ஸத்புருஷர்கள், (பேசுகிறவர்கள்) சிறுவர்களானாலும் புத்ரர்களானாலும் பேசுந்தன்மை குறைந்தவர்களானாலும் அவர்களுடைய பேச்சில் ஸாரத்தை ஆராய்வார்கள்' என்றும் கொள்ளலாம்.

2 'ஶ்லேஷ்மாதகீ' என்பது மூலம்; 'அதன் இலையில் உண்பதும் அதன் பழத்தைப் புசிப்பதும் புத்தியைக் கெடுப்பவை; அதனால், குற்றமுள்ளவை' என்பது பழையவுரை.

திலிருந்து மேலே எழுந்து வந்தார்கள். கஹோளர், 'ஜனங்கள் புத்திரனைப் பெறுவதற்குரிய புண்யகர்மங்களால் இதற்காகவே புதல்வர்களை விரும்புகிறார்கள். நான் செய்ய முடியாத அந்தக் கார்யத்தை என்னுடைய புத்திரன் செய்தான். ஜனக! பலமில்லாதவனுக்குப் பலமுள்ள பிள்ளையும் அறிவினால் குறைந்தவனுக்குப் பண்டிதனான பிள்ளையும் கற்றறியாதவனுக்குக் கற்றறிந்த பிள்ளையும் உண்டாகின்றனர்' என்று சொன்னார். வந்தி, 'அரசே! யமன் தானாகவே யுத்தத்தில் கூர்மையுள்ள கோடாலியினால் உன் பகைவர்களுடைய தலைகளை அறுத்துக்கொண்டு (இருக்கிறான்). உனக்கு மங்களமுண்டாகுக. இங்கே ஜனகராஜனுடைய இந்த யாகத்தில் உக்த்யமென்கிற க்ரதுவிசேஷத்தில் கானம்பண்ணத்தக்கதும் பெரிதும் சிறந்ததுமான ஸாமமானது கானம் பண்ணப்படுகிறது; ஸோமரஸமும் நன்கு பானம் பண்ணப்படுகிறது. தேவர்கள் சந்தோஷத்துடன் பரிசுத்தமான ஹவிர்ப்பாகங்களை நேரில் பெற்றுக்கொண்டார்கள்' என்று சொன்னான். அரசனே! பிறகு, அந்த எல்லாப் பிராம்மணர்களும் மிக நல்ல ஒளியுள்ளவர்களாக எழுந்தவுடன், ஜனகராஜனால் அனுமதி கொடுக்கப்பட்ட வந்தியானவன் ஸமுத்திர ஜலத்தில் பிரவேசித்தான். அஷ்டாவக்ரர் அந்தப் பிராம்மணர்களால் பிதாவான கஹோளரைப் பூஜிக்கச் செய்து தாமும் உள்ளபடி பூஜிக்கப்பட்டு வந்தியைவென்று அம்மானான ஶ்வேதகேதுவுடன் சிறந்த ஆஶ்ரமத்தைக்குறித்தே திரும்பிவந்தார். பிறகு, பிதாவான கஹோளர், மாதாவான ஸுஜாதையின் பக்கத்தில்நிற்கிற இந்த அஷ்டாவக்ரரைப்பார்த்து, 'நீ இந்த ஸமங்காநதியில் சீக்கிரம் ஸ்நாநம் செய்வாயாக' என்று சொன்னார். அவர் அவ்வண்ணமே ஸ்நானம் செய்தார். உடனே, கோணல் நிமிர்ந்த அங்கங்களுடன் கூடியவரானார். [1] ஸமங்காநதியும் பாவனமாயிற்று. இதில் ஸ்நானம் செய்கிறவன் பாவத்தினின்று விடுபடுகிறானன்றோ? நீயும் பிராதாக்களுடனும் பார்யையுடனும்கூட [2] ஸ்நானபானவகாஹங்களுக்காக இந்தநதியில் பிரவேசிப்பாயாக. குந்தீநந்தன! அஜமீட வம்சத்தில் பிறந்தவனே! பிரஸித்தனாக

1 'அதுமுதல் புண்யமான அந்தநதியும் ஸமங்கை என்னும் பெயருள்ளதாயிற்று' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

2 ஸ்நாநம், அவகாஹம் இரண்டும் ஒருபொருட்சொற்கள்; ஸ்நாநம் மந்திரங்களோடு நீராடுவது, அவகாஹம் மந்திரங்களின்றி நீராடுவது என்று வேறுபாடுகொள்ளலாம்.

இருக்கிற நீ இந்த இடத்தில் பிராதாக்களுடனும் பிராம்மணர்களுட னும் ஸுகமாக வஸித்து என்னோடுகூடப் பரிசுத்தமான கர்மங் களிலேயே பற்றுதலுள்ளவனாக வேறு புண்ணியஸ்தலங்களுக்குச் செல்லக்கடவாய்.

நூற்றுமுப்பத்தேழாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் ரைப்யருடைய ஆச்ரமத்தை அடைந்ததும், லோமசர் யவக் ரீதருடைய உபாக்கியானத்தைச் சொல்லத்தொடங்கியதும், யவக்ரீதர் தம் தகப்பனுருக்குமித்திரரான ரைப்யரிடமும் பராவஸுவினிடமும் அர்வாவஸுவினிடமும் பொறமையினுல் உபதேசமில் லாமலே வேதங்களை அறிவதற்காகத் தவம்புரிந் ததும், இந்திரன் தடுத்தும் அவனிடத் தினின்று வலிந்து வரத்தைப் பெற் றதும், பரத்வாஜர் யவக்ரீதருக் குப் பாலதியின் உபாக் யானத்தைச் சொல் லியதும்.)

இதோ மதுவிலா என்கிற ஸமங்கையானது நன்கு விளங்கு கிறது. பரதன் ஸ்நானம்செய்த கர்த்தமிலமென்கிற தீர்த்தம் இது. தர்மத்தினின்று நழுவாதவனே! வ்ருத்ரனைக்கொன்றதனால் செல் வம் குன்றிய இந்திரன் ஸமங்கையில் நீராடி எல்லாப் பாவங்களி னின்றும் விடுபட்டானும். புருஷச்ரேஷ்டனே! முற்காலத்தில் [1] அதிதியானவள் புத்ரர்களை விரும்பி எந்த இடத்தில் அதற்குரிய அன்னத்தைச் சமைத்தாளோ அந்த விநசனமானது இதோ மைநாகத்தினுடைய மத்தியில் இருக்கிறது. பரதச்ரேஷ்டர்களே! இந்தச் சிறந்த மலையின்மீதேறிப் புகழை அழிக்கின்றதும் வாக்கி னுல் சொல்லத்தகாததுமான துன்பத்தை விலக்கிக்கொள்ளுங் கள். அரசே! ரிஷிகளுக்குப் பிரியமான கனகலங்களென்னும் மலை கள் இவை. யுதிஷ்டிரா! கீர்த்திபெற்ற கங்கையானது இதோ

---

1 'மைநாகமலை பூமியினுள் மறைந்தஇடம் இது. ஆதலால், இது விந சன மென்னப்படும். முற்காலத்தில் இங்கே அதிதி புத்ரர்களை விரும்பி, பிரம்மௌதனமென்னும் அன்னத்தைச் சமைத்தாள்' என்பது இங்கி லிஷ் மொழிபெயர்ப்பு.

விளங்குகிறது. முற்காலத்தில் பகவானான ஸனத்குமாரர் இந்த இடத்தில் தவத்தின் ஸித்தியை அடைந்தார். அஜமீட வம்சத்தில் பிறந்தவனே! இதில் ஸ்நானம் செய்தால் எல்லாப் பாவங்களாலும் விடப்படுவாய். குந்தியின் புதல்வனே! புண்யமென்று பெயருள்ள மடுவையும் ப்ருகுதுங்கம் என்கிற மலையையும் [1] ஓசையில்லாமல் செல்லுகிற கங்கையையும் அடைந்து ஸகோதரர்களுடன்கூடி நன்கு ஸ்நானம்செய்வாயாக. ஸ்தூலசிரஸினுடைய ஆச்ரமமானது அழகியதாகப்பிரகாசிக்கிறது. குந்தீநந்தன! இந்த இடத்தில் அகங்காரத்தையும் கோபத்தையும்விட்டுவிடு. பாண்டு நந்தன! எந்த இடத்தில் பரத்வாஜபுத்ரரும் வித்வானுமான [2]யவக்ரீதர் நாசமடைந்தாரோ அந்த அழகிய ரைப்யருடைய ஆச்ரமம் இதோ விளங்குகிறது' என்று சொன்னார். யுதிஷ்டிரர், 'பிரதாபசாலியான பரத்வாஜ ரிஷியானவர் எவ்வாறு யோகமகிமையுள்ளவராக இருந்தார்? முனிபுத்ரரான யவக்ரீதர் எதற்காக நாசமடைந்தார்? இவையனைத்தையும் நடந்தவண்ணம் உண்மையாகக் கேட்க விரும்புகிறேன். தேவர்களுக்கொப்பான ரிஷிகளுடைய செய்கைகள் சொல்லப்படுவதனால் மிக்க மனக்களிப்படைகிறேன்' என்று சொன்னார்.

லோமசர், 'பரத்வாஜரும் ரைப்யரும் தோழர்களாயிருந்தார்கள். அவர்கள் இந்தக்காட்டின் மத்தியில் மிக்க அன்புபாராட்டிக்கொண்டு வஸித்தார்கள். ரைப்யருக்குப் பராவஸு அர்வாவஸு என்கிற இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். பரதகுலத்தில் உதித்தவனே! பரத்வாஜருக்கு யவக்ரி என்கிற ஒரு புத்திரன் இருந்தான். ரைப்யர் புத்திரர்களோடுகூடி வித்வானாக இருந்தார். மற்றவர் (=பரத்வாஜர்) தவமுள்ளவராக இருந்தார். பரதச்ரேஷ்டனே! அவ்விருவருக்கும் நிகரில்லாத அன்பு உண்டாயிற்று. தேஜஸ்வியும் குற்றமற்றவருமான யவக்ரியானவர் தவசியான தமது பிதா பிராம்மணர்களால் நன்குமதிக்கப்படாமலிருப்பதையும் ரைப்யர் புத்திரர்களோடுகூடப் பிராம்மணர்களால் நன்கு மதிக்கப்பட்டிருப்பதையும் பார்த்துத் துக்கத்தால் நன்கு கவரப்பட்டவராகி மனவருத்தமடைந்தார். பாண்டவ! பிறகு, அவர், வேதங்களை அறிவதன்பொருட்டுக் கடுந்தவம் புரிந்தார். மிக்க

---

1 தூஷ்ணி அல்லது உஷ்ணி என்றும், கங்கை என்றும் இரண்டாகக் கொள்வது வேறுபாடம்.

2 இந்தப்பெயர் யவக்ரி என்றும் வழங்குகிறது.

பெருந்தவமுள்ள அவர் நன்கு மூட்டப்பட்ட பெரிய நெருப்பில் தேகத்தை வாட்டிக்கொண்டு இந்திரனுக்கு ஸந்தாபத்தை உண்டு பண்ணினார். யுதிஷ்டிர! பிறகு, இந்திரன் யவக்ரீதரிடம் வந்து, 'நீர் எதற்காகக் கடுமையான தவத்தைச் செய்கிறீர்?' என்று வினவினான். யவக்ரீதர், 'தேவகணங்களால் பூஜிக்கப்பட்டவனே! [1] பிராம்மணர்களால் அத்தியயனம் செய்யப்பட்டிராத வேதங்கள் (எனக்குத் தாமாகவே) தோற்றவேண்டுமென்று நான் இந்தச் சிறந்த தவத்தைச் செய்கிறேன். இந்திர! என்னுடைய இந்த முயற்சியானது வேதங்களை அடைவதற்காக. [2] கௌசிக! தவத்தினால் எல்லாச் சாஸ்திரங்களையும் அறிய விரும்புகிறேன். பிரபுவே! குருமுகத்தினின்று வேதங்கள் நீண்டகாலத்தால் அடையத்தக்கவைகளாக இருக்கின்றன. ஆகையால், (அவைகளை) அடைவதற்காக நான் இந்தப் பெருமுயற்சியை அடைந்திருக்கிறேன்' என்று சொன்னார். இந்திரன், 'பிரம்மரிஷியே! நீர் செல்ல விரும்புகிற இது வழியல்லாவழி. பிராம்மணரே! உம்முடைய ஆத்மாவைத் துன்பமடையச் செய்வதால் உமக்கு என்னபயன்? செல்லும்; குருவினுடைய வாக்கினின்று அத்யயனம் செய்வீராக' என்று சொன்னான். பாரத! இவ்விதம் சொல்லிவிட்டு இந்திரன் சென்றான். பாரத! அளத்தற்கரியவல்லமையுள்ள யவக்ரீதரும் மீண்டுமே தவம்புரிவதில் முயற்சியைச்செய்தார். அரசனே! பெரிய தவத்தைச்செய்கின்ற யவக்ரீதர் பயங்கரமான தவத்தினால் தேவேந்திரனை மிகவும் ஸந்தாபத்தை அடையும்படி செய்தாரென்று நமக்குக் கேள்வி. அவ்வண்ணம் கடுந்தவம் செய்கின்ற அந்தமஹா முனிவரை அடைந்து, தேவேந்திரன், 'செய்ய இயலாத விஷயம் உம்மால் தொடங்கப்பட்டிருக்கிறது. உம்முடைய இந்தக்காரியம் ஆலோசனையுடன் செய்யப்பட்டதன்று. வேதங்கள் உமக்கும்

---

1 'ப்ராம்மணாநாம்' என்பது மூலம்; பொருட் பொருத்தத்திற்காக மூன்றாம் வேற்றுமையாகக் கொள்ளப்பட்டது.

2 கௌசிகன் என்பது இந்திரனுக்குப் பெயர். 'குசிகராஜன் இந்திரனுக்கு நிகரான புத்திரன் வேண்டுமென்று தவஞ்செய்ய, தன்னைப்போல வேறொருவன் உண்டாவானே என்ற பயத்தால் இந்திரன் குசிகராஜனுக்குத் தானே புத்ரனானான். அதனால், அவனுக்குக் கௌசிகன் என்னும் பெயர் வந்தது' என்றும், 'இந்திரன் பிறந்தபோது குசத்தால் சூழப்பட்டிருந்தமையால் கௌசிகனென்ற பெயர்பெற்றான்' என்றும் ஹரிவம்சம் கூறும்.

உமது பிதாவுக்குமே (ஓதாமல்) [1] விளங்கா' என்றுசொன்னான். யவக்ரீதர், 'தேவராஜனே! என் விருப்பமானது இவ்விதம் செய்யப்படாமல் போகுமானால் நான் அதிகநியமத்தோடு மிகவும் கடுமையான தவத்தைச் செய்வேன். இந்திர! தேவராஜனே! இவ்வண்ணமாக என்னால் விரும்பப்பட்ட எல்லா விருப்பங்களையும் இச்சமயத்தில் நீ செய்யாமல் போவாயாகில் நன்றாக மூட்டப்பட்ட நெருப்பில் ஒவ்வோர் அங்கத்தையும் அறுத்தே ஹோமத்தைச் செய்வேன். அதனை நீ தெரிந்துகொள்' என்றுசொன்னார்.

புத்திமானான இந்திரன் மஹாத்மாவான அந்த முனிவருடைய அந்தநிச்சயத்தைத் தெரிந்துகொண்டு அவரைத் தடுப்பதற்காகப் புத்தியினால் நன்றாக ஆலோசித்து, பிறகு, பல நூறுபிராயமுள்ளவரும் வலிமைகுறைந்தவரும் க்ஷயரோகமுள்ளவரும் தவமுள்ளவருமான ஒரு பிராம்மணருடைய வடிவத்தை எடுத்துக்கொண்டான். அவன் அந்தக்கங்கையில் யவக்ரீதருக்கு ஸ்நானம் முதலிய காரியங்களுக்குத் தக்கதாயிருந்த துறையில் மணல்களால் அணை போட்டான். சொல்லுகின்ற இந்திரனுடைய சொல்லை அந்தப் பிராம்மணஸ்ரேஷ்டர் செய்யாமற் போனபொழுது, அவன் கங்கையை மணல்களால் நன்குநிரப்புகிறவனாகிக் கங்கையில் மணற்பிடிகளை ஓயாமல் போட்டுக்கொண்டிருந்தான். இந்திரன் ஸ்நானம் செய்வதற்காகவந்த யவக்ரீதரை அதனைப் பார்க்கும்படிசெய்தான். யவக்ரீதர் அணை கட்டுவதில் முயற்சியுள்ள அவனைப் பார்த்தார். அந்த முனிஸ்ரேஷ்டர், உரக்கச் சிரித்துக்கொண்டு, 'பிராமண! இது என்ன நடக்கிறது? நீ செய்யவிரும்பியது என்ன? பிரயோஜனமில்லாத இந்தப் பெரியமுயற்சியானது அதிகமாகச் செய்யப்படுகிறதன்றோ?' என்கிற இந்தவசனத்தை உரைத்தார். இந்திரன், 'கங்கையை அணையினால் கட்டப்போகிறேன். (இதனால்) ஸுகமானவழி ஏற்படும். ஐயா! (இதனைத்) தாண்டுகிற ஜனங்கள் அடிக்கடி கஷ்டப்படுகிறார்களன்றோ?' என்றுசொன்னான். யவக்ரீதர், 'தபோதன! பெரிதான இந்த நீர்ப்பெருக்கானது உன்னால் கட்டமுடியாதது. முடியாதகாரியத்தினின்று திரும்பிவிடு; செய்யக்கூடியகாரியத்தைத் தொடங்கு' என்று சொன்னார். இந்திரன், 'எப்படி உம்மால் வேதங்களைப் பெறுவதற்காகச் செய்தற்கரிய இந்தத்தவமானது தொடங்கப்பட்டதோ அப்படியே எம்

[1] நீலகண்டர் அபிப்பிராயப்படி, முன் ச்லோகத்திலுள்ள நகாரம் இங்கும் கூட்டிப் பொருள்செய்யப்பட்டது.

மால் இந்தப் பொறுப்பானது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது' என்று சொன்னான். யவக்ரீதர், 'தேவர்களுக்கு இறைவனே! பாகாஸுரனைக் கொன்றவனே! தேவகணங்களுக்குத் தலைவனே! உன்னுடைய இந்த முயற்சியைப்போல என்னுடைய இந்த முயற்சியையும் பயனற்றதென்று எண்ணுகிறாயாகில் உன்னால் செய்யக்கூடிய காரியத்தைச்செய். எவைகளால் நான் வித்வானாவேனோ அப்படிப்பட்ட வரங்களையும் வேறுவரங்களையும் எனக்குக்கொடு' என்று சொன்னார். இந்திரன் யவக்ரீதரைநோக்கி உம்மால் விரும்பப்பட்ட வேதங்கள் உமக்கும் உமது பிதாவுக்கும் (தாமாகவே) தோற்றும். இன்னும் நீர் விரும்புகிற வேறு விருப்பங்களையும் யவக்ரீதரான நீர் அடையக் கடவீர்' என்று மிக்க தவமுள்ள அவர் சொல்லிய வரன்களைக் கொடுத்தான். விரும்பியவற்றை அடைந்த அவர், பிறகு, பிதாவை அணுகி, 'எனக்கும் எனக்குப் பிதாவான உமக்கும் வேதங்கள் (ஓதாமலே) விளங்கும். பிறரை மிஞ்சி இருப்போம். அப்படிப்பட்ட வரங்கள் என்னால் அடையப்பட்டன' என்று சொன்னார். பரத்வாஜர், 'ஐயனே! உன்னிஷ்டப்படி வரன்களை அடைந்ததனால் உனக்கு அகங்காரம் உண்டாகும். அகங்காரத்தால் நிறைந்தவனும் அல்பனுமான நீ சீக்கிரமாக நசிப்பாய். இந்த விஷயத்திலும் தேவர்களால் சொல்லப்பட்ட இந்தக் காதைகளை (ப்பெரியோர்கள்) சொல்லுகிறார்கள். புத்திர! முற்காலத்தில் பாலதி என்று பிரஸித்தி பெற்ற ஒரு முனிவர் இருந்தார். அவர் புத்திரசோகத்தால் அதிக மனவருத்தமடைந்து 'எனக்குச் சாகாத பிள்ளை உண்டாக வேண்டும்' என்று செய்ய மிக அரிய தவத்தைச் செய்தார். அவர் அப்படிப்பட்ட பிள்ளையை அடையவும் அடைந்தார். தேவர்களால் அந்தப் பாலதிக்கு, 'உமது புத்ரன் அமரர்களுக்கு ஸமனாகான். ஏனெனில், மரிக்குந் தன்மையுள்ளவன் மரியாத தன்மையுள்ளவனாகானன்றோ? ஆதலால் 1 நிமித்தமான ஆயுள் உள்ளவன் ஆவான்' என்று அனுக்கிரகம் செய்யப்பட்டது. பாலதி, 'தேவ ஶ்ரேஷ்டர்களே! இந்த மலைகள் எதுவரையில் சாஶ்வதமாக இருக்குமோ அதுவரையில் என் மகன் ஜீவித்திருக்கக்கடவன். அப்படியானால் எனக்கு ஆனந்தமாகுமென்பது என் எண்ணம்' என்று கூறினார். அப்பொழுது, அவருக்குக் கோபமுள்ளவனான மேதாவி என்கிற புத்திரன் உண்டானான். வரன்களைப் பெற்ற அந்த மேதாவி அகங்காரத்தினால்

1 வேறொரு பொருளின் ஆயுள்ளவான ஆயுளுள்ளவன்.

ரிஷிகளையுமே அவமதித்தான். அந்த மேதாவி மஹரிஷிகளுக்குத் தீமையைச் செய்துகொண்டு இவ்வுலகில் திரிந்தான். மஹா வீர்யமுள்ளவரும் கற்றறிந்தவருமான தனுஷாக்ஷரை அடைந்தான். மேதாவியானவன் அவருக்கு அபகாரம் செய்தான். வீர்யவானான அவர் அவனைச் சபித்தார். 'சாம்பலாகக் கடவாய்' என்று சொல்லப்பட்டும் அவன் சாம்பலாகவில்லை. முனிவரான தனுஷாக்ஷரோ அந்த மேதாவி துன்பமடையாமலிருப்பதைப் பார்த்து அதன் காரணத்தை அறிந்து தாமே எருமைக்கடாவின் உருவமெடுத்துக் கொம்பினால் மலைகளை அசைத்தார். பிறகு, அவன் சாம்பலானான். மஹரிஷியானவர் இவனுடைய (வாழ் நாட்களுக்குக்) காரணமான மலைகளைப் பிளந்தார். நிமித்தம் நாசமடையவே அந்தச் சிறுவன் உடனே உயிர்துறந்தான். பிறகு, பிதா, மரித்த அந்தப் புத்திரனை எடுத்துக்கொண்டு புலம்பினார். அவர் அதிக துக்கமடைந்து புலம்புகின்றதைப் பார்த்து வேதங்களை அறிந்த எல்லா முனிவர்களும் கூறிய, 'தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்டதை மனிதன் எவ்விதத்தாலும் தாண்டுவதற்குச் சக்தியுள்ளவனாகான். தனுஷாக்ஷமஹரிஷியானவர் மலைகளைப் பிளந்தாரன்றோ?', என்னும் பொருளுள்ள காதையை என்னிடமிருந்து தெரிந்து கொள்வாயாக. தவத்தைச் செய்பவர்களான சிறுவர்கள் இவ்வண்ணம் வரன்களைப்பெற்று அஹங்காரத்தால் நிரம்பினவர்களாகிச் சீக்கிரமே நாசமடைகிறார்கள். நீ அப்படி ஆகவேண்டாம். இந்த ரைப்யர் மஹா வீர்யமுள்ளவர். இவருடைய புத்திரர்களும் அவ்வித வீர்யமுள்ளவர்கள். குழந்தாய்! நீ அவரை அணுகாமல் ஜாக்ரதையாயிரு. புத்ர! அவர் கோபிப்பராயின் கோபத்தால் உனக்குத் துன்பஞ் செய்யத் திறமையுள்ளவர். அவர் பெரிய ரிஷி; தவமுள்ளவர்; கோபமுள்ளவர்' என்று கூறினார். யவக்ரீதர், 'தந்தையீர்! இவ்வண்ணமே செய்வேன். எவ்விதத்தாலும் மனவருத்தத்தை நீர் அடையவேண்டாம். எப்படி எனக்குப் பிதாவான தேவரீர் பூஜிக்கத் தக்கவரோ அப்படியே ரைப்யரும் எனக்குப் பூஜிக்கத்தக்கவர்' என்று சொன்னார். அந்த யவக்ரீதர் பிதாவைப் பார்த்து இவ்வண்ணம் அழகான வசனத்தைக் கூறிவிட்டு, ஓரிடத்தினின்றும் பயமில்லாதவராக வேறு ரிஷிகளுக்கு அபகாரங்களைச் செய்துகொண்டு பரமானந்தத்தால் களிப்படைந்தார்.

நூற்றுமுப்பத்தெட்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ரைப்யருடைய ஆஸ்ரமத்தில் பராவஸுவினுடைய மனைவியைப் பார்த்து யவக்ரீதர் ஏகாந்தத்தில் அவளை வலிமை செய்ததும், ரைப்யர் அதனையறிந்து யவக்ரீதரைக் கொல்வதற்காக ஒரு பெண் பேயையும் ஒரு ராக்ஷஸனையும் உண்டுபண்ணியதும், அந்தப் பேய் யவக்ரீதரை மயக்கிக் கமண்டலுவைப் பறித்ததும், ராக்ஷஸன் துரத்த யவக்ரீதர் தம் பிதாவின் அக்நிஹோத்ர சாலையில் நுழையப் போனதும், வாயில்காப்பவன் தடுத்ததும், அரக்கன் அவரைக் கொன்றதும்.)

அப்பொழுது, ஓரிடத்தினின்றும் பயமில்லாதவரும் ஸஞ்சரிக்கின்றவருமான அந்த யவக்ரீதர் வைசாகமாஸத்தில் ரைப்யருடைய ஆஸ்ரமத்தைக் குறித்துச் சென்றார். பாரத! அவர் அழகியதும் பூத்திருக்கிற மரங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான ஆஸ்ரமத்தில் கின்னர ஸ்திரீபோல ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிற அந்த ரைப்யருடைய மருமகளைப் பார்த்தார். லஜ்ஜையில்லாதவரும் காமத்தால் அறிவு கவரப்பட்டவருமான யவக்ரீதர், வெட்கத்தோடு கூடினவளான அவளைப்பார்த்து, 'என்னை வந்து அடைவாயாக' என்று சொன்னார். அந்தப்பெண் அவருடைய ஸ்வபாவத்தை அறிந்து அவருடைய சாபத்துக்குப் பயந்தவளாக ரைப்யருடைய தேஜஸையும் நினைத்து, 'அப்படியே' என்று சொல்லிச் சென்றாள். பாரத! பிறகு, [1] அவளை ஏகாந்தமான இடத்திற்கு அழைத்துப்போய் வெட்கமடையச் செய்தார். பகைவரை அடக்குபவனே! அப்பொழுது, ரைப்யர் தம் ஆஸ்ரமத்திற்கு வந்தார். யுதிஷ்டிர! தமது மருமகளான பராவஸுவின் மனைவி துயரப்பட்டு அழுவதைப் பார்த்து இனிமையான சொல்லால் அவளைத் தேறுதலடையச் செய்துகொண்டு (துக்க காரணத்தை) வினவினார். மங்களகரியான அவள் யவக்ரீதரால் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் அப்படியே விவேகத்தை முன்னிட்டுத் தன்னால்

1 'அவள் அவரைத் தனியிடத்துக்கு அழைத்துப்போய் லஜ்ஜையடையச் செய்தாள்' என்றும் கொள்ளலாம்.

அவர் மறுக்கப்பட்டதையும் ரைப்யரிடம் சொன்னாள். யவக்ரீதருடைய அந்தச் செய்கையைக் கேட்கிற ரைப்யருக்கு அப்பொழுது உள்ளத்தை எரிக்கின்றதுபோன்ற பெருங்கோபம் உண்டாயிற்று. மிக்ககோபமுள்ளவரும் தவசியுமான அவர் அப்பொழுது கோபத்தினால் ஆவேசங்கொண்டவராகி ஒரு சடையைப் பிடுங்கி விதிப்படி நன்கு மூட்டப்பட்ட அக்கினியில் ஹோமம் செய்தார். அந்த அக்கினியிலிருந்து அந்தமருமகளுடைய உருவத்தோடொத்த உருவமுள்ள ஒருபெண்பேய் தோன்றியது. அவர் மீண்டும் மற்றொரு சடையையும் பிடுங்கி அக்கினியில் ஹோமம் செய்தார். பிறகு, அந்த அக்னியிலிருந்து ஜ்வலிக்கின்றவாயுள்ளவனும் பயங்கரமான தோற்றமுள்ளவனுமான ஒரு ராக்ஷஸன் தோன்றினான். அவ்விருவரும் ரைப்யரைப் பார்த்து, அப்பொழுது, 'யாதுகாரியத்தைச் செய்யக்கடவோம்?' என்று கேட்டார்கள். ரிஷியானவர் கோபங்கொண்டு, அவர்களை நோக்கி, 'யவக்ரியைக் கொல்லுங்கள்' என்று சொன்னார். அவ்விருவரும், 'அப்படியே' என்று சொல்லிவிட்டு யவக்ரீதரைக் கொல்லும் விருப்பத்தோடு சென்றார்கள். பாரத! பிறகு, மஹாத்மாவினால் அனுப்பப்பட்ட பிசாசானது அந்த யவக்ரீதரை அடைந்து அவரை மயக்கிக் கமண்டலுவைப் பிடுங்கிக்கொண்டது. கமண்டலுபறிக்கப்பட்டு(அதனால்)அசுத்தரான யவக்ரீதரை நோக்கி அந்த ராக்ஷதன் சூலாயுதத்தை ஓங்கிக்கொண்டு அருகில் ஓடினான். யவக்ரீதர், கொல்லும் விருப்பத்தோடு சூலத்தைக் கையிற்கொண்டு ஓடிவருகிற அந்த ராக்ஷஸனைப்பார்த்து, விரைவாக எழுந்திருந்து தடாகமிருக்கிற இடத்துக்கு ஓடினார். குளம் ஜலமில்லாமலிருப்பதைப் பார்த்து அவர் மறுபடியும் விரைபவராகி எல்லாநதிகளையும் நோக்கி ஓடினார். அவைகளும் வற்றியிருந்தன. பயங்கரமானவனும் சூலத்தைக் கையில் ஏந்தியவனுமான அரக்கனால் துரத்தப்படுகிற அந்தயவக்ரீதர் பயந்து பிதாவின் அக்னிஹோத்திர சாலையில் விரைந்து நுழைந்தார். அரசனே! நுழைகின்ற அந்த யவக்ரீதர் காவற்காரனும் குருடனுமான சூத்திரனால் வாயிலில் வலிந்து தடுக்கப்பட்டார். அவர் வெளியிலேயே நின்றார். சூத்திரனால் தடுக்கப்பட்ட யவக்ரீதரை அந்த ராக்ஷஸன் சூலத்தினால் அடித்தான். அவர் மார்பு பிளக்கப்பட்டுக் கீழே விழுந்தார். அந்த அரக்கன் யவக்ரீதரைக் கொன்றுவிட்டு ரைப்யரிடம் வந்தான். ரைப்யரால் அனுமதி கொடுக்கப்பட்டு அந்தப் பிசாசியுடன் வசித்தான்,

நூற்றுமுப்பத்தோன்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பரத்வாஜர் தமது புத்ரர்மரித்ததை வாயில்காப்பவனாலறிந்து ரைப்யரும் மூத்தகுமாரனால் கொல்லப்படவேண்டுமென் கிற சாபத்தைக் கொடுத்துப் புத்திரரைத் தஹனம் செய்து தாமும் புத்திர சோகத்தால் தீக்குளித்தது.)

குந்தீபுத்ர! பரத்வாஜரோ பிரதிதினமும் செய்யத்தக்க பிரம்மயஜ்ஞத்தைச் செய்துவிட்டு ஸமித்துக்களின்கட்டை எடுத்துக்கொண்டு தம்முடைய ஆஶ்ரமத்தில் நுழைந்தார். எல்லா அக்கினிகளும், அதற்குமுன், அவரைக் கண்டவுடன் வரவேற்றுவந்தன. புத்திரன் கொல்லப்பட்ட அவரை அன்று அக்னிகள் வரவேற்கவில்லை. மிக்க தவமுள்ள அவர் அக்னிஹோத்திரசாலையில் வேறுபாட்டைக்கண்டு, பிறகு, வீட்டைக் காப்பவனும் உட்கார்ந்திருப்பவனும் குருடனுமான சூத்திரனைப் பார்த்து, 'சூத்ர! யாது காரணத்தால் அக்னிகள் என்னுடைய தர்சனத்தைக் கொண்டாடவில்லை? நீயும் முன்போல இல்லை. இந்த ஆஶ்ரமத்தில் (எல்லாரும்) க்ஷேமமா? அற்ப அறிவுள்ள என்னுடைய புத்திரன் ரைப்யரை அடையாமல் இருந்தானா? இதனை எனக்கு விரைவாகச் சொல். என்மனம் ஸந்தேகப்படுகிறதன்றோ?' என்று வினவினர். சூத்திரன், 'உம்முடைய அல்பபுத்தியுள்ள இந்தப் புதல்வர் ரைப்யரை அடைந்தாரென்பது நிச்சயம்; மிக்க பலசாலியான ராக்ஷஸனால் கொல்லப்பட்டுக் கீழே படுத்திருக்கிறானன்றோ? சூலாயுதத்தைக் கையில் ஏந்தின அந்த ராக்ஷஸனால் துரத்தப்படுகின்றவரும் அக்னிஹோத்திர சாலையைக் குறித்து (ஓடிவந்தவருமான) இந்த யவக்ரீதர் வாசலில் என்னால் இருகைகளாலும் தடுக்கப்பட்டார். பிறகு, இந்த இடத்தில் ஆசை கெடுக்கப்பட்டவரும் ஜலத்தைவிரும்பினவருமான அவர் அசுத்தராயிருந்தாரென்பது திண்ணம். அவர் அதிக வேகமுள்ளவனும் சூலத்தைக் கையிலேந்தினவனுமான ராக்ஷஸனால் கொல்லப்பட்டார்' என்று சொன்னான்.

பரத்வாஜரோ சூத்ரனால் செய்யப்பட்டதான (புத்ரனைத் தடுத்ததாகிய) அந்தப் பெரிதான அப்ரியத்தைக்கேட்டு மிக்க துயரத்தை அடைந்தவராகி, உயிரை இழந்த புதல்வரை எடுத்துக்

கொண்டு புலம்பலானார். பரத்வாஜர், 'குழந்தாய்! 1 பிராம்மணர்களால் அத்யயனம் செய்யப்பட்டிராத வேதங்கள் (உனக்கு) நன்கு தோற்றக்கடவன என்று பிராம்மணர்களுடைய நன்மையின் பொருட்டன்றோ நீ தவத்தைச் செய்தாய்? மஹாத்மாக்களான பிராம்மணர்கள் விஷயத்தில் அவ்வாறு நன்மையைச் செய்யும் ஒழுக்கமுள்ளவனும் எல்லாப் பிராணிகளிடமும் ஒரு தீங்கையும் செய்யாதவனுமான நீ கொடிய முடிவை அடைந்தாய். அப்பனே! ரைப்யனுடைய வீட்டைப் பார்ப்பதினின்று என்னால் நீ தடுக்கப்பட்டிருந்தும், காலனுக்கும் அந்தகனுக்கும் எமனுக்குமொப்பான அந்த அவனை நீ அடைந்தே யிருக்கவேண்டும். மிக்க தேஜஸுள்ளவனும் மிக்கமதிகேடனுமான அவன் பிராயமுதிர்ந்த எனக்கு நீ ஒரே புத்திரனென்று தெரிந்திருந்தும் கோபத்தின் வசத்தையே அடைந்தான். குழந்தாய்! ரைப்யனுடைய செய்கையினால் புத்திரசோகத்தை அடைந்திருக்கிற இப்படிப்பட்ட நான் உன்னை இழந்தமையால் உலகில் இனிமையான உயிரை விடப்போகிறேன். துயரமேலிட்ட நான் எவ்வாறு புத்திரசோகத்தால் தேகத்தை விடப்போகிறேனோ அவ்வாறே ரைப்யனைக் குற்றமற்றவனாயிருக்கையிலேயே அவனுடைய மூத்தமகன் விரைவாகக் கொல்லக்கடவன். எந்தமனிதர்களுக்குப் புத்திரன் பிறக்கவே இல்லையோ, எவர்கள் புத்திரசோகத்தை அடையாமல் ஸுகமாக ஸஞ்சரிக்கிறார்களோ அவர்களே ஸுகசாலிகள். எவர்கள் புத்திரனால் உண்டுபண்ணப்பட்ட சோகத்தால் மிக்க வியாகுலமான மனமுள்ளவர்களாகவும் துன்பமுற்றவர்களாகவும் பிரியமான தோழர்களைச் சபிக்கின்றார்களோ அவர்களைக்காட்டிலும் கொடும்பாவியார்? நான் மரித்த புத்திரனையும் பார்த்தேன்; இஷ்டனான தோழனையும் சபித்தேன். இவ்விதமான ஆபத்தை இப்புவியில் என்னைத் தவிர வேறு எவன் அனுபவிப்பான்?' என்று புலம்பினார். பரத்வாஜர் இப்படி பலவாறாகப் புலம்பிப் புத்திரனைத் தஹனம் செய்தார். அதன் பிறகு, (தாமும்) நன்கு மூட்டப்பட்ட அக்னியில் புகுந்துவிட்டார்.

---

1 'பிராம்மணாநாம்' என்பது மூலம். 495-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

நூற்றுநாற்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(ப்ருஹத்யும்னன் யாகத்தில் பராவஸுவையும் அர்வாவஸுவையும் உதவிக்காக அழைத்ததும், அவர்கள் சென்றதும், மனைவியைப் பார்ப்பதற்காகத் திரும்பிவந்த பராவஸு இரவில் மான் தோல் போர்த்திருந்த ரைப்யரை மிருகமென்றெண்ணிக் கொன்றதும், பராவஸு தந்தைக்குத் தகன முதலியன செய்து பின் யாகசாலைக்குப்போய்த் தான் யாகத்தை நடத்துவதாகவும் தனக்காக அர்வாவஸுவைப் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளும்படியும் சொல்லியதும், அர்வாவஸு அப்படியே செய்துவந்தும் பராவஸுவின் தூண்டுதலால் ப்ருஹத்யும்னன் அர்வாவஸுவைத் துரத்தச் செய்ததும், அர்வாவஸு தவத்தினால் தேவர்களைமகிழ்வித்து யவக்ரீதர் முதலியோர் உயிர்பெற்றெழுதல் முதலிய வரன்களைப் பெற்றதும், தேவர்கள் யவக்ரீதருக்கு நேர்ந்த துக்கத்துக்கு உபதேசமின்றி வேதங்கள் தோற்றுவதே பயனென்பதைக்கூறி ரைப்யர் முதலியவர்களைப் பிழைப்பித்ததும்.)

மஹாபாக்கியமுள்ளவனும் பிரதாபசாலியும் ரைப்யருக்குச் சிஷ்யனுமான ப்ருஹத்யும்னனென்னும் அரசன் இந்தச் சமயத்திலேயே யாகம் செய்தான். புத்திமானான அந்த ப்ருஹத்யும்னனால் யாகம் செய்வதற்காக ரைப்யரின் புத்திரர்களான பராவஸு அர்வாவஸு இருவரும் ஸஹாயர்களாக வரிக்கப்பட்டார்கள். குந்தீபுத்ர! பிதாவினால் அனுமதி கொடுக்கப்பட்ட அவர்கள் யாகத்துக்குச் சென்றார்கள். ஆச்ரமத்தில் ரைப்யரும் பராவஸுவினுடைய மனைவியும் இருந்தார்கள். பிறகு, பராவஸுவானவன் தன் மனைவியைப் பார்க்கவிரும்பி ஒருவனாகத் தன் வீட்டை நோக்கிச் சென்றான். பின்ராத்திரியில் தூக்கமயக்கமுள்ளவனான, பராவஸுவானவன், இருள் நீங்காமலிருக்கையிலேயே கானகத்தில் மான்தோலைப் போர்த்துக்கொண்,

டிருக்கிற பிதாவைக் கண்டான். அவன் பிரவேசிக்க முடியாத காட்டில் ஸஞ்சரிக்கின்ற பிதாவை மிருகமென்று நினைத்தான். மிருகமென்று எண்ணுகின்றவனும் தன் சரீரத்தின் பாதுகாப்பை விரும்புகின்றவனுமான பராவஸுவினால் அப்பொழுது கொல்ல வேண்டுமென்கிற விருப்பமில்லாமலே பிதா கொல்லப்பட்டார். பாரத! பராவஸுவானவன் பிதாவுக்குச் செய்யவேண்டிய ப்ரேத கார்யங்களனைத்தையும் செய்துவிட்டு, மறுபடியும், அந்த யாகத்தை அடைந்து பிராதாவைப்பார்த்து, 'இந்தக் கர்மாவை நீ ஒருவனாக நிர்வஹிப்பதற்கு எவ்விதத்தாலும் சக்தியற்றவன். என்னால் பிதா மிருகமென்று எண்ணிக் கொல்லப்பட்டார். ஐயா! அப்படிப்பட்ட நீ எனக்காக பிரம்மஹத்தி செய்தவர்கள் செய்ய வேண்டிய பிராயச்சித்தவிரதத்தை அனுஷ்டிப்பாயாக. முனிவனே! நான் ஒருவனாகவே இந்த (யாக) கர்மாவைச் செய்வதற்கு ஸமர்த்தன்' என்று சொன்னான். அர்வாவஸு, 'நீ புத்திமானான ப்ருஹத்யும்னனுடைய ஸத்ரத்தைச் செய்வாயாக. நான் உனக்காக இந்திரியங்களை அடக்கினவனாக இருந்துகொண்டு பிரம்மஹத்தியின் பிராயச்சித்தவிரதத்தை அனுஷ்டிப்பேன்' என்று சொன்னான். யுதிஷ்டிர! அந்த அர்வாவஸுமுனிவன் அப்பொழுது பராவஸுவினுடைய பிரம்மஹத்தியின் பிராயச்சித்தவிரதத்தை முடித்து மீண்டும் யாகத்திற்கு வந்தான். பிறகு, பராவஸுவானவன் தம்பி வந்ததைப்பார்த்து, பிருஹத்யும்னனை நோக்கி, 'பிரம்மஹத்தி செய்த இவன் உன்னுடைய யஜ்ஞத்தைப் பார்ப்பதற்கு (யஜ்ஞசாலையில்) நுழையக்கூடாது. பிரம்மஹத்தி செய்தவன் பார்ப்பதனாலுங்கூட ஸந்தேகமில்லாமல் உன்னைத் துன்பமடையச் செய்வான்' என்று மகிழ்ச்சியினால் தழுதழுத்த குரலுடன் இந்த வசனத்தைக் கூறினான். அரசனே! அப்பொழுது, அந்த வேந்தன் அதனைக் கேட்டவுடன் வேலைக்காரர்களுக்கு (அர்வாவஸுவைத் துரத்தும்படி) கட்டளையிட்டான். அரசனே! அப்பொழுது, வேலைக்காரர்களாலே வெளியில் துரத்தப்படுகின்ற அர்வாவஸு, 'இந்தப்ரம்மஹத்தி என்னால் செய்யப்பட்டதன்று' என்று மீண்டும் மீண்டும் உரைத்தான். பாரத! ஏவலாளர்களால் பிரம்மஹத்தி செய்தவனென்று அடிக்கடி சொல்லப்படுகின்ற அர்வாவஸு; 'பிரம்மஹத்தியானது என்னால் செய்யப்படவேயில்லை'; ப்ரதிஜ்ஞை செய்கிறேன். இது என்னுடைய ஸஹோதரனால் செய்யப்பட்டது. என்னால் அவன் (அந்தத் தோஷத்தி

னின்று) விடுவிக்கப்பட்டான்' என்று சொன்னன். கோபத்தால் அவ்வாறு சொல்லுகின்றவனும், அந்த ஏவலாளர்களால் (பொய் சொல்லுகிறவனென்று) அவமதித்துச் சொல்லப்பட்டவனும், பெருந்தவமுள்ளவனுமான பிரம்மரிஷியானவன் பேசாமல் கானகத்தைக் குறித்துச்சென்ருன். பிறகு, பிராம்மணோத்தமனை அந்த அர்வாவஸு உக்கிரமானதவத்தை மேற்கொண்டு சூரியனை வழிபட்டு ஸுர்ய ஸம்பந்தமான [1] ரகஸ்யவேதத்தை [2] அறிந்தான். பிறகு, யாகங்களில் முதலில் ஹவிர்ப்பாகத்தைப் புஜிப்பவனும் அழிவற்றவனுமான சூரியன் வடிவமுள்ளவனுகி அவனுக்குத் தரிசனம் கொடுத்தான். அரசனே! தேவர்கள் அந்த அர்வாவஸுவினுடைய செய்கையினுல் மகிழ்ச்சியுள்ளவர்களானுர்கள். தேவர்கள் அர்வாவஸுவை (ரித்விக்காக) வரித்தார்கள்; பராவஸுவை விலக்கினுர்கள். பிறகு, அக்னியை முந்தினவனுகக்கொண்ட தேவர்கள் அர்வாவஸுவுக்கு வரனைக்கொடுத்தார்கள். பிராம்மணஶ்ரேஷ்டனுன அவனும், தன்னுடைய பிதா (உயிரோடு) எழுந்திருப்பதையும் தன் பிராதா குற்றமில்லாதவனுதலையும் பிதா (தமக்கு நேர்ந்த) வதவிஷயத்தில் நினைவில்லாமலிருப்பதையும் பரத்வாஜர் யவக்ரீதர் இருவரும் (உயிரோடு) எழுந்திருப்பதையும் (தன்னுல் காணப்பட்ட) சூரிய ஸம்பந்தமான வேதம் நிலைபெற்றிருத்தலையும் வரன்களாகக் கேட்டுக்கொண்டான். தேவர்கள், அவனைக் குறித்து, 'இப்படியே ஆகுக' என்று சொல்லி வரன்களைக்கொடுத்தார்கள். யுதிஷ்டிர! பிறகு, அவர்களெல்லாருமே (முன்போலத்) தோன்றினுர்கள்.

பிறகு, யவக்ரீதர் அக்னியைத் தலைவனுகக்கொண்ட தேவர்களைப்பார்த்து, 'தேவர்களுள் சிறந்தவர்களே! என்னுல் வேதம் நன்கு அத்தியயனம் செய்யப்பட்டது. விரதங்களும் செய்யப்பட்டன. வேதங்களை ஓதுகின்றவனும் தவசியுமான என்னை ரைப்யர் அப்படிச் செய்யப்பட்ட முறையினுல் எவ்வாறு கொல்ல

1 'ரஹஸ்யவேதம்—ஸுர்ய மந்திரத்தைப் பிரவித்தப்படுத்துகிற வேதம்; 'ஹ்ருணி என்னும் இரண்டெழுத்தும் ஸுர்ய என்னும் மூன்றெழுத்தும் ஆதித்ய என்னும் மூன்றெழுத்தும் ஆகிய எட்டெழுத்துள்ளது ஸுர்ய அஷ்டாக்ஷரம். இது மிக்க சிறப்புடன் கூடியதென்பது காடகப்ராம்மணம்' என்பது பழையவுரை. இதில் 'ஸுர்ய' என்பதை ஜபிக்கும்போது, 'ஸுரிய' என்று மூன்றெழுத்தாக உச்சரிக்க வேண்டுமென்பர். 2 'க்ருதவாந்' என்பது மூலம்.

வல்லவரானார்?' என்று வினவினார். தேவர்கள், 'யவக்ரீதரே! முனிவரே! நீர் சொல்லுகிறபடி மறுபடியும் சொல்லாதீர். முற்காலத்தில் நீர் வேதங்களை ஆசார்யரின்றி ஸ்வயமே ஓதினீரல்லவா? இந்த ரைப்யரோ தம் செய்கையினால் ஆசார்யர்களை அதிகப் பிரயாஸத்தால் மகிழ்வித்து உத்தமமான வேதத்தை நீண்டகாலத்தால் ஶ்ரமப்பட்டு அடைந்தார்' என்று சொன்னார்கள். பிறகு, அக்னியைத் தலைவனாகக்கொண்ட தேவர்கள் யவக்ரீதருக்கு இவ்வண்ணம் உரைத்து அவர்களனைவரையும் பிழைக்கும்படி செய்து மீண்டும் ஸ்வர்க்கலோகத்திற்குச் சென்றார்கள். யுதிஷ்டிர! பிறகு, அந்த யவக்ரீதர் நாற்பத்தெட்டு வருஷங்கள் பிரம்மசர்யத்தை அனுஷ்டித்தார். எப்பொழுதும் பூத்தும் பழுத்துமிருக்கிற மரங்களுள்ள இந்தப் புண்ணியாஶ்ரமமானது அந்த யவக்ரீதருடையது. ராஜஶ்ரேஷ்டனே! இந்த ஆஶ்ரமத்தில் வஸித்தால் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுவாய்.

நூற்று நாற்பத்தோராவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசருடைய தூண்டுதலால் யுதிஷ்டிரர் கைலாஸ முதலிய மலைகளுக்குச் சென்றது.)

பாரத! கௌந்தேய! அரசனே! உசீரபீஜத்தையும் மைநாகத்தையும் ஶ்வேதகிரியையும் காலசைலத்தையும் தாண்டிவிட்டாய். பரதஶ்ரேஷ்டனே! ஏழுவிதமாகச் செல்லுகிற கங்கையானது இதோ பிரகாசிக்கிறது. எந்த இடத்தில் அக்னியானது நித்தியம் பிரகாசிக்கிறதோ அந்த விரஜஸமென்கிற புண்ணியஸ்தானம் இருக்கிறது. அற்புதமான இந்த ஸ்தானம் இப்பொழுது மனிதர்களால் பார்க்க முடியாது நீங்கள் ஒரு வழிப்பட்ட மனத்துடன் ஆத்மநிஷ்டையைச் செய்யுங்கள். இந்தத்தீர்த்தங்களைப் பார்ப்பீர்கள். தேவர்களுடைய காலடிகளால் அடையாளம் செய்யப்பட்ட இந்த உத்தியானத்தையும் பார்ப்பாய். குந்தீநந்தன! காலசைலமென்கிற மலையையும் நீ தாண்டிவிட்டாய். அரசே! மாணிபத்ரனென்கிற யக்ஷனும் யக்ஷர்களுக்கு அரசனான குபேரனும் சீக்கிரம் செல்லுகிறவர்களான எண்பத்தெண்ணாயிரம் கந்தர்வர்களும் அவ்வளவு கிம்புருஷர்களும் (அவர்களுக்கு) நான்குமடங்கான யக்ஷர்களும் இருக்

கிற ஸ்வேதகிரியையும் மந்தரபர்வதத்தையும் அடைவோம். புருஷ ஸ்ரேஷ்டனே! அவர்கள் பலவித உருவமும் வடிவமுமுள்ளவர்களாகவும் பலவித ஆயுதங்களுள்ளவர்களாகவும் யக்ஷராஜனை மாணிபத்திரனை உபாஸிக்கிறார்கள். இங்கே அவர்களுக்குச் செல்வப் பெருக்கு அதிகம். அவர்கள் வேகத்தில் காற்றுக்கு ஒப்பானவர்கள். ஐயா! தேவராஜனையும் தன் ஸ்தானத்திலிருந்து நிச்சயமாக நழுவச்செய்யக்கூடியவர்களும் பலசாலிகளுமான அவர்களால் காக்கப்பட்டவையும் ராக்ஷஸர்களால் காக்கப்பட்டவையுமான மலைகள் அடைதற்கரியவை. பார்த்த! நீ நிகரற்ற ஸமாதியைச் செய்வாயாக. வேறு பயங்கரர்களான குபேரனுடையமந்திரிகளும் (அவனுக்கு) மித்ரர்களான ராக்ஷஸர்களும் இருக்கிறார்கள். குந்தியின் புதல்வனே! அவர்களோடு ஸந்திக்கப்போகிறோம். எதிர்ப்பதில் முயற்சியுள்ளவனாக இரு. அரசனே! பாரத! தேவர்கள் வந்துகூடுவதும் மிகப் பெரிய இலந்தைமரமிருப்பதுமான கைலாஸமலை அறுநூறுயோஜனை உயர்ந்திருக்கிறது. குந்தீநந்தன! குபேரனுடைய மாளிகையின் ஸமீபத்தில் கணக்கிடமுடியாத யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கின்னரர்களும் நாகர்களும் ஸுபர்ணர்களும் கந்தர்வர்களும் வஸிக்கின்றனர். பார்த்த! வேந்தே! இப்பொழுது என்னுடையும் பீமஸேனனுடைய பலத்தாலும் காக்கப்படுகின்றவனாகி நீ தவத்துடனும் இந்திரிய அடக்கத்துடனும் அந்த இடங்களில் செல்வாயாக. வருணராஜனும் போர்வெல்பவனான யமனும் கங்கையும் யமுனையும் பர்வதங்களும் அஸ்வினீதேவர்களும் மருத்துக்களும் நதிகளும் தடாகங்களும் உனக்கு மங்களத்தைக் கொடுக்கக்கடவர். பேராற்றலுள்ளவனே! தேவர்களிடமிருந்தும் அஸுரர்களிடமிருந்தும் வஸுக்களிடமிருந்தும் உனக்கு மங்களமுண்டாகுக' என்றார். அந்தலோமசர், கங்காநதியைநோக்கி, 'கங்காதேவியே! இந்திரனுடையதான பொன்மலையினின்று உன்னுடைய சப்தத்தைக் கேட்கிறேன். நல்லபாக்கியமுள்ளவளே! அஜமீடவம்சத்தில்பிறந்த எல்லாருள்ளும் சிறந்தவனான இந்த அரசனை மலைகளினிடமிருந்து காப்பாற்றுவாயாக. பர்வத புத்திரியே! இந்த மலைகளில் பிரவேசிக்க விரும்புகிற இந்த அரசனுக்கு ஸுகத்தைக் கொடுப்பாயாக. எல்லா நதிகளுள்ளும் தலைமைவாய்ந்தவளே! ஸகோதரர்களுடனிருக்கும் யுதிஷ்டிரனுக்கு இந்த இடத்தில் மங்களத்தைக் கொடுப்பாயாக' என்று இவ்வாறு சொல்லிவிட்டு, யுதிஷ்டிரரை, 'ஜாக்ரதையுள்ளவனாக

இரு' என்று கட்டளையிட்டார். யுதிஷ்டிரர், 'லோமசருடைய இந்த் மனக்குழப்பமானது இதற்கு முன்னில்லாததாக இருக்கிறது. எல்லோரும் த்ரௌபதியைப் பாதுகாத்துவாருங்கள். தவறலாகாது. ஏனெனில், இந்த இடமானது அடைதற்கரியதென்பது இவருடைய எண்ணம். ஆகையால், இந்த இடத்தில் சிறந்தவாக்கின் சுத்தியையும் மனத்தின் சுத்தியையும் தேக சுத்தியையும் கொள்ளுங்கள்' என்று சொன்னார். பிறகு, யுதிஷ்டிரர், மிக்க வீர்யசாலியான பீமனைப்பார்த்து, 'பீமஸேன! முயற்சியுள்ளவனாகி த்ரௌபதியைக் காப்பாற்று. அப்பா! திரௌபதியானவள் ஜன ஸஞ்சாரமில்லாத இந்த மலைப்ரதேசத்தில், அர்ஜுனனும் ஸமீபத்தில் இல்லாமலிருக்கையில், பயங்கள் உண்டாகும் தருணங்களில் உன்னையே ரக்ஷகனாக அடைகிறாள்' என்று சொன்னார். பிறகு, மஹாத்மாவான அந்தத் தர்மராஜர் நகுல ஸகதேவர்களிடம்வந்து உச்சிமுகர்ந்து சரீரத்தைத் தடவிக்கொடுத்து அவர்களைப்பார்த்து, 'பயப்படாதீர்கள்; அஜாக்ரதையின்றி வாருங்கள்' என்று கண்ணீரால் விளங்காதகுரலுடன் சொன்னார்.

நூற்றுநாற்பத்திரண்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(நடந்து செல்லமுடியாத இடத்தில் த்ரௌபதி முதலியவர்களை யுதிஷ்டிரர் தடுத்ததும், பீமன் அவர்களைத் தான் தூக்கிச் செல்வதாக ஒப்புக்கொண்டதும், வழியில் அவர்கள் தம்மை உபசரித்த ஸுபாதுவினிடம் தம் பரிஜனங்களை வைத்துவிட்டு அர்ஜுனனைப் பார்க்கும் விருப்பத்தால் கந்தமாதன பர்வதத்தைக் குறித்துச் சென்றதும்.)

யுதிஷ்டிரர், 'பீமா! பலமுள்ளவைகளான பிராணிகளும் ராக்ஷஸகணங்களும் அங்கே மறைந்திருக்கின்றன. அக்னியுடனும் தவத்துடனுமே அங்கே செல்லுதல் கூடும். குந்தீ நந்தன! பலத்தை அடுத்துப் பசிதாகங்களைப் போக்கிக்கொள். வ்ருகோதர! பிறகு, பலத்தையும் ஸாமர்த்தியத்தையும் அடை. கைலாஸ பர்வதத்தைக்குறித்து ரிஷி சொல்லியதை நீ கேட்டிருக்கிறாய்.

குந்தீநந்தன! த்ரௌபதியானவள் எவ்வாறு செல்லுவாளென்பதைப் புத்தியினால் நன்றாக ஆலோசித்துப்பார். பிரபுவே! விசாலமான கண்களுள்ளவனே! பீமா! இல்லாவிடில், ஸஹதேவனோடும் தௌம்யரோடும் ஸூதர்களோடும் சமையற்காரர்களோடும் எல்லாப் பரிசாரகர்களோடும் தேர்களோடும் குதிரைகளோடும் வழியில் கிலேசத்தைப் பொறுக்கத் திறமையில்லாத எல்லாப் பிராம்மணர்களோடுங்கூட நீ திரும்பிவிடு. நானும் நகுலனும் மிக்க தவமுள்ள லோமசருமாகிய நாங்கள் மூவரும் லகுவான ஆகாரமுள்ளவர்களாகவும் விரத நியமமுள்ளவர்களாகவும் செல்வோம். நீ என் வரவை எதிர்பார்த்து ஜாக்ரதையுள்ளவனாகி த்ரௌபதியைப் பாதுகாத்துக்கொண்டு நான் வருகிறவரையில் இந்தக் கங்கா த்வாரத்தில் வஸிக்கக்கடவாய்' என்று சொன்னார். பீமன், 'பாரதரே! ராஜபுத்திரியும் ஶ்ரமத்தால் களைத்தவளும் துக்கத்தால் துன்பமுற்றவளும் கல்யாணியுமான த்ரௌபதியானவள் அர்ஜுனனைப் பார்க்க விருப்பத்தினால் செல்லவே செல்வாள். ஆலஸ்யமில்லாதவனும் அதிகமான மனவலிமையுள்ளவனும் யுத்தங்களில் புறங்காட்டி ஓடாதவனுமான அந்த அர்ஜுனன் ஒருவனைப் பாராமலிருப்பதிலேயே உமக்குக் கடுமையான மனவருத்தம் இருக்கிறது. பாரதரே! ஸஹதேவனையும் என்னையும் த்ரௌபதியையும் பாராமலிருப்பதில் உமக்கு மனவருத்தம் உண்டாகுமென்பது சொல்லவும் வேண்டுமோ? பிராம்மணர்களும் நம்முடைய எல்லாப் பரிசாரகர்களும் ஸூதர்களும் சமையற்காரர்களும் மற்றும் கூடவரவேண்டாமென்று நீர் நினைக்கிறவனும் ஆகிய எல்லாரும் இஷ்டப்படி திரும்பக்கடவர். ராக்ஷஸர்கள் பரவியிருக்கிற இந்த மலையிலும் ப்ரவேசிக்கமுடியாத காடுகளிலும் உம்மைவிட்டுப் பிரிவதற்கு ஒருபொழுதும் நான் விரும்பவில்லை. புருஷஶ்ரேஷ்டரே! மஹா பாக்யமுள்ளவளும் பதிவ்ரதையுமான இந்தப் பாஞ்சாலியும் உம்மைவிட்டுத் திரும்புவதற்கு விரும்பமாட்டாள். அப்படியே, எப்பொழுதும் உம்மை அனுஸரித்திருக்கிற இந்த ஸஹதேவனும் ஒருகாலும் திரும்பான். நான் இவனுடைய எண்ணத்தை அறிந்திருக்கிறேன். மஹாராஜரே! மேலும், இந்த இடத்தில் ஸவ்யஸாசியைப் பார்ப்பதில் எல்லாரும் மிக்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம். ஆகையால், எல்லாரும் சேர்ந்தே செல்வோம். நரபதியே! அனேக குகைகளுள்ள இந்த மலையானது ரதங்களால் செல்வதற்குக் கூடாததாயிருந்தால்

கால்களாலேயே செல்வோம். நீர் மனவருத்தமடையவேண்டாம். அரசரே! பாஞ்சாலி நடந்துசெல்ல முடியாத இடங்களிலெல்லாம் அவளை நான் தூக்கிக்கொண்டு செல்வேனென்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. நீர் கவலையற்றவராக இரும். அப்படியே, மெல்லிய தன்மையுள்ள வீரர்களான மாத்ரீகுமாரர்களிருவரையும் அவர்கள் நடக்கமுடியாத செல்லுதற்கரிய இடங்களில் நான் தாண்டச் செய்வேன்' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'பீம! இவ்வண்ணம் பேசுகிற உனக்குப் பலமானது மேல்மேல் வளர்வதாக. வெகு தூரமுள்ள வழியில் பாஞ்சாலியையும் நகுல ஸஹதேவர்களையும் தூக்கிச் செல்ல விரும்புகிறாயென்னும் இது வேறு மனிதனிடத்தில் இல்லை. உனக்கு மங்களம். நீ திரௌபதியையும் நகுல ஸஹதேவர்களையும் தூக்கிச்செல்ல விருப்பமுள்ளவனாக இருத்தலால் உனக்குப் பலமும் யசஸும் தர்மமும் கீர்த்தியும் பெருகுவனவாக. புஜபலமிக்கவனே! உனக்கு ச்ரமம் உண்டாகவேண்டாம். உனக்கு அவமானமும் உண்டாகவேண்டாம்' என்று கூறினார். பிறகு, மனத்தை மகிழ்விப்பவளான பாஞ்சாலியானவள், சிரித்துக்கொண்டு தர்மராஜரைப்பார்த்து, 'பாரதரே! நான் நடப்பேன். என்னைப்பற்றி மனவருத்தம் பாராட்டவேண்டாம்' என்கிற வாக்கியத்தை உரைத்தாள். லோமசர், 'குந்தீநந்தனனே! கந்தமாதன பர்வதமானது தவத்தினாலே அடையக் கூடியது. நாமெல்லாரும் தவத்தோடு சேருவோம். அரசனே! குந்தியின் புதல்வனே! நகுலனும் ஸஹதேவனும் பீமஸேனனும் நானும் நீயும் அர்ஜுனனைப் பார்ப்போம்?' என்று சொன்னார். அரசரே! இவ்வாறு பேசுகின்றவர்களான அவர்கள் இமயமலையில் மிகுதியான யானைகளும் குதிரைகளுமுள்ளதும் பெரியதும் கிராதர்களாலும் தங்கணர்களாலும் சூழப்பட்டதும் பல வேடர்களால் நிரம்பியதும் தேவர்களால் அடையப்பட்டதும் அனேக அற்புதங்கள் நிறைந்திருப்பதுமான ஸுபாகுவின் தேசத்தை மகிழ்ச்சியுடன் கண்டார்கள். குளிந்தர்களுக்கு அரசனான ஸுபாகுவும் தன் தேசத்தின் எல்லையில் அந்தப் பாண்டவர்களைக் கண்டு அன்பை முன்னிட்டுப் பூஜித்து வரவேற்றான். அந்தப் பாண்டவர்களனைவருமே அவனால் பூஜிக்கப்பட்டு அங்கே ஸுகமாக வஸித்தார்கள். சூரியன் நன்கு பிரகாசித்தவுடன், அவர்கள் இமய மலையை நோக்கிப் புறப்பட்டார்கள். அரசரே! மஹாரதர்களும் மகாவீர்யமுள்ளவர்களுமான கௌரவ நந்தனர்கள், இந்திரஸேனன்

முதலிய வேலைக்காரர்களையும் அப்படியே சமையற்காரர்களையும் த்ரௌபதியினுடைய ஆடை ஆபரணங்களெல்லாவற்றையும் குளிந்தாதிபனான அரசனிடம் அடைக்கலமாக வைத்துவிட்டுக் கால்களாலேயே சென்றார்கள். அந்தப் பாண்டவர்கள் அனைவரும் திரௌபதியுடன் கூட மிக்க மனக்களிப்புள்ளவர்களாகவும் தனஞ்சயனைப் பார்க்க எண்ணங்கொண்டவர்களாகவும் அந்த இடத்திலிருந்து மெள்ள மெள்ள நடந்து சென்றார்கள்' என்று கூறினர்.

நூற்றுநாற்பத்து மூன்றாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(தனஞ்சயனைப் பாராமையால் வருந்திய யுதிஷ்டிரர், பீமன் முதலியோரிடம் அர்ஜுனனைப் புகழ்ந்துகொண்டே அவனைக் காண்பதற்காகக் கந்தமாதன மலையில் ஏற நிச்சயித்தது.)

யுதிஷ்டிரர், 'பீமஸேன! [1] இரட்டையரே! பாஞ்சாலி! கானகத்தில் ஸஞ்சரிக்கின்றவர்களான நம்மைப் பாருங்கள். நாம் வலிமை குன்றினவர்களாகவும் துன்பத்தை அடைவிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறோமென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்ளுகிறோம். தனஞ்சயனைப்பார்க்கும் விருப்பத்தினால் செல்லுதற்கரிய இடத்திலும் செல்லுகிறோம். ஆதலால், முன் செய்த வினைக்கு அழிவு இல்லையென்று நன்கு அறிந்துகொள்ளுங்கள். வீரனான தனஞ்சயனை அருகில் காணாமலிருப்பது, பஞ்சுக் குவியலை நெருப்பு எரிப்பதுபோல, என் அங்கங்களை எரிக்கிறது. வீரனே! அவனைக் காணாமையால் எரிக்கப்பட்டவனும் தம்பிமாருடனிருப்பவனும் வனத்தை அடைந்தவனுமான என்னைத் திரௌபதியின் (கூந்தலைப்பற்றி இழுத்ததான) அந்த அவமானமும் எப்பொழுதும் எரிக்கிறது. விருகோதரனே! நகுலனுக்கு முந்திப் பிறந்தவனும் அளவிறந்த சௌர்யமுள்ளவனும் (பகைவர்களால்) ஜயிக்க முடியாதவனும் உக்கிரமான வில்லையுடையவனுமான பார்த்தனை நான் காணவில்லை. அதனால், தவிக்கிறேன். நான் அவனைப் பார்க்கும் விருப்பத்தாலே உங்களுடன் தீர்த்தங்களிலும் அழகிய காடுகளிலும் தடாகங்களிலும் ஸஞ்சரிக்கிறேன். விருகோதர! வீரனும் ஸத்யஸந்தனும் தனஞ்சயனுமான பீபத்ஸுவை ஐந்து வருஷ

---

[1] பொருந்தாமையால் ஒரு சொல் விடப்பட்டது.

காலமாக நான் பாராமையால் தவிக்கிறேன். விருகோதர! கருமை நிறமுள்ளவனும் ஸிம்மம்போன்ற கம்பீர நடையுள்ளவனும் நீண்ட கைகளுள்ளவனுமான அந்த [1] அர்ஜுனனை நான் காணுமையால் தவிக்கிறேன். குருஶ்ரேஷ்டனே! அஸ்திரங்களை நன்கு கற்றறிந்தவனும் ஸமர்த்தனும் யுத்தத்தில் விற்பிடித்தவர்களுள் நிகரற்றவனுமான அர்ஜுனனை நான் காணவில்லை. அதனால், தவிக்கிறேன். தோஷமற்றவனே! பகைவர்களுடைய ஸங்கங்களில் கோபங்கொண்ட யமன்போல் ஸஞ்சரிப்பவனும் மதப்பெருக்குள்ள யானைபோன்றவனும் சிங்கம்போன்ற தோள்களையுடையவனுமான தனஞ்சயனைக் காணவில்லை. பீம! வீர்யத்தாலும் பலத்தாலும் இந்திரனுக்குக் குறையாதவனும் நகுலஸகதேவர்களுக்கு முந்திப்பிறந்தவனும் வெண்மையான குதிரைகளுள்ளவனும் அளவற்றபராக்ரமமுள்ளவனும் யுத்தத்தில் நாராயணருக்கு ஒப்பானவனும் ஸத்யஸந்தனும் உறுதியான விரதமுள்ளவனுமான அந்த அர்ஜுனனைப் பாராமலிருக்கிற என்னுள்ளத்திற்கு ஆறுதலே இல்லை. விருகோதர! நான், அதிகமான துக்கத்தால் கவரப்பட்டு, உக்கிரமான வில்லுள்ளவனும் பகைவர்களால் ஜயிக்க முடியாதவனுமான அர்ஜுனனை இரவும்பகலும் நினைக்கிறேன்; அதனால், தவிக்கிறேன். மிக்க அற்பனால் அவமதிக்கப்பட்டாலும் எப்பொழுதும் பொறுக்குந் தன்மையுள்ளவனும் நேர்வழியை அடைந்தவனுக்கும் பயந்தவனுக்கும் ஸுகத்தைக் கொடுக்கிறவனுமான அர்ஜுனன், கபடமாகத் தொடங்கிக் கபடத்தால் கொல்லக்கருதினவன் வஜ்ரபாணியான இந்திரனேயானாலும் அவனுக்கும் கொடிய விஷத்திற்கு ஸமானனாக இருப்பான். பகைவனேயானாலும் சரணமடைந்தவன்திறத்தில் அவன் மன இரக்கமுள்ளவன்; பிரதாபசாலி; அபயம் கொடுப்பவன்; போர்க்களத்தைப் பார்க்கவழங்காதபடி செய்பவன்; பெரியமனமுள்ளவன்; வலிமைமிக்கவன்; நம்மனைவருக்கும் ஆதாரமாக இருப்பவன். யுத்தத்தில் பகைவரை நொறுக்குகிறவன்; சிறந்த பொருள்களையெல்லாம் கொண்டுவருகிறவன்; நம்மெல்லோருக்கும் ஸுகத்தை உண்டுபண்ணுகிறவன். பாண்டவ! வீர! துரியோதனன் கவர்ந்துகொண்ட ஏராளமான பலஜாதி திவ்ய ரத்னங்கள் எவனுடைய வீர்யத்தினால் எனக்கு முற்காலத்தில் இருந்தனவோ, எவனுடைய கைவன்மையால் எல்லா ரத்தினங்களாலுமிழைக்கப்பெற்றதும் மூவுலகங்களிலும் பிரஸித்தி பெற்ற

---

1 'குடாகேசம்' என்பது மூலம்.

துமான ஸபையானது முன்பு எனக்கு இருந்ததோ, வீர்யத்தில் வாஸுதேவருக்கு ஸமானனும் யுத்தத்தில் கார்த்தவீர்யனுக்கு நிகரானவனும் ஜயிக்கமுடியாதவனும் யுத்தத்தில் அளவுகடந்த வீர்யமுள்ளவனுமான அந்தப்பல்குனனை நான் காணவில்லை. பீம! பகைவரைக் கொல்பவனான அவன், தன் வீர்யத்தினால், மிக்க வீர்யமுள்ள பலராமரையும் (பகைவரால்) ஜயிக்கப்படாத உன்னையும் வாஸுதேவரையும் அனுஸரித்தவன். மகா பாகுபலமுள்ளவனே! வீரனே! எவனுக்குத் தோள்வன்மையிலும் பெருமையிலும் புரந்தரன் ஸமானனோ, வேகத்தில் வாயு ஒப்பானவனோ, முகத்தில் சந்திரன் ஒப்பானவனோ, கோபத்தில் பழமையான யமன் ஒப்பானவனோ அந்த நரஶ்ரேஷ்டனைப் பார்க்கவிருப்பமுள்ள அப்படிப்பட்ட நாமனைவரும் கந்தமாதன மலையில் செல்வோம். எங்கே விசாலமான பதரீஎன்கிற நரநாராயணர்களின் ஆஶ்ரமமிருக்கிறதோ இயக்கர்களால் எப்பொழுதும் வஸிக்கப்பட்ட அந்தச் சிறந்தமலையைப் பார்ப்போம். நாம் பெரியதவத்தைச் செய்கின்றவர்களாகி அரக்கர்களால் நாற்புறங்களிலும் அடையப்பட்டதும் மகிழற்குரியதுமான குபேரனுடைய தாமரை ஓடைக்குக் கால்களாலேயே நடந்துசெல்வோம். விருகோதரனே! பாரத! தவம்புரியாதவனாலும் குரூரனாலும் உலோபியாலும் மனவடக்கமில்லாதவனாலும் அந்த இடம் அடைய முடியாது. பீம! நாமெல்லாரும் ஆயுதங்களுள்ளவர்களாகவும் கத்திகளைக் கட்டிக்கொண்டவர்களாகவும் பெரிய விரதமுள்ள பிராம்மணர்களுடன்கூட அர்ஜுனனுடைய ஸ்தானத்தைக் காண்பதில் விருப்பமுள்ளவர்களாக அங்கே செல்வோம். குந்திபுத்ர! நியமமில்லாதவன் ஈக்களையும் காட்டீக்களையும் கொசுகுகளையும் சிங்கங்களையும் புலிகளையும் பாம்புகளையும் அடைகிறான். நியமமுள்ளவன் அவைகளைக் காண்கிறதில்லை. அப்படிப்பட்ட நாம் மனத்தை அடக்கினவர்களாகவும் மிதமான ஆகாரமுள்ளவர்களாகவும் தனஞ்சயனைப் பார்க்க விருப்பமுள்ளவர்களாகக் கந்தமாதன பர்வதத்தில் பிரவேசிப்போம்' என்று கூறினார்.

நூற்றுநாற்பத்துநான்காவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் மந்தரகிரிக்குச் சென்று ஆகாச கங்கையை அடைந்ததும், நரகாஸுரனுடைய எலும்புகளின் குவியலைக் கண்டதும், லோமசர் விஷ்ணு நரகாஸுரனைக் கொன்றதையும் பாரத்தால் முழுகிப்போன பூமியை வராகவடிவமெடுத்து மேலே தூக்கியதையும் சொல்லியதும்.)

லோமசர், 'பார்ப்பவர்களே! (மந்தரத்தைத் தவிர) மற்ற மலைகளும் பட்டணங்களும் காடுகளும் நதிகளும் அழகிய தீர்த்தங்களும் ஆகிய எல்லாம் பார்க்கப்பட்டன. கைகளால் தீர்த்தமும் தொடப்பட்டது. இந்த வழியானது தேவஸம்பந்தம் பெற்ற மந்தரபர்வதத்துக்குப் போகிறது. பாண்டவர்களே! நீங்கள் எல்லாரும் மனத்தை ஒருவழிப்படுத்தினவர்களும் பயமற்றவர்களுமாகவேண்டும். தேவர்களுடைய வாஸஸ்தானமும் நற்கருமங்களைச் செய்த தேவரிஷிகளுடைய இருப்பிடமுமான இந்தமலை உங்களுக்கு அடையத்தக்கதாகும். ஐயனே! அரசனே! மங்களகரமான ஜலமுள்ளதும் புண்யமானதும் பதரியிலிருந்து உற்பத்தியாவதும் தேவர்கள் ரிஷிகள் ஆகிய இவர்களின் கூட்டங்களால் அடையப்பட்டதுமான மகாநதியானது இதோ செல்லுகிறது. இந்த நதியானது ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற மகாத்மாக்களான வாலகில்யர்களாலும் மகாத்மாக்களான கந்தர்வர்களாலும் எப்பொழுதும் அர்ச்சிக்கவும் அடையவும் பட்டது. இந்த இடத்தில் ஸாமகர்களான மரீசியும் புலஹரும் ப்ருகுவும் அப்படியே அங்கிரஸும் ஸாமவேதத்தை இனியகுரலுடன் கானம்பண்ணுகிறார்கள். தேவர்களுள் சிரேஷ்டனான இந்திரன் தேவகணங்களுடன் தினந்தோறும் செய்வதான ஜபத்தைச் செய்கிறான். ஸாத்யர்களும் அஶ்விநீ தேவர்களும் அப்பொழுது அவனுக்குப் பணிசெய்கிறார்கள். ஸூர்யனும் சந்திரனும் க்ரஹங்களும் நக்ஷத்திரங்களும் பகல் இரவு பாகுபாட்டினால் இந்த நதியை அனுஸரித்துச் செல்லுகின்றன. மகாபாக்கியமுள்ளவனே! எந்த வ்ருஷபத்வஜரால் உலகத்திற்கு நிலை ஏற்படுமோ அவர் கங்காத்வாரத்தில் இதன் ஜலத்தை முடியில் தாங்கினார். ஐயா! பகவதியும் தேவியுமான இதனை நீங்கள்

எல்லோருமே மனத்தையடக்கினவர்களாகி அடைந்து வணங்கக் கடவீர்' என்று சொன்னார். மகாத்மாவான அந்த லோமச ருடைய அந்த வசனத்தைக்கேட்டு, அந்தப்பாண்டவர்கள் ஆகாச கங்கையை மிக்க அடக்கத்துடன் நமஸ்கரித்தார்கள். தர்மத்தைச் செய்பவர்களான அந்தப் பாண்டவர்களனைவரும் (கங்கையை) வந்தனம் செய்து மகிழ்ச்சி மிக்கவர்களாகி எல்லாரிஷிகணங்களுட னும் மறுபடியும் சென்றார்கள். பிறகு, நரஸ்ரேஷ்டர்களான அவர்கள் தூரத்தில் பிரகாசிக்கின்றதும் வெண்ணிறமுள்ளதும் மேருமலை போன்றதும் எல்லாத் திசைகளிலும் சிதறிக் கிடப் பதுமான (எலும்புகளின் குவியலைக்) கண்டார்கள். வாக்கியங் களை அறிந்தவரான அந்த லோமசரோ, அந்தப்பாண்டவர்கள் அதைப்பற்றி வினவ எண்ணமுள்ளவர்களாயிருப்பதை அறிந்து, 'பாண்டு நந்தனர்களே! கேளுங்கள். புருஷஸ்ரேஷ்டனே! சிதறி இருப்பவையும் நல்ல ஒளியுள்ளவையும் கைலாஸ சிகரம் போன்றவையும் மலை போன்றவையுமாக இதோ நீ காணும் இவைகள் பெரிய சரீரமுள்ளவனான நரகாஸுர னுடைய எலும்புகள். இவை மலையிலுள்ள கல்தரையை அடைந் து மலைபோல விளங்குகின்றன. புராதனரும் தேவரும் பரமாத் மாவும் தேவராஜனுக்கு நன்மையை விரும்புகின்றவருமான அந்த விஷ்ணுவால் நரகாஸுரன் நாசம்செய்யப்பட்டான். மிக்க மனவலிமையுள்ளவனான நரகன் பதினாயிரம் வர்ஷம் தவம் புரிந்து தவம் வேதாத்தியயனம் இவற்றின் வலிமை யினால் இந்திரனுடைய ஸ்தானத்தை வேண்டினான். அந்த அஸு ரன் பெரிதான தபோபலத்தாலும் கைகளுடைய வேகபலத்தா லும் ஒருவராலும் அவமதிக்கப்படாதவனாக இருந்துகொண்டு எப் பொழுதுமே (எல்லாரையும்) அவமதித்து வந்தான். தோஷமற்ற வனே! அந்த இந்திரனோ, அவனுடைய பலத்தையும் (அவன்) தர்மவிஷயத்தில் விரதங்களைச் செய்தவனாயிருத்தலையும் அறிந்து, அப்பொழுது பயத்தினால் கவரப்பட்டவனும் மனவருத்தம் மிக்க வனுமானான். அவன் தேவரும் அழிவற்றவருமான விஷ்ணுவை மனத்தினால் நன்கு தியானித்தான். எவ்விடத்திலும் நிறைந்திருப் பவரும் பிரபுவும் இணைபிரியாத லக்ஷ்மியையுடையவருமான விஷ்ணுவும் நேரில் வந்துநின்று பிரகாசித்தார். ரிஷிகளும் தேவர் களும் ஆகிய அனைவரும் அவரைத் துதிசெய்தார்கள். ஜ்வலிக் கிறகாந்தியையுடைய அக்னிபகவான், அவரைப்பார்த்து, அவ்

ருடைய தேஜஸுகளால் அடக்கப்பட்டுத் தன்தேஜஸை இழந்தவனானான். வஜ்ராயுதத்தைத் தரித்தவனான இந்திரன் வரன்களைக் கொடுப்பவரும் தேவரும் தேவகணங்களுக்கு ஈச்வரருமான அந்தவிஷ்ணுவைப் பார்த்துக் கைகளைக் குவித்துக்கொண்டவனும் மிகவணங்கினவனுமாகித் தண்டனிட்டு யாரிடமிருந்து தனக்குப் பயமுண்டாகிறதென்பதை உள்ளபடி உரைத்தான். விஷ்ணு, 'இந்திர! அஸுர ராஜனான நரகனிடத்தினின்று உனக்கு உண்டான பயத்தை நான் அறிவேன். அவன் தவத்தினால் ஸித்தித்த நல்வினையால் இந்திரனுடைய ஸ்தானத்தைப் பிரார்த்திக்கிறான். தேவேந்திர! அப்படிப்பட்டநான், அவன் தவத்தினால் ஸித்தியடைந்தவனாக இருந்தாலும் உன்னிடத்திலுள்ள ப்ரீதியினால் (அவனுடைய) தேகத்தினின்று உயிரை நிச்சயமாகப் பிரித்துவிடுகிறேன். ஒரு முகூர்த்தகாலம் எதிர்பார்த்திரு' என்று கூறினார். மிக்க தேஜஸ்வியான விஷ்ணுவானவர் கையினால் (கன்னத்திலறைந்து) அவனுயிரை வாங்கினார். பிறகு, அவன் அடிக்கப்பட்ட சிறந்த மலைபோலப் பூமியில் விழுந்தான். மாயையினால் கொல்லப்பட்ட அவனுடைய எலும்புக்குவியல் இது. இதோ விஷ்ணுவினுடைய இரண்டாவதான வேறு ஒருசெய்கை விளங்குகிறது. பூமி முழுமையும் பாதாளத்தில் அமிழ்த்தப்பட்டுக் காணமற்போயிற்று. ஒற்றைக் கொம்புள்ள வராக வடிவங்கொண்ட அந்த விஷ்ணுவால் மீண்டும் மேலே தூக்கிக்கொண்டுவரப்பட்டது' என்னும் வசனத்தைச் சொல்லினர். யுதிஷ்டிரர், 'பகவானே! இந்தக் கதையை உள்ளபடி விஸ்தாரமாகச் சொல்லக்கடவீர். பிராம்மணரே! அப்பொழுது பாதாளத்தில் அமிழ்ந்து காணமல்போன பூமியானது, தேவநாதரான அவரால் எவ்வாறு நூறுயோஜனைதூரம் மீண்டும் மேலே தூக்கிக்கொண்டுவரப்பட்டது? சராசரங்களைத் தாங்குகின்றதும் அசைவற்றிருப்பதும் மங்கள ஸ்வரூபமுள்ளதும் விளங்குவதும் மிக்க மகிமையுள்ளதும் எல்லாஸஸ்யங்களையும் வளரச் செய்கின்றதுமான பூமியானது யாருடைய மகிமைகாரணமாக எந்தவிதத்தால் நூறுயோஜனைதூரம் பாதாளத்தை அடைந்தது? எதனால் பரமாத்மாவினுடைய அந்த வீர்யமுழுமையும் காண்பிக்கப்பட்டது? பிராம்மணோத்தமரே! இதெல்லாவற்றையும் உள்ளபடி முழுமையும் விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன். நீர் அதற்கு இருப்பிடமன்றோ?' என்று சொன்னார். லோமசர், 'யுதிஷ்டிர! நீ இந்தக் கதையைச் (சொல்லும்படி) என்னை வின

விஞயாதலால் இஃதனைத்தையும் இப்பொழுது சொல்லுகிற என்னிடத்தினின்று மிச்சமின்றிக் கேட்கக்கடவாய். ஐயா! முன்பு க்ருதயுகத்தில் பயங்கரமான ஒரு ஸமயத்தில் புராதனரான ஆதிதேவர் (அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம், பிரம்மசர்யம், அபரிக்ரஹம் என்கிற யோகாங்கமான) யமத்தை அனுஷ்டித்தார். தர்மத்தினின்று நழுவாதவனே! சிறந்த வித்தியை உடையவரான அந்தத் தேவதேவர் யோகாங்கமான யமத்தைச்செய்த அந்தக் காலத்தில் ஒரு பிராணியாவது மரணமடையவில்லை; ஆனால், முன்போலவே பிறந்துகொண்டிருந்தது. புருஷஶ்ரேஷ்டனே! பகைவர்களைவாட்டுபவனே! பறவைகளின் கூட்டங்களும் பசுக்களும் [1] கோக்களும் ஆடுகளும் குதிரைகளும் மாம்ஸாசிகளானமிருகங்களும் மனிதர்களும் ஆகிய அவையெல்லாம் ஆயிரமாயிரமாகவும் பதினாயிரம்பதினாயிரமாகவும் நீர்ப் (பெருக்குப்) போல விருத்தியடைந்தன. ஐயா! மிக்ககுழப்பமானதும் அச்சந்தருவதுமான இந்தஸமயத்தில் அதிகபாரத்தால் பூமியானது நூறுயோஜனதூரம் கீழே அமிழ்ந்து போய்விட்டது. எல்லா அங்கங்களுந் துன்புறுத்தப்பட்டவளும் பாரத்தால் அறிவு கவரப்பட்டவளுமான அந்தப் பூமிதேவியானவள் சிறந்த தேவரான நாராயணரிடம் சென்று அவரைச் சரணமடைந்தாள்.

பூமி, 'பகவானே! தேவரீருடைய அருளாலன்றோ நெடுங்காலமாக இங்கு இருக்கக்கூடியவளானேன். (இப்பொழுது) பாரத்தால் நன்கு ஆக்ரமிக்கப்பட்டவளாகிறேன். நிற்பதற்குக் கூடவில்லை. பகவானே! என்னுடைய இந்தப் பாரத்தைப் போக்குவதற்குத் தேவரீர் தகுதியுள்ளவராக இருக்கிறீர். தேவரே! நான் உம்மைச் சரணமடைந்தவளாகிறேன். விபுவே! எனக்கு அனுக்கிரஹம் செய்யும்' என்று பிரார்த்தித்தாள். அழிவற்றவரும் ப்ரபுவுமான பகவான் அவளுடைய அந்தவசனத்தைக்கேட்டு, 'பூமியே! பாரத்தால் துன்பமடைந்தவளே! தனங்களைத் தரித்துக்கொண்டிருப்பவளே! நீ பயப்படவேண்டாம். நீ பாரம் குறைந்தவளாகும்படி நான் இதோ செய்கிறேன்' என்று கேட்டற்கினிய அக்ஷரங்களுடன் உச்சரிக்கப்பட்ட வசனத்தைச் சந்தோஷத்தோடு சொல்லினர். அவர், மலைகளைக் குண்டலங்களாக அணிந்த அந்தப் பூமிதேவியை அனுப்பிவிட்டு, பிறகு, ஒற்றைக்கொம்புள்ளதும் அதிக காந்தியுள்ளதுமான வராஹமாகத் தோன்

1 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

றினர்; சிவந்த இருகண்களாலும் பயத்தை உண்டுபண்ணிக்கொண்டும் காந்தியினால் புகையை ஜ்வலிக்கச்செய்துகொண்டும் அந்த இடத்தில் வளர்ந்தார். வீரனே! வேதஸ்வரூபியான [1] அவர் பிரகாசிக்கின்றஒற்றைக்கொம்பினால் பூமியை எடுத்து நூறுயோஜனதூரம் மேலே தூக்கினார். அது தூக்கப்படும் தருணத்தில், அதிகக் கலக்கம் உண்டாயிற்று. தேவர்களும் தவத்தைப் பொருளாகக் கொண்ட ரிஷிகளும் ஆகிய அனைவரும் நன்குகலக்கப்பட்டார்கள். ஸ்வர்க்கம், அந்தரிக்ஷம், பூமி ஆகிய எல்லாம், 'ஆ! ஆ!!' என்னும் ஒலியுள்ளனவாயின. தேவனோ மனிதனோ ஒருவனாவது நல்ல நிலைமையை அடைந்திருக்கவில்லை. பிறகு, ரிஷிகணங்களுடன் கூடின பெரும்பாலரான தேவர்கள், வீற்றிருக்கின்றவரும் காந்தியினால் ஜ்வலிக்கின்றவர்போன்றவருமான பிரம்மதேவரிடம் சென்றனர். தேவேசரும் உலகங்களுக்கு ஸாக்ஷியாக இருப்பவருமான பிரம்மதேவரை அணுகி அப்பொழுது எல்லோரும் கைகளைக் குவித்துக்கொண்டு, 'உலகங்களெல்லாம் மிகக் கலக்கப்பட்டன. ஜங்கமங்களும் தாவரங்களும் துன்பத்தை அடைந்தன. தேவநாதரே! ஸமுத்திரங்களுக்கும் கலக்கம் தெரிகிறது. அப்படிப்பட்ட இந்தப் பூமி முழுமையும் நூறுயோஜனதூரம் கீழே சென்றுவிட்டது. இதென்ன? யாருடைய பிரபாவத்தால் இந்த உலகமானது கலக்கமுற்றது? தேவரீர் எங்களுக்கு இதனை விரைவில் சொல்லக்கடவீர். இந்த ஸமயத்தில், நாங்களெல்லாரும் அறிவை இழந்தவர்களாக இருக்கிறோம்' என்று கூறினார்கள். பிரம்மதேவர், 'ஓரிடத்திலும் ஒருபொழுதும் உங்களுக்கு அஸுரர்களிடமிருந்து பயம் இல்லை. தேவர்களே! எதற்காக இந்தக் கலக்கம் உண்டாகிறதென்பதைக் கேளுங்கள். எல்லா வஸ்துக்களையுமடைந்தவரும் இணைபிரியாத திருவுடனிருப்பவரும் அழிவில்லாத ரூபமுள்ளவரும் எங்கும் நிலைபெற்றிருக்கிறவருமான இவருடைய பிரபாவத்தால் ஸ்வர்க்கத்திற்கு மிக்க குழப்பம் தெரிகிறது. நூறுயோஜனதூரம் ஆழ்ந்து சென்ற இந்தப் பூமி முழுமையும் பரமாத்மாவான அந்த விஷ்ணுவினால் மறுபடியும் உயரத்தூக்கப்பட்டது. அது தூக்கப்படும் தருணத்தில், இந்தக் கலக்கம் உண்டாயிற்று. (இதனை) இவ்வண்ணம் நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். உங்களுடைய ஸந்தேகத்தையும் விலக்கிக் கொள்ளுங்கள்' என்று சொன்னார். தேவர்கள், 'பகவானே! எந்த இடத்தில் அந்த மகா வராஹ

1 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

மானது ஸந்தோஷமுள்ளதாகப் பூமியை நன்கு மேலே தூக்கிய தோ அந்த இடத்தைச் சொல்லும். அங்கு நாம் போவோம்' என்று வினவினார்கள். பிரம்மா, 'ஸந்தோஷம்; செல்லுங்கள். உங்களுக்கு மங்களம். நந்தனவனத்திலிருக்கிற நாராயணரைப் பாருங்கள். இதோ இந்த இடத்தில் சிறந்த காந்தியுடன் கூடின கருட பகவான் பிரகாசிக்கிறார். உலகங்களைக் காப்பவரான பகவான் வராஹ வடிவத்தோடேயே பூமியை மேலே தூக்குகின்றவராகிக் காலாக்கினிபோலப் பிரகாசிக்கிறார். இவருடைய மார்பில் ஸ்ரீவத்ஸமென்கிற மறுவானது நன்கு வெளிப்படையாகப் பிரகாசிக்கிறது. தேவர்களே! அனைவரும் இந்த மகாவராஹம் ஶ்ரமமில்லாமலிருப்பதைப் பாருங்கள்' என்று சொன்னார். பிறகு, தேவர்கள் பிதாமகரை முன்னிட்டுக்கொண்டு மஹாத்மாவான வராஹ மூர்த்தியைப் பார்த்தும், (அவருடைய வசனத்தைக்) கேட்டும், அவரிடத்தினின்று விடைபெற்றுக்கொண்டும், வந்தபடியே சென்றார்கள்' என்று சொன்னார். ஜனமேஜயரே! பாண்டவர்களனைவரும் அந்தக் கதையைக்கேட்டு லோமசரால் காட்டப்பட்ட வழியினால் அதிக ஸந்தோஷமுள்ளவர்களாகி விரைவாகச் சென்றார்கள்.

நூற்றுநாற்பத்தைந்தாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(கந்தமாதனத்தை நோக்கிப் பாண்டவர்கள் செல்லும்பொழுது நடுவழியில் பெருமழைபொழிந்ததும், அப்பொழுது அவர்கள் மர முதலியவைகளில் ஒதுங்கியிருந்து மழை ஓய்ந்தவுடன் மறுபடியும் புறப்பட்டதும்.)

அரசரே! சூரர்களும் நாணேற்றப்பட்ட விற்களுள்ளவர்களும் அம்புத் தூணிகளையுடையவர்களும் அம்புகளுள்ளவர்களும் உடும்புத்தோலாற் செய்த விரலுறை கட்டிக்கொண்டவர்களும் கத்திகளை உடையவர்களும் அளவுகடந்த பராக்கிரமமுள்ளவர்களும் எல்லா வில்லாளிகளுள்ளும் சிறந்தவர்களுமான அந்தப் பாண்டவர்கள் பிராம்மணஶ்ரேஷ்டர்களைக் கூட்டிக்கொண்டு பாஞ்சாலியுடன் கந்தமாதனத்தைநோக்கிப் புறப்பட்டார்கள். வீரர்களான பாண்டவர்கள் மனத்தைப் பரமாத்மாவினிடம்

வைத்துக் கிழங்குகளையும் பழங்களையும் புஜிப்பவர்களாகித் தடாகங்களையும் நதிகளையும் மலைகளையும் காடுகளையும் மலையுச்சியில் அதிக நிழலுள்ள மரங்களையும் எப்பொழுதும் பூத்தும் பழுத்துமிருக்கிற (மரங்க) ளுள்ளவையும் தேவர்கள் ரிஷிகள் இவர்களின் கூட்டங்களாலடையப்பட்டவையுமான இடங்களையும் கண்டார்கள். அவர்கள் பற்பலவிதமான அநேக மிருகக்கூட்டங்களைப் பார்த்துக்கொண்டு பலவித வடிவமுள்ளவையும் கரடுமுரடாயிருத்தலால் செல்லுதற்கரியவையுமான இடங்களில் ஸஞ்சரித்தார்கள். மகாத்மாக்களான அவர்கள், ரிஷிகளும் ஸித்தர்களும் தேவர்களுமுள்ளதும் கந்தர்வர்களுக்கும் அப்ஸரஸுகளுக்கும் பிரியமானதும் கின்னரர்களால் அடையப்பட்டதுமான மலையில் சென்றார்கள். பிரஜைகளுக்குப் பதியே! பிறகு, (பாண்டவ)வீரர்கள் கந்தமாதன பர்வதத்தில் செல்லும்போது, உக்கிரமான காற்றுடன் பெருமழை தோன்றியது. பிறகு, மிக்க சருகுகளுடன் கிளம்பின பெரும் புழுதியானது பூமியையும் ஆகாயத்தையும் தேவலோகத்தையும் விரைவில் மூடியது. ஆகாயமானது புழுதியினல் மூடப்பட்டபொழுது ஒன்றுமே அறியப்படவில்லை. ஆதலால், ஒருவரோடொருவர் பேசுவதற்கும் சக்தியற்றவர்களானார்கள். பாரதரே! பிறகு, கற்பொடிகளுடன் கூடின காற்றினல் இழுக்கப்படுகின்றவர்களாகவும் இருளால் கண்கள் மறைக்கப்பட்டவர்களாகவும் ஒருவரை ஒருவர் பார்க்கவுமில்லை. காற்றினல் முறிக்கப்பட்டு ஓய்வற்றுக் கீழேவிழுகின்ற மரங்களும் மற்ற மரங்களுமாகிய இவற்றின் சப்தமானது பெரிதாகத் தோன்றியது. காற்றினல் மிக மயக்கப்பட்ட அவர்களனைவரும், 'ஆகாயம் கீழே விழுகிறதோ, அல்லது பூமி வெடிக்கிறதோ, அல்லது மலை வெடிக்கிறதோ' என்று நினைத்தார்கள். அவர்கள் காற்றுக்குப் பயந்து வழி ஓரத்திலிருக்கிற மரங்களையும் புற்றுக்களையும் மேடு பள்ளங்களையும் கைகளால் தேடிப் பார்த்துக்கொண்டு ஆங்காங்குப் பதுங்கினார்கள். பிறகு, மகாபலசாலியான பீமஸேனன் வில்லைக் கையில் ஏந்தித் திரௌபதியைத் தேடி அழைத்துக்கொண்டு ஒரு மரத்தை அடைந்து நின்றான். தர்மராஜரும் தௌம்யரும் பெருங் காட்டில் பதுங்கி இருந்தார்கள். ஸஹதேவனே அக்னிஹோத்திர ஸாமக்ரிகளை ,எடுத்துக்கொண்டு ஒரு மலையில் மறைந்திருந்தான். நகுலனும் மற்றப் பிராம்மணர்களும் தவத்தில் சிறந்தவரான லோமசரும் பயந்து அங்கங்கே மரங்களை அடைந்து பதுங்கிஇருந்தார்

கள். காற்றுத் தணிந்து அந்தப் புழுதியும் அடங்கியவுடன், மிகுதியான பெரிய நீர்த்திவலைகளுடன் மழை வந்துவிட்டது. எறியப்படுகின்ற வஜ்ராயுதங்களுடைய ஒலிபோலச் சடசட என்னும் ஒலி மிகுதியாகத் தோன்றியது. அதன்பிறகு, மேகங்களில் சஞ்சலமான ஒளியுள்ள அப்படிப்பட்ட மின்னல்கள் ஸஞ்சரித்தன. பிறகு, அந்த மலையில் வேகமான காற்றினால் வீசப்பட்ட ஆலங்கட்டி மழைகள் எல்லாப்பக்கங்களையும் மூடிக்கொண்டு எப்பொழுதும் விழுந்தன. அரசரே! அந்த மலையில் எல்லாப் பக்கங்களிலும் பொழியப்படுகிற ஜலங்கள் கலங்கினவையும் நுரையுள்ளவையுமான நதிகளாயின. நுரைகளாகிற தெப்பங்களால் நிரம்பிய மிகுதியான ஜலத்தைக் கொண்டு செல்லுகின்ற நதிகள் மரங்களைப் பறித்துக்கொண்டு பேரொலியுள்ளவைகளாக ஓடின. பாரதரே! அந்த ஒலி அடங்கிக் காற்றும் தணிந்து தண்ணீரும் பள்ளங்களில் வடிந்து ஸூர்யனும் உதிக்கவே, அவர்கள் எல்லாரும் மெள்ள வெளிப்பட்டு ஒன்று கூடினார்கள். வீரர்களான பாண்டவர்கள் மீண்டும் கந்தமாதன பர்வதத்தைக்குறித்துப் புறப்பட்டார்கள்.

நூற்றுநாற்பத்தாறுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(நடக்கமாட்டாமல் கீழேவிழுந்து மயக்கமடைந்த திரௌபதியைப் பாண்டவர்கள் களைதெளிவித்ததும், யுதிஷ்டிரர் பாஞ்சாலி நடந்து செல்வதைப்பற்றிக் கவலைப்பட்டதும், பீமன் தானாவது கடோத்கசனாவது பாஞ்சாலியைத் தூக்கிச் செல்லுவதாகச் சொல்லியதும்.)

பிறகு, மகா பலசாலிகளான பாண்டவர்கள் [1] புறப்பட்டவுடன், கால்களால் வழி நடப்பதில் பழக்கமில்லாதவளான த்ரௌபதியானவள் (களைத்து) உட்கார்ந்தாள். அந்தக்காற்றினாலும் மழையினாலும் ஶ்ரமமடைந்தவளும் துக்கத்தால் கவரப்பட்டவளும் மென்மை காரணமாக இரக்கப்படத்தக்கவளுமான பாஞ்சாலியானவள் மூர்ச்சை அடைந்தாள். கருமையான கண்

1 'க்ரோசமாத்ரம் ப்ரயாதேஷு' என்பது வேறுபாடம்; ஒரு குரோசம் (='இரண்டு மைல்) சென்றவுடன்' என்பது அதன் பொருள்.

களுள் அந்தப் பாஞ்சாலி மயக்கத்தால் நடுங்குகிறவளாக உருண்டவைகளும் ஒத்தவைகளுமான இரு கைகளாலும் இரண்டு தொடைகளையும் பிடித்துக்கொண்டாள். யானையின் துதிக்கை போன்றவைகளும் சேர்ந்திருப்பவைகளுமான இரண்டு தொடைகளையும் பிடித்துக்கொண்டும் வாழைமரம்போல நடுங்கிக்கொண்டும் உடனே பூமியில் விழுந்தாள். அழகியவளும் ஒடிக்கப்படுகின்ற கொடிபோலக் கீழே விழுகின்றவளுமான அவளை வீர்யவானான நகுலன் விரைவாக ஓடிவந்து பிடித்துக்கொண்டான். நகுலன், 'அரசரே! கரிய கண்களை உடையவளான இந்தப் பாஞ்சாலராஜ குமாரியானவள் களைத்துப் பூமியில் விழுந்துவிட்டாள். பாரதரே! இவளைப் பாரும். துக்கத்தை அனுபவிக்கத் தகாதவளும் மெல்ல நடப்பவளுமான இவள் மிக்க துக்கத்தை அடைந்துவிட்டாள். மஹாராஜரே! ஶ்ரமத்தால் மெலிந்திருக்கின்ற அப்படிப்பட்ட இவளைத் தேற்றுவீராக' என்று சொன்னான். தர்மராஜரும் பீமனும் ஸஹதேவனும் நகுலனுடைய வசனத்தால் மிக்க துக்கத்துடன் விரைவாக ஓடி வந்தார்கள். தர்மாத்மாவான யுதிஷ்டிரரோ அவள்முகம் நிறம் மாறி மெலிந்திருப்பதைக் கண்டு (அவளை) மடியில் எடுத்து வைத்துக்கொண்டு மனவருத்தத்துடன் புலம்பலானார். யுதிஷ்டிரர், 'பாதுகாக்கப்பட்ட மாளிகைகளில் நல்ல விரிப்புக்களுள்ள படுக்கையில் படுத்துப் பழகினவளும் ஸுகத்திற்கே தக்கவளும் அழகு வாய்ந்தவளுமான பாஞ்சாலியானவள் எவ்வண்ணம் தரையில் விழுந்து கிடக்கிறாள்? சிறந்த ஸுகானுபவத்திற்குத் தகுந்தவளான இவளுடைய மிருதுவான பாதங்களும் தாமரை மலர்போன்ற ஒளியுள்ள முகமும் எப்படி நான் காரணமாக இப்பொழுது கருமையை அடைந்தன? சூதாட்டத்தில் விருப்பமுள்ளவனும் புத்தி இல்லாதவனும் மிருகங்களின் கூட்டங்களால் நிரம்பிய கானகத்தில் பாஞ்சாலியை அழைத்துக்கொண்டு திரிகின்றவனுமான என்னால் இதென்ன கார்யம் செய்யப்பட்டது? 'கல்யாணி! பாண்டவர்களைப் பர்த்தாக்களாக அடைந்து ஸுகத்தை அடைவாய்' என்று பிதாவான த்ருபதராஜனால் நீண்ட கண்களையுடைய (இவள்) கொடுக்கப்பட்டாள். இவள் அவற்றையெல்லாம் அடையாமல் களைப்பினாலும் சோகத்தாலும் மெலிந்தவளாகப் பாவியான என்னுடைய செய்கைகளால் பூமியில் விழுந்து கிடக்கிறாள்' என்று புலம்பினார். தர்மராஜரான யுதிஷ்டிரர் அவ்வண்ணம் அடிக்கடி புலம்பிக்கொண்டிருக்கும் தருணத்

தில், தௌம்யர் முதலிய எல்லாப் பிராம்மணோத்தமர்களும் அந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்கள் (தர்மராஜரை) நன்கு தேற்றினார்கள்; ஆசீர்வாதங்களாலும் கௌரவித்தார்கள்; அப்படியே, ராக்ஷஸர்களைக் கொல்லக்கூடிய மந்திரங்களையும் ஜபித்தார்கள்; (சாந்திக பௌஷ்டிகக்) கிரியைகளையும் செய்தார்கள். அரிஷ்ட சாந்தியின்பொருட்டு நிகரற்ற ரிஷிகளால் மந்திரங்கள் ஓதப்படும் பொழுது, பாண்டவர்களால் குளிர்ச்சியுள்ள கைகளால் அடிக்கடி தொடப்படுகின்றவளும் ஜலத்துடன் சேர்ந்த குளிர்ந்த காற்றினால் வீசப்படுகின்றவளுமான பாஞ்சாலியானவள் ஸௌக்கியத்தை அடைந்து மெள்ளமெள்ளப் பிரஜ்ஞையை அடைந்தாள். பார்த்தர்கள், பிரஜ்ஞையை அடைந்தவளும் இரக்கப்படத்தக்கவளும் எளிமையுற்றவளுமான அந்த க்ருஷ்ணையை எடுத்து மான்தோற் படுக்கையில் படுக்கச்செய்து களையாற்றினார்கள். நகுலஸஹதேவர்கள் உள்ளங்கால்கள் சிவந்தவையும் சிறந்த லக்ஷணங்களுள்ளவையுமான அவளுடைய கால்களை (ஆயுதம் பிடித்துத்) தழும்புபட்ட கைகளால் மெள்ளப் பிடித்தார்கள். தர்மராஜரான யுதிஷ்டிரரும் அவளைக் களைதெளிவித்தார். குருஶ்ரேஷ்டர், பீமஸேனனைப் பார்த்து, 'பீம! மேடுபள்ளமானவையும் பனியினால் நடந்துசெல்லமுடியாதவையுமான மலைகள் பல இருக்கின்றன. தோள்வலிமையுள்ளவனே! அவைகளில் க்ருஷ்ணையானவள் எவ்வாறு ஸஞ்சரிப்பாள்?' என்று சொன்னார். பீமஸேனன், 'அரசரே! புருஷஶ்ரேஷ்டரே! உம்மையும் ராஜபுத்திரியையும் இரட்டையரையும் நானே தூக்கிக்கொண்டு செல்வேன். ராஜேந்திரரே! துயரத்தில் மனத்தைச் செலுத்தவேண்டாம். தோஷமில்லாதவரே! அல்லது, என்னால் உண்டானவனும் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவனும் என்னுடைய பலத்திற்கு ஸமமான பலமுள்ளவனுமான கடோத்கசன் உம்முடைய கட்டளையினால் நம்மெல்லோரையும் தூக்கிச் செல்வான்' என்று சொன்னான்.

நூற்றுநாற்பத்தேழாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பீமஸேனன் நினைத்தமாத்திரத்தில் வந்த கடோத்கசன் திரௌபதியையும் உடன்வந்த ராக்ஷஸர்கள் பாண்டவர்களையும் பிராம்மணர்களையும் தூக்கிச்சென்றதும், எல்லோரும் நரநாராயணாச்ரமத்தை அடைந்து ஸுகமாக வஸித்ததும்.)

யுதிஷ்டிரர், 'தர்மங்களை அறிந்தவனும் பலமுள்ளவனும் சூரனும் ராக்ஷஸச்ரேஷ்டனும் பக்தனும் (உன்னுடைய) ஔரஸ புத்ரனுமான கடோத்கசன் நம்மையும் (தனக்குத்) தாயான திரௌபதியையும் உடனே தூக்கிக்கொண்டு செல்லக்கடவன். பயங்கரமான பராக்கிரமமுள்ளவனே! பீம! உன் புதல்வனால் நான் பாஞ்சாலியுடன் சுமந்து செல்லப்பட்டுத் துன்பமில்லாமல் கந்தமாதனம் செல்வேன்' என்று சொன்னார். பலசாலியான பீமஸேனன் தமையனாருடைய வசனத்தைக்கேட்டுப் பலபராக்கிரமமிக்க கடோத்கசனை நினைத்தான். தர்மாத்மாவான கடோத்கசனும் பிதாவினால் நினைக்கப்பட்டவுடன், கைகளைக் குவித்துக்கொண்டு, அப்பொழுது வந்து சேர்ந்தான். பிறகு, மிக்க புஜபலமுள்ளவனும் ஸத்யமான விக்கிரமமுள்ளவனுமான கடோத்கசன் பாண்டவர்களையும் பிராம்மணர்களையும் அபிவாதனம் செய்து அவர்களால் புகழப்பட்டுப் பிதாவான பீமஸேனனைப் பார்த்து, 'உங்களால் நான் நினைக்கப்பட்டேன். நான் உங்கள் கட்டளையைச் செய்யக்கருதி விரைவாக வந்தேன். மிக்க தோள்வலியமைந்தவரே! கட்டளையிடுவீராக. நான் எல்லாவற்றையும் செய்வேன். இதில் ஐயமில்லை' என்று சொன்னான். பீமஸேனனே, அந்த வசனத்தைக்கேட்டு, ராக்ஷஸனைத் தழுவிக்கொண்டான். விருகோதரன், நினைத்தமாத்திரத்தில் வந்த அவனைநோக்கி, 'ஹிடிம்பையின் புதல்வனே! பிறரால் அவமதிக்கமுடியாத உன்தாயான இவள் களைப்படைந்திருக்கிறாள். அப்பா! ஆகாயத்தில் செல்பவனே! இஷ்டப்படி செல்கிறவனும் பலசாலியுமான நீ இவளைத் தூக்கிக்கொள். உனக்கு மங்களம். இவளைத் துன்புறுத்தாமல் தோளில் ஏற்றிக்கொண்டு எங்களுடைய மத்தியில் மெதுவான நடையுடன் ஆகாயமார்க்கமாகச் செல்லக்கடவாய்' என்று சொன்னான். கடோத்கசன், 'தர்மராஜரையும் தௌம்யரையும் கிருஷ்ணையையும் நகுலஸஹதேவர்களையும் நான் தனியே தூக்கிக்

கொண்டு செல்வதற்குத் திறமையுள்ளவன். இப்பொழுது ஸஹாயர்களுடனிருக்கையில் சொல்லவும் வேண்டுமா? தோஷமற்றவரே! ஆகாயத்தில் செல்பவர்களும் நினைத்தவண்ணம் உருவமெடுப்பவர்களும் சூரர்களுமான நூற்றுக்கணக்கான ராக்ஷஸர்கள் சேர்ந்து பிராம்மணர்களோடுகூட உங்களனைவரையும் சுமந்து செல்லுவார்கள். நான் த்ருபதராஜருடைய புதல்வியை எடுத்துக் கொண்டு மெள்ளமெள்ளச் செல்வேன்' என்று சொன்னான். அந்தக் கடோத்கசன் இவ்வண்ணமுரைத்து, பிறகு, பாண்டவர்களுடைய மத்தியை அடைந்து கிருஷ்ணையைச் சுமந்துசென்றான். மற்றவர்களும் பாண்டவர்களைச் சுமந்துசென்றார்கள். நிகரற்ற தேஜஸுள்ளவரான அந்த லோமசர் தம்முடைய ப்ரபாவத்தினாலேயே இரண்டாவது சூரியன்போல ஸித்தர்கள் செல்லும் வழியினால் சென்றார். பயங்கரமான பராக்கிரமமுள்ள ராக்ஷஸர்கள் கடோத்கசனுடைய கட்டளையினால் அந்தப்பிராம்மணர்களனைவரையும் தூக்கிக்கொண்டு போனார்கள். அவர்கள் இவ்விதம் மிக்க அழகுள்ள காடுகளையும் உத்யானவனங்களையும் பார்க்கின்றவர்களாக விசாலமான பதரியைக் குறித்துச் சென்றார்கள். வீரர்களான அந்தப் பாண்டவர்கள் விரைவாகச் செல்பவர்களும் மிக்க வேகமுள்ளவர்களுமான அந்த ராக்ஷஸர்களால் சுமக்கப்பட்டு, நெடுந்தூரமுள்ளவழியைச் சிறிதுதூரமுள்ளவழிபோல விரைவாகத் தாண்டிச்சென்றார்கள். பாண்டவர்கள் மிலேச்ச ஜனங்களால் நிரம்பினவைகளும் பலவித ரத்தினச்சுரங்கங்களோடு சேர்ந்தவைகளுமான தேசங்களையும், பலவித தாதுவர்க்கங்கள் நிரம்பினவையும் வித்யாதரர்களால் சூழப்பட்டவையும் வானரங்களோடும் கின்னரர்களோடும் சேர்ந்தவையும் அப்படியே நான்குபக்கங்களிலும் கிம்புருஷர்களாலும் கந்தர்வர்களாலும் மயில்களாலும் சமரமிருகங்களாலும் மான்களாலும் புள்ளிமான்களாலும் பன்றிகளாலும் கவயங்களாலும் எருமைகளாலும் சூழப்பட்டவையும் நதிகளுடைய வரிசைகளால் நிரம்பினவையும் பலவகைப் பறவைகளோடு சேர்ந்தவையும் பலவித மிருகங்களால் அடையப்பட்டவையும் சாரணர்களால் பிரகாசிக்கின்றவையும் மதத்துடன் கூடின பறவைகளோடும் மரங்களோடும் கூடியவையுமான குன்றுகளைக் கண்டார்கள். அவர்கள் ராக்ஷஸர்களின் தோள்களினின்று கீழேஇறங்கி அனேக தேசங்களையும் உத்தர குருதேசத்தையும் பலவிதஆச்சர்யங்களுள்ள

ளதும் பர்வதங்களுள் சிறந்ததுமான கைலமலையையும் கண்டார்கள். அதன் பக்கத்தில், அற்புதமான காட்சியுள்ளவைகளும் எப்பொழுதும் மலர்களும் பழங்களுமுள்ளவைகளுமான மரங்களோடு கூடியதான நரநாராயணாச்ரமத்தையும் கண்டார்கள். பாண்டவர்கள் அடிமரம் உருண்டிருப்பதும், மனத்தை மகிழ்விப்பதும், செழிப்புள்ளதும், இடைவிடாத நிழலுள்ளதும், சிறந்த அழகுள்ளதும், பளபளப்புள்ளவையும் நெருங்கியவையும் மெதுவானவையுமான இலைகளோடு கூடியதும், மங்களகரமானதும், விசாலமான கிளைகளுள்ளதும், விஸ்தாரமானதும், மிக்க காந்தியுள்ளதும், பருத்தவையும் அற்புதமானவையும் ருசியுள்ளவையும் தேனைப்பெருக்குகின்றவையுமான பழங்களால் எப்பொழுதும் மிக நிறைந்திருப்பதும், திவ்யமானதும், மஹரிஷிகளுடைய கூட்டங்களால் அடையப்பட்டதும், மதத்தினால் மிகக் களித்திருக்கிற பலவகைப் பக்ஷிக்கூட்டங்களோடு எப்பொழுதும் சேர்ந்திருப்பதும், ஈக்களும் கொசுகுகளுமில்லாததும் மிகுதியான கிழங்குகளும் கனிகளும் ஜலமுமுள்ளதும் பசும்புற்களால் நன்கு மறைக்கப்பட்டதும் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்டதும் நல்ல பூமிபாகத்தால் விளங்குகிறதும் [1] இயற்கையாகவே மிகவும் ஹிதமானதும் மங்களகரமானதும் குளிர்ந்ததும் தொடுதற்கினியதும் முட்களற்றதுமான [2] இடத்தில் உண்டாயிருப்பதுமான அந்தப் [3] பதரீவ்ருக்ஷத்தையும் கண்டார்கள். பிறகு, மகாத்மாக்களான பாண்டவர்கள் அனைவரும் அந்தப் பதரியை அடைந்து அந்தப் பிராம்மணஶ்ரேஷ்டர்களோடுகூட ராக்ஷஸர்களுடைய தோள்களிலிருந்து மெதுவாக இறங்கினார்கள். அரசரே! பிறகு, பாண்டவர்கள் பிராம்மணஶ்ரேஷ்டர்களுடன் சேர்ந்து [4] புண்யமானதும் நரநாராயணர்களால் அடையப்பட்டதும் இருளில்லாததும் பாவத்தைப் போக்குகின்றதும் ஸூர்யகிரணங்களால் தொடப்படாததும் பசி, தாகம், சீதம், உஷ்ணம் ஆகிய தோஷங்களால் விடுபட்டதும் சோகத்தைப் போக்குவதும் மஹரிஷிகளின் கூட்டங்களால் நெருங்கியதும் [5] ப்ரம்மதேஜஸோடு கூடியதும் தர்மத்தினின்று விலகின மனிதர்களால் செல்லமுடியாததும் பலிகளாலும்

1 வேறு பாடம். 2 இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

3 இலந்தை மரம். 4 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

5 'வேதங்களாலுண்டான பெருமையுள்ளதும்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

ஹோமங்களாலும் அர்ச்சிக்கப்பட்டதும் அத்புதமானதும் நன்கு பெருக்கி மெழுகி இருப்பதும் திவ்யமான புஷ்பபலிகளால் எங்கும் விளங்குகின்றதும் விசாலமான அக்னிகிருஹங்களாலும் மங்களகர மான ஸ்ருக்கு முதலிய கருவிகளாலும் நிறைக்கப்பட்டதும் பெரிய நீர்க்குடங்களாலும் உறுதியான உறிகளாலும் விளங்குகின்றதும் எல்லாப் பிராணிகளுக்கும் ரக்ஷகமாக இருக்கின்றதும் வேத கோஷத்தால் முழக்கமுள்ளதாகச் செய்யப்பட்டதும் தெய்வத் தன்மை பொருந்தியதும் அடையத்தக்கதும் ஶ்ரமத்தைப் போக்கு கிறதும் லக்ஷ்மீகரமானதும் இப்படிப்பட்டதென்று குறித்துக் காட்ட முடியாததும் தேவஶ்ரேஷ்டர்களால் விளங்குகின்றதும் பழங்களையும் கிழங்குகளையும் பக்ஷிக்கின்றவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களும் அழகிய மான்தோலுடுத்தவர்களும் ஸூர்ய னுக்கும் அக்னிக்கும் ஸமானமாக இருப்பவர்களும் தவத்தினால் ஆத்மாவை அறிந்தவர்களுமான மஹரிஷிகளுடனும் மோக்ஷத்தில் கருத்துடையவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களுமான ஸன்யாஸிகளுடனும் பிரம்மபாவத்தை அடைந்தவர்களும் மகா மகிமையுடையவர்களுமான பிரம்மவாதிகளுடனும் கூடியதுமான அந்த ஆஶ்ரமத்தைக் கண்டார்கள். மிக்க தேஜஸுள்ளவரும் இந்திரியங்களை அடக்கினவரும் சுத்தியுள்ளவரும் புத்திமானும் தர்மபுத்ரருமான அந்த யுதிஷ்டிரர் பிராதாக்களுடன்கூட அந்த ரிஷிகளை அடைந்தார். திவ்யஜ்ஞானத்துடன் கூடினவர்களும் தேவலோகத்தவர்களுமான அந்தத் தேவமஹரிஷிகள், யுதிஷ்டிரர் வந்ததைப்பார்த்து மிக்க மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டழைத்தார் கள். வேதாத்தியயனத்தில் மிக்க பற்றுள்ளவர்களும் அக்னிபோன்ற வர்களுமான அந்த ரிஷிகள் மகிழ்ச்சியுடன் ஆசீர்வாதங்களைச் செய்துகொண்டு விதிப்படி அவருக்கு உபசாரணை செய்தார்கள். பரிசுத்தமான ஜலத்தையும் புஷ்பங்களையும் கிழங்குகளையும் பழங் களையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். பிறகு, அந்த மஹரிஷி களால் பிரியத்துடன் செய்யப்பட்ட உபசாரணையைத் தர்மராஜ ரான யுதிஷ்டிரர் அடக்கத்துடன் பெற்றுக்கொண்டார். தோஷ மற்றவரே! யுதிஷ்டிரர் கிருஷ்ணையுடனும் தம்பிமார்களுடனும் வேதவேதாங்கங்களின் கரைகண்டவர்களான பிராம்மணர்களுட னும் பூஜிக்கப்பட்டு மகிழ்ந்து இந்திரனுடைய மாளிகைபோன்ற தும் திவ்யவாஸனையுள்ளதும் மனத்தை மகிழ்விப்பதும் ஸ்வர்க்கம் போன்றதும் புண்யமானதும் காந்தியுடன்கூடியதுமான அந்த ஆஶ்

ரமத்தில் பிரவேசித்தார். தர்மாத்மாவான அந்த யுதிஷ்டிரர் ஸகோதரர்களுடன் அங்கே தேனைப் பெருக்குகின்ற பழங்களுள்ளதும் பிரம்மரிஷிகளுடைய கூட்டங்களால் வஸிக்கப்பெற்றதுமான அந்தப் பதரியை அடைந்து அந்த இடத்தில் தேவர்களாலும் தேவரிஷிகளாலும் பூஜிக்கப்பட்டதும் கங்கையினால் பிரகாசிக்கின்றதுமான நரநாராயணர்களுடைய ஸ்தானத்தைப் பார்த்தார். அப்பொழுது மகாத்மாக்களான அவர்கள் அந்த இடத்தில் பலவகைப் பறவைக்கூட்டங்களுள்ளதும் பொன்மயமான சிகரங்களுள்ளதுமான மைநாகத்தையும் மத்தியில் மங்களகரமான பிந்துஸரஸையும் பார்த்துப் பிரியத்துடன் கூடியவர்களாக மகிழ்ந்திருந்தார்கள். மஹாத்மாக்களான பாண்டவர்கள், அங்கே நல்ல துறைகளுள்ளதும் குளிர்ந்த மாசற்ற ஜலமுள்ளதும் மங்களத்தை உண்டுபண்ணுகிறதும் ரத்தினங்களாலும் பவளங்களாலும் கட்டிய படித்துறைகளுள்ளதும் பக்கங்களில் மரங்களால் விளங்குகின்றதும் தேவலோகத்து மலர்களால் நிரம்பியதும் மனத்துக்கு மகிழ்ச்சியைப் பெருக்குவதுமான பாகீரதியையும் பார்க்கின்றவர்களாகி அங்கே மகிழ்ந்தார்கள். குந்தீபுத்ரர்கள் மிக்க பரிசுத்தியை அடைந்து, தேவர்களாலும் ரிஷிகளாலும் அடையப்பட்டதும் அடைதற்கு மிக அரியதுமான அந்த இடத்தில் பாகீரதியின் புண்ய தீர்த்தத்தினால் பித்ருக்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் திருப்தியடையச் செய்தார்கள். வீரர்களும் புருஷஸ்ரேஷ்டர்களுமான அந்தப்பாண்டவர்கள் அங்கே தர்ப்பணம் செய்துகொண்டும் ஜபித்துக்கொண்டும் பிராம்மணர்களோடு கூட வஸித்தார்கள். அந்த இடத்தில் தேவர்களின் ஒளிபோன்ற ஒளிபொருந்தியவர்களும் புருஷஸ்ரேஷ்டர்களுமான பாண்டவர்கள் கிருஷ்ணையின் பலவித விளையாட்டுக்களைப் பார்ப்பவர்களாகி மகிழ்ந்தார்கள்.

நூற்று நாற்பத்தெட்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பாஞ்சாலி காற்றினால் அடித்துவரப்பட்ட அத்புதமான ஒரு ஸௌகந்திக மலரைப் பார்த்து அதுபோன்ற பல மலர்களை விரும்பியதும், பீமன் அவைகளைக் கொண்டுவரப் புறப்பட்டதும், அவனுக்கு வழியில் ஹனுமானுடன் ஸம்வாதமும்.)

புருஷஸ்ரேஷ்டர்களும் மிக்க பரிசுத்தியை அடைந்தவர்களும்வீரர்களுமான அந்தப் பாண்டவர்கள், அழகியதும் எல்லாப்

பிராணிகளுடைய மனத்தையும் மகிழ்விப்பதுமான அந்தச் சிறந்த கானகத்தில், விளையாடுகின்றவர்களாகவும் மகிழ்கின்றவர்களாக வும், தனஞ்சயனைப் பார்க்கும் விருப்பத்தினால் ஆறு தினம் வஸித் தார்கள். பர்வதமானது, மலர்ந்திருக்கின்ற மலர்களுள்ளவைகளும் பழங்களுடைய பாரத்தால் வளைக்கப்பட்டவைகளும் ஆண் குயில் களுடைய கூட்டங்களால் நிரம்பியவைகளும் பளபளப்பான இலை களுள்ளவைகளும் நெருங்கியவைகளும் குளிர்ந்த நிழலுள்ளவை களும் மனத்தை மகிழ்விப்பவைகளுமான மரங்களால் விளங்குவ தாகவும் ரமணீயமாகவுமிருந்தது. பாண்டவர்கள் அங்கே பலவித மானவைகளும் தெளிந்த ஜலமுள்ளவைகளும் உத்பலங்களுடன் கூடின தாமரை மலர்களால் எங்கும் பிரகாசிக்கின்றவைகளும் அழகிய தோற்றமுள்ளவைகளுமான தடாகங்களைப் பார்த்து மகிழ்ந்தார்கள். அந்த இடத்தில் நல்ல வாஸனையுள்ளதும் இனிய பரிசமுள்ளதுமான காற்றானது, கிருஷ்ணையுடனும் சிறந்த பிராம் மணர்களுடனுமிருக்கும் பாண்டவர்களனைவரையும் ஸந்தோஷ மடையச் செய்துகொண்டு வீசியது. பிறகு, வடகிழக்கில் வீசுகின்ற காற்றானது, ஆயிரம் இதழுள்ளதும் சூரியனைப்போலப் பிரகாசிக்கிற தும் திவ்யமானதுமான ஒரு தாமரை மலரைத் தற்செயலாகக் கொண்டுவந்தது. பாஞ்சாலியானவள், திவ்யமான மணம்பொருந் தியதும் மனத்தை மகிழச்செய்கின்றதும் காற்றினால் கொண்டுவரப் பட்டதும் பூமியில் விழுந்திருப்பதும் சுத்தமானதுமான அந்தத் தாமரைமலரைப் பார்த்தாள். அரசரே! கல்யாணியான அவள் மங் களகரமானதும் தன்னிலும் சிறந்ததில்லாததுமான அந்த [1] ஸௌ கந்திக மலரை அடைந்து மிகமகிழ்ந்து உடனே பீமஸேனனைப்பார் த்து, 'பீமஸேனரே! திவ்யமானதும் மிக அழகியதும் ஸர்வோத்தம மாக இருப்பதும் நறுமணமும் வடிவமும் பொருந்தியதும் என் மனத்தை மகிழ்விப்பதுமான இந்தமலரைப் பார்ப்பீராக. பகை வரை வாட்டுபவரே! இதனைத் தர்மராஜருக்குக் கொடுப்பேன். இதே ஜாதியைச்சேர்ந்த இன்னும் பல புஷ்பங்களையும் பறித்துக் கொண்டு வாரும், அவையோ காம்யகவனத்திலுள்ள நமது ஆச்ர மத்தில் எனது பிரியத்துக்கு ஆகும். பார்த்தரே! நான் உமக்கு ப்ரியமானவளாயிருந்தால் இந்தமலர்களை மிகுதியாகக் கொண்டு வாரும். நான் அவைகளைக் காம்யகவனத்திலுள்ள நம்மாச்ரமத் திற்குக் கொண்டுபோக விரும்புகிறேன்' என்று கூறினள். இக

1 'ஒருவகைத்தாமரைமலர்' என்பது பழையவுரை.

மூப்படாதவளான பாஞ்சாலியானவள் பீமஸேனனைப்பார்த்து இவ்வண்ணமுரைத்து அப்பொழுது அந்தமலரை எடுத்துக் கொண்டு தர்மராஜரிடம் சென்றாள். புருஷச்ரேஷ்டனும் மகாபல சாலியுமான அந்தப் பீமன் மனைவியினுடைய கருத்தை அறிந்து காதலியான அவளுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பிப் புறப்பட்டான். வேறு மலர்களையும் கொண்டுவரக்கருதிய அவன், பின்புறம் பொன்னாலலங்கரிக்கப்பெற்ற வில்லையும் ஸர்ப்பம் போன்ற அம்புகளையும் எடுத்துக்கொண்டு, மலரைக் கொண்டுவந்த காற்றையே நோக்கி, கோபம்மூண்ட சிங்கம்போலவும் மதம்பெருகுகின்ற யானைபோலவும் விரைவாகச் சென்றான். பெரிய அம்புகளையும் வில்லையும் தரித்த பீமஸேனனை எல்லாப்பிராணிகளும் பார்த்தன. வாயுகுமாரனான பார்த்தனை வாட்டமாவது வருத்தமாவது பயமாவது கலக்கமாவது ஒருபொழுதும் அணுகவில்லை. பலமுள்ளவனும் தன் புஜபலத்தையே அடுத்தவனுமான அந்தப் பீமன் திரௌபதிக்குப் பிரியத்தைச்செய்ய விரும்பி அச்சமும் மதிமயக்கமுமில்லாதவனாகி மலையின்மீது ஏறினான். பகைவரைக் கொல்பவனான அந்தப்பீமன் மரங்களாலும் கொடிகளாலும் புதர்களாலும் மூடப்பட்டதும் கருமையான கல்தரைகளுள்ளதும் கின்னரர்களால் ஸஞ்சரிக்கப்பட்டதும் மங்களகரமானதும் பல நிறங்களுள்ளவையான தாதுக்களாலும் மரங்களாலும் மிருகங்களாலும் பறவைகளாலும் விசித்ரமானதும் எல்லாப் பூஷணங்களும் நிரம்பின மேலேதூக்கப்பட்ட பூமிதேவியின் கைபோன்றதுமான மலையில் ஸஞ்சரித்தான். அளவுகடந்த ஆற்றலுள்ளவனும் மிக்க தேஜஸுள்ளவனுமான அவன், எல்லாருதுக்களின் புஷ்பமுதலியவற்றாலும் ரமணீயமான கந்தமாதன மலையின் சரிவுகளில் பார்வை பற்றியவனாகவும், பல அபிப்ராயங்களை மனத்தினால் அடிக்கடி நினைக்கின்றவனாகவும், ஆண்குயில்களின் சப்தங்களிலும் வண்டுகளால் செய்யப்பட்ட ரீங்காரங்களிலும் செவிகளையும் உள்ளத்தையும் கண்களையும் கட்டிச் செலுத்துபவனாகவும், எல்லா ருதுக்களிலுமுண்டாகும் மலர்களினின்று உண்டாகிற அபரிமிதமான நறுமணத்தைக்காட்டில் மதம்கொண்டயானைபோல முகர்கிறவனாகவும், தடையற்றவனாகவும் சென்றான். பகைவரையடக்குபவனான அவன், மிகப் பரிசுத்தமானதும் பலவகை மலர்களின் வாஸனையுள்ளதும் தந்தையின் தொடுகைபோலக் குளிர்ந்ததுமான கந்தமாதனபர்வதத்தின் காற்றினால் வீசப்படுகின்றவனும், தந்தையான வாயுவினால்

களையாற்றப்படுகின்றவனும், மயிர் புளகித்தவனும், பொன்மையும் கருமையும் வெண்மையுமான மாசற்ற தாதுவ்கைகளால் பூசப்பட்ட ஏழிலைம்பாலையிலைகளால், விரல்களால் பூசப்படுவது போல, பூசப்பட்டவனுமாகி, இயக்கர்கள் கந்தர்வர்கள் தேவர்கள் பிரம்ம ரிஷிகள் ஆகிய இவர்களின் கூட்டங்களாலடையப்பட்டதும், பக்கங்களில் படிந்திருக்கிற மேகங்களால் சிறகுகளுடன் நர்த்தனம் செய்கிறது போன்றதும், பெருகிவருகின்ற அருவிநீர்களால் முத்துமாலைகளாலலங்கரிக்கப்பட்டது போன்றதும், அழகிய குகைகளும் கொடிப்பந்தல்களும் அருவிநீரும் சிறுகுகைகளுமுள்ளதும், அப்ஸரஸ்திரீகளுடைய சிலம்புகளின் சப்தங்களுடன் நன்கு கூத்தாடுகின்ற சிறந்த மயில்களுள்ளதும், திக்கஜங்கள் கொம்பு நுனிகளால் முட்டத் தேய்ந்திருக்கிற கற்களையுடைய கல் தரைகளுள்ளதும், கலக்கமுடியாத நதிகளினின்று பெருகிவருகின்ற ஜலத்தால் ஆடை நழுவுவது போலிருப்பதுமான மலையைப் புஷ்பங்களுக்காக அப்பொழுது நன்கு நோக்கினன். காந்தியுள்ள வாயுகுமாரனை கௌந்தேயன், வாயினல் புற்பிடிகளைக் கௌவிக்கொண்டிருப்பவைகளும் கவலையற்றவைகளும் ஸமீபத்தில் ஸஞ்சரிப்பவைகளும் பயத்தை அறியாதவைகளுமான மான்களால் குதூஹலத்துடன் பார்க்கப்பட்டவனுகவும், தன்னுடைய வேகத்தால் கொடிகளின் கூட்டங்களைப் பலவாறு புரட்டி விடுகின்றவனுகவும், விளையாட்டாகச் சென்றுன். தன் காதலியின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக முயன்றவனும், அழகிய கண்களுள்ளவனும், உயர்ந்தவனும், பொன்னின் நிறம்போன்ற நிறமுள்ளவனும், சிங்கம் போன்ற உடலுள்ளவனும், காளைப்பருவமுள்ளவனும், மதயானை போல நடப்பவனும், மதயானையின் வேகம்போன்ற வேகமுள்ளவனும், மதயானையின் கண்போலச் சிவந்த கண்களுள்ளவனும், (போரில்) மதயானைகளைத் தடுப்பவனும், காதலர்களின் பக்கத்திலுட்கார்ந்திருப்பவர்களும் பலவிதச் செய்கைகளிலிருந்து திரும்பினவர்களும் காணப்படாமலிருப்பவர்களுமான யக்ஷஸ்திரீகளாலும் கந்தர்வஸ்திரீகளாலும் பார்க்கப்பட்டவனும், ஸௌந்தர்யத்தினுடைய புதிய அவதாரமுமான பாண்டுநந்தனன் ரமணீயமான கந்தமாதன மலையின் பிரதேசங்களில் விளையாடுபவன்போல் ஸஞ்சரித்தான். வனத்தில் வஸிக்கிற திரௌபதிக்கு விருப்பத்தைச் செய்வதற்கு முயன்ற அவன், துர்யோதனனால் செய்யப்பட்ட பலவாறன

கிலேசங்களை நினைத்துக்கொண்டு சிந்திக்கலானான். [1] 'அர்ஜுனன் ஸ்வர்க்கம் சென்று நானும் புஷ்பங் காரணமாக (இங்கே) வந்து விட்டபொழுது, பூஜ்யரான யுதிஷ்டிரர் என்ன செய்வார்? நரஸ்ரேஷ்டரான யுதிஷ்டிரர் நேசத்தாலும் பலத்தில் நம்பிக்கை இல்லாமையாலும் நகுலனையும் ஸஹதேவனையும் [2] விடமாட்டாரென்பது திண்ணம். எவ்வாறு மலர்களை நான் விரைவில் அடைதல் கூடும்?' என்று ஆலோசித்துக்கொண்டு நரஸ்ரேஷ்டனான அவன் பக்ஷிராஜன்போல வேகத்துடன் புறப்பட்டான். திரௌபதியின் சொல்லையே வழியுணவாகக் கொண்டவனும் பூத்திருக்கிற மலைப் பிரதேசங்களில் உள்ளமும் கண்களும் பற்றினவனும் பாண்டு நந்தனனும் காற்றின் வேகம்போன்ற வேகமுள்ளவனும் [3] விருகோதரனும் மிக்க பலமுள்ளவனுமான பீமன், பர்வகாலங்களில் உத்பாதம்போலக் கால்களால் பூமியை நடுங்கச் செய்துகொண்டும் யானைக் கூட்டங்களைப் பயமடையச் செய்துகொண்டும் சிங்கங்களையும் புலிகளையும் மான்களையும் நொறுக்கிக்கொண்டும் பெரிய மரங்களை வேரோடு பறித்துக்கொண்டும் மார்பினால் முறித்துக்கொண்டும் வேகத்தால் [4] லதைகளையும் [5] வல்லிகளையும், மலையுச்சியில் மேலும் மேலும் ஏறக்கருதிய யானைபோல, பிய்த்துக்கொண்டும் மிக விரைவாகச் சென்றான். மிக்க பலசாலியான அந்தப் பீமஸேனன் மிக்க ஜலத்துக்கு ஆதாரமானதும் மின்னலுடன் கூடியதுமான மேகம்போலப் பேரொலியுடன் கர்ஜித்தான். புலிகள் பீமனுடைய அந்தப் பேரொலியால் எழுப்பப்பட்டுக் குகைகளை விட்டகன்றன; வனத்தில் வஸிக்கிற பிராணிகள் பதுங்கின; பறவைகள் பயந்து மேலே எழுந்தன; மான்களின் கூட்டங்கள் ஓடின; கரடிகளும் தாம் வஸித்த மரங்களை விட்டன; சிங்கங்கள் குகையை விட்டு வெளியில் சென்றன; பெரிய சிங்கங்கள் உறக்கம் கலைந்தன. காட்டில் ஸஞ்சரிக்கின்ற எருமைகள் வாயைப்பிளந்தன. பெண்யானைகளால் சூழப்பட்ட ஆண்யானைகள் அந்தச் சத்தத்தால் பயமுறுத்தப்பட்டு அந்தக் காட்டைவிட்டு வேறு பெரிய காட்டை அடைந்தன. பன்றிக்கூட்

1 வேறு பாடம். 2 நகுல ஸஹதேவர்களை, தன்னையும் அர்ஜுனனையும் தேடி வரும்படி அனுப்பவுமாட்டாமல் கவலைப்படுவார் என்பது.

3 பொருள் இரட்டித்தலால், 'பலீ' என்பது விடப்பட்டது.

4, 5 கொடிகளின் வகைகள்; தரையிற் படர்வனவென்றும் மரத்திற் படர்வனவென்றும் வேறுபாடு கொள்ளலாம்.

டங்களும் மான்கூட்டங்களும் காட்டில் ஸஞ்சரிக்கின்ற எருமைகளும் புலிகளும் நரிக்கூட்டங்களும் கவயங்களுடன்கூட உரக்கக் கத்தின. சக்ரவாகப்புட்களும் சாதகங்களும் அன்னங்களும் நீர்க்காக்கைகளும் வாத்துக்களும் கிளிகளும் புறுக்களும் அன்றில்களும் உணர்ச்சியற்றவைகளாகித் திசைகளை அடைந்தன. அப்படியே, கொழுப்புள்ளவைகளும் பெண்யானைகளால் உண்டுபண்ணப்பட்ட காமவிகாரத்தால் பீடிக்கப்பட்டவைகளுமான சில யானைகளும் சிங்கங்களும் புலிகளும் மிக்க கோபங்கொண்டு பீமஸேனனை எதிர்த்து ஓடிவந்தன. மிக்க பயங்கரமான அந்த மிருகங்கள் பயத்தினால் மனம் மிகக் கலங்கி மலஜலங்களை விட்டுக்கொண்டும் வாயைத் திறந்துகொண்டும் பயங்கரமான சத்தங்களைச் செய்தன. பிறகு, பிரபுவும் பலசாலியும் காந்தியுள்ளவனும் வாயுவின் புதல்வனுமான பீமன் கோபத்தால் தன் புஜபலத்தை அடுத்து யானையினால் மற்றயானைகளையும் சிங்கத்தால் சிங்கத்தையும் உள்ளங்கைஅறைகளால் மற்ற மிருகங்களையும் கொன்றான். பீமனால் பயங்கரமாக அடிக்கப்படுகின்ற அந்தச் சிங்கங்களும் புலிகளும் சிறுத்தைகளும் பயத்தினால் பயங்கரமான (ஒலியை) வெளியிட்டன; மலத்தையும் ஜலத்தையும் பெருக்கின. பிறகு, மகா பலசாலியும் ஸ்ரீமானுமான பாண்டுகுமாரன் அவைகளைத் துரத்திவிட்டுச் சத்தத்தால் திசைகளை நிரப்பிக்கொண்டு காட்டில் விரைவாகப் பிரவேசித்தான். பிறகு, புஜபலமிக்க அவன், கந்தமாதன பர்வதத்தின் தாழ்வரைகளில், மிகவும் அழகியதும் பல யோஜனை விஸ்தாரமுள்ளதுமான வாழைமரங்களடர்ந்த ஒரு சோலையைக் கண்டான். மகா பலசாலியான அவன், மதயானைபோலப் பலவகை மரங்களை முறித்துக்கொண்டு அந்த வாழைக்காட்டை அழிக்கக்கருதிச் சென்றான். பலசாலிகளுள் சிறந்தவனும் மிக்க பேரொளியுள்ளவனும் நரஸிம்மமூர்த்திபோலக் கர்வங்கொண்டவனுமான பீமன், பல பனை உயரமுள்ள வாழைமரங்களைப் பிடுங்கி ஒடித்து எல்லாப் பக்கங்களிலும் விரைவாக எறிந்தான். பிறகு, அந்த இடத்தில் பெரியவையும் மிகப் பலவுமான புள்ளிமான்கூட்டங்களும் யானைக்கூட்டங்களும் ஜலத்தை அடுத்துவசித்த எருமைகளும் (பீமனை) எதிர்த்து வந்தன. பிறகு, மகாபலசாலியும் ஒளிபொருந்தினவனுமான பாண்டுநந்தனன் அவைகளை விரைவாகத் துரத்திவிட்டுச் சிங்கநாதத்தால் திசைகளை நிரப்பிக்கொண்டு காட்டில் நுழைந்தான். பிறகு, அந்த (மிருகங்களின்) சத்தத்தாலும் பீமஸேனனுடைய சத்தத்தாலும்,

வேறுகாட்டிலிருக்கிற மிருகங்களும் பக்ஷிகளும் மிகப் பயந்தன. பிறகு, மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் அப்படிப்பட்ட கலக்கம் உண்டாகவே, ஜலத்தால் நனைந்த சிறகுகளுள்ள பறவைகள் ஆயிர மாயிரமாகக் கிளம்பிவந்தன. பரதஸ்ரேஷ்டனான பீமன் அந்த நீர்ப்பறவைக்கூட்டங்களைப் பார்த்து அவை (வந்த வழி)களையே நோக்கிச்சென்று, அழகியதும், பொன்மயமானவையும் இளங் காற்றினாலசைக்கப்பட்டவையும் ஒரு கரையிலிருந்து மறுகரை வரையில் பரவியிருப்பவையுமான வாழைக்கூட்டங்களால் வீசப் படுவதுபோன்றதும், கலக்கமுடியாததுமான மிகப்பெரிய ஒரு குளத்தைக் கண்டான். பலசாலியான அவன் ஏராளமான தாமரை மலர்களுள்ள அந்தக் குளத்தில் விரைவாக இறங்கிப் பெரிய யானைபோலத் தடையற்றவனாகி உத்ஸாஹமாக விளையாடி னான். அளவுகடந்த காந்தியுள்ளவனான பீமன், மதம் பெருகுகிற யானைபோல ஜலத்தைக் குழப்பிக்கொண்டு அழகாக விளையாடி விட்டுக் கரை ஏறினான். பிறகு, பாண்டவன் பலமரங்களுள்ள அந்தக் காட்டில் வேகத்தோடு நுழைந்தான்; நல்ல ஒலியுள்ள சங்கத்தையும் முழுவலிமையோடு ஊதினான். பலசாலியான பீமன் திசைகளை ஒலியிடச்செய்துகொண்டு தோள்களையும் தட்டினான். மலையின் குகைகள், அந்தச் சங்கத்தின் ஒலியினாலும் பீமஸேன னுடைய அட்டஹாஸத்தாலும் பயங்கரமான கைகளின் ஓசையினா லும் அலறுவனபோன்றன. இடியோசைபோன்ற அந்தத் தோள் தட்டுதலாகிய பேரொலியைக்கேட்டு மலைகளின் குகைகளில் உறங் கிக்கொண்டிருந்த சிங்கங்கள் பேரொலியை வெளியிட்டன. பாரதரே! சிங்கங்களின் தொனியினால் பயந்த யானைகளும் மலையை நிரப்பிய மிகப் பெரிய ஒலியை வெளியிட்டன. பிறகு, வானர ஸ்ரேஷ்டரும் தூங்கிக்கொண்டிருந்தவரும் வானரருமான அந்த ஹனுமான், பீமஸேனனை ப்ராதாவென்றறிந்து, 'இந்த வழியினால் (அவன்) போகக்கூடாது' என்றாலோசித்துப் பீமனுக்காக ஸ்வர்க் கம் செல்லும் வழியைத் தடுத்தார். வாழைச்சோலை நடுவிலிருக் கும் (அந்த) வானரர், பிராதாவான பீமனைப் பாதுகாப்பதற்காக அப்பொழுது, 'பாண்டவன் இந்த வழியில் சாபத்தையும் அவ மானத்தையும் அடையவேண்டாம்' என்று இவ்வாறு ஆலோ சித்து, வாழைமரச்சோலையினால் அலங்கரிக்கப்பட்ட ஒற்றை யடிப் பாதையில் அந்த வழியைத் தடுத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, பெரிய சரீரமுள்ள அநுமானென்னும் வானரர்

வாழைத்தோட்டத்தின் நடுவிலிருந்துகொண்டு நித்திரையின் வசத்தையடைந்து கொட்டாவி விட்டார். பெரிய வானரரான அவர் அந்தப் பேரொலியால் விழித்துக்கொண்டார். மிகப்பெரிதாகக் கொட்டாவிவிடுகின்ற அவர் உயர்த்து நடப்பட்ட இந்திரத்வஜம்போன்ற வாலை இடிபோன்ற ஓசையுள்ளதாம்படி (தரையில்) சுழற்றி அடித்தார். மலையானது, முக்காரம் போடுகிற எருது போல, அந்த அனுமானுடைய வாலினால் உண்டுபண்ணப்பட்ட ஓசைக்கு நல்ல குகைகளாகிற வாய்களால் எதிரொலியை எல்லாப் பக்கங்களிலும் வெளியிட்டது. அந்தப் பெரிய மலையும் வாலைச் சுழற்றி அடித்த ஒலியால் அசைக்கப்பட்டுக் கொடுமுடிகள் சுழல்வதாகி எல்லாப்பக்கங்களிலும் சிதறியது. அவருடைய அந்த வாலொலியானது மதயானைகளின் பேரொலியை உள்ளடக்கிப் பல வகையான தோற்றங்களுள்ள மலைவெளிகளில் பரவியது. அந்தப் பீமஸேனன் அவ்வொலியைக் கேட்டு மயிர்சிலிர்த்து, வாழைக்காட்டில் அவ்வொலி உண்டாகுமிடத்தைத் தேடிக்கொண்டுதிரிந்தான். பிறகு, மிக நீண்டகைகளுள்ள பீமன் அப்பொழுது வாழைக்காட்டின் நடுவில் பருத்த கற்பீடத்திலிருப்பவரும், மின்னல் மின்னியதுபோலப் பார்ப்பதற்கரியவரும், மின்னல் மின்னியதுபோலப் பொன்மை நிறமுள்ளவரும், மின்னல் மின்னியதுபோலக் கர்ஜிப்பவரும், மின்னல் மின்னியதுபோல அசைபவரும், பருத்தும் உருண்டுமிருக்கிற கழுத்தைக் கைகளாலமைந்த ஸ்வஸ்திகத்தின் மீது வைத்திருப்பவரும், சரீரம் மிகப் பருத்த தோள்கள் அமைந்திருத்தலால் நடுமெலிந்த இடையுள்ளவரும், நுனி சிறிது வளைந்ததும் நீண்ட உரோமங்களாலலங்கரிக்கப்பட்டதும் உயரக்கிளம்பியதும் கொடிமரம்போன்றதுமான வாலினால் விளங்குகிறவருமான வானராதிபதியைக் கண்டான். உதடுகள் குறுகியதும் நாவும் முகமும் சிவந்ததும் காதுகள் சிவந்ததும் புருவங்களசைவதும் கிரணங்களுள்ள சந்திரன்போன்றதும் வாயின் நடுவை அடைந்திருக்கிற வெண்மையான பற்களால் அலங்கரிக்கப்பட்டதும் (கேஸரமடர்ந்த) அசோக மலர்க்குவியல்போலக் கேஸர (=பிடரிமயிர்)க் குவியல் அடர்ந்திருப்பதுமான அவருடைய முகத்தையும் பார்த்தான். புத்திசாலியான பீமன், பொன்மயமான வாழைகளின் நடுவிலிருப்பவரும் அதிக காந்தியுள்ளவரும் பிரகாசிக்கின்ற சரீரத்தால் மிக்க ஜ்வாலையுள்ள நெருப்புப்போலிருப்பவரும் தேன்போலப் பிங்கல நிறமுள்ள கண்களால் பார்க்

இன்றவரும் பயமில்லாதவரும் பருத்த உடலுள்ளவரும் வலிமை மிக்கவரும் ஸ்வர்க்கமார்க்கத்தைத் தடுத்துக்கொண்டு இமய மலை போலிருப்பவருமான அந்த வானரஸ்ரேஷ்டரைக் கண்டான். நீண்ட கைகளுள்ளவனும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனும் பலசாலியுமான பீமன், அந்தப் பெரிய காட்டில் தனிமையாக இருக்கிற அவரைப் பார்த்து, பிறகு, விரைவாக அருகிற்சென்று, உக்கிரமானதும் இடிபோன்றதுமான சிங்கநாதத்தைச் செய்தான். பீமனுடைய அந்தச் சத்தத்தினால் மிருகங்களும் பக்ஷிகளும் பயந்தன. பிறகு, வலிமைமிக்க ஹனுமானும் கண்களைச் சிறிது திறந்து தேன்போலப் பிங்கலநிறமுள்ள கண்களால் அவனை அலக்ஷ்யமாகப் [1] பார்த்தார். பிறகு, வாயுகுமாரரும் காந்தியுள்ளவருமான ஹனுமான், அருகிலிருப்பவனும் சௌர்யமிக்கவனுமான அவனைப் புன்சிரிப்புடன் அழைத்து, 'ரோகத்துடன்கூடியவனும் ஸுகமாக உறங்கிக்கொண்டிருந்தவனுமான என்னை எதற்காக நீ எழுப்பினாய்? அறிவுள்ளவனான நீ பிராணிகளிடம் தயை பாராட்டவேண்டுமன்றோ? விலங்குப் பிறவியை அடைந்திருக்கிற நாங்கள் தர்மத்தை அறியோம். பகுத்தறிவுள்ள மனிதர்களோ பிராணிகளிடம் தயையைப் பாராட்டுகிறார்கள். உன்னைப்போன்ற புத்திமான்கள் கொடியவையும் மனமொழிமெய்களைக் கெடுப்பவையும் தர்மத்தையழிப்பவையுமான செய்கைகளில் எவ்வாறு பற்றுதல் வைக்கிறார்கள்? அல்பபுத்தியுடைமையாலும் பால்யத்தாலும் மிருகங்களைக் கொல்லுகிறாயாதலால், நீ தர்மத்தை அறியவில்லை; பெரியோர்களையும் அடுக்கவில்லை. சொல்; நீ யார்? மானிடத்தன்மையற்றதும் அப்படியே மனிதர்களில்லாததுமான இந்தக் காட்டுக்கு [2] எதற்காகவந்தாய்? புருஷஸ்ரேஷ்டனே! நீ இப்பொழுது எங்கே போகவேண்டும்? சொல். இந்த மலையானது இதற்குமேல் செல்லமுடியாதது; ஏறுவதற்கும் முடியாதது. வீரனே! ஸித்தமார்க்கத்தைத் தவிர இந்த இடத்துக்கு வேறுவழி இல்லை. இது தேவலோகத்திற்குப் போகிறவழி; எப்பொழுதும் மனிதர்களால் செல்லமுடியாதது. வீரனே! கருணையினால் நான் உன்னைத் தடுக்கிறேன். நான் சொல்வதைத் தெரிந்துகொள். பிரபுவே! இதற்குமேல் நீ செல்வது முடியாது; நம்பு. புருஷஸ்ரேஷ்டனே! இப்பொழுது இங்கே உன்வரவு எல்லாவிதத்தாலும் நல்வரவாகுக. நரஸ்ரேஷ்டனே! ஹிதமான என்சொல்லை

1 'த்ருஷ்ட்வா' என்பது மூலம்.   2 ஒரு சொல் விடப்பட்டது.

ஏற்றுக்கொள்வதானால் அம்ருதம்போன்ற இந்தப்பழங்களையும் கிழங்குகளையும் புசித்துவிட்டுத் திரும்பு. வீணாக வதத்தை நீ அடையவேண்டாம்' என்று சொன்னார்.

நூற்றுநாற்பத்தோன்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் அனுமானை விலகச் சொல்லியதும், அவர் தமக்குச் சக்தியில்லாமையால் தம் வாலைத்தூக்கி அப்பால் போட்டுச் செல்லும்படி பீமனுக்குச் சொல்லியதும், அவன் அதனை அசைக்கவு முடியாமல் அவருடைய வரலாற்றை வினவியதும், அவர் தம் வரலாற்றைக்கூறி ராமகதையைச் சொல்லத்தொடங்கியதும்.)

புத்திமானும் வானரேந்திரருமான அவருடைய இந்தவசனத்தைக் கேட்டு, அளவுபடாத பராக்கிரமமுள்ளவனும் வீரனுமான பீமஸேனன் அப்பொழுது கூறலானான். பீமன், 'நீர் யார்? எதற்காக வானர சரீரத்தை அடைந்திருக்கிறீர்? பிராம்மண வர்ணத்திற்கடுத்த வர்ணத்தானான க்ஷத்திரியன் உம்மை வினவுகிறான். (அவன்) குருபரம்பரையில் வந்தவன்; சந்திர வம்சத்திற்பிறந்தவன்; குந்தீதேவியினால் கர்ப்பத்தில் தாங்கப்பட்டவன்; பாண்டவன்; வாயுவின் புத்திரன்; பீமஸேனனென்று பிரஸித்திபெற்றவன்' என்று சொன்னான். வாயுபுத்திரரான அந்த அனுமான் பீமஸேனனுடைய அந்த வாக்கியத்தைப் புன்சிரிப்போடு ஏற்றுக்கொண்டு, வாயுபுத்திரனான அவனைப்பார்த்து, 'நான் ஒரு குரங்கு. உனக்கு இஷ்டப்படி வழியை விடமாட்டேன். போதும். திரும்பிச்செல். நீ அழிவை அடையாதே' என்று சொன்னார். பீமஸேனன், 'வானரமே! அழிவோ மற்றதோ உண்டாகட்டும். உன்னை நான் கேட்கவில்லை. வழியை விடு. எழுந்திரு. என்னிடத்தினின்று துன்பத்தை நீ அடையவேண்டாம்' என்று சொன்னான். அனுமான், 'எனக்கு எழுந்திருக்கச் சக்தி இல்லை. நான் முதுமையால் துன்புறுகிறேன். அவஸ்யம் போகவேண்டுமானால் என்னைத் தாண்டிச்செல்வாயாக' என்று சொன்னார். பீமன், 'நிர்க்குணரான பரமாத்மா உன்தேகத்தை வியாபித்துக்கொண்டிருக்கிறார். ஞானத்தாலறியத்தக்க அவரை நான் அவமதியேன்; தாண்டமாட்டேன்.

சராசரங்களைப் படைத்துப் பாதுகாப்பவரான அந்தப் பரமாத்மாவைச் சாஸ்திரங்களால் நான் அறியாமலிருந்தால் அனுமான் ஸமுத்திரத்தைத் தாண்டினதுபோல உன்னையும் மலையையும் தாண்டுவேன்' என்று சொன்னான். ஹனுமான், 'நரஸ்ரேஷ்டனே! கடலைத்தாண்டிய அந்த அனுமானென்பவன் யார்? நான் உன்னைக் கேட்கிறேன். முடியுமானால் சொல்' என்று சொன்னார். பீமன், 'வானரராஜரும் ராமபத்னியைத் தேடுவதற்காக நூறு யோஜனை அகலமுள்ள கடலை ஒரு பாய்ச்சலால் தாண்டியவரும் குணங்களால் புகழத்தக்கவரும் புத்தி, பராக்கிரமம், தேகபலம் ஆகிய இவைகளுடன் கூடியவரும் ராமாயணத்தில் மிகவும் புகழ்பெற்றவரும் ஸ்ரீமானுமான வானர ஸ்ரேஷ்டர் எனக்கு ப்ராதா. என்னுடையபிராதாவான அவர் மிக்க வீர்யமுள்ளவர். பலத்திலும் பராக்கிரமத்திலும் யுத்தத்திலும் 1 தேஜஸிலும் நான் அவருக்கு ஒப்பானவன். உன்னைச் சிக்ஷிப்பதில் நான் வல்லவன். ஒரு காரணத்தினால் இந்த இடத்திற்கு வந்தேன். எழுந்திரு. எனக்கு வழியைவிடு. இப்பொழுது என் ஆண்மையைப் பார். என்னுடைய கட்டளையைச் செய்யாவிடில் உன்னை யமலோகத்தை அடைவிப்பேன்' என்று சொன்னான். அனுமான் அவனைப் பலத்தால் அதிகமதங்கொண்டவனாகவும் கைகளின் வீர்யத்தினால் கர்வம் கொண்டவனாகவும் அறிந்து அவனை உள்ளத்தினால் பரிஹஸித்து, 'தோஷமற்றவனே! கோபந்தணிவாயாக. முதுமையால் எனக்கு எழுந்திருக்கச் சக்தி இல்லை. என்மீது கருணையினால் இந்தவாலை நகர்த்திவிட்டுச் செல்லக்கடவாய்' என்று சொன்னார்.

அனுமான் இவ்வாறு சொல்லியவுடன், தன்னுடைய புஜபலத்தால் கர்வங்கொண்ட பீமன் அவரை, 'வீர்யமும் பராக்கிரமுமில்லாதவர்' என்றும், 'வீர்யமும் பராக்கிரமுமற்ற இந்தக் குரங்கை இப்பொழுது இங்கேவேகத்தோடு வாலைப்பிடித்து யமலோகத்தை அடைவிக்கிறேன்' என்றும் மனத்தினால் நினைத்தான். பிறகு, பீமன் சிரித்துக்கொண்டு அந்தப் பெரிய வானருடைய வாலை அவமதிப்புடன் பிடித்தான்; (அதனை) அசைப்பதற்கும் முடியாதவனானான். மகா பலசாலியான பீமன் உயர்ந்து நிற்கிற இந்திராயுதம்போன்ற வாலை மறுபடியும் இரண்டு கைகளாலும் மேலே தூக்கினான்; இரு கைகளாலுங் கூடத் தூக்க முடியாதவனானான். பீமன் புருவங்கள் மேலேறினவனும் விழிபிதுங்கினவனும் புருவங்

1 'தேஜஸா' என்பது மூலம்.

கள் நெறிந்து சேர்ந்த முகமுள்ளவனும் உடல் வேர்த்தவனு மானுன்; அதனைத் தூக்குவதற்கும் இயலாதவனுனுன். பிறகு, ஸ்ரீமானுன பீமன் வாலைத் தூக்குவதில் முயன்றும் (முடியாமல்) அனுமானுடைய பக்கத்தை அடைந்து வெட்கத்தால் முகங்கவிழ்ந்து நின்றுன். குந்தீ புத்ரன், (அவரைத்) தண்டனிட்டுக் கை குவித்துக்கொண்டு, 'வானரோத்தமரே! கருணை புரிவீராக. என்னுடைய துடுக்கானசொல்லைப் பொறுக்கக்கடவீர். நீர் ஸித்தரா? அல்லது தேவரா? அல்லது கந்தர்வரா? அல்லது யக்ஷரா? நீர் யார்? என்னுல் வினவப்பட்ட நீர் சொல்லக்கடவீர். வானர உருவத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற நீர் யார்? மிக்கதைவன்மையுள்ளவரே! இது ரஹஸ்யமாயில்லாமல் நான் கேட்கத்தக்கதாகவுமிருந்தால் சொல்லவேண்டும். சிஷ்யன்போல் உம்மைக் கேட்கிறேன். குற்றமற்றவரே! உம்மைச் சரணமடைந்தவனுக இருக்கிறேன்' என்று சொன்னுன். அனுமான், 'பகைவர்களை அடக்குகிறவனே! பாண்டுநந்தன! என்னை அறிவதில் உனக்கு அவா இருத்தலால் முழுமையும் மிச்சமின்றி நீ கேள். தாமரையிதழ்போன்ற கண்களுள்ளவனே! நான், கேஸரி என்கிற வானரனுடைய பத்னியினிடத்தில் உலகங்களுக்கு ஆயுளான வாயுவுக்குப் பிறந்த ஹனுமானென்கிற பெயருள்ள வானரன். மிக்க பலசாலிகளான எல்லா வானரயூதபதிகளும், எல்லா வானரர்களுக்கும் அரசர்களான ஸூர்ய புத்திரனுன ஸுக்ரீவனையும் இந்திர புத்திரனுன வாலியையும் அடுத்திருந்தார்கள். பகைவரை வாட்டுபவனே! காற்றுக்கு நெருப்போடு நட்பு உண்டாவதுபோல எனக்கு ஸுக்ரீவனோடு நட்பு உண்டாயிற்று. பிறகு, ஸுக்ரீவன், ஏதோ ஒருகாரணத்தினுல் தமையனுன வாலியினுல் துரத்தப்பட்டு என்னுடன் ரிச்யமூகமலையில் நெடுங்காலம் வஸித்தான். பிறகு, விஷ்ணுவானவர் மானிட வடிவத்துடன் தசரதபுத்திரரும் வீரரும் மகாபலமுள்ளவருமான ராமராக (அவதரித்துப்) பூமியில் ஸஞ்சரித்தார். விற்பிடித்தவர்களுள் சிறந்தவரான அவர், பிதாவுக்குப் பிரியத்தைச் செய்யவிரும்பி, மனைவியுடனும் தம்பியுடனும் வில்லைக் கையிலேந்தித் தண்டகாரண்யத்தை அடைந்தார். குற்றமற்றவனே! ராக்ஷஸராஜனும் பலசாலியும் துராத்மாவுமான ராவணன் அப்பொழுது பொன்போன்றவையும் ரத்னம்போன்றவையுமான புள்ளிகளால் பல நிறமுள்ள மான் வடிவங்கொண்ட மாரீசனென்கிற ராக்ஷஸனுல் அந்த நரஸ்ரேஷ்டரை வஞ்சிக்கச் செய்து

அவருடைய பார்யையைக் கபடத்தால் ஜனஸ்தானத்தினின்று வலிந்து கவர்ந்தான்.

நூற்றைம்பதாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(அனுமான் ராமகதைமுழுமையும் பீமனுக்குச் சொல்லியது.)

மனைவி கவரப்பட்ட அந்த ராகவர் தம்பியுடன் மனைவியைத் தேடிக்கொண்டு மலைச்சிகரத்தில் வானரச்ரேஷ்டனான ஸுக்ரீவனைக் கண்டார். மகாத்மாவான அந்த ராகவருக்கு அவனோடு நட்பு உண்டாயிற்று. அவர் வாலியைக்கொன்று ராஜ்யத்தில் ஸுக்ரீவனை அமர்த்தினார். அந்த ஸுக்ரீவன் ராஜ்யத்தை அடைந்து ஸீதையைத் தேடுவதில் நூறுநூறாகவும் ஆயிரமாயிரமாகவும் வானரர்களை அனுப்பினான். நரோத்தமனே! புஜபலமுள்ளவனே! பிறகு, நான் கோடிக்கணக்கான வானரர்களுடன் ஸீதையைத் தேடிக்கொண்டு தென்திசையைக் குறித்துக் கிளம்பினேன். பிறகு, மிக்க வலிமைபொருந்திய ஸம்பாதி என்கிற கழுகு ஸீதை ராவணனுடைய வீட்டில் இருப்பதாக அவளுடைய வரலாற்றைச் சொல்லிற்று. பிறகு, நான் எளிதில் காரியங்களைச் செய்யவல்ல ராமருடைய கார்யஸித்தியின்பொருட்டு நூறுயோஜனை விஸ்தாரமுள்ள கடலை விரைவாகத் தாண்டினேன். பரதச்ரேஷ்டனே! நான் என்னுடைய வீர்யத்தினால் முதலைகளுக்கிருப்பிடமான ஸமுத்திரத்தைத் தாண்டி ராவணனுடைய வீட்டில் தேவகன்னிகைபோன்ற ஜனகராஜன் புதல்வியான ஸீதையைக் கண்டேன். நான், ராகவருடைய காதலியும் விதேஹராஜ குமாரியுமான அந்தத்தேவியை அணுகி (ப் பேசியபின்), மாளிகைகளும் பிராகாரங்களும் வாசல்களுமுள்ள லங்கையை மிகுதியின்றி எரித்து, இந்த ராமருடைய பெயரை அவ்விடத்தில் பிரகாசமடையச் செய்து, மறுபடியும் திரும்பிவந்தேன். தாமரைமலர்போன்ற கண்களையுடையவரான ராமர், என் வாக்கியத்தைக்கேட்டுச் செய்யவேண்டியதை நிச்சயித்துப் பிறரால் இதற்குமுன் கட்டப்படாத அணையைப் பெருங்கடலில் விரைவாகக் கட்டி வானரக்கூட்டங்களால் சூழப்பட்டவராக அந்தப் பெருங் கடலைத் தாண்டினார். பிறகு, ராமர் எல்லா அரக்கர்களையும் கொன்று ராக்ஷஸக் கூட்டங்

களையுடையவனும் உலகங்களை அலறச்செய்பவனும் ராக்ஷஸ ராஜனுமான ராவணனையும் தம்பியோடும் புத்திரர்களோடும் பந்துக்களோடும் கொன்று, தர்மத்தை அனுஷ்டிப்பவரும் (தம்மிடம்) பக்தியுள்ளவரும் [1] அன்புடன் அனுஸரிப்பவர்களிடம் அன்புள்ளவருமான விபீஷணரை ராக்ஷஸர்களுக்கரசராக லங்கா ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து, பின்பு, ஸீதையை நஷ்டமாய்ப் போன வேதத்தை மீட்டுவந்ததுபோல மீட்டுவந்தார். பிறகு, புகழ்மிக்கவரும் ரகுநந்தனரும் பிரபுவுமான ராமர் பதிவிரதையான அந்தப் பத்னியுடன்கூடவே அங்கிருந்து பகைவரால் எதிர்த்துப் போர்புரியமுடியாத அயோத்தியென்னும் தமது நகரத்தை அடைந்து அதில் வஸித்தார். பிறகு, அரசர்களுள் மிகச்சிறந்தவரான ராமர் ராஜ்யத்தில் நிலைபெறுத்தப்பட்டார். தாமரைமலர்போன்ற கண்களையுடையவரான அந்த ராமரை, 'பகைவரை அழிப்பவரே! ராமரே! உம்முடைய இந்தக் கதையானது உலகங்களில் எவ்வளவு காலமிருக்குமோ அவ்வளவுகாலம்வரையில் நான் உயிர்வாழக்கடவேன்' என்று நான் வரத்தை வேண்டினேன். அவரும், 'அப்படியே ஆகட்டும்' என்று சொன்னார். பகைவர்களை அடக்குபவனே! பீம! ஸீதையின் அருளாலும், திவ்யமான போகங்கள் இவ்விடத்திலிருக்கிற என்னை நான் விரும்பியபடி எப்பொழுதும் வந்தடைகின்றனவன்றோ? ராமர் பதினோராயிர வருஷம் அரசு செலுத்தினார்; பிறகு, தமதிருப்பிடமான வைகுண்டத்தை அடைந்தார். ஐயா! தோஷமற்றவனே! அந்த ஸீதையின் அருளால் இந்த இடத்தில் எப்பொழுதும் அப்ஸரஸ்களும் கந்தர்வர்களும் அந்த வீரருடைய சரித்திரத்தைப் பாடி என்னை மகிழ்விக்கிறார்கள். குருநந்தன! இந்த மார்க்கமானது மனிதர்களால் செல்லத்தகாதது. பாரத! அதனால், நான் இந்த வழியினால் செல்லுகிற உன்னை யக்ஷனோ ராக்ஷஸனோ ஒருவனும் அவமதிக்கக்கூடாதென்றும் சபிக்கக்கூடாதென்றும் தேவர்களாலடையப்படும் இந்த உனது வழியைத் தடுத்தேன். இது தேவலோகம் செல்வதான தேவர்களின் மார்க்கம். இதில் மனிதர்கள் செல்வதில்லை. நீ தேடிவந்த குளமும் இங்கே இருக்கிறது' என்று கூறினார்.

---

1 வேறு பாடம்.

நூற்றைம்பத்தோராவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(கடலைத்தாண்டும்போது எடுத்த பெரிய உருவத்தைக் காட்டும்படி பீமன் ஹனுமானை வேண்டினதும், அவர் அக்காலத்து மனிதர்கள் முற்காலத்துக்கேற்ற அந்த உருவத்தைப் பார்க்க முடியாதென் பதைச் சொல்லி யுக தர்மங்களைக் கூறியதும்.)

பிறகு, இவ்விதம் சொல்லக் கேட்ட நீண்ட கைகளையுடைய பிரதாபசாலியான பீமன் மனம் களித்து அன்புடன் பிராதாவும் வானராதிபதியுமான ஹனுமானை நமஸ்கரித்து, 'நான் [1] தமையனு ரான (உம்மைக்) கண்டேனாதலால் என்னைக் காட்டிலும் அதிக பாக்கியமுள்ளவன் இல்லை. உமது தரிசனத்தினால் எனக்கு (நீர் செய்த) அனுக்ரகம் மிகப்பெரிது. (உண்டான) திருப்தியும் மிகப் பெரிது. ஆயினும், ஆர்யரான நீர் எனது விருப்ப மான இதனைச் செய்ய விரும்புகிறேன். வீரரே! உமக்கு மகராலயமான ஸாகரத்தைத் தாண்டும்பொழுதிருந்த ஒப்பில்லாத உருவத்தை நான் பார்க்க விரும்புகிறேன். இவ்வாறு செய்தால் நான் ஸந்தோஷமுள்ளவனாவேன்; உம்முடைய சொல்லையும் நம்புவேன்' என்று அழகிய வாக்கினால் கூறினான். இவ்வாறு கூறப்பட்டவரும் தேஜஸ்வியுமான அந்த அனுமான் சிரித்துக் கொண்டு, 'அந்த உருவமானது உன்னாலும் மற்ற எவனாலும் பார்க்கமுடியாதது. ஏனெனில், அப்பொழுது காலநிலைமை வேறாக இருந்தது; அது இப்பொழுது இல்லை. நரஸ்ரேஷ்டனே! ஆகை யால், இப்பொழுது என்னுடைய (அந்த) ரூபமானது பார்க்கமுடி யாதது. கிருதயுகத்தில் காலம் வேறு; திரேதையில் வேறு; துவா பரத்திலும் வேறு. இது (பொருள்களின் சக்தி முதலியவற்றைக்) குறைக்கிற காலம். அந்த ரூபம் இப்பொழுது எனக்கு இல்லை. யுகந்தோறும் பொருள்கள் அனுஸரிப்பதுபோல், பூமியும் நதி களும் மரங்களும் மலைகளும் ஸித்தர்களும் தேவர்களும் மஹரிஷி களும் காலத்தை அனுஸரிக்கிறார்கள். புருஷஸ்ரேஷ்டனே! மனி தர்களுடைய பலமும் தேகமும் பிரபாவமும் அந்த அந்தக் காலத் தை அடைந்து குறைவடைகின்றன; வளர்ச்சியையுமடைகின்றன. குருகுலத்தைத் தாங்குபவனே! ஆதலால், அந்த ரூபத்தைப்

---

1 'ஆர்யம்' என்பது மூலம்.

பார்ப்பதில் ஆசைவேண்டாம். யுகத்தை நான் அனுஸரிக்கிறேன். காலமானது மீறிச்செல்ல முடியாததன்றோ?' என்று சொன்னார். பீமன், 'யுகங்களின் (கால) அளவையும் ஒவ்வொரு யுகத்திலு முள்ள ஆசாரத்தையும் அறம்பொருளின்பங்களின் உண்மைகளை யும் இருவினைகளையும் ஆற்றலையும் பிறப்பையும் இறப்பையும் சொல்லக்கடவீர்' என்று வினவினன்.

ஹனுமான், 'எந்த யுகத்தில் தர்மம் நிலைபெற்றிருந்ததோ அந்த க்ருதமென்னும் யுகமானது சிறந்தது. அந்த உத்தம யுகத்தில் (செய்ய வேண்டிய நல்வினைகளெல்லாம்) செய்யப் பட்டே வந்தன; செய்யப்பட வேண்டியவையாக இல்லை. அந்த யுகத்தில் தர்மங்கள் வாடவில்லை; ப்ரஜைகளும் குறைய வில்லை; அதனால், (அது) க்ருதயுகமென்னப்பட்டது. அது காலக்ரமத்தில் குறைவை அடைந்தது. ஐயா! க்ருத யுகத் தில் தேவர்களும் அசுரர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் பன்னகர்களும் இருக்கவில்லை. அக்காலத்தில் வாங்குவதும் விற்பதுமில்லை; ஸாம ருக் யஜுர் வேதங்கள் இல்லை; (பயிரிடுதல் முதலிய) மனிதருக்குரிய உழைப்பும் இல்லை. அந்த யுகத்தில் நினைத்த மாத்திரத்திலேயே பயன் கைகூடுதலைப் பெற் றூர்கள். ஸந்யாஸம் (=பற்றை விடுவது) ஒன்றே தர்மமாயிருந்தது. அந்த யுகத்தில் ரோகங்களில்லை; இந்திரியங்களுக்குச் (சக்தி) குறைவதில்லை; அஸூயையும் அழுகையும் அகங்காரமும் கபட மும் சண்டையும் இல்லை; சோம்பல் ஏது; விரோதமில்லை; கோள் சொல்லுதலும் இல்லை; பயமும் இல்லை; ஸந்தாபமும் இல்லை; பொறுமையும் இல்லை; மாற்சரியமும் இல்லை; அதனால், எவர் யோகி களுக்கெல்லாம் சிறந்த கதியோ, எவர் எல்லாப் பிராணிகளுக்கும் அந்தராத்மாவோ பரமானந்தமயமான அந்த ப்ரம்மரூபியான நாராயணர் அப்பொழுது வெண்ணிறமுள்ளவராக இருந்தார். கிருத யுகத்தில் பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைஸ்யர்களும் சூத் ரர்களும் ஆகிய மனிதர்கள் (சமம்தம முதலிய) லக்ஷணங்கள் இயற் கையிலமைந்தவர்களாகவும் தத்தமக்குரிய கருமங்களில் பற்றுள்ள வர்களாகவுமிருந்தார்கள். அப்பொழுது நான்கு வர்ணத்தார் களும் முக்கியமாகப் பிரம்மத்தையே சரணமாகக் கொண்டவர் களும் பிரம்மத்தை அடைதற்கே உரிய ஒழுக்கமுள்ளவர்களும் பிரம்மத்தையே விஷயமாகக் கொண்ட ஞானமுள்ளவர்களும் பிரம்மத்தையே பற்றின செய்கையுள்ளவர்களுமாகி (பிரம்மத்தை

யடையும்) தகுதியை அடைந்தார்கள். வெவ்வேறான (ஜாதி) தர்மங்களையுடையவர்களாயிருந்தாலும், ஒரே தெய்வமான பிரம்மத்தினிடம் மனத்தைச் செலுத்தியவர்களும் (ப்ரணவம்) ஒன்றையே மந்திரமாகவும் (வேதாந்தஶ்ரவணம்) ஒன்றையே விதியாகவும் தியானம் ஒன்றையே கிரியையாகவும் உடையவர்களும் வேதமொன்றையே பிரமாணமாகக்கொண்டவர்களும் ஒரேமதத்தைப் பின்பற்றினவர்களுமாகிப் பயனில் விருப்பத்தை விட்டுக் காலத்தில் செய்யப்பட்ட நான்கு ஆஶ்ரமங்களுக்குரிய செய்கையால் உத்தம கதியை அடைந்தார்கள். ஆத்ம யோகத்துடன் கூடினதும் கிருதயுகத்தைத் தெரிவிப்பதும் அழியாததுமான நான்கு வர்ணத்தார்களுடைய இந்தத்தர்மமானது கிருதயுகத்தில் நான்கு கால்களுள்ளதாக இருந்தது. மோக்ஷத்தை விரும்புகிற பிரம்மவித்துக்களிடம் காமமானது அற்றேபோயிற்று. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற முக்குணங்களில்லாத இது கிருதயுகமென்பது. திரேதாயுகத்தையும் என்னிடமிருந்து கேள். அந்தயுகத்தில் யாகம் நடக்கிறது; தர்மம் ஒருகாலால் குறைவுபடுகிறது; அச்சுதரும் சிவப்பு நிறத்தை அடைகிறார்; மனிதர்கள் ஸத்யத்திலேயே சென்றார்கள்; (யாகமுதலிய) கர்மாக்களையும் மற்றத்தர்மங்களையும் முக்கியமாகக் கருதினார்கள். ஆதலால், யாகங்களும் தர்மங்களும் பலவித கிரியைகளும் நடைபெற்றன. திரேதாயுகத்தில் (மனிதர்கள்) கிரியையைச் செய்தால்தான் பயனை அடையலாமென்று கருதிக் கிரியைகளாலும் கொடையாலுமே பயனை அடைந்தார்கள். தவத்தையும் தானத்தையும் முக்கியமாகக் கொண்டு தர்மத்தினின்று தவறவேயில்லை. திரேதாயுகத்தில் மனிதர்கள் தம் தர்மத்திலிருப்பவர்களும் கிரியைகளைச் செய்பவர்களுமாயிருந்தார்கள். துவாபரயுகத்தில் தர்மமானது இரண்டுகால்கள் குறைந்து நடந்துவருகிறது; விஷ்ணுவானவர் பொன் நிறத்தை அடைகிறார்; வேதமும் நான்கு விதமாகிறது. அதனால், சிலர் நான்குவேதமுள்ளவர்களும் அப்படியே சிலர் மூன்றுவேதமுள்ளவர்களும் சிலர் இரண்டுவேதமுள்ளவர்களும் சிலர் ஒருவேதமுள்ளவர்களும் அப்படியே சிலர் வேதமில்லாதவர்களும் ஆகிறார்கள். இவ்விதம் சாஸ்திரங்கள் பிரியவே, கிரியை பலவிதமாக்கப்படுகிறது. ஜனங்கள் ரஜோகுணமுள்ளவர்களாகித் தவத்திலும் தானத்திலும் நோக்கமுள்ளவர்களாகிறார்கள். ஒன்றாயிருந்த வேதத்தை (முழுமையும்) அறியமுடியாமையால் அது பலவேதங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்தயுகத்தில்

[1] புத்திசக்தி குறைந்துபோனதனால் ஸத்தியத்தில் ஒருவனும் நிலைபெற்றிருக்கவில்லை. அப்பொழுது ஸத்யத்தினின்று நழுவின அவர்களுக்குப் பலநோய்களும் காமங்களும் தெய்வச்செயலான உபத்திரவங்களும் உண்டாயின. மனிதர்கள் அவற்றால் மிகவும் பீடிக்கப்பட்டுத் தவத்தைச் செய்கிறார்கள். சிலர் இம்மையின்பத்துக்குரிய பொருள்களை விரும்பியும் ஸ்வர்க்கத்தை விரும்பியும் யாகங்களையும் செய்கிறார்கள். மனிதர்கள் துவாபரத்தை அடைந்து அதர்மத்தால் இவ்வாறு க்ஷீணிக்கிறார்கள். குந்தீ புத்ர! கலியுகத்தில் தர்மம் ஒருகாலால் நிற்கிறது. தமோ குணப்ரதானமான (கலி)யுகத்தை அடைந்து கேசவர் கருமை நிறமுள்ளவராகிறார். வேதங்களும் ஆசாரங்களும் அவ்வாறே தர்மங்களும் யாகங்களும் மற்றக்கிரியைகளும் அற்றுப் போகின்றன. [2] ஈதிபாதைகளும் வியாதிகளும் ஆலஸ்யமும் அப்படியே கோபமுதலிய தோஷங்களும் உபத்திரவங்களும் மனோவியாதிகளும் அப்படியே பசியினால் அச்சமும் உண்டாகின்றன. யுகங்கள் செல்லச் செல்லத் தர்மமும் குறைவடைகிறது. தர்மம் குறையக் குறைய உலகமும் குறைகிறது. உலகம்குறைந்தவுடன், உலகத்தை நடைபெறச் செய்கின்ற தர்மம் ஞானம் முதலியவைகள் குறைவடைகின்றன. யுகக்ஷயத்தில் செய்யப்பட்ட தர்மங்கள் விரும்பிய பலன்களை எதிரிடையாக்குகின்றன. ஸமீபத்தில் வரப்போகிற இது கலியுகமென்னப்படும். சிரஞ்சீவிகள் யுகத்தை அனுஸரித்தலென்கிற இதனைச் செய்கிறார்கள். பகைவர்களை அடக்குபவனே! என்னை அறியும் விஷயத்தில் உனக்கு ஆவல் இருக்கிறதே. அறிவாளியான மனிதனுக்குப் பிரயோஜனமற்ற விஷயங்களில் என்ன பிடிவாதம்? நீண்டகைகளையுடையவனே! யுகங்களின் வரலாற்றைப்பற்றி நீ என்னைக்கேட்டது முழுமையும் உனக்குச் சொல்லப்பட்டது. க்ஷேமத்தை அடைவாயாக. நீ (திரும்பிப்) போகலாம்' என்று சொன்னார்.

---

1 வேறுபாடம்; 'ஸத்வகுணம்' என்றும்கொள்ளலாம்.

2 மிகுமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, பகையரசர் அருகிவிருத்தல் என ஆறு; மிகுமழை, மழையின்மை, விட்டில், எலி, கிளி, தன்னரசு, வேற்றரசு என ஏழு எனவும், விட்டில், கிளி, யானை, வேற்றரசு, தன்னரசு, மழையின்மை, பெருமழை, காற்று என எட்டு என்வும் கூறுவர்.

நூற்றைம்பத்திரண்டாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(அனுமான் ஸமுத்திரத்தைத் தாண்டுகிற ஸமயத்தில் தாமெடுத்த மிகப் பெரிய உருவத்தைப் பீமனுக்குக் காட்டி நான்கு வர்ணங்களையும்பற்றிச் சொல்லியது.)

பீமஸேனன், 'உம்முடைய முன் ரூபத்தைப் பாராமல் நான் எவ்விதத்தாலும் போகமாட்டேன். உமக்கு நான் அனுக்ரகிக்கத் தக்கவனுயிருந்தால் நீரே உமது ரூபத்தைக் காண்பிப்பீராக' என்று வேண்டினன். பீமன் இவ்வாறு சொல்லக் கேட்ட அனுமான், நகைசெய்து கடலைத் தாண்டும்பொழுது இருந்த ரூபத்தைக் காண்பித்தார். முன்னே ஸமுத்திரத்தைத் தாண்டுகிற ஸமயத்தில் தமக்கிருந்த ரூபத்தைக் காட்டி ப்ராதாவுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பிப் பெரிய சரீரத்தை எடுக்க ஆரம்பித்தார். பிறகு, அவருடைய தேகமானது [1] உயரத்தாலும் அகலத்தாலும் மிக வளர்ந்தது. அளவிறந்த காந்தியுள்ள அனுமான் மற்ற மரங்களுடன் கூடின வாழைக்காட்டை மறைத்துக்கொண்டு விந்தியம் போல உயரத்தையுமடைந்து மிக உயர்ந்த பருத்த சரீரமுள்ளவராக அந்த இடத்தில் நின்றார். சிவந்த கண்களையுடையவரும் கூர்மையான தெற்றுப் பற்களுள்ளவரும் புருவநெறித்த கண்களுள்ளவருமான ஹனுமான் நீண்ட வாலைச் சுழற்றிக்கொண்டு இரண்டாவது மலைபோலத் திசைகளை வியாபித்து நின்றார். கௌரவ நந்தனனான பீமன் அப்பொழுது ப்ராதாவினுடைய அந்தப் பெரிய ரூபத்தைப் பார்த்து ஆச்சர்யமடைந்தான்; அடிக்கடி ஸந்தோஷத்தையும் அடைந்தான். பீமன், தேஜஸுகளுடன் கூடின சூரியனைப் போலவும், பொன்னாலாகிய மலையைப் போலவும், மிக விளங்குகிற ஆகாசத்தைப்போலவும் இருக்கிற அந்த ஹனுமானைப் பார்த்துக் கண்களை மூடிக்கொண்டான். ஹனுமான் பீமஸேனனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு, 'குற்றமற்றவனே! இப்பொழுது எனது ரூபத்தை இவ்வளவு மட்டுமே நீ பார்க்கச் சக்தியுள்ளவன், இதைக் காட்டிலும் அதிகமாக என் மனம் விரும்பிய அளவும் நான் வளருவேன். பீம! பகைவரினிடையில் (என்னுடைய) மூர்த்தியானது சக்தியினல் அதிகமாக வளர்கிறது'

1 'ஆயாம' என்பது மூலம்,

என்று சொன்னார். வாயுகுமாரனை பீமன் அத்புதமாகவும் மகா பயங்கரமாகவும் விந்தியமலைக்கு ஒப்பாகவுமிருக்கிற அனுமானுடைய அந்தச்சரீரத்தைப் பார்த்துத் தடுமாற்றமடைந்தான். பிறகு, தளராத தன்மையுள்ள பீமன், மயிர் மிகச்சிலிர்த்துக் கைகளைக் குவித்துக்கொண்டு நேரிலிருக்கிற அனுமானைப்பார்த்து, 'பிரபுவே! உம்முடைய இந்தச் சரீரத்தின் பெரிதான பிரமாணம் பார்க்கப்பட்டது. மகா வீர்யமுள்ளவரே! நீர் உமது சரீரத்தை உம்முடைய விருப்பப்படி நீரே சுருக்கக்கடவீர். உதித்த ஸூர்யன்போன்றவரும் அளத்தற்கரியவரும் அவமதிக்க முடியாதவரும் மைநாக மலைபோன்றவருமான உம்மைப் பார்ப்பதற்கு நான் சக்தியற்றவனாக இருக்கிறேன். வீரரே! நீர் பக்கத்திலிருக்கும்பொழுது ராமர் ராவணனைத் தாமே எதிர்த்துச் சென்றாரென்பது என்னுடைய மனத்துக்கு இப்பொழுது மிகப் பெரிய ஆச்சரியமாயிருக்கிறது. நீரே உம்முடைய தோள்வன்மையை அடுத்துப் போர் வீரர்களுடனும் ராவணனுடனும் கூடின அந்த லங்கையை விரைவில் அழிப்பதற்குச் சக்தியுள்ளவர். வாயுபுத்திரரே! உம்மால் அடைய முடியாதது ஒன்றுமில்லை. பரிவாரங்களுடன் கூடிய ராவணன் யுத்தத்தில் உமக்குப்போதாதவன்' என்றுசொன்னான். பீமன் இவ்வாறு சொல்லக் கேட்ட வானரோத்தமரான ஹனுமான், பிறகு, இனிமையாகவும் கம்பீரமாகவுமிருக்கிற வாக்கினால், 'பாரத! நீண்ட கைகளுள்ளவனே! நீ சொல்லுகிறது உண்மையே. பீமஸேன! அந்தராக்ஷஸாதமன் எனக்கு ஒருவனுக்கே போதாதவன். லோக கண்டகனான அந்த ராவணன் என்னால் கொல்லப்பட்டால் ராகவருடைய கீர்த்தியானது அழிந்துபோகும். அதனால், இது உபேக்ஷிக்கப்பட்டது. வீரரான அந்த ராமர் பரிவாரங்களுடனிருந்த அந்த ராவணனைக் கொன்று ஸீதையைத் தமது பட்டணத்திற்கு அழைத்துவந்தார்; மனிதர்களினிடையில் கீர்த்தியையும் நிலை நாட்டினார். விரிவான அறிவுள்ளவனே! ஆகையால், பிராதாவின் பிரியத்திலும் ஹிதத்திலும் பற்றுதலுள்ளவனான நீ வாயுவினால் பாதுகாக்கப்பட்டு இடையூறில்லாத க்ஷேமமானவழியோடு செல்வாயாக. கௌரவர்களுள் சிறந்தவனே! இது உனக்கு ஸௌகந்திகவனத்திற்குப்போகிறவழி. யக்ஷர்களாலும், ராக்ஷஸர்களாலும் காக்கப்பட்ட குபேரனுடைய உத்யானத்தை நீ பார்ப்பாய். நீ வலிமையினால் ஸ்வயமே புஷ்பங்களைப் பறிக்காதே. மனிதன் தேவதைகளை முக்யமாகப் பெருமைப்படுத்தவேண்டுமன்றோ

பரதர்களுள் சிறந்தவனே! பாரத! பூஜைகளாலும் ஹோமங்களாலும் நமஸ்காரங்களாலும் மந்திரங்களாலும் பக்தியினாலும் தேவர்கள் அருளைச் செய்கிறார்களன்றோ? அப்பா! ஸாஹஸம் செய்யாதே. உன்னுடைய கடமையைக் காக்கக்கடவாய். சொந்தக் கடமையை நிலைநிறுத்துவதையே தர்மமென்று அறி. [1] அவஸரப்படாதே. பிருஹஸ்பதிபோன்றவர்களாலும் தம் கடமையை அறியாமலும் பெரியோர்களை அடுக்காமலும் [2] தர்மத்தை அறிதல் இயலாது. எந்த விஷயத்தில், அதர்மமும் தர்மமென்று சொல்லப்படுகிறதோ, தர்மமும் அதர்மமென்று சொல்லப்படுகிறதோ மதிஈனர்கள் மயங்குகிற அந்த விஷயத்தைப் பகுத்தறிய வேண்டும். தர்மமானது ஆசாரத்தினின்று உண்டாகிறது. வேதங்கள் தர்மத்தினின்று உண்டாயின. வேதங்களிலிருந்து யஜ்ஞங்கள் உண்டாயின. யஜ்ஞங்களால் தேவர்கள் நிலைநிறுத்தப்பட்டார்கள். தேவதைகள் வேதங்களாலும் தர்மசாஸ்திரங்களாலும் சொல்லப்பட்டயாகங்களால் நிலைநிறுத்தப்படுகிறார்கள். மனிதர்கள், பிருஹஸ்பதியினாலும் சுக்கிரராலும் சொல்லப்பட்ட நீதிகளால் நிலைநிறுத்தப்படுகிறார்கள். பிரம்ம க்ஷத்திரிய வைஸ்யர்களால் வரி வாங்குதல், சுரங்கங்களினின்று பொன் வெள்ளி ரத்னங்கள் முதலியவைகளைத் தோண்டி எடுத்தல், வர்த்தகம், வியவஸாயவேலைகள், கால்நடைகளைப் போஷித்தல், கூலிவேலை ஆகிய இந்தத் தொழில்களால் எல்லாம் நிலைநிறுத்தப்படுகின்றன. அறிஞர்களான (முதல் மூன்று வர்ணத்தார்களுக்கும்) [3] த்ரயீ, தண்டநீதி, [4] வார்த்தா என வித்தைகள் மூன்று. நன்கு உபயோகிக்கப்படுகிற அவைகளால் உலகத்தின் ஜீவனம் நடைபெறுகிறது. அந்த லோகயாத்திரையானது பூமியில் (தத்தம்) தொழிலால் செய்யப்படாமல் போனால் வைதிக தர்மமில்லாமலும் தண்டநீதியில்லாமலும் இந்த உலகம் வரம்பற்றதாகிவிடும். இந்தப் பிரஜைகள் வார்த்தாதர்மத்தில் இல்லாவிடில் அழிந்துவிடுவர். நன்றாக நடத்தப்படுகிற இந்த மூன்று தொழில்களாலும் மனிதர்கள் புண்ணியத்தையும் உண்டுபண்ணிக்

1 'கமயஸ்வ' என்பது வேறுபாடம்; 'போதபூர்வம் அநுதிஷ்டஸ்வ' என்பது பழையவுரை; 'அறிந்து அனுஷ்டிப்பாயாக' என்பது அதன்பொருள்.

2 'தர்மார்த்தௌ' என்பது வேறுபாடம்; 'அறம்பொருள்களை' என்பது அதன் பொருள். 3 மூன்றுவேதங்கள்.

4 பயிரிடுதல், வாணிகம், பசுக்காத்தல்.

கொள்ளுகிறார்கள். இருபிறப்பாளர்களுக்குக் கேவலஸாத்விகமான [1] மோக்ஷமொன்றே தர்மம். யாகம்செய்தல், வேதமோதுதல், ஈதல் ஆகிய மூன்றும் மூன்றுவர்ணத்தார்களுக்கும் பொதுவான தர்மங்களென்று ஸ்மிருதிகளால் கூறப்பட்டிருக்கின்றன. பிராம்மணர்களுக்கு வேட்பித்தல் ஓதுவித்தல் ஆகியஇரண்டும் ஏற்றலும் தொழிலென்றும், க்ஷத்திரியர்களுக்குக் காத்தல் தொழிலென்றும், வைஶ்யர்களுக்கு (ஆடுமாடுகளை) வளர்த்தல் தொழிலென்றும், சூத்ரர்களுக்கு த்விஜர்களுக்குப் பணிசெய்வது தொழிலென்றும் சொல்லப்படுகின்றன. சூத்திரர்கள் பிக்ஷையெடுத்தலையும் ஹோமத்தையும் விரதங்களையும் செய்யலாகாது. குருவினுடைய (=எஜமானனுடைய) வீட்டிலேயே வஸிக்கவேண்டும். குந்தீநந்தன! இங்கே இந்தத் தர்மங்களுள் க்ஷத்திரியதர்மமான பாதுகாப்பு உன்னுடைய தொழில். நீ விநயமுள்ளவனும் புலன்களையடக்கினவனுமாகி உன் தொழிலை அடையக்கடவாய். பெரியோர்களுடன் ஆலோசித்து யோக்யர்களும் புத்திமான்களும் சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்தவர்களுமான (மந்திரிகளால்) உதவப்பெற்றவன் தண்டத்தினால் ஆள்கிறான். (அங்ஙனமின்றி) [2] வ்யஸனமுள்ளவன் அவமதிக்கப்படுகிறான். அரசன் நிக்ரஹானுக்ரஹங்களால் நன்றாக நீதியைச் செலுத்தும்பொழுது உலகத்தினுடைய வரன்முறைகள் நன்கு அமைக்கப்பட்டவைகளாகின்றன. ஆகையால், தேசத்திலும் (கோட்டை முதலிய) அரண்களிலும் பகைவர்களிடத்திலும் நண்பர்களிடத்திலும் சேனைகளிடத்திலும் நிலைமையையும் வளர்ச்சியையும் அப்படியே குறையையும் நித்யம் சாரர்களால் அறியவேண்டும். அரசர்களுக்கு உபாயமும் சாரர்களும் புத்தியும் மந்திராலோசனையும் பராக்கிரமமும் சிக்ஷையும் ரக்ஷையும் ஸாமர்த்தியமும் கார்யங்களைச் சாதிப்பவையாம். ஸாமம், தானம், பேதம், தண்டம், உபேக்ஷை இவற்றைச் சேர்த்தோ தனித்தனியோ உபயோகித்தலால் காரியங்களை ஸாதிக்கவேண்டும். பரதஶ்ரேஷ்ட! எல்லாநீதிகளும் சாரர்களும் மந்திராலோசனையை மூலமாகக் கொண்டவர்கள். நீதிசாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்தவர்களும் அத்தன்மையுள்ளவர்களுமான பெரியோர்களுடன் மந்திராலோ

---

1 'ருதம்' என்பது வேறுபாடம்; 'ஆத்மஜ்ஞானம்' என்பது பழையவுரை.

2 ஸபாபர்வம் 19, சாந்திபர்வம் 181, 289-ம் பக்கம் குறிப்புக்களில் காண்க.

சனை செய்யவேண்டும். ஸ்திரீயோடாவது மூடனோடாவது சிறுவனோடாவது பேராசையுள்ளவனோடாவது அல்பனோடாவது [1] பயித்தியக் குறிப்புள்ளவர்களுடனாவது ரஹஸ்யமான விஷயங்களை ஆலோசிக்கக் கூடாது. கற்றறிந்தவர்களுடன் ஆலோசிக்க வேண்டும்; திறமையுள்ளவர்களால் கார்யங்களைச் செய்விக்கவேண்டும்; நண்பர்களைக்கொண்டு [2] நீதி செலுத்தலைச் செய்விக்கவேண்டும். மூர்க்கர்களை எல்லாக் காரியங்களிலும் விலக்கவேண்டும். தர்மகார்யங்களில் தார்மிகர்களையும் பொருள் ஸம்பந்தமான காரியங்களில் கற்றறிந்தவர்களையும் ஸ்திரீகளிடம் (காவலாக)நபும்ஸகர்களையும் குரூரமான காரியங்களில் குரூரர்களையும் ஏவவேண்டும். காரியங்களில் செய்யத்தக்கது தகாததென்னும் விஷயத்தில், பகைவருடைய நிச்சயத்தையும் பலாபலத்தையும் [3] தன்னைச் சேர்ந்தவர்களிடத்தினின்றும் பகைவரைச் சேர்ந்தவர்களிடத்தினின்றும் அறியவேண்டும். நல்ல புத்தியுடன் தன்னைச் சரணமடைந்த ஸாதுக்கள்விஷயத்தில் அனுக்கிரஹத்தைச் செய்யவேண்டும். வரம்புமீறிச் செல்லுகிற அயோக்கியர்களிடங்களில் நிக்ரஹத்தைச் செய்யவேண்டும். எப்பொழுது அரசன் நிக்ரஹத்திலும் அனுக்ரஹத்திலும் நன்குசெல்லுகிறானோ அப்பொழுது உலகத்தினுடைய வரம்பானது நன்கு நிலைநாட்டப்பட்டதாகிறது. பார்த்த! பின்பற்றுதற்கரியதான இந்த ராஜதர்மமானது உனக்குச் சொல்லப்பட்டது. நீ விநயத்தில் நிலைபெற்றவனாக அந்தத்தர்மத்தை உனக்கு அமைந்ததர்மமென்று பரிபாலனம் செய்வாயாக. எப்படி பிராம்மணர்கள் தவத்தினாலும் தர்மத்தாலும் பொறிகளின் அடக்கத்தாலும் யாகங்களாலும் ஸ்வர்க்கத்தை அடைகிறார்களோ, எப்படி வைஶ்யர்களும் தானத்தாலும் விருந்தளித்தலாலும் தர்மங்களாலும் நல்லகதியை அடைகிறார்களோ, எப்படி சூத்ரர்கள் த்விஜர்களுடைய சுஶ்ரூஷையினால் உத்தமகதியை அடைகிறார்களோ அப்படியே க்ஷத்திரியர்கள் பூமியில் துஷ்ட நிக்ரஹங்களாலும் சிஷ்டபரிபாலனங்களாலும் ஸ்வர்க்கத்தை அடைகின்றனர். விருப்பு வெறுப்பற்றவர்களும் பேராசை இல்லாதவர்களும் கோபமில்லாதவர்களுமாகி

---

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

3 'சாரர்களிடத்தினின்றும் பரிதான முதலியவற்றால் ஆசையுண்டு பண்ணப்பட்ட பகைவர் பக்ஷத்தாரிடத்தினின்றும்' என்பது பழையவுரை.

நன்கு நீதி செலுத்தியவர்கள் ஸாதுக்களடைகிற உலகங்களை அடைகிறார்கள்.

நூற்றைம்பத்துமூன்றாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(அனுமான் பெரியஉருவத்தைச் சுருக்கிக்கொண்டு பீமனைத் தழுவி வரன்கொடுத்தனுப்பியதும், அவன் கந்தமாதனமலையில் ஸௌகந்திகமுள்ள தளத்தைக்கண்டதும்.)

பிறகு, அனுமான் தம்மிச்சைப்படி வளர்ந்திருக்கிற அந்தப் பெரிய தேகத்தை அடக்கிக்கொண்டு பீமஸேனனை மறுபடியும் கைகளால் தழுவினார். பாரதரே! பிராதாவினால் கட்டிக்கொள்ளப் பட்ட அந்தப் பீமனுடைய ச்ரமமானது உடனே நீங்கிவிட்டது. எல்லாமும் அனுகூலமாயின. பலமும் உண்டாயிற்று. அதிகபல முள்ள பீமன், 'எனக்கு நிகரான பலசாலி இல்லை' என்று நினைத் தான். பிறகு, அனுமான் கண்களில் நீர்ததும்ப மறுபடியும் பீமனை அழைத்து, அன்புகாரணமான கண்ணீரால் தடுமாற்ற முள்ள குரலுடன், 'வீர! உன்னிருப்பிடத்தைக் குறித்துப் போ. ஸந்தர்ப்பங்களில் என்னை நினைக்கக்கடவாய். குருச்ரேஷ்டனே! நான் இங்கு இருப்பதாக ஒருவருக்கும் தெரிவியாதே. வலிமைமிக்கவனே! குபேரனுடைய அரண்மனையிலிருந்து அனுப் பப்பட்ட தேவஸ்திரீகளும் கந்தர்வஸ்திரீகளும் இங்குவருவதற்கு இது ஸமயம். (உன்னைப்பார்த்ததனால்) என்னுடைய கண்ணும் பயனுள்ளதாயிற்று. பீம! உன்னோடு கூடி மானிட தேகத்தின் பரிசத்தை அடைந்து, ரகுகுலத்தில் அவதரித்தவரும் ராமரென் கிற பெயருள்ளவரும் உலகத்தவரின் மனத்தை மகிழ்விப்பவரும் ஸீதையின் முகமாகிற தாமரைமலருக்கு ஸூர்யனாயிருப்பவரும் ராவணனாகிற அந்தகாரத்திற்கு ஸூர்யனாயிருப்பவருமான விஷ்ணுவை நினைக்கும்படி செய்யப்பட்டேன். வீரனே! குந்திபுத்திர! ஆகையால், என்னைப்பார்த்தது உனக்குப் பயனுள்ளதாகுக. பாரத! நீ பிராதாவாயிருத்தலை முன்னிட்டு வரத்தைக் கேட்பாயாக. ஹஸ்தினபட்டணத்தை அடைந்து அற்பர்களான திருதராஷ்டிரபுத்திரர்களைக் கொல்லவேண்டுமானால், நான் இதனை உடனே செய்வேன். மிக்கபலசாலியே! கல்லினால் அந்த ஹஸ்தின

புரத்தை நொறுக்கவேண்டுமானாலும் துரியோதனனைக் கட்டி இப்பொழுதே உன்னிடம் கொண்டுவரவேண்டுமானாலும் உன்னுடைய இந்த விருப்பத்தை இப்பொழுதே நான் செய்வேன்' என்று சொன்னார்.

பீமஸேனனோ, மஹாத்மாவான அனுமானுடைய அந்த வாக்கியத்தைக் கேட்டு, மிக்க மனமகிழ்ச்சியுடன் அவரைப் பார்த்து, 'வானரஸ்ரேஷ்டரே! உம்மால் எனக்கு எல்லாம் செய்யப்பட்டவைகளே. மிக்க புஜபலமமைந்தவரே! உமக்கு மங்களமுண்டாகுக. உம்மைப் பிரார்த்திக்கிறேன். என் விஷயத்தில் கிருபை செய்வீராக. வீர்யமுள்ளவரே! நாதரான உம்மால் பாண்டவர்களெல்லோரும் நாதருள்ளவர்களானார்கள். உம்முடைய பலத்தினாலேயே நாங்கள் எல்லாச் சத்துருக்களையும் ஜயிப்போம்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லக் கேட்ட ஹனுமான் பீமஸேனனைப் பார்த்து, 'பிராதாவாக இருப்பதாலும் நேசத்தாலும் உனக்குப் பிரியத்தைச் செய்வேன். மிக்க வலிமையுடையவனே! வீரனே! சிறந்த வல்லமையுள்ள பகைவர் படையில் நுழைந்து நீ ஸிம்மநாதத்தைச் செய்யும்பொழுது, நான் உன்னுடைய அந்தச் சத்தத்தை, யுத்தத்தில் கேட்டவுடனே உன்னுடைய பகைவர்கள் உயிர் துறக்கக்கூடிய என்னுடைய சத்தத்தால் விருத்தியடையச் செய்வேன். விஜயனுடைய த்வஜத்திலிருந்துகொண்டும், பயங்கரமானவையும் பகைவர்களுடைய வலிமையைக் குறைப்பவையுமான ஒலிகளை வெளியிடுவேன். அதனால், நீங்கள் பகைவர்களை எளிதில் கொல்லுவீர்கள்' என்று சொன்னார். அனுமான் அப்பொழுது பாண்டவர்களை மகிழ்விப்பவனான பீமனைப் பார்த்து இவ்வண்ணமுரைத்து அவனுக்கு வழியைச்சொல்லி, அந்த இடத்திலேயே மறைந்தார். அந்த வானர ஸ்ரேஷ்டர் சென்றவுடன், பலசாலிகளுள் சிறந்தவனான பீமனும் அந்த வழியினால் பெரிதான கந்தமாதனத்தில் செல்லலானான். ஹனுமானுடைய சரீரத்தையும் பூமியில் நிகரில்லாத (அவருடைய) காந்தியையும் நினைத்துக்கொண்டும் தாசரதியினுடைய பெருமையையும் ஆற்றலையும் நினைத்துக்கொண்டும் சென்றான். பீமன், அப்பொழுது, ஸௌகந்திகவனத்தை அடையும் விருப்பத்தால், மனத்துக்கினியவையான அந்தக் காடுகளிலும் சோலைகளிலும் மலர்ந்த தாமரை மலர்களால் விசித்திரமான தடாகங்களிலும் நதிகளிலும் பலவகை மலர்களால் விசித்ரமான பூத்திருக்கிற காடுகளிலும் திரிந்தான்.

பாரதரே! மழை பொழிகின்ற மேகங்களின் கூட்டங்கள்போலிருப்பவையும் சேற்றினால் நனைக்கப்பட்டவையுமான மத யானைக் கூட்டங்களை அப்பொழுது பார்த்தான். காந்தியுள்ளவனான அவன், வழியில், வெருண்ட விழியுள்ளவைகளும் பெண்மான்களுடனிருப்பவைகளும் புல்லைக் கௌவிக்கொண்டிருப்பவைகளுமான மான்களுடன்கூடின காட்டைப் பார்த்துக்கொண்டு விரைவாகச் சென்றான். பீமஸேனன் எருமைகளாலும் பன்றிகளாலும் வேங்கைகளாலும் அடையப்பட்ட மலையில் சௌர்யத்தால் பயமற்றவனாகப் பிரவேசித்தான். திரௌபதியின் சொல்லை வழியுணவாகவுடையவனும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனுமான பீமன், காட்டில் மலர்களால் கிளைகள் தாழ்ந்திருப்பவைகளும் சிவந்த தளிர்களால் அழகியவைகளும் காற்றினால் அசைக்கப்பட்டவைகளுமான மரங்களால் அழைக்கப்படுகிறவன் போன்றவனும், தாமரை மொட்டுக்களாகிற கைகுவித்தலைச் செய்தவைகளும் மதங்கொண்ட வண்டுகளால் அடையப்பட்டவைகளும் இனிய துறைகளும் வனங்களுமுள்ளவைகளுமான தாமரை ஓடைகளை வழியில் தாண்டிச் செல்லுகிறவனும், பூத்திருக்கிற மலைத் தாழ்வரைகளில் மனமும் கண்களும் பற்றியவனுமாகி, பிறகு, பிற்பகலில் மான்கள் சூழ்ந்துள்ள காட்டில் பொன்மயமான மாசற்ற தாமரை மலர்களுடன் கூடியதும் அன்னங்களோடும் நீர்க்காக்கைகளோடும் கூடியதும் சக்கரவாகப் புட்களால் விளங்குகின்றதும் அந்த மலைக்குத் தொடுத்துப் போடப்பட்ட பரிசுத்தமான தாமரை மலர்களுள்ள மாலை போன்றதுமான ஒரு [1] நதியைக் கண்டான். மகா பலசாலியான அவன், அந்த நதியில், மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறதும் இளஞ் சூரியனைப் போன்ற காந்தியுள்ளதுமான பெரிய ஸௌகந்திக மலர்களின் கூட்டத்தைக் கண்டான். பாண்டு குமாரனான பீமன், அதனைப் பார்த்து, விரும்பியதை மனத்தினால் அடைந்தவனாகி, வனவாஸத்தால் துன்பத்தை அடைந்திருக்கிற மனைவியை மனத்தால் அடைந்தான்.

---

1 இது சில இடங்களில் ஓடையென்றும் கூறப்படுகிறது.

நூற்றைம்பத்து நான்காவது அத்யாயம்.

தீர்த்தயாத்ரா பர்வம். (தொடர்ச்சி.)

(ஸௌகந்திக ஓடையில் இறங்கக் கருதிய பீமனை நோக்கி, அதனைக் காக்கிற அரக்கர்கள் அவனுடைய விருப்பத்தை வினவியது.)

அந்தப் பீமன், கந்தமாதனத்தில் சென்று அழகிய வனங்களுள்ளதும் அழகியதுமான கைலாஸ கிரியின் உச்சியில், அழகியதும் அரக்கர்களால் பாதுகாக்கப்பட்டதும் குபேரனுடைய வாஸஸ்தானத்திற்கு அருகில் மலையருவிகளாலுண்டானதும் மனத்துக்கு மிக இனியதும் விசாலமான நிழலுள்ளதும் பலவகை மரங்களாலும் கொடிகளாலும் சூழப்பட்டதும் பசுமை நிறமுள்ள தாமரையிலைகளால் மூடப்பட்டதும் திவ்யமானதும் ஸ்வர்ணமயமான தாமரை மலர்களுள்ளதும் பலவகைப் பறவைகளின் இனங்களால் நிரம்பியதும் நல்ல கரைகளுள்ளதும் சேறில்லாததும் மிக அழகியதும் நல்ல ஜலமுள்ளதும் மலையின் தாழ்வரைகளிலமைந்ததும் உலகத்துக்கு விசித்திரமாக இருப்பதும் மங்களகரமானதும் அற்புதமான காட்சியுள்ளதுமான தாமரை ஓடையைக் கண்டான். குந்தீ நந்தனனான பீமன், அந்த ஓடையில் அம்ருதம் போல் ருசியுள்ளதும் குளிர்ந்ததும் லேசாக இருப்பதும் மங்களகரமானதும் மாசற்றதுமான ஜலத்தைக் கண்டான்; அதனை அதிகமாகப் பருகவும் பருகினான். அழகியதும், திவ்யமான ஸௌகந்திக மலர்களால் சூழப்பட்டதும், பொன்மயமானவைகளும் சிறந்த வாஸனையுள்ளவைகளும் வைடூர்யமயமான சிறந்த காம்புள்ளவைகளும் பற்பல நிறமுள்ளவைகளும் மனமகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்றவைகளும் அன்னப் பறவைகளாலும் நீர்க்காக்கைகளாலும் அசைக்கப்பட்டவைகளும் நிர்மலமான பூந்தாதுக்களை வெளிவிடுகின்றவைகளுமான தாமரை மலர்களால் மூடப்பட்டதும், ராஜராஜனும் மகாத்மாவுமான குபேரனுக்கு விளையாட்டிடமும், கந்தர்வர்களாலும் அப்ஸரஸுகளாலும் தேவர்களாலும் நன்குமதிக்கப்பட்டதும், தேவரிஷிகளாலும் யக்ஷர்களாலும் அப்படியே கிம்புருஷர்களாலும் அடையப்பட்டதும், ராக்ஷஸர்களாலும் கின்னரர்களாலும் குபேரனாலும் காக்கப்பட்டதுமான அந்த ஓடையைப் பார்த்தவுடன், மகாபலசாலியும் குந்தீ நந்தனனுமான பீமஸேனன் மிக்க மகிழ்ச்சியுள்ளவனானான்; தெய்

வத்தன்மை பொருந்தியதும் பெரிதுமான ஸௌகந்திக ஸரஸை நன்றாகப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். அதனைப் பலவிதமான ஆயுதங்களையும் உடைகளையும் தரித்தவர்களான க்ரோதவசர்களென்கிற ராக்ஷஸர்கள் நூறாயிரவர் அரசன் கட்டளையினால் பாது காக்கின்றார்கள். அவர்கள் மான்தோல்களை உடுத்தவனும் பொன்னாலாகிய தோள்வளைகளை அணிந்தவனும் வீரனும் பயங்கரனும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனும் ஆயுதங்களையுடையவனும் கத்தி கட்டிக்கொண்டவனும் பயமில்லாதவனும் பகைவர்களை அடக்குகிறவனும் ஸௌகந்திக மலர்களை விரும்பினவனும் அருகில் வருகின்றவனுமான பீமனைப் பார்த்தவுடனே, 'ஆயுதங்களோடு கூடியவனும் மான்தோலுடுத்தவனுமான இந்தப் புருஷஸ்ரேஷ்டன் இங்கே செய்ய விரும்பிவந்த காரியத்தை நீங்கள் வினவக்கடவீர்' என்று ஒருவரோடொருவர் கூக்குரலிட்டுச் சொன்னார்கள். பிறகு, எல்லா ராக்ஷஸர்களும், நீண்ட புஜங்களுள்ள தேஜஸ்வியான விருகோதரனை அணுகி, 'நீ யார்? சொல். முனிவேஷத்தைப் பூண்டவனும் ஆயுதங்களையுடையவனுமாகக் காணப்படுகிறாய். பேரறிவாளனே! நீ வந்த காரியத்தைச் சொல்' என்று வினவினார்கள்.

நூற்றைம்பத்தைந்தாவது அத்யாயம்.

தீர்தயாத்ரா பர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் தான் ஸௌகந்திக மலர்களுக்காக வந்ததைக் காவற்காரர்களுக்குத் தெரிவித்து மலர்பறிக்க முயன்றதும், அவர்கள் பீமனைத் தடுத்துக் கொல்லக் கருதியதும், அவன் அந்த அரக்கர்களைக் கதையினால் அடித்ததும், அவர்கள் அந்த அடியைத் தாங்கமாட்டாமல் குபேரனிடம் முறையிட்டதும், குபேரன் பீமனுடைய செய்கையைப் புகழ்ந்ததும்.)

பீமன், 'ராக்ஷஸர்களே! நான் பாண்டு மகாராஜருடைய புதல்வன்; பீமஸேனன் என்னும் பெயருள்ளவன்; தர்மராஜரை அடுத்துப் பிறந்தவன். பிராதாக்களோடு விசாலமான பதரியை வந்தடைந்தேன். அவ்விடத்தில், பாஞ்சாலியானவள், நிச்சயமாக இந்த இடத்திலிருந்தே காற்றினாலடித்துக்கொண்டுவரப்பட்டதும் மிகச் சிறந்ததுமான ஒரு ஸௌகந்திக மலரைக் கண்டாள். அவள் பல (ஸௌகந்திக மலர்களை) விரும்புகிறாள். ராக்ஷஸர்களே!

என்னைக் குற்றமற்ற அங்கங்களுள்ள அந்தத் தர்ம பத்னிக்குப் பிரியத்தைச் செய்வதில் நிலைபெற்றவனென்றும் மலர்களைக் கொண்டுபோவதற்காக இங்கே வந்தவனென்றும் தெரிந்து கொள்ளுங்கள்' என்று சொன்னான். ராக்ஷஸர்கள், 'புருஷ ஶ்ரேஷ்டனே! இது குபேரனுடைய ப்ரியமான விளையாட்டிடம். (பிறப்பு, இறப்பு, பிணி முதலிய) மானிட இயற்கையுள்ள மனிதனால் இவ்விடத்தில் விளையாடுதல் இயலாது. விருகோதர! தேவரிஷி களும் அப்படியே யக்ஷர்களும் தேவர்களும் யக்ஷராஜனைக் கேட்டுக் கொண்டு இதில் (நீரைப்) பருகுகிறார்கள்; (மலர்களையும்) கொண்டு போகிறார்கள். பாண்டவ! யக்ஷர்களுக்கு அதிபதியும் மகாத்மாவு மான குபேரனுடைய அனுமதியின்மேல் கந்தர்வர்களும் அப்ஸர ஸுகளும் இதில் விளையாடுகின்றார்கள். குபேரனை அவமதித்து அநீதியினால் இதில் விளையாட விரும்புகிற கெட்ட நடையுள்ளவன் அழிந்துவிடுவான்; ஸந்தேகமில்லை. அந்தக் குபேரனை அலக்ஷியம் செய்து இங்கே தாமரை மலர்களை வலிந்து கவர விரும்பு கிறாய். தர்மராஜருக்கு உன்னை எவ்வாறு பிராதாவாகச் சொல்லு கிறாய்? யக்ஷ ராஜனைக் கேட்டுக்கொண்டு, பிறகே (நீரைப்) பருகக் கடவாய்; (மலர்களையும்) கொண்டுபோவாயாக. இதைத் தவிர வேறுவிதத்தால் நீ ஒரு தாமரைமலரைப் பார்ப்பதற்கும் முடி யாது' என்று கூறினார்கள். வீரனான பீமஸேனன், 'ராக்ஷஸர்களே! அந்தத் தனேஶ்வரனை இந்த இடத்தில் ஸமீபத்தில் நான் காண வில்லை. மகாராஜனான அவனைப் பார்த்தாலும் நான் யாசிக்க விரும்பவில்லை. அரசர்கள் யாசிக்க மாட்டார்களென்னும் இது சாஶ்வதமான தர்மமன்றோ? நான் க்ஷத்திரியனுக்குரிய தர்மத் தை எவ்விதத்தாலும் விடவிரும்பவில்லை. அழகிய இந்த ஓடையும் மலைஅருவியால் உண்டானது. இது மகாத்மாவான குபேரனு டைய வீட்டிலும் இருக்கவில்லை. இது எல்லாப் பிராணிகளுக்கும் வைஶ்ரவணனுக்கும் பொதுவானதன்றோ? பொருள்கள் இவ்வித நிலைமையிலிருக்கும்பொழுது, எவன் எவனை யாசிக்கவேண்டும்?' என்று எல்லா ராக்ஷஸர்களையும் பார்த்துச் சொல்லிவிட்டு, மதம் பெருகுகிற யானைபோல அந்தப் புஷ்கரிணியில் இறங்கினான். பிறகு, பிரதாபசாலியும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனும் மிக்க பலசாலியுமான பீமன் க்ரோதமுள்ளவர்களும் எல்லாப் பக்கங்களிலும் அதட்டுகிறவர்களுமான ராக்ஷஸர்களால், 'இவ் விதம் செய்யாதே; செய்யாதே' என்று வாக்கினால் தடுக்கப்

பட்டும், அந்த ராக்ஷஸர்களை அலக்ஷ்யம் செய்து இறங்கினான். அவர்கள் அனைவரும் அவனைத் தடுத்தார்கள். கோபங் கொண்டவர்களான அவர்கள் கண்களை உருட்டிவிழித்து, 'இந்தப் பீமஸேனனைப் பிடியுங்கள்; கட்டுங்கள்; அறுங்கள்; வேவிப்போம்; கடித்துத் தின்போம்' என்று சொல்லிக் கொண்டும் சஸ்திரங்களை ஓங்கிக்கொண்டும் எதிர்த்துச் சென்றார்கள். பிறகு, வேகமுள்ள பீமஸேனன் கனமானதும் யமதண்டம் போன்றதும் பொற்பூண் கட்டியதுமான பெரிய கதாயுதத்தை எடுத்துக்கொண்டு அவர்களை எதிர்த்துச் சென்றான். பிறகு, 'நில்லுங்கள்; நில்லுங்கள்' என்றும் சொன்னான். அவர்கள் அப்பொழுது தோமரம் பட்டாக்கத்தி முதலிய சுழற்றப்பட்ட ஆயுதங்களுடன் விரைவாக அவனை எதிர்த்து வந்தார்கள். கொடியவர்களும் மிக்க பயங்கரர்களுமான க்ரோதவசர்கள் பீமனைக் கொல்ல விரும்பி எல்லாப்பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டார்கள். வாயுவினால் குந்தியினிடத்தில் பிறந்தவனும் பலவானும் சூரனும் வேகமுள்ளவனும் பகைவர்களைக் கொல்பவனும் எப்பொழுதுமே ஸத்தியத்திலும் தர்மத்திலும் பற்றுதலுள்ளவனும் பராக்கிரமத்தில் பகைவர்களால் கீழ்ப்படுத்தத் தகாதவனும் மகாத்மாவுமான அந்தப்பீமன், பகைவர்களுடைய பலவிதமான (ஆயுத) கதிகளையும் அவர்களுடைய ஆயுதங்களையும் நாசம்செய்து, புஷ்கரிணியின் பக்கத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்களைப் பலிஷ்டர்வரிசையாகக் கொன்றான். அந்த வீரர்கள் அவனுடைய வீர்யத்தையும் பலத்தையும் வித்யாபலத்தையும் அப்படியே தோள் வன்மையையும் பார்த்து எல்லாப் பக்கங்களிலும் ஒன்றுசேர்ந்தும் எதிர்க்கச் சக்தியற்றவர்களாகி உடனே விரைவாகத் திரும்பி விட்டார்கள். பீமனால் அடிக்கப்பட்டவர்களும் நன்கு நொறுக்கப்பட்டவர்களும் ஆயுதங்களால் பிளக்கப்படுகின்றவர்களுமான க்ரோதவசர்கள் மிகவும் நினைவு தவறினவர்களாக அந்தஇடத்தினின்றே விரைவாக ஆகாயத்தை அடைந்து கைலாஸத்தின் சிகரங்களை நோக்கி ஓடினார்கள். இந்திரன், தானவர்கள் தைத்யர்கள் ஆகிய இவர்களுடைய கூட்டங்களை ஆக்ரமித்து வென்றதுபோல, [1] அந்தப்பீமன் போரில் பகைவர்கூட்டங்களை வென்று பகையற்றவனாகி அந்தப் புஷ்கரிணியில் இறங்கி அதிலிருந்து தன்னிஷ்டப்படி ஸௌகந்திக மலர்களைப் பறித்தான். பிறகு, அந்தப் பீமன்

1. இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

அம்ருதத்திற்கு ஒப்பான தண்ணீரைப்பருகி மறுபடியும் சிறந்த வீர்யமும் பலமுமுள்ளவனானன். அதன்பிறகு, சிறந்தவாசனை யுள்ள ஸௌகந்திகமென்னும் தாமரைமலர்களைப் பறித்துச் சேர்த்தான். பிறகு, பீமனுடையபலத்தால் துரத்தப்பட்ட அந்த க்ரோதவசர்கள், எளிமை மிக்கவர்களாகிக் குபேரனை அடைந்து, யுத்தத்தில் பீமனுக்குள்ள வீர்யத்தையும் பலத்தையும் உள்ளபடி உரைத்தார்கள். தேவனான (குபேரன்) அவர்களுடைய அந்த வசனத்தைக்[1] கேட்டு நகைத்துப் பிறகு அவர்களைப்பார்த்து, 'பீமன் த்ரௌபதிக்காக ஸௌகந்திகமலர்களை இஷ்டப்படி பறித்துக்கொள்ளட்டும். இது எனக்குத் தெரிந்தவிஷயம்' என்று சொன்னான். பிறகு, அவர்கள் குபேரனிடம் அனுமதிபெற்றுக் கோபமற்றவர்களாகிக் கௌரவஶ்ரேஷ்டனான பீமனை நோக்கிச் சென்றார்கள்; அந்த ஓடையில் ஒருவனாகத் தன்னிஷ்டப்படி விளையாடிக்கொண்டிருக்கிற பீமனையும் கண்டார்கள்.

நூற்றைம்பத்தாறுவது அத்யாயம்.

தீர்த்தயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர், அபசகுனங்களைக் கண்டு பீமசேனனைக்காணமல் திரௌபதியிடம் பீமன்சென்ற இடத்தைவினவியதும், அவள் பீமன் மலர் பறிக்கச் சென்றதைத் தெரிவித்ததும், யுதிஷ்டிரர் கடோற்கசனுடைய உதவியினால் பீமனிடம் சென்றதும், அவர்கள் குபேரனால் நன்கு மதிக்கப்பெற்று அர்ஜுனனைப் பார்க்க விருப்பத்தால் அங்கேயே ஸுகமாக வசித்ததும்.)

பரதஶ்ரேஷ்டரே! பிறகு, பீமன் மிகச்சிறந்தவைகளும் திவ்யமானவைகளும் அனேகமானவைகளும் பலரூபங்களுள்ளவைகளும் மாசற்றவைகளுமான அந்தமலர்களைப் பறிக்கத்தொடங்கினான். பிறகு,[2] பரற்கற்களைக் கொண்டுபோவதும் கடுமையாகத் தாக்குவதுமான பெருங்காற்றானது யுத்தத்தை நெருங்குவதாகத் தெரிவித்துக்கொண்டு சடிதியில் தோன்றியது. இடியுடன் கூடிய மிக்க பயங்கரமான பெரிய உற்கையும் விழுந்தது. ஸூர்யனும், கிரணங்கள் மறைக்கப்பட்டவனும் இருளால் சூழப்பட்டவனும் ஒளி இழந்தவனுமானான். பீமன் பராக்கிரமத்தைக் காட்டிய

---

1. வேறுபாடம். 2 ஒருசொல் விடப்பட்டது.

பொழுது, பயங்கரமான இடிமுழக்கமும் உண்டாயிற்று; பூமியும் நடுங்கியது; மண்மாரியும் பெய்தது; திசைகள் சிவப்பு நிறமுள்ளவையும் மிருகங்களும் பக்ஷிகளும் பயங்கரமாகக் கத்து கின்றவையுமாயின. எல்லாம் இருளால் மூடப்பட்டனவாயின. ஒன்றுமே அறியப்படவில்லை. பயங்கரமான மற்றும் பல உத் பாதங்களும் அங்கே தோன்றின. பேசுகிறவர்களுள் சிறந்தவரும் தர்ம தேவதைக்குப் புத்திரருமான யுதிஷ்டிரர் அந்த ஆச்சர் யத்தைக் கண்டு, 'எவனே நம்மை அவமதிக்கப் போகி முன். யுத்தத்தில் கொடிய மதங்கொண்ட பாண்டவர்களே! ஸன்னத்தர்களாக இருங்கள். உங்களுக்கு மங்களம். உத்பாதங் களைப் பார்க்கிறேனுதலால் நம்முடைய பராக்கிரமத்துக்கு இது காலமென்பது வெளிப்படை' என்று கூறினர். அரசர், இவ்வாறு சொல்லி, பிறகு, நாற்புறமும் பார்த்தார். தர்மபுத்ரரும் பகைவரை அடக்குபவருமான யுதிஷ்டிரர் பீமனைக் காணுமல், பிறகு, அருகி லிருந்த கிருஷ்ணையையும் நகுல ஸஹதேவர்களையும் பார்த்து, யுத் தத்தில் பயங்கரமான செய்கையுள்ள பிராதாவான பீமனைப்பற்றி, 'பாஞ்சாலி! பீமனைக் காணவில்லையே? ஸாஹஸத்தில் விருப்ப முள்ள அந்த வீரன் எந்தக் காரியத்தைச் செய்ய விரும்புகிறுன்? அல்லது, எந்த ஸாஹஸமான காரியத்தைச் செய்தான்? பெரிய யுத்தத்தைத் தெரிவிக்கின்றவையும் கடுமையான பயத்தைக் காண் பிக்கின்றவையுமான உத்பாதங்கள் இதோ திடீரென்று நாற்புறங் களிலும் தோன்றியிருக்கின்றன' என்று வினவினர். அவ்வாறு சொல்லுகின்ற அவரைப் பார்த்து, நல்ல மனமுள்ளவளும் காதலியும் ப்ரியத்தைச் செய்ய விரும்புகிறவளும் அழகிய நகைப் புள்ளவளும் ராஜமகிஷியுமான கிருஷ்ணையானவள், 'அரசரே! காற்றினல் அடித்துக்கொண்டுவரப்பட்ட ஒரு ஸௌகந்திகமலரை நான் ப்ரீதியுடன் பீமஸேனரிடம் இப்பொழுது கொடுத்தேன். மேலும், நான் வீரரான பீமஸேனரை, 'இந்தப் புஷ்பம் போன்ற பல புஷ்பங்களை நீர் பார்த்தால் அவைகளெல்லாவற்றையும் பறித் துக்கொண்டு விரைவில் வரக்கடவீர்' என்றும் சொன்னேன். அரசரே! தோள்வலிமையுள்ள அந்தப் பாண்டவர் எனக்கு ப்ரி யத்தைச் செய்வதின்பொருட்டு அந்த மலர்களைக் கொண்டுவருவ தற்காக இங்கிருந்து வடகிழக்குத் திசையை நோக்கிச் சென்றுர். இது நிச்சயம்' என்று சொன்னள். க்ருஷ்ணை இவ்வாறு சொல்லக் கேட்ட யுதிஷ்டிரர் உடனே நகுல ஸஹதேவர்களைப் பார்த்து,

'விருகோதரன் எந்த வழியினல் சென்ருனே அந்த வழியினல் நாமெல்லாரும் சேர்ந்து விரைவாகச் செல்வோம். களைத்தவர்களும் இளைத்தவர்களுமான பிராம்மணர்களை ராக்ஷஸர்கள் தூக்கிச் செல்லக்கடவர். தேவனுக்கு ஒப்பானவனே! கடோத்கச! நீயும் கிருஷ்ணையைத் தூக்கிச் செல்வாயாக. பீமன் இங்கிருந்து நெடுந் தூரம் சென்றிருப்பானென்பது என்னுடைய நிச்சயமான எண்ணம். அவன் சென்று நெடுநேரமாகிவிட்டது. அவனும் வேகத்தில் வாயுவுக்கு நிகரானவன்; பலிஷ்டன்; பூமியில் தாண்டுவதில் கருடனுக்கு ஒப்பானவன்; இஷ்டப்படி ஆகாயத்திலும் எழும்பிச் செல்வான்; இறங்கவும் இறங்குவான். அரக்கர்களே! உங்களுடைய பலத்தைக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்து செல்வோம். பிரம்மவாதிகளான ஸித்தர்களிடம் அவன் முதலில் அபராதத்தைச் செய்யான்' என்று கூறினர். பரதஸ்ரேஷ்டரே! ஸௌகந்திக ஸரஸிருக்குமிடத்தை அறிந்தவர்களான கடோத்கசன் முதலிய அவர்களனைவரும் அப்பொழுது, 'அப்படியே' என்று சொல்லிவிட்டு, மனமகிழ்ந்தவர்களாகிப் பாண்டவர்களையும் அநேகர்களான அந்தப் பிராம்மணர்களையும் தூக்கிக்கொண்டு லோமசரோடு கூடியவர்களாகவே சென்ருர்கள். அவர்களனைவரும் விரைவாகச்சென்று அந்தக் காட்டில் ஸௌகந்திகமென்னும் தாமரைமலர்களுள்ள மிக்க அழகிய ஓடையைக் கண்டார்கள். அதன் கரையில் நிற்பவனும் மஹாத்மாவுமான அந்தப் பீமனையும் கொல்லப்பட்டவர்களும் விசாலமான கண்களுள்ளவர்களும் உடலும் கண்களும் கைகளும் தொடைகளும் பிளக்கப்பட்டவர்களும் கழுத்துக்கள் நொறுக்கப்பட்டவர்களுமான யக்ஷர்களையும் கண்டார்கள். பாரதரே! பிறகு, தர்மராஜரோ, மஹாபலசாலியும் அந்த ஓடையின் கரையிலிருப்பவனும் கோபமுள்ளவனும் கண்கொட்டாமலிருப்பவனும் உதட்டைக் கடித்துக்கொண்டிருப்பவனும் இருகைகளாலும் கதையை ஓங்கிக்கொண்டு நதீதீரத்தில் யுத்தத்திற்கு (ஸன்னத்தனுக) இருப்பவனும் பிரஜைகளை அழிக்கும் தருணத்தில் தண்டாயுதத்தைக் கையிலேந்திய யமன் போன்றவனுமான அந்தப் பீமனைப் பார்த்துத் தழுவி, [1] 'குந்தீ

---

[1] 'குந்தீநந்தன! என்ன காரியம் செய்தாய்? உனக்கு மங்களம். எனக்கு ப்ரியத்தை விரும்புவாயாகில் இந்த ஸாஹஸ காரியத்தையும் தேவர்களுக்கு அப்ரியத்தையும் மறுபடியும் செய்யாதே' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

நந்தன்! உனக்கு மங்களம். தேவர்களுக்குங்கூட அப்ரியமான இந்த ஸாஹஸத்தை என் செய்தாய்? எனக்குப் பிரியத்தைவிரும்புவாயாகில் மறுபடியும் இவ்வாறு செய்யாதே' என்று இனிய சொல்லால் சொன்னார். தேவர்களுக்கொப்பான அவர்கள் பீமஸேனனுக்கு இவ்வண்ணம் உபதேசித்துத் தாமரைமலர்களைப் பறித்துக்கொண்டு அந்த ஓடையிலேயே விளையாடினார்கள். இதே தருணத்தில் பருத்ததேகமுள்ளவர்களான அந்தப் பூந்தோட்டத்தினுடைய காவலாளிகள் கற்களாகிற ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தோன்றினார்கள். பாரதரே! அந்தராக்ஷஸர்கள், தர்மராஜரையும் மஹரிஷியான லோமசரையும் நகுலனையும் ஸஹதேவனையும் அப்படியே மற்றப் பிராம்மணஸ்ரேஷ்டர்களையும் பார்த்து, எல்லாரும் விநயத்தோடு (தரையில்) விழுந்து வணங்கி, தர்மராஜரால் இன்சொல் கூறப்பட்டு, மனத்தெளிவை அடைந்தார்கள். அங்கே, அந்தக் கௌரவஸ்ரேஷ்டர்கள், காவலாளிகளால் குபேரனுக்குத் தெரிவிக்கப்பட்டார்கள். குருகுலத்தைத் தாங்குபவர்களான அவர்கள் கந்தமாதன மலையின் தாழ்வரைகளில் மகிழ்பவர்களாகி அர்ஜுனனை எதிர்பார்த்துக்கொண்டு சிலகாலம் வஸித்தார்கள்.

நூற்றைம்பத்தேழாவது அத்யாயம்.

தீர்த்தயாத்ரா பர்வம். (தொடர்ச்சி.)

(கந்தமாதனத்தினின்று உத்தரதேசத்தைக்குறித்துச் செல்ல எண்ணிய யுதிஷ்டிரர் அசரீரியின் சொல்லைக்கேட்டு அங்கிருந்து திரும்பித் தம்மைத் தொடர்ந்து வந்தவர்களுடன் நரநாராயணாச்ரமத்துக்கு மறுபடியும்வந்தது.)

பிறகு, அந்த இடத்தில்வஸிக்கின்ற தர்மராஜரான யுதிஷ்டிரர், ஒன்று சேர்ந்தவர்களும் பிராம்மணர்களோடிருப்பவர்களுமான தம்பிமார்களை அழைத்து, 'நாம் மங்களகரமானவைகளும் புண்யமானவைகளும் மனத்தை மகிழ்விப்பவைகளும் முற்காலத்தில் தேவர்களாலும் மகாத்மாக்களான முனிவர்களாலும் ஸஞ்சரிக்கப்பெற்றவைகளும் பிராம்மணர்களால் நன்றாகப் பூஜிக்கப்பட்டவைகளுமான தீர்த்தங்களையும் வனங்களையும் வரிசையாக முழுமையும் தனித்தனி பார்த்தோம். ரிஷிகளுடையபூர்வசரித்திரத்தையும் தவ

த்தையும் தர்மத்தையும் நடையையும் ராஜரிஷிகளுடைய சரித்திரத்தையும் மங்களகரமான பலவிதகதைகளையும் மங்களகரமான ஆஸ்ரமங்களில் ஆங்காங்குக் கேட்டுக்கொண்டு பிராம்மணர்களோடு கூட விசேஷமாக ஸ்நானமும் செய்தோம். புஷ்பங்களாலும் ஜலங்களாலும் எப்பொழுதும் தேவர்களை அர்ச்சித்தீர்கள். கிடைத்த மட்டில் கிழங்குகளாலும் பழங்களாலும் நீங்கள் பித்ருக்களையும் திருப்தியடையச் செய்தீர்கள். ரமணீயமான மலைகளிலும் எல்லா ஸரஸுகளிலும் மகா புண்ணியமான ஸமுத்திரத்திலும் மகாத்மாக்களோடு நன்றாக ஸ்நானம் செய்தோம். இளா, ஸரஸ்வதி, ஸிந்து, யமுனை, நர்மதை ஆகிய ரம்யமான பல தீர்த்தங்களில் பிராம்மணர்களுடன் நன்கு ஸ்நானம் செய்தோம். கங்காத்வாரத்தைத் தாண்டி மங்களகரமான பல மலைகளையும் பலவகைப் பறவைக் கூட்டங்களோடு சேர்ந்த இமயமலையையும் விசாலமான பதரியையும் நரநாராயணாஸ்ரமத்தையும் பார்த்தோம். ஸித்தர்களாலும் தேவர்களாலும் ரிஷிகளாலும் பூஜிக்கப்பட்ட தேவஸம்பந்தமான ஓடையையும் கண்டோம். பிராம்மணஸ்ரேஷ்டரும் மகாத்மாவுமான லோமசரால் வரிசை தவறாமல் விசேஷத்துடன் எல்லா ஆயதனங்களும் காண்பிக்கப்பட்டன. பீம! [1] புண்யமானதும் ஸித்தர்களாலடையப்பட்டதுமான இந்தக் குபேரனுடைய இருப்பிடத்தை எப்படி அடைவோம்? உள்ளே எப்படிச் செல்வோம்? ஆலோசிக்கக்கடவாய்' என்று சொன்னார். ராஜேந்திரர் இவ்வண்ணம் சொல்லும்பொழுது, அசரீரிவாக்கானது, 'அடைதற்கரிய குபேரனுடைய இருப்பிடமானது அடைதற்குமுடியாதது. வேந்தே! இந்த வைஸ்ரவணாஸ்ரமத்திலிருந்து இந்த வழியினாலேயே பதரியென்று பிரஸித்திபெற்ற நரநாராயண ஸ்தானத்துக்கு, வந்தபடி திரும்பிச்செல். கௌந்தேய! அங்கிருந்து ஸித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பட்டதும் மலர்களும் கனிகளும் மிக்கதும் அழகியதுமான விருஷபர்வாவினுடைய ஆஸ்ரமத்தை அடைவாய். குந்தீநந்தன! அந்த ஆஸ்ரமத்தைத் தாண்டி ஆர்ஷ்டிஷேணருடைய ஆஸ்ரமத்தில் வஸிப்பாயாக. குந்தீநந்தன! அங்கிருந்து குபேரனுடைய வாஸஸ்தானத்தைப் பார்ப்பாய்' என்று உரைத்தது. இதனிடையில், தேவலோகத்து வாஸனையைக் கொண்டுவருவதும் மங்களகரமானதும் மனத்தை மிக மகிழ்விப்பதும் குளிர்ந்ததுமான காற்று மலர்மாரியைப்

1. வேறுபாடம்.

பொழிந்தது. ஆகாயத்தினின்று திவ்யமான அந்த வசனத்தைக் கேட்டு, ரிஷிகளுக்கும் பிராம்மணர்களுக்கும் அரசர்களுக்கும் மிக்க ஆச்சர்யம் உண்டாயிற்று. அந்தப் பெரிய ஆச்சர்யவசனத்தைக் கேட்டு, தௌம்யரென்கிற பிராம்மணர், 'பாண்டவ! (இதற்கு மேல்) வடக்கே செல்வது ஸாத்தியப்படாது; திரும்பிச் செல்வோம்' என்று சொன்னார். பிறகு, யுதிஷ்டிரராஜர் ஆச்சர்யத்தினால் மலர்ந்த கண்களுள்ளவராகி மறுபடியும் அந்த நரநாராயணாச்ரமத்தை வந்தடைந்து பீமஸேனன் முதலிய எல்லாத் தம்பியர்களாலும் பாஞ்சாலியினாலும் பிராம்மணர்களாலும் சூழப்பட்டு அப்பொழுது மிகவும் ஸுகமாக வஸித்தார்.

தீர்த்தயாத்ரா பர்வம் முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
345	28	(அவரை) வம்சத்தை அனுஸரித்து அவ்வாறு புகழ்ந்தாரோ	அவருடைய வம்ச பரம்பரையில் வந்த கதையை அவ்வாறு பாடினாரோ
378	19	பிதாவின்	பிதிருக்களின்
430	13	பசுவையும் கன்றையும்	பசுவின் கன்றைத்
511	7	சென்றார்கள்' என்று கூறினார்.	சென்றார்கள்.